ஓம்

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் திவ்விய சரித்திரம்

[மூன்றாம் பாகம்]

ஸ்ரீ சுப்ரமண்ய சிவம்
இயற்றியது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை
87, தம்புசெட்டி வீதி, சென்னை.

விலை ரூபா 3

விஷய ஸூசிகை

விஷய

...தித ...
...ர் போதிப்பதற்கு வல்லவர்களாகும்படிச் சிலரைப்
பயிற்றுவிப்பது.

(b) கலைகளையும் தொழில்களையும் ஊக்கி விருத்தி
பண்ணுவது.

(c) ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஜீவிதத்திலே தெளிவு
படுத்தப்பட்ட பிரகாரம் வேதாந்தமாயும், மற்று முள்ள
மத எண்ணங்களைப் பொது ஜனங்களுக்குள்ளே புகுத்திப்
பரப்புவது.

இந்திய வேலை வகுப்பு:— பிறருக்குப் போதிப்பதற்
காகத் தங்கள் வாழ் நாட்களைத் தத்தம செய்யப் பிரிய
முள்ள கிருகஸ்தர்களையும் சந்யாசிகளையும் பயிற்சி செய்
விப்பதற்காக இந்தியாவின் வெவ்வேறு இடங்களிலே
மடங்களும் ஆச்ரமங்களும் ஏற்படுத்துதற்கும், மாகாணத்
துக்கு மாகாணம் சென்று ஜனங்களுக்கு அறிவு ஊட்ட
அவர்கள் வல்லவர்களாகும்படியான உபாயங்களைக் கண்டு
பிடித்தற்கும் சபையின் செய்கைகள் செலுத்தப்படல்
வேண்டும்.

அந்நிய நாட்டு வேலை வகுப்பிலே அதன் வேலை
யானது தர்மோபதேசம் செய்தற்கும், நெருங்கிய தொடர்
பந்தவ்யத்தையும்-அந்ய நாட்டு மடங்களுக்கும் இந்திய
நாட்டு மடங்களுக்கும் அந்யோந்ய உதவியையும் அநுதா
பத்தையும் உண்டு பண்ணுகின்ற தன்மையையும் உண்
டாக்குவதற்கும், இந்தியாவுக்குப் புறம்பேயுள்ள தேசங்க

ளிலே மடங்கள் ஏற்படுத்தித் தலைஸ்தான மடத்தில்
ற்சிபெற்ற அங்கத்தினர்களை யனுப்புவதாயிருக்கவேண்

சபையின் நோக்கங்களும் லக்ஷியங்களும் சுத்த
மீகமாயும் மனுஷ்யோபகாரமாயும் இருத்தலினாலே,
ற்கு ராஜீய வியவகார சம்பந்தம் இருத்தல் கூடாது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சபையிலே நம்பிக்
யுள்ள, அல்லது பிரியப்படுகிற, அல்லது சபையின் மே
கூறிய நோக்கங்களுடனும் உத்தேசங்களுடனும் ஒத்
ழைக்க மனமுள்ள எவரும் அங்கத்தினராகலாம்.

இத் தீர்மானங்கள் நடைபெற்ற பின்னர், சபையி
உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

ஸ்வாமிகள்: (பொது அக்கிராசனாதிபதி)

ஸ்வாமி ப்ரஹ்மாநந்தர்: (அக்கிராசனாதிபதி).

ஸ்வாமி யோகாநந்தர்: (உப அக்கிராசனாதிபதி).

பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் பலராமருடை
வீட்டிலே சபை கூடுவதென்றும், வேதாந்த விஷயம
அக்கிராசனாதிபதி குறிப்பிடுகிற விஷயங்களைப்பற்றி விய
சங்கள் எழுதி வாசிப்பதென்றும், பிரசங்கங்கள் செய்
தென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அங்கத்தினர்களுடைய முதலாவது பொதுக் கூட்ட
மேமீ 9-ம் தேதியன்று ஸ்வாமி ப்ரஹ்மாநந்தருடைய
கிராசனத்தின் கீழ்க் கூடிற்று. இந்தச் சபையானது மு

ரு ...ந்த காலம் பலராமருடைய வீட்டிலேயே நடைபற்று வந்தது. ஸ்வாமிகள் கல்கத்தாவி லிருந்தபொழுதெல்லாம், அநேகமாக எல்லாக் கூட்டங்களிலும் ஸ்வாமிகள் கூடயிருந்ததுமன்றியில், சபையோர் களிக்கத் தமது பிரஹ்மாநந்தச் சொற்களைப் பேசியும் உள்ளுருகப்பாடியும் ஆநந்திப்பார். இச் சபையானது 1909-ம் வருஷத்திலே சட்டப்படி பதிவு செய்யப்பட்டபொழுது, இச் சபையின் விதிகளிலே சில; சந்தர்ப்பங்களை நோக்கி மாற்றப்பட்டன என்று சொல்லப்படுகிறது. ஆனால், கல்கத்தாவிலே யுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண சபைக்கும் வித்தியாசம் மிகவுண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ண சபை இந்தியாவிலே அநேக இடங்களில் அநேகசபைகளைத் தனக்குக் கிளைச்சபையாகக் கொண்டு, பலவிதமான பரோபகாரச் செய்கைகளைச் செய்யும்படி பொது ஜன நன்மையை உத்தேசித்து ஏற்பட்டது. ஸ்ரீராமகிருஷ்ணமடமானது இந்தியாவிலே அநேக இடங்களில் கிளை மடங்களாக அநேக மடங்களைக் கொண்டு, ஆங்காங்கு வேதாந்த பாடங்கள் சொல்லிக் கொடுத்து ஞானநுபவ வாழ்க்கை வாழும்படியான சுத்தப் பிரஹ்மச்சாரிகளைச் தயார் செய்வதற்காக ஏற்பட்டது. இந்த மடமானது 1899-ம் வருஷத்திலேயே சுவாமிகளாலேயே சட்டப்படி தர்ம சொத்தென்று வைக்கப்பட்டு, சில தர்மகர்த்தாக்களின் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளுள் ஒருவர்: "பிரசங்கங்கள் செய்வதும், சபைகள் கூடுவதும், பரோப

காரக் கருத்துக்களும் எல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ண
மார்க்கத்துக்கு விரோதமானவையே,” என்றும், “
காட்டினருடைய மார்க்கத்தை யநுசரிப்பதாயுள்ளது,”
என்றும் ஸ்வாமிகளிடம் கூறினர்.

சுவாமிகள்: ஆத்திரம் பொங்கி, “இவை அவருடைய
கருத்துக்களின்படி யல்லவென்று உனக்கு எப்படித் தெ
யும்? அநந்தம் கருத்துக்களின் அவதாரமேயாய ஸ்ரீ ரா
கிருஷ்ணரை உனது சொந்த எல்லேக்குள்ளே மூடிவைக்க
விரும்புகிருயா? நான் இவ் வெல்லேகளை யுடைத்து அ
ருடைய கருத்துக்களை உலகு முழுதும் பரப்புவேன். அவ
நமது பூஜையையும் அது போன்றதையும் உண்டு பண்
ணும்படி எனக்கு ஒருபொழுதும் ஆக்ஞை செய்ததில்லை
அவர் போதித்த ஞானப்பியாச மார்க்கங்களும் ஏகாக்கி
தையும் தியானமும் மற்ற உயர்ந்த மத லக்ஷியங்களும்
அவற்றை நாம் அநுபூதியில் அறிந்து மனுஷ்யவர்க்
துக்குப் போதிக்கவேண்டும். லட்சியத்தினிடத்து இ
டுச் செல்லும் கருத்துக்களும் அநந்தம், மார்க்கங்களு
அநந்தம். முன்னமேயே கக்ஷிகள் மிதமிஞ்சி நிறைந்துள்.
இவ் வுலகிலே ஒரு புதிய கக்ஷியை உண்டு பண்ணுதற்
நான் ஜனிக்கவில்லை. நமது குருமூர்த்தியின் பாதங்களிே
நாம் அபயஸ்தானம் கண்டோமாதலினாலே நாம் பாக்கி
வான்கள்; நம்மிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள கருத்துக்க
உலகு முழுதினுக்கும் தாராளமாகக் கொடுத்தலே நா
கட்டாயம் செய்யவேண்டிய கடமையாம். நமது குருமூ

ரு...த் ருடையகிருபையிருக்கிறது என்பதற்கு சாக்ஷியங்கள் பற்... அடிக்கடி எனது ஜீவிதத்திலேயே பரிசோதித்துப் பார்த்திருக்கிறேன். என் பின்புறத்தே அவரே யிருந்து கொண்டு இவ் விஷயங்களை யெல்லாம் இவ் வழிகளிலே நான் செய்யும்படி செய்கிறார். பசியினால் பீடிக்கப்பட்டு, களைத்து விருக்ஷத்தி னடியிலே நான் படுக்கும் வழக்கமா யிருந்தபொழுது, நான் கௌபீனம் தரிப்பதற்குக்கூட ஒரு கந்தைத் துணியின்றியிருந்தபொழுது, என்னிடத்திலே ஒரு பைசா கூட இல்லாவிட்டாலும் உலகுமுழுதும் யாத்திரை செய்ய நான் துணிந்தபொழுது,— அப்பொழுது கூட அவருடைய கிருபையினாலே நான் ஒவ்வொரு விதத்திலும் உதவியும் ரக்ஷையும் பெற்றேன். இன்னும் சிக்காகோ நகரத் தெருக்களிலே கூட்டங்கள் இந்த விவேகானந்தரை யொருதரம் பார்ப்பதற்கு ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டபொழுது, நான் அவருடைய கிருபையினாலே அந்தக் கௌரவத்தை யெல்லாம் ஜீரணம் செய்துகொள்ள வல்லவனா யிருந்திருக்கிறேன்; அந்தக் கௌரவத்திலே நூற்றி லொருபங்கு சாதாரணத் தன்மையுள்ள வேறொரு மனிதனை மூளை யிழக்கும்படி செய்துவிடும். ஈச்வர சங்கற்பத்திலே எங்கும் ஜயம் என்னுடையதா யிருந்திருக்கிறது. இப்பொழுது நான் இந்தத் தேசத்துக்கு ஏதேனும் செய்யக் கருதுகிறேன். நீங்கள் எல்லோரும் சந்தேகங்களை ...ம் தப்பெண்ணங்களையும் விட்டுவிட்டு, எனது வேலையிலே எனக்கு உதவி செய்யவேண்டும்; அவருடைய கிருபையினாலே எப்படி யற்புதங்கள் நடத்தப்படப்போகின்

றன என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்,'' என்று சொ... மாத்திரத்திலே,

அந்தச் சகோதர சங்யாசி: "தங்களுடைய இஷ்டப்படி யே நடத்துவீராக. தங்களுடைய செய்கைகளுக்குப் பின்னால் குருமூர்த்தி யிருந்துகொண்டு கிருபை புரிகிறார் என்பதில் சந்தேக மில்லை. என்னுடைய திரிகாண சுத்தியாய் நான் தங்கள் ஏவல்களைச் சிர மேற்கொண்டு நடக்கத் தயாராயிருக்கிறேன்,'' என்று கூறினார்.

ஸ்வாமிகள் பின்னும் கூறுகிறார்:— "விஷயம் இது தான். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் அவரை யறிந்திருப்பதைப் பார்க்கிலும் மிகமிகப் பெரியவர். அவர் அநந்த மார்க்கங்களிலே அபிவிருத்தி யடையத்தக்க அநந்தமான ஆத்மீக எண்ணங்களின் அவதாரமேயாயுள்ளவர். ப்ரஹ்மஞானத்துக்கு எல்லை கண்டு பிடிக்க முடியுமா... லும் நமது குருமூர்த்தியினுடைய ஆழங் காணு அபிப்ராயங்களை யளந்து பார்த்தல் முடியாது! அவருடைய கிருபா கடாக்ஷம் ஒன்றே இந்த நிமிஷத்திலேயே ஒரு லக்ஷம் விவேகாநந்தர்களைச் சிருஷ்டிக்க முடியும்! ஆனால் அவர் இப்பொழுது அப்படிச் செய்வதற்குப் பதிலாக என்னை அவருடைய கருவி யாக்கிக்கொண்டு என் மூலமாக வேலை செய்யப் பிரியப்பட்டால், நான் அவருடைய சித்தத்துக்குத் தலை வணங்கத்தான் முடியும்.''

உண்மையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உண்மையான மகிமையை உள்ளபடி யறிந்திருந்தவர் விவே...

...ந்த ஸ்வாமிகள் ஒருவர்தான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது ...றம நிஷ்டாநுபூதியிலே கிடைத்த ப்ரஹ்மாநந்தத்தை ...ம் அநுபவியாது, தம்மிடம் வந்தவர்களுக் கெல்லாம் ...ரவு பகலாக—வைத்தியர் அவரைப் "பேசக்கூடாது," ...ன்று திட்டம் செய்திருந்தும்—போதித்துக்கொண்டிருந் ...தை ஸ்வாமிகள் தமது கண்ணால் நேரிடப் பார்த்தவர் ...னே. உத்தம பத்தினியாகிய பதிவிரதையிடத்தும் விபச ...ாரியிடத்தும் தேவி ஸ்வரூபத்தையே எப்பொ...ம் தரி ...த்துக்கொண்டிருந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர் என்பது ...வாமிகளுக்குத் தெரிந்ததுதானே. ஜீவராசிகள் படுந் துய ...த்தைக்கண்டு ஸ்ரீராமகிருஷ்ணர் இரவுபகலாகஉருகியுருகி, ...வை யுய்யும் மார்க்கத்தை ஒவ்வொரு நிமிஷத்திலும் சிந் ...த்து உபதேசித்துக்கொண்டுதானே யிருந்தார். "மகா ...ரேஷ்டமான வஸ்துவையே எப்பொழுதும் அடையவேண் ...ம்," என்றும், "அதுவே மனுஷ்ய ஜன்மப்பிர...சனம்," ...ன்றும் குருமூர்த்தி எப்பொழுதும் கூறிக்கொண்டிருக்க ...ல்லையா? ஆகையால், ஸ்வாமிகள் "மனுஷ்யன் உலகோப ...ர கைங்கர்யத்திலேயே தனது வாழ்நாட்களை யெல்லாம் ...செலவிடவேண்டும்" என்று அல்லும் பகலும் அருபது ...ாழிகையும் உபதேசித்துக்கொண்டிருந்தது ஆச்சர்ய ...ன்று.

ஸ்வாமிகள் ஒரே மூச்சிலே சர்வசங்க பரித்தி ...ாகத்தையும் சர்வ ஜகத் சேவையையும் உபதேசித்து, ...த்தன்மையரும் இன்பாநுபூதியெய்தி வற்ற மடையும்படி

எல்லோரையும் ஊக்கிக்கொண்டு வந்தார். பின்னொரு
சுவாமிகள் மகா பக்தராகிய பலராமருடைய வீட்
வசித்துக்கொண்டிருக்கையில், தமது சகோதர சந்ய
ளுடனும் தமது குருமூர்த்தியினுடைய கிருகஸ்த சிஷ்ய
ளுடனும் பலவிதமான வேடிக்கைப் பேச்சுகள் பே
விநோதமாய்க் காலங் கழித்துக்கொண்டிருந்தார். இச் ச
யங்களிலே சுவாமிகள் மற்றவர்களுடன் பரிகாச வி
யாட்டுக்கள் பல விளையாடுவார்; அவர்களுடன் மி
தாராளமாகக் கலந்து விநோதிப்பார்; மற்றவர்க
மனம் புண் படும்படியாகக்கூடச் சில சமயங்கள
வேடிக்கைகள் செய்வார். அவர்களும் கடூரமாக விளைய
ிட்டால் அதையும் மிகவும் சந்தோஷத்துடனே பொறு
த்துக்கொண்டு மிகவும் களிப்பார். இவர் வாலிப பர்வத்திலே
ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே சிஷ்யராயிருந்தபொழுது
லோருக்கும் நல்ல "நரேந்திர"ராயிருந்தபொழுது எட்
வேடிக்கைகள் பேசி விளையாட்டுக்கள் ஆடிக் களிப்பூட்டி
கொண்டிருந்தது போலவே, தமது சகோதர சந்யாசிகளி
பலவித குறைகள் கூறி நிந்திப்பார்; சில சமயங்களிலே
தமது குருவைக்கூடக் கண்டனம் செய்வார்; ஆனால்
அவர் தமது குருவைக் கண்டித்தபொழுதிலும், அவரிட
துள்ள பக்தியில் ஒரு சிறிதும் குறைவுபடாது. ஸ்வாமிக
இப்படிச் சில நேரமேனும் விளையாடிக் களித்தே
ஸ்வாமிகளுக்குச் சிரம சாந்திக்குக் காரணமாயிருந்த
இதை யறிந்த சகோதர சந்யாசிகள் எப்பொழுது
ஸ்வாமிகளுக்குச் சிரமசாந்தி கொடுக்க விரும்பி, அவ

...யிலுக்கை விளையாட்டுக்களிலே காலம் கழிக்கும்படி ...ய்ய முயற்சிப்பார்கள். ஆனால், ஸ்வாமிகள் திடீரென்று ...தீர்க்க சிந்தனைகளிலே இறங்கிப் பெரிய பெரிய விஷயங்களை யெல்லாம் பற்றிப் பேசப் புகுந்து விடுவார்.

இத்தகைய சந்தர்ப்பங்களிலே ஒருநாள் சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளுள் ஒருவர்: "சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய போதனைகளைப் போதியாமல் 'உலகாரம் செய்ய வேண்டும்,' என்றும், 'தர்மமே ...ய்யவேண்டும்,' என்றும், 'எளியவர்களுக்கும் அநா... ளுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் உதவியும் பணிவிடைச் செய்யவேண்டும்,' என்றும் கூறுதல் தகாது" என்... ...ாதித்தார்.

ஸ்வாமிகள் முதலில் சிறிது மௌனமாயிருந்தார்; ...னால். அந்தச் சந்நியாசி அதனுடன் தன்னுடை... பேச... ...சை நிறுத்தகம... ...மல், "... முறைகளைப் பின்பற்றி ஸ்வாமிகள் தொடங்கிவரும் பரோபகார ஏற்பாடுகள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தியாகோபதேசத்துக்கு நேர் விரோதமாம்," என்றும் "இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் உயிர்த்திருந்தால், அவர் சுவாமிகளுடைய கொள்கைகளை ஒருபொழுதும் ஒவ்வமாட்டார்," என்றும் கூறினார்.

சுவாமிகள் முதலில் சிறிது பரிகாசமாக, "உனக்கென்ன தெரியும்? நீ யொரு மூடன்! ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தகுந்த சிஷ்யன்தான்! குரு எப்படியோ, அப்படி

யே சிஷ்யனும்! பிரஹ்லாதன் க. என்ற அக்ஷரத்தைப் ..த்த மாத்திரத்திலே கிருஷ்ணனுடைய ஞாபகம் வந்து ஆநந்தக் கண்ணீர் ததும்பி மூச்சடைக்க, அதற்கு மேல் படிக்க முடியாதவனுய்விட்டது போல, நீயும் ஆய்விட்டாய்! நீங்கள் பக்தர்கள், அதாவது எளிய ஹிருதயமுடைய மூடர்கள்! உங்களுக்கு மதம் என்ன தெரியும்? நீங்கள் சிசுக்கள்! 'ஈஸ்வரா! உனது கண்கள் எவ்வளவு நேர்த்தி' ..து நாசி எவ்வளவு அழகு!' என்று கூறி, கைக ..க்கொண்டு கதறுவதற்குத்தான் நீங்கள் தகுந்த .. இந்த மூடத்தனங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு உனக்கு மோட்சம் கிடைத்துவிட்டதென்றும், ஈற்றிலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் வந்து உன்னைக் கை பிடித்து மோக்ஷ லோகம் இட்டுச் செல்வாரென்றும் நீ நம்பியிருக்கிறாய் கல்வி யாராய்ச்சி, பரோபகாரச் செய்கை இதெல்லாம் மாயை! ஏ.. ..? ஏனென்றால், ஸ்ரீராமகிருஷ்ணர் .. லாம் செய்யவில்லையே! 'உலகுக்கு உபகாரம் செய்வது அதெல்லாம் மாயையே! முதலில் எல்லாவற்றுக்கும் பரம் பொருளாகிய ஈஸ்வரனைத் தேடிக் கண்டுகொள்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் எப்பொழுதோ எவருக்கோ போதித்தார்; ஆதலினால், இதெல்லாம் வீண் வேலை! ஈஸ்வரன் என்ன? கத்தரிக்காயா? வாழைக்காயா? கடையிலே காலணா கொடுத்து லகுவிலே விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து விடுதற்கு? பைத்தியக்காரர்களுடைய விருப்பப்படி யெல்லாம் உடனுக்குடனே நடப்ப..க்கு ஈஸ்வரன் என்ன? அவ்

வளவு மூடரா? ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உண்மையையும் மஹிமையையும் நீ என்னைப்பார்க்கிலும் மிக நன்றாக அறிந்திருப்பதாக நினைக்கிறாய். 'ஞானமானது ஹிருதயத்தினுடைய இளகுந் தன்மைகளையெல்லாம் போக்கடித்து சாந்ண்டு உலர்ந்த வழியில் செல்லும் அறிவு,' என்றுநினைத் பிரச் கொண்டிருக்கிறாய். உன்னுடைய பக்தி மனிதனைப் சுவா யாக்குகின்ற மூட உணர்ச்சிதானே! நீ எப்படி ராமகிருஷ்ணரை யறிந்திருக்கிறாயோ அப்படி யவரைப் 'திக்க விரும்புகிறாய்! அவரைப்பற்றி உனக்குள்ள ஹிரு வு அணுவளவினதே யென்று நீ யறிகிறதில்லை உன் ஒரு டைய ராமகிருஷ்ணரை எவர் கேட்கிறார்? உன்னுடைய ம் தியும் முக்தியும் எவருக்குத் தேவை? சாஸ்திரங்கள் கூறினால்தான் என்ன? இப்பொழுது தமோகுணத் ஆழ்ந்திருக்கும் எனது தேச ஜனங்கள் கண்விழித்து ந்திருந்து, கர்மயோகத்தன்மை வாய்ந்து, உண்மையில் ஷர்க ளாவார்களானல், அதற்காக நான் ரௌரவாதி கம் செல்லவேண்டி வந்தாலும் அப்படியே செல்லத் யாராயிருக்கிறேன். நான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் தாச ல்லன், மற்றெவருக்கும் தாசனல்லன்; தாம் பக்தியை வது முக்தியையாவது நாடாது உலகுக்குப் பணிவிடை ய்யும் உத்தமர் எவரோ, அவருக்கே தாசன் நான்," ன்று இடி இடித்ததுபோலக் கோஷித்துக்கொண்டே ந்தார்.

அவருடைய முகத்திலே ஒரு ஒளி வீசிற்று; அவ டைய கண்களிலே நெருப்புப் பறந்தது. அவருடைய

குரல் கம்மிற்று; அவருடைய சரீரத்தியந்தமும் ரோமம் சிலிர்த்தது. அவருக்குள் உண்டான கோதிப்பை யவரால் அடக்க முடியவில்லை. அவருடைய கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாய் ஒழுகிற்று. அவர் சட்டென்று எழுந்திருந்து அங்கிருந்து நீங்கித் தமது படுக்கையறையுள்ளே சென்றார். அவருடைய சகோதர சந்யாசிகளு குப்பயம்பிடித்துவிட்டது; 'ஏன் நாம் இப்படிப்பேசினோம் என்று கவலை யுற்றார்கள். சற்றுநேரம் எவரும் பேச யில்லை; பேசுவதற்கு நா எழவில்லை. பின்னர் இட டொருவர் சுவாமிகளுடைய அறைக்குச் செல்லத் து தார்கள். இவர்கள் மெல்லிய நடையுடன் அவ்வறைக் ளே நுழைந்து பார்த்த, சுவாமிகள் பத்மாசன மிட் நிஷ்டையிலே உட்கார்ந்துகொண்டிருந்தார்; அவரு சரீரம் சித்திரப் பிரதிமை போல அசைவற் றிருந்த ரோமங்க ளெல்லாம் சிலிர்த்திருந்தன. நிஷ்டையில நின்ற கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந்த சுவாமிகள் பாவ சமாதியிலே லயித்துவிட்டார்!

உள்ளே சென்ற சகோதர சந்யாசிகள் சிறிது நேர அவரைப் பார்த்தவண்ணமே யிருந்து கலக்குற்று, அ ருடைய நிஷ்டையைக் கலைப்பதற்குத் துணியாதவர்களா வெளியே வந்துவிட்டார்கள்.

ஒருமணி நேரம் கழிந்தது. ஸ்வாமிகள் நிஷ் கலைந்து எழுந்திருந்து, நன்றாக முகத்தைக் கழுவிச் சுத் செய்துகொண்டு, தாம் உட்கார்ந்து சம்பாஷிக்கும் சம

ஷிணா யறைக்கு வந்து சேர்ந்தார்; அநேக நண்பர்களும் சிஷ்யர்களும் அங்கே காத்துக்கொண்டிருந்தார்கள். அவர் வந்து உட்கார்ந்து, சற்றுநேரம் பேசாது மௌனமாயிருந்தார். அவருடைய முகத்திலே இப்பொழுது ஒருவித சாந்தி விளங்கிற்று. அங்கிருந்த எல்லோரும் பார்த்துப் பிரமித்து அசைவற்று வீற்றிருந்தார்கள். கடைசியாகச் சுவாமிகளே பேச ஆரம்பித்தார்.

"மனிதனுக்கு பக்தியுண்டாகிவிட்டால், அவனுடைய ஹிருதயமானது மிக மென்மை யடைந்துவிடுகிறது. அவன் ஒரு புஷ்பத்தை ஸ்பர்சித்தாலும் அவனுக்கு நோவெடுத்து விடும், அவ்வளவு மென்மையாய் விடுகின்றன அவ
[illegible]டைய நாடிநரம்புகள். பரவசமாகாமல் ஸ்ரீராமகிருஷ்ண
[illegible]ற்றி நினைக்கவோ அல்லது பேசவோ என்னால்
[illegible]ற்கில்லை. ஆகையால், என்னுள்ளே கொதித்துப்
[illegible]ம் பக்தியை அடக்கிவைப்பதற்கு நான் எப்
[illegible]ந்து பார்த்தாலும் முயற்சி செய்துகொண்டே யிருக்
[illegible]ன். ஞானமாகிற இரும்புச் சங்கிலிகளினால் நான் என்
[illegible] பந்தித்துக்கொள்ள முயலுகிறேன்; ஏனெனில்,
[illegible]னது தாய் நாட்டுக்குச் செய்யவேண்டிய வேலை
[illegible]ம் முடிந்தபாடில்லை; நான் உலகுக்குக் கூற விரும்
[illegible]ய்தி இன்னும் நன்றாகக் கூறினபாடில்லை. ஆதலால்,
[illegible]ணர்ச்சிகள் என்னை அடிமைப்படுத்த முயலுகின்றன
[illegible] எனக்குத் தெரிந்தவுடனே, நான் அவற்றைப்
[illegible] அடித்துத் தூக்கி, கடோர ஞானத்தை யெடுத்துக்

2 (c)

கொண்டு என்னை வைரம்போன்று ஆக்கிக்கொள்கிறே ஆ! நான் செய்வதற்கு வேலை யிருக்கிறது; நான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அடிமைதான்; அவர் தமது வேலையை செய்யும்படி என்னை ஆக்ஞாபித்துவிட்டுப் போனார்; அவ் வேலையைச் செய்து முடித்தாலொழிய அவர் என ஓய்வு ஒழிவு கொடுக்கமாட்டார். ஆ! அவருக்கு எளியேனிடத்து இருந்த அன்புதான் என்னே!" எ கூறினார்.

'ஸ்வாமிகளுடைய மனம் எங்கே மறுபடியும் முகப்பட்டுவிடுமோ' என்று ஸ்வாமி யோகாநந்தரும் வர்களும் பயந்து, ஸ்வாமிகளுடைய மனப்போ மாற்றக் கருதி, "ஸ்வாமி! இவ்வறையிலே வெப்பம் மாக வீசுகிறது. மேல் மெத்தையிலே சென்று நேரம் உலாவலாமே" என்றார்கள்.

ஸ்வாமிகளும் அதற்கிசைய, எல்லோருமாக மெத்தைக்குச் சென்றார்கள். அங்கே எல்லோருமாக பல சில்லரை விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிக்க ஆர வே, ஆழ்ந்த விஷயங்களையே ஆராய்ந்துகொண்டி ஸ்வாமிகளுடைய மனமானது பகிர்முகப்பட்டு வசத்ததாகி, சாதாரணத்தன்மை யடைந்துவிட்டது.

53-வது அத்தியாயம்

வேறு விசேஷங்கள்

சுவாமிகள் கல்கத்தாவிலே யிருந்தபொழுது, தினந் றும் எப்பொழுது பார்த்தாலும் ஜனங்கள் திரள் ளாக ஸ்வாமிகளைத் தரிசிப்பதற்கும், ஸ்வாமிகளுடைய தனைகளைக் கேட்பதற்கும் வந்து குவிந்துகொண்டே ர்கள். கிருகஸ்த சிஷ்யர்கள் தங்கள் தங்கள் கிரு ளுக்கு ஸ்வாமிகளை எப்பொழுதும் அழைத்துக் ண்டே யிருந்தார்கள். ஸ்வாமிகள் கல்கத்தாவிலிருந்து ம்பாஸாருக்குப் போவதும், அங்கிருந்து கல்கத்தாவுக் திரும்பி வருவதுமா யிருந்தார்.

பக்தர் பலராமருடைய வீட்டிலே தினந்தோறும் அத்தி தமான சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது. இந்தி க்கு இப்பொழுது வேண்டிய கல்வி எத்தகையது? என் பற்றிச் சம்பாஷணை நடக்கும்.

ஸ்வாமிகள் "வேத புராண இதிகாசாதி மார்க்கங் ப் பின்பற்றிப் புருஷர்களுக்கு இன்ன மாதிரி கல்வி டுக்கவேண்டும்," என்றும், "ஸ்திரீகளுக்கு இன்ன திரி கல்வி கொடுக்கவேண்டும்," என்றும், "பொது ங்களுக்கு இத்தகைய கல்வி கொடுக்கவேண்டும்," றும் சாங்கோபாங்கமாக விரித்துரைப்பார்.

இன்னொரு சமயத்திலே சீக்கிய ஜாதியர்களைப்பற் பேச்சு நடக்கும். சுவாமிகள் குரு கோவிந்தஸிங்கைப்

பற்றியும், அவர் தமது சிஷ்யர்களைப் பயிற்றுவித்த மஃதிரியைப்பற்றியும் சொல்ல ஆரம்பித்துவிட்டாரானால் கனிவு என்பதையே அறியாத கன்னெஞ்சமும் கரைய ஆரம்பித்துவிடும். அந்த மஹாத்மா குரு கோவிந்த ஸிங்கருடைய வீரத்தன்மையும், அவருடைய தியாக வைராக்கியமும், அவருடைய கடுந்தவமும், அவருடைய சகன சக்தியும், சிக்கிய ஜாதியர் முன்னேறுவதற்கு அவர் செய்த கடும்பிரயாசையும், மகம்மதிய மதத்தைத் தழுவிய ஹிந்துக்களைச் சிக்கிய மதத்திலே அவர் சேர்த்துக்கொண்டதும், நர்மதா நதிதீரத்திலே அவர் சுத்த வீரர் போன்று மரணமடைந்ததும், அவர் தமது சிஷ்யர்களுக்குள்ளே பராக்கிரமத்தையும் தைர்யத்தையும் புகுத்தியதும், தங்கள் மதத்தையும் ஸ்வதந்திரத்தையும் காப்பாற்றும் பொருட்டு ஒரு லக்ஷ ஜனங்களையும் ஒருங்கே எதிர்த்து நிற்கும்படிய துணிச்சலும், ஸ்வாமிகளுடைய வாயிலிருந்து வருகிற வர்ணனையினாலே அப்பொழுதுதான் எல்லாம் கண்கமா முன்னே நடப்பதுபோ லிருக்கும்.

இச் சம்பாஷணைகள் கால தேச சந்தர்ப்ப வித்தி யில்லாமல் எப்பொழுதும் நடந்துகொண்டேயிருக் ஸ்வாமிகள் உட்கார்ந்துகொண்டே பேசுவார், நி கொண்டே பேசுவார், நடந்துகொண்டே பேசுவார், பிடும்பொழுதுகூடச் சம்பாஷிப்பார், சிரம சாந்தியா படுத்துக்கொண்டிருக்கும்பொழுதுகூடப் பேசிக்கொ டிருப்பார். 'இப்பொழுது இன்னது செய்துகொண்டி

பார்,' என்று ஸ்வாமிகளின் விஷபத்தைத் திட்டமாகச் சொல்லல் முடியாது.

ஸ்வாமிகள் பலராமருடைய வீட்டிலே வந்து பத்து நாட்க ளாயின. அப்பொழுது அவர் சாரதச் சந்திரருக்கு ஸாயனுசார்யாருடைய ரிக்வேத பாஷ்பத்தைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். சாரதச் சந்திரர் தமது நண்பர் ஒருவரிடமிருந்து ஸாயனுசார்யாருடைய ரிக்வேத பாஷ்யத்தின் மாக்ஸ் முல்லருடைய மொழிபெயர்ப்பு ஒன்றைச் சம்பாதித்து வைத்துக்கொண்டிருந்தார். ஸ்வாமிகள் சில சமயங்களிலே ஸாயனுசார்யாரை மிகமிகப் புகழ்வார், சில சமயங்களிலே மிகமிகத் தூஷிப்பார். இப்படி ஸ்வாமிகள் கூறிக்கொண்டே வருகையில், மாக்ஸ் முல்லரைப்பற்றிப் பேச்சு வந்தது. சுவாமிகள் தமது சிஷ்யரை நோக்கி, அன்ன் சில சமயங்களில் என்ன நினைக்கிறேன், தெரியுமா? தின பனுசார்யாரே தமது வியாக்கியானங்களுக்கு ஒளி பெரு டுக்கும் பொருட்டு, திரும்பவும் அவதரித்துள்ளா ா?' என்று நான் நினைக்கிறேன். அப்பண்டிதரை நேரில் ர்த்தது முதல், இந் நம்பிக்கை இன்னும் அதிகமாகத் திடப்பட்டுவிட்டது. வேதாந்திகளிலும் வேதாந்தத்திலும் பாண்டித்திய முள்ள அத்தகைய விடா முயற்சியுடைய வித்வான் இத்தேசத்திலேகூடக் காணக்கிடையார்........ ஆக்ஸ்போர்ட் நகரிலே தங்களுடைய அமைதியான வாசஸ்தலத்திலே வானப்பிரஸ்தர்கள் போன்று வசித்து வரும் விருத்தாப்பியபர்வ மடைந்த இருவரும் வேத கிர்த்தி

வாய்ந்த வசிஷ்டரும் அருந்ததியும் போன்று எனக்குக் காணப்பட்டார்கள். அக் கிழவர் என்னை விட்டுப் பிரிந்த பொழுது உண்மையில் கண்ணீர் விட்டார்!" என்றார்.

சாரதச்சந்திரர் ஸ்வாமிகளை நோக்கி "ஸ்வாமி! அப்படியாயின், ஸாயனாசார்யார் பாரத தேசமாகிற இப் புண்ணிய பூமியிலே பிராஹ்மண சரீரத்திலே ஜனிக்காது மிலேச்சப் பிறவி யெடுப்பதற்குக் காரண மென்னவாயிருக்கவேண்டும்?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள் "ஆர்யனென்றும் மிலேச்சனென்றும் வித்தியாசம் பாராட்டுவது அஞ்ஞானத்தினாலேயேதான். பரமோத்கிருஷ்ட ஞானமே வடிவெடுத்து வந்ததுபோன்ற வேத வித்தாயுள்ளவர்களுக்கு இந்த ஜாதி, வர்ண வித்தியாச மெல்லாம் ஏது? மனுஷ்ய வர்க்கத்தை உய்விடுவிக்கும்பொருட்டு அவர் எங்கு வேண்டுமோ அங்கே ஜனிக்கலாம். காலதோஷத்தைக் கவனியுங்கள். நமது நாட்டிலே அவர் பிறந்திருந்தால், அவருடைய கிரந்தங்களை அவ்வளவு செலவு கொடுத்து அச்சிடும் தயாள குணமுள்ள புருஷர் எவர் இருக்கிறார்? அறிவும் பணமும் அதிகமாகப் பெருத்துள்ள அந்த மேல் நாட்டிலே அவர் பிறந்திராவிட்டால், இந்தப் பிரமாண்டமான வேலை செய்தற்கு அவருக்குப் பணம் எங்கிருந்து கிடைத்திருக்கும்? கீழ் இந்தியா சங்கத்தார் இந்த ரிக்வேதத்தைப் பிரசுரிப்பதற்கு 9,00,000 ரூபா கொடுத்தார்கள் என்பது நீ கேட்டதில்லையா? வேதங்களில் வல்லுநராகிய நமது தேசத்துப்

பண்டிதர்கள் அநேகர் இவ் வேலையிலே அவருக்கு உதவி செய்யும்பொருட்டு மாதச் சம்பளங்களில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அறிவைப் பரப்புதற்காக அவ்வளவு ஏராளமான பணத்தை இக் காலத்திலே இந்தத் தேசத்தினரில் எவரேனும் செலவழித்ததாகக் கேட்டதேனு முண்டா? மாக்ஸ் முல்லரே அப் புத்தகத்துக்குத் தாம் எழுதிய முகவுரையில் இருபத்தைந்து வருஷங்களுக்குத் தாம் எழுத்துப் பிரதிகளை எழுதிக்கொண்டிருந்ததாகவும், அவற்றை அச்சிடுவதற்கு இருபது வருஷங்கள் வேண்டிவந்தனவென்றும் எழுதியிருக்கிறார்? எவருக்கும் எளிதிலே தெரியாது இரகஸ்யமாகக் கிடக்கும் ஒரு பாஷையிலேயுள்ள கடினமானவொரு கிரந்தத்தைப் பொது ஜனங்களுக்கு [illegible]நிலையிலே தயாராய் வைப்பதற்கு ஒருவர் தமது ஆயி[illegible]நாட்களில் நாற்பத்தைந்து வருஷகாலம் செலவிடுவ அன்[illegible]ன்றால், அது சாதாரண மனிதர் செய்யத்தக்க வேலை தின[illegible]று சொல்ல முடியுமா? நான் அவரை அதனால்தான் பொ[illegible]யனாசார்யரென்று கூறுகிறேன்?'' என்றார்.

இப்படி யிவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கையிலேயே, கிரீசர் உள்ளே வர, ஸ்வாமிகளும் அவரும் அந்யோந்யம் க்ஷேமலாபம் விசாரித்துத் தீர்ந்த பின்னர், ஸ்வாமிகளுடைய அமிர்தமொழிகளைக் கேட்கக் கருதி, கிரீசரும் அங்கு உட்கார்ந்தார். ஸ்வாமிகள் அவரை நோக்கி, "நல்லது, கிரீசரே! இவ் விஷயங்களை யெல்லாம் ஆய்ந்து பார்ப்பதற்குத் தாங்கள் கவலையெடுத்துக்கொள்ள

வேயில்லை; நீங்கள் உங்கள் கிருஷ்ணனையும் கோபாலனையும் வைத்துக்கொண்டு காலம் கழித்துவிட்டீர்கள்!'' என்றார்.

கிரீசர் தர்க்க தத்துவ சாஸ்திரங்களிலே சிறிதும் நுழையாது சாதாரண பக்தன் போன்று உள்ளுருக்கத்திலேயே தமது காலத்தைச் செலவிட்டு வந்ததை ஸ்வாமிகள் இங்குக் குறிப்பிட்டார். கிரீசர் மிகுந்த விநயத்துடனே ''சகோதரா! இந்த வேத ஆராய்ச்சியெல்லாம் எனக்கு எதற்கு? அவற்றை ஆய்ந்து பார்ப்பதற்கு எனக்குப் புத்தியுமில்லை, சாவகாசமுமில்லை. நான் தூரத்திலிருந்துகொண்டே அவ் வேதங்களுக்குத் தலை வணங்கி, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கிருபையினாலே சம்சாரசாகரத்தைக் கடந்துவிடுவேன். நமது குருமூர்த்தி உலகுக்குப் போதிக்கவேண்டிய வேலையை உன்னிடம் ஒப்புவித்ததினாலே, இந்த சாஸ்திரங்களையெல்லாம் அவர் நீ கற்கும்படி செய்தார். கிரீசர் இப்படிச் சொல்லிவிட்டு, மறுபடியும் அந்த ரிக்வேத புஸ்தகங்களின் முன்னே தலை வணங்கி ''வேத சொரூபமாயுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பெருமை பெருகுவதாக'' என்று தாமே சொல்லிக்கொண்டார்.

ஸ்வாமிகள் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினாலும், அந்த விஷயமே மற்றெல்லா விஷயங்களையும்விடப் பிரதானமானதென்றும் உத்தமமானதென்றும் கேட்போர் நம்பும்படி அவ்வளவு அழகாகவும் சாதுர்யமாகவும் பேசுவார். ஸ்வாமிகள் பக்தியைப்பற்றிப் பேச ஆரம்பித்தால்,

கேட்பவர்கள் 'பக்தியேதான் பெரிது,' என்று நம்பிவிடுவார்கள். நிஷ்காம கர்மயோகத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்து விட்டால், 'அதுவேதான் உத்தம லக்ஷியம்,' என்று கேட்பவர்கள் நம்பிவிடுவார்கள்.

கிரீசர்,— சுவாமிகளை நோக்கி, "நல்லது, நரேந்திரா! நான் உன்னை யொரு விஷயம் கேட்கிறேன். வேதங்களையும் வேதாந்தத்தையும் நீ வேண்டுமளவு படித்திருக்கிறாய். ஆனால், உலகிலே தினந்தோறும் காணப்படுகின்ற வியபசாரம் போன்ற மஹா பாபங்களை நிவிர்த்திப்பதற்கும், பசித்திருப்பவர்களுக்கு ஆகாரம் கொடுப்பதற்கும், அநாதைகளுடைய அழுகைக் குரலை மாற்றுவதற்கும், இன்னும் பலவாகக் காணப்படுகின்ற துன்பங்களை யெல்லாம் மாற்றுவதற்கும் ஏதேனும் நிவிர்த்தி இந்தக் கிரந்தங்களிலே குறிவிடப்பட்டுள்ளதா? தினந்தோறும் ஐம்பது பெயருக்கு ஆயினை மிட்டுக்கொண்டிருந்த, அதோ, அந்த வீட்டு எஜமானி சென்ற மூன்று நாட்களாகத் தனக்கும் தனது குழந்தைகளுக்கும் ஆகார மில்லாது தவிக்கின்றனளே! உயர் குலத்துஉதித்தஉத்தமபத்தினியாகிய அதோ அந்த ஸ்திரீயை மூர்க்கர்கள் பலாத்காரமாகக் கற்பழித்துக் கொலை புரிந்துவிட்டனரே. இன்னொருடைய பால்ய விதவை தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுத் தான் இரகஸ்யமாக வியபிசாரத்திலே அடைந்த கருவை யழிக்கத் தொடங்கி, அவளே யிறந்துவிட்டாள். நரேந்திரா! இத் தீமைகளை நிவிர்த்திப்பதற்கு வேதங்களிலே ஏதேனும் கூறப்பட்டுள்ளதா?" என்று கேட்டார்.

இவர் உலகிலே நடைபெறும் தீமைகளை யொன்றன்பின் ஒன்றாகக் கூறிக்கொண்டேவர, சுவாமிகள் உலகிலே காணப்படுகின்ற இன்னும் அநேகம் தீமைகளையும்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்; உடனே அவருடைய கண்களிலே நீர் ததும்பிற்று; அவர் தமது உணர்ச்சிகளை வெளியில் காட்டாதிருக்கும்பொருட்டு, அவ் அறையை விட்டு நீங்கி வெளியே சென்றார்.

கிரீசர் பின்னர் சுவாமிகளுடைய சிஷ்யரை நோக்கி: "பார்த்தாயா? உனது குருவுக்கு எவ்வளவு பெரிய ஹிருதயம் உள்ளதென்று உனது கண்களினாலேயே நீ கண்டுகொண்டாயா? அவர் மஹா ஞானி யென்றும் வித்வானென்றும் கருதி நான் அவரை மதிக்கவில்லை; மனுஷ்யவர்க்கத்தினுடைய துன்பங்களைக் கண்டு சகியாது—கண்ணீர் ஓமி
அவரை அறையை விட்டு வெளியே போகச்செய்த
ருடைய பரந்த ஹிருதயத்துக்காகவே நான் அவரை ம
கிறேன். கவனித்தாயா? உலகத் துன்பங்களைப்பற்றி
கேள்விப்பட்டவுடனே, அவருடைய வேதங்களும்
தாந்தமும் எல்லாம் பறந்துவிட்டன. ஒரு விநாடி நேரத்துக்கு முன்னே அவர் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்த பாண்டித்ய மெல்லாம் எங்கோ மறைந்துவிட்டன; அவர் அன்பே உருவாய்விட்டார், பார்த்தாயா? உன்னுடைய குரு அறிவு வடிவம் என்பது மாத்திரம் அன்று, அன்பின் வடிவமும்," என்றார்.

சிறிது நேரம் கழிந்து ஸ்வாமிகள் திரும்பி வந்து உட்கார்ந்து ஒன்றுக்கொன்று நேர் எதிரிடைபோலத்

தோன்றுகிற பக்தி, ஞானம் ஆகிற இரு மார்க்கங்களையும் சமரசப்படுத்தி, கேட்போர் வியக்கும்படி "இரண்டு மார்க்கங்களும் ஒரே லட்சியத்தினிடத்து இட்டுச் செல்வனவே" என்று அழகாகக் காண்பித்தார்.

இப்பொழுது ஸ்வாமி சதாநந்தர் உள்ளே நுழைந்தார்.

ஸ்வாமிகள் அவரை நோக்கி, "ஆ, சதாநந்தா! நமது தேசத்து ஜனங்கள் அநுபவிக்கும் துன்பங்களையும் வறுமையையும் நினைக்கும் மாத்திரத்திலே எனது ஹிருதயம் துடிக்கின்றது. ப்ளேக் முதலிய கொடிய வியாதிகள் இவ் இந்தியா தேசத்தைத் தமக்குப் பிறந்த அகம்போலெண்ணி நுழைந்துகொண்டனவே; பஞ்சம் ஸ்திரமாய் விட்டதே; ஆகாரம் அரைவயிற்றுக்குக்கூட அகப்படாமல் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவஸ்தைப்படுகிறார்களே, அன்னக்கொடி நாட்டி அவனியிலுள்ள அநேக தேசத்தினர்களுக்கு ஆகாரமளித் துதவிய இவ் ஆர்யாவர்த்தம் இப்பொழுது தான் உண்பதற்கே சோறில்லாது திண்டாடுகின்றதே. ஆ! சதாநந்தா! நீ உன்னாலான அளவு இவ் வுலகத் துன்பத்தை நீக்க முற்படல்வேண்டும்," என்று கூறினார்.

சதாநந்தரும் சந்தோஷ சித்தத்துடனே அவ் ஆக்ஞையைச் சிரமேற் கொண்டார்.

ஸ்வாமிகள் கிரீசரை நோக்கி, "கிரீசரே! கேளுங்கள்! உலகத் துன்பத்தை நீக்குவதற்காக நான் ஆயிரம் ஜன்மம்

எடுக்கவேண்டி வந்தபொழுதிலும், நான் உற்சாகத்துடனே எடுப்பேன்! எனது சொந்த முக்தி எதற்கு என்று நான் நினைக்கிறேன்; நான் செல்லும் வழியிலே எல்லோரையும் இட்டுச் செல்ல விரும்புகிறேன்," என்று கூறினர்.

இதேகாலத்தில் ஸ்வாமிகள் சாரதச் சந்திரருடனே தபஸ்வினி மாதா என்பவரால் ஸ்திரீ வித்யாப்பியாசத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட மஹா காளி பாடசாலைக்குச் சென்று பார்த்தார். இந்திய ஸ்திரீகள் முன்னேற்ற மடைய வேண்டிய விஷயத்திலே ஸ்வாமிகளுக்கு அதிக பிரிய முண்டு ஆகலால், தபஸ்வினி மாதாவினுடைய வேண்டுகோளுக் கிணங்கி, ஸ்வாமிகள் அப் பாடசாலையைப்போய்ப் பார்வையிட்டார். அங்கிருந்த வகுப்புக்களெல்லாவற்றிலும் ஸ்வாமிகளைச் சுற்றிக்கொண்டுபோய்க் காண்பித்தார்கள்; ஒரு வகுப்பிலே பெண்கள் சிவஸ்தோத்திர மொன்றை ஒரே குரலாகக் கூறி, அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்த பிரகாரம் பூஜை செய்தார்கள். இப் பெண்களிலே மிகுந்த சமர்த்துடைய ஒரு பெண் காளிதாஸருடைய ரகுவம் சத்திலிருந்து ஒரு சுலோகத்தை யெடுத்துக் கூறி அதை ஸம்ஸ்கிருதத்திலே விரித்துப் பொருள்பட உரைத்தாள். சுவாமிகளுக்கு அதிக சந்தோஷ முண்டாகி, அப்பெண்ணை மனமார ஆசி கூறினர்.

சுவாமிகள் அம் மாதாவுடனே சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், அவ் அம்மையாரை மெச்சி, அவ் அம்மை

யார் இந்திய நாட்டுப் பெண்களின் அபிவிருத்தியின் பொருட்டுப் பாடுபடுவதற்காக நன்றி பாராட்டினர்.

ஸ்வாமிகளை நோக்கி அவ் அம்மையார், "சுவாமி! நான் இப் பெண்களைப் பகவதி சொரூபமாகப் பாவித்துப் பூஜிக்கிறேன். எனக்கு வேறொரு உபாசனையும் தெரியாது," என்று வெகு விநயபூர்வகமாகக் கூறினர்.

சுவாமிகள் சந்தோஷம் மிகுந்தவரானர். அப் பாடசாலையை விட்டு ஸ்வாமிகள் நீங்கியபொழுது, அவர், பார்வையிடுபவர்கள் குறிப்பெழுதும் புத்தகத்திலேயே தமது நல்லபிப்பிராயத்தை யெழுதி வைத்துவிட்டுப் போனர்.

மஹா காளி பாடசாலைக்குச் செல்லும் மார்க்கத்திலெல்லாம் சுவாமிகள் இந்தியப் பெண்களை ஏற்றமடைவிக்கும் வழிகளையும், தாம் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் யோசனைகளையும், பிரஹ்மச்சாரிணிகளையும் சந்யாசினிகளையும் தயார் செய்ய வேண்டுமென்றும், இவர்கள் தகுந்த பயிற்சி பெற்ற பின்னர் ஸ்திரீகளுக்குள்ளே அறிவையும் நாகரிகத்தையும் பரப்புவார்களென்றும் தமது சிஷ்யரிடத்திற் கூறிக்கொண்டே போனர்.

பலராமருடைய வீட்டுக்குத் திரும்பி வருகையிலே அவர், "வேறு மாகாணத்திலே பிறந்து உலகைத் துறந்து வங்காள தேசத்து ஸ்திரீ ஜாதிகளின் நிமித்தம் தமது வாழ்நாளைச் செலவழித்துக்கொண்டிருக்கும் அந்த தபஸ்வினி மாதாவினுடைய பெருமையை மேன்மேலும் எடுத்

தெடுத்துக் காட்டி, 'ஸ்திரிகளே ஸ்திரீகளுக்குக் கற்பிக்க முடியும்' என்று கூறினர்.

அப் பள்ளிக்கூடத்திலே சில புருஷர்களும் உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஸ்வாமிகளுக்கு இது பிடிக்கவில்லை. "விதவைகளும் பிரஹ்மச்சாரிணிகளுமே இத்தகைய வேலை செய்ய வல்லவர்கள்," என்று ஸ்வாமிகள் அபிப்பிராயப்பட்டார்.

இச் சமயத்திலே சுவாமிகள் பால்ய விவாகத்தைப் பற்றிச் சிறிது வருத்தப்பட்டார். "பால்ய விவாகமானது ஜாதியினுடைய சரீரபலத்தை பழிக்கின்றது என்பது மாத்திரமன்று; ஹிந்து சமூகத்திலே ஏராளமான விதவைகள் பெருகுவதற்குக் காரணமாம்," என்றும் ஸ்வாமிகள் அபிப்பிராயப்பட்டார். "அந்நிய நாட்டு மாதிரிகளைப் பின்பற்றிச் சீர்திருத்தங்கள் செய்வதற்காக அலைவதற்குப்பதிலாக, நமது பெண்களுக்குச் சுத்தமாய் இந்தியஜன சமூக மார்க்கத்தைப் பின்பற்றி அகன்ற நோக்கத்துடனே அறிவு அளிக்கவேண்டியதே நமது தர்மம்," என்றும், "அவர்கள் தங்களுக்கு நன்மையானதைத் தாங்களே செய்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டும்," என்றும் ஸ்வாமிகள் கூறினர்.

இந்திய நாடு முன்னேறுவதற்குப் பல பல ஆலோசனைகள் சுவாமிகளின் மனத்திலே இப்பொழுது சூழ்ந்திருந்தன. ஆனால், அவருடைய சரீரம் வியாதியால் பீடிக்கப்பட்டுச் சிறிது வருத்தம் கொடுக்கவே, அவருடைய

வைத்திய நண்பர்கள் "கிழே யீர மில்லாது குளிர்ச்சியான பிரதேசமாகிய அல்மோராவுக்கு அவர் உடனே போனால் தான் அவருடைய சரீரம் சௌக்கிய மடையும்," என்று கூறினார்கள். இந்த அல்மோரா நகருக்கு இங்கிலாந்திலிருந்து வந்த மிஸ் முல்லர் என்னும் மாதும் குட்வின் என்னும் சிஷ்யரும் இதற்கு முன்னமேயே சென்றிருந்தார்கள். தவிர, அம் மலைப்பிரதேச நகரிலே வசிப்பவர்களிற் சிலர்: சுவாமிகளை அங்கே வரும்படி அடிக்கடி எழுதிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகையால், ஸ்வாமிகள் மேமீ 6-ம் தேதியன்று தமது சகோதர சந்யாசிகளையும் சிஷ்யர்களையும் கூட இட்டுக்கொண்டு கல்கத்தாவுக்குச் சென்றார்.

போகும் வழியிலே லக்ஷ்மணபுரியில் சுவாமிகளும் மற்றவர்களும் தங்கினார்கள். அல்மோராவுக்கு இப்புறத்தில் வெகு தூரத்திலேயே சுவாமிகளுடைய அல்மோரா நண்பர்களிற் பலரும் சுவாமிகளுடைய அத்தியந்தரங்க சிஷ்யர்களுள் ஒருவரான குட்வின் என்பாரும் சுவாமிகளை அல்மோராவுக்கு இட்டுச் செல்வதற்காக வந்து காத்துக் கொண்டிருந்தார்கள். அல்மோராவுக்கு அருகிலேயுள்ள லோடியா என்ற கிராமத்திலே அல்மோரா நகர்வாசிகளுள் ஒரு பெரும் கூட்டம் சுவாமிகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தது; இவர்கள் ஒரு அழகிய குதிரையை அலங்கரித்து சுவாமிகளுக்காகக் கொண்டுவந்து வைத்திருந்தார்கள். சுவாமிகள் அக்குதிரைமீது ஏறித் தமது சிஷ்யர்களும்

சகோதர சந்யாசிகளும் நண்பர்களும் நகர்வ
புடை சூழ, 'வருபவர் இந்திரனோ சந்திரனோ' என்று
தோர் பிரமிக்கும்படி, அல்மோரா நகரிலே பவனி வந்
தார். ஊர்வலம் கடைத்தெரு அணுகிற்று; இங்கு அவ்வூர்
முழுதுமே கூடிவிட்டதுபோ லாய்விட்டது. ஸ்வாமிக
ளுடைய குதிரையை மிகுந்த கஷ்டத்துடனே அக் கூட்
டத்தினுள் நடத்திச் செல்லவேண்டி வந்தது. கூட்டம்
அவ்வளவு நெருக்கமாயிருந்தது. இருபுறங்களிலுமுள்ள
வீடுகளின் மேல்மெத்தைகளிலிருந்தும் சாளரங்களிலிருந்
தும் ஆயிரக்கணக்கான ஹிந்து ஸ்திரிகள் புஷ்பங்களையும்
அக்ஷதையையும் சுவாமிகளின்மீது வாரி யிறைத்தார்கள்.

நகரின் நடுமத்தியில் சுமார் மூவாயிரம் ஜனங்கள்
கொள்ளும்படியான ஒரு பெருங் கொட்டகை போடப்பட்
டிருந்தது; எங்குப் பார்த்தாலும் வாழைமரங்களாலும்,
தோரணங்களாலும், புஷ்பங்களாலும், செடிகொடிகளாலும்
அலங்கரிக்கப்பட்டிருந்தது; ஒவ்வொரு வீட்டு வாசலிலும்
கார்த்திகை தீபங்கள் போன்று தீபங்கள் ஏற்றி வைக்கப்
பட்டன; மேள தாள நாகஸ்வரங்கள் பூரித்தன. கொட்ட
கைக்கு உள்ளும் புறமுமாக நாலாயிரத்துக்குமேல் ஐயாயி
ரம் ஜனங்கள் வரையில் கூடியிருந்தார்கள். பண்டிதர் ஜாபால
தத்தர் ஜோஷி யென்பார் ஹிந்தி பாஷையிலே வரவேற்
புக் கூட்டத்தாருடைய உபசாரப்பத்திரிகையையும், பண்
டிதர் ஹரிராம் பாண்டேயென்பவர் லாலாபத்ரிஷா தல்காரியா
வென்பவருடைய உபசாரப் பத்திரிகையையும், இன்னு

மொரு பண்டிதர் சம்ஸ்கிருதத்திலே ஒரு உபசாரப்பத்திரிகையையும் படித்தார்கள்.

ஸ்வாமிகள் அதற்குப் பின் வருமாறு ஒரு பிரசங்கம் அளித்தார்:— "இதுதான் நமது முன்னோர்கள் கனவுகள் கண்டுகொண்டிருந்ததும், இந்திய மாதாவாகிய பார்வதி ஜனித்ததுமான பூமியாம். இதுதான் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு அவா மிகுந்த ஆத்மாவும் தனது வாழ்க்கையின் முடிவிலே வந்து சேர்ந்து, இங்கே அதன் மிருத வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தை முடிக்க விரும்புகிற பரிசுத்த பூமியாம். இப் புண்யபூமியின் பர்வதங்களின் சிகரங்களிலே, அதன் குகைகளின் அந்தரங்கங்களிலே, வேகமாகப் புரண்டு வரும் அதன் வெள்ளங்களின் கரைகளிலே, மிக மிக அற்புதமான நினைப்புக்கள் நினைக்கப்பட்டிருக்கின்றன; அதன் ஒரு சிறிதே அந்நியர்களால்கூட அவ்வளவு அதிகமாக மெச்சப்பட்டிருக்கிறது; நீதிபதிகளுள் மிக மிகத் தகுந்தவர்களால் ஒப்பில்லாததென்று உச்சரிக்கப்பட்டிருக்கிறது. எனது வாழ்நாட்களை நான் கழிப்பதற்கு எனது குழந்தைப்பருவத்தி லிருந்தே நான் கனவு கண்டு கொண்டிருந்த பூமி இதுவேயாகும்; நான் இங்கு வசிப்பதற்கு மறுபடியும் முயற்சித்துள்ளேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்; காலம் பக்குவ மாகாது, எனக்குச் செய்வதற்கு வேலையு மிருந்து, இப் பரிசுத்த ஸ்தலத்துக்கு வெளியே அனுப்பப்பட்டுவிட்டேனாயினும், ரிஷிகள் வசித்ததும் தத்துவஞானத்துக்குப் பிறப்பிடமு

மாகிய இம் மகா பர்வதத்தில் எங்கேனும் எனது நாட்களை முடிக்கவேண்டு மென்பதே எனது ஜீவிதத்தில் நம்பிக்கை. எனது நண்பர்காள்! ஒருவேளை நான் முன்னே கருதிய மாதிரியில் செய்ய முடியாமற் போகலாம்;— ஆ! அந்த மௌனம், எவரும் அறியா நிலைமை எனக்குக் கிடைக்க வேண்டுமென்று நான் எவ்வளவு விரும்புகிறேன்!— ஆயினும், எனது கடைசி நாட்கள் உலகிலுள்ள எல்லா இடங்களைக்காட்டிலும் இங்கேதான் கழிக்கப்படுமென்று நான் உண்மையில் பிரார்த்தனை செய்கிறேன், அநேகமாக நம்புகிறேன்.

இப் பரிசுத்த பூமியின் குடி ஜனங்களே! நான் மே நாட்டிலே செய்த சிறிய வேலையை நீங்கள் அன்புட மெச்சிப் புகழ்ந்ததற்காக, எனது நன்றியறிதலை யொப்புக் கொள்ளுங்கள். ஆனால், அதே சமயத்தில் எனது மனமானது மேல் நாட்டிலாவது கீழ் நாட்டிலாவது அதைப் பற்றிப் பேச விரும்புகிறதில்லை. இப் பர்வதராஜனின் சிகரம் ஒன்றன்பின் ஒன்றாக எனது பார்வையின் முன்னே தோன்ற ஆரம்பித்தபொழுது, வேலை செய்யவேண்டு மென்றுள்ள தூண்டுதல்களெல்லாம், அநேக வருஷங்களாக எனது மூளையிலே நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தக் கொதிப்பு, அமைதியடைந்தனபோலத் தோன்றின. செய்யப்பட்டுள்ளதைப்பற்றியும் செய்யப்படப் போவதைப் பற்றியும் பேசுவதற்குப் பதிலாக, ஹிமோத்கிரியானது நமக்கு எப்பொழுதும் போதிக்கின்ற அந்த ஒரு நித்திய தத்துவத்தை நோக்கி, இந்த ஸ்தலத்தின் ஆகாயத்திலே

யே சலித்துக்கொண்டிருக்கின்ற அந்த ஒரு நித்திய தத்துவத்தை நோக்கி, நான் காண்கின்ற கனவுகளில் என் காதிலே மெல்லிய குரலில் விழுந்துகொண்டே யிருக்கின்ற ஸநாதனமான தத்துவத்தை நோக்கி, இந்தப் பர்வதத்திலிருந்து புறப்படும் நதிகள் வேகமாகச் சுழன்று செல்கின்ற பொழுது என் காதிலே கேட்கிற ஒரே விஷயமாகிய தியாகத்தை நோக்கி மனமானது திரும்பிவிட்டது.—"இவ்வாழ்க்கையிலே ஒவ்வொன்றும் பயம் உண்டுபண்ணத்தக்கதே. மனிதனைப் பயமற்றவனாகச் செய்வது தியாகம் ஒன்றே." ஆம்; இதுதான் தியாக பூமி.

...."

நண்பர்காள், ...'ஹிமோத்கிரியிலே ஒரு ஆச்ரமம் இபற்றவேண்டும்,' என்று எனக்குள்ள ஒரு கருத்தைப் நீங்கள் மிகுந்த பிரியத்துடனே குறிப்பிட்டுள்ளீர்கள். ஆச்ரமம் இபற்றுவதற்குள்ள காரணத்தை, மற்றெல்லா இடங்களையும்விட இந்த ஸநாதனதர்மத்தைப் போதிப்பதற்கு இபற்றப்பட வேண்டிய பெரிய ஆச்ரமங்களுள் ஒன்றாக நான் பொறுக்கி யெடுக்க விரும்புகிற ஸ்தலம் இதுதான் என்பதற்குள்ள காரணத்தை, நான் ஒருக்கால் போதுமான அளவு விவரித்துவிட்டேன்; இப் பர்வதங்கள் நமது ஜாதியின் மிகமிகச் சிறந்த ஞாபகங்களிலே சேர்க்கை படையப்பெற் றிருக்கின்றன. இந்த ஹிமோத்கிரியானது மத சம்பந்தமான இந்தியாவின் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டு விடுமானல், மிச்சமுள்ளது மிகச் சொற்பமே...

...."

சுவாமிகள் அங்கே சில நாட்கள் வசித்தார். இங்கும் சுவாமிகளுக்கு ஓய்வு ஒழிவு கிடையா. எண்ணற்ற ஜனங்கள் இராப்பகலாக சுவாமிகளைத் தரிசிக்க வந்துகொண்டேயிருந்தார்கள்; இவர்களுடனே சாஸ்திர தத்துவ விஷயங்களிற் பலவற்றையும்பற்றி சுவாமிகள் எப்பொழுதும் சம்பாஷித்துக்கொண்டேயிருந்தார். இங்கும் சுவாமிகளுக்கு வேலைக்குறைவு ஏற்படாவிடினும், அவர் சிறிது சரீர சௌக்கிய மடைந்தார்; சுவாமிகளுக்கே தமது வாலிப பர்வத்துப் பலமும் ஊக்கமும் ஆநந்தமும் உண்டாய்விட்டது போலத் தோன்றிற்று. மேமீ 29-ம் தேதியன்று சுவாமிகள் தமது வைத்திய நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திலே இவ் விஷயத்தை மிகுந்த உற்சாகத்துடனே பின்வருமாறு எழுதினர்:—

* * * * நான் காலையிலும் மாலையிலும் குதிரைச் சவாரி செய்து அதிக சரீராப்பியாசம் எடுக்க ஆரம்பித்தேன். நான் சரீராப்பியாசம் செய்யத்தொடங்கி முதல் வாரத்திலேயே, நான் சிறு பையனயிருக்கையில் குஸ்தி விளையாட்டுக்கள் விளையாடிய காலத்துக்கு அப்புறம் அவ்வளவு நன்றாயிருந்தேனென்று நான் ஒருபொழுதும் உணர்ந்ததில்லையெனச் சொல்லும்படி அவ்வளவு நன்றாய் விட்டேன். சரீரத்தை யுடைத்தாயிருப்பது சந்தோஷமே யென்று நான் உண்மையில் உணர ஆரம்பித்தேன். ஒவ்வொரு அசைவும் எனக்குப் பல மிருக்கிறதென்று தெரிந்துகொள்ளும்படி செய்தது,—சதைகளின் ஒவ்வொரு சலனமும் ஆநந்தகரமாயிருந்தது..................

எப்படி யிருந்தாலும் நான் இப்பொழுது மிகமிகப் பலமுள்ளவனாயிருக்கிறேன். வைத்தியரே! நான் அழகிய பனிவரைகளின்முன்னே யுட்கார்ந்து "அவர் மரணமற்றவர், அழிவற்றவர், வியாதியற்றவர்; ஏனெனில், உண்மையில் அவர் யோகாக்கினி நிறையப்பெற்ற சரீரம் அடைந்துள்ளார்" என்று பொருள்படுகின்ற சுலோகத்தை உபநிஷத்துக்களிலிருந்து உரைத்துக்கொண்டே தியானிக்கும்பொழுது நீங்கள் என்னைப் பார்க்கவேண்டும்."

அல்மோரா நகரிலே சுவாமிகள் இருந்தபொழுது அவருடன் கூட அங்குச் சென்றிருந்தவர்கள்—இவர்கள் சுவாமிகளுடனேகூட வட இந்தியாவிலே அநேக இடங்களில் யாத்திரை செய்தார்கள்—ஸ்வாமி யோகாநந்தர், ஸ்வாமி நிரஞ்சனாநந்தர், அற்புதாநந்தர், அச்சுதாநந்தர், விஞ்ஞானாநந்தர், சதாநந்தர், பழைய சச்சிதாநந்தர், பிரஹ்மச்சாரி, சுத்தாநந்தர், கிருஷ்ணலால், குட்வின் ஆகியவர்களாம். சுவாமிகளுடைய சரீரம் சிறிது சௌக்கியமாய், சிரமமற்றிருந்தபொழுதிலும் அவருடைய மனமானது சும்மா யிருக்க முடியவில்லை. ஏதேனும் புதிப புதிய விஷயங்களைப்பற்றி சுவாமிகள் எப்பொழுதும் பேசிக்கொண்டேயிருப்பார்; ஆழ்ந்த விஷயங்களைப்பற்றி சுவாமிகள் சிந்தித்தும்பேசியும் வந்தபொழுதிலும் வேடிக்கை விளையாட்டிலும் வெகு நேரம் கழிப்பார். இது மாத்திரம் அன்று; தத்துவ சம்பந்தமான சந்தேகங்கள் தெளிவுறவேண்டி சுவாமிகளுடைய சிஷ்யர்கள் அல்லது நண்பர்கள் சுவாமிகளுக்கு அச் சந்தேகங்களைத் தெரி

வித்துக் கடிதங்கள் எழுதுவார்கள்; சுவாமிகள் அவ்வவற்றுக்குத் தகுந்தவாறு ஆங்கிலத்திலே அல்லது ஸம்ஸ்கிருதத்திலே அச் சந்தேகங்களை நிவிர்த்தி செய்து மறுமொழி எழுதுவார். சுவாமிகள் இந்தியக் கரையிலே வந்து இறங்கினதுமுதல் கிறிஸ்தவப்பாதிரிகள் இங்கும் அமெரிக்காவிலும் சுவாமிகளுடைய முயற்சிகட்கு இடையூறுகள் உண்டு பண்ணக் கருதிப் பொய்யான அபவாதங்கள் பலவற்றை யச்சிட்டு அமெரிக்கப் பத்திரிகைகளிலும் மற்றும் பிரசுரித்து எங்கும் பரப்பினார்கள். சுவாமிகளுடைய அமெரிக்க சிஷ்யர்களும் நண்பர்களும் இப் பத்திரிகைகளிலிருந்து வெகு பிரசாரங்களைத் துண்டித் தெடுத்து சுவாமிகளுக்கு அனுப்பிக் கொடுத்தார்களாயினும், சுவாமிகள் அவற்றைச் சிறிதும் சட்டை செய்யவில்லை; 'அவ் வபவாதங்கள் அதர்மமும் அநியாயமு மானதினால் அவை தாமே அழிந்து, பிறர்க்குச் சீக்கிரம் பொய்யெனப் புலப்பட்டுவிடும்,' என்று சுவாமிகள் கருதி, அவற்றை லக்ஷ்யம் செய்யாது சும்மா யிருந்துவிட்டார். சிக்காகோ மாநகரிலே நடந்த சர்வமத மஹாசபைக்கு அக்கிராசனபதியா யிருந்த டாக்டர் பாரோஸ் என்னும் பெயர் பெற்ற பாதிரியே இந்தியாவுக்கு வந்திருந்தபொழுதும், இங்கிருந்து திரும்பி அமெரிக்காவுக்குச் சென்றும் சுவாமிகளுக்கு விரோதமான மொழிகள் கூறுதிருக்கவில்லை.

மேயீ 10-ம் தேதி யன்று இந்த டாக்டர் பாரோஸ் திரும்பவும் அமெரிக்காவுக்குப் போய், காலிபோர்னியா நகரிலே கரை யிறங்கினார். அங்கு 'க்ராணிக்ள்' என்ற பத்திரிகை

யின் பிரதிநிதி யொருவரிடத்திலே இவர் சுவாமிகளைப் பற்றிப் பின் வருமாறு கூறினர்:—

"நான் வந்து இறங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னமேயே சுவாமிகள் சென்னை வந்து சேர்ந்தார். ஆனல்; அவர் எங்களுடைய பழக்கத்தைப் புதுப்பித்துக்கொள்ளும் பொருட்டு அவர் என்னை வந்து பார்க்கவில்லை. அப்படிச் செய்வதற்குப் பதிலாக அவர் நான் வந்து சேர்ந்த மறுநாளே அவசரமாகச் சென்னையை விட்டுப் புறப்பட்டு விட்டார். அமெரிக்கா தேசத்து ஸ்திரீகளைப்பற்றி அவர் கூறியதாக க்ராணிக்ள் பத்திரிகை மொழிந்த தெல்லாம் உண்மையே; அவர் பொய் சொல்லிக்கொண்டிருந்ததைத் தெரிந்துகொண்டு என்னைப் பாராமல் போய்விட்டார். ஆபினும், நான் சரிபண்ண விரும்பும் விஷபம் ஒன்றுண்டு. சுவாமிகள் தமது நடத்தையினலே ஜாதியை இழந்து விடவில்லை. அவர் பிராஹ்மணனே யல்லவென்று தெரியவருகிறது. அவர் இந்தியாவிலுள்ள உயர்ந்த ஜாதிகளுக்குள் மிகமிகத் தாழ்ந்ததாகிய சூத்திர ஜாதியைச் சேர்ந்தவர். அமெரிக்க ஸ்திரீகளைப்பற்றியும் அமெரிக்க அமைப்புக்களைப்பற்றியும் அவர் கூறியதெல்லாம் நான் சந்தித்த ஹிந்துக்களுள் சிலருக்கு அருவருப்பை யளித்துவிட்டன. அவர்கள் என்னிடம் வந்து, அவர் தங்கள் மதத்தை எடுத்துப் பேசவாவது போதிக்கவாவது இல்லையென்று சொன்னர்கள்.

"நான் விவேகாநந்தரிடத்திலே விசேஷமாய் வெறுப்ப தென்னவென்றால், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஹிந்துப் பிரசங்கிகளுக்கு உள்ள செல்வாக்கைப்பற்றி அவர் மேம்படுத்திக் கூறுகின்ற பரிகாசகரமான மொழி யேயாம். அவர் அழகிய, ஆநந்தகரமான குணங்கள் வாய்ந்தவர்தாம்; ஆனால், அவர் தமது மூளையை இழந்துவிட்டார் போலத் தோன்றுகிறது. அவரைப் பிரமாதமாக எடுத்துக் கொள்வதா? கூடாதா? என்று என்னால் ஒரு பொழுதும் சொல்ல முடியாது. அவர் எனக்கு ஒரு ஹிந்து மார்க் ட்வெயின் போன்று தோன்றினர்.

"அவர் ஒரு சமர்த்தர், கொஞ்சக் காலத்திற்கேயாயினும் சில ஜனங்களைச் சிஷ்யர்களா யுடைத்தாயிருக்கிறார்."

இப்படிக் கூறின டாக்டர் பாரோஸை இந்திய ஜனங்கள் எப்படி வரவேற்கவேண்டுமென்று ஸ்வாமிகள் தமது நண்பர்களுக்கு எழுதினர், தெரியுமா? அது பின் வருமாறு:—

"டாக்டர் பாரோஸ் உலகத்துச் சந்தையிலே நடந்த மஹாசபையாகிய தமது பெரிய ஏற்பாட்டை ஜயகரமாக நடத்துவதற்கு ஸி - போனி என்பார் தெரிந்தெடுத்திருக்கக் கூடிய மிகமிகச் சமர்த்து வாய்ந்த பிரதிநிதியா யிருந்தார்; எப்படி இம் மஹா சபைகளுள் ஒன்று டாக்டர் பாரோஸினுடைய தலைமையின்கீழ் ஒப்பற்ற கீர்த்திபெற்ற தென்பது இப்பொழுது சரித்திர விஷயமாம்,

"மஹாசபைக்குப் பெருத்த ஜயம் அளித்தன டாக்டர் பாரோஸினுடைய பெருத்த தைர்யமும், களைப்பற்ற ஊக்கமும், சற்றும் கலங்காத பொறுமையும், ஒருபொழுதும் தவறாத நற்குணமுமாம்.

"இந்தியாவும் அதன் ஜனங்களும் அவர்களின் நினைப்புக்களும் சிக்காகோவில் நடந்த அவ் வற்புதமான சபையினால் முன்னிலும் மிக அதிகமாக உலகின் முன்னே கொண்டுவரப்பட் டிருக்கின்றன; ஜனசமூகத்துக்குக் கிடைத்த அந்த நன்மைக்காக நாம் அச் சபையிலிருந்த வேறெப்புருஷரினும் டாக்டர் பாரோஸினிடத்து நிச்சயமாகக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"இன்னும், அவர் மதமாகிற பரிசுத்த நாமத்தை யெடுத்துக்கொண்டு, மனுஷ்ய வர்க்கத்து மகத் ஆசார்யர்களுள் ஒருவருடைய பெயரை யெடுத்துக்கொண்டு நம்மிடம் வருகிறார்; நாசரேத் தீர்க்கதரிசியினுடைய கொள்கையை அவர் விரித்துரைத்தல் மிகவும் தாராள நோக்கமுள்ளதாயும் மனுஷ்யனை உயர்த்துவதாயு மிருக்குமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இப் புருஷர் இந்தியாவுக்குக் கொண்டுவரக் கருதுகின்ற கிறிஸ்து-சக்தியானது தன்னுடையதைத் தவிர மற்றெல்லாவற்றையும் நிந்தனை நிறைந்த ஹிருதயத்துடனே தற்பெருமை மிகுந்து பிறருடையதைப் பார்த்துச் சகியாதவர்களுடையதன்று; ஆனல், இந்தியாவில் முன்னமேயே வேலைசெய்துகொண் டிருக்கும் பலபல சக்திகளிலேகூடச் சேர்ந்து உழைப்பவ

ராகச் சகோதர ஸ்தானத்தை நாடும் ஒரு சகோதரனுடை யதேயாம். எல்லாவற்றுக்கும் மேலே, நன்றி பாராட்டலும் உபசாரணையும் இந்திய மனுஷ்யவர்க்கத்தினுடைய விசேஷ லக்ஷணங்களாமென்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்; ஆகையினாலே, பூமண்டலத்தின் மறுபக்கத்தி லிருந்து வருகின்ற இவ் அந்நியர் நமது துன்பம், நமது வறுமை, வீழ்ச்சி இவையெல்லாவற்றி னிடையிலும் இரு தயமானது இந்தியாவானது 'ஆர்யர்'களுடைய பூமியாயும் இந்தியா தேசத்து ஐச்வர்யம் ஜனசமூகங்களின் பழ மொழியாயும் இருந்த அப் பண்டைக் காலத்தில் எப்படி யடித்துக்கொண்டிருந்ததோ அப்படியே இப்பொழுதும் அடிக்கின்றது என்று கண்டுகொள்ளும்படியான மாதிரி யில் நடந்துகொள்ளுமாறு நான் எனது தேசத்தினரைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்."

சர்வசங்க பரித்தியாகியாகிய ஸ்வாமிகள் டாக்டர் பாரோஸைப்பற்றி எழுதியனுப்பினதற்கும் நாகரிக சமுத் திரத்தில் மூழ்கித் தத்தளிக்கும் பாதிரி டாக்டர் பாரோஸ் ஸ்வாமிகளைப்பற்றிக் கூறியதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! ஆ! ஆ! என்ன ஆச்சர்யம்! ஸ்வாமிகளுடைய சர்வமத மஹா சபை முதற் பிரசங்கத்தை யருகிலேயே யிருந்து கேட்டு அமெரிக்க ஜனசமூகத்துடனே தாமும் கை தட்டி ஆர்ப்பரித்து மெச்சி ஸ்வாமிகளைக் கொண்டாடிய டாக்டர் பாரோஸே இப்படிக் கூறினாரென்றால் மற்றப் பாதிரிகள் குறுகிய நோக்கத்துடனே பலவித குறும்புகள்

செய்துவந்தார்கள் என்பதில் சந்தேகம் உண்டாகுமா? ஸ்வாமிகள் லண்டனிலிருந்தபொழுதே, 'டாக்டர் பாரோஸ் இந்தியாவுக்குப் போகப்போகிறார்,' என்று கேள்விப்பட்டு, மேலே கண்ட கடிதம் உடனே எழுதினார். பின்னர் 1897-ம் வருஷம் ஜனவரிமீ 30-ம் தேதியன்று ஸ்வாமிகள் சிக்கா கோநகரிலுள்ள தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடி தத்திலே "நான் டாக்டர் பாரோஸை அன்புடனே வர வேற்கும்படி லண்டனிலிருந்து என்னுடைய ஜனங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அவர்கள் அவருக்குப் பெரு த்தமொரு வரவு அளித்தார்கள்; ஆனால், கல்கத்தாவிலே அவர் எவ்வித மதிப்பையும் உண்டாக்க முடியாமற்போ ரது என்னுடைய குற்றமன்று......இப்பொழுது டாக்டர் பாரோஸ் என்னைப்பற்றி குறை நினைக்கின்றார் என்று கேள்விப்படுகிறேன். அப்படியிருக்கிறது உலகம்!" என்று வரைந்தார். இப்பொழுதுகூட ஸ்வாமிகள் அந்தக் கிறிஸ் தவப் பாதிரியை நிந்திக்கவில்லை. மிஸஸ் ஸாராபுல் என்னும் மாது டாக்டர் லூயி ஜேன்ஸ் என்பவருக்கு எழுதிய ஒரு கடிதத்திலே டாக்டர் பாரோஸுக்குத் தகுந்தபடி மறு மொழி கூறினர்.

ஸ்வாமிகள் டாக்டர் பாரோஸ் போன்று தம்மீது பொறாமையும் விரோதமும் கொண்டவர்களைக் குறித்துத் தமது அமெரிக்க சிஷ்யர்களுக்கு இக் காலத்திலே சுவாமி கள் எழுதிய கடிதங்களைக் கண்டால், சுவாமிகளுடைய மனப்பான்மை நன்கு விளங்கும். சுவாமிகள் பெப்ரவரிமீ 25-ம் தேதி எழுதிய ஒரு கடிதத்திலே,

"ஜனங்கள் கூறுகிறபடி, எனக்கு மரிப்பதற்கு நேரமில்லை. தேசம் முழுதிலும் ஊர்வலங்களிலும், மேளதாளங்களிலும், பலவித வேறு நல்வரவு உபசார உபசாரங்களிலும் நான் அநேகமாக மரித்துவிட்டேன் ....
ஆனால், எனது வேலையைத் தாண்டு தண்டாக்ச எம்முயற்சியும் செய்யத் தவறாத சிறிதும் இரக்கமின்றிப் பொறாமை மிகுந்த ஜனங்களாலே தேசம் நிறைந்திருக்கிறது.

"ஆனால், எவ்வளவுக் கெவ்வளவு எதிரிடை ஏற்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக என்னுள் உள்ள பைசாசம் எழுப்பப்பட்டு விடுகிறது என்பது உங்களுக்கே நன்றாய்த் தெரியும்." என்று எழுதினர்.

இன்னும், சுவாமிகள் ஏப்ரல்மீ 28-ம் தேதி எழுதிய ஒரு கடிதத்திலே டாக்டர் பாரோஸ் இந்தியாவில் ஜயம் பெறாததற்குக் காரணம் இன்னதென்று பின் வருமாறு குறிக்கின்றார்:—

"டாக்டர் பாரோஸ் இதற்குள்ளாக அமெரிக்கா போய்ச் சேர்ந்திருப்பாரென்று நம்புகிறேன். அந்தோ! அவர் இங்கு மிகமிக மூடத்தனமான கிறிஸ்தவமதத்தைப் போதிக்க வந்தார்; சாதாரணமாகக் கிடைக்கும் பயன் அவருக்குக் கிடைத்துவிட்டது; அவர் கூறியதை எவரும் கேட்கவில்லை. அவர்கள் அவரை மிகவும் பிரியமாய் ஏற்றுக்கொண்டார்கள் என்பது உண்மையே; ஆனால், அப்படியவர்கள் செய்ததற்குக் காரணம் என்னுடைய கடிதமேயாம். அவருக்குள்ளே மூளையை வைக்க என்றால் முடியவில்லை!

இன்னும் அவர் ஒரு விநோதகரமான மனிதர் போலத் தோன்றுகிறார். நான் சுதேசம் திரும்பி வந்தபொழுது ஜனசமூகம் பெரிதாகக் கொண்டாடியதுபற்றி அவருக்குப் பித்துப் பிடித்துவிட்டதென்று நான் கேள்விப்படுகிறேன். எப்படியாயினும், மூளையுள்ள மனிதர் ஒருவரை நீங்கள் அனுப்பியிருக்கவேண்டும்; ஏனெனில், சர்வமத மஹாசபையானது டாக்டர் பரோஸ் அவர்களால் ஹிந்து மனத்துக்கு ஒரு வேடிக்கை யாக்கப்பட்டுவிட்டது. தத்துவாதீத வழிகளிலே பூவுலகில் எந்த ஜனசமூகமும் ஹிந்துவுக்கு முன்னால் விளக்குப் பிடிக்க முடியாது—கிறிஸ்தவ பூமிகளிலிருந்து போதிப்பதற்கு இங்கு வந்த எல்லாரும் "கிறிஸ்தவர்கள் சக்தி வாய்ந்தவர்கள்," என்றும், "தனவந்தர்கள்," என்றும், "ஹிந்துக்கள் அப்படியல்லர்," என்றும், "கிறிஸ்தவமதமானது ஹிந்துமதத்தை விடச் சிறந்ததே," என்றும் உள்ள நியாயமாகிய அவ்வொரு பழமையான மூடத்தனத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; அதற்கு ஹிந்துவானவன் தகுந்தபடி "இந்துமதமே மதம் என்பதற்கு அதுவே காரணம்," என்றும், "கிறிஸ்தவமதம் அப்படியல்ல," என்றும், "ஏனென்றால், இம் மிருக உலகிலே போக்கிரித் தனமே அபிவிருத்தி யடைகிறது," என்றும், "புண்ணியம் எப்பொழுதும் துன்புறுகிறது," என்றும் திருப்பிக் கூறுகிறான்.

"மேனாட்டு ஜனசமூகங்கள் சாஸ்திரீய ஞானத்திலே எவ்வளவு அபிவிருத்தி யடைந்திருந்தபொழுதிலும் ஸ்து

லௌகிகக் கல்வியிலும் ஆத்மீகக் கல்வியிலும் அவர்கள் குழந்தைகளே யென்று தோன்றுகிறது. ஜடசாஸ்திரமானது லௌகிகச் செழிப்பையே அளிக்க முடியும்; ஆனால், ஆத்மீக சாஸ்திரமோ நித்திய வாழ்க்கையின் பொருட்டு உள்ளது. நித்திய வாழ்க்கையில்லாவிடினும் லக்ஷியங்களாக ஆத்மீக நினைப்புக்களின் போகமானது அதிருஷ்டமோ யிருந்துகொண்டு, மனிதனை யின்னும் ஆனந்தவான் ஆக்குகிறது; ஆனால், ஜடவாதத்தின் மூடத்தனமோ: போட்டிக்கும், தகாத ஆசைக்கும், கடைசியாகத் தனி மரணத்துக்கும், ஜனசமூக மரணத்துக்கும் இட்டுச் செல்கிறது.

"* * * * சிக்காக்கோ நகர் டாக்டர் கோல்ஸ்டன் டர்ன்புல் என்பவரை யுனக்குத் தெரியுமா? இந்தியா வந்து சேர்வதற்குச் சில வாரங்களுக்கு முன்னமே இங்கு வந்தார். அவர் என்னிடத்து மிகுந்த பிரிய முள்ளவராயிருந்தது போலத் தோன்றுகிறார்; பயன், இந்து ஜனங்கள் எல்லோரும் அவரை மிகவும் அதிகமாக விரும்பினார்கள்.......... இப்பொழுது என்னுடைய ரோமம் நரைத்து வருகின்றதினாலே, நான் ஒரு பெரிய தாடி வளர்க்கப் போகிறேன். அது ஒரு கௌரவமான தோற்றம் அளித்து அமெரிக்காவிலுள்ள நிந்தனைக்காரர்களிடமிருந்து மனிதனை ரக்ஷிக்கின்றது. ஏ, வெள்ளை ரோமங்களே! உங்களால் எவ்வளவு தான் ஒளிக்க முடியும்! எல்லாப் பெருமையும் உங்கட்கு உண்டாவதாக. ஆ! ஈச்வரா!"

சுவாமிகள் இந்தியாவுக்கு வந்து ஆங்காங்குப் பிரசங்கங்கள் செய்து வந்த காலத்தில் சிலருடைய நியாய விரோதமான செய்கைகளைப்பற்றி இவர் பகிரங்கமாகக் கூற நேரிட்டது. அதனால் அவர்களுக்குச் சிறிது மனத்தாங்கல் உண்டாகியிருக்கலாம். தாம் பேசியது நியாயமே யென்று எடுத்துக் காட்டிச் சுவாமிகள் மேமீ 5-ம் தேதி யன்று ஒரு நண்பருக்குப் பின் வருமாறு எழுதினர்.

—ரையும்—ரையும் பற்றி, அவர்கள் இந்தியாவில் எவருக்கும் தெரியாதவர்கள் என்பதை நீ முதலில் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் ஒரு சில பத்திரிகைகளைப் பிரசுரித்து மிகுந்த நுரையை யுண்டாக்கி மேனாட்டுச் செவிகளில் எட்டும்படி செய்வதற்கு முயற்சிக்கலாம்; ஆனால், இந்துவாகப் பிறந்தவர்களுக்குள்ளே—ரைப்போன்று இரண்டு டஸன் உண்டாவென்பதும்,—போன்று இருநூறு பேர் இந்தியா முழுதிலும் உண்டா வென்பதும் நான் அறியேன். நான் அமெரிக்காவிலே ஒரு மனிதனாயிருந்தேன்; இங்கு வேறொருவனாயிருக்கிறேன். இங்கு ஜனசமூகம் முழுதும் என்னைத் தங்கட்கு ஆதாரமாக நோக்குகின்றார்கள்,—அங்கு நான் மிகவும் நிந்திக்கப்பட்டதொரு பிரசங்கியாயிருந்தேன். இங்கு அரசர்கள் எனது வண்டியை இழுக்கின்றனர்,—அங்கு ஒரு நல்ல விடுதிக்குள் செல்வதற்குக் கூட எனக்கு அநுமதி கிடையாது. ஆகையால், இங்கு நான் கூறும் மொழிகள் நண்பர் ஒருவர் ஒப்புக்கொள்வதற்கு எவ்வளவு அசந்தோஷகரமாயிருப்பதாகத் தோன்றியபொழுதிலும், எனது ஜனங்களாகிய ஜாதியின்

நன்மையின்பொருட்டேயா யிருக்கவேண்டும். உண்மையா யும் யோக்கியமாயும் உள்ள ஒவ்வொன்றினிடத்தும் அன் பும் தாராள சிந்தையும்,—ஆனல், ஒருபொழுதும் முக ஸ்துதியின் பொருட்டன்று.—ர்கள் நான் இந்தியாவில் ஆசாரசர்ந்தாவா யிருந்ததினாலே என்னை முகஸ்துதி செய்து எமாற்ற முயன்றார்கள்-ஆகையால்தான், ஒரு சில தைர்யமான உறுதிமொழிகள் புகன்று, அவர்களுடைய புரட்டுகட்கு எவ்விதமான சம்மதியும் கொடுக்காமல் நான் நின்றுவிடவேண்டியது அதிக அவசியமாயிற்று; அக் கார் யம் ஆய்விட்டது. எனக்கு அதுபற்றி மிகச் சந்தோஷமே. எனக்குச் சரீரம் சௌக்கியமா யிருந்தால், நான் இப் புரட் டர்களையும் தான்தோன்றிகளையும் இந்தியாவிலிருந்து களை ந்து நீக்கியிருப்பேன், என்னு லானமட்டும் முயற்சி யாவது செய்திருப்பேன்..............நான் இன்னும் ஒரு சில வருஷங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்திய வானது முன்னமேயே ஸ்ரீ ராமகிருஷ்ணருடையதாயும் பரிசுத்தம் பண்ணப்பட்ட இந்து மதத்தின் பொருட்டும் ஆய்விட்டதென்பதை நான் உனக்கு மறுபடியும் கூறு கிறேன்."

ஸ்வாமிகளைப்பற்றிக் கிளம்பிய அவதூறுகளைக்குறி த்து மிக வருந்திய ஒரு நண்பருக்கு ஸ்வாமிகள் ஜுலை 9-ம் தேதியன்று எழுதிய கடிதம் ஸ்வாமிகளுடைய 'கலங் காத நெஞ்சுடைய ஞான தீர'த்தனத்தை வெட்ட வெளி யாய் விளக்குகின்றது. அது பின் வருமாறு:—

"...............எந்த ஜாதியும் இழக்கப்படவில்லை யென்பது மாத்திரமன்று; நான் மேல் நாடு சென்றதானது 'கடல் யாத்திரை செய்யக் கூடாது,' என்று கூறிக்கொண்டிருந்த எதிர் கட்சியை மிகவும் அதிகமாக உடைத்துவிட்டது. நான் ஜாதியிலிருந்து தள்ளப்பட்டால், இந்தியா தேசத்துச் சிற்றரசர்களில் பகுதி பெயர்களுடனும், படித்துள்ள இந்தியர்களுள் அநேகமாக எல்லாருடனும் நான் அப்படிச் செய்யப்பட வேண்டியிருக்கும். ஆனால், நான் ஆச்ரமம் வகிப்பதற்கு முன் நான் சேர்ந்திருந்த ஜாதியில் தலைமையாயுள்ள ராஜா என்னைக் கௌரவிக்கும் பொருட்டு ஒரு விருந்து செய்தார்; அதிலே அந்த ஜாதியில் பெரியவர்களில் பெரும்பான்மையோரும் வந்திருந்தார்கள். தேவர்கள் மிருத ராசிகளுடனே சேர்ந்துண்பது தேவர்களுடைய பெருமைக்குக் குறைவாம்போல, சந்யாசிகள் நாராயணர்களாயும் மற்றவர்கள் சாதாரண மனிதர்களாயும் இருப்பதினாலே, சந்யாசிகள் இந்தியாவில் எவருடனும் சேர்ந்து உட்கார்ந்து உண்பதில்லை; அரிய—ரே! இப்பாதங்கள் ஒரு நூறு அரசர்களின் சந்ததியாரால் கழுவித் துடைக்கப்பட்டுப் பூஜிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலே எவருக்கும் நடவாத ஒரு ஊர்வலமானது தேசம் முழுதிலும் நடைபெற்றது. நான் தெருக்களில் புறப்படத் துணிந்தால், ஜனங்களை ஒழுங்கு படுத்துவதற்குப் போலீசார் அவசியமாக வேண்டிவந்தது என்று சொன்னால் போதும்! உண்மையில் இதுதான் ஜாதிப் பிரஷ்டத்துவம் போலும்! மிஸ்ஸாக்களிட மிருந்து அது பசையை எடுத்து

விட்டதென்பது உண்மைதான்; அவர்கள் இங்கு யார்? ஊர் பெயர் அற்றவர்கள்; நாங்கள் அவர்கள் இருக்கிறார்கள் என்றே தெரியாமல் ஆநந்தகரமான அறிவீனத்தில் இருக்கிறோம்.........................

................................பிறரை நிந்திப்பதற்கு எப்பொழுதும் தயாராயுள்ளவர்கள் தங்களைக் குற்றம் கூறினால் ஒரு சிறிதும் சகிக்க முடியாதவர்கள் என்பது நன்கறிந்த மனோதர்ம விஷயம். இன்னும், நான் அவர்களுக்கு என்ன கடமைப்பட்டுள்ளேன்? உனது குடும்பத்தையும்—ரையும்—ரையும்—ரையும் இன்னும் ஒரு சில அன்பார்ந்தவர்களையும் தவிர, வேறெவர் நான் எனது எண்ணங்களைப் பரப்புவதற்கு எனக்கு உதவி செய்ய முன் வந்தவர்கள்? அமெரிக்கர்கள் இன்னும் அகன்று அதிக ஆத்மஞானம் அடையும்படி நான் அமெரிக்காவிலே அநேகமாய் எனது மிகமிகச் சிறந்த சக்திகள் முழுதையும் செலவழித்து மரணத் தறுவாயில் வரும் வரையில் நான் வேலை செய்யவேண்டி வந்தது! நான் இங்கிலாந்திலே ஆறு மாசங்கள்தான் வேலை செய்தேன். ஒன்றைத் தவிர, ஒரு மூச்சுக்கூட நிந்தனை யில்லை; அதுவும் ஒரு அமெரிக்க ஸ்திரீயினுடைய வேலையேயாம்; அது எனது ஆங்கில நண்பர்களுக்கு மிகவும் திருப்தியை அளித்தது. எதிர்ப்பா ரில்லையென்பது மாத்திரமன்று; ஆனால், ஆங்கிலக்கோயில் பாதிரிமார்களில் அநேகர் எனது உறுதியான நண்பர்களாய்விட்டார்கள். கேட்காமலே எனது

வேலைக்கு மிகுந்த உதவி கிடைத்தது; இன்னும் அதிக உதவி எனக்குக் கிடைக்குமென்பது நிச்சயம். எனது வேலையைக் கவனித்து அதற்கு உதவி சேர்க்கும் சபையொன்று உள்ளது; எல்லாவற்றையும் ஔதார்யமாக எதிர்த்து என் வேலையில் உதவி செய்வதற்காக உயர்குலத்தவர் நால்வர் இந்தியாவுக்கு என்னைப் பின்தொடர்ந்து வந்தார்கள்; இன்னும் எத்தனையோ டஸன் பேர்கள் தயாராயிருந்தார்கள்; நான் அடுத்த தடவை சென்றால், நூற்றுக்கணக்கானவர்கள் உண்டாவார்கள்! அரிய, அரிய—ரே, என்னைக் குறித்துப் பயப்படவேண்டாம்......உலகம் பெரிது, மிகப் பெரிது; இவர்கள் கோபித்துக்கொண்டாலும் எனக்கு ஒரு இடம் இருக்கவேண்டும்.

“எப்படியாயினும் நான் எனது வேலையில் திருப்தியடைந்திருக்கிறேன். நான் எதையும் எப்பொழுதும் யோசனை செய்ததில்லை. விஷயங்கள் நேர்ந்தபடியே நான் அவற்றை யெடுத்துக்கொண்டேன். ஒரே எண்ணம்தான் எனது மூளையில் கொதித்துக்கொண்டிருந்தது,—அதாவது, இந்தியப் பொது ஜனங்களை உயர்த்துவதற்கு யந்திரத்தை ஆரம்பித்துவிடுவதே, நான் அப்படிச் செய்வதில் ஒரு சிறிதளவு ஜய மடைந்திருக்கிறேன். எனது பையன்கள் பஞ்சம், பிணி, துன்பம் இவற்றின் மத்தியில் எப்படி வேலைசெய்கிறார்களென்பதையும், வாந்திபேதியினால் பீடிக்கப்பட்ட பறையனுடைய படுக்கைப் பாயினருகிலே நின்றுகொண்டு அவனை எப்படிப் பராமரிக்கிறார்களென்பதையும்,

பட்டினி கிடக்கும் சண்டாளனை எப்படிப் போஷிக்கிறார்க ளென்பதையும் நீங்கள் பார்த்தால் உங்களுடைய ஹிருதயம் சந்தோஷ மடையும்; ஈஸ்வரன் எனக்கும், அவர்கள் எல்லோருக்கும் உதவி யனுப்புகிறார். 'மனிதர்கள் எம்மாத்திரம்?' நான் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இருந்தபொழுது, நான் இந்தியாவிலே இடத்துக்கு இடம் எவருக்கும் தெரியாமல் சுற்றித் திரிந்துகொண்டிருந்த பொழுது, அவர் இருந்ததுபோலவே, அன்பு செலுத்தும் என்னுடன் இப்பொழுதும் இருக்கிறார். குழந்தைகளாகிய அவர்கள் என்ன பேசினால் எனக்கென்ன? அவர்கள் நல்லதொன்றையும் அறியார்கள். என்ன! ஆத்மாநுபூதிபெற்றுப் பூவுலகின் மூடத்தனத்தினுடைய வீணத்தனத்தை யநுபவத்தில் அறிந்துள்ள நானு: குழந்தைகளின் பிதற்றல்களைக் கேட்டு எனது பாதையினின்றும் நழுவுவது? என்னைப் பார்த்தால் அப்படித் தோன்றுகிறதா?

"என்னைப்பற்றியே நான் அதிகம் பேசவேண்டி வந்தது; ஏனெனில், நான் அவ் விஷயத்தில் தங்களுக்குக் கடப்பாடுடையேன. எனது வேலை முடிந்துவிட்டதென்று நான் உணர்கிறேன். அதிகமாகப் போனால், மூன்று அல்லது நான்கு வருஷங்கள்தாம் ஜீவிதம் மிச்சம் உள்ளது. நான் மோட்சமடைய வேண்டுமென்றிருந்த விருப்பமெல்லாவற்றையும் இழந்துவிட்டேன். நான் ஒருபொழுதும் பூவுலகபோகங்களை விரும்பினதேயில்லை. எனது யந்திரமானது பலமாக வேலைசெய்யும் ஸ்திதியிலாய்விட்ட

தென்பதை நான் பார்க்கவேண்டும்; குறைந்த பக்ஷம் இந்தியாவிலாவது மனுஷ்ய வர்க்கம் நன்மையடையும் பொருட்டு நான் ஒரு யந்திரம் வைத்துவிட்டேனென்பதை நிச்சயமாக அறிந்துகொண்டு, அடுத்தபடி யென்னவென்பதைக் கவனியாமல் நான் உறங்குவேன். உள்ள ஒரே கடவுளை, நான் நம்புகிற ஒரே ஈஸ்வரனை, எல்லா ஜீவர்களுடையவும் சமஷ்டியை, நான் உபாசிப்பதற்காக நான் மறுபடியும் மறுபடியும் பிறந்து ஆயிரக்கணக்கான துன்பங்களை யநுபவிப்பேனாக—எல்லாவற்றுக்கும் மேலாக, கொடியவராம் எனது கடவுள், துன்புறுவோராம் எனது கடவுள், எல்லா ஜாதிகளிலும் எல்லா வர்க்கங்களிலும் ஏழையாம் எனது கடவுள் இவரே எனது உபாசனைக்குப் பிரதான விஷயமாம்.''

....

''எனக்குள்ள நேரம் கொஞ்சம் நான் சொல்லவேண்டியதை யெல்லாம், அது பிறருக்குக் கோபத்தை யுண்டாக்கியபொழுதிலும், நான் வெளியிட்டுத்தான் தீரவேண்டியிருக்கிறது. ஆகையால், எனது அரிய—ரே, எனது வாயிலிருந்து எது வந்தபொழுதிலும் அதைப் பார்த்துப் பயந்துவிடாதீர்கள்! ஏனெனில், என் பின் புறத்திலே யுள்ள சக்தி விவேகாநந்தரன்று; ஆனால், ஈஸ்வரனாகிய அவரே; மிகமிக நல்லது இன்னதென அவருக்குத் தெரியும். நான் உலகைச் சந்தோஷிப்பிக்க வேண்டுமானால் அது உலகுக்குத் தீமை செய்ததாகும். பெரும்பான்மையோர் ஆட்சி புரிந்து உலகினுடைய விசனகரமான ஸ்திதி

யை உண்டுபண்ணுகிறதினாலே, பெரும்பான்மையோர் கூறுதல் தப்பேயாம். ஒவ்வொரு புதிய கொள்கையும் எதிர்ப்பை யுண்டாக்கிக் கொள்ளவேண்டும்; நாகரிகம் பெற்றவர்களிடத்திலே சௌரதையானதொரு பரிகாசம், காட்டு மிராண்டிகளிடத்திலே இழிந்த ஊளைச் சத்தமும் கேவலமான நிந்தனைகளும். இப் பூப்புழுக்கள்கூட நிமிர்ந்து நிற்கவேண்டும். குழந்தைகள்கூட ஒளி பார்க்கவேண்டும்.........ஒரு நூறு செழிப்பு அலைகள் எனது தேசத்திலே வந்து போய்விட்டன. எக் குழந்தையும் அறியமுடியாத பாடத்தை நாம் கற்றுவிட்டோம். வீணத்தனமே, இப் பயங்கர உலகு மாயையே. 'துறந்து' ஆநந்தமடை. ஆண் பெண் என்ற எண்ணங்களையும், எனது என்ற எண்ணத்தையும் விட்டுவிடு. வேறு பாதை கிடையாது. விவாகமும், பால் வேற்றுமையும், பணமும் உயிருடனிருக்கும் பைசாசங்களேயாம். பூவுலகு அன்பெல்லாம் சரீரத்திலிருந்து, சரீரத்திலிருந்து, சரீரத்திலிருந்து புறப்படுகின்றன. ஆண், பெண் என்ற வேற்றுமை கிடையாது! உடைமைகள் கிடையா! இவை நீங்கிவிட்டால், கண்கள் ஆத்மீக தர்சனத்துக்குத் திறக்கின்றன. ஆத்மாவானது தனக்குச் சொந்தமான அகண்ட சக்தியை மறுபடியும் அடைகிறது.......

அமெரிக்க ஸ்திரீகளை ஸ்வாமிகள் அடிக்கடி யிகழ்ந்து கூறினர் என்று கிளம்பிய அபவாதம் உண்மையோ, பொய்யோ வென்பதை வாசகர்களே ஸ்வாமிகள் கேத்ரி ராஜா

வுக்கு எழுதிய பின் வரும் கடிதத்திலிருந்து ஊகித்துக் கொள்ளவேண்டும்:—

"வீட்டை யழகு படுத்துவது கட்டிடமன்று,—மனைவியேயாவள்" என்று ஒரு சம்ஸ்கிருத கவி கூறுகிறார்; அது எவ்வளவு உண்மை! உன்மீது உஷ்ணமும குளிர்ச்சியும் மழையும் தாக்கவொட்டாது உன்னைக் காப்பாற்றுகின்ற கூரையானது அதற்கு ஆதாரமாக உள்ள தூண்களால்—அவை மிகமிக நேர்த்தியான, பிரமாண்டமான தூண்களாயிருப்பினும் சரியே—தீர்மானிக்கப்படுவதன்று; ஆனால், மத்திய ஸ்தானமாயுள்ளதும் உண்மையானதுமான ஆத்மீக கம்பத்தினால்—கிருகத்துக்கு உண்மையில் உள்ள ஆதாரத்தினால்—ஸ்திரீயினால் தீர்மானிக்கப்படவேண்டும். அந்த நியாயத்தின்படி பார்த்தால், அமெரிக்கனுடைய கிருகமானது ஒப்புவமையில் உலகிலுள்ள எந்தக் கிருகத்துக்கும் ஒப்புவமையில் பின்னிடப்பட்டதன்று.

"அமெரிக்கனுடைய கிருகத்தைப்பற்றி அநேக கதைகள் நான் கேள்விப்பட்டுள்ளேன்; 'ஸ்வதந்திரமானது இஷ்டப்படி செய்பலாமென்ற அநுமதியாய்விட்டது,' என்றும், 'ஸ்திரீத்தன்மை யில்லாத ஸ்திரீகளைப்பற்றியும்,' 'தங்களுடைய பித்துப் பிடித்த ஸ்வதந்திர ஆட்டத்திலே கிருக வாழ்க்கையின் சாந்தி, சுகம் எல்லாவற்றையும் தங்கள் பாதங்களின் கீழே போட்டு நுறுக்கிவிடுகிறார்கள்,' என்றும், அம்மாதிரியான அநேக மூடத்தனங்களையும் நான் கேள்விப்பட்டுள்ளேன். இப்பொழுது அமெரிக்க

ஸ்திரிகளுடைய அமெரிக்க கிருகங்களைப்பற்றி ஒருவருஷ அநுபவத்துக்குப் பின், அம்மாதிரியான அபிப்பிராயம் எவ்வளவு முழுப் பொய்யென்றும் தப்பானதென்றும் தோன்றுகிறது! அமெரிக்க ஸ்திரீகளே!—நான் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ள எனது ஆழ்ந்த நன்றியறிதலைச் செலுத்துவதற்கு ஒரு நூறு ஜன்மங்களும் போதா. எனது நன்றியறிதலை வெளியிடுவதற்கு எனக்குப் போதுமான வார்த்தைகள் கிடைக்கவில்லை. 'கிழக்கத்திய வர்ணனை'யே கிழக்கத்திய நன்றியறிதலை வெளியிடுகிறது. 'இந்திய சமுத்திரம் ஒருமைப்புட்டியாயும், மிகமிக உயர்ந்த பர்வதமாகிய ஹிமோத்கிரி எழுதுகோலாயும், பூமியே கடிதாசியாயும், காலமே எழுதுபவனாயும் இருந்தாற்கூட, உங்களிடம் எனக்குள்ள நன்றியறிதலை வெளியிட முடியாது!"

"சென்ற வருஷம் கோடை காலத்தில் நான் இத்தேசத்துக்கு என்னைச் சிபார்சை செய்தற்குப் பெயரின்றி, கீர்த்தியின்றி, பணமின்றி, கல்வியுமின்றி—ஸ்நேகிதரின்றி, உதவியற்று, அநேகமாய் அநாதையான நிலைமையில் ஒரு தூர தேசத்திலிருந்து அலைந்து திரியும் பிரசங்கியாக வந்தேன்—அமெரிக்க ஸ்திரீகள் என்னிடம் நட்புப் புரிந்து, எனக்கு இருக்க இடமும் உண்ணச் சோறும் கொடுத்து தங்கள் வீடுகளுக்கு என்னை யிட்டுச் சென்று, என்னைத் தங்கள் சொந்தப் புத்திரனாக, தங்கள் சொந்தச் சகோதரன் போன்று பாவித்து நடத்தினார்கள். அவர்கள் தங்கள் சொந்தக் குருக்கள்மாரே 'அபாயகரமான அவிசுவாசியை

விட்டுவிடும்படி அவர்களைத் தூண்டுதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தபொழுதுகூட, எனக்கு நண்பர்களாக நின்றார்கள். அவர்களுடைய மிகமிகச் சிறந்த நண்பர்கள் அவர்களிடம் 'எவரும் அறியாத இவ் வபாயகரமான பேர் வழியுடன் சார்ந்து நிற்கலாகாது,' என்று தினந்தோறும் கூறிக்கொண்டிருந்தபொழுதிலும்கூட, அவர்கள் எனக்கு நண்பர்களாக நின்றார்கள். ஆனால், அவர்கள், பெருந் தன்மை மனத்தினர், ஸ்வயநல மற்றவர், பரிசுத்தராகிய அவர்கள் ஒழுக்கத்தைப்பற்றியும் மனப்பான்மையைப் பற்றியும் அபிப்பிராயம் கூறுதற்கு மேலானவர்களே,—ஏனெனில், பரிசுத்தக் கண்ணாடியே பிரதிபலிக்கின்றது.

"எத்தனை அழகிய கிருகங்களை, பரிசுத்த நடத்தையும் குழந்தைகளிடத்து இவ்வளவென்று கூறற்கொணாத, ஸ்வயநலமற்ற அன்புள்ள எத்தனையோ மாதாக்களை, பனிக்கட்டி போன்று பரிசுத்தமான எத்தனையோ பெண்களையும் கன்னிகைகளையும நான் பார்த்திருக்கிறேன்! இவ்வளவுடன் மிகமிக உயர்ந்த பொருளில் உரைக்கும்படியான அதிக நாகரிகம், கல்வி, ஆத்மஞானம்! அப்படியாயின், அமெரிக்காவானது ஸ்திரீகள் வடிவத்திலே சிறகற்ற தேவதூதர்கள் மாத்திரமே நிறைந்துள்ளதா? எங்கும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு என்பது உண்மையே,—ஆனால், ஒரு ஜனசமூகமானது கொடியோர் எனப்படுகின்ற பலஹீனர்களாலே—இவர்கள் பின்னுக்கு நிற்கும் களைகளேயாதலினால்—நியாயம் தீர்மானிக்கப்படுவ

நன்று; ஆனால், ஜனசமூக ஜீவிதப் போக்குத்தெளிவாயும் பலமாயும் ஓடுகின்றது என்பதற்கு அடையாளமாயுள்ள நல்லோர்களாலும் சிறந்தோர்களாலும் பரிசுத்தர்களாலுமே நியாயம் நிர்மானிக்கப்படவேண்டும்.....................

"பின்னர், தற்காலத்து அமெரிக்க ஸ்திரீகள்—அவர்களுக்கு அகன்ற, தாராள சிந்தையுள்ள மனங்கள் இருக்கின்றதுபற்றி நான் மெச்சுகிறேன். இத்தேசத்திலும் கூட தாராள சிந்தையும் அகன்ற மனமுமுடைய அநேக மனிதரை, மிகமிகச் சுருங்கிய கொள்கைகளையுடைய கோவில்களிற்கூடச் சிலரை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால், இங்குத்தான் வித்தியாசம் உண்டு. புருஷர்; மதத்தை யிழந்து, ஆத்மஞானத்தை யிழந்து, அகன்றவர்களாகும்படியான அபாயம் ஏற்படுகிறது; ஸ்திரீகளோ தங்கள் சொந்த மதத்தில் ஒரு சிறிதும் இழந்துவிடாமல் எங்கும் நன்மையாயுள்ள ஒவ்வொன்றினிடத்தும் அநுதாபமுண்டாகி அகன்றுவிடுகிறார்கள்......................................."

இந்தக் கடிதத்தினாலும் இன்னும் எத்தனையோ கடிதங்களாலும் சுவாமிகளுக்கு அமெரிக்க ஸ்திரீகளைப்பற்றியிருந்த அபிப்பிராயம் உண்மையில் இத்தகையது என்று விளங்குகிறது. சுவாமிகளுடைய பரோபகார முயற்சிகளுக்கு விரோதமாகக் கிளம்பி அவற்றைக் கெடுக்க எத்தனம் செய்தவர்களுடைய நீசகுணமும் பொறுமையும்தான் என்னே! இவற்றை யெல்லாம் லக்ஷியம் செய்யாது, மஹாமேருபர்வதமே குறுக்கே வந்து நின்றாலும் மனங் கலங்

காது சத்தியத்தையே வாசகமாகக் கொண்ட சச்சிதானந்த சாக்ஷாத்காரர் விவேகானந்த சுவாமிகளுடைய கம்பீரமான ஹிருதயம்தான் என்னே!

இருக்கட்டும். நாம் சுவாமிகளைப் பின்பற்றி சுவாமிகளுடைய செயல்களைக் கவனிப்போம். இச் சமயத்திலே வங்காளத்தில் மூர்ஷிதாபாத் ஜில்லாவில் பஞ்சமானது கோரமாகக் குடிகொண்டு, ஆயிரக்கணக்கான ஜனங்களை யமனுலகுக்கு ஏற்றிவந்தது. சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகள் பலர் இத் துன்பத்தைப் பார்த்துச் சகிக்கொணுது பஞ்ச நிவிர்த்தி நிதிகள் ஏற்படுத்தி, ஏழைகளைப் பராமரித்து, வியாதியஸ்தர்களுக்கு ஒளஷதாதிகள் அளித்துப் பலவிதத்திலும் பொது ஜன சேவை செய்து வந்தார்கள்.

இதில் முதன்மையாய் நின்றவர் சுவாமி அகண்டாநந்தர் என்பவர். அவர் தமது சஞ்சாரத்திலே கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் பஞ்சத்தினுல் வருந்திப் பிராணனை விடுவதைப் பார்த்து மனம் சகியாதவராய், தமது கையில் ஒரு காசேனும் இல்லையேனும் அந்த ஜனங்களுடைய கஷ்டத்தை நிவிர்த்திப்பதற்குப் பாடுபட உடனே முயன்ருர். இதைக் கேள்விப்பட்டு சுவாமிகள்: ஸ்வாமி நித்யாநந்தர், ப்ரஹ்மச்சாரி சுரேச்வராநந்தர் ஆகிய தமது சிஷ்யர்கள் இருவரை அந்த அகண்டாநந்தருடைய தர்ம கைங்கர்யத்தில் உதவி செய்யும்படி அனுப்பிவைத்தார்; இது மாத்திர மன்று. பஞ்ச நிவிர்த்தி நிதி யொன்று சேர்ப்பிக்க ஆரம்பித்தார்; முக்கியமாகக் கல்கத்தாவிலிருந்தும், காசியி

விருந்தும், சென்னையிலிருந்தும், மகாபோதி சங்கத்திலிருந்தும் பணமானது சுவாமிகளுடைய மேற்படி நிதிக்கு ஏராளமாக வந்து குவிந்தது. சுவாமி அகண்டானந்தர் நினைந்தோறும் அநேக மாதங்கள் வரையில் நூற்றுக்கணக்கான ஜனங்களுக்கு ஆகார மளித்துக் காப்பாற்றி வந்தது மன்றியில் வாந்தி பேதி, மலை ஜ்வரம் முதலிய கொடூர வியாதிகளினால் பீடிக்கப்பட்டிருந்த அநேகருக்கு ஔஷதாதிகள் அளித்து சிகிச்சை செய்து பராமரித்து வந்தார். அரசாங்க அதிகாரிகளுக்கு அதிக சந்தோஷம் உண்டாய்விட்டது; அவர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்தது மன்றியில், அரிசி அப்பொழுது விற்று வந்த விலையினினும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்படிக்கும் ஏற்பாடு செய்தார்கள்.

சுவாமிகள் ஏழை ஜனங்களுக்கு உணவு அளித்து வந்தது மாத்திர மன்று, ஒரு சமயத்திலே வஸ்திரங்களும் வாங்கிக் கொடுத்தார். இந்த அகண்டானந்தர்தான் சுவாமிகள் ஹிமோத்கிரியிலே சஞ்சாரம் செய்துகொண்டிருந்த பொழுது, தைர்யமாக அவருடன் சென்றிருந்தவர். அதற்கு முன்னமேயே, அவர் — அகண்டானந்தர் — அதிபால்யமாயிருந்தபொழுதே ஹிமோத்கிரியை நான்கு தரம் கடந்து திபேத்துக்குச் சென்று திரும்பியிருக்கிறார்; இவர் இவ்வளவுக்கும் ஒரு காசு கூடக் கொண்டு சென்றதில்லை. சுவாமிகள் அமெரிக்காவிலே யிருந்தபொழுது, இவர் ராஜஸ்தானத்திலே பரோபகார கைங்கர்யங்கள் பல செ

ய்துகொண்டிருந்தார்; கேத்ரி அரசருடைய உதவியினாலே அந்த சமஸ்தானத்திலே ஏழைகளுக்குக் கல்வி கொடுக்கும் பொருட்டு அநேக பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தார். சுவாமிகளுக்கு அகண்டாநந்தருடைய வேலை அத்தியாநந்தத்தை யளித்தது. இன்னும் சுவாமிகள் உலகில் ஆங்காங்குத் தமது சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் செய்து வருகின்ற வேதாந்த முயற்சிகளைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சந்தோஷம் மிகக் கொண்டார்.

சுவாமிகளுக்குச் சரீரமும் சிறிது சௌக்கிய மடைந்தது. தாம் தமது தேச கைங்கர்யம் செய்வதற்கு மறுபடியும் புறப்பட யோசித்தார். சுவாமிகள் அல்மோராவை விட்டுப் புறப்படவிருந்த சமயத்திலே, அவருடைய நண்பர்கள் அவரை ஒரு பிரசங்கம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆனால்; ஆங்கில சபைக் கட்டிடமானது சுமார் நூறு பெயர்களுக்கு அதிகம் அடங்காதாகையினாலும், நானூறு ஐந்நூறு ஜனங்கள் சுவாமிகளுடைய பிரசங்கத்தைக் கேட்க அவா மிகுந்தவர்களா யிருந்ததினாலும், 'அக் கட்டிடத்திலே பிரசங்கம் செய்தல் பயனில்லை' என்று கருதப்பட்டு, ஜில்லாப் பள்ளிக்கூடத்திலே பிரசங்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப் பள்ளிக்கூடத்தில் இரண்டு பிரசங்கங்களும், ஆங்கில சபைக் கட்டிடத்தில் ஒரு பிரசங்கமும் நடைபெற்றன. சுவாமிகள் ஆங்கில மறியாத பொது ஜனங்கள் அநேகருக்கு விளங்கும்படியாக ஹிந்திபாஷையிலே ஒரு பிரசங்கம் செய்தார். சபையோர்

பேச்ச வாக் சாதுர்யத்துடனே பிரசங்கம் செயவதற்கு ஹிந்தி பாஷை யிடங் கொடாதென்று நம்பியிருந்த ஜனங்கள் சுவாமிகள் ஆங்கிலத்தில் பேசுவது போலவே, ஹிந்தி பாஷையிலும் அத்தியாச்சர்யமான பிரசங்கமாரி யொன்று பொழிந்ததைப் பார்த்துப் பிரமித்துவிட்டார்கள். சுவாமிகள் ஆங்கில சபைக் கட்டிடத்திலே செய்த பிரசங்க சமயத்தில் அநேக ஆங்கிலேயர்கள் தங்கள் மனைவிமார்களுடனே வந்திருந்தார்கள். இவர்களும் சுவாமிகளுடைய பிரசங்கத்தைக் கேட்டு ஆச்சர்யமும் ஆநந்தமு மடைந்தார்களென்று நாம் சொன்னால், அது ஆச்சர்யமாகாது.

54-வது அத்தியாயம்

உத்தர தேசத்திலே சஞ்சாரம்

பஞ்சாப் தேசத்திலிருந்தும் காச்மீர தேசத்திலிருந்தும் அநேகர் சுவாமிகளை வந்து செல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். சுவாமிகளும் அதற்கிசைந்து அல்மோராவிலிருந்து காத்கோடம் என்றவூருக்கு வரும் வழியிலே, அவருக்கு ஜ்வரம் கண்டுவிட்டது; ஆகையால், பீமஸ்தலம் என்ற இடத்திலே ஒரு நாள் தங்கவேண்டி வந்தது. ஆகஸ்டுமீ 9உ யன்று சுவாமிகள் பாரில்லி நகர் போய்ச் சேர்ந்தார். அங்கே சுவாமிகளுக்கு நல்வரவு அளித்து உபசரணைகள் புரிவதற்காக அவ்வூர் ஜனங்கள் வரவேற்புக் கூட்டமொன்று ஏற்படுத்தி யிருந்தார்கள். இவ்வரவேற்

புக் கூட்டத்தார் சுவாமிகளுக்கு ராஜோபசாரம் செய்து சுவாமிகளையும் அவருடன் வந்தவர்களையும் தங்கள் சபை கூடும் கட்டிடத்துக்கு இட்டுச் சென்றார்கள். சுவாமிகள் அவ்வூருக்குச் சென்றதுதான்; மறுபடியும் அவருக்குக் கொடிய ஜ்வரம் உண்டாய்விட்டது. இவ்வூரிலே சுவாமிகள் நான்கு நாட்கள் தங்கினர்; இப்பொழுது சுவாமிகளுக்குச்சரீரம் அசௌக்கியமா யிருந்தபொழுதிலும், சுவாமிகள் தம்மைப் பார்க்க வந்தவர்களுடன் வேதாந்த விஷயமான சம்பாஷணைகள் செய்யாம லிருந்த நேரமே கிடையாது. ஆகஸ்டுமீ 10௳ யன்று காலையிலே சுவாமிகள் ஆர்யசமாஜத்தைச் சேர்ந்த அநாதைப் பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்வையிட்டார். 11௳ யன்று சுவாமிகள் தம்மைக் காண வந்திருந்த மாணவர்களுடன் "வேதாந்தத்தைத் தினசரி யநுபவத்தில் கொண்டுவரவேண்டும்," என்றும், "அதற்காக உற்சாகம் மிகுந்த மாணவர்கள் பலர் ஒரு சங்கமாகச் சேர்ந்து உழைக்கவேண்டும்," என்றும் வற்புறுத்திச் சம்பாஷிக்க, உடனே அவ்விடத்திலேயே மாணவர்களுடைய சபை யொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அன்றைய தினம் பகற் போஜனம் உண்ட பின்னர், சுவாமிகள் சுவாமி அச்சுதானந்தருடனே சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், தாம் இவ் வுலகில் இன்னும் 5 அல்லது 6 வருஷங்கள்தான் இருக்கும்படியாக ஈச்வர சங்கற்பம் உள்ளது என்று கூறினர். 12-ம் தேதி யன்று சுவாமிகள் அம்பாலாவுக்குப் புறப்பட்டுச் சென்று அங்கே ஒரு வாரம் தங்கி ரெயில் ஸ்டேஷனிலேயே அவ்வூர்வாசிகள் பலர்

வந்து சுவாமிகளை வரவேற்று இட்டுச் சென்றார்கள். சுவாமிகளுடைய அத்தியந்த நண்பர்களாகிய ஸேவியரும் அவருடைய மனைவியரும், ஸிம்லா நகரிலிருந்தவர்கள், இப்பொழுது சுவாமிகளைக் காண்பதற்காக அம்பாலா நகர் வந்து சேர்ந்தார்கள். தினந்தோறும் மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பிரஹ்மசமாஜத்தைச் சேர்ந்தவர்கள், ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள், வைஷ்ணவர்கள், சைவர்கள், துவைதிகள், விசிஷ்டாத்வைதிகள், அத்வைதிகள் ஆகிய பலவிதக் கொள்கையுடையாரும் ஸ்வாமிகளைத் தர்சிப்பதற்கும், அவருடனே சம்பாஷிப்பதற்கும் வந்துகொண்டேயிருந்தார்கள். சாஸ்திரங்களின் உட்கருத்துக்களைக் குறித்துப் பலமான தர்க்கங்கள் நடந்தன. முக்கியமாக ஆர்ய சமாஜத்தார்தாம் பெரியதோர் வாதம் செய்தார்கள். ஆனால், சுவாமிகள் அவ் வாதங்களிலெல்லாம் வெற்றி பெற்று, வாதித்தவர்கள் சீக்கிரத்திலே தமது நியாயங்களின் உண்மையை ஒப்புக்கொள்ளும்படி செய்தார்.

அவ்வூரிலே லாகூர்நகர்க் கல்லூரியிலே பண்டிதராயிருந்த ஒரு கல்வியாளர் ஸ்வாமிகளிடத்திலே அன்புமிகுந்தவராய் இடைவிடாது ஸ்வாமிகளுடன் தர்க்கித்துக்கொண்டும் ஸ்வாமிகள் கூறுவதைக் கேட்டுக்கொண்டும் ஆரம்பித்து வந்தார். ஸ்வாமிகளுடைய குரல் அதிமதுரமாயிருந்ததினாலே, அக் குரலினிடத்து அவருக்கு ஒரு ஆசையுண்டாகி, அக் குரலை யந்திரத்தி லெடுத்து என்றும் தம்முடன் வைத்துக்கொள்ளக் கருதி, சப்தப்பிரதிபலனயந்திரத்

திலே சுவாமிகள் ஒரு பிரசங்கம் செய்யுட
கொண்டார்; அப்படியே ஸ்வாமிகள் ஆகஸ்டுமீ
பன்று ஒரு சிறு பிரசங்கம் செய்தார். சுவாமி
சௌக்கிய மில்லாதிருந்தபொழுதிலும் மறுநாள்
வாசிகளுக்கு அத்தியற்புதமான பிரசங்கமொன்று ஒ
மணி நேரம் மேகம் பொழிவதுபோலப் பேசினர். இப்
சங்கத்திலே ஜீவநாடியாயிருந்த கொள்கை தமது தாய்நாட்
டின் முன்னேற்றமே. அம்பாலா நகரிலே ஹிந்து மகம்மதி
யப் பள்ளிக்கூடமொன்று உண்டு. ஸ்வாமிகளுக்கு அப்
பள்ளிக்கூடத்தைப் பார்வையிட வேண்டுமென்று ஆசை
யுண்டாயிற்று. "ஹிந்துக்களும் மகம்மதியர்களும் இந்தியா
நாட்டுக்கு இருகண்கள் போன்றவர்கள்," என்றும், "இவர்
கள் எந்த விஷயத்திலும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தாலே இந்
தியா தேசம் ஏற்றமடையும்," என்றும் உண்மைத் தேசாபி
மானிகள் ஒவ்வொருவரும் கருதுவதுபோலவே, ஸ்வாமி
கள் கருதியிருந்தாராதலால், அப் பள்ளிக்கூடம் ஸ்வாமி
களுக்கு ஒருவித பிரத்தியேக சந்தோஷத்தை யளித்தது.
சுவாமிகள் அப் பள்ளிக்கூடத்துக்குச் சென்று பார்வை
யிட்டு, "இம்மாதிரி ஒற்றுமை இந்தியநாடு முழுதிலும் உண்
டாய்விட்டால் அந்த நிமிஷத்திலேயே இந்தியா ஏற்ற
மடைந்து எழில் பெற்றுவிடும்," என்று தம் அருகிலிருந்த
வர்களிடம் கூறினர். ஸ்வாமிகள் அம்பாலா நகரிலிருந்த
பொழுது அநேக ஊர்களிலிருந்து அழைப்புக் கடிதங்கள்
பல வந்துகொண்டிருந்தன; ஆனல், ஸ்வாமிகளுக்குச் சரீ

...கியமா யிருந்ததினாலே அவர்களுடைய ...ள்களுக்கு இணங்க முடியவில்லை.

...ாமிகள், ஸேவியரையும் அவருடைய மனைவியரை ...றும் தம்முடன் வந்த நண்பர்களையும் சிஷ்யர்களை ...ட்டுக்கொண்டு 20-ம் தேதியன்று அமிர்தஸரஸ் ...து சேர்ந்து, அங்குச் சுமார் நான்கு மணிநேரம் பிரபல பாரிஸ்டராகிய தோடர்மால் என்பவருடைய கிருகத்திலே தங்கிக் களைப்பாறிக்கொண்டு, அங்கு ஜனங்கள் அவரை இரண்டு நாட்களேனும் இருக்கும்படி வேண்டிக்கொண்டும் தமது சரீர அசௌக்கியத்தினாலே அங்கு அதிக நேரம் தங்க முடியாது என்று அவர்களிடம் கூறிவிட்டு, தர்மசாலை என்ற மலைப்பிரதேசநகர் ஒன்றுக்குப் பிரயாணப்பட்டுச் சென்றார். இவ்விடத்திலே ஸ்வாமிகள் உழைப்பு மிகக் கொடுக்கும்படியான வேலைகளில் பிரவேசிக்காமல், தம்மைப் பார்க்க வருபவர்களுடன் தாம் செய்ய நேரிடும் சாதாரண சம்பாஷணையைத் தவிர, வேறு ஆழ்ந்த சிந்தனைகளிலும் விவகாரங்களிலும் மனத்தைச் செலுத்திச் சிரமமடைந்து கொள்ளாமல் 31-ம்தேதி வரையில் தங்கியிருந்தார். ஆனால், சுவாமிகளுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை உலகுக்கு உழைப்பதற்கென்று உடம்பெடுத்துவிட்டு, சும்மா ஓய்ந்து உட்கார்ந்திருக்க முடியுமா? தமது அபிப்பிராயங்களை உலகில் பரப்பி, உலகினர், முக்கியமாக, முன்னொரு காலத்திலே உலகுக்கெல்லாம் குரு ஸ்தானம் வகித்திருந்தும் இப்பொழுது காலகதியினாலே, தமோகுணப்பிராதான்யத்தினாலே, பொய்யாம் பிரமையில்

புகுந்து கொண்டதினாலே பிற நாட்டினர் நகைக்கப் பெப ரெடுத்து ஏக்கமாம் வீழ்ச்சியில் விழுந்து எற்ற மடைய முடியாது எல்லோரிடத்தும் பல்லைக் காட்டி யிரந்து நிற் கும் இந்தியா தேசத்தினர் சத்தியத்தையும் தீரத்தையும் கைக்கொண்டு எல்லோருக்கும் முன்னே ஏறிச்சென்று நிற்க வேண்டுமென்று சுவாமிகள் இராப்பகலாகச் சங்கற்பித்துக் கொண்டிருக்க அச் சங்கற்பம் நிறைவேறுதற்கு வேண்டிய உபாயங்களையும் மார்க்கங்களையும் தேடிப் பாடுபடாம லிருக்க முடியுமா? ஆதலால், சுவாமிகள் மறுபடியும் தர்ம சாலையை விட்டு நீங்கி அமிர்தசரஸ் வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் தங்கினர்; இங்கே ஆர்ய சமாஜத்து அங்கத்தினர் கள் அதிகமாகையால், அவர்கள் இந்த இரண்டு நாட்களி லும் சுவாமிகளுடன் அநேக சாஸ்திர விஷயங்களைப்பற் றிப் பெருத்த வாதங்கள் செய்தார்கள். எப்பொழுதும் போலவே சுவாமிகள் அப்பொழுதும் தமது கருத்துக்களை அவர்களுக்கு நன்கு விளக்கி, அவர்களைத் தமது அபிப் பிராயங்கட் கிணங்கும்படி செய்தார்.

அங்கிருந்து சுவாமிகள் ராவல்பிண்டிநகர் வந்து சேர்ந்து, அங்கு அவர் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுக ளெல்லாம் அவ்வூர் வாசிகள் செய்திருந்தபொழுதிலும், சரீர அசௌக்கியத்தினாலே அங்குத் தங்க முடியாது, மூர்ரி என்ற நகருக்கு உடனே சென்றார். இவ்வூரிலே சுவாமிகள்: ஹம்சராஜர் என்ற பெயருடைய பிரக்கியாதி பெற்ற வக்கீல் ஒருவருடைய வீட்டில் அதிதியாயிருந்தார். பொது ஜனங்கள் அவரை ஒரு பிரசங்கம் செய்யும்படி

பன்முறையும் வேண்டிக்கொண்டபொழுதிலும், அவர் தமது சரீர அசௌக்கியத்தினலே அவ் வேண்டுகோள் களை யெல்லாம் மறுத்துவிடவேண்டி வந்தது. ஆனல், எப் பொழுதும்போல, எங்கும்போல இங்கும் அவரைச் சுற்றி லும் இடைவிடாமல் ஜனங்கள் கூடி யுட்கார்ந்துகொண் டே யிருந்தார்கள். சுவாமிகள் தமது தாய் நாடு—நமது அருமைத் தாய் நாடு—மேன்மையடைய வேண்டுமாயின் செல்லவேண்டிய மார்க்கங்களையும் உபாயங்களையும் எடுத்துக் கூறிவந்தது மன்றியில், அடிக்கடி அநேக கீர்த் தனங்களைப் பாடி அவ்வூர் வாசிகளுக்கு ஆநந்தம் ஊட்டு வார்.

முர்ரி நகரிலே சுவாமிகள் அதிக நாட்கள் இருக்க வில்லை; ஸெப்டெம்பர்மீ 6-ந்தேதி யன்று காச்மீரதேசத்துக் குப் புறப்பட்டார். ஸேவியரும் அவருடைய மனைவியரும் சுவாமிகளுடன்கூட காச்மீரதேசம் போவதற்காகவே, சுவாமிகளிடம் வந்து சேர்ந்தவர்கள் இப்பொழுது ஸேவிய ருக்குச் சரீரம் அசௌக்கியமாய்விட்டதினல் சுவாமிக ளுடன் கூடச் செல்ல முடியவில்லை. ஆகையால், சுவாமி கள் புறப்படுவதற்கு முந்தியநாள், சுவாமிகளுக்கு ஸேவியர் ஒரு கடிதம் எழுதி, அக்கடிதத்துடனே சுவாமிகளுடைய வழிச் செலவின்பொருட்டு ரூ. 800-க்கு நாணயக் காகிதங் கள் அனுப்பிக் கொடுத்தார். அப்பொழுது மாலை மணி ஏழு இருக்கும். சுவாமிகள், கடிதத்தைப் படித்துவிட்டு, நாணயக்காகிதங்களைப் பார்த்து, அருகிலிருந்த ஒரு நண்ப

ரை நோக்கி, “இவ்வளவு பணத்தையும் நான் என்ன செய்வது? பக்கிரிகளாகிய எங்களுக்கு இவ்வளவு பணம் எதற்கு? இருந்தால் எப்படியாவது செலவழியத்தான் செய்யும். இதில் பகுதி பணமே என்னுடையவும், என்னுடைய சகோதர சந்யாசிகளுடையவும் சிஷ்யர்களுடையவும் செலவுக்குப் போதும்.” என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து, தமக்கு உடம்பு சௌக்கியமில்லாதிருந்தபொழுதிலும் அதை லக்ஷியம் செய்யாது, ஸேவியரிடம் சென்று, பகுதி பணத்தைத் திரும்பவும் அவர் எடுத்துக்கொள்[illegible] செய்தார். [illegible] சென்ற ஒரு

சுவாமிகளும் மற்றவர்களும் [illegible]ர்களும் பண்டிதர்களும் [illegible]ளை வாரி யிறைத்து, பட்டு, வண்டி யேறி பாரமுல்லா என்ற [illegible] போய்ச் சேர்ந்து அங்கிருந்து படகேறி ஸ்ரீ நகர் சென்றார்கள். 10-ம் தேதியன்று சுவாமிகள் ஸ்ரீ நகரிலே நீதிபதி ரிஷிவரமுகோபாத்யாயருடைய கிருகத்திலே அதிதியாகப் போய்ச் சேர்ந்தார். இங்கு இவருடைய கீர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த அநேக பண்டிதர்களும் வித்துவான்களும் பிரபுக்களும் சுவாமிகளை மிகுந்த பயபக்தியுடனே காண வந்தார்கள். சுவாமிகள் ஸ்ரீ நகர்போய்ச் சேர்ந்த மூன்றும் நாள் மஹாராஜாவினுடைய அரண்மனைக்குச் செல்ல, அங்கு உயர்ந்த உத்தியோகஸ்தர்களில் இருவர் சுவாமிகளை மிகுந்த மரியாதையுடனே வரவேற்றார்கள்; அவ் வுத்யோகஸ்தர்களுள் ஒருவராகிய டாக்டர் மித்ரர் என்பவர் சுவாமிகளிடத்திலே மஹாராஜாவினுடைய சகோதரராகிய ராஜா ராமஸிங் என்பவர் சுவாமிகளை மறுநாள்

பார்க்க விருப்புவதாகக் கூறினர். மஹாராஜா அப்பொழுது
ஜம்மு நகரி லிருந்ததினால் சுவாமிகள் மஹாராஜாவைப்
பார்க்க முடியவில்லை.

அப்படியே மறுநாள், சுவாமிகள், அரண்மனைக்குச்
செல்ல, ராஜா ராமஸிங் மிகுந்த பசாரத்துடனே சுவாமி
களை வரவேற்று, ஒரு நாற்காலியி லுட்காரும்படி வேண்
டிக்கொண்டு, தாம் மற்ற உத்தியோகஸ்தர்களுடனே
கீழே யுட்கார்ந்து தேசமுன்னேற்ற விஷயமாகவும் மத
எடுத்துக் கூறிச்சுவாமிகள் கூறியதை இரண்டு மணிநேரம்
தனக்களைப் பாடி அவ்வூமினை கேட்டு மகிழ்ந்தார். ராஜா
வார். ளிடத்திலே அத்தியந்த அன்பு
ஏற்பட்டது. சுவாமிகளின் கைங்கர்யங்களுக்குத் தம்மா
லியன்ற உதவி தாம் செய்ய ஒருபொழுதும் தடை
யில்லை யென்று சுவாமிகளிடம் அவர் வாக்களித்தார். அக்
டோபர்மீ வரையில் சுவாமிகள் அங்குத்தான் இருந்தார்.

சாதுக்களும், சந்நியாசிகளும், சாஸ்திரிகளும், பண்டி
தர்களும், வித்யார்த்திகளும், உத்யோகஸ்தர்களும், இன்
னும் எல்லாவிதமான ஜனங்களும் சுவாமிகளைக் காண்ப
தற்கு வந்துகொண்டேயிருந்தார்கள். நீதிபதி ரிஷிவர
முகோபாத்யாயருடைய கிருகமானது ஒரு க்ஷேத்திரம்
போன்று ஆய்விட்டது. காலையிலும் மாலையிலும் சுவாமிகள்
வந்தவர்களுடனே சம்பாஷணை செய்து அவர்களுடைய
சந்தேகங்களைப் போக்கடித்தார். காச்மீர தேசமானது
சரித்திர சம்பந்தமான விநோதங்களையும் கண்ணுக்கு ரம்ய

மான பல காக்ஷிகளையும் அடக்கிக்கொண்டிருத்தலினாலே, சுவாமிகள் அடிக்கடி அப்பேர்ப்பட்ட இடங்களைப் போய்ப் பார்த்து வருவார். அந்த சமஸ்தானத்திலே ஒரு உத்யோகஸ்தர் தமது படகை சுவாமிகளுக்குக் கொடுத்திருந்தார்; சுவாமிகள் தமக்குச் சௌகர்யம் ஏற்பட்டபொழுது அப் படகிலேறித் திரிந்து ஆநந்திப்பார்.

அந்நகரத்துப் பிரபுக்கள் சுவாமிகளை ஒருவர் மாற்றி யொருவராகத் தங்கள் தங்கள் கிருகங்கட்குப் பிக்ஷைக்கு அழைத்தார்கள். இப்படிப் பிக்ஷைக்குச் சென்ற ஒரு இடத்திலே அநேக பிராஹ்மணர்களும் பண்டிதர்களும் சேர்ந்து சுவாமிகள்மீது புஷ்பங்களை வாரி யிறைத்து, சுவாமிகளுடைய கழுத்திலே புஷ்பமாலைகளைப் போட்டு, சுவாமிகளை வரவேற்று, சுவாமிகளுக்குப் பிக்ஷையான பின்னர் அவருடனே வேதாந்த விஷயமாக நெடுநேரம் சம்பாஷணை செய்து சந்தோஷித்து, சுவாமிகளை அவர் இறங்கியிருந்த இடம் வரையில் கூடவே யிட்டுச்சென்று, அங்கு அவரை விட்டுவிட்டு, சுவாமிகளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள். சுவாமிகள் படகேறிப் பக்கத்துக் கிராமங்கட்குச் செல்வார், கடைத்தெருவுக்குப் போவார், பாட்டுக் கச்சேரிகளிலே சென்று சங்கீதம் கேட்டு ஆநந்திப்பார்.

ஸெப்டம்பர்மீ 20-ம் தேதியன்று சுவாமிகள் படகேறி ஸ்ரீ நகரிலிருந்து புறப்பட்டு பாம்பூர், அநந்தநாகம் என்ற ஊர்களைப் பார்த்துக்கொண்டு, அங்கிருந்து கால்

நடையாக மார்த்தாண்டம் என்ற இடம் சென்றார். அவ்விடத்திலே சுவாமிகள் வழிப்போக்கருக்காகக் கட்டிவைத்திருக்கும் சத்திரத்திலே தங்கி, அக்குக் கூடியிருந்த ஜனங்களுடனே அரிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அங்கிருந்து அச்சபலம் செல்லும் மார்க்கத்திலே பாண்டவர்கள் காலத்து க்ஷேத்ரமென்று சொல்லப்படுகின்ற ஒரு க்ஷேத்திரத்தைக் கண்டார். சுவாமிகள் இந்த க்ஷேத்திரத்து விசித்ர வேலைப்பாடுகளைக் கண்டு வியந்து, "அது பாண்டவர்களுடைய காலத்தது என்று நர்ப முடியாவிடினும், இரண்டாயிரம் வருஷங்கட்கு முற்பட்டது என்பதற்கு சந்தேகமில்லை," என்று அபிப்பிராயப்பட்டார். அச்சபலத்திலிருந்து சுவாமிகள் திரும்பி ஸ்ரீநகரம் வந்து சேர்ந்தார்.

ஆனால், ஸ்ரீநகரிலே சுவாமிகள் தங்கவில்லை. அங்கு உலார் ஏரியிலே படகேறிப் புறப்பட்டு, பாரமுல்லா வந்து சேர்ந்தார். ஸ்ரீ நகரிலிருந்து பாரமுல்லாவுக்கு வண்டி மார்க்கம் இருந்தபொழுதிலும் சுவாமிகள் படகுமார்க்கத்தைப் பின்பற்றியதற்குக் காரணம், காச்மீரதேசத்திலே கண்ணுக்கு ரம்யமாய் நிறைந்துள்ள காக்ஷிகளைப் பார்த்துக்கொண்டே போகலா மென்பதே. வழி யெல்லாம் சுவாமிகள் தமது நண்பர்களிடம் வேடிக்கைப் பேச்சுக்கள் பல பேசி, விநோதமாகக் காலங் கழித்துக்கொண்டே போனார். அந்தப் பூமியினுடைய ஆநந்தகரமான சீதோஷ்ண ஸ்திதியும் யாத்திரையும் அவருக்கு அவருடைய பால்ய

பர்வத்துப் பலத்தையும் ஊக்கத்தையும் தைர்யத்தையும் அளித்தன.

பின்னர் முர்ரி நகருக்குத் திரும்பி வரவே, அங்கே அவ்வூர்வாசிகளும் ஸேவியரும் அவருடைய மனைவியரும் மிகவும் சந்தோஷமாக சுவாமிகளுக்கு வரவளித்துக் களித்தார்கள். சுவாமிகள் ஸேவியருடைய வீட்டிலும் நிவாரண பாபு என்ற பெயருடன் கூடிய ஒரு வங்காளி கனவானுடைய வீட்டிலுமாக மாறிமாறித் தங்கிக்கொண்டு காலம் கழித்தார். அக்டோபர்மீ 14-ம் தேதி யன்று அந்நகர் வாசிகள் ஒரு பெருங் கூட்டமாகச் சேர்ந்து சுவாமிகளுக்கு ஒரு நல்வரவு உபசாரப்பத்திரிகை படித்து, சுவாமிகளை கௌரவப்படுத்தவே, சுவாமிகள் அப் பத்திரிகைக்கு மறுமொழியாக அழகியதோர் சிறு பிரசங்கம் செய்தருளினர்.

அங்கிருந்து புறப்பட்டு, சுவாமிகள் ராவல்பிண்டிநகர் வந்துசேர்ந்து, ஹம்சராஜருடைய வீட்டிலே தங்கினர். இங்கே ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்த ஸ்வாமி பிரகாசாநந்தருடனே சாஸ்திர விஷயமான சம்பாஷணை செய்து களித்தார். அப்பொழுது நீதிபதி நாராயணதாசரும் இன்னும் பல பெரியோர்களும் வந்திருந்தார்கள். அவ்வூர் சென்று இரண்டு நாட்கள் இருப்பதற்குள்ளாக, அவ்வூர்வாசிகள் சுவாமிகளைப் பிரசங்கம் செய்யும்படி கேட்டுக்கொள்ள, சுவாமிகள் அப்படியே சுஜனஸிங் என்பவருடைய அழகிய தோட்டத்திலே, ஒரு பெருங் கூட்டம் ஜனங்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். இப் பிரசங்கத்தைக் கேட்டவர்களுடைய மன

த்திலெல்லாம் ஒருவித உத்சாகமும் ஆநந்தமும் உண்டாய் விட்டன. இப் பிரசங்கம் செய்த அன்றும் மற்ற நாட்களி லும் சுவாமிகள் ஒரு நிமிஷமும் ஒய்வு ஒழிவில்லாது இருந்தன ரென்று தெரியவருகிறது. சுவாமிகளுடைய சிஷ் யர் ஒருவர் தமது தினசரிப் பதிப்புப் புஸ்தகத்திலே பின் வருமாறு வரைந்து வைத்திருப்பதை நாம் இங்கு எடுத் துக் கூறிக் காட்டினால், நமது வாசகர்கள் சந்தோஷிப்பார் கள் என்றே நம்புகிறோம்:—

"அக்டோபர் 17. சுவாமிகள் காலையில் ஹம்சராஜ ருடைய வீட்டில் மதவிஷயங்களைப்பற்றித் தம்மைப் பார்க்க வந்தவர்களுடன் பேசுகிறார். பின்னர், அவர் நிமைபாபுவி னுடைய கிருகத்துக்கு விருந்துண்ணச் சென்று, அங்குக்கா கூடிய வங்காளி கனவான்களுடன் மத விஷயங்களைப்பற் றிப் பேசினார். அவர் சுமார் 3மணிக்கு அங்கிருந்து திரும்பிக் வந்தார். சிறிது நேரம் ஒய்வு எடுத்துக்கொண்டு பின்னர், அவர் ஹிந்துமதத்தைப்பற்றி பொருபிரசங்கம் செய்வதற் காக சுஜனஸிங்கினுடைய தோட்டத்திற்குச் சென்றார். அங்கிருந்து திரும்பி வந்து, அவர் சாதனங்கள் செய்வதி லுள்ள ரகஸ்யத்தை ஒருவருக்குப் போதித்தார். இரவிலே அவர் தீதிபதி நாராயணதாசருடனும் ஹம்சராஜருடனும் பிறருடனும் பக்தராமர் என்ற பெயர்பெற்ற பாரிஸ்டர் ஒருவ ருடைய வீட்டுக்கு இராப் போஜனம் உண்ணச் சென் றார். அவர் அங்கிருந்து மாலை 10மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்து, காலை 3மணிவரையில் சுவாமி பிரகாசாநந்த ருடனே பேசிக்கொண்டிருந்தார்."

ராவல்பிண்டி நகரிலே விசேஷ சக்தியும் மஹிமையும் பொருந்தியது என்று பெயர் பெற்ற காளிக்ஷேத்திரம் ஒன்று உண்டு. சுவாமிகள் அந்த க்ஷேத்திரத்துக்கு அடிக்கடி சென்று வருவார்; இன்னும் வெளியூர்களிலிருந்து சுவாமிகளைப் பார்ப்பதற்கு எண்ணற்ற ஜனங்கள் வந்து கொண்டே யிருந்தார்கள்; சுவாமிகள் அவர்களுடனெல்லாம் சம்பாஷணை செய்து அவர்களை அக் காலத்துக்காவது உலகத் துன்பங்களினின்றும் ஒழித்துவிடுவார். சுவாமிகள் அங்கிருந்து புறப்படுவதற்கு முந்திய நாள் பகற்போஜனம் உண்டபின்னர்த் தம்மைப் பார்க்கவந்திருந்தவர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவருடைய சகோதர சந்யாசியொருவர் வாசலிலே அழகியதோர் அஸ்வம் பூட்டிய ரதம் போன்றதோர் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டு, ஒரு வங்காளி கனவான் அசௌக்கியமாயிருப்பதாயும், சுவாமிகளைத் தரிசிப்பதற்கு ஆத்திரமும் ஆவாவும் மிகுந்தவரா யிருப்பதாயும் சுவாமிகளிடம் கூறினார்.

ஸ்வாமிகள் உடனே புறப்பட்டுச் சென்றார்; சுவாமி பிரகாசாநந்தரும் மற்றவர்களும் கூடவே சென்றார்கள். அந்த வங்காளி கனவான் சுவாமிகளிடம் ஐந்து கேள்விகள் கேட்டு, இவ் வைந்து கேள்விகளுக்கும் திருப்தியான விடை தமக்குக் கிடைக்காமற்போனால், தாம் நாஸ்திகராய் விட நிச்சயித்திருப்பதாக சுவாமிகளிடம் கூற, சுவாமிகள் அக் கேள்விகளை ஒவ்வொன்றா யெடுத்து, அத்தியற்புத

மாக உரை யுதவி உரைக்கவே, அந்த வங்காளி கனவா னுக்குத் திருப்தி யுண்டாய்விட்டது.

அக்டோபர்மீ 20-ம் தேதி யன்று இரவு ஸ்வாமிகள் ஜம்மு நகருக்குப் புறப்பட்டார்; காச்மீர தேசத்து மஹாராஜா அப்பொழுது அந் நகரில் வசித்துவந்தார்; அவரும் அந் நகர்வாசிகளுள் பிரபலமானவர்களுள் பலரும் ஸ்வாமிகளை அந் நகருக்கு வரும்படி அழைத்திருந்ததினாலே, ஸ்வாமிகள் அங்குச் சென்றார். ஜம்மு நகர் ரெயில்வே ஸ்டேஷனிலே அச் சமஸ்தானத்து உத்தியோகஸ்தர்கள் பலர் ஸ்வாமிகளுடை பங்கியோக முறைமையிலே நல்வரவளித்து, ஸ்வாமிகளை அரசருடைய விருந்தினரா யிருப்பதாகத் தெரிவித்தார்கள். சமஸ்தான விருந்தினர்களுக்கு வேண்டியன செய்து கவனிப்பது மஹேசச் சந்திர பட்டாச்சார்யார் என்பவர் ஒருவருடைய வேலையாயிருந்தது. அவர் ஸ்வாமிகளிடத்துப் பயபக்தி மிகுந்து, ஸ்வாமிகளுக்கு எக் குறைவும் நேரிடாது எல்லாவற்றையும் சரிவரக் கவனித்து வந்தார்.

ஸ்வாமிகள் அன்று மாலையிலே மஹாராஜாவினுடைய புத்தகசாலையைப் போய்ப் பார்வையிட்டார். மறுநாள் ஸ்வாமிகள் மஹேசச்சந்திர பட்டாச்சார்யாருடைய குருவாகிய கைலாசாநந்த ஸ்வாமிகளுடனும் வேறு சில பஞ்சாபி கனவான்களுடனும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, பின்னர் மஹேசச் சந்திரரிடத்திலே "காச்மீர நாட்டில் எங்கேனும் ஒரு மடம் ஸ்தாபிக்க வேண்டும்,"

என்று தமக்குள்ள விருப்பத்தைத் தெரிவித்து, இது சம்பந்தமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

23-ம் தேதியன்று மஹாராஜா ஸ்வாமிகளை அரண்மனைக்கு இட்டுவரச் சொல்லித் தமது குதிரை வண்டியை அனுப்ப, அப்படியே ஸ்வாமிகளும் சென்று மஹாராஜாவுடனே நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது மஹாராஜாவினுடைய இரண்டு சகோதரர்களும் சமஸ்தானத்து உத்தியோகஸ்தர்களுள் முக்கியமானவர்களும் அங்கு வந்திருந்தார்கள். சுவாமிகள் மஹாராஜாவினிடத்திலே "இந்திய ஜன சமூகம் சென்ற எழுநூறு வருஷங்களாக விழுந்து கிடப்பதற்குக் காரணம்: உண்மையான கொள்கைகளையெல்லாம் விட்டுவிட்டு, பொருளற்ற பரம்பரை வழக்கங்களிலும் வெளி வேஷங்களிலுமே—மடத்தனமான பிடிவாதத்துடனே—மனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பதுதான்" என்று கூறி, "உண்மையான கல்வி பெருகவேண்டுமானால் அந்நிய நாட்டு யாத்திரை அவசியம்," என்றும், "ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வேதாந்த கருத்துக்களை விளக்கிப் பரப்புவது அத்தியாவசியம்," என்றும், இந்தியா முன்னேறுவதற்குத் தாம் கருதியிருக்கும் உபாயங்களைப்பற்றியும் பேசி, கடைசியாக "எனது தேசத்துக்கு நன்மை செய்வதினாலே நான் நரகம் செல்லவேண்டி வந்தாலும், நான் அதையொரு பெரிய பாக்கியமாகவே கொள்வேன்." என்று சொல்லித் தமது சம்பாஷணையை முடித்தார். மஹாராஜாவுக்கு அதிக சந்தோஷம் உண்டாய்விட்டது. இல்லாவிட்டால்

நான்குமணி நேரம் பொறுமையுடனே ஸ்வாமிகளுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்திருப்பாரா?

பின்னர் மாலையிலே சுவாமிகள் இளவரசரைப் போய்க் கண்டார். அவரும் ஸ்வாமிகளை மிகுந்த மரியாதையுடனே வரவேற்று, நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

மறுநாள் சியால்கோட் நகர்வாசிகள் சிலர் ஜம்மு நகருக்கு வந்து ஸ்வாமிகளைத் தங்கள் ஊருக்கு வரும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். அன்றைய தினமே சுவாமிகள் ஒரு பிரசங்கம் செய்தார்; மஹாராஜா அப்பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தார். சுவாமிகளுடைய அமிர்த மொழிகளைக் கேட்டுவிட்டு, அவருடைய நாவிலே சாஸ்வதி நிர்த்தனம் செய்வதைப் பார்த்துவிட்டு, இன்னு கேட்கவேண்டுமென்ற ஆசை எவருடைய உள்ளத்தி தான் எழாமலிருக்கும்? மஹாராஜாவுக்கு இன்னும் ஒ பிரசங்கம் கேட்கவேண்டுமென்று ஆசை யுண்டாய்விட்டது ஆகையால், அவர் சுவாமிகளை இன்னும் ஒரு பிரசங்க மறுநாள் செய்யும்படிக்கும், பத்து நாட்களேனும் அங்கு தங்கி ஒரு நாள் விட்டு ஒரு நாளேனும் பிரசங்கம் செ தால் பொதுஜன உபகாரமா யிருக்குமென்றும் உள் தமது கருத்தைத் தெரிவித்தார்.

அப்படியே சுவாமிகள் 25-ம் தேதி யன்று வேத சாஸ்திர புராணேதிகாசங்களிலிருந் தெல்லாம் மேற்கோள்களெடுத்துக் காட்டி, பக்தி மார்க்கத்தைச் சாங்கோபாங்கமாகப் பிரசங்கித்தார். தவிர, சுவாமிகள்

அன்று முழுதும் வேதாந்த சம்பாஷணையே செய்துகொண்டிருந்தார்; புத்தகசாலையைப் போய்ப் பார்வையிட்டார். தீபாவளி பண்டிகை சமயமாயிருந்ததினாலே அப்பொழுது நடந்த கொண்டாட்டங்கள் சுவாமிகளுக்கு ஆநந்தத்தை யளித்தன.

அக்டோபர்மீ 29-ம் தேதி யன்று சுவாமிகள் மஹாராஜாவினிடம் சென்று, தாம் சியால்கோட் நகர் செல்ல விரும்புவதாகத்தெரிவித்தார். மஹாராஜாவுக்கு சுவாமிகளை விட்டுப் பிரிவதிலே சிறிது வருத்தம் உண்டாய்விட்டது. சுவாமிகள் காச்மீர நாட்டுக்காவது ஜம்மு சமஸ்தானத்துக்காவது எப்பொழுதேனும் வரும்படி நேரிட்டால், முன்னமேயே தமக்குத்தெரிவிக்கும்படியாக மஹாராஜா கேட்டுக்கொண்டார். இக்காலத்திலே சுவாமிகள் செய்த பிரசங்கங்களெல்லாம் அநேகமாக ஹிந்திபாஷையிலேயே ஆயிருந்தனவாதலால், அவற்றைச் சுருக்கெழுத்தில் எடுக்க முடியாததாகவே, அப் பிரசங்கங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. சுவாமிகளுடைய ஹிந்திபாஷா ஞானத்தையும் சாதுர்யத்தையும்பற்றி வியக்காதவர்கள் இல்லை; மஹாராஜா அப் பாஷையிலே சில வியாசங்கள் எழுதித் தமக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளவே, சுவாமிகளும் அப்படி செய்தார்.

சுவாமிகள் ஜம்முவிலிருந்து புறப்பட்டு, பஞ்சாப் நாட்டைச் சேர்ந்த சியால்கோட் நகரிலே லாலா மூலச்சந்தர் எம். எல். எல். பி. என்பவருடைய வீட்டில் விருந்தினராகச்

சென்றார். அங்கே ஒன்று ஹிந்திபாஷையிலும் இன்னொன்று ஆங்கில பாஷையிலுமாக இரண்டு பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஹிந்திபாஷையிலே பக்தி என்ற விஷயத்தைப்பற்றிப் பிரசங்கம் நடந்தது. "மதமானது தினசரி வாழ்க்கையினின்றும் வேறு அன்று," என்றும், "ஜீவிதத்தில் எல்லா விஷயங்களிலும் மதாநுபவம் ஊடுருவி யிருக்கவேண்டும்," என்றும் சுவாமிகள் வற்புறுத்திக் கூறி, இந்தியா தேசம் முன்னேற வேண்டுமானால், "இந்தியா தேசத்துப் பெண்கள் இந்திய நாட்டு ஆசாரங்களைப் பின்பற்றி இந்திய முறையிலே கல்வி கொடுக்கப்படவேண்டும்," என்று சொல்ல, உடனே ஒரு பெண் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் ஆரம்பிக்கப்பட்டன.

பின்னர் சுவாமிகள் அங்கிருந்து புறப்பட்டு லாகூருக்குச் சென்றார். அங்கு ரெயில் ஸ்டேஷனிலே சநாதன தர்ம சமாஜத்து அங்கத்தினர்கள் அநேகருள்பட ஒரு பெரிய கூட்டம் சுவாமிகளை வரவேற்பதற்குக் காத்துக்கொண்டிருந்தது. லாகூர் நகரவாசிகள் சுவாமிகளின்மீது புஷ்பமாரி பொழிந்து அந் நகரத்து அழகிய தெருக்களினூடே ஊர்வலமாக ராஜா தியான் ஸிங்கினுடைய அரண்மனைக்கு இட்டுச் சென்றார்கள். பின்னர் சுவாமிகள் அந்நகரிலே ட்ரிப்யூன் என்ற பத்திரிகையின் ஆசிரியமான நரேந்திரநாத குப்தருடைய வீட்டிலே தங்கினார். பழைய அரண்மனையின் பெரிய முற்றத்திலே சுவாமிகள் ஒரு பிரசங்கம் செய்தார்

கூட்டம் மிகுந்துவிட்டது; இடம் போதாதாயிற்று; சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் இடமில்லாது சுவாமிகளுடைய பிரசங்கத்தைக் கேட்பதற்கு முடியாது போய்விட்டது. எள் போட்டால் கீழே விழாது என்று சொல்லும்படி நாலாயிரம் ஜனங்களுக்கு அதிகம் கூடியிருந்தார்கள். சுவாமிகள் ஒன்றரை மணி நேரத்துக்கு மேலே தமது சப்தத்தை உயர்த்தி உயர்த்திப் பிரசங்கம் செய்தும், அங்குக் கூடியிருந்த ஜனங்கள் செய்த சந்தோஷ ஆரவாரத்தினு லும் உற்சாகக் கூச்சலினுலும் எல்லோருக்கும் கேட்கும்படி பேச முடியாது போய்விட்டது; ஆகையால், சட்டென்று பிரசங்கத்தை நிறுத்திவிடும்படி நேரிட்டது.

மூன்று நாட்கள் கழித்து, சிலம்ப சாஸ்திர நிபுணர் ாஸ் என்பவருடைய வங்காளத்து சர்க்கஸ் பந்தலிலே, தியென்னும் விஷயத்தைப்பற்றி இன்னும் ஒரு பிரசங் ம நடந்தது. ஆனுல், அன்று சர்க்கஸ் ஆட்டம் நடக்கும் னமாயிருந்ததினுலே, இரவு 8-மணிக்குள்ளாகப் பிரசங்க தை நிறுத்திவிடுதற்கு முயலும்படி சுவாமிகளை போஸ் ட்டுக்கொண்டார். சுவாமிகள் கொஞ்ச நேரம் பேசி ஷயத்துக்குள் பிரவேசிப்பதற்குள்ளாக, சர்க்கஸ் ஆட் தின் சொந்தக்காரராகிய மோதி பாபு என்பவர் தமது யாரத்தைப் பார்த்தார்; சுவாமிகள் இதைக் கண்டு, 'நேர ப்விட்டதுபோலிருக்கிறது,' என்று நினைத்து, ஒரு சில ர்த்தைகள் கூறிப் பிரசங்கத்தை நிறுத்திவிட்டார். கயால், இவ் விரண்டு பிரசங்கங்களிலும் சுவாமிகளுக்

கே திருப்தி யுண்டாகவில்லை. ஆயினும், வேதாந்தம் என்னும் விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்து மூன்றுவது பிரசங்கத்திலே தமது அற்புத சாதுர்யங்களை யெல்லாம் ஒருமுகப்படுத்தி இந்தியா முழுதும் ஆச்சர்யப்படும்படி செய்தார்.

ஸ்வாமிகளுக்கு 'பாஞ்சால நாடு பஞ்சநதிகளால் வளம் பெறப் பெற்றும் ஆத்மஞான விஷயத்திலே உலர்ந்து கிடக்கின்றது,' என்று அபிப்பிராய முண்டாகி, விசனம் மிகுந்தது. ஆகையால், 'திடீரென்று அந்நாட்டிலே ஞான வளர்ச்சி யுண்டுபண்ணுவது முடியாது,' என்றும், 'முடிந்தாலும் தப்பிதமாம்,' என்றும் கருதி, சுவாமிகள் மெல்ல அந்நாட்டு ஜனங்களுக்கு பக்தியை யுண்டுபண்ண எண்ணினார்.

பஞ்சாபிகள் சிலர்: "ஊர்வலமாகப் பஜனை கோஷ்டியொன்று புறப்படுவது" என்று தீர்மானித்து சுவாமிகளிடம் கூற, சுவாமிகளும் அங்கு வாசம் செய்து வந்த மற்ற வங்காளிகளும் சந்தோஷத்துடனே சம்மதித்தார்கள். சுவாமிகள் தாமே அந்தக் கோஷ்டியில் ஈால் நனயாகச் சேர்ந்து ஊர்வலம் வருவதாக வாக்களித்தார். சுவாமிகள், கொடிகளும் மற்றும் தயார் செய்யும்படி வங்காளிகளிடம் கூறினர். ஆனால், அந்தப் பஜனைக் கோஷ்டி நடைபெறவில்லை. அங்கிருந்தது ஒரே மிருதங்கம்; அதுவும் நெடுநாட்களாக உபயோகிக்கப்படாமல் ஒரு பக்கத்தில் போட்டுவைக்கப்பட்டிருந்ததினாலே, இரண்டு த—

தட்டினவுடனே அது உடைந்துவிட்டது. பஜனைகோஷ்டி நடைபெறாது நின்றுவிட்டது பற்றிச் சுவாமிகளுக்குச் சிறிது வருத்தம்தான்.

ஸ்ரீ ராமதீர்த்த ஸ்வாமிகள் என்னும் ஒரு மஹானைப்பற்றிப் பெரும்பான்மையோரும் கேள்விப்பட்டிருக்கலாம். இவர் சுவாமிகளுக்குப் பின்னே அமெரிக்காவுக்குச் சென்று பெயரும் பிரக்கியாதியும் அடைந்து அங்கு அநேகரைச் சிஷ்யர்களாக்கிக்கொண்டார். இப்பொழுது சுவாமிகள் லாகூருக்கு வந்திருந்தபொழுது, இவர் இன்னும் சந்யாசாச்ரமம் வகிக்கவில்லை; லாகூர்க்கல்லூரிகளுள் ஒன்றில் கணித சாஸ்திர பண்டிதராயிருந்தார்; அப்பொழுது இவருடைய பெயர் தீர்த்தராம கோஸ்வாமி. இவருடைய போதனையின்படிதான் லாகூர்க் கல்லூரி மாணவர்கள் சுவாமிகள் அங்குப் பிரசங் [illegible]செய்தற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். சுவாமிகளிடத்திலே அவருக்கு அத்தியந்த அன்பு உண்டு. அவர் சுவாமிகளையும், குட்வின் என்னும் சுவாமிகளுடைய ஆங்கிலேய சிஷ்யர் உள்பட சுவாமிகளுடைய சிஷ்யர்களையும் தமது வீட்டுக்குப் பிக்ஷைக்கு அழைத்தார். பிக்ஷையான பின்னர் சுவாமிகள் "ஈச்வர ஞானம் எங்குள்ளதோ அங்கு ஆசை யில்லை; ஆசை எங்குள்ளதோ அங்கு ஈச்வர ஞானம் இல்லை," என்னும் பொருள்படும்படியான ஒரு கீர்த்தனத்தை யெடுத்துப் பாடினர். இது ஸ்ரீ ராமதீர்த்தருக்கு அளவிலா ஆநந்தத்தை யுண்டாக்கிவிட்டது சுவாமிகள் ஸ்ரீ ராமதீர்த்தருடைய புத்தகசாலையினுள்ளே பிரவேசித்து, எல்லாப் புஸ்தகங்களையும் ஆய்ந்து பார்த்து,

'அமெரிக்கா தேசத்துச் சந்யாசி' என்று சுவாமிகள் பெயர் கொடுத்துள்ள வால்ட் விட்மன் என்பவரால் எழுதப்பட்ட 'புல்லிலைகள்' என்னும் புத்தகத்தை மாத்திரம் மிக மேன்மை வாய்ந்ததெனப் பொறுக்கி யெடுத்தார்.

ஒருநாள் மாலையிலே தீர்த்தராமரும் அவருடைய மாணவர்கள் சிலரும் சுவாமிகளும் அவருடைய சகோதர சந்யாசிகளும் பெரியதோர் ரஸ்தாவின் வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். இவர்கள் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து சென்றார்கள். ஸ்ரீ ராமதீர்த்தர் தம்முடன் கூடச் சென்ற சிலரிடத்திலே "வேற்றுமைத் தன்மையெல்லாம் இழந்து அனைத்துக்கும் ஆத்மாவாக இருப்பவனே உண்மை மஹாத்மாவாம். எந்தப் பிரதேசத்திலாவது உள்ள காற்று சூர்ய உஷ்ணத்தில் போதுமான அளவு கிரவித்து நண்ணியதாக்கப்படுவதினாலே மேன்மேலும் உயரக் கிளம்புகிறது; அதனால் ஆகாயம் முழுதும் சலனத்துக்கு உட்படுகிறது; காலி பண்ணப்பட்ட இடத்தை நிரப்புவதற்காகக் காற்று அடிக்க ஆரம்பிக்கிறது. அப்படியே ஒரு மஹாத்மாவும் தம்மைச் சீர்திருத்திக்கொள்வதினாலே அற்புதகரமாக ஜனசமூகம் முழுதையும் சீர்திருத்திவிடுகிறார்." என்று கூறிக்கொண்டு போனார்.

சுவாமிகள் இவ் வார்த்தைகளைக் கேள்வியுற்று, வழியிலே திடீரென்று நின்று, மிகுந்த உறுதிக் குரலில் பரமஹம்ச ஸ்ரீ ராமகிருஷ்ண தேவராகிய எனது குரு அத்தகையோர்" என்றார்.

சுவாமிகள் ஸ்ரீராமதீர்த்தரை விட்டுப் பிரிவதற்கு முன்னர் ஸ்ரீ ராமதீர்த்தர் சுவாமிகளுக்குத் தங்கக் கடியாரமொன்று வெகுமதியாகக் கொடுத்தார். சுவாமிகள் அதை மிகுந்த அன்புடனே ஏற்றுக்கொண்டபோதிலும், ஸ்ரீராமதீர்த்தருடைய சட்டைப் பையிலேயே அதைப் போட்டுவிட்டு, "நல்லது, நண்ப! நான் இதை இப் பையிலே தரித்துக்கொள்வேன்" என்றார்.

சிலப்ப சாஸ்திர பண்டிதர் போஸினுடைய சர்க்கலுக்குச் சொந்தக்காரராகிய மோதிலால் போஸ் என்பவர் சுவாமிகளுடைய பால்ய பர்வத்திலே விளையாட்டுத் தோழராயிருந்தவர். அண்டை வீட்டுக்காரர். இவர் சுவாமிகளை இப்பொழுது பார்க்கவந்தபொழுது, நூற்றுக்கணக்கான ஜனங்கள் சுவாமிகளிடத்திலே மிகுந்த பய பக்தி செலுத்துவதைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, சுவாமிகளிடத்திலே "நான் தங்களை எப்படிக் கூப்பிடுவது? நரேந்திரா என்றா? அல்லது சுவாமி என்றா?" என்று கேட்டார்.

உடனே சுவாமிகள் "மோதி! உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? அதே நரேந்திரன்தானே நான்; அதே மோதிதானே நீயும்?" என்றார்.

சுவாமிகளிடத்திலே அவர் உலகப் பிரக்கியாதி யடைந்தும், ஆயிரக்கணக்கான பாரத புத்திரர்களால் 'அவதார புருஷர்' என்று கருதப்பட்டு வந்தும், அவருடைய குணங்களிலே எவ்வித மாறுதல்களும் ஏற்படவில்லை.

நூற்றுக்கணக்கான ஜனங்கள் சுவாமிகளைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப் பாத பூஜை செய்துகொண்டிருந்தபொழுது கூட, அவருடைய பால்ய பர்வத்து நண்பர்களிடத்தில் அவர் தமது பால்ய பர்வத்தில் பேசினதுபோலவே பேசி வந்தார்.

இன்னும் ஒரு சமயத்திலே சுவாமிகள் சுமார் 50 ஜனங்களுக்கு முன்னிலையில் பேசிக்கொண்டிருந்த பொழுது, அவருடைய பள்ளித் தோழர்களுள் ஒருவராகிய உபேந்திரர் என்பார் சுவாமிகளைப் பார்க்க வந்தார் சுவாமிகள் சட்டென்று எழுந்திருந்து அவரைக் கட்டிக் கொண்டு தமது அன்பின் ஆவேசத்தைக் காண்பித்துக் களித்தார். சுவாமிகள் அநேக வருஷங்களாகத் தமது பால்ய பர்வத்துப் பள்ளித் தோழர்களைப் பாராமலிருந்தும், அவர்களைப் பார்த்த மாத்திரத்திலே திடீரென்று கண்டு அறிந்துகொள்வது ஆச்சர்யமாயிருந்தது. ஒருவரை ஒரேதரம் பார்த்தாலும் போதும்; உயிருள்ள வரையில் அவருடைய முகத்தை மறக்கவே மாட்டார். சுவாமிகள் லாகூரிலே பத்து நாட்கள் இருந்தார், இடைவிடாமல் உழைக்கவேண்டி வந்ததினாலே, சுவாமிகளுடைய சரீரம் மறுபடியும் அசௌக்கியத்துக்கு உள்ளாகிவிட்டது. ஆதலால், அவர் அங்கிருந்து டேராடூன் என்ற மலைப்பிரதேசம் செல்லவேண்டி வந்தது.

இதனால் சுவாமிகள் தமது பிரசங்க யாத்திரையை இன்மேல் நடத்த முடியாது போயிற்று. டேராடூன் நக

லே பத்து நாட்கள் வாசம் செய்தபொழுதிலும், அவர் சும்மாயிருக்கவில்லை. அவர் தமது சிஷ்யர்களுக்குப்பிரஹ்ம சூத்திரங்களைப்பற்றியுள்ள ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தை யெடுத்துப் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் கேத்ரிக்குச் சென்ற மார்க்கத்தில்கூட, வழியிலே இளைப்பாறுவதற்குத் தங்கியவிடத்திலேகூட, ஸ்நாந போஜனாதிகள் ஆனபின்னர் தமது சிஷ்யர்களைச் சேர்த்துத் தம்மைச் சுற்றிலும் உட்காரவைத்துக்கொண்டு அவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார். சாங்கிய சாஸ்திரத்தைப் பற்றிப் பாடங்கள் சொல்லிக்கொடுக்கத் தொடங்கி, தமது ...ன்னிலையில் அதைப் போதிக்கும்படி ஸ்வாமி அச்சுதாநந்த ...நியமித்தார். சில சமயங்களிலே, சம்ஸ்கிருத பாஷையிலே மஹா நிபுணராகிய சுவாமி அச்சுதாநந்தர்கூட ஸ்லோகத்துக்குப் பொருள் தெரியாமல் விழிக்க ஆரம்பித்துவிடுவார்; அப்பொழுது சுவாமிகள் சில வார்த்தைகளிலே அதை மிகத் தெளிவாக விளக்கிக் காண்பித்துவிடுவார். 'டேராடூனிலே கொஞ்சம் இடம் சம்பாதித்துப்பிரஹ்மச்சாரிகளைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு மடம் கட்டலாம்,' என்று சுவாமிகள் உத்தேசித்தார்.

சுவாமிகள் டேராடூனிலே யிருந்தபொழுது, கேத்ரி அரசரிட மிருந்து சுவாமிகளை அங்கு வரும்படி வேண்டிக்கொண்டு, கடிதங்கள் வந்துகொண்டே யிருந்தன. சுவாமிகள் தமது அபிப்பிராயங்களைக் கேத்ரி சமஸ்தானத்துக் குடிகள் தெரிந்துகொள்ளுமாறு செய்யவேண்டு மென்று,

அந்த சமஸ்தானத்துக்கு வரவழைப்பதில் சிரத்தை மிகுந் தவரா யிருந்தார். தவிர, 'சுவாமிகளைத் தரிசிக்கவேண்டும்,' என்ற ஆசையும் அவருக்கு அதிகமாயிருந்தது. சுவாமி கள் அவ் வரசருக்குக் குருவல்லவா? ஆகையால், சுவாமிகள் டேராடூனிலிருந்து ராஜஸ்தானத்துப் புறப்பட்டார். வழி யிலே டில்லிமா நகரிலே இறங்கி, இந்தியா தேசத்துக்கு அன்றுதொட்டு இன்றுவரை ராஜதானியா யிருக்கும் பாக்கியம் பெற்றிருக்கும் அந் நகரிலுள்ள விசேஷங்களை யெல்லாம் பார்வையிட்டார். மொகலாயச் சக்கரவர்த்திகளு டைய முற்காலத்துப் பெருமைகளெல்லாம் தெரியக் காண் பிக்கும் சிதைவுகளையும் ஸ்தூபிகளையும் பார்வையிட்டார். முடன் கூட வந்தவர்களிடத்திலே மொகலாயர்க[ளுடைய] வும் ஹிந்துக்களுடையவும் சித்திரவேலைப்பாடுகளையும் சரி த்திரங்களையும் எடுத்து உரைக்க ஆரம்பித்தார்.

பின்னர், சுவாமிகளும் மற்றவர்களும் ஆக்ரா நகர் சென்றார்கள். டில்லியிலே ஒரு விசேஷம். சுவாமிகள் மேல் நாடு செல்வதற்கு முன் ஹத்ராஸ் நகரிலே சஞ்சார சந்யாசியாய்த் திரிந்தபொழுது தம்மிடத்து பக்தி செலுந் திய கோட்டு கிருஷ்ணர் என்னும் ஒரு எளியவர் இப் பொழுது டில்லியிலே இருக்க, அவருடைய வீட்டிலே யிறங்கினர்.

ஆக்ரா நகரிலும் சுவாமிகள் சரித்திர விசேஷ சம்பந்த மான இடங்களையும் சித்திர வேலைப்பாடுகளையும் பார்த்துக் கொண்டே சென்றார். பின்னர், சுவாமிகளும் மற்றவர்க

ளும் ஆள்வார் நகரம் செல்ல, அங்கே மஹாராஜாவி னுடைய அரண்மனைகளுள் ஒன்றில் தமது சிஷ்யர்களுடனே இறங்கி வசித்தார். மஹாராஜா அப்பொழுது சமஸ்தானத் திலே யில்லை. சுவாமிகளை முக்கியமான உத்தியோகஸ் தர்கள் பலர் வந்து பார்த்தார்கள். சுவாமிகள் தாம் சஞ் சார சந்யாசியாய் ஊரற்றுப் பெயரற்று ஒருவருக்கும் தெரியாது சுற்றிக்கொண்டிருந்த காலத்திலே தம்மைக் கண்டுபிடித்துத் தம்முடன் பழகிய ஆதி நண்பர்களை இப் பொழுது மறுபடியும் பார்ப்பது சுவாமிகளுக்கு அடங்காத மகிழ்ச்சி யுண்டாக்கிற்று.

இங்கு ஒரு ஆச்சர்யகரமான சம்பவம், சுவாமிக ளுடைய மன உறுதியையும் நேர்மையையும் அன்பை யும் விளக்கும்படியான சம்பவம், ஒன்று நடந்தது. சுவாமி கள் ரெயில் ஸ்டேஷனி லிறங்கினவுடனே, பெரிய பெரிய மனிதர்களெல்லோரும் சுவாமிகளைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு உபசரித்துக்கொண்டிருந்தார்கள்; அப்பொ ழுது சுவாமிகளிடத்திலே மிகுந்த பக்தி செலுத்தும் பூர்வ சிஷ்யர் ஒருவர், மிகவும் எளியவர், சுவாமிகளை வர வேற்கும் தனவந்தர்களின் மத்தியில் வர முடியாது, தூரத் திலே நின்றுகொண்டிருந்தார். சுவாமிகள் அவரைப் பார்த்தவுடனே, பெரிய மனிதர்கள் என்னென்னவோ உபசாரம் செய்துகொண்டிருக்க அதை யெல்லாம் லக்ஷி யம் செய்யாது, தூரத்தில் நின்ற அந்த சிஷ்யரை "ராம ஸ்நேகி! ராம ஸ்நேகி!" என்று உரக்கக் கூவி, கூப்பிட்டு,

அவரைத் தம் முன்னிலையில் இட்டு வரும்படி செய்து அவ ருடைய க்ஷேமலாபத்தையும் நண்பர்களுடைய க்ஷேம லாபத்தையும் விசாரித்தார். இதேமாதிரி சென்னையிலும் ஒரு சம்பவம் நடந்தது.

சென்னையிலே நடந்த ஊர்வல சமயத்திலே எள் போட்டால் கீழே விழாதபடி ஆயிரக்கணக்காக நெருங்கி யிருந்த அக் கூட்டத்தி லொருவராய் ஒரு மூலையிலே ஸ்வாமி சதாநந்தர் நின்றுகொண்டிருந்ததை சுவாமிகள் பார்த்துவிட்டு, "சதாநந்தா! இங்கு வா! எனது புத்திரா! இங்கு வா!" என்று கூவி யழைத்து அவரைத் தம்முடன் வண்டியி லேற்றிக்கொண்டார். சுவாமிகள் ஆள்வார் ந கரத்திலே இருந்தபொழுது, அவருடைய பழைய நண்பர்க ளெல்லோரும் வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் அவர்க ளிடத்தில் மேல்நாட்டிலே தாம் அடைந்த அநுபவங்களை யும் இந்தியா முன்னேற்ற மடைதற்குத் தாம் யோசித் துள்ள உபாயங்களையும் விரிவாக எடுத்து உரைத்துக் கொண்டிருந்தார். சுவாமிகள் இப்பொழுது ஜகம் முழுதி லும் பிரக்கியாதி யடைந்திருந்தபொழுதிலும் அவருக்குச் சிறிதும் கர்வ முண்டாகவில்லை யென்பதைக் கண்டு அவர் கள் ஆச்சர்ய மடைந்தார்கள்.

அவ்வூரிலே யிருந்த சிஷ்யர்கள் சுவாமிகளை ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் கிருகங்கட்குப் பிக்ஷைக்கு இட்டுச் சென்றார்கள். இதில் ஒரு விருத்தாப்பிய ஸ்திரீ சுவாமி கள் கால் நடையாய்த் திரிந்துகொண்டிருந்த காலத்திலே

சுவாமிகளுக்குப் பிக்ஷையிட்டு ஆதரித்தவள் இப்பொழுதும் உலகப் பிரக்கியாதி பெற்ற விவேகாநந்தருக்குப் பிக்ஷை யிடும்படியான பாக்கியம் பெற்றாள். தன்னிடமிருந்து ஒரு காலத்திலே ஒருதரம் சப்பாத்திகள் (அடைகள்) வாங்கித் தின்ற வழிப்போக்குப் பரதேசிதான் சுவாமிகள் என்று அவள் அறிந்துகொள்ளாவிட்டாலும், சுவாமிகள் அவளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்து, அவளைப் பற்றி விசாரணைசெய் தறிந்துகொண்டு, பல வருஷங்களுக்கு முன்னே அவள் அன்புடன் அளித்த அந்த முரட்டுச் சப்பாத்திகளைத்தான் இன்னும் ஒருமுறை தின்ன விரும்புவதாகத் தாமே அந்தக் கிழவிக்குச் சொல்லியனுப்பினார். அவள் இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்டு அடங்கா மகிழ்ச்சிகொண்டு, ஆநந்தக் கண்ணீர் சொரிந்து, தன்னாலானமட்டும் நேர்த்தியாகச் சில பதார்த்தங்களைச் சமைத்து, சுவாமிகளுக்கும் மற்றவர்களுக்கும் பரிமாறிக்கொண்டே, "சுவாமி! நான் மிகவும் ஏழை; என்ன செய்வேன்; தங்களுக்கு ராஜ போஜனம் அளிக்கவேண்டுமென்று எனக்கு விருப்ப முள்ளது. ஆயினும், என்னுடைய வறுமை அதற்கு இடம் கொடுக்கவில்லை. உள்ளதை உவந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். பிழைகளை க்ஷமிக்கவேண்டும்," என்று கூறினாள்.

சுவாமிகள் அவ்வெளிய ஆகாரத்தை—விதுரருடைய கிருகத்திலே ஸ்ரீ கிருஷ்ண பகவான் சாப்பிட்டதுபோல—சுவைத்துச் சுவைத்து "ஆ! ஆ! பேஷ்! இது வெகு ருசி;

இது நன்றாயிருக்கிறது," என்று கூறிக்கொண்டே உண்டார். இன்னும் தமது சிஷ்யர்களைப் பார்த்து, "இந்த மாதாவினுடைய பக்தி சிரத்தையைப் பார்த்தீர்களா? அவளால் ஆக்கப்பெற்ற இந்த முரட்டுச் சப்பாத்திகள் எவ்வளவு சத்துவகுணம் வாய்ந்தவையாயிருக்கின்றன!" என்று சுவாமிகள் இரண்டு மூன்று தடவை கூறினர். அவளுடைய அன்பையும் உதார குணத்தையும் அவளுடைய வறுமையையும் சுவாமிகள் கவனித்து, அவளுடைய வீட்டிலே பெரியவனயிருந்த புருஷனிடத்திலே அவளுக்குத் தெரியாமல், அவனும் எவ்வளவோ மறுத்தும் கேட்காமல், நூறு ரூபா நாணயக்காகிதமொன்றை அவனிடத்திலே கொடுத்துவிட்டுப் போனர்.

இங்கிருந்து சுவாமிகள் கேத்ரி நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். கேத்ரி அரசர் கேத்ரியிலிருந்து ஜயபுரம் வரையில் சுவாமிகளுடைய பிரயாணத்துக்குச் சகல சௌகர்யங்களையும் ஏற்படுத்தி யிருந்தது மன்றியில். சுவாமிகளை வரவேற்பதற்குத் தாமே பன்னிரண்டு மைல் தூரம் சென்று காத்துக்கொண்டிருந்தார். கேத்ரி நகரம் முழுதும் உற்சாகம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அந் நகர்வாசிகள் சுவாமிகளின் வரவைக் கௌரவப்படுத்துவதற்காக, பாண காட்சி வேடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஊர் முழுதும் தீபமேற்றப்பட்டது. இன்னு அந்தச் சமஸ்தானத்து மஹாராஜாவும் அப்பொழுதுதா ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்திருந்தார்; அச் சமயத்

லே சுவாமிகளும் அந்தச் சமஸ்தானத்துக்கு வந்தது நற்சகுனமேயாமென்று கருதப்பட்டு, அந்நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அரசருக்கும் சுவாமிகளுக்கும் வெவ்வேறாக இரண்டு உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. தவிர, டிசம்பர்மீ 11-ம் தேதியன்று அந் நகர்ப் பள்ளிக்கூடத்திலே அந் நகர்வாசிகள் ஒரு பெருங் கூட்டமாகக் கூடி, சுவாமிகளுக்கும் அரசருக்கும் உபசாரப் பத்திரிகைகள் படித்தார்கள். பின்னர் அவ் வரசர்மீது ஸ்தௌத்தியமாகப் பள்ளிச் சிறுர்கள் சிலரால் சில சிறு பாடல்கள் பாடப்பட்டன. அதற்குப் பின், அரசருடைய வேண்டுகோளுக் கிசைந்து சுவாமிகள் பரீட்சையில் தேறிய பையன்களுக்கு வெகுமதி கொடுத்தார்.

பிறகு, சுவாமிகள் ஒரு சிறு பிரசங்கம் செய்யத் தொடங்கி, முதலில் அவ் வரசரைத் தாம் முதலில் சந்தித்திராவிட்டால் தாம் செய்துள்ள சிறு நன்மையும் செய்திருக்க முடியாது என்று கூறி நன்றி செலுத்திவிட்டு, கல்வி முறையைப்பற்றிப் பேச ஆரம்பித்து, "மேனுட்டாருடைய லட்சியம் போகமே" என்றும், "கீழ் நாட்டாருடைய லக்ஷியம் தியாகமே" என்றும், "கீழ் நாட்டாருடைய லக்ஷியத்தையே மாணவர்கள் எப்பொழுதும் பின்பற்றி நடப்பது நன்று," என்றும், "மனிதனுள் முன்னமேயே உள்ள ஈஸ்வரத்துவத்தை வெளிப்படுத்துதலே கல்வி" என்றும், "புஸ்தகங்களைக் குருட்டுப்பாடம் பண்ணுதலேயே கல்வி

யாக இக் காலத்தினர் நினைத்திருக்கிறார்கள்," என்றும், "அது தப்பு," என்றும், "மனிதர்களை உண்மைப் புருஷர்களாக்கவல்ல கல்வியே கல்வி" என்றும் கூறித் தமது பிரசங்கத்தை முடித்தார்.

இதற்குப்பின் அங்குக் கூடியிருந்த உத்தியோகஸ்தர்களும் குடிகளும் ஒருவர்பின் ஒருவராகச் சுவாமிகளிடம் வந்து வணங்கி நின்று தலைக்கு இரண்டு ரூபா காணிக்கை கொடுத்தார்கள். டிசம்பர்மீ 20-ம் தேதியன்று சுவாமிகள் வேதாந்த மதம் என்னும் விஷயத்தைப்பற்றி மஹாராஜாவினுடைய பங்களாவிலே அரியதோர் பிரசங்கம் செய்தார். அவ்விடத்து முக்கியஸ்தர்கள் எல்லோரும் அங்கு வந்து கூடியிருந்தார்கள். சில ஐரோப்பிய ஸ்திரீகளும் கனவான்களும் கூட அங்கு வந்திருந்தார்கள். சுவாமிகளைப்பற்றி ராஜா சபையோரிடம் எடுத்துப் பேச, ஒன்றரை மணி நேரத்துக் கதிகமாக சுவாமிகள் ஒரு பிரசங்கம் செய்தார். "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" என்னும் சுருதியையே விஷயமாக எடுத்து, அதைப்பற்றி விரித்து எல்லோரும் ஆச்சர்யப்படும்படியாக, பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களும் எளிதில் அறிந்துகொள்ளும்படி பேசினார். சுவாமிகளுக்குச் சரீரம் அசௌக்கியமாயிருந்ததினாலே, பாதி பேசிக்கொண்டிருந்தபொழுதே களைத்துப்போய்விட்டார்; ஆதலால், இடையே அரைமணி நேரம் சிரமசாந்தி செய்து களை தீர்ந்துகொண்டு சுவாமிகள் வரும்வரையில் அவருடைய மிகுதிப் பிரசங்கத்தை

யும் கேட்பதற்காக எல்லோரும் மிகப் பொறுமை வகித்துக் காத்துக்கொண்டிருந்தார்கள். சுவாமிகள் களை தெளிந்து வந்து மறுபடியும் ஒரு அரைமணி நேரம் "வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதே எந்த சாஸ்திரத்தினுடையவும் லக்ஷியம்" என்று பொருள்படப் பிரசங்கித்தார். பிரசங்கத்தை முடிக்கும்பொழுது சுவாமிகள் அவ் வரசருடைய மேன்மைக் குணங்களைப் புகழ்ந்து, "மேனாட்டிலே ஹிந்து மதத்தின் உண்மைகளைப் பரப்புதற்கு மிகுந்த உதவி செய்தவர் அவ் வரசரே," என்று கூறினர்.

சுவாமிகளும் அவ் வரசருமாகக் குதிரைச் சவாரி செய்துகொண்டு போனபோது அவ் வரசருடைய உண்மை க்ஷத்திரிய குணத்தைக் காட்டும்படியான செய்கையொன்று நடந்தது. போகும் வழியிலே ஒரு முட் கிளை தொங்கிக்கொண்டிருந்ததை அந்த ராஜா கண்டு, அதை சுவாமிகளின்மீது படவொட்டாது செய்யக் கருதி, தமது கையினுல் அக் கிளையை ஒதுக்கிப் பிடித்து நிறுத்தினர். சுவாமிகள் இதைக் கவனிக்கவில்லை. சிறிது தூரம் சென்றவுடனே, அந்த ராஜாவினுடைய கையிலே ரத்தம் சொரிந்துகொண்டிருப்பதைச் சுவாமிகள் கண்டு, 'அம் முட்கிளையை அவர் பிடித்து ஒதுக்கி நிறுத்திக்கொண்டிருந்த பொழுது, அது கையைக் கீறிவிட்டது' என்று தெரிந்துகொண்டு, "அரசர் அப்படிச் செய்திருக்கக் கூடாது," என்று கூறிக் கடிந்துகொள்ள, அவர் புந்நகை புரிந்துகொண்டே, "சுவாமி! க்ஷத்திரியர்களாகிய நாங்கள் எப்பொழுதும் சிஷ்டபரிபாலகர்களல்லவா?" என்று கேட்டார்.

சுவாமிகள் கேத்ரி நகரை விட்டுப் புறப்படக் கருதினார். இதை யறிந்த அவ் வரசர் சுவாமிகளுக்கு மூவாயிரம் ரூபா பாத காணிக்கையாக அளித்தது மன்றியில், சுவாமிகளை விட்டுப் பிரிய மனமில்லாதவராய், ஜயபுரம் வரையில் கூடவே சென்றார். அங்கே கேத்ரி மஹாராஜாவின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு சபைகூட, அதிலே சுவாமிகள் ஒரு பிரசங்கம் செய்தார். கேத்ரி அரசர் தமக்குக் கொடுத்த மூவாயிரம் ரூபாயையும் சுவாமிகள்: ஸ்வாமி சதாநந்தர், ஸ்வாமி சச்சிதாநந்தர் இவ்விருவர் வசமும் ஒப்புவித்து, கல்கத்தா மடத்துக்கு அனுப்பிவைத்தார். சுவாமிகள் ஜயபுரம் வந்து சேர்ந்தவுடனே தம்முடன் இருப்பதற்கு பிரஹ்மச்சாரி கிருஷ்ணலால் என்ற ஒருவரை மாத்திரம் வைத்துக் கொண்டு மற்றவர்களைக் கல்கத்தா மடத்துக்கு அனுப்பி விட்டார்.

பின்னர், சுவாமிகள் கிருஷ்ணகார் ஆஜ்மீர் ஆகிய இரண்டு சமஸ்தானங்களையும் கடந்து ஜோதிபுரி சென்று அங்கே பிரதம மந்திரியாயிருந்த ராஜா ஸர் ப்ரதாபசிங்கினுடைய மாளிகையிலே சுமார் 10 நாட்கள் வரையில் தங்கினார். வருகிற வழியிலெல்லாம் ஒவ்வொரு ரெயில்வே ஸ்டேஷனிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடிச் சுவாமிகளைத் தரிசித்து ஆநந்தம் மிகுந்து ஆர்ப்பரித்தார்கள். ஆனால், சுவாமிகளுக்குச் சரீரம் மறுபடியும் அசௌக்கியமாய்விட்டது. இந்தூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த காண்ட்வா நகர் வந்து சேர்ந்த பொழுது சுவாமிகளுக்குக் கடோமான ஜ்வரம் கண்டது.

இவ்வூரிலே பாபு ஹரிதாச சட்டர்ஜி யென்னும் ஒரு வக்கீலுடைய பெயர் நமது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். சுவாமிகள் மேனாடு செல்வதற்கு முன்னமேயே சுவாமிகளைக் கண்டு சுவாமிகளிடத்திலே அத்தியந்த பக்தி செலுத்தியவர் இவர். இப்பொழுது சுவாமிகள் இவருடைய கிருகத்திலே வந்து இறங்கினர். இங்குச் சுவாமிகள் சிறிது சரீர சௌக்கிய மடைந்து சுமார் பத்து நாட்கள் தங்கினர். இங்கும் எங்கும் போலவே ஜனங்கள் ஏகமாக வந்து அவரைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டார்கள். இடைவிடாமல் சுவாமிகள் தமது மேனாட்டு அநுபவங்களை யுரைத்தும், வேதாந்த விஷயமாகச் சம்பாஷணை செய்தும் தம்மைப் பார்க்க வந்த ஜனங்களுக்கு ஆநந்தம் ஊட்டி வந்தார். "ஆங்கிலேயர்கள் உறுதிக் குணம் வாய்ந்தவர்கள்," என்றும், "இந்தியாவானது மறுபடியும் உலகில் உயர்வடைய வேண்டுமானால் இங்கிலாந்தினிட மிருந்துதான் உதவி பெற முடியும்," என்றும் சுவாமிகள் எப்பொழுதும் கூறிக்கொண்டே வந்தார்.

சுவாமிகள் அவ்வூரை விட்டுப் புறப்படுவதற்கு முந்திய நாள் இரவில் எல்லோரும் படுத்து நித்திரை செய்த பின்னர், சுவாமிகள் மாத்திரம் விழித்து ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது ஹரிதாச சட்டர்ஜி தமக்குச் சுவாமிகள் மந்திரோபதேசம் செய்யவேண்டுமென்று சுவாமிகளின் பாதாரவிந்தங்களைப் பலமாகப் பிடித்துக் கொண்டு கெஞ்சினர். ஆயினும், சுவாமிகள் இணங்க

வில்லை. சிஷ்யர்கள் தேடுவது தமது வேலையல்ல வென்றும், "சிஷ்யர்கள் தேடும் டாம்பிகர்கள் தேசத்துக்கு ஒரு பொழுதும் நன்மை செய்ய மாட்டார்கள்," என்றும் சுவாமிகள் அவரிடம் கூறிவிட்டார். இதற்கு முன்னும் பின்னும் சுவாமிகள் அநேகருக்கு மந்திரோபதேசம் செய்து அவர்களைச் சிஷ்யர்க ளாக்கிக்கொண்டிருந்தபொழுதிலும் ஹரி தாச சட்டர்ஜிக்கு மாத்திரம் மந்திரோபதேசம் செய்ய மறுத்துவிட்டதற்குக் காரணம் நமக்கு விளங்கவில்லை. சுவாமிகள் பஞ்சாபிலும் ராஜஸ்தானத்திலும் யாத்திரை செய்துவந்தபொழுது ஆங்காங்குள்ள தமது சிஷ்யர்களுக்கு "அவர்கள் எப்பொழுதும் வைதிக மார்க்கத்தை யநுசரித்து வரவேண்டும்," என்றும், "மாம்சம் சாப்பிடலாகாது," என்றும் போதிப்பது வழக்கம். "நீ இடைவிடாமல் பன்னிரண்டு வருஷங்களுக்குக் கண்டிப்பாக— ஒரே விரதமாக— மாம்ச முண்ணுது மரக்கறியே உபயோகித்து வருவாயானல், நீ சித்த புருஷனுய்விடுவாய்" என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவார்.

சுவாமிகள் காண்ட்வா நகரை விட்டு ரட்லம் ஜங்ஷன் வரையில் சென்றார். கூர்ச்சரதேசம், பரோடா சமஸ்தானம், பம்பாய் ராஜாதானியிலுள்ள மற்ற இடங்கள் இவற்றிலிருந்தெல்லாம் சுவாமிகளுக்கு அழைப்புக் கடிதங்களும் தந்திகளும் அநேகம் வந்து சேர்ந்திருந்தன வாதலால் அங்கு எல்லாம் பிரசங்கம் செய்யச் செல்ல உத்தேசித்துத்தான் இவ்விடம் வரையில் வந்து சேர்ந்தார். ஆனல், சரீர

அசௌக்கியத்தினாலும் வேறு சில காரணங்களினாலும் அவ்விடங்களுக்குச் செல்ல முடியாது, கல்கத்தாவுக்குத் திரும்பிவிட்டார். சுவாமிகள் இப்பொழுது பஞ்சாப் தேசத்திலும், காச்மீரத்திலும், ராஜஸ்தானத்திலும் போதித்துக்கொண்டுவந்த அபிப்பிராயங்களாவன:—

(1) முக்கியமான ஜாதியின் சில்லரை வகுப்புக்களுக்குள்ளே அந்யோந்ய விவாகம் செய்துகொண்டு, அவ் வகுப்பு பேதங்களை ஒழித்துவிடுதல்.

(2) 'கல்யாணம் பண்ணிக்கொள்வதே கர்மம்,' என்று நினைத்திருப்பது தவறு. "ஒவ்வொரு பிச்சைக்காரனும் விவாகம் செய்துகொண்டு தேசத்திலே இன்னும் பத்து அடிமைகளை யுண்டு பண்ணக் கவலை மிகுந்தவனாகிறான்," என்று சுவாமிகள் எப்பொழுதும் கூறுவது வழக்கம். ஏராளமான புருஷர் பிரஹ்மச்சாரிகளா யிருக்கவேண்டும்.

(3) பொது ஜனங்களுக்குள் கல்வியை விருத்தி செய்தல். ஏழை ஜனங்களுக்கு வயிறு நிரம்ப ஆகாரம் கிடைக்கும்படியான வழியைத் தேடிக் கொடுத்தல்.

(4) சமஸ்கிருத படிப்பை எங்கும் பரப்புதல்.

(5) பௌருஷமும் தீர்க்காலோசனையும் உள்ள உண்மைப் புருஷர்களை யுண்டாக்கும்படியான கல்வி போதிப்பதற்காக நமக்குச் சொந்தமாகச் சர்வகலாசாலைகள் ஏற்படுத்தல்.

(6) அபிப்பிராய வித்யாசங்கள் இருந்தபொழுதிலும் அப்படி வித்யாசப்படுபவர்களிடத்து அன்பு செலுத்தி அவர்களுடன் ஒற்றுமையாய் உழைத்தல்.

(7) அநேக வாலிபர்களை வேதாந்த ஞானத்திலே பயிற்றுவித்து அவற்றை மேனாடுகட்குப் போதிக்கும் பொருட்டும் மேனாடுகளிலுள்ளதை அங்கிருந்து கற்றுக்கொள்ளும் பொருட்டும் அனுப்புதல்.

55-வது அத்தியாயம்
கல்கத்தா நகர் வாசம்

சுவாமிகள் 1898-ம் வருஷம் ஜனவரிமீ இரண்டாவது வாரத்திலே கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். மார்ச்சுமீ 30-ம் தேதி யன்று சுவாமிகள் கல்கத்தாவை விட்டு டார்ஜீலிங் நகர் சென்றார். மேமீ 3-ம் தேதி மறுபடியும் கல்கத்தாவுக்கு வந்தார். மேமீ 11-ம் தேதி சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகள் சிலருடனும் சிஷ்யர்கள் பலருடனும் கல்கத்தாவை விட்டு அல்மோரா நகர் சென்று அங்கே ஜுன்மீ 10-ம் தேதி வரையில் தங்கியிருந்தார். ஜுன்மீ 20-ம் தேதி யன்று சுவாமிகளும் அவருடைய மேனாட்டுச் சிஷ்யர்கள் சிலரும் காச்மீர தேசத்துக்குப் புறப்பட்டுச் சென்று அக்டோபர்மீ மத்தி வரையில் அங்குத் தங்கியிருந்தார்கள். பின்னர் அங்கிருந்து சுவாமிகள் தமது மேனாட்டுச் சிஷ்யர்களுடனே லாகூர்

வந்து, அங்கே அவர்களை விட்டுவிட்டு, கல்கத்தாவுக்கு அக்டோபர்மீ 18-ம் தேதி யன்று வந்து சேர்ந்தார்.

சுவாமிகள் கல்கத்தாவிலே யிருந்தபொழுது அவரைப் பற்றிய விஷயங்கள் மடத்துத் தினசரிப்பதிப்புப் புத்தகத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. சுவாமிகள்: மடத்திலே யிருப்பார்; இல்லையேல் பலராமருடைய கிருகத்துக்குச் சென்றிருப்பார்; கல்கத்தாவிலே தம்மை வருந்தி யழைக்கும் பக்தர்களுடைய வீட்டுக்குப் போவார்; மடத்திலே யுள்ள சந்யாசிகளையும் பிரஹ்மச்சாரிகளையும் கடூரமான தபாநுஷ்டானங்களிலே அப்பியசிக்கும்படி செய்வார்; சில நேரம் நிஷ்டையி லிருப்பார்; ஆநந்தகரமாகப் பாடிக்கொண்டிருப்பார்; பஜனை செய்வார்; கிரந்தங்கள் பாராயணமாகும்; வியாசங்கள் எழுதுவார்; வந்த கடிதங்களுக்குப் பதி லெழுதுவார்; புராணேதிகாசாதிகளை வாசித்து அவற்றுக்கு ஆந்தரார்த்தம் உரைப்பார்; சில வேளைகளிலே மேனாட்டுச் சாஸ்திரங்களைப்பற்றி வாதம் நடக்கும்; சில சமயங்களிலே, தேச சரித்திரங்களை யெடுத்துக் கூறி அவற்றினின்றும் கிரகிக்கவேண்டிய உண்மைகளை யெடுத்துப் போதிப்பார்.

இக்காலத்திலே சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஒரு க்ஷேத்திரம் பிரதிஷ்டை செய்யும்படியான பாக்கியம் கிடைத்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நவகோபால கோஷ என்ற பெயருடன் கூடிய ஒரு அத்தியந்த சிஷ்யர் இருந்தார். இவர் கிருகஸ்தர்; தமது கிராமத்துப் பெயரே

ராமகிருஷ்ணபுரம் என்று வைத்துக்கொண்டார். இவர் தமக்குப் புதிதாக ஒரு வீடு கட்டி, ஒரு பக்கத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய விக்கிரகம் வைத்துப் பிரதிஷ்டை செய்யும்படியாக ஒரு சிறு க்ஷேத்திரமும் கட்டினார். "பிரதிஷ்டை செய்யும்பொழுது சுவாமிகளும் மடத்திலுள்ள மற்றச் சந்யாசிகளும் பிரஹ்மச்சாரிகளும் ராமகிருஷ்ண புரத்துக்கு வரவேண்டும்," என்று சுவாமிகளை அவர் கேட்டுக்கொள்ளவே, சுவாமிகளும் சம்மதித்தார். சுவாமிகள் வருவதாக வாக்கு அளிக்கவே, நவகோபால கோஷுக்கு உண்டான ஆநந்தத்துக்கு அளவேயில்லை.

பெப்ரவரீ 6-ம் தேதி பௌர்ணமி. சுவாமிகள் மடத்திலிருந்த சகோதரர்கள், சிஷ்யர்கள் அனைவரையும் கூட்டிக்கொண்டு ராமகிருஷ்ணபுரம் துறைமுகத்திலே மூன்று படகுகளில் வந்து இறங்கினர்; அங்கிருந்து எல்லோருமாக பஜனை செய்துகொண்டே நவகோபாலருடைய வீட்டுக்கு ஊர்வலமாகச் சென்றார்கள்; ஈச்வரநாமம் ஒலியும் எதிரொலியுமாக எங்கும் விறிட்டது. பக்தர்கள் எல்லோரும் பித்துப் பிடித்தவர்கள் போன்று ஆடினார்கள்; சுவாமிகள் மெய்மறந்து எல்லோருக்கும் மேலே ஆடினார். சுவாமிகள் பாதரட்சை யணியவில்லை, சாதாரண காஷாய வஸ்திரம் ஒன்றே தரித்திருந்தார். தமது கழுத்திலே ஒரு மிருதங்கத்தைக் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு அவர் "குழந்தை ராமகிருஷ்ணன்" என்ற பாட்டைப் பாடிய பொழுது, கண்கொண்டு பார்க்க முடியவில்லை. ஊர்வலம்

தெருக்களிலே சென்றபொழுது, நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்து திரண்டு கூடிவிட்டார்கள். சுவாமிகள் சாதாரண காஷாய வஸ்திர முடுத்து, கழுத்திலே மிருதங் கத்தைக் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு மிருதங்கம் அடித்துக்கொண்டே பாட்டுப்பாடி ஆடிக்கொண்டு செல் வதைப் பார்த்து, "மேனாடு சென்று திக்விஜயம் செய்து திரும்பிவந்த விவேகாநந்தர் இவர்தானா" என்று சந்தே கித்து ஆச்சர்ய மடைந்தார்கள். வழிநெடுக "ஸ்ரீ ராமகிருஷ் ணருக்கு ஜய, ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிக்கு ஜய" என்ற ஜய சப்தம் ஆகாயத்தைப் பிளந்தன. நவகோபாலருடைய வீட் டுக்கு இவர்கள் போய்ச் சேர்ந்ததும், அந்த பக்த சிரேஷ் டர் சுவாமிகளையும் மற்றவர்களையும் மிகுந்த பயபக்தியுட னே வரவேற்று உபசரித்தார்; சங்கநாதம் பம் பம் என்று பூரிக்கப்பட்டது; பேரிகைகள் முழங்கின. கொஞ்சநேரம் கழித்து, கீழே பளிங்கினால் தள மிடப்பட்டு அழகாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு பூஜையறைக்குச் சுவாமிகளை யிட் டுச் சென்றார்கள். அவ் வறையிலே ஒரு பீடமிட்டு, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய விக்கிரக மொன்று அங்கே வைக்கப் பட்டிருந்தது. சுவாமிகள் எல்லாவற்றையும் கண்டு மிகச் சந்தோஷித்தார். அந்த வீட்டு எஜமானி சுவாமிகளை நோக்கி, "சுவாமி! நாங்கள் ஏழைகள், குருமூர்த்தியைத் தகுந்தபடி பூஜிப்பதற்குக் கொடுத்து வையாதவர்கள்; எங் களை ஆசீர்வதிக்கவேண்டும்" என்று கூறினார்.

சுவாமிகள் "தாயே! நமது குரு இதுபோன்ற பளிங் குத் தளமிட்ட அறையில் ஒருபொழுதும் வசித்ததில்லை

யே; குடிசையிலே பிறந்தார், குடிசையிலேதான் காலங் கழித்தார். அவர் இங்கு இந்த பக்த சிரேஷ்டர்களுடைய ஹிருதயங்களிலே வசிக்கப் பிரியப்படாவிட்டால், எங்குத் தான் இருக்கப் பிரியப்படுவாரோ? எனக்குத் தெரிய வில்லை,'' என்று கூறினர்.

பின்னர், சுவாமிகள் சரீரம் முழுதும் பஸ்மோத் தூளிதராய் அர்ச்சக ஸ்தானத்திலே யுட்கார்ந்து ஸ்ரீ ராம கிருஷ்ணர் அங்குச் சாந்நித்திய மாகும்படி ஸ்தோத்ரம் பண்ணினர்; சுவாமி பிரகாசாநந்தர் என்னும் பெயருடைய அவருடைய சிஷ்யர் ஒருவர் ஆவாகன மந்திரங்களைக் கூறி னர். இப்பொழுதுதான், இங்குத்தான் சுவாமிகள் கண் மூடித் தியானத்தி லிருந்துவிட்டு, கண் விழித்துப் பார்த்த பொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேரில் ஸ்தோத்ரம் ஒன்று உடனே ஒரு ஸ்லோகத்தில் பாடியருளினர்.

மடத்திலே சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளுக் கும் சிஷ்யர்களுக்கும் தமது அபிப்பிராயங்களையும் கொள் கைகளையும் ஊட்டுவதிலேயே எப்பொழுதும் கண்ணும் கருத்துமாயிருந்தார். முற்காலத்திலே வராகர் மடத்தி லே எப்படி ஆநந்தகரமாகக் காலம் கழிந்துவந்ததோ, அதே மாதிரி இப்பொழுதும் காலம் கழிந்தது. கல்கத்தா வின் அருகிலே பெரியதாக மடமொன்று கட்டவேண்டு மென்று சுவாமிகள் மேனுடு செல்வதற்கு முன்னே பொரு சமயத்தில் தமது சகோதர சந்யாசிகள் சிலரை நோக்கி, கங்கா தீரத்திலே வராகரத்துக் கட்டடத்தில் நின்று

கொண்டு "நம்முடைய மடம் பெரியதாக இங்குத்தான் சமீபத்தில் கட்டப்படும்போல எனக்குத் தோன்றுகிறது" என்றார் இந்தத் தீர்க்க தர்சனம் பொய்த்துப் போக வில்லை. இப்பொழுது 1898-ம் வருஷத்து ஆரம்பத்திலே யே, கங்காதீரத்தில் வாரநகரத்து ஸ்நாந கட்டத்துக்கு எதிரில் வேலூர் என்ற கிராமத்தில் ஒரு கட்டிடம் உள்பட பதினைந்து ஏகரா நிலத்தைச் சுவாமிகள் விலைக்கு வாங்கி விட்டார். சுவாமிகளிடத்திலே அத்தியந்த சிரத்தையும் விசுவாசமுமுள்ள ஆங்கில மாதுசிரோமணி மிஸ் ஹென்ரிட்டா முல்லர் என்பவர் இங்கு மடம் கட்டுவதற்காக அநேக ஆயிரம் ரூபா கொடுத்தார். ஆயினும், சுவாமிகளும் மற்றவர்களும் அவ்விடத்துக்கு 1899-ம் வருஷம் ஜனவரிமீ வரையில் புதிதாக வாங்கின இடத்திலே வசிப்பதற்குப் போகவில்லை. ஏனென்றால், அந்த நிலமானது படகுகள் தங்குவதற்கு உபயோகிக்கப்பட்டிருந்ததினாலே மேடும் பள்ளமுமா யிருந்தது; இதைச் சமப்படுத்தவேண்டி வந்தது. இன்னும் கட்டிடம் சிதலாய்க் கிடந்ததினாலே, பழுது பார்க்கவேண்டி வந்தது; இரண்டாவது மாடி யொன்று புதிதாகக் கட்டப்பட்டது; ஸ்ரீ ராமகிருஷ்ண க்ஷேத்திரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இதற்கெல்லாம் பணம் சுவாமிகளுடைய ஆங்கில நண்பர்கள் கொடுத்து உதவினார்கள். கொஞ்சநாட்களுக்குப் பின், அமெரிக்காவிலே மிஸஸ் ஒல்புல் என்னும் மாது மடத்தின் உபயோகத்துக்காக ஒரு பெருந்தொகைப் பணம் அனுப்பிக் கொடுத்தார்; எல்லாம் சேர்த்து இப்பொழுது ஒரு லட்சம் ரூபாவுக்குக்

குறையாமல் ஆய்விட்டது. சுவாமிகளுக்கு மனமானது ஆறுதலடைந்து களி கூர்ந்தது.

நீலாம்பர முக்கர்ஜியினுடைய தோட்டத்திலே யிருந்த மடமானது சிவராத்திரி சமயத்திலே சந்நியாசிகளால் நிரம்பப்பெற்றது. அமெரிக்காவிலிருந்து ஸ்வாமி சாரதாநந்தர் இப்பொழுதுதான் திரும்பி வந்திருந்தார்; ஸ்வாமி சிவாநந்தர் இலங்கையிலிருந்து திரும்பி வந்தார்; ஸ்வாமி திரிகுணாதீதர் தினஜனபுரிக்குப்பஞ்சநிவிருத்தி கைங்கர்யத்துக்குச் சென்றிருந்தவர் திரும்பி வந்தார்; ஸ்வாமி பிரஹ்மாநந்தர், ஸ்வாமி துர்யாநந்தர் முதலியவர்களும் மடத்திலே யிருந்தார்கள். சுவாமிகள் துர்யாநந்தரிடத்திலே வெளியே வேலை செய்யச் சென்று திரும்பி வந்திருக்கும் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் வந்தனோபசாரப் பத்திரிகைகள் தனித்தனியே எழுதித் தயார் பண்ணும்படிக்குக் கூறினார். சிவராத்திரி யன்று பகலிலே மடத்திலே யிருந்தவர்கள் சுவாமிகளுடைய அக்கிராசனத்தில் கூடி அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரிகைகள் படித்தார்கள். சுவாமிகளும் முடிவில் அவர்கள் செய்ய வேண்டிய தின்னதென்பதைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஜன்மதினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இன்று சுவாமிகள் ஒரு விசேஷ வேலை செய்தார். எக்ஞோபவீதங்கள் ஏராளமாகக் கொண்டுவந்து மடத்திலே வைக்கும்படி சுவாமிகள் உத்தரவு செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அல்லது தம்

முடைய சிஷ்யர்கள் ஒருவர்பின் ஒருவராக மடத்துக்கு வர, சுவாமிகள் அவர்களிடத்திலெல்லாம் "பிராஹ்மணர்களா யில்லாதிருந்து துவிஜர்களா யுள்ளவர்கள் அன்று எக்ஞோபவீதம் அளிக்கப்படுவார்கள்" என்று கூறிவிட்டுத் தமது பிராஹ்மண சிஷ்யராகிய சாரதச்சந்திரரை நோக்கி, "சாரதா! நமது குருமூர்த்தியின் குழந்தைகள் பிராஹ்மணர்களே! இன்னும் 'துவிஜர்கள் உபநயனத்துக்கு அதிகார முள்ளவர்கள்,' என்று வேதங்களே கூறுகின்றன; இவர்கள் வீழ்ச்சி யடைந்திருக்கலாம்; ஆனால், பிராயச்சித்தம் செய்துகொண்டு, மறுபடியும் உபநயனம் செய்துகொள்ளலாம். இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிறந்த நாளாகையினாலே, எல்லாரும் பரிசுத்தம் பண்ணப் பட்டுவிடுவார்கள். எல்லோருக்கும் நீ காயத்ரீ மந்திரோபதேசம் செய்துவிடு. எல்லோரும் மெல்ல மெல்ல பிராஹ்மண நிலைமையை அடையும்படி செய்யவேண்டும். ஹிந்துக்களெல்லோரும் சகோதரர்களே; அநேக நூற்றாண்டுகளாக நாம் 'இவரைத் தொடக்கூடாது, அவரைத் தொடக்கூடாது' என்ற மூடத்தனத்தைப் பரப்பி, பிறரைக் கீழ் நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டோம். நமது தேசத்திலே அற்பத்தனமும் கோழைத்தனமும் மூடத்தனமும் குடிகொண்டிருக்கின்றன என்பது ஆச்சர்யமன்று. இப்பொழுது நமது தேசத்தை உயர்த்திவிடவேண்டிய பெருங் கடமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது" என்றார்.

அன்று சுமார் 50 பக்தர்களுக்கு அதிகமாக, கங்கா ஸ்நாநம் செய்து, எக்ஞோபவீதம் தரித்து, காயத்ரீ மந்தி

ரோபதேசம் பெற்றுப் பின்னர், ஸ்ரீ ராமகிருஷ்ண விக்கிரகத்தின் முன்னே சென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்கள். இந்த விஷயத்திலே சுவாமிகள் வைதிகப் பிராஹ்மணர்களுடைய கொள்கைகளுக்கு விரோதமாக நடந்து கொண்டாரென்றாலும், நவீன நாகரிக ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் போன்று எல்லாவற்றையும் அழித்துவிட அவர் கருதவில்லை. "சாஸ்திரக் கருத்துக்களுக்கு மாறுபடாது, உள்ளிருந்தே வளர்ச்சி யுண்டாகவேண்டும்," என்பதே சுவாமிகளுடைய அபிப்பிராயமாம். சுவாமிகளுக்குப் புராதனக் கொள்கைகளிடத்தும் பண்டையக் காலந் தொட்டு நடைபெற்று வரும் பராம்பர்ய வழக்கங்களிடத்தும் அதிக ஆசையும் நம்பிக்கையு முண்டு.

'சிவராத்திரி தினத்தன்று மடத்திலே எவரும் உபவாசம் இருக்கவில்லை' என்று அறிந்து மனம் மிக வருந்திக்கொண்டிருக்கையில், ஸ்வாமி சுத்தாநந்தர் உள்ளே நுழைய, சுவாமிகள் அவரை நோக்கி, அன்று அவரால் உபவாசம் இருக்க முடியுமா? என்று கேட்டார். சுத்தாநந்தர் "முடியும்" என்று கூற, சுவாமிகள் அவரைச் சிவராத்திரி விரதம் அநுஷ்டிக்குமாறு ஆக்ஞாபித்தார்; ஆயினும், சுத்தாநந்தர் பலஹீனமான சரீரமுடையவராதலாலே, ஏதேனும் பழங்கள் உண்ணும்படி உத்தரவு கொடுத்தார்.

ஒருநாள், அந்த மடத்திலே யிருந்த சந்யாசிகள் சுவாமிகளைச் சிவனைப்போன்று அலங்கரித்தார்கள், அவருடைய காதிலே குண்டலங்களை மாட்டி, அவருடைய சரீ

புதல் கூடாது,"
மே முழுதிலும் விபூதியைப் பூசி, அவரு ஸ்வாமிகளுடைய ஜடா மகுடத்தை வைத்தார்கள். அவருடை ஷ்யர், "சிஷ் மூன்று பெரிய ருத்திராட்ச மாலைகள் தொ மள் செய்ப னும் அவருடைய முழங்கை. மணிக்கட்டு, சிர நட கூறித் லெல்லாம் ருத்திராட்ச மாலைகள் சுற்றியிருந் ஆமையை னர் அவர்கள் தாங்களும் சரீராத்தியந்தமும் விபூ ந்துகொண்டார்கள். ஸ்வாமிகள் அப்பொழுது இருந்த அழகை வர்ணிப்பதற்கு ஆயிரம் நாவிருந்தாலும் போதாது. ஸ்வாமிகள் நடுவிலும் மற்றவர்கள் சுற்றிலும் உட்கார்ந் திருந்ததைப் பார்த்தால், கைலாசத்திலே சாக்ஷாத் பரம சிவன் தமது பைரவகணங்கள் புடைசூழ வீற்றிருப்பது போன்றிருந்தது. ஸ்வாமிகள் ஸ்ரீ ராம ஸ்தோத்திரமொன்று பாடிப் பரவசராகி, ராமநாம ஸ்மரணையே யல்லாமல் வேறு நினைப்பு அற்று, சிவாநுபூதியிலே சேர்ந்திருந்தார். அவருடைய அழகு ஒன்று, பத்து, நூறு மடங்காகப் பெருகித் தோன்றிற்று. அவருடைய கண்கள் பகுதி மூடிப் யிருந்தன. அவர் தமது கையிலே ஒரு தம்புரு தாங்கி அதை சுதி வாசித்துக்கொண்டே பத்மாசனத்தில் வீற் றிருந்தார். சுவாமிகளைச் சுற்றியிருந்தவர்களுக்கு அவ் வாநந்தம் தொத்திக்கொண்டது. சுமார் அரைமணி நேரத் துக் கதிகமாக எல்லாரும் மௌனமாயிருந்து ராம நாமா ம்ருதத்தைப் பானம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்; சித்தி பிரதிமைகள் போல அசைவற்றிருந்தார்கள். இது தேவர் கள் பார்க்கவேண்டிய காக்ஷியே!

ரோபதேசம் பெ தது; சுவாமிகள் அந்தப் பரவச நி விக்கிர கத்தின் முன்னே டே இன்னுமொரு பாட்டுப் பாடினார். பின் கள். இந்த களால் இயற்றப்பட்ட 'சிருஷ்டி கீத'த்தைச் மணர்களுடை தாநந்தர் பாடினார். இவ்விதமாக ஸ்ரீராம கொண்டா நக்குப் பிரியமான சில பாடல்கள் பாடி முடிந்த தக்காரர்க, சுவாமிகள் திடீரென்று தமது அலங்காரத்தை யெல்லாம் கழற்றி அவற்றைக் கிரீசச் சந்திரருக்கு இட்டு, கிரீசருடைய சரீரத்தியந்தமும் விபூதியும் பூசிவிட்டார். இன்னும் "பரமஹம்சர் கிரீசர் பைரவாம்சம்," என்று கூறுவது வழக்கம்" என்று சொல்லிக்கொண்டே, கிரீசருக்கு ஒரு காஷய வஸ்திரத்தை உடுத்திவிட்டார். இது பிரபல நாடகாசிரியராகிய கிரீசருடைய ஹிருதயத்தை உருக்கி விட்டது; கிரீசருடைய கண்களில் கண்ணீர் ததும்பிற்று. "சூழ்ந்திருந்த பக்தர்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி ஏதேனும் சொல்லவேண்டும்," என்று சுவாமிகள் கிரீச ரைக் கேட்க, கிரீசருக்கு நாவெழவில்லை; தொண்டை கம்மிற்று; வெகுநேரம் மௌனமாயிருந்துவிட்டு, கிரீசர் கம்மிய குரலில் "சர்வகாருண்ணியமூர்த்தியைப்பற்றி நான் என்ன சொல்லப்போகிறேன்? இளமைப் பருவத்திலிருந்தே காமினி காஞ்சனத்தை (பெண்ணையும் பொன்னையும்) துறந்து அதி வைராக்கியசாலிகளாயிருக்கும் பரிசுத்தாத்மாக்களாகிய உங்களுக்குச் சரிசமமாக நானும் உட்காரும்படியான பாக்கியம் அந்தக் குருமூர்த்தியின் அருளினாலேயே கிடைத்துள்ளது," என்றார்.

...ஆ)ண்டிப் போஜனமான பின்னர், புதல் கூடாது,'' ஞோபவீதம் வாங்கிக்கொண்டவர்களை நோக்ராமிகளுடைய நறைந்தது நூறுதரமாவது காயத்திரியை ஃஷயர், ''சிஷ் ம்,' என்று கூறினார். இதன் மத்தியிலே ஸ்வாம ர் செய்ப ந்தர் இரண்டு பெரிய மிட்டாய்ப் பொட்டணங்களுட கூறிக் ஷிதாபாத்திலிருந்து திரும்பி வந்தார். சுவாமிகள் அமையை பார்த்து, மற்றவர்களிடத்திலே, ''பார்த்தீர்களா ார்கள். காம் கர்மயோகி; இவருக்குப் பயமென்பதே கிடை இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி, லக்ஷியம் சொவரூபா யில்லை. வெகு ஜனங்களுடைய நன்மைக்காக, ளிக் ஜனங்களுடைய சுகத்துக்காக இவர் ஏகாக்ர சிரத்தை புடனே ப்படி வேலை செய்துகொண்டிருக்கிறார்!'' என்று கூறிவிட்டு, கர்மயோகத்தைப்பற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்தார். அதற்குப் பின், சுவாமிகள் கிரீசர் இயற்றிய ''குழந்தை ராமக்ருஷ்ணன்'' என்ற பாடல்களைப் பாடினார்.

சுவாமிகள் மடத்திலிருந்தபொழுது, அவரைப் பார்ப்பதற்குப் பிரபல புத்த குருவாகிய அநகரிக தர்மபாலர் என்பவர் வந்து சேர்ந்தார். அவர் ஓல்புல் என்னும் அமெரிக்க மாதைப் பார்க்கவந்தவர், அம் மாது மடத்துக்கென்று புதிதாக வாங்கப்பட்ட நிலத்திலேயிருந்த கட்டிடத்தில் வசித்துவந்ததினாலே சுவாமிகளையும் கூட இட்டுக்கொண்டு போவதற்காக முதலில் மடத்திலே வந்திறங்கினார். அப்பொழுது பெருமழை பெய்துகொண்டிருந்தது. அரைமணி

...து பார்த்தார்கள். மழை நிற்பதாயில்லை;
ரோபதேசப்... ம் புறப்படுவதென்று தீர்மானித்தார்கள்.
கத்தின் மு... முரடாயும் சேறு மிகுந்ததாயும் இருந்தது...
கள். இச்... ல்லாம் நனைந்து தள்ளாடித் தள்ளாடி நடந்...தைச்
மனை... ட சுவாமிகள் சிறு பையன்போன்று விளையாட்டு...ராம
கெ... ச் சிரித்து வேடிக்கைகள் அநுபவித்துவந்தார்...டிந்த
தக்... ளும் மற்றவர்களும் மழைக்குப் பயந்து கால்களி...தை
...பாதரக்ஷைக ளணிந்துகொள்ளவில்லை. தர்மபாலரும்...டு,
...கிறதுகொள்ள வேண்டாமென்று சுவாமிகள் கூறியும்...ர்.
...ர் கேட்காது, அணிந்துகொண்டிருந்தார். அவர் ஒருகூறு
...பாதிரி முடவராதலினாலே அவருடைய கால் சேற்றில் மிகக்கு
வும் ஆழமாக ஒரு இடத்தில் இறங்கிவிட்டது, அவரால் பல
அக் காலை யெடுத்துக்கொள்ள முடியவில்லை. சுவாமிகள் ...ங்கி
இதைப் பார்த்து, அவரைத் தமது தோள் கொடுத்துத் ...
தூக்கிவிடவே, பின்னர்ச் சிரித்துக்கொண்டே நடந்துசென் ...றி
றார்கள்.

புதிய மடம் போய்ச் சேர்ந்தவுடனே எல்லோரும்
பாதங்களைக் கழுவிக்கொண்டு வரச் சென்றார்கள்; தர்மபால
ரும் ஒரு செம்புத் தண்ணீ ரெடுத்துக்கொண்டு செல்ல,
சுவாமிகள் சட்டென்று சென்று தர்மபாலருடைய கையி
லிருந்து அச் செம்பைப் பிடுங்கி, "இப்பொழுது தாங்கள்
என்னுடைய அதிதியல்லவா? ஆதலால், நான் தங்களுக்குச்
சிசுருஷை செய்யவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே,
அவருடைய பாதங்களைப் பிடித்துக் கழுவப்போகையில்,

“சுவாமிகளைப்போன்ற பெரியோர் கால்கழுவுதல் கூடாது,” என்று தர்மபாலர் ஒரேயடியாக விலக்க, சுவாமிகளுடைய சிஷ்யர்களும் அப்படியே கூறினார்கள். ஒரு சிஷ்யர், “சிஷ்யர்கள் நாங்களெல்லோரும் பார்த்திருக்கத் தாங்கள் செய்யலாமா? நான் அவ் வேலையைச் செய்கிறேன்,” என்று கூறித் தடுத்தார். பார்த்தவர்கள் சுவாமிகளுடைய தாழ்மையையும், அதிரம்ய மாதிரிகளையும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள்.

ஸ்வாமிகள் மார்ச்சுமீ 29வ யன்று ஸ்வாமி ஸ்வரூபாநந்தருக்கும் ஸ்வாமி சுரேச்வராநந்தருக்கும் சந்யாசம் அளித்தார். ஸ்வரூபாநந்தர் இரண்டு மூன்று தரம் சுவாமிகளைப் பார்க்க வந்தார்; சுவாமிகளுடைய சம்பாஷணைகளைக் கேட்டு அவருடைய மனமானது கலங்கிக்கொண்டே வந்தது; நான்காவது தடவை சுவாமிகளைப் பார்க்க வந்தார். அன்று வெகுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருக்க, அவருடைய மனமானது மாறுத லடைந்துவிட்டது. உலகைத் துறக்கத் தீர்மானித்துவிட்டார்; “இனிமேல் வீட்டுக்குத் திரும்புவதில்லை,” என்றும், “வீட்டாருக்கும் தமக்கும் எவ்வித பற்றுதல்களும் கிடையா,” என்றும் தம்முடன் கூட வந்த நண்பர்களிடம் வீட்டுக்குச் சொல்லி யனுப்பிவிட்டார். அந்த நண்பர்களுக்கு அது ஆச்சர்யமாயிருந்தது. சட்டி சுட்டது, கைவிட்டது. அவருடைய மனமானது பின் எப்பொழுதும் மாறவே யில்லை. அவருக்கு இயற்கையிலேயே உலக விரக்தி யுண்டு; அநேக வருஷங்களாக அவர் வேதாந்த விசாரம் செய்து வந்தபொழுதி

லும், அவருடைய மனம் தெளிவடைந்து உறுதி பெற வில்லை. இப்பொழுதுதான், சுவாமிகளைத் தர்சித்து அமிர்த மொழிகளைக் கேட்டுத்தான், அவருடைய மனம் உறுதி பெற்றது. வாலிபத்திலேயே விவாகம் ஆயிருந்தபொழுதி லும், அவர் இல்லறத்தை வெகு தைர்யமாக வெறுத்து விட்டார்; அவர் தமது மனைவியை நீக்கிவிட்டு, தமது பெற்றோ ருடனே சுத்தப் பிரஹ்மச்சாரியாக வாழ்ந்துவந்தார். 'பரோபகார கைங்கர்யம் செய்யவேண்டும்,' என்ற ஆசை அவருள்ளத்திலே பெருகி வந்தது. ஆகையால், அவர், சுவாமிகளைப் பார்த்தவுடனே காந்தத்தினால் கவரப்படும் இரும்புபோல் கவரப்பட்டுவிட்டார். சுவாமிகளுக் ஸ்வரூபாநந்தரைப்பற்றி எப்பொழுதுமே சிறந்த அபிப்பி ராய முண்டு. "ஆயிரம் மோஹராக்களினும் ஸ்வரூபாநந்தர் போன்ற ஸ்வயநலமற்ற கர்மயோகியே பெரிது," என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவார். மடத்திலே வந்து சேர் ந்து அநேகநாட்க ளாயினபின்னர்த் தான், ஒருவருக்குச் சந் யாசம் கொடுப்பது வழக்கம். ஆனால், ஸ்வரூபாநந்தருக்கு மடத்தில் வந்து சேர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்கெல் லாம் சுவாமிகள் சந்யாசம் கொடுத்துவிட்டார். சில மாதங் களுக்குள்ளே இவர் "பிரபுத்த பாரதா" என்ற மாதாந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக்கப்பட்டார். அடுத்த வருஷத்தி லே சுவாமிகள் ஹிமோத்கிரியில் ஒரு ஆச்ரமம் இயற்றிய பொழுது, இவர் அதற்கு அக்கிராசனாதிபதியாக்கப்பட்டார். இன்னும் சுவாமிகள் இவரைச் சகோதரி நிவேதிதா அம்மை யாருக்குக் கீதைமுதலிய சாஸ்திரங்களைப் பாடம் சொ

விக்கொடுக்கும்படி ஏற்பாடு பண்ணினார். சகோதரி நிவேதிதா அம்மையாரே தாம் தமது புத்தியபிவிருத்திக்குச் சுவாமி சொரூபாநந்தருக்கே மிகவும் கடமைப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

சுவாமிகள், சுவாமி சொரூபாநந்தருக்கு உபதேச மளிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே, கிறிஸ்தவப் பண்டிகைத் தினமாகிய ஒரு வெள்ளிக்கிழமை யன்று சகோதரி நிவேதிதா அம்மையாரைப் பிரஹ்மச்சரிய விரதம் எடுக்கும்படி ஏற்பாடு செய்தார். இவ் வம்மையார் தான் முதலாவது மேனாட்டுப் பிரஹ்மச்சாரிணி. சுவாமிகள் இவ் அம்மையாருக்கு பிரஹ்மச்சாரிணி விரதங் கொடுத்த பின்னர், இவரையும் இன்னும் இரண்டு அமெரிக்க ஸ்திரீ சிஷ்யர்களையும் மேல்மாடிக்கு இட்டுச் சென்று அங்கே உட்காரவைத்துவிட்டு, ஒரு சிவயோகி போன்று ஜடை தாங்கி, சரீரம் முழுதும் விபூதியா லலங்கரித்து, காதிலே எலும்பு வளையங்களைத் தரித்து, சங்கீதங்கள் பாடி, ஒரு மணி நேரம் குதூகலமாய்க் காலம் கழித்தார்.

ஹிந்து புருஷர்கள்தாம் நவீன நாகரீக வெள்ளத்தில் மூழ்கி மதிமயங்கி ஐரோப்பியர்களுடன் கலந்து விளையாடுகிறார்கள்; அவர்களுடைய நடையுடை பாவனைகளையும் உ[illegible]சரிக்க ஆரம்பித்துவிட்டார்கள்; ஐரோப்பியர்களி[illegible] விடுதிகளிலே நுழைந்து தாராளமாக உண்டு [illegible]னைப் பெருக்குகின்றனர். ஹிந்து ஸ்திரீகளுள் [illegible]ம் இப்பொழுதுதான்—மேனாட்டு நாகரீக

வலையிற் பட்டு அந்நியநாட்டாருடனே கலப்பதற்கு ஆரம்பித்திருக்கிறார்களாயினும், பொதுப்பட ஹிந்து ஸ்திரீகள் மேனாட்டுச் சம்பந்தத்தையே வெறுக்கிறார்களென்று சொல்லலாம். அப்படியிருக்க, உயர்ந்த, சிறந்த, வைதிக குடும்பத்திலே பிறந்த ஹிந்து ஸ்திரீகள் சுவாமிகளுடைய மேனாட்டுச் சிஷ்யர்களுடைய மேனாட்டுச் சிஷ்யர்களைச் சிறிதும் வேற்றுமை பாராட்டாது ஏற்றுக்கொண்டார்களென்பது ஆச்சரியமல்லவா? சுவாமிகளுடைய மேனாட்டுச் சிஷ்யர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்குப் பயபக்தியுடனே பணிவிடை செய்துவந்த உத்தம பத்தினியாகிய சாரதா தேவியைப் பார்க்கச் சென்றார்கள். அவ் வம்மையார் இவர்களைப் பார்த்தவுடனே "எனது குழந்தைகாள்!" என்று அருமையாய் அழைத்து, சிறிது நேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்தார். அவர்கள் அவ் வம்மையாரிடத்திலே விடைபெற்றுச் சென்றபொழுது, கோபாலம்மா என்ற விருத்தாப்பிய மிகுந்த அம்மையார் ஒருவரை யிட்டுக்கொண்டு சென்றார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ் வம்மையாரை 'மாதா' என்று அழைப்பது வழக்கம். இவ் வம்மையார் மிகவும் பிடிவாதமான வைதிகத் தன்மை வாய்ந்தவர்; ஆயினும், இவர் சுவாமிகளுடைய மேனாட்டுச் சிஷ்யர்களின் பெருந்தன்மையையும் - தாராள குணத்தையும் - ஸ்வாநுபூதியையும் கண்டு ஆச்சர்யப்பட்டு, அவற்றில் [illegible]பட்டு, அவர்களுடன் சிறிதும் வேற்றுமை பாராட்டாது அவர்களுடன் ஒரே பந்தியில் உட்கார்ந்து உண்ணவும் சம்மதித்தார். ஒரு வாரம் கழித்து இவ்வம்மையார் மறுபடி

யும் இவ் ஐரோப்பியர்களிடம் வந்து மூன்று நாட்கள் தங்கி வசித்தார்.

மார்ச்சுமீ 21-ம் தேதியன்று பேள பஜார் என்ற இடத்திலே கூடிய சாஸ்திர சபைக்கு ஸ்வாமிகள் சென்றிருந்தார். 18-ம் தேதி யன்று நவரத்தின நடனசாலையிலே கூடிய ஒரு சபையில் அக்கிராசனம் வகித்தார். மார்ச்சுமீ 11-ம் தேதி யன்று நட்சத்திர நடனசாலையிலே சகோதரி நிவேதிதா அம்மையார் ஒரு பிரசங்கம் செய்தபொழுது, அக்கிராசனம் வகித்தார். அப்பொழுது, தமது முடிவுரைப் பிரசங்கத்திலே, சுவாமிகள் "இந்தியாவினுடைய ஆத்ம ஞான அபிப்பிராயங்கள் பூர்வ காலங்களிலேயே கிழக்கும் மேற்கும் சென்றிருக்கின்றன," என்றும், "முற்காலத்தில் போலவே இக் காலத்திலும் உலகுக்கு உத்தம ஞானத்தை யளிக்கும் உபதேசகராக வேண்டியது அவசியம்." என்றும், "விரிவும் வெளிப்பாடும் மேனாட்டுக் கொள்கைகளே," என்றும், "மேனாட்டுக் கட்டிடத்துக்கு அஸ்திவாரங்கள்," என்றும், "இந்தியாவானது உயர்வடைய வேண்டுமானால் மேனாட்டைப் போலத் தன்னுடைய கொள்கைகளை வெளிப்படுத்துதற்கு மார்க்கங்கள் தேடிக் கொள்ளவேண்டும்," என்றும், "வெளிப்படும்பொழுது தானே விரிந்துகொள்ளும்," என்றும் கூறி, "ஏ, மனிதா! உன்னிடத்திலே உனக்கு நம்பிக்கை யிருக்கட்டும்; ஈஸ்வரனிடத்திலே உனக்கு நம்பிக்கை யுண்டாவதற்கு அதுதான் மார்க்கம்.........சிரத்தையாகிற கொள்கையை, சர்வ சக்தி

வாய்ந்த நம்பிக்கையைப் போதிப்பதே எனது ஜீவித கால நோக்கமாம்.........அகண்டமான நம்பிக்கையே அகண்டமான ஆசையை உண்டுபண்ணுகிறது. அந்த நம்பிக்கை நமக்கு உண்டாகுமானால், அது வியாசரும் அர்ஜுனனும் இருந்த நாட்களுக்கு—நம்முடைய மனுஷ்யவர்க்கத்து அழகிய கொள்கைகளெல்லாம் போதிக்கப்பட்ட நாட்களுக்கு நமது ஜன சமூக வாழ்க்கையைத் திரும்ப இட்டுச் செல்லும்,'' என்று சொல்லி, வங்காளத்து வாலிபர்களை நோக்கி, ''ஆத்ம சக்தியிலே அகண்ட நம்பிக்கையுடன் கூடி அவர்கள் எளியவர்களுக்காக, துன்புறுத்தப்பட்டவர்களுக்காக, கஷ்டப்படுபவர்கட்காகப் பாடுபட முன் வர வேண்டும்,'' என்று பேசி முடித்தார்.

சுவாமிகளுடைய சரீரம் மறுபடியும் அசௌக்கியத்துக்கு உள்ளாகிவிட்டது. ''சுவாமிகள் உடனே இடம் மாற்ற வேண்டும்,'' என்றும், ''ஆழ்ந்த விஷயங்களைப்பற்றிச் சிந்தித்தல் கூடாது,'' என்றும் வைத்திய சிரேஷ்டர்கள் கூறிவிட்டார்கள். ஆதலால், சுவாமிகள் கல்கத்தாவை விட்டு மார்ச்சுமீ 0-ம் தேதியன்று டார்ஜீலிங் நகர் சென்றார். அங்கு எவ்வித ஆழ்ந்த விஷயங்களிலும் மனத்தைச் செலுத்தாமல் சரீரத்தைச் சுகப்படுத்திக்கொண்டிருக்கவே, சின்னாட்களுக்குள், ''கல்கத்தாவிலே ப்ளேக் வியாதி மும்முரமாக ஆரம்பித்திருக்கிறது,'' என்ற சமாச்சாரம் சுவாமிகளுடைய செவிகட்கு எட்டிற்று. சுவாமிகள் அப்பொழுது முழுதும் சரீர சுகம் அடையவில்லை. ஆயினும், சுவாமிகள்

தமது ஜனங்கள் ப்ளேக் வியாதியினால் பாதி, பயத்தினால் பாதி, மடிந்தும் கஷ்டப்பட்டுக்கொண்டுமிருக்க, தாம் மலைப்பிரதேச நகரிலே சுகத்தை நாடி வசிப்பது நியாயமன்று என்று உணர்ந்து, உடனே கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். ப்ளேக் நோயைப்பற்றிய சட்டங்கள் புதியனவாக உண்டுபண்ணப்பட்டமையால் அவை ஜனங்களுக்குப் பயங்கரமாகத் தோன்றின. பொது ஜனங்கள் மூலைக்கு மூலை பயந்து ஓடினார்கள்; ஆங்காங்குச் சிறு சிறு கலகங்கள் உண்டாயின. இக் கலகங்களை யடக்குதற்குப் போர்வீரர்கள் கொண்டுவரப்பட்டனர். கல்கத்தாவிலே நிலைமை அபாயகரமாயிருப்பதாகத் தோன்றிற்று.

மேமீ 3-ம் தேதி யன்று சுவாமிகள் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்; அன்றையதினமே சுவாமிகள் பொது ஜனங்களுக்கு ப்ளேக் வியாதியைப்பற்றி ஒரு கடிதம் வங்காளி பாஷையிலும் இந்தி பாஷையிலும் எழுத உட்கார்ந்துவிட்டார். 'பொது ஜனங்களுக்கு எவ்விதத்தில் உதவி செய்யலாம்,' என்பதிலே கவலை கொண்டவராகி, கஷ்ட நிவிர்த்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினார்.

ஒரு சகோதர சந்நியாசி, சுவாமிகளைப் பார்த்து "சுவாமி! எல்லாவற்றுக்கும் பணம் வேண்டுமே; எங்கிருந்து பணம் வரும்?" என்று கேட்டார்.

சட்டென்று சுவாமிகள், "பணமா கிடையாது? அவசியம் நேரிட்டால், மடத்துக்காக நாம் புதிதாக வாங்கிய நிலத்தை விற்றுவிடுவோம். சந்யாசிகளாகிய நாம் விருக்ஷங்

களினடியிலே நித்திரை செய்யவும், முன்போலத் தினந் தோறும் பிக்ஷையெடுத்து உண்ணவும் தயாராயிருத்தல் வேண்டும். நமது கண்கட்கு நேரே கஷ்டப்படுகின்ற இவ் ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு நாம் ஆபத்துக் காலத்தில் உதவி செய்ய முடியுமானால் இந்த மடமும் நிலமும் பெரியனவோ?'' என்றார்.

ஆ! ஆ! என்ன ஜீவகாருண்யம்! பொது ஜனங்களின் நன்மைக்காக மடத்தையும் விற்றுவிடத் தயாராய்விட்டார் சுவாமிகள்! ஆனால், 'சுவாமிகள் கஷ்ட நிவிர்த்தி நிதியொன்று சேர்க்க ஆரம்பித்துள்ளார்' என்று கேள்விப்பட்டதுதான், எத்தனையோ ஜனங்கள் ஏராளமாகப் பணம் உதவி செய்ய முன் வந்தார்கள். விஸ்தாரமான பூமியொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டது; அரசாங்கத்தார் ப்ளேக் வியாதி சம்பந்தமாக ஏற்படுத்தியுள்ள சட்ட விதிகளின் பிரகாரம் வியாதியஸ்தர்களைக் கொண்டுவந்து போட்டுச் சிகிச்சை செய்வதற்குத் தனித்தனி கொட்டகைகள் இடப்பட்டன. ஹிந்து ஜனங்களுக்கு எவ்வித ஆக்ஷேபணையும் நேரிடாதபடி, வியாதியஸ்தர்களுக்குச் சகலவித சௌகர்யங்களும் செய்து கொடுக்கப்பட்டன. சுவாமிகளுடைய சிஷ்யர்கள் இராப்பகலாகப் பாடுபட்டுக்கொண்டிருந்தார்கள்; இன்னும் சுவாமிகளுடைய உற்சாகத்தினால் தூண்டப்பட்டவர்களாகி அநேகர் முன் வந்தார்கள். சுவாமிகள் இவர்களைப் பல வகுப்புக்களாகப் பிரித்து, அம்மாநகரின் பற்பல இடங்களுக்கும் அனுப்பி, ஆங்காங்குத்

தெருக்களையும்-சந்து பொந்துகளையும் - மூலை முடுக்குகளையும் சுத்தம் செய்து, ஜனங்களுக்குச் சுகாதார விதிகளைப் போதித்து, அவர்களை நோய் நொடி முதலியவைகள் அண்டாதிருக்குமாறுள்ள மார்க்கங்களை யெடுத்துக் காட்டிக்கொண்டிருந்தார். "ஆபத்பாந்தவனாகிய அருட் கண்ணன் இப்பொழுது சுவாமிகளாக அவதாரித்தானோ" என்று பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களும் கருதத் தொடங்கினார்கள்.

"ப்ளேக் வியாதி இனிமேல் மும்முரமாகப் பரவாது" என்று அநுமானம் உண்டாகி, அரசாங்க அதிகாரிகள் அந் நோய் சம்பந்தமாக ஏற்படுத்தியிருந்த சில கடூரமான விதிகளை மாற்றி ஜனங்களுடைய மனத்துக்குச் சமாதானம் உண்டாகும் வரையில் சுவாமிகள் கல்கத்தாவி லிருந்தார். தமது மேனாட்டுச் சிஷ்யர்களைக் கூட்டிக்கொண்டு சுவாமிகள் ஹிமோத்கிரிக்கு ஒரு பிரயாணம் செய்யவேண்டுமென்று நினைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அல்மோரா நகரிலே வசித்து வந்த ஸேவியரும் அவருடைய மனைவியரும் சுவாமிகளுக்குக் கடிதத்தின்மேல் கடிதமாக அநேக கடிதங்கள் எழுதி, சுவாமிகளை அங்கு வரும்படி அழைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகையால், மேமீ 11-ம் தேதி யன்று, சுவாமிகள் சில நண்பர்களையும் சிஷ்யர்களையும் கூட்டிக்கொண்டு கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டார். சுவாமிகளின் கூட ஸ்வாமி துர்யாநந்தர், ஸ்வாமி நிரஞ்சனாநந்தர், ஸ்வாமி சதாநந்தர்,

ஸ்வாமி ஸ்வரூபாநந்தர், மிஸஸ் ஒல்புல், மிஸஸ் பாட்டேர்ஸன்- இவர் கல்கத்தாவில் அமெரிக்கப் பிரதிநிதியின் மனைவி,— சகோதரி நிவேதிதா அம்மையார், மிஸ் ஜோஸேப்பைன் மாக்லியாட் இத்தனைப் பெயர்களும் சென்றார்கள். சுவாமிகள் அமெரிக்கா சென்ற புதிதிலே, விடுதிகளிலே ஸ்வாமிகளுக்கு இடம் கொடுக்கப்படாமல் மறுக்கப்படவே, இதைக் கேள்வியுற்ற மிஸஸ் பாட்டேர்ஸன் என்னும் மாது உடனே சுவாமிகளைத் தமது கிருகம் இட்டுச் சென்று உபசாரணைகள் புரிந்து, சுவாமிகளுடைய உண்மை யோக்கியதையை அறிந்துகொண்டு, அன்றுமுதல் சுவாமிகளிடத்திலே அளவற்ற மதிப் [illegible]த்துவந்தார். இப்பொழுது சுவாமிகள் ஹிமோத்கிரிக்குச் சென்ற சமயத்திலே இவர் இந்தியாவிலிருந்தா ராதலால் இவரும் கூடச் சென்றார். சுவாமிகள் கல்கத்தாவிலிருந்து புறப்படுகிறவரையில், மிகுந்த சிரமமெடுத்துத்தான் வேலை புரிந்துவந்தார். இதனால் தான் சுவாமிகளுடைய சரீரம் வியாதிக் குட்பட்டது; இதனால்தான் ஸ்வாமிகள் மலைப் பிரதேசங்கட்குச் செல்ல வேண்டி வந்தது.

56-வது அத்தியாயம்

மேனாட்டுச் சிஷ்யர்கள்

அமெரிக்காவிலிருந்து மிஸஸ் ஒல்புல் என்னும் மாதும், மிஸ் ஜோஸேபைன் மாக்லியாட் என்னும் மாதும் பெப்ரவரிமீ 8-ம் தேதியே இந்தியாவுக்கு வந்து சேர்ந்து

விட்டார்கள்; இவர்கள் மார்ச்சுமீ த் துவக்கத்திலே மடத்துக்கென்று புதிதாக வாங்கப்பட்ட நிலத்திலிருந்த பழைய வீட்டில் வாசம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இங்கிலாந்திலிருந்து மிஸ் மார்கரேட் நோபில் என்னும் மாது உற்ருர் உறவினர் உடைமைகள் எல்லாவற்றையும் துறந்து, 'இந்திய ஸ்திரீகளுக்குள் கல்வி பரவும்படி ஒரு வித்தியாலயம் ஏற்படுத்தவேண்டும்,' என்று சுவாமிகள் கருதியிருந்த கருத்தை நிறைவேற்றுதற்காகச் சுவாமிகளுடைய ஆக்ஞையின் பிரகாரம் ஜனவரிமீ 28-ம் தேதியே இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இவர்களுடைய வரவு சுவாமிகளுக்கு அத்தியாநந்தத்தை யளித்தது; இவர்கள் ஹிந்துநாகரிகத்தினுடைய மேன்மையையும் சிறப்பையும் எளிதில் அறிந்துகொள்ளும்படி தக்கவாறு ஒழுங்காகப் பயிற்றுவிக்கச் சுவாமிகள் ஆரம்பித்தார். இவர்களுக்குள்ளே மிஸ் மார்கரேட் நோபிள் என்னும் ஆங்கில மாது சகோதரி நிவேதிதா அம்மையார் எனப் பெயர் பெற்று, இராப்பகலாக இந்தியாவின் முன்னேற்றத்தின் பொருட்டு உழைத்து, பூத உடம்பு அழிந்துவிட்டபொழுதிலும் இந்திய ஜனங்களுடைய ஹிருதயங்களிலே இன்றும் புகழுடம்புடனே விளங்குகிருர்.

சுவாமிகள் இம் மேனுட்டுச் சிஷ்யர்களுக்குப் போதனை செய்துகொண்டிருந்தது, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பேருண்மைகளை யெடுத்துப் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்ததுபோலாம்; ஏனெனில், இம் மேனுட்டுச்

சிஷ்யர்கள்: முக்கியமாகச் சகோதரி நிவேதிதா அம்மையார், சுவாமிகளுடைய கருத்துக்களைத் தங்கள் எழுத்துக்களினு லும் பேச்சுக்களினாலும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பரப்பினார்களல்லவா?

சுவாமிகள் நீலாம்பர முக்கர்ஜியினுடைய உத்தியான மாளிகையிலே வசித்துவந்தபொழுது, அவருடைய ஐரோப்பிய சிஷ்யர்கள் கங்காநதி தீரத்திலே கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டில் வசித்துவந்தார்கள். சுவாமிகள் தினந்தோறும் இவ் ஐரோப்பிய சிஷ்யர்களுடைய வாசஸ்தலத்துக்கு வந்து வெகுநேரம் பல அரிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போவது வழக்கம். சுவாமிகள் அங்கு வந்துவிட்டால், அந்த நேரம் அவர்களுக்குப் புண்ணியகாலமாம், அவருடைய தர்சனம் ஆநந்தாஸ்பதமாம், அவ்விடம் புண்ணிய க்ஷேத்திரமாம், அவருடைய அமிருத மொழிகள் அகண்ட சாக்ஷாத்கார சச்சிதாநந்த சொரூபத்தைப் பிரதிபாதிக்கும் உபநிஷத் வாக்கியங்களாம். சுவாமிகள் அகன்று பரந்த விருக்ஷங்களின் அடியிலே உட்கார்ந்துகொண்டு, தமது ஐரோப்பியச் சிஷ்யர்களைத் தம்மைச் சூழ உட்காரவைத்துக்கொண்டு இந்தியப் பிரபஞ்சத்தின் ரகஸ்யங்களை யெல்லாம் எடுத்தெடுத்துப் போதிப்பார்; இந்தியா தேசத்துச் சரித்திர விஷயமாகப் பல கதைகள் கூறுவார்; கிராமாந்தரங்களிலே வழங்கிவரும் 'அத்தைப்பாட்டி'க் கதைகள் அநேகம் கூறுவார்; ஜாதி விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்து, அதன் ஆந்தரார்த்

தங்களையும் ஆழ்ந்த கருத்துக்களையும் எடுத்துரைப்பார்; இந்தியர்களுடைய நடையுடை பாவனைகளைப்பற்றி விஸ்தரித்துப் பேசுவார். அவ் ஐரோப்பிய சிஷ்யர்களுக்குச் சுவாமிகள் இந்தியாவையே ஒரு பெரிய புராணம் போன்று ஆக்கி அவ்வளவு அலங்காரங்களுடன், அவ்வளவு கவிச் சுவைகளுடன், அனைவரும் பிரமிக்கும்படி அவ்வளவு வாக் சாதுர்யத்துடன் எடுத்தெடுத்து இடைவிடாமல் போதித்துக்கொண்டிருந்தார்; ஆனால், இந்தியா தேசமே எப்பொழுதும் பேசப்பட்டுவந்த போதிலும், ஈற்றில் எல்லாப் பேச்சும் அகண்ட வஸ்துவையே முடிவாகக் கொண்டு ஆநந்தப்பிராப்தி யடைதலையே லக்ஷியமாகக் கொண்டு முடிக்கும்.

சுவாமிகளுடைய போதனைகள் ஒருவிதமாக விசேஷ மாதிரி பெற்றவையே. இந்திய பரம்பரைக் கதைகளையும் அநுபவங்களையும் சுவாமிகள் அங்கொன்று இங்கொன்றாக எடுத்துக் கூற, சிஷ்யர்கள் அவற்றின் அந்யோந்ய சம்பந்தங்களைக் கண்டறிந்துகொள்ளவேண்டும். அழகிய காவியங்களை யெடுத்து அமிருத தாரை போன்று பொழிவார்; இதிகாச புராணாதிகளை யெடுத்தெடுத் துரைப்பார்.

"ஸ்மசானத்திலே பூதப் பிரேத பைசாசங்களின் நடுவே அர்த்தராத்திரியிலே அச்சமென்பது அணுவுமின்றி ஆநந்த நிர்த்தனம் செய்கின்ற சாக்ஷாத் சிவனே இப்பொழுது இந்தியா பூஜிக்கவேண்டிய தெய்வம்," என்று ஒரு நாள் உரைப்பார். இன்னொரு நாள் "அன்பே ஆநந்த

யாய், ஆநந்தமே ஆதி நாராயண சொரூபமாய், அகண்ட கல்யாண குணங்களையுடைய சாக்ஷாத் விஷ்ணுவே கலி காலத்துக்கேற்ற தெய்வம்,'' என்றும், அவரே ஸ்ரீகிருஷ்ண ருகப் பரிபூர்ணவதாரம் செய்து, பகவத்கீதையை மொழி ந்து, பார்த்தனுக்கு மாத்திரமன்று, பாரிலுள்ள ஜீவகோடி கள் அனைவருக்குமே மோக்ஷமார்க்கத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கிவைத்தாராதலால் அந்த பகவத் கீதையே இக்காலத்துக்கேற்ற சாஸ்திரம்,'' என்றும் கூறு வார். மற்றொருநாள், திரிமூர்த்தி சொரூபங்களையும் சம் ஹாரம் செய்து, காலசக்தியையும் விழுங்கி, கனத்ததோர் காளிசக்தியெனப்பெயர்பெற்றுப்பிரகாசிக்கின்ற மஹாமாயி யினுடைய மஹிமைகளையெல்லாம் வாயோயாமல் உரைப் பார். அல்லது, திடீரென்று எந்த விஷயம் மனத்தில் படு கின்றதோ, அது எவ்விஷயமாயினும் சரியே, அவ் விஷ யத்தைக்குறித்து அத்தியற்புதமாகப் போதிப்பார். பாஷை, சரித்திரம், சாஸ்திரம் முதலிய சகல விஷயங்களும் அவருடைய உபதேசங்களில் அடங்கிநின்றன. "எந்த விஷ யம் பேசினாலும், கடைசியாக அந்த விஷயத்தின் முடிவு அகண்ட வஸ்துவே'' என்று அநேக நியாயங்களுடன் ஸ்தாபிப்பார்.

இவரிடம் சிஷ்யர்களாக வந்த மேனாட்டினர்: மற்ற அந்நியர்கள் பாதிரியே இந்தியாவையும் இந்திய ஜனங்க ளுடைய குணங்களையும் லட்சணங்களையும்பற்றிக் கொண் டிருந்த தப்பபிப்பிராயங்களையும், தாங்கள் மேலான ஜாக

ரிகமுடையவர்கள் என்று அவர்கள் கொண்டிருந்த வீண் கர்வத்தையும் சுவாமிகள் நிர்த்தாக்ஷிண்யமாகக் கண்டிப்பார்; ஆனால், அதே சமயத்தில், இந்துஜன சமூகத்தினுடைய ஜீவநாடியைத் தின்று வருகின்ற மூடக்கொள்கைகளையும் வழக்கங்களையும் அப்படியே சற்றும் தயை தாக்ஷிண்யமின்றிக் கண்டிப்பார். "எவ்விதத்திலாயினும் சரியே, பந்தமென்பது கூடாது," என்பதே சுவாமிகளுடைய பீடிகைக் கொள்கையாம். ஐரோப்பியர்கள் எளிதில் அறிந்துகொள்ள முடியாதபடி இந்து மதத்தில் இருந்த கடினமான விஷயங்களை, அவர்களைத் திருப்தி செய்யும்பொருட்டு, மறைத்துவிடமாட்டார்; சாரத்தை யெடுத்துவிட்டுச் சக்கையை மாத்திரம் கொடுக்கவும் மாட்டார்; அத்தகைய கடின விஷயங்களை அப்படியே எடுத்து அவர்கள் முன் வைத்து, அவர்கள் எப்படியாவது அவற்றைக் கிரகிக்கும்படி செய்துவிடுவார். இந்துமத உபாசன மார்க்கங்களும் மேனுட்டினர் அறிவதற்கு மிகக் கடினமா யிருந்தன; சுவாமிகள் அவற்றை அவர்களுக்கு விளக்கிக் காட்டிக்கொண்டே மணிக்கணக்காக வெகுநேரம் பேசுவார். மேனுட்டினர் இந்துக் கொள்கைகளை அநுபவத்தில் கொண்டு வருதல் லகுவான கார்ய மன்றே. ஆனால், சுவாமிகள் மிகவும் பொறுமை வகித்து மேனுட்டுச் சிஷ்யர்களுடைய மனத்தை மெல்ல மெல்ல மாற்றி, கடைசியில் அவர்களையும் கீழ் நாட்டினர்க ளாக்கிவிட்டார். சுவாமிகள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, எவரேனும் குறுக்கே அசம்பாவிதமான கேள்விகள் கேட்டாலும் சுவாமிகளுக்கு ஒரு

பொழுதும் கோப முண்டானதில்லை; ஏனென்றால், மேனாட்டினர் தாம் கூறுவதை அறிந்துகொள்ளுதல் சுலப மன்று என்பது சுவாமிகளுக்கு தெரியும்.

மேனாட்டுச் சிஷ்யர்களிடத்திலே அதிலும் முக்கிய மாக, சகோதரி நிவேதிதா அம்மையாரிடத்திலே சுவாமி களுக்கு அதிக நம்பிக்கை உண்டாயிற்று. சுவாமிகள் மேனாட்டிலே போயிருந்தபொழுது ஒரு இந்துமத போதக ராக இருந்தார்; "உலகிலுள்ள மதங்களெல்லாம் ஒப்பற்ற ஓரிடத்து இட்டுச் செல்வனவே," என்றும், "ஆதலால், ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினரை இகழலாகாது," என்றும் போதிப்பதையே பிரதானமாகக் கொண்டிருந் தார். இங்கு இந்தியாவிலோ, அவருடைய உள்ளத்திலே தேசாபிமானம் கொதித்துப் பொங்கி, அவருடைய நா வழி யாக வழிந்துகொண்டிருந்தது; தமது தாய் நாடு விழுந்து கிடக்கின்றதே யென்று சுவாமிகள், வலையில் அகப்பட்ட சிங்கமானது தப்ப வழியறியாது விழிக்குமா போல, அல் லும் பகலும் அதே கவலையாயிருந்தார். தேச முன்னேற்றத் துக்குக் காலானுசாரணையா யேற்படுகின்ற பல இடையூறு களைப்பற்றி அவர் லக்ஷியமே செய்யவில்லை; ஆனால், அவருடைய சரீரம் நாளுக்கு நாள் அசௌக்கியம் மிகுந்து பலஹீனம் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது. இதுவே அவருக்குப் பெருங்கவலை யாயிற்று. ஆயினும், சுவாமிகள் அமைதியா யிருக்கவில்லை; பெரிய பெரிய வேலைகளெல் லாம் செய்யப் பிரயத்தனம் செய்தார். சரீரம் அவற்றுக்

கெல்லாம் இடங் கொடுக்காததினாலே, மடத்திலே ஏகாந்த வாசம் செய்யும்படி நேரிட்டபொழுதிலும், தமது ஆலோசனைகளை யெல்லாம் அநுபவத்தில் கொண்டுவருதற்குத் தக்க சிஷ்யர்களைத் தயார் செய்தார்; இத்தகைய சிஷ்யர்களிலே பிரதான ஸ்தானம் வகித்தவர், நிவேதிதா சகோதரியார்.

சுவாமிகளுக்குத் தமது மேனாட்டுச் சிஷ்யர்களிடத்திலே வாத்சல்யம் அதிகம். 'அவர்களெல்லோரும் ஒரே அடியாக அவருக்கு விரோதமாகக் கிளம்பியபொழுதிலும் அவர் ஒருபொழுதும் அவர்கள்மீது வெறுப்புக் கொள்ளமாட்டார்,' என்று சொல்லும்படி அவ்வளவு அன்பு சுவாமிகளுக்கு அவர்களிடத்து உண்டாய்விட்டது. சகோதரி நிவேதிதா அம்மையார் லண்டனிலிருந்து இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன், சுவாமிகள் அவ்வம்மையாருக்கு "நீ இந்தியாவுக்காக வேலை செய்தாலும்சரி, செய்யாவிட்டாலும் சரி, நீ வேதாந்தத்தை விட்டுவிட்டாலும் சரி, அதிலேயே இருந்தாலும் சரி, நான் உன் அருகில் மரணபர்யந்தம் நிற்பேன்," என்று ஒரு கடிதத்திலே எழுதினார். ஆ! ஆ! என்ன சிஷ்ய வாத்சல்யம்! சிஷ்யவர்க்கத்திலே இந்தியர்கள் ஐரோப்பியர்கள் என்ற வித்யாசம் அவரிடத்தில் கிடையாது. அவருக்கு எல்லோரும் ஒன்றே.

சகோதரி நிவேதிதா அம்மையார் கல்கத்தாவுக்குவந்து சேர்ந்தது முதல், அவரை இந்தியா நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டு வேலை செய்வதற்குப் பயிற்றுவிக்க வேண்

டிய ஒரு பெரும் பாரம் தம்மீது விழுந்துவிட்டது என்று சுவாமிகள் கருதினர். தமக்குப் பதிலாக இந்தியாவுக்கு வேலை செய்பவர்கள்: "இந்து நடை யுடை பாவனைகளை ட... சரித்து, இந்துக்களின் பரம்பரா வழக்கங்களைக் கடைப் பிடித் தொழுகல்வேண்டும்," என்றும், "இந்திய வழியிலே யே வேலை செய்யவேண்டும்," என்றும் சுவாமிகள் தமது மேனாட்டுச் சிஷ்யர்களுக்கு வற்புறுத்திவந்தார். "இந்தியா வின் பொருட்டு உழைப்பவர்கள் இந்தியர்களுடைய ஆகாத ரம், உடை, சாதாரணமான பழக்கங்கள் எல்லாவற்றையும் அநுசரிக்கவேண்டும்," என்று கூறிவந்தது மன்றியில்லை, சகோதரி நிவேதிதா அம்மையாரைப் பிரஹ்மச்சாரிணியா," யிருக்குமாறு ஆக்ஞையிட்டார். அவ்வம்மையாரை நோக்கி சுவாமிகள், "நீ உனது நினைப்புக்களையும், உனது ஆவசியகங்களையும், உனது நோக்கங்களையும், உனது வழக்கங்களையும் ஹிந்து ஆக்கிக்கொள்ள முயல வேண்டும். அந்தர்முகமாயும் பகிர்முகமாயு முள்ள உனது வாழ்க்கை, ஒரு வைதிகப் பிராஹ்மணப் பிரஹ்மச்சாரிணியினுடைய வாழ்க்கை எப்படி யிருக்கவேண்டுமோ, அப்படியாய்விடவேண்டும். அப்படி யாகவேண்டும் என்று ஆசைமாத்திரம் உனக்குப் போதுமான அளவு உண்டாகிவிட்டால், அப்படி யாவதற்குள்ள மார்க்கம் தானே ஏற்படும். ஆனல், நீ உனது முற்கால வாழ்க்கையை மறந்துவிடவேண்டும்; அதை எப்படியாவது மறக்கடித்துக்கொள்ள வேண்டும்; அதன் ஞாபகம்கூட உனக்கு உண்டாதல் கூடாது," என்றார். "மூடத்தனமாகத் தோன்றுகின்ற கொள்கைகளைக்கூட பக்தி சிரத்...

தையுடனே ஆராய்ந்து பார்க்கவேண்டும்,'' என்று சுவாமி கள் வற்புறுத்துவார். ''நாம் சகல மனிதர்களிடத்தும் அவர் களுடைய கொள்கைகளின் மூலமாகப் பேசவேண்டும்,'' என்பதே சுவாமிகளுடைய வசனம். இந்திய ஆகாரம் உட் கொண்டு இந்திய நடையுடைபாவனைகளை யநுசரிப்பதற்கு ஐரோப்பிய சிஷ்யர்களால் முதலில் முடியவில்லை. பலபல குற்றங்கள் செய்யப்பட்டன; ஆனால், ஸ்வாமிகள் அவற் றைச் சீர்திருத்தி, அவர்களைச் சரியான வழியில் கொண்டு வந்து விட்டுவிடுவார்.

மேனாட்டுச் சிஷ்யர்கள் ''இந்தியா நாகரிகமானது ஆயி ரக் கணக்கான வருஷங்களாக அபிவிருத்தி யடைந்து அளக்க முடியாத ஆழமும் பலமும் பெற்றிருக்கிறதினாலே ஒப்புவமையற்றது,'' என்று அறிந்துகொண்டார்கள். ''இந்தியாவானது எழ்மையில் விழுந்து கிடந்தபொழுதிலும் சுத்தமா யிருக்கிறது,'' என்றும், ''போகமே மதமாயுள்ள மேனாடுகளில் வறுமையானது பாபத்தைக் குறிப்பிடுவது போலல்லாது, இங்குத் தியாகமே மதமாயிருத்தலினாலே வறுமை குற்றமன்று,'' என்றும் அவர்கள் கண்டுகொண் டார்கள். இன்னும் இவர்கள் பளிச்சுப் பளிச்சென்று மின் னும்படி துலக்கிய குடங்களிலே ஜலங்கொண்டு தலையி லேந்தி கங்காதீரத்திலிருந்து திரும்பிவரும் ஸ்திரீகளையும், கங்கையில் இறங்கி நின்றுகொண்டு நெற்றியிற் கைகுவித்து சூர்யப் பிரணமம் செய்யும் நூற்றுக்கணக்கானவர்களையும், பாட்டுக் கவிதைகள் பாடித் தெருவிலே பிச்சையெடுப்

பவர்களையும், சரீராத்தியந்தமும் பஸ்மோத் தூளிதராய்த் தெருவிலே திரியும் சஞ்சார சந்யாசிகளையும் பார்க்கப் பார்க்க, அத்தியாச்சர்யமா யிருந்தது. சுவாமிகளுக்கு ஹிமோத்கிரிமுதல் சேதுபர்யந்தம் புண்ணிய பூமியும் அற்புத பூமியுமேயாம். இன்னும் சுவாமிகள் மேனாட்டுச் சிஷ்யர்களை யிட்டுக்கொண்டு இந்தியாவிலே சஞ்சாரம் செய்யப் புறப்பட்ட காலத்திலே தேசத்தினுடைய அழகுகளையும் அருமைகளையும் எடுத்துரைத்துவந்தார்.

இந்தியாவைப்பற்றி எல்லாம் அறிந்துகொள்வதென்றால் ஒரு நாளில் முடியுமா? எத்தனையோ வருஷங்கள் வேண்டுமே. ஆயினும், சுவாமிகள் அவர்களுக்கு இந்தியாவைப்பற்றிய அறிவெல்லாவற்றையும் வெகு சீக்கிரத்திலே யுணர்த்திவிட்டார். தமது இந்திய சிஷ்யர்களையும் மேனாட்டுச் சிஷ்யர்களையும் ஒற்றுமைப் படுத்தவேண்டுமென்று கருதி, சுவாமிகள் திடீரென்று வேண்டுமென்றே, எல்லோருக்கும் முன்னிலையில் ஆசார விரோத மெனப்படுகின்ற ஏதேனும் ஒரு செய்கையைச் செய்துவிடுவார். மேனாட்டுச் சிஷ்யர்களை உண்மையான பிராஹ்மணர்க ளென்றும் க்ஷத்திரியர்களென்றும் கூறி, அத்தியந்த உபசாரம் செய்வார்; அவர்கள் உண்டு குடித்து மிகுந்த சேஷத்தைத் தாம் உண்டு குடிப்பார்; அவர்கள் ஆக்கிய ஆகாரத்தை எல்லோரும் அறிய அதிக ஆவலுடன் உண்பார்; தமது சகோதர சந்யாசிகளையும் அப்படியே செய்யும்படி செய்வார் முதலில் சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளுக்குக்

கொஞ்சம் கூச்சமும் வெறுப்பும் இருந்தது; ஆனால், சுவாமிகளுடைய சம்சர்க்கத்தினுல் அக் கூச்சமும் வெறுப்பும் மெல்ல மெல்ல நீங்கிவிட்டன. தமது சிஷ்யர்கள் சகோதரத்துவ பந்தத்திலே கட்டுப்பட்டுக்கொள்ளவேண்டுமென்பதே சுவாமிகளுடைய சங்கற்பம்.

இன்னு மொன்று. சுவாமிகள் தமது சிஷ்யர்களின் மனோ வாசனைகளை யறிந்துகொண்டு அவரவர்களுடைய பரிபாகத்துக் கேற்றவண்ணமே போதித்துவந்தார். சிஷ்யர்களுடைய ஸ்வதந்திரங்களைத் தடைப்படுத்துவதில் சுவாமிகளுக்குச் சற்றும் பிரிய மில்லை. அவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படியே நடந்து, தப்பிதங்கள் செய்தாவது அநுபவமடையும்படி சுவாமிகள் அவர்களை விட்டுவிடுவார்; சில சமயங்களில் அவர்களுக்குச் சுவாமிகள் கடோமான தபோ மார்க்கங்களை விதித்துவிடுவார்; "அப்படி யிப்படி இருந்தால் முடியாது; ஜாக்கிரதை, உலகப் பிரமை யெல்லாம் போய்விடவேண்டும்; பிரபஞ்ச மயக்கம் அடியோடு களைந்தெறியப்பட்டு விடவேண்டும்; பஞ்சேந்திரியங்களையும் பந்தித்துவிடவேண்டும்; பிரபஞ்சமானது சப்த ஸ்பர்ச ரூப ரச கந்தத்திலே யுற்பத்தி; ஆதலால், இந்திரிய வியாபாரப் போக்கை வெட்டிவிடுங்கள்; இந்திரிய வியாபாரம் முழுதும் விஷமே; அதனிடத்து ஆசை வைக்கலாகாது," என்று ஆக்ஞாபிப்பார். "ஐரோப்பிய நடை யுடை பாவனைகளை யநுசரிக்கின்ற இவர்கள் தமது உபதேசங்களைப் பின்பற்றி நடக்க முடியுமா? பின்பற்றி நடக்கிறுர்களா?"

என்று கண்டறிந்துகொள்ளும்பொருட்டு, அடிக்கடி அவர்களைச் சோதனை செய்து பார்த்தார். தாம் போதித்தவண்ணமே ஒழுகி வருதல் கண்டு, "பரிபக்குவ மடைதற்கு ஜனனம் ஒருபொழுதும் இடையூறு அன்று; சம்சர்க்கமே சகலத்துக்கும் காரணம்" என்று தமக்கிருந்த நம்பிக்கை உண்மையே என்று அறிந்துகொண்டார்.

1898-ம் வருஷம் முழுதும் சுவாமிகள் அநேகமாகத் தமது மேனாட்டுச் சிஷ்யர்களைப் பயிற்றுவிப்பதிலேயே காலத்தைக் கழித்தார். அச் சிஷ்யர்களுள் சிலர் காலகதியில் சமாதியடைந்துவிட்டார்கள்; சிலர் இன்னும் இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் எல்லோருமே சுவாமிகளுடைய ஆக்ஞையின்படி தவறாமல் நடந்து வந்திருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை; இம் மேனாட்டுச் சிஷ்யர்களுள் ஒருவர் சுவாமிகளை நோக்கி, "சுவாமி! தாங்கள் என்னைத் தடுத்தாண்டு என்னை ஈடேற்றுவித்ததற்கு நான் வெகுவாகக் கடமைப்பட்டுள்ளேன்; நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?" என்று கூறினார்.

ஸ்வாமிகள்: "அம்மையே! இந்தியாவினிடத்து நீ உனது மனப்பூர்வமான அன்பு செலுத்து; அதுவே எனக்கு வேண்டுகோள்," என்றார். இவ் வாக்ஞையை மேனாட்டுச் சிஷ்யர்கள் அனைவரும் தங்களெல்லோருக்கும் இட்ட ஒரு பொது ஆக்ஞையாகக் கொண்டு, இந்தியாவினிடத்துப் பரிபூர்ணமான அன்பு செலுத்தி, ஊழியம் செய்துவந்திருக்கிறார்கள்.

57-வது அத்தியாயம்

நயன ஸ்தலம்

இவர்கள், அதாவது சுவாமிகளும் அவருடைய மேனாட்டுச் சிஷ்யர்களும், புதன்கிழமையதினம் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டு வெள்ளிக்கிழமையதினம் ஹிமோதகிரியின் ட ர்வையிலே வந்து சேர்ந்தார்கள். போகும் வழியிலே பாடலிபுரம், காசி, லக்ஷ்மணபுரி முதலிய நகரங்களையெல்லாம் ரெயில் வண்டி கடந்து சென்றபொழுது, சுவாமிகள் அந் நகரத்துப் பெருமைகளையும் அந் நகரங்களிலே அரசாண்ட அரச குடும்பங்களின் மேன்மைகளையும்பற்றிச் சவிஸ்தாரமாக எடுத்துச் சொல்வார். ஆங்காங்குப் பறக்கும் அழகிய மயில்களைப் பார்த்தவுடனே சுவாமிகள் ரஜபுத்திரர்களுடைய சரித்திரத்தை யெடுத்துக் கூற ஆரம்பித்துவிடுவார். யானை அல்லது ஒட்டகங்களைப் பார்த்தவுடனே சுவாமிகளுக்குப் பூர்வீகப் போர்க் களங்களின் ஞாபகம் வந்துவிடும். ஆங்காங்குக் காணப்படும் வாய்க்கால்களும் வயல்களும் சுவாமிகளுக்கு குடியானவர்களுடைய உண்மைப் பெருமையையும் அவர்கள் இப்பொழுதிருக்கும் நிலைமையையும், பஞ்சம் நோய் முதலியவற்றையும் நினைப்பூட்டிவிடும். சுவாமிகள் இவற்றைப்பற்றிக் கூற ஆரம்பித்துவிட்டால், சுவாமிகளுக்குத் தாம் கால் நடையாக சஞ்சாரம் செய்த காலம் ஞாபகத்திற்கு வந்துவிடும். அப்பொழுது அவருடைய கண்களிலே ஒருவித ஒளி வீசும்.

இவர்கள் வடமேற்கு மாகாணங்களைக் கடந்து செ
கொண்டிருக்கையில், அம் மாகாணத்தை ஆண்ட ஆங்கில
மாகாணபதி யொருவருடைய மேன்மைக் குணங்களைப்
பற்றி யெடுத்துரைத்தார். "மற்றவர்களைப்போலல்லாமல்
அவர் பலமான பொதுஜன அபிப்பிராயம் பரிபக்குவமடை
யாத கிழக்கத்திய தேசங்களிலே தனி மனிதர்களுடைய
அரசாட்சி அவசியம் என்பதை அறிகிறார்; எந்த ஆஸ்பத்
திரிக்கும் எந்தக் கல்லூரிக்கும் எந்த உத்தியோகஸ்தலத்
தும் அவர் பரிசோதனை செய்வதற்கு என்று வருவாரோ
என்பது தெரியாது. மிக மிக எளியவனும் அவரை நேரே
கண்டுவிட்டால் அவரிடத்திலே தமக்கு நியாயம் கிடைப்
பது நிச்சயமென்று நம்புகிறான்," என்றார் சுவாமிகள்.

"பொது ஜன அரசாட்சியைப் பார்க்கிலும் ஒருவர்
அரசாள்வதே மேல்," என்று சுவாமிகள் அபிப்பிராயம்
கொண்டிருந்தார். சுவாமிகள் தமது மேனாட்டுச் சிஷ்யர்க
ளிடத்திலே "எத்தனையோ ஏழை ஜனங்கள் தங்களுடைய
உடைமைகளை யெல்லாம் விற்றுவிட்டு மஹாராணியிடத்தி
லே நியாயந் தேடிச் செல்ல முயன்று முடியாது ஆங்கில
அரசாட்சியின் முதற்காலத்திலே தவித்தார்கள்," என்று
பல திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டினார்.

மேமீ 13-ம் தேதி யன்று இவர்கள் நயன ஸ்தலம்
வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகளுடைய அரு
மைச் சிஷ்யராகிய கேத்ரி மஹாராஜா அந்தப் பிரதேசத்தி
லே வசித்து வந்ததினாலே, அவரைப் பார்க்கும் பொருட்டுச்

சுவாமிகள் அங்குத் தங்கினர். கேத்ரி மஹாராஜாவுக்குச் சுவாமிகளைப் பார்த்தவுடனே உண்டான சந்தோஷத்துக்கு ஒரு அளவேயில்லை. சுவாமிகள் அவ் வரசரைத் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுக்கெல்லாம் பழக்கப்படுத்தினர். இன்னும் இவ்விடத்திலே ஒரு மகம்மதிய கனவான் நிஷ் களங்கமான ஹிருதயத்துடனே அத்வைதாநுபவத்தை யுடைத்தாயிருந்தவர் சுவாமிகளைச் சந்திக்கும்படியான பாக்கியம் பெற்று, சுவாமிகளின் அசாதாரணமான ஆத்மீக சக்திகளையும் தேஜஸையும் கண்டு ஆச்சர்யமடைந்து, சுவாமிகளை நோக்கி, "ஸ்வாமி! பிற்காலத்திலே எவரேனும் தங்களை ஈசுவரனுடைய அவதார புருஷரென்று கூற முன் வந்தால், மகம்மதிய மதத்தினனாகிய நான்தான் அப்படிக் கூறுதற்கு முதலாமவன்," என்றார்.

சுவாமிகளுடைய மனம் இதைக் கேட்டு உருகிவிட் டது. இந்த மகம்மதிய கனவான் சுவாமிகளிடத்திலே பக்தி மிகுந்தவராய், அவருடைய சிஷ்யர்களுள் ஒருவராகி மகம்மதாநந்தர் என்னும் நாமம் வகித்து, சுவாமிகளுடைய கருத்துக்களைப் பரப்புவதிலே கண்ணும் கருத்து முடையவ ரானார்.

சுவாமிகளும் மற்றவர்களும் "கண்ணேரி" என்ற பெயருள்ள ஏரிக்கரையிலே யிருந்த க்ஷேத்திரங்களைத் தரி சிக்கச் சென்றபொழுது, அந்த க்ஷேத்திரத்துக்கு வந் திருந்த இரண்டு தாசிப்பெண்கள் சுவாமிகளுடைய பெரு மையைப்பற்றி முன்னரேயேகேள் விப்பட்டுள்ளார்களாத

லால், 'சுவாமிகளைப் பார்க்கவேண்டும்,' என்று அவா மிருந்தவர்களாய், அவருடைய ஐரோப்பிய சிஷ்யர்களிடத்திலே சுவாமிகளுடைய இருப்பிடத்தைப்பற்றி விசாரிக்க, அவ் வைரோப்பிய சிஷ்யர்கள் இந்தத் தாசிப்பெண்களை உயர் குலத்து ஸ்திரிகளென்று நினைத்துச் சம்பாஷணையாரம்பித்தார்கள். கோவிலிலே சுவாமி தரிசன மானவுடனே ஐரோப்பிய சிஷ்யர்கள் தங்களைக் கண்டு சம்பாஷித்தவர்கள் தாசிப் பெண்கள் என்று தெரிந்துகொண்டு, சுவாமிகள் தாசிகளைப் பார்க்கலாகாது, என்று சுவாமிகளிடத்திலே வற்புறுத்திக் கூறியும், சுவாமிகள் கேட்காது அந்தத் தாசிப் பெண்களுக்குத் தரிசனம் கொடுக்க இசைந்தார். அந்தத் தாசிப் பெண்களுக்குச் சுவாமிகள் பல நன்மொழிகள் புகன்று, அவர்களுடைய நடத்தையைப்பற்றிச் சிறிதும் நிந்தனையாகக் கருதாமல், "அவர்களுக்கும் ஆநந்தப் பிராப்தி யுண்டாகும்," என்று அமிருத வசனங்கள் கூறினார்.

இன்னும் சுவாமிகள் நயனஸ்தலத்திலே யிருந்தபொழுது, பிரக்கியாதி பெற்ற பல மனிதர்கள் சுவாமிகளைக் கண்டு சம்பாஷிக்க வந்தார்கள்; இச் சம்பாஷணைகளி லொன்றில் ராஜா ராம மோஹனராய் என்னும் மஹாத்மாவைப் பற்றிப் பேசினார். மதவிஷயமாக மேனாட்டிலே பொது ஜனங்களுக்கு அறிவு மிகச் சொற்ப மென்பதைக் குறிக்கும்படி வேடிக்கைக் கதை பொன்று கூறினார்.

ஒரு நாள் ஒரு பாதிரி ஒரு சுரங்கத்தைப் பார்வையிடச் சென்றார்; அப்பொழுது அங்குக் கூடிய கூலியாட்

கிளை யொன்று சேர்த்து அவர்களுக்குக் கிறதவவேத புத்தகத்தின் பேருண்மைகளைப் போதிக்கக் க தி, "உங் களுக்குக் கிறிஸ்துவைத் தெரியுமா?" என்று கே. டார்.

அவ் வேலையாட்களுள் ஒருவன் "கிறிஸ்துவினுடைய நம்பர் என்ன?" என்று கேட்டான்.

கிறிஸ்துவினுடைய நெம்பர் இன்னதென்று பாதிரி சொல்லக் கூடுமானல், அவன் எப்படியாவது வேலையாட் களுக்குள்ளே கிறிஸ்துவைக் கண்டு பிடித்துவிடுவான். மதவிஷயத்திலே மேனுட்டுப் பொது ஜனங்களுக்கு அறிவு சற்றும் போதாதென்பது சுவாமிகளுடைய அபிப்பிராயம். மேனுட்டு ஜனங்களுக்குள்ளே நடைபெறும் வியபசாரம் இந்தியா தேசத்தவனுக்கு ஒரு பெரு நரகம் போலத் தோன்றும். ஆசியாக்கண்டத்தவன், எவ்வளவு இழிந்த நிலைமையிலிருப்பவனுயினும் சரியே, லண்டன்மாநகரம் ஹைடிபார்க் என்னும் இடத்தைப் போய்ப் பார்ப்பா னுபின் ரௌரவாதி நரகங்கள் அவனுக்கு மேலானவை யாகவே காணப்படும். "மேனுட்டிலே யுள்ள தாழ்ந்த வகுப்பு ஜனங்கள் சாஸ்திர ஞானம் இல்லாதவர்களும் வியபசாரிகளுமா மென்பது மாத்திர மன்று, மூர்க்கர்க ளும் இழிகுணத்தினர்களுமாம்.

ஒரு நாள் நான் எனது கிழக்கத்திய உடை தரித்து லண்டன்மாநகரின் தெருக்களினூடே சென்றுகொண் டிருக்கையில், ஒருகரிவண்டியோட்டுபவன் எனது விநோத

உடையைப் பற்றி விபந்து பரிகாசமாக ஒரு கரிக்கட்டியை எடுத்து என்மீது எறிந்தான்; நல்ல வேளையாய் அது மேலே படாமல் எனது காதினருகே சென்றது," என்று சுவாமிகள்.

இவ்வூரிலே சுவாமிகள் தமது பள்ளித் தோழராகிய போகேசச் சந்திரதத்தர் என்பவரைச் சந்தித்தார். போகேசர் சுவாமிகளை நோக்கி, "சுவாமி! நன்றாகப் படித்துத் தேர்ந்த வாலிபர்களை இங்கிலாந்துக்குக் கலெக்டர் பரீட்சைக்குப் படிக்கும்பொருட்டு அனுப்புதற்கு நிதி சேர்த்து அப்படி யனுப்புதல் நலமல்லவா? அங்கே படித்துத் தேர்ந்து வந்தவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வந்து பல விதத்தினும் இந்தியா முன்னேற்ற மடைவதற்கு அநுகூலமாயிருக்கமாட்டார்களா?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள்: "போகேசா! "அந்த யோசனை எனக்குப் பிடிக்கவில்லை. இவர்கள் இங்கிலாந்துக்குச்சென்றுவிட்டால் அபிப்பிராயங்களிலே மாறுத லடைந்து, தேசாபிமான மிழந்து, திரும்பி வந்தவுடனே ஐரோப்பியர்களுடனேயே சகவாசம் செய்ய விரும்புவார்கள். இது நிச்சயம். இவர்கள் ஸ்வயநலப் புலிகளாகி ஐரோப்பியர்களுடைய நடையுடை பாவனைகளை யநுசரித்துவிடுவார்கள்; தேச கார்யம் அவர்களுடைய ஞாபகத்தில் ஏறவே ஏறாது," என்று மறுமொழி கூறினர்.

இந்தியர்கள் உறங்குகிறார்களே, தங்கள் தேச வீழ்ச்சியைச் சிறிதும் கவனிக்கிற தில்லையே, உற்சாக மில்லை

யே, ஊக்க மில்லையே," என்று அவர் சொல்லிக் கொண்டே வந்தபொழுது அவருடைய தொண்டை கம்மிற்று; கண்ணீர் ஆறு யோடிற்று.

அப்பொழுது யோகேசர் என்ற பெயரையுடைய பள்ளித்தோழர் மாத்திர மன்று, அப்பொழுது ராமபுரம் சமஸ்தானக் கல்லூரியிலே தலைமை யுபாத்தியாயரா யிருந்த பிரஹ்மாநந்த ஸிங். எம். ஏ. அவர்களும் அங்கு இருந்தார். யாகேசர் சுவாமிகளுடைய தேசாபிமானத்தைக் குறித்துப் பின் வருமாறு எழுதுகிறார்:—

"நான் எனது ஜீவிதத்திலே அந்தக் காட்சியை யொருபொழுதும் மறக்கமாட்டேன். அவர் ஒரு தியாகியே; அவர் உலகைத் துறந்துவிட்டார்; ஆயினும், அவருடைய ஆத்மீக அந்தரங்க ஆழத்திலே இந்தியாவானது இருந்துகொண்டே யிருந்தது. இந்தியாவே அவருடைய அன்பு. அவர் இந்தியாவை நினைத்துப் பரிதபித்தார், இந்தியாவுக்காக அழுதார், அவர் இந்தியாவுக்காக மரித்தார். இந்தியாவானது அவருடைய மார்பிலே துடித்துக்கொண்டிருந்தது, அவருடைய நாடிகளிலே அடித்துக்கொண்டிருந்தது, அவருடைய ஜீவிதத்திலேயே வேறு பிரிக்கப்படாதபடி பந்திக்கப்பட்டிருந்தது..................."

58-வது அத்தியாயம்

அல்மோரா

நயன ஸ்தலத்திலிருந்து சுவாமிகளும் மற்றவர்களுமாக அல்மோராவுக்குப் புறப்பட்டார்கள். புறப்படும்பொழுது மாலை நெருங்கிவிட்டதாதலால், காட்டின் நடுவிலே சென்றுகொண்டிருந்தபொழுது இருண்டுவிட்டது. ஆயினும், லாந்தர்களும் தீவர்த்திகளு மெடுத்துக்கொண்டு வழி தேடிச் சென்றுகொண்டே போகக் கடைசியாக வழிப்போக்கர் சத்திர மொன்று தென்பட்டது. வழக்கம்போல ஸ்வாமிகள் வழியெல்லாம் வேடிக்கையிலும் விளையாட்டிலும் கழித்துவந்தது மன்றியில், சுற்றிலும் தென்பட்ட இயற்கைக் காட்சிகளைப்பற்றி வர்ணித்துக்கொண்டும் சென்றார்.

சத்திரத்திலே இறங்கினவுடனே சுவாமிகள், தம்முடன் கூட வந்தவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்கள் செய்துகொடுப்பதிலும் சமையலை மேல்பார்ப்பதிலும் கண்ணும் கருத்துமாயிருந்தார். இங்கிருந்து புறப்பட்டு மூன்றும் நாள் சுவாமிகள் அல்மோரா வந்து சேர்ந்தார். அல்மோராவில் தாம்ஸன் கிருகம் என்ற இடத்தில் வசித்து வந்த ஸேவியரும் அவரது மனைவியரும் சுவாமிகளைத் தங்களிடத்திலேயே அதிதியாயிருக்கும்படி கேட்டுக்கொள்ள, சுவாமிகள் சம்மதித்தார்; மற்ற மேனாட்டுச் சிஷ்யர்களு அருகேயிருந்த ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு அமர்த்தி

கொண்டு அதில் வசித்துவந்தார்கள். தினந்தோறும் சுவாமிகள் அதிகாலையிலே எழுந்திருந்து தமது சகோதர ...ாசிகளுடனே வெளியே உலாவச் சென்று, பின்னர் தமது மேனாட்டுச் சிஷ்யர்கள் இறங்கியிருந்த வீட்டுக்கு வந்து, அங்கேயே காலைப்போஜனம் உண்டுவிட்டு, பல விஷயங்களைப்பற்றியும் வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். இங்குத்தான் சுவாமிகள் சகோதரி நிவேதிதா அம்மையாரைத் தமது பரோபகார கைங்கர்யத்துக்குப் பக்குவப்படுத்தி, அவருக்குப் பரிபூர்ண பயிற்சியளித்தது. சில சமயங்களிலே அவருடைய மேனாட்டுச் சிஷ்யர்கள் சுவாமிகளை மாலையில்கூடச் சந்தித்துச் சம்பாஷிப்பார்கள்.

இக்காலத்திலே சகோதரி நிவேதிதாவுக்கு இந்தியாவைப்பற்றி ஒருவித அருவருப்பு இருந்தது; 'ஆங்கிலேயர்கள்தான் சிறந்தவர்கள்,' என்ற எண்ணம் இருந்தது; ஆங்கிலேயனுக்கு இயற்கையாக உள்ள பிடிவாதகுணம் பலமாக இருந்தது.

சுவாமிகள் அவ் வம்மையாரை நோக்கி, "நீ எந்த ஜன சமூகத்தைச் சேர்ந்தவள்?" என்று கேட்டார்.

"நான் ஆங்கில ஜனசமூகத்தைச் சேர்ந்தவள்," என்று அவர் கர்வத்துடனே பதிலுரைத்தார்.

ஸ்வாமிகள் இத்தகைய கர்வ மறுமொழியை எதிர்பார்க்கவில்லை; சுவாமிகளுக்கு ஆச்சர்ய முண்டாயிற்று.

ஆயினும், சுவாமிகள் தமது மனக்கிலேசத்தை வெளிப்ப காட்டாது, அவ் வம்மையாரை ஒரு நிமிஷம் விழித்துப் பார்த்தார். அதுமுதல் சுவாமிகள் சகோதரி நிவேதிதாவினுடைய மனத்தை அடியோடு மாற்றுவதிலேயே பிரயாசைப்பட்டார். சகோதரி நிவேதிதாவுக்கு முதலில் சிறிது கஷ்டமாயிருந்தது. ஆனால், சுவாமிகள் அவ் வம்மையாருக்கு இது தான் கருத்து, இது தான் கொள்கை யென்று ஒன்றையும் ஸ்திரப்படுத்தி ஆக்ஞாபிக்கவில்லை. அவ் வம்மையாருடைய மனத்திலே ஒரு புறம் குத்தி மறுபுறம் உருவிப்போகும்படியாகவும் வாக்சாதுர்யமாகவும் பே... வாரே யொழிய, இப்படித்தான் இருக்கவேண்டு மென் சுவாமிகள் ஒருபொழுதும் ஆக்ஞாபித்ததில்லை.

ஒருதரம் சுவாமிகள் அவ் வம்மையாரை நோக்கி, "உண்மையில் உன்னுடையது போன்ற தேசாபிமானம் பாபமேயாம்! நீ பார்க்கவேண்டுமென்று நான் விரும்புவதெல்லாம் பெரும்பான்மை ஜனங்களுடையவும் செய்கைகள் ஸ்வயநல வெளிப்பாடுகளேயாம் என்பதுதான், 'ஒரு ஜாதியாரெல்லாரும் தேவர்களே.' என்றுள்ள எண்ணத்தை வைத்துக்கொண்டு எப்பொழுதும் எதிர்க்கிறாய். அவ்வளவு பிடிவாதமான அறிவீனம் கொடுமையேயாம்," என்றார்.

சுவாமிகளிடத்திலே விசேஷ லக்ஷணம் ஒன்று இருந்து; அது என்னவென்றால், தாம் ஒரு தேசத்தில் அல் ... ஒரு ஜனசமூகத்தின் மத்தியிலிருக்கும்பொழுதே

அங்கு நடைபெறும் தீமைகளை யெடுத்துக் கடோமாகக் கண்டிப்பார்; ஆனால், அங்கிருந்து போய்விட்டால், அங்குள்ள நற்குணங்களையே அவர் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார். மெல்ல மெல்ல சகோதரி நிவேதிதா தமது ஆங்கிலப் பிடிவாதத்தை நழுவவிட்டு, ஹிந்துவாக ஆரம்பித்துவிட்டார். நிவேதிதா சகோதரி சுவாமிகள் கூறியதை யெல்லாம் அப்படி யப்படியே வாங்கி விழுங்கி விடாமல் யோசனை செய்து தர்க்கித்துத் தெளிந்து பின்னர் ஏற்றுக்கொண்டதுபற்றிச் சுவாமிகளுக்கு மிகமிகச் சந்தோஷம். "நானும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே பெருங் கலகம் செய்து தர்க்கித்துத்தான் தெளிந்தேன்" என்றார் சுவாமிகள் அவ் வம்மையாரிடத்தில்.

ஒரு நாட்காலையிலே சுவாமிகள் தமது மேனாட்டுச் சிஷ்யர்களிடம் வந்ததும் "மேனாட்டு நாகரிகத்து லக்ஷியம் உண்மையே," என்றும், "கீழ் நாட்டு நாகரிகத்து லக்ஷியம் பரிசுத்தமே," என்றும் கூறி, "ஹிந்துக்களுடைய விவாக வழக்கங்கள் இந்த லக்ஷியத்தை ஆதாரமாகக் கொண்டே ஏற்பட்டிருக்கின்றன," என் [illegible] பேசி, ஈற்றில் தத்துவ ஞானத்தி[illegible] [illegible] ார்.

இன்னுமொருநாள் கா[illegible] பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர என்ற நான்கு ஜாதிகளையும்பற்றிப் பேச ஆரம்பித்து, அப்படியே "நான்கு ஜனசமூகங்கள் இந்த நான்கு ஜாதிகளையும் குறிப்பிடுகின்றன," என்று பேசி, "ஹிந்து ஜனசமூகம் பிராஹ்மணர்கள்," என்றும்,

10 (c)

"ரோமர்கள் க்ஷத்திரியர்கள்," என்றும், "ஆங்கிலேயர்கள் வைசியர்கள்" என்றும், "சூத்திரர்கள, அதாவது தொழிலாளிகள் அமெரிக்கர்கள்," என்றும் பிரித்துத் "தொழிலாளிகள் மேம்பாடு அடையப்போவது அமெரிக்காவிலேயேயாம்," என்று கூறினர்.

சுவாமிகள் அடிக்கடி ஹிந்துதேச சரித்திரத்தைப் பற்றிப் பேசுவார்; மொகலாய சக்கரவர்த்திகளுடைய ஆட[illegible]பரத்தையும் பெருமையையும்பற்றி அளவில்லாத ஆர்[illegible] [illegible]ரிப்பார்; டில்லி, ஆக்ரா இந்நகர்களைப்பற்றி வர்ணிக்[illegible] ஆரம்பித்துவிட்டால், கேட்பவர்களுக்குப் பொழுது [illegible]வதே தெரியாது. ஆக்ராவிலேயுள்ள தாஜ் மஹால் எ[illegible] கட்டிடத்தைப்பற்றி—உலகிலுள்ள ஒன்பது ஆச்சரியங்க[illegible]ளிலே இது ஒன்று அல்லவா?— "மங்கல்—பின்னும் மங்கல், அங்கே—ஒரு கல்லறை" என்று இரண்டொரு வார்த்தைகளிலே எவ்வளவோ பொருள் படும்படி வர்ணித்தார்.

ஷாஜஹான் என்ற மொகலாயச் சக்கரவர்த்தியைப் பற்[illegible] ஆரம்பித்து, உற்சா[illegible] "[illegible] பெருமையே யாவன்; சரித்[illegible] அவனுடைய வம்சத்[illegible] [illegible]த்திரத்திலே அவனுக்கு அழகைப்பற்றியிருந்த உணர்ச்சிக்கு ஒப்புவமையே யில்லை. அவனே ஒரு சித்திர வேலைக்காரன்! அவனால் துலக்கப்பெற்ற ஒரு எழுத்துப் பிரதியை நான் பார்த்திருக்கிறேன்; அது இந்தியாவினுடைய சித்திர நிதிகளுள் ஒன்று. என்ன சமர்த்து!" என்பார்.

அவர், ஆக்பர் சக்கரவர்த்தியைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டால், அவருடைய குரல் கம்பிவிடும்; கண்களிலே நீர் ஒழுகும்.

ஒரு சமயத்திலே சீனதேசத்தைப்பற்றிப் பேசினார். "சீனதேசம் உலகத்துப் பொக்கிஷமாம்," என்றும், சீன க்ஷேத்திரங்களின் கதவுகளிலே பழைய வங்காளி (குடில) அக்ஷரங்களிலே ஏதோ வரையப்பட்டிருந்தது கண்டு தாம் ஆச்சர்யப்பட்டதாகவும் கூறினார்.

திடீரென்று இத்தாலி தேசத்தைப்பற்றிப் பேச்சு எழுந்துவிடும். "ஐரோப்பிய தேசங்களிலே மிகமிகச் சிரேஷ்டமானது, மதமும் சித்திரமும் வளர்ந்த பூமி; சக்ராதிபத்திய அமைப்புக்கும், மாஜினி என்ற தேசாபிமான வீரனுக்கும் பிறக்க இடங் கொடுத்த பூமி;—எண்ணங்கள், நாகரீகம், ஸ்வதந்திரம் இவற்றுக்குத் தாய்!"

ஒரு நாள் ஸிவாஜியைப்பற்றிச் சம்பாஷணை யாரம்பித்தது. ஸிவாஜி சந்யாசி வேடம் பூண்டு ஒரு வருஷம் முழுதும் அலைந்து கடைசியாக ராயகிரியாகிய தன்னுடைய ராஜ்ய ஊருக்குத் திரும்பி வந்த சங்கதியைச் சொல்லிக்கொண்டே வருகையில், சுவாமிகள் "சந்யாசி எங்கே தனது மஞ்சள் உடைக்குள்ளே இன்னொரு ஸிவாஜியை ஒளித்து வைத்திருப்பானோ என்று இந்தியாவிலுள்ள அதிகாரிகள் சந்யாசியைக் கண்டால் பயப்படுகிறார்கள்," என்றார்.

சில சமயங்களிலே சுவாமிகள் "பிராமஹ்ணர்க ளுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் எப்பொழுதும் போராட்டமே," என்றும், "இந்திய தேச சரித்திரம் முழுதுமே இப் போராட்டத்தையே குறிக்கின்றது," என்றும், "க்ஷத்திரியர்களே ஜனசமூக பந்தத்தை யறுத்தெறிவதற்கு எப்பொழுதும் பிரயாசைப்பட்டு வந்திருக்கிறார்கள்," என்றும், "வங்கா ளத்திலே யுள்ள காயஸ்தர்கள் க்ஷத்திரியர்களே," என்றும் கூறி, "ராமர் கிருஷ்ணன், புத்தர் இவர்கள் க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவர்களாதலாலேயே அவர்களுடைய உபதேசங்கள் சமஸ்த கோடி ஜீவராசிகட்கும் சமரசபாவமாயிருக்கின்றன," என்றும் முடித்தார்; "க்ஷத்திரியர்களால் ஏற்படுத்தப்பட்ட புத்தமதமானது பிராஹ்மணத்துக்கு எதிர்மதமாம்," என்றார்.

சுவாமிகள் புத்தரைப்பற்றிப் பேசிக்கொண்டு வருகையிலே, அவர் ஒரு புத்தர்போலவே எல்லோருக்குந் பட்டது. அவரைச் சூழ்ந்து அவருடைய மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர்: "என்ன? சுவாமி! தாங்கள் புத்தர் என்று எனக்கு இதுவரை தெரியாதே," என்று கூறினார்.

ஸ்வாமிகள் உடனே - அவருடைய முகத்திலே ஒரு தேஜஸ் ஜ்வலித்தது—"அம்மா! நான் புத்தருடைய தாசா தாசாதி தாசன். ஆ! அவர் போன்று எவர் இருந்தார்? தனக்கென்று எச் செய்கையும் செய்யாத பிரபு! உலகு முழுவதையும் ஒருங்கே கட்டியணைக்கும் ஹிருதயம்! ஆ! நாங்

டாசி, ஒரு ஆட்டுக்குட்டியை ரக்ஷிப்பதற்காக தமது உயிரைக் கொடுக்க முன் வந்தாரே; நான் குழந்தையாயிருந்தபொழுது அவர் என்னுடைய அறைக்குள்ளே வந்தார்; நான் அவருடைய பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்தேன்! ...ர் புத்தர்தான் என்று நான் அறிந்துகொண்டேன்!''

ஒரு நாள் சூர்யோதய சமயம்; சூர்யன் தனது பொன் னிறக்கிரணங்களைப் பக்கத்திலேயுள்ள பனிவரையிலே வீச ஆரம்பித்திருக்கிறான்; சுவாமிகள் உள்ளே நுழைந்தார். ''இதோ பார்த்தீர்களா? பனி மூடிய இவ் வெள்ளியங்கிரிகள் பரமசிவனேயாகும்; அவர்மீது வீசுகின்ற ஜோதி ஜகன்மாதாவாம்,'' என்றார். இச் சமயத்திலே சுவாமிகள் மனத்திலே சிந்தித்துக்கொண்டிருந்தது 'ஈச்வரனே பிரபஞ்சம், ஈச்வரன் பிரபஞ்சத்தினுள்ளு மில்லை. வெளியிலும் இல்லை,' என்பதுவே.

கோடைகாலமெல்லாம் சுவாமிகள் கதைகள் சொல்லிக் காலம் கழித்தார். இக் கதைகளிலே சுகப்பிரஹ்மரிஷியைப்பற்றிய கதைதான் அனைவருக்கும் அதிருசிகரமாயிருந்தது. ஒருநாள் சுவாமிகள் வங்காளத்திலே பெரியோராய்ப் பிறந்தவர்களுடைய சரித்திரங்களை ஒன்றின்பின் ஒன்றாகக் கூறிக்கொண்டுவந்தார். பண்டிதர் வித்யாசாகரரைப்பற்றிப் பேச ஆரம்பித்து, ''வட இந்தியாவிலே என்னுடைய வயதுள்ள எல்லார்மீது அவருடைய சாயை விழாமலிருக்கவில்லை,'' என்றார். பண்டிதர் வித்யாசாகரர் ''விதவாவிவாகவீரர்'' என்று சுவாமிகள் அவரைக் கொண்

டாடுவார். ஆனால், வித்யாசாகரரைப்பற்றிச் சுவாமிகள் அடிக்கடி சொல்லும் ஒரு கதையாவது:—

ஒருநாள் வித்யாசாகரர் சட்டசபையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தபொழுது, 'சட்ட சபைக்குச் செல்வது போன்ற சந்தர்ப்பங்களிலே ஆங்கில உடை தரிப்பதா? வேண்டாமா?' என்று ஆலோசனை செய்து கொண்டே சென்றார். இவருக்கு முன்னே தொங்கியும் தொப்பையுமாயுள்ள ஒரு மொகலாயர் வெகு சாகவாசமாக ராஜநடை நடந்து சென்றுகொண்டிருந்தார். திடீரென்று ஒருவன் ஓடிவந்து அந்த மொகலாயரிடத்திலே, "ஐயா! தங்களுடைய வீடு நெருப்புப் பிடித்து எரிகிறது," என்றான்.

அந்த மொகலாயருடைய நடை மாறவில்லை; அவர் அதைக் கேட்டதினாலே வேகமாக நடக்கவும் இல்லை, மெல்ல நடக்கவும் இல்லை.

வந்தவன் ஆச்சர்யமடைந்து, "ஐயா! தங்களுடைய வீடு நெருப்புப் பிடித் தெரிகிறதென்றால் என்ன? இப்படி நடக்கிறீர்களே?" என்றான்.

அந்த மொகலாயர் "சிச்சி, ஒரு சில குச்சிகள் எரிகின்றதினாலே எனது முன்னோர்களின் நடையை நான் நீக்கி விடுகின்றதா?" என்றார்.

அந்த மொகலாயருக்குப் பின்புறத்தே சென்று கொண்டிருந்த வித்யாசாகரருக்கு இது ஒரு படிப்பினை

யாயிற்று; பிறகு 'தேச உடையையே தரிப்பது,' என்று தீர் மானித்துக்கொண்டார்.

வங்காளத்திலே கல்வி பரப்புவதிலே மிகுந்த சிரத் தை யெடுத்தவராகச் சுவாமிகள் டேவிட் ஹேர் என்னும் ஐரோப்பிய நாஸ்திக ரொருவருடைய பெயரை அடிக்கடி கூறுவார். 'இவர் நாஸ்திகர்,' என்று பாதிரிகள் எவரும் இவரை யெடுத்துப் புதைப்பதற்கு மறுத்துவிட்டார்கள். அவர் தம்மிடத்திலே படித்து வளர்ந்த ஒரு பழைய மாணவ னுக்குப் பேதிநோய் காண, அம் மாணவனருகே யிருந்து வேண்டிய சிகிச்சைகள் செய்துவந்தபொழுது, இவரே மரித்துவிட்டார். அவருடைய மாணவர்கள் அவருடைய சரீரத்தை யெடுத்துச் சென்று ஒரு இடத்திலே புதைத்து விட்டு, அந்த இடத்தை ஒரு புண்ணிய ஸ்தலம்போல் ஆக்கி, அங்கு அடிக்கடி சென்று வருவார்கள். அவ்விடம்தான் இப்பொழுது கல்லூரி மைதானம் எனக் கல்கத்தாவிலே பெயர் பெற்றிருப்பது.

இப்படிச் சுவாமிகள் டேவிட் ஹேர் என்னும் பெரி யோரைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், கேட்டுக் கொண்டிருந்த ஒருவர், "சுவாமி! கிறிஸ்தவமதம் தங்க ளுக்கு எவ்வளவு நன்மை யளித்துள்ளது?" என்று கேட் டார்.

ஸ்வாமிகள் தம்மிடத்திலே தம்முடைய உபாத்திபா யர் ஹேஸ்டி என்பவரைத் தவிர வேறு பாதிரிகள் எவ ரும் பழகியது இல்லை யென்றும், "இந்த ஹேஸ்டி என்

பார் கோபக்குண முடையாராயினும் பையன்களிடத்தி லே மிகுந்த அன்புள்ளவர்,'' என்றும், தம்மை முதன் முதலில் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்துக்கு அனுப்பியது அவ ரே யென்றும், அவர் தமது கடைசிக்காலத்திலே சுவாமி களை நோக்கி, ''ஆம், பையா! நீ சொல்வது சரிதான்! நீ சொல்வது சரிதான்!— எல்லாம் ஈச்வரனே யென்பது உண்மைதான்,'' என்று சொல்வா ரென்றும் கூறினர்.

இன்னொருநாள் கிருஷ்ணனைப்பற்றிப் பேச்சு ஆரம் பித்துவிட்டது. கிருஷ்ணன் கிறிஸ்துவைப்போன்று சரித் திரத்திலே நம்பக்கூடியவர்தானு? சுவாமிகளுக்குக்கிறிஸ்து விஷயத்திலும் சந்தேகம்தான். புத்தர், மகம்மது இவ் விரு வருக்கும் நண்பர்களும் இருந்திருக்கிறார்கள்; பகைவர்க ளும் இருந்திருக்கிறார்கள்; ஆகையால், அவர்கள், சரித்திர சம்பந்தமாக நம்பக்கூடியவர்களே. கிருஷ்ணனுடைய விஷ யம்தான் சர்வ சந்தேகம். கிருஷ்ணன் கீதாசிரியர், இடை யன், அரசர், யுத்தவீரர், ஒரு மஹாத்மா. எல்லாம் ஒரு வடிவத்தினிடத்திலே பொருத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணன்தான் பரிபூர்ணாவதாரம். போர்க் களத்திலே புகுந்து இரு சைந்யங்களுக்கும் நடுவே குதிரைகளின் கடி வாளத்தைக் கையிலே இழுத்துப் பலமாகப் பிடித்துக் கொண்டு, இரு சைந்யங்களையும் ஏற இறங்கப்பார்த்துவிட்டு, அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்ய ஆரம்பித்தார். ஆ! ஆ! என்ன ஆச்சர்யம்!

கிருஷ்ணன் உலகில் வசித்தது பொய்யாயினும், பொய் யென்றே வைத்துக்கொண்டாலும், அத்தகைய ஒரு

புருஷனைக் கற்பிப்ப தென்றால் லேசான கார்யமா? கிருஷ்ணோபாசகர்கள் காவ்யாலங்கார அணிகளை யெல்லாம் கிருஷ்ணனைச் சிருஷ்டிப்பதிலே செலவழித்துவிட்டார்கள்.

சுவாமிகள் அல்மோராவிலே இருந்தபொழுது, அன்னி பேஸண்டு அம்மையார் அங்கு இருந்தார். ஆகவே, சுவாமிகள் அவ் வம்மையாரை இரண்டு தரம் சந்தித்தார். சுவாமிகள் எப்பொழுதும் வேடிக்கை விளையாட்டுகளிலே காலம் கழித்துவந்தபொழுதிலும், வாழ்க்கையினிடத்து வெறுப்பு உண்டாக ஆரம்பித்துவிட்டது; மேமீ 25-ம் தேதி புதன்கிழமை யன்று சுவாமிகள் தமது நண்பர்களெல்லோரையும் விட்டுவிட்டு, அல்மோராவிலிருந்து கொஞ்சம் தூரத்திலே யிருந்த ஷியாதேவி என்ற ஊருக்குத் தனியே யிருக்க விரும்பிச் சென்றுவிட்டார். அங்கே தினந்தோறும் பத்து மணி நேரம் காட்டிலே மௌன நிஷ்டையிலிருந்து ஆநந்தமடைந்தார். சனிக்கிழமை யன்று சுவாமிகள் தமது நண்பர்களிடம் திரும்பி வந்தார். ஆனால், அன்று அவருக்கு ஒருவித பூரிப்பு உண்டாயிருந்தது. முன்மாதிரி தாம் கால்நடையாக நடந்து, சீதோஷ்ணங்களைச் சகித்து, பிக்ஷை யேற்றுண்டு இப்பொழுதும் சஞ்சாரம் செய்ய முடியும் என்று சுவாமிகளுக்கு இப்பொழுது தெரியவந்தது. 30-ம் தேதியாகிய அடுத்த திங்கட்கிழமை சுவாமிகள் ஸேவியரையும் அவருடைய மனைவியரையும் கூட்டிக்கொண்டு, மற்றவர்களை யெல்லாம் அல்மோராவிலே விட்டுவிட்டு, காட்டுமார்க்கத்திலே வெளியே சென்று ஒரு வாரம் வசித்தார். இப்

பொழுது சுவாமிகள் ஏகாந்தத்தை நாடி மாத்திரம் வெளியே போகவில்லை; அப்படி அது ஒன்றே கருத்தாயிருந்தால், ஸேவியரையும் அவருடைய மனைவியரையும் கூட்டிக்கொண்டு போயிருக்கமாட்டார். அந்தப் பிரதேசத்திலே மடம் ஒன்று கட்டுவதற்கு எண்ணி, 'அதற்காகத் தகுந்த இடம் கிடைக்குமா?' என்று பார்ப்பதும் சுவாமிகளுடைய மற்றொரு கருத்தா யிருந்தது.

சுவாமிகள் தாம் ஆநந்த நிஷ்டையி லிருப்பதற்கும் ஆநந்தத்திலே அவா மிகுந்து அனைத்தையும் தியஜித்து வரும் முமுட்சுக்களுக்கு ஆநந்த மளிப்பதற்காக மடமொன்று இயற்ற இடம் பார்ப்பதற்கும் சென்றிருக்க, அவர் திரும்பிவருவதற்குள்ளாகத் துக்ககரமான விஷயங்கள் இரண்டு அவருடைய வரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தன.

ஜூன்மீ 3உ வெள்ளிக்கிழமை யன்று அல்மோராவுக்குத் தந்தி வந்துவிட்டது, "குட்வின் உதகமண்டலத்திலே நேற்றிரவு பரலோக ப்ராப்தி யடைந்தார்" என்று. குட்வின், சுவாமிகளிடத்திலே ஈச்வரபக்தி யுள்ளவரென்றும், சுவாமிகளுடைய பிரசங்கங்களிற் பெரும்பான்மையும் இவர் இருந்திராவிட்டால் உலகுக்கு உபகாரமாய் வெளிவந்திரா வென்றும் நமது வாசகர்கள் முன்னமேயே அறிவார்கள். சுவாமிகளுக்கு இந்த குட்வினிடத்திலே புத்திர வாத்சல்யத்தினும் மேலான வாத்சல்யம் இருந்தது. ஆ! ஆ! இப்பொழுது குட்வினுடைய மரணத்தைச் சுவாமிகள்

எப்படிச் சகிப்பார்? அவரிடத்திலே இதை யுரைப்பவர் எவர்?

ஞாயிற்றுக்கிழமை யன்று மாலே சுவாமிகள் திரும்பி அல்மோராவுக்கு வந்து சேர்ந்தார். தாழ்வாரத்திலே யுட் கார்ந்து சகோதரி நிவேதிதா அம்மையார் முதலிய மேனாட்டுச் சிஷ்யர்களிடத்திலே பேச ஆரம்பித்தார். குட்வின் மரண மடைந்த சங்கதி அவருக்குத் தெரியாது; ஆனால், அவருடைய முகத்திலே ஒளி மங்கிக் கிடந்தது. அவர் "பாவஹாரி பாபா தமது சரீரத்தையே அக்கினி குண்டத்தி லிட்டுத் தமது எக்ஞங்களை யெல்லாம் நிறைவேற்றிவிட்டார், அவர் தமது எக்ஞ குண்டத்திலே தம்மையே தகித்துக்கொண்டுவிட் டாரென் று இப்பொழுது எனக்கு ஒரு கடிதம் வந்தது," என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, ஒருவர் "சுவாமி! அது தற்கொலே யாகாதா? அப்படிச் செய்தது தவறுதானே?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள்: கலங்கிய மனமுடையவராய், "அது தவறு என்று நான் எப்படிச் சொல்லலாம்? அவர் மஹாத் மா: அவருடைய செய்கையை நானு நிதானிப்பது?" என்ருர்.

இதற்கப்புறம் அதிகம் சம்பாஷணை நடக்கவில்லே. சுவாமிகள் எழுந்து தமது இருப்பிடம் சென்ருர். குட்வின் மரணமடைந்த சங்கதியை அவருக்குச் சொல்வதற்கு எவ ரும் துணியவில்லே.

மறுநாள் காலையிலே, அதிகாலையிலே, நாலுமணிக் கே சுவாமிகள் விழித்துக்கொண்டார்; எழுந்திருந்துவெளி யே சென்று உலாவிவிட்டுத் தமது ஐரோப்பிய சிஷ்யர் கள் இருக்கும் இடத்திற்கு வந்தார். அவ்வைரோப்பிய சிஷ்யர்களுள் ஒருவர் மெல்ல குட்வின் மரணமடைந்து விட்டதைச் சுவாமிகளுக்குத் தெரிவித்து, தந்தியையும் காட்டினர்.

சுவாமிகள் ஒன்றும் பேசாது, மௌனமாய்ச் சங்கதி யைக் கேட்டுக்கொண்டார். குட்வின் மரணம் தமது மனத் தைச் சிறிதும் கலக்கவில்லைபோல வெளியே சுவாமிகள் தமது ஐரோப்பிய சிஷ்யர்களுடன் பல விஷயங்களைப்பற் றிப் பேச ஆரம்பித்தபோதிலும், அவருடைய மனமானது சிறிதேனும் வருந்தாமலிருந்திருக்குமா? அன்றுகாலையில் சுவாமிகள் நுழைந்தபொழுது பக்தி சொரூபமாய் நுழைந் தார். ஆனல், இந்தத் துக்ககரமான விஷயம் கேட்ட பின், சுவாமிகள் பக்தியைப்பற்றிய பேச்சை நிறுத்தித் தியாகமே மனுஷ்ய லக்ஷ்யம் என்று தியாகோபதேசம் செய்ய ஆரம் பித்தார். இப்படி அன்றைப்பொழுது கழிந்தது.

சுவாமிகள் அடிக்கடி, தமது காலம் சென்றுவிட்ட சிஷ்யர் குட்வினை நினைத்துக்கொண்டு மிகமிக வருந்து வார்; குட்வினுடைய மரண சமாச்சாரம் தெரிவிக்கப் பட்ட அவ்விடத்திலே தமக்கு இருக்கப் பிடிக்கவில்லை யென்று கூறினர். "சீச்சீ, இது என்ன பந்தம்? ஓ ஹோ! குட்வின்னிடத்திலே அதிக பற்றுதல் வைத்துவிட்டே

னே?'' என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு, மனத்தைத் தேற்றித் திடப்படுத்திக்கொள்வார். ஆயினும், சில சமயங்களிலே குட்வினுடைய பிரிவாற்றாது, "ஆ! குட்வின் இருந்திருந்தால், எவ்வளவு வேலை செய்வார்? எனக்கு வலது கை முறிந்துவிட்டதே; எல்லாவற்றுக்கும் ஈசன் ஒருவன் உண்டென்று நானே சில சமயங்களில் கூறுகிறேனே. அந்த ஈசனை மாத்திரம் நான் இப்பொழுது காண்பேனானால், குட்வினைக் கொன்றதற்காக அவனைக் கொன்று பழிக்குப் பழி வாங்கிவிடுவேன்'' என்று கூறுவார். குட்வினுடைய உருவம் அவருடைய மனத்திலே எதிரே வந்து நிற்பதுபோல இருக்கும். அநேக நாட்கள் சுவாமிகள் குட்வினுடைய பிரிவாற்றாது வருந்தினார்.

சுவாமிகள் குட்வினைப்பற்றி இரங்கற்பா ஒன்று ஆங்கிலத்திலே இயற்றி, குட்வினுடைய தாயாருக்கு அனுப்பியது மன்றியில், அவ் வம்மையாருக்கு ஒரு கடிதமும் எழுதி, தமது விசனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்தார். அக் கடிதத்திலே ஒரு சில வரிகள் பின் வருவன:—

"நான் அவருக்குக் கடமைப்பட்டுள்ள நன்றியறிதற் கடன் ஒருபொழுதும் திரும்பிச் செலுத்தப்பட முடியாது; எனது ஏதாவது எண்ணத்தினால் உதவி பெற்றவர்களாக நினைக்கிறவர்கள் அநேகமாக அதன் ஒவ்வொரு வார்த்தையும் குட்வினுடைய சலிப்பற்ற, அணுவளவும் ஸ்வயநல மற்ற முயற்சிகளிலேயே பிரசுரிக்கப்பட்டது என்பதையறிந்துகொள்ளவேண்டும். நான் அவரிலே ஒஃகு போ

ன்று உண்மையான ஒரு நண்பரை, ஒருபொழுதும் தவ றாத பக்தியுள்ள ஒரு சிஷ்யரை, களைப்பு என்றால் இன்ன தென்றே அறியாத ஒரு வேலையாளை இழந்துவிட்டேன். பிறருக்காக மாத்திரம் ஜீவிப்பதற்கென்று பிறக்கின்ற அந் தச் சிலரிலே ஒருவர் இப்பொழுது உலகிலே குறைந்து விட்டார்.''

இந் நாட்களிலே சுவாமிகளுக்கு ஏகாந்த வாசத்திலே இச்சை யதிகமாக உண்டாகிக்கொண்டிருந்தது. தவிர, குட்வின் மரண மடைந்த சமாச்சாரம் கேள்விப்பட்ட அந்த இடத்திலே யிருக்க அவருக்குப் பிடிக்கவில்லை. இது மாத்திரமா? குட்வினைப்பற்றி எத்தனையோ கடிதங் கள் சுவாமிகளுக்கு வந்துகொண்டே யிருந்தன; அவற் றிற்கெல்லாம் பதில் எழுதவேண்டி யிருந்தது; அதனாலே அவருக்கு அடிக்கடி துக்கம் உண்டாய்க்கொண்டே யிருந் தது. ஒரு நாள் அவர், ''ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகிர்முகப் பார் வைக்கு பக்தி சொரூபமாகத் தோற்றியபோதிலும் அந்த ரங்கத்திலே ஞான சொரூபமாயிருந்தார். நானே பகிர்முகப் பார்வையிலே ஞானப்பழமாகத் தோன்றியபோதிலும், அந்தரங்கத்திலே பக்தியே மேலிட்டிருக்கிறது. ஆகலால், ஸ்திரீ போன்று எளிய, இரங்கும் ஹிருதய முடையான் யான்,'' என்றார்.

சுவாமிகளுக்கு அவ் வூரிலே யிருக்கப் பிடிக்கவில்லை யாதலாலே, காச்மீர தேசத்திலே சென்று சிலகாலம் வசிப்ப தென்று தீர்மானிக்கப்பட்டது. அப்படியே ஜுன்மீ

ம் தேதி யன்று சுவாமிகளும் அவருடைய ஸ்திரீ சிஷ்ளுமாக அல்மோராவை விட்டுக் காச்மீரத்துக்குப் புற டார்கள்.

59-வது அத்தியாயம்
காச்மீர யாத்திரை

ணித்த இவர்கள் அல்மோராவை விட்டுப்புறப்பட்டது சனிக் திருந்தும். காத்கோடம் என்ற ஊர் போய்ச் சேர இரண்டரை தடுக்கவேண்டிவந்தது. ஆ! ஆ! என்ன அழகிய காக்ஷி சுற் இந்திய! எங்குப் பார்த்தாலும் இருண்ட காடுகள், காட்டுக் என்றாடு குரங்குக் கூட்டங்கள். என்ன அழகு! என்ன அழகு! சுவாமிகள் வழியிலே ஒரு குன்றுப் பக்கமாகக் கையை நீட்டிக் காட்டி, தீரமாதாவை நோக்கி, "இதோ இந்தப் பக்கத்திலே 'குதிரை முகத்துடன் கூடிய ஒரு ஜாதியார் வசிக்கிறார்கள்,' என்று சுற்றுப் பக்கத்து ஜனங்களுக்குள் ளே பண்டைக்காலம் தொட்டு ஒரு பேச்சு வழங்குகிறது. நானே எனது கால் நடை சஞ்சார யாத்திரை காலத்திலே அத்தகைய உருவங்களை ஒரு தரம் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த பின்னர்த்தான் இந்தப் பிரஸ்தாபத்தைக் கேள்விப்பட்டேன்," என்றார்.

ஜூன்மீ 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையதினம் சுவாமிகளும் மற்றவர்களும் பீம ஸ்தலம் என்ற ஏரியின் கரையிலே இறங்கினார்கள். இவ்விடத்திலே சுவாமிகள் மிகமிக அழகிய வேத சுலோகங்கள் சிலவற்றையும் சூர்

தாஸர் முதலிய பக்த சிரேஷ்டர்களுடைய பாடல்களை தவ ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துத் தமது சிஷ்யர்களுன்ன அவற்றின் பொருள்களை விளங்க உரைத்தார். அங்கிருடன். ரெயிலேறிப் புறப்பட்டு, ஒரு பகல் முழுதும் செல்ல அங் ண்டி வந்தது. புத்தர் பிறந்த பிரதேசத்தின் வழி றந்து ரெயில் செல்லவே, சுவாமிகளுக்குப் புத்தருடைய ஞா வந்து, புத்தரைப்பற்றி வழி நெடுகப் பேசிக்கொல் வந்தார். ரெயில் வண்டி பாஞ்சால தேசத்துக்குள்ளிலே நுழைந்தது; சுவாமிகளுக்கு என்றுமில்லாத குதுகலதவிர, உற்சாகமும் எங்கிருந்தோ உண்டாய்விட்டது. சுவாப்பட்ட அந்தத் தேசத்திலேயே பிறந்து வளர்ந்தவர்போலிலே காணப்பட்டார். சுவாமிகள் லாகூருக்குச் சென்ற வருகுடிதந் லே வந்திருந்தபொழுது, சில ஜனங்கள் சுவாமிகளைத் தங்களுடைய ஆதிகுரு குருநானக், கடைசிகுரு குருகோவிந்தர் இவ் விருவரும் சேர்ந்து ஓர் உடல் எடுத்து அவதரித்துள் ளார் என்று கூறினார்கள்; அப்படி அவர்கள் கூறியதற்குக் காரணம் இன்னதென இப்பொழுது அவருடைய ஐரோப் பிய சிஷ்யர்களுக்குத் தெரியவந்தது. "குருவுக்கு ஜயம்," "குருவுக்கு ஜயம்," என்று கோஷம் புரிந்துகொண்டு யுத் தத்துக்குச் சென்ற சீக்கியர்களுடைய பராக்கிரமத்தைப் பற்றிச் சுவாமிகள் பேசினார். பாஞ்சால தேசத்திலே அத் வைத ஞானிகள் அளவு சங்கியையின்றி உண்டானார்கள்; வேதாந்தமானது எங்கும் பரந்து விளங்கி சர்வ சாதாரண மாயிற்று. இன்னும் குடியானவப்பெண் தனது நூல் நூற் கும் யந்திரம் கூட 'ஸோஹம்' என்று கூறுகிறது என்

சுவாமிகள் இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு ...யில், பாரத தேசத்தை—பாஞ்சால தேசத்தை - முதல்முதலாகப் படையெடுத்த அந்நிய நாட்டான், அலெக் ஸாந்தர் என்னும் அரசனுடைய ஞாபகம் வந்துவிட்டது. அப்பொழுதுதான் அலெக்ஸாந்தர் படையெடுத்துவிடு கிறுன் போல நினைக்கும்படி, சுவாமிகள் அவ்வளவு சாதுர்யமாக அலெக்ஸாந்தருடைய படையெடுப்பை வர் ணித்து, அவனுடைய படையெடுப்பானது அப்பொழு திருந்த அசகாய சூரர்களான ஆர்ய சிரேஷ்டர்களாலே தடுக்கப்பட்டுவிட்டது," என்றும், "அவன் என்றென்றும் இந்தியாவையே நினைக்காதவண்ணம் செய்யப்பட்டான்," என்றும் சுவாமிகள் அதிக கர்வத்துடனும் பெருமை யுடனும் கூறினர். சந்திரகுப்தனுடைய அரசாக்ஷியைப் பற்றியும், பௌத்தர்களுடைய ராஜ்யபாரத்தைப்பற்றியும் பேசினர். ரெயில் வண்டி போய்க்கொண்டே யிருந்தது; ஹாடியான நகரம் கடந்தாய்விட்டது; லாகூர் நகரமும் போய்விட்டது.

இப்பொழுது சுவாமிகள் அநேக வருஷங்களுக்கு முன்னே தாம் கண்ட ஒரு கனவைப்பற்றிக் கூறினர். ஆர்யர்கள் ஸிந்து நதி தீரத்தை யடைந்தபொழுது மாலை நேரம். அப்பெரிய நதியின் கரையிலே ஒரு கிழவர் உட் கார்ந்திருக்கக் கண்டேன். அவர்மீது அந்தகாரமானது அலை மேல் அலையாக வந்து கவிந்துகொண்டிருந்தது; அவர் ரிக்வேத பாராயணம் செய்துகொண்டிருந்தார். பின்னர் நான் விழித்துச் சந்தம் சொல்லிக்கொண்டே போனேன்.

வெகு காலத்துக்கு முன்னே நாங்கள் உபதேசி, தவ...
வந்த சந்தங்கள் அவைதாம்.”

ராவல்பிண்டி நகர் போய்ச் சேர்ந்தாய்விட்டது; சுவாமிகளும் மற்றவர்களும் அங்கிருந்து வண்டியேறி முர்ரி நகர் போய்ச் சேர்ந்தார்கள்; அங்கு மூன்று நாட்கள் தங்கி, அங்கிருந்து பகுதி வண்டியிலும் பகுதி படகிலுமாக, ஜூன்மீ 21-ம் தேதியன்று ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தார்கள். கோஹலம் என்ற ஊரிலிருந்து பாரமுல்லா என்ற ஊர் போய்ச் சேரும்வரையில், வழியானது நெருங்கியதாயும், வளர்ந்ததாயும், மலையினூடே செல்வதாயு மிருந்தது. இந்த வழியிலே சென்றுகொண்டிருக்கையில் சுவாமிகள் ஹிந்துமதத்தினுள்ளே இப்பொழுது புதிதாக நுழைந்திருக்கும் பல தீய கொள்கைகளைக் கண்டித்து, வாமாசாரங்கள் என்ற பெயருடன் வழங்கி வருகின்ற துராசாரங்களை மிகவும் நிந்தித்துப் பேசினர்.

ஐரோப்பிய சிஷ்யர்கள் சுவாமிகளை நோக்கி, “சுவாமி! ‘ஸ்ரீ ராமகிருஷ்ணர் எவருடைய கொள்கையையும் எப்பொழுதும் இழிவாகக் கருதியதில்லை’ என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்களே; இந்த வாமாசாரங்களைப்பற்றி அவருடைய அபிப்பிராயம் என்னவா யிருந்திருக்கலாம்?” என்று கேட்டார்கள்.

சுவாமிகள்: “அந்தக் கிழவர் ‘இருக்கட்டும்; இருக்கட்டும்; ஒவ்வொரு வீட்டிலும் தோட்டி போவதற்கு ஒரு வாசல் இருக்கலாமே’ என்று கூறியிருக்கிறார்,” என்றார்.

ஜூன்மீ 19உ ஜீலம் நதி செல்லும் பிரதேசத்தின் வழியாகச் சுவாமிகளும் மற்றவர்களும் போய்க்கொண்டிருக்கையில், சுவாமிகளுக்குப் பழைய ஞாபகங்களெல்லாம் உண்டாயின. அகண்டாநுபூதிக்கு மார்க்கமாகிய பிரஹ்ம வித்தையைப்பற்றிப் பேச ஆரம்பித்து, "அன்பு: தீமை யெல்லாவற்றையும் ஜயித்துவிடுகிறது," என்று கூறிவருகையில், சுவாமிகள் "என்னுடன் பள்ளிக்கூடத்தில் படித்த ஒருவன் பின்னர்ப் பணக்காரனானன். பெரியதோர் வியாதி அவனைப் பிடித்துக் கொண்டது; அவன் எத்தனையோ பெயர் பெற்ற வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்வித்துக்கொண்டான்; வியாதி சொஸ்தமாகவில்லை. அவனுக்கு ஏக்க முண்டாய்விட்டது. அவன் வேதாந்த சாஸ்திரங்கள் படிக்க ஆரம்பித்தான்; உலகை வெறுக்க ஆரம்பித்தான்; நான் பிரபஞ்ச விரக்தி யடைந்து யோக நிஷ்டனாய்விட்டேனென்று அவன் கேள்விப்பட்டு, வியாதியினால் பிடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையில் கிடக்கும் அவனை நான் ஒருதரமேனும் வந்து பார்த்துச் செல்லும்படி எனக்கு ஆள்மேல் ஆளனுப்பிக் கேட்டுக்கொண்டான். நானும் அவனுடைய படுக்கை யருகில் சென்று உட்கார்ந்தபொழுது, "பிராஹ்மணனிடத்திலிருந்து தான் வேறாயிருப்பதாக நினைக்கிறவனை பிராஹ்மணன் ஜெயித்துவிடுகிறான்; க்ஷத்திரியனிடத்திலிருந்து தான் வேறாயிருப்பதாக நினைக்கிறவனை க்ஷத்திரியன் ஜயித்துவிடுகிறான்; பிரபஞ்சத்திலிருந்து தான் வேறாயிருப்பதாக நினைக்கிறவனை பிரபஞ்சம் ஜயித்துவிடுகிறது." என்றுள்ள சுலோகம்

எனது ஞாபகத்தில் வரவே, நான் அதை யதேச்சையாகச் சொன்னேன். இது அந்த வியாதியஸ்தனுக்கு ஒரு ஔஷதம் போன்று ஆய்விட்டது; பலன் ஆச்சர்யமா யிருந்தது; படுக்கையிலிருந்து அவன் சட்டென்று எழுந்திருந்து உட்கார்ந்தான்; இதற்கு முன் அவன் வெகு நாட்களாக இழந்திருந்த பலமெல்லாம் இப்பொழுது அவனுக்கு உண்டாய் விட்டது போலத் தோன்றிற்று; அன்றுமுதல் அவன் நாளுக்குநாள் சொக்கிய மடைந்து, முழுதும் சொஸ்தமாய்விட்டான். நான் சில சமயங்களிலே விநோதத்துடனும் கோபத்துடனும் சில விஷயங்களைக் கூறியபொழுதிலும், என்னுடைய ஹிருதயத்திலே அன்பைத் தவிர வேறொன்றுக்கும் இடம் கிடையாது என்பது உங்களுக்கு ஞாபக மிருக்கட்டும். நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு செலுத்துகிறோம் என்பது நமக்குத் தெரிந்துவிட்டால், இவை யெல்லாம் சரியாய்விடும்.''

சுவாமிகளுக்கு சாட்சாத் பரமசிவனிடத்திலே பக்தி மிகுதி. இந்திய ஸ்திரீகள் தங்கள் வேலைகளினிடையில் அடிக்கடி "சிவ," "சிவ" என்று சொல்லிக்கொண்டு வந்தால் போதும்; அதுவே பெரியதோர் உபாசனையாம். நித்திய நிஷ்டாலலவா மஹாதேவர்; அவருடைய வாசஸ்தானம் ஹிமோத்கிரி. ஆகையால், ஹிமோத்கிரியானது நிஷ்டை வாசனை நிரம்பப் பெற்று, இகசுகங்கள் எதற்கும் இடங்கொடுப்ப தில்லை. சுவாமிகள் இதெல்லாம் சொல்லிக்கொண்டே வர, பிரயாணம் காச்மீர தேசத்துக்குள்ளே நடந்து

கொண்டிருந்தது. வழி யாத்திரைக் காக்ஷியோ அதி ரம்மி யம். பாட்டுப் பாடிக்கொண்டு செல்லும் குடியானவர்கள், க்ஷேத்திர தர்சனத்தின் பொருட்டுக் கால் நடையாகக் கஷ்டப்பட்டுச் செல்லும் சாதுக்களும் பக்த சிரேஷ்டர்களும், சுற்றிலும் பச்சைப் பசேலென்று பலவித செடி கொடிகள், செழுமையான வயல்கள், ரஸ்தாவிலே இருபுறமும் வைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான விருக்ஷங்கள், இவை யெல்லாம் பார்க்கப் பார்க்கப் பரமாநந்தத்தை யளித்தன. சுவாமிகளிடத்திலே ஒரு விசேஷ குண முண்டு. அவர் எங்குச் சென்றிருந்தபொழுதிலும், அந்த இடத்து ஜனங்களுடைய நடையுடைபாவனைகளைத் தாமும் அநுசரித்து அவர்களுடனே கலந்துகொள்வதிலே சுவாமிகளுக்குப் பிரியம் அதிகம். சுவாமிகள் மேல் நாடு சென்றிருந்தபொழுதுகூட அப்படித்தான் செய்தார்.

சுவாமிகள் தம்முடனே வேலைக்காரர்கள் எவரையும் கூட்டிக்கொண்டு வராததினாலே, தம்முடன் கூட வந்தவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் தாமே செய்ய வேண்டியதாயிற்று. சுவாமிகள் கையிலே குடை யெடுத்துக்கொண்டு, யாத்திரைக்குப் படகுகள் அமர்த்துவதற்குச் சென்றார். ஆனால், வழியிலே ஒருவர் சுவாமிகளை யின்னாரென் றறிந்துகொண்டு, சுவாமிகள் போகும் காரியத்தையும் தெரிந்துகொண்டு, தாம் படகுகள் அமர்த்தி வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்வதாகக் கூறி, சுவாமிகளைத் திருப்பி யனுப்பி

விட்டார். "அதிர்ஷ்டசாலியின் பக்கத்திலே ஈச்வரனே யிருக்கிறு ரென்று சொல்லப்படுகிறது," என்று அதிக சந்தோஷத்துடனே சுவாமிகள் கூறிக்கொண்டே திரும்பி வந்து, கீழே யுட்கார்ந்தார். மாலை 4 மணிக்குச் சுவாமிகளும் அவருடைய சிஷ்யர்களும் மூன்று படகுகளி லேறி ஸ்ரீநகருக்குப் புறப்பட்டார்கள்; படகுகளி லேறினார்களே யொழிய அன்று புறப்படவில்லை யென்று தெரியவருகிறது. அன்று மாலையிலே சுவாமிகளுடைய நண்பர் ஒருவருடைய தோட்டத்திலே ஐரோப்பிய சிஷ்யர்கள் சிறு குழந்தைகளுடன் விளையாட்டிலே காலங் கழித்தார்கள். சுவாமிகள் தனியே யிருக்க விரும்பி வெளியே போய்விட்டார். இரவு பதினொருமணி யிருக்கும்; நாட்டுப் புறத்து ஜனங்களுக்குள்ளே வழங்கி வந்த பண்டம் மாற்றலுக்குப் பதிலாக, பணம் வழங்கப் புறப்பட்டதினால் அந்த ஜனங்களுக்கு உண்டாகக்கூடிய லாபநஷ்டங்களைக் குறித்து ஐரோப்பிய சிஷ்யர்கள் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுவாமிகள் இந்தத் தர்க்கத்தை யுற்றுக் கேட்டுக்கொண்டே யுள்ளே நுழைந்தார்.

இங்கிருந்து புறப்பட்டு, சுவாமிகள் மூன்றுவது நாள் ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீநகர்தான் காச்மீரதேசத்து ராஜதானி நகர். ஜூன்மீ 22-ம் தேதி முதல் ஜூலைமீ 25-ம் தேதி வரையில் சுவாமிகளும் மற்றவர்களும் படகுகளிலேயே வசித்தார்கள். ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்த முதல் நாள் மாலையில், சுவாமிகளும் மற்றவர்களும் அங்கிருந்த

சில வங்காளி உத்தியோகஸ்தர்களுடன் போஜன முண்டார். அருகிலே யிருந்த பெயர்பெற்ற ஸ்தலங்களெல்லாம் போய்ப் பார்வை யிடப்பட்டன. சில சமயங்களிலே ஆகாரத்தைக்கூட மறந்துவிட்டு, சம்பாஷித்துக்கொண்டிருப்பார்; கனிஷ்க ராஜன் கீழே ஸ்ரீநகர் இருந்த நிலைமையை யெடுத்துப் பேசுவார்; புத்தமதத்து உத்தமக் கொள்கைகளைப் பற்றிப் பேசுவார்; ஒரு சமயத்திலே "அசோகனுடைய காலத்திலே புத்தமதமானது உலகமானது இந்த நிமிஷம் வரையிலும் ஒருபொழுதும் செய்வதற்குத் தயாராயிராத காரியத்தைச் செய்ய முயன்றது என்பதுதான் விஷயம்," என்றார் சுவாமிகள்.

இன்னொரு சமயத்திலே மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்த செங்கிஸ்கான் என்பவனைப்பற்றிப் பேச்சு நடந்தது. "அவனை 'இழிந்த அக்கிரமக்காரன்,' என்று ஜனங்கள் கூறுகிறார்கள். அது உண்மை யன்று. அவன் உலகை ஒற்றுமைப்படுத்த முயன்றான். நெப்போலியனும் அதே மாதிரிதான். இன்னொருவன் அலெக்ஸாந்தர். ஒரே ஆத்மாதான் மூன்று வெவ்வேறு காலங்களிலே இப்படி அவதரித்ததுபோலும்!" என்றார் சுவாமிகள். இக்காலத்திலே பெண்மையாவது பலஹீனமாவது அணுவளவு மில்லாத அந்தக் கீதையைப்பற்றி அடிக்கடி பேசுவார்.

காச்மீரம் வந்து ஒருவாரம் ஆவதற்குள்ளாக, சுவாமிகளுக்குத் 'தனியே யிருக்கவேண்டும்,' என்ற ஆசை யுண்

டாய்விட்டது. அடிக்கடி சுவாமிகள் தமது சிஷ்யர்களை விட்டுப் பிரிந்து ஏகாந்தத்துக்குச் சென்றுவிடுவார். இக் காலங்களிலே சுவாமிகள் அடிக்கடி "சரீரம் ஒன்று உண்டு என்று நினைப்பதுகூடப் பாவம்," அல்லது, "சக்தியை வெளியில் காட்டுவது தப்பு," அல்லது "விஷயங்கள் மேம் படுகிறதில்லை; அவை எப்பொழுதும்போலத்தான் இருக் கின்றன. நாம் அவற்றில் உண்டுபண்ணுகின்ற மாறுதல் களினால் இன்னும் நல்லவர்களாகிறவர்கள் நாமே,"என்பார். 'மனுஷ்ய வாழ்க்கையானது ஈஸ்வரப் பிரகாசமே,' என்று சுவாமிகள் கருதிவந்தார்.

இச் சமயத்திலேதான் ப்ரபுத்த பாரதா என்னும் மாதப் பத்திரிகையை சென்னையிலிருந்து மாயாவதியிலே புதிதாக இயற்றப்பட்டுள்ள ஆச்ரமத்துக்கு மாற்றி நடத் துவதற்குள்ள யோசனைகள் நடந்துவந்தன. சுவாமிக ளுக்கு இப் பத்திரிகையினிடத்திலே பிரத்தியேக அன்பு உண்டு. இப் பத்திரிகைக்கு சுவாமி சொரூபாநந்தர் பத்திராதி பராயிருக்க முன் வந்தார். ஸேவியரும் அவருடைய மனைவிய ரும் இப் பத்திரிகையை நடத்துவதற்கு வேண்டிய அச்சுக் கூடம் முதலியன வாங்கி, இன்னும் ஆரம்பச் செலவுகளை யும் ஏற்றுக்கொள்வதாக முன் வந்தார்கள்; சுவாமிகள் அதிக சந்தோஷத்துடனே முதற் பத்திரிகையின் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் மத்தியானம் சுவாமிகள் தாம் ஒரு கடிதம் எழுத முயன்றதாகவும், அது இம்மாதிரி வந்துவிட்டதென்றும் கூறிக்கொண்டே

ஐரோப்பிய சிஷ்யர்களிடம் வந்து "பிரபுத்த பாரதாவுக்கு" என்ற தலைப்பெயரிட்டுள்ள ஒரு சிலப் பாக்களைப் படித்துக் காட்டினார்.

சுவாமிகள் தமது ஐரோப்பிய சிஷ்யர்களை விட்டுத் தனியே செல்ல விரும்பினார்; ஆனால், அவருடைய சிஷ்யர்கள் தாங்களும் கூட வருவதாக வற்புறுத்திக் கூறவே, சுவாமிகள் அவர்களையும் கூட்டிக்கொண்டு க்ஷீரபவானி என்ற இடத்துக்குச் சென்றார். இதற்கு முன் ஹிந்துக்களைத் தவிர வேறு மதத்தினர் அங்குச் சென்றதேயில்லை. எங்கள் படகு தள்ளி வந்தவர்கள் மகம்மதியர்களாயினும், நாங்கள் பாதரக்ஷகளுடனே கரையி லிறங்க, அவர்கள் கண்டு, அது மிகப் பரிசுத்த ஸ்தலமாகையினாலே நாங்கள் கால்களில் பாதரக்ஷகள் தரித்துக்கொண்டு இறங்கக் கூடாதென்று எங்களைக் கண்டித்தார்.

ஒரு மலையின்மீது இரண்டு அல்லது மூவாயிரம் அடி உயரத்திலே கட்டப்பட்டுள்ள டாக்டிசுலைமான் என்ற ஒரு சிறு க்ஷேத்திரத்தைப் பார்ப்பதற்குச் சுவாமிகளும் மற்றவர்களும் சென்றார்கள். சுவாமிகள் இந்த க்ஷேத்திரத்தின் மேலே ஏறிச் சுற்றிலும் பார்த்து, 'ஆ. ஆ! பார்த்தீர்களா? க்ஷேத்திரம் கட்டுவதில் ஹிந்துவுக்குள்ள சாமர்த்தியத்தை! மனோரம்மியமான காட்சியின் மத்தியிலே அவன் எப்பொழுதும் க்ஷேத்திரம் கட்டுகிறான்! இந்த க்ஷேத்திரம் காச்மீரம் முழுதுக்கும் நடுநாயகமாயிருக்கிறது. ஹரி பர்வதமானது, படுத்திருந்த சிங்கம் கிளம்புவதுபோல,

நீல நிற நீரின் மத்தியிலிருந்து எழும்புகிறது. மார்த்தாண்ட க்ஷேத்திரத்தின் பாதங்களி னடியிலே இப் பிரதேசம் முழுதும் விழுந்து கிடக்கிறது," என்றார்.

இன்னும் சுவாமிகளுடைய மனத்திலிருந்து இவ்விடத்திலே அநேகம் நீதி மொழிகள் வெளிக் கிளம்பி வந்தன. "ஒரு காலத்திலே சீதையை ஏமாற்றித் தூக்கிக்கொண்டு போவதற்காக ராமர் போன்று வேஷம் தரிக்கும்படி ராவணன் கூறப்பட, ராவணன் 'நான் அதையும் ஆலோசனை செய்து பார்த்தேன். ஒருவன் போன்ற ஆகவேண்டுமானால், அவனைத் தியானிக்க வேண்டும். ராமர் ஈஸ்வரன் தானே. நான் அவரைத் தியானிக்கும்பொழுது, பிரஹ்ம பதவியும் எனக்குத் துரும்புமாத்திரமே யல்லவா? அப்படியிருக்க நான் எப்படி யொரு ஸ்திரீயைப்பற்றி நினைக்க முடியும்?' என்றான். ஆகையால், மிகமிகக் கொடிய வாழ்க்கையிலுங்கூட இந்த ரகஸ்யங்கள் புதைந்து கிடக்கின்றன."

சுவாமிகளுக்கு எப்பொழுதும் வேடிக்கை விளையாட்டுக்களிலே பிரியம் அதிகம் அல்லவா? ஜுலை மீ 4-ம் தேதி வரப் போகின்றது. இந்த நாள் அமெரிக்காவுக்கு ஸ்வதந்திரம் அளித்த நாள். அமெரிக்கர்கள் இந்தத் தினத்தை ஓர் உற்சவம் போலக் கொண்டாடுவது வழக்கம். சுவாமிகளுடனே கூட மிஸஸ் ஓல்புல் என்னும் பெயருடைய அமெரிக்க மாது போயிருந்தார். இம் மாது அந்த "ஸ்வதந்திர தின"த்தைக் கொண்டாடுவதற்கு அமெரிக்கக் கொடி

தம்மிடம் இல்லையே யென்று சிறிது வருந்தினாள்; இது சுவாமிகளுக்குத் தெரிந்தது. சுவாமிகள் அமெரிக்கரல்லாத சிஷ்யர் ஒருவரைக் கூட இட்டுக்கொண்டு 3-ம் தேதி பிற்பகலிலே வெளியே சென்று ஒரு தையற்காரனை அழைத்து, அமெரிக்கக் கொடியின் மாதிரி காட்டிக் கொடுக்கும் படி அந்தச் சிஷ்யரிடத்திலே கூற, அப்படியே ஒருவாறு ஒருகொடி யொன்று தயார்செய்யப்பட்டது. இந்தக் கொடியானது பலவித செடி கொடிகளால் சூழப்பட்டு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, சாப்பாட்டு அறைப் படகின் முனையிலே கட்டிப் பறக்க விடப்பட்டது. 4-ம் தேதியன்று காலையிலே சிற்றுண்டி விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. "ஜுலை 4-ம் தேதிக்கு என்று தலைப் பெயரிட்டுச் சுவாமிகளால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட சில பாக்கள் அச் சமயத்திலே உரக்கப் படிக்கப்பட்டன. நான்கு வருஷங்களுக்குப் பின் சுவாமிகள் இதே தினத்தில்தான் பிறவிப் பந்தங்களை யறுத்தெறிந்து விட்டு ஸ்வதந்திரம் (முக்தி) அடைந்துவிட்டார். இந்த அமெரிக்க "ஸ்வதந்திர தினக்" கொண்டாட்டமானது சுவாமிகளும் மற்றவர்களும் ஸ்ரீ நகரிலிருந்து டால் என்ற ஏரிக்கு வேடிக்கையார்த்தம் போயிருந்தபொழுது அங்கு நடத்தப்பட்டது. சுவாமிகளும் மற்றவர்களும் இந்த ஏரிக்கரையிலே மொகலாய சக்கரவர்த்திகளால் கோடைகால வாசத்துக்காக இயற்றப்பட்ட இரண்டு உத்தியான வனங்களைப் பார்வையிட்டார்கள்.

அன்று மாலையிலே சுவாமிகளுடைய சிஷ்யர்களுள் ஒருவர் தமக்கு எப்பொழுது விவாகமாகும் என்பதைக் குறித்துக் குறி பார்த்த விஷயம் சுவாமிகளுக்குத் தெரிந்து சுவாமிகளுக்குச் சிறிது மனவருத்த முண்டாயிற்று. ஆயினும், சுவாமிகள் அந்த வருத்தத்தை வெளியில் காட்டிக் கொள்ளாது இருந்துவிட்டாராயினும் மறுநாள் காலையிலே தியாகாவேசம் கொண்டு, சிஷ்யர்களுடனே சம்பாஷிக்க ஆரம்பித்து, "வீட்டு எண்ணமும் விவாக எண்ணமும் அடிக்கடி என்னுடைய மனத்தைக்கூடப் பீடிக்கின்றன," என்றார்.

சுவாமிகளுக்கு வீட்டு எண்ணமும் விவாக எண்ணமும் ஒருபொழுதும் உண்டானதே கிடையாது; ஆனால், இப்பொழுது ஏன் இப்படிச் சொன்னாரென்றால், அவ் வெண்ண முடையவர்களை இப்பொழுது கண்டிக்கப்புறப்பட்டாரா தலினாலும், தம்மைக் கண்டித்துக்கொள்ளுதல் போலக் காட்டிக் கொள்ளுதலே பெரியோருடைய இயற்கை யாதலினாலும் ஆம். "ஜனகர் போன்று ஆவது அவ்வளவு சுலபமா? சிம்ஹாசனத்தின் மேலே சற்றும் பற்றற்று உட்கார்ந்திருப்பது சுலபமா? பொருளை அல்லது கீர்த்தியை, பெண்டீரை அல்லது பிள்ளையைச் சற்றும் கவனிக்காமலிருக்க முடியுமா? மேல் நாட்டிலே ஒவ்வொருவரும் தாம் இந்த நிலைமையை அடைந்துவிட்டதாக என்னிடம் கூறியுள்ளனர். ஆனால், நான் சொல்லக்கூடிய தெல்லாம் 'அத்தகைய பெரியோர் இந்தியாவிலே பிறப்பதில்லை,' என்ப

தே," என்று சுவாமிகள் கூறிவிட்டு, முந்திய நாள் விவா கத்தைப்பற்றிக் குறி பார்த்துக்கொண்டிருந்த சிஷ்யர் இரு ந்த பக்கமாகத் திரும்பிப் பார்த்து, "மின்மினிப் பூச்சிக் கும் சூர்யனுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ, ஒரு சிறு குட்டைக்கும் அகண்டமான சமுத்திரத்துக்கும் எவ் வளவு வித்தியாசமுண்டோ, கடுகு வித்துக்கும் மஹா மேரு பர்வதத்துக்கும் எவ்வளவு வித்தியாச முண்டோ அவ் வளவு வித்தியாசம் கிருகஸ்தனுக்கும் சந்யாசிக்கும் உண் டென்று உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்வதற்கும், உங்களுடைய குழந்தைகட்குப் போதிப்பதற்கும் ஒரு பொ ழுதும் மறவாதீர்கள்." "எல்லாவற்றிலும் பய முண்டு, தியாகத்தில் மாத்திரம் பய மில்லை,," என்று தியாகத்தி னுடைய பெருமையை மிகுந்த ஆவேசத்துடனே எடுத் துரைத்தார்.

சுவாமிகளுக்கு ஏகாந்த வாசத்திலே அவா அதிகரித் துக்கொண்டே வந்தது. எங்கேனும் தனியே சென்று தானே தானாய் எல்லாம் தன்மயமாய்விட சுவாமிகள் விரும்பினார். அன்றையதினம் சுவாமிகளுடைய இரண்டு அமெரிக்க சிஷ்யர்கள் — தீரமாதாவும் ஜயாவும்—சொந்த வேலையாகக் குல்மார்க்கத்துக்குச் சென்றார்கள்; சுவாமிகள் அவர்களை வழியனுப்பவர்போலக்கொஞ்சத் தூரம்சென்று, பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து எங்கோ போய்விட் டார். மற்றச் சிஷ்யர்கள் 'சுவாமிகள் அந்த அமெரிக்க சிஷ் யர்களுடன் கூடப் போயிருக்கிறார்,' என்று நினைத்துக்

கொண்டிருந்தார்கள். ஆனல் ஜுலை 10-ம் தேதி யன்று அவ் விரண்டு அமெரிக்க சிஷ்யர்களும் திரும்பி வந்து சேர்ந்தார்கள்; ஆனல், சுவாமிகளைக் காணவில்லை. எல்லோரும் மிகுந்த வருத்தமுற்றுச் சுவாமிகளைத் தேட ஆரம்பித்தார்கள். சுவாமிகள் தங்களிடத்தில் இவ்வளவு அந்தரங்க வாத்சல்லியம் வைத்திருந்தும் 'சொல்லாமற் போய்விட்டாரே' என்று சிஷ்யர்கள் ஒவ்வொருவரும் வருத்தப்பட்டார்கள். என் செய்வது? சுவாமிகளிடத்திலே வைத்த பக்தியின் மேலிட்டால் இந்தச் சிஷ்யர்கள் உற்ருர், உறவினர், நாடு, நகரம் முதலிய எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு, சுவாமிகளே கதி யென்று வந்துவிட்டவர்கள் சுவாமிகளைத் தேடாமலிருப்பார்களா? சுவாமிகளைப் பற்றிப் பல இடங்களிலும் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

'சுவாமிகள் சுனமார்க்கம் வழியாக அமரநாதத்துக்குச் சென்றுள்ளார்,' என்றும், 'ஆனல், அவ் வழியே திரும்பி வரக் கருதி யுள்ளார்,' என்றும் தெரியவந்தது. "ஆ! ஆ அவர் கையிலே ஒரு காசு கூட இல்லையே. அவர் என்ன கஷ்டப் படுகிருரோ? நம்மிடத்திலே வெறுப்புற்றுச் சென்றுவிட்டாரோ? நம் மீது அவருக்கு வெறுப்பு உண்டாகும்படியாக நாம் ஒன்றும் செய்யவில்லையே; அல்லது, 'ஏகாங்கியாகத் திரியவேண்டும்,' என்ற எண்ணம் அவரைப் பலமாகப் பற்றிக்கொண்டதோ? என்னவோ? ஒன்றும் தெரியவில்லையே. அனைத்தையும் துறந்து ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பால் வந்தும் குரு சிசுருஷை

செய்யும்படியான பாக்கியம் நமக்குக் கிடைக்காமற் போய் விட்டதே" என்று அவர்கள் ஏங்கி வருந்தினார்கள். சுவாமிகளைத் தேடி அமர நாதத்துக்குச் செல்லலாமா?" என்று யோசனை செய்தார்கள்; ஆனால், "இல்லை, நாம் அப்படியவரிடத்தில் போகக் கூடாது; அவர் நம்மை யொரு பொழுதும் மறக்கமாட்டார், வெறுக்கமாட்டார், சீக்கிரம் வந்துவிடுவார்; அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது," என்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

இரண்டொரு நாட்கள் ஆயின; ஒரு வாலிபர் இவ் வைரோப்பிய சிஷ்யர்களிடம் வந்து, "சுவாமிகள் எங்கே?" என்று கேட்க, இவர்கள் "அவர் அமரநாதம் போயிருக்கிறார்," என்றார்கள். உடனே அவ் வாலிபர் தாமும் சுவாமிகளைத் தேடிக்கொண்டு அமரநாதம் போவதாகப் புறப்பட்டார். இவர்கள் "சீக்கிரம் வந்துவிடுவார்; நீங்கள் அங்குப் போக வேண்டாம்," என்று கூறினார்கள்.

அவ் வாலிபர் ஒரே பிடிவாதமாக "நான் சுவாமிகளைத் தரிசித்தா லொழிய ஓரிடத்தில் தங்கேன்; அவரிடத்திலே முக்தி மார்க்க உபதேசம் பெற்றுத் தன்யன் ஆகவேண்டும்; அப்பொழுதுதான் எனது ஜீவிதம் சபலமாகும்," என்று சொல்லிவிட்டு, அமரநாதம் நோக்கி நடந்தார்.

பின்னர் இரண்டொரு நாட்கள் கழிந்தன. ஜூலை மீ 15-ம் தேதி யன்று இவ் வைரோப்பிய சிஷ்யர்கள் 'படகிலேறிச் சிறிது தூரம் உலாவிச் சென்று வரலாம்,' என்று புறப்படவே, தூரத்திலே ஒரு படகு எதிர் நோக்கி வருவ

தைக் கண்டார்கள். ஒரு மணி நேரத்துக்குள்ளே சுவாமிகளே திரும்பி வந்துவிட்டார். சுவாமிகளுக்கும் சந்தோஷம் அதிகம். அப்பொழுது கோடைகாலமா யிருந்ததினுல், வழியிலே பாறைகள்போலிருந்த பனிக்கட்டிகள் பல உருகி, தண்ணீர் பெரு வெள்ளமாகப் புறப்பட்டுவிட்டதினுல், சுவாமிகள் சுனைமார்க்க ரஸ்தா வழியாகப் போக முடியவில்லை; ஆதலால்தான் திரும்பி வந்துவிட்டார்.

ஜுலைமீ 17-ம் தேதி சுவாமிகள் தீரமாதாவினுடைய படகுக்குள்ளே வந்து உட்கார்ந்துகொண்டு பக்தியைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். 'உமையும் சிவனும் ஒன்றே,' என்ற கொள்கையைப்பற்றிக் கூற ஆரம்பித்து, "அரூபியாகிய ஈஸ்வரன் ரூபத்தி லமர்ந்தார்; அந்த ரூபத்திலே பாதி மனிதன், பாதி ஸ்திரீ. ஒரு பக்கத்திலே கறுத்துச் சுருண்டு அழகிய கூந்தல், மறு பக்கத்திலே கயிறு போன்று திரிக்கப்பட்ட ஜடை," என்று பொருள் படும்படியான ஒரு சுலோகம் கூறி, உடனே "அதே ஈஸ்வரன் கிருஷ்ணனுகவும் ராதையாகவும் ஆனுர்," என்று ஈஸ்வரனுடைய லீலாவிநோதங்களையெடுத்துப்பொழிந்தார்; அவருக்கு ஹிருதயத்திலே பக்தி சுரந்து சுரந்து பெருகிக் கொண்டிருந்தது. ஆகார வேளையாய் விட்டது, சமையலும் ஆய்விட்டது. சுவாமிகளைப் பிக்ஷைக்கு எழுந்தருளும்படி பன்முறையும் வந்து கேட்டுக்கொண்டார்கள். சுவாமிகளுக்கு பக்தி யோட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு மனம் வரவில்லை. கடைசியாக சுவாமிகள் எழுந்திருந்து, இந்த

பக்தியெல்லாம் ஒருவனுக்கு உண்டானல், ஆகாரம் எதற்கு?'' என்று சொல்லிக்கொண்டே பிக்ஷைக்குச் சென்றார். ஆனால், சுவாமிகள் சீக்கிரம் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டு முன்விட்ட விஷயத்தைத் தொடர்ச்சியாகப் பிடித்துப் பேசிக்கொண்டிருந்தார். ஸ்ரீ ராதா கிருஷ்ண பக்தியைப்பற்றிச் சுவாமிகள் வெகுவாகப் பேசியபொழுதிலும், உத்சாகத்துடனே "ஒப்பற்ற கர்மயோக நிஷ்டை செய்வதற்குச் சிவ பக்தியே சிறந்தது'' என்றார்.

ஜுலைமீ 18வ யன்று ஸ்வாமிகளும் அவருடைய சிஷ்யர்களுமாக இஸ்லாம்பாத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். இப்பொழுது பாண்டவர் ஸ்தானம் என்ற பூர்வீக க்ஷேத்திரம் ஒன்றை இவர்கள் தரிசித்தார்கள். இந்த க்ஷேத்திரமானது ஜீலம் நதிப் பக்கத்திலே ஒரு காட்டுக்குள்ளே பாசி படர்ந்து கவிந்துள்ள ஒரு குட்டையிலே அமிழ்ந்திக் கிடந்தது. ஸ்வாமிகள் தமது சிஷ்யர்களை அக் கோவிலினுள்ளே யிட்டுச் சென்று, அக் கோவிலிலே பணிக்கப்பட்டிருந்த இந்திய சித்திர சிற்ப வேலைப்பாடுகளையெல்லாம் ஒவ்வொன்றாகச் சுட்டிக் காட்டி, அவ்வவற்றின் பொருள்களை விளக்கிக் கூறினார். 'இந்த க்ஷேத்திரம் கி. பி. 150-ம் வருஷ சமயத்திலே கனிஷ்கராஜனுடைய காலத்திலே ஒரு வேளை கட்டப்பட்டிருக்கலாம்,' என்று சுவாமிகள் அபிப்பிராயப்பட்டார். சுமார் 1800 வருஷங்களுக்கு முன்னமே இந்த க்ஷேத்திரமானது இந்தியாவிலுள்ள பிரசித்தி பெற்ற க்ஷேத்திரங்களுள் ஒன்று

யிருந்தது. ஆ! ஆ! இப்பொழுது எப்படி யிருக்கின்றது? கால கதியின் கோலம்தான் என்னே?

அன்று மாலையில் ஸ்வாமிகள் தீரமாதாவினுடைய படகுக்குள்ளே நுழைந்து உட்கார்ந்துகொள்ளவே, அவருடைய சிஷ்யர்கள் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். வெவ்வேறு மதங்களிலே காணப்படுகிற கர்ம காண்டம், உபாசனகாண்டம் ஆகிய இவ் விரண்டையும்பற்றிப் பெரிய வாக்குவாதம் நடந்தது. ஸ்வாமிகள் "எல்லாம் ஹிந்துவேத மதத்திலிருந்து தோன்றியவையே" என்று அதற்கு அநேக நியாயங்கள் எடுத்துப் பேசி முடித்தார்.

இங்கிருந்து சுவாமிகளும் மற்றவர்களும் படகேறி ஜீலம் நதி வழியாகவே அவந்திபுரத்துக்குச் சென்றார்கள். அங்கே இப்பொழுது பாழடைந்து கிடக்கும் இரண்டு பெரிய க்ஷேத்திரங்களைப் பார்வையிட்டுக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு, 21-ம் தேதி யன்று விஜயவேஹாரம் என்ற க்ஷேத்திரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று முழுதும் ஸ்வாமிகளுக்கு உடம்பு சௌகரியப்படவில்லை; அன்று பகலிலே இஸ்லாமாபாத் நகர் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே நிழலடர்ந்த பிரமாண்டமான விருக்ஷங்களின் மத்தியிலே ஸ்வாமிகள் உட்கார்ந்து தமது சிஷ்யர்களுக்கு அநேக ரகஸ்யங்களை எடுத்துப் போதித்தார்.

மாலை நேரம். ஸவாமிகள் தீரமாதாவுடனும் ஜயாவுடனும் பேசிக்கொண்டிருக்கையில், "நான் சௌக்கியமா

யிருக்கும்பொழுது, என்னுடைய மனம் பல இடங்களிலும் செல்லலாம், உறுதி குறைந்து மிருக்கலாம்; ஆனால், ஏதே னும் துன்பமோ வியாதியோ நேர்ந்தகாலத்து—தாம் கை யில் வைத்திருந்த இரண்டு சிறிய கூழாங்கற்களைத் தட்டிக் கொண்டே—எனது சித்தமானது வைரம் பெற்று மரணத் தை எதிர்த்துநிற்கும்; அப்பொழுது நான் இக் கற்கள் போலக் கடினமானவன்; ஏனெனில், நான் ஈச்வரனுடைய பாதாரவிந்தங்களை ஸ்பர்சித்துள்ளேன்" என்றார்.

பின்னர், பேச்சுப் பல விஷயங்களிலும் ஆரம்பித்து, சுமார் 2 மணிநேரம் நடந்தது. சுவாமிகள்பிருந்தாவனத்தி லுல குரங்குகள் செய்யும் வேடிக்கைகளை யெல்லாம் பற் றிக் கூறினார்; தமது பழைய சஞ்சாரகாலத்திலே ஈச்வரன் தமக்குச் சகாயம் செய்துள்ள சில விஷயங்களைக் கதைகள் போன்று சொன்னார்.

"கிரேக்க ஜனசமூகமும் அல்லது எந்த ஜனசமூக மும் தேசாபிமானத்தை அவ்வளவு தூரம் கொண்டு செல்ல வில்லை. அவர்கள் பேசுகிறதில்லை, நடக்கிறார்கள்— தேசத் துக்காக எல்லாவற்றையும் தியஜிக்கிறார்கள். சக்ராதிபத் தியத்திலே ஒற்றுமை யுண்டு பண்ணுவதற்காகத் தங்க ளுடைய ராஜீய பாத்தியதைகளையும் அதிகாரங்களையும் தியாகம் செய்த பெரியோர் ஜப்பானிலே இப்பொழுதும் இருக்கிறார்கள். ஜப்பானிய யுத்தசமயத்திலே துரோகி யொருவர்கூடக் காண முடியவில்லை. அதை நினைத்துப் பாருங்கள்!" "ஹிந்துக்களுக்குள்ளே விவாகமானது

விபஷ்டி சுகத்தின் பொருட்டன்று; ஆனல், ஜனசமூகத்தி னுடையவும் ஜாதியினுடையவும் நன்மைக்காவே.'' "மேல் நாட்டினராகிய நீங்கள் மிகுந்த துக்க முள்ளவர்கள்! நீங்கள் துக்கத்தை யுபாசிக்கிறீர்கள்! உங்கள் தேசம் முழுதிலும் நான் அதைப் பார்த்துவிட்டேன். மேல் நாட்டிலே ஜாதீய வாழ்க்கையானது சிரிப்புப்போன் றிருக்கின்றது; ஆனல், அடியிலே துக்கம்; அழுகையிலே அது முடிகிறது. வேடிக்கையும் விளையாட்டும் எல்லாம் மேல்மட்டத்திலே யே யிருக்கின்றன. உண்மையில் வேதனை நெருங்கி நிறைந் திருக்கிறது. இப்பொழுது, இங்கே, வெளியில் வி[illegible] யும் மந்தகரமாயும் இருக்கிறது; ஆனல், அடியிலே [illegible] யின்மையும் களிப்பும் இருக்கின்றன.'' இம்மாதிரி யுபதே சங்களெல்லாம் அவ்விடத்திலே செய்யப்பட்டன.

மறுநாள், 23-ம் தேதியன்று, சுவாமிகளும் மற்றவர்க ளும் அழிந்து கிடக்கும் மார்த்தாண்ட க்ஷேத்திரத்தைப் பார்க்கச் சென்றார்கள்; அங்கிருந்து 25-ம் தேதி புறப் பட்டு, அச்சாபலத்துக்குச் சென்றார்கள். அங்கே அமரநாத க்ஷேத்திரம் செல்வதற்காகச் சுமார் 3000 யாத்திரிகர்கள் காத்துக்கொண்டிருந்ததைக் கண்ட சுவாமிகள் தாமும் அமரநாதம் போக விரும்புவதாகவும், தம்முடன்கூட சகோ தரி நிவேதிதா அம்மையார் மாத்திரம் வந்தால் போதுமென் றும் தம்முடைய சிஷ்யர்களுடன் சொல்ல, மற்றவர்கள் சுவாமிகளை விட்டுப் பிரிய மனமில்லாது வருந்தினார்களாயி னும், சுவாமிகளுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு நடக்கக்

கடமைப்பட்டுள்ள சிஷ்யர்களாதலால் நாங்கள் பல்கம் என்ற ஊர்வரையில் சுவாமிகளுடன் கூட வருவதாகவும், அங்கிருந்து சுவாமிகளும் சகோதரி அம்மையாரும் மாத்திரம் போகலாமென்றும், சுவாமிகள் திரும்பி வரும் வரையில் தாங்கள் அவ் வூரிலேயே காத்துக்கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். அப்படியே மறுநாள் பகல் போஜனமான பின்னர்ச் சுவாமிகளும் மற்றவர்களும் அமரநாதத்திற்குப் புறப்பட்டார்கள்.

60-வது அத்தியாயம்

ஆநந்த யாத்திரை

ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் ஹிமோத்கிரியிலே செல்கிறார்கள்; புருஷர்கள், ஸ்திரீகள், சிசுக்கள், விருத்தாப்பியர்கள் எல்லோரும் செல்கிறார்கள்; ஒரு பெரும் சேனை திரண்டு ஜய கோஷம் செய்து வருவது போல, இப் பெருங் கூட்டம் சிவகோஷம் செய்து செல்கிறது. திடீரென்று, இவர்கள் ஓரிடத்திலே தங்க எண்ணி விடுகிறார்கள்; அங்கே ஒரு சிறிய ஊர் ஏற்பட்டுவிடுகிறது; எங்குப் பார்த்தாலும் கூடார வீடுகள் கிளம்பிவிடுகின்றன; அழகிய தெருக்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆ! ஆ! பலவிதக் கூடாரங்கள்! ஆ! ஆ! சிறிய கூடாரங்கள்! பெரிய கூடாரங்கள்! கடைத்தெருக்கள் உண்டாகின்றன; யாத்திரிகர்களுக்கு இன்றியமையாதனவெல்லாம் அங்குக் கிடைக்கும். மாலை நேரமாகின்றது. ஆங்காங்குக் கூடாரங்களிலே

மினுக்கு மினுக்கென்று வெளிச்சம் தோன்றுகிறது; சரீராத்தியந்தமும் பஸ்மோத்தூளிதரான சாதுக்கள் பலர் தங்கள் முன்னே வளர்த்தியுள்ள அக்கினிகுண்டங்களினடியிலே உட்கார்ந்துகொண்டு வேதாந்த விஷயமாக விவகரித்துக்கொண்டிருக்கிறார்கள்; சிலர் கண்மூடி, நிஷ்டையி லிருக்கிறார்கள; பஜனை அமர்க்களப்படுகிறது; சில இடங்களிலே சங்க சப்தம் செவிடுபடுகிறது; ஆங்காங்குத் தீவர்த்தி வெளிச்சங்களும் தோன்றுகின்றன. ஆ! ஆ! என்ன அழகு! என்ன ஆநந்தம்! இந்தியாவுக்குப் புறம்பே எந்தத் தேசத்திலாவது இம்மாதிரி காட்சி காண முடியுமா?

எத்தனையோ யுகங்களாக லக்ஷக்கணக்கான ஜனங்களுடைய நம்பிக்கையினாலே பரிசுத்தம் பண்ணப் பெற்று அநாதிகால பரம்பரையாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்ற விதிகளையும் வழக்கங்களையும் வெகு ஜாக்கிரதையாக அநுசரித்து வந்தார். அவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசம் அப்படித்தான். யாத்திரை காலத்திலே ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலே வேத விதிப்படி ஸ்நாநம் செய்து, சூர்யநமஸ்காராதி சிவபூஜைகளெல்லாம் முடித்து, ருத்திராக்ஷமாலை யெடுத்து ஜபம்பண்ணி, பிரதக்ஷிணங்கள் வந்து, செய்ய வேண்டுவன வெல்லாம் விதிப்படி செய்து தீர்ப்பார். இப்பொழுது மேனாட்டுச் சிஷ்யர்களுக்கு இது முதலில் ஆச்சர்யமாயிருந்தது. மேனாட்டிலே மஹா மேதாவிகளெல்லாம் மயக்கும்படி நியாயங்க ளெடுத்துப் போதி

த்த மஹான் இந்த—சாதாரண ஜனங்களுடைய—வழக்கங் களை யநுசரித்தது அவர்களுக்கு ஆச்சர்யமாகவே யிருந் தது. ஆனல் வரவர, இவர்களும் சுவாமிகளுடைய உண் மை மனத்தைத் தெரிந்துகொண்டார்கள்.

ஜூலை மீ 29உ வியாழக்கிழமை சுவாமிகளும் மற்ற வர்களும் பல்கம் என்ற ஊர் வந்து சேர்ந்தார்கள். அங்கே ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களும் கூடாரம் அடித்துக் கொண்டு தங்கினர்கள்; சுவாமிகளும் ஐரோப்பிய சிஷ்யர்க ளும் கூட அங்கே கூடாரங்கள் அடித்துக்கொண்டார்கள். அங்கே யாத்திரிகர்களாக வந்த சாதுக்கள் தங்கள் மத்தி யிலே ஐரோப்பியர்கள் நுழைந்திருப்பது காணச் சகியா ராகி, "இவ் ஐரோப்பியர்களுடைய கூடாரங்கள் அங் கிருந்து எடுக்கப்பட்டுவிடவேண்டும்," என்று கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

சுவாமிகள் அவர்களுடைய கூச்சலை லக்ஷியம் செய்ய வில்லை. பிறந்த மேனியர்களாய் வெளிப்புறப்பட்டுள்ள பல சாதுக்கள் சுவாமிகளுக்கு அநுகூலமாகவே யிருந்தார்க ளாயினும், அவர்களிலே யொருவர் சுவாமிகளிடம் வந்து, "சுவாமி! தங்களுக்குச் சக்தியுண்டு; ஆனல், அதைக் காட் டுதல் கூடாது" என்று கூறவே, சுவாமிகள் தமது ஐரோப் பிய சிஷ்யர்களுடைய கூடாரங்களை அங்கிருந்து எடுத்துத் தூரத்திலே யடிக்கும்படி ஏற்பாடு செய்தார். ஆனல், மறு நாள் அவர்கள் ஆக்ஷேபிக்கவில்லை. சுவாமிகளும் அவரு டைய பிரதம சிஷ்யாகிய சகோதரி நிவேதிதா அம்மையார்

ரும் தங்களுடன் கலந்து கூடாரங்கள் அடித்துக்கொண்டிருக்கும்படி அந்தச் சாதுக்கள் விட்டுவிட்டார்கள். வழிநெடுக, யாத்திரிகர்கள் தங்கும்படி நேரிட்ட இடங்களிலே, சுவாமிகளுடைய கூடாரத்திலே எண்ணற்ற சாதுக்களும் யாத்திரிகர்களும் சுவாமிகளுடைய சம்பாஷணையைக் கேட்பதற்காக வந்து கூடுவார்கள். இந்த யாத்திரிகர்களுடைய சௌகர்யங்களைக் கவனிப்பதற்காக காச்மீர சமஸ்தானத்திலே ஒரு தாசில்தார் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் மகம்மதியர். சுவாமிகள் சர்வ மதங்களையும் சமரசமாகப் பாவித்துப் பேசி, இஸ்லாம் மதத்தினுடைய உண்மைகளை யெடுத்துரைக்கக் கேட்ட அந்தத் தாசில்தாரும் அவருடைய சிப்பந்திகளும் சுவாமிகளுடைய சம்பாஷணைகளைக் கேட்பதற்குத் தினந்தோறும் வரத் தொடங்கினார்கள்; இது மாத்திர மன்று, தங்களைச் சுவாமிகள் சிஷ்யர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டத் தொடங்கினார்கள். சகோதரி நிவேதிதா அம்மையாரும் எல்லோராலும் விரும்பப்பட்டவராய்விட்டார். பல்கத்திலே யாத்திரிகர்கள் ஏகாதசி விரதம் அநுஷ்டித்துக்கொண்டு, மறுநாட் காலையிலே ஆறு மணிக்குள்ளாகத் துவாதசி பாரணையை முடித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள். சுவாமிகளும் நிவேதிதா சகோதரியும் காலையில் சிற்றுண்டி யுண்டு புறப்படுவதற்கு முன்னமேயே, மற்ற யாத்திரிகர்கள் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

அங்கிருந்து சந்தனவரம். அங்கே யொரு கணவாயினோரத்திலே கூடாரம் அடிக்கப்பட்டது. சுவாமிகள் இங்

திருந்த நிவேதிதா சகோதரிக்கு ஆலங்கட்டிக் குவியல்களைக் கால் நடையாக நடந்து கடக்கும்படி ஆக்ஞை செய்தார். மறுநாள் ஆலங்கட்டிக் குவியல்களையும் பனி மூடிய சிகரங்கள் பலவற்றையும் கடந்து பந்தஜார்ணி என்னும் இடத்துக்கு யாத்திரிகர்கள் வந்து சேர்ந்தார்கள். இவ்விடத்திலே ஐந்து தீர்த்தங்கள் இருக்கின்றன; இவை ஊற்றுக்களாம். யாத்திரிகர்கள் இவை யொவ்வொன்றிலும் ஸ்நாநம் செய்து அப்படியே ஈரத்துணியுடனே மறு ஊற்றுக்குச் சென்று ஸ்நாநம் முடித்து, இவ்விதமாக ஐந்து ஊற்றுக்களிலும் ஸ்நாநம் பண்ணவேண்டு மென்பது விதி. சுவாமிகள் தமது ஞானபுத்திரியாகிய சகோதரி நிவேதிதா அம்மையாருக்குத் தெரியாமலே இந்த ஸ்நாநங்களை யெல்லாம் விதி தவறாது முடித்துக்கொண்டார்.

இங்கிருந்து யாத்திரிகர் செங்குத்துப் பாதைகளிலே ஏறத் தொடங்கிப் பின்னர் அங்கிருந்து சிறிது கீழே யிறங்கி—ஆ! ஆ! அணுவளவு கால் தவறினால் அதல சுதல பாதாளம்தான்!— பின்னர் ஆலங்கட்டியைப்பாறையை அநேகமைல் தூரம் கடந்து செல்ல, அங்கு ஒரு சிற்றாறு தென்பட்டது. அதிலே எல்லோரும் இறங்கி ஸ்நாநம் செய்து பரிசுத்தர்களாய், அமரநாதம் நோக்கி மறுபடியும் செங்குத்தாக ஏறப் புறப்பட்டார்ள். சுவாமிகள் ஆத்மாநுசந்தானம் செய்துகொண்டே, பின்பக்கத்திலே மெல்ல வந்துகொண்டிருந்தார். சகோதரி நிவேதிதா அம்மையார் யாத்திரிகர்களுடனே கலந்து முன் சென்றுவிட்டா

ராதலால், திரும்பிப் பார்த்துச் சுவாமிகளைக் காணாது, அங்குத் தங்கிச் சுவாமிகளுக்காகக் காத்துக்கொண்டிருந் தார். சீக்கிரத்திலே சுவாமிகள் வந்து சேர்ந்து, நிவேதி தா அம்மையாரை முன்னே நடக்கும்படி சொல்லியனுப்பி விட்டு, நதியிலே ஸ்நாநம் செய்து, சரீரம் முழுதையும் விபூதியா லலங்கரித்துக்கொண்டு சிவ நிஷ்டையிலே ஈடு பட்டவராய் அமரநாத க்ஷேத்திரத்தினுள்ளே சென் றார். அரையிலே உடுத்தியிருந்த ஒரே சிறு வஸ்திரத்தைத் தவிர, வேறு வஸ்திரம் இல்லை. சிவலிங்கத்தின் முன்னே நின்று, சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்து இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, கண் மூடி மௌனியாகி மெய் மறந்துவிட்டார். இந்த க்ஷேத்திரத்திலே சிவலிங் கம் பனிக்கட்டியாலாயது. சுவாமிகள் சிவ நிஷ்டராய் வெகு நேரம் இருந்து தெளிந்தார். நிஷ்டை சமயத்திலே சுவாமிகளுக்கு உண்டான அநுபூதிகள் எத்தகையன என்பது நமக்கு எப்படித் தெரியும்? அமரநாதர் தமக் குத் தரிசனம் கொடுத்தா ரென்றும், தாமாகவே சரீர பந்தங்களை நீக்கிக்கொள்வதற்கு விரும்பும்பொழுது தான் மரணம் உண்டாகுமாறு அமரநாதர் கிருபை புரிந் துள்ளா ரென்றும் சுவாமிகள் கூறினர். "அவர்தாம் யா ரென்று தெரிந்துகொள்ளும்பொழுது சரீரத்திலிருந்து பிரிந்துவிடுவார்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்ததும் இப்பொழுது அமரநாதர் கிருபை பாலித்ததும் ஒத்திருக்கின்றன வல்லவா? ஆனல்,

சுவாமிகள் அந்த நிஷ்டையிலே மிகக் களைத்துவிட்டார். ஒரு வைத்தியர் பின்னர்ச் சுவாமிகளைப் பார்த்துவிட்டு, "சுவாமி! அது அநேகமாய் மரணமே! தங்களுடைய ஹிருதயத் துடிப்பு நின்றிருக்கவேண்டியது இயற்கை; ஆனால், அப்படி நிற்பதற்குப் பதிலாக, தங்களுடைய ஹிருதயம் பெரிதாக விரிந்திருக்கிறது" என்றார்.

நதிதீரத்திலே, அரைமணி நேரத்துக்கப்புறம் சுவாமிகள் ஒரு அவதூதருடனும் சகோதரி நிவேதிதா அம்மையாருடனும் ஒரு பாறையின்மேல் உட்கார்ந்து ஆகாரம் செய்துகொண்டே, "நான் அத்தியாநந்த மடைந்தேன். பனிக்கட்டியாலாய அந்த லிங்கம் சிவமே யென்றுதான் நினைத்தேன். திருட்டுப் பிராஹ்மணர்கள் இல்லை; வியாபாரம் இல்லை; தப்பிதமாக ஒன்றுமில்லை. எல்லாம் உபாசனையே. எந்த ஸ்தலத்திலும் நான் இவ்வளவு ஆநந்தம் அடைந்ததில்லை" என்றார்.

அமரநாதத்திலிருந்து புறப்பட்டு அழகிய மலைப்பாதைகளை யெல்லாம் கடந்து மறுபடியும் பல்கம் வந்து சேர்ந்தார்கள். இங்கே சுவாமிகளுடைய மற்ற ஐரோப்பிய சிஷ்யர்கள், சுவாமிகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தவர்கள், இப்பொழுது சுவாமிகளைக் கண்டவுடனே அத்தியாநந்த பூரிதர்களாகி, ஆநந்தத் தாண்டவ மாடினார்கள். சுவாமிகள் அவர்களிடத்திலே அன்று முழுதும் அமரநாத க்ஷேத்திர மஹிமையையும் சிவபெருமையையும்பற்றித் தவிர வேறொன்றையும்பற்றிப் பேசவில்லை.

ஆகஸ்டு௴ 8-ம் தேதி சுவாமிகளும் மற்றவர்களும் படகுகளி லேறி இஸ்லாமாத் நகர் வழியாக ஸ்ரீ நகரம் வந்து சேர்ந்தார்கள். ஸெப்டெம்பர்௴ 30-ம் தேதி வரையில் சுவாமிகள் ஸ்ரீ நகரத்திலே தங்கியிருந்தார். இக் காலங்களிலே சுவாமிகள் அடிக்கடி தமது படகைத் தனியே பிரித்துச் சிறிது தூரம் சென்று அநேக நாட்கள் ஏகாந்த வாசம் செய்துகொண் டிருந்துவிடுவார். சுவாமிகளுக்கு ஆத்மாநுசந்தானத்திலும் நிர்க்க நிஷ்டையிலுமே மனம் சென்றுகொண்டிருந்தது. ஆயினும், பாரத தேசத்தினிடத்து அவருக்கிருந்த பற்றுதல் நீங்கிற்றென்று சொல்ல முடியாது. "சமுத்திரம் போன்று ஆழமாயும் ஆகாயம் போன்று பரந்து மிருப்பதே லக்ஷியம்" என்று சுவாமிகள் அடிக்கடி சொல்வார். அமரநாதம் செல்வதற்கு முன்னே ஒரு சிஷ்யர், "சுவாமி! பலமுள்ளவர் பலஹீனர்களைத் துன்புறுத்துவதை நாம் பார்க்கும்படி நேரிட்டால், நாம் செய்யவேண்டியது என்ன?" என்று கேட்டார்.

சுவாமிகள்: "ஏன்? பலமுள்ளவனை உதைக்கவேண்டியதுதான்" என்று உடனே பதில் கூறினர்.

இதே மாதிரி பொரு சமயத்தில் "மன்னிப்புக்கூட பலஹீனமானதாயும் அடங்கினதாயும் இருந்தால் உண்மையானதன்று; போர் இடுதலே மேலானது. நீ லக்ஷக்கணக்கான தேவர்களைச் சுலபத்தில் ஜயிக்க முடியும்பொழுது, மன்னி. ......உலகமானது ஒரு போர்க்களம், வெளியே செல்வதற்குப் போராடி உனது வழியைத் தேடிக்கொள்" என்று சுவாமிகள் கூறியுள்ளார்.

சுவாமிகளுடைய சம்பாஷணை வேதாந்த விஷயங்களிலிருந்து சரித்திர விஷயங்களுக்கு வந்தது. சுவாமிகள் டாட் என்பவர் எழுதியுள்ள ராஜஸ்தான சரித்திரத்தைப் பற்றிப் பேசியபொழுது, "இப்பொழுது வங்காளத்திலேயுள்ள ஜனசமூக எண்ணங்களுள் மூன்றில் இரண்டு பங்கு இப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன," என்ருர்.

மீராபாய், கற்பழியாக் கன்னிகை கிருஷ்ணகுமாரி, பிரதாபசிங் முதலிய ரஜபுத்திர ஸ்திரீகளுடையவும் புருஷர்களுடையவும் சரித்திரங்களெல்லாம் சுவாமிகளுடைய வார்த்தைகளால் வர்ணித்து விவரிக்கப்பட்டு, கேட்டோருக்குக் கிளர்ச்சியையும் ஆநந்தத்தையும் அளித்தன. ஒருநாள் சுவாமிகள், ஹிந்து மதத்திலே உபாசிக்கப்பட்டுவருகின்ற தேவதைகளைப்பற்றிப் பேச ஆரம்பித்து, "இந்தத் தேவதைகள் வீண் அறிகுறிகளன்று; பக்தர்கள் தரிசித்துள்ள சொருபங்களாம்," என்ருர்.

ஒரு நாள் சுவாமிகளுடைய சிஷ்யர்களுள் ஒருவர் ரேகை சாஸ்திரம் கற்க ஆரம்பித்துள்ளதைச் சுவாமிகள் தெரிந்துகொண்டு, அத் தகைய விஷயங்களிடத்துத் தமக்குள்ள வெறுப்பை அந்தச் சிஷ்யருக்குத் தெரிவிக்கக் கருதி, "இது எல்லோருக்கும் விருப்பமான விஷயம்; ஆனல், இந்தியா முழுதும் இதை நிந்தித்து வெறுத்துள்ளது. உண்மையைச் சொன்னல், அவரும் அவருடைய சிஷ்யர்களும் சித்திகள் செய்யாமலிருந்தால் உங்களுடைய

ஜன்மம் சபலமானதாகும் என்று நான் நினைக்கிறேன். ஒரு சந்நியாசி சித்திகள் செய்ததற்காகப் புத்தர் அவருடைய ஆடையைக் கிழித் தெறிந்தார்,'' என்று கூறினர்.

சுவாமிகள் அமரநாதத்திற்குச் சென்றிருந்தபொழுது, மகம்மதியனைக்கூடத் தமக்குச் சமையற்காரனுக வைத்துக் கொள்ளத் தயாராயிருந்தார்; ஆனல், அமரநாதத்திலே கூடிய சாதுக்கள் அனைவரும் ஒரே குரலாக, ''சுவாமி! சிக்கியர்களுடைய பூமியிலாவது வேண்டாம்'' என்று கூறவே, சுவாமிகள் அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி, தமக்குச் சமையல் செய்வதற்கு ஒரு பிராஹ்மணனை ஏற்படுத்திக்கொண்டார்.

சுவாமிகள் காச்மீர தேசத்திலே வந்து சேர்ந்த பின்னர், சுவாமிகளை மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் மஹாராஜா நடத்திவந்தார். சுவாமிகள் ஸ்ரீநகரில் தங்கியிருந்த காலத்திலே அந்தச் சமஸ்தானத்து உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் பலரும்பல விஷயங்களைப்பற்றியும் சுவாமிகளுடைய அமிருத வசனங்களைக் கேட்பதற்குத் தினந்தோறும் சுவாமிகளுடைய படகுக்கு வந்து கூடுவார்கள். ஒரு சம்ஸ்கிருத பாடசாலையும் மடமும் ஏற்படுத்துவதற்காகச் சுவாமிகள் காச்மீர தேசத்து மஹாராஜாவினுடைய வேண்டுகோளின் பிரகாரம் ஒரு இடம் பார்ப்பதற்கு அங்குச் சென்றிருந்தார். நதிதீரத்திலே அதிரம்யமான இடமொன்று இருந்தது; அவ்விடத்திலே வழிப்போக்கர்களாகிய ஐரோப்பியர்கள் டேரா அடித்து இறங்குவது வழக்கம்.

சுவாமிகள் இந்த இடம் தம்முடைய மனத்துக்கு மிகவும் பிடித்துள்ளது என்று மஹாராஜாவுக்குத் தெரிவிக்க, மஹாராஜா அந்த இடத்தைச் சுவாமிகளுக்குத் தானம் செய்துவிடுவதாகச் சந்தோஷத்துடனே கூறினர். அமரநாதத்திலிருந்து திரும்பி வந்த பின்னர், சுவாமிகள் அந்தர்முக நிஷ்டையினிடத்தே அதிக ஆவல் கொள்ள, அந்த ஆவல் அவருடைய ஐரோப்பிய சிஷ்யர்களையும் பற்றிக்கொண்டது. இது சுவாமிகளுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கிற்று. பிறந்ததுமுதல் பகிர்முகப் பிரபஞ்சத்திலேயே பழகி வரும் ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் அந்தர்முக நிஷ்டையிலே அவாக்கொள்வது யாருக்குத்தான் ஆநந்தத்தை யுண்டாக்காது? சுவாமிகள் அவர்களை யூக்கி, தாம் புதிதாக மடத்துக்குப் பார்த்துள்ள பூமியிலே கூடார மடித்து அங்கே நிஷ்டையை யப்பியசிக்கும்படி ஆக்ஞை செய்தார்.

மஹாராஜா சம்மதித்துவிட்டதினலே அந்த இடம் தமக்குக் கிடைப்பது நிச்சய மென்று சுவாமிகள் கருதியிருக்க, ஈச்வர சங்கற்பம் அதற்கு நேர் விரோதமாயிருந்தது. மஹாராஜாவுக்குச் சந்தோஷம்தான்; ஆனல், மஹாராஜாவுக்கு மேலே மஹாராஜாதிராஜனைய் ரேஸிடேண்ட் என்று ஒரு உத்தியோகஸ்தனை ஆங்கில துரைத்தனத்தார் வைத்திருக்கிறார்களே; மஹாராஜாவினுடைய இச்சைப்படி விட்டுவிட்டால் அவன் இருந்து யாது பயன்? சுவாமிகளுக்கு அந்த இடம் கொடுக்கப்படப்போவதாக ரெஸிடெண்டு துரை முன்னே தெரிவிக்கப்பட, ரெஸிடேண்ட்

அதற்கு உத்தரவு கொடுக்க வில்லை; சமஸ்தானத்தின் மீது தப்பில்லை; சமஸ்தான அரசாங்கத்தார் இருமுறை ரெஸிடெண்டுக்குத் தெரிவிக்க, ரெஸிடெண்ட் இருமுறையும் தடுத்துவிட்டார். இந்தச் சங்கதி சுவாமிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவருக்கு மிகுந்த மனவருத்தம் உண்டாய்விட்டது. 'இனிமேல் காச்மீர தேசத்திலே மடம் கட்டலாம்,' என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டியதுதான். ஆயினும், பின்னர்ச் சுவாமிகளுக்கே 'சுதேச அரசர்களுடைய ராஜ்யங்களிற் பார்க்கிலும் பிரிட்டிஷ் இந்தியாவில், அதுவும் வங்காளத்தில் தலை ஸ்தானமடம் ஸ்தாபிப்பதே நன்று' என்று தெரியவந்தது. மலைப்பிரதேசத்திலே ஆச்ரமம் ஸ்தாபிப்பதற்குள்ள முயற்சியைப்பற்றிச் சுவாமிகள் கவலைப்பட வேண்டியதில்லை. அவ் விஷயத்திலே ஸேவியரும் அவருடைய மனைவியரும் மிகுந்த சிரத்தை யெடுத்துக்கொண்டு ஹிமோத்கிரியிலேயே அல்மோராவின் பக்கத்தில் தகுந்த இடம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆதலால், ரெஸிடெண்டு செய்த இடையூற்றை 'ஜெகன்மாதாவினுடைய சித்தம்,' என்று சுவாமிகள் கருதிக்கொண்டார்.

ஸெப்டெம்பர்மீ 20-ம் தேதி யன்று சுவாமிகள் அமெரிக்கப் பிரதிநிதியினுடையவும் அவருடைய மனைவியினுடையவும் வேண்டுகோளுக்கிணங்கி "டால்" ஏரிக்குச் சென்றார். இரண்டு நாட்கள் அங்கிருந்துவிட்டுச் சுவாமிகள் திரும்பி வந்துவிட்டார்.

சிவப்பிரேமை மிகுந்திருந்த சுவாமிகளுக்கு இப்பொழுது தேவிப் பிரேமை யுண்டாய்விட்டது. அவர் மஹாத்மா ராமப்பிரஸாதருடைய பாடல்களை எப்பொழுதும் பாடலானார். மீராபாயினுடைய பக்தி சுவாமிகளுக்கு அத்திபாச்சர்யத்தை யளித்தது. மீராபாயே சுவாமிகளுக்கு லக்ஷியம் போலத் தோன்றிவிட்டது. "ஒரு சமயத்திலே மீராபாய், பிருந்தாவனம் சென்றிருந்தபொழுது, அங்கே பிரசித்தி பெற்ற சாது ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்கக் கருதி, தாம் இருக்கு மிடத்துக்கு அவரை யழைத்து வரும்படி ஆளனுப்பினர். 'பிருந்தாவனத்திலே ஸ்திரீகள் புருஷர்களைப் பார்க்கக் கூடாது,' என்று அந்தச் சாது சொல்லி யனுப்பிவிட்டார். மீராபாய் 'ஓஹோ! புருஷர்கள் என்று ஒரு வகையார் பிருந்தாவனத்தில் இருக்கிறார்களா? 'கிருஷ்ணன் ஒருவர்தான் இருக்கிறார்' என்று நான் நினைத்திருந்தேன். நல்லது, நானே அவரைப் போய்ப் பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு, அவரிடம் சென்று, 'ஏ, மூடா! நீ உன்னைப் புருஷனென்று கூப்பிட்டுக்கொள்கிறாய்?' என்றார். அந்தச் சாது திடுக்கிட்டு, மீராபாயிடத்திலே பக்தி மிகுந்தவராகிப் பாதங்களிலே விழுந்து நமஸ்கரிக்க, மீராபாய் அந்தச் சாதுவினுடைய குற்றத்தை மன்னித்து அநுக்கிரகம் பண்ணினர்," என்று சுவாமிகள் இக்கதையைச் சொல்லிச்சொல்லி யாநந்தித்தார்.

பின்னொரு நாள் பாரத தேசத்துப் பராக்கிரமசாலிகளுள் ஒருவனாகிய பிரதாபசிங்கினுடைய சரித்திரம் நடந்தது.

13 (c)

"சித்தூர் சமஸ்தானத்து அரசனாகிய இவன் தனது சமஸ்தானத்திலிருந்து துரத்தப்பட்டு காடுகளிலே, வனங்களிலே காலம் கழித்துக்கொண்டு வருங்காலத்திலே, ஒரு நாள் இவனுடைய பத்தினி அன்று கையிற் கிடைத்ததை ஆகாரம் அமைத்து, குழந்தைகள் உறங்கிக்கொண்டிருந்ததினாலே, ஒரு சிறிது ஆகார மெடுத்துக் குழந்தைகளுக்கென்று வைத்துவிட்டு, மிச்சத்தைப் புருஷனும் மனைவியுமாக உண்டார்கள். பின்னர், குழந்தைகள் விழித்துக்கொண்டவுடனே, அவர்களுக்கென்று எடுத்து வைக்கப்பட்டிருந்த ஆகாரத்தைப் பார்க்க, அதை அப்பொழுதுதான் ஒரு பூனை தின்றுவிட்டுப் போய்க்கொண்டிருந்தது. குழந்தைகள் பசியினால் அழ ஆரம்பித்தன. பிரதாபசிங் என்ன செய்வான்? குழந்தைகளுடைய அழுகை அவனுடைய கல் மனத்தையும் கரைத்துவிட்டது. 'அக்பர் சக்கரவர்த்தியினிடத்திலே சரண் புகுந்துவிடலாமா?' என்று யோசனை செய்தான். ஆனால், ஈச்வரசங்கற்ப மொன்று வேறே யிருக்கிறதல்லவா? அப்படி யவன் சிந்தாக்கிராந்தனாயிருக்கும் சமயத்திலே ஒரு ரஜபுத்திரத் தலைவனிட மிருந்து ஒரு பணியாளன் வெகு வேகமாக ஒரு கடிதம் கொண்டுவந்தான். அக் கடிதத்திலே "அந்நியனுடனே கலந்துகொள்ளாமல் ரத்தத்தைச் சுத்தமாக வைத்துள்ளவன் நம்முள் ஒருவனே யிருக்கிறான். அவனுடைய முடியும் தன்சிரயிற் படிந்தது என்று எவரும் சொல்லக் கூடாது?" என்று வரையப்பட்டிருந்தது. பிரதாபசிங் இக் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்தான். தைர்யம் உண்டாய்

விட்டது. மனம் எழுச்சி பெற்றுவிட்டது; எழுந்தான், சத்துருக்களை ஜயித்தான், உதயபுரம் அடைந்தான்,'' என்று சுவாமிகள் புன்னகை புரிந்துகொண்டே கம்பீரத் தொனியில் கூறினார்.

சுவாமிகள் சின்னாட்கள் கழித்துத் தமது படகை ஒரு ஏகாந்த ஸ்தலத்துக்குக் கொண்டுபோய் அங்கு இருந்து கொண்டார். அங்குத் தம்மைப் பார்ப்பதற்கு பிரஹ்ம சமாஜத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரைத் தவிர வேறெவரும் போகலாகாதென்று சுவாமிகள் உத்தரவு செய்துவிட்டார். இந்த வைத்தியர் சுவாமிகளிடத்திலே பக்திமிகுந்தவராகி, தினந்தோறும் சுவாமிகளின் க்ஷேமலாபங்களை விசாரிக்க வரலானார். அநேக சமயங்களிலே இவர் போகும்பொழுது, சுவாமிகள் நிஷ்டையிலே மனம் லயித்து ஆநந்தத்தில் கண்மூடி அமர்ந்திருப்பார்; அந்த வைத்தியர் அதைப் பார்த்துவிட்டு, சத்த மிடாது படகைவிட்டு நீங்கிவிடுவார். சுவாமிகளுடைய மனத்திலே தேவிப் பிரக்ஞை நிறைந்துவிட்டது ஒருநாள் சுவாமிகள் நிஷ்டையி லிருந்தபொழுது, உலகு முழுதும் ஒழிந்து உருகுவது போலத் தோன்றிவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. இருளைக் கடந்த ஜோதியாகிய தேவியை யடையச் சங்கற்பம் செய்துகொண்டார். சரீரம் முழுதும் நடுக்கங் கொண்டது. அவருடைய நாடி நரம்புகளெல்லாம் விறைத்துக் கொண்டன. ஏதோ அந்தர்ப்பூதமாயுள்ள சக்தியொன்று வெளியே வெடித்துக்கொண்டு புறப்படுவது

போலத் தோன்றிற்று. இதுதானே யோகிகள் குண்டலினி சக்தி யென்று கூறுவது? ஆ! ஆ! பிரபஞ்சம் அடங்கிவிட்டது. ஆனால், அந்தர்முகத்திலே பெருங் குழப்ப மொன்று உண்டாய்க்கொண்டிருந்தது. கண்ணை விழித்தார், எழுதுகோலைக் கையி லெடுத்தார்; தாம் கண்ட காட்சியையும், தாம் உணர்ந்த உணர்ச்சியையும் உடனே எழுதினர். காளி மாதா என்ற கவி சுவாமிகள் அப்பொழுது எழுதியதுதான். இந்த கவியின் கடைசி வார்த்தை எழுதித் தீர்ந்தவுடனே, எழுதுகோல் கையினின்றும் நழுவிக் கீழே விழுந்துவிட்டது; சுவாமிகளும் பிரக்ஞைபற்றுச் சாய்ந்துவிட்டார்.

சுவாமிகள் அமரநாதத்தி லிருந்து திரும்பி வந்தது முதல் தேவியுபாசனையே பெரிதெனக் கொண்டு அதையே தமது சிஷ்யர்களுக்குப் போதித்து வந்தார். "எல்லோரும் ஆநந்தத்தையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது தப்பு; துன்பத்தையே நோக்கமாகக் கொண்டும் அநேகர் பிறந்துள்ளார்கள். துன்பத்திலும் ஆநந்த முண்டு. பயங்கரத்துக்காக நாம் பயங்கரத்தை உபாசிப்போம்." "இனிமையிலும் ஆநந்தத்திலும் எப்படி ஈச்வரி யிருக்கிறாளென்று நினைக்கிறீர்களோ, அப்படியே தீமையிலும் பயத்திலும் துன்பத்திலும் அழிவிலும் ஈச்வரியைப் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள்." "ஏ, தாயே! மூடர்கள் உனது கழுத்திலே புஷ்பஹாரங்கள் இட்டு, பின்னர்ப் பயத்துடனே பின் வாங்கி, உன்னை ஜீவகாருண்ய சொரூபி யென்று அழைக்கிறார்கள்." "பயங்கரத்தை உபாசிப்பதினாலேயே பயங்கரத்

தை ஜயிக்க முடியும், அமிருதத் தன்மையை யடைய முடியும். மரணத்தைத் தியானியுங்கள்! மரணத்தைத் தியானியுங்கள்! பயங்கரத்தை உபாசியுங்கள்! மாதாவே பிரஹ்மம்! அவளுடைய சாபமும் ஆசி வசனமாம். ஹிருதயமானது ஸ்மசானபூமி யாகவேண்டும். கர்வமும், ஸ்வயநலமும் இச்சையு மெல்லாம் சாம்பராக்கப்பட வேண்டும். அப்பொழுது, அப்பொழுதுதான் மாதா வருவாள்!" என்பன போன்ற வாக்கியங்களே அவருடைய வாயிலிருந்து வந்து கொண்டிருந்தன.

வியாதியோ, துன்பமோ உண்டாய்விட்டால், சுவாமிகள் "அவளே வருந்தும் அங்கம்! அவளே துன்பம்! அவளே துன்ப மளிப்பவள்! காளி! காளி! காளி!" என்று கூறுவார். இக் காலங்களிலே சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குச் செய்த உபதேசங்களிலெல்லாம் "பயமே கூடாது. இரந்தலன்று, ஆனல் கேட்டல், மிகமிகச் சிரேஷ்டமானதை கேட்டல்! மாதாவினுடைய உண்மைப் பக்தர்கள்: வைரம் போன்று பல முள்ளவர்களாயும், சிங்கங்கள் போன்று பயமற்றவர்களாயும் இருக்கிறார்கள். பிரபஞ்சம் முழுதும் அவர்களின் காலடியில் திடீரென்று துகள்துகளாக நுறுங்கிவிட்டபொழுதிலும் அணுவளவும் மனம் கலங்குவதில்லை! நீ சொல்வதை அவள் கேட்கும்படி செய். மாதாவினிடத்தில் கெஞ்சுதல் கூடாது! ஞாபக மிருக்கட்டும்! அவள் சர்வ சக்தி வாய்ந்தவள்! கற்களிலிருந்தும் அவள் வீரர்களை யுண்டாக்க முடியும்!" என்று இடைவிடாமல்

சொல்வார். "எங்கெல்லாம் பய மில்லையோ, எங்கெல்லாம் தியாகமும் தன்மறதியும் ஏற்படுகிறதோ, ஸ்பர்சிப்ப தெல்லாம் துன்பமே யென்று எங்கெல்லாம் தோற்ற முண்டாகிறதோ, அங்கெல்லாம் மாதா சாந்நித்தியமாயிருக்கிருள்" என்பார். "கைலாச பர்வதத்திலே அடிக்கும் சூர்ய ரச்மி உமையேயாவள்" என்பார். இவ்விதமாகச் சுவாமிகளுக்குத் தேவிப் பிரேமை யுண்டாயிருந்தது.

ஸெப்டெம்பர்மீ 30-ம் தேதி யன்று சுவாமிகள் தம்முடன் கூட எவரும் வரக்கூடா தென்று ஆக்ஞை செய்துவிட்டுத் திடீரென்று க்ஷீரபவானிக்குத் தனியே சென்றுர்; அக்டோபர்மீ 6-ம் தேதி வரையிலும் அங்கேயே யிருந்தார். இந்த க்ஷீரபவானி க்ஷேத்திரத்திலே சுவாமிகள் ஹோமங்கள் செய்து, க்ஷீரங் கொண்டு நைவேத்தியம் செய்து, சாதாரண யாத்திரிகனைப்போல ஜபங்கள் முடித்துக்கொண்டிருந்தார்; கடோமான தவங்கள் செய்ய ஆரம்பித்தார்; அவ்வூரிலே யுள்ள ஒரு பிராஹ்மணப் பண்டிதருடைய சிறு குழந்தையை உமாகுமாரி யென்று சொல்லி, இதையொரு பிரத்தியேக சாதனமாகக் கருதிப் பூஜித்துவந்தார். தாம் அநேகாயிரம் ஜனங்களுக்கு ஆசார்யர், தலைவர் என்ற எண்ண மெல்லாம் அவரிடத்திலிருந்து நீங்கிவிட்டன. அவர் மிகமிகச் சாதாரண சந்நியாசியே யாய்விட்டார்.

அக்டோபர்மீ 6-ம் தேதி யன்று சுவாமிகள் திரும்பி வந்தபொழுது, மிகுந்த தேஜஸ் அவருடைய முகத்திலே விளங்கிற்று; க்ஷீரபவானியிலிருந்து சுவாமிகள் தேவிப்பிர

ஸாதமாக சில புஷ்பங்கள் கொண்டுவந்திருந்தார்; அவற்றை யெடுத்துத் தமது சிஷ்யர்களின் சிரங்களில் வைத்தார். "ஹரி ஓம்" என்பதெல்லாம் போய்விட்டது; இப்பொழுது எல்லாம் "ஜகன் மாதாவே" என்று சொல்லிக்கொண்டே சுவாமிகள் கீழே யுட்கார்ந்தார். "என்னுடைய தேசாபிமான மெல்லாம் போய்விட்டன; எல்லாம் போய்விட்டன. இப்பொழுது மாதா ஒருவளே யிருக்கிருள். நான் மிகுந்த தப்பு செய்துவிட்டேன். மாதா என்னை நோக்கி, "விசுவாசம் அற்றவர்கள் என்னுடைய க்ஷேத்திரங்களிலே நுழைந்து எனது விக்கிரகங்களைத் தீண்டிஞலும் என்ன? அதனுல் உனக்கென்ன? நீ என்னை ரக்ஷிக்கிருயா? அல்லது நான் உன்னை ரக்ஷிக்கிறேனு?' என்ருள். ஆதலால், இனிமேல் தேசாபிமானம் கிடையாது; நான் சிறு குழந்தையே" என்ருர். சிஷ்பர்கள் அப்படியே பிரமித்து, மறு வார்த்தை பேசாமல், சுவாமிகளுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சந்நியாசி லக்ஷணம் சுவாமிகளைப் பலமாகப் பற்றிக் கொண்டது; நதிதீரத்திலே, தோட்டங்களிலே சுவாமிகள் ஆத்மாநுசந்தானம் செய்துகொண்டே ஏகாந்தமாக உலாவுவார்; தம்முடைய நண்பர்கள் அருகிலே வந்தாற்கூட, அது சுவாமிகளுக்குத் தெரியாது. க்ஷீரபவானி க்ஷேத்திரத்திலே சுவாமிகள் போயிருந்தபொழுது அந்த க்ஷேத்திரம் கவனிப்பாரின்றி சிதல்பட்டுப் போயிருப்பதைக் கண்டு சுவாமிகள் துக்கித்து, இந்த க்ஷேத்திரத்தைப்புதுப்

பித்துப் பெரிதாகக் கட்டுவதற்குத் தாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நினைக்க, உடனே ஜகன் மாதாவே அவர் முன்னே எழுந்தருளி, "குழந்தாய்! நான் விரும்பினால், எண்ணற்ற சோலைகளைக் கட்டி வைத்துக்கொள்ள முடியும். இந்த நிமிஷத்திலேயே, இந்த இடத்திலேயே வேண்டுமானால் ஏழடுக்கு உப்பரிக்கை வைத்துப் பொன்னால் ஒரு க்ஷேத்திரம் நிர்மாணித்துக்கொள்ள முடியும்," என்று கூறியதுபோலத் தோன்றிற்று. சுவாமிகள் பிற்காலத்திலே இத் தோற்றத்தைப்பற்றித் தமது சிஷ்யர் ஒருவரிடத்திலே கூறியபொழுது, "அந்தத் தெய்வவாக்கைக் கேட்டதுமுதல் அத்தகைய தீர்மானமொன்றும் நான் செய்து கொள்வதில்லை. ஜகன்மாதாவினுடைய இச்சைப்படி எல்லாம் நடக்கட்டும்," என்றார்.

இந் நாட்களிலே ஒரு விசேஷம் நடந்தது. ஒரு மகம்மதியப் பக்கிரியினுடைய சிஷ்யர் ஒருவர் சுவாமிகளிடத்திலே வசியமடைந்து அடிக்கடி வந்துகொண்டிருந்தார். ஒருநாள் அவருக்குக் கடுமையான ஜ்வரம் வீச, சுவாமிகள் அவர்மீது இரக்கம் பாவித்துத் தமது அஸ்தத்தை யெடுத்து அவருடைய சிரசின்மீது வைக்க, அவரைப் பிடித்த ஜ்வரம் அப்பொழுதே அவரை விட்டு நீங்கிவிட்டது. அவருக்குச் சுவாமிகளிடத்திலே பக்தி பதிகரித்தது; அவர் முன்னிலும் அதிகமாகச் சுவாமிகளிடம் வரத்தொடங்கினர். அவருடைய குருவாகிய பக்கிரிக்குத் தமது சிஷ்யர் சுவாமிகளிடம் போவது பிடிக்கவில்லை; அவருக்குச் சுவாமிகளிடத்

றுப் பொருமை யுண்டாய்விட்டது. சுவாமிகளைக் குறித்து அந்தப்பக்கிரி தமது சிஷ்யரிடம் பல தீய மொழிகளைப் புகன்று, "சுவாமிகளிடம் போகவேண்டாம்," என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்; ஆயினும், அந்தச் சிஷ்யர் கேட்காததினாலே பக்கிரிக்குச் சுவாமிகள்மீது கோபம் உண்டாகி, "சுவாமிகள் காச்மீரத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னே தலைமயக்க முண்டாக வேண்டும்," என்றும், "எப்பொழுதும் வாந்தி யெடுக்கவேண்டும்," என்றும் சபித்தான். அப்படியே நடந்தது. சுவாமிகளுக்கு மனக் குழப்பம் அதிகமாக உண்டாகிவிட்டது; கோப முண்டாயிற்று; ஆனால், யார்மீது கோபம், தெரியுமா? தமக்குத் தீங்கு செய்தவன்மீது அணுவளவும் கோபம் கிடையாது; ஆனால் தமது குருவைக் கோபித்துக்கொண்டார். "ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்து எனக்கு என்ன பிரயோசனம்? ஒரு மந்திரவாதியினுடைய தீய சக்திகளினின்றும் நானே என்னை ரக்ஷித்துக்கொள்ள முடியாமற் போனால், எனது அநுபூதிகளினாலும் வேதாந்த போதனையினாலும் ஆத்மசக்தியினாலும் யாது பயன்?" என்று தம்மையும் தமது குருவையும் தாமே கடிந்துகொண்டார். மூன்று வாரங்களுக்குள்ளே கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். சுவாமிகளுக்கு மனக் குழப்பம் ஒழியவில்லை; ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பூர்வாச்ரமத்திலே மனைவியும், பின்னர்ச் சிஷ்யரும் தமக்குத் தாயனையருமான ஸ்ரீ சாரதாதேவியினிடத்திலே கூட இந்தச் சங்கதியைச் சொல்லித் தமது குருவைக் கடிந்துகொண்டார்.

சுவாமிகளும் மற்றவர்களும் கல்கத்தாவுக்குப் போவ. தற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன. சுவாமிகள் தம் முடைய பிற்காலத்து யோசனைகள் இன்னவை யென்று நிர் மானித்துக் கொள்ளவில்லை. அக்டோபர்மீ 11-ம் தேதி சுவாமிகளும் மற்றவர்களும் அங்கிருந்து புறப்பட்டு, பார முல்லாவுக்கு வந்து சேர்ந்தார்கள்; அங்கிருந்து மறுநாளே லாகூருக்குப் புறப்பட்டுவிட்டார்கள். இதற்குள்ளே சுவாமி சாரதாநந்தர் சுவாமிகளைப் பார்ப்பதற்காக வந்து சேர்ந்தார். சுவாமிகளுடைய ஐரோப்பிய சிஷ்யர்கள் சுவாமி சாரதாநந்தருடனே வட இந்தியாவிலுள்ள முக்கிய நகரங் களைப் பார்வையிடுவதற்குப் புறப்பட்டார்கள்.

61-வது அத்தியாயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், கல்கத்தா

சுவாமிகள் அல்மோராவிலிருந்த ஸ்வாமி சதாநந்த ருக்கு ஒரு தந்தி யடித்து, அவரை வரவழைத்துக் கூட இட்டுக்கொண்டு லாகூரை விட்டுப் புறப்பட்டு அக்டோ பர்மீ 18-ம் தேதியன்று கல்கத்தா மடத்துக்கு வந்து சேர்ந்தார். சுவாமிகளைக் கண்டதும் அந்த மடத்திலிருந்த மற்றச் சகோதர சந்யாசிகளுக்கு உண்டான ஆநந்தத்துக்கு ஓர் அளவே யில்லை. ஆனால், திடீரென்று அவர்களுடைய முகம் வாடத் தொடங்கியது; ஏனெனில், சுவாமிகளுடைய முகம் வெளுத்து, சரீரம் இளைத்து வியாதியினால் பீடிக்கப்

பட்டிருப்பதைக் கண்டார்கள். இப்பொழுது சுவாமிகள் காச்மீர தேசத்தை விட்டுப் புறப்பட்டுக் கல்கத்தாவுக்கு வரப்போகும் சங்கதி அவர்களுக்குத் தெரியாதாயினும், சுவாமிகள் தேவிப் பிரேமையிலும் சிவப்பிரேமையிலும் அமிழ்ந்தியிருந்ததினுலே கடிதங்க ளெழுதுவதை நிறுத்தி விட்டாராயினும், சகோதரி நிவேதிதா அம்மையார் கல்கத்தா மடத்துக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதி, சுவாமிகளைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்துக்கொண்டிருந்தார்.

இப்பொழுது மடத்திலே புதிதாக நால்வர் சேர்ந்திருந்தார்கள்; இவர்கள் ஸ்வாமி விமலாநந்தர், ஸ்வாமி போதாநந்தர், ஸ்வாமி கல்யாணுநந்தர், ஸ்வாமி சோமாநந்தர் எனப்பட்டவர்களாம். சுவாமிகளுக்குச் சரீரம் நாளுக்குநாள் பலஹீனமடைந்து வந்தபொழுதிலும், தாம் முற்காலத்திலே காலங் கழித்ததுபோலவேதான் இப்பொழுதும் காலங் கழிக்க ஆரம்பித்தார். சுவாமிகள் வெகு நேரம் வேதாந்த சம்பாஷணை செய்துகொண்டிருப்பார், சாஸ்திரங்கள் படித்து வியாக்கியானங்கள் செய்வார். மடத்திலே சேர்ந்தவர்கள் தினந்தோறும் இன்னின்னது செய்யவேண்டுமென்று திட்டங்கள் ஏற்படுத்தினுர். சுவாமிகள் தாம் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்த அன்றைக்கே காச்மீரத்திலே தாம் இயற்றிய மூன்று கவிகளையும் தமது சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ்யர்களுக்கும் தமக்கு இயற்கையாயுள்ள சாதுர்யத்துடனே வாசித்துக் காட்டினுர். அக்டோபர்மீ 19-ம் தேதியும் 20-ம் தேதியும் சுவாமிகள் ஓமச்

சடங்குகள் செய்தார். பின்னர் மூன்று நாட்களும் தூர்க்கை பூஜை சமயமாகையினாலே, உற்சவம் நடத்தி மடத்திலே சமாராதனைகள் நடந்தன. அக்டோபர்மீ 24-ம் தேதி ஸ்வாமி துர்யாநந்தர் அல்மோராவிலிருந்து வந்து சேர்ந்தார். பழைய வராநகர மடத்து உற்சாக மெல்லாம் மறுபடியும் இப்பொழுது கிளம்பிவிட்டன.

நவம்பர்மீ முதல் தேதியிலிருந்து சுவாமிகள் மடத்திலும் பாக் பஸாரிலே யுள்ள பலராமருடைய கிருகத்திலுமாயிருந்தார். நவம்பர் 5-ம் தேதி யன்று காச்மீர சமஸ்தானத்துப் பிரதம மந்திரியாகிய நீலாம்பர முக்கர்ஜியவர்களும், பிரதான நீதிபதியாகிய ரிஷிவர முக்கர்ஜியவர்களும் சுவாமிகளைப் பார்க்க வந்தார்கள். அடுத்த நாள், லாகூரிலிருந்து சுவாமிகளை விட்டுப் பிரிந்து வடஇந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களைப் பார்க்கச் சென்ற ஐரோப்பிய சிஷ்யர்கள் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

நவம்பர்மீ 12-ம் தேதி அன்றைபதினம் காளி பூஜை — ஸ்ரீ சாரதாதேவியே பல ஸ்திரீ பக்தர்கள் புடைசூழ, ராமகிருஷ்ண மடத்தைப் பார்வையிட வந்து சேர்ந்தார். அன்று மாலையிலே சுவாமிகள் தமது ஞானத் தாயாகிய சாரதாதேவியையும் சுவாமி பிரஹ்மாநந்தரையும் சாரதாநந்தரையும் இட்டுக்கொண்டு சகோதரி நிவேதிதா அம்மையாருடைய பெண் பள்ளிக்கூடத்தை முதல்முதலில் திறப்பதற்குச் சென்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்துக் கிருகப் பிரவேசமானது டிஸம்பர்மீ 9-ம் தேதி நடைபெற்றது. சுவாமிகளை

செய்ய வேண்டியன வெல்லாம் செய்தார். சுவாமிகள் அன்று காலையில் கங்கா ஸ்நாநம் செய்து, புதியகாஷாய வஸ்திர மொன்று உடுத்தி, அர்ச்சக ஸ்தானத்தில் வீற்று, தியானத்தில் உட்கார்ந்தார்; பின்னர் வில்வதளங்களாலும் பலவகைப் புஷ்பங்களாலும் பூஜை செய்து, மறுபடியும் தியானத்தி லுட்கார்ந்தார். அன்று சுவாமிகளுடைய முகத்திலே வீசிய தேஜஸானது அவ்வறை முழுதையும் அதிரம்யமாகப் பிரகாசிப்பித்தது போலத் தோன்றிற்று. ஸ்வாமி ப்ரேமாநந்தரும் மற்றச் சந்நியாசிகளும் வாசற்படியிலே பிரமித்து நின்றுகொண்டிருந்தார்கள். பூஜையான பின்னர், —ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சரீரச் சாம்பலை எடுத்து வைத்திருந்தார்கள் என்று முன்னமேயே கூறியிருக்கிறோமல்லவா?— இப்பொழுது சுவாமிகள் அதைத் தமது வலது தோளிலே சுமந்துகொண்டு, முன் செல்ல, மற்றச் சந்யாசிகளெல்லோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு ஊர்வலவாகப் புறப்பட்டு நீலாம்பர முக்கர்ஜியின் உத்தியான மாளிகையிலிருந்து புதிய மடத்துக்குக் கங்கைக்கரை யோரமாகச் சென்றார்கள். போகும் வழியிலே, சுவாமிகள் தம்முடைய சிஷ்யர் ஒருவரிடத்திலே ''பிரபு ஒரு சமயத்திலே என்னை நோக்கி 'நீ என்னை உனது தோல்களிலே சுமந்துகொண்டு எங்குச் செல்கிறாயோ, அவ்விடம் குடிசையாயிருந்தாலும் சரியே, விருக்ஷத்தினடியா யிருந்தாலும் சரியே, அவ்விடத்தில் நான் போய் வசிப்பேன்' என்று கூறினார். அச்சொல்லிலே மிகுந்த நம்பிக்கை வைத்து இதோ நான் அவரை இன்று புதிய மடத்துக்குக் கொண்டு செல்கிறேன்''

என்றார். வழிநெடுகச் சங்கத்வனியும் பேரிகை சப்தமும் ஒலித்து எதிரொலி யடித்து எங்கும் நிறைந்தன.

புதிய மடத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பரிசுத்த சேஷத்தை அதற்கென்று அமைக்கப்பட்டிருந்த ஒரு ஆசனத்திலே வைத்து, பின்னர்ச் சுவாமிகளும் மற்றவர்களும் அதன் முன்னே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்கள். அங்குப் பூஜைகள் நடத்தி, யக்ஞாக்னி வளர்த்தி, விரஜ ஹோமம் செய்து, சுவாமிகள் தாமே பாயசம் சமைத்து, ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நைவேத்தியம் செய்தார். இன்று ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துச் சரித்திரத்திலே மிகவும் விசேஷ தினம். சுவாமிகள் ஆநந்தபூரிதரா யிருந்தார். "பகவானுடைய சங்கற்பத்தினாலே இன்று அவருடைய தர்ம க்ஷேத்திரம் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பன்னிரண்டு வருஷங்களாக நான் சுமந்து சென்ற பொறுப்புச் சுமையை இன்று நான் நிவிர்த்தி செய்துகொண்டதாக உணர்கிறேன். இப்பொழுது எனது மனத்திலே யொரு தோற்றம் உண்டாகிறது. இந்த மடம் பெரிதெனப் பேர் பெற்று விளங்கும். கிருகஸ்த பக்தர்கள் இம் மடத்துக் கருகிலே யுள்ள நிலத்திலே வீடுகள் அமைத்துக்கொண்டு வசிப்பார்கள்; சந்யாசிகள் அவர்களெல்லோருக்கும் நடுவில் மத்திய ஸ்தானத்தில் இருப்பார்கள்; அங்குத் தென் பக்கத்திலே பகவானுக்கு இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள சிஷ்யர்கள் வந்து வசிப்பார்கள்" என்று சொல்லிவிட்டு, ஒரு சிஷ்யரைப் பார்த்து, "என்ன சொல்

கிருய்?" என்று கேட்க, அந்தச் சிஷ்யர் "இது அழகிய கற்பனைதான்; இப்படி நடக்கவேண்டுமே" என்றார்.

சுவாமிகள் "கற்பனையா? ஏ, நம்பிக்கை யற்றவனே! நான் கூறுவதைக் கேள்! நான் எதிர்பார்ப்பதை யெல்லாம் காலம் நிறைவேற்றிவிடும். நான் இப்பொழுது அஸ்திவாரம்தான் போடுகிறேன். பெருங் கார்யங்கள் பின்னர் உண்டாகும்; நான் செய்யவேண்டியதைச் செய்துவிடுவேன்; நீங்கள் பிற்காலத்திலே செய்யவேண்டிய கார்யங்களின் பொருட்டு வேண்டிய பல அபிப்பிராயங்களெல்லாவற்றையும் நான் உங்களுக்கு ஊட்டிவிடுகிறேன். நம்முடைய மதத்துக் கொள்கைகளெல்லாம் படிக்கப்பட்டும் அறியப்பட்டும் வந்தால்மாத்திரம் போதாது; அநுபவத்தில் கொண்டுவரப்படவேண்டும். இப்பொழுது தெரிந்ததா?" என்றார்.

புதிய மடம் பிரதிஷ்டிக்கப்பட்டதென்று முன்னமே சொன்னோ மல்லவா? ஆனால், பெரிதாக யோசனை பண்ணப்பட்டுக் கட்டப்பட்டு வந்த மடம் இன்னும் கட்டிமுடியவில்லை. 1899-ம் வருஷம் ஜனவரிமீ இரண்டாம் தேதிதான் மடமானது நீலாம்பர முக்கர்ஜியினுடைய உத்தியான மாளிகைக்கு மற்றப்பட்டது.

சுவாமிகளுக்குச் சரீரம் சௌக்கிய மில்லை. ஆஸ்தாவியாதியினால் பீடிக்கப்பட்டவர்போன்று சுவாமிகள் தீர்க்க சுவாசம் விட்டுக்கொண்டிருந்தார். அக்டோபர்மீ 27உ சுவாமிகளுடைய மார்பு பரிசோதிக்கப்பட்டது; டாக்

டர் தத்தா என்பவர் பரிசோதித்துப் பார்த்து, சுவாமிகளை ஜாக்கிரதையா யிருக்கும்படி எச்சரிக்கை செய்தார். சுவாமி களுடைய இடது கண்ணிலே ஒரு சிறிது ரத்தம் கட்டிக் கொண்டு இருந்தது. 'சுவாமிகளுடைய மூளையிலே ஏகாக்கி ரதை மிகுந்ததினாலே இங்ஙனம் கட்டிற்று' என்று ஊகிக் கப்பட்டது. சுவாமிகள் அந்தர்முகத்திலே மனத்தைத் திருப்பி ஆழ்ந்த நிஷ்டைகளி லிருக்க ஆரம்பித்தார். இது சகோதர சந்யாசிகளுக்குப் பய முண்டாக்கிவிட்டது. 'எங் கே மஹா சமாதியில் வீற்றுவிடுவாரோ,' என்று அவர்கள் பயந்து, அவரைப் பல விஷயங்களிலும் இழுப்பதற்காகப் பல கதைகள் சொல்வார்கள். பேசிக்கொண்டே யிருப்பார்; திடீரென்று மனமானது அந்தர்முகம் சென்றுவிடும்; கண்கள் விழித்தவண்ணமே யிருக்கும்; பகிர்முகப் பிரக் ஞையே யிராது. ஒரு சமயத்திலே சுவாமி சுத்தாநந்தர் ஒரு விஷயத்தைப் பத்துப் பன்னிரண்டு தடவை சுவாமிகளுக் குச் சொல்லவேண்டி வந்தது. காச்மீரத்திலிருந்து திரு ம்பி வந்து இரண்டு மூன்று நாட்களுக் கெல்லாம் சாரதச் சந்திரர் சுவாமிகளுடைய அறைக்குள்ளே நுழைய, சுவாமி கள் கிழக்கு நோக்கிப் பகிர்முகப் பிரக்ஞையற்றுப் பத்மா சனத்திலே வீற்றிருப்பதைக் கண்டார். சுவாமிகள் இவரு டைய வரவைத் தெரிந்துகொள்வதற்கு முன்னமேயே, இவர் சுவாமிகளுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்து அவ ருடைய கண்ணிலே ரத்தம் கட்டியிருப்பதைக் கண்டார். சாரதச் சந்திரர் அதைப் பார்த்துப் பயந்து, "சுவாமி!

இது என்ன? தங்களுடைய இடது கண்ணிலே ரத்தம் கட்டியிருக்கக் காரண மென்ன?'' என்று கேட்டார்.

சுவாமிகள்: "அஃதொன்று மில்லை. க்ஷீரபவானியிலே நான் கடூரமான தவம் புரிந்தேனே, அதனால் நேர்ந்திருக்க லாம்'' என்றார்.

ஸ்வாமிகளுடைய மனத்தைக் கலைத்துவிடக் கருதி, இந்தச் சிஷ்யர், "ஸ்வாமி! தாங்கள் அமரநாதம் சென்று வந்த விசேஷங்களை அடியேனுக்கு எடுத்து உரைக்க வேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார்.

ஸ்வாமிகள் உத்சாக பூரிதராய்க் கூறிவந்து, திடீ ரென்று ஒருவித ஆநந்த மடைந்துகொண்டே, "நான் அமர நாதத்திலிருந்து வந்ததுமுதல் சிவனே என்னுடைய மூளைக்குள்ளே நுழைந்துகொண்டிருக்கிறார். அவர் போக வே மாட்டார்,'' என்றார். ஸ்வாமிகள் சிறிதுநேரம் மௌன மா யிருந்துவிட்டு, "நான் அமரநாதத்திற்குப் போகும் வழியிலே, எந்த யாத்திரிகனும் செல்லாத ஒரு செங்குத் துப் பாதையிலே ஏறினேன். அந்தத் தனி வழியிலே செல்லவேண்டுமென்று ஒரு சங்கற்பம் எனக்கு உண்டா யிற்று,'' என்று சொல்லிவிட்டு, "புத்திரா! உழைப்புச் சரீ ரக் கட்டைச் சிறிது அசைத்திருக்கலாம்; அங்குக் குளி ரோ பொறுக்க முடியாதது; எண்ணற்ற ஊசிகள் குத்து வதுபோ லிருந்தது. எனது சரீரத்தை விபூதியினால் அலங் கரித்துக்கொண்டு, ஒரு கௌபீனம் மாத்திரம் உடுத்து

நான் குகைக்குள்ளும் சென்றேன். அச் சமயத்திலே நான் வெப்பத்தையாவது குளிர்ச்சியையாவது உணரவில்லை. ஆனால், வெளியே வந்தவுடனே, நான் விறைத்துவிட்டேன்........" என்று உரைத்தார்.

சிஷ்யர்: "ஸ்வாமி! அங்கே வெண் புறாக்கள் பல இருக்கின்றனவென்றும், அவற்றைத் தரிசனம் செய்தால் இச்சாபூர்த்தி யாகின்றதென்றும், யாத்திரா பலன் அதிகரிக்கிறதென்றும் சொல்கிறார்களே; அது உண்மைதானா?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள்: "ஆம்! ஆம்! எனக்குத் தெரியும்! நான் மூன்று, நான்கு வெண் புறாக்களைப் பார்த்தேன். ஆனால், 'அவை குகையிலே யுள்ளனவா? அல்லது பக்கத்துக்குன்றுகளில் வசிக்கின்றனவா?' என்பது என்னால் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது" என்று பதில் கூறினார்.

சுவாமிகளுக்குச் சரீரம் சௌக்கியமில்லை யாதலாலே அநேகமாகக் கல்கத்தாவிலேயே சிகிச்சையின்பொருட்டுத் தங்கவேண்டி வந்தது. ஆனால், அவருடனே சம்பாஷிப்பதற்கு எண்ணற்ற ஜனங்கள் தினந்தோறும் வந்துகொண்டே யிருந்தார்கள்; சரீரம் சௌக்கியமில்லை என்ற காரணத்தை முன்னிட்டு ஸ்வாமிகள் அவர்களுடன் சம்பாஷிக்காம லிருப்பதில்லை. அதிகாலையிலிருந்து இரவு 8 அல்லது 9 மணி வரையில் ஜனங்கள் வந்துகொண்டே யிருப்பார்கள்; ஸ்வாமிகளுக்கு இதனால் வேளாவேளைக்கு ஆகா

ரம் கிடைப்பது தவறலாயிற்று. ஸ்வாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் தினந்தோறும் "இன்னின்ன நேரத்தில்தான் வருபவர்களுடனே சம்பாஷிப்பது,' என்று நிர்ணயம் செய்து வைத்துக்கொண்டு அப்படியே ஸ்வாமிகள் கண்டிப்பாக நடக்கவேண்டும்," என்று ஸ்வாமிகளை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஆனல், ஸ்வாமிகள் தம்மைத் தாமே காலத்துக்குக் கட்டுப்படுத்திக்கொள்ள மறுத்துவிட்டார். அவர், "இவர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு நடந்து வருகிறுர்கள்; நான் இங்கே உட்கார்ந்துகொண்டு, எனது சரீர சௌக்கியம் சிறிது கெட்டுவிடுமேயென்று நினைத்து அவர்களுடன் ஒரு சில வார்த்தைகளாவது பேசாமலிருக்கலாமா?" என்று தமது சகோதர சந்யாசிகளிடம் கூறுவார்.

மிஸஸ் ஓல் புல் என்னும் மாது ஒரு வீடு குடிக்கூலிக்கு எடுத்து அதிலே வசித்துவந்தாள். ஸ்வாமிகள் அடிக்கடி அங்குச் செல்வார்; அம் மாதுக்கு இதிகாச புராணங்களிலிருந்து பல கதைகள் எடுத்துப் புகல்வார்; சகோதரி நிவேதிதா அம்மையாருடைய வாசஸ்தலத்துக்கும் அடிக்கடி செல்வார்; சில சமயங்களில் தம்முடன் போஜனம் செய்யும்படி இவ் வம்மையாரை அழைத்துக்கொண்டு செல்வார்; தாமே அவருக்குச் சமையல் செய்து கொடுப்பார்; அவரைக் கொண்டு தமக்குச் சமையல் ஆக்கச் செய்வார்.

ஒருநாள் ஸ்வாமிகள் ஸ்வாமி யோகாநந்தரையும் சாரநச் சந்திரரையும் இட்டுக்கொண்டு, கல்கத்தா கண்காட்சிச் சாலையைப் பார்க்கச் சென்றார். அச்சாலையின் நிர்வாக உத்தியோகஸ்தராகிய ராய்பகதூர் ராமப்பிரஹ்ம சங்யால் என்பவர் ஸ்வாமிகளை மிகுந்த சந்தோஷத்தோடு வரவேற்று, அங்கு அடைக்கப்பட்டிருந்த மிருகங்களையெல்லாம் ஸ்வாமிகளுக்குக் காட்டினார். ஸ்வாமிகளின் முன்னிலையிலே சிங்கங்களுக்கும் புலிகளுக்கும் அவ் வுத்தியோகஸ்தருடைய உத்தரவின்மேல் ஆகாரம் கொடுக்கப்பட்டது; ஸ்வாமிகளுக்கு இது பார்க்க வெகு சந்தோஷமாயிருந்தது. பின்னர், பாம்புகளைப் பார்க்கச் சென்றார்கள்; இவ்விடத்திலே ஊர்வனவின் உற்பத்தியைப்பற்றி ஒரு விவாதம் நடந்தது; பின்னர்க் குரங்குக் கூட்டங்கள். ஸ்வாமிகள் அவற்றைப் பார்த்து வேடிக்கையாக, "இந்தச் சரீரம் உனக்கு எப்படிக் கிடைத்தது? முன் ஜன்மத்திலே என்ன பயங்கரமான கர்மம் செய்து இப்படி இங்கு வந்திருக்கிறாய்?" என்று கேட்டுத் தாமே சிரித்துக்கொண்டார்.

ராமப் பிரஹ்மர் ஸ்வாமிகளுக்கும் அவருடன் கூட வந்தவர்களுக்கும் சிற்றுண்டி யளிக்க, அதை உண்டுவிட்டு, நீண்டதோர் சம்பாஷணை யாரம்பித்தார் ஸ்வாமிகள். ராமப்பிரஹ்மருக்கு மிகுந்த சந்தோஷ முண்டாய்விட்டது. அன்று மாலையிலே சுவாமிகள் தாம் காலையிலே ராமப்பிரஹ்மருடனே சம்பாஷித்த விஷயங்களைப்பற்றியே பலராமருடைய வீட்டிலே அநேகருடன் இன்னும் விரிவாகச் சம்

பாஷித்தார். இச் சம்பாஷணையிலே ஸ்வாமிகள் "மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு மனத்தை யடக்குவதிலே ஜயம் பெறுகிருனே அவ்வளவுக் கவ்வளவு அவன் பெரியோ னுகிருன்" என்று கூறினர்.

ஒருவர்: "ஸ்வாமி! அப்படியானல் 'சரீர பலத்தை விருத்தி பண்ணிக்கொள்ளவேண்டும்,' என்று அடிக்கடி கூறுகிறீர்களே; அது எதற்கு?" என்று கேட்டார்.

ஸ்வாமிகள் உடனே ஆத்திரம் மிகுந்தவராய், "நீங் கள் மனிதர்கள்தானு? நீங்கள் மிருகங்களைப் பார்க்கிலும் மேலானவர்க ளல்லர்; உண்டுறங்கி வம்சவிருத்தி செய்து, பயத்தினுல் பீடிக்கப்பட்டிருத்தலிலே திருப்தி யடைந்துள் ளீர்கள்! சிறிது யுக்தி உங்களிடத்தில் இருந்திராமற்போ னுல், இதற்குள் நீங்கள் நாற்கால் மிருகங்களாக மாறி யிருப்பீர்கள்! தன்மதிப்பில்லை; உங்களுக்குள்ளே பொரு மை நிறைந்திருக்கிறது; அந்நியர்களுடைய நிந்தனைக்கு உங்களை நீங்களே விஷயங்க ளாக்கிக்கொண்டுவிட்டீர்கள்! உங்களுடைய வீண் தற்புகழ்ச்சியையும் உங்கள் கொள்கை களையும் மற்றும் ஒருபக்கம் எறிந்துவிடுங்கள்! உங்கள் தினசரி வாழ்க்கையின் செய்கைகளையும் வியாபாரங்களை யும் அமைதியாக ஆலோசித்துப் பாருங்கள்! நீங்கள் மிருக சுபாவத்தினுல் ஆளப்படுகிறதினுலே, இருப்பதற்குள்ள எத்தனத்திலே முதலில் ஜயமடையும்படி நான் உங்களுக் குப் போதிக்கிறேன்; உங்கள் மனத்துடனே நீங்கள் இன் னும் நன்ருகக் குஸ்தி செய்ய வல்லவர்க ளாகவேண்டு

மானால், உங்கள் சரீரத்தைக் கட்டுவதைக் கவனிக்கவேண்டும். நான் மறுபடியும் மறுபடியும் கூறுகிறேன். சரீர பலமில்லாதவர்கள் ஸ்வாநுபூதிக்குப் பாத்திரர்களல்லர். மனமானது ஒருதரம் அடக்கப்பட்டு, மனிதன் தனக்குத் தானே எஜமானனாய்விட்டானானால், சரீரமானது பலமுள்ளதாயினும் அல்லாவிடினும் பரவாயில்லை; ஏனெனில், அப்பொழுது அவன் அதனால் ஆளப்படுகிறதில்லை......."
என்று கர்ச்சித்தார்.

இக்காலத்திலே ஸ்வாமிகளுக்கு உறக்க முண்டாவது வெகு அரிதாயிருந்தது. அவருடைய வியாதி அவருடைய மூளையை எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே வைத்துக்கொண்டிருந்தது; ஆயினும், அவர் சிரமசாந்தியை விரும்பினார். இந்நாட்களிலே சூர்ய கிரகண காலத்திலே ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. ஸ்வாமிகள் பலராமருடைய வீட்டிலே யிருந்தார்; ஒரு சிஷ்யர் அத்தியந்த அன்புடன் ஆக்கிய போஜன முண்டு ஸ்வாமிகள் படுத்துக்கொள்ள, அந்தச் சிஷ்யர் ஸ்வாமிகளுடைய பாதங்களை வருடிக்கொண்டிருந்தார்.

கிரகணம் பிடித்த சங்கதி தெரிந்தவுடனே, ஸ்வாமிகள்: "நல்லது, சூரியகிரகணம் ஆரம்பித்துவிட்டது; நான் சிறிது உறங்குகிறேன்" என்றார்: கிரகணம் நன்றாகப் பிடித்து, ஆகாயத்திலே இருள் சூழ்ந்துகொண்டபொழுது, "அது கிரகணம்தானே?" என்று கேட்டுவிட்டு, உறங்கச் சென்றார். சிறிதுநேரம் கழித்து ஸ்வாமிகள் எழுந்திருந்து

தம்முடன் கூட இருந்த தமது சிஷ்யரிடத்திலே, "கிரகண காலத்திலே ஒரு மனிதன் எதையாவது விரும்பினால், அல்லது செய்தால், நூறு மடங்கு பலன் கிடைக்கும்" என்று சொல்லுகிறார்கள். 'இப்பொழுது நன்றாகத் தூங்குவேனானால், இனிமேல் நல்ல தூக்கம் உண்டாகும் என்று நினைத்தேன்.' ஆனால், அப்படிக்கில்லை. நான் பதினைந்து நிமிஷங்கள்தான் உறங்கினேன். ஜகன்மாதா இந்தச் சரீரத்துக்கு நல்ல உறக்கம் கிருபை பாலிக்கவில்லை" என்றார்.

ஸ்வாமிகளுக்குச் சாரதச் சந்திரர் என்னும் சிஷ்யரிடத்திலே மிகுந்த வாத்சல்ய முண்டு. சாரதச் சந்திரர் கிருகஸ்தர். இரவிலே ஸ்வாமிகளுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்யும்படியான பாத்தியதை சாரதச் சந்திரருக்குக் கிடைத்தது. ஒரு நாள் இரவு ஸ்வாமிகளுடைய கால்களைச் சாரதச் சந்திரர் வருடிக்கொண்டிருக்கையில் சுவாமிகள் நிர்விகற்ப சமாதியின் லக்ஷணங்களையும் காசிபுரம் தோட்டத்திலே தாம் அடைந்த அநுபூதிகளையும்பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். இப்படிப் பல அரிய விஷயங்களை இரவு வெகுநேரம் வரையில் எடுத்து உரைத்துக் கொண்டிருந்துவிட்டு, சுவாமிகள் தமது சிஷ்யரைத் தம் அருகிலே படுத்துக்கொள்ளும்படி ஆக்ஞை செய்தார்; சுவாமிகள் எப்பொழுதும்போல் சிறு தூக்கம் தூங்கி, எப்பொழுதும் விழித்துக்கொண்டே யிருந்தார்.

விடியற்கால சமயத்திலே சிஷ்யர் சாரதச் சந்திரர் திடுக்கிட்டு எழுந்திருந்து, சுவாமிகளை நோக்கி, "ஸ்வாமி!

நான் ஒரு கனவு கண்டேன். நான் சாக்ஷாத் பரமசிவனை வில்வ தளங்களினால் பூஜித்துக்கொண்டிருக்கையில், அந்தச் சிவலிங்கம் தங்களிடத்திலே கரைந்து ஐக்கியமானதைக் கண்டேன்," என்றார்.

ஸ்வாமிகள் "இதையெவருக்கும் சொல்லாதே," என்று ஆக்ஞாபித்தார். ஆனால், அந்தச் சிஷ்யர் உடனே கங்கைக்குச் சென்று ஸ்நானம் செய்து தாம் சுவாமிகளைச் சிவபூஜை செய்யுமாறு பூஜிப்பதற்குச் சுவாமிகள் உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சுவாமிகள் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும், அந்தச் சிஷ்யர் கேட்காததினாலே, சுவாமிகள் இணங்கவேண்டியதாயிற்று. அந்தச் சிஷ்யர் உடனே வில்வ தளங்கள் கொண்டுவரச் சென்றார்; எங்கும் வில்வமரம் அகப்படவில்லை. சாரதச் சந்திரர் மிகுந்த மன வருத்தத்துடனே திரும்பி வரும் வழியில், மடத்தைச் சேர்ந்த நிலத்திலே எவரும் செல்லாத ஒரு மூலையில் ஒரு சிறிய வில்வமரம் நின்றது கண்டு சந்தோஷித்து, சில தளங்களை எடுத்துக்கொண்டு சுவாமிகளிடம் வந்தார்; சுவாமிகள் அப்பொழுது ஒரு கட்டிலின்மேலே கிழக்கு நோக்கி யுட்கார்ந்திருந்தார். சாரதச் சந்திரர் சுவாமிகளைப் பூஜை செய்வதற்கு அருகில் செல்லவே, சுவாமிகள் அசைவற்றுச் சித்திரப் பிரதிமைபோலத் தீர்க்க நிஷ்டையிலே எழுந்தருளியிருந்தார். சாக்ஷாத் பரமசிவனே அங்குச் சாந்நித்தியமா யிருந்ததுபோ லிருந்தது. ஸ்வாமி பிரேமானந்தரைத் தவிர, எல்லாச் சந்யாசிகளும் அப்பொழுது அங்

இருந்தார்கள். சுவாமி பிரேமாநந்தர் கடைத்தெருவுக்குப் போயிருந்தார், இன்னும் திரும்பி வரவில்லை. பூஜை முடிந்து விட்டது, சுவாமிகள் தமது அன்பு மிகுந்த சிஷ்யரை நோக்கி, "புத்திரா! குருபூஜைக்கு உபயோகிக்கப்படும் புஷ்பக் குடலையிலே நீ எனது கால்களைக் கழுவி, மடத்துப் பண்ட பாத்திரங்களையெல்லாம் எடுத்து என்னை நீ பூஜித்தாயென்று பிரேமாநந்தருக்குத் தெரிந்துவிட்டால் நீ என்ன செய்வாய்? அவர் கோபித்துக்கொள்வாரே" என்றார்.

சுவாமிகள் இவ் வார்த்தைகள் சொல்லி முடிந்தது தான், சுவாமி பிரேமாநந்தர் வந்துவிட்டார். சுவாமிகள், விஷயத்தை அவருக்குத் தெரிவிக்க, அவர் "சாரதச் சந்திரர் செய்தது எல்லாம் சரிதான். நீங்கள் வேறு, ஸ்ரீ ராமகிருஷ்ணர் வேறா?" என்றார். எல்லோருக்கும் ஆச்சர்யமாய்விட்டது.

சுவாமிகள் எங்கிருந்தாலும் பக்த சிரேஷ்டர்கள் அவரைச் சூழ்ந்துகொள்வார்கள். சுவாமிகள் பல வேடிக்கைக் கதைகள் புகன்று தம்மைச் சூழும் ஜனங்களை 'வயிறு வெடிக்க'ச் சிரிக்க வைப்பார். வேடிக்கை விளையாட்டுக்கள் பேசிச் சிரித்துக்கொண்டே யிருப்பார்; ஆழ்ந்த விஷயங்களைப்பற்றிப் பேசப் புகுந்துவிடுவார். சில சமயங்களில் சுவாமிகளுக்கு ஏகாந்தத்தின்பேரில் இச்சையுண்டாயிற்று. அவருக்கு ஏகாந்தவாசத்தில் இச்சை யேற்பட்டதென்றால் அது நன்றாக வெளியே தெரிந்துவிடும்; அவருடைய முகத்

திலே ஒருவித காம்பீர்யமும் பயங்கரமும் உண்டாய்விடும்; எவரும் அவரை யணுக அஞ்சுவார்; ஆனல், அவர் தாராள மா யிருக்கும்பொழுது, அவரினும் தாராளமாக வேறெவ ரும் இருக்கமாட்டார்.

இந்நாட்களிலேதான் சுவாமிகளுடைய எண்ணங்களைப் பரப்புவதற்காக "உத்போதனம்" என்ற பத்திரிகை மாத மிருமுறையாக வாங்காளி பாஷையிலே ஆரம்பிக்கப்பட் டது. ஸ்வாமி திரிகுணாதீதர் அதற்குப் பத்திராதிபரா யிருப் பதற் கிசைந்து முன்வந்தார். ஒரு அச்சுக்கூடம் விலைக்கு வாங்கப்பட்டது; 1899-ம் வருஷம் ஜனவரிமீ 14-ம் தேதி யன்று முதற் பத்திரிகை வெளிவந்தது.

டிசம்பர்மீ 16உ யன்று சுவாமிகள் வைத்தியநாத க்ஷேத்திரத்திற்குச் சென்று சின்னாட்கள் இருக்க விரும்புவ தாகவும், பின்னர்க் கோடைகாலத்திலே ஐரோப்பாவுக் கும் அமெரிக்காவுக்கும் செல்ல உத்தேசித்திருப்பதாகவும் சுவாமிகள் தமது மடத்துச் சந்நியாசிகளுக்குத் தெரியப் படுத்தினர். இந்தச் சங்கதி வெளியே எல்லோருக்கும் தெரி ந்துவிட்டது. இராப்பகலாக எண்ணற்ற ஜனங்கள், முக்கிய மாக மாணவர்கள் சுவாமியைச் சூழத் தொடங்கிவிட் டார்கள். சுவாமிகளும் சிறிதும் சலிக்காமல் அவர்களுக் குத் தர்மோபதேசம் செய்துவந்தார். டிசம்பர்மீ 19-ம் தேதி சுவாமிகள் ஹரேந்திர நாத தத்தர் என்ற ஒரு பிரஹ் மச்சாரி சிஷ்யரைக் கூட்டிக்கொண்டு வைத்தியநாத க்ஷேத் திரம் சென்று அங்கே பாபு ப்ரியநாத முக்கர்ஜி யென்பவ

ருடைய வீட்டிலே அதிதியா யிருந்தார். இங்கே சுவாமி கள் பல புஸ்தகங்களைப் படிப்பதிலும் கடிதங்கள் எழுது வதிலும் காலம் கழித்துவந்தார். அவர் இக் காலங்களி லே ஏகாந்தவாசம் செய்தாரென்றே சொல்லலாம். ஆயி னும், சுவாமிகளுடைய சரீரம் அசௌக்கியத்தினால் பீடிக்கப்பட்டே வந்தது. அவரைப் பீடித்த வியாதி அதி கரித்தது. கடூரமான க்ஷயரோகம் அவரைப் பீடித்துக் கொண்டது. ஒரு சமயத்திலே இந்த வியாதியினால் சுவாமி கள் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில், மூச்சு நின்றுவிடும்போ லத் தோன்றிவிட்டது. அக்காலத்திலே சுவாமிகளுடைய நினைப்பெல்லாம் அகண்ட வஸ்துவினிடத்திலே சென்று விட்டது. 'எங்கே சரீரம் விழுந்துவிடுமோ' என்று அவ ரைச்சுற்றி நின்றவர்கள் பயந்தார்கள். அச்சமயத்திலே சுவாமிகளுடைய மனதிலே "ஏகப் பிரஹ்மம், ஏகப்பிரஹ் மம் ஒன்றே, அமிருத ஏகமே உள்ளது; பிரபஞ்சத்தில் அநேக மில்லை; எல்லாம் ஏகப் பிரஹ்மமே, ஏகப் பிரஹ்ம மே!" என்றுள்ள உபநிஷத்து ஸ்லோகம் ஒலித்துக்கொண் டிருந்ததாம்.

இந்தப் பிரியநாத முக்கர்ஜியினுடைய வீட்டிலே சுவாமி கள் ஸ்வாமி நிரஞ்சனானந்தருடனே வசித்துக்கொண்டிருந்த பொழுது, இருவருமாக ஒருநாள் வெளியே உலாவச் சென்றார்கள். அப்பொழுது ஒருவன் தெருப்பக்கத்தில் வயிற்றுக் கடுப்பினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டு, கொடுங் குளிரிலே படுத்துக் கிடந்தான். அவன் அழுக்கடைந்த

சிறு கந்தை பொன்றுதான் உடுத்தியிருந்தான். தவிர, வாய் விட் டலறி அழுதுகொண்டிருந்தான். சுவாமிகளுக்கு அவனைப் பார்த்தவுடனே பரிதாப முண்டாய்விட்டது. சுவாமிகளே இன்னொருவர் வீட்டில் போய் வசித்துவருகிறார். இந்த வியாதியஸ்தனை எங்கே எடுத்துச் செல்வது? ஆனால், அவனுக்கு உதவி செய்யாமல், அவனை யெடுத்து ஒரு நல்ல இடத்துக்குக் கொண்டுபோகாமல் சுவாமிகளால் ஒரு அடி எடுத்து வைக்க முடியுமா? சுவாமிகளும் சுவாமி நிரஞ்சனநந்தருமாக மெல்ல அந்த வியாதியஸ்தனைத் தூக்கி எடுத்து நிறுத்தித் தாங்கிக்கொண்டே தாங்கள் இறங்கியிருந்த வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ந்தார்கள். அங்கே ஒரு அறையிலே அவனைப் படுக்கவைத்து, சுவாமிகள் ஒரு போர்வையை யெடுத்து அவன்மீது போர்த்தி, அவனுக்கு ஒத்தனம் கொடுத்தார்கள். சின்னாட்களுக்குள்ளே அந்த வியாதியஸ்தன் சொஸ்த மடைந்து சுவாமிகளிடத்திலே அளவற்ற நன்றிபறிதலுடனே விடைபெற்றுச் சென்றான். பிரியநாத முக்கர்ஜி சுவாமிகளுடைய ஜீவகாருண்ய குணத்தைக் கண்டு வியந்து ஆச்சரிய மடைந்தார்.

சுவாமிகள் ஜனவரிமீ முழுதும் வைத்திய நாதத்திலேயே வசித்தார்; பெப்ரவரிமீ 3-ம் தேதியன்று மறுபடியுங் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்.

62-வது அத்தியாயம்

சின்னாட்கள் கழிந்தன

ஸ்வாமிகள் தமது சந்யாசி சிஷ்யர்களையும் பிரஹ்மச்சாரி சிஷ்யர்களையும் பயிற்றுவிப்பதிலேயே இரவும் பகலும் கண்ணும் கருத்துமாயிருந்தார். அவர்முன் இருந்தாலே போதும், அவருடன் வசித்தாலே போதும். அதுவே ஒரு பெரும் பயிற்சியாம். "எந்த வேலை செய்தாலும் அந்த வேலை எவ்வளவு இழிந்ததாயினும், அந்த வேலையிலே மனிதன் முழுக் கருத்தையும் செலுத்தவேண்டும்," என்பதே சுவாமிகளுடைய கொள்கை. இக்கொள்கையைச் சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குப் போதித்துவந்தார். "நன்றாகச் சமையல் செய்ய முடியாதவன் பக்கா சந்நியாசியா யிருக்க முடியாது. பரிசுத்த மனத்துடனும் ஏகாக்கிரதையுடனும் செய்யப்பட்டாலொழிய, அது சாத்வீகமா யிருப்பதில்லை." சிஷ்யர்களுள் இரண்டொருவரைப் பிரசங்கம் செய்யும் வன்மை பெறும்படி பழக்குவிப்பார்; மடத்திலேயுள்ள சந்யாசிகளையெல்லாம் சபையினராக உட்காரச் செய்து, தமது சிஷ்யர்களைப் பிரசங்கம் செய்யும்படி ஆக்ஞாபிப்பார். சில சமயங்களில் அவர்கள் கூச்சப்படுவார்கள். அப்பொழுது "உன்முன் உள்ள ஜனங்களைப் புழுக்களாக நினைத்துக் கொள்" என்ற ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசமொழியை எடுத்து உரைத்து அவர்களுக்குச் சுவாமிகள் தைர்யம் ஊட்டுவார். சிஷ்யர்களுக்கு உற்சாக முண்டாய்விடும்;

அவர்கள் ஏதேனும் ஒரு விஷயத்தை யெடுத்துத் தாராளி மாக மிகுந்த சாதுர்யத்துடனே பேசுவார்கள். சுவாமிகள் அடிக்கடி கை தட்டி, பிரசங்கத்தின் முடிவிலே "பேஷ்! பேஷ்" என்று சொல்லி, அவர்களை மேன்மேலும் ஊக்கி விடுவார். ஸ்வாமி சுத்தாநந்தரைப்பற்றிச் சுவாமிகள் "சீக்கிரத்திலே அவர் ஒரு சிறந்த வாக்மி யாவார்" என்றார்.

மனிதனுக்கு மாத்திரம் தன்னம்பிக்கை யிருக்குமானால், எதுவுமே முடியாத காரியமில்லையென்று சுவாமிகள் அடிக்கடி சொல்வார்.

"உலக சரித்திரமே தன்னம்பிக்கை யிருந்த ஒரு சில மனிதர்களுடைய சரித்திரமாம். அந்த நம்பிக்கையானது உள்ளேயுள்ள ஈச்வரத்துவத்தை வெளியே அழைக்கின்றது. நீங்கள் எது வேண்டுமோ செய்ய முடியும். அகண்ட சக்தியை வெளிப்படுத்துவதற்குப் போதுமான அளவு முயற்சிக்காதபொழுதுதான் நீங்கள் தவறிவிடுகிறீர்கள். ஒரு மனிதனாவது ஒரு ஜனசமூகமாவது தன்னம்பிக்கையை இழந்துவிட்டால், மரணம் உண்டாகிறது."

முதலில் உங்களிடத்திலேயே நம்பிக்கை வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பிடியத்தனை பலவான்கள் உலகத்தை யசைப்பார்கள். உணர்வதற்கு ஹிருதயமும், அறிவதற்கு மூளையும், வேலை செய்வதற்கு பலமான கையும் நமக்கு வேண்டும். புத்தர், மிருகங்களுக்காகத் தம்மைத் தியாகம் செய்தார். வேலை செய்வதற்குத் தகுந்த கார்பஸ்தர்களாக

உங்களை நீங்கள் ஆக்கிக்கொள்ளுகிறீர்கள். ஆனால், வேலை செய்கிறவர் ஈச்வரனே, நீங்க ளல்லர். ஒரு மனிதன் தனக்குள்ளே பிரபஞ்சம் முழுதையும் வைத்துக்கொண்டிருக்கிறான். ஜடத்தின் ஒரு அணுவிலும் பிரபஞ்சத்தின் சக்தியெல்லாம் இருக்கிறது. ஹிருதயத்துக்கும் மூளைக்கும் இடையே ஏற்படுகிற போராட்டத்திலே, ஹிருதயத்தைப் பின்பற்றுங்கள்.

"லோகாசாரங்களை, தேசாசாரங்களைக் கவனிக்காது உண்மையை உள்ளபடி எடுத்துரைத்தல் வேண்டும்; சிறிதும் பயப்படுதல் கூடாது" என்பதே சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்கு அடிக்கடி போதித்துவந்தது.

"ராஜி யில்லை! மேற்பூச்சு இல்லை! பிணங்களைப் புஷ்பங்களினால் மூடுதல் கூடாது!........ராஜி பண்ணிக்கொள்வதி லுள்ள இந்த முயற்சி வெறும் முழுப் பயங்காளித் தனத்திலிருந்தே யுண்டாகிறது. தைர்யமா யிருங்கள்! எல்லாவற்றுக்கும் மேலே எனது குழந்தைகள் தைர்யமா யிருக்கவேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் சிறிதும் ராஜி பண்ணிக்கொள்ளுதல் கூடாது! மிகமிகச் சிரேஷ்டமான உண்மைகளை எங்கும் பரப்பிப் போதியுங்கள். உங்களுடைய மரியாதை கெட்டுவிடுமே யென்று, அல்லது சுகமல்லாத மனஸ்தாப முண்டாகுமே யென்று பயப்படாதீர்கள். உண்மையைக் கைவிட்டுவிடும்படி எத்தனையோ தூண்டுதல்கள் உங்களுக்கு உண்டானபோதிலும் நீங்கள் உண்மையை விடாது உபாசித்துவந்தால் ஒருவித தெய்

பலம் உங்களுக்கு உண்டாகுமென்று நிச்சயமாக நம்புங்கள்; அந்தப் பல மிருக்கும்பொழுது உங்கள் முன்னே மனிதர்கள் நீங்கள் உண்மையென்று நம்பாத விஷயங்களைப் பேசுவதற்கே நடுங்குவார்கள். நீங்கள் இடைவிடாமல் பதினன்கு வருஷகாலம் உண்மையினின்றுந் தவருது அதற்கு ஊழியம் செய்துவந்தால் நீங்கள் சொல்வதெல்லாம், ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிடும்.''

சுவாமிகள் வைத்திபாத க்ஷேத்திரத்திற்குப் போவதற்கு முன்னமே பொருநாள் "ஆகார விஷயத்தைப்பற்றிச் சம்பாஷணை செய்தார். "ஆகாரத்தை அடக்காவிட்டால், மனத்தை யடக்குதல் அசாத்தியம். பேருண்டி பெருந் தீங்கை விளைவிக்கின்றது. சரீரமும் மனமும் பேருண்டியினுல் அழிந்துவிடுகின்றன,'' என்ருர் ஸ்வாமிகள். அப்பியாச காலத்திலே ஹிந்துக்க ளல்லாதவர்களுடைய கையிலிருந்து எதுவும் அப்பியாசிகள் வாங்கி யுண்ணலாகாதென்பதே சுவாமிகளுடைய அபிப்பிராயம். அப்பியாச காலத்திலே எப்போதும் நிஷ்டையிலிருத்தல்வேண்டும்; பிரஹ்மச்சர்ய விரதம் பரிசுத்தமாகக் காப்பாற்றப்பட வேண்டும். மடத்திலேயுள்ள நாள்வரையில் பிரஹ்மச்சர்யம் தவறலாகாது. பின்னர் அவர்கள் சந்நியாசிகளாவதும் கிருகஸ்தர்களாவதும் அவர்களுடைய இஷ்டம்.

மேமீத்திலே பொருநாள் சுவாமிகளுக்குச் சந்நியாச மஹிமை பலமாகக் கொண்டுவிடவே, சுவாமிகள் தமது சிஷ்யர்களை நோக்கி, "மடத்து விஷயங்களிலே உலகின

ருக்கு எவ்வித அதிகாரமும் இருத்தல் கூடாது. சந்யாசிகளுக்குத் தனவந்தர்களிடத்திலே எவ்வித கார்யமுமில்லை. அவன் செய்யவேண்டிய கடமை எளியவர்களுக்குத்தான். அவன் எளியவர்களை மிகுந்த அன்புடனே நடத்தல் வேண்டும்; தன் சக்தி எல்லாவற்றையும் உபயோகித்து அவர்களுக்கு ஆநந்தகரமாக ஊழியம் செய்தல் வேண்டும். பணக்காரர்களுக்கு மரியாதை செலுத்தி அவர்களுடைய தயவை நாடிக் காத்திருப்பது நமது தேசத்துச் சந்யாச வகுப்புக்க ளெல்லாவற்றினுடையவும் கெடுதலா யிருந்திருக்கிறது. உண்மைச் சந்யாசி அதை ஜாக்கிரதையாக நீக்கிவிடவேண்டும். அத்தகைய நடத்தை ஒரு தாசியினுடையதேயன்றி, உலகைத் தியஜித்து விட்டதாகக் கூறுகின்றவனுடையதன்று. காமகாஞ்சனத்திலே அழுந்தியிருக்கும் ஒருவன் காமகாஞ்சன தியாகத்தையே மத்தியக் கொள்கையாகக் கொண்டிருந்த ஒருவருடைய உண்மைப் பக்தனா யிருப்பது எப்படி? அணுவளவும் காமகாஞ்சன அழுக்கு இல்லாத ஒருவனைத் தம்முடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பதற்குத் தம்மிடம் அனுப்பும்படி ஸ்ரீ ராமகிருஷ்ணர் அழுது ஜகன்மாதாவிடம் பிரார்த்தித்தார்; ஏனெனில், "உலக மனத்தினருடனே நான் பேசும்பொழுது எனது உதடுகள் எரிகின்றன" என்று அவர் கூறுவார். உலகமனத்தினருடையவும் அசுத்தர்களுடையவும் ஸ்பர்சத்தைக்கூடத் தாம் சகிக்க முடிகிறதில்லை யென்று அவர் சொல்வது வழக்கம்," என்றார்.

சுவாமிகள் வைத்தியநாதத்திலிருந்து திரும்பி வந்த பின்னர்த் தமது சிஷ்யர்களை உலக அழுக்குப் பற்றிக்கொள்ளாதபடி சில விதிகள் ஏற்படுத்தினர்.

"உலகினர் அதிகப் பழக்கம் காரணத்தினாலே சாதுக்களின் படுக்கைகளிலே உட்காரவாவது, அல்லது படுக்கவாவது, அல்லது அவர்களுடனே போஜனத்துக்கு உட்காரவாவது கூடாது" என்று விதித்தார். சுவாமிகள் ஒரு சிஷ்யரிடத்திலே கூறியதாவது:-

"இந்நாட்களிலே நான் உலகினருடைய சரீரங்களிலும் ஆடைகளிலும் ஒருவித அருவருப்பான காம நாற்றத்தை புணர்கிறேன். சாஸ்திரங்களிலே நான் அதைப்பற்றிப் படித்துள்ளேன்; இப்பொழுது, பரிசுத்தமும் தியாகமும் உள்ள மனிதர்கள் உலகினருடைய ஸ்பர்சத்தை அல்லது சேர்க்கையை ஏன் சகிக்க முடிகிறதில்லை யென்பது எனக்குத் தெரியவருகிறது. நியாயமான கடுமையுடனும் அறிவுடனும்தான் சாஸ்திரங்கள் பிரஹ்மச்சாரிகளுக்கு, ஸ்திரீகளிடத்திலிருந்துமாத்திர மில்லை, ஸ்திரீகளுடன் சம்சர்க்கம் செய்பவர்களிடத்திலிருந்துகூட ஒதுங்கியிருக்கும்படி ஆக்ஞை யிடுகின்றன. பிரஹ்மச்சாரிகள் சந்யாச லக்ஷியங்களிலே உறுதியாக ஸ்திரப்பட்டுவிட்டால், பிறகு அவர்கள் கிருகஸ்தர்களுடனே கலந்து கொண்டால் தீங்கு நேரிடாது," என்றார்.

இதனால் சுவாமிகளுக்குக் கிருகஸ்தர்களிடத்தும் ஸ்திரீகளிடத்தும் வெறுப்பு மிகுதி யென்று எவரும்

னைக்க வேண்டாம். சாரதாதேவியினுடைய வாசஸ்தலத்தில்கூட — அங்கு அநேக ஸ்திரீ பக்தர்கள் அடிக்கடி போய் வந்துகொண்டிருப்பார்க ளாதலால் — "வாலிப சந்நியாசிகள் செல்லுதல் கூடாது," என்று சுவாமிகள் கண்டிப்பாக உத்தரவு செய்திருந்தார்.

சுவாமிகள் சிலகாலம் மடத்திலும் சிலகாலம் பலராமருடைய வீட்டிலுமாக வசித்துவந்தார். சுவாமிகள் வைத்தியநாதத்திலிருந்து திரும்பி வந்த அன்றைக்கே தமது சகோதர சந்யாசிகளையெல்லாம் ஒன்றுசேர்த்து, "இயேசு கிறிஸ்துவினுடைய சிஷ்யர்கள் எப்படி உலகு முழுதும் இயேசுகிறிஸ்துவினுடைய உபதேச மொழிகளைப் பரப்பினார்களோ, அப்படியே நீங்களும் எங்கணும் சென்று ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசங்களைப் பரப்புங்கள்" என்று உத்தரவு செய்தார். அன்றே தமது சிஷ்யர்களாகிய சுவாமி விரஜாநந்தரையும் பிரகாசாநந்தரையும் கீழ் வங்காளத்திலுள்ள டாக்கா நகருக்கு உடனே செல்லும்படி ஆக்ஞையிட்டார்.

சுவாமி விரஜாநந்தர்: "சுவாமி!, எனக்கென்ன தெரியும்?" என்று விநயத்துடனே கூறினார்.

சுவாமிகள்: "அதையே எல்லோருக்கும் எடுத்துச் சொல்வாய்? அதுவே ஒரு பெரிய சமாச்சார மல்லவா?" என்றார்.

ஆயினும், விரஜாநந்தர், "சுவாமி! என்னுடைய சொந்த முக்தியின் பொருட்டு இன்னும் கொஞ்சக்காலம் நான்

சாதனங்கள் புரியும்படி அநுக்கிரகிக்க வேண்டும்" என்றார்.

சுவாமிகளுக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. "உன் சொந்த முக்தியை நாடினால் நீ நரகம் சென்று விடுவாய். நீ மிகமிக உத்கிருஷ்ட பதவியை அடைய விரும்புவது உண்மையாமாயின், பிறருடைய மோட்சத்தை நாடு! சொந்த முக்திக்குள்ள இச்சையை அழித்துவிடு! இதுவே மிகமிகச் சிரேஷ்டமான சாதனம். புத்திரர்காள்! முழு'ஹிருதயத்துடனே வேலை செய்யுங்கள்! வேலையின் பயன்களைக் கருதாதீர்கள்! பிறருக்காகப் பாடு பட்டு, நரகம் சென்றால் தான் என்ன? ஸ்வநலத்துக்காகப் பாடுபட்டுப் பெறும் முக்தியைவிட அது மேல்தானே," என்றார்.

பின்னர்ச் சுவாமிகள் அவ் விருவரையும் மடத்தின் பூஜையறைக்குள்ளே இட்டுச் சென்றார்; மூவருமாக நிஷ்டையில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் கழித்துச் சுவாமிகள் அவர்களை நோக்கி, "நல்லது; இப்போது என்னுடைய சக்தியை உங்களுக்கு ஊட்டுகிறேன்! ஈச்வரனே உங்களுக்குப் பின்புற மிருப்பார்!" என்று கூறினார்.

அன்றைபதினம் மடத்துக் குளத்திலே ஒருவித விநோதமான சிறிய மீன் ஒன்று பிடிக்கப்பட்டது. 'இந்த மீன் ஓடுந் தண்ணீரிலே யிராதாகையால், மடத்துக் குளத்திலே இது அகப்பட்டது நல்ல காரியத்துக்கு அறிகுறி,' என்று சுவாமிகள் கருதினர். ஸ்வாமி விரஜாநந்தரும் ஸ்வாமி பிரகாசாநந்தரும் பெப்ரவரிமீ 4-ம் தேதியன்று

சுவாமிகளுடைய மனப்பூர்வமான ஆசிவசனம் பெற்று டாக்கா நகர் சென்றூர்கள். சுவாமிகள் இன்னும் ஸ்வாமி சாரதாநந்தரையும் ஸ்வாமி துர்யாநந்தரையும் கூர்ச்சரதேசத்திலே போய் வேலே செய்யும்படி ஆக்ஞாபிக்க, அவர்களும் அம்மாதம் 7-ம்தேதி யன்று கூர்ச்சர தேசத்துக்குப் புறப்பட்டார்கள்.

வேத சாஸ்திரங்க ளெல்லாம் ஆசையுள்ள மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படவேண்டுமென்பது சுவாமிகளுக்கிருந்த ஒரு பேராசை. மடமானது நீலாம்பர முக்கர்ஜியினுடைய உத்தியான மாளிகைக்கு மாற்றப்பட்டது முதல் சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளேக் கொண்டு உபநிஷத்துக்கள், பிரஹ்மசூத்திரங்கள், பகவத்கீதை முதலிய சாஸ்திரங்களேப் போதித்துவரும்படி செய்துவந்தார்; சுவாமிகளே கொஞ்சக்காலம் பாணினியினுடைய அஷ்டாத்தியாயி என்ற கிரந்தத்தைப் பாடம் சொல்லிக் கொடுத்தார். ஒருநாள் ஸம்ஸ்கிருதபாஷையிலே ஒரு கவி பாடிவிட்டு, அதை ஸம்ஸ்கிருதத்திலே நிபுணராகிய தமது சிஷ்யர் சாரதசந்திரரிடத்திலே கொடுத்து, "இவற்றைப் பரிசோதித்து, சந்தங்களிலே ஏதேனும் தப்பு இருக்கிறதா? என்று பார். எனக்கு எண்ணங்களிடத்திலேயே மனம் செல்லுவதினூலே, இலக்கண வழுக்கள் ஏற்படலாம். அப்படி ஏதேனும் இருந்தால், பார்த்துத் திருத்திவிடு" என்றூர்.

சிஷ்யர் "சுவாமி! தங்களுடைய ஸம்ஸ்கிருத வித்வத் எல்லோரும் அறிந்ததே. சாரமே பெரிதொழிய, சக்கை

பெரி தன்று; என்னமே பெரிதொழிய வடிவம் பெரி தன்று. தாங்கள் வழுக்கள் என்று கூறுவது காலகால மாய் ரிஷிகளால் அநுபவிக்கப்படுவரும் பாத்தியதையே யாகும்” என்றார்.

சின்னாட்களுக்குள்ளே இந்தக் கவி எங்கோ கெட்டுப் போய்விட்டது; சாரதச்சந்திரர் ஒரு பிரதி எடுத்து வைத் திருந்தார்; அதுவும் காணப்படவில்லை. “சுவாமிகளு டைய அருமையான கவி காணவில்லையே” என்று எல் லோரும் மிக வருந்தினார்கள். சுவாமிகள் சமாதி யடை ந்து நான்கு வருஷங்கட்குப் பின்னர் சாரதச்சந்திரருடைய ஒரு பெட்டியில் பழய காகித கட்டுகளி னிடையில் இது காணப்பட்டது.

இக்காலத்திலே எண்ணற்ற ஜனங்கள் சுவாமிகளைப் பார்ப்பதற்கு வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருந்தார் கள். சுவாமிகளைப் புதிய மடத்திலே பார்ப்பதற்காக, தேவ போகம் என்று வெகு தூரத்திலேயுள்ள ஒரு கிராமத்தி லிருந்து நாகமஹாஷயர் வந்து சேர்ந்தார்.

உடனே சுவாமிகள் எழுந்து நாகமஹாஷயரை வண ங்கி, யோகக்ஷேமங்கள் விசாரித்தான பின்னர், நாகமஹா ஷயர், “ஜய சங்கர! சாக்ஷாத் பரமசிவனைப் பிரத்தியக்ஷத் தில் தரிசிக்கும் பாக்கியவந்தன் ஆனேன்,” என்று கூறிக் கொண்டே, சுவாமிகள் அவரை உட்காரும்படி எவ்வள வோ சொல்லியும் கேட்காதவராய், இரு கைகளையும் கூப்பிக்கொண்டே நின்றார். சுவாமிகள் அவருடைய சரீர

செ: க்கியத்தைப்பற்றி விசாரிக்க, "ஒன்றுக்கும் உதவாத சதையையும் எலும்பையும்பற்றி விசாரிப்பதில் யாது பயன்? பரமசிவனைப் பிரத்தியக்ஷத்தில் தரிசித்து ஆநந்த மடைகிறேன்" என்று சொல்லி, சுவாமிகளின் முன்னே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

ஸ்வாமிகள்: "அப்படியெல்லாம் தாங்கள் செய்யக் கூடாது," என்று அவரை யெழுப்பி நிறுத்தினர். அப்பொழுது உபநிஷத்துப் பாடம் நடந்துகொண்டிருந்தது. சுவாமிகள் தமது சிஷ்யர்களை நோக்கி, "பாடத்தை இன்றைக்கு நிறுத்திவிடுங்கள்! நாகமஹாஷயரைப் பாருங்கள்!" எனவே சிஷ்யர்கள், எல்லோரும் நாகமஹாஷயரைச் சுற்றி யுட்கார்ந்துகொண்டார்கள். ஸ்வாமிகள் அவர்களை நோக்கி, "இதோ பாருங்கள்! இவர் கிருகஸ்தர்; ஆனல், இவருக்குச் சரீரம் என்று ஒன்று இருக்கிறதா? இல்லையா? பிரபஞ்சம் என்று ஒன்று இருக்கிறதா? இல்லையா? என்பது தெரியாது. அவர் எப்பொழுதும் ஈச்வர சிந்தனையிலேயே லயித்துள்ளார். மனிதனுக்குப் பரம பக்தி யுண்டாய்விட்டால் அவன் என்னவாகிறனென்பதற்கு இவர் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாவார்," என்று சொல்லிவிட்டு, நாகமஹாஷயரை நோக்கி, "சுவாமி! ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி ஏதேனும் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

அவர் வெகு வினயத்துடனே "நான் என்ன சொல்வது? அவரைப்பற்றிப் பேசுதற்கு நான் யோக்கியனு?

ஈச்வரன் ஸ்ரீ ராமகிருஷ்ணராக அவதரித்துப் புரிந்த லீலையிலே அவருடன் கூடச் சேர்ந்து விளையாடுவதற்கு வந்த மஹாவீரனைத் தரிசித்துக் கிருதார்த்தனாகலாமென்று நான் வந்தேன்'' என்றார்.

ஸ்வாமிகள்: ''நமது குருமூர்த்தியின் உண்மைநிலையை அறிந்தவர் தாங்கள்தான். நாங்கள் வெறுங் கூச்சல் போடுகிறோம்,'' என்று சொன்னார்.

நாகமஹாஷயர்: ''அத்தகைய அர்த்தமற்ற பதங்களைச் சொல்லாதே; ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சாயையேயாம்; நீங்கள் இருவரும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாம்; கண்களுள்ளவன் பார்த்துக்கொள்ளட்டும்,'' என்றார்.

இங்ஙனம் சிறிது நேரம் ஆநந்தகரமான சம்பாஷணை நடந்த பின்னர்ச் சுவாமிகள் நாகமஹாஷயரை நோக்கி, ''தாங்கள் மடத்திலே வந்து வசித்தால் நன்றாயிருக்கும்; இப் பிள்ளைகள் தங்களைப் பார்த்துச் சீரடைவார்கள்,'' என்று சொன்னார்.

அந்த பக்த சிரேஷ்டர் ''நான் உலகைத் துறந்துவிடக் கருதி ஒருதரம் குருமூர்த்தியை அதற்கு அநுமதி கேட்டேன். அவர் 'உலகிலேயே யிரு' என்றார். ஆதலால், நான் அவருடைய ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு ஒழுகுகிறேன்; அடிக்கடி அவருடைய புத்திரர்களாகிய உங்களைக் கண்டு களித்துக் கிருதார்த்தனாவதற்காக வருகிறேன்,'' என்றார்.

சுவாமிகள் கீழ் வங்காளத்துக்குக் கூடிய சீக்கிரத்திலே வர எண்ணியிருக்கிருர் என்று கேள்விப்பட்டு, நாகமஹாஷயர் ஆநந்தபூரிதராய் "ஆ! தாங்கள் என் குடிசைக்கு வர வேண்டும்; தங்கள் பாததூளி பட்ட மாத்திரத்திலே அந்த இடம் காசியாய்விடும். பரிசுத்த திருஷ்டியுள்ளவர்களுக் கல்லாது மற்றவர்களுக்குத் தங்களுடைய மஹிமை எப்படித் தெரியும்? நமது குருமூர்த்தி ஒருவர்தான் தங்களை யறிந்துகொண்டவர். மற்றவர்கள் குருமூர்த்தியின் வார்த்தைகளை நம்புகிருர்களேயொழிய, இவர்களே அறிந்து கொள்ளவில்லை." என்று சொன்னுர்.

ஸ்வாமிகள்: "மஹாஷயரே! இப்பொழுது தேசத்தை எழுப்பிவிடுவது ஒன்றே எனது விருப்பமாயிருக்கிறது. இந்தப் பேராக்கி தன்னுடைய சொந்தப் பலத்திலே வைக்க வேண்டிய நம்பிக்கை யெல்லாவற்றையும் இழந்துவிட்டு உறங்குவதுபோல் இருக்கிருள் — பகிர்முகத் தோற்றங்களெல்லாவற்றிற்கும் மரித்தவள்போல் இருக்கிருள். நாம் இன்னுமொருமுறை அவளுக்கு ஸநாதன தர்மத்திலே அகண்டபலம் இருக்கிறதென்ற அறிவைக் கொடுத்து எழுப்பிவிட முடியுமானல், நமது குருமூர்த்தியின் அவதாரமும் நம்முடைய பிறப்பும் வீணுகவில்லை யென்று அறிந்துகொள்ளலாம். அந்த ஒரு இச்சைதான் உள்ளது; முக்தியும் மற்றவையும் அதன்முன் துரும்புபோலத் தோன்றுகின்றன. நான் ஜயு மடையுமாறு அநுக்கிரகிக்க வேண்டும்."

நாகமஹாஷயர்: "குருமூர்த்தி தங்களை எப்பொழுதும் அநுக்கிரகித்துக்கொண்டேயிருக்கிறார். தங்கள் சங்கற்பத்தைத் தடுக்க எவரால் முடியும்? தங்கள் சங்கற்பமும் அவருடைய சங்கற்பமும் ஒன்றேயாம். ஜயராம கிருஷ்ண:"

ஸ்வாமிகள்: "வேலை செய்வதற்கு அவசியமான அளவு சரீரபல மில்லையே. நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தது முதல் எனது சரீரம் பல மிழந்து அசௌக்கியம் அதிகரித்துவருகிறதே. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நான் நன்றாயிருந்தேன்."

நாகமஹாஷயர்: "சரீரத்தில் வசிக்கும்பொழுது மனிதன் வியாதி வடிவத்திலும் துன்ப வடிவத்திலும் வரி செலுத்தவேண்டும்," என்று குருமூர்த்தி சொன்னாரே. ஆனால், தங்களுடைய சரீரமோ தங்க மோஹராக்கள் நிறைந்த ஒரு பெட்டி; ஆகையால், அதை ஜாக்கிரதையாய் இரக்ஷித்துக்கொள்ளவேண்டும். ஆ! யார் அப்படி ரக்ஷிப்பார்? அதினுடைய மஹிமையை எவர் அறிவார்?"

ஸ்வாமிகள்: "மடத்திலுள்ள ஒவ்வொருவரும் என்னை மிகுந்த அன்புடனும் ஜாக்கிரதையுடனும் கவனிக்கிறார்கள்."

நாகமஹாஷயர்: "தாங்களுக்குச் சிசுருஷை செய்கிறவர்கள் பாக்கியவந்தர்கள்; ஏனெனில், அவர்கள் தங்களுக்கும் நன்மை செய்துகொள்கிறார்கள்; தெரிந்தோ தெரியாமலோ உலகுக்கும் நன்மை செய்கிறார்கள்."

நாகமஹாஷயரை ஒருவர்: "ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதாரபுருஷர்தாஞ?" என்று கேட்டார். அதற்கு அவர் "நான் அவரைப்பற்றி என்ன சொல்வது? அவருடைய சிஷ்யர்கள் ஒவ்வொருவரையுமே நான் அவதாரமாகக் கருதுகிறேன்" என்ருர்.

ஸ்ரீமதி சாரளதேவி யென்று ஒரு வங்காளி மாது-இவர் ஆங்கிலத்திலே பெரிய பரீக்ஷைகள்கொடுத்துப் பட்டங்கள் பெற்றவர்-"சுவாமிகள் நேர்த்தியாகச் சமையல் செய்வார்" என்று கேள்விப்பட்டு, சகோதரி நிவேதிதா அம்மையாரிடத்திலே இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். சுவாமிகளுக்கு இது தெரியவந்தது. சுவாமிகள் இவ் விருவரையும் ஒருநாள் மடத்திலே போஜனத்துக்கு வரும்படி யழைத்துத் தாமே சமையல் செய்தார். பின்னர், சுவாமிகள், பேசிக்கொண்டிருக்கையிலேயே தமக்குப் புகை பிடிப்பதற்குப் புகையிலை தயார் செய்யும்படி நிவேதிதா சகோதரியினிடத்திலே உத்தரவு செய்ய, அம் மாது உடனே சென்று எல்லோருக்கும் முன்னிலையில் அப் பணிவிடையைச் செய்தார். எல்லோரும் போன பிற்பாடு சுவாமிகள் தம்முடைய சிஷ்யர்களிடத்திலே, மேனுட்டினருக்குத் தக்கவாறு பேசி அங்குச் சிஷ்யர்கள் சம்பாதித்துக்கொண்டு வந்திருப்பதாக வங்காளத்திலே படித்த வகுப்பார் சிலர் சொல்லிக்கொள்வதால் அதைப் பொய்படுத்துவதற்கே தாம் நிவேதிதா சகோதரிக்கு அவ் வேலை யிட்டதாகக் கூறிஞர்.

1899-ம் வருஷத்திலே சுவாமிகளுடைய சரீரம் மறு படியும் வியாதியினால் பீடிக்கப்பட்டது; அவருடைய நண் பர்களான நரைல் ஜமீந்தார்கள் சுவாமிகள் கங்கையில் காலையிலும் மாலையிலும் உலாவி நல்ல காற்று வாங்கிக் கொள்ளும் பொருட்டுத் தங்களுடைய படகு ஒன்றைச் சுவாமிகள் வசம் விட்டுவைத்தார்கள். சுவாமிகள் பட கேறி உலாவுவதிலே மிகுந்த சந்தோஷ மடைந்தார். அநேகமாகத் தக்ஷிணேச்வரம் மார்க்கமாகவே சுவாமிக ளுடைய படகு செல்லும்.

சரீரம் சௌக்கியமாயிருந்தாலும் சரி, அல்லாவிடி னும் சரி, இந் நாட்களிலே அவர் பிறருக்கு உதவி புரி வதற்கு எப்பொழுதும் தயாராயிருந்தார். "அவர் பொது ஜனங்களுக்குப் பெரிய பிரசங்கங்கள் ஒன்றும் செய்யக் கூடாது," என்று வைத்தியர்கள் கூறினார்கள். ஆயினும், பெப்ரவரிமீ 6-ம் தேதி சகோதரி நிவேதிதா அம்மையார் செய்த ஒரு பிரசங்கத்தில் போயிருந்தார்; மடத்திலே வழக்கமாகக் கூடுகின்ற ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங் களுக்குப் போகாமலிருக்கவில்லை. இதன் மத்தியிலே கல் கத்தாவிலே பிரசித்தி பெற்ற தனவந்தர்கள் பலர் சுவாமி களை அடிக்கடி பிக்ஷைக்கு அழைத்தார்கள். ஜூன்மீ 17-ம் தேதி யன்று மஹாராஜா ஸர் ஜாதீந்திர மோஹன டா கூர் அவர்கள் சுவாமிகளுக்குச் சம்பிரமமான விருந்து ஒன்று செய்துவைத்தார்.

இப்பொழுது கோடைக்காலம் வந்துவிட்டது. சுவாமி களுடைய நண்பர்களும் வைத்தியர்களும் சுவாமிகளுடைய

சரீர சௌக்கியத்தை யுத்தேசித்து உடனே கடல் யாத்தி ரை செய்யும்படி கூறினார்கள். உடனே சுவாமிகள் கல் கத்தாவிலிருந்து ஜுன்மீ 20-ம் தேதி யன்று புறப்படுவ தாகத் தீர்மானிக்கப்பட்டது. 'ஸ்வாமி துர்யாநந்தரும் கூடப் புறப்படுவது,' என்று தீர்மானிக்கப்பட்டது. சகோதரி நிவே திதா அம்மையாரும் தம்முடைய பெண் பள்ளிக்கூடத்து நன்மையை நாடி இங்கிலாந்துக்குச் செல்வதாக இருந்தார். ஆதலால், அவரும் சுவாமிகளுடன் செல்வதென்று தீர் மானிக்கப்பட்டது.

"சுவாமிகள் மேனாடு செல்லப்போகிறார்," என்று வெளியே தெரிந்தவுடனே, அநேக ஜனங்கள் சுவாமிக ளைச் சூழ்ந்துகொண்டார்கள். சுவாமிகள் கடைசி நிமிஷம் வரையில் போதித்துக்கொண்டே யிருந்தார். சுவாமிகள் கப்ப லேறுவதற்கு முந்திய நாள், சுவாமிகளைப் பட மெடுக்கப்பட்டது.

ஸ்வாமி துர்யாநந்தர் மஹா பரிசுத்தப் பிரஹ்மச்சாரி; மடத்திலே யுள்ள எல்லோருக்கும் அவரிடத்திலே மிகுந்த பயபக்தி யுண்டு; தவிர, மகா வைராக்கியசாலி; ஸம்ஸ்கிருதத்திலே நிபுணர்; தீர்க்க நிஷ்டாபரர்; வாலிப அங்கத்தினர்களுக் கெல்லாம் இவர் உபாத்தியாயர் போன் று பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் அமெரிக்காவுக்குப் புறப்படும்பொழுது சில பெரிய புஸ் தகங்களைத் தம்முடன் கொண்டுபோக விரும்பினார். சுவாமி கள்: "அவர்களுக்குப் போதுமானமட்டும் புத்தகப் படிப்

புக் கிடைத்துவிட்டது. அவர்கள் க்ஷாத்திர சக்தியைப் பார்த்துவிட்டார்கள். இப்பொழுது நான் அவர்களுக்குப் பிராஹ்மண சக்தியைக் காண்பிக்க விரும்புகிறேன்,'' என்றார்.

ஸ்வாமி துர்பாநந்தர் நிஷ்டாபராகையினுலே பொதுப் பிரசங்கங்கள் செய்வதில் சற்றும் விருப்ப மில்லாதவரா யிருந்தார். சுவாமிகள் 'அவரை எப்படியாவது பொது ஜன நன்மைக்கு உழைக்குமாறு செய்யவேண்டும்,' என்று எவ்வளவோ தூண்டிப் பார்த்தார்; முடியவில்லை. கடைசியாக ஒருநாள் டார்ஜீலிங் நகரிலே யிருந்தபொழுது, சுவாமிகள் எவ்வளவோ நியாயங்கள் சொல்லியும் துர்யாநந்தர் கேட்காமற்போகவே, சுவாமிகள் தமது சகோதர சந்யாசியினுடைய கழுத்தைத் தமது கையினல் கட்டிக்கொண்டு, அவருடைய மார்பின்மீது தமது தலையைச் சாய்த்து, சிறு குழந்தை போன்று கண்ணீர் உதிர்த்துக் கொண்டே, "ஹரிபாய்! நமது குருமூர்த்தியினுடைய ஆக்ஞையை நிறைவேற்றுவதிலே என்னுடைய உயிரையே ரத்தம் செய்துவருகிறே னென்பது உனக்குத் தெரியவில்லையா? மரணத்தருவாயி லாய்விட்டேனே! என்னுடைய சுமையில் ஒரு பாகத்தையேனும் வாங்கிக்கொண்டு எனக்கு உதவி செய்யாமல் வெறுமே பார்த்துக்கொண்டிருப்பாயா?'' என்று கூறினர்.

அனைத்தையும் உருக்குவது அன்புதானே; துர்யாநந்தருடைய கல்மனம் கரைந்துவிட்டது. உடனே துர்யா

நந்தர் சுவாமிகளுடைய ஆக்ஞை எதுவாயினும் சரியே, அதை நிறை வேற்றுவதாகக் கங்கணம் கட்டிக்கொண்டார்.

ஜுன்மீ 19-ம் தேதி யன்று இரவில் மடத்திலே யுள்ளவர்கள் அனைவரும் கூடிச் சுவாமிகளுக்கும் சுவாமி துர்யாநந்தருக்கும் உபசாரப் பத்திரிகைகள் படித்தார்கள். சுவாமிகள் ஒரு சிறு அழகிய பிரசங்கம் செய்து, மடத்திலுள்ளவர்களுக்குச் சில புத்திமதிகளைப் புகன்றார். சுவாமிகள் புறப்படும் தினத்தன்று ஸ்ரீ சாரதாதேவி அம்மையார் சுவாமிகளுக்கும், சுவாமி துர்யாநந்தருக்கும், மடத்திலுள்ள மற்ற சந்யாசிகளுக்கும் தமது கல்கத்தாவாசஸ்தலத்திலே ஒரு விருந்து நடத்தினர். சுவாமிகள் துறைமுகம் சென்றவுடனே, ஸ்வாமிகளையும் நிவேதிதா சகோதரியையும் வழி யனுப்பிக்கொடுப்பதற்காக அநேக நண்பர்கள் அங்கு வந்திருந்தார்கள். சுவாமிகள் கப்பலேறிப் புறப்பட்டார்.

63-வது அத்தியாயம்
ஸ்வாமிகள் அமெரிக்கா செல்லல்

சுவாமிகளுடைய கப்பல் யாத்திரையைப்பற்றிப் பேசும் முன் சுவாமிகளுடைய தேசாபிமானத்தைக் குறிப்பிடும்படியான இரண்டு விஷயங்கள் வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு சமயத்திலே ஹிதவாதி என்ற பத்திரிகைக்குப் பத்திராதிபரா யிருந்து இப்பொழுது காலம் சென்று

விட்ட பண்டிதர் சகாராம கணேசர் இரண்டு நண்பர்களைக் கூட்டிக்கொண்டு சுவாமிகளைப் பார்க்க வந்தார். அந் நண்பர்களுள் ஒருவர் பஞ்சாப் நாட்டைச் சேர்ந்தவ ரென்று சுவாமிகள் தெரிந்துகொண்டதினாலே, அம் மாகாணத்திலே பயங்கரமாகப் பரவி வரும் பஞ்சத்தைப்பற்றியும் அப் பஞ்சத்தை நிவிர்த்திப்பதற்குச் செய்யவேண்டிய உபாயங்களைப்பற்றியும் சுவாமிகள் பேசி, "பொது ஜனங்களுக்கு அறிவைக் கொடுத்து அவர்களைக் கைதூக்கிவிடவேண்டியதே இப்பொழுது அறிவாளிகள் செய்யவேண்டிய தர்மம்," என்றார்.

வந்தவர்கள் சுவாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்படும்பொழுது, அந்தப் பஞ்சாப் நாட்டினர்: "சுவாமி! வேதாந்த விஷயமாகப் பல அரிய பொருள்களைத் தங்களிடம் கேட்டுத் தெளிந்து தெரிந்துகொள்ளலா மென்று வந்தேன். சம்பாஷணை சாதாரண விஷயங்களைப்பற்றியாயிருந்துவிட்டது. இன்றைய நாள் வீணே கழிந்துவிட்டது," என்று கூறினர்.

ஸ்வாமிகளுடைய முகத்திலே ஒருவித கம்பீரமும் கடோமும் சட்டென்று பிரகாசித்தது. சுவாமிகள் அவரை நோக்கி "ஐயா! எனது தேசத்திலே ஒரு நாயேனும் ஆகாரமில்லாமலிருக்கும்வரையில் அதைக் கவனித்துப் போஷிப்பதே எனது மதம். மற்றதெல்லாம் பொய் மதமே" என்றார். மூவரும் திடுக்கிட்டுவிட்டார்கள்.

அதே காலத்தில்தான் ஒரு பண்டிதர் சுவாமிகளுடனே வேதாந்த விஷயத்தைப்பற்றித் தர்க்கம் செய்ய வந்தார். அச் சமயத்திலே சுவாமிகள், பயங்கரமாகப் பரவி வரும் பஞ்சத்தைத் தடுப்பதற்கு வழி யின்னதென்று தெரியாது ஏக்கம் கொண்டு, யோசனை செய்துகொண்டிருந்தார். சுவாமிகள் அந்த ஸம்ஸ்கிருத பண்டிதருடனே சாஸ்திர விஷயமாகத் தர்க்கம் ஆரம்பிக்காமல், "பண்டிதரே! முதலில், எங்கும் பரவி வருகின்ற பயங்கரமான துன்பத்தை நிவிருத்தி செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்! உங்கள் தேச ஜனங்கள் ஒருவாய் ஆகாரம் கிடைக்காமல் பசியினால் கதறுகிறார்களே; அதைக் கவனித்து, அதை நிவிர்த்தி செய்வதற்கு வழி யேதேனும் ஏற்பாடு பண்ணிவிட்டு, என்னுடன் வேதாந்த விஷயமாகத் தர்க்கம் செய்ய வாருங்கள். பசிப் பிணியினால் மரிக்கின்ற ஆயிரக்கணக்கான ஜனங்களை ரக்ஷிப்பதற்காக மனிதன் தனது வாழ்க்கையையும் ஆத்மாவையுங்கூடத் தியாகம் செய்துவிடுதலே வேதாந்த மதத்தின் சாரமாம்," என்றார்.

இனிமேல் சுவாமிகளைப் பின் தொடர்வோம். ஜூன்மீ 20-ம் தேதி கப்பல் கல்கத்தாவைவிட்டுப் புறப்பட்டது; 24-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தது. "சுவாமிகள் சென்னைக்கு வருகிறார்" என்று அதற்கு முன்னரேயே தந்தி வந்துவிட்டது. ஆனால், கல்கத்தாவிலே பிளேக் வியாதி பரவியிருந்ததினாலே, யாத்திரிகர்கள் எவரும் சென்னையிலே இறங்குவதற்கு அநுமதி கொடுக்கப்

படவில்லை. சென்னை வாசிகளுக்கு இது பெருத்த விசன த்தை யுண்டாக்கிவிட்டது. கப்பல் சென்னைக்கு வந்த அன்று காலையிலே சென்னை நகர் முழுதும் சுவாமிகளைத் தரிசிப்பதற்குத் துறைமுகக் கரையிலே வந்து கூடிவிட் டது. "சுவாமிகள் கரை யிறங்குவதற்கு அநுமதி கிடைக்கவில்லை" என்று தெரியவந்தபொழுது, ஆயிரக் கணக்காகக் கூடியிருந்த ஜனங்களுக்குள்ளே உண்டான மன வருத்தத்தை என்னென்று சொல்லலாம்?

ஆயினும், சுவாமிகளுடைய பழைய நண்பர்களிற் பல ரும் "சுவாமிகளைத் தரிசிக்காமலிருப்ப தெப்படி?" என்று பெரிய பெரிய தட்டுகளிலே பழங்கள், மிட்டாய் வர்க்கங் கள் முதலியவற்றை யெடுத்துக்கொண்டு படகுகளி லேறி, கப்பலில் சுவாமிகளைப் போய்க் கண்டு தரிசித்தார்கள். சுவாமிகளுக்குக் களைப்புண்டாகும் வரையில் சுவாமிகள் இவர்களுடனே சம்பாஷித்து இவர்களுக்கு விடை கொ டுத்து அனுப்பினர். அளசிங்கப் பெருமாள் 'என்பவர் மாத் திரம் கொழும்புமாநகர் வரையில் ஒரு டிக்கட்டு வாங்கிக் கொண்டு சுவாமிகளுடனே யாத்திரை செய்தார். மாலையி லே கப்பலானது சென்னைத் துறைமுகத்தை விட்டு நீங் கியபொழுதுகூட, கரையிலே ஆயிரக்கணக்காக ஜனங்கள் கூடியிருந்தார்கள். இவர்கள் "ஜய ராமகிருஷ்ண, ஜய ராம கிருஷ்ண," "ஜய விவேகாநந்த, ஜய விவேகாநந்த" என்று முழக்கிய கோஷமானது ஒலியும் எதிரொலியுமாகிக் கட லின் அலைகளினூடே பரந்து சென்று சுவாமிகளுடைய

செவிகளிலே ஆநந்த அமிர்த வாக்குப் போன்று நுழைந்தது.

கடல் மிகவும் கொந்தளித்துக்கொண்டிருந்ததினாலே யாத்திரை அவ்வளவு சுகமாகத் தோன்றவில்லை. சென்னையினின்றும் புறப்பட்டுக் கப்பலானது நாலாம் நாள் கொழும்பு நகர் போய்ச் சேர்ந்தது. சென்னை யதிகாரிகள் தான் சுவாமிகளைக் கல்கத்தாவில் ப்ளேக் நோய் காரணமாகச் சென்னைத் துறைமுகத்தில் இறங்கக்கூடாதென்று உத்தரவு செய்துவிட்டார்கள். ஆனால், கொழும்பு அதிகாரிகள் சென்னை யதிகாரிகள் போன்று அவ்வளவு பயப்படவில்லை. சுவாமிகள் கொளும்புமாநகரிலே இறங்குவதற்கு அநுமதி கொடுக்கப்பட்டது. சுவாமிகள் கரையி லிறங்கினார். அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் "ஹர, ஹர, மஹாதேவ" என்று ஆநந்த கோஷம் செய்து ஆர்ப்பரித்தார்கள். சுவாமிகள் ஐரோப்பியர்கள் போன்று உடை தரித்திருந்தபோதிலும், அந்த ஜனங்கள் அவரை அவதாரபுருஷராகவே கருதினார்கள். சுவாமிகளுடைய பழைய நண்பர்கள் பலர் வந்து பார்த்தார்கள். கொழும்பு மாநகரிலே யிருந்த இரண்டு பள்ளிக்கூடங்களைச் சுவாமிகள் போய்ப் பார்வையிட்டார்.

ஜூன்மீ 28-ம் தேதி சப்பலானது கொழும்பு நகரை விட்டுப் புறப்பட்டது. பெருங் காற்று அடித்துக் கொண்டிருந்ததினாலே, ஏடன் நகருக்கு ஆறு நாட்களில் போகவேண்டிய கப்பல் பத்து நாட்களில் சென்றது. சிவப்

புக் கடல் கடந்து ஜூலை மீ 14-ம் தேதி சுவேஸ் வாக்கால் போய்ச் சேர்ந்தது; ஜூலை மீ 31-ம் தேதி சுவாமிகள் லண்டன்மாநகர் போய்ச் சேர்ந்தார்.

வழி நெடுக சுவாமி துர்யாநந்தருக்கும் சகோதரி நிவேதிதா அம்மையாருக்கும் அநேக விஷயங்களைப்பற்றி அரிய ரஹஸ்யங்கள் பலவற்றை எடுத்தோதிக்கொண்டே சென்றார். ஒருநாள் சுவாமிகள்: "ஆ! எனக்கு வயது ஆக ஆக, எல்லாம் ஆண்மையிலேயேதான் இருக்கிறதாக எனக்குத் தோன்றிவருகிறது. இதுதான் எனது புதிய மதம். ஆண்மகன் போன்று தீமையைக்கூடச் செய்! நீ கொடியவனாகத்தான் இருக்கவேண்டுமென்றிருந்தால், கொடியவனாயிரு!" என்றார். இன்னொருநாள் சகோதரி நிவேதிதா அம்மையார் "இந்தியாவிலே குற்றங்கள் அதிகம் கிடையா," என்று கூறியபொழுது, "ஸ்வாமிகள் மிகுந்த விசனக் குறி காட்டி, எனது பூமியிலே குற்றங்கள் அதிக மாகுமாறு கடவுள் அநுக்கிரகம் புரியாரா? ஏனெனில், இது மரணத்துக்கு மார்க்கமாம், புண்ணியமேயாம்!" என்றார்.

மற்றொரு நாள் சரித்திர விஷயமாகச் சம்பாஷணை நடந்தது. வங்காளத்திலே ஒரு காலத்திலே அரசு செலுத்திய ஷீயர் ஷா என்பவனுடைய சரித்திரம் சுவாமிகளுக்குக் கிளர்ச்சியை யுண்டாக்கிவிட்டது. "இவன் யார்? தெரியுமா? பங்காளத்துத் தெருக்களிலே ஓடியாடிக்கொண்டிருந்த ஒரு பையன்," என்றார் முகமலர்ச்சியுடன். சிட்டாகாங்கிலிருந்து பேஷாவார் நகரம் வரையில் பெரிய ரஸ்தா

ஏற்படுத்தினவன் இவன்தான். இவன் தபால் போக்கு வரவு வசதியை யுண்டாக்கி வைத்தான். இவன் அரசாங்க உண்டிற் களஞ்சியம் ஒன்று ஏற்படுத்தினன். ஆக்பர் சக்கரவர்த்தியினுடைய தகப்பனாராகிய ஹுமாயூன் காலத்திலே இவன் வங்காளத்தை மிகுந்த சாமர்த்தியத்துடன், பொது ஜன நன்மையொன்றையே நோக்கமாகக் கொண்டு முப்பது வருஷகாலம் அரசு புரிந்தான். சுவாமிகள் இப்படிச் சொல்லி முடித்தார். பின்னர்ச் சில நிமிஷங்கள் மௌனமா யிருந்துவிட்டு, குருகீதையி லிருந்து சில சுலோகங்கள் எடுத்துக் கூறினர்.

இன்னொரு சமயத்திலே ஸ்வாமிகள் "போராட்டம் வளர்ச்சிக்கு அறிகுறி" என்று நீங்கள் நினைப்பது தவறு. அப்படி யல்லவேயல்ல. க்ராஹ்யமே அறிகுறி. ஹிந்து மதமானது க்ராஹ்ய சமர்த்தேயாம். நாங்கள் ஒருபொழுதும் போராட்டத்தைக் குறித்துக் கவனித்ததே யில்லை. எங்கள் வீடுகளின் பாதுகாப்பின் நிமித்தம் அடிக்கடி எங்களாலும் ஒரு அடி அடிக்க முடிந்தது என்பது உண்மையே! அது நியாயம்தான். ஆனல், போரிடுதற்கென்று நாங்கள் ஒருபொழுதும் போராட்டத்தை விரும்பியதில்லை. எல்லோரும் அதை யறிந்துகொள்ள வேண்டும். ஆகையால், புதிதாக வருகின்ற இந்த ஜாதிகள் சுழன்றுகொண்டிருக்கட்டும்! கடைசியில் அவர்கள் எல்லோரும் ஹிந்து மதத்தினுள்ளே யெடுத்துக்கொள்ளப்படுவார்கள்!" என்ருர்.

இன்றும் தமக்குத் தெரிந்துள்ள மஹாத்மாக்கள் பலருடைய சரித்திரங்களையும் எடுத்துக் கூறிக்கொண்டே வந்தார். "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரே சுவாமிகளுடைய மஹாத்மாக்க ளெல்லோருள்ளும் முன்னின்றவர். ஸ்பர்ச மாத்திரத்தினாலே ஆத்ம ஞானத்தைப் புகட்ட அவரால் முடியுமே" என்று ஸ்வாமிகள் கூறினார். ஒரு சமயத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சிறு வாலிபனை ஸ்பர்சிக்க, அவன் பின்னர், "ஆத்மநாதா! ஆத்மநாதா!" என்று சொல்வதைத் தவிர வேறு எப்பேச்சும் பேசாமல் ஆயுட்காலம் முழுதும் அப்படியே யிருந்துவிட்டான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்பர்சிப்பதென்றால், என்ன? விளையாட்டா? இன்னும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் பலருடையவும் சரித்திரங்களை யெடுத்துப் புகன்றார்.

ஒரு சிஷ்யர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் அடிக்கடி வருவது வழக்கம். இவர் எத்தனை தரம் வந்தபொழுதிலும், சுவாமிகளுடைய கூற்றுக்களை யறிந்துகொள்ள முடியவில்லை. சட்டென்று பரமஹம்சர் அவரைப் பார்த்து, "இப்பொழுது போய்க் கொஞ்சம் பணம் சம்பாதித்துவிட்டுப் பின்னர் வா!" என்று கூற, அப்படியே அவர் உலக வியவகாரங்களிலே தலையிட்டு இப்பொழுது வேண்டிய பணம் சம்பாதித்துவிட்டார்.

ஸ்வாமிகள் அடிக்கடி நாகமஹாஷயரைப்பற்றிப் பேசுவார். "நாகமஹாஷயர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சீடர்களுள் மிகப் பெரியவர்" என்றார் சுவாமி

கள். "இந்த மஹாஷயருடைய பெருமை உங்களுக்குத் தெரியுமா? ஒரு சமயம் இவர் வீட்டிலே அதிதி யொருவர் வர, அவருக்குப் போஜன மாக்குவதற்கு விறகில்லாமல், தமது குடிசையின்மேலே போட்டிருந்த குறுக்குக் கொம்புகளை யெல்லாம் எடுத்து எடுத்து விறகாக உபயோகித்து அதிதிக்கு அன்னமிட்டவர் இவர்."

"ரகுநாத தாசர் என்று ஒருவர் இருந்தார், தெரியுமா? ஆதியிலே இவர் ப்ரிட்டிஷ் சைந்நியத்திலே சிப்பாயா யிருந்தவர்; மிகவும் நல்லவர்; விசுவாச முள்ளவர்; மேலதிகாரிகளால் மிக விரும்பப்பட்டவர். ஒருநாள் இவர் வெளியே காவல் நின்றுகொண்டிருந்த பொழுது, ராமபஜனை கோஷ்டி யொன்று அவ் வழியே வந்தது. "ஜய போலோ ராமச் சந்திராக்கு ஜய" என்ற சப்தம் அவருடைய மூளையைக் கலக்கிவிட்டது. அவருக்குப் பித்துப் பிடித்துவிட்டது. அவர் தமது காவல் கடமையைச் சரிவரச் செலுத்த எவ்வளவோ முயன்றார். அவருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆயுதங்களையும் உடையையும் கழற்றி எறிந்துவிட்டு, இவர் பஜனை கோஷ்டியிலே போய்ச் சேர்ந்து, பக்தி பரவசராய் ஆடத் தொடங்கினார்; பஜனை முடிந்தவுடன் தமது இருப்பிடம் வந்துவிட்டார். இப்படியே சின்னாட்கள் நடந்துவர, சைந்நிய அதிகாரிக்குச் சங்கதி தெரியவந்தது. அவர் ரகுநாதரை வரவழைத்து, 'நீ வெளியே இராக்காலத்திலே சென்று பஜனை செய்து திரும்பிவருவது உண்மைதானா? நீ இரவு எட்டுமணிக்கு மேல் வெளியே

இங்கிருந்து போனால், உனக்கு நேரிடும் தண்டனை இன்ன தென்று தெரியுமா?'' என்று கேட்டார்.

இரகுநாதர் தமது குற்றத்தை யொப்புக்கொண்டு, தாம் வெளியே இரவு எட்டுமணிக்குமேல் போனால், சுடப்பட்டு விடுவதுதான் தண்டனை யென்று தமக்குத் தெரியுமென் றும் கூறினர்.

அவ்வதிகாரி 'நல்லது, இச் சமயம் உன்னை மன்னித் தேன். நான் இதை எவரிடமும் கூறவில்லை. போய் ஜாக் கிரதையாய் இரு! இனி யொருதரம் நீ இம் மாதிரி குற் றம் செய்வாயானால், தண்டனை யநுபவிக்கவேண்டிவரும்'' என்றார்.

''ஆனால் என்ன செய்யலாம்? அன்றிரவும் ராமபஜனை கோஷம் கேட்டது. ரகுநாதருக்கு அங்கு இருக்க முடிய வில்லை; தமது அதிகாரியினுடைய உத்தரவை நினைத்துக் கொண்டு, சிறிது நேரம் மனத்தைக் கலையவொட்டாது, தம்மிடத்திலேயே இருந்தார். ஆனால், ஸ்ரீ ராமருடைய ஆக் ஞை இவரைப் பஜனை கோஷ்டிக்குக் கூப்பிடுகிறது. அதி காரியினுடைய உத்தரவை ஸ்ரீ ராமருடைய உத்தரவுடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, அதிகாரியினுடைய உத் தரவு ஒருதுரும்புபோ லாய்விட்டது. ரகுநாதர் எழுந்திருந் தார்; ஜே ஜே ராம, ஜேய ஜேய ராம என்று கூவிக்கொண்டு பஜனை கோஷ்டி நடக்கு மிடத்திற்குச் சென்றுவிட்டார்.

அன்றிரவு சைந்ய அதிகாரி சுற்றிப் பார்க்க வந்தார். இரகுநாதரோ குற்றத்தை யொப்புக்கொண்டிருந்தும், இவ்

வதிகாரி ரகுநாதர் அப்படிச் செய்வாரென்று நம்பவில்லை. ஏனென்றால், ரகுநாதர் அவ்வளவு நல்லவராயிற்றே. அதிகாரி சுற்றி வந்தார். இரகுநாதர் காவல் நிற்கிறார். அதிகாரி பார்த்துத் திருப்தி யடைந்து திரும்பிச் சென்றார்.

"விடிந்தது. இரகுநாததாஸர் தமது பட்டாளத்து உடைகளையும் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, அவ்வதிகாரியின் முன்னே கொண்டு வந்து வைத்து நான் நேற்றிரவு காவல் நின்றுகொண்டிருந்தபொழுது, ராமபஜனை எனது செவியிற் படவே, எனக்கு இங்கிருக்க முடியவில்லை. நான் அங்குப் போய்விட்டேன். நான் குற்றம் செய்துவிட்டேன். தங்களுடைய இஷ்டப்படி உத்தரவு செய்யலாம்" என்றார்.

அவ் வதிகாரி, "நான் வந்திருந்தபொழுது நீ நின்றுகொண்டிருந்தாயே; நீ எப்பொழுது போனாய்?" என்று கேட்டார்.

இரகுநாததாஸர் 'நான் இல்லவே யில்லை; தாங்கள் வந்ததும் எனக்குத் தெரியாது. இப்பொழுதுதான் தாங்கள் சொல்லத் தெரியவந்தது. ஸ்ரீ ராமரே எனக்குப் பதிலாகக் காவல் நின்றார்போலும்! எனது ராஜிநாமாவை யங்கீகரித்து, என்னை வேலையினின்றும் நீக்கிவிடவேண்டும்" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

அதிகாரி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், இவர் கேட்பதாகக் காணவில்லை. ஆகையால், இவருடைய ராஜி

ஈாமாவை அதிகாரி பொப்புக்கொண்டு இவரை வேலையினின்றும் நீக்கிவிட்டார். ஸ்ரீ ராமரே இவருக்குப் பணியாளனாய் வந்திருக்க, இவர் வேறெவருக்கும் பணியாளனாய் இருக்க முடியுமா?

"சாஸ்வதி நதி தீரத்திலே அவர் வைராகியாய்விட்டார். ஜனங்கள் அவரை மூடனென்று நினைத்தார்கள்; ஆனால், அவருடைய சக்தி எனக்குத் தெரியும். தினந்தோறும் அவர் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு அன்னமிடுவார். பின்னர், சிறிது நேரம் கழித்து அரிசி வியாபாரி தனக்கு வரவேண்டிய பணத்தை வசூல் செய்வதற்கு வருவான். இரகுநாததாஸர் "ஆயிரம் ரூபாவென்று சொல்கிறாய்? பார்க்கலாம். ஒருமாதமாக ஒன்றுமே வரவில்லை. இந்தப் பணம் நாளைக்கு வருமென்று நினைக்கிறேன் என்பார். அப்படியே அப் பணம் எப்பொழுதும் வந்தது." "சந்யாசி இரண்டு விரதங்கள் எடுத்துக்கொள்கிறானென்பதை யொருபொழுதும் மறவாதீர்கள்; ஒன்று, சத்தியானுபூதி, மற்றது உலகுக்கு உபகாரம் புரிவது. அவனுக்கு மிகமிகக் கடோமாக விதிக்கப்பட்டிள்ளது யாதெனில், அவன் ஸ்வர்க்கத்தைப்பற்றிய எவ்வித நினைப்பையும் தியஜித்துவிட வேண்டுமென்பதே."

கப்பலானது இத்தாலி தேசத்துக் கருகில் சென்றபொழுது, சுவாமிகள் ரோமன் கத்தோலிக் மதத்தினுடைய சிறப்பையும், அம் மதத்தினர் உலகில் வகித்திருந்த பெருமையையும்பற்றிப் பேசினர். கார்ஸிக்கார்தீவின் தெற்

குக்கரை வழியாகக் கப்பல் செல்லவே, சுவாமிகள் நெப்போலியன் என்னும் மஹாவீரனுடைய செயல்களை யெடுத்துக் கூறினர். ஜிப்ரால்டர் ஜலசந்திக்குள்ளே கப்பல் நுழையவே, சுவாமிகள் ஸ்பெயின் தேசத்தைப் படையெடுத்த மூர் என்னும் பெரிய மகம்மதிய ஜாதியாருடைய செயல்களைப்பற்றி உரைத்துக்கொண்டே போனர்.

"ஆகையால், நான் உபநிஷத்துக்களையே போதிக்கிறேன். நீ பார்த்தால், நான் உபநிஷத்துக்களைத் தவிர வேறொன்றையும் ஆதாரமாக ஒருபொழுதும் எடுத்துக் கூறியதில்லை யென்று காண்பாய். உபநிஷத்துக்களுள்ளும், பலம் என்ற அந்த ஒரே கருத்தைப்பற்றித்தான். வேதங்களினுடையவும், வேதாந்தத்தினுடையவும், எல்லாவற்றினுடையவும் சாரமானது அந்த ஒரு வார்த்தையிலேயே இருக்கிறது. புத்தருடைய போதனை அஹிம்சையாம். ஆனல், அதே விஷயத்தைப் போதிப்பதற்கு இது அதனினும் மேலான வழியென்று நான் நினைக்கிறேன். ஏனெனில், அந்த அஹிம்சைக்குப் பின்னே, பயங்கரமான பலஹீனமொன்று இருந்தது. எதிர்த்தல் என்னும் எண்ணத்தைக்கற்பிப்பதே பலஹீனமாம். கடல் நுரையின் ஒரு துளியைத் தண்டிக்கவாவது அல்லது அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவாவது நான் நினைக்கிறதில்லை. அது எனக்கு லக்ஷியமேயில்லை. ஆயினும், ஒரு கொசுவுக்கு அது பெரிதாகவே யிருக்கும். இப்பொழுது, நான் அதுபோன்றே எல்லா ஹிம்சையும் செய்ய முடியும். பலமும் பயமின்மையும்!....."

இம்மாதிரியே சுவாமிகள் வழிநெடுக தமது சகோதர சந்யாசிக்கும், சகோதரி நிவேதிதா அம்மையாருக்கும் பல போதனைகள் எடுத்துரைத்துக்கொண்டே போனார். ஆனால், சுவாமிகள் எப்பொழுதுமே இத்தகைய ஆழ்ந்த விஷயங்களிலேயே கருத்தைச் செலுத்திக்கொண்டிருந்தாரென்று நினைக்கவேண்டாம்; வேடிக்கை விளையாட்டுக்களிலும் காலம் கழித்தார்; உத்போதனம் என்ற தமது வங்காளிப் பத்திரிகைக்கும் அநேக வியாசங்கள் எழுதினார்.

ஜூலை மீ 31௳ சுவாமிகளும் மற்றவர்களும் லண்டன் மாநகர் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே சுவாமிகள் இந்தக் கப்பலில் வருகின்றார் என்று முன்னமேயேதெரிந்துகொண்டிருந்த சிஷ்யர்களும் நண்பர்களும் பலர் துறைமுகத்திலே சுவாமிகளுடைய வரவை எதிர் நோக்கிக் காத்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுள்ளே இரண்டு அமெரிக்க ஸ்திரீகள் டேட்ராயிட் நகரிலிருந்து புறப்பட்டுச் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக லண்டன்மாநகர் வந்திருந்தார்கள். சுவாமிகளுடைய சரீரம் அசௌக்கியமா யிருக்கிறதென்று கேள்விப்பட்டு இம் மாதர்கள் சுவாமிகளைத் தரிசிக்க ஆவல் மிகுந்தவர்களாய் இருந்தபொழுது, சுவாமிகள் ஜூன் மீ 20-ம் தேதி இந்தியாவிலிருந்து லண்டனுக்குப் புறப்படப்போவதாக ஒரு இந்திய பத்திரிகையிலே படித்து அதனல் லண்டனில் வந்து காத்துக்கொண்டிருந்தார்கள்.

சுவாமிகள் லண்டனிலே இரண்டு வாரங்கள்தான் தங்கினர். இதற்குள்ளாக அமெரிக்காவிலிருந்து, "சுவாமி

கள் அங்கே வரவேண்டும்,'' என்று எத்தனையோ கடிதங்கள் எண்ணற்று வந்து சேர்ந்தன. ஆதலால், ஆகஸ்டுமீ 16உ யன்று சுவாமிகள் துரியாநந்தரையும் தமது அமெரிக்க சிஷ்யர்களையும் கூட்டிக்கொண்டு சுவாமிகள் லண்டனை விட்டுப் புறப்பட்டார். ந்யூயார்க் நகரிலே சுவாமிகள் இறங்கினவுடனே அங்கே தமது பழைய நண்பராகிய லெக்கேட் என்பவருடைய வாசஸ்தலம் சென்றார். அங்கிருந்து லெக்கேட்டினுடையவும் அவருடைய மனைவியினுடையவும் வேண்டுகோளின் பிரகாரம் சுவாமிகள் துரியாநந்தருடனே அவர்களுடைய நாட்டுப்புறத்து வீட்டுக்குச் சென்றார். இது ந்யூயார்க்கிலிருந்து 150 மைல் தூரத்திலே ஹட்சன் என்னும் பெயரிய அழகியதொரு நதி தீரத்திலே மலைப் பிரதேசத்திலே யுள்ளது. அங்குப் போய் 'ஈச்வராக்ஞை என்னவாகிறது பார்க்கலாம்,' என்று சுவாமிகள் சுகமாகக் காத்துக்கொண்டு வசித்து வரவே, ஒரு மாதத்துக்குள்ளே சகோதரி நிவேதிதா அம்மையார் சுவாமிகளிடம் வந்து சேர்ந்தார். சுவாமிகள் இந்தியாவிலிருந்தபொழுது இருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது சௌக்கியமாயிருந்தாலும் அடிக்கடி அசௌக்கியமானார். அங்கே பிரசித்தி பெற்ற வைத்தியர் சுவாமிகளுக்குச் சிகிச்சை செய்ததின் பேரிலும், நண்பர்களுடைய தகுந்த கவனத்திலும் ஆதரவிலும் சுவாமிகள் மறுபடியும் பரிபூர்ண சௌக்கிய மடைந்தார்.

சுவாமிகள் ந்யூ யார்க்குக்கு வந்தபொழுது, ஸ்வாமி அபேதாநந்தர் பிரசங்க யாத்திரை போயிருந்தார். சுவாமிகள்

உடனே அவரைத் தம்மிடம் வரும்படி தந்தி யடித்துத் தெரிவித்துவிட்டு இந்த நாட்டுப்புறத்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார். சுவாமி அபேதாநந்தர் அப்படியே வந்து பத்து நாட்கள் சுவாமிகளுடனே வசித்து, தாம் அமெரிக்காவிலே வந்ததுமுதல் வேதாந்த முயற்சி பரவுவதற்குத் தாம் செய்துள்ள வேலைகளை யெல்லாம் எடுத்துக் கூற, சுவாமிகளுக்கு அதிக சந்தோஷ முண்டாய்விட்டது. "ந்யூயார்க் வேதாந்த சபைக்குச் சொந்தமாகக் கட்டிடமொன்று ஏற்பட்டுவிட்டது", என்று கேட்க, சுவாமிகளுக்கு அதிக திருப்தி யுண்டாயிற்று.

நவம்பர்மீ 5-ம் தேதி யன்று சுவாமிகள் இந்த மலைப் பிரதேச கிராமத்தை விட்டுவிட்டு ந்யூயார்க்குக்கு வந்து சேர்ந்தார். நவம்பர்மீ 8-ம் தேதி செவ்வாய்க்கிழமை யன்று வேதாந்த சபையிலே சுவாமிகள் அக்கிராசனம் வகிக்க, சுவாமி அபேதாநந்தர் அநேக புதிய அங்கத்தினர்களைச் சுவாமிகளுக்குப் பழக்கப்படுத்தினார்.

நவம்பர்மீ 10-ம் தேதி யன்று வேதாந்த சபையின் புத்தகசாலையிலே சுவாமிகளுக்கு ஒரு பகிரங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. சுவாமிகள் எல்லோருடனும் தாராளமாகக் கலந்து, மிகுந்த சந்தோஷ பூரிதராயிருந்தார். ந்யூயார்க் நகரிலே இரண்டு வாரங்கள் இருந்தார்; இதற்குள்ளாகச் சுற்றுப் பக்கங்களிலே யிருந்த அநேக ஊர்களுக்கு அடிக்கடி போய்விட்டு வந்தார்.

நவம்பர்மீ 22-ம் தேதி யன்று சுவாமிகள் காலிபோர்னியா நகருக்குப் புறப்பட்டார். வழியிலே, சிக்காகோ நகரி

லே யுள்ள தமது அத்தியந்த நண்பர்கள் பலருடைய வே ண்டுகோளுக் கிணங்கி, சுவாமிகள் அவ்வூரிலே யிறங்கி னார். இவ்வூரிலே சுவாமிகளைக் கௌரவிப்பதற்காக அநேக வரவேற்புக் கொண்டாட்டங்கள் நடந்தன. சர்வமத மஹா சபையிலே சுவாமிகளைக் கண்டு பழகிய பழைய நண்பர்கள் பலரைக் காணச் சுவாமிகளுக்கு அளவற்ற ஆநந்த முண்டா யிற்று. சுவாமிகள் அந் நகரை விட்டு நீங்கி டிசம்பர்மீ முதல் வாரத்திலே காலிபோர்னியா மாகாணத்துக்கு வந்து சேர்ந்தார்.

லாஸ் ஏஞ்ஜில்ஸ் என்ற நகரிலே சுவாமிகள் மிஸஸ் ப்ளாட்ஜெட் என்ற மாதினுடைய கிருகத்திலே அதிதியாகி அங்கே பெப்ரவரிமீ மத்தியகாலம் வரையில் தாமதித் தார். சுவாமிகளுடைய புத்தகங்களைப் படித்து, ஆர்ய மதத் தின் உண்மையை அறிந்த பலர் இங்கே சுவாமிகளை நேரே கண்டு தரிசிக்க வந்து சேர்ந்தார்கள். சுவாமிகளை "ஒரு தொடர்ச்சிப் பிரசங்கங்கள் செய்து பொது ஜனங்களை உய் விக்கவேண்டும்" என்று எண்ணற்ற ஜனங்கள் வேண்டிக் கொண்டார்கள். அப்படியே அந் நகரிலும் அதற்கு அடு த்த ஊராகிய பசதேனாவிலும் அநேக பிரசங்கங்கள் செய் யப்பட்டன. அநேகமாகத் தினம் ஒரு பிரசங்கம் நடந்தது. அப்பிரதேசத்துச் சீதோஷ்ண ஸ்திதியும் சுவாமிகளுக்குச் சுககரமா யிருந்தது. அந் நகரிலே சத்தியக்ரகம் என்று ஒரு சபை யிருந்தது. அந்தச் சபையாருடைய வேண்டுகோளின் படி சுவாமிகள் அங்கே யொரு மாதம் தாமதித்து அநேக

பாடங்கள் நடத்தினர். தவிர, அநேக பிரசங்கங்களும் நடந்தன; இப் பிரசங்கங்களுக்கு ஜனங்கள் ஆயிரத்துக்கு மேலாக வந்து கூடினர்கள். சத்தியக்ரஹ சபையின் அங்கத்தினர்களிற் பெரும்பான்மையோரும் சுவாமிகளுடைய அத்தியந்த சிஷ்யர்களாகிவிட்டார்கள். அவர்களுடைய சபையின் விதிப்பிரகாரம் புகையிலை உபயோகப்படுத்தப்படக் கூடாது. ஆனல், சுவாமிகள் விஷயத்திலே மாத்திரம் இந்த விதி விலக்கிவைக்கப்பட்டது.

இன்னும், இந் நகரிலே மிஸ் ஸ்பென்சர் என்னும் மாதினுடைய வீட்டிலே சுவாமிகள் சில காலம் அதிதியாக இருந்தார். இம் மாது, சுவாமிகளுடைய அத்தியந்த சிஷ்யர்களுள் ஒருவராய்விட்டார். இம் மாதினுடைய தாயார் மிகுந்த விருத்தாப்பியதசை யடைந்திருந்தனர்; தவிர, இரண்டு கண்களும் தெரியா. சுவாமிகள் அந்த விருத்தாப்பிய ஸ்திரீயின் பக்கத்திலே கீழே யுட்கார்ந்து அவருடனே அடிக்கடி சம்பாஷித்துக்கொண்டிருப்பார்.

ஒரு நாள் மிஸ் ஸ்பென்ஸர் சுவாமிகளை நோக்கி, "சுவாமி! எனது தாயார் எமலோகத்துக்கு வழி பார்த்துக்கொண்டிருக்கிறளே; அவளிடத்திலே தங்களுக்கு இவ்வளவு அபிமானம் ஏற்படக் காரணம் என்ன?" என்று கேட்க,

சுவாமிகள்: "அம்மே! உனது தாயாரினிடத்தில் எனக்கு அபிமானம் கிடையாது. எனக்கு எவரிடத்தும் அபி

மானம் கிடையாது. ஆனல், ஜனனம்போன்று மாணமும் ஒரு பெரிய ரகஸ்யமாம். நான் அந்த ரகஸ்யத்தை ஆய்ந்து பார்ப்பதற்காக அவர் பக்கல் உட்கார்ந்துகொண்டிருக் கிறேன்,'' என்ருர்.

சுவாமிகள் லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகரை விட்டு ஓக்லாண்ட் என்னும் நகருக்கு வந்து ரேவேரேண்ட் டாக்டர் பேஞ்ஜ மின் பே மில்ஸ் என்னும் கிறிஸ்தவப் பாதிரியினுடைய வீட்டிலே வந்து சிலநாள் தங்கியிருந்தார். அந்தப் பாதிரி மிக நல்லவர்; மதத்துவேஷம் சற்றும் இல்லாதவர்; பரந்த எண்ணம் உடையவர். அப்பொழுது அந்நகரிலே மத மஹா சபை யொன்று நடந்தது. அச் சமயத்திலே சுவாமிகள் அந்தப் பாதிரியினுடைய கோவிலிலே தொடர்ச்சியாக எட்டுப் பிரசங்கங்கள் செய்தார்; தினந்தோறும் இரண்டா யிரம் ஜனங்களுக்குக் குறையாமல் சுவாமிகளுடைய பிரசங் கங்களைக் கேட்பதற்கு வந்து கூடினர்கள். நூற்றுக்கணக் கான கிறிஸ்தவப் பாதிரிகளும் சுவாமிகளுடைய பிரசங்கங் களைக் கேட்டார்கள்; இவர்களுள் அநேகர் சுவாமிகள் கூறிய உண்மைகளை அங்கீகரித்தார்கள். பெப்ரவரிமீக் கடைசியிலே காலிபோர்னியா மாகாணத்துத் தலை நகராகிய ஸான்ப்ரான்ஸிஸ்கோ மாநகரின் பிரதான ஜனங்கள் பலர் வேண்டுகோளின்படிச் சுவாமிகள் அங்குச் சென்று மேமீ வரையில் அங்கே உழைத்தார்.

மார்ச்சு, ஏப்ரல் ஆகிய இவ் இருமாத[illegible]களிலும் சுவாமி கள் ஞாயிற்றுக்கிழமைகளிலே சிவப்புப் புருஷர் மண்டபம்,

பொன்வாசல் மண்டபம், ஐக்கியமைதான மண்டபம் ஆகிய இம் மூன்று மண்டபங்களிலும் சுவாமிகள் பிரசங்கங்கள் செய்தார். வாரத்துக்கு மூன்று நாள் மாலை நேரத்திலே முதலில் வாஷிங்டன் மண்டபத்திலும், பின்னர் ஜாதிய மண்டபத்திலும் பக்தியோகத்தைப்பற்றி ஒரு தொடர்ச்சிப் பிரசங்கங்கள் செய்தார். இவை தவிர, ஒருநாள் விட்டு ஒருநாள் அலமேடா, ஒக்லாண்ட் என்ற இருநகரிலும் சுவாமிகள் பிரசங்கங்கள் செய்தார்.

அமெரிக்கா தேசத்திலே சுவாமிகள் இம் முறை செய்த பிரசங்கங்களெல்லாம் அநேகமாக ராஜயோகத்தைப் பற்றியதாகவே யிருந்தன. இவற்றுள் சில பிரசங்கங்களே அச்சில் வெளிவந்திருக்கின்றன; பல, சரியானபடி குறித்தெடுப்போர் இல்லாததினாலே, அந்த அந்த சபையாருக்கு மாத்திரம் பயன்பட்டவை யாயினவே யொழிய, உலகுக்குப் பயன்படாது போய்விட்டன. சுவாமிகள் ஏகாக்கிரதை சர்வ சாதாரணமா யிருந்தது என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் ஈண்டு எடுத்துக் கூறுவோம்.

அமெரிக்காவில் ஒரு ஊரிலே ஒரு நதி தீரத்திலே சில வாலிபர்கள் ஒரு பாலத்தின்மீது இருந்துகொண்டு நதியுடனே செல்லும் சில கோழிமுட்டைகளின்மீது சுட்டார்கள். ஆனால், அவர்களுள் எவராலும் முடியவில்லை. சுவாமிகள் இதைக் கவனித்துக்கொண்டே யிருந்தார்; இவர்கள் குறி தப்புவதைப் பார்த்துப் புன்னகை புரிந்

தார். அவர்களுள் ஒருவன், சுவாமிகள் புன்னகை புரிவதை கவனித்து, தங்களைப் பரிகசிப்பதாகக் கருதிக்கொண்டு, குறிவைத்துச் சுடும்படி சுவாமிகளிடம் வாது செய்தான். அவர் துப்பாக்கியைக் கையில் வாங்கிக் குறிவைத்துச் சுட்டார்; பன்னிரண்டு முட்டைகள் உடைபட்டன! அவ் வாலிபர்கள் ஆச்சர்ய மடைந்து, 'சுவாமிகள் சுடுவதிலே மஹா சமர்த்தர்' என்று நினைத்து, அப்படிக் குறி தப்பாது சுடுவதற்கு எப்படிச் சுவாமிகளால் முடிந்தது என்று கேட்க, ஸ்வாமிகள் தாம் அதுவரையில் துப்பாக்கியைக் கையாண்டதே கிடையாதென்றும், தாம் ஜப மடைந்ததின் ரகஸ்யமெல்லாம் மனத்தின் ஏகாக்கிரதையே யென்றும் கூறினர்.

லாஸ் ஏஞ்ஜல்ஸ் பஸடேனு இவ்விரு நகரங்களிலும் வேதாந்த சபைகள் ஸ்வாமிகளுடைய சிஷ்யர்களால் ஒழுங்காக நடத்தப்பட்டு வந்தன; ஸ்வாமிகளை அவ்விடங்கட்குத் திரும்பி வரும்படி அவருடைய சிஷ்யர்கள் அநேக கடிதங்கள் எழுதி வேண்டிக்கொண்டார்கள்; ஆனால், ஸ்வாமிகள் தமக்கு அந்த மாகாணத்தின் வட பாகங்களிலே வேலை மிகுதியா யிருப்பதினாலே தாம் வர முடியாதென்றும், தமக்குப் பதிலாக வேறு ஒரு சந்யாசியை அனுப்பி வைப்பதாகவும் எழுதிவிட்டார்.

ஸான்ப்ரான்ஸிஸ்கோ, ஒக்லாண்ட், அலமேடா முதலிய நகரங்களிலே வேதாந்த சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஸான்ப்ரான்ஸிஸ்கோ வேதாந்திகள் தங்களுடன்கூட ஸ்திர

மாக இருந்து தங்களுக்கு உபதேசிப்பதற்கு ஒரு சந்யாசி வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஸ்வாமிகள் துர் யாநந்தரை உடனே ஸான்ப்ரான்ஸிஸ்கோவுக்கு வரும்படி கடிதம் எழுதினர். ஆனல், ந்யூ யார்க்கிலே யிருந்த சுவாமி அபேதாநந்தர் வெளியே பிரசங்க யாத்திரை போயிருந்த தனல் சுவாமி துர்யாநந்தர் ந்யூ யார்க் வேதாந்திகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார்; அதனல் அவர் உடனே வர முடியாதுபோயிற்று.

இம் மாகாணத்திலே சுவாமிகளுடைய அத்தியந்த சிஷ்யர்களுள் ஒருவரான மிஸ் மின்னி பூக் என்னும் மாது வேதாந்த வித்தியார்த்திகளுக்கு ஒரு ஆச்ரமம் கட்டுவதற் காக 160 ஏகரா நிலமுள்ள மிக விஸ்தீரணமான பூமி யொன்றைச் சுவாமிகளுக்குத் தானம்செய்து கொடுத்தாள். ஆனல், சுவாமிகள் இந்த இடத்தைப் பார்க்கவில்லை. ஆயி னும், கேள்விப்பட்டதிலிருந்து சுவாமிகளுக்கு மிகுந்த சந் தோஷம்தான் உண்டாயிற்று. இந்த நிலத்திலிருந்து சமீ பத்து ரெயில்வே ஸ்டேஷன் 50 மைல் தூரத்தி லிருந்தது; தபாலாபீஸ் மூன்று மைல் தூரத்தி லிருந்தது. பன் னிரண்டு மைல் தூரத்தில்தான் மனித சஞ்சாரம் உண்டு. இதற்குச் சாந்தி ஆச்ரமம் என்று பெயரிடப்பட்டது.

ஆகஸ்டுமீ இரண்டாம் தேதி சுவாமி துர்யாநந்தர் முதன்முதலாவதாகப் பன்னிரண்டு வித்தியார்த்திகளை யிட்டுக்கொண்டு இவ்வாச்ரமத்திற்குச் சென்றார்.

சுவாமிகளுக்கு இடைவிடாப் பிரசங்கத்தினலே களைப்பு உண்டாய்விட்டது; சரீரம் அசௌக்கிய மடைந்து

விட்டது; ஓய்வெடுத்துக்கொண்டு சரீரத்தைச் சௌக்கியப் படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. ஆதலால், ஒரு மூன்று வாரங்கள் சுவாமிகள் சிரமசாந்தி செய்துகொள்ளும்பொருட்டு காம்ப் டேயிலர் என்ற கிராமத்திற்குச் சென்றார்; பின்னர், ஸான்ப்ரான்ஸிஸ்கோவுக்குத் திரும்பி வந்தும் வைத்தியருடைய இடைவிடா மேற்பார்வையி லிருக்கவேண்டியது அவசியமாயிருந்ததினாலே தமது சிஷ்யர் டாக்டர் லோகன் என்பவருடைய வீட்டிலே தங்கினார். டாக்டர் வில்பம் பார்ஸ்டர் என்னும் பிரசித்தி பெற்ற வைத்தியர் சுவாமிகளுடைய சரீரத்தைக் கவனித்துவந்தார். "இப்பொழுது பொதுப் பிரசங்கங்கள் செய்யக்கூடாது," என்று வைத்தியர்கள் சுவாமிகளுக்குக் கூறிவிட்டார்கள். ஆயினும், சுவாமிகள் கீதையைப்பற்றி நான்கு பிரசங்கங்கள் செய்யாமலிருக்கவில்லை.

லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகரிலே பிரசித்தி பெற்ற தனவந்தராகிய மீட் என்பவருடைய மூன்று சகோதரிகளும் சுவாமிகளிடத்திலே அத்தியந்த பக்தி மிகுந்தவர்களாய் விட்டார்கள். இவர்களுள் மிஸஸ் ஹேயின்ஸ்பரோ என்பவர் சுவாமிகளுக்குப் பணிவிடை புரிவதில் சலிப்படைவதேயில்லை. சுவாமிகள் சில சமயங்களிலே கழுத்துப்பட்டை முதலியன தரித்துக்கொள்ளத் தெரியாமல் ஒரு சிறு குழந்தைபோல விழித்துக்கொண்டு இம் மாதினிடம் வருவார். இம் மாது சுவாமிகளுக்கு வேண்டிய உதவி செய்து

கொடுப்பார். இவர்களிடத்திலே சுவாமிகள் வெகு தாராள மாக இந்தியக் கதைகள் பலவற்றையும் தமது அநுபவங் களையும் எடுத்துக் கூறுவார். மொத்தத்தில் சுவாமிகள் இவர்களுடைய குடும்பத்தில் ஒருவர் போலவே யிருந் தார்.

சுவாமிகள் காலிபோர்னியாவிலே மொத்தம் நூறு பிரசங்கங்களுக்குக் குறையாமல் செய்துவிட்டார். இவை தவிர, எத்தனையோ சம்பாஷணைகள்! காலிபோர்னியாவி லே சுவாமிகள் போயிருந்தபொழுது, அமெரிக்க தனவந்த ரும் சுவாமிகளின் அத்தியந்த நண்பருமான லேக்கேட் என் பாரும் அவருடைய மனைவியரும் ஐரோப்பாவுக்குப் போயி ருந்தார்கள். அப்பொழுது அவர்கள் லண்டனி லிருந்தார் கள். அவர்கள் சுவாமிகளுடைய சரீர சௌக்கியத்தை யுத்தேசித்து உடனே புறப்பட்டு ஜூலைமீ’த்திலே பாரிஸ் நகரத்திலே தங்களுடன் வந்து சேரும்படி சுவாமிகளுக்கு எழுதி வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். தவிர, அப் பொழுது பாரிஸ் நகரத்திலே கண்காக்ஷி யொன்று நடை பெற விருந்தது; அது சம்பந்தமாகச் சர்வமத சரித்திர சபை யொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அதிலே வந்து பிரசங்கம் செய்யும்படி அந்நியப்பிரதிநிதி சபையார் சுவாமி களை அழைத்திருந்தார்கள். ஆதலால், சுவாமிகளும் ஐரோப் பாவுக்குப் போவதற்கு ஆயத்தம் செய்யலானார். ஐரோப் பாவுக்குப் புறப்படுவதற்குமுன் சுவாமிகள் ந்யூயார்க் நகரி லே சில நாட்கள் தங்கக் கருதி அங்குச் சென்றார்; வழியி

லே சிக்காகோ, டெட்ராய்ட் என்ற இருநகரங்களிலும் இறங்கி, தமது பழய நண்பர்களைப் பார்த்துவிட்டுப் போனார். இப்பொழுது சுவாமிகள் வேதாந்த சபைக்கட்டிடத்திலேயே இறங்கி, வருபவர்களுடன் சம்பாஷணைகள் புரிந்துகொண்டிருந்தார்; சில பிரசங்கங்கள் செய்தார்; ஆனால், இப்பொழுது சுவாமிகளுக்குப் பிரசங்கங்கள் செய்வதிலே மனம் போகவில்லை.

சுவாமிகள் துர்யாநந்தரைக் கூப்பிட்டுக் காலிபோர்னியாவுக்குப் போய் அங்கு வேலை செய்யும்படி ஆக்ஞாபித்தார். துர்யாநந்தர் தமக்கு வேண்டிய புத்திமதி புகன்று அனுப்பும்படி வேண்டிக்கொள்ள, சுவாமிகள்: "காலிபோர்னியாவிலே சென்று ஆச்ரமம் ஏற்படுத்து! அங்கு வேதாந்தக் கொடியை நாட்டு! இந்த நிமிஷத்திலிருந்து இந்தியாவைப் பற்றிய ஞாபகத்தையே அழித்துவிடு! எல்லாவற்றுக்கும் மேலே, உண்மையாயிரு! மற்றதையெல்லாம் மாதா பார்த்துக்கொள்வாள்" என்றார்.

ஸ்வாமிகள் ந்யூயார்க்கிலிருந்தபொழுது அவர் அடிக்கடி தமது சிஷ்யர் மிஸ் வால்டோ என்னும் மாதினுடைய வீட்டுக்குச் சென்று வருவார். மிஸஸ் ஆன்னி ஸ்மித் என்னும் பெயருடைய இன்னொரு மாது சுவாமிகளுக்கு அந்தியந்த நண்பர். இவர் சுவாமிகளைச் சர்வமத மஹா சபை நடந்த காலத்திலேயே அறிந்து பழக்கப்படுத்திக்கொண்டு, சிக்காகோவிலும் ந்யூ யார்க்கிலும் அநேக வித்துவான்களைச் சுவாமிகளுக்குப் பழக்கப்படுத்திவிட்டாள். சுவாமிகள்

இம் மாதைத் "தாயே!" என்று அழைப்பது வழக்கம். இவர் இந்தியாவிலே பிறந்தவர்; இந்திய சாஸ்திரங்களிலே மிகுந்த அபிமான முள்ளவர். கீழ்நாட்டு விஷயங்களைப்பற்றிப் பிரசங்கிப்பதிலே இவர் அமெரிக்கா முழுதிலும் பெயர் பெற்றவர். சுவாமிகள் ஜுலைமீ 20உ கப்பலில் ஏறி ஐரோப்பாவிலே யுள்ள பாரிஸ் நகருக்குப் புறப்பட்டுவிட்டார்.

64-வது அத்தியாயம்
ஐரோப்பாவில் யாத்திரை

ஆகஸ்டுமீ முதல் தேதி ஸ்வாமிகள் பாரிஸ் நகரத்திற்கு வந்து சேர்ந்தார்; அங்கே லேக்கேட்டும் அவருடைய மனைவியரும் வசித்துவந்த அழகிய கட்டிடத்திலே சுவாமிகள் அவர்களுடைய அதிதியா யிருந்தார். இப்பொழுது சுவாமிகளுக்குப் பிரசித்தி பெற்ற பலரைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. லெக்கெட் மிகுந்த தனவந்தராகையினாலே பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள், கவிகள், சாஸ்திரக்ஞர்கள், பண்டிதர்கள், பாடகர்கள் முதலியவர்களை வரவழைத்து ஏராளமாகச் செலவு செய்து பெரிய விருந்துகள் வைப்பார். இவை யெல்லாவற்றிலும், பருப்பில்லாமல் கலியாணமில்லை யென்பதுபோல, சுவாமிகளும் சேராமலிருக்க முடியுமா? பல துறை வித்துவான்களிடத்தும் சம்பாஷிப்பதற்குச் சுவாமிகளுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. சுவாமிகள் சர்வமத சரித்திர சபையிலே

ப்ரெஞ்ச் பாஷையிலே பிரசங்கம் செய்வதற்கு இரண்டு மாதங்களாக ப்ரெஞ்ச் பாஷையை நன்ருகக் கற்றுக்கொண்டுவந்தார். இந்தச் சபையினுடைய கருத்து: மதங்களினுடைய வளர்ச்சி முதலியவற்றைப்பற்றியுள்ள ஆதி சரித்திரங்களை ஆராய்வதேயன்றிக் கொள்கைகளை வியவகரிப்பதன்று. முதலில் சிக்காக்கோவில் நடந்ததுபோலச் சர்வமத மஹா சபைதான் ஏற்படுத்துவதற்கு ஆலோசனை செய்யப்பட்டது. ஆனல், கிறிஸ்தவப் பாதிரிகள் பெரும்பான்மையோர் கீழ்நாட்டு மதங்கள் பிரசித்தி யடைந்துவிடுமென்று பயந்து ஒரே பிடிவாதமாக, "அப்படிச் சபை நடத்தல் கூடாது" என்று கூறவே, அந்த யோசனை மாறி, மதங்களின் சரித்திர சபையாய்விட்டது. ஆதலால், மதங்களின் சரித்திரங்களை ஆராய்ச்சி செய்தவர்கள் மாத்திரம்தான் இந்தச் சபைக்கு வந்திருந்தார்கள். சுவாமிகள் அதுவரையிலே ஹிந்து மதத்தின் உற்பத்தியையும் வளர்ச்சியையும் பற்றி மேல்நாட்டு வித்துவான்களுக்குத் தெரியாதிருந்த அநேக ரகஸ்யங்களை வெளிப்படுத்தினர்.

ஸ்வாமிகள் பாரிஸி லிருந்தபொழுது ப்ரெஞ்சு நாகரிகத்தை ஆய்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். பாரிஸ் கண்காக்ஷியானது சுவாமிகளுடைய ஆராய்ச்சிக்கு வேண்டிய அளவு இடம் கொடுத்தது. கண்காக்ஷி அதிகாரிகளும் சுவாமிகளை மிகுந்த மரியாதையுடனே வரவேற்று உபசரித்தார்கள். சுவாமிகள் பாரிஸிலே பிரசித்தி பெற்ற பலரைச் சந்தித்தார். மகா சாஸ்திரநிபுணராகிய ஜகதீசச் சந்திர

வஸு என்பவர் அப்பொழுது பாரிஸிலே யிருந்தார்; இவரையும் சாஸ்திரக்ஞர்களுடைய கண்காக்ஷிச் சாலை சபைக்கு வரவழைத்திருந்தார்கள். சுவாமிகள் வஸு அவர்களை அடிக்கடி சந்தித்துத் தமது நண்பர்களிடம் அவரை "வங்காளத்து மேன்மையும் கர்வமும்" ஆம் என்று மெச்சுவார். ஐரோப்பிய சாஸ்திரக்ஞர்களுடைய சமர்த்தைப்பற்றி எவரேனும் புகழ்ந்து பேசினால், சுவாமிகள் ஆத்திரம் மிகுந்தவராய் உலகுமுழுதும் எதிர்த்து நின்ற போதிலும் சற்றும் பின் வாங்காதவராய் வஸு அவர்களை ஆதரித்து மெச்சுவார்.

சர்வமத சரித்திர சபைக்குப் பின் சுவாமிகள் மிஸஸ் ஓல் புல் என்பவருடைய வேண்டுகோளுக் கிணங்கி, ப்ரிட்டானிப் பிரதேசத்திலே லான்னியான் என்ற கிராமத்திலே அவருடைய வீட்டில் அதிதியாகப் போய்ச் சேர்ந்தார். இப்பொழுது சகோதரி நிவேதிதா அம்மையாரும் அமெரிக்காவிலிருந்து சுவாமிகளிடம் திரும்பி வந்துவிட்டார். சுவாமிகள் இந்தப் பிரதேசத்திலே வசித்தபொழுது ஒரு கிறிஸ்தவ விசேஷதினத்தன்று ஒரு பழய கோவிலைப் போய்ப் பார்வையிட்டு, அதிலே பண்டைக் காலங்களிலே கைதிகளை அடைத்து வைப்பதற்குக் கட்டப்பட்டிருந்த இருள் மூடிய கூண்டுகள்போன்ற அறைகளைப் பார்த்து, "ஆ! என்ன சௌகர்யமான இடம் நிஷ்டை செய்வதற்கு' என்றார்.

ஸ்வாமிகள் அங்கிருந்து நீங்குவதற்கு முன்னால், சகோதரி நிவேதிதா அம்மையார் இங்கிலாந்துக்குப் போ

வதற்குச் சுவாமிகளிடம் விடை கேட்டுக்கொண்டார். சுவாமிகள் அவருக்கு ஆசி கூறி, "மகம்மதியர்களுக்குள்ளே விசேஷ மாதிரியான வகுப்பு ஒன்று உள்ளது; அவர்கள் குழந்தை பிறந்தவுடனே, அக் குழந்தையை வெளியில் கொண்டுவந்து, "கடவுள் உன்னை யுண்டாக்கினல் மரித்துவிடு! அலி யுன்னை யுண்டாக்கினல் உயிருடன் பிழைத்திரு!" என்று கூறுவது வழக்கம். அதே மாதிரியாக நானும் உனக்குச் சொல்கிறேன்; ஆனல், நேர் எதிர் பொருளில் கூறுகிறேன். 'உலகுக்குள்ளே போ! அங்கே, நான் உன்னை யுண்டுபண்ணி யிருந்தால் அழிந்துவிடு; மாதா உன்னை உண்டுபண்ணியிருந்தால் பிழைத்திரு!'

சுவாமிகள் இப்பொழுது ப்ரிட்டானியிலிருந்து பாரிசுக்கு மறுபடியும் வந்து சேர்ந்தார். இப்பொழுது தத்துவ சாஸ்திரியும் பத்திராசிரியருமாகிய ஜுலே ப்ளாய் என்னும் பிரெஞ்சு வித்துவானுடனே வசித்துவந்தார். ப்ரான்ஸ் தேசத்திலே சுவாமிகளுக்கு அத்தியந்த நண்பராய் ஏற்பட்டவர் பேயர் ஹையாஸிந்தே என்னும் கிறிஸ்தவ சந்யாசியாம். 'இவர் மிகுந்த தாராள நோக்கங்களுள்ளவர்' என்று பிரசித்தி பெற்றவர்; மிகுந்த வாக் சாதுர்யமுள்ளவர்; 'ப்ரான்ஸிலும் உலகிலுள்ள ரோமன் கத்தோலிக்சர்களுக்குள்ளும் வித்துவத்தில் சிறந்தவர்' என்று பெயர் பெற்றவர். இவர் ரோமன் கத்தோலிக் மதத்திலே இடைக்காலத்திலே நுழைந்துகொண்ட பல குற்றங் குறைகளைக் கண்டித்ததினலே, இவரை ஜாதியிலிருந்து தள்ளினர்கள்.

இவர் சார்லேஸ் பாய்சன் என்னும் பெயர் வைத்துக்கொண்டு ஒரு அமெரிக்க ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டார். இதெல்லாம் ஐரோப்பாவிலே அச் சமயத்தில் ஒரு பெருங் கலக்கத்தை யுண்டாக்கின. ரோமன் கத்தோலிக்கர்கள் அவரை வெறுத்தார்கள்; புரோடெஸ்டாண்டு மதத்தினர் அவரை விரும்பினார்கள். இவர் இப்பொழுது விருத்தாப் பியமாய்விட்டார்; பல மதங்களையும் ஒத்துப் பார்த்து ஆராய்ந்துகொண்டிருந்தார். சுவாமிகளுக்கு அவரிடத்தி லே பிரியம் அதிகம். விக்டர் ஹ்யூகோ என்ற பிரசித்தி பெற்ற ஆசிரியர் ப்ரெஞ்ச் பாஷையிலே இரண்டு ஆசிரியர்க ளைப் புகழ்ந்தார்; அவ் விருவரில் ஒருவர் இவர். சுவாமிக ளுடைய சம்பாஷணை அவருக்கு அமிருத சமானமாயிருந் தது. அவரும் அவருடைய மனைவியரும் சுவாமிகளுடன் கூடக் கான்ஸ்டாண்டிநோபிள் நகர் வரையில் யாத்திரை செய்தார்கள். பின்னர்ச் சுவாமிகள் இவரைச் சின்ன ஆசியா விலே ஸ்குட்டாரி யென்னும் இடத்திலே மறுபடியும் சந் தித்து நெடுநேரம் சம்பாஷணை செய்தார். அவர் சுவாமி களை 'ஈச்வரனால் உலகை உய்விக்க அனுப்பப்பட்டவர்' என்றே கருதிவந்தார்.

சுவாமிகள் தங்கிவந்த வீட்டுக்குச் சொந்தக்காரரும் சுவாமிகளுடைய அத்தியந்த நண்பருமாகிய ஜூலே ப்ளாய் என்பவர் பாரிஸ் நகரத்துக் கற்றோர் குழாங்களிலே சகவாசம் செய்பவர்; தவிர, வேதாந்தப் பற்றுள்ளவர்; மதங்களின் சரித்திர ஆராய்ச்சியிலே தேர்ந்தவர். இவர்

மூலமாகச் சுவாமிகளுக்குப் பல மேதாவிகள் பழக்கமானார்கள். பண்டிதர் கெட்டிஸ் என்பவருடனேகூடச் சுவாமிகள் ஜாதிவிருத்தி, பூர்வீக கிரேக்க நாகரிகம் முதலியவற்றைப் பற்றி நீண்ட சம்பாஷணைகள் செய்தார். இன்னும் நூதனமாக ஒருவித பீரங்கி கண்டுபிடித்த ஹிராம் மாக்ஸிம் என்பவர் சுவாமிகளிடத்திலே அத்தியந்த நட்புடையவரானார். இவர் சுவாமிகளிடத்திலே "நான் மனிதனைக் கொல்லும் அந்த யந்திரத்தைத் தவிர வேறொன்றையும் கண்டுபிடிக்கவில்லையே!" என்று கூறித் தமக்கு அதைப்பற்றி ஞாபகப்படுத்தாதிருக்கும்படி வேண்டிக்கொள்வார். இவருக்குச் சீனம், இந்தியா இந்தத் தேசங்களினிடத்தே பிரியம் அதிகம்; மத விஷயமாக அநேக அரிய புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். கிறிஸ்தவப் பாதிரிகள் சீன தேசத்திலே சென்று ஜனங்களை மதத்திலிருந்து, மாற்றுவதை அவர் வெறுத்தார்; அநேக சீனப் போலிப் பெயர்களுடனே தாமே கிறிஸ்தவப் பாதிரிகளுடைய முயற்சிகளைக் கண்டித்து அநேக கடிதங்கள் பத்திரிகைகட்கு எழுதி வந்தார்; இவருக்குச் சீன மதத்தினிடத்திலே பற்று அதிகம்; இவருடைய மனைவியும் அவ்வாறே.

ஐரோப்பாவிலே நாடகத்திலே பெயர்பெற்ற ஸாரா பேர்னார்ட் என்னும் மாது சுவாமிகளிடத்திலே அத்தியந்த பக்தியுள்ளவராய்விட்டார். அவருக்கு இந்தியாவினிடத்து அன்பு அதிகம். ஒரு வருஷத்திலே இந்தியக் கதையொன்று இவர் நடித்துக் காட்டினார்; தாம் ஒவ்வொரு காக்ஷி

சாலைக்கும் சென்று இந்திய நடையுடை பாவனைகள் முத லியவற்றைத் தெரிந்துகொள்வதற்குச் சரியாக இரண்டு மாதம் பாடுபட்டதாக இவர் சுவாமிகளிடம் கூறினார். "இந் தியாவைப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆசை நிரம்ப யிருக்கிறது; அதுதான் எனது வாழ்க்கையின் கனவு." என்று சொல்லிவிட்டு அப்பொழுது இளவரசராயிருந்து பின்னர்ச் சக்கரவர்த்தியான ஏழாவது எட்வர்ட் தமக்கு இந் தியாவுக்குப் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய சௌகர் யங்களெல்லாம் செய்து கொடுப்பதாய் வாக்களித்திருப்ப தாகச் சுவாமிகளிடம் சொன்னார். அப்போது அம் மாது வருவதாயிருந்தால் தமது பரிவாரங்கள் எல்லோரையும் கூட்டிக்கொண்டு வரவேண்டி வருமென்றும், பிரத்தியேக ரெயில்வண்டிகள் வேண்டுமென்றும், ஆதலால் அநேக லக்ஷம் ரூபா செலவழியுமென்றும், ஆகையால், அப்பொ ழுது வர முடியாதென்றும் கூறினார். இம்மாதுக்கு ஐரோப் பாவிலே "தெய்வீக ஸாரா" என்று பெயர். இவருக்குப் பணத்துக்குக் குறைவே யில்லை. வருஷத்திலே எத்தனை யோ லக்ஷம் இவருக்கு வரும்; ஆனால், இவர் ஐரோப்பாவி லுள்ள அநேக அரசர்கள்கூட அநுபவிக்க முடியாத அவ் வளவு ஆடம்பரத்திலும் டாம்பீகத்திலும் அவ்வளவு பண த்தையும் செலவழித்துவிடுவார்.

இன்னும் நாடகத்திலே பாடுவதில் பிரசித்தி பெற்ற மாதா கலவே என்னும் மாது சுவாமிகளிடத்திலே பக்தி யுடையவரானார். இம் மாது மிகுந்த ஏழைக் குடும்பத்திலே

பிறந்து தமது சொந்த சாரத்தினாலே பிரசித்தி பெற்று, ஐச்வர்யம் சேகரித்து அரசர்களும் சக்கரவர்த்திகளும் மதிக்க வாழ்ந்து வந்தார். மிஸ் மாக்லியாட் என்னும் அமெரிக்க மாது சுவாமிகளைப் பல இடங்கட்கும் இட்டுச் சென்று, சுவாமிகளுக்குச் சலிப்பு உண்டாகாவண்ணம் சுவாமிகளுடைய மனத்தை எப்பொழுதும் ஊக்கத்திலே வைத்திருந்தார். சுவாமிகளுக்குக் கடிதப் போக்குவரவு ஏராளமாய் விட்டது.

சுவாமிகள் ப்ரான்ஸ் தேசத்திலே மூன்று மாதங்கள் வசித்துவிட்டு, பாரிஸிலிருந்து ஸ்டாம்பூல் நகருக்குத் தினந்தோறும் செல்கிற ரெயில் வண்டியிலே அக்டோபர்மீ 24-ம் தேதி ஏறினர். இவருடன்கூட மிஸ் மாக்லியாட் என்னும் அமெரிக்க மாது, சார்லெஸ் லாய்ஸன் அவருடைய மனைவி, ஜனுலே ப்ளாய், மாதா கலவே இத்தனைபேரும் சென்றார்கள். 25-ம் தேதி யன்று சுவாமிகளும் மற்றவர்களும் வியன்னு நகர் வந்து சேர்ந்து இங்கே மூன்று நாட்கள் தங்கினர்கள்.

ஆஸ்ட்ரியா தேசத்தைப்பற்றிச் சுவாமிகளுக்கு நல்லபிப்பிராயம் ஏற்படவில்லை. "துருக்கி 'ஐரோப்பாவிலே வியாதியஸ்தன்' என்று சொல்லலாமானல், ஆஸ்ட்ரியாவை 'ஐரோப்பாவிலே வியாதி பிடித்த ஸ்திரீ' என்று சொல்லலாம்" என்று சொன்னர் சுவாமிகள். அங்கிருந்து 28உ புறப்பட்டுச் சுவாமிகளும் மற்றவர்களும் 30உ யன்று கான்ஸ்டாண்டிநோபிள் நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

இங்கே சுவாமிகள் விநோதமான பல இடங்களைப் பார்வையிட்டார்; மிஸ் மாக்லியாட் மாதுடனே மறுநாள் பாஸ்பரஸ் ஜலசந்தியிலே படகேறி உலாவி வந்தார். அப்படியே ஸ்குட்டாரிக்குப் போனார்; ஆனால், சுவாமிகளுக்காவது அம் மாதுக்காவது துருக்கி பாஷையும் தெரியாது, அரபி பாஷையும் தெரியாது. சைகைகளினாலே ஒரு படகை வாடகை பேசி ஏறிக்கொண்டு கரை யிறங்கி அங்கிருந்து ஒரு வண்டியிலே பேயர் ஹையாயிந்தே என்பவரிடம் போய் நெடுநேரம் சம்பாஷித்தார். இவ்விடத்திலே யிருந்த கடைத் தெருக்களையெல்லாம் சுவாமிகள் சுற்றிப் பார்த்து அங்குச் சந்தித்த சில துருக்கி மாணவர்களுடன் ஆங்கிலத்திலே சம்பாஷித்தார். திரும்பவும் கான்ஸ்டாண்டிநோபிளுக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். சுவாமிகளுடைய நண்பராகிய மாக்ஸிம் என்பவர் இந்நகரத்திலேயுள்ள சில பெரியோர்களுக்குச் சுவாமிகளை அறிமுகப்படுத்திச் சில கடிதங்கள் கொடுத்திருந்தார்; அக் கடிதங்களின் மூலமாகச் சுவாமிகள் அநேக பிரசித்தி பெற்ற பெரியோர்களைச் சந்தித்தார். அங்கே சென்றிருந்த அநேக இந்தியர்களைக் காணச் சுவாமிகளுக்கு அளவற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று.

ஸ்வாமிகளும் அவருடைய நண்பர்களும் அநேக நாட்கள் அந்நகரிலே யிருந்துவிட்டுப் பிறகு ஆதேன்ஸ் நகருக்குக் கப்பலில் ஏறிப் புறப்பட்டார்கள். அங்குச் சுற்றியிருந்த தீவுக் கூட்டங்களை யொவ்வொன்றாகச் சுவாமிகள் போய்ப் பார்வையிட்டார்; ஆதென்ஸ் நகரத்திலே யுள்ள விநோத

விசேஷங்களை யெல்லாம் ஒன்று தவறாமல் பார்வையிட்டுக் களித்தார். இவ்வாறு இந்நகரிலே நான்கு நாட்கள் இருந்து விட்டு ஒரு ருஷியக் கப்பலில் ஏறி, எகிப்து தேசத்துக்குப் புறப்பட்டார். எகிப்து தேசத்து ஸ்தூபிகளையும் மற்றும் உள்ளவைகளையும் அவர் பார்க்கப் பார்க்க, அவருக்கு உலகத்தின் மித்யாத்தன்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குவதுபோன் றிருந்தது. ஸ்வாமிகளுக்கு 'இந்தியாவுக்குத் திரும்பி வரவேண்டும்,' என்று எண்ண முண்டாய் விட்டது. இந்தியாவிலே யிருந்த சுவாமிகளுடைய அத்தியந்த நண்பரும் சிஷ்யருமாகிய ஸேவியர் பரலோகம் அடைந்துவிட்டார்; இது சுவாமிகளுக்கு சூட்சுமதிருஷ்டியில் தெரிந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை. இருந்தாற் போலிருந்து சுவாமிகள் ஒரு நாள் தமது நண்பர்களிடத்திலே தாம் இந்தியாவுக்குப் போக விரும்புவதாகத் தெரிவித்தார். இந்த எண்ணம் முதலில் மனத்தில் உண்டானதிலிருந்து, 'முதற் கப்பல் எப்பொழுது இந்தியாவுக்குப் புறப்படப்போகிறது?' என்று சுவாமிகள் காத்துக்கொண் டிருந்தார்.

அவருடைய நண்பர்கள் வருந்தினார்கள்; ஆயினும், ஈச்வர சித்தத்தினிடத்திலே தங்களை ஒப்புவித்துக்கொண்டார்கள். சுவாமிகள் கப்பலில் ஏறிவிட்டார். கப்பல் இந்தியக் கரைவந்து சேர்ந்தது. சுவாமிகள் இப்பொழுது திரும்பி வருவது எவருக்கும் தெரியாது. பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு ரெயிலிலேறி வரும் மார்க்கத்திலே அவருடைய

பழைய நண்பரான மன்மத நாத பட்டாச்சார்யாரைக் கண்டார். சுவாமிகள் ஐரோப்பிய உடை தரித்திருந்ததினலே பட்டாச்சார்யார் சுவாமிகளைத் தெரிந்துகொள்ள வில்லை. ஒரு நிமிஷம் இருவரும் ஒருவரை யொருவர் விழித்துப் பார்த்தார். பின்னர் அதிக ஆநந்த சம்பாஷணை.

1900ஹு டிசம்பர் மாதம் 9 - ம் தேதி அஸ்தமித்து வெகு நேர மாய்விட்டது; சுவாமிகள் கல்கத்தாவிலுள்ள வேலூர் மடத்துக்கு வந்து சேர்ந்தார். சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் பிரஹ்மச்சாரிகளும் அப்பொழுது சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். தோட்டக்காரன் ஓடோடி வந்து "யாரோ ஒரு துரை வந்திருக்கிறார்" என்று சொன்னன். "இந்தத் துரை யாராயிருக்கலாம்? இந்த அகாலத்திலே இங்கு வரக் காரண மென்ன?" என்று அவர்கள் யோசனை செய்துகொண்டிருக்கையிலேயே, விவேகாநந்த துரை, அவர்களின் மத்தியில் போய் நின்றார். இந்தத் துரையைப் பார்த்த பின்னர் அவர்களுக்கு உறக்கமும் வருமா? "சுவாமிகள்! சுவாமிகள்!" என்று எல்லோரும் ஏககோஷம் செய்தார்கள். சுவாமிகள் சுவரேறிக் குதித்து, சிறு பையனைப்போல உள்ளே வந்து நின்றுகொண்டு, "சீக்கிரம் வராவிட்டால், நான் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அதனல் நான் சுவரேறிக் குதித்து ஓடிவந்தேன்" என்றார். உடனே சுவாமிகளுக்கு ஆசனமிட்டு அன்னம் பரிமாறப்பட்டது. சுவாமிகள் மிகுந்த சந்தோஷத்துடனே போஜன முண்டு அன்றிரவெல்லாம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

மேனாட்டிலே சுவாமிகள் முதன்முதலாவதாகப் போயிருந்தபொழுது 'அங்குப் பொதுஜன அதிகாரம் அமைந்துள்ளது,' என்றும், 'ஜனசமூகம் நன்றாக அமைக்கப் பெற்றுள்ளது' என்றும் நம்பினார்; ஆனால், இம் முறை போய் வந்தபொழுது அவ்வபிப்பிராயம் மாறிவிட்டது. 'பேராசையும் ஸ்வயநலமுமே மேனாட்டில் எல்லா முயற்சிகளுக்கும் அஸ்திவாரம்,' என்று இப்பொழுது அபிப்பிராயப்பட்டார். "பெரிய கம்பெனிகள் சேர்ந்து சிறு வியாபாரங்களை ஒழித்துவிடுதல் கொடூரம்," என்றார் சுவாமிகள். "மேனாடு தனக்கு நரகம் போன்று தோன்றிவிட்டது," என்று இப்பொழுது சுவாமிகள் கூறினர்.

65-வது அத்தியாயம்

மாயாவதி

சுவாமிகள் கல்கத்தாவுக்கு வந்தவுடனே ஸேவியர் மரித்துவிட்ட சங்கதி சுவாமிகளுக்கு ஸ்திரமாகத் தெரிந்துவிட்டது. ஸேவியருடைய மனைவியருக்குத் தாம் கூடிய சீக்கிரத்தில் மாயாவதிக்கு வருவதாகத் தந்தி யடித்து, சுவாமிகள் ஆறுதல் அளித்தார். "சுவாமிகள் மாயாவதிக்குப் புறப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னமேயே தயவு செய்து தெரிவிக்கவேண்டும்," என்று அங்கிருந்து பதில் வந்தது. ஏனெனில், அது மலைப்பிரதேசமாகையால், பிர

யான வசதிகள் கிடையா; கூலி வேலைக்காரர்களைப் பிடித்து அங்கிருந்து நான்குநாட் பயணத்திலுள்ள காத்கோடம் என்ற ஊருக்கு அனுப்பிவைக்க வேண்டும். ஆனால், சுவாமிகளுக்கு இந்தக் கஷ்ட மெல்லாம் தெரியாது. தாம் 27-ம் தேதி புறப்பட்டு 29-ம் தேதி காத்கோடம் வந்து விட்டார். டிசம்பர்மீ 25-ம் தேதி யன்று பிற்பகலில் மாயாவதியில் தந்தி கிடைத்தது. காத்கோடம் ரெயில் ஸ்டேஷனிலிருந்து மாயாவதி 65 மைல் தூரமாகையால், அன்றே கூலியாட்களை பிடித்து இரண்டு நாட்களுக்குள்ளே காத்கோடம் அனுப்பிவைப்பது அசாத்தியமாகத் தோன்றிற்று. ஆச்ரமத்திலே யுள்ளவர்களுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. 'சுவாமிகள் வரும்பொழுது காத்கோடத்திலே ஆட்கள் தயாரா யில்லாவிட்டால், எங்கே சுவாமிகள் அல்மோராவுக்குப் போய்விடுவாரோ' என்ற பயமும் உண்டாயிற்று. சுவாமிகள் 'மாயாவதியிலிருந்து இதற்குள்ளே ஆட்கள் வராவிட்டால் என்ன செய்வது?' என்று கருதி, தமது அல்மோரா நண்பருக்கும் காத்கோடத்திலே வந்திருக்கும்படி ஒரு தந்தி யடித்திருந்தார். அல்மோராவிலிருந்து லாலா கோவிந்தலால்ஸா என்பவர் வந்து காத்துக் கொண்டிருந்தார். ஆனால், மாயாவதியிலே எல்லோரும் ஏக்கமுற்றபொழுதிலும் சுவாமி விரஜாநந்தர் தைர்யத்தைக் கைவிடாதவராய்க் கூலியாட்களைப் பிடித்துக்கொண்டு, அவர்களை யூக்கி யுற்சாகப்படுத்திக்கொண்டே நடத்தி வந்து, டிசம்பர்மீ 28-ம் தேதி பகல் 12-மணிக்குக் காத்கோடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்.

சுவாமிகள் சுவாமி சிவானந்தருடனும் சுவாமி சதானந்தருடனும் டிசம்பர்மீ 20உ காலையிலே காத்கோடத்தில் வந்து இறங்கினர். சுவாமி விரஜாநந்தர் அதிக சாகசத்துடனே ஆட்களைச் சம்பாதித்து வந்ததைக் கேள்விப்பட்டு, "நீதான் எனக்கேற்றவன்!" என்று அவரை மெச்சினர். அல்மோராவிலிருந்து வந்திருந்தவர் சுவாமிகளை அல்மோராவுக்கு வற்புறுத்தி யழைத்தார்; ஆனல், சுவாமி விரஜாநந்தர் நேரே மாயாவதிக்கு வரும்படி சுவாமிகளை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே, சுவாமிகள் நேரே மாயாவதிக்கே புறப்பட்டார். காத்கோடத்திலிருந்து ஒரு நாள் தங்கிச் சிரம சாந்தி செய்துகொண்டு மறுநாள் காலையிலே எல்லோருமாகப் புறப்பட்டார்கள். விரஜாநந்தர் மிகவும் களைத்துப் போயிருக்கவேண்டுமென்று சுவாமிகள் அவரைக் குதிரைமீது ஏறி வரும்படி கூறினர். சுவாமி விரஜாநந்தர் சமையல் செய்வது, சுவாமிகளுக்குப் போஜன மளிப்பது முதலிய சிசுருஷை யெல்லாம் செய்தார். சுவாமி சதானந்தர் சுவாமிகளுடைய உடுப்புக்கள், சாமான்கள் முதலியவற்றை மேல் பார்த்துவந்தார். மத்தியானம் பீமஸ்தலம் என்னும் இடத்திலே தங்கிச் சமையல் செய்யப்பட்டது; மாலையிலே தாரி என்னு மிடத்துக்குச் சென்று அன்றிரவு பிரயாணிகளுக்கென்று ஏற்பட்ட பங்களாவிலே தங்கினார்கள்.

மறுநாள் மழை பெய்தது; பனி பெய்யும்போலத் தோன்றிற்று. ஆயினும், பொழுது விடிந்தவுடனே அங்

கிருந்து புறப்பட்டார்கள்; ஆகாயத்திலே கறுத்த மேகங்கள் பல சூழ்ந்திருந்தன. அன்று பதினைந்து மைல் போக வேண்டும். சுவாமி விரஜாநந்தருக்குக் கவலை மிகுந்துவிட்டது, 'பனி பெய்ய ஆரம்பித்துவிட்டா என்ன செய்வது?' என்று. இரண்டு மைல் தூரம் வந்தவுடனே, விடா மழை பெய்ய ஆரம்பித்தது; பனியும் மூடிக்கொண்டது; ஆங்காங்குப் பனிக்கட்டிகளும் தோன்றின. சுவாமிகளைத் தூளியிலே தூக்கிச் சென்றவர்களினுடைய கால்கள் அநேகம் தரம் நழுவின. சுவாமிகள் தம்மைத் தூக்கிச் செல்பவர்களுடனே வேடிக்கை விளையாட்டுக்கள் பேசி ஊக்கிக் கொண்டு போனார். அவர்களுள் ஒருவன் அநேக மனைவிகளை விவாகம் செய்துகொண்டு அத்தனை பேரையும் இழந்தவன்; அவனுக்குச் சண்டி என்னும் கவியினுடைய பாடல்களெல்லாம் தெரியுமென்று சிறிது கர்வமுண்டு. சுவாமிகள் அவனை அப் பாடல்களைப் பாடச் சொல்லி, அவனுடைய தப்பிதங்களை யெல்லாம் திருத்திக்கொடுப்பார். சுவாமிகள் அவனைப் பண்டிதர் என்று அழைக்க, அவனுக்கு அளவிலாச் சந்தோஷ முண்டாயிற்று. சுவாமிகள் அவனிடத்திலே வேடிக்கையாக "இன்னு மொரு கல்யாணம் செய்துகொள்வதுதானே" என்று கேட்க, அவன் "ஆமாம்! பெண்ணுக்குச் சீர் வைப்பதற்கு என்னிடம் பணம் இல்லையே. நான் என்ன செய்வேன்?" என்றான். சுவாமிகள் "நான் கொடுத்தால்—"என்றார். அவன் சந்தோஷம் மிகுந்து, தான் விவாகம் செய்துகொள்ளத் தயாரா யிருப்பதாகச் சொன்னான்.

பனியிலும் காற்றிலுமாக இவர்கள் சென்று மத்தியானம் 3 மணிக்குத் தாரியிலிருந்து ஏழரை மைல் தூரத்திலுள்ள பௌரபாணி என்னும் இடத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள். இங்கே கடையொன்று; யாத்திரிகர்கள் இங்குத் தங்கிச் சமையல் செய்து சாப்பிட்டுப் போவது வழக்கம். இங்கே சுவாமிகளைச் சுமந்து வந்தவர்கள் "தேயிலை சாப்பிட்டுவருதற்குச் சுவாமிகள் உத்தரவுகொடுக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்; சுவாமிகள் அவர்கள் மீது இரக்கமுற்று அப்படியே செய்துவரும்படி உத்தரவு கொடுக்க, அவர்கள் ஹுக்கா பிடிப்பதற்குச் சாவகாசமாக உட்கார்ந்துகொண்டார்கள். மணி 5 ஆய்விட்டது. அவர்கள் எழுந்திருப்பதைக் காணோம். அங்குத் தங்கிவிடலாமென்றாலோ அந்தக் கடையைத் தவிர வேறு இடம் கிடையாது. இடமோ வெகுநெருக்கம்; புகையடர்ந்தது. சுவாமிகளுக்குச் சிறு குழந்தைபோலக் கோபம் வந்துவிட்டது. பனி விழுமென்று தெரிந்திருந்தும் மூத்தவராயுள்ளவர்கள் யாத்திரையை நிறுத்தியிருக்கவேண்டுமென்றும், "சிறியவர் தாம் அல்மோராவுக்குப் போக விருந்ததைத் தடுத்திருக்கக் கூடாதென்றும் கூறிக் கோபித்துக்கொண்டார். அப்பொழுது ஒருவரும் மறு வார்த்தை பேசவில்லை. சிறிது நேரம் கழித்துச் சுவாமிகள் சாந்தஸ்வரூபமடைந்தார்.

அப்பொழுது சுவாமி விரஜாநந்தர் சமயம் பார்த்துத் தன்மீது எக்குற்றமுமில்லையென்றும், கூலியாட்களைத்

தேயிலை சாப்பிட அநுமதி கொடுத்தது சுவாமிகளுடைய தப்பிதமே யென்றும், அவர்களுக்கு அவ் வநுமதி கொடுக்காமலிருந்தால் எப்படியாவது அன்று மாலை மௌர்னுலா போய்ச் சேர்ந்திருக்கலா மென்றும் மிக மரியாதையுடனே மொழிந்தார்.

சுவாமிகள் அவரை நோக்கி, "நான் சொன்னதை மறந்துவிடு. பிதா புத்திரனைக் கோபித்துக்கொள்கிற தில்லையா?" என்று சொல்லிவிட்டு, தமது முதுகைக் கொஞ்சம் பிடித்துவிடும்படி சுவாமி விரஜாநந்தருக்கு ஆக்ஞாபித்தார். சுவாமி விரஜாநந்தர் சுவாமிகளிடத்திலே "19-வது நூற்றாண்டு கழிந்து 20-வது நூற்றாண்டு பிறக்கும் இன்றிரவு தாங்களும் தங்களுடைய சிஷ்யர்களும் இந்த நிலைமையிலிருப்பது நன்றாயிருக்கின்றது" என்றார். சுவாமிகள் புந்நகை புரிந்தார்.

கொஞ்சத் தூரம் செல்லவே, சுவாமி சதாநந்தரும் லாலா கோவிந்தலால்ஸாவும் காணவில்லை; அவர்கள் முன்னதாகவே போய்விட்டார்கள். அவர்கள் இதற்குள் சத்திரத்துக்குப் போயிருப்பார்கள் என்று சொல்லியும் சுவாமிகளுடைய மனம் சமாதான மடையவில்லை. உடனே ஒரு ஆளைப் பிடித்து ஓடிப்போய்ப் பார்த்து வரும்படி நிரம்பக் கூலி கொடுத்து அந்த ஆள் திரும்பி வந்து சமாச்சாரம் சொல்லும் வரையில் சுவாமிகளுடைய மனம் சந்தோஷ மடையவில்லை.

அன்றிரவு சப்பாத்திகள் என்று சொல்லப் பட்டரொட்டிகள் சுவாமிகளுக்கு ஆகாரத்துக்குக் கொடுக் கப்பட்டன; உருளைக்கிழங்குக் கறி செய்யப்பட்டிருந்தது. இவை பற்களைப் பந்தயத்துக்கு இழுப்பன போன்று அவ் வளவு முரடாயிருந்தன. அன்றிரவு சுவாமிகளுக்கும் மற்ற வர்களுக்கும் நித்திரையே கிடையாது.

மறுநாட் காலையிலே பனி பன்னிரண்டங்குலம் பெய் திருந்தது. கூலியாட்கள் வேகமாக நடந்தார்கள். விரஜாநந் தர் ஓடிக்கொண்டே வந்தார். சுவாமிகள் சத்திரத்திற்கு வந்து சேர்ந்து சுவாமி சதாநந்தரையும் லாலா கோவிந்த லால்ஸாவையும் கண்டு களித்தார். இன்று சமையல் நன் ருகச் செய்யப்பட்டது. அன்று அங்குத் தங்கினார்கள்.

1901-ம் வருஷம் ஜனவரிமீ இண்டாம் தேதி காலை யில் புறப்பட்டு, சுவாமிகளுடையவும் மற்றவர்களுடைய வும் 21 - மைல் தூரயாத்திரையானது சந்தோஷகரமா யிருந்தது. சுவாமிகள் கொஞ்சத் தூரம் நடந்தார்; பெரு மூச்சு விட்டு மிகக் களைத்துவிட்டார். ஒரு கையிலே சுவாமிகள் தடியை ஊன்றிக்கொண்டு மறுபுறத்திலே சுவாமி விரஜாநந்தருடைய தோள்களின்மீது சாய்ந்து கொண்டார். "நான் எவ்வளவு பலஹீனனையும் விருத்தாப் பியனையும் ஆய்விட்டேன், பார்த்தையா? கொஞ்சத் தூரம் நடந்தது மிக கஷ்டமாக இருக்கிறது; முன்னாட்களிலே மலைகளிலே 20, 25 மைல்கள் நடந்தாலும் எனக்கு ஒன் றும் தோன்றாது" என்றார்.

சுவாமி விரஜாநந்தருக்கு மனம் கலங்கிற்று. சுவாமிகள் உடனே "புத்திரா! எனக்கு அந்திய காலம் சமீபிக்கிறது" என்றார்.

மறுநாள் சுவாமிகள் மாயாவதியில் வந்து சேர்ந்தார்; வெகு தூரத்திலிருந்தே ஆச்ரமத்தைப் பார்த்து ஆநந்தித்தார்; கீழேயுள்ள நதியண்டை வருகையில், மடத்திலே மணி பன்னிரண்டு அடிக்கும் சத்தம் கேட்டது. ஆச்ரமத்துக்கு வேகமாகச் செல்ல ஆத்திரம் மிகுந்தவராய், குதிரை பொன்றின்மீது ஏறி, வேகமாகச் சென்றார். சுவாமிகளை வரவேற்பதற்காக, ஆச்ரமம் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

சுவாமிகள் மாயாவதியி லிருந்தகாலத்தில் கொடூரமாகப் பனி பெய்துகொண்டிருந்ததினால் சுவாமிகள் நீண்ட தூரம் உலாவிவர முடியாமற் போய்விட்டது. சுவாமிகள் மாயாவதியிலே 18-ம் தேதி வரையி லிருந்தார். ஆறும் தேதியன்று சம்பாவத்திலிருந்து அநேகர் சுவாமிகளைப் பார்க்க வந்தார்கள்; பதினோராம் தேதியன்று தாசில்தாரும் மற்றவர்களும் வந்து தரிசித்தார்கள். ஜனவரிமீ 13-ம் தேதி சுவாமிகளுடைய ஜனனதினம்; அப்பொழுது அன்று அவருக்கு வயது 38.

சுவாமிகள் மாயாவதியிலிருந்து லாலாபத்ரிஸா என்ற நண்பர் சுவாமிகளை அல்மோராவுக்கு வரும்படி எழுதிக் கேட்டுக்கொண்டார். ஆனால், சுவாமிகள் அவரை இங்கே வரும்படி எழுதிவிட்டார். அப்படியே ஜனவரிமீ 10-ம்

தேதி லாலாபத்ரிஸா தமது சகோதரர் லாலா மோஹன லால்ஸா என்பவரையும் கூட்டிக்கொண்டு மாயாவதிக்கு வந்து சேர்ந்தார்.

அவ் வாச்ரமம் அத்வைத ஆச்ரமம். ஆனால், குரு பூஜையறை யென்று ஒரு அறை பிரத்தியேகமாக விடப் பட்டிருந்தது; அதிலே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பட மொன்று வைக்கப்பட்டு, புஷ்பதூபதீப நைவேத்தியங்க ளாலே தினந்தோறும் பூஜிக்கப்பட்டு வந்தது. ஒரு நாள் காலையிலே சுவாமிகளுக்கு இது தெரியவந்தது. அப் பொழுது ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அன்று மாலை யில் எல்லோரும் கூடியபொழுது, ஸ்வாமிகள் அது அத் வைத ஆச்ரமமாயிருக்க, அதிலே குருபூஜைக்கு இடமில்லை யென்று மிகவும் கடூரமாகக் கண்டித்தார். ஆயினும், அந் தப் படத்தை அங்கிருந்து எடுத்துவிடும்படி ஆக்ஞாபிக்க வில்லை. சுவாமி ஸ்வரூபாநந்தரும் ஸேவியருடைய மனைவிய ரும் சுவாமிகள் கூறியது உண்மையே யென்று ஒப்புக் கொண்டார்கள். குருபூஜை நின்றுவிட்டது. சுவாமிகள் பின்னர் வேலூர் மடத்துக்குத் திரும்பிவந்த பிற்பாடு ஒரு சமயத்திலே "ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பகிரங்க பூஜை நடவாமல் ஒரு இடமாவது இருக்கட்டு மென்று நினைத் தேன். ஆனால், அங்குச் சென்று பார்க்க, கிழவர் முன்ன ரேயே அங்கு உட்கார்ந்துவிட்டதைக் கண்டேன்." என் றார். சுவாமிகள் மாயாவதியிலே சும்மாயிருக்கவில்லை. அநேக வியாசங்கள் எழுதினார்.

சுவாமிகள் மாயாவதியிலிருந்து புறப்படக் கருதினர்; பனியிலே பிரயாணம் செய்வதற்குக் கூலியாட்கள் கிடைப்பது கஷ்டமாய்விட்டது. சுவாமிகள் புறப்படுவதற்கு முந்திய தினம், "கூலியாட்கள் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?" என்று சுவாமிகள் கூறினர்.

ஸ்வாமி விரஜாநந்தர் "சுவாமி! நாங்கள் தூக்கிக் கொண்டு போகிறோம்" என்றார்.

சுவாமிகள் பரிகாசமாக "ஓ! என்னை ஆற்றிலே சேற்றிலே அமிழ்த்திவிடுதற்கு யோசனை பண்ணிவிட்டாற்போலிருக்கிறது" என்றார். இப்பொழுது, "வந்த வழியே போகாமல் வேறு வழியே போவது" என்று தீர்மானிக்கப்பட்டது.

பிரயாண நிர்வாகமெல்லாம் சுவாமி விரஜாநந்தர் வசம் ஒப்புவிக்கப்பட்டு விட்டது. சுவாமிகளும் மற்றவர்களும் புறப்பட்டு வழியே பல கஷ்டங்கள் அநுபவித்துக்கொண்டு பிலிபிட் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். அவ்வூர் டிப்டி கலெக்டராகிய பண்டிதர் பவானி தத்ஜோஷி யென்பவர் சுவாமிகளை ரெயில் ஸ்டேஷனிலேயே வரவேற்று அழைத்துக்கொண்டு போனர். ஊனுண்பதைப்பற்றிச் சம்பாஷணையிடையே ஒரு தர்க்கம் ஆரம்பித்தது. "பண்டிதர் ஊனுண்ணல் கூடாது," என்று வாதித்தார். சுவாமிகள் வேதங்களிலிருந்தும் ஸம்ஹிதைகளிலிருந்தும் ஊன் உண்ணலாமென்பதற்கு ஆதாரங்கள் எடுத்துக் காட்டி வாதித்தார்,

மாலை மணி நான்கு ஆய்விட்டது. ரெயில் புறப்படுவதற்கு அரைமணிநேரம்தான் இருக்கையிலே ஸ்வாமி சதாநந்தரும் லாலா கோவிந்தலாவும் பூரிமுதலிய மிட்டாய் வர்க்கங்கள் வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் பண்டிதருடனே செய்துகொண்டிருந்த தர்க்கத்திலே ஆகார நினைப்பே உண்டாகவில்லை. பின்னர் அவசரம் அவசரமாகச் சுவாமிகள் அவர்கள் கொண்டுவந்ததையுண்டார்

சுவாமிகளும் சுவாமி சதாநந்தரும் இரண்டாவது வகுப்பு டிக்கட்டு வாங்கிக்கொண்டு ஒரு இரண்டாவது வகுப்பு வண்டியிலே ஏறினார்கள். அதிலே ஒரு ஆங்கிலேயன், சைந்நிய அதிகாரி உட்கார்ந்திருந்தான். இவ்விருவரும் உள்ளே நுழையவே, அவனுக்குச் சுதேசிகளுடனே ஒரே வண்டியில் யாத்திரை போவது பிடிக்கவில்லை போலும்! சுவாமிகளை வழி யனுப்ப வெகு ஜனங்கள் வந்திருப்பதைப் பார்த்து அந்த ஆங்கிலேயன் இவர்களிடத்திலே ஒன்றும் பேசாமல், ஸ்டேஸன் மாஸ்டரிடம் சென்று இவர்களைக் கீழே யிறக்கிவிடும்படி சொல்ல, ஸ்டேஷன் மாஸ்டர் அப்படியே வந்து சுவாமிகளை வேறு வண்டியில் போய் உட்காரும்படி வேண்டிக்கொண்டார்.

சுவாமிகள் கோபம் மிகுந்தவராய், "என்ன சொன்னாய்? உனக்கு வெட்க மில்லையா?" என்று கர்ஜித்தார்.

ஸ்டேஷன் மாஸ்டர் ஓடியே போய்விட்டார்.

அவ்வாங்கிலேயன், 'வண்டி காலியாய்விட்டது,' என்று நினைத்து, சந்தோஷத்துடனே வந்து பார்த்தான்; இவ்விருவரும் அங்கிருந்து அசையவில்லை. அவன் "ஸ்டேஷன் மாஸ்டர்! ஸ்டேஷன் மாஸ்டர்! என்று கூவிக் கூவிப் பார்த்தான்; வண்டி புறப்படும் சமயமாய்விட்டது. ஆங்கிலேயன் தனது சாமான்களை யெடுத்துக்கொண்டு வேறொரு வண்டியில் புகுந்துகொண்டான்.

66-வது அத்தியாயம்

பிரஹ்மபுத்ரா நதி ஸ்நாநம்

ஸ்வாமிகள் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு மாயாவதிக்குச் சென்று நெடுநாள் அங்கு இருந்துவிட்டார். இங்கே கல்கத்தா வேலூர் மடத்திலே யிருந்த அவருடைய சகோதர சந்யாசிகளும், சாதுக்களும், சிஷ்யர்களும் 'கன்றிழந்த பசுப்போலச்' சுவாமிகளின் பிரிவாற்றாமையினால் வருந்திக்கொண்டிருந்தார்கள்; சுவாமிகள் கல்கத்தாவுக்குச் சீக்கிரம் வந்து தங்களுக்குத் தரிசனம் கொடுக்குமாறு கடிதத்தின்மேல் கடிதமாக அநேக கடிதங்கள் எழுதிக்கொண்டே யிருந்தார்கள்.

மாயாவதியில் மலைக்காட்சிகளிலே மனம் ரமித்து மகத்திலே லயித்திருந்த ஸ்வாமிகள் அவதார புருஷராகையால், கல்கத்தாவிலே யுள்ள சகோதர சந்யாசிக

ளுடையவும் - சாதுக்களுடையவும்-சிஷ்யர்களுடையவும் - மற்று முள்ளோருடையவும் கடிதங்கட்கு இணங்கியும், உலகோபகாரார்த்தமாகத் தாம் செய்யவேண்டிய காரியங் கள் இன்னும் கொஞ்சம் இருக்கின்றனவென்று நினைத் தும், 1901-ம் வருஷம் ஜனவரிமீ 24-ம் தேதி யன்று கல்கத்தாவுக்குத் திரும்பி வந்தார்.

வேலூர் மடத்திலே யிருந்த ஜனங்கள் அடைந்த சந் தோஷத்தை யென்னென்றுசொல்வது! அங்கிருந்தசாதுக் களும் சிஷ்யர்களும் தாங்கள் பிரஹ்மாநந்தமடைந்தவர்கள் போல முகமலர்ச்சியுடனே குறுநகை புரிந்துகொண்டு சுவாமிகளை வந்து சூழ்ந்துகொண்டார்கள். சகோதர சந் யாசிகளின் யோக க்ஷேமத்தைப்பற்றியும் மாயாவதியிலு ள்ள அத்வைதாச்ரமத்தைப்பற்றியும் விசாரித்தனர். சுவா மிகளுடைய சிஷ்யர்கள் சுவாமிகளுடைய மறுமொழிகளைக் கேட்டு ஆநந்தித்து, இடையிடையே தாங்களும் சில கேள்விகள் கேட்டனர் சில சிஷ்யர்கள் சுவாமிகளுக்கு விசிறிகொண்டு விசிறினர்; சிலர் கைகட்டி வாய் பொத்திக் கொண்டு வெகு விநயமாக இருந்தனர்.

இங்ஙனம் சகோதர சந்யாசிகளாலும் சிஷ்யர்களாலும் சூழப்பட்ட சுவாமிகள் தாம் அவர்களிடமிருந்து பிரிந்தது முதல் தாம் திரும்பி வந்தது வரையில் தாம் பார்த்ததை யும், கேட்டதையும், நினைத்ததையும் ஆகிய எல்லாவற்றை யும் கதைகதையாகச் சொல்ல, அனைவரும் கேட்டு ஆநந்தக் கடலில் ஆழ்ந்தினார்கள்.

சின்னாட்களாகச் சுவாமிகள் மாயாவதியிலே யுள்ள அத்வைதாச்ரமத்தைப்பற்றியும், அதற்குக் காரணபூதரான ஸேவியர் என்னும் ஆங்கிலேயருடைய மனைவியின் நற்குணங்களைப்பற்றியும், அங்குள்ள தமது சந்நியாசச் சிஷ்யர்களுடைய உயர் ஒழுக்கங்களைப்பற்றியுமே பேசினார். "ஆ! ஆ! ஹிமோத்கிரிதானே இந்தியர்களாகிய நம்முடைய ஆசைகட்கெல்லாம் இருப்பிடமாக வுடையது. இப்பர்வதத்திலிருந்தல்லவா உலகைப்புநிதப்படுத்தியுள்ள பரிசுத்த நினைப்புக்கள் பல வெளிச் சென்றிருக்கின்றன? ஆகையால்தான் மாயாவதியினிடத்து எனக்கு ஒரு பிரத்தியேக பிரியம். இன்னும், கீழே யிங்கேயுள்ள இரைச்சலும் சரிதமும் குழப்பமும் அங்கே யில்லை. அங்கே யெல்லாம் மௌனம், ஏகமௌனம்; சாந்திః சாந்திః சாந்திః இன்னும் அவ்விடத்திலே ஆச்ரம மியற்றுவதற்கு வேண்டிய பொருள் உதவிபுரிந்த ஸேவியர் இவ்வளவு சீக்கிரத்தில் எமனுலகு சேர்வரென்று எவரேனும் கனவிலாவது கருதியதுண்டா? ஆ! ஆ! அவருடைய மனைவியாருடைய பெருங்குணங்கள்தான் என்ன! ஆங்கு இப்பொழுதிருக்கும் சந்யாசிகளுக்கு அவர் ஒரு மாதாபோலப் பராமரித்து வருவதைப் பார்த்தால் என் மனமானது குதூகலிக்கிறது. ஈரேழு பதினான்கு உலகங்களையும் லக்ஷியம் செய்யாது, திரிமூர்த்திகளையும் கூடச் சிரச்சேதம் செய்து, எல்லாவற்றுக்கும் சிரேஷ்டமான ஏகஸ்தானத்திலே யிருந்து கொண்டு அத்வைத சிம்ஹங்களாய் விளங்குகின்ற சந்யாசிகளைப் பார்த்தால், ஆதி காலத்தில் ஸ்ரீ சங்கரருடைய சிஷ்

யர்களுடைய ஞாபகம் வருகின்றது. இம்மாதிரி ஆச்ரமங்கள் நமது இந்தியா தேசம் முழுதும் எப்பொழுது பரவுமோ?'' இம்மாதிரியாகச் சுவாமிகள் மாயாவதியிலுள்ள அத்வைதாச்ரமத்தைப்பற்றிப் புகழ்வதும் சந்தோஷிப்பதுமாகவே யிருந்தார்.

ஸ்வாமிகள் கல்கத்தாவிலே யிருந்தபொழுது குழந்தையினது போன்ற குணங்களுடனே விளங்கிய காலங்களிலே தாம் மற்றவர்களைக் கோபித்துக்கொண்டது, கண்டித்தது முதலியவற்றையெல்லாம் மறந்துவிட்டார்; இப்பொழுது அவர்களை மிகுந்த அன்புடனும் பக்ஷத்துடனும் பார்த்தார்; புதிய சிஷ்யர்களுக்கு அவர்களைத் தங்கல மறுப்புக்கும் பக்திக்கும் ஸேவைக்கும் ஒருமாதிரியாகக் காட்டினர். முக்கியமாக, ஸ்வாமிகள் தாம் மாயாவதிக்குச் சென்றபொழுது, ஸ்வாமி விரஜாநந்தர் காண்பித்த சாமர்த்தியத்தையும் மன அமைதியையும் அடிக்கடி புகழ்ந்து கூறினர். சுவாமி விரஜாநந்தருடைய யாண்டும் சலியாத குருபக்தியை மெச்சி மெச்சிப் பேசினர்; பௌர்ஹபாணியென்னும் ஸ்தலத்திலே தாம் அடைந்த அசௌகர்யங்களையும் கஷ்டங்களையும் நினைத்து, அவற்றைப்பற்றி மிக விநோதார்த்தமாகச் சம்பாஷித்துச் சந்தோஷிப்பார். அவர் பேசியபொழுதெல்லாம் ஹிமோத்கிரியை வர்ணித்துப் புகழாமலிருப்பதில்லை.

"ஆ! ஆ! என்ன காக்ஷி! என்ன மனோரம்யம்! என்ன தண்மை! என்ன தண்மை! ஹிமோத்கிரி வனாந்திரங்களி

லேதான் உபசாந்தி யுளது. அந்திபகாலத்துக்கு அமைந்த இடம் அதுவே. அங்கிருந்துகொண்டு, உலகவியாபாரங் களினின்றும் அறவே யொழிந்து, எனது அநுபவங்களை யும் அபிப்பிராயங்களையும் புத்தக ரூபத்தில் வெளியிட வேண்டுமென்றிருக்கிறேன். ஹிமோத்கிரி உலகி லுயர்ந்த பர்வதமா யிருப்பதுமட்டு மன்று; ஒளியி லுயர்ந்த மஹாத் மாக்களும் வசிப்பதற்கு ஏற்ற இடமாயிருக்கிறது. அங்குதா னன்றோ ஸ்ரீ வேதவியாசர் இன்றும் இருப்பதாகக் கூறப் படுகிறது? அதனல்தானே சாக்ஷாத் பரமசிவனும் அங்கு எழுந்தருளியிருக்கிறது. அங்குதானே அழகுக்கு அழகு செய்யும் அம்பிகை பார்வதி யிருக்கிருள். ஆ! என் மனம் ஹிமோத்கிரியின் வசமாய்விட்டது. அங்குதான் நான் இனிமேல் அதிகமாக வசிக்க நேரிடும். இவ்வளவு சீக்கிரத் திலே நான் அதை விட்டு நீங்கி வந்துவிட்டேனே.''

இஃமாதிரி ஸ்வாமிகள் ஹிமோத்கிரி வாசத்தைப் புகழ்வதும் தாம் அதனின்றும் நீங்கி வந்துவிட்டதுபற்றி வருந்துவதுமாகக் காலம் கழித்துவந்தார். ஸ்வாமிகள் மாயாவதிக்குச் செல்லும் முன் கல்கத்தா வேலூர் மடத் தில் 18 நாட்களே யிருந்தார்; ஆபினும், தாம் மேல் நாடுக ளில் சஞ்சரித்துக்கொண்டிருந்தபொழுது மடத்திலே அநேக அபிவிருத்திகள் நடந்துவந்தனபற்றிக் களிகூர்ந் தார். சுவாமிகள் மேல்நாடுகளில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபொழுது அநேக விதமான பாடங்கள் நடந் தேறின. 'சரீராப்பியாசம் அவசியம்' எனக் கருதி, மடத்

திலே அது அநுஷ்டானத்தில் கொண்டுவரப்பட்டது. நியம நிஷ்டைகளுக்கெல்லாம் நேரங்கள் குறிக்கப்பட்டு, சரிவர நடந்துவந்தன.

நைஷ்டிகப் பிரஹ்மச்சாரிகளாக அநேகர் புதிதாக மடத்திலே சேர்ந்திருந்தார்கள்; ஸ்வாமிகளுடைய சிஷ்யர்களும் சகோதர சந்யாசிகளும் எப்பொழுதும் சாஸ்திர படனம் செய்வது, பிறருக்கு உபதேசிப்பது, புதிதாக மடத்திலே வந்து சேர்ந்தவர்களை அநுஷ்டானங்களில் பயிற்றுவிப்பது, இன்னும் பலவித திருத்தொண்டு புரிவது முதலிய மார்க்கங்களில் தங்கள் நேரத்தை வெகு உற்சாகத்துடன் கழித்துவந்தார்கள். மடாதிபதியாகிய ஸ்வாமிகள் இல்லையேயென்ற காரணத்தினால், மடம் சோம்பர் அடைந்துவிடவில்லை; மற்றவர்கள் உறங்கத் தொடங்கிவிடவில்லை. ஸ்வாமிகள் இருந்தால் அநுஷ்டானம் எவ்வளவு கடூரமாய் நடக்குமோ அவ்வளவு கடூரமாக—இன்னுஞ் சொன்னால் அதிக கடூரமாக—நடந்தேறிவந்தன. ஸ்ரீராமகிருஷ்ணருடைய சக்தியல்லவா மேலோங்கியிருக்கிறது? அப்படியிருக்க அவர்கள் சும்மாவிருக்க முடியுமா?

இப்பொழுது சுவாமிகள் மாயாவதியிலிருந்து கல்கத்தாவுக்குத் தமது சிஷ்யர்களுக்கும் நண்பர்களுக்கும் மத்தியில் வந்துவிட்டாரே; கொஞ்சம் ஒய்வு எடுத்துக்கொள்ளக் கூடாதா? கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளக் கூடாதா? அவனியை உய்விக்க வந்த அவதார புருஷராகிய அவருக்குச் சிரமம் ஏது? பரிகாரம் ஏது? அவருடைய மன

மானது பெரிய பெரிய ஆலோசனைகள் செய்துகொண்டிருந்தன; நமது தாய் நாடாகிய இவ்விந்தியா மேம்பாடு அடைதற்குரிய வழிகளை ஆலோசிக்கத் தொடங்கினர்; பற்பல எண்ணங்கள் உதித்தன; அநேக தீர்மானங்கள் செய்து கொண்டார்; தமது சகோதர சந்யாசிகளுடனே அவற்றை வெளியிட்டுக் கலந்து தெளிவித்துக்கொண்டார். இங்ஙனம் ஏழு வாரங்கள் சென்றன.

இதற்குள்ளாக, "கீழ் வங்காளத்துக்கும் டாக்கா நகருக்கும் சுவாமிகள் வந்து போகவேண்டும்," என்று அநேக கடிதங்கள் சுவாமிகளுக்கு வந்து சேர்ந்தன. இது மாத்திரமன்று; சுவாமிகளுடைய தாயார் "கீழ் வங்காளத்திலும் அஸ்ஸாம் நாட்டிலும் உள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகவேண்டும்" என்ற விருப்பம் தமக்கு இருக்கிறதென்று சுவாமிகளிடம் தெரிவித்தார். தவிர, ஸ்வாமிகளுக்குச் சரீரமும் அசௌக்கிய மடைந்து பலஹீனப்பட்டு வந்தது. வெளிப்பார்வைக்குச் சுவாமிகள் ஆரோக்கிய திடகாத்திர முள்ளவர்போலக் காணப்பட்ட போதிலும், அவருடைய சரீரமானது எவ்வளவு வேகமாகத் தளர்ச்சி யடைந்து வந்தது என்பது அவரைச் சுற்றி நெருங்கி யிருந்தவர்களுக்குத்தான் தெரியும். ராக்ஷஸ வேலை செய்துகொண்டிருந்த சுவாமிகள் தம்முடைய அப்பொழுதிய சரீர நிலைமையில் பெரும் வேலை ஒன்றும் செய்ய முடியா தென்பதையும், மனத்தை ஏகாக்கிரத்தில் நிலைத்து வைப்பது சிரம மென்பதையும் உணர்ந்துகொண்

டார். இதனால் சுவாமிகளுக்கே 'சிறிது யாத்திரை சென்று வந்தால் நல்லது,' என்று தோன்றிற்று. ஆகையினால், சுவாமிகள் கல்கத்தாவி லிருந்தபொழுதெல்லாம், அவர் மடத்திலேயே யிருப்பார், அல்லது கல்கத்தா நகரத்து பாக்பஸார் பிரதேசத்திலே யிருந்த பலராமருடைய கிருகத்திலே காலம் கழிப்பார். இக்காலத்தில் சுவாமிகள் செய்து வந்ததெல்லாம் தம்மை நெருங்கிச் சூழ்ந்த ஜனங்களுக்கு இகபரசுக சாதனமான விஷயங்களைப் போதிப்பதும், சிஷ்யர்களை அநுஷ்டான முறைகளிலே பயிற்றுவிப்பதுமேயாம்; இல்லையேல், மூளைக்கு அதிக வேலை கொடுக்காத சாதாரண புத்தகங்களை அல்லது பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருத்தல், அல்லது உலகின் நாலாபாகங்களிலிருந்தும் தினந்தோறும் வந்து குவிந்துகொண்டிருந்த கடிதங்களுக்கு மறுமொழி எழுதியனுப்புதல், ஆகிய இவையேயாம்.

ஆகையால், சுவாமிகள் கீழ் வங்காளத்திலும் அஸ்ஸாம் நாட்டிலுமுள்ள ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கென்றும், அப்படியே டாக்காமுதலிய நகரங்களிலிருந்து வந்த அழைப்புக் கடிதங்களைக் கௌரவித்து அங்குச் செல்வதற்கென்றுமாகக் கருதி, மார்ச்சு மீ 18-ம் தேதி தமது சந்யாசிச் சிஷ்யர்கள் அநேகரை யிட்டுக்கொண்டு சுவாமிகள் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டார். ஜகமெங்கும் பிரக்யாதி பெற்ற விவேகாநந்த சுவாமிகள் யாத்திரை புறப்படுவதென்றால், எத்தனை பேர் கூடப் புறப்படுவார்கள்? நாமே

ஹகித்துக் கொள்ளலாம். சந்யாசிகளும் ப்ரஹ்மச்சாரிகளும், சில கிருகஸ்தர்களும் கூடப் புறப்பட்டார்கள். சுவாமிகள் மறுநாள் டாக்கா நகர் வந்து சேர்ந்தார். கோலண்டாவிலிருந்து கப்பலானது புறப்பட்டு நாராயண கஞ்ஜ் வந்து சேர்ந்தபொழுது, சுவாமிகளைத் தகுந்தபடி வரவேற்பதற்காக டாக்கா நகரிலிருந்து அந் நகரில் பெயர் பெற்ற வக்கிலான ஈச்வரச் சந்திர கோஷ் என்பவரும், ககனச் சந்திர கோஷ் என்பவரும் காத்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் டாக்கா நகர் வாசிகளின் பிரதிநிதிகளாக நின்று சுவாமிகளைக் கண்டு உபசரித்த பின்னர், அங்கிருந்து சுவாமிகளும் மற்றவர்களும் டாக்கா நகர் செல்வதற்கு ரெயில் வண்டியில் ஏறினார்கள். ரெயில் வண்டி டாக்கா நகர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது.

ஸ்டேஷனுக்கு வெளியே ஒரே பெருங் கூட்டம்! மனுஷ்ய சமுத்திரம். எங்குப் பார்த்தாலும் "ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஜே!" என்ற சப்தம் ஒலித்தது; "விவேகாநந்த சுவாமிக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே!" என்ற சப்தங்கள் ஒலியும் எதிரொலியுமாக எங்கும் கோஷித்தன. அந்நகர்ப் பிரமுகர்களெல்லோரும் ஸ்டேஷன் 'ப்ளாட்பார'த்தில் வந்து கூடியிருந்தார்கள்.

சுவாமிகள் ரெயில் வண்டியிலிருந்து கீழே யிறங்கியவுடனே, சுவாமிகளுடைய கழுத்திலே அழகியதொரு புஷ்பமாலை போடப்பட்டது; கையிலே செண்டுகள் கொடுக்கப்பட்டன. பின்னர், ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்த

தும், இரட்டைக் குதிரை பூட்டிய அழகிய தொரு வண்டி நின்றுகொண்டிருந்தது. சுவாமிகள் அதில் ஏறவே, அவ் வண்டி ஆயிரக்கணக்கான ஜனங்களால் சூழப்பட்டு அங் கிருந்து புறப்பட்டது. அந்நகர்க் கல்லூரிகளிலும் பள்ளிக் கூடங்களிலும் படிக்கும் மாணவர்கள் அனைவரும் அப்படி யே வந்து கூடிவிட்டார்கள். சுவாமிகளுடைய வண்டி சிறிது வேகமாகச் செலுத்த வேண்டியதாயிற்று; இம் மாணவர்கள் குதிரைகட்குச் சமானமாக, தாங்களும் வண்டியை விடாது பின் தொடர்ந்து ஓடி, கூடவே சென் றார்கள். சுவாமிகளுடைய வண்டி அந் நகரின் பிரதான மான தெருக்களினூடே யெல்லாம் சென்றதாதலால், வண்டியைச் சூழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான ஜனங்களை யும் மாணவர்களையும் தவிர, இன்னும் எண்ணற்ற ஜனங் கள், ஆண்பாலரும் பெண்பாலரும், குழந்தைகளும் விருத் தாப்பியர்களும்: தெருக்களிலும், திண்ணைகளிலும், மேல் மாடிகளிலும், ஜன்னல்களின் மூலமாயும் சுவாமிகளைத் தரிசித்து ஆநந்தித்தார்கள்.

சுவாமிகளுக்கு அந்நகரில் ஒருபெரிய ஜமீந்தாராகிய பாபுமோகினி மோகனதாசர் என்பவருடைய அரண்மனை ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. "சுவாமிகள் இங்கேதான் வந்து தங்கப்போகிறார்" என்று கேள்விப்பட்டுத் திரளான ஜனங்கள் அங்கு முன்னமேயே வந்து கூடியிருந்தார்கள். சுவாமிகளுடைய வண்டி இவ்வரண்மனை வாசலுக்கு வந்த தும், "ஹரஹர! மஹாதேவ!, ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஜே!

விவேகாநந்த சுவாமிக்கு ஜே!'' என்ற சப்தங்கள் ஆகாயத்தைப் பிளந்துகொண்டு அதிர்ச்சி செய்தன.

இப்பொழுது புத்தாஷ்டமி யுற்சவ சமயம். ஆதலால், புத்தாஷ்டமி தினத்தன்று பிரஹ்மபுத்ராநதியில் ஸ்நாநம் செய்யவேண்டு மென்ற சுவாமிகட்கு ஒரு நினைப்பு உண்டாய்விட்டது. சுவாமிகள் நாராயண கஞ்ஜில் என்று கப்பலில் வந்து இறங்கினாரோ அன்றைக்கே தமது தாயாரும் தாயாருடைய உற்றார்களும் அங்கு வந்து சேரும்படி ஏற்பாடு செய்து தமது சந்யாசிச் சிஷ்யர்களுள் மூவரை அவர்களை யிட்டுக்கொண்டு வரும்படி யனுப்பியிருந்தார். இவ்விதமாகச் சுவாமிகள் ஏற்பாடு செய்திருந்தபடி, அவர்கள் மார்ச்சுமீ 25-ம் தேதியன்று நாராயண கஞ்ஜில் கப்பலில் வந்திறங்கினார்கள். சுவாமிகள் அன்றிரவு முழுதும் சீதாலக்ஷம் என்ற நதியில் ஒரு பெரிய படகில் கழித்தார். மறுநாள் விடிந்ததும், இன்னும் பெரியதொரு படகில் சுவாமிகளும் அவருடைய மாதாவும் எல்லோருமாகச் சேர்ந்து ஏறிக்கொண்டு லங்கல்பண்டு க்ஷேத்திரத்துக்குப் புறப்பட்டார்கள். சீதாலக்ஷ நதியானது தாளேச்வர நதியில் போய்ச் சேருகிறது; தாளேச்வர நதியானது பிரஹ்மபுத்திரா நதியில் போய் விழுந்துவிடுகிறது. லங்கல்பண்ட் க்ஷேத்திரமானது பரசுராம க்ஷேத்திரமென பாரம்பரா ஐதிகம் கூறுகிறது. நமது பாரத வருஷத்தில் புண்ணிய காலங்களில் லக்ஷக்கணக்கான ஜனங்களை ஸ்நாநத்துக் கழைக்கும் க்ஷேத்திரங்களுள் ஒன்று இது.

புண்ணிய தீர்த்த ஸ்நாநம் செய்வதற்கென்று ஜனங்கள் புறப்படுவது நமது தேசம் ஒன்றிலேதான். இதர நாடுகளிலே வேடிக்கை பார்ப்பதற்கும், கொள்ளையடிப்பதற்கும், வியாபாரம் செய்வதற்குமாகத்தான், சுருக்கமாக இவ்வுலக போகங்களை நல்வழியிலோ, தீயவழியிலோ சம்பாதிப்பதற்காகத்தான், ஜனங்கள் பந்து மித்திரர்களை விட்டுப் பிரிந்து ஊர் சுற்றப் புறப்படுவார்கள். ஆனால், நமது தேசத்திலே மாத்திரந்தான், இருபதாவது நூற்றாண்டின் நாகரிகம் இருக்கவொட்டாமல் எல்லோரையும் அல்லோலகல்லோலப் படுத்திக்கொண்டிருக்கும் இக்காலத்தில் கூட, இகலோக எண்ணங்களை யொருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தங்களுடைய பாபங்களை நிவிர்த்தி செய்துகொண்டு முக்தி பெறவேண்டும் என்ற எண்ணத்துடனே, எவ்விதக் கஷ்டங்களையும் பாராட்டாது, மழை வெயில் முதலியவற்றை லக்ஷியம் செய்யாது, ஆடு மாடுகளை யடைக்கின்றதுபோல அடைக்கின்ற ரெயில் வண்டி மூன்றாவது வகுப்பில் அடைபடுவதற்குச் சம்மதித்து, தீர்த்த யாத்திரை செய்வதற்குப் புறப்படும் ஜனங்களைக் காணலாம். தற்கால நாகரிகப் பித்தர்கள் யாத்திரையில் அந்தர்க்கதமா யடங்கியிருக்கும் உண்மைகளை யுணராமல், யாத்திரையை இகழ்ந்து கூறுகிறார்கள்.

யாத்திரை செய்வதினால் விளையும் எண்ணற்ற பலன்களுள் சில பின் வருவன:— (1) பல ஊர்களையும் தேசங்களையும் நேருக்கு நேர் பார்த்து, பலவித ஜனங்களுடனே

கலந்து, அவர்களுடைய நடையுடை பாவனைகளை யறிந்து, அந்தத் தேசங்களையும் அந்த ஜனங்களையும் பற்றிய சகல விஷயங்களையும் தெரிந்து, அறிவை வளர்த்துக்கொள்ளுதல்.

(2) பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று தரிசித்தலினால், "வெவ்வேறு விதமான நாமரூபங்களுக்குப் பின்னால் ஏகமாகிய ஈஸ்வரன் ஒருவனே யுளன்" என்று தெரிந்து கொள்ளுதல்.

(3) ஸ்நாந கட்டங்களில் பெரும்பான்மையும் சரீர சுகத்துக் கேற்ற ஒஷதியையோ லோகத்தையோ பிரதான மாகக் கொண்டுள்ள தீர்த்தம் பெருகியுள்ளதினால், விசுவாசத்தினால் நிவிருத்தியாகின்ற பாபங்களையும் தவிர, சரீர வியாதிகளும் நிவாரணம் ஆதல்.

(4) ஸ்திரமாக ஓரிடத்திலேயே யிருத்தலினால் பழக்கத்தில் வந்துவிடுகின்ற தாமசகுணம் ஒழிந்து, சுறுசுறுப்பு உண்டாதல்.

இவ்விதமாகப் பல நன்மைகளும் உண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருக்கின்ற தீர்த்த யாத்திரையின் மகிமை மேனாட்டு நாகரிகத்திலே மயங்கி யிருப்பவனுக்கு எங்ஙனம் தெரியவரும்?

லங்கல்பண்ட் க்ஷேத்திரத்திலே சுவாமிகள் போயிருந்தபொழுது, என்று மில்லாத பெருங் கூட்டம் கூடியிருந்தது; படகுகளிலிருந்து ஜனங்கள் கோஷித்த ஈஸ்வர நாம

சங்கீர்த்தனம் திரிமூர்த்திகளுடைய லோகங்கட்கும் சென்று அப்புறம் செல்ல இடமில்லாது தடைப்பட்டு, எதிரொலியாகத் திரும்பி யிங்கேயே வந்தது. ஆ! ஆ! அன்று பிரஹ்மபுத்திரா நதியை அவ்விடத்தில் பார்க்க வேண்டும்! ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதி லிறங்கி தங்களுடைய சரீரத்தையும் அதனுடன் தங்களுடைய (பாபங்கள் உட்பட) அழுக்குகளையும் கழுவி அலசி விட்டுவிட்டார்கள். எல்லாம் ஈச்வர நாமமே; எங்கும் ஈச்வர நாமமே; எல்லோரும் இன்பசொரூபிகளாய்ப் பிரகாசித்தார்கள். சுவாமிகளும் சுவாமிகளுடன் வந்திருந்த எல்லோரும், பிறரைப் போலவே பிரஹ்மபுத்ரா நதியில் இறங்கி ஸ்நாநம் செய்து மகிழ்ந்தார்கள். சுவாமிகளுடைய தாயாருக்குப் பாபம் நிவிருத்தியாவதற்கு இந்த ஸ்நாநமும் வேண்டுமோ? சுவாமிகளைக் கர்ப்பத்தில் தாங்கியிருக்கும் படியான புண்ணியமும் பாக்கியமும் பெற்றதினாலேயே, அவர் சர்வ பாபங்களும் விமோசனமான புனிதவதி யென்பதில் சந்தேக முண்டோ? சுவாமிகளுக்கும் புண்ணிய ஸ்நாநம் என்று ஒன்று வேண்டுமோ? ஆனால், சுவாமிகள் உலகினரை உய்விக்கப் பிறந்த அவதார புருஷராகையினால், உலகினர் அநுஷ்டிப்பதற்காக, தாம் அநுஷ்டித்துக் காட்டினார். ஏனெனில், ஸ்ரீ பகவத்கீதை மூன்றாவது அத்தியாயம், 21-வது சுலோகத்தில்:

“யத்யாசரதி ஸ்ரேஷ்ட ஸ்தத்ததேவேதரோஜநః।
ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே॥”

அதாவது, "பெரியோர் எதைச் செய்கிறார்களோ, அதையே மற்றவர்களும் செய்கிறார்கள்; அப் பெரியோர் எதைப் பிரமாணமாக என்னுகிறார்களோ, அதையே உலகினர் அநுசரிப்பார்கள்." என்று கூறப்பட்டிருக்கிறதல்லவா? இந்த நியாயத்தை யொட்டித்தான், சுவாமிகளுக்கும் அவருடைய மாதாவுக்கும் தீர்த்த ஸ்நாநம் அவசியமாக இருந்ததென்று நாம் ஊகிக்கவேண்டியிருக்கிறது.

ஞான மொன்றே மோக்ஷத்துக்கு மார்க்கமாயின், ஸ்நாநாதி கர்மங்கள் எல்லாம் எற்றுக்கு? அவசியமில்லையே? சுவாமிகள் ஞான வாழ்க்கை வாழ்ந்து உலகினருக்கு ஞானத்தின் மகிமையை யெடுத்துக் காட்டலாமா? ஞான மொன்றே மோக்ஷத்துக்கு முக்கிய சாதனமாயினும், அவித்யா காரண கர்மங்களும் அநந்தம் கோடி ஜன்மங்களாக, பின்னப் படுத்த முடியாது, ஜீவனுடன் சேர்ந்து தடித்துக் கொழுத்து வருகின்ற வாசனைகளாய மிருத்துவைப் போக்கடிப்பதற்கு அவசியமாம். ஈசாவாஸ்யோபநிஷத்திலே 11-வது ஸ்லோகத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருப்பது உண்மையிலும் உண்மையாம்.

"எவன் வித்தை, அவித்தை இவ் விரண்டையும் சேர்த்து அறிகிறானோ (அநுஷ்டிக்கிறானோ) அவன் அவித்தையினால் மிருத்யுவை (ஞான கர்ம மிரண்டையும்) தாண்டி, வித்தையினால் அமிருதத்தை யடைகிறான்."

ஆதலால், சுவாமிகளுக்குப் புண்ணிய ஸ்நாநாதி கர்மங்களும் அவசியமாகவே யிருந்தன.

பின்னர், சுவாமிகளும் அவரைச் சேர்ந்தவர்களும் அங்கிருந்து புறப்பட்டு, ஆநந்த யாத்திரை செய்துகொண்டு மறுபடியும் டக்கா நகருக்கு வந்து சேர்ந்தார்கள்.

சுவாமிகள் டக்காவி லிருந்தபொழுது எண்ணற்ற ஜனங்கள் இராப்பகலாக அவரைச் சூழ்ந்துகொண்டிருப்பது வழக்கமாய்விட்டது. எப்பொழுது பார்த்தாலும் எந்த நிமிஷத்தில் பார்த்தாலும் சுமார் நூறு ஜனங்களுக்காவது குறையாமல் அவரைச் சுற்றிக் கூடியிருந்தார்கள். சுவாமிகளும் சற்றும் மனச்சலிப்பில்லாமல், தம்மை நாடி வந்தவர்களுக்குக் கர்மம், பக்தி, யோகம், ஞானம், தியாகம், வைராக்கியம் முதலிய பல விஷயங்களைப்பற்றியும் போதித்துவந்தார்; அதுவும், பிற்பகலில் இரண்டு அல்லது மூன்று மணிநேரம், சுவாமிகளிருந்த கிருகத்தில் வேதாந்த கர்ஜனையைத் தவிர வேறொன்றும் கேட்காது. சுவாமிகள் அப் பிரதேசத்துக்கு எப்பொழுது வருவாரோ என்று சுவாமிகளுடைய பெயரைக் கேட்டது முதல் எதிர்பார்த்திருந்தவர்களுக்கு இச் சமயம் ஒரு நற்சமய மாயிற்று; அவர்கள் சுவாமிகளுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும், அமிருதத்தை யருந்துவதுபோல, ஆவலுடன் விழுங்கினார்கள்.

சுவாமிகள் வேதாந்த சொரூபமாய் விளங்கினர். 'நிர்க்குணப் பிரமமே சகுணசொரூபியாகச் சுவாமிகளிடத்தில் பிரகாசிக்கின்றதோ' என்று எல்லோரும் பிரமிக்கும்படி, சுவாமிகளுடைய சரீர சலனமே அவ்வளவு ஞானம் திகழ்

வதாயிருந்தது. அவருடைய வெவ்வேறு விதமான பார்வைகளிலே வெவ்வேறு விதமான ஆழ்ந்த கருத்துக்கள் வெளிப்பட்டு, சர்வ ஜனங்களையும் ரமிக்கச் செய்தன. அவர் வாயினால் ஒரு வார்த்தையும் கூறவேண்டியிருக்கவில்லை. அவருடைய பார்வையிலிருந்தே அவர் இன்னது தான் குறிப்பிடுகிறாரென்று நன்கு கண்டுகொள்ளலாம். அவருடைய சுவாசம்கூட ஒவ்வொரு போதனையைப் போதித்தது போலும்! அவருடைய வார்த்தைகளோ? இதைப் பற்றிக் கேட்பானேன்? அவர் அயர்ந்து மறந்து அநாவசியமாக ஒரு வார்த்தை சொன்னாலும், அவருடைய நண்பர்கட்கும் சிஷ்யர்கட்கும் அந்த அநாவசியமான வார்த்தையில்கூட ஆழ்ந்த பொருள் அமிழ்ந்திக் கிடந்தது! என்ன ஆச்சர்யம்! அவருக்கு நடையிலே கூடவா அடிக்கடி மாறுதல் ஏற்படும்? நடைக்கு நடை அவருடைய அந்தக்கரணத்திலே நவநவமான கருத்துக்கள் பிரகாசித்துத் துலங்கும். அவருடைய போதனைகள் வெறும் பேச்சு மாத்திரமாய் உயிரற்றுக் கிடக்கவில்லை; ஊக்கமும் உயிரும் ஒவ்வொரு சொல்லிலும் நிறைந்து கிடந்தன; அவருடைய அதிகாரத்வனி அனைவருடைய சந்தேகங்களையும் குதர்க்கங்களையும் போக்கி, அவருடைய மொழிகளுக்கு ஒரு பிரத்தியேக பலம் கொடுத்தது.

67-வது அத்தியாயம்

டக்கா நகரில் பிரசங்கங்கள்

ஸ்வாமிகளுக்குப் பிரசங்கம் செய்து பெயரெடுக்க வேண்டுமென்ற ஆசை யென்றுமே கிடையாது. அமெரிக்காவுக்குச் சென்று பிரசங்கங்கள் செய்தது இப்பெரும் பரதக் கண்டத்திலே யுள்ள முப்பத்து இரண்டு கோடி இந்தியர்களும் வறுமையினாலும் நோயினாலும் பீடிக்கப்பட்டு அடிமைத் தனத்திலே கிடந்து உழல்வதை யோர்ந்து மனம் சகியாதவராய், அமெரிக்காவுக்குச் சென்று பிரசங்கங்களின் மூலமாக அமெரிக்கர்களுடைய மனத்தை இந்தியாவினிடத்துச் செல்லுமாறு, இந்தியாவினிடத்து அவர்களுக்கு ஒருவித அநுதாபத்தையும் அன்பையும் உண்டாக்கும் பொருட்டேயாம். திரும்பி வந்தவுடன் இந்தியாவிலே ஆங்காங்குப் பிரசங்கம் செய்தது இந்தியர்களுக்குள் ஒருவித கிளர்ச்சியை உண்டுபண்ணி அவர்களுக்குள் உயிரையும் ஊக்கத்தையும் ஊட்டுவதற்கேயாம்.

அமெரிக்காவுக்குச் செல்லும் முன் சுவாமிகள் இந்தியாதேசம் முழுதும் கால் நடையாகச் சஞ்சாரம் செய்து, தனவந்தர்களிட மெல்லாம், தற்காலத்திய கல்வி கற்றவர்களிட மெல்லாம் சென்று தேசத்தினுடைய வீழ்ச்சியையும் எழ்மையையும் நிவிர்த்திப்பதற் கேற்ற வழிகளை யெடுத்துக் காட்டி அவற்றை யநுஷ்டானத்தில் கொண்டு வருதற்கு வேண்டிய உதவி செய்யுமாறு வேண்டினார். ஆனால்,

எவரும் இவருடைய வார்த்தைகட்குச் செவிசாய்க்கவில்லை. ஆகையால்தான் சுவாமிகள் அமெரிக்காவுக்குச் சென்றார்கள். இதனால் என்ன விளங்குகிறதென்றால், சுவாமிகள் பிரசங்கம் செய்து பெயர் பெறவேண்டுமென்ற ஆசையுடன் எங்கும் பிரசங்கம் செய்யவில்லையென்பதே.

அதுவும் இப்பொழுது, சுவாமிகளுக்குப் பிரசங்கம் செய்யவேண்டுமென்ற எண்ணமே கிடையாது; ஏனென்றால், அவர் பேசிச் செய்யவேண்டிய வேலையெல்லாம் ஆய்விட்டது. இப்பொழுது அவர் கார்பத்தில் கண்ணும் கருத்துமாய், அநுஷ்டானத்தில் தமது கொள்கைகளைக் கொண்டுவருதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். ஆயினும், பொது ஜனங்கள் அவருடைய திருவாயினின்றும் வெளிவரும் அமிருத மொழிகளைக் கேட்கவேண்டுமென்ற ஆசை கொள்ளாமலிருக்க முடியுமா?

டக்கா நகர்வாசிகளில் பிரபலவான்களும் மெத்தப் படித்தவர்களுமான பலர் வந்து சுவாமிகளிடம் வந்து, சுவாமிகள் அவ்வூரில் இரண்டொரு பிரசங்கங்கள் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்து கேட்டுக்கொள்ளவே, சுவாமிகள் அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி அந் நகரில் இரண்டு பிரசங்கங்கள் செய்தார். 1901-ம் வருஷம் மார்ச் சுமீ 30-ம் தேதி யன்று சுவாமிகள் ஜகந்நாத கல்லூரியில் "...ான கற்றுள்ளது யாது?" என்னும் விஷயத்தைப்பற்றி வெகு அருமையாக ஒரு பிரசங்கம் செய்தார்; சுமார் இரண்டாயிரம் ஜனங்களுக்கு மேல் வந்து கூடியிருந்தனர்;

சுமார் ஒரு மணி நேரத்துக்கு அவ்விரண்டாயிரம் ஜனங்களும் சுவாமிகளுடைய ஒவ்வொரு வார்த்தையையும் பற்றித் தொங்கிக்கொண்டு, சித்திரப் பிரதிமைபோல இருந்து கேட்டு ஆநந்தித்தார்கள்.

சுவாமிகளையும் அவருடைய இந்த முதலாவது பிரசங்கத்தையும்பற்றி டக்கா கேஜட் என்ற பத்திரிகை, 1901-ம் வருஷம் ஏப்ரல்மீ முதல் தேதி யன்று வெளி வந்த பிரதியில் பின் வருமாறு கூறுகிறது:—

"* * இப் பெயர் பெற்ற மனிதர் (சுவாமி விவேகாநந்தர்) இப்பொழுது நம் மத்தியில் இருக்கிறார். அவர் சென்ற புத்தாஷ்டமி சமயத்தில் லங்கல்பண்ட் கட்டத்தில் ஸ்நாநம் செய்யச் சென்றார்; டக்காவுக்குத் திரும்பி வந்து, சென்ற சனிக்கிழமை மாலையில் ஜகந்நாத கல்லூரியில் அற்புதமான ஒரு பிரசங்கம் செய்தார்—அவர் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட விஷயம் "நான் கற்றுள்ளது யாது?" என்பதாயிருந்தது. அவர் மேனாட்டிலே அநேக நாகரிக தேசங்களிலெல்லாம் சஞ்சாரம் செய்திருந்தபொழுதிலும், அவர் இதுவரை அடையாதிருந்ததும் இந்தப் பிரதேசத்தைப் பற்றியதுமான நெருங்கிய அறிவை அடைவதற்குத் தாம் கீழ் வங்காளத்துக்கு வந்ததினால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றிய சந்தோஷத்தையும் தாம் இதற்கு முன் காணும்படியான பாக்கியம் அடையாதனவும் வங்காளமாகிய தமது சொந்த தேசத்திலேயே யுள்ளனவுமான கம்பீரமான நதிகள் அகன்று செழித்த சமவெளிகள், ரம

னீயமான கிராமங்கள் இவற்றைப் பார்த்ததினு லுண்டாகிய திருப்தியையும் வெளியிட ஆரம்பித்து, அவர், உலகில் பரிபூர்ணமாய்த் திருப்தி யளிக்கின்ற மதம் ஹிந்துமதம் ஒன்றே யென்று தாம் கண்டுகொண்டு இப்பொழுது அநேக வருஷங்கள் ஆய்விட்டன வென்னும் விஷயத்தைக் குறிப்பிட்டார். தங்களுடைய பெருந் தேசத்தில் ஐரோப்பியமாதிரி நினைப்புக்களின் வியாபகத்தினுலே எந்த நிலைமைகளில் அவர்கள் தங்கள் வாழ்க்கைகளைச் செலுத்தி வந்தார்களோ அந்தப் பிராபஞ்சிக நிலைமைகள் பிரதிகூலமாயிருக்கின்றன வென்பது அவர் குறிப்பிட்டபடி, தமக்கு மிகவும் நன்ருகத் தெரிந்திருந்த பொழுதிலும், அத்தகைய விசேஷ லக்ஷணம் வாய்ந்த தொரு மதத்தை யநுஷ்டிக்கின்ற தமது சொந்த தேச ஜனங்களுக்குள்ளே எங்குப் பார்த்தாலும் மதவிஷயத்தில் அலக்ஷியம் நேரிட்டிருப்பது பற்றி அவர் விசனித்தார். ஹிந்து ஜனசமூகத்தைப் புநருஜ்ஜீவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனே, தங்கள் மதத்தைச் சீர்திருத்த அல்லது அதைத் தலைகீழாகத் திருப்ப விரும்புகின்ற சில சீர்திருத்தக்காரர்கள் தேசத்திலே யிருப்பதுபற்றியும் அவர் விசனித்தார். ஆனுல், 'அவர்களுக்குள்ளே சில யோசனையுள்ள புருஷர்களும் இருக்கிருர்கள்' என்றும் கூறினுர்; பிறரைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி, தாங்கள் செய்வ தின்னதென்று தெரியாமல் மிகமிக மூடத்தனமான செய்கைகளைச் செய்கிறவர்களும் இருக்கிருர்கள்' என்றும் கூறினுர். இன்னும் ஹிந்து வழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றிற்குச்

சாஸ்திரீய நியாயங்கள் கண்டுபிடிப்பதிலே பைத்தியம் பிடித்தவர்களும், எப்பொழுதும் மின்சார சக்தி - காந்த சக்தி - வாயு சலனங்கள் இவ்வித விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றவர்களும் ஆகிய பிறர் இருக்கிறார்கள்; ஒருவேளை இவர்கள் என்றேனும் ஒருநாள் ஈச்வரனைச் சலனக்கூட்டம் என்று வியவகரித்துவிடுவார்கள்போலும்.!

"உண்மையில், ஸ்வாமிகளுக்குக் கூர்மையான புத்தியில்லாவிட்டால் ஒன்றுமே யில்லை. அவர் மிகமிகச் சிரேஷ்டமான வாக் சாதுர்யத்துடனே பேசக்கூடுமென்பது எல்லோரும் நன்கறிந்த விஷயம்; ஆனால், அவர் அவ்வளவு வேடிக்கையாகப் பேசுபவரென்பதும், உடனுக்குடனே அவ்வளவு பொருத்தமான விடை கொடுப்பவரென்பதும், அவருடைய பிரசங்கங்களைக் கேட்டவர்களில் அநேகருக்கு ஒரு புதிய அநுபவமாம். அவர் பொதுவாகக் கிறிஸ்தவர்கள்மீதும், பிரத்தியேகமாகப் பாதிரிகளின்மீதும் (ஒரு கல்) எறிந்தார்; (அதாவது, சிறிது கண்டித்தார்); இந்தக் காலத்தின் ஜடவாசனைகளை அவர் மிகக் கண்டித்தது ஏற்றதே......

தாம் கற்றுள்ளது யாது என்பது அவருடைய பிரசங்கத்தின் விஷயமா யிருந்ததுபற்றி, அவர் ஞான மார்க்கத்திலே அபிவிருத்தி யடைதற்கு எல்லோரும் நன்கறிந்த பிரதான நிபந்தனையை அழுத்தமான பாஷையிலே வெளியிட்டார்; அந்த நிபந்தனையானது விக்ராராதனை யுள்பட்ட ஹிந்து மதத்திலேதான் காணப்படுமென்று

கூறினர். அவர் இந்த விக்ரகாராதனையைத் தம்முடைய புத்தி சாதுர்யத்தை யெல்லாம் உபயோகித்து நிலைநிறுத்தினர்; நம்முடைய ஜனசமூக மதத்தின் அதைப் பக்ஷத்துக்கு விரோதமாக ஏதேனும் சொல்பவர்களைப் பரிகசித்தார். 'ஆத்மஞானம் அடையவேண்டுமானல், மனிதன் உலகுடனே, முக்கியமாகக் காமத்துடனும் தனத்துடனும் வெறுப்படைந்துவிடவேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார்; பின்னர், அவன் ஈச்வரனைத் தரிசிக்கவேண்டுமென்ற இச்சையுடன் எரிந்துகொண்டிருக்கவேண்டும்; அவர் தமது ஈச்வரன் பிரகிருதி அல்லது அதுபோன்ற வேறு ஏதேனும் என்னமன்று என்பதைக் கூறுவதிலே ஜாக்கிரதையா யிருந்தார். ஆனல், இவைமாத்திரம் எல்லாம் ஆய்விடவில்லை; அதாவது, உலகுடன் வெறுப்பும் ஈச்வரனைத் தரிசிக்கவேண்டுமென்று எரிகிற இச்சையும் போதா; பக்தன் தனக்குப் புத்தி கூறுவோராயும் தத்துவ ஞானியாயும், நண்பராயும், வழி காட்டியாயும் இருக்கவேண்டிய குருவைத் தேடி யடைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். சுருக்கத்தில், கவனத்தின் கீழுள்ள பிரசங்க கர்த்தாவின் சொற்களின்படிக்கு, ஞானபிவிருத்தி யடைவதற்குக் குருவின் அநுக்கிரகமொன்றினலேயே முடியுமொழிய, வேறெவ்விதத்திலும் முடியாது; கூட்டம் கூட்டமாக ஜனங்கள், அநேகமாக வாலிபர்கள் நம்முடைய வாழ்க்கையிலே அவசியமான ஒரு விஷயத்தைப்பற்றிப் புத்திமதியையும் ஒளியையும் அடைவதற்காக அவரைச் சுற்றிச் சூழ்கிறார்களென்பதிலே நாம் ஆச்சர்ய மடைகிற

தில்லை. ஸ்வாமிகள் தாம் அநுஷ்டிக்கின்றபடியே பிரஹ்மச்சர்யத்தைப் போதிக்கின்றார்; அவருடைய சிஷ்யர்களில் அநேகர் விவாகம் என்றவுடனே கூச்சம் அடைகின்றார்கள்; இதனாலுண்டாகும் பயன்கள் இன்னவையாகுமென்று நம்மால் இப்பொழுது முற்கூற முடியவில்லை...''

இதுபோலவே ஸ்வாமிகளுடைய இரண்டாவது பிரசங்கமும் எல்லோரும் மெச்ச வெகு அழகாக நடந்தது. இப் பிரசங்கத்திலே ஸ்வாமிகள் ஹிந்து ஜனசமூகம் முற்காலத்திலே அடைந்திருந்த ஞானப் பெருமையை எடுத்துக் காட்டினார். இது போகோஸ் பள்ளிக்கூடத்துக்கு அருகாமையிலுள்ள மைதானத்திலே நடைபெற்றது; இரண்டுமணி நேரம் ஸ்வாமிகள் பிரசங்கமாரி பொழிந்தார்; சுமார் மூவாயிரம் ஜனங்களுக்கு மேலே கூடியிருந்தார்கள். அன்றைய பிரசங்க விஷயம் "நாம் எம்மதத்தில் பிறந்திருக்கிறோமோ அம்மதம்'' என்பதாம். ஸ்வாமிகள் நம் முன்னோர்களுடைய பெருமையையெல்லாம் பேடுத்துக் கூறிவிட்டு, "இதனால் நம் முன்னோர்களுடையதும் இப்பொழுது குன்றி பொழிந்துவிட்டதுமான அப் பெருமையைப்பற்றி நினைத்துக்கொண்டிருத்தல் கூடாது,'' என்றும், "அவர்களைப்போலப் பெருமையடைவதற்கு நாமும் முயற்சிக்கவேண்டும்,'' என்றும் சொன்னார்.

"புராதன காலங்களிலே மஹரிஷிகள் இருந்தார்கள்; ஆனால், நாம் அவர்களினும் பெரிய ரிஷிகளாவதற்கு முயற்சிக்கவேண்டும்'' என்று ஸ்வாமிகள் உரைத்தார். பின்னர்,

ஸ்வாமிகள் ஹிந்து மதத்திலே எல்லோருக்கும் சம்மதமான பொதுபிப்ராயங்கள் இன்னின்னவை யென்றும், சில பிரத்தியேகமான மதங்கள் ஜீவித்திருப்பதற்கு உலகத்து சாஸ்திரங்கள் செய்திருக்கும் முக்கியமான நன்மை யின்னதென்றும், கர்மகாண்டம் ஞானகாண்டம் என இரு கூறுகப் பிரிக்கப்பட்ட வேதங்களைப்பற்றியும், ஜாதி வித்தியாசமில்லாமல் - ஆண் பெண் என்ற பேதம் இல்லாமல் - எல்லோரும் வேதங்களைப் படிக்கலாமென்பதைப்பற்றியும், ஸ்வாமிகள் குறிப்பிட்டார். வேதங்களிலே எவ்விடத்தும் இன்னார்தாம் வேதம் படிக்கலாம், இன்னர் படிக்கக்கூடாதென்று எவ்வித வரையறுப்பும் கிடையாதென்று எடுத்துக் காட்டினர். இத்தகைய வரையறுப்புப் புராணங்களிலேதான் காணப்படுகின்றது; புராணங்கள் பிற்காலத்தியவை, சமீபகாலத்தியவை; அவற்றிலே அநேக தப்பிதங்களும் நேர் மாறுபாடுகளும் இருக்கின்றன. ஸ்வாமிகள் தந்திர சாஸ்திரங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்து, "புத்தர்கள் கூட வேதத்திலே கூறப்பட்டுள்ள யாக எக்ஞங்களைத் தந்திரங்கள் என்ற பெயருடனே எடுத்துக்கொண்டார்கள்" என்றும், "வேதங்களிலேயுள்ள பிராஹ்மணங்கள் மாறுதல் செய்யப்பட்டுத் தந்திரங்களிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன" என்றும் கூறினர்.

"தந்திர சாஸ்திரங்கள் வாமாசாரம் போன்ற சில தீய அப்பியாசங்களைத் தவிர்த்துப் பார்த்தால், ஜனங்கள் நினைக்கின்றபடி அவ்வளவு கெட்டனவல்ல" என்று

ஸ்வாமிகள் மொழிந்தார். பின்னர், ஸ்வாமிகள் ஹிந்து மதத்தின் உயிர்க்கொள்கைகளாகிய ஜீவ, ஈச்வர, ஜகத்தைப்பற்றி வியவகரிக்க ஆரம்பித்தார்; "இம்மூன்றும் பாரமார்த்திகத்தில் ஒன்றே" என்று நிரூபித்தார். வேதாந்த ஞானத்துக்கும் மேல்நாட்டு தத்துவஞானத்துக்குமுள்ள வித்யாசத்தைப்பற்றிப் பேசப் புகுந்தார். "மேல் நாட்டு ஞானமானது மனத்துடனே நின்றுவிடுகிறது" என்றும், "வேதாந்த ஞானமானது மனத்தைக் கடந்து அப்பால் சென்று ஆத்மாவின் மகிமையைப் பிரபஞ்சத்திலுள்ள ஒரே சத்தியமாகப் பறையடிக்கிறது" என்றும் மொழிந்தார். "மேல்நாட்டு ஜீவித நோக்கமெல்லாம் போகமும் கர்மமுமாகவே யிருப்பதற்கும், இந்தியனுடைய நோக்கம் தியாகமும் சூட்சும உலகத்து ரஹஸ்யங்களை யாராய்தலுமேயா யிருப்பதற்கும் இதுவே காரணம்" என்றார். "அவதார வாதத்தினுடைய ரஹஸ்யமெல்லாம்ம னுஷ்யனைப் பூஜிப்பதேயாம்—மனிதனில் ஈச்வரனைக் காண்பதே உண்மையான ஈச்வர தர்சனம்" என்றார் ஸ்வாமிகள்.

"ஹிந்துவானவன் பிரகிருதியின் மூலமாகப் பிரகிருதியின் ஈச்வரனிடத்துச் செல்லவில்லை; ஆனால், மனிதன் மூலமாக மனிதனுடைய ஈச்வரனிடத்துச் செல்கிறான். ஜனசமூகத்தினிடத்தில் கிஞ்சித்தும் அநுதாப மில்லாமல் அடியோடு மாறுதலையே பிரதானமாகக் கொண்டு செய்யப் படும சீர்திருத்தங்கள் இழிவைத் தரும்," என்று கூறி, "விக்கிரகாராதனை வேண்டியதே" என்றும், "அவசியமே"

என்றும், "நியாயமே" என்றும், பல மேற்கோள்களினுலும் யுக்தியினுலும் ஸ்தாபித்து, ஹிந்துக்களில் சிலர் அறிவின்மையால் குறை கூறி நிந்திக்கிருர்கள்" என்று சொன்னுர். அவர் முடிவுரையாகக் கூறியதாவது "..........ஒரு உதவிக் கையை நீட்டி, எல்லோருக்கும் அறிவு வாசல்களைத் திறந்துவிடுங்கள்! கீழே போட்டு மிதிக்கப்பட்டிருக்கின்ற பொது ஜனங்களுக்கு அவர்களுடைய நியாயமானவும் தர்மமானவுமான பாத்தியதைகளைக் கொடுங்கள்."

இந்த இரண்டு பொதுப் பிரசங்கங்களே பிரசங்கங்கள் என்னும்படி நடைபெற்றன வாயினும், ஸ்வாமிகள் இறங்கியிருந்த இடத்திலே ஜனங்கள் திரள்திரளாகக் கூடுவதும், ஸ்வாமிகள் அவர்களுக்கு வேதாந்த போதனை செய்வதும் வழக்கமாகவே யிருந்தது.

இப்படிச் சின்னுட்கள் செல்ல, ஒருநாள் ஒரு அற்புதமான சம்பவம் நிகழ்ந்தது. அதியுவதியான ஒரு தாசி உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் சர்வாபரண பூஷிதையாய் அவரைத் தரிசிப்பதற்காகத் தனது தாயாரையும் கூட்டிக்கொண்டு ஒரு குதிரை ஸாரட்டில் ஏறிவந்து சேர்ந்தாள். ஸ்வாமிகள் அப்பொழுது உள்ளே தமது தனியறையில் இருந்தார். ஸ்வாமிகளுடைய நண்பர்களும் சிஷ்யர்களும் இந்தத் தாசிகளை ஸ்வாமிகளிடம் இட்டுச் செல்ல யோசனைபண்ணினுர்கள்; ஆனுலும், ஸ்வாமிகளைத் தரிசிக்க வந்தவர்களைத் 'தரிசிக்க விடமாட்டோம்,' என்று சொல்வதற்கு இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? ஆகையால், இவர்கள் தங்களுள் ஒருவரை

ஸ்வாமிகளிடம் அனுப்பி "இரண்டு தாசிகள் ஸ்வாமிகளைத் தரிசிப்பதற்கு வந்திருக்கிறார்கள்" என்று தெரிவிக்கும்படி செய்தார்கள்.

ஸ்வாமிகள் இதைக் கேட்டவுடனே, அவர்களைத் தம் முன் உடனே இட்டுக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். அந்தத் தாசிகள் அவரை நமஸ்கரித்துவிட்டு, ஒருபக்கமாக வெகு வணக்கத்துடனே ஒதுங்கி யுட்கார்ந்தார்கள். உடனே அவ் வழகிய யுவதி ஸ்வாமிகளை நோக்கி, "ஸ்வாமி! நான் ஆஸ்த்மா (க்ஷய) ரோகத்தினால் வருந்துகிறேன். என்னைச் சொஸ்தப்படுத்துவதற்கு ஏதேனும் ஔஷதம் கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கேட்டாள்.

ஸ்வாமிகள் அநுதாபத்துடனே, "அம்மே! என்னைப் பார்த்தாயா? நானும் க்ஷயரோகத்தினால் வருந்துகிறேன்; என்னையே நான் சொஸ்தம்பண்ணிக்கொள்ள முடியவில்லை. உனது வியாதியை என்னால் நிவிருத்திபண்ண முடியுமானால், எனக்கு மிகச் சந்தோஷமாக இருக்கும்" என்றார்.

இவ் வினிய மொழிகள் கள்ளங் கபடற்று உண்மையான அன்பினின்றும் வெளிப்பட்டவை யாதலினாலே, அந்தத் தாதிகளுடைய ஹிருதயத்தை மாத்திரம் அல்ல, அங்குக் கூடியிருந்தவர் அனைவருடைய ஹ்ருதயத்தையும் உருக்கிவிட்டது. பின்னர் அந்தத் தாசிகள் ஸ்வாமிகளிடத்தில் ஆசி பெற்று வீடு சென்றனர்.

ஸ்வாமிகள் டக்கா நகரிலே யிருந்த சில நாட்களுக்குள்ளே அவருக்கு அத்தியந்த சிஷ்யர்கள் அநேகர் ஏற்பட்டுவிட்டார்கள்; ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய நாமமானது டக்கா நகர் முழுதும் கோஷிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது. எங்குப் பார்த்தாலும் ஸ்வாமிகளைப்பற்றிய பேச்சுத்தான்; எப்பொழுது பார்த்தாலும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய மகிமையே பிரஸ்தாபமாயிருந்தது. பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், கடைத்தெருவிலே வியாபாரிகள், சுமையெடுக்கும் கூலிகள், சம்பிரமமாக உண்டு களித்துச் சாய்வு நாற்காலிகளிலே சாய்ந்திருக்கும் பிரபுக்கள், எல்லோரும் எப்பொழுதும் பேசிக்கொண்டிருந்தது ஸ்வாமிகளைப்பற்றியே. அந்நகரே சுருக்கத்தில் விவேகாநந்த மயமாய் விளங்கிவிட்டதென்று சொல்லலாம்.

பின்னர் சுவாமிகள் டக்கா நகரினின்றும் நீங்கிப் பெயர் பெற்ற ஸ்தலங்களாகிய சந்திரநாத க்ஷேத்திரம், காமாக்ஷியம் என்னும் ஸ்தலங்களுக்குச் சென்று அங்குள்ள மூர்த்தங்களைத் தரிசித்துக்கொண்டு, அதற்குப் பின், கோவலபுரம் என்ற ஊருக்குப் போய் அங்குச் சின்னாட்கள் தங்கியிருந்துவிட்டு, பிறகு அஸ்ஸாம் நாட்டிலே யுள்ள கௌஹட்டி என்ற அழகிய ஊரிலே சின்னாட்கள் வாசம் செய்தார். இவ்விடத்திலே சுவாமிகள் மூன்று பிரசங்கங்கள் செய்தார்; கேட்டவர்களெல்லோரும் பிரமித்து மயங்கி அப் பிரசங்கங்களில் லயித்துவிட்டார்கள். சுவாமிகளுடைய வார்

த்தைகள் ஒவ்வொன்றும் நெருப்பைக் கக்கிற்று; ஆ! ஆ! அவருடைய மொழிகள் என்ன இனிமை! என்ன ஆநந்தம்! அவருடைய பாஷைதான் என்ன அழகு! என்ன லளிதம்! இம்மாதிரி சநாதன தர்மத்தை யெடுத்து இவ்வளவு அற்புதமாக இதற்கு முன் எவருமே கூறியதில்லை யென்று எல்லோரும் கொண்டாடினார்கள்.

ஆனால், சுவாமிகளுடைய சரீரமானது நாளுக்கு நாள் பலஹீனப்பட்டுக்கொண்டே வந்தது; டக்கா நகரிலே சுவாமிகளுடைய சரீரக்கட்டு தளர்ந்து, இதனால் அவர் அடிக்கடி களைப்படைய ஆரம்பித்தார்; காமாக்ஷிபம் வந்த பொழுதோ, சுவாமிகளுடைய சரீரம் இன்னும் பலஹீனமடைய ஆரம்பித்தது. இவ்விதமாக, சுவாமிகளுடைய சரீர சௌக்கியம் பாதிக்கப்படவே, "சுவாமிகள் கௌஹட்டியிலிருந்து சுகமடைதற் கேற்றதான ஒரு இடத்துக்குச்சென்று சின்னாட்கள் வசிக்கவேண்டும்" எனச் சுவாமிகளுடைய சிஷ்யர்களும் நண்பர்களும் சுவாமிகளை வற்புறுத்த, அங்கிருந்து அறுபத்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் ஷில்லாங் என்னும் அழகிய நகருக்குச்செல்லச் சுவாமிகள் தீர்மானித்தார்.

"ஷில்லாங் என்பது ஒரு குன்றின்மீது அழகாகக் கட்டப்பட்டுள்ள ஒரு ஊர். இங்குக் காற்று அதிக ஈரவாடையில்லாமல், நன்கு வரண்டதாகவே யிருக்கின்றதாதலால் பலஹீனர்கள், பிணியாளர்கள் இங்குச் சென்றால், அவர்கள் சரீர சௌக்கிய மடைவார்கள்" என்று வைத்திய சாஸ்

திரிகள் கூறுகிறார்கள். தவிர, ஷில்லாங் நகரமானது அஸ்ஸாம் நாட்டு ராஜதானி நகர்; சுவாமிகள் அந் நகருக்குச் சென்றிருந்த காலத்தில் அங்குப் பிரதான கமிஷனர் வேலை பார்த்து வந்தவர் ஸர் ஹென்ரி காட்டன் என்பவராவர். இவர் இந்தியாவினிடத்து மிகுந்த அநுதாபமுள்ளவரென்பதும், இந்தியப் பிரஜைகளின் க்ஷேமத்தை யுத்தேசித்து, வேலையினின்று நீங்கி உபகாரச் சம்பளம் பெற்றுச் சீமைக்குச் சென்ற பின்னரும் கூட உழைத்து வந்தாரென்பதும், இந்திய ரனைவரும் அறிவர். இவர் இந்தியா தேசத்தினிடத்து ஏற்கனவே ஏராளமான அன்பு வைத்தவராதலினாலே, இந்தியாவின் பெருமைகளையும் மகிமைகளையும் இதர கண்டங்களிலும் சென்று பறையடித்து எதிர்த்தோரை நாவடங்கச் செய்து திக்விஜய கோலாகலராய்த் திரும்பி வந்திருக்கின்ற ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளைப்பற்றி இடைவிடாது கேள்வியுறும்படி நேரிட்டிருந்ததினாலே, 'சுவாமிகளை நேரே பார்க்கவேண்டும்' என்ற ஆசை ஸர் ஹென்ரி காட்டனுக்கு உண்டாயிற்று. ஒரே வஸ்துவினிடத்து உண்மையன்பு வைத்தவர்கள் எல்லோருக்கும் அந்யோந்யம் ஒருவித அத்தியந்த அன்பு உண்டாவது சகஜமே; ஏனெனில், இவருடைய அன்புப் பொருள் ஒன்றாயிருத்தலினால்.

ஆகையால், இப்பொழுது சுவாமிகள் ஷில்லாங் நகருக்கு வந்திருக்கும் சங்கதி கேள்விப்பட்டு, ஸர் ஹென்ரி காட்டன், 'அவ்விடத்திலுள்ள ஜனங்கள் கேட்டு ஆநந்திக்குமாறு சுவாமிகள் ஒரு பிரசங்கம் புரியவேண்டும்' என்று

சுவாமிகளைக் கேட்டுக்கொண்டதின் பேரில், சுவாமிகளும் அவ் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு பிரசங்கம் செய்தார்; இந்தியாவின் வழக்க பழக்கங்கள், நடையுடை பாவனைகள் முதலியவற்றிற்கெல்லாம் தகுந்த முகாந்திரங்கள் எடுத்துக் காட்டி, சுவாமிகள் கர்ணாமிருதமாகச் செய்த அந்த பிரசங்கமானது அதைக் கேட்கும்படியான பாக்கியம் பெற்ற எல்லோருடைய ஹிருதயங்களிலும் பசுமரத தாணிபோலப் பணிந்துகொண்டது. இப் பிரசங்கத்தைக் கேட்பதற்கு அவ்வூர் இந்தியர்கள் மாத்திரம் அல்ல, ஆங்கில உத்தியோகஸ்தர்களும் பலர் கூடியிருந்தனர். ஸர் ஹென்ரி காட்டன் உள்பட எல்லோரும் சுவாமிகளுடைய புத்தி சாதுர்யத்தையும், வாக்கு வல்லமையையும், தேசாபிமானத்தையும் கண்டு வியந்தார்கள்.

பின்னர், ஸர் ஹென்ரி காட்டனே சுவாமிகளுடைய வாசஸ்தலத்துக்கு வந்து, சுவாமிகளுடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, "சுவாமி! ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் யாத்திரைசெய்த பின்னர், இங்கு இந்தக் காட்டு மலைப்பிராந்தியங்களிலே எதைப்பார்ப்பதற்காக வந்திருக்கிறீர்கள்? தங்களுடைய புத்தி சக்தியை அறிந்து கொண்டாடுபவர் எவர் இருக்கின்றனர்?" என்றார்.

ஸர் ஹென்ரி காட்டனும் சுவாமிகளும் நெடுநாட் பழகிய நண்பர்கள்போல அன்று வெகு நேரம் வரையில் வெகு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சுவாமிகளுக்கு உடம்பு சௌக்கியமில்லையென்பதை ஸர்

ஹென்ரி காட்டன் அறிந்து, அவ்வூர் அரசாங்க வைத்திய ரை வரவழைத்து, சுவாமிகளுக்கு வேண்டிய வைத்திய உதவி செய்யும்படி கூறிவிட்டுப் போனார். அன்றுமுதல் ஸர் ஹென்ரி காட்டன் காலையிலும் மாலையிலும் சுவாமிக ளுடைய சரீர சௌக்கியத்தைப்பற்றித் தவருது விசா ரித்து வந்தது மன்றியில், 'இன்னும் சுவாமிகளுடைய சரீரம் சுக மடையவில்லை' என்பதைக் கேட்ட பொழு தெல்லாம் விசனித்துவந்தார்.

சுவாமிகளுக்கும் ஸர் ஹென்ரி காட்டனிடத்திலே அதிக மதிப்பு ஏற்பட்டுவிட்டது சுவாமிகள் அடிக்கடி ஸர் ஹென்ரி காட்டனைக் குறித்து "இவர் உண்மையில் இந் தியாவை நேசிப்பவர்; இந்தியர்களுடைய ஆசைகளையும் ஆவசியகங்களையும் நன்ருய் அறிந்தவர்; இந்தியா க்ஷேம மடையவேண்டுமென்ற ஹிருதய பூர்வகமாகப் பாடுபடு பவர்; ஆகையால், இந்தியர்கள் இவரிடத்துக் களங்கமற்ற அன்பு செலுத்தக் கடமைப்பட்டவர்கள்" என்று கூறுவார்.

இச் சமயத்திலே, சுவாமிகள் எவ்வளவோ வைத் திய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தபோதி லும், வியாதி அவரை விட்டு நீங்கினதாகக் காணவில்லை; நாளுக்கு நாள் வியாதி அவரை மேன்மேலும் அதிகமாக வருத்தத் தொடங்கிற்றே யொழிய சற்றும் குறைந்தபா டில்லை. இதற்கு முன்னமேயே அவர் நீரிழிவு வியாதியினல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்; இப்பொழுது டக்கா நகரு க்கு வந்த பின்னரோ, அவரை க்ஷயரோகமும் பிடித்துக்

கொண்டது. அவருடைய சிஷ்யர்களும் நண்பர்களும் இதே கவலையாகி, இரவும் பகலும் வருந்தத் தொடங்கினார்கள். 'ஷில்லாங் நகர் சீதோஷ்ண ஸ்திதி வியாதியஸ்தர்களுக்கு மிகவும் நல்லது' என்றும், 'இங்கு வரும் வியாதியஸ்தர்கள் கொஞ்சமேனும் குணமடைவார்கள்' என்றும் நம்பப்பட்டு வருகிறது. ஆனால், அந் நம்பிக்கை சுவாமிகளின் விஷயத்தில் வீணாய்விட்டது. சுவாமிகள் மேன்மேலும் வியாதியினால் அதிகமாகப் பீடிக்கப்படவே, சுவாமிகளுடைய சிஷ்யர்களுட் சிலர் ஏக்கமடையக்கூட ஆரம்பித்துவிட்டார்கள். "என்ன! நமது குருமூர்த்தி! நமது அஞ்ஞானத்தை யகற்றி யருளொளி யளித்த சுவாமிகள் சீக்கிரம் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவாரோ?"

சுவாமிகள் க்ஷயரோகத்தினாலே இருமல் உண்டாகி, மூச்சு திணறுவதைப் பார்க்கப் பரிதாபகரமாயிருக்கும். சுவாமிகளுக்கே தமது இகலோக வாழ்வு முடிவடைந்து விட்டது என்ற எண்ணம் உண்டாய்விடும். ஆ! ஆ! பரிதாபம்! சுவாமிகள் தமது மெத்தையில் படுத்து தலையணைகளில் சாய்ந்துகொண்டு இருமத் தொடங்கி மூச்சு விடுதற்கு முடியாமல் ஒரு மணி நேரத்துக்குக் குறையாது அவஸ்தைப்பட்டது அனைவருக்கும் கண்களினின்றும் ரத்தக் கண்ணீர் வரும்படி செய்தது.

ஆனால், ஸ்வாமிகளுடைய மனம் க்ஷயரோகத்தின் மீது செல்லுமா? ஸ்தூலசரீர பாதையினிடத்துச் செல்லுமா? அன்று, அன்று. அது அகண்ட வஸ்துவினிடத்திலே

சென்று லயித்துவிடும்; ஸ்வாநுபூதியிலே, சாந்த நிலைமையிலே, சாச்வத பதவியலே தங்கி நிற்கும்; அப்பொழுது அவர் கனவிலே பேசுபவர்போல "இதனு லென்ன! நான் அவர்களுக்கு ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்குப் போதுமான அளவு கொடுத்திருக்கிறேன்." என்று தமக்குத் தாமே சொல்லிக்கொள்வார். அதாவது, என்னவெனில், தாம் கூறவந்ததை உலகுக்குக் கூறியாயிற்றென்றும், இனிமேல் மரணத்தைப்பற்றிச் சற்றும் தாம் கவலைப்படவில்லை யென்றும், யேனுட்டினர் தமது வேதாந்த உபதேசப்படி நடந்து, இந்தியர்களும் அவர்களுடைய முன்னேற்றத்துக்குத் தாம் போதித்துள்ளவாறு நடப்பார்களானல், இரு திறத்தவர்களுக்கும் இன்னும் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்குப் போதுமான வேலையிருக்கிறதென்றும் ஸ்வாமிகள் நினைத்திருந்தார்.

ஸ்வாமிகள் ஷில்லாங்நகரிலிருந்து புறப்பட்டுக் கல்கத்தாவுக்கு மேமீ இரண்டாவது வாரத்தில் திரும்பி வந்தார். மடத்திலேயுள்ள தமது பல சிஷ்யர்களுக்கும் நண்பர்களுக்கும் அவர் தமது கீழ் வங்காளத்தினுடையவும் அஸ்ஸாம் நாட்டினுடையவும் அனுபவங்களை யெல்லாம் சொல்ல ஆரம்பித்தார். "அவ்விடத்து ஜனங்கள் மிகப் பிடிவாத குணமுடையவர்கள்" என்றும், "சில சந்தர்ப்பங்களிலே மதவைராக்கிய முடையவர்கள்" என்றும் அவர் கூறினர்.

சுவாமிகள் மேனுடுகளிலெல்லாம் யாத்திரை செய்து வந்தவராயினும், சுவாமிகள் வர்ணுச்ரமதர்ம விகற்பங்

ளால் கட்டுப்படாத அவதூதாச்ரமியாயிருந்தபோதிலும் சுவாமிகள் தமது சிஷ்யர்கள் வர்ணாச்ரம தர்மவிதிகள் சற்றும் வழுவாது அநுஷ்டித்து வரவேண்டுமென்று வெகு கண்டிப்பாக ஆக்ஞை யிட்டிருந்தார். சுவாமிகளுக்கு இந்தியாவின் ஆசாரங்களிடத்தும் புராதன வழக்க பழக்கங்களிடத்தும் அவ்வளவு மதிப்பும் நம்பிக்கையும் இருந்தன. அவருடைய சிஷ்யர்களுள் ஒருவர், குருட்டுப் பிடிவாதக் கொள்கைகளையுடைய ஒருவர், சுவாமிகளுடைய உண்மையான கருத்து இன்னதென்று அறியாதவர், ஒரு நாள் சுவாமிகளை வைதீக ஆசாரவிஷயமாகப் பல மூடக் கேள்விகளைக் கேட்டு வருத்த, சுவாமிகள் பொறுராகி, "நண்ப! நான் சந்யாசி! எனக்கு ஜாதியாவது? ஆசாரமாவது? 'மதுகரி முறையினாலே மிலேச்ச குடும்பத்தைச் சேர்ந்தவனுடைய கைகளிலிருந்துகூடச் சம்பாதிக்கப் பட்ட பிக்ஷயினால் சந்யாசி ஜீவிக்கலாம்' என்று சாஸ்திரங்கள் கூறவில்லையா? ஜாதி மத பேதம் ஒழித்தவன் தானே சந்யாசி!" என்றார்.

சுவாமிகள் டக்காநகர் அநுபவத்தைப்பற்றிப் பேசி வந்தபொழுது பின் வரும் சம்பவத்தைக் கூறினார். ஒரு நாள் டக்காநகரில் ஒரு வாலிபன் சுவாமிகளிடம் எவரோ ஒருவருடைய ஒரு படத்தைக் கொண்டுவந்து காட்டி, "சுவாமி! இப் படத்திலுள்ளவர் அவதார புருஷர்தானா?" என்று கேட்டான்.

சுவாமிகள் அதற்குத் தகுந்தவாறு விடை யளித்து விட்டு, கடைசியாக அவ் வாலிபனை நோக்கி வெகு அருமை

யும் அன்பும் நிறைந்த மொழிகளால் "பைய! இப் படத்தி லுள்ளவர் அவதார புருஷரா? இல்லையா? என்பது எனக்கு எப்படித் தெரியும்?" என்றார்.

ஆனால், அவ் வாலிபன், இம்மாதிரி விடைகளால் திருப்தி யடைந்துவிடவில்லை. சுவாமிகளிடத்தில் அவன் இக் கேள்வியைத் திருப்பித் திருப்பிப் பன்முறை கேட்டான்; அப்பொழுதும் சுவாமிகள் மிகப் பொறுமை வகித்து, முன் கூறிய மாதிரியே மறுமொழி பகர, அப் பையன் திருப்தி யுறாதது கண்டு, கடைசியாக, "வாலிப நண்ப! நான் சொல்வதைக் கேள்! இனிமேல் உன்னுடைய சரீரம் நல்ல ஆரோக்கியமும் பலமும் அடையும் பொருட்டுக் கடினமான சரீராப்பியாசங்கள் செய்தும், புஷ்டியான ஆகாரங்கள் உண்டும், உனது தேகத்தையும் மூளையையும் பலப்படுத்திக்கொள்; அப்பொழுது இந்த விஷயம் உனக்கே புலப்படும். சரியான, சத்தான ஆகாரம் இன்றி, உனது மூளை வரண்டுபோய்விட்டது போலத் தோன்றுகிறது," என்றார்.

இத்தகைய விடையும் அவ் வாலிபனுக்குத் திருப்தியை யளித்திராது. ஆனால், என் செய்வது? திருப்தியடைவதில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற ஒருவனை எப்படித்தான் திருப்திப் படுத்த முடியும்? ஆகையால், சுவாமிகள் உண்மையைத்தான் சொல்ல வேண்டி வந்தது. இத்தகைய ஜனங்களுக்கு உண்மையை உரைக்காவிட்டால், அவர்களுடைய இஷ்டப்படி மறுமொழி

யளித்து, அவர்களைத் திருப்திப்படுத்துவது ஒன்றையே காரியமாகக் கொண்டிருந்தால், சீக்கிரம் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்தால், அந்தப் பழியும் பாவமும் அவர்களிடம் உண்மையை உரையாது அவர்களுக்கு இச்சகம் பேசிவந்தவர்களையும் ஒரு விதமாகச் சாரும். ஸ்வாமிகள் இன்னும் அவ் வாலிபனை நோக்கி, “நீ உனது குருவை அவதார மென்றோ, அல்லது நீ இஷ்டப்படுகிற எவ்வித மாக நினைக்கலாம். ஆனால், ஈச்வராவதார புருஷர்கள் வெகு அருமை. டக்காநகரிலே மூன்று அல்லது நான்கு அவதார புருஷர்கள் கிளம்பியிருப்பதாகக் கேள்வி! ஜனங்கள் அவதாரங்களினிடத்தே பித்துப் பிடித்து அலைகிறார்கள் போலும்!” என்றார்.

‘காமாக்ஷியத்திலே தாந்திரீகம் அதிகமாக வழங்கி வந்தது’ என்று சுவாமிகள் கருதினார். அப் பிரதேசங்களிலே ஹங்காரதேவர் என்று ஒரு மூர்த்தியைச் சில ஜனங்கள் பூஜித்து வந்தார்கள்; இவர் அவதார புருஷரா யிருந்தவராம்; இவருடைய உபாசகர்களில் பெரும்பான்மையோர் தாந்திரீக சந்யாசிகள்! இது மிகமிகப் புராதன மானதோர் வகுப்பு! ஆனால், டக்காநகர்ப் பிரதேசத்திலே வைஷ்ணவமதம் ஏராளமாக வியாபித்திருந்தது.

சுவாமிகள் தாம் அப்பொழுது பார்த்துவந்த பிரதேசங்களைப்பற்றிப் பின் வருமாறு கூறினார்:— “பிரஹ்ம புத்திராநதிதீரத்துக்கு இணையே கிடையாது; ஷில்லாங் மலைகளின் அழகே அழகு. கல்கத்தா பிரதேசத்து

ஜனங்களைப் பார்க்கிலும் அந்தப் பிரதேசத்து ஜனங்கள் கடினமாக வேலை செய்தாலும் ஒரே பிடிவாதமாகச் செய்வார்கள். அவர்கள் மச்ச மாம்சாதிகளை அதிகமாக உண்பவர்களாகையினாலே, அதிக ராஜஸகுணமும் ஸ்தூல பலமும் வாய்ந்தவர்கள். ஆயினும், அவர்கள், சமையல்களிலே அதிகமாக எண்ணெயும் நெய்யும் சேர்க்கிறார்கள்; இது எனக்குப் பிடிக்கவில்லை; இதனால் சரீரத்திலே கொழுப்பு ஏறிவிடுகிறது. இன்னும் கீழ் வங்காளமும் மேல் வங்காளமும் எல்லாவிதங்களிலும் ஒற்றுமைப்படுத்தப் படவேண்டும்.''

ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரிடத்துப் பரமபக்தி வைத்திருந்த நாகமஹாஷயர் என்பவர் இப் பிரதேசங்களிலே பிறந்தவர்; இவர் சுவாமிகளைப் பரமசிவனே அவதரித்திருந்ததாகக் கருதியிருந்தார்; இவர் 1899-ம் வருஷம் டிசம்பர்மீ'த்திலே மஹாசமாதி யடைந்தார். சுவாமிகளுடைய கிருகஸ்த சிஷ்யர்களுள் ஒருவர் சுவாமிகளை நோக்கி, ''சுவாமி! இந்த மஹாத்மா, நாகமஹாஷயருடைய கிருகத்தைப் போய்ப் பார்த்ததுண்டா?'' என்று கேட்டார்.

சுவாமிகள்: மிகுந்த குதுகலத்துடனே ''ஆம், அவர் பெரியவர், மஹாத்மா. அவருடைய ஜனன ஸ்தலம் டக்கா நகருக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரத்திலேயுள்ளது. அவ்வளவு சமீபத்திலே சென்றுவிட்டு, அவர் வசித்த கிருகத்தைத் தரிசிக்காமல் நான் வருவேனா? ஆ! ஆ! அவ

ருடைய கிருகம் ஒரு சாந்தியாச்ரமம்போ லிருக்கின்றது; அது புண்ய ஸ்தலமேயாம்.

அவருடைய பரிசுத்த பத்தினியார் பஞ்சபக்ஷ பரமாந் நங்களை யெல்லாம் தாமே சமைத்து எனக்குப் பிக்ஷை யிட்டார். அவர் என்னை அன்னைபோன்று மனதார, ஹிருதயம் குளிர, வயிறு நிரம்பப் புசிக்கச் சொல்லி உபசாரம் செய்தது என்ன அருமை! அவரிடத்திலே என்ன இனிமை! நான் அங்கிருந்தபொழுது, ஒரு குளத்திலே நீந்தி ஸ்நாநம் செய்தேன். பின்னர் ஆகார முண்டுவிட்டு அயர்ந்து படுத்தேன்; பகல் இரண்டரை மணிக்குத்தான் எழுந்திருந்தேன். நான் எனது ஜீவிதத்திலே சுக நித்திரை அதிகமாகச் செய்தது கிடையாது. நாகமஹாஷயருடைய கிருகத்திலே அன்று செய்த நித்திரை நான் அநுபவித்துள்ள சுக நித்திரைகளுள் ஒன்றாகும்; எழுந்திருந்தேன்; மறுபடியும் திருப்தியாக உண்டேன். நாகமஹாஷயருடைய பத்தினியார் எனக்கு ஒரு வஸ்திரமும் கொடுத்தார். நான் அதை எனது தலையைச் சுற்றித் தலைப் பாகையாகக் கட்டிக்கொண்டு, டக்கா நகருக்குப் புறப்பட்டேன். நாகமஹாஷயருடைய படம் பூஜிக்கப்பட்டு வந்ததைக் கண்டேன். அவருடைய சமாதி ஸ்தலமானது, அவருடைய சாம்பார் வைக்கப்பட்டிருக்கும் இடமானது இப்பொழுதிருப்பதைப்பார்க்கிலும் நல்ல ஸ்திதியில் வைக்கப்படல் வேண்டும். அம்மஹாத்மாவைக் கீழ் வங்காளத்து ஜனங்கள் இன்னும் நன்றாக அறிந்துகொண்டால் நலம்,'' என்றார்.

68-வது அத்தியாயம்

வேலூர் மட நிவாசம்

கீழ் வங்காளத்துக்கும் அஸ்ஸாம் நாட்டுக்கும் சுவாமிகள் செய்த யாத்திரைதான் சுவாமிகளுடைய கடைசி யாத்திரை. சுவாமிகள் இந்த யாத்திரையினின்றும் கல்கத்தாவுக்குத் திரும்பி வந்ததின் பின்னர், சுவாமிக ளுக்குச் சரீரம் அதிக அசௌக்கியம் அடைய ஆரம்பித்து விட்டது. சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் சிஷ் யர்களும் வருந்தி, 'எந்த நிமிஷத்தில் என்ன நேரிடுமோ?' என்று பயந்துகொண்டிருந்தார்கள். சுவாமிகள் இனி மேல் எவ்வித வேலையிலும் சிரமம் எடுத்துக்கொள்ளா மல் சுகமே சிரமசாந்தி செய்துகொண்டிருக்க வேண்டும்' என்று அவர்கள் விரும்பினார்கள்; 'சுவாமிகள் பரிபூர்ண மாகச் சுகமடையும் வரையில் எங்கும் போதக் கூட்டங்க ளுக்குப் போதல் கூடாது' என்று அவர்கள் சுவாமிகளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள்.

சுவாமிகளுக்கு ஓய்ந்திருப்பதற்குப் பிடிக்கவில்லை யாயினும், தமது சகோதர சந்யாசிகளுடையவும் சிஷ்யர்க ளுடையவும் வேண்டுகோளுக்கு இணங்கி, அதிகமாகப் பொதுஜன காரியங்களில் தலையிடாமல் சுமார் ஏழுமாத காலம் வரையில் ஓய்வு எடுத்துக்கொண்டு காலம் கழித் தார். சுவாமிகளைச் சுற்றியிருந்தவர்கள் சுவாமிகள் சுக மடைதற்கு, சீக்கிரத்திலே வியாதி நீங்கி சொஸ்தமடைவ

தற்கு வேண்டிய வெல்லாம் செய்தார்கள்; பிரபல வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்வித்தார்கள்; சுவாமிகளுடைய மூளையானது புத்திப் பிரயாசை வேண்டிய விஷயங்களில் பிரவேசித்துவிடாமல், சுவாமிகளிடம் எப்பொழுதும் சாதாரண, சிறு விஷயங்களைப் பேசி, சுவாமிகளைப் பாதுகாத்துவந்தார்கள்.

ஆனால், சுவாமிகளுடைய மனமானது, அவருடைய சிஷ்யர்களும் சுற்றி யிருந்தவர்களும் என்னதான் சிறு விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தாலும், ஏகாக்கிரதையில் நாடி, யோக நிஷ்டை யடைந்துவிடும்; இப்படி நிஷ்டை பொருந்துவது அவருடைய மனத்துக்குச் சகஜமாய்ப் போய்விட்டது. இதனால் சுவாமிகளுடைய மனத்தை மாத்திரம் இவர்களால் கட்டுப்படுத்த முடியாதுபோயிற்று. சில சமயங்களில் சுவாமிகள் ஒரு பஞ்சபாத்திரத்தில் சிறிது ஜலம் கொண்டுவரச் சொல்லி ஆக்ஞைபிடுவார்; அல்லது, ஹுக்கா கொண்டுவந்து வைக்கும்படி கூறுவார்; சிஷ்யர்கள் அவ் வாக்ஞையை நிறைவேற்றிவிட்டு, சுவாமிகளின் எதிரே வந்து கைகட்டி நின்றுகொண்டு "சுவாமி! ஆய்விட்டது" என்பார்கள்; ஆனால், சுவாமிகளுடைய மனமானது இதற்குள் நிஷ்டையில் லயித்துவிடும்; அவருடைய செவிகள் அவர்களுடைய வார்த்தைகளை ஏற்கா.

ஆனால், இக் காலத்திலும் சுவாமிகள் தம்மிடம் வந்தவர்களுக்கு வேதாந்த பாடம் சொல்லாம லிருந்ததில்லை. உலகில் பல பாகங்களிலும் தாம் ஏற்படுத்தியுள்ள பல

ஸ்தாபனங்களும் சரிவர நடந்து வருகின்றனவா? என்று கடிதப்போக்கு வரவுகளின் மூலமாகத் தெரிந்துகொண்டு, அமெரிக்காவிலே, இங்கிலாந்திலே, இந்தியாவிலே தமது கொள்கைகள் வேரூன்றி விருத்தி படைந்து வருகின்றன என்று அறிந்து மகிழ்வார். சில சமயங்களில் சுவாமிகள் தாமாக உட்கார்ந்துகொண்டு பிரஹ்மாநந்தமாகப் பாடுவார்; சில சமயங்களில் தமது சிஷ்யர்களேயும் தம்மைச் சுற்றிலும் உட்கார வைத்துக்கொண்டு, எல்லோரும் ஒரே குரலாய்ப் பாடுவார்கள். சில சமயங்களில் சுவாமிகள் சம்பாஷணேயில் புகுந்துவிடுவார்; விநோதமான விஷயங்களேப் பற்றிச் சம்பாஷிப்பார்; இருந்தாற்போலிருந்து மிகமிக உயர்ந்த விஷயங்களேப்பற்றிப் பேசப் புகுந்துவிடுவார்; அப்பொழுது சிஷ்யர்கள் ஜாக்கிரதையாகி, சுவாமிகளுடைய சம்பாஷணேயை மாற்றிச் சாதாரண விஷயங்களேப்பற்றிப் பேச ஆரம்பிப்பார்கள், சுவாமிகளுடைய மனமானது சிரமம் எடுத்துக் கொள்ளாதிருக்கும் பொருட்டு.

இந் நாட்களிலே இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் சுவாமிகளேத் தரிசித்துச் சுவாமிகளுடைய உபதேசமும் கடாக்ஷமும் பெறுவதற்குத் திரள் திரளாக வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் இக்கூட்டங்களினிடையே, குழந்தைகளினிடையே திரியும் பிதாவைப்போல, வெகு தாராளமாக, அத்தியந்த அன்பு மிகக் கொண்டவராகி, சஞ்சரித்து வந்தார்; வருகின்ற ஜனங்களினிட மெல்லாம் அவரவர்களுடைய யோக க்ஷேமங்களே விசாரிக்கத் தவற

மாட்டார். அங்கு ஒருதரம் சென்று அவரைத் தரிசித்து அவரிடம் சம்பாஷிக்கும்படியான பாக்கியம் பெற்றவர்கள் பின்னர் அவரிடத்தில் பக்தி செலுத்தாமலிருக்க முடியாது. மடத்திலே செய்யப்பட்ட சிறு சிறு வேலைகளைக் கூடச் சுவாமிகள் வெகு சூக்ஷமமாகக் கவனித்துவந்தார்; மடத்திலே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த வேலைக்காரர்களையும் சுவாமிகள் தமது சொந்தப் புத்திரர்களைப் போலப் பாவித்து நடத்திவந்தார். மடத்துப் பணியாளர்கள் பலரும் அவருக்குப் பணிவிடை செய்வதிலே, அப்பணிவிடை எவ்வளவு பெரியதாயினும் சரியே, எவ்வளவு சிறியதாயினும் சரியே, ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு செய்வார்கள்.

சுவாமிகள் வேலூர் மடத்திலிருந்து அடிக்கடி கல்கத்தா நகருக்குப் போய் வருவார்; கல்கத்தாவுக்கு வேலூரிலிருந்து படகிலே போகவேண்டும். சுவாமிகள் கல்கத்தாவுக்குப் படகு ஏறிவிட்டால், சுவாமிகளுடைய சிஷ்யர்கள் சுவாமிகளிடம் எவ்வளவு பக்தி செலுத்தினார்களோ அவ்வளவு பக்தியுடனே படகோட்டிகளும் உற்சாக பூரிதர்களாய்ப் படகு செலுத்துவார்கள். சுவாமிகள் சில சமயங்களிலே கௌபீனம் தவிர, வேறோர் ஆடையு மில்லாதவராய், மடத்திலே சுற்றிக்கொண்டிருப்பார்; சில சமயங்களிலே காஷாய உடை தரித்து, மடத்திலிருந்து ரஸ்தாவுக்குச் செல்லும் ஒற்றையடிப்பாதையிலே நடப்பார்; இப்பொழுது ஏதோ ஆழ்ந்த ஆலோசனையை யுடையவராகவும்

காணப்படுவார். இப்படிச் சுற்றிக்கொண்டே யிருப்பார், சஞ்சரித்துக் கொண்டே யிருப்பார், நடந்துகொண்டே யிருப்பார்; திடீரென்று மனத்தை அந்தர்முகப்படுத்தக் கருதிவிடுவார்; வழியிலே ஏதேனும் ஒரு விருக்ஷத்தினடியிலோ, கங்காதீரத்தில் ஏதேனும் ஒரு இடத்திலோ, உட்கார்ந்து நிஷ்டையில் அமர்ந்துவிடுவார். குருவைப்பற்றிய ஞாபகம் வந்துவிடும்; குரு தியானத்திலே மனம் சென்றுவிடும்; ஜகன்மாதாவைப்பற்றி நினைத்துவிடுவார்; அப்படியே சுவாமிகள் லோகமாதாவைத் தியானிக்க ஆரம்பித்துவிடுவார்; சில சமயங்களிலே சுவாமிகள் இரண்டற்று ஏகமாய்த் தானே தானு யிலங்கும் பிரஹ்ம நிஷ்டையிலமர்ந்துவிடுவார்.

சில நாட்களில் சுவாமிகள் கல்கத்தாவிலே பலராமருடைய கிருகத்தில் தங்கி, தமது நண்பர்களுடனும் மற்றவர்களுடனும் ஆநந்த சம்பாஷணை செய்து காலங் கழிப்பார்; சின்னாட்களில் அவர், மடத்திலேயே பல புஸ்தகங்களைப் படிப்பதிலே நேரம் செலுத்திக்கொண்டு இருந்துவிடுவார். சில சமயங்களிலே சுவாமிகளுக்குப் பூர்வ காலத்து உக்கிரவேகம் வந்துவிடும்; வராநகர் மடத்திலே யிருந்த பொழுது, சுவாமிகள் அமெரிக்கா செல்வதற்கு முன்னே, சுவாமிகள் எப்படிக் கொதித்துச் சீறிக்கொண்டிருந்தாரோ, அம்மாதிரியான கொதிப்பும் சீறலும் வந்துவிடும்; அப்பொழுது மடம் முழுதும் ஆநந்தம் வியாபிக்கும்; சுவாமிகளுடைய முகத்திலிருந்து ஒருவித கம்பீர, ஆத்ம

ஞான ஒளி நாலாபக்கங்களிலும் வியாபித்து வீசும்; அப்பொழுது அங்கிருந்தவர்களெல்லோரும் வேறோர் உலகத்துக்கு மாற்றப்பட்டு விடுவார்கள். சில சமயங்களிலே சுவாமிகள் தம்மைச் சுற்றி யிருந்தவர்களுக்கு உலகத்தின் பற்பல தேசங்களின் சரித்திரங்களை யெடுத்துக் கூற ஆரம்பித்துவிடுவார்; அசகாயசூரர்களாய் அவனி முழுதையும் ஜயித்து ஆண்ட அஞ்சா நெஞ்சினராம் மகாவீரர்கள், உலகு முழுதையும் அடக்கித் தமது குடைக்குள் ஆள விரும்பிய அநேக சக்கரவர்த்திகள், பூமி முழுதும் புகழ் பரந்து விளங்கிய பெரிய பெரிய சக்கராதிபத்தியங்கள் அவ்வக் காலத்து நாகரிகங்கள், ராக்ஷதர்களும்[நடுங்கும்படி யுத்தம் செய்து போர்க்களத்திலே ஒப்பாரும் மிக்காருமின்றி ஜயகோஷம் புரிந்த வீராதி வீரர்கள், உலகுக்கு உணர்வை யூட்டிய உத்தம ஞானிகள், எல்லாம் கேட்பவர்கள் முன்னிலையில், கேட்பவர்களுடைய மனக் கண்ணாடியில் பிரத்தியக்ஷத்தில் போலக் கிளம்பிவிடும்.

இன்னும் சுவாமிகள் தமது அந்தரங்க நண்பர்களிடமும் சிஷ்யர்களிடமும் பேச ஆரம்பித்துவிட்டால், இன்ன விஷயம்தான் என்றில்லை; பலவாறான, குழப்பம் மிகுந்த, யுக்திக்குச் சிக்கலான விஷயங்களெல்லாம் பேசப்படும். மரணசிந்தனை, அதனால் ஏற்படுகின்ற தியாகம், காமினி காஞ்சன தியாகமே (பெண்ணாசையும் பொன்னாசையும் விடுதலே) ஆத்ம ஞானாபிவிருத்திக்கு உண்மையான உரைகல், திடவிசுவாசமே தெய்வ பக்திக்கு முதற் சோபானம்,

வைராக்கியமே முமுக்ஷுவுக்கு வஜ்ராயுதம் இவை போன்ற அரிய பெரிய விஷயங்களெல்லாம் பேசப்பட்டன. ஆத்ம சக்தியில் அளவற்ற நம்பிக்கை வைக்கவேண்டும்; ஜனசமூகம் முன்னேற வேண்டுமானல், வாலிபர்கள் கடுமையான பிரஹ்மச்சர்யாச்ரமத்தைக் கைக்கொள்ளவேண்டும்; நமது தாய் நாடு மேன்மையடைய வேண்டுமானல், பௌருஷத் தன்மை வாய்ந்த புருஷர்கள் வேண்டும்; சங்கீதமும் சாஹித்தியமும் பரிபூர்ணத்துவம் அடைந்தது நம் நாட்டிலே தான்; ஆனல், இப்பொழுது இந்திய சங்கீதத்திலே பெண்மை மிகுந்திருக்கிறது; மெல்ல அதை நீக்கி, ஆண்மையைப் புகுத்தி அதை ஸ்வதந்திர உணர்ச்சி யுள்ளதாக்க வேண்டும்; நமது சாஹித்யத்திலே உயிர் குன்றி ஒளியற்றிருக்கிறது; ஆகையால், அதில் உயிரைப் புகுத்தி, அது ஒளி மிகுந்து வீசும்படி செய்யவேண்டும்.

குருகுலவாச வழக்கம் மிகச் சிறந்தது; தேசத்திலே எங்கெங்கும் மடங்கள் ஸ்தாபனம்செய்து அங்கங்கே பாடசாலைகள் ஏற்படுத்தி, அப் பாடசாலைகளில் வேதாந்தம் போதிக்கப்படுவதுடன், மேனுட்டுச் சாஸ்திர முறைகளும் நன்கு கற்றுக் கொடுக்கப்படவேண்டும். ஐரோப்பியச் சிற்பஞானத்திலும் ஆசியச் சிற்பஞானமே உயர்ந்தது. வாலிபர்கள் தொழில்களில் கல்வி யடைதற்குள்ள வசதிகள் செய்யப்படுதல் வேண்டும்; ஜப்பானியர் மேன்மை யுற்றதற்கு ஜப்பானியர்களுடைய ஒற்றுமையும் இடைவிடா ஊக்கமுமே காரணமாகும். வம்சபாரம்பரையாகக் குலகுரு

க்கனென்று சிலரை ஏற்றுவரும் வழக்கம் மிகவும் கெடுத லானது; இப்பொழுது பிறப்பினால் மாத்திரம் பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் ஜாதிவேறுபாடுகள் குணங்களையும் கர்மங்களையும் அநுசரித்து நல் அஸ்திவாரத்தில் நாட்டப் படவேண்டும். இந்தியா தேசத்தில் எல்லாவற்றுக்கும் முதலில் தரித்திரம் நீங்குவதற்குள்ள வழிகள் செய்யப் படவேண்டும்; சந்யாசிகளுக்கு வேதசாஸ்திர ஞானம் மாத் திரம் அன்று, லௌகிக ஞானமும் போதிக்கப்படல்வேண் டும்; கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்னும் சதுர்வித மார்க்கங்களும்ஏககாலத்தில் அநுஷ்டிக்கப்படல்வேண்டும். ஈச்வரன் காலாகாலங்கட்குத் தகுந்தவாறு அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக அவதாரம் செய்கிறார்' என்கிற கொள்கை யுண்மையானதே. ஸ்ரீ ராம கிருஷ்ணர் உலகைஉய்விக்கும் பொருட்டு அவதரித்த மஹா புருஷர். நிஷ்டை விதங்களிலே சிறந்தது நிர்விகற்பசமாதி நிஷ்டை. பிரஹ்மாநுபூதியே மனுஷ்ய ஜன்மப் பிரயோச னம். துன்புறுவோர்களிடத்து அநுதாபம் காட்டவேண் டும். இந்தியப் பொது ஜனங்கள் நாளுக்குநாள் அறிவின் மையிலும் வறுமையிலும் அமிழ்ந்துகொண்டே போகிறார் கள்; அவர்களை உயர்த்தவேண்டியது பாரததேசத்தில் உண்மை யன்புள்ள ஒவ்வொருவருடையவும் கடமை யாகும்; சாதுக்களிடத்தில்போலவே சண்டாளர்களிடத்தி லும் ஈச்வரன் சாந்நித்தியமாயிருக்கிறார்; சாக்ஷாத் பர மேஸ்வரன் சர்வ கிருபாநிதி. நமது தேசத்திலே உண்மை யான ஜாதி தத்துவம் போய், இப்பொழுது அது ஒரு

வருக்கொருவர் "என்னைத் தொடாதே, உன்னைத் தொடாதே" என்று சொல்லிக்கொண்டு சச்சரவு செய்வதில் வந்து நிற்கிறது. சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும். 'சிவனே பெரியவன்,' அல்ல, 'விஷ்ணுவே பெரியவன்' என்பது போன்ற மூடவீரக் கொள்கைகளெல்லாம் ஒழிந்துவிடவேண்டும். ஜாதியிலே உயர்வு, தாழ்வு என்பது போய்விடவேண்டும். பிரதானமான ஜாதிகளுக்குளேயே ஏற்பட்டிருக்கும் பிரிவினைகளெல்லாம் நீங்கி இவ்வுட் பிரிவினை ஜாதிகளுக்குள்ளே கொள்வன கொடுப்பன ஏற்படாதல் வேண்டும். இந்திய ஸ்திரீகளுடைய நிலைமை பரிதபிக்கத்தக்கதா யிருக்கிறது; இவர்களுக்குக் கல்வி கொடுத்து, இவர்களை உயர்ந்தல்வேண்டும், வேதங்களை உலகுபகாரார்த்தமாக வெளியிட்ட மஹரிஷிகளின் பெருமை உரைக்கும் தரத்ததன்று; நமது ஜனசமூகத்து நாடிநரம்புகள் இப்பொழுதுபலவீனமடைந்திருக்கின்றன; ஆகையால், இவற்றினுள்ளே பலத்தையும் நிர்ப்பயத் தன்மையையும்புகுத்துவதற்காக,ஸ்ரீராமன்,ஸ்ரீகிருஷ்ணன், மஹாவீரஹநுமான் போன்ற ஞான தீர வீர அவதார புருஷர்களை ஜனசமூகம் முக்கியமாகப் பூஜிக்கும்படி செய்தல் வேண்டும்."

இவை போன்ற விஷயங்களைப்பற்றிச் சுவாமிகள் பேச ஆரம்பித்துவிட்டால், கேட்பவர்கட்குப் பொழுது போவதே தெரியாது; இச் சம்பாஷணைகள் கேட்பவர்கட்கு உள்ளுணர்வை யுண்டாக்குவது மாத்திரமல்லாது,

செவிகட்கு ஆநந்தகரமாயு மிருக்கும். சுருக்கத்தில் சுவாமி கள் ஆத்மஞானம், ஜனசமூக நியாயங்கள், மேனாட்டு சாஸ்திரங்கள், சரித்திர விஷயங்கள் முதலிய சகல விஷ யங்களைப்பற்றியும் பேசுவார்; ஆனால், ஒரே விஷயத்தைப் பற்றிப் பல தடவையிலும் புதிய புதிய மர்மங்களையும் பொருளையும் வெளியிடுவார்; விஷயம் ஒன்றேயா யிருந்தா லும் எப்பொழுதும் அது புதிதாகவே யிருக்கும்.

இக் காலத்திலே சுவாமிகள் அடிக்கடி சங்கீதத்திலே தம்மை மறந்துநிற்பார்; அல்லது, நிஷ்டையிலே தம்மை மறந்துநிற்பார்; இவ் வுலகமே அவருக்கு மறைந்துவிடும்; வேறு உலகத்திலே, ஆநந்தமயமான அற்புதமான வேறு உலகத்திலே அவர் இருப்பது போலத் தோன்றும். சுவாமிகள் இப்பொழுது நீரிழிவு வியாதியினால் பீடிக்கப் பட்டிருந்தா ரென்பதும், அதனால் அவர் தமது மூளைக் காவது சரீரத்துக்காவது கடினமான வேலை கொடுக்கக் கூடாதென்று வைத்தியர்களால் விதிக்கப்பட்டிருந்தா ரென்பதும் வாசகர்கள் தெரிந்திருக்கலாம். ஆகையால், அவருடைய சிஷ்யர்களும் நண்பர்களும் இவர் அதிக சிரமம் எடுக்காதவாறு ஜாக்கிரதையாகக் கவனித்து வந் தார்களென்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், சுவாமிகள் அநேக நாட்களில் சமையலறைக் குள்ளே நுழைந்து, சமையலை மேற்பார்வை பார் க்க ஆரம்பித்துவிடுவார்; சுவாமிகள் சமையற்றொழிலிலே மஹாநிபுணர் என்று முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது;

அவர் தாமே பதார்த்தங்களைப் பக்குவம் பண்ண உட்கார்ந்துவிடுவார்; அடுப்பண்டை உட்கார்வதினாலே அவருடைய சரீரத்திலே வியர்வை பொழியும்; அவருக்கு அடக்க முடியாத தாகமெடுத்துவிடும்; நண்பர்களும் சிஷ்யர்களும் வருந்துவார்கள். என் செய்வது? சில சமயங்களிலே இந்தியா தேசத்தைப்பற்றிய நினைப்புக்கள் வந்துவிடும்; 'இந்தியா ஏற்றமடையும் நாள் எந்நாளோ?' என்று ஏக்குவார்.

இப்படி யவருடைய மனம் தத்தளிக்கும்பொழுது, ஏதேனும் ஒரு வார்த்தை அகஸ்மாத்தாய்க் கூறுவார்; அவ்வார்த்தையிலே அவருடைய நினைப்பின் சக்தி யிவ்வளவென்று தெரிய வரும். சில சமயங்களிலே, அவருடைய கண்களிலே ஒரு நூதன ஒளி வீசும்; அவருடைய சரீரத்திலேயே உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் ஒரு அத்தியாச்சர்யமான சக்தி வியாபித்திருப்பது போலத் தோன்றும்; அப்பொழுது எவரும் அவரை யணுகுவதற்கு அஞ்சுவார்கள். ஆ! ஆ! அக்காலங்களிலே, அவருடைய முகம்தான் என்ன கம்பீரமாயிருந்தது! அவர்தான் எவ்வளவு இன்பகரமாய் விளங்கினர்! மிகமிக அற்ப விஷயங்களைப்பற்றிச் சுவாமிகள் பேசினாலும், அவர் பேசியமாதிரி கேட்பவர்கள் அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் பற்றி யோசனை செய்யும்படி செய்துவிடும்.

சுவாமிகள் சிரித்து விளையாடிக்கொண்டே யிருப்பார்; முகம் கடுகடுத்துவிடும்; ஆழ்ந்த ஆலோசனையி லிறங்கி

விடுவார்; ஆனால், எப்பொழுதுமே அவர் ஒரு அத்தியாச்சர்யமான புருஷராயிருந்தாரென்பதில் சந்தேகமில்லை. அவருடைய பக்தர்களுக்கு அவருடைய ஒவ்வொரு புதிய மாதிரியும் ஏககாலத்தில் மானுஷீகமாயும் தெய்வீகமாயும் இருந்தது. சுவாமிகள் ஒரு அபிப்பிராயத்தை விவரித்துக் கொண்டிருப்பார்; உடனே அதற்கு நேர்மாறான அபிப்பிராயத்தை, முதல் அபிப்பிராயத்தை எவ்வளவு உறுதியாகவும் தெளிவாகவும் பேசி ஸ்தாபித்தாரோ, அவ்வளவு உறுதியாகவும் தெளிவாகவும் பேசி ஸ்தாபிப்பார். ஸ்வாமிகள் சர்வ சங்க பரித்தியாகம் செய்த சந்யாச நிலைமையினின்று பேசுவார்; அடுத்த நிமிஷத்திலே பழுத்த தேசாபிமானியாயிருப்பார்; உடனே மஹா வித்துவானாக விளங்குவார்; மறுபடியும்மகாத்மாவாகத்தனிப்பார். சுவாமிகள் அவ்வளவு கடூரமான வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தும் அபாரமான தீர்க்க திருஷ்டியையும் சமர்த்தையும் வெளிப்படுத்துவது கண்டு அவரைக் கண்ட அனைவரும் ஆச்சர்ய முற்றார்கள். அவருடைய ஸ்தூல சரீரம் என்னவோ நாளுக்குநாள் பலஹீனமாய்க் கொண்டு சிதிலமாய் வந்தது வாஸ்தவம் தான்; ஆயினும், அவருடைய மனமானது இக்காலங்களிலே அகண்ட ஒளி பெற்றுத் திகழ்ந்தது என்பதை அனைவரும் அறிந்து வியப்புற்றார்கள். சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகள் ஸ்வாமிகளைத் தங்களுடைய பால்ய நண்பன் நரேந்திரனே யென்று கருதினாலும், சுவாமிகளைக் கண்டால் அளவற்ற பயபக்தி காட்டினார்கள். வியாதியினால் என்ன செய்ய முடியும்? ஸ்தூல சரீரத்தைத்தான் பாதிக்க

முடியும்; சூட்சும சரீரத்தைத் தொட முடியுமா? ஒரு வேளை சூட்சும சரீரத்தையும் பாதித்ததென்று வைத்துக்கொண்டாலும், ஆத்மாவை அணுகவாவது முடியுமா? ஆனால், சுவாமிகள் வருந்திய வியாதி நீரிழிவு ஆகையினாலே, சில சமயங்களிலே சுவாமிகளுக்குச் சரீரம் சுகமாய் விட்டதுபோலத் தோன்றும்; சுவாமிகளுக்குஏற்பட்டிருந்த களைப்பும் பலஹீனமும் நீங்கிவிட்டன போலத் தோன்றும். நீரிழிவு வியாதியின் லக்ஷணம் இதுதான். வியாதி படிப்படியாய்ச் சுவாமிகளைத் தனக்கு இரையாக்கி விழுங்கிக்கொண்டு வந்தபோதிலும், வாரகா மடத்திலே சுவாமிகள் எவ்வளவு குதூகலத்துடனும் உற்சாகத்துடனும் இருந்தாரோ, அவ்வளவு உற்சாகத்தையும் குதூகலத்தையும் இக்காலத்திலும் அடைந்ததுண்டு. ஆனால், இத்தகைய சந்தர்ப்பங்களிலேதான், சுவாமிகளுடைய நண்பர்களும் சிஷ்யர்களும் சுவாமிகளைச் சும்மாவிருக்கும்படி கெஞ்சிக் கதறி வேண்டிக்கொள்வார்கள்; ஏனென்றால், சுவாமிகளுடைய குதூகல வேலையினால் சரீரபீடை அதிகமாய்விட்டாலென் செய்வது? இவர்களுடைய வேண்டுகோள்கட்கு இணங்கிச் சுவாமிகள் சும்மா இருப்பார்; ஆனால், கொஞ்ச நேரத்துக்குத்தான் அவரால் சும்மா இருக்க முடியும்? உலகு முழுதுக்கும் உயர்ந்த உண்மைகளை யுபதேசித்த அந்த மனத்தை யடக்கி வைப்பதென்றால் எவ்வளவு அசாத்தியம்! தவிர, அவர் ஜீவித வாழ்க்கையில் உதாசீனம் பெற ஆரம்பித்துவிட்டா ரென்பது வெட்ட வெளியாகத் தெரிந்தது. "ஒரு விஷயத்துக்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கலாம்; இந்த ஜீவிதம் நித்தியமான தன்று," என்று சுவாமிகள் முன் அநேக சந்தர்ப்பங்களில் கூறிய

வார்த்தைகள் இப்பொழுது சுவாமிகளுடைய சிஷ்யர்க ளின் ஞாபகத்துக்கு வந்தன. அவர் இப்பொழுது சரீர பந்தத்தினின்றும் தம்மைத் தாமே நழுவ விட்டுக்கொள்ளு தற்கு ஆரம்பித்துவிட்டார் என்பது விளக்கமாயிற்று. அவர் சரீரத்தை யுதறி யெறிந்துவிடும்படியான சமயம் மேன்மேலும் நெருங்கிக்கொண்டே வந்தது.

ஆ! ஆ! சுவாமிகளிடத்தில் மடத்திலிருந்த அனைவ ரும் அன்பு செலுத்திய விதந்தான் என்ன? அவ ருடைய அழகே அழகு! அவருடைய குரலின் இனிமையே இனிமை! ஜீவாத்மாக்களை யெல்லாம் அத்தியந்த நெருக்க மாக ஒன்று சேர்க்கின்ற ஒரு அபாரமான சக்தி அவ ரிடத்தில் பிரகாசித்தது. அவருடைய சகோதர சந்யாசிக ளும் சிஷ்யர்களும் அவரிடத்தில் தங்களை அடியோடு சமர்ப்பணம் செய்துகொண்டுவிட்டார்கள்; அவருக்கு புலிப்பால் வேண்டுமானாலும் கொண்டுவந்து கொடுப்பார் கள், அவ்வளவு அன்பு அவரிடத்தில். அவர் ஒரு வார்த்தை சொல்கிறது, அவ் வார்த்தையை நிறைவேற்று கிறதென்றால் அவருடைய பக்தர்களுக்குப் பரமாநந்தம்; அவருக்குத் திருப்தி யுண்டாகும்படி நடக்கவேண்டு மென்பதே அவருடைய சிஷ்யர்களுடையவும் சகோதர சந்யாசிகளுடையவும் லக்ஷியம். சுவாமிகளுக்காக அவர் கள் என்ன வேண்டுமோ, செய்யத் தயாராயிருந்தார்கள்; சுவாமிகளுடைய அபாரமான அன்புக்கு முன் அவர்கள் தலை குனிந்து அடிமைக ளாய்விட்டார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோபிகாஸ்திரீகளின் ஹிருத யங்களை யெல்லாம் கொள்ளை கொண்டதுபோல, ஸ்வாமிக ளும் தமது சகோதர சந்யாசிகளுடையவும் சிஷ்யர்க ளுடையவும் ஹிருதயங்களை யெல்லாம் கொள்ளை கொண்ட கள்வ ரானார். சுவாமிகள் தமது நண்பர்களுக்கும் சிஷ் யர்களுக்கும் மத்தியில், "தேவர்களின் மத்தியில் விளங்கும் தேவேந்திரனைப் போல", மஹா கம்பீரத்துடனே, புரு ஷோத்தமராய், தெய்வீக தேஜஸ் வாய்ந்து உலாவினார்.

சுவாமிகள் சின்னாட்கள் மடத்தை விட்டு எங்கேனும் வெளியே போயிருந்து, ஒரு நாள் திரும்பி வந்துவிட் டால் போதும், சுவாமிகளுடைய சிஷ்யர்களும் மற்றவர்க ளும் ப்ரஹ்மாநந்த மடைந்தவர்கள் போல, ஆடிப் பாடிக் குதித்து ஆர்ப்பரிப்பார்கள், மெய் மறந்து ஆநந்தநிர்த் தனம் செய்வார்கள். சுவாமிகளுடைய சிஷ்யர்களில், ஹிந்து சிஷ்யர்களில், பெரும்பான்மையோரும் தனவந்தர்க ளல்லர், ஏழைகளே; ஆனல், ஞான சம்பத்து மிகுதி யாகக் கொண்டவர்கள்; சுவாமிகள் இக் காரணத்தினாலே யே இவர்களிடம் விசேஷ அன்பு செலுத்திவந்தார்; அவரிடத்திலே ஒரு ஆகருஷண சக்தி யிருந்தது; அவர்கள் அவரிடத்தில் வைத்த அன்புக்கு எல்லையே யில்லை. சுவாமி களுடைய ஹிருதயப் பெருமையை அவர்கள் தங்கள தாக்கிக் கொண்டார்கள்; சுவாமிகளை யவர்கள் தங்கள் ஹிருதயங்களில், பொன்னினும் உயர்ந்த பூஷணமாக, வைத்துப் போற்றி வந்தார்கள். அவரிடத்திலே இனிமை

யும் பெருமையும் ஏகமாய்க் கலந்திருந்தது. அவருடைய பார்வை, அவருடைய முகம், அவர் நடந்த மாதிரி, அவர் பேசிய மாதிரி, எல்லாம் அவர்களை மயக்கி வசப்படுத்தி விட்டன.

சுவாமிகள் ஒரு நாள் ஒருபுதிய காஷாய உடை உடுத்திக் கொள்வதாகவைத்துக்கொள்வோம், அல்லது தலைப்பாகை யை ஒரு புது மாதிரியில் கட்டித் தரித்துக்கொள்வதாக வைத்துக்கொள்வோம்; அன்று சுவாமிகளுடைய சிஷ்யர் களுக்கு ஒரு விசேஷ கோலாகல நாளாய்விடும். சுவாமிக ளுடைய சகல நடபடிக்கையும் சுவாமிகடைய சிஷ்யர்க ளுக்கு அற்புதமானவையேயா யிருந்தன. சிஷ்யர்கள் அவரை ஈச்வரனே உருவெடுத்து வந்ததாகக் கருதி னார்கள். ஆகையால், அவருடைய செய்கைகள், பேச் சுக்கள் எல்லாவற்றிலும் ஈச்வர விசேஷத் தன்மை அவர்க ளுடைய கண்களுக்குப் புலப்பட்டது.

சில சமயங்களில் அவர் ஏது மறியா இளங் குழந்தை போ விருப்பார்; அப்பொழுது அவருடைய சிஷ்பர்கள் அவருடைய களங்கமற்ற அன்பு, பலவீனம் பெருமை முதலியவற்றைக் கண்டு மகிழ்வார்கள். இந்தச் சந்தர்ப் பங்களிலே, தத்துவ சாஸ்திரமானது கிராஹ்பத்துக்குப் பாத்திரமாகாத ஏதோ ஒரு சூட்சும விஷபமாய்விடும்; ஆஸ்திகசாஸ்திரம் பொய்யாய் விடும்; மூர்த்திகளெல்லாம் வெறு விக்கிரகங்கள் மாத்திரமேயாய் விடுவார்கள். ஆ! சுவாமிகள் ஒருவரே அவர்களுடைய ஹிருதயங்களிலே

சந்து, பொந்து, மூலை, முடக்கு ஒன்றும் விடாமல் எங்கும் வியாபித்து நிரம்பி நின்றவர், அவர்களுடைய ஹிருதய ரஞ்சகர்.

இன்னும் அவர்கள் சுவாமிகளை மஹா சக்தியின் அவதாரமாகவும் கருதினர்கள். அந்த மடத்திலே உள்ள சந்நியாசிகளுக்கு இவர்கள் சுவாமிகளுடைய முக மண்டலத்தைப் பார்த்த மாத்திரத்திலே மஹா தியாகியான சாக்ஷாத் பரமேஸ்வரனே இவ்வுரு எடுத்திருப்பது போலத் தோன்றும். சுவாமிகளுடைய சந்நிதானத்திலே யிருக்கும்பொழுது அவர்களினுள்ளே ஒரு அபாரமான சக்தி நுழைந்து பிரமாதமான நினைப்புக்களை யெல்லாம் கிளப்பிவிடும். அவர்கள் இந்தச் சக்தியை உதவியாகக் கொண்டு மாயாபந்தத்தையும் உலக பலவீன மெல்லாவற்றையும் எதிர்த்து நிற்பார்கள் சில சந்தர்ப்பங்களிலே அவர்கள் இவ்வுலகைக் கடந்து, வேற்றுலகப் பிரக்ஞைகளை யடைவார்கள்; அப்பொழுது அவர்களது உள்ளம் ஆத்மீக இச்சையின் ஆதிக்கத்தினல் துடிக்கும். "இதற்கெல்லாம் காரணம் சுவாமிகளே" என்றும், சுவாமிகளிடத்தினின்றும் சிவஜோதி வீசுகின்றது" என்றும் கூறுவார்கள்.

சுவாமிகள் தாமே தனித்து மௌனமாக உட்கார்ந்திருந்தால், சிலர், அவரை மிகுந்த பயபக்தியுடன் பார்ப்பார்கள்; வேறு சிலர், களி மிகுந்த மனத்தினராய்க் காண்பார்கள்; இன்னும் சிலர், இளகிய மனத்துடன்

அளவற்ற அன்பு செலுத்தி அவரைப் பார்ப்பார்கள். சுவாமிகள் பிரபஞ்சப் பிரக்ஞையை நழுவ விட்டுவிட்டு, ஸ்தூல சூட்சும காரண சரீரங்களினின்றும் வேறுபட்டு, பஞ்சகோசங்களினின்றும் பிரஹ்மநிஷ்டையில் லயித்து பிரஹ்மாநுபூதியில் அமர்ந்துவிட்டால், அவருடைய முகத்திலே உபசாந்தம்திகழும்; சிஷ்யர்கள் இதனைக் கண்டு மகிழ்வார்கள். சில சமயங்களிலே சுவாமிகள் கண்களை நன்றாக விழித்து, தூர ஏதோஒன்றைப் பார்ப்பவர்போலப் பார்த்துக்கொண்டிருப்பார்; ஆனால், அவருடைய கண்கள் தூரத்திலுள்ள எதையும் பாரா. அவர் சாதாரண வாழ்க்கை வஸ்துக்களையும் விஷயங்களையும் கவனியாமல், தூரத்துக்கும் தூரமாய் மேன்மேலும் நழுவிக்கொண்டே போகும் நித்திய வஸ்துவையே பார்க்கிறாரென்று அப்பார்வை எடுத்துக் காட்டும்.

சுவாமிகள் சில சமயங்களிலே மடத்தின் மேல்மாடித் தாழ்வாரத்திலே யுட்கார்ந்துகொண்டு ஜகன்மாதாவின் க்ஷேத்திரத்துக் கோபுரங்களை உற்றுப்பார்த்த வண்ணமாயிருப்பார். சில சமயங்களிலே அவர் கீழே யுட்கார்ந்துகொண்டு, மடத்து நிலத்துக்கு அப்பால்தமது பார்வையைச் செலுத்துவார்; பிற்காலத்திலே நடக்கப்போவனவற்றைச் சுவாமிகள் தமது மனக்கண்ணால் கண்டு ஆச்சர்யமுறுவார். சுவாமிகள் ஆழ்ந்த ஆலோசனையி லிருந்துவிட்டால், அவருடைய கண்கள் சமுத்திரம் போன்று அவ்வளவு ஆழமுடையதாய்விடும். அவர் தமது உள்ளாழத்தைத்

தாமே கண்டு பிடிக்க மூழ்குபவர்போல, மனத்தை ஏகாக்ரப் படுத்திக்கொண்டு இருந்துவிடுவார்.

சில சமயங்களிலே அவர் கங்காநதியை உற்றுப் பார்த்துக்கொண்டே யிருப்பார்; தமது தாய் நாட்டின் பிற்கால நிலைமை அவருடைய மனக்கண்ணின் முன்பாக ஒருவாறு தோன்றும், உடனே ஆச்சர்ய மடைவார். சுவாமிகள் மெய் மறந்து நிஷ்டையி லிருக்கும்பொழுது, அவருடைய முகத்திலே ஆழ்ந்த விசனக்களை தோன்றும்; வேறு சில சமயங்களிலே ஆநந்தப் புயல் அடிக்கும். வெளியுலகத்துக்குச் சுவாமிகள் பிரக்யாதி பெற்ற சுவாமி விவேகாநந்தர்தாம்; போதகாசிரியர்தாம்; ஆசார்யர்தாம்; தேசாபிமானிதாம். ஆனால், அவருடைய சகோதர சந்யாசிகளுக்கோ அவர் சந்யாசி, மஹாத்மா, தலைவர், குழந்தை, நண்பர், குரு, அன்பு நாதன், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் புத்திரர், ஜகன்மாதாவின் புத்திரர் — அவர்களுடைய சமஸ்தமும் அவரேதான்.

சில சமயங்களிலே சுவாமிகள் மடத்தைச் சேர்ந்த மைதானத்திலே சுற்றிக்கொண்டே வந்து களைப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு, அல்லது நிஷ்டை செய்யும்பொருட்டு வில்வவிருக்ஷத்தினடியிலேவந்து உட்கார்வார்; பெரும்பான்மையும் பிரபஞ்சப் பிரக்ஞையை அறவே ஒழித்துவிட்டு, தானே தானைத் தனித்து நின்றுவிடுவார். இந்த வில்வவிருக்ஷத்துக்கு எதிரேதான் சுவாமிகளுடைய சரீரச் சாம்பல் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அங்குப் பளிங்

குக் கல்லினல் வெகு அழகிதாய்க் கட்டப்பட்ட ஒரு சமாதி நிற்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சமாதி க்ஷேத்திரத்துக்கும் மடத்துக் கட்டிடத்துக்கும் மத்தியில் இருக்கின்ற மைதானத்தில் உள்ள பெரிய தொரு மாவிருக்ஷத்தினடியில் சுவாமிகள் அடிக்கடி வந்து உட்கார்வார். இங்கே சுவாமிகள் அநேகமாகக் காலை நேரங்களில் காணப்படுவார்; ஒரு கட்டிலின்மீது உட்கார்ந்துகொண்டு, தமக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்த்து, அததற்குத் தகுந்தபடி மறுமொழி எழுதுவார்; அல்லது பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதுவார்; அல்லது புத்தகங்கள் எழுதுவார்; அல்லது வாசித்துக்கொண்டிருப்பார்; அல்லது எவரோடாவது சம்பாஷித்துக்கொண்டிருப்பார்.

மடத்திலே தென் கிழக்கு மூலையிலே இரண்டாவது மாடியில் சுவாமிகளுடைய அறை; மிகப் பெரியது; அதற்கு நான்கு ஜன்னல்களும் மூன்று கதவுகளும் உண்டு; சுவாமிகள் அநேகமாக எப்பொழுதும் இதிலேயே யிருப்பார். உள்ளே நுழைந்தவுடனே, வாசற்படிக்கு வலது பக்கத்து மூலையில் சமார் ஐந்து அடி உயரமுள்ள ஒரு கண்ணுடி வைக்கப்பட்டிருந்தது; அதற்கடுத்தாற்போல், அவருடைய காஷாய உடைகள் தாங்கி ஒரு அலமாரி யிருந்தது. அறையின் மத்தியிலே ஒரு இரும்புக் கட்டில் இருந்தது; அதன்மேல் வில்மெத்தை யொன்று போடப்பட்டிருந்தது; இது சுவாமிகளுக்குச் சுவாமிகளுடைய மேனுட்டுச் சிஷ்யர்களுள் ஒருவரால் கொடுக்கப்பட்டது. ஆனல், சுவாமி

கள் இதை உபயோகித்ததே யில்லை. சுவாமிகள் எப்பொழு தும் சாதாரணமான படுக்கையையே விரும்பினர்; தரை யிலே ஒரு பாய் விரித்து அதன் மேலே ஒரு ஜமக்காளம் விரித்து, சுவாமிகள் இப் படுக்கையிலேதான் படுத்துக் கொள்வார். அறையின் ஒரு ஜன்னல் பக்கத்திலே ஜிலுஜிலு என்று காற்று வீசும் சுகமானதொரு இடத்திலே, கடி தாசிகள், எழுத்துப் பிரதிகள், பேனா, மை, காகிதம், ஒரு கூப்பிடுமணி, ஒரு சிறிய தட்டிலே சில புஷ்பங்கள் இவற் றுடனே ஒரு சிறு மேஜை யிருந்தது. இம் மேஜையின் மீது சற்குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய படமொன் றும் இருந்தது. ஒரு பக்கத்திலே மான்தோல் ஆசனம் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது; இன்னொரு பக்கத்திலே கோப்பைகள், பீங்கான்களுடன் ஒரு சிறு மேஜையிருந் தது. சுவாமிகள் இதையும் உபயோகித்தது வெகு அபூர் வம். அதனருகே மடக்குக் கட்டிலொன்று போடப்பட் டிருந்தது. அறையின் உள்ளே நுழைந்தவுடன் இடது பக் கத்திலே ஒரு பெரிய அழகிய அலமாரியொன்று இருந் தது; இந்த அலமாரியில், சுவாமிகள் மேனாட்டில் இருந்த பொழுது அவர் தரித்திருந்தனவும் விலை மிகுந்தனவு மாகிய உடைகள், தலைப்பாகைகள் முதலியன நிறைந்திருந் தன. மேலே கூறப்பட்ட சாமான்களில் பெரும்பான்மை யும் அவருடைய மேனாட்டுச் சிஷ்யர்களால் வாங்கி யளிக் கப்பட்டவையாம்; அவை இப்பொழுதும் மடத்திலே வெகு பந்தோபஸ்தாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அறையிலே மிகமிகப் பிரதானமான வஸ்து என்ன

வென்றால், அங்கிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய படம் ஒன்று. சுவாமிகள் எப்பொழுதும் இதை மிகுந்த பயபக்தியுடனே பார்த்துக்கொண்டே யிருந்து, நிஷ்டையில் அமர்ந்துவிடுவார். சுவாமிகள் சகல விஷயங்களையும் இவ்வறையிலேயே நடத்திக்கொண்டார். அவர் எழுதுவதும் இவ்வறையிலேயே; அவர் பேராலோசனைகள் செய்ததும் இவ்வறையிலேயே; தமது சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ்யர்களுக்கும் அவர் பேருண்மைகளை விரித்துரைத்ததும் இவ்வறையிலேயே; சுவாமிகள் நண்பர்களுடன் சம்பாஷித்ததும் இவ்வறையிலேயே; சில சமயங்களில் அவர் போஜனம் செய்ததும் இவ்வறையிலேயே; அவர் நித்திரை செய்ததும் இவ்வறையிலேயே; அவர் நிஷ்டையில் உட்கார்ந்து ஈச்வரனுடன் அடிக்கடி இரண்டறக் கலந்துகொண்டதும் இவ் வறையிலேயே; அவர் கடைசியாக ஸ்தூல சரீரத்தையுதறிவிட்டு, மஹா சமாதி யடைந்ததும் இவ் வறையிலேயேதான்.

இன்றும் அவருடைய சாந்நித்தியம் அங்குப் பிரகாசிக்கின்றது. இவ் வறையிலுள்ள எல்லா வஸ்துக்களின் மீதும் ஒரு ஞானவொளி வியாபித்து வீசுகிறது. இப்பொழுது இவ் வறையானது மிகமிகப் பரிசுத்தமானதாக மதிக்கப்பட்டு, அவ்வறையிலுள்ள வஸ்துக்களும் அவர் மஹா சமாதி யடையும்பொழுது எப்படி யெப்படி வைத்துவிட்டுப் போனாரோ அப்படியப்படியே இன்னும் இருக்கின்றன. சுவற்றிலே யிருக்கும் வருஷம் மீ தேதிக் குறிப்புச்

சிறிதும் மாற்றப்படாமல், இன்னும் "1902 ஜூலை–2" என்றுதான் இருக்கிறது.

அவர் வழக்கமாக உட்கார்ந்து எழுதும் மேஜையைப் பார்த்தால், இப்பொழுதுதான் அவர் அங்கிருந்து எழுந்து வெளியே போயிருப்பது போலத் தோன்றும். அலமாரியிலே அவருடைய காஷாய உடைகள் இன்னும் மாட்டப்பட்டிருக்கின்றன. சுவர்களிலும் மெத்தைமீதும் படுக்கைகளிலும் மாத்திரம் சுவாமிகளுடைய படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன; சுவற்றிலே நன்றாக எடுத்துக் காட்டுகின்ற ஒரு இடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பெரியதொரு சித்திரப் படமொன்று வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த அறையானது நிஷ்டை செய்வதற்கு உபயோகப் படுத்தப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந்த அறையைத் தரிசிப்பதற்கு வந்துகொண்டிருக்கிறார்கள்; சிலர் பார்த்து ஆச்சர்யப்படுகிறார்கள்; சிலர் பார்த்துவிட்டு ஆறாத் துயரம் கொண்டு அழுகிறார்கள்.

சுவாமிகளுக்கு மடத்தினிடத்திலே அபிமானம் அதிகம். சுவாமிகளுக்குத் தமது அறையினிடத்திலே பற்று மிகுதி. சுவாமிகள் மேல் நாடுகளில் யாத்திரை செய்துவிட்டாவது, இந்தியாவிலே சஞ்சாரம் செய்துவிட்டாவது, திரும்பி மடத்துக்கு வருவாரானால், அவருக்கு என்று மில்லாத ஒரு குதூகலம் உண்டாகும். கொஞ்ச நேரம் கல்கத்தாவுக்குப் போய்விட்டு வந்தால்

கூட, தமது அறைக்குள் நுழைந்துகொண்டவுடனே அவருக்கு ஒரு ஆநந்தம் உண்டாகும். சுவாமிகள் 1900-ம் வருஷம் டிசம்பர் 19-ம் தேதி யன்று ஒரு அமெரிக்க ஸ்திரீ சிஷ்யருக்கு எழுதிய கடிதத்திலே பின் வருமாறு எழுதினர்:— "உண்மையில் நான் பறந்துகொண்டேயிருக்கும் ஒரு பக்ஷியாயிருக்கிறேன்! உல்லாசமானதும் சுறுசுறுப்பு உள்ளதுமான பாரிஸ் நகரம், கடோமான பழய கான்ஸ்டாண்டிநோப்பிள் நகரம், பிரகாசித்துக்கொண்டிருக்கும் சிறிய ஆதென்ஸ் நகரம், பெருங்கோபுரங்களுடைய கெய்ரோ நகரம் (இவை) பின் புறம் விடப்படுகின்றன; இப்பொழுது இங்கு நான் கங்காதீரத்தில் மடத்தில் எனது அறையில் எழுதிக்கொண்டிருக்கிறேன். மிக அமைதியாயும் அடக்கமாயு மிருக்கிறது; அகன்ற நதியானது பிரகாசமான சூர்ய ஒளியிலே நிர்த்தனம் செய்கிறது; எப்பொழுதேனும் வருகின்ற சாமான் படகுதான் அடிக்கடி துடுப்புகளினால் நீரை யடித்தலினாலே மௌனத்தை யுடைக்கின்றது. இங்குக் குளிர் காலம்......எல்லாம் பச்சையாயும் பொன் மயமாயும் இருக்கின்றது. புல் பட்டுப்போல பளபளவென்று இருக்கின்றது. காற்று குளிர்ச்சியாயும் திவ்யமாயும் ஆநந்தகரமாயும் இருக்கிறது........."

ஆ! ஆ! சுவாமிகளுக்கு மடத்தினிடத்திலும் அங்கு ஏற்படுகின்ற மௌனத்தினிடத்திலும் உபசாந்தியினிடத்திலும் என்ன ஆசை! ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சமாதி

யைத் தரிசிக்க வருபவர்கள், தம்மிடத்திலே சம்பாஷிக்க வருபவர்கள், சகோதர சந்யாசிகள், சிஷ்யர்கள், நண்பர்கள் ஆகியஎல்லோருக்கும் சுவாமிகள் அன்பே யுருவெடுத்து வந்ததுபோல விளங்கினர். சில சமயங்களிலே சுவாமிகள் மௌனமாக ஏகாந்தத்தில் இருக்க விரும்பிவிடுவார்; அப்பொழுது எவரும் அவருடைய அறையை அணுகத் துணியமாட்டார்கள். சில சமயங்களில் அவர் எவரையும் பாராமல் அநேக மணிநேரம் அப்படியே தமது அறையில் ஏகாந்தமாக இருந்துவிடுவார். பின்னர் வெளியே வருவார். அவருடைய முகத்திலே தேஜஸ் ஜ்வலிக்கும்; அல்லது அத்தியற்புதமாக ஆநந்தக் களை வீசும்; அல்லது அதிகார சக்தி முன்னே ததும்பி நிற்கும்; ஆத்மீக மஹிமை நிறைந்தவராயிருப்பார். அவர் ஏகாந்தத்தில் வீற்றிருந்த பொழுது, என்ன நடந்ததோ? யாவர் அறிவார்?

சுவாமிகள் நேர்மை மிகுந்தவர்; எவரைப்பற்றியேனும் ஏதேனும் கூற வேண்டுமென்று தோன்றிவிட்டால், உடனே அப்பொழுதே அவருடைய முகத்துக்கு முன்னிலையிலேயே சொல்லிவிடுவார்; எல்லாரிடத்தும் தாராளமாக இருப்பார். எல்லோரும் தமக்கு அடங்கி நடக்கும்படி செய்து கொள்வார். எப்படி? கடோமான ஆக்ஞைகளினலும் சட்டதிட்டங்களினலும் அல்ல; தமது அன்பினலும் வசிகரசக்தியினலுமே. விசேஷக் கொண்டாட்ட சமயங்களிலே சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளுடனும் சிஷ்யர்களுடனும் சேர்ந்துகொண்டு அவர்க

ளுக்குத் தலைவராக நின்று வீணை வாசிப்பார்; மத்தளம் அடிப்பார்; தாளம் போடுவார்; பாடுவார்; அங்கு இருந்த ஜனங்கள் அப்படியே மெய்மறந்து வீற்றுவிடுவார்கள். எல்லா விஷயங்கட்கும் அவர்தாம் தலைவர், மடத்துக்கே ஜீவாதாரம்.

இது மாத்திரமா? இன்னும் சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளைப் பரிகசிப்பார், கேலி பண்ணுவார், தொந்தரவு செய்வார், எல்லோரையும் விழுந்து விழுந்து சிரிக்கச் செய்வார்; இன்னொரு சமயத்திலே அவர் அவர்களுக்குப் போதனை செய்வார்; அவர்களுடைய கஷ்டங்களிலே உதவி செய்வார்; எப்பொழுதும் அவர்களிடத்திலே அத்தியந்த அன்பு பாராட்டுவார். ஒரு சமயத்திலே அவர் அவர்களைக் கண்டிப்பார்; ஆனால், அவர் அவர்களைப் பற்றிப் பிறரிடம் பேசும்பொழுது மிகமிக மதிப்பையும் மரியாதையையும் செலுத்தியே பேசுவார். ஏனென்றால், அவர்கள் சற்குருநாதருடைய புத்திரர்கள் என்பதும் தாம் அவர்களுடைய தாசாதி தாச னென்பதும் அவருடைய ஞாபகத்துக்கு வந்துவிடும். இவர்களெல்லோரும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புத்திரர்கள்தாமே. ஆகையினால், ஜகன்மாதாவினுடைய புத்திரர்கள்தாமே. சுவாமி விவேகாநந்தராகிய அவர் அவர்களெல்லோரினும் மிகமிக தேஜஸ் மிகுந்தவராயும் உயிர்நிலை போன்றும் இருந்தார். அவர்தாம் தலைவர், எமராக்ஷதன், அவர்களுடைய புத்திபீடம், அவர்களுடைய ஹிருதய ஸ்தானம், அவர்களெல்லோர்க்கும் ஆத்மா; மரணம் வரினும் அவர்களை விட்டு

நீங்காத அன்புடையவர். காசி புரத்திலே அவர்களெல் லோரையும் தாம் பாது காப்பதாகக் குருநாதரிடத்திலே இவர் ஒப்புக்கொண்டவராயிற்றே; குரு மூர்த்தியும் இவர்க ளெல்லோரையும் இவர் வசத்திலேதான் ஒப்புவித்தார். அவர் அபார ஆகருஷண சக்தி வாய்ந்த காந்தமாயிருந் தார்; அவர்கள் காரணம் தெரியாது தாமே இழுக்கப்படு கின்ற அத்தனை இரும்புத் துண்டுகளா யிருந்தனர்; ஆனால், எப்பொழுதும் அவரிடத்து அடங்கா அன்பு செலுத்தி வந்தார்கள்.

சுவாமிகளுக்கு அதிகாலையிலே எழுந்திருக்கும் வழக்கம் உண்டு. பொழுது விடியும் முன்னே அதிகாலை யில் சுவாமிகள்: சந்நியாசிகள் எல்லோரையும் எழுப்பிவிடு வார். "ஆசார விதிகளெல்லாம கண்டிப்பாக அநுஷ்டிக்கப் படவேண்டும்" என்று சுவாமிகள் அவர்களுக்கு ஆக்ஞை செய்வார். மடத்து விதிகளை மீறி எவரேனும் நடந்தால் சுவாமிகளுக்குக் கோபம் வந்துவிடும்; கடுகடு என்று விழு வார்; அவர்களுக்குப் புத்தி யுண்டாகுமாறு கடூரமான கோபத்தைக் காட்டுவார். சுவாமிகள் அவர்களைக் கடுந் தவங்கள் புரியும்படி யனுப்புவார். ஆனால், அவர்கள் கடூர மாக அநுஷ்டிக்காதபடி பார்த்துக்கொள்வார்; ஏனெனில், அவருக்கு அவர்களிடத்திலே அவ்வளவு அன்பு. மடத்தி னுள்ளே நுழைந்துவிட்டால், எங்குப் பார்த்தாலும் உற் சாகம், சுறுசுறுப்பு, ஞான வைராக்கியம், அநுஷ்டானப் பயிற்சிகள் இவைதான் தோன்றும்.

69-வது அத்தியாயம்

ஸ்வாமிகளுடைய சில விசேஷ அன்பு

சுவாமிகளுக்குத் தோட்டவேலையிலே, செடி கொடிகள் இட்டுப் பயிர் பண்ணுவதிலே, அதிக சந்தோஷம்; சமையலோ, கேட்கவே வேண்டாம்; மடத்தைச் சேர்ந்த பசுக்களைப் பராமரிப்பதில் விசேஷ கவனம் செலுத்துவார்; மிகமிகச் சிறிய விஷயங்களில்கூடச் சுவாமிகள் நுழைந்து குதுகலிப்பார். சில சமயங்களிலே சுவாமிகள் சிறு குழந்தைகள் போல அற்ப விஷயங்களுக்கெல்லாம் பெரிய சண்டை போடுவார். மடத்து நிலத்திலே ஒரு பக்கம் பசுக்கள் மேய்வதற்கென்று மேய்ச்சற்றரை விடப்பட்டிருந்தது; அதற்கடுத்தாப்போல, சுவாமிகளுடைய சகோதர சந்யாசியாகிய ஸ்வாமி ப்ரஹ்மாநந்தர்— இவர்தாம் இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆதினத்துக்கே அதிபதி— காய் கறி, புஷ்பங்கள் முதலியவை யுண்டாகும்படியான ஒரு தோட்டம் வைத்து அதிக ஜாக்கிரதையாக அதைப் பயிர் பண்ணிக்கொண்டு வந்தார். ஒருநாள் பக்கத்து மேய்ச்சற்றரையில் மேய்ந்துகொண்டிருந்த பசுமாடுகள் அத் தோட்டத்தினுள்ளே சென்று மேய ஆரம்பித்தன. சுவாமி ப்ரஹ்மாநந்தரால் தோட்ட வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த வேலைக்காரன் அம் மாடுகளை வெளியே துரத்தினான். இதைச் சுவாமிகள் பார்த்துவிட்டார்; தமது அறையினின்றும் வெளியே வந்து அந்த வேலைக்காரனைக் கூப்

பிட்டுக் கடிந்துகொண்டார். இந்தச் சங்கதி சுவாமி பிரஹ்மாநந்தருக்குத் தெரிந்துவிட்டது. அவர் ஓடி வந்துவிட்டார். அவர் தமது வேலைக்காரனுக்காகப் பரிந்து பேசினர். மேய்ச்சற்றரைக்கும் தோட்டத்துக்கும் நடுவேயுள்ள எல்லைப்புறத்தைப்பற்றிப் பெரிய வாதம். சுவாமி விவேகாநந்தரும் சுவாமி பிரஹ்மாநந்தரும் சண்டை போடுகிறார்கள்; ஏக சப்தம். பார்க்கிறவர்கள் இதை விநோதமாகப் பார்த்து ஆச்சர்யப்படுகிறார்கள். இந்தச் சம்பவம் இன்றும் பழய சந்யாசிகளுடைய ஞாபகத்திலே நன்றாகப் பதிந்து கிடக்கின்றது.

சில சமயங்களிலே சுவாமிகள் ரொட்டி தட்ட ஆரம்பித்துவிடுவார்; பல பக்குவங்கள் செய்யப் பார்ப்பார். தவறிவிடும்; மறுபடியும் செய்வார்; இன்னும் தவறிவிடும்; ஆனல், முயற்சியை விட்டுவிடமாட்டார்; மேன்மேலும் முயற்சிப்பார். மடத்துக்குச் சமீபத்திலே போகும் நதியானது அழுக்கு மிக நிறைந்ததாகவும் சேறு குழம்பியதாகவும் இருந்ததினலே, குடி நீருக்கு உபயோகிக்கப்படக்கூடாததா யிருந்தது. ஆனல், வேறு வழியில்லாததினலே இந்தத் தண்ணீர்தான் உபயோகிக்கப்பட்டு வந்தது. இதனல் மடத்திலே யிருந்த ஜனங்கள் அடிக்கடி வியாதிக்குள்ளானர்கள். சுவாமிகளுக்கு 'நல்ல ஜலம் எப்படியாவது சம்பாதிக்க வேண்டும்' என்ற ஆசை யுண்டாகவே, சுவாமிகள் வருஷம் முழுதும் தண்ணீர் கொடுக்கும்படியான சுத்த ஜல ஊற்றுக் கிணறு வெட்டக் கருதி

அதற்கு வேண்டிய யந்திரங்களெல்லாம் வாங்கி, தமது சகோதர சந்யாசிகளுடைய உதவியைக் கொண்டு, கிணறு தோண்ட ஆரம்பித்தார். சுவாமிகளுக்கு இந்த விஷயத்திலே அதிகம் அநுபவம் இல்லாததினுலும், அதிகம் படிக்காததினுலும் இம் முயற்சி தவறிவிட்டது; ஆனல், 'இம் முயற்சி ஜய மடையாது' என்பது சுவாமிகளுக்கு முதலிலேயே தெரியும்; ஆனுல், முயன்று பார்த்தார், அவ்வளவுதான்.

சுவாமிகள் மிகுந்த வியாதியஸ்தராய், மேல் மாடியிலிருந்து கீழே யிறங்க முடியாதபடி அவ்வளவு பலஹீனராயிருந்தபொழுதுகூட, தாகம் அவருக்கு அதிகமாக ஏற்பட்டிருந்தும், 'அவர் தண்ணீரைத் தொடக்கூடக் கூடாது' என்று வைத்தியர்கள் விதித்திருந்தபொழுதுகூட, அவர் சமைய லறையிலே அடுப்பண்டை போய் உட்கார்ந்துகொண்டு, அற்புத ருசி வாய்ந்த அநேக பதார்த்தங்களைத் தயார் செய்து தமது சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ்யர்களுக்கும் கொடுத்து உண்ணச் சொல்வார். சில சமயங்களிலே சுவாமிகள் தமது காஷாய உடையைத் தரித்துக்கொண்டு, தலையிலே சாதுக்கள் அணியும் குல்லாயை எடுத்து மாட்டிக்கொண்டு, கையிலே ஒரு பெரிய தடியை எடுத்துக்கொண்டு, தமது சகோதர சந்யாசிகளையும் சிஷ்யர்களையும் வெளியே சென்று உலாவி வருதற்குக் கூப்பிடுவார்; போகும் வழியெல்லாம், அவர்களுக்கு உற்சாக மூட்டி அவர்களுடைய விலாவெலும்பு

தெறிக்கச் சிரிக்கச் செய்துகொண்டே போவார். அச் சமயங்களிலே அவரைப் பார்க்கவேண்டும்; உல்லாச மென்பதே உருவெடுத்து வந்ததுபோ லிருக்கும்; சில சமயங்களிலே சுவாமிகள் வேடிக்கைப் பேச்சுக்கள் பேசுவார், அல்லது, விநோதகதைகள் புகல்வார்; மடம் முழுதும் வயிறு வலிக்கச் சிரிக்கும். இச் சமயங்களிலே சுவாமிகளை வியாதி பிடித்திருக்கிறதென்பது எவர் ஞாபகத்திலுமிராது; எல்லோரும் இதை மறந்திருப்பார்கள்.

சுவாமிகள் கிழ் வங்காளத்திலே யாத்திரை செய்து வந்ததின்மேல், சரீரத்தில் வியாதி பலமாகப் பிடிக்கவே, சகலவேலைகளிலிருந்தும் நீங்கி, ஓய்வு எடுத்துக்கொண்டு கொஞ்சக் காலம் சும்மாவிருக்க எண்ணினர். இச் சமயத்திலே சுவாமிகள் தாம் முன்னரேயே ஏற்கனவே பல இடங்களிலிருந்தும் சம்பாதித்திருந்த சில ஜீவப்பிராணிகளிடத்து அதிக பிரியம் பாராட்டத் தொடங்கினர். இந்தப் பிராணிகள் பின் வருவனவாம்:—

மடத்து நாய் ஒன்று, இதன் பெயர் பாகா என்பதாம்; ஒரு பெண் வெள்ளாடு, சுவாமிகள் இதை விளையாட்டாக "ஹம்ஸி" அல்லது "அன்னம்" என்று கூப்பிடுவார்; அநேக பசுக்கள்; வாத்துக்கள்; ஒரு மான்; ஒரு நாரை; ஒரு ஆட்டுக் குட்டி, சுவாமிகள் இதற்கு "மாத்ரு" என்று பெயரிட்டு, அதன் கழுத்தைச் சுற்றிச் சிறுமணிகள் கோத்த ஒரு அழகிய சிறு சங்கிலியைக் கட்டியிருந்தார். சுவாமிகள் எங்குச் சென்றாலும், அந்த ஆட்டுக் குட்டி கூடவே

செல்லும். அமெரிக்காவில் அறிவு மிகுந்தோர் அனைவ ரும் கூடிய சர்வமத மகா சபையைப் பிரமிக்கச் செய்து கர்ச்சித்து வேதாந்தகோஷம் செய்து, கீழ் நாட்டாருக்கும் மேனாட்டாருக்கும் ஆத்மஞானத்தை யளித்த மஹான் அந்த ஆட்டுக் குட்டியைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டு, ஐந்து வயதுப் பையன் போல அங்கும் இங்கும் ஓடி விளை யாடுவது அத்தியாச்சர்யமும் ஆநந்தமுமான காக்ஷி யன்றோ? அளவு கடந்த பயபக்தியுடன் சுவாமிகளைத் தரி சிக்க வந்த ஜனங்கள் இந்த விளையாட்டைக் கண்டு, சுவாமி களுடைய நிஷ்கபடமான குழந்தை ஹிருதயத்தைப் பற்றி மெச்சி வியந்தார்கள். ஆனால், அந்தக் குட்டி சீக்கி ரம் மரித்துவிட்டது; சுவாமிகள் பச்சைக் குழந்தை போன்று விசன மடைந்தார். இன்னும் தமது பிரிய சிஷ்ய ராகிய சாரதச்சந்திரரை நோக்கி, "என்ன ஆச்சர்யம்! நான் எவரிடத்து அன்பு செலுத்திச் செல்லம் பாராட்டு கிறேனோ, அவர் சீக்கிரம் மரித்துவிடுகின்றனர்" என்றார். 'இந்தப் பிராணிகளுக்கெல்லாம் தக்கபடி காலாகாலத்தில் ஆகாரம் கொடுக்கப்படுகின்றனவா? இந்தப் பிராணிகளின் வாசஸ்தலங்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றனவா?' என்ற விஷயங்களை யெல்லாம் தாமே நேரில் கவனிப்பார் இப்பிராணிகளுக்குச் சுவாமிகளுடைய விருப்பப்படி வேண் டியதைச் செய்வதற்குச் சுவாமி சதாநந்தர் சுவாமிகளுக்குத் துணையாயிருந்தார். இந்தப் பிராணிகளுக்கும் அவரிடத் தில் அன்பு அதிகம். அவற்றை மநுஷ்யவர்க்கமாகவே பாவித்து, சுவாமிகள் அவற்றுடனே பேசுவார். ஒரு சம

யத்திலே அவர் விளையாட்டாகக் கூறியதாவது:— "முன் ஜன்ம மொன்றிலே மாத்ரு (ஆட்டுக் குட்டி) எனக்குப் பந்துவாயிருந்தது; அதனாலேதான் எனக்கும் அதற்கும் அவ்வளவு நேசம்." அந்த ஆட்டுக் குட்டி அவருடைய அறைக்குள்ளே வெகு தாராளமாகச் செல்லும்; அங்கே ஒரு மெத்தை போட்டிருந்தது; தனக்குச் சர்வபாத்திய தை யுண்டுபோல, அந்த மெத்தையின் மேலே நிரம்பத் தாராளமாயும் தைர்யமாயும் போய்ப் படுத்துக்கொள்ளும். சில சமயங்களிலே சுவாமிகள் "ஹம்ஸி"யிடம் சென்று தமக்குத் தேயிலை காய்ச்சுவதற்குப் பால் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்பதைப் பார்த்தால், அந்த வெள்ளாடு இஷ் டப்பட்டால் பால் கொடுக்கலாம்; இஷ்ட மில்லையேல் மறுத்துவிடவும் முடியும்போலத் தோன்றும். சுவாமிக ளுக்கு இந்தப் பிராணிகளிடத்திலே உயிர்.

சுவாமிகள் 1901-ம் வருஷம் ஸெப்டம்பர் 7-ம் தேதியன்று தமது அமெரிக்க ஸ்திரீ சிஷ்யர்களுள் ஒரு வருக்கு எழுதிய கடிதத்தில்கூட இந்தப் பிராணிகளைப் பற்றி பின் வருமாறு அருமையாய் எழுதுகிறார்:— "மழை இப்பொழுது மிகவும் மும்முரமாகப் பெய்து வருகிறது; ஏக பிரளயம்; இரவும் பகலும் சொரிந்துகொண்டு, சொரி ந்துகொண்டு, சொரிந்துகொண்டே யிருக்கிறது; நதியில் பிரவாகம் வந்திருக்கிறது; இநகரையும் புரண்டு போகி றது; குட்டைகளும் குளங்களும் நீர் நிரப்பி வழிகின்றன. மடாலத்திலிருந்து தண்ணீர் போக்குவதற்கு ஒரு சாக்

கடை வெட்டுவதில் உதவிசெய்துவிட்டு நான் இப்பொழுது தான் திரும்பிவந்தேன். சில இடங்களிலே மழைத் தண்ணீர்! அநேக அடி ஆழம் நிற்கின்றது. எனது பெரிய நாரைக்கு ஆநந்தம் நிறைந்திருக்கிறது. நான் பழக்கப்படுத்தி வைத்திருந்த மான் மடத்திலிருந்து ஓடிப்போய்விட்டது; இதனால் அதைக் கண்டு பிடிப்பதிலே எங்களுக்குப் பல நாள் கவலை யுண்டாயிற்று; எனது வாத்துக்களுள் ஒன்று அநியாயமாக நேற்று இறந்துவிட்டது. ஒரு வாரத்துக்கு மேலாக அது மூச்சுவிட முடியாமல் திணறிக்கொண்டிருந்தது. எனது பழய சந்யாசிகளுள் ஒருவர் கூறுவதாவது, "ஐயா! இந்தக் கலியுகத்திலே மழையிலும் ஈரத்திலும் வாத்துக்களுக்கு ஜலதோஷம் பிடிக்கின்றது; தவளைகள் மூக்கை யுறிஞ்சுகின்றன; இத்தகைய கலியுகத்திலே ஜீவித்துப் பயனில்லை" எனது வான்கோழிகளிலே ஒன்று தனது சிறகுகளை யிழந்துகொண்டு வந்தது. நான் வேறு சிகிச்சை யொன்றும் அறியாது, லேசான கார்பாலிக் (Carbalic) தைலத்தை ஒரு தொட்டித் தண்ணீரிலே கலக்கி, 'இது, ஒன்று, கோழியைக் கொன்றுவிடும், அல்லது சொஸ்தப்படுத்திவிடும்' என்று நினைத்து, நான் அந்தக் கோழியை அந்தத் தொட்டியில் சில நிமிஷநேரம் போட்டு வைத்திருந்தேன்,— அது இப்பொழுது சர்வ சௌக்கியமாயிருக்கிறது.***"

இந்தப் பிராணிகளுக்கெல்லாம் தலைமை வகிப்பது பாகா என்ற நாயே என்று சொல்லலாம்; அந்த மடம்

முழுதும் தனக்கே சொந்தம் என்று அந்த நாய் நினைத்துக் கொண்டிருந்தது. உலகிலுள்ள பிராணிகளெல்லாவற்றிலும் விசுவாச முள்ளது நாய் ஒன்றே. சுவாமிகளிடத்தில் இந்த நாய் வைத்திருந்த விசுவாசம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. தவிர, இந்த நாய் மகா புத்திசாலி. பூர்வஜன்மத்திலே இது உயர் குலத்தில் பிறந்திருக்கவேண்டும்; அப்பொழுது ஏதோ ஒரு பாபம் செய்ததின் பயனாக இப்பொழுது நாய்ப் பிறப்பையடைந்திருத்தல் வேண்டும். இந்த நாயைப்பற்றிய அநேக கதைகள் இன்னும் வேலூர்மடத்திலே சொல்லப்படுகின்றன. 'கிரகணம் ஆரம்பிக்கும்பொழுதும், விமோசனம் ஆகும்பொழுதும், 'இக்காலம் புண்ணியகாலம்' என்று ஹிந்துக்கள் ஆயிரக்கணக்காக ஸ்நாநம் செய்வது வழக்கமாயிற்றே; வங்காளத்திலே கிரகண ஆரம்பகாலத்திலும் விமோசன காலத்திலும் சங்கங்கள் ஊதுவார்கள், மணியடிப்பார்கள்; இந்தச் சப்தம் கேட்டவுடனே, கங்காநதியிலிறங்கி ஸ்நாநம் செய்கின்ற நூற்றுக் கணக்கான ஜனங்களோடு தானும் ஒன்றாக இந்த நாயும் தானாகவே இறங்கி ஸ்நாநம் செய்யுமாம்!

ஒரு சமயத்திலே 'இந்த நாய் ஏதோ துஷ்டத்தனம் செய்துவிட்டது' என்று, மடத்திலிருந்த சில சந்யாசிகள் இந்த நாயை மெல்லப் படகிலேற்றிக் கங்கையின் அக்கரையிலே கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துவிட்டார்கள். நாய்க்கு விசனம் பொறுக்க முடியவில்லை; சுவாமிகளிடத்

தில் அது வைத்திருந்த அன்போ அளவுக்கு மிஞ்சியதா யிருந்தது. எப்படியாவது மடத்துக்குத் திரும்பி வருவது என்று தீர்மானித்துவிட்டது. மாலையிலே அக் கரையி லிருந்து மடத்துக்கு ஒரு படகு புறப்பட்டது. நாய் படகுக்குள்ளே ஒரே குதியாகக் குதித்துவிட்டது. படகுக்காரர்களும் அப் படகி லேறிய ஜனங்களும் அந்த நாயைப் படகிலிருந்து வெளியே தூரத்துவதற்கு வேண் டிய பிரயத்தனம் செய்து பார்த்தார்கள்; ஆனால், அது கடு கடுத்து உறுமியதைப் பார்த்தால், அதை எவ்விதத்திலும் தொந்தரை செய்யத் துணிபவர்களைக் கடித்துச் சின்ன பின்னப்படுத்திக்கொன்றுவிடும்போ லிருந்தது. ஆகையால், அவர்கள் கொஞ்ச நேரம் முயன்று பார்த்துவிட்டுப் பின் னர்ச் சும்மா யிருந்துவிட்டார்கள். படகு மடத்தைச் சேர் ந்த கரையில் வந்து சேர்ந்தது. ஜனங்கள் கரையில் இறங்கி னார்கள்; நாயும் கரையில் குதித்து எங்கோ போய்விட்டது. இரவெல்லாம் இது எவர் கண்களிலும் தட்டுப்படவில்லை. மறுநாள் அதிகாலையில் சுவாமிகள் வழக்கமாக ஸ்நாநம் செய்யப்போகும் மார்க்கத்தில் குறுக்கே படுத்துக் கிடந் தது. சுவாமிகள் தினந்தோறும் காலையில் நான்கு மணிக்கு ஸ்நாநம் செய்வது வழக்கம்; அப்படியே அன்றும் அவர் தமது ஸ்நாந அறைக்குச் செல்ல, வழியிலே, ஸ்நாந அறை யின் வாசலுக்கு முன்னால் ஏதோ ஒரு வஸ்துவின்மீது கால் தட்டி இடறினார். லாந்தரை யெடுத்துப் பார்க்க, அந்த நாயானது சுவாமிகளின் மேலே ஏறிஏறிக் குதிக்கின் றது, வாலைக் குழைத்துக்கொண்டு, பல்லைக் காட்டுகிறது;

பார்க்கப் பரிதாபகரமாயிருந்தது; சுருக்கத்தில், அது சுவாமிகளுடைய காலைக் கெட்டியாகப் பற்றிச் சுற்றிக் கொண்டது. மடத்திலே தான் இருப்பதற்கு அநுமதி கொடுக்கும்படி அது கெஞ்சுவதுபோ லிருந்தது. சுவாமிகள் மெல்ல அதன் முதுகிலே தட்டிக் கொடுத்தார். பின்னர், சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளிடத்திலே இந்த சம்பவத்தைக் கூறி, "பாகா இனிமேல் என்ன செய்தாலும் அதை பொருபொழுதும் அக் கரைக்கு அனுப்பி விடக் கூடாது" என்று ஆக்ஞை செய்தார். தான் மறுபடியும் மடத்துக்குள்ளே போகவேண்டுமென்றால், சுவாமிகள்தான் அநுமதி கொடுக்கவேண்டுமென்றும், சுவாமிகளுடைய உத்தரவு கிடைத்துவிட்டால், தன்னை மடத்தை விட்டுத் துரத்த எவராலும் முடியாதென்றும் அந்த நாய்க்கு நன்றாகத் தெரிந்திருந்தது போலத் தோன்றிற்று. 'மற்றவர்கள் விழித்துக்கொள்வதற்கு முன், சுவாமிகளை இந்த இடத்தில் காணலாம்' என்றும் அது தெரிந்து கொண்டது; ஆகையினால், அது ஸ்நான அறையின் வாசலிலே படுத்துக் கிடந்தது.

சுவாமிகள் மகா சமாதி யடைந்த பின்னர், அநேக நாட்கள் பாகா உயிருட னிருந்தது; பின்னர் மரித்தது. இந்த நாயின் சரீரத்தை அந்த மடத்திலிருந்தவர்கள் கங்கா தீரத்திலே மடத்து நிலத்திலே ஒரு மூலையில் எறிந்துவிட்டார்கள்; அதை அலை வந்து அடித்துக்கொண்டு போய்விட்டது. ஆனால், என்ன ஆச்சர்யம்! அந்தச் சரீர

மானது இன்னொரு அலையினால் மறுபடியும் அவ்விடத்துக்கே கொண்டு வரப்பட்டது. சந்யாசிகள் பார்த்தார்கள், வியந்தார்கள். 'இறந்தும், பாகாவுக்கு மடத்தை விட்டுப் பிரிந்து செல்வதற்கு மனம் வரவில்லை' என்று கருதி அதன் அபிமானத்தை மெச்சினார்கள். அந்த மடத்தைச் சேர்ந்த ஒரு பிரஹ்மச்சாரி அந்த மடத்துப் பெரியோர்களுடைய உத்தரவு பெற்று, அந்த மடத்து நிலத்திலேயே ஒரு பக்கத்தில் புதைத்து, சமாதி செய்தார்; இப்பொழுது அவ்விடத்திலே ஒரு சிறு கட்டிடம சமாதிபோல் கட்டப்பட்டிருக்கிறது.

சுவாமிகள் மடத்திலே யிருந்தபொழுது தாம் எப்படியெல்லாம் இருக்க இஷ்டமோ, அப்படி யெல்லாம் இருந்தார்; எப்பொழுதும் கலந்துகொண்டும் பேசிக்கொண்டும் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று மில்லை. ஜனசமூக உபசாரங்களைப் பின்பற்றவேண்டிய அவசியமுமில்லை. இங்கே சுவாமிகள் இஷ்டம் போல இருக்க முடியும். இது சர்வ சுதந்தர சந்யாசிகள் இருக்குமிடமல்லவா? ஆகையினால், சுவாமிகளும் எவ்வித நிர்ப்பந்தத்தையும் உதறி யெறிந்துவிட்டுச் சர்வ சுதந்திரரா யிருக்க முடியும். இங்கே சுவாமிகள் கையிலே ஹுக்காவை யெடுத்துக்கொண்டு உலாவுவார். இங்கே சுவாமிகள் தமது கால்களில் எப்பாதரக்ஷையு மணியாது வெறுங் கால்களுடனே நடப்பார்; அல்லது ஜோடு மாட்டிக்கொண்டு நடப்பார்; இங்கே சுவாமிகள் கௌபீனம் மாத்திரம் தரித்துச் செல்

வார்; அல்லது காஷாய உடை தரித்துக்கொண்டு நடப்பார்; மேனாடுகளிலே அவர் தரிக்கவேண்டி வந்த மேல் சட்டை, கால் சட்டை, பூட்ஸ் முதலியவை இப்பொழுது சுவாமிகளுக்கு அவசிய மில்லை; முக்கியமாக, கழுத்துப் பட்டை யணிவதென்றால், சுவாமிகளுக்கு வெகு கஷ்டம்; இப்பொழுது அந்தக் கஷ்டமில்லை. இப்பொழுது சுவாமிகள் தமக்குச் சொந்தமான ஒரு உலகத்தில் வசிக்க முடியும்; அமைதியாய், அடக்கமாய், உலகினின்றும் ஒதுங்கி வசிக்க முடியும்.

எப்பொழுதும் சுவாமிகள் குதூகலமாகவே யிருப்பார்; தமது சகோதர சந்யாசிகளுக்குத் தமது மேனாட்டு அநுபவங்களை யெல்லாம் எடுத்துக் கூறுவார்; மேனாட்டுப் பெருமைகளைப் பற்றியும், சிறுமைகளைப் பற்றியும், மேனாட்டு நடை யுடை பாவனை வழக்கம் முதலியவற்றைப் பற்றியும், அதன மதக்கோட்பாடுகளைப் பற்றியும் விரிவாக எடுத்து விளக்குவார்; அல்லது, இந்திய நாகரிக லக்ஷியங்களைப்பற்றியும் இந்திய சரித்திர அநுபவங்களைப் பற்றியும் பேசுவார்; அல்லது, பூர்வீக ரோமாபுரியின் பெருமைகளையும் அப் பெருமைகளைச் சம்பாதித்துக் கொடுத்த வீரர்களைப்பற்றியும் சொல்வார். இன்னும் சுவாமிகள் தினந்தோறும் குறித்த காலத்தில் பாடங்கள் சொல்லிக்கொடுப்பார். அல்லது, சுவாமிகள்: பக்கத்திலிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண க்ஷேத்திரத்திற்குச் சென்று, சற்குருநாதருக்கு முன்னிலையில் உட்கார்ந்து நிஷ்டை செய்

வார்; அல்லது, சகோதர சந்யாசிகள் சரீராப்பியாசம் செய்யும்பொழுது கூடச் சேர்ந்து தாமும் செய்வார்; அல்லது, மடத்திலேயே தாமாகவே ஏதோ பலத்த சத்தத்தில் பேசிக்கொண்டே உலாவுவார்; தாம் பலமாய்ப் பேசுவது அவருக்கே தெரியாது. சில நாட்களில் ஆநந்த கரமாக, உற்சாக பூரிதராய் உலாவிக்கொண்டே அற்புத மான பாட்டையெடுத்துப் பாடுவார். பாட ஆரம்பித்து விட்டால், நேரம் போவதும் தெரியாது; கையினாலே தாளம் போட்டுக்கொண்டே பாடுவார்; அல்லது, நடக்கும் பொழுது காலினால் தாளத்தைச் சரி பண்ணிக்கொள்வார். மடம் முழுதும் ஞானுகாசம் நிரம்பியிருக்கும்.

சந்யாசிகள் போஜனத்துக்கு உட்காருகிற சமயத்தில் அவர்களுடைய அன்பை யெல்லாம் பறித்து வைத்துக் கொண்டிருக்கும் சுவாமி விவேகாநந்தர் அநேகமாக வந்துவிடுவார். சுவாமிகளுடைய தனவந்த சிஷ்யர்கள் சுவாமிகளைப் பார்க்க வரும்பொழுதெல்லாம் அதியற் புதமான மிட்டாய் வர்க்கங்கள், பலவித பழவர்க்கங்கள் முதலியவற்றைக் கொண்டு வருவார்கள். சுவாமிகள் அவற்றை யெல்லாம் சாப்பாட்டுச் சமயத்திலே கொண்டு வந்து தமது சகோதர சந்யாசிகளுக்குக் கொடுப்பார்.

சிஷ்யர்கள் கொண்டு வரும் பதார்த்தங்கள் ஸ்ரீ ராம கிருஷ்ண க்ஷேத்திரத்தில் நைவேதனம் செய்யப்பட்ட வை யெனக் கேட்டு மகிழ்வார். தினந்தோறும் பக்குவம் செய்யப்படும் போஜனமானது ஸ்ரீ ராமகிருஷ்ணர் சந்

நிதானத்தில் நைவேதனமான பின்னரே சந்யாசிகளால் உண்ணப்படும். தாங்கள் உண்ணும் ஆகாரம் ஸ்ரீ ராம கிருஷ்ண தேவரின் உச்சிஷ்டப் பிரசாதம் என்று கேட்ட மாத்திரத்திலே ஆநந்தப்பித்துப் பிடித்துக்கொண்டு ஆடிய சந்யாசிகள் அநேகர். போஜன சமயத்திலே சாதாரணமாக விநோதப் பேச்சுக்கள் நடக்கும். சுவாமிகள் எப்பொழு தும்போல இப்பொழுதும் தலைமை வகித்து, வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவார். ஆ! ஆ! என்ன ஆநந்தம்! என்ன சுகம்! என்ன அந்யோந்ய நட்பு! இவர்களனைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணராகிய ஒரே பிதாவின் புத்திரர்க ளல்லரோ? ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் தேஜஸ் சுவாமிகளின் உள்ளே ஊடுருவிப் பாய்ந்து, நாலாபக்கத்தி லும் பொங்கித் ததும்பிப் பிரகாசிக்க, அப் பிரகாசத்தின் மகிமையால் அவரைச் சூழ்ந்தவர்க ளெல்லோரும் பிரகா சித்தனர்.

ஆய்விட்டது; சுவாமிகளுடைய ஜீவிதமாகிய சரித் திர புஸ்தகம் முடிவதற்கு இன்னும் சில பக்கங்களே யிருக்கின்றன; ஆனால், இச் சில பக்கங்களிலுள்ள ஒவ் வொரு வரியும், ஒவ்வொரு வார்த்தையும் அதி ருசிகர மானதாம், அசாதாரணமாக ருசிகரமானதாம். சுவாமிக ளுடைய கடைசி காலத்திலே, அவர் தமது சந்யாசத் தன் மையை மேன்மேலும் விளங்க வெளிப்படுத்தினர். இங்கு அவரைச் சூழ்ந்திருந்தவர்க ளனைவரும் சந்யாசிகள். தபால் மூலமாக வரும் கடிதங்களையும் தம்மைப் பார்க்க

வருகின்ற சில உலகினரையும் தவிர, இவரைக் கட்டுப் படுத்துவதற்கு ஒன்றுமே யில்லை. இவர் சர்வ சுதந்திரரா யிருந்தார். இவர் எப்படி யிருந்தாலும் இவரைக் கட்டுப் படுத்துவதற்கு ஜனசமூகச் சட்டங்களாவது, ஸ்மிருதியாக் ஞைகளாவது கிடையா. அதுவும் சுவாமிகளுடைய அந் திய காலம் நெருங்க நெருங்க, அவருடைய பரிபூர்ண தியாகத் தன்மை மேன்மேலும் பிரகாசிக்க ஆரம்பித்தது.

சுவாமிகள் கீழ் வங்காள யாத்திரை செய்து திரும்பி வந்ததின்பின், சுவாமிகளுக்குச் சரீரத்திலே வியாதி அதிகரித்துவிட்டது; சுமார் இரண்டு மாதகாலம் வரை யில் அவருடைய சரீரஸ்திதி அவருடைய நண்பர்களுக் கும் சிஷ்யர்களுக்கும் மிகுந்த கவலையைக் கொடுத்தது. சுவாமிகளுடைய நீரிழிவு வியாதியானது சரீரத்திலே ரத்தத்தைப் போக்கடித்து எங்கும் நீரைப் பெருக்கிவிட் டது. இதனால் சுவாமிகள் மிகவும் கஷ்டப்பட்டார். சுவாமிகளுடைய பாதங்கள் இரண்டும் வீங்கிவிட்டன. சரீரம் பூசினிப்பழம்போ லாய்விட்டது. சுவாமிகளால் நடக்க முடியவில்லை. சுவாமிகளுடைய சரீரத்திலே ஏதே னும் பட்டுவிட்டால், சுவாமிகளுடைய உயிரே போய் விடும்; சரீரம் அவ்வளவு மிருதுவாய்விட்டது.

சுவாமிகள் மஹா சமாதி யடைவதற்கு ஒரு வருஷத் துக்கு முன் முதற்கொண்டே, நித்திரை யென்பதில்லாது போய்விட்டது. சுவாமிகள் சுமார் மூன்று அல்லது நான்கு மணி நேரம்தான் இரவிலே படுத்து கண்ணயர்.

வார்; அதுவும் அநேகமாக ஒரு மணி நேரத்துக் கொரு தரம் விழித்துக்கொள்வார். ஆனால், சுவாமிகள் இவற்றை யெல்லாம் ஒரு பொருட்டாகப் பாராட்டவில்லை. சாக்ஷாத் பரமேச்வரனிடத்திலே தம்மைச் சமர்ப்பணம் செய்து கொண்டுவிட்டார்; கடூரமான வியாதியினாலே பீடிக்கப் பட்டிருந்தும், எப்பொழுதும் உற்சாக பூரிதராயிருந்தா ரென்பதில் சந்தேகமே யில்லை. தம்மைப் பார்க்க வரும் நண்பர்களை மிகுந்த அன்புடனே வரவேற்று, அவர்க ளுடன் தமக்கு வழக்கமான ஆத்திரத்துடனும் ஆங்காரத் துடனும் சம்பாஷிப்பார்; ஆனால், அவருடைய குரல் சிறிது அடங்கியதாயிருக்கும். ஒரு சமயத்திலே அவ ருடைய சிஷ்யராகிய சாரதச் சந்திரர் சுவாமிகளை க்ஷேமம் விசாரிக்க, சுவாமிகள் வெகு அமைதியாய், "புத்திரா! இனிமேல் எனது சரீர சௌக்கியத்தைப்பற்றி ஏன் கேட்கிறாய்? நாளுக்குநாள் சரீரமானது உடைபட்டுக் கொண்டே வருகிறது. வங்காளத்திலே பிறந்த சரீரம் வியாதியில்லாமல் இருக்க முடியுமா? வங்காட்டுச் சரீரம் கட்டுடைய தன்று. கொஞ்சங் கடினமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால், சரீரமானது அந்த வேலையின் கடுமையைத் தாங்க முடியாது உடைய ஆரம்பித்துவிடு கிறது. இச் சரீரம் இழுத்துக்கொண்டிருக்கும் வரையில் நான் உங்களெல்லோருக்குமாக உழைத்து, உழைப்பின் மத்தியில் மரிப்பேன்" என்றார்.

சாரதச்சந்திரர் என்பவர் சுவாமிகளுடைய அந்த ரங்க சிஷ்யர்களி லொருவர்; இவர் சுவாமிகளைக் கொஞ்சக்

காலமாவது எல்லா வேலையினின்றும் நீங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருக்குமாறு வற்புறுத்தி வேண்டிக்கொண்டார்.

சுவாமிகள்: "புத்திரா! எனக்கு ஓய்வு கிடையாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளி என்று எதைச்சொன்னாரோ அது அவர் மகா சமாதி யடைவதற்கு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்னாலேயே எனது சரீரத்தையும் மனத்தையும் பிடித்துக்கொண்டுவிட்டது. அதுதான் என்னை மேன்மேலும் வேலை செய்யும்படி செய்கிறது; என்னை அமைதியா யிருக்கும்படியாகவர்வது, அல்லது எனது சொந்த சௌகர்யங்களைக் கவனிக்கும்படியாகவாவது ஒரு பொழுதும் விடுகிறதில்லை," என்றார்.

உடனே சாரதச்சந்திரர் "ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகா சமாதி யடைவதற்கு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன் காளி சக்தி சுவாமிகளுடைய சரீரத்தினுள் புகுந்த விதத்தைப்பற்றி யுரைக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

சுவாமிகள்: "சற்குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் மஹாசமாதி யடைவதற்கு மூன்று அல்லது நான்குநாட்களுக்கு முன், தனிமையி லிருக்கும்பொழுது அவர் என்னைத் தமது பக்கத்தில் கூப்பிட்டு, அவர் முன்னே உட்காரும்படி செய்து, எனது கண்களை நேரே பார்த்தார்; சில நிமிஷநேரம் இப்படிப் பார்த்துவிட்டு, பின்னர்ச் சமாதி நிஷ்டையி லமர்ந்தார். அவர் பார்த்த பார்வையானது எனது இரு கரு விழிகளையும் ஊடுருவிச் சென்று ஆத்மாவி

விடம் லயித்ததுபோன் றிருந்தது. பின்னர், அவருடையசரீரத்திலிருந்துபலம்மிகுந்த சூட்சுமமான சத்திப் போக்கு ஒன்று மின்சார அதிர்ச்சிகள்போல என்னுள்ளே நுழைவதை நான் பிரத்தியக்ஷத்தில் பார்த்தேன். சிறிது நேரத்திற்குப் பின், நானும் பகிர்முகப் பிரக்ஞையெல்லாவற்றையும் இழந்து சமாதியில் லயித்துவிட்டேன். நான் அந்த ஸ்திதியில் எவ்வளவு நேரம் இருந்தேனோ அது எனக்கு ஞாபகமில்லை. நான் ஐம்பொறி யுலகுக்கு வந்தபொழுது, எனது குருமூர்த்தி அழுதுகொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவர் அழுததற்குக் காரணம் என்னவென்று அவரை வற்புறுத்தி வேண்டிக் கேட்க, அவர் மிகுந்த கிருபாளுவாய் "ஏ, நரேந்திரா! நான் என்னிடமிருந்த எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்துவிட்டு இப்பொழுது பக்கிரி யாய்விட்டேன்! இந்தச் சக்தியின் வலிமையினால் நீ இவ் வுலகில் அநேக பெருங் காரியங்களைச் செய்வாய்; அதற்குப் பின்னரே நீ திரும்பிப் போவாய்!' என்றார். அந்தச் சக்திதான் என்னை மேன்மேலும் வேலை செய்யும்படி செய்து என்னைச் சுழற்றியடிக்கின்றது போலத் தோன்றுகிறது. சோம்பேறித்தனமாய் உட்கார்வதற்கு இச் சரீரம் ஆக்கப்படவில்லை," என்று கூறினார்.

இவ்வற்புதமான ரகஸ்யாநுபவம் லோகரக்ஷகர்களாக அவதரித்த எல்லா மஹா புருஷர்களுடைய சரித்திரங்களிலும் விசேஷமாகச் சிறந்து நிற்கின்றது. சுவாமிகளிடத்தி

லே, சுவாமிகளின் மூலமாக இந்தத் திவ்ய சக்தி பிரகாசிக்காவிட்டால், சுவாமிகள் தாம் சந்திக்கும்படி நேர்ந்த ஜனங்களுடைய ஹிருதயங்களை யெல்லாம் ஜயித்துத் தம தாக்கிக்கொண்டது ஆச்சர்யமாகவேயிருக்கும். 1901-ம் வருஷம் ஜுலை, ஆகஸ்டு இந்த இரண்டு மாதங்களிலும் சுவாமிகள் கூடியவரையில் எல்லா வேலைகளினின்றும் ஓய்ந்து சுக மெடுத்துக்கொண்டிருந்தார்; இதனால் ஸெப்டெம்பர்மீ த்திலே கொஞ்சம் சரீர சுகமடைந்தார். சுவாமிகள் காலையிலும் மாலையிலும் காஷாய உடை தரித்து, சாதுக்கள் அணிகின்ற காதுக்குல்லாயை எடுத்து மாட்டிக்கொண்டு, கையிலே கனமான தடிபொன்று பிடித்து பெரிய ரஸ்தாவின் வழியாக உலாவச் செல்வது வழக்கம். இப்படிச் செல்கையில் சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளுள் ஒருவர் அல்லது இருவரைக் கூட்டிக்கொண்டு செல்வார். வழியிலே பெரிய விஷயங்கள், சில்லரை விஷயங்கள், பலவற்றைப்பற்றியும் பேசி, கூடவருபவர்களைக் களிக்கச் செய்வார். ஆனால், சில சமயங்களில் ஒரு வார்த்தையும் பேசமாட்டார்; ஏதோ ஆழ்ந்த ஆலோசனையில் இறங்கிவிட்டவர் போல, விறுவிறு என்று வேகமாக நடப்பார். அப்பொழுது கூடச் செல்பவர்கள் அவருடைய சுபாவங்களைத் தெரிந்துகொண்டு, அவரை அவர் போன வழியிலேயே விட்டுவிடுவார்கள்.

மஹான்களைச் சாதாரண ஜனங்கள் நிந்திப்பது உலக சரித்திரத்திலே வழக்கமாக இருக்கிறது. உண்மையான

மஹான்களுக்கு உலக நிந்தை ஏற்படுவது சகஜமாயிருந்து வருகிறது. வேலூரிலே மடம் ஸ்திரமாக ஏற்பட்டு ஆனவுடன், அம் மடத்தின் சுற்றுப் புறத்திலே யிருந்த ஜனங்கள் சுவாமிகளையும் மற்ற சந்யாசிகளையும் பலவாறு நிந்திக்கத் தொடங்கினார்கள். இந்த ஜனங்களுக்கு இவர்களுடைய வேதத்தின் உண்மைப் பொருள் தெரியாது; இவர்கள் சாஸ்திரங்களை ஆராய்ந்தவர்களல்லர்; பரம்பரையாக வருகின்ற சில பழக்க வழக்கங்களையே ஆதாரமாகக் கொண்டவர்கள், மூடப் பிடிவாத முள்ளவர்கள். இவர்கள் சுவாமிகளையும் மற்ற சந்யாசிகளையும்பற்றி, "இவர்களுடைய கொள்கைகளென்ன? இவர்கள் ஹிந்துக்களேயல்லர், மிலேச்சர்கள்; ஜாதி மதாசாரங்களைக் கவனிக்கிறதேயில்லை; ஐரோப்பியர்களை யெல்லாம் கூடச் சேர்த்து வைத்துக்கொண்டு உண்கிறார்கள்," என்று வாயில் வந்தவாறு பிதற்றி நிந்தித்தார்கள். இன்னும் அவர்கள் பல பொய்யான அபவாதங்களையும் கட்டிவிட்டு, மகத்தான பாபங்கட்கும் உள்ளானார்கள்; சுவாமிகளுடையவும் மற்ற சந்யாசிகளுடையவும் ஒழுக்கத்தின்மீதுகூடக் குறை கூற ஆரம்பித்தார்கள். ஆ! மூடர்கள்! பாபிகளே! இப் பாபத்தை எங்ஙனே நிவிர்த்தித்துக்கொள்ளப் போகின்றீர்கள்? கல்கத்தாவுக்கும் பாலி என்ற ஊருக்கும் இடையே ஓடாடிக்கொண்டிருக்கும் படகுகளிலே வேலூர் மடத்துக்குச் செல்பவர் எவரேனும் இருக்கக் கண்டால், இந்த ஜனங்கள் உடனே இம்மாதிரி அபவாதம் கூற ஆரம்பித்துவிடுவார்கள். இம்மாதிரி அபவாதம்

கூறப்படுகிற தென்பதை எவரேனும் சுவாமிகளிடம் வந்து கூறுவார்கள். சுவாமிகள், "யானை கடைத்தெருவி னுள்ளே நுழைந்தால் நூற்றுக் கணக்கான நாய்கள் அதன் பின்னே குலைத்துக்கொண்டே செல்கின்றன' என்ற பூர்வீகப் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். உலகு சாதுவை நித்தித்தால், அதனால் அவன் ஒரு பொழுதும் பாதிக்கப்படுகிறதில்லை" என்று கூறுவார்; அல்லது, "துன்பத்துக்கு உட்படுத்தப்படாமல், சிறந்த எண்ணங்கள் ஜனசமூகத்தினுள்ளினுள்ளே நுழைதல் முடியாது. எந்தத் தேசத்திலும் புதிய எண்ணங்கள் போதிக்கப்பட்ட பொழுதெல்லாம் பழய மார்க்கத்தைப் பின் பற்றுபவர்கள் அவற்றுக்கு விரோதமாகக் கிளம்பு வது பிரகிருதி நீதியாம். மதஸ்தாபகர் ஒவ்வொருவரும் இந்தப் பரிசோதனையில் தேறவேண்டியிருக்கிறது," என் பார். ஆகையினாலே, எவ்வளவுக் கெவ்வளவு ஜனங்கள் இடையூறு ஏற்படுத்துகிறார்களோ, எவ்வளவுக் கெவ் வளவு அபவாதமொழி பகர்கிறார்களோ, எவ்வளவுக் கெவ் வளவு நித்திக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அநுகூல மேயாம்' என்று சுவாமிகள் கருதினார்; ஆகையால், சுவாமி கள் இவற்றுக்கு எல்லாம் பதில் கூறுவதில்லை; தமது சிஷ்யர்களையும் நண்பர்களையும் கூடப் பதில் கூறவிடுவ தில்லை. "ஸ்வயநலம் அற்றும் பற்றற்றும் உனது வேலையை நீ செய்துகொண்டே போ; அவ் வேலை எப்பொழுதாவது பலன் கொடுக்குமென்பது நிச்சயம்." "நன்மை செய் வோனுக்குக் கெடுதல் ஒருநாளும் ஏற்படாது." என்று

சொல்வார். உண்மையாகவே, சுவாமிகள் மஹா சமாதி யடைவதற்குள்ளாக, இந்த அபவாதங்களெல்லாம் மறைந்துவிட்டன. தவிர, மடத்திலே, துர்க்கை பூஜை யொன்று சாஸ்திரோக்தமாக நடத்தப்பட்டது; மேற்படி அபவாதச் சொற்கள் புகன்றுகொண்டிருந்த பாமர ஜனங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றுவதற்கு இந்தத் துர்க்கை பூஜை கொஞ்சம் அநுகூலமாயிருந்தது.

70-வது அத்தியாயம்
துர்க்கை பூஜை யுற்சவம்

ஸ்வாமிகள் ஜனாசார விஷயத்தில் வெகு தாராள நோக்குடையவராயிருந்தாலும், மத விஷயத்திலே வெகு வைதிகப் பிடிவாதம் வாய்ந்தவராய் இருந்தார். 1901-ம் வருஷத்துப் பிற்பகுதியிலே, சுவாமிகள் சாஸ்திரோக்த மாகச் சுதினங்களையெல்லாம் கொண்டாடி, உற்சவம் நடத்தினார். சாதாரணமாக, துர்க்கை பூஜை அக்டோபர்மீ"த்திலே வருகிறது. இதைத் தென்னிந்தியாவிலே நாம் சரஸ்வதி பூஜை யென்கிறோம்; சாதாரண ஜனங்கள் ஆயுத பூஜையென்கிறார்கள். நாம் தேவியைச் சாந்தகுண ஸ்வரூபியாக வரித்துச் சரஸ்வதியாகப் பூஜை பண்ணுகிறோம்; அதனால் சரஸ்வதி பூஜையென்கிறோம். வங்க நாட்டார் தேவியை உக்கிர குணஸ்வரூபியாக வரித்துத் துர்க்கையாக அல்லது காளியாகப் பூஜை பண்ணுகிறார்கள்; அதனால் அவர்கள்

துர்க்கை பூஜை யென்கிறார்கள். நாம் சாந்தகுண ஸ்வரூபி யைப் பூஜிப்பதினாலே, மகா சாந்தகுண முடையவர்களாகி, ஆண்மையை யிழந்து வருகிறோம். அவர்கள் உக்கிரகுண ஸ்வரூபியைப் பூஜிப்பதினாலே, உக்கிரகுண முடையவர்க ளாய், ஆண்மையும் பெருமையும் பெற்று வருகிறார்கள்.

'இந்தத் துர்க்கை பூஜையை வெகு சிறப்பாக நடத்த வேண்டும்' என்று சுவாமிகள் அநேக மாதங்கட்கு முன்னா கவே சங்கற்பித்துக்கொண்டார். 'சடங்குக் கிரியைகளில் ஒன்றும் குறைவில்லாமல் இந்தத் துர்க்கை பூஜையை நட த்தவேண்டும்' என்று சுவாமிகள் கருதினாலும், அது நடத் தும் பரிபூர்ண முறை தெரியாதவராய், சிந்தித்துக்கொண் டிருந்தார். நல்ல வேளையாய், அவருடைய சிஷ்யராகிய சாரதச் சந்திரரிடத்தில் ரகுநந்த ஸ்மிருதி என்று ஒரு கிரந் தம் இருந்தது. இந்தக் கிரந்தம் "ரகுநந்தருடைய இருபத் தெட்டு தத்துவங்கள்" என்றும் கூறப்படும். இதிலே துர் க்கை பூஜையின் முறை பரிபூர்ணமாயும் விபக்தமாயும் கூறப்பட்டிருந்தது. சுவாமிகள் அந்தக் கிரந்தத்தைச் சார தச் சந்திரரிடமிருந்து வாங்கி, நான்கு ஐந்து நாட்களுக் குள் படித்து முடித்துவிட்டார். சுவாமிகள் 'இந்தப் பூஜை யை நடத்தவேண்டும்' என்று கருதியிருந்தாரே யொழிய, இந்தப் பூஜை வருதற்குச் சுமார் 10 அல்லது 12 நாட்களு க்கு முன் வரையிலும் எவரிடமும் சொல்லவில்லை. இச் சமயததிலே, ஜகன்மாதா தக்ஷிணேச்வரத்தின் பக்கத்தி லிருந்து தனது பத்துக் கைகளையுடைய பெரியதோர் வடி

வுடன் கங்கையைக் கடந்து மடத்தை நோக்கி வந்தது போலச் சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளுள் ஒருவர் ஒரு கனவு கண்டார். மறுநாள் விடிந்தது. சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளையும் சிஷ்யர்களையும் சூழ வைத்துக்கொண்டு, தாம் துர்க்கை பூஜை நடத்த உத்தேசித்திருக்கிறதாகத் தமது கருத்தைத் தெரிவிக்க, முன் இரவு கனவு கண்ட சந்யாசியும் தாம் கண்ட கனவைத் தெரிவித்தார். சுவாமிகளுடைய எண்ணமும் அந்தச் சந்யாசியினுடைய கனவும் ஒத்திருந்ததினாலே, "இது ஒரு நல்ல சகுனமாம்" என்று அனைவரும் கூற, "அப்படியே துர்க்கை பூஜை நடத்துவது" என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கர்மகாண்ட விதிகளின்படி இது செய்யப்பட வேண்டிய பூஜை யாகையாலும், சங்கற்பத்தின்பேரில் செய்யப்பட வேண்டிய தாகையாலும் சந்யாசிகள் சங்கற்ப ரகிதர்களாகையினாலே, சங்கற்பங்கள் செய்துகொள்ளக் கூடாதாகையினாலும், 'பூஜைக்குச் சங்கற்பம் செய்துகொள்வது எவர்?' என்ற ஒரு கேள்வி பிறந்தது.

மடத்திலே எவரும் சங்கற்பம் செய்துகொள்ளத் தக்கவர்களாக இல்லை. ஆகையால், "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய பூர்வாச்ரம மனைவியும், பின்னர் பிரதம சிஷ்ய சிரோமணியும், சுவாமிகள் முதலானவர்களுக்கு ஞான மாதாவும் ஆகிய ஸ்ரீ சாரதா தேவியைச் சங்கற்பம் செய்து பூஜையை நடத்திவைக்குமாறு வேண்டிக்கொள்வது" என்று சுவாமிகளும் மற்றவர்களும் தீர்மானித்த

பிறகு, சுவாமிகளும்-சுவாமி பிரேமாநந்தரும் - பிரஹ்மச் சாரி கிருஷ்ணலால் என்பவரும் அவ்வம்மணியின் அநு மதி கேட்கச் சென்றனர்.

ஸ்ரீ சாரதாமணிதேவியார் அதிக சந்தோஷத்துடன் சம்மதிக்கவே—சுவாமி விவேகாநந்தர் போய்ச் சம்மதிக்கா தவர்களும் உண்டோ? அதுவும், அவரிடத்திலே பிரத்தி யேகஅன்பு வைத்துச் 'செல்லம்' பாராட்டிவரும் ஸ்ரீ சார தாதேவியார் சம்மதிக்கா திருக்க முடியுமோ?—சுவாமிகள் உடனே துர்க்கை விக்கிரகம் ஒன்று செய்வதற்கு உத்த ரவு கொடுத்துவிட்டு, மடத்துக்குத் திரும்பி வந்தார். இந்தச் சங்கதி நிமிஷத்திலே ஊரெங்கும்தெரிந்துவிட்டது. சுவாமிகளுடைய கிருகஸ்த சிஷ்யர்களும் இந்தப் பூஜை யைக் கொண்டாடுவதற்காக நாலா பக்கங்களிலிருந்தும் வந்து சேர்ந்து, சந்யாசிகளுடனே கலந்து வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

மடத்து நிலத்திலே பெரிய மைதான மொன்று உண்டு. அங்கே வருஷந்தோறும் ஸ்ரீ ராமகிருஷ்ணபரம ஹம்சருடைய ஜனன தினக் கொண்டாட்டம் நடைபெறு வது வழக்கம். அவ் விடத்திலே விக்கிரகத்தைப் பிரதிஷ் டை செய்து பூஜிப்பதற்காக ஒரு மண்டபம் இயற்றப்பட் டது. சுக்கில பக்ஷம் சஷ்டிக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னதாகவே அழகிய விக்கிரக மொன்று கொண்டுவரப் பட்டது; இந்த விக்கிரகம் மடத்துக்கு வந்து சேர்ந்தவுட னே மழை ஏகமாக வருஷித்தது.

சுவாமி பிரஹ்மாநந்தர் அவர்கள் இவ் வுற்சவத்தின் கார்ய நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். மடத்திலே பல வித பூஜா திரவியங்களும் போஜனத்துக்கு வேண்டிய சகல சாமக்கிரியைகளும் வந்து சேர்ந்து நிறைந்தன. பூஜை யாரம்பிப்பதற்கு முந்திய நாளே ஸ்ரீ சாரதா தேவியார் அநேக ஸ்திரீ பக்தர்களுடனேகூட மடத்துக்கு வந்து சேர்ந்தார். அவ்வம்மையாரும் அவருடன் கூட வந்தவர்களும் உற்சவம் முடியும் வரையில் இருக்கும் பொருட்டு, அருகிலே யிருந்த பாபு நீலாம்பர முக்கர்ஜியினுடைய உத்தியான மாளிகை வாடகைக்கு அமர்த்தப்பட்டது.

ஸ்ரீ சாரதாதேவி மந்திர பூர்வமாகச் சங்கற்பம் செய்து கொண்டார்; பின்னர், கிருஷ்ணலால் பிரமச்சாரியை பூஜகராயிருக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே பிரஹ்மச்சாரியும் பூஜகஸ்தானத்தில் வீற்றிருக்க, சுவாமி ராமகிருஷ்ணாநந்தருடைய பிதாவும்-மகா பக்தரும்-தந்திர மந்திர சாஸ்திரங்களிலே விற்பன்னருமாகிய ஈச்வர சந்திர பட்டாச்சார்ய மஹாஷயர் என்பவர் தந்திர தாரகராக, அதாவது, பூஜகருக்கு மந்திரங்கள் சொல்லிக் கொடுத்துப் பூஜையை நடத்தி வைப்பவராக அமர்ந்தார். பூஜை சாஸ்திரோக்தமாக நடத்தப்பட்டது; ஸ்ரீ சாரதா தேவியின் விருப்பப் பிரகாரம், மிருகபலி மாத்திரம் நடத்தப்படவில்லை. இந்தப் பூஜையிலே ஏழைகளுக்கு அன்னமளித்தல் பிரதானமான ஒரு விஷயமாயிருந்தது; பூஜை நடந்த மூன்று நாட்களிலும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் விசேஷமாக உப

சரித்து அன்னமளிக்கப்பட்டார்கள். இன்னும், வேலூரி லும் தக்ஷிணேச்வரத்திலும் உள்ள அநேக பண்டிதர்களும் பிராஹ்மணர்களும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்க ளும் சந்தோஷமாக வந்து பூஜையைக் கண்டு களித்து, சமாராதனையில் கலந்து உண்டார்கள். அதுமுதல் வைதி கப் பிடிவாதத்துடனே சுவாமிகளையும் மற்றச் சந்யாசிகளை யும் குறை கூறிக்கொண்டிருந்த ஜனங்களெல்லோரும், தாங்கள் கூறிவந்த அபவாத மொழிகளையெல்லாம் விட்டு விட்டு, 'அவர்கள் உண்மையான சந்யாசிகளே' என்று உணர்ந்துகொண்டிருந்தார்கள்.

உற்சவம் மூன்று நாட்களுக்கு வெகு விமர்சையாக நடந்தது. மேளதாளங்களென்ன, நாகஸ்வரங்களென்ன, சங்கீதக் கச்சேரிகளென்ன, பஜனைகோஷ்டிகளென்ன, பகவந்நாம சங்கீர்த்தனங்களென்ன, தேவி ஸ்தோத்ரங்க ளென்ன, பக்தர்களுடைய பித்துப் பிடித்த ஆடல் பாடல்களென்ன, எல்லாம் சேர்ந்து ஒலியும் எதிரொலி யும் ஆகி, ஓம் என்ற சப்தத்தையே முழக்குவனபோன் றிருந்தன. சந்யாசிகளோ மடத்துக்கு வருகின்ற சகல ஜன ங்களையும் பார்ப்பார் பறையரென்றவித்தியாசம் பாராமல், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசம் பாராமல், தனவந்தர் தரித்திரர் என்ற வித்தியாசம் பாராமல், ஆண் பெண் என்ற வித்தியாசம் பாராமல், குழந்தைகள் வயோ திகர் என்ற வித்தியாசம் பாராமல், மிகுந்த மரியாதையுட னும் உபசாரத்துடனும் வரவேற்று, அவர்களுக்கு வேண்

டிய சௌகர்யங்கள் செய்து கொடுத்து, எவருக்கும் எக்குறைவும் நேரிடாவாறு பார்த்துக்கொண்டார்கள்.

இம் மூன்று நாட்களிலும் இடைவிடாது ஒரே ஆநந்தம் அந்த மடத்திலே நிகழ்ந்திருந்தது. அந்த மடத்திலேயுள்ளவர்கள், அங்கு வந்தவர்கள் எல்லோரும் தேவர்கள் போன்று விளங்கினார்கள்.

ஸப்தமி, அஷ்டமி, நவமி இம் மூன்று நாட்களிலும் உற்சவம் வெகு மும்முரமாக நடந்தது. பூஜை தொடங்கிய முதல் நாளிரவு சுவாமிகளுக்கு ஜ்வரம் வந்துவிட்டது; அதனால் சுவாமிகள் மறுநாட் காலையில் நடந்த பூஜை சமயத்தில் வந்திருக்க முடியாது போயிற்று. ஆயினும், சுவாமிகள் மெல்லென எழுந்து, பூஜை முழுதிலும் பிரதானபாகமாகிய சந்தி பூஜை சமயத்தில் வந்திருந்து, புஷ்பம் எடுத்துத் தேவியின் பாதாரவிந்தங்களிலே போட்டு நமஸ்கரித்தார். ஆனால், மறுநாள் நவமி யன்று சுவாமிகள் சௌக்கியமாய்விட்டார்; அன்றிரவு பூஜையிலே வந்து கலந்துகொண்டார்; ஸ்ரீராமகிருஷ்ணர் தேவியின்மீது அதி உருக்கமாகப் பாடுகின்ற சில பாடல்களைச் சுவாமிகள் தமது அற்புதமான தொண்டையைத் திறந்து பாடி, அங்குக் கூடியவர்கள் அனைவரையும் ஆநந்தக்கடலி லமிழ்த்திவிட்டார்.

பொழுது விடிந்தது; விஜயதசமி தினம். அன்று முழுதும் ஆர்ப்பாட்டமாகப் பூஜை நடந்தது. மாலையாயிற்று. நாகஸ்வரங்கள் பூரிக்க, வேதஸ்வரங்கள் கோஷிக்க, பக்த சிரேஷ்டர்களுடைய பல்லாயிரம் தொண்டைகளிலிருந்து

பகவதி நாம சங்கீர்த்தனம் கிளம்ப, ஜகன்மாதாவினுடைய விக்கிரகமானது பவனி கொண்டுவரப்பட்டு, கங்கை நதியிலே விடப்பட்டது.

பின்னர் இந்தப் பூஜையைக் கண்டு களிக்க வந்திருந்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் உலக கிருத்தியங்களை நினைத்துக்கொண்டு "இந்தப் பூஜை இன்னும் சில நாட்கள் நடந்துகொண்டிருக்கக் கூடாதா" என்ற ஏக்கத்துடன், தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஸ்ரீ சாரதாதேவியாரும் தாம் சங்கற்பம் செய்து ஆரம்பித்த பூஜை மிகவும் விமர்சையாக நடந்தேறியதுபற்றி மிகுந்த சந்தோஷம் கொண்டு, சுவாமிகள் உள்படத் தமது சந்யாசக் குழந்தைகள் அனைவரையும் மனமார வாழ்த்தி விட்டு, தமது ஸ்திரீ பக்தர்கள் புடைசூழப் புறப்பட்டு, பாக் பஜாரிலேயுள்ள தமது வாசஸ்தலம் போய்ச் சேர்ந்தார்.

வங்காளத்திலே இந்தத் துர்க்கை பூஜை அல்லது தசரா பண்டிகை வெகு விசேஷமானது; வருஷத்திலே வரும் மற்றெல்லாப் பண்டிகைகளையும் விட இந்தப் பண்டிகையே மிகச் சிறந்தது. இக்காலத்திலே ஜகன்மாதாவான பார்வதி தேவி தமது பர்த்தாவான பரமேச்வரனையும் தமது கணங்களையும் கூட்டிக்கொண்டு, பனிவரையாகிய கைலாசபர்வதத்திலிருந்து கீழேயிறங்கி வந்து, உலகத்து ஜனங்களின்மீது தமக்கு இருக்கும் அபாரமான கிருபை காரணமாக மூன்று நாட்களுக்கு நாட்டின் நடுவி

லே பொது ஜனங்களின் இடையிலே வசிப்பதாக ஐதிகம் ஒன்று. இக்காலத்திலே பிரகிருதியே ஒரு பிரத்தியேக அழகுடன் விளங்குகிறது. வயல்களிலே நெற்கதிர்கள் செழித்துக் கொழுத்த தான்யமாகிய பாரம் பொறுக்க முடியாமல், முடிசாய்த்துத் துவண்டு துவண்டு வளைந்து கொடுக்கின்றன; மைதானங்களிலே புல்கள் எங்கும் ஏராளமாக முளைத்து எங்கும் பச்சைப் பசேலென்று பசுமையைக் கிளப்பி, பார்த்தவர் கண்களையெல்லாம் பறித்து நிற்கின்றன.

நதிகளிலோ தண்ணீர்: ஸ்படிகம் போலத் துல்லியமாய்ப் பிரகாசித்து, உலகு முழுதும் அதிலே பிரதிபிம்பிக்கும்படியாய் அவ்வளவு நிஷ்களங்கமான தன்மை வாய்ந்து, சல சலவென்று சப்தித்துக்கொண்டு ஓடுகின்றது.

விருக்ஷங்களெல்லாம் பனித்துளிகள் தாங்கி, பளிங்குச் சிறு கற்களை ஏந்தி நிற்கின்றனபோ லிருக்கின்றன.

'ஜகன்மாதா தம் குழந்தைகளைக் கடாக்ஷிக்க வருகிருள், வருகிருள்' என்று பிரகிருதியே கட்டியம் கூறுவது போன்று, அவ்வளவு வனப்பு மிகுந்திருக்கின்றது. பந்துக்களும் நண்பர்களும் இக்காலத்திலே ஒருவருக்கொருவர் வெகுமதிகள் வழங்கிக்கொள்வார்கள்; வாலிபர்களும் சிறு பெண்களும் நேர்த்தியான உடைகள் தரித்துக் கம்பீரமாக உலாவுவார்கள். ஏழை எளியவர்களுக்கும் வீட்டு வேலைக்காரர்களுக்கும் ஆடையாகாராதிகள் வழங்கப்படும்.

பூஜைக்கு வரும்படி நண்பர்களும் பந்துக்களும் நூற்றுக் கணக்காக அழைக்கப்படுவார்கள். பூஜையறை வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருக்கும்; அவ்வறையின் இருபுறத்திலும் வாழைமரங்கள் கட்டப்பட்டிருக்கும்; மேலே மாவிலைத் தோரணம் மாட்டப்பட்டிருக்கும்; வாசலருகில் தண்ணீர் நிரப்பப்பெற்று, மேலே தேங்கா யுடன் பூர்ணகும்பங்கள் வைக்கப்பட்டிருக்கும். பூஜைக்குச் சில நாட்களுக்கு முன்னிருந்தே தேவி ஸ்தோத்திரங்கள் பாட ஆரம்பித்துவிடுவார்கள்.

ஆ! ஆ! தேவியினுடைய விக்கிரகத்தை, வாசகர்களே! நீங்கள் கூர்ந்து பார்த்ததுண்டா? மாதா சிம்ஹத்தின்மீது ஒரு பாதத்தை வைத்துக்கொண்டிருக்கிறாள்; இன்னொரு காலை மகிஷாசுரன் என்ற ராக்ஷஸன் ஒருவனுடைய தோளில் வைத்து அழுத்துகிறாள்; மாதாவைச் சுற்றி அவளுடைய புத்திரர்களும் புத்திரிகளும் சூழ்ந்திருக் கிறார்கள்; தேவசேனாதிபதியாகிய கார்த்திகேயன் ஒருபுறம், கணபதி யொருபுறம், லக்ஷ்மி யொருபுறம், சரஸ்வதி யொருபுறம், இம்மாதிரியான தேவியை ஹிந்துக்கள் எப் படிப் பூஜை பண்ணுகிறார்களென்பது ஹிந்துக்களுக்கே தெரியுமல்லாது, பிறருக்குத் தெரியாது. இந்தத் தசரா சமயத்திலே சாதாரணமாக வேற்றுமை யொன்றும் பாராட் டப் படமாட்டாது; உயர்வு தாழ்வு என்பனவெல்லாம் ஒன்றாய்விடும்; விரோதிகளும் தங்களுடைய விரோத குணங்களை யொழித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்திக்கொள்வார்கள்.

இதே வருஷத்தில் சுவாமிகள் தமது மடத்தில் சாஸ்திரோக்தமாக லக்ஷ்மி பூஜை, காளி பூஜை இவ்விரண்டையும் செய்விப்பித்தார். இந்த வருஷத்திலே சுவாமிகளுக்கு விக்கிரகாராதனையிலே விசேஷபக்தி விழுந்துவிட்டது. காளி பூஜை யாயிற்று; இப்பொழுது சுவாமிகளுடைய தாயார் ஒரு வார்த்தை சொல்லியனுப்பினர். சுவாமிகள் சிறு குழந்தையாயிருந்தபொழுது ஒருதரம் அதிக வியாதியினால் பிடிக்கப்பட்டாரென்றும் அப்பொழுது அவ்வம்மையார் தமது குழந்தை சௌஸ்தமடைந்து சுகமாய்விடுமானால் மகா காளிக்கு விசேஷ அர்ச்சனை யபிஷேகாதிகள் செய்வது மல்லாமல், மகா காளி சந்நிதானத்திலே குழந்தையை உருட்டிவிடுவதாகப் பிரார்த்தனை செய்துகொண்டதாகவும், இத்தனை நாட்களாக அந்தப் பிரார்த்தனையைத் தான் மறந்துவிட்டதாகவும், இப்பொழுது சுவாமிகள் அடிக்கடி வியாதியினால் பிடிக்கப்படுகிறதினால் அந்தப் பிரார்த்தனை இப்பொழுது ஞாபகத்துக்கு வந்ததென்றும், சுவாமிகளை 'ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்துபெற்று, பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இருகைப் புறத்திலேந்திக் கனக முலைதந்தா" ளாகிய தாயார் சொல்லியனுப்பினர்.

அப்பொழுது சுவாமிகள் நடக்க முடியாதபடி அவ்வளவு வியாதியஸ்தராயிருந்தார்; ஆயினும், தாயினுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதற்காகக் காளிகட்டத்துக்கு வந்து ஆதிகங்கையிலே ஸ்நாநம் செய்து, தாயர்

ருடைய விருப்பத்துக்கு இணங்கி, சொட்டச் சொட்ட ஈர உடையுடனேயே வழியெல்லாம் நடந்து, க்ஷேத்திரத் துக்கு வந்து, ஜகன்மாதா மஹாகாளி சந்நிதானத்திலே மூன்று தரம் உருண்டு புரண்டார். பின்னர் க்ஷேத்திரத்தி லே அர்ச்சனை யபிஷேகாதிகள் நடந்தன; சுவாமிகள் அந்த க்ஷேத்திரத்தை ஏழுதரம் பிரதக்ஷிணம் செய்து வந்தார். பிறகு, க்ஷேத்திரத்து நடன மந்திரத்துக்கு மேற்குப் பக்கத்திலே யிருக்கும் திறந்த வெளியிலே சுவாமிகள் மாதாவின் சந்நிதானத்திலே ஹோம யக்ஞம் செய்தார். உலகு முழுதும் பிரக்யாதி பெற்ற, அதுவும் அமெரிக்கர்களையும் ஐரோப்பியர்களையும் பிரமிக்கச்செய்து அத்வைத கோஷம் புரிந்த ஒரு வாலிப சந்யாசி ஹோதா வாயிருந்து எக்ஞம் செய்வதைத் தரிசிப்பதற்கு ஏராள மான ஜனங்கள் வந்து கூடினர். சுவாமிகள் எக்ஞம் செய்த அந்த விசேஷக் காக்ஷியைப்பற்றி யொருவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:— "சுவாமிகள் யாகாக்கினி யின் கொழுந்துவிட் டெரிகின்ற ஜ்வாலையிலே நெய்யை ஓமம் கொட்டி அன்று இரண்டாவது ஒரு ப்ரஹ்மா போன்று தோன்றினர்."

சுவாமிகளிடம் அந்த க்ஷேத்திரத்து அர்ச்சகர்கள் மிகவும் அன்பு பாலித்தார்கள். சமுத்திர யாத்திரை செய்வ தை மிலேச்ச தர்மமாகக் கொள்ளும் வைதீக கோஷ்டியை அவர்கள் சேர்ந்தவர்களாயிருந்தும், 'சுவாமிகள் யாத்திரை செய்தவர்' என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தும், அவர்

கள் சுவாமிகள் விஷயத்தில் எவ்வித ஆக்ஷேபனையும் கூற வில்லை. "ஆனால், அவர்கள் என்னை க்ஷேத்திரத்துக் குள்ளே மிகுந்த உபசாரத்துடனே நல்வரவேற்று, நான் இஷ்டப்படி யெல்லாம் மாதாவைப் பூஜிப்பதற்கு எனக்கு உதவி செய்தார்கள்" என்று சுவாமிகள் மடத்துக்குத் திரும்பி வந்த பின்னர்த் தமது நண்பர்களிடம் கூறினர்.

சுவாமிகள் "சகுண உபாசனையும் விக்கிரகாராதனை யும் அத்தியாவசியம்" என்று தமது ஜீவிதத்தின் மூல மாகவே நிரூபித்தருளினர்; "அத்வைதத்திலேயே எப் பொழுதும் அமர்பவராயிருந்தும், துவைதத்திலும் சிறி தும் பின்னிட்டவரன்று" என்பதையும் விளக்கிக் காட்டி னர். சுவாமிகள் அத்வைதகர்ச்சனை செய்து இவ்வவனியை அதிரச் செய்த வேதாந்த சிங்கமேயாயினும், அவர் சில தேவதைகளின்மீது இயற்றிப் பாடியுள்ள கீதங்களும் கீர்த்தனங்களும் அவருடைய ஹிருதயத்திலே யிருந்த பக்தியின் பான்மையை ஒருவாறு விளக்கிக் காட்டுகிறது.

71-வது அத்தியாயம்
நிறைவேறாத ஒரு இச்சை

1901-ம் வருஷம் அக்டோபர்மீ த்திலே சுவாமிகளு டைய சரீர ஸ்திதி மிகவும் கெட்டுவிட்டது; வியாதி மேலி ட்டுவிட்டது; சுவாமிகளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. உடனே கல்கத்தாவிலே பெயர் பெற்ற ஆங்கில வைத்திய

ராகிய டாக்டர் ஸான்டர்ஸ் என்பவரை வரவழைத்தார்கள். அந்த வைத்தியர் வந்து பார்த்து, ''சுவாமிகள் எவ்விதத்தி லும் சிரமம் எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்றும், ''மூளைக்குச் சற்றும் உழைப்புக் கொடுக்கக்கூடாது'' என்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

டாக்டர் வந்து பார்த்துப் போன பிற்பாடு, சுவாமிக ளுடைய சரீர ஸ்திதி இன்னும் கெடுதலான நிலைமைக்கு வந்துவிட்டது; சுவாமிகள் படுத்த படுக்கையில் கிடக் கும்படி நேர்ந்துவிட்டது. உட்காரப் போதுமான அளவு சுவாமிகள் தம்முடைய அறையை விட்டு வெளியே வர எத்தனித்தார். ஆனல், சுவாமிகளுடைய நண்பர்களும் சிஷ்யர்களும் ''ஸ்வாமிகள் இன்னும் கொஞ்சக் காலத்து க்கு வெளியே வரவே கூடாது'' என்று பலமாகக் கெஞ்சி யும் கதறியும் சோபித்தும் வற்புறுத்தவே, சுவாமிகள், அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்காம லிருக்க முடிய வில்லை; வெகு கஷ்டப்பட்டு அறையினுள்ளேயே யிருந் தார். ஆயினும், சுவாமிகளைத் தரிசனம் செய்வதற்குத் திரள் திரளாக ஜனங்கள் வந்துகொண்டே யிருப்பார் கள். ஸ்வாமிகள் இவர்களிடத்திலே பேச ஆரம்பித்து விடுவார்; வரவரப் பேச்சு மும்முரமாய்விடும். உடனே மற்றச் சந்யாசிகள் சுவாமிகளுடன் பேசிக்கொண்டிருப்ப வர்களுக்குக் கண் ஜாடை, கை ஜாடை காட்டிப் பேச்சை நிறுத்தும்படி செய்வார்கள். வந்தவர்கள் பேசாவிட்டா லும், சுவாமிகளே ஆழ்ந்த விஷயங்களைப்பற்றிப் பேச

ஆரம்பித்துவிடுவார்; அப்பொழுது சந்யாசிகள் மெல்ல சுவாமிகளிடத்திலே "வைத்தியர் கண்டிப்பாக உத்தரவு செய்திருக்கிறாரே" என்பார்கள்.

சுவாமிகள் தமது அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாலும் மடத்திலே நடந்து வரும் காரியங்கள் அனைத்தையும்பற்றி விசாரிப்பார். கொஞ்சம் சௌக்கியமாய்விட்டது; அறையை விட்டு வெளியே வந்துவிட்டார். ஒரு நிமிஷம் சும்மா யிருக்கமாட்டார்; கையினால் ஏதேனும் வேலை செய்துகொண்டேயிருப்பார். சில வேளைகளில் சுவாமிகள் மண்வெட்டி யெடுத்துத் தாமே வெட்டி மேடு பள்ளங்களைச் சீர்திருத்துவார்; சில வேளைகளில் குழிகள் தோண்டி சிறு செடி கொடிகளை நடுவார்; விதைகளைப் போடுவார்; தினந்தோறும் அவற்றின் வளர்ச்சியை அதிக சந்தோஷத்துடனே கவனித்து, அவற்றைப் பராமரித்து வருவார். சில வேளைகளில் அவர் பத்மாசனத்தில் உட்கார்ந்து நிஷ்டையி லிருப்பார்; அல்லது வேதத்திலிருந்து ஏதேனும் ஒரு சுலோகத்தை யெடுத்து ஸ்வரத்துடனே உச்சரித்துக்கொண்டிருப்பார்; அல்லது ஒரு புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டிருப்பார்.

இக்காலத்திலே ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. இஃது சுவாமிகள் விஷயத்தில் மாத்திரம் விசேஷமானதன்று; எல்லா மஹான்களிடத்தும் காணப்படுகின்ற ஒரு விசேஷ குணமாம். இப்பொழுது நடந்த சம்பவமானது சுவாமிகள் யோக சக்தியையும் சுவாமிகளுடைய திட

மான குரு பக்தியையும் ஒருவாறு விளக்கிக் காட்டுகிறது. சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்குள் நிர்ப்பயாநந்தர் என்றொருவர் இருந்தார். இவருக்குக் கடினமான ஜ்வரம் கண்டு, ஜன்னி பிறந்துவிட்டது; "இனிமேல் பிழைக்கமாட்டார்" என்று வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள். எல்லோரும் ஏக்க முறலானார்கள். ஜ்வரமானது 107 டிகிரியாயிருந்தது. சுவாமிகளுக்குக் கவலை மிகுந்துவிட்டது. புத்திர வாத்சல்யத்தினும் பெரிது சிஷ்ய வாத்சல்யம். சுவாமிகள் ஒரு நிமிஷ நேரம் கீழே யுட்கார்ந்துகொண்டு, 'என்ன செய்யலாம்' என்று யோசனை பண்ணினார்; ஒன்றும் விளங்கவில்லை. பின் எழுந்து சில நிமிஷ நேரம் உலாவினார். உலாவிக்கொண்டிருக்கையிலேயே நிமிர்ந்து பார்த்தார். எதிரே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய க்ஷேத்திரம் தோன்றிற்று. உடனே முகம் மலர்ந்தார். ஒரு யோசனை தோன்றிவிட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரைப் பூஜிப்பதற்காக, அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அஸ்திகள் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தைக் கழுவினார்; நிரப்பயாநந்தரிடம் கொடுத்துக் குடிக்கும்படி செய்தார். அப்பொழுது மேன்மேலும் அதிகமாகிக்கொண்டிருந்த ஜ்வரமான திடீரென்று நின்றுவிட்டது; உடனே சுவாமிகள் அடக்கவொண்ணாச் சந்தோஷம் மிகுந்தவராய்த் தமது சகோதர சந்யாசிகளையும் மற்றச் சிஷ்யர்களையும் நோக்கி "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவருடைய சக்தியைப் பார்த்தீர்களா? அவரால் என்ன அற்புதங்கள் தான் செய்ய முடியாது?" என்றார்.

சுவாமிகள் மஹா சமாதி யடைவதற்குச் சின்னாட்களுக்கு முன்பாகச் சுவாமிகள் தமது சரீரத்திலேயுள்ள இடை, பிங்கலை, சுஷும்னை முதலிய நாடிகளின் செய்கைகளைப் பிரத்தியக்ஷத்தில் காட்டுவதாகவும், யோக சாஸ்திரங்களிலே கூறப்பட்டுள்ள இவை உண்மையே யென்று நிரூபிப்பதாகவும் கூறினார்.

ஒரு சமயத்தில், சுவாமிகளுக்கு "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய அஸ்திகளை வைத்துப்பூஜிப்பதில் என்ன விசேஷம்? ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சக்தி உண்மையில் அதில் இருக்கிறதா?" என்று ஒரு சந்தேகம் உண்டாய் விட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பக்த கோடிகள் அவருடைய அஸ்திகளை அவரைப் போலவே பாவித்துப் பூஜை பண்ணி வருகிறார்கள். இந்தச் சந்தேகமானது சுவாமிகள் கடைசி தடவை மேனாட்டுக்குச் சென்று திரும்பிவந்தவுடனே உண்டாயிற்று. சுவாமிகள் இந்த அஸ்திகள் வைத்திருக்கும் பரிசுத்த பாண்டத்தைச் சில வேலைகளில் "ஆத்மாராம கௌடா" என்பார். இந்தச் சந்தேகம் கிளம்பிய அன்று சுவாமிகள்: "நாதா! சற்குரு மூர்த்தி! ஸ்ரீ ராமகிருஷ்ணதேவ! தேவரீர் இப் பாண்டத்தில் உள்ளது உண்மையாயின், கல்கத்தாவுக்கு வந்திருக்கிற க்வாலியர் மஹாராஜா அவர்களை மூன்று நாட்களுக்குள் இங்கு வரவழைக்க வேண்டும்" என்று ஒரு பரிசோதனைக் கேள்வி போட்டுக் கொண்டார். 'அந்த மஹாராஜா வருவது அசாத்தியம்' என்று சுவாமிகளுக்குத் தெரியும். சுவாமிகள் இம்மாதிரி

தாம் பிரார்த்தித்துக்கொண்டதை வேறு எவரிடமும் கூற வில்லை; இது மாத்திரம் அன்று; இதை மறந்தும்விட்டார்.

மறுநாள் மாலையில் சுவாமிகள் கல்கத்தாவுக்கு ஏதோ ஒரு கார்யார்த்தமாகப் போய்விட்டு மடத்துக்குத் திரும்பி வந்தபொழுது, சகோதர சந்யாசிகள் அவரிடத்தில் பின் வருமாறு கூறினார்கள்:—"க்வாலியர் மஹாராஜா அவர்கள் தங்களைத் தரிசிக்கக் கருதிப் புறப்பட்டாராம்; ஆனால், அதற்குள்ளாகத் தாங்கள் இருக்கிறீர்களோ? இல்லையோ? என்று தெரிந்து வரும்பொருட்டு அவருடைய சகோதரரை அனுப்பியிருந்தார். அவர் ஒரு மோட்டார் வண்டியில் இப்பொழுதுதான் வந்துவிட்டுப் போனார். தங்களைக் காணவிட்டால், மஹாராஜா மறுநாளே கல்கத்தாவை விட்டுப் புறப்படவேண்டி யிருக்கிறதால், இன்னொரு சமயம் வரும்பொழுது வந்து பார்ப்பதாகச் சொல்லிவிட்டு வரும்படி அவர் தமது சகோதரரிடம் சொல்லியனுப்பினராம்."

சுவாமிகள் இதைக் கேட்டவுடனே ஆநந்த பூரிதராய் ஸ்ரீ ராமகிருஷ்ண க்ஷேத்திரத்துக்கு ஓடினார்; தாம் செய்து கொண்ட பிரார்த்தனை ஞாபகத்துக்கு வந்துவிட்டது; சாஷ்டாங்கமாக விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தார். "என் அப்பனே! குருமூர்த்தி! எனக்கு அடிக்கடி விசுவாசம் குறைவதுபற்றி மன்னித்திடுக! நான் மூடனேயாயினும் உந்தன் புத்திரனன்றோ? உன்னால் உலகில் முடியாத கார்யமு முண்டோ? உனது நாமம் திக்கு

திகந்தங்களிலும் கோஷிக்கப்படுகின்ற ஒரு விஷயம் போதாதோ உனது சர்வசக்தித்துவத்தை நிரூபிப்பதற்கு? எந்தையே! என்னை மன்னித்திடுக. உன்னாலன்றோ உயிர் வாழ்கின்றேன். நான் உன்கைப் பம்பரம்தானே. நீ யிலதேல் எனக்கு இருப்பேது?" என்று பலவாறுகத் தோத்திரம் செய்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரை ஏத்தித்தொழுதார். அப்பொழுது அந்த க்ஷேத்திரத்திலே ஸ்வாமி பிரேமாநந்தர் தியானம் செய்துகொண்டிருந்தார்.

சுமாமிகள் ஓடோடி வந்ததும், சாஷ்டாங்கமாக விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணினதும், பின்னர் வாயில் வந்தவாறு பிதற்றித் தோத்திரம் செய்ததும் எல்லாவற்றையும் பார்த்தார் சுவாமி பிரேமாநந்தர்; ஆச்சர்யப்பட்டார்; சுவாமிகளிடம் மெல்லச் சென்று, சுவாமிகளையே பார்த்து நின்றார். அப்பொழுது சுவாமிகள் தான் செய்துகொண்ட பிரார்த்தனையையும் அது நிறைவேறியவாற்றையும் சுவாமி பிரேமாநந்தரிடம் கூறினார். இதற்குள்ளாக, சுவாமிகள் ஓடோடி ஸ்ரீ ராமகிருஷ்ண க்ஷேத்திரத்துக்குச் செல்வதைக் கண்ட மற்றச் சந்யாசிகள் அனைவரும் வந்து இங்கு குவிந்துவிட்டார்கள். இந்தச் சங்கதியை அவர்களும் கேட்டார்கள்; ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவருடைய சாந்நித்திய மஹிமையை எல்லோரும் நன்கு உணர்ந்து திடுக்கிட்டு நடுங்கி, பக்தி பரவசர்களாய் ஆநந்தக் கூத்தாடினார்கள். வேலூர்

மடத்தில் எப்பொழுதும் ஞானகாயமே சூழ்ந்துகொண் டிருந்தது; சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகள் தக்ஷிணேச்வர க்ஷேத்திரத்துத் தோட்டத்திலே ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் இருந்தபொழுது எவ்வித பிரஹ் மாநந்தத்தை யநுபவித்துக்கொண் டிருந்தார்களோ அதே பிரஹ்மாநந்தத்தை இப்பொழுது அநுபவிப்பதாக உணர்ந் தார்கள்.

இன்னும் இந்தியாவிலே மதவிஷயத்தில் தவிர, வேறு பொதுக் காரியங்களை முன்னிட்டு உழைக்கின்ற பெரிய பெரிய மனிதர்களிலும் தலைவர்களிலும் அநேகர் சுவாமிகட்கு ஆப்த நண்பர்களா யிருந்தார்கள். அந்த வரு ஷத்திலே பாரதஜனராஜீ சபையானது கல்கத்தாவிலே கூடிற்று. இந்தியாவின் நாலாபாகங்களிலிருந்தும் அச் சபைக்குப் பிரதிநிதிகளாக வந்திருந்த அநேக பிர முகர்கள் இந்தியாவின் பெயரை உலகத்தில் அந்நிய கண்டங்களிலும் உந்நதஸ்தானத்தில் நாட்டி வைத்து அழியாப் புகழ் படைத்திருக்கும் தேசாபிமான தவராஜ சிங்கமாகிய சுவாமி ஸ்ரீ விவேகாநந்தரைக் கண்டு சம்பாஷிப் பதற்கு வந்து சேர்ந்தார்கள். சுவாமிகள் அவர்களுடனே ஆங்கிலத்தில் சம்பாஷியாது, ஹிந்தி பாஷையிலே சம் பாஷித்து, அவர்கள் அனைவருடையவும் மனத்திலே அநேக ஆழ்ந்த கருத்துக்களைப் பதிப்பித்து அவர்களை வசப்படுத்திக் கொண்டுவிட்டார்.

ஒரு நாள் இந்தப் பாரதஜனசபைத் தலைவர்களுள்ளே பிரக்யாதி பெற்ற ஒருவர் சுவாமிகளைத் தனியே கண்டு

சம்பாஷிக்க விரும்பி வந்து சேர்ந்தார் சுவாமிகள் அவரை விட்டுக்கொண்டு மடத்தின் மைதானத்துக்குச் சென்று, ஸ்வாமிகளுடைய ஹிருதயத்திலே மிகமிக அருமையாக ஆழ்ந்து கிடந்த ஒரு விஷயத்தைப்பற்றி முன்னும் பின்னுமாக நடந்துகொண்டே மிகுந்த ஆத்திரத்துடனும் உற்சாகத்துடனும் சுமார் ஒன்றரை மணி நேரம் சம்பாஷித்த இந்த சந்தர்ப்பத்தைப்பற்றி "அட்வோகேட்" என்ற பத்திரிகையின் அதிபர் பின் வருமாறு எழுதினார்:—

"பாரதஜனசபை சமயத்திலே நாங்கள் சென்ற முறை அவரைக் கல்கத்தாவில் கண்டபொழுது அவர் உற்சாகம் ததும்பிய முகத்துடனே இந்தியாவின் புநருத்தாரணத்தின் பொருட்டுத் தாம் நினைத்துள்ள ஆலோசனைகளை வடநாட்டு இந்தியர் எவருக்கும் பெருமையை அளிக்கக் கூடிய சுத்தமான, தெள்ளிய ஹிந்தி பாஷையில் அவர் வாசாலகத்துடனே பேசிக்கொண்டிருந்தார். பாரத ஜனசபைத் தலைவர்களுடனே அவர் சம்பாஷித்த விஷயங்களிலே முக்கியமானது யாதெனில், 'பிரமாண்டமாக ஒரு வேதபாடசாலை ஏற்படுத்தி, அதிலே சமர்த்தர்களாகச் சிலரைப் பயிற்றுவித்து, எங்கெங்கும் சென்று பூர்வீக ஆர்யநாகரிகத்தையும் சமஸ்கிருத வித்தையையும் பரப்பும்படி அனுப்பவேண்டும்' என்பதேயாம். இந்தியாவின் பூர்வீக நாகரிகமே உலகில் உத்தமமான நாகரிகம்; அதைப் பின்பற்றுவோரே உயர்ந்தோர்; சமஸ்கிருத பாஷை

தேவபாஷை; இந்தப் பாஷை கைவிடப்பட்டு விட்டதி னாலேயே, இந்தியா இந்த ஸ்திதிக்கு வந்துவிட்டது. உலகு அறிவு முழுதும் சமஸ்கிருத பாஷையிலே அடங் கிக் கிடக்கின்றது. ஆகலால், இந்தியா மறுபடி உலகினர் பிரமிக்கும்படி உந்த நிலைமையை அடையவேண்டுமானல் புராதன ஆர்யநாகரிகமும் சம்ஸகிருத பாஷையும் மறு படியும் சிறப்புப் பெறுதல் வேண்டும். இதுவே சுவாமிக ளுடைய கருத்து. பாரதஜன சபைக்குப் பிரதிநிதிகளாக வந்து சுவாமிகளைக் கண்டு சம்பாஷித்தவர்களிலே யொரு வர் பின் வருமாறு எழுதியிருக்கிறர்:—

'அவருடைய கடைசியானதும் நிறைவேற்ருமல் விடப்பட்டதுமான இச்சையாவது, கல்கத்தாவில் ஒரு வேதபாடசாலை ஸ்தாபிக்கவேண்டு மென்பதாம். அவர் மஹா சமாதி யடைவதற்கு ஒருசில மாதங்கட்கு முன் கிறிஸ்த்மஸ் விடுமுறை நாட்கள் சமயத்திலே, பாரதஜன சபையானது கல்கத்தாவிலே நடைபெற்றது. அந்தச் சந் தர்ப்பத்திலே இந்தியாவின் வெவ்வேறு மாகாணங்கள் எல்லாவற்றிலிருந்தும் பிரதிநிதிகளும், சீர்திருத்தக்கா ரர்களும். பண்டிதர்களும் பற்பல தொழில்களையுடைய பெரிய மனிதர்களும் அங்குக் கூடினர்கள். அவர்களில் அநேகர் நகரத்தில் தங்கியிருந்த காலத்தில் பிரதிமாலையி லும் சுவாமிகளைத் தரிசிப்பதற்கு வேலூர் மடத்துக்கு வந்தார்கள். சுவாமிகள் அவர்களுக்கு ஜனசமூக விஷ யங்கள், ராஜீய நியாயங்கள், மததர்மங்கள் முதலிய பல

விஷயங்களைப்பற்றியும் சம்பாஷித்து விளக்குவார். உண்மையில், இக் கூட்டங்கள் அங்கு வந்திருந்தவர்கட்குப் பாரதஜன சபையில் உண்மையான கூட்டத்தைப் பார்க்கிலும் சிறந்ததும் அதிக நன்மையைத் தரக் கூடியதுமான ஒரு மஹா சபையாகவே ஆய்விட்டன. இம் மாலைகளில் ஒருநாள், பிரேரேபணை 'கல்கத்தாவில் ஒருவேதபாடசாலை ஏற்படுத்தவேண்டும்' என்பதாயிற்று; அங்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் தங்கள் சக்தியில் வாய்ந்தமட்டும் ஒவ்வொரு விதத்திலும் அதை அனுபவத்தில் கொண்டுவருதற்குத் தாங்கள் அவருக்கு உதவி செய்வதாக அவரிடம் உறுதி மொழி கொடுத்தார்கள். ஆனல், இந்த யோசனை பக்குவமடைதற்கு முன்னர், சுவாமிகள் சரீரத்தை விட்டுவிட்டார்."

'வேதபாடசாலை யொன்று ஸ்தாபிக்கவேண்டும்' என்ற ஆசையானது சுவாமிகளை விட்டு ஒருபொழுதும் அகலவேயில்லை. சுவாமிகள் மஹா சாமாதி யடைந்த தினத்தில் கூட, சற்று முன்னதாக அவர் தமது சகோதர சந்யாசியிடம் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். "சீக்கிரத்தில் பாடசாலை யாரம்பித்துவிடவேண்டும்" என்றும், "ஏராளமாகப் பணம் சேர்கிறவரையில் காத்துக்கொண்டிருத்தலாகாது" என்றும், சிறியதாக ஒரு பாடசாலை ஆரம்பித்துவிட்டால் பின்னர் வேண்டிய பணம் தானே வரும்" என்றும் நிச்சயித்து, சுவாமிகள் உத்போதன அச்சுக்கூடத்தை விற்றுவிடும்படி சுவாமி திரிகுணாதீதருக்கு உத்

தரவு செய்தார். அப்படியே அவ் வச்சுக்கூடம் விற்கப்பட்டது. விற்றுமுதலான அந்தப் பணத்தை முதலாக வைத்துக்கொண்டு பாடசாலை யாரம்பிக்கக் கருதினார் சுவாமிகள்; ஆனால், அவருடைய சரீரம் வெகு அசௌக்கியமாயிருந்ததினாலே, 'கொஞ்சம் சொஸ்தமானவுடன் ஆரம்பிக்கலாம்' என்றிருந்தார். ஆனால், இந்தியாவின் துரதிர்ஷ்டம் அவர் இம் மண்ணுலகை நீத்துச் செல்லும்படி நேர்ந்துவிட்டது. இதனால் இந்தப் பாடசாலை ஏற்படாமலே, நின்றுபோய்விட்டது.

1901-ம் வருஷக் கடைசியிலே ஜப்பான் தேசத்திலிருந்து அந்தத் தேசத்திலே செல்வாக்கும் சீருமுள்ள இரண்டு பிரமுகர்கள் மடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். சீக்கிரத்திலே ஜப்பானில் ஒரு சர்வமத மஹா சபை கூட்டுவதாக ஜப்பானியப் பிரமுகர்கள் பலர் யோசனை பண்ணினார்கள். அந்த மஹா சபையிலே சுவாமிகள் வந்து பிரசங்கம் செய்யும்படி அவரை நேரில் கண்டு பேசி அவரை அழைப்பதற்காகவென்றே இவ் விருவரும் வந்தார்கள். அவர்கள் "சுவாமி! தங்களைப் போன்று பிரக்யாதி பெற்றவர்கள் அந்த மஹா சபையிலே பிரசங்கம் செய்தால்தான், சபை மங்களகரமாக நடந்தேறும். தேவரீர் கட்டாயமாக வந்து எங்களுக்கு உதவி புரியவேண்டும். ஜப்பானிலே மத உணர்ச்சி கிளப்பப்பட வேண்டியது இப்பொழுது வெகு அவசியமாயிருக்கிறது. இதை நிறைவேற்றிக் கொடுப்பதற்குத் தகுந்தவர்களாக வேறு எவரும் புலப்படவில்லை." என்றார்கள்.

இப்படிச் சொன்னவர் ஜப்பானிலே ஒரு பெயர் பெற்ற பௌத்த மடாதிபதி; இவருடைய பெயர் ஓடா. இவருடன் கூட வந்தவருடைய பெயர் ஒகாகூரா. சுவாமிகள் இவ் விருவருடைய உண்மை யன்பிலே நெகிழ்ந்து கரைந்து, உடனே உற்சாக முடையவராய், அப்படியே தாம் ஜப்பான் வருவதாக ஒப்புக்கொண்டார். மனுஷ்யவர்க்கத்தில் ஒரு பெரும்பாகத்தினருக்குத் தாம் பிரயோஜனப்படப் போவதினாலே, சுவாமிகள் வியாதியை ஒரு பொருட்டாகக் கருதவேயில்லை. சுவாமிகள் பௌத்தபரமாத்மாவினுடைய மேன்மையான ஜீவிதத்தையும் உத்தமமான உபதேசங்களையும்பற்றிச் சம்பாஷிக்க ஆரம்பித்துவிட்டார். புத்த மஹரிஷியே அவருள் புகுந்து பேசுவது போன்றிருந்தது. சுவாமிகளுடைய முகத்திலே ஜீவகாருண்ய லக்ஷணமானது பொங்கித் ததும்பிப் பூரணமாய்ப் பிரகாசித்தது. ஜப்பானியர்கள் இருவரும் பார்த்தார்கள். என்ன? இவர் ஹிந்து மதத்தினரா? பௌத்த மதத்தினரா? இவருடைய ஹிருதயம் எத்தகைய விசாலமான ஹிருதயம்! இவருடைய புத்தி சக்தியிலே என்ன சர்வஞ்ஞத்துவம்!

இவ் விரண்டு ஜப்பானியப் பிரமுகர்களுடனே கூட, ஹோரி என்ற பெயரையுடைய ஒரு ஜப்பானிய வாலிபன் வந்திருந்தான். ஒகாகூராவும் ஹோரியும் மடத்திலேயே விருந்தினராயிருந்தார்கள்; இவர்களுக்குச் சுவாமிகளிடம் ஏற்பட்ட அன்புக்கு அளவே யில்லை; சுவாமிகளும் இவர்களுடனே வெகு சந்தோஷ சம்பாஷணைகள் செய்து காலம்

கழித்தார். சில சமயங்களிலே ஹோரியுடனே வேடிக்கைகள் பேசி விளையாடிக் களிப்பார். பிற்காலத்திலே, இந்தியாவிலே யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது ஹோரி மரித்துவிட்டானென்று சுவாமிகள் கேள்வி யுற்றபோது, மிகுந்த விசன மடைந்தார். ஓகாகூரா தம்முடன் புத்தகயா க்ஷேத்திரத்துக்கு வரும்படி சுவாமிகளை வேண்டிக்கொள்ளவே, சுவாமிகள் ஏற்கனவே காசிக்கு யாத்திரை செய்ய விரும்பி அங்கே தாம் போனுல் தங்குவதற்குக் கோபால லால் வில்லா என்ற பங்களாவில் ஏற்பாடுகளும் செய்திருந்தபடியினுலே, ஓகாகூராவினுடைய வேண்டுகோளுக் கிணங்கிக் கூறியதாவது:—"ததாகதர் நிர்வாண மடைந்த ஸ்தலத்துக்குத் தங்களுடனே வருதலும், பின்னர் புத்தர் முதன்முதலில் தமது தத்துவத்தை யுபதேசித்த இடமாகிய காசிமாநகருக்கு யாத்திரை செல்லுதலும் எனக்கு அத்தியாநந்தத்தைக் கொடுக்கும். இன்னும் காசிக்கும் எனக்கும் சில பிரத்தியேக சம்பந்தங்களு முண்டு."

72-வது அத்தியாயம்.

காசி யாத்திரை

சுவாமிகள் ஓகாகூராவுடனே புத்த கயாவுக்குப் போய்ச் சேர்ந்தார். இந்தச் சம்பவத்தைப் பற்றி நிவேதிதா சகோதரி பின் வருமாறு எழுதியிருக்கிருர்:—

"மறுபடியும் மாரிகாலம் வந்தபொழுது, அவர் (ஸ்வாமிகள்) படுக்கையிலேயே படுத்திருக்கும்படி அவ்வளவு வியாதியாய்விட்டார்.

"ஆயினும் அவர் 1902-ம் வருஷம் ஜனவரியிலும் பெப்ரவரியிலும் இன்னும் ஒரு யாத்திரை செய்தார்; இப்பொழுது அவர் முதலில் புத்தகயாவுக்கும் பின்னர் காசிக்கும் சென்றார். அதுதான் அவருடைய சஞ்சாரங்கட்கெல்லாம் தகுந்த முடிபு. அவர் தமது கடைசி ஜன்ம தினத்தன்று மாலையில் புத்தகயாவில் வந்து சேர்ந்தார்; மகந்துவினுடைய மரியாதைக்கும் உபசாரத்துக்கும் வேறெதுவும் ஈடாக முடியாது. பின்னர், காசியில் போலவே இங்கும், வைதிக உலகத்தின் நம்பிக்கையும் பிரியமும் தம்முடைய சக்ராதிபத்யம் மனிதர்களுடைய ஹிருதயங்களிலே இவ்வளவு அதிகமாகச் செல்கிறதா? என்று அவரே பார்த்து ஆச்சர்யப்படும்படி அவ்வளவு அதிகமாகவும் தாராளமாகவும் காண்பிக்கப்பட்டன. புத்தகயாவானது இப்பொழுது கடைசியானது போல, அவர் முதலில் தரிசிக்கப் புறப்பட்ட பரிசுத்த ஸ்தலங்களில் முதன்மையானதாகவும் இருந்தது. சில வருஷங்களுக்கு முன்னால் (அவர் எவரும் அறியாத சந்யாசியா யிருந்தபொழுது) காசியில்தான் அவர் "நான் ஜனசமூகத்தின்மீது இடிபோன்று விழுகின்ற அன்றுவரையில், நான் இந்த இடத்தைத் தரிசிக்க மாட்டேன்' என்று கூறி, ஒருவரிடம் விடை பெற்றுக் கொண்டது."

மறுபடியும் அவ் வம்மையார் இன்னொரிடத்தில் எழுதுகிறதாவது:—

“ஜனவரிமீ 6-ம் தேதி எபிபேனி என்று மேனுடுகளிலே கொண்டாடப்படுகிறது. கீழ் நாட்டுப் பெரியார், குழந்தை கிறிஸ்துவைத் தொட்டிலில் காண்பதற்கு வந்த தினத்தின் ஞாபகார்த்தமாகக் கிறிஸ்தவகோயிலினர் கொண்டாடுகின்ற பெரிய உற்சவமே எபிபேனி யென்பதாம். சுவாமிகள் தமது வாழ்க்கையின் கடைசி வருஷத்தில் இந்தத் தேதியிலேயே புத்தகயா வந்து சேர்ந்தார்.”

சுவாமிகள் அங்குப் போயிருந்தபொழுது அந் நகரத்திலும் சுற்றுப் பக்கங்களிலும் உள்ள ஜனங்கள் ஏராளமாகச் சுவாமிகளைத் தரிசிப்பதற்கும் சுவாமிகளுடைய அமிர்தவசனங்களைக் கேட்பதற்கும் வந்து சேர்ந்தார்கள். புத்தகயா க்ஷேத்திரத்து மகந்துவுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே யில்லை. இவர் சுவாமிகளைப்பற்றி அநேகநாட்களாகக்கேள்விப்பட்டிருந்தார்; ஆனால், பார்த்ததில்லை. ‘சுவாமிகளைப் பார்க்கவேண்டும்’ என்ற ஆசை நெடு நாட்களாக இருந்துகொண்டே யிருந்தது. சுவாமிகள் புத்தகயாவிலே சுற்றுப் பக்கங்களுக்கெல்லாம் சென்று, சரித்திர சம்பந்தமானவும், இன்னும் பார்க்க வேண்டுவனவுமான இடங்களையெல்லாம் போய்ப் பார்வையிட்டார்; இன்னும் புத்தமத விஷயமாக விசாரணைகள் செய்து வேண்டிய சங்கதிகளைக் கிரகித்துக்கொண்டு களிப்

படைந்தார். புத்த விருக்ஷத்தி னடியிலே போய் உட்கார்ந்துகொண்டு, நிஷ்டையி லமர்ந்தார், உலகம் உருகிவிட்டது; ஒன்றே தென்பட்டது; அவ்வொன்று தானேயானார்; தன்னுடைய லக்ஷணம் ஜீவகாருண்யமாயிற்று. ஆ! ஆ! என்ன ஆநந்தம்! என்ன மகிழ்ச்சி! சுவாமிகள் இரண்டற்று ஏகமாய் இன்ப உருவாய் விளங்கினார். அப்பொழுது அவருடைய சரீரத்தின் ரோமத்துவாரங்களிலிருந்துகூட அன்பு என்பது வெளியே அம்புபோலப் பாய்ந்ததேனும் அம்பின் லக்ஷணமில்லாது எல்லோருக்கும் நிரந்தரமாக இன்பத்தை யுண்டாக்கிற்று.

சுவாமிகளுடைய சரீரம் இன்னும் சுக மடையவில்லை. 'காசிமாநகரின் வரண்ட காற்று சரீரத்துக்குச் சிறிது சுகம் கொடுக்கும்' என்று சுவாமிகள் நினைத்தார். ஆகையால், அவர் புத்த கயாவிலிருந்து காசிக்குச் சென்றார். ஓகாகூராவும் அவருடன் காசிக்குச் சென்றாராயினும், சீக்கிரத்தில் அவரிடத்தில் விடை பெற்றுப் பிரிந்தார். சுவாமிகள் தமது சரீரம் கொஞ்சம் சௌக்கியமானவுடனே ஜப்பானுக்கு இப்பொழுது புறப்படுவது என்று தீர்மானித்துக்கொண்டு, அந்த விஷயத்தைத் தெரியப்படுத்துவதாக வாக்களித்தார்.

விண்டிருக்கும் பலாப்பழம் எங்கு இருந்தாலும் அங்கு ஈக்கள் மொய்ப்பது சகஜம்தானே. அதுபோல, சுவாமிகள் எங்குப் போனாலும், 'சுவாமிகள் வந்திருக்கிறார்' என்று வெளியே தெரிந்துவிட்டால் போதும், ஜனங்

க்ள் வந்து குவிந்துவிடுவார்கள். அப்படியே காசியிலும் ஜனங்கள் திரள்திரளாக வர ஆரம்பித்துவிட்டார்கள். ஹிந்து நாகரிகத்தில் இப்பொழுது உள்ள அநேக குற்றம் குறைகளை வெகு தைர்யமாக எடுத்துக் காட்டி, "அவை சீர்திருத்தப்பட்டால்தான், இந்தியா க்ஷேம மடையும்" என்று கூறிவந்தபொழுதிலும், சமுத்திர யாத்திரை செய்தவராயிருந்தபொழுதிலும் அவரைப் பார்க்க வந்த வைதிக பண்டிதர்களும் மகந்துக்களும் அவரைப் புகழ்ந்து ஆச்சர்யத்துடனே போற்றத் தொடங்கினார்கள். கேதாரீச்வர க்ஷேத்திரத்துக்கு மகந்துவானவர் சுவாமிகளுக்கு ஆராத்ரிகை யெடுப்பதற்கு அநுமதி கொடுக்குமாறு சுவாமிகளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். இங்கே பிங்க நாட்டு மஹாராஜா சுவாமிகளைத் தரிசித்து அன்னபூர்ணி க்ஷேத்திரமாகிய காசிமாநகரிலே ஒரு மடம் ஸ்தாபிக்கும் படி கேட்டுக்கொண்டது மன்றியில், ஒரு வருஷத்துக்கு அந்த மடத்தை நடாத்துதற்கு ஏற்படும் செலவைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும், மேலும் உதவி புரிவதாகவும் வாக்களித்தார்.

சுவாமிகள் அந்த மஹாராஜாவின் வேண்டுகோளுக் கிணங்கிக் கல்கத்தாவுக்கு திரும்பி வந்த பின்னர் அங்கே ஒரு ஆச்ரமம் ஸ்தாபிக்கும்பொருட்டு, சுவாமி சிவாநந்தரை யும் ஒரு சிஷ்யரையும் அனுப்பிவைத்தார்.

சுவாமிகள் கங்காநதியிலே மாலை நேரத்திலே அநேக நாட்க்ள் படகுகளி லேறி உலாவி வந்த துண்டு. அவ

ருடைய சரீரம் கொஞ்சம் சௌக்கியமாயிருந்தால் அவர் கங்காநதியிலே ஸ்நாநம் செய்து, காசி நகரிலுள்ள க்ஷேத்திரங்களுக்கெல்லாம், முக்கியமாக ஸ்ரீ விசுவநாதருடைய க்ஷேத்திரத்துக்குச் சென்று தரிசனம் செய்து வருவார். இன்னும் கல்கத்தாவுக்கும் இந்தியாவிலுள்ள மற்ற மடங்களுக்கும் அடிக்கடி கடிதங்கள் எழுதி, தமது சிஷ்யர்களையும் நண்பர்களையும் ஊக்கிக்கொண்டிருப்பார். தினந்தோறும் வேலூர் மடத்திலிருந்து திருப்பப்பட்டு எண்ணற்ற கடிதங்கள் வந்து சேரும். மேனாட்டிலிருந்து ஏராளமாகக் கடிதங்கள் வந்துகொண்டே யிருக்கும். அவருடைய நண்பர்களும் சிஷ்யர்களும் ஆத்மஞான சம்பந்தமாக, அல்லது சரித்திர சம்பந்தமாக, அல்லது ஜனசார சம்பந்தமாக அநேக கேள்விகள் கேட்டுக் கடிதங்கள் எழுதுவார்கள். சுவாமிகள் இவற்றுக்கெல்லாம் மறுமொழி எழுதி யனுப்பி அவர்களைத் திருப்தி செய்வார்.

அவருடைய மறுமொழிக் கடிதங்களில் ஒன்று பின்வருமாறு மொழிபெயர்த்தெழுதப்பட்டிருக்கிறது. அச்சமயத்திலே சுவாமிகள் புத்தமத ஆராய்ச்சியிலே அதிக கவனம் செலுத்திக்கொண்டிருந்தாரென்பது இக் கடிதத்தினால் விளங்கும். அக் கடிதம் பின் வருமாறு;—

"எனது அரிய ஸ்வரூபாநந்தரே!

"——ருடைய கடிதத்துக்கு மறுமொழியாக, அவரானவே ப்ரஹ்ம சூத்திரங்களைப் படிக்கும்படி அவரிடம் சொல்லுங்கள். ப்ரஹ்ம சூத்திரங்களிலே பௌத்த மதத்

தைப்பற்றிப் பிரஸ்தாபங்கள் இருக்கின்றன வென்று அவர் சொல்கிறபொழுது, என்ன அர்த்தத்திலே சொல்கிறார்? அவர், பாஷ்யங்களைத்தான் குறிப்பிடுகிறார்போலும், அல்லது குறிப்பிடவேண்டும். சங்கரர் கடைசி பாஷ்யக்காரரேயாவர். பௌத்த நூல்களிலே வேதாந்தத்தைப் பற்றிப் பிரஸ்தாபங்கள் இருக்கின்றன; பௌத்த மதத்தின் மகயனப் பிரிவானது அத்வைத மல்லாததாகக் கூட இருக்கிறது. புத்தருள் ஒருவனுகிய அமரசிங்கன் புத்தருடைய பெயர்களுள் ஒன்றுக "அத்வபவாதி" என்பதை ஏன் கொடுக்கிறுன்,? 'ப்ரஹ்மம்' என்ற பதமானது உபநிஷத்துக்களில் இல்லை' என்று—ர் எழுதுகிறுர்!

"புத்தமதத்தின் இரு பிரிவுகளுள் மகயனமே முந்தியதென்று நான் கருதுகிறேன்.

"மாயையைப்பற்றிய கொள்கையானது ரிக் ஸம்ஹிதையளவு பழமையானதாம். பிரகிருதியிலிருந்து விருத்தி பண்ணப்பட்டுள்ள மாயை என்ற பதமானது ஸ்வேதாச்வதர உபநிஷத்திலே யிருக்கின்றது. உபநிஷத்து புத்தமதத்தைவிடக் குறைந்த பக்ஷம் பழமையானதென்றே கருதுகிறேன்.

"புத்தமதத்தைப்பற்றிச் சமீபத்திலே அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்கிறேன்; (1) பற்பல வடிவங்களிலே செய்யப்பட்டு வந்த சிவ உபாசனையானது புத்தமதத்துக்கு முந்தியதென்றும், புத்தர்கள் சைவர்களுடைய பரிசுத்த ஸ்தலங்களைக் கைப்பற்றிக்கொள்ள முயன்றார்களென்றும்

ஆனல், அம் முயற்சியில் தவறுத லடைந்து, நீங்கள் இப்பொழுது புத்த கயாவிலும் சாரநாதத்திலும் (காசியிலும்) காண்கிறதுபோல க்ஷேத்திரங்களி னுள்ளேயே புதிய இடங்களை யுண்டுபண்ணிக்கொண்டார்களென்றும்,

"(2) கயாசுரனைப்பற்றி அக்கினிபுராணத்திலே கூறப்பட்டுள்ள கதை—டாக்டர் ராஜேந்திர லாலா கூறுகிறபடி, புத்தரைக் குறிக்கவேயில்லையென்றும், ஆனல் முன்னமேயே யுள்ள ஒரு கதையைக் குறிப்பிடுகிறதென்றும்,

" (3) புத்தர் கயாசிர்ஷ பர்வதத்தில் வசிக்கச் சென்றாரென்பதே அந்த இடம் முன்னமேயே யிருந்திருக்க வேண்டுமென்பதை ருசுப்படுத்துகிறதென்றும்,

" (4) கயாவானது புத்தருடைய காலத்துக்கு முன்னே பிதுர் பூஜை ஸ்தலமாயிருந்ததென்றும், அடிச்சுவடு பூஜையைப் புத்தர்கள் ஹிந்துக்களிட மிருந்து பின்பற்றினார்களென்றும்,

" (5) காசியைப்பற்றி, மிகமிகப் பழமையான தஸ்தாவேஜுகளும்கூட அது மஹா சிவக்ஷேத்திரமென்பதையே ருசுப்படுத்துகின்றனவென்றும்,

நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன்.

"புத்த கயாவிலிருந்தும் பௌத்த நூல்களிலிருந்தும் நான் சேர்த்துள்ள புதிய விஷயங்கள் அநேகம்.—ரை அவராகவே படித்துக்கொள்ளச் சொல்லுங்கள்! மூட அபிப்பிராயங்களினால் அலையுற வேண்டாம் என்று சொல்லுங்கள்.

"பௌத்த மதத்துக்கும் நவீன ஹிந்து மதத்துக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி என்னுடைய மனத்திலே ஒரு பெருங் குழப்பம் உண்டாயிருக்கிறது. எனது தோற்றத்திலே யுள்ளதை வேலை செய்து பார்ப்பதற்கு நான் உயிருடன் இருக்கமாட்டேன்; ஆனால், இம்மாதிரி வேலை செய்யவேண்டு மென்று குறிப்பிட்டுவிட்டுப் போவேன்; நீங்களும் உங்களுடைய சகோதரர்களும் அதை வேலை செய்து பார்க்கவேண்டும்.

"நான் இங்குக் காசியிலே சௌக்கியமா யிருக்கிறேன்; இம்மாதிரி நான் விருத்தியாய்க்கொண்டே போவேனால், அது ஒரு பெருத்த லாபமாகும்."

சுவாமிகளுடைய ஆராய்ச்சித் திறமையும் புத்தி சக்தியும் சுறுசுறுப்பும் இக் கடிதத்திலே நிறைந்து நிற்கின்றனவாயினும், முக்கியமாகச் சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்த சமாச்சாரம் யாதெனில், அவர் சரீர சௌக்கிய மடைந்து வருகிறாரென்று எழுதப்பட் டிருந்ததாம்.

சுவாமிகள் காசியிலிருந்தபொழுது, இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்காக வருகின்ற யாத்திரிகர்களிற் பெரும்பான்மையோரும், அதிலும் வயோதிகர்கள், அநாதை ஸ்திரீகள் முதலியவர்கள் வியாதியினால் வருந்துவதையும், அவர்களை ஆதரவு செய்வார் எவரு மில்லாது அவர்கள் துன்புறுவதையும் சுவாமிகள் கண்ணால் கண்டு, தம்மைப்பார்க்க வருகிறவர்களிடமெல்லாம் இந்த விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். சுவாமிகளுடைய

"நாவாட, நாடு ஆடாதா?" சுவாமிகள் இந்த எண்ணத்தை வெளியிட்டதுதான் தாமதம்; காசியிலே வசித்து வந்த சில வங்காளி வாலிபர்கள் ஒன்று சேர்ந்து யாத்திரிகர்களுடைய துக்கநிவிர்த்திக்குப் பாடுபடுவதாகத் தீர்மானித்துக் கொண்டார்கள். இவர்கள் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு காசிமாநகர்த் தெருக்களிலே, அல்லது ஸ்நாந கட்டங்களிலே, எங்காயினும் சரி, வயோதிகர் அநாதை ஸ்திரீகள், உலக உபாயங்கள் தெரியாத நிஷ்களங்க யாத்திரிகர்கள், வியாதியஸ்தர்கள், வழி தெரியாது திண்டாடுவோர், இன்னும் பல விதத்திலும் துன்புறுபவர்கள் காணப்பட்டால் அவர்களை யிட்டுச் சென்று இருக்க இடமும், உண்ணச் சோறும், வைத்திய உதவியும், மற்ற அவசியமான சௌகர்யங்களும் செய்துகொண்டு முன் வந்தார்கள். இவர்களுடைய தந்நல மறுப்பும் பக்தி சிரத்தையும் மிகவும் கொண்டாடற்பாலதாயிருந்தது.

சுவாமிகளுக்கு அளவிலா ஆநந்தம் உண்டாய்விட்டது; அவர் அவர்களை நோக்கி, "பையன்காள்! உங்களிடத்தில் உண்மை யுணர்ச்சி யிருக்கிறது; எனது அன்பும் ஆசீர்வாதங்களும் எப்பொழுதும் உங்கள்மீது உண்டு. தைர்யமாக முன் செல்லுங்கள்! உங்களுடைய வறுமையை ஒரு பொழுதும் சட்டை செய்யாதீர்கள்! பணம் தானே வரும்; நீங்கள் மிகமிகப் பிரியமாக வைத்துள்ள நம்பிக்கைக்கும் அதிகமாக அதிலிருந்து ஒரு பெரிய விஷயம் உண்டாகும்." என்றார்.

அவ் வாலிபர்களின் உற்சாகத்தையும் தன்னல மறுப்பையும் மெச்சி, சுவாமிகள் அவர்களுக்காக, அந்த ஸேவாச்ரமத்துக்காகப் பொது ஜனங்களுக்கு ஒரு மனு எழுதினார். அந்த மனுவைப் படித்துப் பார்க்கும்பொழுதே கண்களிலிருந்து நீர் வந்துவிடும்; உண்மையான ஜீவகாருண்யமென்பது அந்த மனுவின் ஒவ்வொரு வார்த்தையினும் ஊறிப் பொங்குகின்றது.

சுவாமிகளுடைய சரீரம் காசி மாநகர் வரண்ட காற்றினால் சிறிது சொஸ்த மடைந்தது. சுவாமிகள் காசியிலிருந்த வரையில், அதிக குதூகலத்துடனே காலங் கழித்தார். காசிமாநகரத்திலே எத்தனையோ க்ஷேத்திரங்கள், எத்தனையோ சாதுக்கள், எத்தனையோ சந்யாசிகள், பண்டிதர்கள் இந்தியாவின் விசேஷச் சிறப்பு முழுதும் காசிமா நகரத்திலே அடங்கிக் கிடக்கின்றது; சர்வ சங்க பரித்தியாகியும் தேசாபிமான சிம்ஹமுமாகிய சுவாமிகள் இவற்றிற்கெல்லாம் நடுவிலே வந்து வசிப்பதென்றால், அவர் சந்தோஷத்தைத் தவிர, வேறு எதை யநுபவிக்க முடியும்?

வடமேற்குப் பக்கத்திலே ஒரு தேஜஸ் புறப்பட்டு கல்கத்தா நகரின் ஸிம்லாப் பக்கத்திலே பாய்ந்து நுழைந்ததுபோல ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்டு, "ஆ! இப்பொழுது எனக்கு வேண்டியவன் பிறந்துவிட்டான்" என்று சொன்னதாகக் கூறப்படுகிறதே; அந்த வடமேற்குப் பக்கம் காசிதானயிருக்கலாம்; இங்குத்தானே சுவாமிகளுடைய பெரிய தாயார் தனது இளைய சகோதரிக்குப் புத்திரப்பேறு

உண்டாக வேண்டுமென்று இரவு பகலாக உபவாசமிருந்து தவம் கிடந்து ஸ்ரீ விச்வநாத க்ஷேத்திரத்திலும், ஸ்ரீ வீரேச்வர க்ஷேத்திரத்திலும், மற்றுமுள்ள க்ஷேத்திரங்களிலும் பிரார்த்தனை செய்துகொண்டது. ஸ்வாமிகளுடைய தாயாரும் சாக்ஷாத் காசி விச்வநாதராகிய பரமசிவனே தனது கர்ப்பத்திலே அவதரிக்கப் போவதாகத் தன்னிடம் நேரே வந்து கூறியதாகக் கனவு காணவில்லையா? ஆகையினால், சுவாமிகள் காசிமாநகரில் சொஸ்தமாய் ஆநந்த புருஷராயிருந்தது ஒரு ஆச்சர்யமா?

சில சமயங்களிலே சுவாமிகள் தாம் ஸ்தாபித்துள்ள பெரிய முயற்சிகளை யெல்லாம் நினைத்துக்கொள்வார்; தம்முடைய சரீரம் மேன்மேலும் பலஹீனமடைந்து இனிமேல் வேலை செய்வதற்கு உதவாது போவதுபற்றிச் சுவாமிகளுக்கு மிகுந்த வருத்தம் நேரிடும்; இன்னும் தம்மைப் போன்று தைர்யமும் சாகசமுமுள்ள ஜனங்கள் போதுமானவளவு தமது வேலையைப் பின்பற்றிச் செய்வதற்கு இன்னும் உண்டாகவில்லையே என்று நினைப்பார்; உடனே ஏக்கம் உண்டாய்விடும். புத்திசாலிகளாகச் சில வாலிபர்களைப் பொறுக்கி யெடுத்து, அவர்களைச் சரியான வழியில் பயிற்றுவித்து, அவர்களைக் கொண்டு தமது முயற்சிகளை ஈடேற்றச் செய்யவேண்டுமென்று சுவாமிகள் கருதினர்; பிறருடைய நன்மையைக் கருதி, உலகுக்கு உபகாரம் செய்தற் பொருட்டு, இந்த வாலிபர்கள் சர்வசங்க பரித்தியாகம் செய்து வெளியே வர

வேண்டும்; தேச நன்மையை உத்தேசித்து ஸ்வாமிகளுடைய எண்ணங்களை ஈடேற்றுவதிலே அவர்கள் தங்கள் ஜீவிதங்களையும் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும். இத்தகைய வாலிபர்கள், நாசிகேதஸ் போன்ற திடநம்பிக்கையுள்ளவர்கள் 10 அல்லது பன்னிரண்டு பெயர்கள் கிடைத்துவிட்டால், தேசத்தின் போக்கையே ஒரு புதிய வழியில் தம்மால் திருப்ப முடியுமென்று சுவாமிகள் அடிக்கடி சொல்வது வழக்கம்.

சுவாமிகளுக்காக எதுவும் செய்யத் தயாராய் சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் ஏராளமாக இருந்தனர், வாஸ்தவம்தான். அவர்கள் சுவாமிக்ள் விரும்பிய அளவுக்குச் சக்தியும் சமர்த்தும் வாய்ந்தவர்களாயில்லை. ஆயினும், சுவாமிகள் அவர்களைப் பார்த்துத் தாம் ஆரம்பித்த முயற்சிகள் கைவிடப்படா என்று நம்பிக்கை யடைந்துகொள்வார்; இன்னும், 'சாக்ஷாத் பரமேச்வரன் நினைத்துவிட்டால், எத்தனையோ வீரர்கள் புறப்படுவார்கள், தேசத்தினுடைய முகமே ஒரு நிமிஷத்தில் சுமுகமாக மாறுதலடைந்துவிடும்' என்று சுவாமிகளுக்கு நம்பிக்கையும் ஏற்படும்.

'இப்பொழுதே தமது மேனாட்டுப் பிரசங்கங்களினாலும், இந்தியாவிலே செய்த தேசாபிமானப் பிரசங்கங்களினாலும், தேசத்தின் போக்கு மாறுதலடைய ஆரம்பித்திருக்கிறது' என்றும், 'ஜனசமூகத்தினுள்ளே ஒரு புதிய உயிரும் ஊக்கமும் பிரவேசித்திருக்கிறது' என்றும் சுவாமிகள் அறிந்து சந்தோஷித்தார்.

'சாரதச் சந்திரர் என்பவர் சுவாமிகளுடைய பிரிய சிஷ்யர்களிலே யொருவர்' என்று முன்னமேயே சொல்லப் பட்டிருக்கிறது. ஒருநாள் சுவாமிகள், இந்தியா முன்னேற்ற மடைதற்கு இப்பொழுது அத்தியாவசியமாகச் செய்யப் படவேண்டியது இன்னதென்று பின் வருமாறு சாரதச் சந்திரரை நோக்கிக் கூறினர்:—

"பிரத்தியக்ஷத்திலே கண்ணால் கண்ட ஈச்வரனிடத்தில் உண்டாகின்ற பக்தியினின்றும் ஏற்படுகின்ற தியாக மாகிய ஜனசமூக லக்ஷியத்தை வைத்துக்கொண்டு நீங்கள் சிங்கத்தின் பலம் வாய்ந்தவர்களாய், செய்கையின் பலன்களைக் கவனியாமலும், குற்றம் கூறப்படுதலை லக்ஷியம் செய்யாமலும், பயமற்று வேலை செய்யவேண்டி யிருக்கிறது. மஹாவீரன் உங்களுடைய லக்ஷியமா யிருக்கட்டும். அவர் எப்படி ராமநாமத்திலே அளவற்ற நம்பிக்கை யுள்ளவராய், ஜீவிதத்தையும் மரணத்தையும் எதிர்த்துக் கொண்டு ஒரே தாவிலே சமுத்திரத்தைக் கடந்தாரென்பதைப் பார்த்தீர்களா? ஜிதேந்திரியர்களிலே அரசன், ஞானி, புத்திசாலி! நீங்கள்—உங்களை ஈச்வரனுடைய பணியாளர்களாக நினைத்துக்கொண்டு உங்கள் லக்ஷியங்களை அவ் வுயர்ந்த லக்ஷியத்தின்மீது கட்டப் படவேண்டும். நீங்கள் அதிலே உறுதியாக ஸ்திரப்பட்டுவிட்டால், எண்ணங்களும் வழிகளும் தாமே யுண்டாகும். அணுவளவும் சந்தேகமாவது யோசனையாவது இல்லாமல் குரு ஆக்ஞையை நிறைவேற்றுதல், கடினமான பிரஹ்மச்சர்ய அநுஷ்டானம் — அதுதான் மதவாழ்க்கையிலே ஜயத்துக்கு

ரகஸ்யம்; பின்பற்றுவதற்கு வேறு மார்க்கம் கிடையாது. ஈச்வரனுடைய மாதிரிப் பணியாளனுகிய ஹநுமாரைப் பாருங்கள். ஒரு பக்கத்திலே அவர் தமது புஜபலபராக கிரமத்தினலே ராவணனுடைய அசுரக் கூட்டங்களி னுள்ளே கிடுகிடு என்று நடுக்கத்தை யுண்டாக்க முடியும் போல, மறுபக்கத்திலே அவர் தமது நாதனுகிய ராமருக் குச் செய்யும் பணிவிடைத் தன்மையும் விசேஷமானதே. அவர் ராமருக்காகத் தமது ஜீவிதத்தை இழந்துவிடுதற்கு எப்பொழுதும் தயாராயிருந்தார்; ராமருக்குப் பணிவிடை செய்தல், அவருடைய ஆக்ஞைகளுக்குக் கீழ்ப்படிதல் இவற்றைத் தவிர வேறு எதையும் லக்ஷியம் செய்யாதவரா யிருந்தார்;—பிரஹ்ம பதவி கிடைப்பினும் அல்லது சிவ பதவி கிடைப்பினும்கூட லக்ஷியம் செய்யாதவராயிருந்தார். அது போன்ற ஏகாக்கிரத பக்தியே வேண்டியது.

நீங்கள் அஜீர்ண வியாதி பிடித்த ஜனசமூகம்! பிடி லும் வீணையும் வாசித்துக்கொண்டு, கீர்த்தனங்களை யும் ஹிருதய ரம்யமான பாட்டுக்களையும் பாடுகிறீர்கள்! அணுவளவேனும் காமஸ்பர்சமே யில்லாத பிருந்தாவன கோபிகைகளுடைய மார்க்கமாகிற மதுரபாவத்தை, அந்த மிகமிகச் சிரேஷ்டமானதும் மிகமிகக் கடினமானதுமான சாதனத்தை நீங்கள் பரிபூர்ணமாக விழித்துக்கொண்டு கிளம்பியுள்ள உங்களுடைய தாழ்ந்த இச்சைகளுடனும் ஆசைகளுடனும் பின்பற்ற முயற்சிக்கையில், தேசமானது அந்தகாரத் தமோகுணத்தில் ஆழ்ந்து மூழ்குகிறது. மிருதுவானவையும் ஹிருதய ரம்யமானவையும் ஆன

பாடல்களையும் சங்கீதத்தையும் குழந்தைப் பருவத்தி லிருந்தே இரவு பகலாகக் கேட்டுக் கேட்டு, ஜனசமூக மானது மேன்மேலும் பெண்தன்மை யடைந்து வருகிறது ஆச்சர்யமா? என்ன வீழ்ச்சிதான் இதைவிடப் பரிபூர்ணமா யிருக்கக் கூடும்? உங்களுடைய நகாராக்களெங்கே? பேரிகைகளெங்கே? கொம்புகளெங்கே? பறைகளெங்கே? தப்பட்டைகளெங்கே? இவை யெல்லாம் எங்கே போய் விட்டன? தேசத்திலே இனிமேல் அவற்றைக் கிளப்ப முடியாதா? குழந்தைகளும் வாலிபர்களும் இவற்றி லிருந்து உண்டாகின்ற ஆழ்ந்த, தீர்க்கமான, தீவிரமான மனவெழுச்சி யுண்டாக்கக் கூடிய ஓசைகளைக் கேட்கட்டும். நாம் டமருகத்தை படிக்கவேண்டியிருக்கிறது, கொம்பை யூத வேண்டியிருக்கிறது; நாம் பிரஹ்ருத்ரதாலினுடைய ஓசை போன்று வீரத்தன்மையையும் தைர்யத்தையும் கிளப்பிவிடக்கூடிய கீதங்களை மேளங்களிலே யுண்டு பண்ணவேண்டும். நாம் இம் மண்ணுலகையும் விண்ணுலகையும் "மகாவீர; மகாவீர!" "ஹர! ஹர!" "ஓம்! ஓம்!" என்று முரட்டுக் கோஷங்கள் செய்து அதிரச் செய்ய வேண்டும். நாம் கொஞ்சக் காலத்துக்கு மனிதர்களிடத்தி லே மிருதுத்தன்மையை யுண்டுபண்ணுகின்ற பாடல் களையும் சங்கீதத்தையும் நிறுத்திவிட்டு, அதற்குப் பதி லாக, அவற்றை த்ருபத ராகத்திலும் மற்றும் விருத்தி செய்யவேண்டும். நாம் வேதஒலியின் இடியோசைகளினால் தேசத்தை உயிர்ப்பிக்க வேண்டும். நாம் சுறுசுறுப்பாக வேலை செய்கின்ற எல்லா வழிகளிலும், வீரத்தன்மையி

னின்றும் உண்டாகின்ற தீவிரமான உயிர் சக்தியைக் காண்பிக்கவேண்டும். அத்தகைய ஆண்மை லக்ஷியத்தைப் பின்பற்றுவதிலேயே மாதுர்ப் பூமியின் நன்மை யுள்ளது. அந்த லக்ஷியத்தின் மாதிரி நீ உன்னுடைய ஒழுக்கத்தை ஏற்படுத்திக் கொள்வாயானல் நூற்றுக்கணக்கான ஜனங்கள் உன்னுடைய திருஷ்டாந்தத்தைப் பின்பற்றி, அதே மாதிரி செய்ய விரும்புவார்கள். ஆனல், ஜாக்கிரதை, தர்ம மார்க்கத்திலிருந்து ஒரு நிமிஷமும் அணுவளவும் நழுவி விடாதே; பலஹீனம் உன்னை யொருபொழுதும் பீடிக்க விடாதே. தினசரி வாழ்க்கையில் உன்னுடைய செய்கைகளெல்லாவற்றிலும், எப்பொழுதும் மன தைர்யத்தை வெளிப்படுத்து. ஜகன் மாதாவினுடைய கிருபை யுண்டாவதற்கு இதுதான் வழி, வேறு வழி யில்லை.''

சாரதச் சந்திரர் சுவாமிகளை நோக்கி, ''சுவாமி! சில சமயங்களிலே எனக்கு மன முடைந்துபோகிறதே, பலஹீன முண்டாகிறதே'' என்று கூற, சுவாமிகள் பின் வருமாறு மறுமொழி கூறினர்:—

''உனக்கு மன முடைந்து, பலஹீன முண்டாகிற காலங்களிலே நீ ''நான் அவருடைய புத்திரனல்லனா? நான் அவரைப் பின்பற்றுபவனாயிருந்தும், எப்படித் தாழ்மை யடைந்து தைர்ய மில்லாமற்போக முடியும்?' என்பன போன்ற நினைப்புக்களை நீ யுண்டுபண்ணிக்கொள்ள வேண்டும். இழிமையைத் தரக்கூடிய நினைப்புக்களையும் பலஹீனத்தையும் எல்லாவற்றையும் அடித்துத் தள்ளிவிட்டு,

'நான் அகண்ட பலமுள்ளவன், நான் பரிசுத்த புத்தியுள்ளவன், நான் பரமஞான முள்ளவன், நான் ஆநந்த ப்ரஹ்ம ஸ்வரூபி!' என்று கூறிக்கொண்டு ஒரு வீரன் போல் எழுந்து நில். 'நான் இன்னாருடைய சிஷ்யன்; நான் காமினி-காஞ்சனத்தை ஜயித்தவராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நண்பர்கட்கு நண்பன்!' என்ற நினைப்பிலே உன்னுடைய கர்வத்தை எப்பொழுதும் வைத்துக்கொள். அத்தகைய தன்மதிப்பில்லாதவனிடத்திலே பிரஹ்மம் ஒருபொழுதும் விழித் தெழுகிறதில்லை. 'நான்—ஜகன் மாதாவை எனக்கு அரசியாகக் கொண்டுள்ள யான்,—இவ்வுலகில் எவரைக் கண்டு பயப்படுவேன்?' என்றுள்ள ராமபிரசாதருடைய அந்தப் பாடலை நீங்கள் கேட்டதில்லையா? அத்தகைய உணர்ச்சியை உனது மனத்திலே எப்பொழுதும் கிளப்பி வைத்துக்கொள், மகாவீரனுடைய நாமத்தை யெடுத்துக்கொள், மஹா மாயையினிடத்திலே சரண மடைந்துகொள், எல்லாவற்றிலும் பிரஹ்ம வஸ்துவைப் பார்.—அப்பொழுது, இனிமேல் பலஹீனமும் பயங்காளித்தனமும் தாழ்ந்த உணர்ச்சிகளும் உன்னை யணுகத் துணியா."

73-வது அத்தியாயம்

ஸ்வாமிகளுடைய குணப் பெருமை

மேலே கூறியவிதமாகச் சுவாமிகள் பேசிக்கொண்டே, கீழே யிறங்கி வந்து, மைதானத்திலே தாம் வழக்கமாக உட்கார்கின்றதும் மாமரத்தடியிலுள்ளதுமான கட்டிலில்

மேற்கு முகமாக நோக்கி யுட்கார்ந்துகொண்டார். அவருடைய கண்களிலே ஒளிதெறித்துத்தெறித்துப் பிரகாசித்தது. அவருடைய முகத்திலே யொருவித தேஜஸ் ஜ்வலித்தது. அவருடைய சரீரம் முழுதும் ஆநந்தத்தினலாக்கியது போலத் தோன்றிற்று. சுவாமிகள் திடீரென்று சாரதச் சந்திரரை நோக்கி, அங்குத் தம்மைச் சுற்றியிருந்த சங்யாசிகளையும் பிரஹ்மாச்சாரிகளையும் சுட்டிக் காட்டி, "புத்திரா! பிரஹ்ம வஸ்துவைத் தேடுவதற்கு நீ எங்குச் செல்லவேண்டும்? அவர் எல்லா வஸ்துக்களிலும் அந்தர்க்கதமாயிருக்கிறார். இதோ, இதோ பிரத்தியக்ஷப் பிரஹ்ம வஸ்து! பிரத்தியக்ஷப் பிரஹ்மத்தை அலக்ஷியம் செய்துவிட்டு, இதர வஸ்துக்களிலே மனத்தைச் செலுத்துகின்றவர்கள் அவமானத்துக்கு பாத்திரர்களே! உள்ளங்கை நெல்லிக்கனிபோல பிரத்தியக்ஷத்தில் இதோ உன் முன் பிரஹ்ம வஸ்து இருக்கிறது. உனக்குத் தெரியவில்லையா? இதோ - இதோ - இதோ இந்தப் பிரஹ்ம வஸ்து!" என்று கூறினர்.

சுவாமிகள் இப்படிச் சொல்கையிலே, அந்தச் சங்யாசிகளும் பிரஹ்மச்சாரிகளும் ஒருவித மயிர்க் கூச்சலும் புளகாங்கிதமும் அடைந்தார்கள்; சட்டென்று அவர்களினுள்ளே ஒரு சத்திய வஸ்து புகுந்து நுழைந்துகொண்டது போல உணர்ந்துகொண்டார்கள். நெடுங்காலம் பிரஹ்ம நிஷ்டையிலே யிருந்து உண்டாகும் உபசாந்தியும் ஆநந்தமும் அவர்களுக்கு உதயமாயின. அவர்கள் சித்திரப் பதுமைகள் போல அசைவற்று அப்படியே வீற்றுவிட்

டார்கள்; மோனத்திலே மூழ்கிக் குளித்து முக்திப்பதம் எய்தி யிருந்தனர். அச்சமயத்திலே சுவாமி பிரேமாநந்தர் கங்காநதியிலே ஸ்நாநம் செய்து முடித்து, கையிலே ஒரு கமண்டலுவில் தீர்த்த மெடுத்துக்கொண்டு ஸ்ரீ ராமகிரு ஷ்ணருடைய க்ஷேத்திரத்துக்குப் பூஜைக்குச் செல்வதற் காக அவ் வழியே வந்து சேர்ந்தார். சுவாமிகள் அவரைப் பார்த்தவுடனே "இதோ - இதோ பிரத்தியக்ஷ பிரஹ்மம்; இதோ பிரத்தியக்ஷ பிரஹ்மம்!" என்று கோஷித்தார். சுவாமி பிரேமாநந்தர் இவ் வார்த்தைகளைக் கேட்டவுடனே சட்டென்று அப்படியே நின்றுவிட்டனர்; அவருடைய கால்கள் அங்கே ஊன்றி நின்றுவிட்டன; ஸ்தம்பித்துவிட் டார். அவரும் பிரஹ்ம நிஷ்டையி லமர்ந்துவிட்டார்; பிர ஹ்மப் பிரக்ஞை யுண்டாய்விட்டது. இவ்விதமாகக் கால் மணி நேரம் கழிந்தன; பின்னர் சுவாமிகள் சுவாமி பிரே மாநந்தரை நோக்கி, "இப்பொழுது பூஜை செய்யப்போ!" என்றார். சுவாமிகள் இப்படிச் சொன்ன பிறகுதான் சுவாமி பிரேமாநந்தரும் மெல்ல மெல்ல மற்றவர்களும் பிரபஞ்சப் பிரக்ஞையை யடைந்தார்கள்.

இக் காக்ஷியைக் கண்டவர்கள் எவராலேனும் மறக்க முடியுமா? சுவாமிகளிடம் இருந்த இந்த அபாரமான ஆத் மீக சக்தியைக் கண்டு மடத்திலுள்ளவர்கள் அனைவரும் சுவாமிகளிடம் முன்னினும் பதின் மடங்கு பயமும் பக்தி யும் செலுத்தலானார்கள். ஒரு நிமிஷத்திலே,ஒரே வார்த் தையின் மூலமாகச் சுவாமிகள் எல்லாருடைய மனத்தி லும் பிரஹ்ம திருஷ்டியைப் புகுத்திவிட்டார்.

பின்னர் சுவாமிகள் அதே சிஷ்யரிடத்தில் இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேசுகையில் "இன்று நடந்ததை நீ பார்த்தாயா? அவர்களெல்லோரும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புத்திரர்கள்! சொன்னதுதான் தாமதம், அவர்களுள்ளே யிருந்த பிரஹ்ம வஸ்து விழித்துக்கொண்டது!" என்றார்.

சாரதச் சந்திரர் தாமும் அந்த நிலைமையை உணர்ந்ததாகவும், ஆனால் இப்பொழுது அது போய்விட்டதென்றும் சுவாமிகளிடம் கூற, சுவாமிகள் "புத்திரா! இந்த நிலைமை உனக்குத் தகுந்த காலத்தில் தானே யுண்டாகும். ஆனால், முதலில் நீ வேலை செய்ய வேண்டும்—பிறருடைய நன்மைக்காக வேலை செய்யவேண்டும்—மாயையினால் மறைக்கப்பட்டிருக்கும் கண்களிலிருந்து திரையை நீக்குவதற்கு வேலை செய்யவேண்டும்!" என்று சொன்னார்.

இந் நாட்களிலே, அதாவது, 1901-வது வருஷத்துக் கடைசியிலே, மடத்து நிலத்திலே யிருந்த மேடு பள்ளங்களைச் சமப்படுத்தவும், நிலத்தைச் சீர்திருத்தவும் சந்தலர் என்ற ஜாதியாரில் சிலர் தினந்தோறும் மடத்துக்கு வந்து வேலை செய்தார்கள். இந்தச் சந்தல ஜாதியார் மலைநாட்டினர்; இவர்களுடைய பாஷையும் நடையுடை பாவனைகளும் தற்கால நாகரிகத்துக்கு ஒவ்வாததாயிருக்கும். ஆனால், இவர்கள் கள்ளங் கபடற்ற ஜனங்கள். சுவாமிகள் தினந்தோறும் இவர்களுடனே கலந்து, தாராளமாகச் சம்பாஷித்து, வேடிக்கைகள் பேசி, தமது பேச்சுக்களினாலே,

அவர்களைக் களிக்கச் செய்வது மன்றியில் தாமும் களிப்பார். சில சமயங்களிலே சுவாமிகள் அவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரித்து, அவர்களுடைய நன்மை தீமைகளைக் கேட்பார். சுவாமிகளுக்கு அவர்களிடத்திலே மிகுந்த அன்பு ஏற்பட்டது; அவர்களுடைய கள்ளங் கபடற்ற தன்மையைக் கண்டு அவர்களிடத்திலே அளவற்ற பிரியம் வைக்கலானார். சுவாமிகளுடைய மனமானது எப்பொழுதும் உயர்ந்த விஷயங்களையேபற்றிச் சிந்திப்பதும் பேசுவதுமா யிருந்தபடியால், இப்படிக் கொஞ்ச நேரம் இந்தச் சாதாரண ஜனங்களுடனே அவர் செய்துவந்த சந்தோஷகரமான சம்பாஷணையானது அவருக்குச் சிறிது சிரமசாந்தியை அளித்து, மனத்துக்கு சுகத்தைக் கொடுத்தது.

சுவாமிகள் ஒரு நாள் இவர்களுடனே வெகு தாராளமாகக் கலந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், அந்தஸ்தும் ஐச்வர்யமும் மிகுந்த சிலர் சுவாமிகளைப் பார்க்க வந்து சேர்ந்தார்கள். மடத்து வேலைக்காரர்களுள் ஒருவன் வந்து சுவாமிகளை நோக்கி "சுவாமி! வந்திருக்கிறார்கள்" என்று கூறினன்.

அப்பொழுது வெகு சுகமாக ஹுக்கா குடித்துக் கொண்டே பேசிக்கொண்டிருந்த சுவாமிகள் சட்டென்று அந்த வேலைக்காரனைப் பார்த்து "—ர் வந்தா லென்ன? எனக்கென்ன? இவர்களுடனே நான் ஆநந்தமாயிருக்கிறேன்' என்று சொல்லி யனுப்பிவிட்டார். சுவாமிகள்

அந்தப் பெரிய மனிதர்களைப் பார்ப்பதற்கு அங்கிருந்து போகவேயில்லை; அவ்வளவு சந்தோஷமாக அந்தச் சந்தலர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

இந்தச் சந்தலர்களுக்குள்ளே ஒருவனுடைய பெயர் கேஷ்டா; சுவாமிகளுக்கு இவனிடத்திலே பிரியம் அதிகம்; சுவாமிகள் எப்பொழுதும் இந்தச் சந்தலர்களுடனே, அதுவும் முக்கியமாக, இந்தக் கேஷ்டாவுடனே பேச வந்துவிடுகிறதினாலே, செய்ய வேண்டிய வேலை சரிவர நடக்கிறதில்லை. இதனால் இவர்களிடம் வேலை வாங்குவதற்கு நியமிக்கப்பட்டிருந்த சுவாமி அத்வைதாநந்தர் மாலைபானவுடன் இவர்களைக் கண்டிப்பது வழக்கம். அதனால் ஒருநாள் சுவாமிகள் அந்த கேஷ்டாவுடன் வந்து பேச உட்கார, அவன் சுவாமிகளை நோக்கி, "சுவாமி பாபு! நாங்கள் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுது வராதீர்கள்; உங்களுடனே பேசிக்கொண்டிருக்கிறதினாலே வேலை சரிவர நடக்கிறதில்லை. வேலை முழுதும் செய்து தீர்க்காததற்காகப் பெரிய பாபு எங்களைக் கோபித்துக்கொள்கிறார்" என்றான்.

இந்தவார்த்தைகளைக்கேட்டுச்சுவாமிகள் மனங் கரைந்தவராய், "இனிமேல் பெரிய பாபு உங்களைக் கோபித்துக் கொள்ளமாட்டார்" என்று சொல்லிவிட்டு, அப்படியே அத்வைதாநந்தரிடத்திலும் சொன்னார்.

சுவாமிகள் அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டே வருவார்; சில சமயங்களிலே அவருடைய மனமானது உருகி, மடமட வென்று கண்ணீர்

உதிர்த்துவிடுவார்; உடனே கேஷ்டா "சுவாமி பாபு! நீங்கள் எழுந்திருந்து போங்கள்; எங்களுடைய கஷ்டங்களை இனிமேல் உங்களிடம் சொல்லவே மாட்டோம், நீங்கள் அழத் தொடங்கிவிடுகிறீர்கள்" என்பான்.

ஒரு நாள் சுவாமிகள் கேஷ்டாவை நோக்கி "கேஷ்டா! உங்கள் எல்லாருக்கும் ஒரு நாள் விருந்திடலாமென்று இருக்கிறேன்; சம்மதமா?" என்று கூறியருளினர்.

அவன் "சுவாமி! நீங்கள் உப்பிட்டு ஆக்கிய ஆகாரத்தை நாங்கள் உண்டால், நாங்கள் ஜாதியை இழந்துவிடுவோம்; நாங்கள் இப்பொழுது கலியாணமானவர்கள்" என்றான்.

ஆனல், சுவாமிகள் அவனை மேன்மேலும் வற்புறுத்தி, 'சமையலிலே உப்புச் சேர்ப்பதில்லை' என்றும், உப்பு தனியே பரிமாறுவதாகவும், அவர்களே பதார்த்தங்களில் வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளும்படிக்கும் கூற, கேஷ்டா ஒருவாறு இணங்கினன். விருந்து சம்பிரமமாக நடந்தது. பச்சடி, கிச்சடிகள், கறி குழம்புகள், மோர்க் குழம்பு வகையாக்கள், மிட்டாய் வர்க்கங்கள் முதலிய பல விதபக்குவங்கள்செய்யப்பட்டிருந்தன. சுவாமிகளே நேரில் கூட இருந்து இவர்களுக்கு எதுவும் குறைவுபடாதபடி பரிமாறிவைத்து உபசரித்தார். சந்தலர்களுக்கு அளவற்ற ஆனந்தம் உண்டாய்விட்டது. "ஸ்வாமி! எங்கிருந்து இவற்றை வரவழைத்தீர்கள்? நாங்கள் இதுவரை எங்கள் ஆயுசி

லே இம்மாதிரி ருசித்ததே யில்லை" என்று அவர்கள் அடிக்கடி கூறினார்கள்.

சுவாமிகள் மிகுந்த அன்புடனே அவர்கள் வயிறு நிரம்பப் புசிக்கும்படி செய்து, பின்னர் ஒரு பக்கத்திலே உட்கார வைத்து, அவர்களுக்குத் தாம்பூலம் வழங்கும்படி உத்தரவு பண்ணினார்.

சுவாமிகள் அவர்களை நோக்கி "நீங்கள் எல்லோரும் நாராயணர்களேயாம், இன்று உங்களுக்கு உணவு கொடுத்ததினாலே ஸ்ரீமந் நாராயணனையே பூஜித்தேன்" என்றார்.

பின்னர் இது விஷயமாக அவர் சம்பாஷித்துக் கொண்டிருந்தபொழுது ஒரு சிஷ்யனை நோக்கி, "அவர்களிடத்தில் நான் நாராயணனைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்தேன். ஆ! ஆ! அவர்கள் எவ்வளவு கள்ளங்கபடற்று இருக்கிறார்கள்! அவர்களுடைய ஹிருதயம்தான் என்ன நிஷ்களங்கம்! அவர்களுக்கு என்னிடத்து என்ன அன்பு!" என்றார்.

சின்னாட்கள் கழிந்தன; ஒரு நாள் சுவாமிகள் மடத்தைச் சேர்ந்த சந்யாசிகளையும் பிரஹ்மச்சாரிகளையும் பார்த்துக் கூறியதாவது:—

"எழுதப் படிக்கத் தெரியாத இவ்வெளிய ஜனங்கள் எவ்வளவு கபடற்ற ஹிருதயத்துடன் இருக்கிறார்கள், பார்த்தீர்களா? அவர்களுடைய துன்பங்களைச் சிறிதளவாவது நிவிர்த்தி செய்ய உங்களால் முடியுமா? இல்லையேல், நாம் காஷாயம் தரித்ததினால் ஆய பயன் யாது? மனிதன்

தன்னையும் எல்லாவற்றையும் பிறருடைய நன்மைக்காகத் தியாகம் செய்தல்—இதுதான் உண்மையான சங்யாசம். சில சமயங்களிலே "மடங்கள்முதலிய கட்டுவதினால் யாது நன்மை! ஏன் அவற்றை விட்டு அந்தப் பணத்தை எளிய நாராயணர்களுக்குக் கொடுத்துவிடக்கூடாது. விருக்ஷத்தைத் தங்குமிடமாகக் கொண்டுள்ள நாம், நமக்கு என்ன மடங்கள் வேண்டும்? அந்தோ! நமது தேச ஜனங்கள் உண்பதற்கு அல்லது உடுத்துவதற்கு வேண்டிய தில்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறபொழுது ஒரு பிடியன்னத்தையாவது நமது வாய்க்குள்ளே வைப்பதற்கு நமக்கு எப்படி ஹிருதயம் இருக்கக்கூடும்?

நான் மேனாட்டிலே யிருந்தபொழுது, அடிக்கடி ஜகன்மாதாவை நோக்கி, "ஏ, தாயே! இங்கே நினது புத்திரர்கள் ரோஜா புஷ்ப சயனங்களிலே படுத்துத் தங்களுடைய ஹிருதயம்குளிர மிகமிக அருமையான பதார்த்தங்களை உண்டு குடித்து, தங்கள் வாழ்க்கையைப் பரிபூர்ணமாய் ஆநந்தகரமா யநுபவிக்கிறார்களே—எங்கள் தேசத்திலுள்ளவர்கள் பசித்துப் பட்டினி கிடக்கிறார்களே. தாயே! அவர்களுக்கு நிவிருத்தியே யில்லையா?' என்று பிரார்த்தித்தேன்.

மேனாட்டுக்கு நான் மதத்தை யுபதேசிக்கச் சென்ற காரணங்களுள் ஒன்று 'எனது தேசத்து ஜனங்களுக்கு ஏதேனும் ஆகாரம் தேட உபாயம் கண்டு பிடிக்க முடியுமா?' என்று பார்க்கவேதான் என்பது உங்களுக்குத் தெரி

யும். அவர்களுடைய வறுமையையும் துன்பத்தையும் பார்த்துச் சில சமயங்களிலே நான் 'இந்தப் பூஜைபாடம் பர மெல்லாவற்றையும்—சங்கம் ஊதுதலையும், மணி யடித்தலையும், விக்கிரகத்தின் முன் தூப தீபம் காண்பித்தலையும் மற்றும் தூர எறிந்துவிடுவோம். நாம் வித்யாகங்காரத்தையும் சாஸ்திர ஆராய்ச்சியையும், எல்லாவற்றையும் முக்தி யடைவதற்குவேண்டிய சாதனங்க ளெல்லாவற்றையும் தூர எறிந்துவிட்டு, கிராமத்துக்குக் கிராமம் சென்று எளியவர்களுக்கு ஊழியம் செய்வதிலே நமது வாழ்நாட்களைத் தத்தம் செய்வோம்; தனவந்தர்க ளிடத்திலே அவர்கள் பொது ஜனங்களுக்குச் செய்யவேண் டிய கடமைகளைப்பற்றிச் சொல்லி அவர்களுடைய மனங் களைத் தெளிவுபடச் செய்தும் நமது ஒழுக்கத்தினுடைய வும் ஆத்மஞானத்தினுடையவும், நமது தவ வாழ்க்கையி னுடையவும் சக்தியினாலும் எளியவர்களையும் துன்புறுபவர் களையும் ஸேவிப்பதற்கு வேண்டிய பணத்தையும் உபாயங் களையும் அடைவோம்' என்று நினைக்கிறேன்.

அந்தோ! நமது தேசத்திலே எவரும் தாழ்ந்தவர்களைப் பற்றியும், எளியவர்களைப்பற்றியும் துன்புறுபவர்களைப் பற்றியும் நினைக்கிறதில்லை! ஜனசமூகத்துக்கு எவர்கள் முதுகெலும்பா யுள்ளவர்களோ அவர்கள், எவர்களுடைய வேலை: ஆகாரத்தை யுற்பத்தி பண்ணுகிறதோ அவர்கள், எவர்கள் ஒரு நாள் வேலையினின்றும் நின்றுவிட்டால் நக ரத்திலே பொதுவாகக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று கூச்சல் கிளம்புகிறதோ அவர்கள்—இவர்களிடத்திலே

அநுதாபப்படுகிறவர், இவர்களுடைய சுகதுக்கங்களிலே பங்கெடுத்துக் கொள்கிறவர் நமது தேசத்திலே எங்கேயிருக்கிறார்கள்? ஹிந்துக்களிடத்திலே அநுதாபமில்லாக் குறையினாலே சென்னை ராஜதானியில் ஆயிரக்கணக்கான பறையர்கள் கிறிஸ்தவர்களாய்க்கொண்டு வருகிறதைப் பாருங்கள்! 'பசித் துன்பமொன்றே அவர்களைக் கிறிஸ்தவ மதத்தையவலம்பிக்கச் செய்தது' என்று நினைக்காதீர்கள். நீங்கள் அவர்களிடத்தில் அநுதாபம் காட்டுகிறதில்லை; இதுதான் காரணம்.

'என்னைத் தொடாதே!' 'இதைத் தொடாதே!' அல்லது 'அதைத் தொடாதே!' என்று இடைவிடாமல் நீங்கள் அவர்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். தேசத்திலே சகோதர உணர்ச்சி, அல்லது தர்ம உணர்ச்சி சிறிதேனும் இருக்கிறதா? இப்பொழுது 'தொடாதே' என்ற மதந்தான் உள்ளது. அத்தகைய, இழிவு படுத்துகின்ற வழக்கங்களையெல்லாம் உதைத்துத் தள்ளிவிடுங்கள்! ஆ! 'தொடாதே' என்ற மதத்தின் எல்லைப் புறங்களையுடைத் தெறிந்துவிட்டு, வெளியே சென்று 'எளியவர்களே! அநாதைகளே! வீழ்ந்து கிடக்கிறவர்களே! கீழே போட்டுத் துவைக்கப் படுகிறவர்களே! நீங்கள் எல்லோரும் வாருங்கள்!' என்று கூவிக்கொண்டு எல்லோரையும் ஒன்று சேர்ப்பதற்கு நான் எவ்வளவு விரும்புகிறேன்! 'ராமகிருஷ்ணர் நாமத்தினால் நாம் எல்லாரும் ஒன்றே' என்று கூவ எவ்வளவு விரும்புகிறேன். அவர்கள் உயர்த்தப்பட்டா லொழிய, மஹா மாதா ஒரு நாளும் விழிக்க

மாட்டாள்! அவர்கள் உண்பதற்கும் உடுப்பதற்கும் வேண்டிய சௌகர்யங்கள் நாம் செய்து கொடுக்க முடியாவிட்டால், நாம் இருந்து பயன் என்ன? அவர்கள் உலக வழிகளிலே அறிவினர்க ளாயிருக்கிறதினாலே, ஜீவனத்துக்கு இரவு பகலாகக் கடினமாக உழைத்தபோதிலும், ஜீவனம் சம்பாதிக்கத் தவறி விடுகிறார்கள். அவர்களுடைய கண்களிலிருந்து திரையை நீக்குவதற்கு உங்கள் சக்திகளெல்லாவற்றையும் ஒன்று சேருங்கள்! நான் பகல் வெளிச்சம் போலத் தெளிவாகப் பார்க்கிறது யாதெனில், ஒரே பிரஹ்மவஸ்துதான், ஒரே சக்திதான் என்னிடத்தில் இருக்கிறது போலவே, அவர்களிடத்திலும் இருக்கிறது! வெளிப்படும் அளவிலே கொஞ்சம் வித்தியாசம் உள்ளது, அவ்வளவு தான். ஜனசமூக ரத்தமானது அதன் சரீரம் முழுதும் ஒரே மாதிரியாக ஓடினாலொழிய, உலகசரித்திரம் முழுதிலும் எந்தத் தேசமாவது மேலே எழும்பக் கண்டிருக்கிறீர்களா? ஒரு சரீரத்திலே ஒரு அவயவம் கெடுதலடைந்து அதனுடைய மற்ற அவயவங்களெல்லாம் சுகமாயும் பலமாயு மிருந்தாலும் அச் சரீரத்தினால் எப் பெருங்காரியமும் செய்யப் படமுடியாதென்பதை நிச்சயமாக அறிந்துகொள்ளுங்கள்.''

இப்படி சுவாமிகள் சொல்லிக்கொண்டுவருகையில், சுவாமிகளுடைய கிருகஸ்த சிஷ்யர்களுள் ஒருவர், சுவாமிகளை நோக்கி, ''சுவாமி! இந்தத் தேசத்திலே யிருக்கும் நாநாவிதமான மதவகுப்புக்களையும் ஜாதிகளையும் ஒன்று

படுத்தி, ஒற்றுமையை உண்டுபண்ணி ஒரு பொதுக்காரியத்திலே வேலை செய்யும்படி அவர்களைச் செய்வது மிக மிகக் கடினமான காரியம்'' என்றார்.

சுவாமிகளுக்கு இவ் வார்த்தைகளைக் கேட்டவுடனே கோபம் வந்துவிட்டது; ஆத்திரம் மிகுந்த குரலுடனே அவர் கூறியதாவது:—

''எக்காரியமாவது கடினமென்று நினைத்தால், இனிமேல் நீ இங்கே வராதே. ஈச்வரனுடைய கிருபையினாலே எல்லாம் சாத்திய சுலபமாய்விடுகிறது. உங்களுடைய தர்மம் ஜாதிமதபேதம் பாராமல் எளியவர்களுக்கும் துன்புறுபவர்களுக்கும் ஊழியம் செய்வதேயாம். நீங்கள் ஏன் உங்கள் செய்கையின் பலன்களைப்பற்றி நினைக்கவேண்டும். உங்களுடைய கடமை வேலை செய்துகொண்டே மேலே செல்லவேண்டியது; எல்லாம் அதனதன் காலத்திலே சரியாகித் தானே வேலை செய்துகொள்ளும். நான் வேலை செய்யும் உபாயம், கட்டுவதேயாம்; முன்னமே யுள்ளதை யழிப்பதன்று. உலக சரித்திரங்களை வாசியுங்கள்; சாதாரணமாக, ஏதேனுமொரு விசேஷமான சந்தர்ப்பத்திலே ஒரு பெரிய மனிதன் ஏதேனும் ஒரு தேசத்தில் கிளம்பி அந்த ஜனசமூகத்து ஜீவித லக்ஷியத்தின் மத்தியமாக நின்றானென்பதை நீங்கள் பார்ப்பீர்கள். அவருடைய எண்ணங்களினாலே வசிகரிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கானவும் ஆயிரக்கணக்கானவும் ஆன ஜனங்கள் உலகநன்மைக்காகத் தங்கள் நன்மையை அர்ப்பணம் செய்தார்கள், நீங்கள் எல்

லோரும் அறிவுள்ள பையன்கள், எனது சிஷ்யர்களாகப் பாவித்துக் கொள்கிறீர்கள்—நீங்கள் செய்துள்ளது யாது என்பதைச் சொல்லுங்கள்! பிறர் பொருட்டு ஒரு ஜீவி தத்தை நீங்கள் தியாகம் செய்ய முடியாதா? வேதாந்த படனமும், பிரஹ்ம நிஷ்டையும் மற்றும் அடுத்த ஜன் மத்திலாகட்டும்! இந்த ஜன்மம் பரோபகாரத்திலே செல வழியட்டும்!— அப்பொழுதுதான், நீங்கள் என்னிடம் வந் திருப்பது வீணாக அன்றென்று நான் அறிந்துகொள்வேன்!''

சிறிது நேரம் கழித்துச் சுவாமிகள் மறுபடியும் ''அவ்வளவு தவம் செய்து நான் கற்றுக்கொண்டது யாதெ னில், மிகமிகச் சிரேஷ்டமான உண்மை இதுதான்: 'ஈச்வரன் எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார்! இவை யெல்லாம் அவருடைய பற்பல வடிவங்களேயாம். தேடி யடைவதற்கு வேறு கடவுள் இல்லை! சமஸ்த ஜீவராசிகளை யும் ஸேவிக்கிறவன் எவனோ அவனே ஈச்வரனைப் பூஜிக்கிறான்''' என்றார்.

சுவாமிகள் இன்று ஒரு பிரத்தியேகமான தன்மையி லிருந்தார்; தமது அந்தியகாலம் நெருங்கிவிட்டது என்று அறிந்து, தமது சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ் யர்களுக்கும் மேற்படி உபதேசத்தை வற்புறுத்தி யுரைத் தனர் போலும்! ''நான் இன்று கூறியுள்ள அனைத்திலும் உங்களுடைய மனத்தை உறுதியாக நிலைநிறுத்தி வைத் துக்கொண்டு, அதன்படி நடவுங்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் உங்களுக்குக் கூடவேயிருந்து துணை புரிவாராக! அவ

ருடைய சக்தி எப்பொழுதும் உங்களுடனே யிருந்திடுக!'' என்று சுவாமிகள் கடைசியில் கூறி முடித்தபொழு சுவாமிகளுடைய முகத்திலே ஒரு அநுதாபக்குறி தோ றிற்று; கண்களிலே ஒரு துளி கண்ணீர் ததும்பிற்று. சுவாமிகள் மிகுந்த வியாதியினாலே அதிகமாகப் பீடிக்கப் பட்டுக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தும், சில சமயங்க ளிலே எல்லோரும் ஆச்சர்யப்படும்படியான சக்தியும் தன்மையும் வாய்ந்து மேற்கண்டன போன்ற உபதேசங்க ளைச் செய்யும்படியான வன்மை வாய்ந்திருந்தா ரென் பதில் எவரேனும் ஐயுற முடியுமோ?

சுவாமிகள் இவ்வளவு உக்கிரமாகவும் ஆத்திரத்துட னும் பேசினால், சுவாமிகள் சரீரம் பாதிக்கப்படும் என் பதில் சந்தேகமு மில்லை, ஆச்சர்யமு மில்லை. ஆனால், சுவாமிகளுடைய இந்த ஆவேசலக்ஷணத்தை எவரால் அடக்கிவைக்க முடியும்? அவருடைய சகோதர சந்யாசி கள் ஸ்வாமிகளுடைய சரீரஸ்திதியைப்பற்றி வெகுவாகக் கவலைப்பட்டனர்; அவர்களும் சுவாமி சீக்கிரத்தில் சொஸ்த மடையுமாறு அநுக்கிரகிக்கும்படி ஈச்வரனைப் பிரார்த்திப் பதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும்? அவர்களா லானமட்டும் சுவாமிகள் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாகத்தானிருந்துவந்தார்கள்; சுவாமிகளுடன் எவரேனும் பேச வந்தால் அவர்களுடன் முன்னதாகவே சொல்லிவைத்து அதிகமாகப் பேசாதபடி பார்த்துக்கொள்வார்கள்; சுவாமிகளிடமும் ஜாடையாகச்

குறிப்பிடுவார்கள். இவற்றை யெல்லாம் மீறிச் சுவாமிகள் கர்ச்சிக்க ஆரம்பித்துவிட்டால், அவர்கள்தான் என்ன செய்வார்கள்?

74-வது அத்தியாயம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உற்சவம்

சுவாமிகள் காசியிலிருந்து திரும்பி வந்து சிலநாட்களுக்கெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உற்சவம், அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய பிறந்தநாட் கொண்டாட்டம் வந்துவிட்டது. ஆனால், சுவாமிகள் மிகுந்த வியாதியினால் பீடிக்கப்பட்டு, படுத்த படுக்கையை விட்டு எழுந்திராதவராய், அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தார். சுவாமிகளுடைய கால்கள் இரண்டும் வீங்கி யிருந்தன, அவர் நடப்பதற்குச் சக்தியற்றவராயிருந்தார். வெகு அமர்க்களமாயும் விமர்சையாயும் நடக்கவேண்டிய இந்த உற்சவமானது 'சுவாமிகள் வியாதியில் அவஸ்தைப்படுகிறார்' என்ற காரணத்தினாலே சிறிது மங்குதலடைந்தது. உற்சவத்துக்குச் சில தினங்கட்கு முன் முதற்கொண்டே, ஆயிரக்கணக்காக ஜனங்கள் மடத்துக்கு வர ஆரம்பித்துவிட்டார்கள்; ஐச்வர்யமும் அறிவும் நாகரிகமும் மிகுந்த அமெரிக்கா நாட்டுக்கு ஆத்மஞானத்தை யளித்து அந்த நாட்டை நிலைகலங்கச் செய்து வந்த சுவாமி விவேகானந்தரைத் தரிசிப்பதற்கும், அவருடைய திருவாயிலிருந்து

புறப்படும் மொழிகளைக் கண்டு களிப்பதற்குமே மேற் சொன்ன ஜனங்கள் திரள் திரளாக வந்தார்கள்.

சுவாமிகளுக்கும் 'அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும்' என்ற ஆசைதான்; ஜீவகோடிகளுடைய துக்க நிவிருத்தியின் பொருட்டு அவதரித்துள்ள மஹாபுருஷர் தம்மைத் தேடிவந்த ஜீவ ராசிகளை அலக்ஷியம் செய்ய முடியுமோ? 'காலை நேரத்திலே கொஞ்சநேரமாவது பொது ஜனங்களின் இடையில் வந்து போகலாம்' என்று அநேக தடவை நினைத்தார்; ஆனால், காலையில் அவர் ஒன்று இரண்டு பெயர்களுடனேயே சிறிது நேரம் சம்பாஷித்துவிட்டால், களைப்பு மிகுந்து விடுகிறதை யவரே யுணர்ந்து, எவருடனும் ஒரு நிமிஷநேர மும் பேச இயலாதிருப்பதையும் கண்டுகொண்டார். ஆகை யால், சுவாமிகள் சுவாமி நிரஞ்சனாநந்தரை "எவரையும் தமது அறையினுள்ளே விடவேண்டாம்" என்றும், ஜாக் கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படிக்கும் ஆக்ஞை செய்தார். அப்படியே சுவாமி நிரஞ்சனாநந்தரும் எவரும் போய்ச் சுவாமிகளைத் தொந்தரை செய்யாமலிருக்கும்படி பார்த்துக்கொண்டார். ஒரேயொரு கிருகஸ்த சிஷ்யர் சுவாமிகள் அருகிலேயே இருந்துகொண்டு, சுவாமிக ளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துவந்தார். இந்தக் கிருகஸ்த சிஷ்யர் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம் சர்பேரில் ஒரு ஸ்தோத்திரம் இயற்றிச் சுவாமிகளிடம் வாசித்துக் காட்டினார்; சுவாமிகளுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது. சுவாமிகளுடைய சரீரஸ்திதியைப்பற்றி

அந்தக் கிருகஸ்த சிஷ்யர் கவலை மிகுந்து, ஒருநாள் சுவாமிகளின் எதிரேயே மாலைமாலையாய்க் கண்ணீர் விட்டு, கோவென்று அழ ஆரம்பித்துவிட்டார்.

சுவாமிகள் இதை யறிந்துகொண்டு, அந்தக்கிருகஸ்த சிஷ்யரை நோக்கி, "புத்திரா! விசனப்படுவதால் என்ன பயன்? இந்தச் சரீரம் பிறந்ததுதானே, இறக்கத்தான் செய்யும். என்னுடைய எண்ணங்களில் சிலவற்றையாவது, ஒரு சிறிது அளவாவது உங்களுக்குள்ளே புகுத்தியிருந்தேனேயானால், அப்பொழுதுதான் எனது ஜீவிதம் வீணாகப் போகவில்லை யென்று நான் தெரிந்துகொள்வேன்! தியாகமே மூலமந்திரம் என்பதை எப்பொழுதும் ஞாபகப் படுத்திக்கொள். அந்த மந்திரோபதேச மடையாது, பிரஹ்மாவும் மற்றத் தேவர்களுங்கூட முக்தியடைய முடியாது. பூர்வ ஜன்ம சம்ஸ்காரங்களின் பலனாகிற எல்லா வாசனைகளும் ஒழிகிறபொழுதுதான் தியாகம் உண்டாகிறது." என்று தேறுதல் கூறினார்.

இப்படிச் சொல்லிவிட்டு, சுவாமிகள் கொஞ்சநேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தவர்போற் காணப்பட்டார். பின்னர், அந்தக் கிருகஸ்த சிஷ்யரிடத்திலே "இந்த உற்சவம் ஒரு நாளிலே கொண்டாடுவதற்குப் பதிலாக, நான்கு ஐந்து நாட்களிலே கொண்டாடப்பட்டால் நன்று. முதல் நாளில், சாஸ்திர படனங்களும் வியாக்கியானங்களும் நடைபெற வேண்டும்; இரண்டாம் நாளில், வேதவேதாந்ததத்துவ சாஸ்திரங்களைப்பற்றித் தர்க்கம் நடக்கவேண்டும்; மூன்று

வது நாளில், பிரச்னோத்தரபூர்வமாக அநேக நியாயங்கள் வாதிக்கப்படவேண்டும்; நான்காவது நாள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஜீவிதத்தைப்பற்றியும் உபதேசத்தைப் பற்றியும், மற்றும் பிரசங்கம் நடைபெறவேண்டும்; மறுநாள், சங்கீர்த்தனம், பூஜை, ஏழைகளுக்கு அன்னமளித்தல் முதலியவற்றை நடத்தலாம். வித்வான்களுடைய புத்திக்கு ஞானகாரம் அதிகமாகக் கொடுக்கப்படவேண்டும்; சற்குருமூர்த்தியினுடைய உயிர் அளிக்கும் உண்மைகள் அதிகமாக உபதேசிக்கப்படவேண்டும். இந்த உற்சவத்தைப் பெயருக்கு நடத்திவிட்டால் போதாது. இதனால் ஜனங்களுக்குப் பெருநன்மை யொன்று உண்டாக வேண்டும். வெறுமே ஆடுதலும் பாடுதலும் சிறிது கால உற்சாகமும் பய னில்லை.

சங்கீர்த்தன கோஷ்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சுவாமிகளிடம் வர ஆரம்பித்தன; சுவாமிகள் அவர்களைத் திருப்தி செய்ய விரும்பி, ஜன்னலோரத்திலே வந்து ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றார்; சங்கீர்த்தன கோஷ்டிகளின் பின்னே வந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் சுவாமிகளைத் தர்சித்து மகிழ்ந்தார்கள். ஆனால், சுவாமிகள் ஒரு சில நிமிஷ நேரமே அங்கு அப்படி நிற்க முடிந்தது; களைப்பு வந்துவிட்டது; அப்படியே கீழே உட்கார்ந்து விட்டார். சுவாமிகள் பின்னர் அந்தச் சிஷ்யரிடத்திலே, "அந்த அந்தக் காலத்திலே தர்மத்தை ரக்ஷிப்பதற்காகவும், அதர்மத்தை யழிப்பதற்காகவும் சாக்ஷாத் ஈஸ்வரன் அவ

தரிக்கின்றார். அந்த ஈஸ்வரனிடத்திலே செலுத்துகின்ற அபரிமிதமான பக்தியினாலேதான் ஆத்மாநுபூதி யுண்டாகும். அநந்தகோடி ஜன்மங்களிலே சூழ்ந்திருக்கும் அந்தகாரத்தை ஒரே ஜன்மத்தில் போக்கடித்துவிட்டு முக்தியை யளிக்கக் கூடியவர்கள் அவதார புருஷர்களேயாவர். மனிதன் எப்பொழுதும் சாதுக்களுடைய சங்கத்திலேயிருக்கவேண்டும். மனிதன் ஆத்மாநுபூதி யடைந்துவிட்டால், அவன் பிரமாண்டமானதொரு ஆத்மீக சக்திக்கு நடுவிட மாகின்றான்; அந்த ஆத்மீக சக்தி வீசுகின்ற வட்டத்துக்குள்ளே வருகிறவர்கள் அவனுடைய எண்ணங்களையும் கொள்கைகளையும் அடைந்து, அவனைப்போலவே ஆத்மீக சக்தியுடையவர்களாகிறார்கள். இவ்விதமாக இவர்கள் கடுந்தவம் புரியாமலே உத்கிருஷ்ட ஞானத்தை யடைகிறார்கள்.'' என்றார்.

ஈச்வரன் மானுடச்சட்டை சாத்தித் தமது பக்தர்களுக்கு முன்னே தோன்றுகிறார்; பக்தர்கள் அவர்களிடத்திலே சரணாகதி யடைகிறார்கள்; ஈச்வரன் அவர்களிடத்திலே பரிபூர்ண கிருபை பாலிக்கிறார், "நான் காசிபுரிக்குப் போயிருந்தபொழுது, எனது சரீரசுகம் மிகவும் கெடுதலடைந்திருந்ததினாலே அவ்விடத்திலே யிருந்த மஹாத்மா பாவஹாரிபாபா என்பவரிடத்திலே ஹடயோகாப்பியாசங்களில் உபதேசம் பெற எண்ணினேன். ஹடயோகத்தில் சில விதமான அப்பியாசங்களிலே சரீரசுகத்தைச் சரிப்படுத்திக் கொள்ளலாமென்று ஹடயோக சாஸ்திரங்களில் சொல்லப்

பட்டிருக்கிறது. அந்தப் பாவஹாரி பாபா அந்த சாஸ்திரத்திலே மஹா வல்லுநர்; பிரசித்தி பெற்ற ஹடயோகி. என்னுடைய சரீர அசௌக்கியத்தினாலே, இஷ்டப்பட்டவாறு சாதனங்கள் செய்ய முடியாது போயிற்று. என்னுடைய குருவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் எனக்குச் சரீரத்தை வியாதி யில்லாது சௌக்கியமாக வைத்துக் கொள்ளும்படியான மார்க்கமொன்றை உபதேசிக்கவில்லை. நான் அதனால் 'இந்தக் காசிபுரி மஹாத்மாவினிடத்திலே உபதேசம் பெற்றுக்கொள்ளலாம்' என்று பார்த்தேன். 'நாளை அவரிடம் சென்று ஹடயோகம் எனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டிக்கொள்ளலாம்' என்று தீர்க்கமாக நினைத்துக்கொண்டிருப்பேன்; ஆனால், இரவிலே ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் துக்கம் நிறைந்த முகத்துடனே எதிரே வந்து நிற்பது போலத் தோன்றும்; உடனே எனக்கு மிகுந்த விசனம் உண்டாய்விடும்; ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஞாபகம் வந்துவிடும்; அவர் என்னிடத்திலே வைத்திருந்த அடங்காத அன்பு மேலெழுந்துவிடும். ஆகையினாலே, நான் அன்று பாவஹாரி பாபுவிடம் போக விருந்ததை நிறுத்திவிட்டு, 'மறுநாள் போகலாம்' என்று இருந்துவிடுவேன்; அன்று இரவும் அப்படித்தான்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாடிய முகத்துடன் எதிரே வந்து நிற்பதுபோலத் தோன்றும். இங்ஙனம் இருபத்தொரு நாட்கள் வரை இந்தத் தோற்றம் உண்டாயிற்று. எனக்கே வெட்கம் உண்டாய்விட்டது; ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரைக் குருவாகப் பாவித்துவிட்டு, இப்பொழுது வேறொருவ

ரை நாடுவதா? இன்னும், ஆத்மாவைப்பற்றி விசாரணை செய்யவேண்டியதிருக்க, சரீரத்தைப்பற்றி, அநித்திய மான இந்த நாற்றச் சரீரத்தைப் பற்றிக் கவலைப்படுவது மூடத்தனமல்லவோ? இப்படியெல்லாம் நான் தீர ஆலோசனை செய்துகொண்டு, பின்னர் 'பாவஹாரி பாபாவிடம் போய் உபதேசம் பெற்றுக்கொள்வது' என்ற எண்ணத்தையே விட்டுவிட்டேன்'' என்றார் சுவாமிகள்.

இன்னும் சுவாமிகளுக்குத் தமது குருவை நினைத்து விட்டால், அடக்க வொண்ணாத ஆநந்தம் பொங்கிவிடும். "ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சருடனே சொற்ப நேரமேனும் காலம் கழிக்கும்படியான பாக்கியம் பெற்றவர்களே சுகிருதர்கள்! இனிமேல் வருபவர்களும் அவரை மனதார அழைப்பார்களானால், உள்ளும் புறம்பும் ஒருங்குபட்டு அவருடைய உபதேசங்களைப் பின்பற்றுவார்களானால், அவரை நேரேயே தரிசிக்க முடியும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெயரால் பிரகாசித்து வந்த அந்த மஹாத்மாவை இன்னும் எவரும் நன்றாக அறிந்துகொள்ள வில்லை. அநேக வருஷங்கள் அவருடைய பாதாரவிந்த நிழலிலே வசித்து அவருடைய அற்புதமான குணங்களையும் பெருமைகளையும் பிரத்தியக்ஷத்தில் கண்டுள்ள அவருடைய புத்திரர்கள்கூட, என்னுடைய சாங்கோபாங்கர்களும் அந்தரங்கர்களும் கூட அவருடைய உண்மைப் பெருமையின் ஆழத்தை யின்னும் கண்டு உணராதவர்களா யிருக்கிறார்கள். அவருடைய மஹிமையில் லவலேசம் ஒரு சிலர் அறிந்திருப்பார்கள்; அவர்களும் சில சமயங்களிலே குழப்பமடைந்து தத்தளிக்

கிறார்கள். இவர்களே தத்தளிக்கிறார்கள் என்றால், பிறரைப் பற்றிக் கேட்பானேன்? மெல்ல மெல்ல, அவர்களும் தெரிந்துகொள்வார்கள்'' என்றார் சுவாமிகள்.

இவ்விதமாக ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மஹிமையைப்பற்றிச் சுவாமிகள் பேசிக்கொண்டிருக்கையில், சுவாமி நிரஞ்சனாநந்தர் மெல்ல சுவாமிகளின் அருகாமையில் வந்து, ''நிவேதிதா சகோதரியும், இன்னும் சில மேனாட்டு ஸ்திரீமணிகளும் சுவாமிகளைத் தரிசனம் செய்வதற்காக வெளியே வந்து காத்துக்கொண்டிருக்கிறார்கள்'' என்றும், ''தரிசனத்துக்குச் சமயமும் சௌகர்யமும் ஏற்படுமா?'' என்று கேட்டுவரச் சொன்னார்கள்'' என்றும் கூறினார்.

சுவாமிகள் உடனே அவர்களை யுள்ளே யழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார். நிவேதிதா சகோதரி இப்பொழுதுதான் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்று திரும்பி வந்திருந்தாராதலால், சுவாமிகளுக்கு ''அவ்வம்மையார் வந்திருக்கிறார்'' என்று கேள்விப்பட்டவுடனே, சந்தோஷம் உண்டாயிற்று; நிவேதிதா சகோதரியும் அவருடன் வந்திருந்தவர்களும் சுவாமிகளிடம் சென்றவுடனே, சுவாமிகளை வணங்கி நின்று, சுவாமிகள் வியாதியஸ்தராயிருக்கிறாரென்பதை யுணர்ந்துகொண்டு, ஒரு சில க்ஷேம சமாசாரங்களைப் பேசிவிட்டு, சுவாமிகளிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

அவர்கள் வெளியே சென்றவுடனே, சுவாமிகள் தம் மருகே யிருந்த சிஷ்யரை நோக்கி, ''இவர்களுடைய புத்தி

யைக் கவனித்தாயா? நான் வியாதியில் விழுந்திருக்கிறே னென்று தெரிந்துகொண்டு எனக்கு அதிக சிரமம் கொடுக் காமல் போய்விட்டார்கள். ஒரு வங்காளி என்னைப் பார்க்க வந்திருந்தால், என்னுடைய இந்த நிலைமையைப் பார்த்த தும், குறைந்தது அரைமணிநேரமாவது பேசாமல் போக மாட்டான்.'' என்றார்.

பகல் மணி இரண்டரையாயிற்று; ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச வைபவ உத்சவம் வெகு விமர்சையாக, கோலா கலத்துடனே நடைபெறுகிறது; எங்குப் பார்த்தாலும் "ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சருக்கு ஜே," "ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிக்கு ஜே," "ஸ்ரீமஹா மாதாவுக்கு ஜே," என்னும் சப் தங்களை இடி முழக்கங்கள் போலக் கேட்கப்படுகின்றன. சுவாமிகளுடன் இருந்த சிஷ்யருக்கு வெளியே இவ்வளவு பிரமாதமாக நடக்கும் உத்சவத்திலே தாமும் சேர்ந்து குதித்து ஆநந்திக்கவேண்டுமென்று ஆசை யிருந்தது. ஆனால், 'வியாதியில் படுத்திருக்கிற சுவாமிகளை விட்டு எப்படிச் செல்வது?' என்று, தமது ஆசையை வெளியே காட்டிக்கொள்ளாதிருந்தார். சுவாமிகள் எப்படியோ அந்தச் சிஷ்யருடைய மனவிருப்பத்தை யறிந்துகொண்டு, உத்சவத்திலே போய்க் கொஞ்ச நேரம் இருந்து களித்து விட்டு வரும்படி ஆஞ்ஞாபித்து அனுப்பினார். அந்தச் சிஷ் யர் அப்படியே வெளியே வந்து பக்த கோடிகளுள் தாமும் ஒருவராகக் கலந்துகொண்டு சிறிது நேரம் அம் மஹோத் சவாநந்தத்தை யநுபவித்துவிட்டு, பின்னர்ச் சுவாமிகளு

டைய சரீரஸ்திதியைப்பற்றி நினைத்துக்கொண்டு, சீக்கிரத்திலே சுவாமிகளிடம் திரும்பி வந்துவிட்டார்.

சுவாமிகள் அவரைக் கண்டவுடனே, "கூட்டம் எவ்வளவு இருக்கும்?" என்றார்.

அந்தச் சிஷ்யர், "ஐம்பதினாயிரம் இருக்கலாம்" என்றார்.

சுவாமிகள் படுக்கையிலிருந்து எழுந்திருந்து, ஜன்னல் வழியாக ஆங்குக் கூடியிருந்த அப்பெருங் கூட்டத்தை யெட்டிப் பார்த்து, "நீ என்ன சொல்கிறாய்! அதிகமாய்ப் போனால் முப்பதினாயிரம் இருக்கலாம்" என்றார். இன்னும் "நமது குருமூர்த்தியின் மஹிமை வெகு வேகமாக உலகில் வியாபித்து வருகிறது. உலகின் பல பாகங்களிலும், அநேக இடங்களிலே நமது குருமூர்த்தியினுடைய இவ் விழா வெகு கௌரவமாகக் கொண்டாடப்படுகிறது," என்றும் கூறினார்.

மாலை நெருங்கிற்று; உத்சவம் கொண்டாடுவதற்குக் கூடியிருந்த அப் பெருங் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து, கலைந்துவிட்டது; அப்பொழுது, சுவாமிகளின் அறையின் எல்லா ஜன்னல்களும் திறந்து வைக்கப்பட்டன; சுவாமிகள் சுகமான மாலைக்காற்றை யுண்டு, உத்சவம் விமர்சையாக நடந்தேறியதைப்பற்றிக் குதூகலித்துக்கொண்டிருந்தார்.

கடுமையான தவங்கள் புரிவதிலே, சாதாரணமான உபவாசங்கள் சரிவர இருப்பதிலேகூட, சுவாமிகளுக்கு

மிகுந்த சந்தோஷம்; "மனத்தைத் திடப்படுத்திப் பயிற்று விப்பதற்கு இவை யெல்லாம் அவசியமாம்" என்று சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குக் கூறி, அவர்கள் கண்டிப்பாக அவற்றை யநுசரிக்கும்படி செய்வார். மதா நுஷ்டானங்கள் கடுமையாகப் பின்பற்றவேண்டிய சந்தர்ப் பங்களிலே சுவாமிகள் தமது சிஷ்யர்களை லகுவில் விட மாட்டார்; இவற்றிலே அவர்கள் சிறிதேனும் தவறி விட்டால், சாந்தமே ஸ்வரூபமாயுள்ள சுவாமிகளுக்கு எங்கிருந்தோ கோபம் வந்துவிடும்; அவருடைய பார்வையி லேயே சிஷ்யர்கள் நடுங்கி, சீர்திருத்திக்கொண்டுவிடு வார்கள்.

1898-ம் வருஷத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச ருடைய உத்ஸவக் கொண்டாட்டத்துக்குச் சில தினங் கட்கு முன், சிவராத்திரி தினம் வந்தது. அன்று மத்தி யானம், சுவாமிகள், எல்லோரும் போஜனம் செய்யும் கூடத்துக்குச் செல்ல, தமது சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் அனைவரும் போஜனம் செய்துகொண் டிருந்ததைப் பார்த்தார்; சுவாமிகளுக்குக் கொஞ்சம் மன வருத்தம் உண்டாய்விட்டது. "இத்தனைச் சந்யாசிகளிலே ஒருவருக்காவது சிவராத்திரி விரதம் அநுஷ்டிக்க வேண் டும் என்ற எண்ணம் உண்டாகவில்லையே" என்று சுவாமி கள் சிறிது மனஸ்தாபப்பட்டுக்கொண் டிருக்கையில், சுவாமி சுத்தாநந்தர் என்பவர், எங்கோ வெளியே போயிருந் தவர், அப்பொழுதுதான் வந்தார்; அவரும் போஜனம்

செய்வதற்குப் பந்தியிலே போய் உட்கார்ந்துவிட்டார்; சுவாமிகள் அவரைப் பார்த்து "இன்று உபவாசம் இருந்தால், உனது உடம்புக்கு ஒத்துக்கொள்ளுமோ?" என்றார்.

சுவாமி சுத்தாநந்தர் தாம் சிவராத்திரி விரதம் இருப்பதற்கு இணங்கவே, சுவாமிகள் அவரை அன்று பகல் முழுதும் உபவாசம் இருந்து, இரவு முழுதும் சாக்ஷாத் பரமசிவனைப் பூஜிக்கும்படி ஆக்ஞாபித்தார். ஆனால், சுவாமி சுத்தாநந்தர் சரீரபலம் அதிக மில்லாதவராதலால் நாள் முழுதும் உபவாசமிருப்பது கஷ்டமென்று படும் விஷயத்தில், சில பழங்கள் சாப்பிடும்படி அநுமதி கொடுத்தார். பின்னர் சுவாமிகள், மற்றவர்களை நோக்கி, "நமது மடமானது சந்யாசிகளின் மடமாயிருந்தும், 'நாம் ஹிந்துமத தர்மத்தை நிலைநிறுத்துபவர்கள்' என்று சொல்லிக்கொண்டும், இங்கு 'உபவாசமிருக்க வேண்டும்' என்ற எண்ணம் எவருக்குமே யில்லாமற்போனது எனக்கு வெட்கமாயிருக்கிறது. போனது போகட்டும்; இனிமேலாவது, வருஷந்தோறும் இந்த விரதத்தை நீங்கள் அநுஷ்டிக்கவேண்டும்" என்று கண்டிப்புக் குரலுடனே கூறினர்.

சுவாமிகளுடைய சரீரத்தை வியாதி மிகவும் கொடூரமாகப் பற்றிச் சிதைத்துவந்தும், சுவாமிகளுடைய முகத்திலே தேஜஸ் ஜ்வலித்துக்கொண்டுதானிருந்தது; வைத்தியர்கள் அவ்வப்பொழுது இட்ட கடுமையான பத்தியங்களை

யும் சுவாமிகள் வெகு கண்டிப்பாகப் பின்பற்றி வந்தார். சுவாமிகளுடைய அந்திய காலத்தில், கடைசி வருஷத்தில், சுவாமிகள் அடிக்கடி வைத்தியர்களுடைய சிகிச்சையிலே யிருக்கும்படி நேரிட்டது; அவர்களோ மிகமிகக் கடுமை யான பத்தியங்களை யெல்லாம் விதித்தார்கள். வேலூர் மடத்திலே நடந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய பூஜை வைபவத்தை நேரே கண்ணால் கண்டு களிக்கும் பொருட்டுக் காசியிலிருந்து சுவாமிகள் திரும்பி வந்த பொழுது, சுவாமிகளுடைய வியாதி அபாயகரமாக அதிகரித்துவிட்டது. ஆனால், சுவாமிகளோ "வைத்திய சிகிச்சைக்கு உட்படமாட்டேன்" என்கிறார்; என்செய்வது? சகோதர சந்யாசிகளுக்கெல்லாம் கவலை யதிகப்பட்டு விட்டது; அவர்களுக்குள்ளே சுவாமி நிரஞ்சனாநந்தர், சுவாமிகளிடம் சென்று, "சுவாமிகள் கட்டாயம் வைத்திய சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்" என்றும், "இல்லை யேல், அவருடைய சகோதர சந்யாசிகளையும் சிஷ்யர்களை யும் சுவாமிகள் அநாவசியமாக வருத்தத்துக்கு உள்ளாக்கு பவராவார்" என்றும் கூறி வற்புறுத்தி வேண்டிக் கொள்ள, மற்றச் சந்யாசிகளும் அவருடனே சேர்ந்து கொண்டு வேண்டினார்கள்.

பிறருடைய வேண்டுகோட் கிணங்காது, அதுவும் தமது சகோதர சந்யாசிகளுடையவும் சிஷ்யர்களுடையவும் வேண்டுகோட் கிணங்காது இருக்கும்படி சுவாமிக ளுடைய மனம் என்ன, அவ்வளவு கடினமானதா? சுவாமி

கள் சம்மதித்தார்; கல்கத்தாவிலே பிரசித்தி பெற்ற ஆயுர் வேத வைத்திய நிபுணர் கவிராஜ் மஹாநந்த ஸேன குப்தர் என்பவரை யழைத்துக்கொண்டு வந்து காட்டினார்கள். அவ் வைத்தியர் வந்து, சுவாமிகளுடைய சரீரஸ்திதியைப் பரிசோதித்துவிட்டு, "சுவாமிகள் உப்பை யடியோடு தள்ளிவிடவேண்டும்" என்றும், "ஒரு துளி தண்ணீர் கூடக் குடிக்க லாகாது" என்றும், இந்தக் கடினமான பத்தியம் அநுசரிப்பதாயிருந்தால், தாம் மருந்து கொடுப்பதாகவும் கூறினர்.

சுவாமிகள் வைத்தியருடைய இந்த விதியைச் சற்றும் பிசகாது நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டு, அப்படியே சங்கற்பித்தும் கொண்டார். இதனால் சுவாமிகள் என்ன வெளியாக்கினர் என்றால், மனத்துக் கிணங்கிச் சரீரம் நடக்குமென்பதும், தம்மால் சரீரத்தையும் மனத்தையும் அடக்கி நிறுத்தமுடியு மென்பதும், ஒன்று; தமக்கு வைத்தியம் செய்துகொள்வதிலே பிரிய மில்லையாயினும், தமது சகோதர சந்யாசிகளின் விருப்பப்படி தாம் நடக்கக் கடமைப்பட்டவர் என்பது, இரண்டு; தாம் ஆரம்பித்த முயற்சிகள் அரை குறையாகவே யிருத்தலினால், இன்னும் கொஞ்சம் பாடுபடலா மென்றால், சரீர அசௌக்கியம் குறுக்கே நிற்கின்றது; ஆகையால், இந்த வைத்தியத்துக் கிணங்குவதினால் சரீரம் கொஞ்சம் சுகமடைந்தால், மறுபடியும் தமது வேலையைத் தொடர்ந்து செய்யலாமே யென்பது, மூன்று. ஆனால், சுவாமிகளுக்கு வைத்திய

சிகிச்சையிலே நம்பிக்கை யில்லை. ஆயினும், மேலே காட்டிய காரணங்களுக்காகத் தாம் சிகிச்சை செய்து கொள்வதாக அநேகரிடம் கூறினர்.

ஒரு சிஷ்யரை நோக்கி, அவர், "இதோ பார்! நான் எனது சகோதர சந்யாசிகளுடைய உத்தரவுக்குக் கீழ்ப் படிகிறேன், அவ்வளவுதான்; அவர்களுடைய வேண்டு கோளை நான் எப்படி உதறி யெறிவது? அவர்கள் என்னை யவ்வளவு அன்புடன் பார்த்துவருகிறார்களே!" என்றார்.

இன்னொரு சிஷ்யர், சுவாமிகளை நோக்கி, 'சுவாமி! தேவரீர் மணி நேரத்துக் கொருதரம் தண்ணீர் குடிக்கும் வழக்கம் ஆயிற்றே; வெயில் கடுமையாக அடிக்கின்ற இந்தக் கோடைகாலத்திலே தாங்கள் எப்படித் தண்ணீர் குடிக்காமலிருக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

சுவாமிகள் "என்ன சொல்கிறாய்? நான் 'வைத்திய ருடைய சிகிச்சையி லிருப்பது' என்று நிச்சயித்துக் கொண்டபொழுது, நான் 'தண்ணீர் குடிப்பதில்லை' என்று விரதம் செய்துகொண்டேன்; இப்பொழுதோ, தண்ணீர் தொண்டைக்குள்ளே யிறங்காது. இதோ இன்றுடன் நான் தண்ணீர் குடித்து இருபத்தோரு நாட்க ளாய்விட்டன; இப்பொழுது வாய் கொப்பளிக்கும்பொழுது கூட, ஒரு துளியேனும் தண்ணீர் உள்ளே போய் விடாதபடி, தொண்டையானது தானே மூடிக்கொண்டு விடுகிறது. நான் வேண்டுமென்றாலும் இப்பொழுது தண்ணீர் குடிக்க முடியாது. சரீரமானது மனத்துக்குக் கட்டுப்பட்டு, அது

மனம் சொன்னபடி கேட்கிறது. சரீரமானது மனத்தை மூடியிருக்கும் ஒரு திரைதானே, மனத்தின் ஆக்ஞையைச் சரீரமானது மறுபேச்சுப் பேசாமல் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்,'' என்று மறுமொழி கூறினர்.

சின்னாட்கள் சுவாமிகள் இவ்வாறு ஆயுர்வேத சிகிச்சையி லிருந்தபின்னர், தமது சகோதர சந்யாசிகளை நோக்கி, "இப்பொழுது நான் தண்ணீரைப்பற்றி நினைப் பதுகூட இல்லை. நான் அதைத் தவறுகிறதே யில்லை'' என் ருர். சரீரத்திலே பலஹீனமும் வியாதியும் அதிகரித்து வந்தபொழுதிலும் மன பலம் சற்றும் குறையாதிருப்பது கண்டு, சுவாமிகளுக்கு உண்டான ஆநந்தத்துக்கு ஒரு அளவே யில்லை; சுவாமிகள் ஒரு சமயத்திலே ஜயகோஷம் புரிபவர் போன்று புந்நகை பொலிந்த முகத்தினராய், "என்னால் எதுவும் செய்ய முடியும் என்பதை நான் அறி கிறேன்'' என்ருர். சுமார் இரண்டு மாதங்கட்கு மேலாகச் சுவாமிகள் ஆயுர்வேத சிகிச்சையிலிருக்க, சுவாமிக ளுடைய சரீரம் பெரிதும் சுக மடைந்தது.

சுவாமிகள் மேற்கண்ட சிகிச்சையி லிருந்தபொழுது, ஆகாரம் கொஞ்சமே உண்டுகொண்டு வந்திருப்பாரென்று நாம் சொல்லவேண்டிய அவசிய மில்லை. தவிர, சுவாமிகள் சுகமாக நித்திரைசெய்து நெடுங்கால மாய்விட்டது. ஆனல் இப்படி யெல்லாம் இருந்தும், சுவாமிகளுடைய கண்க ளின் ஒளியிலாவது, முகத்தின் தேஜஸிலாவது ஒருசிறிதும் மாறுதல் இல்லை. தவிர, சுவாமிகள் வேலை செய்வதிலும்

பின் வாங்குவதில்லை. அவருடைய கடிதப் போக்கு வரவுகளே ஏராளமாம். சுவாமிகள் மேலே சொன்ன ஆயுர்வேத சிகிச்சையை யநுசரிப்பதற்குச் சின்னாட்களுக்கு முன்னர், அவருடைய மேனாட்டுச் சிஷ்யர் ஒருவரால் மடத்துப் புத்தகசாலைக்குக் கொடுக்கப்பட்ட பிரிட்டன் அகராதி (Encyclopaedia Brittanica) என்னும் நூலைப் படிக்க ஆரம்பித்திருந்தார். இந்நூல் இருபத்தைந்து பெரும் பாகங்களாக நூதன பதிப்பில் அச்சிடப்பெற்றுள்ளது. சுவாமிகள் ஒரு நாள் இந்நூலைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டிருப்பதைச் சுவாமிகளுடைய பிரிய சிஷ்யர்களுள் ஒருவராகிய சாரதச் சந்திர சக்கரவர்த்தி கண்டு, "இந்த இருபத்தைந்து பாகங்களையும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், வாழ்நாட்கள் முழுதும், ஒரு ஜீவிதமே வேண்டும்," என்றார்.

சுவாமிகள் பத்துப் பாகங்களைப் படித்துவிட்டார்; பதினோராவது பாகத்தைப் படித்துக்கொண்டிருக்கிறார். இது அந்த சாரதச் சந்திர சக்கரவர்த்திக்குத் தெரியாது. சுவாமிகள் அவரை நோக்கி, "நீ என்ன, அப்படிச் சொல்கிறாய்? இந்தப் பத்து பாகங்களையும் நான் படித்துவிட்டேன்; நீ இவற்றுக்குள் எந்த இடத்தில் வேண்டுமென்றாலும் கேள்வி கேள்; நான் சரியானபடி மறுமொழி கூறுகிறேனா? இல்லையா? என்று பார்." என்றார்.

சிஷ்யருக்கு இது ஆச்சர்யமாயிருந்தது; ஆதலால், அந்தப் பத்துப் பாகங்களையும் எடுத்து அவற்றிலிருந்து

கடினமான கேள்விகள் பல கேட்டார்; ஒவ்வொரு பாகத்தி லும் கேள்வி கேட்டார்; ஆ! ஆ! என்ன ஆச்சர்யம்! சுவாமிகள் விரிவாகத் தகுந்த மறுமொழிகள் கூறியது மன்றியில், அநேக சந்தர்ப்பங்களில் அப் புத்தகத்தி லுள்ள வார்த்தைகளை யப்படியப்படியே எடுத்து ஒப்பு வித்தார். சாரதச் சந்திரருக்கு அடக்க வொண்ணாத ஆச்சர்யம் உண்டாய்விட்டது; தாம் எடுத்த புத்கங்களை யெல்லாம் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, சுவாமிகளின் எதிரில் நின்று, "ஸ்வாமி இது மனுஷ்ய சக்திக்கு மேற்பட்டது" என்று கூறினர்.

சுவாமிகள் "இதிலே ஆச்சர்யம் ஒன்று மில்லை; மனி தன் கண்டிப்பான பிரஹ்மச்சாரியாகமாத்திரம் இருந்தால், அவன் ஒரு விஷயத்தை யொரேதரம் படித்தோ அல்லது கேட்டோயிருந்தாலும், அப்படிச் செய்து அநேக வருஷங்க ளாயினும் கூட, அவன் கேட்ட மாதிரியே அல்லது படித்த மாதிரியே, திரும்பக் கூற முடியும். இந்த பிரஹ்மச் சர்யம் என்பது இப்பொழுது நம்மிடம் இல்லாததினு லேயே, நமது ஜனசமூகம் நமது சரீர பலத்திலும் புத்தி சக்தியிலும் மேன்மேலும் தாழ்மையை யடைந்து வரு கிறது; நாம் நமது ஆண்மையை இழந்துவருகிறோம்" என்றார்.

சிறிது நேரம் கழித்துச் சுவாமிகள் ஹிந்து தத்துவ சாஸ்திரங்களின் வெவ்வேறு கோட்பாடுகளை யெடுத்து மிகத் தெளிவாக விளக்கி யுரைத்துக்கொண்டிருந்தார்.

சுவாமிகள் வெகு உற்சாக பூரிதராக இவ் விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், ஸ்வாமி பிரஹ்மாநந்தர் உள்ளே வந்து, சாரதச்சந்திரரை நோக்கி, "என்ன? தங்களுக்குக் கொஞ்சம்கூட யோசனையில்லையே! சுவாமிகளுக்குச் சரீரம் சுகமில்லை யென்று தங்களுக்குத் தெரியாதா? சுவாமிகளிடத்திலே லேசான விஷயங்களைப்பற்றிச் சாதாரணப் பேச்சுக்கள் பேசிக்கொண்டிருக்கும்படி நான் தங்களிடம் சொல்லி யனுப்பவில்லையா? இப்படிச் சுவாமிகள் சூக்ஷ்ம விஷயங்களைப்பற்றிப் பேசிக் களைக்கும்படி தாங்கள் செய்யலாமா?" என்று கேட்டார்.

சாரதச்சந்திரருக்கு மறுமொழி கூற வாயெழவில்லை. ஏனெனில், சுவாமி பிரஹ்மாநந்தர் கூறியது அனைத்தும் உண்மையே. ஆனால், சுவாமிகள் சட்டென்று சுவாமி பிரஹ்மாநந்தரை நோக்கி, "உங்களுடைய வைத்திய பத்திய பைத்தியங்களும் இங்கே எவருக்கு வேண்டும்? அவர்கள் எனது புத்திரர்கள்; அவர்களுக்கு உபதேசிப்பதினால் எனது சரீரம் அழிந்துவிடுமானால், அப்படிப் போனால்தான் போகட்டுமே?" என்றார்.

பின்னர், வங்கபாஷை நூலாசிரியர்களைப்பற்றிச் சம்பாஷணை நடக்க ஆரம்பித்தது. சுவாமிகள் வங்கநாட்டுப் பழைய கவிகளிலே ஒருவராகிய பாரதச் சந்திரர் என்பவரைப் பலவாறு குற்றம் கண்டுபிடித்து, நிர்த்தாக்ஷண்யமாகக் கண்டித்தார். "வங்கபாஷையிலே இபற்றப்பட்டுள்ள காவியங்களிலெல்லாம் சிறந்தது மைகேல் மதுசூதன தத்தர் என்

னும் கவி இயற்றிய மேகநாதபத்காவியம் ஆம்'' என்றும், "இதற்கு நிகரான காவியம் தற்கால ஐரோப்பியக் காவியம் களிலே கூடக் கிடையாது'' என்றும் கூறி, காவியத்தை யும் அதன் ஆசிரியராகிய மைகேல் மதுசூதனதத்தரையும் நாநாவிதமாக் வர்ணித்துப் புகழ்ந்தார்.

"இந்தக் கவீச்வரர் தமது அபாரமான சாமர்த்தி யத்தை எந்த இடத்திலே காட்டியிருக்கிறார் தெரியுமா? இந்திரஜித், ராவணனுடைய ஆருயிர்ப்புதல்வன், போர்க் களத்திலே வீழ்ந்து மடிந்திருக்கின்றான். இராவணேச்வர னுடைய மனைவியாகிய மண்டோதரியானவள் புத்திர சோகத்தினால் துடித்து வருந்தித் தனது புருஷனிடத்திலே சென்று, 'நாதா! யுத்தம் வேண்டாம்; சீதையை அனுப்பி விடுங்கள்; இந்த மூதேவி இங்குக் கால்வைத்த நாள் முத லாக நமது குலத்துக்கே ஹானி யுண்டாய்க்கொண்டு வருகிறது. யுத்தம் போதும், யுத்தம் போதும்' என்று கெஞ்ச, ராவணனவன் உண்மையான வீரனாதினாலே, மரித்துப்போன தன்னுடைய புத்திரனைக் குறித்துத் தன்னுடைய ஹிருதயத்திலே கொதித் தெழுகின்ற விசன தாபத்தைத் தன்னுடைய தைரியத்தினாலே ஒருவாறு அடக்கிக்கொண்டு, தனது பட்ட மகிஷியும் மற்றப் புத்தி ரர்களும் எக்கதியாவார்களோ என்பதைச் சற்றும் கவனி யாதவனாய், கர்வம் ஒரு பக்கம், கோபம் ஒரு பக்கம், 'பழிக் குப் பழி வாங்கவேண்டும்' என்ற எண்ணம் ஒரு பக் கம் தூண்ட, 'என்ன வந்தாலும் வரட்டும்; பிரபஞ்சம்

இருந்தாலும் சரி, சுக்குச் சுக்காக நறுங்கி என் கண் முன்னேயே போனாலும் சரி; நான் எனது கடமையைச் செய்தே தீர்வேன்" என்று வீரவசனங்கள் புகன்று கொண்டு யுத்தத்திற்குச் செல்லத் தயாராகிறான்; இந்த இடத்திலே கவி தம்முடைய பூர்ண சமர்த்தையும் காட்டியிருக்கிறார்" என்று சுவாமிகள் கூறி மெச்சியது மன்றி, மடத்துப் புத்தகசாலையிலிருந்து அந்தப் புத்தகத்தை வரவழைத்து, உடனே மேற்சொன்ன பாகத்தை எல்லோரும் சித்திரப் பிரதிமைபோல் வீற்றிருக்க, அவ்வளவு அற்புதமாக வாசித்துக் காண்பித்து, தாம் வாசிக்கின்ற நடையிலேயே ராவணனுடைய தைர்யத்தையும் ஆண்மையையும் விளக்கிக் காட்டினார்.

இன்னொரு நாள் காலையிலே சுவாமிகள் அதே சாரதச் சந்திரருடன் பேசிக்கொண்டிருக்கையில், 'நமது நாட்டிலே ஸ்திரீகள் கல்வியின்றித்தான் இருக்கின்றார்கள். நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன். நமது மடம் மாதிரி, கல்கத்தாவுக்குச் சமீபத்தில் எங்கர்வது கங்கா தீரத்தில் ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமாக மடமொன்று ஸ்தாபித்து அதிலே நமது குரு மாதா ஸ்ரீ சாரதா தேவியாரை அதிபதியாக வைக்க உத்தேசிக்கிறேன். இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள ஸ்திரீகளுக்குப் போதிப்பதற்குப் பிரஹ்மசாரிணிகளும் உபாத்தியாயணிகளும் இங்கே பயிற்றுவிக்கப்படுவார்கள்." என்று சொன்னார்.

இந்த விஷயத்தை அவர் எடுத்துப் பேச ஆரம்பித்த வுடனே அவருக்கு அதிக உற்சாகமாய்விட்டது; அவர்கள் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றியும், "இந்திய ஸ்திரீகளை ஜனசமூக வழியிலே பயிற்றுவிப்பதற்குத் தேசம் முழுதும் ஆங்காங்கு மடங்களோ, பாடசாலைகளோ ஏற்பட வேண்டும்" என்றும், இதனால் உண்டாகும் பெருநன்மைகளைப்பற்றியும் கூறி, சுவாமிகள் இந்த விஷயமாக அந்தச் சிஷ்யரிடமிருந்த சந்தேகங்களையெல்லாம் போக்கடித்தார்.

இதற்குள்ளாக மாலை போஜனத்தின் பொருட்டு, மணி யடிக்கப்பட்டது; சிஷ்யர் சாரதச் சந்திரர் தமது இரு கைகளையும் கூப்பிக்கொண்டு சுவாமிகளைத் தம்மை ஆசிர் வதிக்கும்படி வேண்டி. நிற்க, சுவாமிகள் அந்த சிஷ்யரை அஸ்தமஸ்தக சையோகம் செய்து, "புத்திரா! நீ பயப்பட வேண்டாம். நீ இவ்வுலகத்தைச் சார்ந்தவனல்லன்—கிருகஸ்தனுமல்லன் - சந்யாசியுமல்லன்! இது ஒரு புதிய மாதிரி" என்றார்.

75-வது அத்தியாயம்
தியானம்

1901, 1902 இந்த இரண்டு வருஷங்களிலும் சுவாமிகள் பல சந்தர்ப்பங்களில் கொடூரமான வியாதியினால் பீடிக்கப்பட்டு வருந்தியிருக்கின்றார்; அவருடைய சிஷ்யர்களும், சகோதர சந்யாசிகளும் சுவாமிகளை 'எவரிடமும்

அதிகமாகப் பேசவேண்டாம்,' என்று எவ்வளவு சொல்லியும் சுவாமிகள் அமைதியா யுட்கார்ந்துகொண்டிருக்க மாட்டார்; ஏனெனில், அவர் பேச ஆரம்பித்துவிட்டால், ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி அவர் போதிக்க ஆரம்பித்துவிட்டால், அப் பேச்சுக்கு, அப் போதனைக்கு, ஒரு எல்லையே யிராது. சுவாமிகளோ மஹா தியாகி; "எல்லாம் தியாகம் செய்யப்படவேண்டும், சரீரம் கூடத் தியாகம் செய்யப்படவேண்டும்" என்னும் கொள்கையையுடையவர், இக் கொள்கையின் அநுஷ்டான உருவாக வந்தவர். சில சமயங்களிலே சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகள் சுவாமிகளைத் தரிசிக்க வருகிறவர்களைச் சுவாமிகளின் முன்னே போக விடமாட்டார்கள்; அவர்கள் "சுவாமிகளை ஒரு தரம் கண்ணால் கண்டுவிட்டாவது போவதற்கு அநுமதி கொடுக்கவேண்டும்," என்று இந்தச் சந்யாசிகளைக் கெஞ்சி மன்றுடுவார்கள்; எனினும், அந்தச் சந்யாசிகள் சுவாமிகளுடைய சரீர ஸ்திதியை உத்தேசித்து, எவருக்கும் அநுமதி கொடுக்கமாட்டார்கள்; வந்தவர்கள் மரண வேதனைக் கொப்பான வருத்த மடைந்து, அலறிக்கொண்டு, அழுதுகொண்டு வீடு திரும்புவார்கள்.

இந்தச் சங்கதி சுவாமிகளுக்குத் தெரியவரும். அப்பொழுது சுவாமிகள் மிகுந்த பச்சாத்தாப முடையவராகி, தமது சகோதர சந்யாசிகளை நோக்கி, "இதோ பாருங்கள்! இந்தச் சரீரத்தினாலாம் பயன் என்ன? பிறருக்கு உதவி புரிவதிலேதான் அது போகட்டுமே! நமது குருமூர்த்தி:

தொண்டையிலே ஏற்பட்ட புண்ணினால் மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தும், தமது அந்திய நிமிஷம் வரையிலும் தம்மிடம் வந்தவர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருக்க வில்லையா? அவருடைய அடியார்களுக்கு அடியானாகிய நான் மாத்திரம் ஏன் அப்படிச்செய்யக்கூடாது? சரீரத்தைப்பற்றி எனக்குக் கடுகளவும் கவலை யில்லையே. என்னுடன் பேசு வதற்கு முமுக்ஷுக்கள் கிடைத்துவிட்டால் எனக்குண்டா கின்ற ஆநந்தம் இவ்வளவென்று உங்களுக்குத் தெரியாது. எனது சகோதரர்களுக்கு ஆத்மஞானம் உண்டாதற் பொருட்டு, நான் எத்தனை தடவை வேண்டுமென்றாலும் மரித்து, எத்தனை தடவை வேண்டுமென்றாலும் ஜன்மம் எடுப்பேன்." என்றார்.

இக் காலத்திலே, அதுவும் 1902-ம் வருஷம் மார்ச்சுமீ முதல் சுவாமிகள் மகா சமாதி யடைந்தவரையில், சுவாமிகளுடைய சரீரம் கேவலமான ஸ்திதியில் இருந்த போதிலும், சுவாமிகள் ஏதேனும் ஒரு கார்யம் செய்ய வேண்டுமென்று நிச்சயித்துவிட்டால், சுவாமிகளுடைய மனமானது எந்த விஷயத்தையாவது திடமாகப் பற்றிக் கொண்டுவிட்டால், வியாதி யொரு பொருட்டன்று. சுவாமிகள் மஹாசமாதி யடைந்த நாள் வரையில் மடத்தி லே தினந்தோறும் வேதாந்த பாடம் சொல்லிக் கொடுத் தார்; சில சமயங்களிலே சுவாமிகளுடைய சிஷ்யர்களும் சகோதர சந்யாசிகளுங்கூடச் சுவாமிகளிடம் ஆத்மீகவிஷய மாகச் சந்தேகங்களைத் தெளிந்துகொள்ள வருவார்கள்.

சுவாமிகள் அடிக்கடி தியானமார்க்கங்களைப்பற்றிப் பேசி, பலருக்கும் உபதேசித்துவந்தார்; உலகின் நாலாபக்கங்களிலிருந்து தினந்தோறும் வந்து குவிந்துகொண்டிருந்த கடிதங்கட்குத் தகுந்த மறுமொழிகள் எழுதி யனுப்புவதிலே வெகு நேரம் சுறுசுறுப்பாயிருப்பார்; இல்லையேல், ஏதேனும் புஸ்தகங்கள் படித்துக்கொண்டேயிருப்பார்; இல்லையேல், ஏதேனும்பெரிய புத்தகங்கள் எழுதக் கருதித் தமது நினைப்புக்களையெல்லாம் குறிப்புக்களாகக் குறித்துக்கொண்டிருப்பார்; சிறிது சிரமசாந்தி செய்து ஒய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், ஆநந்தகரமான பாட்டுக்கள் பாடிக் களிப்பார்; அல்லது தமது சகோதர சந்யாசிகளுடனே வேடிக்கை விளையாட்டுகள் பேசி, விநோத சம்பாஷணை புரிந்து காலம் கழிப்பார். சில சமயங்களில் சுவாமிகள் வெகு உத்சாகத்துடன் பேசிக்கொண்டேயிருக்கும்பொழுது, சட்டென்று மௌனம் அடைந்துவிடுவார்; அவருடைய முகத்தைப் பார்த்தால் அவர் ஏதோ ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந்துவிட்டது போலத் தோன்றும். 'சுவாமிகள் ஏகாந்தத்தை நாடுகிறார்' என்று சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் மற்றவர்களும் உணர்ந்துகொண்டு, அவரைத் தனியே யிருக்கும்படி விட்டுவிட்டு, மெல்ல ஒருவர்பின் ஒருவராய்ப் போய்விடுவார்கள்.

சுவாமிகள் தமது ஜீவிதத்தில் கடைசி நிமிஷம் வரையில் தமது சிஷ்யர்களை எப்படி எப்படி பயிற்றுவித்தல் வேண்டுமோ அப்படியப்படி யெல்லாம் பயிற்றுவித்துக்

கொண்டிருந்தார்; சுவாமிகள் தமமுடைய சிஷ்யர்களுக்கு முக்கியமாகப் போதித்துவந்தனவும் வற்புறுத்திவந்தனவு மான விஷயங்கள் யாவையெனில், தன்னம்பிக்கை, ஒரு வேலையை ஆரம்பிக்கும் தன்மை, செய்கின்ற வேலையிலே பொறுப்பு வகித்தல், ஆகிய இவையேயாம்.

ஒரு சமயத்திலே, சுவாமிகளால் ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்த பத்திரிகைகளுள் ஒன்றின் காரியஸ்தர்கள் அப் பத்திரிகை சம்பந்தமாகப் பல சில்லரை விஷயங்களில் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு செய்தபொழுது, சுவாமிகள் அவர்களை மிகவும் கடோமாகக் கடிந்துகொண்டார்; ஆனால், "முக்கியமான விஷயங்களிலே அவர்கள் தம்மிடம் கட்டாயம் யோசித்துக்கொண்டுதான் காரியங்கள் செய்ய வேண்டும்" என்று கண்டிப்பான ஆக்ஞை யிட்டிருந்தார். இப்பொழுது சுவாமிகள் கண்டிக்கும்படி நேரிட்ட விஷயம் யாதெனில், அது பின் வருமாறு:— சுவாமிகளுடைய பிரிய சிஷ்யராகிய சாரதச் சந்திரச் சக்கரவர்த்தி ஸ்ரீ பகவத் கீதைக்கு ஒரு வியாக்கியானம் எழுதி அப் பத்திரிகைக்குப் பிரசுரிப்பதற்கு அனுப்பினர்; மஹா மஹோபாத்தியாயர் பண்டிதர் பிரமதநாத தர்க்க பூஷணர் என்பவரும் பகவத் கீதை ஸ்ரீ சங்கராசார்யார் எழுதியுள்ள வியாக்கியானத்தை வங்காளி பாஷையில் மொழி பெயர்த்து அதே பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார்; பத்திரிகையை நடத்தி வந்தவர்களுக்கு இந்தப் பிரதியைத்தான் பிரசுரிக்கலாமென்று தீர்மானிக்க முடியவில்லை. ஆதலால், பத்திரிகையைக்

சேர்ந்த இருவர் இவ்விரண்டு எழுத்துப் பிரதிகளையும் எடுத்துக்கொண்டு சுவாமிகளிடம் வந்தார்கள். சுவாமிகள் அவர்களுடைய உட்கருத்தை யறிந்துகொண்டு, "என்ன இது! மிகமிக அற்ப விஷயங்களுக்கெல்லாம் என்னிடம் வந்து என்னைத் தொந்தரை படுத்துகிறீர்கள்; நிவேதிதா சகோதரியைப் பாருங்கள்! அவள் என்னைச் சிறிதும் தொந்தரை செய்யாமல், தன்னுடைய சொந்த புத்தியை உபயோகித்து, காரியங்களை எவ்வளவு சமர்த்துடனே, எவ்வளவு நேர்த்தியாக நடத்திக்கொண்டு போகிறாள் பாருங்கள்! ஏன் நீங்களும் உங்களுடைய புத்தியை உபயோகித்துக் காரியங்களை நடத்திக்கொண்டு போகக் கூடாது? இதற்கெல்லாமா என்னிடம் வருவது?" என்று சொன்னார்.

ஆயினும், சுவாமிகள் அந்த எழுத்துப் பிரதிகள் இரண்டையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, "சம்ஸ்கிருத சுலோகங்களுக்குப் பதவுரையாக மொழி பெயர்க்க நமது பண்டிதர்களுக்குத் தெரியவில்லை" என்று கூறினார். இவ்விரண்டு எழுத்துப் பிரதிகளைப்பற்றியும் தம்முடைய அபிப்பிராயத்தை வெளியே கூறுமலே, சுவாமிகள் அவர்களை இவ் விஷயத்தில் யோசனை செய்துகொள்ளும்படிசொல்லி யனுப்பிவிட்டார். மஹா மஹோபாத்தியாயர், பண்டிதர் பிரமதநாத தர்க்க பூஷணரிடத்திலே "சுவாமிகள் இப்படிச் சொன்னார்" என்று கூறப்பட்டது; அவர் அதனால் மனம் சிறிதும் வருத்த முறுமல், தாம் கொடுத்திருந்த

எழுத்துப் பிரதியைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மறுபடியும் முதலிலிருந்து கடைசி வரையில் வெகு ஜாக்கிரதையாகத் திரும்பவும் எழுதினர். பின்னர்த்தான் அது பத்திரிகையில் பிரசுரிக்கப்படுதற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

சுவாமிகள் இந்த விஷயத்தில் காட்டிய தன்மையிலிருந்து, அந்தப் பத்திரிகையின் நிர்வாகஸ்தர்கள் "இனிமேல் சுவாமிகளை எதற்கும் தொந்தரவு செய்வதில்லை" என்று தீர்மானித்துவிட்டார்கள்; இத் தீர்மானத்தின்படியே நெடுங்காலம் நடந்தார்கள்; ஏதேனும் அவசரமாகச் சுவாமிகளுடைய அபிப்பிராயம் தெரியவேண்டுமென்றால், கடிதம் எழுதிக் கேட்டுக்கொள்வார்கள். இவ்விதமாக ஒரு தரம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி அவர்கள் சுவாமிகளுக்குக் கடித மூலமாக எழுதிக் கேட்டார்கள். அந்த விஷயம் மிகவும் முக்கியமானதாயும் மிகவும் அந்தரங்கமானதாயும் இருந்ததால், சுவாமிகளுக்குக் கோபம் வந்துவிட்டது; உடனே அவர்களைத் தம்மிடம் நேரே வந்து கேட்டுக்கொண்டு போகும்படி ஒரு கடிதம் எழுதியனுப்பிவிட்டார். பத்திரிகை நிர்வாகஸ்தர்களில் ஒருவர் வந்தார்; சுவாமிகள் அவரிடம் பேசியபொழுது, இன்ன காகிதம் உபயோகிப்பது என்பதுபற்றித் தம்மை அவர்கள் கேட்காமலிருந்ததைக் குறித்து தமது அதிருப்தியைத் தெரியப்படுத்தினர். சுவாமிகளுக்குத் தம்முடைய பத்திரிகைகளின் மதிப்புக் கெட்டுவிடக் கூடாதென்று

அதிலேயே கவனம் செலுத்துபவராயிருந்தார்; சுவாமிகள் தமது பத்திரிகைகள் தமது கொள்கைகளினின்றும் ஒருபொழுதும் தவறக்கூடாதென்று வெகு ஜாக்கிரதையாகக் கவனித்துவந்தார்.

ஒரு சமயத்திலே ஒரு பரிசுத்த புருஷர் நெருங்கிய புத்தியிலிருந்து சில விஷயங்களை—சமயச் சண்டையை உண்டுபண்ணும்படியான விஷயங்களை எழுதி இப் பத்திரிகைக்கு அனுப்பினர். வியாசகர்த்தாவினுடைய பெயர் பிரபலமானதினாலே, பத்திரிகாசிரியர் அந்த வியாசத்தைப் பிரசுரித்துவிட்டார்; சுவாமிகளுக்கு வந்த கோபத்துக்கு அளவே யில்லை.

இன்னொரு சமயத்திலே ஜனத்தலைவர்களுள் ஒருவர் இறந்துவிட்டார்; இவர் மிகவும் நல்லவராயிருந்தவர், ஜனங்களிடத்திலே மிகுந்த அநுதாப முள்ளவராயிருந்தவர்; பிரக்கியாதி பெற்றவர். இவர் இறந்தவுடனே, இவரைப்பற்றி அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்து நீண்டதோர்—மிகவும் நீண்டதோர் தலையங்கம் அப் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. சுவாமிகளுக்கு இது பொறுக்க முடியவில்லை. ஒருவரை யளவுக்கு மிஞ்சிப் புகழ்தலும், அவருக்கு இல்லாத குணங்களையு முண்டுபண்ணிச் சேர்த்து அவரை ஆகாசத்தி லேற்றிவைத்தலும் சுவாமிகளுக்குப் பிடிக்காது. அவர் உடனே அப் பத்திரிகையின் அதிபரை வரவழைத்து, அத்தகைய மூட வியாசத்தை எழுதியதற்காக மிகமிகக் கண்டித்தார்.

மற்ெருரு சந்தர்ப்பத்திலே அந்தப் பத்திரிகை ஆசார் சீர்திருத்தக் கக்ஷியாரின் பக்கல் அநுதாபம் காட்டி அவர்களுடைய மார்க்கங்களை மெச்சுவதுபோன்று எழுதியிருந்தது; சுவாமிகள் இப்பொழுதும் அப்பத்திராதிபரைக் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி, 'ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்பவருடைய மயக்கிலே அகப்பட்டுக்கொள்ளல்கூடாது' என்று எச்சரிக்கை செய்து அனுப்பினர்.

சுவாமிகளுடைய கண்கள் நாலாபக்கங்களிலும் சென்றுகொண்டிருக்கும். "மடத்திலே எல்லோரும் அவரவர்களுடைய கடமைகளைச் செய்து, தலைவருக்கு அடங்கி நடத்தல்வேண்டும்" என்பது சுவாமிகளுடைய கொள்கை. "எங்குப் பார்த்தாலும் சுத்தமாயிருக்க வேண்டும்" என்று சுவாமிகள் வற்புறுத்துவார். வேலைக்காரர்கள் வியாதியினாலோ மற்றோ மடத்தைப் பெருக்கத் தவறிவிட்டால், சுவாமிகள் தாமே கையில் விளக்குமாற்றை எடுத்துப் பெருக்குவார்; சகோதர சந்யாசிகளோ அல்லது சிஷ்யர்களோ பார்த்துவிட்டு, விளக்குமாற்றைக் கேட்டால், கொடுக்கமாட்டார்; அவர்கள் சுவாமிகளுடைய நோக்கத்தை யறிந்துகொள்வார்கள். அருகிலிருந்தவர்கள் "சுவாமி! நீங்களேன் பெருக்கவேண்டும்? எங்களிடம் சொல்லக்கூடாதா?" என்று கேட்டால், சுவாமிகள் "அதனாலென்ன? வீடு பெருக்கப்படாமல் குப்பையும் கூளமுமாயிருந்தால், சுகாதாரத்துக்கு விரோதமாய்விடும்;

பின்னர்ச் சந்யாசிகள் வியாதியினால் பீடிக்கப்படுவார்கள்'' என்று மறுமொழி கூறுவார்.

'அடிக்கடி படுக்கைகள் வெயிலில் உலர்த்தப்பட்டனவா?' என்று சோதனை செய்வார். சுவாமிகள் ஏதேனும் குற்றத்தைக் கண்டுவிட்டால், அவருடைய நிர்த்தாக்ஷிண்யமான கண்டனங்கள் மிகமிகக் கொடூரமாயிருக்கும். ஒரு தரம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவருடைய பூஜைக்குத் தீர்த்தம் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தது. சுவாமிகளுடைய 'செல்லப்' பிராணிகளுக்கெல்லாம் தலைமை வகித்துவந்த மடத்து நாயானது (பாகா) அந்தத் தண்ணீரை நக்கிவிட்டது; ''இந்தத் தீர்த்தத்தைக் கொண்டுவந்து வைத்தவருடைய கவனக் குறைவினாலே இப்படி நேரிட்டது'' என்று சுவாமிகள் அவர்மீது மிகவும் கோபித்துக்கொண்டார்.

சுவாமிகளுடைய அந்திய வருஷத்திலே ''அவர் மத்தியானம் ஒரு நேரத்திலேதான் வயிறு நிரம்பச் சம்பிரமமான போஜனம் உண்ணவேண்டும்'' என்றும், ''காலையிலும் மாலையிலும் லேசான ஆகாரமே உட்கொள்ள வேண்டும்'' என்றும் வற்புறுத்தினார். இதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவருடைய வழக்கம்; அவர் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தருளியதுவும் அப்படியே. ஆகையால், சந்யாசிகள் எல்லோரையும் ''இதை யநுஷ்டிக்கவேண்டும்'' என்று ஆக்ஞாபித்தார்.

வேதங்களையும் புராணங்களையும்பற்றிய பாடங்கள் ஒழுங்காக நடத்தப்படவேண்டும்'' என்பதிலே சுவாமி

கள் மஹா சமாதி படைவதற்குச் சின்னாட்களுக்கு முன்பு, சுவாமிகள் அப் பாடங்களிலே கேட்போருக்கு ருசிவிழும் பொருட்டு, இரண்டு சமயங்களில் தாமே பாடம் நடத்தினார். சுவாமிகள் பாடம் சொல்லிக்கொண்டிருந்த ஒரு சமயத்தில், "பிராஹ்மணங்களே புராணங்களுக்கு ஆதி" என்று கூறிவிட்டு, சுவாமி சுத்தாநந்தரை நோக்கி, கோபத பிராஹ்மணம் என்ற கிரந்தத்தை மடத்துப் புத்தகசாலையிலிருந்து கொண்டுவரச் சொல்லி, அவரையே வாசிக்கச் சொல்லி வியாக்கியானம் செய்யும்பொழுது உதவி செய்தார்.

இன்னும், "சந்யாசிகளுள் எவரும் பகற்போசனம் உண்ட பின்னர் இளைப்பாற லாகாது" என்றும், "உடனே புராணபாடம் ஆரம்பித்துவிடவேண்டும்" என்றும் வற்புறுத்தினார்.

எதிலும் அளவுக்கு மிஞ்சிப் போதல் சுவாமிகளுக்குப் பிடிக்காது. "தினசரி பூஜை விஷயத்திலே அநாவசியமாக அதிக நேரம் செலவழிக்கப்படுகிறது,' என்று சுவாமிகள் கண்டுகொண்டு, அதைக் கண்டித்தார்; "ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபதேசங்களை நன்றாய் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், கிரந்த பாராயணம், வேதாந்த சம்பாஷணை, தர்க்கங்கள், தியானம் இவற்றிலே அதிகநேரம் செலவழித்தல் வேண்டும்" என்று சுவாமிகள் கூறிவந்தார்.

'அநாவசியமாகச் சந்யாசிகள் பூஜை யென்ற பெயரை வைத்துக்கொண்டு நேரத்தை வீண் போக்குகிறார்கள்'

என்று தெரிந்து, அவர்களுக்குப் "பூஜைக்கு இவ்வளவு தான் நேரம்" என்று வரையறுத்துவிட்டார்.

குறித்த நேரத்திலே மணி யடிப்பார்; "எல்லோரும் அவரவர்கள் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும், அந்த வேலையை அப்படி யப்படியே போட்டுவிட்டு, ஒரு நிமிஷத்திலே ஓடி வந்து பாடத்துக்கு உட்கார்ந்துகொள்ள வேண்டும்" என்று ஏற்பாடு செய்திருந்தார். எவரேனும் இப்படி வரத் தவறிவிட்டால், அவருக்கு அன்றையதினம் சுவாமிகளுடைய கண்டனம் பலமாக விருக்கும். சில சமயங்களிலே இதனால் மடத்துக் காரியங்கள் ஒழுங்காய் நடைபெறா; பூஜையே பாதியில் நின்றுபோய்விடும். இதனால் சுவாமிகளுக்குக் கோபம் உண்டாய்விடும்; வெகு கடூரமாகக் கண்டிப்பார். ஆ! ஆ! சுவாமிகளுக்கு அவருடைய சிஷ்யர்களிடத்தும் சகோதர சந்யாசிகளிடத்தும் என்ன அன்பு! என்ன அன்பு! ஆனால், அவருடைய நிர்த்தாக்ஷிண்யமான கண்டனங்களோ என்ன கடூரம்! என்ன கடூரம்! சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்கும் சகோதர சந்யாசிகளுக்கும் அவரிடத்து இருந்த அன்புக்குத்தான் ஒரு அளவுண்டோ? ஆனால், அவர்களுக்கு அவரிடத்திலிருந்த பயத்துக்கும் ஒரு அளவே யில்லை. சுவாமிகள் வேலூர்மடத்திலே யிருந்தபொழுதெல்லாம், முக்கியமாக அவருடைய அந்திய காலத்தில் சில மாதங்களாய், சுவாமிகள் "நிஷ்டை மிகவும் அவசியமாம்; எல்லோரும் இதை அநுஷ்டிக்கவேண்டும்" என்று வற்புறுத்திக்கொண்டே

வந்தார். சுவாமிகள் மஹாசமாதி யடைவதற்கு மூன்று மாதங்கட்கு முன்னர் அவர் ஒரு விதி ஏற்படுத்தினார்; அதாவது, "அதிகாலையில் நான்கு மணிக்கு ஒருவர் எழுந்திருந்து ஒரு கை மணியை அடித்துக்கொண்டே அறைக்கு அறை சென்று எல்லாச் சந்நியாசிகளையும் எழுப்பவேண்டும்" என்றும், "அரைமணி நேரத்துக்குள்ளாக எல்லோரும் தியானாலயத்திலே நிஷ்டையிருத்தற்பொருட்டு வந்து கூடவேண்டும்" என்றும் ஆக்ஞாபித்தார்.

இதுபோலவே, பகவத்கீதை, பாகவதம், உபநிஷத்துக்கள், பிரஹ்ம சூத்ரங்கள் முதலியவற்றைப்பற்றிப் பாடங்கள் ஒழுங்காக நடந்தப்பட்டன. இன்னும் சுவாமிகள் தமது சிஷ்யர்களைக் கடுமையான தவம் புரியும்படிக்கும் ஊக்கிவந்தார். "மடத்தைச் சேர்ந்த சந்யாசிகள் கண்டிப்பாக இம்மாதிரிதான் நடக்கவேண்டும்" என்று ஏற்படுத்தியது மன்றியில், சுவாமிகள் 1898-ம் வருஷத்துத் துவக்கத்திலேயே, பின்னால் சந்யாசிகளுக்கு ஒரு வழி காட்டியாக இருக்கும்பொருட்டு அநேக விதிகளை எழுதிவைத்தார். இதிலே சுவாமிகள் தமது அபிப்பிராயங்களையும் அவற்றை வேலை செய்வதற்கு வேண்டிய வழிகளையும் ஒரு நிலைப்படுத்தி எழுதி, "மடத்துச் சந்யாசிகளுக்கு இவையே லக்ஷியமா யிருக்கவேண்டும்" என்றும், "இவற்றை யநுஷ்டானத்துக்குக் கொண்டுவருதலில் சந்யாசிகள் கண்ணும் கருத்தும் செலுத்தவேண்டும்" என்றும் வற்புறுத்தி வரைந்திருந்தார்.

சுவாமிகள் தமது சிஷ்யர்களை நோக்கி அடிக்கடி, "எந்த மடஸ்தாபனமும் வேலை செய்வதற்கு லக்ஷிய மொன்று இல்லாவிட்டால், அந்த மடத்தைச் சேர்ந்த சந்யாசிகள் கடுமையான விதிகட்கும் விரதங்கட்கும் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளாவிட்டால், அறிவையும் கல்வியையும் அபிவிருத்தி செய்யப் பெறுவிட்டால், மிகப் பரிசுத்தமாக நின்று தனது ஆதிபலத்தை வைத்துக் கொண்டிருக்க முடியாது." என்பார்.

இன்னும் "நானும் எனது சகோதர சந்யாசிகளும் எங்களுடைய குருமூர்த்தியின் காலத்திலும் அதற்குப் பின்னும் கடுமையான தவங்களும் சாதனங்களும் புரியாமல் இருந்திருந்தோமானல், எங்கள் முன்னே அந்தத் தெய்வீக ஜீவிதத்தை ஒரு திருஷ்டாந்தமாகவும் லக்ஷியமாகவும் வைத்துக்கொள்ளாம லிருந்தோமானல், நாங்கள் இப்பொழுது செய்துள்ளதைச் செய்திருக்க முடியாது என்பது திண்ணம்" என்பார்.

இவ்விதமாக, உண்ணுதல், ஓய்ந்திருந்தல், பூஜை, மடசம்பந்தமான கிருத்தியங்கள் முதலியவற்றிலே உதவி புரிதல், கிரந்த படனம், நிஷ்டை முதலிய சகலவற்றிலும் தினசரிக் கிரமமாக எல்லோரும் கட்டுப்பட்டிருந்தார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சருடைய கிருகஸ்த சிஷ்யர்களும் மடத்தைப் பார்க்க வருபவர்களும் கூட, இவர்களின் வருகையினல் மடத்திலே குறித்த காலத்திலே நடக்கவேண்டிய காரியங்கள் தடைப்பட்டுவிடாதிருக்

குப்பொருட்டு, கண்டிப்பாக அநுசரிக்கவேண்டிய சில விதிகள் ஏற்படுத்தப்பட்டன. சுவாமிகளுக்கு மடத்தின் கௌரவம் முக்கியமாயிருந்ததினாலே, அவர் தமது சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் தினசரி விதிகளை யநுசரிக்கும் விஷயத்திலே மிகக் கண்டிப்பாயும் கடுமையாயும் இருக்கும்படி நேர்ந்தது; இதனால் அநேகருக்குச் சுவாமிகளிடத்திலே கொஞ்சம் அதிருப்தி யுண்டாயிற்று. சுவாமிகள் அந்த அதிருப்தியை லக்ஷியம் செய்யவில்லை: அதிருப்தியடைந்தவர்கள் கூட அந்த அதிருப்தியை அநேக நாட்கள் வைத்திருந்ததில்லை.

இந் நாட்களிலே மடத்தைச் சேர்ந்த சந்யாசிகளும் பிரஹ்மச்சாரிகளும் கடுமையான தவம் புரிந்துகொண்டிருந்தார்கள்; எப்பொழுது பார்த்தாலும், மடத்திலெங்குப் பார்த்தாலும் நிஷ்டை செய்தவண்ணமாயிருப்பார்கள். தண்டகாரண்யம், நைமிசாரண்யம் முதலிய ஆரண்யங்களிலே மஹர்ஷிகள் தவம் செய்ததுபோல, இங்கே மடத்திலே எல்லோரும் தவங்கள் இயற்றுவதையும் நிஷ்டையிலிருப்பதையும் சுவாமிகள் பார்க்கவே, சுவாமிகளுக்கு ஒருவித மகிழ்ச்சி யுண்டாயிற்று. மடத்தைப்பார்க்கவருகிற தமது பழைய நண்பர்களையும் பிறரையும் பார்த்து, சுவாமிகள் "சாதுக்கள் இங்கே எப்படி யநுஷ்டானம் செய்கிறார்கள், பார்த்தீர்களா? அதுதான் சரி! காலையிலும் மாலையிலும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி கூறுவதுபோல, மனமானது பயிற்சியினாலே காலையிலும் மாலையிலும் இயற்கையாகவே மிகமிகச் சிரேஷ்டமான ஆத்மீக ஞானத்தை

யடைகிறது; ஏகாக்கிரப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சுலபமாகின்றது. மனிதன் ஏகாக்கிர கவனத்துடனே ஈச்வரனைத் தியானிக்க வேண்டும்.'' என்பார்.

சுவாமிகள் தமது உபதேசங்களை அநுஷ்டானத்திலே யநுபவ பூர்வமாகக் காண்பித்தார். இக் காலத்திலே அவர் சிறிது சுகமாயிருந்ததினாலே, எல்லோரும் காலையில் நிஷ்டையிலிருக்கும் சமயத்தில் சுவாமிகளும் அநேகமாக வந்து சேர்ந்துகொள்வார். சுவாமிகள் காலையில் 3 மணிக்கே எழுந்திருப்பது வழக்கம். தியான ஆலயத்திலே வடக்கு முகமாக நோக்கி சுவாமிகளுக்கென்று ஒரு ஆசனம் போடப்பட்டிருந்தது. சுவாமிகள் அங்கே மற்றவர்களுடனே அமைதியாய், சித்திரப் பதுமைபோலச் சலனமற்றவராய்ப் பத்மாசனத்திலே நிஷ்டாரூடராய் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். ''சுவாமிகள் நிஷ்டையினின்றும் விழித்து எழுந்திருக்கும் வரையில், மற்றவர்கள் எழுந்திருக்கக் கூடாது'' என்று விதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அநேகமாகச் சுவாமிகள் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாகவே நிஷ்டையி லிருந்துவிடுவார். பின்னர், சுவாமிகள், ''சிவ! ''சிவ!'' என்று சொல்லிக்கொண்டே கண் விழிப்பார்; அப்பொழுது அவருடைய முகத்திலே ஆயிரம் ஆதித்தர்கள் ஒன்று சேர்ந்து உதித்ததுபோல, தேஜஸ் ஜ்வலிக்கும், அப்போது சுவாமிகளின் முகத்தைப் பார்த்தவர்கள் பின்னர் அப்பொழுது அவர் பிரகாசித்த பிரகாசத்தை மறத்தல் முடியாது.

சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குத் தலை வணங்கிப் பணிந்துவிட்டு, மாடியினின்றும் கீழே யிறங்கி, அங்கும் இங்குமாக உலாவுவார்; அப்பொழுது ஏதேனும் ஜகன்மாதாவின் பேரிலாவது, அல்லது பரமசிவன்பேரிலாவது ஸ்தோத்திரங்கள் பாடுவார். அவருடைய கண்களிலே உபசாந்த ஒளி பிரகாசிக்கும்; உலகெலாம் ஒடுங்கி யொருவனேயாய் நிற்பதுபோலிருக்கும் அவருடைய முகம். அவருடைய கண்கள் பகுதி திறந்தனவாயிருக்கும். சுவாமிகள் நிஷ்டையில் உட்கார்ந்துவிட்டால், அந்த ஆகாயமானது அங்கிருந்த பிறருக்கும் ஆநந்த நிஷ்டை யளிக்கும்படியான அவ்வளவு பரிசுத்தமானதாயும் சிரேஷ்டமானதாயும் இருக்கும். சுவாமி பிரஹ்மாநந்தர் ஒருதரம் கூறியதாவது, "ஆ! ஒருவன் நரேந்திரனுடனே நிஷ்டையி லுட்கார்ந்துவிட்டால், உடனே தன்னை மறந்துவிடுகிறான். நான் தனியே உட்கார்ந்தால், இம்மாதிரி யுணர்கிறதில்லை."

இம்மாதிரி எல்லோரும் நிஷ்டையி லிருக்கும்படியான நேரங்களில் சுவாமிகள் எப்பொழுதும் கட்டாயமாக வருவா ரென்பதில்லை; அப்படிச் சுவாமிகள் வராவிட்டால், "அவர் எவரையாவது அன்று அவர் நிஷ்டை செய்யப்போயிருந்தாரா?" என்று கேட்பார். கேட்கப்பட்டவர் ஒழுங்காகத் தினந்தோறும் போகிறவராகவே யிருந்திருப்பார்; ஆனால், சுவாமிகள் கேட்ட அன்று அவர் போயிருந்திருக்கமாட்டார். இப்படியும் நேர்ந்துவிடும். ஒரு சமயத்திலே சுவாமிகள் அநேக நாட்கள் நிஷ்டை செய்யும் இடத்துக்குப் போகாமலே யிருந்துவிட்டார்; பின்னர் ஒரு நாள்

எல்லோரும் நிஷ்டை செய்துகொண்டிருக்க வேண்டிய சமயத்தில் சுவாமிகள் அந்தத் தியான ஆலயத்துக்குச் சென்றார். ஆனால், அன்று அங்கே இருவரே நிஷ்டையில் உட்கார்ந்திருந்தனர்; அப்படி நேர்ந்துவிட்டது. சுவாமிகளுக்குக் கோபம் வந்துவிட்டது. மாடியினின்றும் கீழே யிறங்கி வந்து, கூடத்தில் உட்கார்ந்துகொண்டு, எல்லோரையும் கூப்பிடும்படி ஆக்ஞை செய்தார்; அப்படியே ஒரு நொடியிலே எல்லாரும் வந்து சுவாமிகளின் முன்னே நின்றார்கள். அன்று அவர்கள் நிஷ்டை செய்யப் போகாததற்குக் காரணம் என்னவென்று கேட்டார்; அவர்கள் ஏதேதோ சொன்னார்கள்; சுவாமிகளுக்கு எவர்கள் சொன்ன முகாந்திரங்களும் திருப்திகரமாயில்லை; உடனே ஒரு கடுமையான தண்டனை விதித்துவிட்டார். "தியான ஆலயத்திலே நிஷ்டை செய்துகொண்டிருந்த இருவர், அச் சமயத்திலே வியாதியினாலே அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த இரண்டு அல்லது மூன்று பேர்கள், இவர்களுக்குத் தவிர, வேறெவருக்கும் அன்று மடத்திலே ஆகாரம் கிடையாது" என்று ஆக்ஞை செய்துவிட்டார். சுவாமிகள் அவர்களை நோக்கி, "நீங்கள் மாதுகரி பிக்ஷை யெடுக்கச் செல்லுங்கள்! இல்லையேல், எப்படியாவது ஊரிலே சென்று அரிசி, உப்பு, புளி, காய் கறி முதலியன பிச்சையேற்றுச் சம்பாதித்து இந்த மடத்து நிலத்திலே எங்கேனும் ஒரு மரத்தடியிலே சமைத்துச் சாப்பிடுங்கள்! கல்கத்தாவிலேயுள்ள உங்களுடைய நண்பர்களுடைய வீடுகட்குச் சென்றால், உங்களுக்குச் சம்பிரமமான விருந்து

கிடைக்கும், அது எனக்குத் தெரியும்: ஆனால், இன்று நீங்கள் அந்த நண்பர்களிடத்திற்குப் போகக்கூடாது'' என்று உத்தரவு செய்துவிட்டு, உக்கிராணதாரரைக் கூப்பிட்டு, ''இவர்களுக்கு இன்று சமையற் பாத்திரங்கள்கூடக் கொடுக்கக் கூடாது'' என்று ஆக்ஞாபித்துவிட்டார். ஆகையால், மடத்துச் சந்யாசிகள் அன்று தெருக்களிலே பிச்சை யேற்றுண்ணும்படி நேர்ந்துவிட்டது.

ஆனால், சுவாமிகளுக்கு மடத்திலே யிருக்கப் பிடிக்கவில்லை; சுவாமிகளுடைய ஹிருதயம் அன்பே வடிவானது. ஆதலால், சகோதர சந்யாசிகளையும் சிஷ்யர்களையும் இவ்வளவு நிர்த்தாக்ஷிண்யமாகப் பிச்சை யெடுக்க அனுப்பி விட்டதுபற்றிச் சுவாமிகள் மனந் தாளாமல், கல்கத்தாவுக்கு ஏதோ கார்யார்த்தமாகச் செல்பவர்போலப் போய் விட்டார்; மறுநாள் சுவாமிகள் திரும்பி வந்தார். பிச்சை யெடுக்கச் சென்ற சந்யாசிகளெல்லாம் தாங்கள் பிச்சை யெடுக்கும்படி சுவாமிகள் தங்களை யனுப்பிவிட்டது பற்றி வருந்தவில்லை; ''சுவாமிகளைக் காணவில்லையே; சுவாமிகள் எங்குச் சென்றாரோ?'' என்று விசனித்துக் கொண்டிருந்தார்கள். சுவாமிகள் திரும்பி வந்துவிட்டார். எல்லோரும் அவரைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு வணங்கினார்கள்; சுவாமிகள் அவர்களுடைய யோக க்ஷேமங்களை யெல்லாம் விசாரித்தார். சிலர், பிச்சை யெடுக்கச் சென்று பட்ட பாட்டையும், வேறு சிலர், அடைந்த கௌரவத்தையும் கேள்வியுற்றுச் சந்தோஷித்தார்; மடத்திலிருந்து

மூன்று மைல் தூரத்திலே யிருந்த சால்கியா என்ற ஊருக்குப் பிச்சை யெடுக்கச் சென்ற சந்யாசிகள் அவ்வூர் மார்வாடி வியாபாரிகளால் உபசரிக்கப்பட்டு, சம்பிரமமான பிக்ஷை யளிக்கப்பட்டதைக் கேட்டு அடங்கா மகிழ்ச்சி கொண்டார். சுவாமிகள் நேற்றைய தினம் கடிந்துகொண்டாரே என்ற ஞாபகம் சந்யாசிகளுள் எவருக்கும் இல்லை; சுவாமிகளுக்குக்கூட இந்த ஞாபகம் இல்லை. எல்லோரும் முன்போல ஆநந்த மூர்த்தியின் அற்புதப் புத்திரர்களா யிருந்தார்கள்.

இவ்விதமாக, சுவாமிகள் சந்யாசிக ளனைவருக்கும் தலைவராயிருந்தார், பிதாபோன் றிருந்தார். அதுவும், சுவாமிகளுக்கு அந்திய காலம் நெருங்க நெருங்க, சுவாமிகள் குழந்தை போன்று ஆய்விட்டார்; மஹா சாதுவாய், உத்தம சந்யாசி யென்பதற்குத் தாமே மாதிரி யென்பதை நிரூபித்தார். அவரைச் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் அவரிடத்து அடங்காத அன்பு செலுத்தினர்கள்; அம் மடத்திலேயுள்ள மிருகங்கள்கூட, அங்கே யிருந்த பக்ஷிகள் கூடச் சுவாமிகளிடம் பிரத்தியேக அன்பு செலுத்தின. சுவாமிகளுக்குத் தாம் உலகிலே பெருங்கார்யம் செய்துவிட்டோம் என்ற ஆறுதல் ஒன்று உண்டாய்விட்டது; அதனல் உடலம் பூரித்தார். சற்குருவினுடைய ஆக்ஞையைத் தாம் நிறைவேற்றிவிட்டதாக அவருடைய மனத்திலுள்ளே ஒரு திருப்தி யுண்டாயிற்று; தம்மைச் சூழ்ந்தவர்களுக்குச் சொல்ல வேண்டியவைகளை யெல்லாம்

சொல்லிவிட்டதாக ஒரு சந்தோஷம் அவருள்ளே கிளம் பிற்று. இப்பொழுது மடத்திலே, ஒளியே உருவெடுத்து வந்ததுபோல, சுவாமிகள் மடத்தில் சுகமே வசித்துவந் தார்; பூர்வகாலத்திலே புத்தர் தமது அந்திய நிமிஷம் வரையில் தமது சிஷ்யர்களுக்குப் போதித்துவந்தது போலவே, சுவாமிகளும் தம்மைச் சூழ்ந்தவர்களுக்கு அன்பு கசியும் மனத்துடனும் அநுதாப ஹிருதயத்துட னும் போதித்துவந்தார்.

நாட்கள் வெகு சீக்கிரம் செல்ல ஆரம்பித்துவிட்டன. சுவாமிகள் என்ன தன்மையை உடைத்தானவராயிருந்தா லும், சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ் யர்களுக்கும் அவருடைய சாந்நித்தியமே இடைவிடாத ஒரு பேரானந்தத்தைக் கொடுத்தது. சுவாமிகள் கோபக் குணத்திலிருந்தாலும் சரி, சுவாமிகள் கண்டித்தாலும் சரி, சுவாமிகள் நிஷ்பக்ஷபாதத் தன்மை வாய்ந்து ஈவிரக்கம் அற் றவர்போலக் காணப்பட்டாலும் சரி, சுவாமிகள் ஆசிரிய ஸ்தானத்திலிருந்தாலும் சரி, மஹாத்மா ஸ்தானத்திலிருந் தாலும் சரி, சுவாமிகள் களிமிகுந்தவரா யிருந்தாலும் சரி, அல்லது ஆழ்ந்த ஆலோசனையில் முகம் கடுத்தவரா யிருந்தாலும் சரி, சுவாமிகள் எப்படியிருந்தாலும்சரி, அவர் அவர்கட்கு அவர்களுடைய அன்பைக் கவர்ந்த "நரேந்திர" னேயாயிருந்தார்; சுவாமிகள் எப்படியிருந்தா லும் அவருடைய சிஷ்யர்கட்கு அவர் ஏற்றமும் இணையு மற்ற குருமூர்த்தியாகவே யிருந்தார். சுவாமிகளுடைய

அக்கால் வாழ்க்கையைப்பற்றி ஒரு பெரியார் பின் வருமாறு கூறுகின்றார்:—

"......அவர் தமது பெயரின்மீது வீசிப் பிரகாசித்த உலகம் பரந்த பெருமையை மௌனமாக அசட்டை செய்துவிட்டுக் கங்கா தீரத்திலுள்ள அமைதியான மடாலயத்தில், சில சமயங்களிலே குருஸ்தானத்தை வகித்தும், சிலசமயங்களிலே பிதாவினுடைய ஸ்தானத்தை வகித்தும், சில சமயங்களில் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ஸ்தானத்தை வகித்தும் கூட, ஆடம்பரமின்றி வசித்துவந்தார். மனுஷசிருஷ்டியே இப்பொழுது எங்கள் சிறப்புற்ற சுவாமியாருடைய லக்ஷியமாயிருந்தது. அவர் வேதங்களிலும் பாணினி இலக்கணத்திலும் பாடங்கள் நடத்தியதுமன்றி, காலையிலும மாலையிலும் சந்யாசிகளுடனே நிஷ்டையிலுட்கார்வார்; இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வரும் ஜனங்களை வரவேற்றார்..........அவரிடம் வந்தவர்களுடன் அவர் வைத்துக்கொண்ட சம்பந்தமானது மிகமிக இனிய தன்மையதாயிருந்தது. ஒவ்வொருவரிடத்தும் அவருக்கு இருந்த சர்வவியாபக அன்பானது உண்மையில் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாயிருந்தது. வந்தவர்களுக்கு அவர் தாழ்மையே உருவெடுத்துவந்ததுபோன்றிருந்தார். அவர் இந்தியாவிலே எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும் பொது ஜனங்களுடைய வீழ்ச்சியையும் துன்பத்தையும் கண்டு அழுகின்ற ஒரு ஹிருதயத்தின் மூலமாகவும், மனுஷ்யவர்க்கத்தினிடத்திலே வைத்த ஸ்வயநலமற்ற

அன்பாகிற அக்கினியினல் பிரகாசிக்கின்ற ஆத்மாவின் மூலமாகவும், களைப்பு என்றால் இன்னதென்றே தெரியாத தன் மறுப்புள்ள அவாவின் மூலமாகவும், உண்மையான தேசாபிமானத்தின் மூலமாகவும், ஈச்வராவேசம் கொண்ட ஒரு ஆத்மா மனுஷ்யவர்க்கத்துக்காக எப்படியுணர்ந்து வேலை செய்தது என்பதைத் தமது சிஷ்யர்களுக்கு நிரூபித்துக் காண்பித்தார். இடி யிடிக்காமலேயிருந்து உலகத்தைத் தண்ணீரினல் பிரவாகப் படுத்துகின்ற மாரிகாலத்து மேகம்போல, அவர் இப்பொழுது மௌனமாக வேலை செய்து, மனுஷ்ய சர்வ சகோதரத்வத்தை யுண்மையில் உணர்ந்து, அதிகமாகப் பேசாமல், சர்வ சகோதரத்துவம் என்று சொல்லிக்கொண்டு சிறு சிறு கக்ஷிகளை யுண்டுபண்ணமல், உண்மையான வேலை செய்பவரென்றும், ஆனல் அவருடைய செய்கைகள், சரீரம் முழுதும், அவருடைய நடை, உண்ணுதல், குடித்தல், அவருடைய வாழ்க்கை முழுதும் மனுஷ்யவர்க்கத்தினிடத்து உண்மையான சகோதரத்வத்தையும் எல்லோரிடத்தும் உண்மையான அன்பையும் அநுதாபத்தையும் வெளிப்படுத்தின என்றும் தமது சிஷ்யர்களுக்கு ருசுப்படுத்தினர். வேதாந்தத்தை போதிப்பதினலும், வேதாந்தத்திலேயே வசித்துச் சலிப்பதினலும், தாரான நோக்கத்துடன் கூடிய தர்மசிந்தையினலும், தமது ஜீவிதத்தின் சாதாரணத் தன்மையினலும், பரிசுத்தத் தன்மையினலும், தூய்மையினலும், விவேகாநந்த சுவாமிகள் தமது சிஷ்யர்கள், தம்மைப் பின்பற்றுபவர்கள், நண்பர்கள், தம்மை

மெச்சுபவர்கள், இவர்களுக்கு முன்னால், அன்று, இந்திய ஜனசமூகம் முழுதினுக்கும் முன்புகூட வேதாந்தத்தின் ஒளியின் மூலமாகவும் தன்மையின் மூலமாகவும் ஒழுக்கம் காட்டுதல் என்னும் லக்ஷியத்தை எடுத்து நிறுத்தித் தமது தாய் நாட்டின் பிற்கால நிலைமையைப்பற்றியுள்ள கேள்விக்கு விடை யிறுத்தார்.”

சுவாமிகளின் ஜீவிதத்தின் கடைசி இரண்டு (மே, ஜூன்) மாதங்களில் அற்புதமான அநேக சிறு விஷயங்கள் நடந்தன. இந் நாட்களிலே காரணமே யில்லாமல் பல சந்தர்ப்பங்களிலே ஆநந்தம் ஏற்பட்டிருக்கிறது; துக்கமும் உண்டாயிருக்கிறது. சுவாமிகளுக்கு மாத்திரம் தாம் மஹாசமாதி யடையப்போவதாக உள்ள ஒரு தோற்றம் அடிக்கடி தோன்றிக்கொண்டே யிருந்தது. அடிக்கடி சுவாமிகளுக்குத் தாம் பரம கைவல்ய பதம் அடைந்து விட்டதாக தோற்றம் ஏற்படும். மடத்திலிருந்த அனைவருக்குமே அதிதீவிரமான சாதனங்கள் பல செய்யவேண்டும் என்ற ஒரு ஆசை யுண்டாகிப் பெருகிற்று.

76-வது அத்தியாயம்
ஸ்வாமிகளுடைய மஹா சமாதி

சுவாமிகளுடைய இகலோக வாழ்வுக்கு முடிவு ஏற்படப் போகின்றது; சுவாமிகளுடைய சரீரம்—ஸ்தூல சரீரம்—அபாரமான கர்மயோக சக்தியினால் அடியுண்டு

உடைந்து கிடந்த தாகையினால், இப்பொழுது அது வெகு சீக்கிரத்தில் விழுந்துவிடப் போகின்றது, சுவாமிகளும் இவ் வுலகில் தாம் செய்யவேண்டிய கார்யத்தைச் செய்து முடித்துவிட்டாராகையினால், இனிமேல் இவ் வுலகினின்றும் நீங்கி, மறு உலகு செல்வதற்குக் காலம் வந்துவிட்டது. சுவாமிகளுடைய கடைசி நாட்கள் அத்தியாச்சர்யமான விஷயங்களை யடக்கிக்கொண்டிருக்கின்றன; சீக்கிரத்திலே நேரிடப்போகிற மஹாசமாதியை முன்னதாகவே விளக்கிக் காட்டுவன போன்று இருந்தன. ஆனால், அச் சமயத்தில் எவரும் அவ் விஷயங்களைப் பெரிதெனப் பாராட்டவில்லை; விசேஷமாகக் கருதவில்லை. எவரும் சுவாமிகள் தங்களை விட்டு இவ்வளவு சீக்கிரம் நீங்கிவிடுவாரென்று சற்றும் சந்தேகிக்கவில்லை. அக் காலத்திலே நடந்த சிறுசிறு விஷயங்கள் கூட, மிக அற்ப விஷயங்கள் கூட, அதிக ஆழ்ந்த அர்த்தங்களை யடக்கிக்கொண்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு ஆந்தரார்த்தம் பொதிந்து கிடந்தது.

சுவாமிகள் காசியிலிருந்து திரும்பி வந்தவுடனே தமது மடத்தைச் சேர்ந்த சந்யாசிகள் எல்லோரையும் பார்க்க விரும்பினார்; உடனே அவர்கள் எல்லோருக்கும் தமது விருப்பத்தைக் கடிதங்கள் மூலமாகத் தெரிவித்து, கொஞ்ச நாட்களுக்கேயாயினும் வந்துவிட்டுப் போகும்படி எழுதியனுப்பினார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள சந்யாசிகளுக்குச் சுவாமிகள் எழுதி, அவர்களை வரும்படி ஆக்ஞாபித்தார்; அப்படியே சிலர் வந்தார்கள்;

சிலர் அவரவர்கள் செய்து வந்த பரோபகார கைங்கர்யத்தைச் சட்டென்று விட்டுவிட்டுத் திடீரென்று வர முடியாதிருந்ததினாலே, கடைசியாகச் சுவாமிகளைத் தரிசிக்கும்படியான பாக்கியம் இவர்களுக்குக் கிடைக்காமற் போய்விட்டது. ஆனால், 'ஆ! சுவாமிகளைத் தரிசிப்பதற்கு இதுதான் கடைசியான சந்தர்ப்பம்' என்று இவர்களுக்குக் கொஞ்சமேனும் தெரிந்திருந்தால், இவர்கள் எல்லாவற்றையும் உதறி யெறிந்துவிட்டுச் சுவாமிகளிடம் ஓடி வந்திருப்பார்கள்!

சுவாமிகளுடைய அந்ய நாட்டுச் சிஷ்யர்களுள் முதன்மை பெற்றவராகிய நிவேதிதா சகோதரி இந்த விஷயத்தைப்பற்றி, "சுவாமிகள் கல்கத்தாவுக்குத் திரும்பி வந்தவுடனே உலகின் தூரபாகங்களிலிருந்து அவருடைய சிஷ்யர்களில் அநேகர் வந்து சுவாமிகளைச் சூழ்ந்து கொண்டார்கள். பார்வைக்கு அசௌக்கியமாக அவர் தோன்றியபோதிலும், எவ்வளவு சீக்கிரத்திலே முடிவு நெருங்கிவிட்டது என்பதைச் சந்தேகிப்பார் எவருமில்லை. ஆயினும், பாதி உலகத்தைச் சுற்றிக் கடல் யாத்திரை செய்து வந்து, அந்யோந்யம் பார்வைகள் நடந்து க்ஷேமசமாச்சாரங்கள் மாற்றப்பட்டன." என்று சொல்கிறார்.

சுவாமிகளுடைய ராஜஸ குணமானது அடங்க ஆரம்பித்துவிட்டது; எப்பொழுதும் ஏதாவது செய்துகொண்டிருக்கும்படி அவரைத் தூண்டிக்கொண்டிருந்த சுறு

சுறுப்புத் தன்மையானது அமர ஆரம்பித்துவிட்டது. ‘மடத்திலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும்பற்றிச் சுவாமிக ளே அதிக நுட்பமாய்க் கவனித்துவந்தார்’ என்று முன்ன மேயே கூறியிருக்கிறோம். இப்பொழுது சுவாமிகள் மடத்துக் கார்யங்கள் எதிலும் பற்றற்றவர் போல இருந்து விட்டார்; அவற்றை அவருடைய சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் தாராளமாகச் சர்வசுதந்திரத்துடன் செய்யும் படி விட்டுவிட்டார். “தலைவன் என்று சொல்லப்படுகிற வன் எப்பொழுதும் சிஷ்யர்களுடனேயே யிருந்து அவர் களை அநேகமாகக் கெடுத்துவிடுகிறான். மனிதர்கள் ஒரு தரம் பயிற்றுவிக்கப்பட்டால், அவர்களுடைய தலைவர் அவர்களை விட்டுவிட வேண்டியது அவசியம். ஏனென்றால், அந்தத் தலைவர் இல்லாத சமயத்தில்தான் அவர்கள் அபி விருத்தி யடைவார்கள்” என்று சுவாமிகள் சொல்வார். ஆனால், சுவாமிகள் இப்படிச் சொன்னால், அங்கு இருந்த வர்களுக்கெல்லாருக்கும், முக்கியமாய் அவரை உயிருக்கு உயிராய் மதித்து அன்பு செலுத்திக்கொண்டிருந்தவர்க ளுக்கு அளவற்ற மனவருத்தம் உண்டாகும். “சுவாமிகள் போய்விட்டால், அவருடைய உலகோத்தாரண முயற்சி நடக்குமோ” என்று அவர்கள் பயந்தார்கள்; சுவாமிகள் போய்விட்டால், தங்களுக்கு ஆதரவு இல்லையே யென்று விசனித்தார்கள். “உலகை வெறுத்தோம்; உற்றார் உற வின் முறையார் முதலியோரை வெறுத்தோம்; சர்வசங்க பரித்தியாகஞ் செய்தோம். ஐச்வர்யத்தையும் அதிகாரத் தையும் திரணமாக நினைத்தோம். நாம் இப்படிச் செய்தது

எல்லாம் நமது சுவாமிகளின் பலத்தினாலல்லவா? ஸ்வாமிகள் போய்விட்டால் என் செய்வோம்? பின்னர் நம்மை யாதரிப்பவர் எவர் இருக்கின்றனர்? நமக்காகப் பரிந்து பேசுபவர் எவர் இருக்கின்றனர்?'' என்று ஏங்கினார்கள்.

ஆனால், சுவாமிகளோ பெரும்பான்மையும் பிரஹ்ம நிஷ்டையிலேயே அமர்ந்திருக்க ஆரம்பித்தார்; 'உபசாந்தியடைய வேண்டும்' என்ற எண்ணம் அதிகரித்தது. சமஸ்த சலனங்களினின்றும் நீங்கி, சாந்த பதவி யெய்துவதிலேயே சுவாமிகள் கண்ணும் கருத்துமா யிருந்தார். சுவாமிகள் செய்துவந்த அபாரமான வேலையும் மற்றப் பந்தங்களும் தாமே அவரை விட்டு விலக ஆரம்பித்துவிட்டன. ஆனால், சுவாமிகள் எவ்வளவுதான் உலக சிந்தனை யற்றவராய்க் கொண்டு வந்தபோதிலும், தாம் ஆரம்பித்துவிட்டிருக்கும் அபாரமான முயற்சி பின்னடைந்து விடுமோ? என்று அடிக்கடி கவலை யுறாமலில்லை. ஆனால், சுவாமிகளோ மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, சகல வியாபாரங்களிலிருந்தும் ஒதுங்கி சாக்ஷாத்கார நிலையை நாடினார். சுவாமிகள் சர்வமௌன சாந்த சாக்ஷாத்கார அநுபூதியை நாடுவதிலேயே கருததைச் செலுத்தினார்.

சுவாமிகளுடைய மனமானது முக்கியமாக நாடியது மூன்று வஸ்துக்களை: (1) அவருடைய சற்குரு மூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர், (2) ஜகன்மாதாவாகிய மஹாசக்தி, (3) இந்திய ஜனசமூகத்தை உயர்த்துவதற்காக அவர் ஆரம்பித்திருந்த வேலை. இம் மூன்றுதான் சுவாமிக

ளுடைய மனத்தில் இடை விடாமல் எப்பொழுதும் பதிந்து கிடந்தன. ஆனால், சுவாமிகள் மூன்றாவதாக மேலே கூறப்பட்டுள்ள பரோபகார கைங்கர்யத்தை அடியோடு மறந்துவிடத் துணிந்து, வெகு பாடுபட்டு எத்தனித்தார். உலகில் ஒன்றும் அவருடைய மனத்துக்குப் பாத்திரமாக வில்லை. மானசிக தபஸ் ஒன்றே அவருடைய மனத்தை அல்லும் பகலும் அறுபது நாழிகையும் கவர்ந்து நின்றது. சுவாமிகள் இவ்வளவு பற்றற்று, எல்லாவற்றையும் உதறி விடுவதைக் கண்ட அவருடைய சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் மேன்மேலும் கவலையுறலானார்கள். "சுவாமிகளுக்கு எந்த நிமிஷத்திலே தாம் யார் என்றும், மற்றும் தெரிந்து விடுகிறதோ, அந்த நிமிஷத்திலேயே சுவாமிகள் ஸ்தூல சரீரத்தைப் போட்டுவிட்டுப் போய்விடுவார்' என்று சற்குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் முதலிலேயே கூறியிருந்தாரே; இப்பொழுது ஒரு வேளை சுவாமிகள் தம்மை யறிந்துகொண்டு, இகலோகத்தை நீத்துவிடுதற்கு ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கிறாரோ" என்று சுவாமிகளுடைய நண்பர்கள் சந்தேகம் கொண்டு மனம் கலங்கினார்கள். சுவாமிகள் மஹா சமாதி யடைவதற்குச் சின்னாட்களுக்கு முன்னால், சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகள் ஒருநாள் சுவாமிகளுடனே வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தபொழுது, ஒருவர் சுவாமிகளை நோக்கி, "சுவாமி, தாங்கள் இன்னாரென்று இப்பொழுது தங்களுக்குத் தெரிந்துவிட்டதா?" என்று கேட்கத் துணிந்துவிட்டார்.

சுவாமிகள் மறுமொழி கூறுவதற்கு ஒரு விநாடி நேரமேனும் தாமதியாமல், "ஆம், எனக்கு இப்பொழுது தெரியும்" என்றார்.

சகோதர சந்யாசிகள் திடுக்கிட்டுவிட்டார்கள். அதற்கு மேல் ஒன்றும் கேட்பதற்கு அவர்களுக்கு வாய் எழவில்லை. இப்பொழுது இதற்குமேல், ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் சுவாமிகளின் அந்தியத்தைக் குறித்துக் கூறியது அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து, அவர்களுடைய மனங்களைக் கலக்கிக்கொண்டிருந்தது.

இந்நாட்களிலே சுவாமிகள்செய்தஒவ்வொன்றும் ஆழ்ந்த பொருளை யடக்கிக்கொண் டிருந்தனபோன் றிருந்தன; ஆச்சர்யமா யிருந்தன; அவருடைய அந்திய காலத்துக்கு அறிகுறியாகவே யிருந்தன. ஆனால், எவரும் அவற்றைக் கவனித்து உணர்ந்துகொள்ளவில்லை; எவரும் அவற்றை ஆய்ந்து பார்த்து அறிந்துகொள்ளவில்லை. சுவாமிகளும் ஜுன்மீ த்து ஆரம்பம் முதல் இதற்கு முன் சமீபத்தில் இரண்டு வருஷங்கட்குள்ளாக எந்நாளும் இவ்வளவு சரீர சுகத்துடன் இருந்ததேயில்லை யென்று சொல்லும்படி அவ்வளவு சரீர சுகமுடையவராயிருந்தார்; எப்பொழுதும் உற்சாக பூரிதராயிருந்தார். இதனால் சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்களும் இப்பொழுது அவருடைய வார்த்தைகளினுடையவும் செய்கைகளினுடையவும் ஆந்தரார்த்தத்தைக் கவனிப்பதற்கு மனத்தைச் செலுத்தாது, ஏமாந்துபோய்விட்டார்கள். சுவாமிகள் மஹாசமாதி

யடைவதற்கு முன் ஒருநாள் தமது சிஷ்யராகிய சுவாமி சுத்தாநந்தரைக் கூப்பிட்டு, வங்காளி பஞ்சாங்கத்தை யெடுத்துக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். அவர் அப்படியே கொண்டுவந்து கொடுக்கவே, சுவாமிகள் அன்றைய தினத்தைப்பற்றிக் குறிப்பு எழுதியிருந்த பக்கத்திலிருந்து ஒவ்வொரு பக்கமாக அநேக பக்கங்கள் திருப்பிப் பார்த்தார்; தவிர, அந்தப் பஞ்சாங்கத்தைத் தமது அறையிலேயே வைத்துக்கொண்டார். பின் இரண்டு மூன்று நாட்கள் கூட அவர் அடிக்கடி அப் பஞ்சாங்கத்தை யெடுத்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். சுவாமிகள் பஞ்சாங்கத்தை யெடுத்துப் புரட்டிப் புரட்டி அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தது இன்னதுக் என்று எவருக்கும் அப்போது தோன்றவில்லை. சுவாமிகள் மஹா சமாதியடைந்த பின்னர் தான், சுவாமிகள் பஞ்சாங்கத்தை யெடுத்து அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தது இன்னதுக்கு என்று தெரியவந்தது. சுவாமிகள் 'என்று இந்நாற்றச் சரீரத்தை விட்டுப் பிரிந்துவிடலாம்' என்று கருதி, அதற்காக நல்ல நாளாக ஒரு நாள் தேடிப் பார்த்துக்கொண்டிருந்தார். ஜுலை 4-ம் தேதி அவருக்கு நல்ல நாளாகப் பட்டது போலும்!

சுவாமிகளுடைய குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் இதே மாதிரியாகத் தமது அந்திய காலத்திலே வங்காளிப் பஞ்சாங்கத்தை யெடுத்து அதிலிருந்து தினசரிக் குறிப்பை வாசிக்கும்படி ஒரு சிஷ்யருக்கு ஆக்ஞை செய்தார். அப்படியே அந்தச் சிஷ்யர் பக்கம் பக்க

மாக வாசித்துக்கொண்டு ஒவ்வொரு நாளாகத் தள்ளிவர, கடைசியில் ஆகஸ்டுமீ 16-ம் தேதிக்குச் சரியான வங்காளி தேதி வரவே, ஸ்ரீ பரமஹம்சர் அந்தத் தேதியைப் பற்றிய குறிப்பை வெகு ஜாக்கிரதையாக முழுதும் கேட்டுவிட்டு, மெல்ல, "போதும்! போதும்!" என்றார். அப்பொழுதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மனத்தில் கொண்டிருந்த கருத்து இன்னதென்று அவருடைய சிஷ்யர்களுக்குத் தெரியாது. பெரும்பாலும் மஹான்கள் இம்மாதிரியே தங்களுடைய அந்திய காலத்தைத் தாங்களே தெரிந்துகொண்டு, தங்களுக்கு இஷ்டமான நாளாக விசேஷ தினம் ஒன்று தெரிந்தெடுத்து அன்றையதினம் தங்கள் ஸ்தூல சரீரத்தை யெறிந்துவிட்டுப் பரமபதம் அடைந்துவிடுகிறார்கள். இது இந்தத் தேசத்தில் மாத்திரம் அன்று, இந்தக் காலத்தில் மாத்திரம் அன்று; எல்லாத் தேசங்களிலும் சகஜமாயிருந்து—மஹான்கள் விஷயத்தில் சாதாரணமாய்—இருந்து வருகிறது.

சுவாமிகள் மஹாசமாதி யடைவதற்கு மூன்று நாட்களுக்கு முந்தி யொருநாள் மத்தியானம் அவர் மடத்திலேயுள்ள ஒருவருடன் சேர்ந்து மடத்தைச் சேர்ந்த மைதானத்திலே உலாவிக்கொண்டிருந்தபொழுது, சுவாமிகள் கங்காதீரத்திலே ஒரு இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டி, தம்முடன் இருந்தவரை நோக்கி, "நான் இந்த ஸ்தூல சரீரத்தை உதறி விடும்பொழுது, அதை அந்த இடத்திலே வைத்துத் தகியுங்கள்!" என்றார். அப்பொழுதும், சுவாமிக

ளுடைய அந்திய காலம் நெருங்கிவிட்டதென்று எவரா லும் அறிந்துகொள்ள முடியவில்லை.

சுவாமிகள் சுமார் 5 வருஷங்கட்கு முன் பேரிப்லி என்னும் நகரில், அதாவது, 1897-ம் வருஷம் ஆகஸ்டு மீ 10-ம் தேதி சுவாமி அச்சுதாநந்தரிடத்தில் பேசிக்கொண் டிருந்தபொழுது, "நான் இன்னும் 5 அல்லது 6 வருஷங் கள்தான் இவ் வுலகில் இருப்பேன்" என்று சொல்லி யிருந்தார். அந்தச் சுவாமி அச்சுதாநந்தர் இந்த வார்த்தைக ளைக் கவனிக்கவில்லை. 1901-ம் வருஷத்திலே டாக்காவி லிருந்தபொழுது சுவாமிகள் ஒருநாள் திடீரென்று தம் முடைய சிஷ்யர் குழாத்தை நோக்கி, "நான் அதிகமாய்ப் போனால் இன்னும் ஒரு வருஷம் தான் இருப்பேன்! எனது தாயார் பரிசுத்த க்ஷேத்திரங்களைத் தரிசிக்க விரும்புகிறாள். நான் அவளைக் கூட இட்டுக்கொண்டு, அவ்விடங்கட்குக் கூட்டிப் போவது எனது கடமையாகும். ஆகையால், நான் சந்திரநாதம், காமாக்ஷிபம் இந்த க்ஷேத்திரங்கட்கு அவளை யிட்டுக்கொண்டு போகப் போகிறேன். என் னுடன் வருபவர்கள் ஸ்திரீகளிடத்தில் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். என்னுடன் வருவதற்கு உங்க ளில் எவருக்குப் பிரியம் இருக்கிறது?" என்றார். அப் பொழுதும் எவரும் சுவாமிகளுடைய மொழிகளை லக்ஷி யம் செய்யவில்லை.

ஜூன் மாதம் முடிந்தது; சுவாமிகளும் தாம் இவ் வுலகை விட்டுப் போகும் காலம் வந்துவிட்டது என்பதை

யறிந்துகொண்டார். சுவாமிகள் மஹா சமாதி யடைந்த தற்கு முந்திய புதன்கிழமை யன்று, அவர் தம்முடன் கூட இருந்த ஒருவரை நோக்கி, "நான் மரிப்பதற்குத் தயாராய்க்கொண்டிருக்கிறேன்! நான் ஒரு பெருந் தபஸை யும் தியானத்தையும் அடைந்திருக்கிறேன்!"

இக் காலத்திலே சுவாமிகளுக்கு உலக சமாச்சாரங்க ளிலே ருசி யில்லாது போய்விட்டது. இந்தியப் பொது ஜனங்களுடைய வறுமையைக் குறித்து இரவும் பகலுந் துடித்து இரத்தக்கண்ணீர் சொரிந்துகொண்டிருந்த சுவாமி கள் இப்பொழுது 'எங்கும் மழை யில்லாது ஜனங்கள் தவிக்கிறார்கள்' என்று கேட்டும், சொப்பனத்தில் கேட்பது போலச் சும்மாயிருந்துவிட ஆரம்பித்துவிட்டார். பொது விஷயங்களைப்பற்றி அவரைக் கேள்வி கேட்பதில் பயன் இல்லையென்றாய்விட்டது. இத்தகைய கேள்விகளை எவ ரேனும் கேட்டால், சுவாமிகள் "நீ சொல்வது சரியா யிருக்கலாம்; ஆனால், நான் இம் மாதிரி விஷயங்களிலே இனிமேல் நுழைய முடியாது. நான் மரணத்துக்குள்ளே போய்க்கொண்டிருக்கிறேன்." என்று மறுமொழி கூறி விடுவார்.

சுவாமிகள் மஹாசமாதி யடைந்ததற்கு முந்திய புதன் கிழமை யன்று ஏகாதசியாயிருந்தது. அன்று முழுதும் சுவாமிகள் சுத்த உபவாசமா யிருந்தார். மறுநாள் துவா தசி பாரணையாயிருந்தது. அன்று அதிகாலையில் சுவாமிக

ளே தமது சிஷ்யர் ஒருவருக்குப் போஜனம் பரிமாறி னர்; அப்பொழுது சுவாமிகள் வேடிக்கைப் பேச்சுக்கள் மிகப் பேசிக்கொண்டிருந்தார்; கடைசியாகப் போஜனம் முடிந்த பின்னர், சுவாமிகள் அந்தச் சிஷ்யருடைய கை களில் ஜலம் விட்டுக் கழுவி, ஒரு கைக் குட்டை யெடுத்து அவற்றைத் துடைத்துவிட்டார். அந்தச் சிஷ்யர் சுவாமி களை நோக்கி, "சுவாமி! நானல்லவா இத்தகைய விஷயங்க ளைத் தங்களுக்குச் செய்யவேண்டும்! எனக்கு நீங்களா செய்கிறது?" என்றார்.

ஆனால், சுவாமிகளுக்கா மறுமொழி சொல்லத் தெரி யாது? "இயேசுகிறிஸ்து தமது சிஷ்யர்களுடைய பாதங்க ளைக் கழுவினார்!" என்றார் சுவாமிகள்.

"ஆனால், அதுதான் கடைசித் தடவை" என்று அந்தச் சிஷ்யர் மறுமொழி சொல்ல வா யெடுத்தார். ஆனால், துணியவில்லை. ஏனென்றால், ஒருவேளை இது தானே சுவாமிகளுக்கும் கடைசி தடவையோ? என் னவோ?

இந் நாட்களிலே, சுவாமிகள் சற்றும் விசனமுள்ளவ ராகவாவது, கவலை யுற்றவராகவாவது காணப்படவில்லை. ஆனால், அவருடைய முகத்திலே ஒரு பேரொளி பிரகா சித்துக்கொண்டிருந்தது. இதற்கு முன்னர், அவர் சென்ற பத்து வருஷங்களாக இவ்வளவு சுகமாயும் ஆரோக்கிய மாயும் பல முள்ளவராயும் இருந்தார்,

சுவாமிகள் மஹாசமாதியடைந்த அன்று அவர் செய்த கார்யம் எல்லாம் வேண்டுமென்றே செய்தனபோல இருந்தன. அன்று காலையில் சுவாமிகள் வெகு சீக்கிரமாக எழுந்து ஸ்நாநம் முதலியன செய்து, கிரந்த பாராயணம் முடித்து, தமது சகோதர சந்யாசிகளுடனும் சிஷ்யர்களுடனும் மெதுவாகச் சம்பாஷணை செய்துகொண்டிருந்தார்; பின்னர், கொஞ்சம் தேயிலைப் பானம் செய்துவிட்டு, சுவாமிகள் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ண ஆலயத்துக்குள்ளே சென்றார்; திடீரென்று ஜன்னல் கதவுகளையும், வாசல் கதவுகளையும் தாளிட்டுக்கொண்டார். காலையில் எட்டு மணிக்கு உள்ளேபோய்க் கதவுகளைச் சாத்திக்கொண்டார்; பதினொரு மணிக்குத்தான் கதவு திறக்கப்பட்டது. அவ்வறையினுள்ளே அவர் என்ன செய்தாரென்பது எவருக்கும் தெரியாது. ஆனால், அவர் நிர்விகற்ப நிஷ்டையி லிருந்தாரென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம்; மஹாசக்தியாம் ஜகன்மாதாவையும் அவருடைய குருமூர்த்தி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரையும் தான் அவர் அப்பொழுது தியானம் செய்துகொண்டிருந்திருப்பார். ஏனென்றால், அவர் தியானம் முடிந்து மஹா சமாதியினின்றும் வெளிப்பட்டபோது, அவருடைய முகத்திலே ஆநந்தம் ததும்பிற்று; அவர் அகண்டசைதந்ய வஸ்துவுடன் ஐக்கிய முற்றவர்போலத் தோன்றினார்; அவருடைய மனம் பகிர்முகப்பட்டு, பிரபஞ்சத் தன்மை பெற்று வெளியே வந்தவுடனே, மிகமிக உத்கிருஷ்ட ஞானமும், மிகமிகச் சிரேஷ்டமான பக்தியும் கலந்து

புகழப்பட்டுள்ள பாடல்கள் பலவற்றைப் பாட ஆரம்பித்தார்.

சுவாமிகள் இதற்கு முன்னால் இம்மாதிரி யொருபொழுதும் நிஷ்டையி லிருந்ததில்லை. இன்னும் ஒரு விசேஷம்; சுவாமிகள் இதற்கு முன்னால் ஒருபொழுதும் இப்படி மூடின கதவுகளுக்குள் நிஷ்டை யிருந்ததில்லை; சுவாமிகள் நிஷ்டையிலிருந்தால், நாலாபக்கமும் காற்று நன்றாக வீசிக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அம்முறைதான் சுவாமிகள் கதவுகளை யடைத்துக்கொண்டு, மூன்று மணி நேரம் நிஷ்டையி லாழ்ந்திருந்தார். தாம் அன்று மஹாசமாதி யடையப்போவதை முன்னாலேயே அறிந்து கொண்டவராய், அகண்ட சக்தியினிடத்திலே ஐக்கிய மடையத் தயாரானார்.

பின்னர் சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆலயத்திலிருந்து வெளியே போந்து, கீழே யிறங்கி வந்து, மடத்தைச் சேர்ந்த பெரிய முற்றத்திலே அங்கு மிங்குமாக உலாவிக்கொண்டிருந்தார்; அப்பொழுது அவருடைய தோற்றமே மாறுபட்டு இருந்தது; ஒரு திவ்ய ஒளி அவரைச் சுற்றி வீசிற்று. அவர் உலாவிக்கொண்டிருந்த பொழுது, அவருடைய மனமானது உள்முகமாகவே சென்றுகொண்டிருந்தது. திடீரென்று அவர் தமக்குத் தாமே பேச ஆரம்பித்தார்; பக்கத்திலே சுவாமி பிரேமானந்தர் சுவாமிகளுடைய தனிப்பேச்சை யுற்றுக் கேட்டார்; சுவாமி பிரேமானந்தர் மடத்துத் தாழ்வாரத்திலே நின்று

கொண்டிருந்ததைச் சுவாமிகள் கவனிக்கவேயில்லை. சுவாமிகள் 'இன்னொரு விவேகாநந்தர் இருந்தால், விவேகாநந்தர் இன்னது செய்துள்ளார் என்பதை அவர் அறிந்திருப்பார்! ஆயினும், எத்தனை விவேகாநந்தர் தகுந்த காலத்திலே பிறப்பார்கள்!'' என்று தமக்குத் தாமே பேசிக்கொண்டிருந்தார். சுவாமி பிரேமாநந்தர் இதைக் கேட்டார்; ஆச்சர்ய மடைந்தார்; திடுக்கிட்டார். சுவாமிகள் உயர்ந்த நிலையை யடைந்து உந்நத பதவியைப் பெற்றிருந்த பொழுதுதான் அப்படிப் பேசியிருக்கக் கூடும்.

இன்னொரு விசேஷமும் நடந்தது. சுவாமிகள் இது வரையில் ஒருநாளும் தமது சகோதர சந்யாசிகளுடனும் சிஷ்யர்களுடனும் சேர்ந்து ஒரு பந்தியில் உட்கார்ந்து போஜனம் உண்டதில்லை. ஆனால், சுவாமிகள் தமது வாழ்க்கையின் கடைசி நாளாகிய அன்றையத்தினம் சமையலறையிலேயே அவர்களெல்லோருடனும் உட்கார்ந்து கொண்டு போஜனம் உண்டார்; இன்னும் ஒரு விசேஷம், சுவாமிகள் சமையலில், பதார்த்தங்கள் பக்குவம் செய்வதிலே அதி சமர்த்தராயினும், ருசி பார்த்து உண்பதிலே பிரியமுடையவரல்லர். அன்றோ, அவர் உண்ட ஒவ்வொரு பக்குவத்திலும் ருசியைச் சுவைத்துக்கொண்டே சாப்பிட்டார். இதற்கு முன் ஒருநாளும் இவ்வளவு சுகமாக இருந்ததில்லையென்று சுவாமிகளே கூறினர்.

சுவாமிகள் மஹாசமாதியடைந்தது 1902-ம் வருஷம் ஜுலை 4-ம் தேதி வெள்ளிக்கிழமை. அந்த வெள்ளிக்

கிழமை காலையிலே சுவாமிகளுக்கு ஒரு இச்சை யுண்டா யிற்று. மறுநாள் சனிக்கிழமை; தவிர, அமாவாசை. சனிக் கிழமையும் அமாவாசையும் கூடிய தினம் சுதினமாகை யால், அன்று காளி பூசை பண்ணுதற்கு ஏற்றதினமென்று சுவாமிகளுக்குத் தோன்றிற்று. சுவாமிகள் இந்த விருப் பத்தைத் தமது சகோதர சந்யாசிகளிடமும் சிஷ்யர்களிட மும் வெளியிட்டார். இவ்விதமாகச் சுவாமிகள் பேசிக் கொண்டிருக்கையிலேயே, மகா காளியினுடைய பக்த சிரேஷ்டர்களிலே யொருவரும் சுவாமி ராமகிருஷ்ணாநந்த ருடைய பிதாவுமான பட்டாச்சார்ய மஹாஷயர் வந்து சேர்ந் தார். சுவாமிகளுக்கு அவரைப் பார்த்தவுடனே ஒரு குது கலம் உண்டாயிற்று; அவர் "இதோ பட்டாச்சார்ய மஹா ஷயரும் வந்துவிட்டார்" என்று சந்தோஷக் கூச்சலிட் டார். சுவாமிகள் அவரிடத்திலே தமது கருத்தைத் தெரி வித்தது மன்றியில், சுவாமி சுத்தாநந்தரையும் சுவாமி போதாநந்தரையும் நோக்கி மறுநாள் காளி பூஜைக்கு வேண்டிய சாமக்கிரியைகளை யெல்லாம் தயார் செய்யும் படி ஆக்ஞாபித்தார்; அவர்களும் அப்படியே வெகு வேக மாகத் தயார் செய்பலானார்கள்.

சுவாமிகள் பின்னர் சுவாமி சுத்தாநந்தரை நோக்கி, புத்தகசாலையிலிருந்து சுக்லயஜுர்வேத கிரந்தத்தை யெடுத்துக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். சுவாமி சுத்தாநந்தர் இந்தக் கிரந்தத்தைக் கொண்டு வந்தவுடனே, சுஷும்ந சூர்யரச்மி என்ற பதங்களுடன் ஆரம்பிக்கின்ற

மந்திரத்தையும் அதன் வியாக்கியானத்தையும் அதன் பாஷ்யார்த்தத்தையும் எடுத்து வாசிக்க, சுவாமிகள் கொஞ்சம் கேட்டுவிட்டு, "இந்தச் சுலோகத்துக்கு இந்தப் பொருள் சரியென்று எனக்குப் பிடிபடவில்லை. வியாக்கியான கர்த்தாக்கள் தங்களுக்குத் தோன்றிய பொருள்களையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள்; உண்மைப் பொருளை ஒளித்துவிட்டார்கள். எனது சிஷ்யர்களாகிற நீங்கள் இந்தச் சுலோகங்களின் உண்மைப் பொருளைக் கண்டு ஆராய்ந்து கொள்ளவேண்டும். சாஸ்திரங்களுக்கு உங்களுடைய மூளைகளை உபயோகித்து நீங்களே நூதன வியாக்கியானங்கள் செய்யவேண்டும்" என்றார்.

'மந்திரார்த்தத்தை நன்றாக ஆராயவேண்டும்' என்று அவர் கூறியதிலிருந்தும், 'மறுநாள் காளி பூஜை செய்ய வேண்டும்' என்று அவர் விரும்பியதிலிருந்தும், ஷடாக்ஷரத்தையும் அதன சாதனத்தையும் பற்றியுள்ள எண்ணமே அவருடைய மனத்திலே அன்றையதினம் முக்கியமாகக் குடிகொண்டிருந்தது போலத் தோன்றுகிறது.

பகற்போஜனம் முடிந்தது; மத்தியானம் 1 மணிக்குச் சுவாமிகள் பிரஹ்மச்சாரிகளுடைய அறையினுள்ளே நுழைந்து, அங்கிருந்த பிரஹ்மச்சாரிகளையெல்லாம் சம்ஸ்கிருத பாடம் கேட்பதற்கு வரும்படி அழைத்தார். அன்று சம்ஸ்கிருத இலக்கணத்தைப்பற்றிப் பாடம் நடத்தப்பட்டது; அன்று பாடம் சொல்லிக்கொடுக்கப்பட்ட புஸ்தகமானது வரதராஜர் என்பவர் இயற்றிய லகு-கௌமுதி

என்ற நூலாகும். இப்பாடத்தை அன்று கேட்டிருந்தவர்களுள் ஒருவர் பின் வருமாறு எழுதுகிறார்:—

“பாடம் மூன்று மணி நேரம் நடந்தது. ஆனால், அருசியே உண்டாகவில்லை. ஏனெனில் அவர் (சுவாமிகள்) எப்பொழுதும் வழக்கமாகச் செய்வதுபோல அடிக்கடி ஒரு வேடிக்கைக் கதை கூறுவார்; சில சமயங்களிலே அந்த வேடிக்கைப் பேச்சு ஒரு சூத்திரத்தினுடைய பதச் சேர்க்கையைப்பற்றியதாயிருக்கும்; அல்லது அந்தச் சூத்திரம் ஞாபகத்திலிருக்கும்படியான விதத்தில் விநோதம் பேசுவார். இன்றையதினம் சுவாமிகள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே தாம் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபொழுது தமது கல்லூரி நண்பர் தாசரதிசங்யால் என்பவரை ஒரேநாள் இரவில் ஆங்கில தேசசரித்திரத்திலே எப்படி வல்லுநராகும்படி செய்தாரென்பதைப் பற்றி விளக்கி யுரைத்தார்; ஆயினும், இலக்கணப் பாடமும் நடத்திய பின்னர்ச் சிறிது களைப்படைந்தவர் போலக் காணப்பட்டார்.”

கொஞ்சநேரம் கழித்து, சுவாமிகள் சுவாமி பிரேமாநந்தரைக் கூட்டிக்கொண்டு நெடுந்தூரம் வேலூர் கடைத் தெருவரையில் சென்று உலாவி வந்தார். வழியிலே அவர் தமது சகோதர சந்யாசியுடனே அநேக அரிய விஷயங்களைக் குறித்துச் சம்பாஷித்தார்; மடத்திலே ஒரு வேத பாடசாலை ஏற்படுத்தும் விஷயத்தைக் குறித்து வெகு உற்சாகத்துடனே பேசினார்; இப்பொழுது சுவாமி பிரேமா

நந்தர், "சுவாமி! வேதங்களைப் படித்தலினாலாம் பயன் யாது?" என்று கேட்க, சுவாமிகள் "வேதங்களைப் படித்தலினால், மூடநம்பிக்கைகளை ஒழித்துவிட முடியும்" என்றார். ஆ! ஆ! என்ன அற்புதமான மறுமொழி!

ஸ்வாமிகள் மடத்துக்குத் திரும்பி வந்தவுடனே, அங்கிருந்த சந்யாசிகளுடனே கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவர்களுடைய க்ஷேம சமாச்சாரங்களை விசாரித்தார். ஆனால், ஆ! ஆ! இதுதான் ஸ்வாமிகளுடைய கடைசி சம்பாஷணை யென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தால், ஸ்வாமிகளுடைய அமிர்தமொழிகள் இப்பொழுது கடைசியாகக் கேட்கப்படுகின்றன என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அமெரிக்காவிலே சிக்காகோ நகரத்திலே உலகு முழுதையும் ஆட்டிவைத்த ஸ்வாமிகளுடைய குரல் கடைசியாகக் கேட்கப்படுகின்ற தருணம் இதுவே யென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அவர்கள் வெறுமே சம்பாஷணை செய்துவிட்டு இருந்திருப்பார்களா? அவர்கள் என்ன பாடுபட்டு இருப்பார்கள்? எவ்விதமாக வருந்தியிருப்பார்கள்! எவ்வளவு துடித்திருப்பார்கள்! ஆனால், அவர்களுக்கு இது தெரியாமல் போய்விட்டதே!

மாலைநேரம் நெருங்கிற்று; ஸ்வாமிகளுடைய மனமானது மேன்மேலும் அதிகமாக அந்தர்முகப்பட்டது. சாயுங்காலபூஜை மணி யடித்தது; அப்பொழுது ஸ்வாமிகள் தமது அறைக்குள்ளே சென்று, உலகக் கூச்சலினின்றும் ஒதுங்கிக்கொண்டார்; அங்கே ஸ்வாமிகள் தமது யோகா

சனத்திலே கங்கை முகமாகத் திரும்பிக்கொண்டு நிஷ்டையிலே அமர்ந்தார். அப்பொழுது மாலை ஏழு மணி. ஸ்வாமிகள் நிஷ்டையில் உட்கார்வதற்குமுன், தம்முடைய ஒரு சிஷ்யரை நோக்கித் தமது அறையினுள் எவரையும் விட வேண்டாமென்று ஆக்ஞை செய்தார். சுமார் ஒரு மணி நேரம் கழிந்தது; சுவாமிகள் நிஷ்டையினின்றும் எழுந்திருந்து, படுக்கையிலே படுத்துக்கொண்டு, வெளியேயிருந்த தமது சிஷ்யரைக் கூப்பிட்டுத் தமக்கு விசிறும்படி சொன்னார். மணி ஒன்பது இருக்கும்; சுவாமிகளுடைய கை கொஞ்சம் அசைந்தது. சரீரம் தூக்கி வாரிப் போட்டது; இரண்டு ஊர்த்துவ சுவாசங்கள்; இவ்வளவுதான். சுவாமிகள் மஹா சமாதியடைந்துவிட்டார் ஒன்பது வருஷங்களாக உலகுக்கு உய்யும் நெறியைப் போதித்து வந்த உத்தம புருஷர் இவ்வுலகினின்றும் விடுபட்டுச் சென்றுவிட்டார்! அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அந்நிய நாடுகளிலும் ஆர்யப் பெருமையை எடுத்துக் கோஷித்து அழியாப் பெருமையை அடைந்த ஆத்மஞான தீரர் அநித்தியமான இவ்வுலகத்தினின்றும், இச் சரீரத்தினின்றும் பிரிந்து சென்றுவிட்டார்! தேசாபிமான சிம்ஹமாகிய திவ்ய விவேகாநந்தர் தேவலோகம் சென்றார்! அந்த நிமிஷத்திலே உலகம் ஒளியற்றது! பாரத பூமி பராக்கிரமசாலியாம் ஒரு புத்திரனை யிழந்தது! நாம் நமது அவதார புருஷரை யிழந்தோம்! இருள் சூழ்ந்து கொண்டது! இருள்! இருள்! இருள்!

77-வது அத்தியாயம்

விசேஷ உரைகள்

சுவாமி சாரதாநந்தர் சுவாமிகள் மஹா சமாதி யடைந்த ஜுலை 24-ம் தேதி யன்று அமெரிக்கா, ஸான்ப்ரான்ஸிஸ்கோ வேதாந்தசபை யக்கிராசனுதிபதிக்கு பின் வரும் கடிதம் எழுதினுர்:—

"***** ஜுலை 4-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை மணி ஒன்பது ஆகிப் பத்து நிமிஷங்கட்கெல்லாம் அவர் (சுவாமிகள்) நித்திய வாழ்க்கையை அடைந்தார். மடத்து மற்ற அறைகளிலிருந்த சுவாமிகள் மற்றவர்கட்குக் கூடச் சற்றும் தெரியாதபடி இந்த சமாச்சாரம் எங்களுக்கு அவ்வளவு திடீரென்று தெரிந்தது. 'கூப்பிடுகிறவரையில் எவரும் உள்ளே வரக்கூடாது' என்று ஆக்ஞை செய்துவிட்டுச் சுவாமிகள் மாலை எழு மணிக்குத் தமது அறையிலே தியானம் செய்துகொண்டிருந்தார். ஒரு மணி நேரத்துக்குப் பின், அவர் எங்களுள் ஒருவரைக் கூப்பிட்டு, தமக்குத் தலையிலே விசிறும்படி கேட்டுக் கொண்டார். அவர் அமைதியாகப் படுக்கையிலே படுத்துக் கொண்டார்; அவருக்கு வேண்டியன செய்து வந்தவர் 'அவர் உறங்குகிறுர்,' அல்லது 'நிஷ்டைசெய்கிறுர்,' என்று நினைத்தார். ஒரு மணி நேரத்துக்குப் பின் அவருடைய கைகள் கொஞ்சம் நடுங்கின; அவர் ஒரு தரம் மிகவும் ஆழ்ந்த சுவாசம் ஒன்று விட்டார், பின்னர் ஒன்று அல்

லது இரண்டு நிமிஷங்கட்கு எல்லாம் அமைதியாயிருந்தன. மறுபடியும் அவர் அதே மாதிரி சுவாசம் விட்டார்; அவருடைய கண்கள் அவருடைய புருவங்களின் மத்தியில் நிலைத்து நின்றன; அவருடைய முகமானது ஒரு திவ்ய ஒளி பெற்றது; எல்லாம் ஆய்விட்டது.

"பகல் முழுதும் அவர் கூடியவரையில் சுதந்திரமாகவும் சுலபமாகவும், அன்று, சென்ற ஆறு மாதங்களிலிருந்ததைப் பார்க்கிலும் அதிக சுதந்திரமாக உணர்ந்தார். அவர் காலையில் சேர்ந்தாப்போல் மூன்று மணி நேரம் தியானம் செய்தார்; நல்ல பசியுடனே போஜனமுண்டார்; மடத்திலேயிருந்த சுவாமியார்களுக்கு சம்ஸ்கிருத இலக்கணம், தத்துவ சாஸ்திரம், வேதங்கள் இவற்றைப்பற்றிய பாடங் கூறினர்; யோகசாஸ்திரத்தைப்பற்றிச் சம்பாஷித்தார்; அவர் பிற்பகலிலே இரண்டு மைல்கட்கு அதிகமாக உலாவினர்; திரும்பி வந்து ஒவ்வொருவரையும் மிகுந்த அன்புடனே விசாரித்தார். சிறிது நேரம் அவர் சிரமசாந்தி செய்து உட்கார்ந்துகொண்டிருந்தபொழுது, அவர் தமது தோழர்களுடனே ஜனசமூகங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும்பற்றிச் சம்பாஷிவிட்டு, பின்னர் நிஷ்டை செய்வதற்காகத் தமது அறைக்குள்ளே சென்றார்—மிகுதியை நீங்கள் அறிவீர்கள்...."

சுவாமிகளுடைய சந்யாசச் சிஷ்யர்களுள் ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"****அவர் உலகிலிருந்து வெளியே சென்றது அவர் உலகினுள்ளே வந்தது எவ்வளவு ஆச்சர்யமோ

அவ்வளவு ஆச்சர்யமாயிருந்தது. ஆம், அவர் உலகின் முன்னே ஹிந்துமதப் பிரசாரகராக எவ்வளவு திடீரென்றும் எதிர்பாராமலும் தோன்றினாரோ அவ்வளவு திடீரென்றும் எதிர்பாராமலு மிருந்தது. மஹா சமாதிக்கு இட்டுச் சென்ற சமாதியில் அமர்வதற்கு அவர் நிஷ்டை யாரம்பிப்பதற்கு முந்தி, அவருக்கு வேண்டிய சிசுருஷை செய்து கொண்டிருந்த பிரஹ்மச்சாரியினிடத்தில் அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளாவன:- 'நான் உன்னைக் கூப்பிடுகிறவரையில், பொறுத்திருந்து நிஷ்டை செய்.' இவை பூமியிலே ஒரு சந்யாசச் சிஷ்யருக்குச் சொல்லப்பட்ட அவருடைய கடைசி மொழிகளாகையினாலே, குருமூர்த்தி தம்முடைய சந்யாசச் சிஷ்யர்கள் அனைவருக்கும் இட்ட கடைசி ஆக்ஞையாக அவை கருதப்படலாம்.''

இன்னொரு சந்யாசச் சிஷ்யர் பின் வருமாறு எழுதுகிறார்:—

''மாலை 9 மணியாகி ஒரு சில நிமிஷங்களில் மஹா சமாதியாயிற்று. இராப்போஜன மணி அடிக்கப்பட்டது; அப்பொழுது உடனே ஸ்வாமிகளுக்கு நேர்ந்துவிட்டதைப் பார்ப்பதற்கு உள்ளேயிருந்தவர்கள் கூப்பிடப்பட்டார்கள். ஸ்வாமி பிரேமாநந்தரும் ஸ்வாமி நிச்சலாநந்தரும் 'ஸ்ரீ ராம கிருஷ்ண நாமத்தினால் அவரைப் பிரக்ஞைக்குக் கொண்டு வரலாம்' என்று நம்பிக்கொண்டு, ஸ்ரீ ராமகிருஷ்ண நாமத்தை உரக்க உச்சரிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், அவர் அங்குத் தமது அறையிலே மல்லாந்து அசைவற்றுப் படு

த்துக் கிடந்தார்; உபாயம் பயனற்றதாய்விட்டது. ஸ்வாமி அத்வைதானந்தர் ஸ்வாமிகளுடைய நாடிகளைப் பரீக்ஷித்துப் பார்க்கும்படி ஸ்வாமி போதானந்தரைக் கேட்டுக்கொண்டார். அவர் சிறிது நேரம் ஸ்வாமிகளுடைய நாடியைப் பார்த்து விட்டு, எழுந்து நின்று கூச்சலிட்டார். பின்னர், ஸ்வாமி அத்வைதானந்தர் ஸ்வாமி நிர்ப்பயானந்தரை நோக்கி, "அந்தோ! நீ என்ன பார்த்துக்கொண்டிருக்கிறாய்! டாக்டர் மஹேந்திரநாத மஜூம்தாரிடம் ஓடிச் சென்று, உன்னால் கூடிய சீக்கிரத்தில் அவரை யிங்கு இட்டுக்கொண்டு வா!" என்றார். இன்னொருவரும் நதியைக் கடந்து, அன்றைய தினம் கல்கத்தாவுக்குச் சென்றிருந்த ஸ்வாமி பிரஹ்மானந்தருக்கும் ஸ்வாமி சாரதானந்தருக்கும் சமாச்சாரத்தை யறிவித்து அவர்களை மடத்துக்குக் கூட்டிக்கொண்டு வரும் பொருட்டுச் சென்றார். அவர்கள் சுமார் பத்தரை மணிக்கு வந்து சேர்ந்தார்கள். டாக்டர் அவரை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து, பிராணன் நீங்கியிருப்பதைக் கண்டு, கைகளிரண்டையும் ஒருவரைக் கொண்டு அரை வட்டத்திலே சுழற்றும்படி செய்து, அவரை மறுபடியும் உயிர்ப்பெழுப்ப முயன்றார்; செயற்கைச் சுவாசத்தை யுண்டுபண்ண முயன்றார்; நடுநிசி பன்னிரண்டு மணிக்கு, டாக்டர் 'உயிர் போய்விட்டது' என்று சொன்னார். 'மரணமானது திடீரென்று ஹிருதயம் தவறிவிட்டதினாலா யிருக்கும்' என்று டாக்டர் மஜூம்தார் கூறினார். காலையிலே கல்கத்தாவிலிருந்து வந்த டாக்டர் விபின பேஹாரி கோஷ் 'இழுப்பு நோயினால் மரணம் நேரிட்டிருக்கும்' என்று உரைத்தார். ஆனால்,

பின்னர் வந்து மரணக் குறிகளைக் கேட்டறிந்த டாக்டர்களில் எவரும் ஒருவரோடொருவர் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் என்ன கூறினாலும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன்னரேயே கூறியிருந்ததுபோல, 'ஸ்வாமிகள் இனிமேல் உலகில் இருக்க விரும்பாதபொழுது, அவர் சமாதி சமயத்தில் தாமாகவே சரீரத்தை எறிந்துவிட்டார்' என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை, மடத்துச் சந்யாசிகள் உடைத்தானவர்களா யிருக்கிறார்கள்.

"நிவேதிதா சகோதரி காலையில் வந்தனர். இவர் வெகு நேரம் ஸ்வாமிகளண்டையில் உட்கார்ந்துகொண்டு அவருக்கு விசிறிக்கொண்டிருந்தார்; சரீரமானது பிற்பகல் இரண்டு மணிக்கு முற்றத்துக்குச் செல்லும் நடைக்குக் கொண்டுவரப்பட்டது; அங்கே அந்தச் சரீரமானது தகனத்துக்கு ஸ்வாமிகளாலேயே குறிப்பிடப்பட்ட இடத்துக்குக் கொண்டுபோகப்படும் முன், ஆராத்தி யெடுக்கப்பட்டது."

ஸ்வாமிகளுடைய மஹா சமாதியைப்பற்றி இன்னொருவர் பின் வருமாறு எழுதுகிறார்:—

"ஜுலை 4-ம் தேதி யன்று அவர் அசாதாரணமாகத் தியானபரரானார். இச் சமயத்திலே அவர் பரிபூர்ண சுகத்தி லிருந்தார். காலையில் அவர் மூன்று மணி நேரம் நிஷ்டையி லிருந்தார். பகலிலே அவர் சம்ஸ்கிருத இலக்கணத்தைப்பற்றிச் சுமார் மூன்றுமணி நேரம் ஒரு பாடம் வைத்துக்கொண்டார்; அன்று மிகவும் சௌக்கியமா யிருக்கிறதாகக் கூறினார். பிற்பகலிலே அவர் தமது சகோதர

சந்யாசிகளுள் ஒருவருடனும் உலாவுவதற்கு வெளியே சென்றார். அவர் இரண்டு மைல் தூரம் நடந்தார். மாலையி லே அவர் தமது அறைக்குச் சென்று மறுபடியும் நிஷ் டையில் உட்கார்ந்தார்; ஒரு பிரஹ்மச்சாரி அவருக்கு வேண்டியன செய்வதற்கு அங்கு இருந்தார். ஸ்வாமிகள் ருத்திராக்ஷ மாலையை எடுத்து ஜபம் செய்துவிட்டு, தம்மி டத்தில் காத்துக்கொண்டிருந்த பிரஹ்மச்சாரியை நோக்கி, வெளியே உட்கார்ந்து தாம் கூப்பிடுகிறவரையில் நிஷ்டையி லேயே யிருக்கும்படி ஆக்ஞாபித்தார். சுமார் நாற்பத் தைந்து நிமிஷங்கட்குப் பின்னர் அவர் அந்த பிரஹ்மச் சாரியை உள்ளே கூப்பிட்டு, தமது சிரசுக்கு விசிறும்படி சொல்லிவிட்டு, பின்னர் நித்திரை செய்யப் போனவர் போலத் தோன்றினர். சுமார் ஒன்பதுமணி சமயத்தில் அவர் திடுக்கிட்டவர்போலத் திடீரென்று புரண்டு, இர ண்டு பெருமூச்சுக்கள் விட்டார்; நிஷ்டை நிலையிலே அமி ழ்ந்துவிட்டார். அந்தப் பிரஹ்மச்சாரி, விஷயம் இன்ன தென்று அறிய முடியாது, உடனே விருத்தாப்பிய சந் யாசி யொருவரைக் கூப்பிட்டார். அவருக்குப் பின்னல் மற்றச் சந்யாசிகளும் வந்தார்கள். இதற்குள்ளாக, அந்த யோகிபானவர் தீர்க்கநிஷ்டையாகிற மார்க்கத்தின் மூலமாக நிர்விகற்பசமாதியிலே அமிழ்ந்துவிட்டார். உள்ளே யழைக்கப்பட்ட விருத்தாப்பிய சந்யாசி வந்து நாடியைப் பரிசீலனை செய்து பார்த்தார்; பின்னர் இன்னொரு சந்யாசி யையும் அப்படியே பார்க்கும்படி சொன்னர்; ஆனல், இரு வரும் நாடி நின்றுவிட்டதெனக் கண்டார்கள். குருமூர்

த்தி தமது ஸ்தூல சரீரமாகிற உடையை எறிந்துவிட்டு, மகத்தான, பார்வைக்கு எட்டாத, விராட்டான ஆத்மா வுடன் ஒன்றாய்விட்டார். முதலில் அது ஒரு சிறு சமாதி என்று கருதப்பட்டது; ஒரு சகோதரர் சற்குருநாத ருடைய நாமத்தை அவருடைய காதிலே உச்சரித்தார். ஆயி னும், உயிர் இருக்கிற தென்பதற்குள்ள அடையாளத்தைக் காணாமையால், வராககரத்து டாக்டர் மஹேந்திரநாத மஜூம் தார் கூப்பிடப்பட்டார். அவர் செயற்கை வழியால் சுவா சத்தை யுண்டுபண்ண முயற்சி பண்ணினார்; ஆனால், பய னில்லை. ஸ்வாமிகள் உயிர் நீத்தபிறகு ஸ்வாமிகளுடைய சரீ ரத்தைக் கண்ட எவரும் அவர் எப்பொழுதாவது வியாதி யா யிருந்தார், அல்லது மறித்துவிட்டாரென்று கூறார்; அவர் அவ்வளவு புதியவராய், அவ்வளவு ஆரோக்கிய முடையவராய், அவ்வளவு பலமுள்ளவராய்க் காணப்பட் டார். உண்மையில் மரணத்தில்கூட அவர் சமாதியில் வீற்றிருக்கும் சாக்ஷாத் பரமேச்வரனைப்போலத் தோன்றி னார்; அவருடைய பெரிய தாமரைக் கண்கள் தங்கள் விழி களை மூளைக்குள்ளே அழுத்தி யிருந்தனபோன் றிருந்தது; விழிகளிலே இன்னும் பிரகாசம் இருந்தது......"

ஸ்வாமிகளுடைய சகோதர சந்யாசிகளுள் ஒருவர்: உத் போதனம் என்ற பத்திரிகைக்குப் பின் வருமாறு எழுதி னார்:—

"அவர் பின்னர் ஸ்ரீராமகிருஷ்ணாலயத்திலே காலை எட்டுமணி முதல் பதினொரு மணிவரையில் நிஷ்டை செய்

தார். பற்ற நாட்களில் அவர் ஒரேதாமாக உட்கார்ந்து ஒரு பொழுதும் அவ்வளவு நேரம் நிஷ்டை செய்ததில்லை. கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட்டுக் காற்றுத் தாராளமாக இல்லாத அறையில் அவரால் நிஷ்டையி லிருக்கவும் முடியாது; ஆனால், இன்றையதினம் அவர் ஆலயத்து ஜன்னல்கள், கதவுகள் எல்லாவற்றையும் மூடித் தாழ்ப்பாளிட்டு விட்டு நிஷ்டை செய்தார்.

"நிஷ்டையான பின்னர் அவர் ச்யாமா (காளி மாதா)வைப்பற்றி அழகிய பாடலொன்று பாட ஆரம்பித்தார். கீழே இருந்த சங்யாசிகள் குரு ஆலயத்திலிருந்து வருகின்ற அதன் இனிய ராகங்களைக் கேட்டு ஆநந்தித்தார்கள்.........

"அவர் அதிக ருசியுடனே தமது பகற்கால போஜனமுண்டார். பகற்போஜன மானபின்னர் அவர் சமஸ்கிருத இலக்கணத்தைப்பற்றிய ஒரு பெரிய நூலாகிய "லகு கௌமுதி"யை இரண்டரைமணி நேரத்துக் கதிகமாகக் கற்பித்தார். பின்னர். பிற்பகலிலே அவர் ஒரு சகோதர சிஷ்யருடனே சுமார் இரண்டுமைல் தூரம் உலாவிவந்தார். சென்ற அநேக நாட்களாக அவரால் அவ்வளவு தூரம் நடக்க முடிந்ததில்லை. அவர் அன்றையதினம் மிகவும் சௌக்கியமா யிருக்கிறதாகக் கூறினார். உலாவச் சென்றிருந்தபொழுது, மடத்திலே ஒரு வேதபாடசாலை ஏற்படுத்தவேண்டு மென்று தாம் பிரத்தியேக விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறினார். உலாவிவிட்டுத் திரும்பி

வந்தபின்னர் அவர் சில சொந்த ஆவசியகங்களைக் கவனித்து, சரீரம் மிகவும் லேசாயிருப்பது போலத் தமக்குத் தோன்றுவதாகக் கூறினார். கொஞ்சநேரம் சம்பாஷணை செய்தபிறகு, அவர் தமது அறைக்குச் சென்று தமது ஜபமாலையைத் தம்மிடம் கொண்டுவந்து கொடுக்கும்படி தம்முடைய சிஷ்யர்களுள் ஒருவரிடம் கூறினார். பின்னர், சிஷ்யரை வெளியே காத்திருக்கும்படி சொல்லிவிட்டு அவர் தமது அறையிலே தனியாக ஜபம் செய்து தியானம் செய்யும் பொருட்டுக் கீழே யுட்கார்ந்தார். அமாவாசையுடன் கூடிய சனிக்கிழமையாகிய மறுநாள் அவர் காளியைப் பூஜைசெய்வதற்குக் கருதியிருந்தார். அவர் அன்று இது செய்வதைப்பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டிருந்தார். (அவர் ஒருவேளை மானசிகமாகச் செய்திருக்கலாம்.)

"சுமார் ஒரு மணிநேரம் அவர் ஜபம் செய்து தியானம் செய்த பின்னர்த் தரையிலே தமது படுக்கையில் படுத்துக்கொண்டு, வெளியே காத்துக்கொண்டிருந்த அந்தச் சிஷ்யரைக் கூப்பிட்டு, தமது சிரசுக்குக் கொஞ்சம் விசிறும்படி கூறினார். அப்பொழுதும் அவருடைய கையிலே ஜபமாலை யிருந்தது. 'ஸ்வாமிகள் ஒரு வேளை லேசாகத் தூங்குகிறார் போலிருக்கிறது' என்று சிஷ்யர் நினைத்தார். சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பின், அவருடைய கை சிறிது அசைந்தது. பின்னர் இரண்டு பெருஞ் சுவாசங்கள் வந்தன. 'அவர் சமாதியி லாழ்ந்துவிட்டார்' என்று சிஷ்யர் நினைத்தார். அவர் பின்னர்க் கீழே சென்று, ஒரு சந்யாசி

யைக் கூப்பிட்டார்; அந்தச் சந்யாசி வந்து பரிசோதித்துப் பார்த்ததில் 'சுவாசமும் இல்லை, நாடியும் துடிக்கவில்லை' என்று கண்டார். இதற்குள்ளாக இன்னொரு சந்யாசி வந்து, அவர் சமாதியிலிருக்கிறதாக நினைத்துக்கொண்டு, குருமூர்த்தியின் நாமத்தைத் தொடர்ச்சியாக உரத்த சப்தத்துடன் உச்சரிக்க ஆரம்பித்தார். ஆனால், சமாதியானது எவ்விதத்திலும் உடைபடவில்லை. அன்றிரவு பெயர் பெற்ற வைத்தியர் ஒருவர் அழைக்கப்பட்டார். அவர் நெடுநேரம் சரீரத்தைப் பரிசோதனை செய்துவிட்டு, பின்னர் 'உயிர் போய்விட்டது' என்று கூறினர்.

"கண்களில் இரத்தம் பீறிட்டிருந்ததென்றும், வாயின் மூலமாகவும் நாசித் துவாரங்களின் மூலமாகவும் கொஞ்சம் ரத்தம் வெளிப்பட்டிருந்ததென்றும் மறுநாளையில் காணப்பட்டது. 'மூளையில் ரத்த பாண்டம் உடைந்துவிட்டதினால் அப்படி நேரிட்டது' என்று மற்ற வைத்தியர்கள் குறிப்பிட்டார்கள். ஜப முறையிலும் தியான முறையிலும், அவர் சரீரத்தை விட்டுப் போனபொழுது அவருடைய பிரஹ்மரந்திரம் உடைபட்டிருக்கவேண்டுமென்றுள்ள முடிவை இது நிரூபித்துக் காட்டுகிறது!

"அவர் மஹா சமாதி யடைந்த பின்னர் அநேக வைத்தியர்கள் வந்து அவருடைய சரீரத்தை அதி நுட்பமாகப் பரிசோதித்து, அவரை மறுபடியும் பிரக்ஞைக்குக் கொண்டு வர முயன்றார்கள். அவருடைய அறிவுக் களஞ்சியம் வெளிப்படுத்தக் கூடிய உபாயங்களையும் பார்க்கங்க

ளெல்லாவற்றையும் அவர்கள் உபயோகித்துப் பார்த்து விட்டார்கள்; ஆனால், எல்லாம் பயனில்லாது போயிற்று. அவர்களால் உண்மையில் அவருடைய மரணத்தைப்பற்றிய உண்மையான காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. உண்மையில் அவர் தாமாகவே மரித்தார். அவர் யோகியாகவே பிறந்து யோகியாகவே யிறந்தார்!''

இன்னொருவர் பின் வருமாறு எழுதுகிறார்:—

''.........அவர் மஹா சமாதியடைவதற்கு ஒருமாதத்துக்கு முந்தியிருந்தே, ஸ்வாமிகள் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக நிஷ்டை செய்வது வழக்கமாயிற்று; இந் நாட்களிலே அவருக்குச் சரீரத்தில் வியாதியே யில்லை போலத் தோன்றிற்று.........ஸ்வாமி பிரேமாநந்தருடன் பிற்பகலில் உலாவப் போவதற்கு முன், அவர் மேனாட்டைப்பற்றிய அநேக விஷயங்களைக் குறித்து அவருடனே சந்தோஷத் தன்மையில் பேசினார். மாலையில் அவர் நிஷ்டை செய்வதற்குத் தமது அறைக்குச் சென்றார். ஸ்வாமிகள் தமது சிரசுக்கு விசிறுவதற்காகச் சிஷ்யரை உள்ளே கூப்பிட்டபொழுது, அறையின் ஜன்னல்களெல்லாவற்றையும் திறந்துவிடும்படி அவரிடம் கூறினார்; ஏனெனில், அவருக்கு உஷ்ணமாயிருந்ததென்று கூறினார். இப்படிச் சொல்லிக்கொண்டு அவர் தரையில் படுக்கையிலே படுத்துக் கொண்டார். அந்தப் பிரஹ்மச்சாரி கொஞ்சநேரம் அவருக்குச் சிரசிலே விசிறின பிற்பாடு, ஸ்வாமிகள் அவரை நோக்கிச் 'சரிதான்; இனிமேல் விசிறவேண்டிய அவசிய

யில்லை! என்னுடைய கால்களைக் கொஞ்சம் பிடித்துவிட்டால் நலம்,' என்றார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் வெகு சீக்கிரத்தில் உறங்கிவிட்டார்போலத் தோன்றிற்று. இம்மாதிரி ஒரு மணி நேரம் கழிந்தது; சிஷ்யர் அவருக்கு உடம்பு பிடித்துக்கொண்டிருந்தார். ஸ்வாமிகள் தமது இடது பக்கமாகச் சாய்ந்துகொண்டிருந்தார். இந்த நேரத்துக்குள் அவர் ஒருதரம் பக்கம் மாற்றிப் படுத்துக்கொண்டார்; அதற்குப் பின், 'குழந்தைகள் உறக்கத்திலே கனவு கண்டால் கூச்சலிடுவதுபோல்' அவர் அதேமாதிரி கூச்சலிட்டார். இதற்குப் பிறகு கொஞ்சநேரத்துக்கெல்லாம் ஸ்வாமிகள் ஒரு பெரு மூச்சு விடுவதையும், அவருடைய தலையானது தலையணையிலிருந்து கீழே விழுந்ததையும் கவனித்தார். முந்தியதைப் போன்ற இன்னொரு நீண்ட பெரு மூச்சு, பின்னர் அவரைச் சுற்றிலும எல்லாம் மரணம் போல அமைதியாயும் அடங்கியும் விட்டது! எந்த இடத்துக்குச் சென்றுவிட்டால் இந்த மாயா உலகத்தை விழித்துப் பார்ப்பதில்லையோ அந்த இடமாகிற மாதாவின் மடியிலே களைப்படைந்த குழந்தை யுறங்கிவிட்டது!

''ஸ்வாமிகள் முப்பத்தொன்பதுவருஷங்களும், ஐந்து மாதங்களும், இருபத்து நான்கு நாட்களுமாகிய வயதிலே மஹா சமாதி யடைந்தார். இவ்விதமாக, 'நான் நாற்பதாவது வயதைப் பார்க்க ஒருபொழுதும் ஜீவிக்கமாட்டேன்' என்று அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றிவிட்டார்.''

ஸ்வாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் நண்பர்களும் சிஷ்யர்களும் ஸ்வாமிகளுடைய மஹாசமாதியைப் பற்றிக் கூறியுள்ள விதங்களையெல்லாம் இங்கு மொழி பெயர்த்ததற்குக் காரணம் யாதெனில், இவற்றையெல்லாம் களங்கமற்ற ஹிருதயத்துடனே நாம் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஸ்வாமிகள் தம்முடைய இகலோக முடிவை நன்ருக முன்னரேயே தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார்' என்றும், 'சாதாரண மனிதர்களைப்போல மரிக்காமல், மஹாத்மாக்களைப்போலவே மஹா சமாதி யடைந்தார்' என்றும் நமக்கு விளங்குகிறது.

"ஸ்வாமிகள் உலகிலே ஜீவகோடிகளை யுய்விக்கும்நிமித்தம் அவருடைய சின்மயஸ்வரூபத்தை அவர் அறிந்துகொள்ள முடியாதபடி அவருடைய பார்வையை மறைத்துக்கொண்டிருக்கிறது" என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரால் அடிக்கடி கூறப்பட்டுவந்த லேசான மாயா படலமானது கழிந்துவிட்டது, இருந்த இடம் தெரியாமற் போய்விட்டது. ஸ்வாமிகள் சின்மயமாகச் சிக்கற்றுப் போய்விட்டார். ஸ்வாமிகளுடைய "நான்" என்பது விரிந்து விரிந்து, சரீரக் கட்டுப்பாடுகளைத் தெரித்தெறிந்துவிட்டு, எல்லையற்ற இன்பப் பேரொளியாம் பிரஹ்ம வஸ்துவி லொன்ருய்விட்டது. 'அழுக்கடைந்த சிதிலமாய்ப் போன உடைகளை மனிதன் கழற்றி யெறிந்துவிடுவது போல' ஸ்வாமி இந்த நாற்றச் சரீரத்தை உதறி யெறிந்துவிட்டு உத்கிருஷ்டமான சமாதியிலே உத்தமமான பிரஹ்ம

வஸ்தாவில் ஒன்ருய்விட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தமக்குப் பணித்தருளிய வேலையைத் தம்மால் கூடியவரையில் செய்து முடித்துவிட்டார்; இப்பொழுது களைத்துச் சோர்ந்துபோய், ஜகன்மாதாவி னிடத்திலே சிரமசாந்தி செய்துகொள்ளச் சென்றுவிட்டார். மஹா யோகி, சத்தியதிருஷ்டா, ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஜேஷ்ட புத்திரர், இவ் வுலகெங்கனும் சென்று ஹிந்து தேசத்தின் பெருமைகளை ஸ்தாபித்த புண்ணிய புருஷர், வேதங்களையெல்லாம் கரை கண்டு வேற்றுமையை ஒழித்த விவேகாநந்த ஸ்வாமிகள் சின்மயமாய்ச் சேர்ந்துவிட்டார்!

சுவாமிகள் மஹா சமாதி யடைந்துவிட்டாரென்ருல் எப்படி நம்புவது! அன்று முழுதும் நல்ல சரீராரோக்கியத்துடனே சிஷ்யர்களுக்கும் சகோதர சந்யாசிகளுக்கும் போதித்துக்கொண்டிருக்கவில்லையா? ஸ்வாமி பிரேமாநந்தரைக்கூட யிட்டுக்கொண்டு சுமார் இரண்டு மைல் தூரம் உலாவிவந்ததை வழியிலே எத்தனைபேர் பார்க்கவில்லை? 'ஸ்வாமிகள் மஹா சமாதி யடைந்துவிட்டார்' என்ருல், அது 'திடீரென்று இடிவிழுந்தது போல்' ஆயிற்று! எவரும் இதை எதிர்பார்க்கவே யில்லை. வேலூர்மடத்துச் சந்யாசிகள் திடுக்கிட்டுவிட்டார்கள். ஸ்வாமிகள் சமாதி யடைந்துவிட்டது உண்மைதானு? அல்லது என்ன? ஒரு வேளை கனவோ? ஸ்வாமிகள் ஒருநாளும் தங்களை விட்டுப் பிரியவே மாட்டார்; இது பொய் என்று நினைத்தார்கள்; ஆனல், இதோ கண்களுக்கு நேரே, பிரத்தியக்ஷத்தில்

ஸ்வாமிகளின் ஆவி பிரிந்து, சரீரம் பிரேதமாக விழுந்து கிடக்கிறது! 'ஸ்வாமிகளின் மரணம் பொய்யோ அல்லது கனவோ' என்று எல்லோரும் பிரமித்து, கையையும் கண்ணையும் பிசைந்தாலும், கீழே விழுந்து கிடக்கும் சரீரத்தைப் பார்த்துவிட்டும் நம்பாமலிருக்க முடியுமோ? அந்த மடத்திலிருந்தே ஏதோ ஒரு சக்தி வெளியே போய்விட்டது போலத் தோன்றிற்று. மடம் வெட்ட வெளியாய் விட்டது போலத் தோன்றிற்று. மடத்துச் சந்யாசிகளுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை உலகின் நாலா பக்கங்களுக்கு ஸ்வாமிகளின் மஹாசமாதி சமாச்சாரத்தை யெடுத்துக்கொண்டு தந்திகள் பறந்தன. உலகிலே இந்தத் தந்தி கிடைக்கப் பெற்றவர்கள் அனைவரும் "இது உண்மை தானா? இப்படியும் நடக்குமா?" என்று பிரமிக்கலானார்கள்.

கல்கத்தா மாநகரிலேயே ஆயிரக் கணக்கானவர்கள் திடுக்கிட்டுத் தயங்கிவிட்டார்கள். 'இந்தியாவினுடைய எழிலே போய்விட்டது' என்று கருதினவர்கள் பலர். ஸ்வாமிகளுடைய உபதேசங்களைக் கேட்கும்படியான பாக்கியம்பெற்றவர்கள் எவரும் ஸ்வாமிகளுடைய வசிகரமான முகத்தையும், ஆநந்தமும் அலக்ஷியமும் சேர்ந்து விளங்கும் அவருடைய புன்னகையையும், அறிவும் பிரகாசித்து அன்பும் ஊறித் ததும்பும் அவருடைய கண்களின் பார்வையையும், அவரிடத்திலேயே உண்டாகி அவரைச் சூழ்ந்துநின்ற அபரிமிதமான தேஜஸையும் மறக்க முடியாது. இப்பொழுது 'ஸ்வாமிகள் மஹா சமாதியடைந்துவிட்டார்' என்ற சமாச்

சாரத்தைக் கேட்டவுடனே, அவர்களுக்குஸ்வாமிகளுடைய லக்ஷணங்க ளெல்லாம் எதிரே தோன்றின. 'இப்பொழுது அவர் போய்விட்டார், இனிமேல் அவரைப் பார்த்தல் முடியாது' என்று கேள்விப்பட்டவுடனே, அந்த லக்ஷணங்களும் மறைய ஆரம்பித்தனபோலத் தோன்றின. "இனிமேல் அவரை—சுவாமிகளை எங்கே பார்ப்பது? எப்படிப் பார்ப்பது?" என்று எல்லோரும் ஏங்கிப் பெருமூச்செறியத் தொடங்கினர்கள்.

இந்த சமாச்சாரத்தைக் கேட்டவர்களிற் சிலர் மூர்ச்சை யடைந்துவிட்டார்கள். சிலர் விசனத்தை யடக்க முடியாது வாய்விட்டுக் கதறி யழுதார்கள். காட்டுத் தீப் போன்று இவ் விஷயம் எங்கும் பரவிவிட்டது. அமுதமொழி புகன்று ஆயிரக்கணக்கான ஜீவராசிகளுக்கு ஆறுதலை யளித்துவந்த சுவாமிகள் இப்பொழுது அமரருலகு சென்றனர்.

மடம் முழுதும் அன்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தபோதிலும் மடம் காலியா யிருந்தது போலிருந்தது. மனிதன் கெட்ட கனவு கண்டால் எப்படி வருந்துவானே, அப்படியே அங்குக் கூடிய ஜனங்கள் அனைவரும் வருந்தினர்கள். "மறுபடியும் உயிர்த்தெழ மாட்டாரா?" என்பதே எல்லோருடையவும் பிரார்த்தனையா யிருந்தது. "உண்மையில் சுவாமிகள் இகவாழ்வைத் துறந்துவிட்டார்" என்றுநினைக்க நினைக்க, அவர்களுடைய மனம் புழுங்கிற்று; அவர்கள் விசனக் கடலி லாழ்ந்தார்கள்.

எத்தனைபேர் கதறினார்கள்? எத்தனைபேர் "ஐயோ!" என்று அலறினார்கள்? எத்தனைபேர் பயந்து நடுங்கினார்கள்? எல்லோருக்கும் ஏக்க முண்டாய்விட்டது. சிலர் மடத்து வெளி நிலத்திலே ஏகாந்தத்திலே யோசனை செய்து கொண்டே முன்னும் பின்னுமாக உலாவினார்கள். வேறு சிலர் இங்கொருவர் அங்கொருவராக மௌனமாகப் பேசுவதற்கு வாயின்றிப் பிரமித்து உட்கார்ந்திருந்தார்கள். அங்குக் கூடியவர்களுடைய ஹிருதயங்களிலே இருள் கவிந்துகொண்டது; மனங்களிலே அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. உள்ளும் இருள், வெளியும் இருள், எங்கும் இருள், எல்லாம் இருள்.

பொழுது விடிந்தது; நாலாபக்கங்களிலிருந்தும் ஜனங்கள் திரள்திரளாக வந்து குவிந்தனர்; ரஸ்தா வழியாக எண்ணற்ற வண்டிகள் வந்து சேர்ந்தன; கங்கா நதியின் வழியாக நூற்றுக்கணக்கான படகுகள் ஆயிரக்கணக்கான பக்தர்களைக் கொண்டுவந்து சேர்த்தன. எல்லோர் முகத்திலும் விசனமே குடிகொண்டிருந்தது. சுவாமிகளுடைய சரீரம் பட்டுப் பீதாம்பரங்களினால் மூடப்பட்டு, ராஜ சயனத்திலே வீற்றுக் கிடந்தது. எந்த அறையிலே இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர்த் தாம் தேவகானம் போன்று கீதமொழிகள் புகன்று எல்லோரையும் ரம்யப்படுத்திக்கொண்டிருந்த தீங்குரல் கேட்கப்பட்டிருந்ததோ அந்த அறையிலே, அதே அறையிலே அந்தத் தீங்குரலுக்குக் காரணமாயிருந்த ஸ்வாமிகளுடைய சரீரம் இப்பொழுது பிரேதமாக விழுந்து கிடந்தது; ஆ! ஆ! அந்த அறையி

லே நேற்று ஸ்வாமிகள் என்ன உந்நதமான உபதேசங்கள் புரிந்தார்! ஆ! ஆ! அந்த அறையிலே நேற்றுச் சுவாமிகள் எவ்வளவு சிரிப்புச் சிரித்தார்! எத்தனை பேரைச் சிரிக்கவைத்தார்! ஆ! ஆ! இன்று அவ்வறையிலே எல்லாம் அடங்கிவிட்டது, எல்லாம் அமைதியாய்விட்டது. பேச்சு மூச்சில்லை. மௌனம், மௌனம், மௌனம்.

நூற்றுக் கணக்கான ஜனங்கள் அந்தச் சரீரத்தைத் தரிசிப்பதற்காக, கடைசியாகத் தரிசிப்பதற்காக, 'இனிமேல் தரிசிக்கும்படியான பாக்கியமும் கிடைக்காதே' என்று நினைத்து அவ் வறையிலே வந்து சூழ்ந்தார்கள்; எல்லோரும் அந்தச் சரீரத்தை உற்றுற்றுப் பார்த்தார்கள். 'உயிர் இருக்கிறதோ' என்று எல்லோரும் சந்தேகித்தார்கள். ஏனெனில், சுவாமிகளுடைய முகத்திலே தேஜசு மாறவில்லை! களை நீங்கவில்லை. "ஸ்வாமிகள் மரித்துவிட்டது உண்மைதானா?" என்று அவர்கள் ஒருவர்க்கொருவர் கேட்டுக்கொண்டார்கள்; கண்களிலே எல்லோருக்கும் நீர் ததும்பிச் சொட்டிற்று. வந்த ஜனங்களனைவரும் மடத்துச் சந்யாசிகளை உற்று உற்றுப் பார்த்தார்கள். "என்ன இது? சுவாமிகளுடைய இனிய குரலை நாம் இனிமேல் கேட்க முடியாதா? நமது தாய் நாடு மேம்படும்படி அவர் கூறும் திரவசனங்களை நாம் இனிமேல் கேட்கவே முடியாதா?" சுவாமிகளுடைய சரீரம் உயிர் நீங்கியதாயிருந்தபோதிலும் அவருடைய சரீரத்தை அன்று தரிசிக்கும்படியான பாக்கியம் பெற்றவர்கள் தமது தாய் திருநாட்டுக்கு எம்

மாதிரியாவது தொண்டு செய்யவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியான பின்னர், மடத்துச் சந்யாசிகளுக்கு இவ்வளவு பெரிய துக்கம் ஏற்பட்டதே யில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மஹா சமாதி யடைந்தபொழுது அவர்களுக்கு மஹத்தான துக்கம் உண்டானபொழுதிலும், தங்களுடைய நரேந்திரர், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நரேந்திரர் உள்ளவரையில் தங்களுக்கு எவ்வித குறையு மில்லை யென்று ஒரு ஆறுதலாவது இருந்தது. இப்பொழுது பதினாறு வருஷங்களாய்விட்டன; இந்தப் பதினாறு வருஷங்களிலே இந்தச் சந்யாசிகள் எவ்வளவோ கஷ்டப்பட்ட போதிலும், எவ்வளவோ துக்கம் அநுபவிக்கும்படி நேர்ந்தபோதிலும், இப்பொழுது சுவாமிகளைப் பிரிந்திருக்கும் படியான துக்கம்போன்ற துக்கம் அவர்களுக்கு இதுகாறும் உண்டானதே யில்லை. இப்பொழுது 'ஸ்வாமிகள் போய்விட்டார்' என்றவுடனே, "கப்ப லுடைந்து கடலில் தத்தளிக்கும் மனிதன்போல," அவர்கள் அவஸ்தைப் பட்டார்கள். உலகின் அஸ்திவாரமே பெயர்ந்துவிட்டது போல் அவர்களுக்குத் தோன்றிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மஹா சமாதி யடைந்தபொழுது அவர் தமது சிஷ்ய வர்க்கங்களையும் பக்தகோடிகளையும் நரேந்திரரிடம் பொறுப்பு ஒப்புவித்தார். ஆகையினாலே, அச் சமயத்தில் அவர்கள் எல்லோருக்கும் ஒருவித ஆறுதல் இருந்தது. இப்பொழுது இரக்ஷகர்கள் இருவரும் போய்விட்டதினாலே, சந்யாசிகள்

பாலைவனத்திலே விடப்பட்டுத் திக்கில்லாமல் தவிக்கும் அநாதைகள் போன்று அலறி ஏங்கி அழுதார்கள்.

வைத்தியர்களெல்லோரும் "சுவாமிகளுடைய சரீரத்திலே உயிர் போய்விட்டது" என்று தீர்மானித்துவிட்ட போதிலும், சரீரமானது ஸ்மசானத்துக்குக் கொண்டு போகப்படுதற்கு எடுக்கப்படுகிற வரையில், மறுபடியும் ஸ்வாமிகள் உயிர்த்தெழாரா?" என்று ஸ்வாமிகளுடைய அத்தியந்த நண்பர்களிற் பலரும் சிஷ்யர்களும் பித்துப் பிடித்து நம்பிப்பார்த்தார்கள். "ஒருவேளை இந்த அவஸ்தை ஓர் உயர்ந்த, உத்கிருஷ்டமான சமாதி யவஸ்தையா யிருக்கலாகாதா? ஒருவேளை ஸ்வாமிகள் மறுபடியும் ஜாக்கிரப் பிரபஞ்சத்துக்கு வரமாட்டாரா?" என்று அவருடைய நண்பர்களும் சிஷ்யர்களும் நினைத்து நினைத்துச் சரீரத்தை மறுநாள பிற்பகல் வரையில் ஸ்மசானத்துக்கு எடுக்காமல் வைத்திருந்தார்கள்.

காசிபுரத்துத் தோட்டத்திலே ஸ்வாமிகள் முதல் முதலாவதாக நிர்விகற்பசமாதி யடைந்தபொழுது சுவாமிகளுடைய சரீரம் இதே ஸ்திதியைத்தான் அடைந்திருந்தது என்பது அவர்களுடைய ஞாபகத்துக்கு வந்தது; அப்பொழுதும் 'ஸ்வாமிகள் இவ் வுலகினின்றும் நீங்கிவிட்டாரோ?' என்று இவர்கள் சந்தேகப்பட்டார்கள். ஆனால், 'அப்பொழுது ஸ்வாமிகள் மறுபடியும் பிரபஞ்சப் பிரக்ஞைக்கு வந்துவிட்டாரே! அதுபோல, இப்பொழுதும் ஸ்வாமிகள் மறுபடியும் கண் விழித்துக்கொள்ள லாகாதா?' என்று

நம்பிப் பார்த்தார்கள். ஆனல், அப்பொழுது ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் இருந்தார் என்பதை யவர்கள் கவனிக்கவில்லே! 'ஸ்வாமிகள் மறுபடியும் உயிர்த்தெழுவார்' என்று அவர்கள் நம்பினுர்கள்; இரவு முழுதும் பிரார்த்தனே செய்தார்கள்; 'ஸ்வாமிகளின் உயிர் போய்விட்டது' என்று வைத்தியர்கள் தீர்மானித்துவிட்டார்கள்; கிழவர்கள் தீர்மானித்துவிட்டார்கள்; உலகாநுபவம் மிகுந்தவர்கள் தீர்மானித்துவிட்டார்கள்; இந்தச் சந்யாசிகளுங்கூட ஒருவாறு தீர்மானித்துத்தான் விட்டார்கள், ஆயினும், ஸ்வாமிகள் மறுபடியும் தங்களுடன் பேசி, நடமாடி, நகையாடித் தங்களேக் கடாக்ஷிக்காரா? என்று கருதி, இரவு முழுதும் பிரார்த்தித்தார்கள்.

ஆனல், பிரதி நிமிஷமும் சரீரம் மேன்மேலும் குளிர்ச்சி யடைந்துகொண்டிருந்தது; விறைத்துப் போய் விட்டது. ஆ! ஆ! போய்விட்டார்; 'இனிமேல் ஒருநாளும் ஸ்வாமிகளேக் காண முடியாது' என்னும்படி அவர் போய் விட்டார்; நிச்சயம்தான்; சரீரம் விழுந்துவிட்டது. விருத்தாப்பிய சந்யாசிகள்; சிஷ்யர்களுள் சிலரைக் கல்கத்தாவுக்கு இந்த சமாச்சாரத்தைத் தெரிவிக்கும்படி யனுப்பினுர்கள். உலகிலே யுள்ள அந்நிய நாடுகளுக்கு இந்த சமாச்சாரத்தைத் தெரிவிக்கும்படி தந்தி யடிப்பதற்காகச் சிலர் தந்தி யாபீசுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். சந்தனம், புஷ்பம், சாம்பிராணி முதலியவற்றை ஏராளமாக வாங்கி வரும்படி நாலா பக்கக்களிலும் அனுப்பப்

பட்டார்கள். வெகு சீக்கிரத்திலே இவையெல்லாம் சேகரிக்கப்பட்டன. மடத்தின் பல பாகங்களிலும் சாம்பிராணி வாசனை கமகம வென்று வீசிற்று. மடத்தின் எல்லாக் கதவுகளும் திறந்துவிடப்பட்டன; ஆயிரக்கணக்கான ஜனங்கள் உள்ளும் புறமும் குழுமிக் கூடிவிட்டார்கள். ஆயினும் மடமெல்லாம் காலியா யிருந்ததுபோலத் தோன்றிற்று. "ஜய, ஜய, விவேகாநந்த,",, "ஜய, ஜய, ராமகிருஷ்ண" "ஜய, ஜய, விவேகானந்த," "ஜய, ஜய, ராமகிருஷ்ண." இக் கோஷங்கள் ஆயிரக்கணக்கான தொண்டைகளி லிருந்து அண்டம் கிழிபட ஒலியும் எதிரொலியுமாக ஒலிக்கப்பட்டன. வேலூர் மடத்திலே செய்யப்பட்ட கோஷங்கள், விசனம் மிகுந்து செய்யப்பட்ட முழக்கங்கள் கங்கைத் தண்ணீரிலே சப்தித்து அக் கரை சென்று, அப்புற மிருந்த கிராமங்களிலும் க்ஷேத்திரங்களிலும் பிரதிபலித்து, கடைசியாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் வசித்து வந்த தக்ஷிணேச்வ ராலயத்திலும் எட்டி அங்குள்ளவர்களையும் விசனக் கடலி லாழ்த்தியது. உலகு முழுதையும் உண்மையை உணரும்படி செய்த மஹானுடைய சரீரத்தை, அறிவிலும் ஐச்வர்யத்திலும் சிறந்த அமரிக்காவுக்கு ஆத்மஞானத்தை யூட்டிய புண்ணிய புருஷருடைய சரீரத்தை, இந்தியர்களுக்குள் ஒருவித உண்மையான எழுச்சியை உண்டாக்கிய அவதார புருஷருடைய சரீரத்தைக் கடைசியாகத் தரிசிக்கும்படியான பாக்கியம் கிடைக்கும் சமயம் இதுதான்; இனிமேல்

இந்தச் சரீரத்தைத் தரிசிக்கும்படியான பாக்கியம் கிடைக்காது' என்பதை எல்லோரும் அறிந்துகொண்டார்கள்.

பிற்பகலாயிற்று; 'இனிமேல் தாமதிக்க லாகாது' என்று கருதி, மடத்துச் சந்யாசிகளும் பக்தர்களும் சுவாமிகளுடைய சரீரத்தை மேல் மாடியில் அவருடைய அறையிலிருந்து கீழே கொண்டுவந்தார்கள். அங்கே ஓர் அழகிய கட்டிலின்மேல் அந்தத் திவ்ய சரீரமானது காஷாய உடையினுல் அலங்கரிக்கப்பட்டுக் கிடத்தப்பட்டது. சுவாமிகளின் பாதங்களில் ஒருவிதச் சிவப்புக் குழம்பு பூசி, அப் பாதங்களின் அடையாடங்கள் என்றென்றும் மடத்திலே வைத்துக்கொள்ளப்படுதற்காக எடுக்கப்பட்டன. பின்னர் அச் சரீரத்தின் முன் ஆராத்தி யெடுக்கப்பட்டது; தூபதீப ஆராதனைகள் செய்யப்பட்டன. மந்திரகோஷம் நடந்தது; சங்கங்கள் பூரித்தன; மணிகள் அடிக்கப்பட்டன; கமகம வென்ற வாசனை எங்கும் கிளம்பிற்று. அச் சமயத்திலே, சக்தியையும் மகிமையையும் மிகச் செய்து பிரகாசித்த ஒரு அற்புத சாந்நித்தியம் அங்கே பரந்து விளங்கிற்று. தூபதீபாராதனை, பூஜை முதலிய ஆனவுடனே, சிலர், இருகைகளையும் உயரத் தூக்கிக் குவித்துக் கொண்டு "ஸ்ரீ விவேகாநந்த சுவாமிக்கு ஜே" "குருமஹாராஜுக்கு ஜே" என்று கோஷித்தார்கள்; வேறு சிலர், இருகரங்களையும் தங்கள் மார்புக்கு நேராகக் குவித்துக் கொண்டு, கண்களிலே மடமடவென்று கண்ணீர் சொட்டத் தியானித்தார்கள்; இன்னும் சிலர், சாஷ்டாங்கமாக அவரவர்

கள் இருந்த இடங்களிலேயே கீழே விழுந்து நமஸ்கரித்தார்கள்; சுவாமிகளுடைய சிஷ்யர்களும் பிரத்தியேக பக்தர்களும் அந்தத் திவ்ய சரீரத்தின் அருகே வந்து, திருவடிகளின்மீது தங்கள் முடிகளை வைத்து வணங்கினர்கள்.

நேரமாய்விட்டது; திவ்ய சரீரம் அக்கினி பகவானுக்கு ஒப்புவிக்கப்படுதற்குக் காலதாமதமாய்விட்டது. அந்தச் சரீரமானது கட்டிலோடு ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புத்திரர்களின் புஜங்களின்மீது தூக்கப்பெற்று, ருத்திர பூமியை நோக்கிப் புறப்பட்டது; அப்பொழுது அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் ஒரு அற்புத உணர்ச்சியுண்டாயிற்று; ஆநந்தம் ஒரு பக்கம்; அத்தியந்த துக்கம் ஒரு பக்கம். "ஜய குருமகாராஜருக்கு ஜய," "ஜய குருமகாராஜருக்கு ஜய;" "ஜய, ஸ்வாமிஜீ மகாராஜருக்கு ஜய," ஜய ஸ்வாமிஜீ மகாராஜருக்கு ஜய;" "ஜய ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ச பகவானுக்கு ஜய," "ஜய ஸ்ரீ விவேகாநந்த சுவாமிக்கு ஜய." இத்தகைய கோஷங்கள் ஆகாயத்தைச் செவிடுபடச் செய்தன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒரே பெருங் கூட்டம்; கோவென்று கோலாகலத்துடனே ஊர்வலம் செல்கிறது. "ஹர, ஹர, மஹாதேவ" என்ற சப்தம் ஆயிரக்கணக்கான தொண்டைகளிலிருந்து புறப்பட்டு ஆகாயத்தையும் பூமியையும் அதிரும்படி செய்கிறது. இக் கூட்டத்திலே அலறி யலறி யழுவோர் பலர், மௌனமாகப் பெருமூச்செறிந்துகொண்டு செல்வோர் பலர்; ஆடிப்பாடிக் கூத்தாடிக்கொண்டு நடப்

போர் பலர்; பகவந் நாம ஸ்தோத்திரங்களைப் பஜனையாகப் பாடிக்கொண்டு, பக்தகோடிகளுடைய ஹிருதயங்களை யெல்லாம் கரைத்துச் செல்வோர் பலர்.

இக் கூட்டமானது ருத்திர பூமியை நெருங்க நெருங்க, ஜனங்களுக்கு ஒருவித உணர்ச்சி உண்டாய்க்கொண்டு வந்தது. "சுவாமிகளுடைய சரீரத்தையா தகிப்பது? எந்தச் சரீரத்தைத் தமக்குக் கருவியாக வைத்துக்கொண்டு சுவாமிகள் இவ் வுலகிலே ஜீவராசிகள் கடைத்தேறும் மார்க்கத்தை யுபதேசித்தாரோ, அந்தச் சரீரத்தையா தகிப்பது? எந்த அழகிய சரீரத்திலே யிருந்துகொண்டு ஸ்வாமிகள் உலகை வசியப்படுத்தினரோ அந்த அழகிய சரீரத்தையா தகிப்பது? எரிந்து கரிந்து சாம்பலாய்ப் போவதற்கு விடப்படும்படியான பொருளா சுவாமிகளுடைய சரீரம்? "ஆ! ஆ! சுவாமிகளுடைய சரீரம் காஷாய உடை தரித்து, புஷ்பக் குவியல்களினாலும் மாலைகளினாலும் நன்ருய் அலங்கரிக்கப்பட்டிருந்தது; சுவாமிகளுடைய சரீரமானது மிருத்துஞ்ஜயனாகிய சாக்ஷாத் பரமேஸ்வரனுடையது போன்று விளங்கிற்று. சுவாமிகளுடைய சரீரம் ருத்திர பூமிக்குக் கொண்டுபோகப்பட்டது என்றவுடனே எவரும் ஸ்மசானத்துக்கு அல்லது சுடலைக்குக் கொண்டு போகப்பட்டது என்று நினைக்கவேண்டாம். உலகிலே அதர்மங்களையும் அசத்தியத்தையும் ஒழித்து ருத்திராகாரமாக விளங்கிய சுவாமிகள் எந்த இடத்திலே தம்முடைய சரீரம் தகிக்கப்படவேண்டும் என்று கூறினரோ

அந்த இடத்தையே நாம் இப்பொழுது ருத்திர பூமி யென்கிறோம். சுவாமிகளின் திவ்ய சரீரமானது மடத்து மைதானம் முழுதையும் கடந்து, அம் மைதானத்துத் தென்கிழக்கு மூலையிலேயுள்ள வில்வவிருக்ஷத்தை யடைந்தது. இந்த இடத்திலேதான் தம்முடைய சரீரத்தைக் காஷ்டத்தில் வைக்கும்படி சுவாமிகளே இரண்டு மூன்று நாட்களுக்கு முன் ஆக்ஞை யிட்டிருந்தார்.

பெரிய காஷ்டம் சேர்க்கப்பட்டிருந்தது. மணங் கமழ்ந்த சந்தனக்கட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. "ஹர, ஹர, மஹாதேவ," "ஜய, ஜய, விவேகாநந்த சுவாமிக்கு ஜய," "ஜய, ஜய, ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சருக்கு ஜய" சந்யாசிகளும் சிஷ்யர்களும் சரீரத்தைக் காஷ்டத்தின் மேல் வைத்தார்கள். பெரும்பான்மையோருடைய மனத்திலும் ஒரே யுணர்ச்சி ஒரு நிமிஷம் உண்டாயிற்று. ஆ! ஆ! சுவாமிகளுடைய பெருமைதான் என்னே! உலகிலே எந்தத் தேசத்திலேயாகிலும் இம்மாதிரி புகழும் பெருமையும் படைத்த மஹான் சமீபகாலத்தில் எப்பொழுதேனும் இருந்ததுண்டா? காஷ்டத்திலே அக்கினி வைக்கப்பட்டது; சந்யாசிகளெல்லோரும் அக்கினி வைத்தார்கள்; இன்னும் எண்ணற்ற எத்தனையோ ஜனங்கள் அக்கினி வைத்தார்கள்; அந்தோ! அழகிய, அற்புதமான சரீரம் அக்கினிக்கு இரையாகின்றது! மெல்ல மெல்ல, காஷ்டம் முழுதும் அக்கினி பற்றிக்கொண்டது. நெருப்பு மெல்ல மெல்லப் பிடிக்க ஆரம்பித்து, பின்னர்ப் பெரு நெருப்பாகக்

கொழுந்துவிட் டெரியத் தொடங்கிவிட்டது. பின்னர் ஒரே நெருப்பு, ஒரே பெரும் புகை. இப் புகையின் மூலமாக இருண்ட தூமத்துண்டுகள், சந்தனம், அகில் முதலிய விருக்ஷங்களின் கட்டைகளின் மணமும், சாம்பிராணி மணமும், இன்னும் பலவித வாசனைத் திரவியங்களின் மணமும் கொண்டு எங்கும் வியாபித்துக்கொண்டன. சரீரத்தினுடைய மேலே போடப்பட்டிருந்த காஷாய உடைகள் எரிந்தன; புஷ்பங்களெல்லாம் கரிந்துவிட்டன. நெருப்பு அகாதமாக வீச ஆரம்பித்துவிட்டது; எங்கும் ஜ்வாலை வீசத் தொடங்கிவிட்டது; எங்கும் ஒரே வெளிச்சம் ஆய்விட்டது. சுவாமிகளின் அத்தியந்த பக்தர்களினுடையவும் நண்பர்களுடையவும் ஹிருதயங்களிலே ஒருவித உணர்ச்சி யுண்டாயிற்று; ஓ! சுவாமிகள் மரிக்கவில்லை, மரிக்கவும் முடியாது. என்றும் ஏகமாய் நித்தியமாயுள்ள ஆத்மா மாத்திரமாயுள்ள சுவாமிகள் எப்படி மரித்தல் கூடும்? நிலைபற்ற நாற்றச் சரீரந்தான் மறித்தது; சுவாமிகள் வேண்டுமென்றால் இதுபோன்றோ இதினும் அழகியதாகவோ எத்தனைச் சரீரங்கள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ள முடியும். "இந்த உணர்ச்சி யுண்டானதுதான்; அவர்களெல்லோருக்கும் ஒருவித சாந்தகுணம் உண்டாயிற்று; உபசாந்தி விளங்கிற்று; அவர்களுடைய முகங்களிலே ஒருவித ஒளி திகழ்ந்தது.

மாலை சூழ்ந்தது; சூரியன் அஸ்தமித்தது. இருள் சூழ்ந்தது. இருள் மிகுந்திருந்த உலகத்திலே சுவாமிகள் ஒரு

தனிச் சூரியன் பிரகாசித்ததுபோல் இருந்தார்; இப்பொழுது மாலையானவுடன் உலகெங்கும் இருள் சூழ்ந்துகொள்ள, சுவாமிகளுடைய சரீரம் எரிந்துகொண்டே உலகுக்கு ஒளியை வீசிக்கொண்டிருந்தது. சிறிது நேரமாகவே, அக்கினி அணைந்துவிட்டது; ஒளி மங்கிவிட்டது. எங்கும் அமைதி; காஷ்டமும் அமைதிப்பட்டுவிட்டது; அங்குச் சூழ்ந்திருந்த அனைவருடையவும் ஹிருதயத்திலும் அமைதி ஏற்பட்டுவிட்டது. சந்யாசிகள் கங்காநதியிலிருந்து குடம் குடமாக ஜலம் கொண்டுவந்து, காஷ்டத்தின்மீது கொட்டி யணைத்தார்கள்; பின்னர், ஈச்வரனை நோக்கி, "எம்பெருமானே! ஸ்ரீ ராமகிருஷ்ணராகவும் விவேகநந்தராகவும் வடிவெடுத்து எங்களைத் தடுத்தாட்கொண்ட கருணாகரனே! எங்களை ரக்ஷிப்பாய்! எங்களை ரக்ஷிப்பாய்!" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

மறுநாள் விடிந்தது; சந்யாசிகள் மிகுந்த பக்தி சிரத்தையுடனே சென்று சுவாமிகளுடைய அஸ்திகளையும் மற்றும் எடுத்துத் தங்களுக்கும் பிற்காலத்தவருக்கும் சேமித்துவைக்கும் ஒரு பெருநிதியம்போலச் சேர்த்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டார்கள். சுவாமிகளுடைய சரீரம் தகிக்கப்பட்ட இடத்திலே இப்பொழுது ஒரு க்ஷேத்திரம் உள்ளது; அதிலே பீடமொன்று பெரிதாகக் கட்டப்பட்டு, அப் பீடத்தின் மேலே சுவாமிகளுடைய பதுமையொன்று பளிங்கினால் செய்யப்பெற்று வைக்கப்பட்டிருக்கிறது; இப் பதுமையைப் பார்க்கும்பொழுதே, பக்தகோடிகளுக்கு ஒருவித சிலிர்சிலிர்ப்பு உண்டாகின்றது; பதுமையி

னின்றும் அத்தகைய ஒருசக்தி விளங்குகின்றது; பதுமையி னிடத்தே அத்தகைய ஒரு சாந்நித்தியம் பிரகாசிக்கின் றது. இப்பதுமையினெதிரேதான் சந்பாசிகள் இப்பொழுது உட்கார்ந்துகொண்டு நிஷ்டையி லிருக்கிறார்கள். சுவாமிக ளுடைய சரீரம் கிடத்தித் தகிக்கப்பட்ட இடத்திலேதான் பீடம்கட்டப்பட்டிருக்கிறது. சுவாமிகளின் சரீரத்து அஸ்தி களில் சில இந்த க்ஷேத்திரத்தில் வைத்துப் பூஜிக்கப்படு கின்றன; சில ஒரு செப்புப் பாத்திரத்திலே இட்டுப் பக வான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் பீடத்தினருகே வைக்கப்பட்டுருக்கின்றன.

அன்பும் அனுபூதியும் உள்ளவர்கள் அழுது மயங்கு வார்களோ? ஞான வொளியானது ஹிருதயத்திலிருந்து விசனத்தையும் அந்தகாரத்தையும் துரத்தியடிக்க வல் லது என்பதில் சந்தேக முண்டோ?

சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும் சிஷ்யர்க ளும் விசனத்தி லாழ்ந்திருந்தபொழுதே ஒருவித ஆறுதல் அவர்களுக்கு உண்டாய்க்கொண்டிருந்தது; 'சமஸ்த கோடி ஜீவராசிகளையும் காக்கக் கடமைப்பட்டுள்ள சாக்ஷாத் பர மேஸ்வரன் தங்களைக் கைவிடமாட்டான்' என்று ஒரு பெரும் நம்பிக்கை யுண்டாயிற்று. ஆகையினால், அவர்களு டைய விசனயானது மெல்ல மெல்ல அவர்களுக்குத் தெரி யாமலே மாற ஆரம்பித்தது.

சுவாமிகள் தமது அந்திய காலத்திலே எப்படித் தவம் செய்வதிலும் தியானம் செய்வதிலும் தீவிரமான

சிரத்தை செலுத்தினரோ, அப்படியே சுவாமிகளுடைய சிஷ்யர்களும் சகோதர சந்யாசிகளும், சுவாமிகளுடைய சரீரம் போன பிற்பாடு, இடைவிடாத் தவம் செய்வதிலும் தியானம் செய்வதிலும் தங்கள் மனத்தைச் செலுத்தினர்கள். இன்னும் அவர்களுக்குப் பெரிய பெரிய உணர்ச்சிகள் எல்லாம் உண்டாயின; தக்ஷிணேச்வராலயத்திலே எத்தனையோ வருஷங்கள் இருந்த இடம் விட்டுப் பெயராமல் உட்கார்ந்து ஈச்வரனைப் பிரத்தியக்ஷத்தில் தர்சித்த ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சருடைய புத்திரர்கள் தாங்களென்றும், 'அவருடைய கொள்கைகளைப் பரப்புவதற்கே சுவாமிகள் அவதரித்தார்' என்றும், 'ஆகையினல், தாங்களும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய கொள்கைகளைப் பரப்புவதற்காகவே வந்தவர்கள்' என்றும் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள்; சுவாமிகள் அடைந்துள்ள பதவியை, சுவாமிகள் சென்றுள்ள இடத்தைத் தாங்களும் சீக்கிரத்தில், இப்பொழுதோ, பின்னரோ, அடையவேண்டியவர்களே யென்றும் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள்.

78-வது அத்தியாயம்

"நான் சரீரத்தைத் துப்பிவிட்டேன்"

ஸ்வாமி விவேகாநந்தர் உலகபந்தங்களை யுதறியெறிந்துவிட்டார்; உண்மைப் பொருளினிடம் சேர்ந்து விட்டார்; உண்மைப்பொருளேயாய்விட்டார்; மரண பூமியைக்கடந்து

மஹத்தான பிரஹ்மபதம் அடைந்துவிட்டார்; அவர் சின் மய ஸ்வரூபியாய்விட்டார். உலகை உய்விப்பதற்காக எந்த உண்மையான தம்முடைய ஸ்தானத்தை விட்டு அஞ் ஞானமே சொரூபமாயுள்ள இந்த அவனியில் இறங்கினுரோ, அந்த ஸ்தானத்துக்கே மறுபடியும் சென்றுவிட்டார். தாம் இன்னுரென்று தெரிந்துகொண்ட வுடனே, சுவாமிகள் உலகோத்தாரணத்தின் பொருட்டுத் தம்மிடம் வைக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீ ராமகிருஷ்ணரால் கூறப் பட்ட லேசான மாயையையும் மீறி உடைத்தெறிந்துவிட்டு தம்முடைய யதா ஸ்தானத்தை யடைந்துவிட்டார்; தம் முடைய உண்மையான நிலையை அடைந்துவிட்டார். சுவாமிகள், எக் கார்யம் செய்யவேண்டி இப் பூவுலகில் அவதரித்தாரோ, அக் காரியத்தைச் செய்து முடித்து விட்டு, நாமரூபக் கட்டுக்களைச் சின்னபின்னப்படுத்தி உடைத்தெறிந்துவிட்டு, தம்முடைய உத்கிருஷ்ட கொள் கைகள் எங்கே பரிசுத்தமா யிருக்கின்றனவோ அங்கே போய்விட்டார். சுவாமிகள் உலகிலே செய்யும்படி நேரிட்ட பிரமாதமான அபாரமான செய்கைகளினுல் அவருடைய சரீரம் உடைந்துவிட்டது; அவர் யோகமார்க்கத்தின் மூலமாக, ஆத்மாநுபூதி யடைந்து சச்சிதாநந்தமய மாய் விட்டார்; அவர் ஈச்வரனுடைய பேரொளிகளைத் தரிசித்தார்; அவர் உத்கிருஷ்டோத்கிருஷ்ட ஒளியாய் விளங்கினுர்; அவர் சக்தி யெல்லாவற்றையும் கடந்து, சக்திக்கும் சக்தியாயிருக்கப்பட்ட மஹா சக்தியினிடம் சென்று சேர்ந்து லயித்துவிட்டார். அவருடைய அந்தக்

காணமானது கரைந்துவிட்டது; அவர் நிர்வாண பதவியை யடைந்துவிட்டார். சுவாமிகள் பிரஹ்ம தரிசனம் செய்தார்; பிரஹ்மமே யானார்; பிரஹ்மமா யிருந்தார். இந்த உத்கிருஷ்ட பதவியிலே சுவாமிகள் சேர்ந்துவிட்ட பொழுது, நிர்வாணசாகரத்தைக் கண்டு, அமிருத வாழ்க்கையிலே ஆழ்ந்துவிட்டார்.

சுவாமிகள் தமது மனத்தை ஏகமேவாத்விதீயப் பிரஹ்மத்தினிடத்தே ஏகாக்கிரப்படுத்தி மஹா சமாதியடையப்போகும் சமயத்தில், தமது ஆப்த நண்பர்களையும் அந்தரங்க சிஷ்யர்களையும் ஒருமுறை நினைத்துக்கொண்டார் போலும்! அச் சமயத்திலே அவர்களெல்லோருக்கும் ஒருவித பேரானந்தம் உண்டாயிற்று; அவர்களுடைய பிரபஞ்சப் பற்றுதல்களெல்லாம் ஒழிந்தன; உலகக் கவலைகளெல்லாம் நீங்கின. ஒரு நிமிஷ நேரத்துக்கு அவர்கள் ஒளி மிகுந்த இன்பசொரூபிகளாயிருந்தார்கள்; இந்த நண்பர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் அவரவர்களுடைய மனத்தின் பரிபக்குவத் தன்மைக்கும் பக்தியின் தாரதம்யத்துக்கும் ஏற்றவாறு தோற்றங்கள் உண்டாயின.

ஸ்வாமிகள் மஹா சமாதி யடைந்துகொண்டிருந்த சமயத்திலே ஒரு சிஷ்யருக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று; ஒரு குழந்தையானது மிகுந்த ஆச்சர்யத்தைக் காண்பிப்பதற்கு அறிகுறியாக நாக்கை வெளியே நீட்டுவது போலச் சுவாமிகள் தமது நாக்கை நீட்டிக்கொண்டு நிற்பதுபோல நிற்கக் கண்டார். அந்தச் சிஷ்யர் ஒரு

பெண்பாலாவார். இம் மாது சிரோமணி அச் சமயத்திலே தனிமையில் உட்கார்ந்து நிஷ்டை செய்துகொண்டிருந்தார். நிஷ்டைப்பொழுதிலேதான் அம்மாதிரி தோற்றம் தோன்றியது. ஆனுல், அம் மாதுக்கு அத் தோற்றத்தின் பொருள் அப்பொழுது விளங்கவில்லை. சின்னுட்கள் கழித்துச் சுவாமிகளுடைய மஹாசமாதியைப்பற்றிக் கேள்விப்பட்ட பொழுதுதான் அவருக்கு அத் தோற்றத்தின் பொருள் தெரியவந்தது.

இன்னொரு சிஷ்யருக்கு அச் சமயத்திலே இன்னொரு விதத் தோற்ற முண்டாயிற்று; ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் மறுபடியும் ஒரு தரம் புதிதாக மரிப்பதுபோலத் தோற்றம் உண்டாயிற்று; இதுவும் அன்று இராத்திரிதான் அவர் உறங்கியபொழுது உண்டாயிற்று; பொழுது விடிந்தது; 'சுவாமிகள் மஹா சமாதி யடைந்துவிட்டார்' என்ற சமாச்சாரமும் வந்துவிட்டது. வெகு தூரத்திலே, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய அந்ய நாடுகளிலே யிருந்த சிஷ்யர்கள் இருந்தாற்போலிருந்து திடுக்கிட்டார்கள்; சுவாமிகள் மஹா சமாதி யடைந்த அச் சமயத்திலே இவர்களுடைய மனமெல்லாம் வெட்ட வெளியாய்ப் போய்விட்டது போலத் தோன்றிவிட்டது; இருள் சூழ்ந்துகொண்டது, கண்ணைக் கட்டி நடுக்காட்டிலே கொண்டுவந்து விடப்பட்டவர்கள் போலக் கலங்கி நின்ருர்கள்; அவர்களுடைய ஹிருதயமானது துடித்தது, நடுங்கிற்று; பிரபஞ்சமே அவர்களுடைய பாதங்களினின்றும் நழுவிப்போவதுபோலத்

தோன்றிற்று; காரணமற்ற அதிரகஸ்யமான பயமொன்று அவர்களைப் பிடித்துக்கொண்டது. உண்மையிலேயே ஒருவர் காரணம் தெரியாது கோவென்று கதறிக் கதறி யழுதார். பின்னர் சமாச்சாரம் தெரிய வந்தது. "ஸ்வாமி விவேகானந்தர் மஹா சமாதி யடைந்துவிட்டார்." ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் கூறியிருந்த வசனங்கள் எல்லோருக்கும் ஞாபகத்துக்கு வந்தன; 'சுவாமிகள் பூர்ணப் பிரக்ஞையுடனேதான், நல்ல ஸ்வய அறிவுடனேதான், தாமாகவேதான் மஹா சமாதி யடைந்தார்' என்று நம்பினார்கள். இந்தச் சமாச்சாரம் கேள்விப்பட்டவுடனே ஒருவர் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "சிவ, சிவ" என்று சிவ கோஷம் செய்து ஸ்தோத்திரம் செய்தார்.

அதே இரவில் சுவாமி ராமகிருஷ்ணாநந்தர் நன்றாக நித்திரை செய்துகொண்டிருக்கையில் ஒரு சப்தம் எழுப்பினது போலத் தோன்றிற்று; தேஜசும் மஹிமையும் ஜ்வலிக்கும் திவ்ய முகத்துடனே சுவாமி விவேகானந்தர் சுவாமி ராமகிருஷ்ணாநந்தருக்கு எதிரே தோன்றி, "ஸோஷி! ஸோஷி! நான் சரீரத்தைத் துப்பிவிட்டேன்" என்று, போர் முகத்திலிருந்து ஜயம் பெற்றுத் திரும்பி வந்த போர் வீரன் போலப் புன்னகை புரிந்துகொண்டே கூறினார்; இவ்விதத் தோற்றம் சுவாமி ராமகிருஷ்ணாநந்தருக்கு உண்டாயிற்று; மறுநாட் காலையில் சுவாமிகள் மஹா சமாதி யடைந்துவிட்ட சமாச்சாரத்தைச் சுவாமி ராமகிருஷ்ணாநந்தர் அறியலானார் ஆம்; ஆம்! சுவாமிகள் எச்சில்

சொரூபமாயிருந்த சரீரத்தைத் துப்பிவிட்டார். பிரபஞ்சமே எச்சில்தானே. சுவாமிகள் தமது ஸ்தூல சூட்சும காரண சரீரங்களேயும், ஏன்? இந்த பிரபஞ்சத்தையுமே துப்பிவிட்டு, சாக்ஷாத் பிரஹ்மவஸ்துவாய்த் தனித்துவிட்டார்.

ஸ்வாமிகள் இப்பொழுது மரணமும் மாயையும் அணுக முடியாத அமிருத பூமிக்குச் சென்றுவிட்டார். அவர் ஆத்மாவாகத் தனித்துவிட்டார்; ஆத்மாவேயாய்விட்டார். சுவாமிகள் மஹா சமாதியடைவதற்குப் பன்னாட்களுக்கு முன்னதாகவே அவர் "நான் எனது சரீரத்தை விட்டு வெளியேறிவிடுவது—உபயோகத்துக்குத் தகாத உடை போன்று எறிந்துவிடுவது நன்மையாகக் காணலாம். ஆனால், நான் வேலை செய்வதை நிறுத்தமாட்டேன்! உலகமும் ஈச்வரனும் ஒன்றேயென்று உலகமானது தெரிந்து கொள்ளும் வரையில் நான் எங்கும் ஜனங்களுக்கு ஆவேசத்தை யூட்டுவேன்." என்று சொன்னது ஸ்வாமிகள் மஹா சமாதியடைந்து அதனால் ஏக்கத்திலாழ்ந்திருக்கும் சந்யாசிகளுக்கு ஞாபகத்துக்கு வந்தது; அவர்கள் சிறிது சந்தோஷமடைந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு அந்த ஆவேசம் உண்டாய்விட்டது. பிரபஞ்சத்திலுள்ள சமஸ்த கோடி ஜீவராசிகளும் முக்தி யடைகிறவரையில் தமக்கு முக்தி வேண்டியதில்லை யென்று பகிரங்கமாகப் பறையடித்துக்கொண்டிருந்தார். தரிசனமும் அனுபூதியும் அழிவுறுவன அல்ல. இவை சத்தியத்தினுடையவை யாகையினு

லே நித்தியமானவையாம். சத்திய அநுபவ முள்ளவன் நித்தியன்; நித்தியத்துவமானது அவனிடத்தில் உள்ளங் கை நெல்லிக்கனிபோல அவ்வளவு தெளிவாக விளங்கு கிறது; ஸ்வதந்திரத்தையும் ஸ்வாநுபூதியையும் தெரிவிக் கும் கோஷமானது ஜனன மரண எல்லைக்கப்பால் கேட்கப் படுகின்றது; சநாதன தர்மத்தை ரக்ஷிப்பதற்காக சாக்ஷாத் பரமேச்வரனால் அனுப்பப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடையவும் ஸ்ரீ சுவாமி விவேகாநந்தருடையவும் பக்த கோடிகள் "ஜய ஸ்ரீ குரு மகாராஜருக்கு ஜய," "ஜய ஸ்ரீ சுவாமிஜி மகாராஜருக்கு ஜய," "ஜய ஸ்ரீ சநாதன தருமத் துக்கு ஜய" என்று கிளம்புகின்ற கோஷமானது உலகி லுள்ள ஜீவராசிகளை யெல்லாம் அஞ்ஞான நித்திரையி னின்றும் விழிக்கும்படி செய்ய வல்லன.

சநாதன தர்மத்தின்மீது எம்பெருமானுடைய கிரு பை பரிபூரணமாக உள்ளது. சாஸ்வத தர்மம் மறுபடியும் நிலைநிறுத்தப்பட்டுவிட்டது. ஈச்வர புருஷர்கள் இவ் வுலகி லே அவதரித்து இவ் வுலகைப் பரிசுத்தம் செய்துவிட் டார்கள். ஈச்வரனே, சத்தியமே உலக நன்மைக்காக ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகாநந்த வடிவெடுத்து வந்ததுபோலும்! இந்தியாவினுடைய உண்மைத் தன்மை உருவெடுத்தது; சநாதன தர்மத்தைப் புனர் உத்தாரணம் செய்வதற்காக அவதரித்த மஹா புருஷர்கள் இருவரும் மாம்சப் போர் வையை உதறிவிட்டு, அகண்ட மௌனத்தில் அடங்கி விட்டார்கள்; அவர்கள் வந்த காரியம் முடிந்துவிட்டது;

அவர்கள் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டார்கள். மாயா மர்த்தனியும் உயிரூட்டுபவளுமாகிய ஜகன்மாதாவே மானுடச்சட்டைசாத்திக்கொண்டு பூவுலகில்நடந்து லீலைபுரிந்தாள். பிரஹ்மாதித்தன் தனது திவ்ய ஒளியை வீசி, அந்தகாரத்தையும் அஞ்ஞானத்தையும் அகற்றிவிட்டு, தனது ஞானகிரணங்களால் உலகு முழுதையும் வியாபித்துக்கொண்டான். உலகு முழுதுக்கும் ஒரு உபதேசம் சென்றது; உலகு முழுதும் ஒன்று சேர்ந்தது. "தர்மம் எப்பொழுதெல்லாம் க்ஷீணித்து அதர்மம் விருத்தியாகின்றதோ அப்பொழுதெல்லாம் நான் அவதரிக்கின்றேன்" என்று கூறியருளிய ஆயர்கோமான் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய வசனப்படி இப்பொழுதும் அவதார புருஷர்கள் தோன்றி மறைந்து விட்டார்கள்.

சுவாமிகளுடைய ஜீவித சரித்தை ஆதிமுதல் அந்தம் வரையில் விடாது கவனித்து வந்தவர்களுக்குச் சுவாமிகளுடைய அசாதாரணத்தன்மை, திவ்விய மகிமை நன்கு விளங்கும். சுவாமிகளுடைய வடிவம் இப் பூவுலகிலே மறைந்து போய்விட்டாலும், சகலருடைய சரீரமும்போல சுவாமிகளுடைய சரீரமும் ஈற்றில் ஒரு பிடி சாம்பரா யாய்விட்டாலும், சுவாமிகள் அவர் ஆரம்பித்துச் சென்ற முயற்சிகளிலே அமரத்தன்மை பெற்று விளங்குகின்றார். சுவாமிகள் நேரே பேசியபொழுது அவருடைய வார்த்தைகள் எவ்வளவு சக்தியும் ஊக்கமும் உண்மையும் கொண்டு விளங்கினவோ அவ்வளவு சக்தியும் ஊக்கமும் உண்மை

யும் கொண்டு அவ்வார்த்தைகள் இன்றும் விளங்குகின்றது; இன்றும் அவ் வார்த்தைகள் ஆயிரக் கணக்கானவர்களுக்கு ஆவேசத்தை யூட்டுகின்றன. சுவாமிகள் நித்திய வாழ்க்கை வாழ்பவர்; ஈச்வர கார்யங்கள் நடைபெறுதற்கு ஏற்ற கருவியாவர்; ஞானமாகிற ஒரு குழந்தையை உலகிலே அவர் ஈன்றுவிட்டுப் போயிருக்கிறார்; அது வளர்ந்து பெரியதாகி உலகை அரசாளப் போகிறது. அவர் இப்பொழுது தம்முடைய உபதேசங்களின் உரு வடைந்திருக்கிறார். ஸ்வாநுபூதி யொளியை எவராலும் அணைக்க முடியாது. சுவாமிகளை ஒரு பொழுதுகூடப் பார்த்திராதவர்கள் தேசத்தின் பல பாகங்களி லிருந்தும், வெகு தூரத்திலிருந்துகூட, நூற்றுக் கணக்காக வரத் தொடங்கினார்கள். சுவாமிகள் பூவுலகி லிருந்தபொழுதுகூட, அவர் அமரத்தன்மையாம் அந்தர் திருஷ்டி யுடையவரா யிருந்தார். சுவாமிகள் மரித்துவிட்டாரென்று நினைப்பது தப்பு; அவர் அன்பே யுருவாய ஆநந்தத்தை அனைவருக்கும் அளித்துக் கொண்டு விளங்குகிறார். அவர் இந்த ஜகத்தி லிருந்த பொழுதே மிருத்யுஞ்ஜயரா யிருந்தார். அவர் இப் பூவுலகி லிருந்த பொழுதே, நிஷ்டையில் மரண எல்லையைக் கடந்து நித்யத்துவத்தில் தங்கி வசித்திருந்தார்; மரணச் சுவர்களை யுடைத்தெறிந்து, அழியாத வஸ்து ஒன்று உள்ளது என்று நன்றாகக் கண்டு குதுகலித்திருந்தார். ஜகன்மாதாவின் அம்சம் பெற்று விளங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஞானத்தைச் சுவாமிகள் பானம்பண்ணி யிருந்ததினாலே, அவர் தனிக் காட்டுச் சிங்கம்போல மரணபூமியினுள்ளே

நுழைந்து ஜப கோஷம் புரிந்தார். அவர் மானுட வுடல் தரித்திருந்தபொழுது எங்கெல்லாம் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருந்தாரோ அங்கெல்லாம் 'அவர் மரணமற்றவர்' என்பது தெள்ளிதில் விளங்கக் கிடக்கின்றது. "ஆன்றோருக்கு அழிவு முண்டோ?"

சுவாமிகள் அழிவற்று விளங்குகிறார் என்பதற்கு அத்தாக்ஷி அவருடைய சிஷ்பகோடிகள் அவரை மறவாது என்றென்றும் போற்றுகிறார்கள் என்பது மாத்திரம் அல்ல; ஸ்வாநுபூதி யடைந்த புருஷனை, ஆத்மாவை, தேச கால வர்த்தமானங்களினால் கட்டுப் படுத்த முடியுமோ? கட்டுப்பாடுகளெல்லாம் நீங்கிவிட்டன; ஈச்வரத்துவம் ஒன்றே எஞ்சியுள்ளது; இரண்டாவதாக ஒன்றும் இல்லை; ஆகையினால், எல்லைகளும் இல்லை. ஆத்மா அளவற்றது; அளக்க முடியாதது; எல்லை யற்றது; இரண்டில்லாதது; திரிபுடி யற்றது. இரண்டற்ற பிரஹ்மம் ஒன்றேயுள்ளது.

அஸ்தமன மறியாத ஆதித்தன் உதித்துவிட்டான். நாளுக்கு நாள் அவனுடைய ஒளி ஓங்கிப் பிரகாசித்து வருகிறது; அந்தப் பிரகாசத்தைத் தடுப்பதற்கு எவராலும் முடியாது, எதனாலும் முடியாது. ஆயினும், சிலர் தடுக்கப் பார்த்தார்கள். சுவாமிகள் அவர்களை நோக்கிப் பின் வருமாறு எழுதினார்:—

"அரிய நண்பர்காள்! உங்களுடைய இம் முயற்சிகள் வீணேயாம்! இடத்தின் எல்லைகளையெல்லாம் முழுக்கி

யிருக்கின்ற இந்த அகண்டமான, எல்லையற்ற, மகா அலை யானது—இதனுடைய பனி வெள்ளை முடியின்மீது இந்தத் தெய்வீகவடிவமான திவ்ய சந்நிதான ஒளியிலே பிரகாசிக்கின்றது—இது நாங்கள் பெயரையாவது கீர்த்தி யையாவது ஐச்வர்யத்தையாவது நாடி ஆத்திரத் துடனே செய்யும் முயற்சிகளினால் ஏற்பட்ட பயனாயிருந் தால்,—அப்படியாயின், உங்களுடைய அல்லது வேறெவ ருடையவும் முயற்சி யில்லாமலே இந்த அலையானது, பிரபஞ்சத்தின் அபார நியதிக்குக் கீழ்ப்படிந்து இனிமேல் ஒருபொழுதும் எழுந்திருக்க முடியாதபடி, காலமாகிற அகண்டசாகரக் கருப்பையிலே சீக்கிரம் மடிந்துவிடும்! ஆனால், இந்த அலையானது, ஏகமாம் ஜகன்மாதாவின் சித் தத்தின்படிக்கும், திவ்ய அருட்கிருபையினாலும், ஒரு மஹானுடைய ஹிருதயத்தின் தன்னல மற்ற அன்பாம் வெள்ளத்தினால் உலகை முழுக்குவதற்கு ஆரம்பித்திருந் தால், அப்படியாயின், ஏ, பலவீனமுள்ள மனிதனே! சர்வ சக்தி வாய்ந்த மாதாவின் சித்தத்தின் பிரகாரம் நடக்கின்ற அபிவிருத்தியை நீ தடுக்கும்படி உன்னிடத்தில் என்ன சக்தியுள்ளது?"

கங்காநதியிலே ஒருவேளை பெருவெள்ளம் பெருகி தக்ஷிணேச்வ ராலயத்தை அடியோடு அடித்துக்கொண்டு போனாலும் போய்விடலாம்; காசிமுதலான இடங்களிலே அமைக்கப்பட்டுள்ள ஸேவாச்ரமங்களும் அழிந்து போனாலும் போகலாம்; ஹிமோத்கிரியிலே ஏற்பட்டுள்ள

அத்வைதாச்ரமமும் இருந்த இடம் தெரியாமற் போனாலும் போகலாம்; ஆனால், சத்தியத்தையும் ஸ்வாநுபவத்தையும் அழிப்பதற்கு எவரால் முடியும்?

ஆகையினால், சுவாமிகளுடைய முயற்சிகள் பலனடையாது செய்வதற்கு எவராலும் முடியாது, ஜகன் மாதாவின் சித்தமாகிய பிரகிருதியே நடத்துகின்றது. சுவாமிகள் உலகிலே வேலை செய்ததெல்லாம் ஏறக்குறைய ஒன்பது வருஷங்கள்தாம் ஆகின்றன; ஆயினும், சுவாமிகள் நட்ட விதைகள் ஆங்காங்கு முளை கிளம்பித் துளிர்த்து வருகின்றன. கன்னியாகுமரிமுதல் காச்மீரம் வரையில், அவருடைய வசனங்கள் ஜனசமூகத்தினுள்ளே ஒரு நூதன ஊக்கத்தையும் உயிரையும் அளித்திருக்கின்றன. இந்திய நாடு முழுதிலும் ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளுடைய உணர்ச்சி பரவிவிட்டது. ஹிமோத்கிரியிலே கர்மாநுஷ்டானத்துக்கும் யோகாநுஷ்டானத்துக்கும் ஒரு ஆச்ரமம் கட்டப்பட்டுள்ளது; சென்னையிலும், பங்களூரிலும், கல்கத்தாவிலும் ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகாநந்த மடங்கள் உள்ளன. காசியிலே, கங்கால் என்னும் ஊரிலே, பிருந்தாவனத்திலே, பிரயாகையிலே ஸேவாச்ரமங்கள் இருக்கின்றன; முர்ஷிதாபாத் நகரிலே அநாதாலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெகு தூரத்திலேயுள்ள அமெரிக்கா தேசத்திலேகூட, வேதாந்த சக்தி வியாபித்து வருகின்றது. சுவாமிகளைப் பார்ப்பதற்குப் பாக்கியம் பெறாதவர்கள் கூடச் சுவாமிகளிடத்திலே அத்தியந்த

அன்பு பூண்டு விளங்குகிறார்கள். இத்தகைய அன்பு அவர்களுக்கு ஏற்பட்டவுடனே அவர்கள் பரிபக்குவ மடைந்துவிடுகிறார்கள்; அவர்கள் விழித்தவர்களாகிவிடு கிறார்கள்.

வருஷந்தோறும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடையவும் ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளுடையவும் ஜனனதின உற்சவங் கள் மேன்மேலும் பெருமையுடனும் விமர்சையுடனும் கொண்டாடப்படுகின்றன. வருஷந்தோறும் இவ் வுற்சவத் தைக் கண்ணுற்றுக் களிக்க வருபவர்களின் தொகை ஆயி ரக்கணக்காக அதிகரித்துவருகின்றது. இவ் வுற்சவங்களின் போது, வருகிறவர்கள் நிறபதற்குக்கூட மடங்களிலும் மடங்களைச் சேர்ந்த மைதானங்களிலும் இடம் கிடைப்ப தில்லை. கல்கத்தா வேலூர் மடமானது ஒரு பெரிய யாத் திரை ஸ்தலமாய்விட்டது. வருஷத்தின் எல்லாக் காலங்களி லும் ஸ்ரீ ராமகிருஷ்ணருடையவும் ஸ்ரீ விவேகாநந்தருடைய வும் பக்தகோடிகள் ஆயிரக்கணக்காக வந்து குவிந்து கொண்டேயிருக்கிறார்கள்; தேசத்தின் பல பாகங்களிலிருந் தும், பல பாஷைகளிலிருந்தும், பல மதங்களிலிருந்தும் வந்துகொண்டே யிருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண- விவேகாநந்தர், ஸ்ரீ விவேகாநந்த- ராமகிருஷ்ணர்—எல்லாம் ஒன்றுதான், எப்படிச் சொன்ன லும் ஒன்றுதான். இரண்டும் ஏகமாய்விட்டது; இன் பாநுபூதியாய்விட்டது; குருக்ஷேத்திர யுத்தகளத்திலே உபதேசம் புரிந்தருளியவர், நவத்வீபத்திலே அவதரித்து

வங்கநாட்டுக்குப் பக்தியை யூட்டியவர், அத்வைத கோஷம் புரிந்து ஆர்யப் பெருமையை நிலை நாட்டியவர், உலகுக்கு அஹிம்சையை உபதேசித்து உண்மையை உணர்த்தியருளியவர், கிறிஸ்தவர்களுக் குருவாகவும் மகம்மதியர்களுக்குக் கர்த்தாவாகவும் வந்தவர், இப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணராக, ஸ்ரீ விவேகாநந்தராக, ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகாநந்தராக, ஸ்ரீ விவேகாநந்த ராமகிருஷ்ணராக அவதரித்த முற்காலங்களிலெல்லாம் எந்த வேதத்தைக் கோஷித்தாரோ, அந்த வேதத்தையே இப்பொழுதும் கோஷித்தார்.

உலகிலே காமினி, காஞ்சனம் ஜயிக்கப்பட்டது; பெண்ணும் பொன்னும் சக்தி யிழந்துவிட்டன. ஸ்ரீ விவேகாநந்தருடைய கக்ஷி என்று ஒரு கக்ஷி ஏற்பட்டிருந்தாலும், இந்தக் கக்ஷியாரிடத்தில் கக்ஷிக்கொள்கைகள் கிடையா. ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாற்றவேண்டுமென்ற எண்ண மில்லை. ஜீவராசிகளை அவரவர்கள் இருக்கும் இடங்களிலிருந்து கைதூக்கி விடவேண்டுமென்பதே ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகாநந்தருடைய கொள்கை. 'இன்னதுதான் செய்ய வேண்டும், இப்படித்தான் இருக்கவேண்டும்' என்று ஸ்ரீ விவேகாநந்தருடைய உபதேசங்களும் அப்படி யில்லவேயில்லை. சுவாமி விவேகாநந்தருடைய உபதேசங்கள் தாராளமாயுள்ளன; ஸ்வதந்திரமாயுள்ளன. அவை ஸ்வதந்திர சக்தி யுபதேசமாகும். சுவாமி விவேகாநந்தருடைய உபதேசங்களில் சர்வ சங்க பரித்

தியாகம்; சமஸ்தகோடி ஜீவஸேவை இவ்விரண்டு கருத்துக்களும் நிரம்பித் ததும்பிக் கிடக்கின்றன.

ஆ! ஆ! இவ்விருவர்களுடையவும் அன்புதான் என்னே! இவ்விருவர்களுடையவும் திடசித்தம்தான் என்னே! தைர்யம்தான் என்னே! வைராக்கியம்தான் என்னே! ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர்: "ஒரு ஜீவனுக்காவது என்னால் உதவி செய்ய முடியுமானால், நான் மறுபடியும் மறுபடியும் பிறவி யெடுத்து ஸ்தூல வியாதிகளை உற்சாகத்துடன் அநுபவிப்பேன், ஜவ்வரிசிக்கஞ்சி குடித்துக்கொண்டும் உயிர் வாழ்வேன்" என்று கூறியதையும், ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் "நான் ஒரு ஜீவனுக்காவது உதவி செய்ய முடியுமானல் ஒரு லக்ஷம் நரகங்களுக்குள் சந்தோஷமாகச் செல்வேன்" என்று கூறியதையும் நாம் பார்க்கும் பொழுது, இவ்விரு மஹான்களும் மானிடவர்க்கத்தினிடத்திலே எத்தகைய அத்தியந்த அன்பு செலுத்தினார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகின்றது. வடிவத்திலே அழகு, ஒழுக்கத்திலே உயர்வு, பேச்சிலே சமர்த்து, வித்தையிலே விரிவு, தேசாபிமானம், எளியவர்களிடத்திலே ஈவிரக்கம், வேதசாஸ்திரங்களை விளக்கி யுரைக்கும் சக்தி, பரோபகாரத்திலே பதைபதைப்பு, கடுந்தவம், பக்தி, சிரத்தை, அதிதீவிரதர வைராக்கியம், நிஷ்டை யுணர்ச்சி, காமினி - காஞ்சன ஜயம், பெயர்-கீர்த்தி முதலியவற்றினிடத்திலே உதாசினதை, அறிவும் அன்பும் ஒருங்கே அமையப்பெற்றிருத்தல், தீர்க்க திரு

ஷ்டி, ஸ்வாநுபூதி இவையெல்லாம் சேர்ந்து அமையப்பெற்றிருந்த புருஷன் விவேகாநந்தரைத் தவிர வேறொருவர் இருந்ததுண்டா? இத்தகைய பெரியோருடைய ஜீவிதத்தையும் உபதேசத்தையும் நாம் மறக்க முடியுமா? சகோதரர்களே! விழித்துக்கொள்ளுங்கள்! சுவாமி விவேகாநந்தர் உங்களைக் கூப்பிடுகிறார்; அவருடைய ஆக்ஞையின்படி நடவுங்கள்! சகோதரிகளே! சுவாமி விவேகாநந்தருடைய அமுதமொழிகளை உங்களுடைய குழந்தைகளுக்கு உங்களுடைய ஸ்தன்னிய அமுதத்தின் கூடவே ஊட்டுங்கள்.

ஓம் தத் சத்.

அநுபந்தம்

சுவாமி விவேகாநந்தருடைய ஜீவி, சரித்திரத்தை எழுதி முடித்துவிட்டோம். ஆனால், அவருடைய விசேஷ குணங்களையும் லக்ஷணங்களையும் பற்றிப் பிரத்தியேகம் பிரத்தியேகமாகவும் சுருக்கமாகவும் எடுத்துக்காட்ட உத்தேசிக்கின்றோம். சுவாமிகள் அபாரகுணமும் அசாதாரண லக்ஷணங்களும் அமைந்து விளங்கினர். அவருடைய தன்மைகள் இன்னின்னவை யென்று எவராலும் அரிய வொண்ணாததாயிருந்தது; சில சமயங்களிலே அவை ஒன்றுக்கொன்று நேர் எதிரிடைபோ லிருந்தன. மேல் மட்டத்திலே இவ்வேற்றுமை விசேஷங்களெல்லாம் நிறைந்திருந்தாலும், அடியிலே, உண்மையிலே ஒரு ஒற்றுமை பலமாக இருந்தது. சுவாமி விவேகாநந்தர் சுவாமி விவேகாநந்தராக இருந்தார். சுவாமிகளுடைய அநுபவங்கள் பல; சுவாமிகளுடைய அப்பியாசங்கள் அநேகம். ஆகையால், சுவாமிகளுடைய லக்ஷணம் இன்னதுதான் என்று அறிந்துகொள்ளுதல் அசாத்தியம். அவருடைய அறிவு எவ்வளவு விரிந்து வியாபித்திருந்ததோ அதே மாதிரி அவருடைய அன்பும் எங்கும் பரவியதாயிருந்தது. அவருடைய அறிவு சகல விஷயங்களையும் பற்றியிருந்ததுபோல, அவருடைய அன்பும் சமஸ்த வஸ்துக்களையும் பற்றியிருந்தது. இப்பொழுது நாம் அவருடைய விசேஷ லக்ஷணங்களுள் சிலவற்றைத் தனித்தனியாக எடுத்துக் கூறுவோம்.

மூட நம்பிக்கையினுல், வெறும் நம்பிக்கை மாத்திரத்தால் கட்டப்பட்ட கட்டிடங்களையெல்லாம் சுவாமிகள் தமது புத்தியினின்றும் கடைந்தெடுத்த அறிவென்னும் கட்டப்பாரை கொண்டு இடித்துத் தகர்த்துவிட்டார். சுவாமிகள் தம்முடைய அறிவின் தீர்மானங்களையே அடிக்கடி பரிசோதனை செய்து, இன்னும் உயர்ந்த முடிவுகளை யடைய முயற்சிப்பார் ஆராய்ச்சி விஷயத்திலே அவர் ஒருபொழுதும் சலிப்படைந்து உட்கார்ந்தவரல்லர். 'இதுதான் முடிவான எண்ணம்' என்று அவர் ஒருபொழுதும் நம்பியதில்லை; அறிவினுல் அடையும் தீர்மானங்களிலே அவர் ஒருபொழுதும் திருப்தி யடைந்ததில்லை. முடிந்த தீர்மானம் என்ருல் அந்தத் தீர்மானத்துக்கு எல்லை ஏற்பட்டுவிட்டதென்று பொருள் அல்லவா? எல்லைபற்று எங்கெங்கும் தானேயாகி விளங்கும் பரப்பொருளைப்பற்றிய அறிவே அறிவாகும். உலகிலே பல விஷயங்களையும் பற்றிக் கிடக்கின்ற அறிவும் அப் பரம்பொருளைப் பற்றியுள்ள அறிவின் வேற்றுருவேயாகும், உலகிலுள்ள பல வஸ்துக்களும் பல விஷயங்களும் அப் பரம்பொருளின் வேற்றுருக்களே யாதலான். ஆகையால், சுவாமிகளுடைய ஜீவிதமெல்லாம் முடிவற்ற ஆராய்ச்சியிலேயே முடிந்தது. அறிவுக்கு அளவில்லை, எல்லையில்லையென்பதை அவர் கண்டுகொண்டவர். சுவாமிகள் பிடிவாதமாக எக்கொள்கைகளையும் வைத்துக் கொண் டிருக்கவில்லை; 'மேன்மேலும் திருப்திகரமான விடை கிடைக்கவேண்டும்' என்ற ஆவல் அவரிலுள்ளே பொங்கிக்கொண்டிருந்தது.

"சாக்ஷாத் ஈச்வரனுக்கு எல்லையை ஏற்படுத்தி 'இது தான் அவருடைய லக்ஷணம், அவரை யடைதற்கு இது தான் மார்க்கம்' என்று கூறுவதைவிட வேறு பயங்கர மான பாபம் ஒன்றுமே யில்லை" என்பது சுவாமிகளுடைய சித்தாந்தம். "அகண்ட லக்ஷணங்களையுடைய ஆத்ம நாதனை யடைதற்கு அநந்தம் கோடி மார்க்கங்கள் உண்டு" என்று பறை யடித்தார். "இந்த லக்ஷணம் வாய்ந்தவர் தான் ஈச்வரன்' என்று சொல்பவன் 'ஈச்வரன் என்று ஒன்று இல்லை' என்று வாதிக்கின்ற நாஸ்திகனைப் பார்க்கி லும் மஹா பாபி" என்றும், தமது சிஷ்யர்கள் அத்தகைய நெருக்கமான, ஒடுங்கிய கொள்கைகளை யுடைத்தாயிருக்கக் கூடாதென்றும் மிகவும் பலமாக வற்புறுத்திவந்தார். சுவாமிகள் கொஞ்சம்கூட ஈவிரக்கமின்றி சிறு கொள்கை களையெல்லாம் உடைந்தெறிந்துவிடுவார்.

ஒரு சமயத்திலே பக்தி மார்க்கத்தைப் புகழ்வார்; உடனே அதைத் தகர்த்தெறிந்துவிட்டு ஞானமார்க்கத்தை மேம்படுத்துவார்; இரண்டுக்கும் உள்ள தாரதம்யத்தை எடுத்துக் காட்டி இரண்டினுடையவும் சிறுமைகளையும் பெருமைகளையும் நன்கு விளக்குவார். அவருக்கு நம்பிக்கை யினிடத்தில் நம்பிக்கையில்லாமலில்லை; தம்மிடம் வந்தவர் கள் தங்கள் நம்பிக்கைகளில் திடமாயிருக்கிறார்களா என்று பரிசோதிக்கும் பொருட்டு, மறுக்க முடியாத நியா யங்கள் கூறி அந்த நம்பிக்கைகளைச் சின்னபின்னப்படு த்துவார். "நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருத்தல்

கூடாது; மேன்மேலும், மேலும் மேலும் போய்க்கொண்டிருக்கவேண்டும்; அபிவிருத்தி யடைந்துகொண்டேயிருத்தல் வேண்டும்; உயர்வை யடைந்துகொண்டேயிருத்தல் வேண்டும்" இதுதான் சுவாமிகள் கோரியது.

சுவாமிகளிடத்திவ் சிஷ்யனாயிருப்பது வெகு கடினம். சுவாமிகளோ "பயங்கரமான குரு." சுவாமிகள் எப்படி நன்மையை நன்மையின் பொருட்டு வேண்டினாரோ, அப்படியே தீமையையும் தீமையின் பொருட்டும் உபாசித்தார்; துன்பத்தையும் துன்பத்துக்காக உபாசித்தார். "ஆத்மாவின் அபரிமிதவான லக்ஷணங்களுள் ஒன்று அபியாயிருப்பது, அதாவது பயமற்றிருப்பது"என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன; ஆகையினால், பயத்தினால் பதறுகிறவன் ஆத்மாவை யடைய முடியாது" என்று சுவாமிகள் கூறுவது வழக்கம். மரணத்தை நேருக்கு நேர் எதிர்க்க முடியாதவன் அமரத்தன்மை யெய்துவதற்கு அர்கனாகமாட்டான். உத்கிருஷ்டமான ஆத்மாநுபூதியும் மோக்ஷ சாம்பிராஜ்யமும் உண்டாகவேண்டுமானால் மனிதன்: சந்தேகம், விபரீதம், புத்திக்குழப்பம் இவை யெல்லாவற்றையும் அநுபவிக்கத்தான் வேண்டும். உண்மையான ஞான அநுபூதியிலே சுகமும் துக்கமும் சமமாகி, உத்கிருஷ்ட சுகமென்று ஒன்று உண்டாய்விடும். "மீன் வாழ்க்கை கூடாது! எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! 'மனம் தடுமாறிவிடுமோ' என்று பயந்து 'ஒரு நிலைக்கு மேலே பார்க்கக் கூடாது' என்ற தீர்மானத்தில் தன்னைக்

கட்டுப் படுத்திக்கொண்டு குருடனுயிருக்கிற மனிதனைக் காட்டிலும் உண்மையான சம்சயவாதியாயிருப்பது மேல்! மதவைராக்கியத்திலே பிடிவாத முள்ளவனுடைய நம்பிக் கையானது ஞான விஷயத்திலே ஏற்படுகின்ற குருட்டுத் தன்மை மாதிரிகள் அனைத்திலும் மிகமிகக் கெட்டது!'' என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவார். ஆதலால், "எவ ரேனும், அவர் எத்தகைய பெரியோராயிருந்தாலும் சரி, சொன்னல் கேட்டுவிடக் கூடாது'' என்றும், "சொந்தப் புத்தியினலே காரியங்களை ஊகித்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளவேண்டும்'' என்றும் சுவாமிகள் தமது சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ்யர்களுக்கும் உபதேசித்து வற் புறுத்தி வந்தார்.

தன்னம்பிக்கை யில்லாமல் எப்பொழுதும் பிறரிடத் தில் சார்ந்திருப்பவர்களால் உலகிலே எப்பெருங் காரிய மும் செய்ய முடியாது. தம்மிடம் வருகின்றவர்களின் விலையைக் கண்டுபிடிக்க எண்ணி, அவரவர்கள் உயர்வாகக் கொண்டாடுகின்ற கொள்கைகளை யெல்லாம் உடைத்துத் தூகள் பண்ணி யூதிவிட்டு, அவரவர்களுக்குப் பின்னல் உள்ள மனிதனைக் கண்டு பிடித்துவிடுவார். நம்பிக்கையி லே திடமில்லாதவர்கள், ஆட்டத்துக்கு உட்படுகிறவர்கள் இவர்களுக்குத் தெளிவு ஏற்படவில்லை. மனத்திலுள்ளதை சுவாமிகள் எப்பொழுதும் ஒளித்தவரல்லர்; தமக்குச் சொந்தமாக நேரிடும் சந்தேகங்களைக்கூட எச்சமயத்தி லும் எவர் முன்னிலையிலும் கூறிவிடுவார்.

சுவாமிகளுடைய மொழிகளை எதிர்த்து எவரேனும் தர்க்கம் செய்து பிடிவாதமாயிருந்தால், அது சுவாமிகளுக்குச் சந்தோஷம் உண்டாக்கும். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய இன்னொரு சிஷ்யராகிய கிரீசச்சந்திரர் எடுத்ததற்கெல்லாம் சுவாமிகளை எதிர்த்துப் பேசுவார்; இவரோ திடநம்பிக்கை யுள்ளவர்; ஸாக்ஷாத பக்தியுள்ளவர்; இருவரும் நெடுநேரம் வாதாடிக்கொண்டே யிருப்பார்கள்; கடைசியாகக் கிரீசர் கண்களிலே ஒருவித பக்தி யொளி மிக, "உங்களுடைய தத்துவ நியாயங்களைப்பற்றியெல்லாம் எனக்கேன் கவலை? எனக்குத் தெரிந்துள்ளது எனக்குத் தெரியும்! என்னிடமுள்ள பக்தியே நிச்சய ஞானம். ஏனெனில், அது எனது ஹிருதயத்திலே ஒளி வீசி, எனக்கு அளவற்ற சக்தியை அளிக்கின்றது." என்பார். சுவாமிகளுக்கு இது சந்தோஷத்தை யளிக்கும். சுவாமிகளுக்கு இத்தகைய திடபக்தியையும் ஸ்வாநுபூதியையும் கண்டால் வெகு ஆசை; இத்தகைய பக்தர்களிடத்திலே சுவாமிகள் அதிக மரியாதை செலுத்துவார். தம்மைக் கடைசிவரையில் விடாது எதிர்ப்பவர்கள் எவர் என்று பார்த்து அவர்களுடனே வாதாடுவதென்றால் சுவாமிகளுக்கு வெகு ஆநந்தம்.

சில சமயங்களிலே சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்மீதிலேயே குற்றம் கூற ஆரம்பித்துவிடுவார். "எனது ஜீவிதம் முழுதும் ஒரு பைத்தியக்காரனுடைய உபதேசத்தினால் கெட்டுவிட்டது" என்பார்.

"உபாசனமார்க்க மெல்லாம் மூடத்தனம்" என்றும், "மூளை கலங்கியவனைத் தவிர வேறெவனும் அந்த மார்க்கத்தை யநுஷ்டிக்க முடியாது" என்றும் கூறுவார். இப்படிக் கூறிவிட்டு, சுற்றிலும் உள்ளவர்களைப் பார்ப்பார்; அவர்கள் பிரமிப்பதை அல்லது மனம் குழம்புவதைக் கண்டு புந்நகை புரிந்துகொண்டே பக்திமார்க்கமே சிறந்ததென்று நிரூபித்துக் காண்பிப்பார். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரிடத்தில் அவருக்கிருந்த குருபக்தியில் எள்ளளவேனும் குறைவுபட்டதென்று நினைக்கவேண்டாம்; பக்திமார்க்கத்திலே அவருக்கு நம்பிக்கையில்லை யென்றும் கருதவேண்டாம். குருபக்தியில் கொஞ்சமும் குறைவு செய்யாமல், குருவையும் குறை கூறுவது உண்மையான பக்தசிரேஷ்டர்களுடைய லக்ஷணம்.

ஒரு சமயத்திலே சந்யாசிகளுள் ஒருவருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே நம்பிக்கை திடமாக இல்லை யென்பதைக் கண்ட சுவாமிகள் அந்தச் சந்யாசிக்கு ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய மஹிமைகளை யெடுத்துரைத்து, மிகமிகக் கோபத்துடனே ஒரு கடிதம் எழுதியிருந்தார். அநேக சமயங்களிலே சுவாமிகள் "ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரை உலகிலே அவதரித்துள்ள ரக்ஷகர்த்தாக்களிலே மிகமிக உத்கிருஷ்டமானவர்" என்று கூறியுள்ளார். ஒரு சிஷ்யனுக்கு எழுதிய கடிதத்திலே சுவாமிகள் முதன்முதலில் "எவருடைய சக்தியினாலே நாமும் உலகு முழுதும் ஆசீர்வதிக்கப்படுகின்றோமோ, அந்த ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு,

முக்த புருஷருக்கு, ஈச்வரனுக்கு, சிவ சொரூபத்துக்கு நமஸ்காரம்!'' என்று எழுதியுள்ளார்.

இப்படிக் குற்றம் சொல்லிக் குறை கூறிக்கொண்டிருந்த அழகிய நேரங்களிலெல்லாம் சுவாமிகள் அகண்டப்பிரதேசத்தினருகே, நாமரூபங்களை யெல்லாம் கடந்து உபாசனைகளை யெல்லாம் கடந்து, சஞ்சரித்துக்கொண்டிருந்தார். சில சமயங்களிலே சுவாமிகள் தத்துவ ஞானத்தை ''அதி சமர்த்தான புத்திப் புரட்டு'' என்று இகழ்ந்து, ''வரண்ட மூளையினால் ஈச்வரனை யடைய முடியாது'' என்றும், ''ஹிருதயம் ஒன்றினாலேயே முடியும்'' என்றும் கூறுவார். வேறு சில சமயங்களிலே ''மதத்திலிருந்து தத்துவஞான வித்தையை யெடுத்துவிட்டால், பேய்ப்பிடி வாதமும் மூடத்தனமு மன்றி வேறு என்ன பாக்கியிருக்கும்!'' என்று சொல்வர். இவர் இப்படிச் சொல்லும் பொழுது, கேட்க வந்தவர்களில் சிலர் உடனே பக்தர்களாய் விடுவார்கள்; சிலர் உடனே ஞானிகளாய்விடுவார்கள். சில சமயங்களிலே பக்தர்களுக்கு பக்தி பெருகிப் பரந்து ஞானத்திலே கொண்டுவந்து விட்டுவிடும்; சில சமயங்களிலே ஞானிகளுக்கு பக்தியாவேசம் உண்டாய் விடும்.

ஹிமோத்கிரியிலே அத்வைத ஆச்ரமம் ஸ்தாபித்த பொழுது, ''அங்கே எவ்வித நாமரூபத்தையும் வைத்துப் பூஜிக்கக்கூடாது'' என்று சுவாமிகள் கண்டிப்பாகக் கட்டளை யிட்டிருந்தார். ஒரு சமயத்தில் அங்குச் சுவாமிகள்

சென்றபொழுது அந்த ஆச்ரமத்திலே யிருந்தவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணருடைய படமொன்றை வைத்துப் பூஜித்து வருவதைக் கண்டு, வெகு கோபமாகி, "கிழவன் இங்கும் வந்துவிட்டானா?" என்று சொல்லிவிட்டு, அப் படத்தை யங்கிருந்து எடுக்கும்படி ஆக்ஞாபித்துவிட்டார். 'அத்வைத நிஷ்டை யநுஷ்டித்து அநுபூதி யடையவேண்டு மென்ற எண்ணத்துடனே ஸ்தாபிக்கப்பட்டுள்ள அத்வைத ஆச்ரமத்திலே நாமரூப உபாசனைகள் நுழைந்துவிட்டால், ஆஸ்ரமம் ஸ்தாபிக்கப்பட்டதின் கருத்து வியர்த்தமாய் விடும்' என்று சுவாமிகள் பயந்தார். 'உபாசனா மார்க்கம் அநுஷ்டிக்கப்படுகின்ற இடத்திலே அத்வைத அநுஷ்டானம் நடைபெற முடியாது' என்பதையும் சுவாமிகள் நன்கு உணர்ந்தவராகி, "அங்கு எவ்வித உபாசனையுமே கூடாது" என்று தடுத்தார். ஆனால், அந்த இடத்திலே, இப்படித் தடுத்து உத்தரவு செய்த மறு நிமிஷத்திலேயே, சுவாமிகள் தமது குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி அற்புதமான விஷயங்களையெல்லாம் கூறினார்.

இப்படி ஒன்றுக்கொன்று முரண்பாடான கொள்கைகளைச் சுவாமிகள் அநுஷ்டித்ததிலே ஆழ்ந்த பொருள் ஒன்று உள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்போல, சுவாமிகளும் சர்வமதக் கொள்கைகளையும் தமது ஜீவிதத்திலே சேர்த்துக் காண்பிக்க விரும்பினார். "ஒவ்வொருவரும் அவரவருடைய இஷ்டமார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும்" என்பதே சுவாமிகளுடைய அடிக்கொள்கை. "ஆனால்,

எவரும் மதவைராக்கியம் மிகுந்து மூடப்பிடிவாத முள்ளவர்களாய்விடக் கூடாது" என்று கண்டித்துகொண்டே வந்தார். அவர் எவரையும் விட்டவரல்லர்; எவரிடத்தும் தாக்ஷணியம் பாராட்டியவரல்லர்; தம்மிடத்திலே தாக்ஷணியமில்லாதவர். அவர் எல்லாவற்றையும் தலைகீழாக்கிவிடுவார். அவர் ஒவ்வொன்றையும் பல காலத்தும் பல சிஷ்யர்களிடத்தும் பகுத்துக் காட்டிக் குறை கூறுவார், மதிப்பிடுவார், மெச்சுவார். ஸ்வாநுபூதியுள்ள இடத்திலே சுவாமிகள் ஒன்றும் பேசமாட்டார்; இங்குத்தான் சுவாமிகளுடைய பேச்சு அடங்கும், நா ஒடுங்கும். எங்கேனும் பிரத்தியக்ஷத்தில் சத்தியாநுபூதியைப் பார்த்துவிட்டால், அங்கே சுவாமிகள் பயபக்தி மிகுந்து நிற்பார். சுவாமிகள் இவ்வளவு தைர்யமாக எல்லாவற்றையும் குறை கூறும்படி அவருக்கு ஆதாரவான பலமாயிருந்தது எது தெரியுமா? அவருடைய ஞானதிருஷ்டியின் பெருமையும், அவருடைய ஸ்வாநுபூதியின் மஹிமையுமேதான். அவர் ஸ்வாநுபூதி எய்தினர், தரிசித்தார், தெரிந்துகொண்டார்.

ஆஷாடபூதி வேஷத்தையும், சோம்பற்றன்மையையும் உடைத்தெறிவதிலே சுவாமிகளுக்கு ஒரு குதுகலம் உண்டாகும். "எல்லாரும் அவரவருக்கு இஷ்டமான மார்க்கத்தை யநுசரித்து, நாநாவிதமாகக் காணப்படுகின்ற இவ்வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டுகொள்ளவேண்டும்" என்பதே சுவாமிகளுடைய அபிப்பிராயம். "மலைகளையும் பெயர்த்தெறியக் கூடிய நம்பிக்கை யுண்டாகவேண்டும்,

ஜாதிமத ஆசாரங்களை யெல்லாம் கடந்து இக் கனவுகளுக் கெல்லாம் முடிவு காட்டிப் பரம்பொருளிடத்தே இட்டுச் செல்லவல்ல ஞானப்பிரக்ஞை யுண்டாகவேண்டும்'' என்று சுவாமிகள் தமது சிஷ்யர்களிடம் அடிக்கடி கூறுவார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துச் சந்யாசிகளுள் ஒருவர் மேனாட்டுச் சிஷ்யர் ஒருவரிடத்திலே "விவேகாநந்தர் பல தன்மை வாய்ந்த புருஷர். அவரிடத்திலிருந்து தங்களுக்கு வேண்டியதை நீங்கள் பெற்றுக்கொண்டுவிட்டால், உடனே அநுஷ்டானத்திலே கொண்டு வாருங்கள். இல்லையேல் அவர், உங்களைக் குழப்பிவிடுவார்'' என்று கூறினர். இது மிகவும் உண்மைதான்.

இன்னும், ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாயுள்ள அபிப்பிராயங்களையெல்லாம் ஆச்சர்யகரமாகத் தம்மிடத்தில் ஒற்றுமைப்படுத்திக்கொண்டிருந்த புருஷர் சுவாமி விவேகாநந்தர். ஆ! ஆ! எத்தகைய மஹான்! அவருடைய தேஜசுதான் என்ன ஒளி!

இப்பொழுது சுவாமி விவேகாநந்தருடைய விசேஷ லக்ஷணங்களுள் ஒவ்வொன்றை யெடுத்துப் பகுத்துப் பார்ப்போம். முதலாவது அவருடைய சந்யாச மகிமையைப் பற்றிக் கூறுவோம்.

---

1. ஸ்ரீ விவேகாநந்தர்—சந்யாசி

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுவாமிகளிடத்திலே எத்தகைய அத்தியந்த அன்பு வைத்திருந்தாரென்பதை நம் நேயர்கள் முன்னமே படித்திருப்பார்கள். "சுவாமிகள் பிறவியிலேயே சந்யாசி" என்றும், "லௌகிக மாசு அணுவளவும் படியாத பரிசுத்த புருஷர்" என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மிடம் வந்த எல்லோரிடத்தும் சொல்லிக்கொண்டுவந்தார்; சுவாமிகளும் அப்படியேதான் தமது செய்கைகளிலும் நிரூபித்துவந்தார். சுவாமிகள் மஹா வைராக்கியசாலி யென்பதை முன்னமேயே பல உதாரணங்களினல் நிரூபித்திருக்கிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுவாமிகளை "எனது சுகர்" என்று குறிப்பிட்டுக் கூப்பிடுவார்; "பிறவியிலேயே பிரஹ்ம ஞானி" என்று சொல்வார். இன்னும், பரமஹம்சர் "தேவி! ஜகன்மாதா! உலகினருடனே பேசிப் பேசி எனது உதடுகள் எரிகின்றன. சம்பாஷித்துச் சந்தோஷிப்பதற்கு ஒரு மஹாத்மாவை யளிக்கமாட்டாயா?" என்று கதறிக் கதறிப் பிரார்த்தனை செய்தாரல்லவா? ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பிரார்த்தனை கேட்கப்பட்டது; பையன் நரேந்திரன் வந்து சேர்ந்தான்; சம்பாஷித்துத் சம்பாஷித்து ஏற்பட்ட அந்யோந்யம் சந்தோஷத்தின் பயனாகச் சுவாமி விவேகாநந்தரானார்.

ஆ! ஆ! தக்ஷிணேச்வரத்திலே கடந்த நாட்கள் ஞாபகத்துக்கு வருகின்றன! காசிபுரத்து அநுபவங்களெல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன! சுவாமிகள் அமெரிக்காவுக்குச் சென்று பெயர் பெறுவதற்கு முன்பு வராககரத்து மடத்து விஷயங்களெல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன! அச் சமயங்களிலே அங்கு அநுபவிக்கப்பட்ட ஆநந்தத்தின் அளவுதான் என்னே! உண்மையை யுள்ளபடி கண்ட சந்யாசிக்குப் பொன்னும் பெண்ணும் ஒரு பெரிதா? பிரபஞ்சத்தை நசுக்கித் துகள் பண்ணி ஊதி யெறிந்துவிட்டு, பிரஹ்ம சொரூபமே தானய் நின்றவர்கட்குப் பிரபஞ்சப் பித்து மறுபடியும் பிடிக்குமா? அகண்ட சாம்பிராஜ்ய ஐச்வர்யத்துக்கு அதிபதியாகிய சந்யாசிக்கு உலக ஐச்வர்யங்களெல்லாம் ஒரு திரணம் மாத்திரம்தானே! இவ்வுலக ஐச்வர்யங்கள் சர்வசங்க பரித்தியாகியாகிய சந்யாசிக்குப் புழுதிமண்போல. உலகம் உயர்ந்ததுதான்; கிருகஸ்த வாழ்க்கை உயர்ந்ததுதான்; உலக நியாயங்களெல்லாம் உயர்ந்தவைதான்; ஜனசமூக அபிவிருத்திக்கு வேண்டிய சிறந்த விஷயங்களெல்லாம் அழகியவைதாம். ஆனல், சந்யாச வாழ்க்கையைக் கிருகஸ்த வாழ்க்கையுடனே ஒப்பிட்டுப் பார்த்தால், கிருகஸ்த வாழ்க்கை மின்மினி போலவும் சந்யாச வாழ்க்கை ஆதித்யன்போலவும் இருக்கிறது. சந்யாச வாழ்க்கை ஈச்வர வாழ்க்கை; சந்யாச வாழ்க்கையினுள் உள்ள உணர்ச்சி ஈச்வரனேயாகும். இது முக்தி வாழ்க்கை; சர்வபந்த நிவிருத்தி

வாழ்க்கை; ஈச்வரனிடத்துச் செலுத்தப்படுகின்ற அதநியந்த அன்பு வாழ்க்கை; இதுதான் சுவாமி விவேகாநந்தருடைய வாழ்க்கை.

உலகின் ஐச்வர்யமெல்லாம், உலகின் டாம்பீகம், உலகின் சக்தி, உலகின் ஆகருஷணங்கள் இவை சந்யாசியை ஏமாற்ற முடியாது. இவை சுவாமி விவேகாநந்தரை ஒருபொழுதும் ஏமாற்றியதில்லை. அடிக்கடி அரசர்களாலும் ஐச்வர்யவான்களாலும் சூழப்பட்டுப் போற்றப்பட்டு வந்தார்; ஆயினும், அவர் சர்வசங்க பரித்தியாக சந்யாசியாகவே விளங்கினர். பெண்ணும் பொன்னும் பிரமாதமாகக் கொண்டாடப்படுகின்ற மேனாட்டில் சுவாமிகள் வசிக்க நேர்ந்தும், அவர் தாம் சர்வசங்க பரித்தியாகியும் காமினி-காஞ்சன ஜித்துமாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரஹம்சருடைய சிஷ்யர் என்பதையாவது தாம் சந்யாசியென்பதையாவது ஒரு கணமும் மறந்தவரல்லர். அவர், ஊர் பெயர் அற்றுச் சஞ்சாரம் செய்த நாட்களின் ஞாபகமே அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். சர்வசங்க பரித்தியாகமே அவருடைய ஜீவிதத்தின் பல்லவி. இக்காலத்து மஹான்களிலே எவராவது இவ்வளவு வைராக்கியசாலியாக இருந்தாரா என்பது சந்தேகம். காஷாய உடை தரித்துக், கையிலே தண்டம் தாங்கிக், கம்பீரமான நடை நடந்து, கண்ணுக்கினிய அழகுடனே ஆண் சிங்கம் போல எவரையும் அலக்ஷியம் செய்து நடக்கும் ஒரு சந்யாசியை நினைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பிரஹ்மபதவியிலேயே இருந்துகொண்டு, ஒரு ஸ்பர்ச மாத்திரத்தி

னாலே, இச்சா மாத்திரத்தினாலே, சாந்நித்திய மாத்திரத்தினாலே மாயையைப் பொடிப்பொடி யாக்கவல்ல சமர்த்துடைய மஹான் ஒருவரை நினைத்துக்கொள்ளுங்கள். அவருடைய சந்நிதியிலே அவருடைய சிஷ்யர்களுக்கு ஒரு புதிய ஆதர்சம் உண்டாகும்.

நிவேதிதா சகோதரி பின் வருமாறு எழுதுகிறார்:—
"மனிதனுக்கு விஷயங்களினிடத்துள்ள தன்மை முழுதும் மாற்றப்பட்டுவிட்டது; கொடுக்கப்பட்ட எண்ணத்துடன் மனிதன் அக்கினியையும் எடுத்துக்கொண்டான் போலும்! அல்லது நினைப்பின் ஒரு வழக்கம் முழுதும் ஒருவனை விட்டுவிட, அந்த விஷயத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூட அந்யோந்யம் பேசிக்கொள்ளாமல் அதன் இடத்திலே ஒரு புதிய பார்வை தோன்றிவிட்டதாக அவன் திடீரென்று கண்டுகொண்டான். 'அவர் சமீபத்திலிருக்கிறார்' என்ற சங்கதி யொன்றினாலேயே, விஷயமானது தர்க்க பூமியைக் கடந்துவிட்டது போலவும், அறிவு வளர்ந்துவிட்டது போலவும் தோன்றிற்று. இவ்விதவாக, வாசனையையும் மதிப்பையும்பற்றிய கேள்விகள் அலக்ஷியமாய்விட்டன. அவரைச் சுற்றியிருந்த ஜனங்களின் ஹிருதயங்களிலே, விழுங்கும் அக்கினிபோல, தியாகத்தைப்பற்றிய ஆசையானது இவ்விதமாகக் கொளுத்தப்பட்டது."

'மனுஷ்யவர்க்கம் மேம்படவேண்டும்' என்ற கருத்துடனே சுவாமிகள் எண்ணற்ற யோசனைகளும் ஏற்பாடுக

ளும் செய்துகொண்டிருந்தார்; பார்ப்பவர்கட்கு அவர் எப்பொழுதும் சலன மனமுடையவர்போலத் தோன்றும் படி அவ்வளவு உலகுபகார சிந்தனைகளிலும், கைங்கர்யங்க ளிலும் அழுந்தியிருந்தார். ஆயினும், அவர் அவருடைய ஹிருதயத்திலே முக்தராகவே யிருந்தார்; ஸ்வதந்திர ராகவே யிருந்தார். அவர் தமது கைங்கர்யங்களை நிறை வேற்றிக்கொள்வதற்குப் பெயரையாவது, கீர்த்தியை யாவது, ஜயத்தையாவது, பணத்தையாவது நாடவில்லை. அவர் கொடூரமாக வேலை செய்த காலங்களில்கூட, அவர் தேசாபிமானத்தினலே கொதித்துப் பேசிக்கொண் டிருந்தபொழுதுகூட, மௌனமாக நிஷ்டை செய்வதற்கு எல்லாவற்றையும் உதறி யெறிந்துவிட்டு எந்த நிமிஷத் தில் எந்தக் குகைக்குள் போய்விடுவாரோ? என்று அனைவ ரும் ஐயுற்று அஞ்சும்படியாகவே யிருந்துகொண் டிருந்தது. ஹிமோத்கிரியில் குளிர்ந்த பாறையின்மீது ஓரத்திலே உட்கார்ந்து நீர் வீழ்ச்சிகளின் "ஹர, ஹர, ஓம், ஓம்" ஆநந்தகரமான வேதகோஷத்தைக் கேட்டுக் கொண்டே மஹா சமாதியடையத் தாம் விரும்புவதாகச் சுவாமிகள் அடிக்கடி கூறிவந்தார்.

சுவாமிகள் தம்மைத் தாமே ஈச்வரனுக்குச் சமர்ப் பணம் செய்துகொண்டுவிட்டார். அவருக்கு ஜகன் மாதாவே சத்திய சக்தி; ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரே சத்திய சக்தி; ஜகன்மாதாவும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரும் ஒன்றே. சுவாமிகள் அடிக்கடி பரமஹம்சரை

நினைத்துக்கொண்டு, "குரூர்பிரஹ்மா, குரூர்விஷ்ணு, குரூர்தேவோ மஹேஸ்வர, குருசாக்ஷாத் பரம்பிரஹ்ம, தஸ்மை ஸ்ரீ குருவே நம:" என்ற குருஸ்தோத்திர ஸ்லோகத்தை அடிக்கடிச் சொல்லுவார்.

சுவாமிகள் உலக போகங்களையெல்லாம் வாந்தி போலக் கருதினர்; தக்ஷிணேச்வரத்திலே ஸ்ரீ ராம கிருஷ்ணரிடம் வரும்போது எந்த ஸ்திதியிலே களங்க மற்று வந்தாரோ, அந்த ஸ்திதியிலேயே களங்கமற்றுச் சிறு குழந்தைபோலக் கடைசிவரையி லிருந்தார். பயங் கரமான கனவுகள் கண்டு பயந்து நடுநடுங்கி, "அம்மா! உன்னண்டை வந்துவிடுகிறேன், எனக்குப் பயமாயிருக் கிறது" என்று தாயைக் கூப்பிட்டுக் கதறுகின்ற இளங் குழந்தையைப்போலச் சுவாமிகள் ஜகன்மாதாவை நோக்கி, "அம்மே! அகில உலகங்களுக்கும் அம்மே! என்னைப் பிடிக்க வரும் இவ் வுலகப் பிசாசை விரட்டி, என்னை உன் பக்கல் சேர்த்துக் கொள்ளாயோ?" என்று கதறியிருக் கிறார்.

அவர் நெருப்புப் போன்று பரிசுத்தத் தன்மை வாய்ந்தவர்; அவர் எத்தகைய ஜனங்களுடனும் கலந்து கொண்டாலும், எந்த விதமான ஆகாரம் சாப்பிட்டாலும் அந்த ஜனங்களின் சம்சர்க்கத்தினலாவது ஆகாரத்தின் பயனாகவாவது உண்டாகின்ற தோஷங்களை யெல்லாம் நெருப்பினது போன்ற அவருடைய பரிசுத்தத் தன்மை போக்கடித்துவிடும்; அவர், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய

கூற்றுப்படி "ஆத்மஞானக் காட்டுத்தீ"யா யிருந்தார். அவரைச் சுற்றிலும் ஞானவொளி வீசிக்கொண்டே யிருந்தது, மௌனகோஷம் வியாபித்துக்கொண்டே யிருந்தது. சந்யாச வாழ்க்கை அவருக்கு ரம்யமானதாகவும், மேம்பட்டதாகவும், ஈச்வர வாழ்க்கையாகவும் இருந்தது. சில சமயங்களிலே அவருடைய முகத்திலேயே சந்யாச வாழ்க்கையின் பெருமை பொங்கித் ததும்பிப் பிரகாசித்தது; அவர் தமது சகோதர சந்யாசிகளுக்கும் சிஷ்யர்களுக்கும் முன்னே இச் சமயங்களில் மாற்றுருப்பெற்று விளங்கினார். அவர் அடங்கியிருந்த சரீரக் கூட்டின் மூலமாக, அவருள்ளே யிருந்த மஹா சக்தி ஜகத் முழுதும் நடுங்கும்படி நிர்த்தனம் செய்ததைச் சிஷ்யர்கள் கண்டு பிரமித்தார்கள். சிவஜோதியைச் சிஷ்யர்கள் சுவாமிகளிடத்தே எப்பொழுதும் கண்டார்கள்.

சுவாமிகளுக்குத் தாம் சந்யாசி யென்பதுபற்றி மிகுந்த கர்வம்—இது கர்வமன்று, குதூகலம்—உண்டு. "உண்மைச் சந்யாசிகள் இருக்க முடியாது" என்று வாதம் செய்கின்ற பிரபஞ்சிகர்கள் மிகுந்த இக் காலத்திலே "சர்வசங்க பரித்தியாகம் செய்த சத்திய சந்யாசி யொருவர் இருக்க முடியும்" என்பதைச் சுவாமிகள் நிரூபித்துக் காட்டினார்.

"சர்வ மதங்களும் தியாகம் ஒன்றினையே போதிக்கின்றன" என்று அவர் அபிப்பிராயப்பட்டார். பிரஹ்மச்சர்யமே சிறந்தது; ஜிதேந்திரிய வாழ்க்கையே வாழ்க்கை;

லௌகிக வாழ்க்கை பேய் வாழ்க்கை, பைசாச வாழ்க்கை. உலகிலே சுகங்கள் உள்ளனபோலத் தோன்றுகின்றன; ஆனால், உலகமானது ரோஜா புஷ்பங்களினால் மறைக்கப்பட்டுக்கிடக்கும் அழுகிய பிணம் போன்றதாம்; பொன்னாலாய துணியினால் மூடிய புண் போன்றதாம். லோபியானவன் தனது திரவியத்தைக் காப்பதற்கு எவ்வளவு கவலைகொண்டிருப்பானோ, அதனிடத்தே எவ்வளவு பற்றுதல் வைத்திருப்பானோ, அதுபோல, சந்நியாசிகளும் சந்நியாச விரதத்தினிடத்தே கவலை கொண்டு, அவ்வளவு பற்றுதல் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். "பரிசுத்த வாழ்க்கையும் தியாகமும் இல்லாவிட்டால், ஆத்மஞானம் உண்டாவது அரிது" என்று சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குப் போதித்து வந்தது மன்றியில், தாமும் கண்டிப்பான பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்துவந்தார்.

"ரேதஸே தேஜஸாக மாறுவது" என்று சுவாமிகள் கூறினர். சுவாமிகளுடைய பரிசுத்த, பிரஹ்மச்சர்ய சக்தி மிகவும் ஆச்சர்யமானது; அவர் மேனாடுகளிலே இருந்த பொழுது, உலக போகங்கள் அபரிமிதமாக அவரைச் சூழ்ந்து கிடந்தன; எங்குப் பார்த்தாலும் நாலாபக்கங்களிலும் மாயையானது பெண்ணுரு வெடுத்தும் பொன்னுரு வெடுத்தும் மயக்கிக்கொண்டிருந்தது. உலகத் தூண்டுதல்கள் ஏராளமாயிருந்தன. ஆனால், சுவாமிகளோ அபார சக்தி வாய்ந்த ஆச்சர்யபுருஷன், சைத்தானுக்கு வணங்கா முடிமன்னன்.

சுவாமிகளை உலக வாழ்க்கையிலும் போகங்களிலும் பிரமிக்கும்படி செய்வதற்கு விரும்பி வந்தவர்கள் மனம் மாறுத லடைந்து, மாசு எடுபட்டு, சுவாமிகளிடத்தே ஷ்யர்களாகி, "ஆ! ஆ! இத்தகைய புருஷன் இவ் வுலகிலு ரனே?" என்று ஆச்சர்ய மடைந்திருக்கிறார்கள். "நரேந்திரன் ஒருபொழுதும் காமத்துக்கு உட்படமாட்டான்; தப்பித் தவறி அவன் உட்பட்டாலும், ஜகன்மாதா அவனைப் பார்த்துக்கொள்வாள்" என்று ஸ்ரீ ராம கிருஷ்ணரே சொல்லியிருக்கிறாரே. சுவாமி எந்த ஸ்திரீயையும் தமது தாயாகவோ அல்லது சகோதரியாகவோ, அல்லது பெண்ணாகவோதான் கருதுவார். பரிசுத்த மென்பது அவருடன் பிறந்ததாயிருந்தது, அவரை விட்டு நீங்காத இயற்கையாயிருந்தது. அவருடைய மனமானது மேன்மேலும் உத்கிருஷ்ட ஸ்திதியையே நாடிச் சென்று கொண்டிருந்தது. சுவாமிகள் காமத்தை, விஷத்தை வெறுப்பதுபோல வெறுத்தார்.

"சில சமயங்களிலே அவர் நேர்த்தியான உடைகளைத் தரித்துக்கொண்டார்" என்று அவர்மீது குற்றம் கூறியவர்கள் அநேகர் உண்டு. உலக விஷயங்களை உதறிவிட்டு, கையில் ஒரு காசேனும் தொடாமல் காசினியெங்கும் சஞ்சரித்துவந்த மஹான் ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர் 'உடைகளினிடத்தே அதிகம் பிரியம் பாராட்டினார்' என்பது தவறான செய்கையாம். எந்தச் சமுதாயத்திலே அவர் இருக்கும்படி நேர்ந்ததோ அந்தச் சமுதாய சம்பிரதாயத்துக்

குத் தக்க பிரகாரமும் பிரசங்க மேடைகளின்மீது ஏறி நிற்க வேண்டியதினுலும் அவர் கொஞ்சம் நயமான உடைகள் உடுக்கவேண்டி வந்தது. கைப்பட்டைகளையும், கழுத்துப் பட்டைகளையும், மேற்சட்டை, உட்சட்டை, ஜோடு, மேஜோடு முதலியவற்றை யெல்லாம் கழற்றி யெறிந்துவிட்டு, கௌபீனம் மாத்திரம் உடுத்துச் சஞ்சாரம் செய்வதிலேதான் சுவாமிகளுக்கு உண்மையான ஆநந்தம் உண்டாகும்.

சுவாமிகள் அமெரிக்காவி லிருந்தபொழுது, "ஐயோ! வேலை செய்வதற்குப் பணத்தைத் தொடவேண்டியிருக்கிறதே, ஜனசமூக சப்பிரதாயத்தை பொட்டி நடக்க வேண்டியிருக்கிறதே" என்று எத்தனையோ தடவைகளில் கதறியிருக்கிருர். "ஆ! அம்மே! தாணிக்கெல்லாம் தாயே! என்னை இப் பயங்கா பந்தத்தினின்றும் நிவிருத்திப்பாய்" என்று கதறியிருக்கிருர். சுவாமிகள், ஜனசமூகத்துக்கு, "விதிகளையெல்லாம் ஜனசமூகம் பின்பற்றி நடக்க வேண்டும்" என்று வற்புறுத்திஞர்; ஆனல், சமஸ்த ஜனசமூக நியதிகளையும் கடந்த சந்யாசியாகவே எப்பொழுதும் இருந்தார். சந்யாசத்திலும் அவர் தயை தாக்ஷிண்ய மில்லாத சந்யாசி.

அவருடைய மனமானது ஜகன்மாதாவினிடத்திலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலும் லயித்து, மஹா மௌன சமுத்திரமாக விளங்கிக்கொண்டிருந்தது. ஆனல், அவருடைய நாவானது இந்திய ஜனசமூகம் மேம்படும்படி

யான அநேக உத்கிருஷ்டமான கொள்கைகளையும் உபதே சங்களையும் தாங்கி, அச்சத்தை நீக்கி, ஆண்மையைப் பெரு கச் செய்யும்படியான வன்மை வாய்ந்ததான பேரலைகள் அவற்றை வீசிக் கோஷித்துக்கொண்டிருந்தது. உலகு முழுதையும் ஜயிக்கவல்ல யோசனைகள் பல அவர் செய்து கொண்டிருந்தாலும், அவர் அடிக்கடி இவற்றை யெல் லாம் விட்டுவிட்டு அந்தர்முகத்திலே சென்று ஆநந்தம் அடைந்து அமர்ந்திருப்பார். "அரசர்களுடைய விலை யுயர்ந்த ஆடைகளைப் பார்க்கிலும் சந்யாசியினுடைய காஷாயமே உயர்ந்தது' என்று சுவாமிகள் கர்வப்படுவார். "பிச்சைக்காரனுடைய கமண்டலுவின் சக்தியினாலேயே இந்தியா உயர்த்தப்படும்" என்று சொன்னார் சுவாமிகள் ஒரு சமயத்திலே. பிச்சைக்கார கமண்டலு தாங்கிய இந்த விவேகாநந்தரே இந்தியாவை உயர்த்திவிட்டார்; பிச்சைக் கார சந்நியாசியாயிருந்த இவரே இந்திய ஜனசமூகம் மறு படியும் உயிர்த்தெழுந்து சுகமாயிருப்பதற்கு வேண்டிய அளவற்ற ஐச்வர்யங்களைத் தமது எழுத்துக்களிலும் பேச் சுக்களிலும் சேகரித்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

சுவாமிகள் ஆதிசங்கரர் போன்று உலகிலே அத் வைதத்தை ஸ்தாபித்தார். ஆதிசங்கரரும் பரமசிவ னுடைய அம்சம்; விவேகாநந்தரும் பரமசிவனுடைய அம் சம். ஆதிசங்கரர் சந்யாசி, விவேகாநந்தரும் சந்யாசி. அக் காலத்திலே அவர், இக் காலத்திலே இவர். சுவாமிகள், முற்காலத்திலே ஸ்ரீ கிருஷ்ணன் புள்ளாங்குழல் வாசித்து கோவினங்களையும் கோபிகா ஸ்திரீகளையும் உலகை மறக்

கும்படிக்கும் உண்மையிலே லயிக்கும்படிக்கும் செய்தது போல, தமது அமுதமொழிகளினால் ஜனங்களை காமினி - காஞ்சனத்தை வெறுக்கும்படிக்கும், காமேச்வரனாகிய கண்ணனும் எண்ணம் செலா எம்பிரானை நாடும்படிக்கும் செய்தார். அவருடைய முகமே தியாக சக்தியின் உருவாயிருந்தது. அடிக்கடி சுவாமிகள் ஜனசமூகத்துக்குப் பல போதனைகள் செய்துவந்த போதிலும், அவருடைய சகோதர சந்யாசிகளும் அவருடைய சிஷ்யர்களும் அவரை 'அணுவளவும் அழுக்கில்லாத ஆத்மாவாய்த் தனித்து நின்ற சந்யாசியே' என்று கருதினார்கள்.

காஷாய உடை, அவருடைய கண்களின் கம்பீரமான பார்வை, அவருடைய முகத்திலே பரந்து விளங்கிய நிஷ்டையொளி - சர்வசாதாரணத் தன்மை - சந்யாசிகளுடனே அவர் கலந்து வாழ்ந்த தாராளத் தன்மை - பிரார்த்தனை - கீர்த்தனை முதலியவைகள், பரிசுத்தத் தன்மை - தீர்க்க திருஷ்டி - கடுந்தவம் - அவருடைய அறை, அவருடைய மௌனம் - அவருடைய நிர்ப்பயமான வாக்சாதுர்யம், விஷயங்களை ஆழ்ந்து பார்ப்பதிலே அவருக்கிருந்த ஞானதிருஷ்டி ஆகிய இவையும் இன்னும் அவருடைய ஜீவிதத்தைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும் அவர் நல்ல, பழுத்த சந்யாசியே என்பதை நிரூபிக்கின்றன. பற்றற்றுப் பாரெலாம் திரிந்த பரமஞானி அவரேயாம்; பந்தத்தைத் தகர்த் தெறிந்துவிட்டு, பரமானந்தத்திலே லயித்து சஞ்சரித்துக்கொண்டிருந்த மஹான் அவரேயாம்.

---

2. ஸ்ரீ விவேகாநந்தர்—தத்துவஞானி

சுவாமிகள் தத்துவஞானி, அதீதப் பிரதேசங்களிலே சஞ்சரிப்பவர். உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் அவர் பிரஹ்மதரிசனம் செய்தவர். அவர் ஜீவிதத்தின் நாநாவிதத் தன்மைகளிலும் ஸ்வாநுபூதி பெற்றவர், யோகீச்வரர், சித்தபுருஷர். அவருடைய ஜீவிதம் முழுதிலும் ஸ்வாநுபூதி யொன்று உள்ளும் புறம்பும் வியாபித்திருக்கிறது. சுவாமிகள் பழுத்த ராஜயோகி. ஆதலால் அவர் எப்பொழுதும் அதிசூக்ஷ்மமான ஞான உலகத்திலேயே வசித்துவந்தார். அவருடைய அறிவெல்லாம் ஞானமயமாகவே யிருந்தது. ஸ்பர்சமாத்திரத்தினாலே ஒருவருக்குச் சமாதியை யுண்டாக்கக்கூடிய ஸ்வாநுபூதி சக்தி வாய்ந்தவராயிருந்தார் ஒரு சமயத்திலே.

மேனாடுகளிலிருந்து முதன்முதல் திரும்பி வந்தபொழுது, சுவாமிகள் உலகுடனே கலந்து இடைவிடாமல் வேலை செய்துவந்ததினால் தம்மிடத்தில் சாத்விக குணம் அடங்கி ராஜஸ குணம் அதிகமாகிவிட்டதென்றும், ஆகையினால் அந்த அற்புத சக்தி தம்முள் அடங்கிக் கிடக்கின்றதென்றும் கூறினார். "ஆயினும், அதை மறுபடியும் உண்டுபண்ணிக்கொள்வது எப்பொழுதும் என்னுடைய சக்தியிலேயே யிருக்கிறது. பொது வேலை, சுறுசுறுப்பு, எல்லாவற்றினின்றும் விடுபட்டு ஹிமோத்கிரியிலே ஆழ்ந்த தியானத்திலே சிறிது காலம் தாமதித்

தால், அது எந்த நிமிஷத்திலும் அதைத் திரும்பக் கொண்டுவர முடியும்.'' என்றார் சுவாமிகள்.

சுவாமிகள் கடைசியாக நிஷ்டை செய்து காலம் கழித்துக்கொண்டிருந்த அவருடைய அந்திய காலத்திலே ஒரு நாள் தமது சந்யாசச் சிஷ்யர்களுள் ஒருவரிடம், ''சரீரத்திலே நடைபெறுகின்ற இடை, பிங்கலை, சுஷும்னை என்ற நாடிகளின் வேலைப்பாடுகளைப் பிரத்தியக்ஷத்தில் காண்பிக்கக் கூடும்'' என்று கூறினார். அவர் மஹா யோகியல்லவா? ஆகையால், அநேக விபூதிகளையுடைத்தா யிருந்தார்; இம் மஹிமைகளில் ஒன்றினால் எவருடையவும் மனநிலையை இத் தகையது என்று எளிதில் அவரால் கண்டு கொள்ள முடியும்; எவருடையவும் முற்காலத்தையும் பிற்காலத்தையும் கூட அவரால் கூற முடிந்தது.

ஒரு சமயத்திலே சுவாமிகள் தம்முடைய ஆங்கிலேய சிஷ்யர்கள் இருவரை நோக்கி, ''நீங்கள் முன் ஜன்மத்தில் பௌத்த மதத்தினரா யிருந்தீர்கள்'' என்றார். இன்னொரு சமயத்திலே அமெரிக்கா தேசத்தவர் ஒருவர், இங்கிலாந்துக்கு வந்திருந்தவர், தமது தொழிலின் அபிவிருத்தியை நோக்கி அமெரிக்காவுக்குத் திரும்பி வர உத்தேசித்திருந்தவரை நோக்கிச் சுவாமிகள், ''நீ அமெரிக்காவுக்கு இப்பொழுது சென்றால், பணவிஷயத்திலே உனக்குக் கஷ்டம் உண்டாகும்; நீ இங்கே யிருந்தால், நீ உனது காலில் சொற்பக் காயம் அடைவாய்; ஆனால், உனது தொழிலில் அபிவிருத்தி யடைவாய்.'' என்றார். அவருக்குச் சுவாமிக

ளிடத்தில் அபரிமிதமான பக்தி யுண்டு ஆதலாலே, அமெரிக்காவுக்குச் செல்லாமல், லண்டன் மாநகரிலேயே யிருந்தார். சுவாமிகள் கூறியவெல்லாம் நடைபெற்றன. தமக்கு மிக மிக அந்தரங்கமான சிஷ்யர்களைப்பற்றியும் நண்பர்களைப்பற்றியும் பின் நேரிடக்கூடியதை முன் கூறி வந்தாரே யொழிய, சோதிடம் சொல்வது மாதிரி எல்லா ருக்கும் தீர்க்க தர்சனம் கூறிக்கொண்டிருக்கவில்லை. "இத் தகைய சக்திகளை யெல்லாம் உபயோகித்தல் மோக்ஷ சாதன அநுஷ்டானத்துக்கு நேர் விரோதமாம்" என்று சுவாமிகள் உபதேசித்துவந்தார்.

சுவாமிகள் அமெரிக்காவிலே தாம் பிரசங்கம் செய்து வந்த காலத்தையும் தன்மைகளையும் பற்றி, அவர் தமது ஆச்சர்யமான ஞான அபிப்பிராயங்களை யெல்லாம் இடை விடாமல் பொழிந்துகொண்டிருந்த காலத்தைப் பற்றி அவர் பிற்காலத்திலே ஒரு சமயம் குறிப்பிட்டுக் கூறிய பொழுது, "நான் பிரசங்கம் செய்யும்படி நேரிட்ட பொழுது அந்த விஷயத்தைப் பற்றியுள்ள எல்லாம் என்னுடைய மனத்தினூடே சித்திரவடிவங்களிலே செல் லும். நான் அவற்றுக்கு வசனம் அளிக்கவேண்டியது தான், வேறொன்றும் இல்லை." என்றார்.

இன்னொரு சமயத்திலே சுவாமிகள், "இன்னொருவர் பிரசங்கம் செய்பவர் போன்றும் தாம் கேட்பவர் போன் றும் இருந்தது! என்னுடைய சொந்தக் குரலையே இன் னொருவர் குரலாக நான் கேட்டது போன்று இருந்தது!"

என்று தம்மைப்பற்றித் தாமே சொல்லிக்கொண்டார். அவர் பிரசங்கம் செய்ய மேடைமீது ஏறிவிட்டால், உடனே ஒரு சக்தி அவருள் நுழையுமாம். சுவாமிகள் "நான் (பிரசங்க) மேடைமீது நிற்கும் பொழுது, என் மீது ஒரு சக்தி யுண்டாகின்றது; ஆயிரக்கணக்கான ஜனங்கள் அடங்கிய சபை முழுதையும் ஒரே வார்த்தையினால் மாயைக்கப்பால் இட்டுச் சென்று, அவர்களைக் கொண்டு 'நான்,' 'எனது' என்னும் சிறைச் சுவர்களை யுடைத் தெறியும்படி செய்ய என்னால் முடியும் போல அந்த சக்தி என்னை யுணரும்படி செய்கிறது!" என்று மொழிந்தார்.

அவருடைய தத்துவ ஞானத்தை அவருடைய ஞானநுபவத்தினின்றும் வேறு பிரிக்க முடியாது; அவரிடத்தில் அநுபவமே ஞானமாயிருக்கிறது. தத்துவ சாஸ்திரமும் காவ்ய சாஸ்திரமும் ஒன்றேயென்பது அவருடைய கொள்கை. "உபநிஷத்துக்களினும் உயர்ந்த காவ்ய சாஸ்திரங்கள் வேறில்லை." என்பதே சுவாமிகளுடைய தாத்பர்யம். சுவாமிகளுடைய அமுதமொழிகள் சபையோர்களை ஆநந்தத்திலும் அமைதியிலும் கொண்டு போய் விட்டுவிடும். "தேவர்கள் அறிந்ததை மனிதன் அறிந்துகொள்ளவேண்டும்." என்று மஹாத்மாக்கள் பேசுவது போலப் பேசினார். சுவாமிகள் தமது அநுபூதிகளைப் பிறருடன் பங்கிட்டுக் களிக்க விரும்பினார். அவரிடத்திலே அறிவு எப்படி அகண்டமாயிருந்ததோ அப்படியே அன்பும் விசாலமாயிருந்தது. ஞானமும் பக்தியும் கலந்து

ஒன்றுபட்டுக் கிடந்தன; கர்மமும் யோகமும் இரண்டல்ல போலத் தோன்றின. ஜீவஸேவைக்கும் சிவஸேவைக்கும் அவரிடம் வித்தியாசமே இல்லை. அவர் பேசியபொழுதெல்லாம், அநேகமாக அடிக்கடி தாம் இன்னாரென்ற பிரக்ஞை அவருக்கு உண்டாய்விடும்; அச் சந்தர்ப்பங்களிலே அவர் பெரிய பெரிய சபைகளையெல்லாம் ஆட்டியசைத்துத் தமது உணர்ச்சியுடன் ஒன்றுபடச் செய்து விடுவார். அவருடைய வார்த்தைகள் எப்படி எல்லோரையும் மயக்கிற்றோ, அம் மாதிரியே அவருடைய வசீகரத் தன்மை, அவருடைய நடை, அவருடைய முக உல்லாசம் ஆகிய இவை அனைவரையும் மயக்கிக்கொண்டிருந்தன.

ஆ! ஆ! அவர் எத்தனை வருஷங்கள் கடுந்தவம் புரிந்திருக்கிறார்! எத்தனை வருஷங்கள் நிஷ்டையில் காலம் கழித்திருக்கிறார்! இவை யெல்லாம் வீண் போய்விடுமோ? ஆகையால்தான் அவருடைய வார்த்தைகளில் உயிர் ததும்பிக் கிடந்தது. சுவாமிகள் ஸ்வாநுபவியாகையினாலே அவருடைய நியாயமும் தர்க்கமும் எதிர்க்க முடியாதனவாயிருந்தன. அவரிடத்தில் வாசாஞானம் என்பது கிடையவே கிடையாது; அவர் தாம் ஆத்மாவினுடைய அடி மடியிலே கையைப் போட்டு அள்ளியள்ளி உண்மைகளை யெடுத்து உலகிலே வீசி யெறிகிறாரே. லௌகிகம், வைதீகம் என்பதெல்லாம் ஆத்மீகம் என்ற ஒன்றிலே யடங்கிவிட்டன. பிரஸ்தானத்திரயங்களாகிய உபநிஷத்துக்கள், பகவத்கீதை, வேதாந்த சூத்திரங்கள் எல்லாம் அவருடைய நாவிலே நூதன பொருள்கள் கொண்டன.

மேனாட்டுத் தத்துவசாஸ்திரிகளாகிய காண்ட் முதலியவர்களும், நமது தேசத்துத் தத்வஞானிகளாகிய சங்கரர் முதலியவர்களும் சுவாமிகளுடைய வாயிலே இன்னும் உயர்ந்த மதிப்பு அடைந்துவிட்டார்கள். ஞானகாண்டத்தைப் பற்றி அவர் செய்துள்ள வியாக்கியானங்கள் வேதங்களை போன்றிருக்கின்றன.

ஜகத்தைப்பற்றியும் மாயையைப்பற்றியும், அவர் லண்டனில் கூறியபடி, செய்த வியாக்கியானங்கள் மிகத் தெளிவாயும் இனிமையாயும் இருந்தன. சுவாமிகள் புதிதாக ஒன்றும் கண்டு பிடித்துவிடவில்லை; ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னே ஆர்ய மஹரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த உண்மைகளையே நூதன உடையுடன் சுவாமிகள் வெளியிட்டார். ஆயினும், அந்நூதன உடைகளின் அலங்காரந்தான் என்னே! பண்டித பாமர சாதாரண சர்வ ஜனங்களுக்கும் எளிதில் விளங்கும்படியான அற்புத நடையில் சுவாமிகள் உத்தமமான உண்மைகளை வெளியிட்டாரென்பது அனைவரும் அறிந்ததோர் விஷயம்.

சுவாமிகள் "சிருஷ்டி யமைப்பு" என்ற விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், கூறுவதாவது:—"இந்த எல்லாவற்றையும் பற்றியுள்ள கேள்விகளின்மீது நாம் எப் புதிய பிரகாசமும் வீசுவதாகப் பாவிக்கவில்லை; ஆனால், மனிதன் அவற்றை அறிந்துகொள்ளும் பொருட்டு, தற்காலத்திய பாஷையில் பூர்வீகர்களுடைய நினைப்புக்களைப் பேசப்

போகிறேன், ஜனங்களுடைய பாஷையில் தத்துவஞானிகளுடைய நினைப்புக்களைக் கூறப்போகிறேன், மனிதனுடைய பாஷையில் தேவர்களுடைய நினைப்புக்களை உரைக்கப்போகிறேன், எளிய மனுஷ்யவர்க்கத்துப் பாஷையில் ஈச்வரனைப்பற்றிய நினைப்புக்களைப் பேசப் போகிறேன்; ஏனெனில், எதிலிருந்து அபிப்பிராயங்கள் வெளிப்புறப்பட்டனவோ அதே திவ்ய சாராம்சம் மனிதனில் எப்பொழுதும் இருக்கிறது; ஆகையினால், அவன் அவர்களை எப்பொழுதும் அறிந்துகொள்ள முடியும்.''

சுவாமிகளுடைய பிரசங்கங்கள் தத்துவஞானம் நிரம்பியவையா யிருந்த போதிலும், அநுபவத்துக்கு அநுகூலமானவையாம். வேதாந்தமானது இதுகாறும் மனிதர்களுடைய தினசரி வாழ்க்கையினின்றும் வேறுக்கப்பட்டு, மனிதர்கள் கொஞ்சநேரம் படித்துத் தெரிந்துகொள்கின்ற விஷயமாயிருந்தது; அல்லது, உலகத்தைத் துறந்துவிட்டு அநுஷ்டானம் செய்கின்ற யோகிகளுடைய அல்லது சந்யாசிகளுடைய மார்க்கமாயிருந்தது. இப்பொழுது சுவாமிகள் வேதாந்தத்தைச் சர்வ சாதாரண மாக்கினார்; ஜனசமூகத்தின் தினசரி வாழ்க்கை யொவ்வொன்றிலும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படி செய்தார். இந்தியாவிலே அவர் செய்த பிரசங்கங்களிலெல்லாம் இக் கருத்தையே நிரூபித்தார்.

அவருடைய ஞானநுபூதியினால் அவர் அடைந்த மர்மம் ஒற்றுமை, ஏகத்துவம் என்பதேயாம்; அவருடைய

பாண்டித்தியத்துக்கு அஸ்திவாரமாயிருந்ததும் ஏகத்துவமேயாம். எல்லா மார்க்கங்களும் சத்தியத்தினிடம் இட்டுச் செல்லும் மார்க்கங்களாம்; சத்தியம் ஒன்றே உண்மையில் உள்ளதாதலின், எல்லா மார்க்கங்களும் கடைசியில் அதனிடம்தான் கொண்டு செல்லவேண்டும். ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான அபிப்பிராயங்களிருந்தால் இவ்விருவகை யபிப்பிராயங்களையும் ஒன்றுபடுத்த முயன்றுகொண்டேயிருந்தார். சுவாமிகளுடைய வேதாந்தத்திலே விசேஷம் என்னவென்றால், ஞானம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் குவிக்கப்பட்டுக் கிடந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகபக்தி கொட்டப்பட்டுக் கிடந்தது. சுவாமிகளுடைய கொள்கை அத்வைதமென்று பெயரேயாயினும், துவைதம், விசிஷ்டாத்வைதம் முதலிய சகல மதங்களையும் அடக்கியதாகவே யிருந்தது. அநேகம் என்பதும் ஏகம் என்பதும் அவருக்கு ஒன்றாகவே யிருந்தது. துவைதம், விசிஷ்டாத்வைதத்தின் மூலமாக அத்வைதத்திலே முடியவேண்டும். "உலகிலே யுள்ள மதங்களெல்லாம் ஒன்றே" என்றும், "எல்லா மதங்களும் ஈச்வரனிடமே யிட்டுச் செல்கின்றன" என்றும், "ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல" என்றும் சுவாமிகள் பறைபடித்துக்கொண்டுவந்தார். ஆகையால்தான் சுவாமிகளுக்கு ஞானத்தினிடத்தில் எவ்வளவு பிரியம் இருந்ததோ அவ்வளவு பிரியம் பக்தியினிடமும் இருந்தது. தத்துவஞானத்திலே ஒன்றுக்கொன்று முரண்பாடுபோன்ற கொள்கைகளையெல்லாம் சமரசப்படுத்தி, உத்கிருஷ்டமான லக்ஷியத்தை யுடைய முயற்சிப்ப

தே சுவாமிகளுடைய பெருநோக்கமாயிருந்தது. "ஞான உயர்வை யடையவேண்டுமென்றால் ஒழுக்கமே முக்கியம்; ஒழுக்க மில்லையேல், உலகில் ஒன்றுமே யில்லை" என்று சுவாமிகள் போதித்துவந்தார்.

சுவாமிகளிடத்திலே ஸ்வாநுபூதியினால் உண்டாகின்ற திடத்தன்மை மாத்திரமல்ல, தர்க்க நியாயங்களும் நிறைந்து கிடந்தன. சுவாமிகள் எப்பக்கத்திலும், எவ்விடத்திலும், எவ்விஷயத்தின் மூலமாகவும் சத்தியத்தையே தரிசித்துவந்தார். சுவாமிகள் நிர்விகற்ப சமாதியிலே நெடுநேரம் இருந்து அகண்ட வஸ்துவை ருசிபார்த்தவரல்லரோ? தமது முன்னோர்களின் மதமாகிற ஹிந்துமதமே பெரிதென்று சுவாமிகள் இடைவிடாது முழக்கிக்கொண்டிருந்தபோதிலும், பௌத்த மதத்தினிடத்திலே அளவற்ற சிரத்தை பாராட்டிப் பெருமைப்படுத்தினார்; கிறிஸ்தவ மதத்தைக் கம்பீரமாகக் கருதினார்; மகம்மதிய மதத்தை மட்டில்லாமல் மதித்தார். சைதந்யர் என்றால், கிருஷ்ணன் என்றால் சுவாமிகள் எப்படிக் கையெடுத்துக் கும்பிடுவாரோ, அப்படியே கிறிஸ்து என்றாலும் மகம்மது என்றாலும் கையெடுத்து வணங்குவார். ஆகையினால்தான் கிறிஸ்தவர்கள் அவரைப் "பக்கா கிறிஸ்தவர்" என்றார்கள்; மகம்மதியர்கள் அவரை "மகம்மதியர்" என்றார்கள்; புத்த மதத்தினர் அவரை "பௌத்தர்" என்றார்கள்; அவர் இவ்வெல்லா மதங்களையும் கரைகண்டு ஏகமதத்தை யடைந்திருந்தார்.

சுவாமிகளுடைய மனம் ஓவிய மனம்; சித்திரமும் சரியே, சிற்பமும் சரியே, தத்துவஞானமும் சரியே, சரித்திரமும் சரியே, சாஸ்திரமும் சரியே, எல்லாம் அவரிடத்திலே புதிய உயிரும் ஒளியும் பெற்று விளங்கின. பிரபஞ்சத்தன்மையிலே பிரஹ்மத்தன்மையும் அதனால் பெருமையும் உள்ளது என்பதைச் சுவாமிகள் வெகு தெளிவாக விளக்கிக் காட்டுவார்; சிவாஜி ஒரு மஹாத்மாவினுடைய சிஷ்யர்; அசோகராஜன் ஜனகன்போன்று நிஷ்காமகர்மயோகி, ஓமார் அரசன் பக்த சிரேஷ்டன். எல்லாவற்றிலும் மதமானது நுழைந்து வியாபித்துக் கிடக்கின்றது. மதம் இல்லாவிட்டால், மஹிமை யில்லை. மதாச்சார்யர்கள் வெறும் குருட்டுக் கொள்கைகளையுடையவர்களல்லர். மஹான் புத்தர் இந்திய தேச சரித்திரத்தைப் புதுப்பித்தார்; மகம்மது நிகரில்லாத ராஜதந்திரி. இங்ஙனமெல்லாம் சுவாமிகள் தமது சிஷ்யர்களிடத்தே உலகிலுள்ள சகல விஷயங்களையும் பிரஹ்மமயமாக்கிக் காண்பித்தார். சுவாமிகளிடத்திலே ஸ்ரீ சங்கரருடைய ராக்ஷத மூளையும், பௌத்தருடைய எல்லைபற்ற ஹிருதயமும், ஸ்ரீசைதந்யருடைய அநுபூதியும், குருநானக்கினுடைய ஞானவைராக்கியமும், இயேசு கிறிஸ்துவினுடைய சாந்தகுணமும் ஒருங்கே அமைந்திருந்தன.

சுவாமிகளிடத்தில் விசேஷமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு குணம் என்னவென்றால், பிறருடைய நிலைமையில் நின்று பார்க்கும் தன்மை சுவாமிகளிடம் விசேஷமாயிருந்தது. கள்ளக் காதலிக்குக் காதலனிடத்தே

எவ்வளவு பிரியமோ, அவ்வளவு பிரியம் சுவாமிகளுக்குச் சத்தியத்தினிடத்தில் இருந்தது. சுவாமிகளுடைய கொள்கைகளெல்லாம் சித்திரகலைபோல அவ்வளவு ஒழுங்காய் அழகாயிருந்தன. சுவாமிகளுடைய பிரசங்கங்களைப் படித்தறிந்துகொள்வதற்கு முதல் பாடங்கள் ஏதேனும் படிக்க வேண்டுமென்ற அவசிய மில்லை. அவ்வளவு தெளிவாய், பால் மணம் மாருப் பச்சைக் குழந்தைகளும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி யிருக்கின்றன. தவிர, சுவாமிகளுடைய கொள்கைகளெல்லாம் சுவாமிகளுக்கு வெறும் வாசாஞான மல்ல; உயிருள்ள, பிரத்தியக்ஷ, பலமுள்ள கொள்கைகளாம். அதுவே ஸ்வாநுபூதி யென்பது; கற்பனையல்ல, கட்டுப்பாடு அல்ல, வீண் சிந்தனையல்ல; தர்க்க சாஸ்திர மல்ல, அது யோகம், தத்துவப் பார்வை, சத்திய தர்சனம்.

காலம் சென்ற மேதாவி வில்லியம் ஜோன்ஸ்: சுவாமிகளையும் அவருடைய கொள்கைகளையும்பற்றிப் பின் வருமாறு எழுதியுளளார்:—

"நீ நியாயம்பேசுகிறதில்லை; ஆனுல், ஒருவிதப் பயிற்சியை அநுஷ்டித்த பின் நீ பார்க்கிருய்; பார்த்துவிட்டு நீ உண்மையைத் தெரிவிக்க முடியும். விவேகாநந்தர் இங்குச் செய்த தமது பிரசங்கங்களில் ஒன்றில் உண்மையை இவ்விதமாக வெளியிடுகிருர்:—

"பிரபஞ்சத்திலே ஒற்றுமையை, இந்த ஜீவித ஒற்றுமையைப் பார்க்கிறவனுக்கு இனிமேல் துன்பமெங்குள்ளது?,,,,,,,,,,,,மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்

கும் ஸ்திரீக்கும், மனிதனுக்கும் குழந்தைக்கும், ஜனசமூகத்துக்கும் ஜனசமூகத்துக்கும், பூமிக்கும் சந்திரனுக்கும், சந்திரனுக்கும் சூர்யனுக்கும் உள்ள இந்த பிரிவு, அணுவுக்கும் அணுவுக்கும் உள்ள இந்த பிரிவு உண்மையில் இத்துன்ப மெல்லாவற்றினுடையவும் காரணமாம்; 'இந்தப் பிரிவு இல்லவேயில்லை' என்று, 'அது உண்மையல்ல' என்று வேதாந்தம் கூறுகிறது. அது மேல் மட்டத்திலே தோற்றல்மாத்திரமா யிருக்கிறது. விஷயங்களின் ஹிருதயத்திலே ஒற்றுமை யுண்டு. நீ உள்ளே சென்று பார்த்தால், மனிதனுக்கும், ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும், ஜாதிகளுக்கும் ஜாதிகளுக்கும், உயர்ந்தவர்களுக்கும் தாழ்ந்தவர்களுக்கும், தனவந்தர்களுக்கும்ஏழைகளுக்கும், தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள அந்த ஒற்றுமையை நீ காண்கிறாய். எல்லாம் ஒன்றே; நீ போதுமான அளவு ஆழ்ந்து சென்றால், மிருகங்களும் ஒன்றே; அந்த ஸ்திதியை யடைந்துவிட்டவனுக்கு அப்புறம் பிரமையே யில்லை........... அவனுக்கு இனிமேல் பிரமை எங்கு உள்ளது? ஒவ்வொன்றினுடையவும் உண்மையை, ஒவ்வொன்றினுடையவும் ரகஸ்யத்தை அவன் அறிந்துவிடுகிறான். அவனுக்கு இனிமேல் துன்பம் எங்கு உள்ளது? அவன் எதையிச்சிக்கிறான்? அவன் ஒவ்வொன்றினுடையவும்உண்மையை, ஒவ்வொன்றினுடையவும் ரகஸ்யத்தை ஈச்வரனிடத்துக்கு, அந்த மத்தியத்தினிடத்துக்கு, ஒவ்வொன்றினுடையவும் அந்த ஒற்றுமையினிடத்துக்குக் கொண்டு சென்றுவிடுகிறான்; அது தான் நித்தியாநந்தம், நித்திய ஞானம், நித்திய வாழ்வு.

அங்கு மரணமாவது, இச்சையாவது, விசனமாவது, துன்பமாவது, அதிருப்தியாவது கிடையாது......மத்தியத்திலே, சத்தியத்திலே விசன முறுவதற்கு எவரு மில்லை, விசனத்துக்குக் காரணமாவதற்கு எவரு மில்லை. பரிசுத்தனுகிய அவன், ரூபமற்றவன், சரீரமற்றவன், மாசற்றவன், ஞாதா, மகாகவியாகிய அவன், சத்தாமாத்திரமானவன், ஒவ்வொருவருக்கும் அவரவர் இச்சிப்பதைக் கொடுத்துக்கொண்டிருப்பவன், அவன் எல்லாவற்றிலும் ஊடுருவிக்கொண்டிருக்கின்ருன்.''

''மனிதன் பிரபஞ்சத்தின் அகண்ட வஸ்துவுடனே தன்னைத் தானே ஒன்ருகக் கண்டுகொண்டுவிட்டால், பிரிவெல்லாம் நின்றுவிட்டால், எல்லா மனிதர்களும், எல்லா ஸ்திரீகளும், எல்லாத் தேவதூதர்களும், எல்லாத் தேவர்களும், எல்லா மிருகங்களும், எல்லாச் செடிகொடிகளும், பிரபஞ்சம் முழுதுமே அந்த ஒற்றுமையில் உருகிவிட்டால், அப்பொழுது எல்லாப் பயமும் நீங்கிவிடுகின்றன. எவரைக் கண்டு பயப்படுவது? நான் என்னைத்தானே துன்புறுத்திக்கொள்ள முடியுமா? நான் என்னைத்தானே கொல்ல முடியுமா? நீ உன்னையே கண்டு பயப்பட்டுக்கொள்கிருயா? அப்பொழுது எல்லாத் துனபமும் நீங்கிவிடும். எதனுல் எனக்குத் துக்கம் உண்டுபண்ண முடியும்? நான் பிரபஞ்சத்தின் ஒரேவாழ்க்கை. அப்பொழுது பொருமைகளெல்லாம் மறைந்துவிடும்; எவரைப்பார்த்துப் பொருமைப்படுவது? என்னையே பார்த்தா நான் பொருமைப் படுவது?

அப்பொழுது தீய உணர்ச்சிகளெல்லாம் நீங்கிவிடுகின்றன. எவருக்கு விரோதமாக நான் இந்தத் தீய உணர்ச்சியை வைத்துக்கொள்வது? எனக்கு விரோதமாகவேயா? என்னைத் தவிரபிரபஞ்சத்தில் எவருமே யில்லை...........இந்த வேற்றுமையைக் கொன்றுவிடுங்கள், 'அநேகம் உண்டு' என்ற இந்த மூடநம்பிக்கையை அழித்துவிடுங்கள். அநேகமாகிய இவ் வுலகில் ஒன்றைப் பார்க்கிறவன், உணர்வற்ற இக் குவியலில் அவ்வொரு உணர்வுப் பொருளைப் பார்க்கிறவன், சாயையாகிற இவ் வுலகில் அந்தச் சத்தியத்தைப் பற்றி நிற்கிறவன், அவனுக்கே நித்திய சாந்தி உரியது, வேறெவருக்கும் இல்லை, வேறெவருக்கும் இல்லை!'

"இந்த அத்வைத சங்கீதத்தைக் கேட்பதற்கு நம் மெல்லோர்க்கும் கொஞ்சம் செவி யிருக்கிறது: அது உயர்த்தி, மறுபடியும் ஸ்தாபிக்கிறது,..........."

சுவாமிகள் தத்துவஞானி, அதிலும் அநுபவம் பெற்ற ஆத்மஞானி யென்பதற்கு மேலே கூறிய அவருடைய வசனங்களே போதிய சான்றும். சுவாமிகளுக்குத் தாம் உலகினுக்குப் போதித்து வந்தது இன்னது என்று நன்ருகத் தெரியும்; அவ்வளவும் அநுபவப் பொருளாக அடைந்தவர். "யுக்தி பூர்வகமாக உலகிலே ஸ்தாபிக்கப்படுதற்கு வேதாந்தமே தகுந்த மதம்" என்பதைச் சுவாமிகள் கண்டறிந்தார்; "இதுதான் மனுஷ்யவர்க்கம் முழுதுக்கும் பொதுவான மதமாக முடியும்" என்றும் கண்டுகொண்டார். "மேனுட்டுத் தத்துவ சாஸ்திரிகள் மிகுந்த புத்திசாலிகள்" என்

றும், "அவர்களிலே காண்ட் என்பவர் ஆதிசங்கரருடைய யுக்தியையும் கடந்துசென்றவர்." என்றும் சுவாமிகள் கூறுவார். "ஆனல், மேனுட்டுத் தத்துவ சாஸ்திரிகள் எவ்வளவுதான் மேதாவிகளாயிருந்தபோதிலும் யுக்திமாத்திரத்தில் நிற்பவர்களே" என்றும், "அநுபவமில்லாதவர்கள்" என்றும், "நமது பாரததேசத்துத் தத்துவஞானிகளோ ஸ்வாநுபூதி பெற்றவர்கள்" என்றும், ஆகையால், "நமது ஞானிகளே சிறந்தவர்கள்." என்றும் சுவாமிகள் கூறுவார். காசிமாநகரைப்பற்றிக் கேள்விப்பட்டுக் கூறுபவனைப் பார்க்கிலும் காசிமாநகரை நேரே பார்த்தவன் கூறுவது விசேஷமல்லவா?

சுவாமிகளுடைய பிரசங்கங்களெல்லாம் "ஸ்வாநுபூதி"யையே ஆதாரமாகக் கொண்டன.

3. ஸ்ரீ விவேகாநந்நர்—யோகி

சுவாமிகள் தபசி யென்பதையும், யோகி யென்பதையும் நாம் கூறவேண்டிய அவசிய மில்லை. தவம் என்பது அவரிடத்தில் இடையிலே தோன்றி நடைபெறவில்லை; அவருடைய பிறவி லக்ஷணமாகவே யிருந்தது. சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்தபொழுது கடுமையான தவம் செய்துவந்தார்; பின்னர் வரநகர மடத்திலும் சஞ்சாரத்திலும் அந்தத் தவத்தைப் பெருக்கிக்கொண்டார். சந்யாசிக்கு அடையாளம் சம்சார லக்ஷணங்களை ஜயித்திருப்ப

தார்; அதாவது, இந்திரிய சேஷ்டைகளை ஜயித்திருப்பதாம். சுவாமிகள் விஷயத்திலே அவருடைய ஜீவிதம் முழுதுமே இத்தகைய ஜயம் ஆயிருந்தது. சுவாமிகளுக்குப் பரிசுத்தம் என்றால் பிரஹ்மச்சர்யம் என்பது மாத்திரம் அல்ல, எல்லா விஷயத்திலும் தர்மத்தைப் பூர்த்தி செய்து வைப்பதேயாம். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் முதலியவை யெல்லாம் அசுத்தங்களாம்; காமினி - காஞ்சன ஜயமே சந்யாசிக்கு முதல் அறிகுறியாம். 'பிரஹ்மாநுபூதி யடையவேண்டும்' என்ற பேரிச்சை யொன்றுக்குச் சகல இச்சைகளும் அடங்கவேண்டும். உண்மையான ஆசாரியரிடமிருந்து பரிசுத்தம் நாலாபக்கங்களிலும் வியாபிக்க வேண்டும்; ஏனெனில், அவரிடத்திலே எல்லாவிதப் போராட்டங்களும் நின்றுவிட்டன.

சுவாமிகளுக்கு அபரிமிதமான அழகுகூடப் பிடிக்காது; ஏனெனில், சுவாமிகளுக்குத் 'தவத்துக்குப் பங்கம் வந்துவிடுமோ?' என்று பயம் உண்டாய்விட்டது. "உள்ளேயிருந்து அழகைப் பார்; பால் எண்ணமும் உணர்ச்சி யெண்ணமும் அடியோடு அழிக்கப்பட்டு, ஆத்மீக திருஷ்டியின் மூலமாக அழகைப் பாருங்கள்! ஒதுங்கி நில்லுங்கள்! சாக்ஷியாயிருங்கள்! உடைமை வகிக்க முயற்சிக்காதீர்கள்!" என்பார். அழகென்பது பிரதி மனிதனுடையவும் கற்பனையே யென்பதைச் சுவாமிகள் நன்றாக அறிந்திருந்தார்; மனிதர்களுக்குள் அழகென்பது வேறுபடுகின்றது. ஒரு மனிதனுக்கு அழகாயுள்ளது இன்னொரு மனிதனு

க்கு அழகாயில்லை. ஏன்? அந்த அழகு லக்ஷணத்தைப் பிரதி மனிதனும் அவனவனுடைய மூளையிலிருந்து கற்பிக்கின்றான். சுவாமிகள் இந்த விஷயத்தை நன்றாக அறிந்திருந்தார். சுவாமிகள் எந்த விஷயத்தைத்தான் நன்றாக அறியவில்லை? "இதெல்லாவற்றுக்கும் அழகைக் கொடுக்கிறவன் நான். பகிர்முகமாயுள்ள இதுவே அவ்வளவு அழகாயிருக்குமானால், பின்புறத்தேயுள்ள சத்தியம் எவ்வளவு அதிக அழகாயிருக்கும்! அது தான் நீ!"

'சந்யாசி' என்றால் 'எதையாவது வெறுப்பவன்' அல்லது 'எதனாலாவது வெறுக்கப்படுபவன்' என்று பொருள் அல்ல' என்று சுவாமிகள் திடமாக நம்பியிருந்தார். "ஐம்புலன்களுக்கு அழகாயிருந்த எதையும் வெறுக்கவேண்டும்" என்று, அதாவது, "உலகிலே இனிமையான வஸ்துக்கள் அல்லது விரும்பப்படத்தக்க பொருள்கள் என்று கருதப்பட்டவைகளை வெறுக்கவேண்டும்" என்று சுவாமிகள் ஒருபொழுதும் உபதேசிக்கவில்லை. "வெறுப்பதுதான் சந்யாசம்" என்று எந்தச் சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை. இவ் வுலகிலே யுள்ள சகல பொருள்களையும் ஈச்வரமயமாக்கிவிடவேண்டியது சந்யாசியின் லக்ஷணமாகும், எல்லாவற்றிலும் ஈச்வரனைப் பார்த்தலே சர்வ சங்க பரித்தியாகியின் ஸ்வபாவமாகும். சுவாமிகள் இதுதான் செய்துவந்தார்.

சாதாரணமாக, சந்யாசிகள் எனப்படுவோர் சரீரத்தைப் பல விதத்திலும் வருத்தி, இதைத்தான் கடுந்தவ

மென்று கருதி, கேவலம் சரீரவதையைப் பிரமாதமாகக் கருதுகிறார்கள். ஆனால், சுவாமிகளோ, 'மனத்தை அடக்கி யொடுக்கி நிறுத்துவதே சந்யாசியின் பிரதான லக்ஷணம்' என்று கருதினார். சுவாமிகள் எல்லாவற்றையும் ஈச்வரனிலே பார்க்கிறபொழுது, பிரகிருதியை வெறுக்க முடியுமா? பிரகிருதியை நிந்திக்க முடியுமா? சுவாமிகள் "பிரகிருதிக்காக ஆத்மாவல்ல, ஆனால் ஆத்மாவுக்காகப் பிரகிருதி" என்று சொன்னார்.

அப்படியேதான் சுவாமிகள் ஸ்திரீகள் விஷயத்திலும் நடந்துகொண்டார். அவர் ஒருபொழுதும் ஸ்திரீகளை வெறுத்ததில்லை, இகழ்ந்து கூறினதில்லை. 'மனமே பிரபஞ்சமாகப் பரிணமித்து, இப் பெரிய சிருஷ்டி தோன்றியிருக்கிறதினால், ஆண் பெண் என்ற வேற்றுமையும் மனத்தினிட மிருந்தே தோன்றியுள்ளன' என்றும், 'பகிர்முகத்திலே அத்தகைய வித்தியாச மில்லை.' எனவும் சுவாமிகள் திடமாக அறிந்திருந்தார். ஆகையினால், சுவாமிகள் ஸ்திரீகளை வெறுக்கவில்லை; ஆனால், ஆண் பெண் என்ற பேத உணர்ச்சி தமது மனத்தினுள் புகுந்து தீய சிந்தனைகளை யுண்டாக்கிவிடாதிருக்குமாறு ஜாக்கிரதையாயிருந்தார். "மனமானது பரிசுத்தமாய் ஈச்வர நினைப்பைக் கொள்வதைவிட வேறு எவ்விதத் தூண்டுதல்களுக்கும் இடம் கொடாமலிருக்க வேண்டியது மனமே," என்றும், "மன மடங்கி நிற்குமானால் கந்தர்வப் பெண்களுக்கிடையிலிருந்தாலும் காம உணர்ச்சி புண்டாகாது." என்றும் சுவாமிகள் கூறுவார்.

மனமானது திடமாக இத்தகைய தீய உணர்ச்சிகளுக்கு விரோதமாக அப்பியசிக்கப்பட்டுவிட்டால், ஏதேனும் அற்ப சொற்பம் தீய சிந்தனை அகஸ்மாத்தாக மனத்தினுள் நுழைந்துவிட்டாலும், திடவைராக்கியம் பெற்ற மனமானது அந்தத் தீய சிந்தனைக்கு ஒரு உதை கொடுத்து வெளியே தள்ளிவிடும்; உள்ளே அந்தத் தீய சிந்தனைக்கு இடம் கிடைக்காது.

சுவாமிகளுடைய சந்யாசம் பிறவி லக்ஷணமாயுள்ளது. சுவாமிகளுடைய ருசியும் வாசனைகளும் சுவாமிகளுடைய ஞானப்பிரக்ஞை விருத்தியாவதற்கு அநுகூலமாயிருந்தன. சுவாமிகள் எப்பொழுதும் ஈச்வரத் தன்மையிலேயேவசித்துவந்ததினாலே, 'பஞ்சேந்திரிய சேஷ்டைகளையொழிக்கவேண்டும்' என்பது அவருக்கு அவசிய மில்லாமற் போய்விட்டது. சுவாமிகள் எப்பொழுதும் ஜோதியினிடத்திலேயே வசித்துவந்ததினால், அந்தகாரத்துடனே போராட வேண்டிய அவசியம் அவருக்கு நேரிடவில்லை. உள்ளே யுள்ள உலகபோக உணர்ச்சியாகிற மிருகத்துடனே சுவாமிகளுக்குப் போராடவேண்டிய அவசியம் நேரிடவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியதுபோல, சுவாமிகள் பிறவியிலேயே சித்த புருஷர். எப்பொழுதேனும் யதேச்சையாக ஏதேனும் ஒரு தீய எண்ணம் அவர் மனத்தினுள்ளே நுழைந்துவிட்டால், அவருடைய பிரக்ஞை கிளம்பிவிட்டால் போதும், அந்தத் தீய எண்ணம் அடியோடு அகன்று

போய்விடும். சுவாமிகள் ஆத்மீக பலிஷ்டர்; ஆகையால், அவர் உலகைக் கண்டு பயப்படவில்லை, உலகின் ஜனங்களைக் கண்டு பயப்படவில்லை. சுவாமிகள் தமது வாலிப பர்வத்திலே எல்லாவித ஜனங்களுடனும் கலந்து பழகியிருக்கிறார்; எல்லாவித ஜனங்களுடையவும் தன்மைகளை நன்றாக அறிந்தவர். ஆயினும், அப்பொழுதுகூட அவர் அக்கினி போன்று பரிசுத்தமாயிருந்தார். ஆனால், அக் காலத்திலே 'தீமை யென்று ஒன்று உண்டு' என்ற நினைப்பு அவருக்கு இருந்தது. தமது இருபதாவது வயதிலே கல்கத்தாவின் தெருக்களிலே யுள்ள நாடகசாலைகளின் பக்கத்தில் நடப்பதற்குத் தாம் கூசினதாக, அப் பக்கங்களைத் தாம் வெறுத்ததாகச் சுவாமிகளே கூறியிருக்கிறார். அக்காலங்களிலே, சுவாமிகள் தீமையுடன் போராடுவார், அல்லது தீமையினிடமிருந்து ஓடிவிடுவார்; ஆனால், அவருடைய முப்பத்து மூன்றாவது வயதில் "தீமை யென்பதும் ஒரு பிரமையே," என்றும், "ஆகையினால், எவரையும் குற்றம் கூறுதல் கூடாது," என்றும், "ஏனெனில், ஈச்வரனே எல்லாவற்றிலும் இருக்கிறாரல்லவா?" என்றும் அறிந்துகொண்டார்; அவ் வயதிலேயே "நான் வியபசாரிகளுடனே வசிக்க முடியும்," என்றும், "அவர்களிடம் பழிச்சொல் ஒன்று கூடக் கூறுவதற்கும் நான் ஒருபொழுதும் நினைக்கமாட்டேன்." என்றும் உணர்ந்து கொண்டார். அவருடைய மன அமைப்பே சந்யாசியினுடையதாயிருந்தது, தியான புருஷனுடையதாயிருந்தது. வெளியிலே சுவாமிகள் ராஜஸ குணம் வாய்ந்து அங்கும் இங்கும் அல்லாடுகின்ற புருஷனைப்

போலத் தோன்றினாலும், அவருடைய சந்யாசக் குணம் எப்படியாவது வெளிப்பட்டுக்கொண்டேதானிருந்தது; அவருடைய தியான சுபாவமும் அடிக்கடி வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது. சுவாமிகள் உலகுக்கு ஒரு உப தேசம் அளிக்கவந்ததினாலும், அவ்வுபதேசத்தைத் தாராள மாகக் கொடுக்கும்பொருட்டும் இந்தத் தியான சுபாவத் தை அவர் அடிக்கடி அடக்கிக்கொள்ளவேண்டி வந்தது.

நிவேதிதா சகோதரி பின் வருமாறு எழுதுகிறார்:—

"அவர் ஒருபொழுதும் தபாநுஷ்டானம் பண்ணிய தாகத் தோன்றவில்லை; ஆனால், அவருடைய ஜீவிதம் முழு தும் வேறெவருக்கும் மிகமிகப் பயங்கரமான தவமாகத் தோற்றும்படி அவ்வளவு ஏராளமாக நிரம்பிய ஏகாக்கிர தையாயிருந்தது. தியானத்திலே அவரையிட்டுச் செல் கின்ற வேகத்தைத் தடுப்பதற்கு அவர் எடுத்துக்கொண்ட கஷ்டமானது இருப்புப்பாதை ரஸ்தாக்களும், தற்போக்கு வண்டிப்பாதைகளும், குழப்பம் மிகுந்த நியமன விவரங்க ளும் நிறைந்த அந்தத் தேசத்திலே அவருடைய வாழ்க்கை யின் ஆரம்ப நாட்களில் அவருடைய அமெரிக்க நண்பர்க ளால் காணப்பட்டுவிட்டது.........முதலில், ஜனங்கள் யாத்திரையின் மறுமுனையில் ஒரு வேளை யவருக்காகக் காத்துக்கொண்டிருந்தபொழுது அவர் அடிக்கடி தியான த்தி லாழ்ந்துவிடுவது அவருக்கு அதிக மனத்தொந்தர வை யுண்டு பண்ணிற்று...........

"ஆயினும், தியானம் ஒரு பக்கம் இருக்க, அவர் இடைவிடாமல், எப்பொழுதும் ஆலோசனையில் ஆழ்ந்

திருந்தார். ஜனசமுதாயத்தின் பேச்சின் மத்தியிலும் பிரகாசத்தின் மத்தியிலும் கண்கள் அமைதி பெறுவதையும், நெடுநேரம் கழித்து நெடுநேரம் கழித்துச் சுவாசம் வருவதையும் அடங்கி நிற்பதையும் பின்னர் மறுபடியும் மெல்ல மெல்லத் திரும்பி வருதலையும் பார்க்கலாம். அவருடைய நண்பர்கள் இவ் விஷயங்களை யறிந்துகொண்டார்கள், அவற்றுக்கு இடம் கொடுத்துவைத்தார்கள். அவர் ஒருவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்து பேச மறந்துவிட்டால், அல்லது ஒரு அறையினுள்ளே அவர் மௌனமாயிருக்கக் காணப்பட்டால், சில சமயங்களில் அவரே எழுந்து தமது மௌனத்தைக் கலைக்காமலே, உள்ளே நுழைந்தவருக்கு உதவி புரிந்தபொழுதிலும், எவரும் அவரைக் கலைத்ததில்லை. இவ்விதமாக அவருடைய நன்மை (ருசி) உள்ளேயே கிடந்தது, வெளியில் இல்லை.''

ஆ! ஆ! சுவாமிகளே பெரிய யோகி. அவருடைய ஜீவிதம் முழுதும் ஒரு இடைவிடா ஏகாக்கிர வாழ்க்கையாகும்; அதிலே நூறில் ஒரு பங்கு இருந்தாலும் சந்யாச வாழ்க்கையிலுள்ள எந்தச் சந்யாசிக்கும் சலிப்பை புண்டாக்கிவிடும். சுவாமிகள் கடுந்தவம் புரிந்து சின்மய சமுத்திரத்திலே தம்மைக் கரைத்துக்கொண்டுவிட்டார். எந்த இடத்தி லிருந்தாலும், எவர் மத்தியில் இருந்தாலும், எத்தனையாயிரம் ஜனங்கள் அடங்கிய கூட்டத்தின் மத்தியி லிருந்தாலும், சுவாமிகள் தமது அபாரமான சக்தியை அங்கெல்

லாம் செலுத்திக்கொண்டிருந்தார். சரீரத்தை யடக்குவதற்கு ஹடயோகி எத்தனையோ வருஷங்கள் பாடு படவேண்டும்? மனத்தை யடக்குவதற்கு ராஜயோகிக்கு எத்தனையோ வருஷங்கள் பாடு படவேண்டும்.? ஆனால், சரீரத்தை யடக்குவதற்கும் மனத்தை யடக்குவதற்கும் சுவாமிகள் பிரயாசைப்படவில்லை; வருஷக்கணக்காக முயற்சிக்கவில்லை; தானே சரீரமும் மனமும் அடங்கிநின்றது. சுவாமிகள் திடீரென்று ஆழ்ந்த நிஷ்டையிலே அமர்ந்துவிடுவார்; தமக்கு இஷ்டமான வரையில் ஆநந்தத்தை யநுபவித்துக் கொண்டிருந்தார்; அவராகவே பகிர்முகத்தில் வரவேண்டுமென்று நினைக்கிறவரையில் பிரபஞ்சப் பிரக்ஞையே உண்டாகாது.

சுவாமிகளுடைய சரீரமானது சுவாமிகளுடைய மனத்துக்கு அடங்கிக் கிடந்தது; சுவாமிகளுடைய மனமானது சுவாமிகளுடைய சித்தத்துக்கு அடங்கிக்கிடந்தது, சங்கற்பத்துக்கு அடங்கிக் கிடந்தது. மனமானது ஆசையாம் காற்றினால் அலைக்கப்படாமல் அடங்கிவிட்டால் அதுவே யோகம் எனப்படும். அந்த மனமானது ஏதேனும் ஒரு காரியத்தினிடத்து அல்லது வஸ்துவினிடத்து ஏகாக்கிரப்படுத்தப்பட்டுவிட்டால், அது சர்வ சக்தி வாய்ந்ததாகிவிடுகிறது. மனிதன் சரீரப் பிரக்ஞையை மறந்துவிடும்படியான ஸ்திதியை யடைந்தாலொழிய அத்தகைய ஏகாக்கிரதை உண்டாகாது. இதற்காகவே யோகமானது அநுஷ்டிக்கப்படுகின்றது; இதற்காகவே கடுந் தவங்கள் புரியப்

படுகின்றன. இதுதான் இந்திய சந்யாசிகள் எல்லாருடைய வும் லக்ஷியம். யோகாப்பியாசத்தின் கருத்தே சங்கற்பத்தைத்திடப்படுத்திக் கொள்ளுதலும், மனத்தை யடக்குதலுமேயாம். மனிதன் யோகாப்பியாச பலத்தினாலே நினைப்புக்களுக்கு உரு கொடுக்கலாம்; மனிதன் யோகாப்பியாச பலத்தினாலே மனத்தைச் சில பிரத்தியேகமான வழிகளிலே திருப்பிவிடலாம்; இப்படிச் செய்வதின் கருத்து மனிதனுடைய ஒழுக்கத்தை விருத்தி பண்ணுவது மாத்திரம் அன்று, மனிதனையே உயர்த்திக்கொள்ளுதலாகும். சுவாமிகள் இந்த யோக சித்தி யடைந்திருந்தார் என்பதற்குச் சுவாமிகள் சென்ற இடத்திலெல்லாம் ஜனங்களை வசீகரப்படுத்தித் தம் இஷ்டம்போல் ஆட்டிவந்தார் என்பதும், அவருடைய அதிகார த்வனியும், கம்பீரமான பார்வையுமே சான்றுகளாம்.

சுவாமிகள் பிறர்மீது செலுத்திவந்த சக்தி ஆச்சரியகரமானது. சுவாமிகள் இருக்கும் இடத்திலே அவரைச் சுற்றியுள்ளவர்களெல்லோருக்கும் சுவாமிகளுடைய குணங்களும் தன்மைகளும் சுபாவங்களும் தாமாகவே உண்டாய்விடும். உதாரணமாக, சுவாமிகள் ஒருநாள் உபவாசம் இருக்கிறாரென்று வைத்துக்கொள்வோம்; அன்று அங்குக் கூடிய அனைவருக்கும் ஆகாரம் வெறுப்பாய்விடும்; எல்லோருக்குமே 'உபவாசம் இருக்கவேண்டும்' என்ற எண்ணமும் உண்டாய்விடும். பரிசுத்தத் தன்மையைப் பற்றியும் இப்படியே. அவருடைய சந்நிதானத்திலே

அசுத்தத்தைப் பற்றி, அழுக்கு நினைப்புக்களை நினைத்தல் முடியாது. சுவாமிகளின் அருகில் நிஷ்டையில் உட்கார்ந்தால், முயற்சி யில்லாமலே மனமானது அடங்கிவிடும்; சுவாமிகளிடமிருந்து வெளியே புறப்பட்டு வரும் சக்திகளின் வேகம் அத் தன்மையது. சில சமயங்களிலே சுவாமிகள் பிறருக்குத் தியான முறைகளை உபதேசித்துக்கொண்டிருப்பார்; திடீரென்று தாமே தியானத்தி லாழ்ந்துவிடுவார். சுவாமிகள் அமெரிக்காவி லிருந்தபொழுது தாம் பிரக்ஞாதீத ஸ்திதியில் சென்று ஆழ்ந்துவிடாதபடி அடிக்கடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டிவந்தது. சில சமயங்களில் தம்மைச் சுற்றிலும் என்ன நடந்துகொண்டிருக்கின்றது, யார் இருக்கிறார்கள் என்பன முதலியவற்றை அடியோடு மறந்துவிட்டு, தீர்க்க நிஷ்டையில் ஆழ்ந்திருப்பார்; விளையாடிக்கொண்டேயிருப்பார், அல்லது பரிகாசப் பேச்சுகள் பேசிக்கொண்டேயிருப்பார், அல்லது வேதாந்த விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டேயிருப்பார்; திடீரென்று விளையாட்டை விட்டுவிட்டு, பரிகாசப் பேச்சுக்களை நிறுத்திவிட்டு, வேதாந்த சம்பாஷணையையும் விட்டுவிட்டு, தனித்த ஞானபுருஷனென விளங்குவார். எல்லோருக்கும் இது ஆச்சர்யமாயிருக்கும்; ஈச்வர மகிமையித்தகையதென்று தம் மூலமாக விளக்கிக் காட்டுவார்; யோகாப்பியாசத்தின் பலனைத் தமது அநுபவ பூர்வமாக விளக்கிக் காட்டுவார். சுவாமிகள் தானே தானுயிருக்கும் நிலைமையில் விளங்குவாரானால், அதுவே அவருடைய சிஷ்யர்களுக்கு உயர்ந்த படிப்பினைகளை யெல்லாம் கொடுக்

கும், அவருடைய சாந்நித்தியம் ஒன்றே அவர்களுக்குச் சஞ்சிவியாயிருக்கும். சுவாமிகளே தவசி, சுவாமிகளே யோகி, சுவாமிகளே முக்த புருஷன்.

சுவாமிகளுடைய ஜீவிதத்தை ஒருவன் அறிந்து கொள்வானானல், சுவாமிகள் பக்தி யனுஷ்டானங்களை எவ்வளவு கடுமையாகப் பயின்று அப்பியசித்தா ரென்பதையும், யோகத்திலும் தியானத்திலும் எத்தனை நாட்கள் இடைவிடாது கழித்துக் கஷ்டப்பட்டிருக்கிற ரென்பதையும், ஆகார நித்திரை யில்லாமல் ஆத்மநிஷ்டையிலே எத்தனை நாட்கள் கழித்திருக்கிற ரென்பதையும் அறிந்து கொள்ள முடியும். சுவாமிகள் தமது இந்திரிய சேஷ்டைகளை யடக்குவதற்கு என்ன தவித்திருக்கிறார்? சாதன காலங்களிலே சரீரத்தை எம்மாதிரி யெல்லாம் வளைத்து, துன்புறுத்தியிருக்கிறார்? "உத்கிருஷ்டமான பிரஹ்மாநுபூதியானது அடையப் படாவிடில் பட்டினி கிடந்து தமது ஜீவிதத்தை மாய்த்துக்கொள்வது" என்று அவர் எத்தனை தரம் துணியவில்லை. "ஒரு சமயத்திலே சேர்ந்தாப்போல இருபத்தைந்து நாட்கள் தினந்தோறும் அரை மணி நேரமே உறங்கினர்" என்றும், "அந்த அரைமணி நேரத்துக்குப் பின்னர் கூட எவரும் அவரை எழுப்பாமலே, அவர் தாமாகவே எழுந்திருந்துவிடுவது வழக்கம்" என்றும் நிவேதிதா சகோதரி கூறுகிறார். சுவாமிகளுடைய வைராக்கியத்தையும் திடசித்தத்தையும் நினைக்கும் பொழுது, தக்ஷிணேச்வரத்திலும் காசிபுரத்திலும் இருந்த அக்கினிகுண்டம் நினைவுக்கு வருகின்றது.; இராக் காலங்

களிலே சுவாமிகள் சாதனங்கள் புரியும் பொருட்டுச் சென்றுகொண்டிருந்த வர நகரத்து ஸ்மசான பூமியின் பிண நெருப்பு ஒரு நினைவுக்கு வருகின்றது; நதி தீரங்களிலே அவர் நிஷ்டை புரிந்த ஏகாந்த ஸ்தலங்கள் நினைவுக்கு வருகின்றன. சுவாமிகள் ஒரு சமயத்திலே "ஜீவிதத்தில் பதினைந்து வருஷங்கள் பட்டினியை நேருக்கு நேர் சந்தித்திருக்கிறவன் நான்; மறுநாள் எதை யுண்பது? எங்கு உறங்குவது? என்பதை அறியாதிருந்தவன்; பூஜ்பத்துக்குக் கீழே சீதோஷ்ணமளவு கருவி 30 டிக்ரி காண்பிக்கும் பிரதேசத்திலே அநேகமாக உடைகளை யின்றி வசிக்கத் துணிந்தவன் நான்." என்று கூறியிருப்பதை நோக்கும்பொழுது சுவாமிகளின் தவத்தின் மகிமை நன்கு விளங்கும். அப்பொழுதுதான் தவம் என்றால் இன்னதென்று பொருள் நன்றாக விளங்கும். இதை யெல்லாம் நினைத்துப் பார்த்துச் சுவாமிகளுடைய பக்தகோடிகள் அனைவரும் மகத்தான ஸ்வதந்திரமாகிய சந்யாச வாழ்க்கையின் நிச்சயமற்ற பல தன்மைகளையும் சந்தோஷத்தோடே யநுபவிப்பதற்கு ஆசை கொண்டார்கள், மௌன கோஷம் புரியும் நக்ஷத்திரங்களின் கீழே சஞ்சார சந்யாசியாகத் திரிவதற்கு அவாவுற்றார்கள், காட்டுக் குகைகளிலே வசிக்கப் பிரியங் கொண்டார்கள், அல்லது கங்காதீரத்திலே மாலை நேரத்தில் தியானத்தில் வீற்றிருக்கப் பிரியப்பட்டார்கள், எப்பொழுதும் ஈச்வரதர்சன மடைந்து இடைவிடா வாழ்க்கை வாழப் பிரியப்பட்டார்கள்.

---

4. ஸ்ரீ விவேகாநந்தர்—குருமூர்த்தி

லக்ஷத்திலே யொருவர்தான் உண்மையான குரு. சிஷ்யர்களை அஞ்ஞானத்திலிருந்து விடுவித்து ஞானமார்க்கத்தைப் போதித்து மோக்ஷத்துக்கு இட்டுச் செல்பவர்களே உண்மையான குருக்களாவர். எவருடைய சந்நிதானத்திலே சிஷ்யனுக்கு முக மலர்ச்சியும் குதுகலமும் உண்டாகின்றதோ, எவருடைய சந்நிதானத்திலே சிஷ்யனுக்குத் துக்கம் நீங்கி ஆநந்தம் பொங்குகின்றதோ அவரே உண்மையான குரு. சுவாமி விவேகாநந்தர் ஒரு ஆச்சர்யமான குரு. சுவாமிகள் தாம் உபதேசித்ததை அநுபவ பூர்வமாக அநுஷ்டானத்தில் கொண்டுவந்தவர். குரு சிஷ்ய சம்பந்தம் வெகு இனிமையானது, அதி மனோகரமானது, வெகு உருக்கமானது, மிகவும் ஆநந்தகரமானது, ஒற்றுமை யுணர்ச்சியை யுண்டாக்கக் கூடியது, தெய்வீக அன்பு வடிவினது. இந்தச் சம்பந்தத்தினால் எவ்வித பந்தமும் ஏற்படுகிறதில்லை, உடைமைகளினிடத்து விருப்பமும் உண்டாகிறதில்லை. இந்தச் சம்பந்தத்தின் லக்ஷணமே கொடுப்பதாம், பிரதியுபகாரத்தை நாடாமல் கொடுப்பதாம். உண்மையான குரு சிஷ்யனுக்குக் கள்ளங் கபடில்லாமல், ஒளிவு மறைவில்லாமல் எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகாநந்த சுவாமிகளுக்கு அப்படிக் கொடுக்கவில்லையா? ஸ்வாமிகளும் அத்தகைய குருவேயாவர்.

சுவாமிகளுக்கு அவருடைய சிஷ்யர்களிடத்தே யிருந்த அன்பு இவ்வளவு என்று சொல்ல முடியாது. சிஷ்யர்களிடத்தே அவர் எவ்வித வித்தியாசமும் பாராட்டியது கிடையாது; சிஷ்யர்களுக்குள்ளே அவர் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று பார்த்தது கிடையாது; தனவந்தர், தரித்திரர் என்று வித்தியாசம் பாராட்டியது கிடையாது; கற்றவர், மற்றவர் என்று பார்த்தது கிடையாது; விருத்தாப்பியர், வாலிபர் என்று பேதம் வைத்தது கிடையாது; புருஷர், ஸ்திரீ யென்று வித்தியாசம் பார்த்தது கிடையாது. சுவாமிகள் எவ்வித வித்தியாசமேனும் பாராட்டியிருந்தால், அது தாழ்ந்தோ ரெனப்படுபவர்களுக்கும் - தரித்திரர் எனப்படுபவர்களுக்கும் - கல்லாதவர் எனப்படுபவர்களுக்கும் அநுகூலமாகவே யிருந்தது. ஆனால், எவருக்கும் சுவாமிகள் வித்தியாசம் பாராட்டியதாகத் தெரியவே வராது. எல்லோரும் தாம் தாம் சுவாமிகளுக்கு மிகமிக வேண்டியவர்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். சுவாமிகள் அவர்களைச் சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டு எவ்வளவு வாத்சல்யம் செலுத்தினரோ அதனினும் பதின் மடங்கு பக்தியும் அன்பும் அந்தப் பக்தகோடிகள் சுவாமிகளிடம் செலுத்தினர்கள், சுவாமிகள் தமது மனமாறச் சிஷ்யர்களிடத்தே வாத்சல்யம் வைத்துவிட்டால், பின்னர் அந்த வாத்சல்யத்துக்கு ஒருபொழுதும் அழிவே யில்லை. சுவாமிகள் மரணபர்யந்தம்கூட, அவர்களைக் கைவிட்டதில்லை! குரு சிஷ்யனுக்குச் செய்யும் உபதேசங்களைப் பின் வரும் பழஞ் சொல்

லால் உதாரணப் படுத்துவார்:—"யானையின் தந்தங்கள் வெளியே வருகின்றன; ஆனால், அவை ஒருபொழுதும் பின் திரும்பிச் செல்கிறதில்லை. அப்படியேதான் புருஷனுடைய வார்த்தைகளும்."

ஒரு சமயத்திலே சுவாமிகள் தமது சிஷ்யர்களைப் பார்த்து, "என்னிடமுள்ள சிறந்தவற்றையெல்லாம் நான் உங்களுக்குக் கொடுப்பேன்; நானுயுள்ள ஒவ்வொன்றையும் கொடுப்பேன்; ஏதேனும் எனக்கு ஞானநுபூதி யிருந்தால் அது உங்களுடையதே. நான் உங்களுடன் என்றென்றும் இருப்பேன்; அவசியம் நேரிட்டால், உங்கள் பொருட்டு நான் ஓராயிரம் மரணங்களுடும், ஓராயிரம் நரகங்களுடும் செல்வேன்." என்று கூறினார்.

"குரு ஒருவனைச் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டுவிட்டால், அந்தச் சிஷ்யன் முக்தியடைகிறவரையில் குரு மறுபடியும் மறுபடியும் ஜன்மம் எடுக்கவேண்டும்" என்பது ஐதிகமும் நம்பிக்கையுமாம். ஒருவன் சிஷ்யனாவதற்குப் பக்குவனா? அல்லவா? என்று சுவாமிகள் ஒருபொழுதும் கவனித்ததில்லை; அவன் உண்மையான உள்ளன்புடனும் ஹிருதயத்துடனும் தம்மிடம் வந்தால் போதும், அதுவே தாம் அவனைச் சிஷ்யனாக ஏற்றுக் கொள்வதற்கு ஏற்ற நற்சாக்ஷிப் பத்திரம் என்று சுவாமிகள் கருதினார்.

சிஷ்யனாக வருபவன் உபதேசத்தை யறவே விட்டுவிட்டாலும் சரி, சுவாமிகளையே விட்டுவிட்டாலும் சரி, அல்லது பிற்காலத்திலே சுவாமிகளுக்கு நேர் விரோத

மான எதிர்க்கட்சியிலே சேர்ந்துகொண்டாலும் சரி, இதெல்லாம் பரவாயில்லை; அவன் உள்ளன்புடையவனாய், உண்மையுள்ளவனாயிருந்தால் போதும்; இதுவே சுவாமிகளுடைய கருத்து. சுவாமிகளுடைய மேனாட்டுச் சிஷ்யர்களிற் பலர் சுவாமிகளை விட்டுப் பிரிந்ததற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால், "இவையெல்லாம் ஜகன்மாதாவின் இச்சையினால் நடக்கின்றன" என்றும், "ஆதலால், இன்னார் இன்னார் இவ்வளவு காலம் வேலை செய்யவேண்டுமென்றும், இவ்வளவு தூரம்தான் வேலை செய்யவேண்டுமென்றும் ஜகன்மாதாவுக்குத் தெரியும்" என்றும் சுவாமிகள் நம்பியிருந்தாராதலால், ஆறுதல் அடைந்திருந்தார். சுவாமிகளுடைய மேனாட்டுச் சிஷ்யர்களிலே சுவாமிகளைக் கைவிட்டவர்கள் அவர்களுடைய வேலையைச் செய்து முடித்துவிட்டார்களென்று சுவாமிகள் தேறுதலடைந்துகொண்டார். ஆகையால், அவற்றைப்பற்றிச் சுவாமிகளுடைய மனத்திலே வருத்தம் என்பது உண்டாகவில்லை. சுவாமிகள் தம்மிடமிருந்த மிகமிக உத்தமமானதைத் தமது சிஷ்யர்களுக்குக் கொடுத்தாய்விட்டது என்றும், இனிமேல் அந்த உபதேசத்தை யநுஷ்டானத்தில் கொண்டு வருவதும் வராததும் சிஷ்யர்களுடைய வைராக்கியத்தையும் சங்கற்பத்தையும் பொறுத்ததேயென்றும் சுவாமிகளுக்குத் தெரியும்.

சிஷ்யர்கள் தமது உபதேசத்தை யனுவளவாவது அனுஷ்டித்திருந்தால் அதுவே போதும் என்று சுவாமிகள் மகிழ்ச்சி யடைந்தார். இன்னொரு சமயத்திலே சுவாமிகள்

அவர்களுக்குத் தாம் உண்மையான குரு அல்லவென்றும்; ஈச்வரனே உண்மையான குருவென்றும் கண்டுகொள்வார். ஆகையினால், சுவாமிகள் நம்பினதுமில்லை, விசனித்ததுமில்லை. சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளப்பட்டவன் குருவை நிந்தித்தாலும், சபித்தாலும், துன்பு செய்தாலும் கூட, அந்தச் சிஷ்யனை எவ்விதத்திலும் வெறுக்காதவரே உண்மையான குருவாவர். சுவாமிகள் அத்தகைய குரு.

சுவாமிகளுடைய ஸ்வாநுபூதி அவருடைய முகத்திலே தெளிவாகத் ததும்பிக் கிடந்தது. சுவாமிகள் வாக்குச் சாதுர்யமாய்ப் பேசும் பேச்சுக்களுக்கு எவ்வளவு வன்மையும் பயனும் உண்டோ அவ்வளவு வன்மையும் பயனும் சுவாமிகளுடைய சாந்நித்தியத்துக்கே யுண்டு; சுவாமிகளுடைய மௌனத்துக்குக்கூட உண்டு. சுவாமிகளும் அவருடைய குருவும் ஆத்மஞானத்தை உபதேசித்த குருக்களாயிருக்கவில்லை; ஆத்மஞானத்தைச் சிஷ்யர்களுள்ளே செலுத்திய குருக்களாயிருந்தார்கள். சுவாமிகள் தமது ஒருபார்வை மாத்திரத்தினாலே, அல்லது ஒரு சமிக்ஞை மாத்திரத்தினாலே அளவற்ற ஆத்ம ஞானத்தை யப்படியே புகட்டி விடுவார். ஏனெனில், சுவாமிகள் ஞான மொழிகளையும் எண்ணங்களையும் பிரத்தியக்ஷப்படுத்திக் கொண்டவர். மற்றவர்கள்: மார்க்கங்களையும் உபாயங்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால், சுவாமிகள்: முக்தி மார்க்கத்தை நேரே காட்ட வல்லவராயிருந்தார். மற்றவர்கள், "இப்படியிப்படி" என்று சொல்லிக்கொண்டிருந்தால், சுவாமிகள்;

வஸ்துவை நேரே காட்ட வல்லவராயிருந்தார். சுவாமிகள் ஆத்ம ஞானக்கினிப் பிழம்பாயிருந்தார்; சுவாமிகளின் சமீபத்தில் வந்தவர்கள் அனைவர்மீதும் அவ்வறிவொளி வீசியது. சுவாமிகளுடைய சம்சர்க்க விசேஷத்தாலே, அநேகர் தங்கள் பாபத் தொழில்களை விட்டுவிட்டுப் புண்ய புருஷர்களானார்கள்; அநேகர் சுருங்கிய, சிறிய புத்தியை யெல்லாம் விட்டுவிட்டுப் பரந்த மனத்தினரானார்கள். சுவாமிகளைத் தரிசித்தால் போதும்; அவர் மூலமாகத் தரிசனம் செய்தவர்களுக்கு ஞான உலகங்களும் அநுபவங்களும் தோன்றும். சுவாமிகள் தமது சிஷ்யர்களைச் சரிவரப் பயிற்றுவிப்பதில் தமது நினைப்புக்கள், தமது ஹிருதயம், தமது சரீரம், தமது அன்பு, தமது அநுபூதி முதலிய சகலவற்றையும் இடைவிடாமல் தாராளமாகச் செலவழித்தார். சுவாமிகள் அவர்களெல்லோரையும் தமது சொந்தப் புத்திரர்களாகப் பாவித்துவந்தார்; அநேகசிஷ்யர்களுடைய கிருக விஷயங்களில்கூடச் சுவாமிகள் கவலை கொண்டார். அவ்வளவு சிஷ்ய வாத்சல்யம் சுவாமிகளுக்கு. சுவாமிகளுக்கு இருந்த சிஷ்ய வாத்சல்யம் இத்தகையதென்று அவருடைய சிஷ்யர்களெல்லாருக்கும் நன்றாகத் தெரியும்; தங்கள் விஷயத்திலே சுவாமிகள் எவ்வளவு பொறுப்பு வகித்திருக்கிறாரென்பதும் அவர்களுக்குத் தெரியும்; அவர்களும் அது போலவே சுவாமிகளிடத்தில் அன்பு செலுத்தினார்கள். சுவாமிகள் மனத்தில் இச்சித்த காரியங்களையெல்லாம் செய்து முடித்துக்கொடுத்து, சுவாமிகளுக்குச் சந்தோஷம் உண்டாக்கினார்கள். சிலர், சுவாமிகளுடைய தத்துவ உப

தசத்திலே சிரத்தையுடையவர்களாயிருந்தார்கள்; வேறு சிலர், அவருடைய பரோபகாரச் செயல்களிலே சிரத்தையுடையவர்களாயிருந்தார்கள்; இன்னும் சிலர், சுவாமிகளுக்குச் சிசுருஷை செய்வதிலே சிரத்தையாயிருந்தார்கள்; இவ்விதமாகவே அனைவரும் ஒவ்வொரு விதத்தில் சுவாமிகளிடத்தில் பக்தியும் சுவாமிகளுடைய முயற்சிகளில் சிரத்தையும் பாராட்டினார்கள்.

சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குப் பரிபூர்ண சுதந்திரம் அளித்துவந்தார். "ஒவ்வொருவரும் தத்தம் முயற்சிகளினாலும் தவறுதல்களினாலுமே ஜயம் பெறவேண்டும்" என்பது சுவாமிகளுடைய கோட்பாடு. "ஒவ்வொருவரும் அவரவர்க்கு வேண்டியதை அவரவர்களே தெரிந்து ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் அவரவரே ஆலோசனை செய்யவேண்டும், அறிந்துகொள்ள வேண்டும். உண்மையையறியாமல் குருட்டுத்தனமாக நம்புவதைவிட உண்மையை அறிய முயற்சித்து அம் முயற்சியிலே தவறிவிட்டால் அது மேன்மையே" என்று சுவாமிகள் கருதினார். ஒவ்வொருவரும் அவரவராக அறிந்து தெரிந்துகொண்டால், அவர்களுக்குத் தன்னம்பிக்கை யுண்டாகும். சுவாமிகளுக்குத் தன்னம்பிக்கைதானே உயிர் நிலைக்கொள்கை.

சுவாமிகள் தமது அப்பியாச காலத்திலே பெருங்கேள்விகளுக்கு விடைபெறும் விஷயத்திலே எவ்வளவு புத்திக் குழப்பத்தை அடைந்தாரோ அவ்வளவு புத்திக்

குழப்பம் அவருடைய சிஷ்யர்களுக்கு ஏற்படவில்லை யென்பது உண்மைதான். ஸ்வாமி விவேகாநந்தன் என்னும் ஞானுதித்தன் தனது அகண்ட ஞான கிரணங்களை எங்கும் வீசி ஹிருதயங்களி னுள்ளெல்லாம் நுழைந்து இருட்டை யெல்லாம் துரத்தி யடிக்க, அந்தச் சிஷ்யர்களுக்குப் புத்தி சமாதானம் ஏற்படுவதற்கு இதனினும் வேறு ஏதேனும் வேண்டுமோ? சிஷ்டர்கள் சுவாமிகளிடத்திலே பரிபூர்ண நம்பிக்கை திடமாக வைத்துவிட்டார்கள்.

ஹிந்து மதத்தினுள்ளே நுழைந்து உண்மையை யறியவேண்டிய ஒரு கஷ்டம் மேனாட்டுச் சிஷ்யர்களுக்குத் தான் உண்டாயிற்று. மேனாட்டு நடை யுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள், நாகரிகப் போக்குகள் இவற்றிலே பிறவிமுதல் ஆழ்ந்து அமிழ்ந்திப் பழகியவர்கள் ஆர்ய ஞானத்தின் அருமையை அறிவதென்றால் மிகமிகக் கஷ்டம்தானே. ஆனால், அவர்கள் எப்படிச் சீக்கிரம் அறிந்து கொண்டார்களென்றால், சுவாமிகளுடைய சாந்நித்திய சக்தி அவர்களுக்கு அறியும் ஆற்றலையும் ஆழ்ந்த திருஷ்டியையும் அளித்தது; இன்னும், அறிந்தும் அறியாமலும் சுவாமிகள் தமது ஞானசக்தியை அவர்களுள் செலுத்திக் கொண்டிருந்தார்.

‘மத விஷயத்திலாகட்டும், தத்துவஞான விஷயத்திலாகட்டும், சமுதாய விஷயத்திலாகட்டும், அல்லது சொந்த வாழ்க்கையிலாகட்டும், ஸ்வதந்திரமே சிறந்தது’ என்று சுவாமிகள் நம்பினர்; அப்படியே அனைவர்க்கும் பரிபூர்ண

ஸ்வதந்திரம் வழங்கினர். தமது சிஷ்யர்கள் தம்மீதுகூடச் சார்ந்திருத்தல்கூடாதென்பது சுவாமிகளுடைய அபிப்பிராயம். சுவாமிகள் முதலிலும் கடைசியிலும் எப்பொழுதும் தமது சிஷ்யர்களுக்கு இடைவிடாது பறையடித்துப் போதித்து வந்தது "உங்களுடைய சொந்தக் கால்களின்மீதே நில்லுங்கள்!" என்பதேயாம். சுவாமிகள் இந்த விஷயத்தில் வெகு உறுதியாகவும் வெகு கண்டிப்பாகவும் இருந்தார்; ஸ்வதந்திரத்தை நசுக்கி அதிகாரம் செலுத்த விரும்புபவர்கள் அறியாமையினலோ, பெயர் பெறவேண்டுமென்ற ஆசையினலோ, அல்லது வீண் தற்புகழ்ச்சியினலோ தூண்டப் பெற்றுப் பிறரை யடக்கி ஆள விரும்புகிறார்கள். சுவாமிகளுக்கு இவ்வித ஆசை யொன்று மில்லை. எவர் மீதும் அதிகாரம் செலுத்தி, "இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று சொல்வதற்குச் சுவாமிகளுக்கு எப்பொழுதும் பிரிய மில்லை.

சுவாமிகள் அமெரிக்காவிலிருந்து தமது நண்பர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் இந்தியாவுக்கு அடிக்கடி எழுதி வந்த கடிதங்களில் தாம் "வடிவற்ற வார்த்தை"யாயிருக்க விரும்புவதாயும், அவர்கள் எதற்கும் தம்மை எதிர்பார்க்கக்கூடா தென்றும், ஆனல் தங்களைத் தாங்களே எதிர்பார்த்துக்கொள்ளவேண்டு மென்றும் எழுதிக்கொண்டுவந்தார்; தாம் இறந்துபோய்விட்டதாக நினைத்துக்கொண்டு தமது சிஷ்யர்கள் வேலை செய்யவேண்டு மென்றும், தம்மை எதிர்பார்க்கக் கூடாதென்றும் ஒரு சமயம்

எழுதினர். இன்னும், தமது சிஷ்யர்கள் தம்மையாவது தமது குருமூர்த்தியையாவது ஸ்தோத்திரம் செய்து அநாவசியமாக மெச்சக்கூடாதென்றும், கொள்கைகளை ஸ்தாபிப்பதிலேயே கண்ணாயிருக்கவேண்டுமென்றும் சுவாமிகள் போதித்துவந்தார்.

"உலகிலே யிதுவரை வந்த மஹான்களின் சிஷ்யர்களெல்லோரும் தங்கள் குருக்களிடம் வைக்கும் பக்தி மேலீட்டால் குரு போதித்துவந்த கொள்கையை மறந்து, குருவையே கொண்டாடிக் குருடர்களாகிவிட்டார்கள்," என்றும், ஆதலால், தமது சிஷ்யர்கள் அந்த விஷயத்தில் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்றும் சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்கு அடிக்கடி வற்புறுத்திவந்தார்.

தமது சிஷ்யர்கள் "பிறரை யடக்கியாள ஒரு பொழுதும் விரும்பலாகாது" என்று சுவாமிகள் அவர்களை அடிக்கடி எச்சரிக்கை செய்துவந்தார்; சுவாமிகளுடைய பெருத்த தேச கைங்கர்யத்திலே பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் ஒருபொழுதும் 'தலைவர்' என்று கருதிக்கொள்ள லாகாது என்றும் "ஆனல், 'பணியாளன்' என்றே கருதிக்கொள்ளவேண்டும்" என்றும் அடிக்கடி சுவாமிகள் எழுதிவந்தார்; ஏனெனில், "தலைமை வகிப்பதாகக் கொஞ்சம் காண்பித்துக்கொண்டாலே பொறாமையைக் கிளப்பி எல்லாவற்றையும் அழித்துவிடுகிறது." சுவாமிகள் பிறவியிலேயே தலைவரெனப் பிறந்தவர். அவருடைய பைபற் பர்வம்முதல் அவருடைய ஜீவிதத்தின்

கடைசிநாள் வரையில் சுவாமிகள் எங்கும் எப்பொழுதும் பிறருக்குத் தலைமையே வகித்திருக்கிறார்; ஆனால், சுவாமிகள் ஒருபொழுதும் தலைமை ஸ்தானத்தை நாடியதில்லை, சொல்லப்போனால் சுவாமிகள் தலைமைப் பதவியை வெறுத்திருக்கிறார். மடத்திலே யிருந்தபோதிலும் சரி, அல்லது மேனாட்டு அரண்மனைகளிலே யிருந்தபோதிலும் சரி, அவர் எப்பொழுதும் ஆசார்ய ஸ்தானத்திலேயே, குருநாதராகவே, தலைவராகவே யிருந்திருக்கிறார். சுவாமிகளைப்பற்றி நன்கு அறிந்திருந்த ஒரு ஆங்கிலேயர்: "சுவாமிகளுடைய சமர்த்து அவர்களுடைய கம்பீரத்திலே யிருந்தது; அது ராஜ கம்பீரத்துக்குச் சற்றும் குறைந்ததன்று" என்று கூறியது உண்மைதான். சுவாமிகளுடனே கூட இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் யாத்திரை செய்த ஒரு ஆங்கில மாது: "அவர் எந்த அந்நிய நாட்டினரையும் குரு ஸ்தானத்தி லிருந்துகொண்டு சந்தித்தாரே யொழிய வேறு எந்த ஸ்தானத்திலிருந்துகொண்டும் சந்தித்ததில்லை" என்று கூறினார்.

சுவாமிகளிடத்திலே இன்னொரு அபூர்வ குணம் இருந்தது. தம்மிடத்திலே எவர் பரிபூர்ண நம்பிக்கை வைத்துவிடுகிறார்களோ அவர்களின் பொருட்டுத் தன்னலம் மறுத்து எவ்வித ஊழியமும் செய்வதற்குச் சுவாமிகள் எப்பொழுதும் தயாராயிருந்தார். இந்தக் குணம் அவருடைய குழந்தைப் பருவத்திலிருந்தே உண்டு. பிற்காலங்களிலே, சுவாமிகளுடைய சகோதர சந்யாசிகளும்

சிஷ்யர்களும் சுவாமிகளிடத்திலே பரிபூர்ண நம்பிக்கை வைத்துத் தங்களைச் சுவாமிகளின் பொருட்டுச் சமர்ப்பணம் செய்துகொண்டிருந்தால், சுவாமிகளும் அவர்களின் பொருட்டுத் தம்மைச் சமர்ப்பணம் செய்துகொண்டுவிட்டார். அதுவும் சுவாமிகளின் குருமூர்த்தி மஹா சமாதியடைந்துவிட்ட பின்னர்ச் சுவாமிகள் கடுந்தவம் புரிதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டார்; "ஹிமோத்கிரிக்கு அல்லது வேறெங்கேனும் போய்விடுவது" என்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால், தமது சகோதர சந்யாசிகளுள் எவரேனும் வியாதியாய் விழுந்துவிட்டாரென்று கேள்விப்படுவதுதான் தாமசம்; உடனே அவருடைய தீர்மானமெல்லாம் மறந்துவிடும். இப்படித்தான், பிரயாகையிலே சுவாமி யோகாநந்தர் வியாதியில் விழுந்துவிட்டார்; சுவாமி அபேதாநந்தரும், சுவாமி சதாநந்தரும் ஹ்ருஷிகேசத்தில் வியாதியில் விழுந்துவிட்டார்கள்; ஹிமோத்கிரியிலே சுவாமி அகண்டாநந்தர் வியாதியிலே விழுந்துவிட்டார். இச் சமயங்களிலெல்லாம் சுவாமிகள் தமது வைராக்கிய தீர்மானங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இவர்களுக்கு வேண்டியன செய்ய ஓடிவிட்டார்.

சுவாமி அகண்டாநந்தரின் பொருட்டுச் சுவாமிகள் டேராடூன் நகரிலே உண்ணச் சோற்றுக்கும் இருக்க இடத்துக்கும் வீட்டுக்குவீடு இரந்து சென்றார். ஹிருஷிகேசத்திலே சுவாமி சதாநந்தர் அதிக வியாதியிலே விழுந்துவிட்ட பொழுது, 'அவருக்குத் தகுந்த சிகிச்சையும் ஆகாரமும்

கொடுக்கவேண்டுமானால், அவரைக் கீழே சம வெளிப் பிரதேசத்துக்குக் கொண்டுபோனால்தான் முடியும்' என்று தோன்றிவிட்டது. இந்தச் சதாநந்தர் சுவாமிகளுக்குச் சகோதர சந்யாசியல்லர்; ஆனால், சுவாமிகளின் சிஷ்யர். உடனே சுவாமிகள் என்ன செய்தார்? தெரியுமா? சிஷ்யருடைய காஷாய மூட்டையையும் கம்பிளியையும் பாதரக்ஷைகளையுங்கூடத் தமது தோள்களின்மீது தூக்கிப் போட்டுக்கொண்டு, சுவாமி சதாநந்தரையும் மெல்ல மெல்ல இட்டுக்கொண்டு போனார். சுவாமிகள் தமது அன்பர்களின் பொருட்டு என்ன வேண்டுமோ செய்வார்—அன்பின் மிகுதியினாலே சுவாமிகள் ஒரு சமயத்திலே "அவர்களின் பொருட்டுத் தாம் திருடவும் கூடும்" என்று கூறினார்.

சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் தமது உடல் பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்துவிடவில்லையா? இதனால் சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அடிமையாய்விடவில்லையா? ஆகையினாலே, சுவாமிகளின் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய குழந்தைகள் சுவாமிகளுடைய இடைவிடாத கவலைக்கும் பணிவிடைக்கும்பாத்திரர்களாயினர். மோக்ஷமானாலும் சரி, பந்தமானாலும் சரி, ஸ்வர்க்கமானாலும் சரி, நரகமானாலும் சரி, சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் எப்படி அடிமையாயிருந்தாரோ அப்படியே ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய புத்திரர்களுக்கும் அடிமையாயிருந்தார்.

சுவாமிகள் தமது சிஷ்யர்களிடத்தே செலுத்தி வந்த அன்பும் சிரத்தையுமே அவர்களை அவரிடத்து அடிமைக ளாக்கி வைத்தது. அவர் காலாலிட்ட ஆக்ஞையைத் தலை யால் செய்துவந்தார்கள். "தலைவரைப் பற்றிய உண்மை யான சோதனையானது அவருடைய அமைப்புச் சக்தியில் இல்லை, அல்லது உயர்ந்தனவும் நூதனமானவுமான எண் ணங்களையும் அவர்களுடைய அநுபூதி உபாயங்களையும் வெளியே எடுத்துக் காட்டுவதிலும் அல்ல; ஆனால், மிக மிக வேறுபட்ட ஜனங்களையும் அவர்களுடைய பொது அநுதாப மார்க்கத்திலே ஒன்று சேர்த்து வைத்துக் கொள்வதிலேதான் உள்ளது. இப்படிச் செய்வதற்கு அவர் முயற்சி செய்வதில்லை; அவர் அறியாமலே இந்த வேலை அவரால் செய்யப்பட்டது. சுவாமிகளுடைய சிஷ் யர்கள் என்ன ஒரு ஜாதியா? ஒரு மதமா? ஒரு தேசமா? ஒரு வகுப்பா? உலகிலுள்ள எல்லா மதங்களிலும் எல்லா வகுப்புக்களிலும் எல்லா ஜாதிகளிலு மிருந்து சுவாமிக ளுக்குச் சிஷ்யர்கள் உண்டானார்கள். உலகில் இதுவரை வேறு எந்த ஆசார்யருக்காவது இம்மாதிரி சிஷ்யர்கள் இருந்ததுண்டா?

சுவாமிகள் அவர்களுக்குக் குருவா யிருந்தார், தலைவ ரா யிருந்தார், பிதாவா யிருந்தார், நண்பரா யிருந்தார், சேவகராயிருந்தார். சுவாமிகள் எவரிடத்தும் தோல்வி யை ஏற்றுக்கொள்ள மாட்டார்; ஆனால், அவருடைய ஞானபுத்திரர்களாகிய சிஷ்யர்களிடத்தில் மாத்திரம்தான் சந்தோஷத்துடனே தோல்வியை ஏற்றுக்கொள்வார்.

தம்மினும் அதிகமாக அவர்கள் பிரகாசிக்கவேண்டு மென்றும், தாம் செய்த கார்யங்களைப் பார்க்கிலும் பெருங் கார்யங்கள் அவர்கள் செய்யவேண்டுமென்றும் சுவாமிகள் விரும்பினார்.

சுவாமிகள் தமது சிஷ்யர் ஒருவருக்கு எழுதிய வொரு கடிதத்திலே "என்னுடைய குழந்தைகளுள் ஒவ்வொருவரும் என்னிலும் நூறுமடங்கு பெருமையுடையவர்க ளாகவேண்டும். உங்களில் ஒவ்வொருவரும் ஒரு ராக்ஷதனாக வேண்டும்—வேண்டும், அதுதான் எனது வார்த்தை" என்று எழுதினார். 'அவர்களுக்குத் தன்னம்பிக்கை மாத்திரம் இருக்குமானால், அவர்களுக்கு மரணம் நேரினும் பின் வாங்காத குருபக்தி மாத்திரம் இருக்குமானால், அவர்கள் நிச்சயமாய்ப் பெரியோர்க ளாவார்கள்' என்று நம்பினார். சுவாமிகளுக்கு அவர்களிடத்தே அளவற்ற நம்பிக்கை யுண்டு. 'அநுபவமாகிற கடலிலே அவர்களைக் கப்பல்களைப்போல அனுப்பிவிட்டால், கடல் எவ்வளவு கோஷித்துக் குமுறி பெரிய பெரிய அலைகளை வீசிக் கப்பல்களைத் தடுமாறச் செய்தபோதிலும், சுவாமிகளுடைய ஞானபுத்திரர்களாகிய கப்பல்கள் நிச்சயமாக எப்படியும் அக்கரை போய்ச் சேர்ந்துவிடுவார்களென்பது திண்ணம்' என்று சுவாமிகள் நன்முக அறிந்திருந்தார்.

சுவாமிகள் அவர்களைத் தமது உடைமைக ளாக்கிக் கொண்டுவிட்டார்; அதனால்தான் சுவாமிகள் தமது இஷ்

டப்படி அவர்களுக்கு ஞானம் ஊட்ட முடிந்தது. தம்மிடம் சிஷ்யர்களாக விரும்புகிறவர்களை அவர் வெகு கடினமான கேள்விகள் கேட்டுப் பயமான பரிசோதனைகள் செய்வார். ஆனால், சுவாமிகள் தமது சிஷ்யர்களின் அளவற்ற குரு பக்தியைத் தமது ஸ்வயகார்யத்துக்கு எதற்கும் உபயோகித்துக்கொண்டவரல்லர். சுவாமிகள் ஏதேனும் செய்தால் அதைச் சிஷ்யர்களைப் பரிசோதிக்கும் பொருட்டே செய்வார். சுவாமிகள் அவர்களுக்கு எந்த நிமிஷத்திலும் எந்த வேலையும் செய்யத் தயாராயிருந்தார். சிஷ்யர்கள் சுவாமிகளை எப்பொழுது வேண்டுமானாலும் கண்டு பேசலாம். சுவாமிகள் அவர்களுக்குள்ளே எவ்வித வித்தியாசமும் பாராட்டாது எல்லோருடனும் கலந்து உறவாடி வந்தார்; தமது வேலைக்கு ஒருவர் வேண்டும், இன்னொருவர் வேண்டியதில்லை யென்று அவர் நினைக்கவில்லை. எல்லோரும் இன்றியமையாதவர்க ளென்றே நினைத்தார். சுவாமிகள் சிலரைத் தமக்கு வேண்டியவாறு உருவாக்கிக் கொண்டாரென்றே சொல்லலாம்.

சுவாமிகள் கொஞ்சம்கூடத் தயைதாக்ஷண்ய மின்றிச் சகலரையும் கண்டிக்கும் குணமுடையவராயிருந்ததினாலே, சிஷ்யர்கள் அனைவரும் அவரைக் கண்டு நடுங்கினார்கள்; ஆனால், அவர்கள் அவரிடம் அதே மாதிரி அன்பு செலுத்தினார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைப்பற்றி எவ்வளவு கவலை கொண்டிருந்தாரோ அதே மாதிரி சுவாமிகளும் தமது சிஷ்யர்களைப்பற்றிக் கவலை கொண்

டிருந்தார். சுவாமிகளுடைய அந்தரங்க சிஷ்யர்களுள் ஒவ்வொருவரும் அதனுல்தான் உலகில் பிரமாதமான கார்யங்களைச் செய்திருக்கிறுர்கள். பிரமாதமான கார்யங்கள் என்ருல், உலகில் பெயர் பெறும்படியான கார்யங்கள் அல்ல; சிலர், தியானபரர்களாகி உத்தமநிலையை யடைந்தார்கள்; வேறு சிலர், மடங்களை ஸ்தாபித்தார்கள்; வேறு சிலர், பாஷா ஞானத்திலும் அறிவிலும் இணையற்றவர்களானுர்கள்; இன்னும் சிலர், மதாசார்யர்களாகவும் வாக்கு வன்மை வாய்ந்தவர்களாகவும் ஆனுர்கள்; மற்றும் சிலர், வியாதியஸ்தர்களைப் பராமரிக்கவோ, ஏழைகளுக்கு உதவி புரியவோ செய்தார்கள். அவர்கள் எல்லோருடைய ஹிருதயங்களிலும் இராப் பகல் இருபத்து நான்கு மணி நேரமும் இடைவிடாமல் விளங்கிக்கொண்டிருப்பது சுவாமிகள்தான். ஆகையால், சுவாமிகள் "தலைவர்" என்பதற்கும் "ஆசார்யர்" என்பதற்கும் தடையே யில்லை.

---

5. ஸ்ரீ விவேகாநந்தர்—கலா வல்லவர்

ஸ்வாமிகள் இந்திரிய சேஷ்டையினுல் கலக்குறுதவர் ஆயினும், ஐம்புலன்களையும் வென்ற அற்புத புருஷராயினும், அவர் ஒருபொழுதும் வாழ்க்கையின் சாதாரண விஷயங்களினின்றும் பிரிந்து நின்றதில்லை, மனுஷ்ய லக்ஷணங்களினின்றும் அகன்று நின்றதில்லை. சுவாமிகள் எல்லாவற்றையும், இவ்வுலகிலேயுள்ள எந்த இழிந்த வஸ்துவை

யும்கூடப் பிரஹ்மாநுபூதியாகிற ஒளியிலே பார்க்கக்கூடும். ஸ்தூல அநுபவங்கள்கூட அவரால் ஞானப்பொருள் கொடுக்கப்பட்டன. இதனுல்தான் நாம் அவரைக் ‘கலாவல்லவர்’ என்கிறோம்; ஏனெனில், சுவாமிகள் ஐம்புலன் அநுபவங்களையெல்லாம் ஆத்ம பாஷையிலே ஞானவடிவுகள் கொடுத்து விளக்கினுர். அவருடைய கவிகளைப் பாருங்கள்! அவற்றிலே பிரகிருதி தனது சம்பூர்ண லக்ஷணங்களுடன் பிரகாசிக்கிறுள்! நதிகளிலே, கடலிலே, காட்டிலே, மலையிலே, சூர்யனிலே, நக்ஷத்திரங்களிலே ததும்பும் பிரகிருதி யழகெல்லாம் கோர்க்கப்பட்டிருக்கிறது; கலை பொங்குகின்றது! ஞானுநுபூதி நிறைந்து நிரம்பித் ததும்புகின்றது!

சுவாமிகளிடத்திலே கலையும் தவமும் கலந்து நின்றது! சுவாமிகள் தமது இயற்கையை ஸ்தூல அநுபவத்திலே ஒருபொழுதும் லயம் செய்ததில்லை. சுவாமிகள் இடைவிடாத சாக்ஷியா யிருந்தார்; மகாகவி, ஸ்வப்பனசுகி, அநுபவமாகிற காக்ஷியிலே ஆநந்தம் கொள்பவர்; ஸ்தூல விஷயங்களிலேகூட ஞான விஷயங்களைத் தரிசித்தவர். சங்கீதம், காவ்யம், பாவை இவை ஸ்தூலப்பிரகிருதியை விளக்குவிப்பதற்கு அத்தனை உபாயங்களாம்; இந்த உபாயங்களினூடே ஆத்மாவானது வடிவத்தினும், ஜடத்தினும் மேம்பட்டுப் பொலிகின்றது.

சுவாமிகளோ இந்திய சங்கீதத்திலே மகா வித்வான்; அவருக்கு ஐரோப்பிய சங்கீதமும் தெரியும்; முக்கியமாகப் பிரெஞ்சு சங்கீதமும் தெரியும். சுவாமிகள் பாடினுல்

ஸ்ரீ கிருஷ்ணன் புள்ளாங்குழல் ஊதினது போன்று அவ்வளவு இனிமையாயிருக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் சுவாமிகளைப் பாடும்படி சொல்லிவிட்டு, அப்பாட்டிலே லயித்து, அப்படியே பிரபஞ்சத்தை மறந்து பிரஹ்ம நிஷ்டை யெய்திவிடுவார். ஒரு சங்கீத வித்துவான், அநேக முதற்தர வித்துவான்களுடன் பரிச்சயமுள்ளவர், சுவாமிகளைப்பற்றித் தாம் கேட்டவர்களுள் எல்லாம் அந்தக்கலையிலே சுவாமி விவேகாநந்தர் அவ்வளவு உயர்வு பெற்றவர் எவருமே யில்லையென்று ஒரு சமயத்தில் கூறியுள்ளார். "சுவாமிகள் பாடியபொழுது, அவருடைய குரலின் இனிமை, பொங்கித் ததும்புகின்ற அவருடைய ஆத்மாவின் உணர்ச்சியில் ஒற்றுமைப்பட்டு, அவருடைய பாடலைக் கேட்டவர்கள் அச் சமயத்துக்கு இன்னும் உயர்ந்ததொரு உலகினுக்குக் கொண்டுபோகப்பட்டவர்கள் போல அவர்களை அவ்வளவு அபரிமிதமான சக்தியுடனே மயக்கிவிட்டது," என்றார் அவர் இன்னும். இன்னும் அநேக வித்வான்கள் இம்மாதிரியே அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். சங்கீதம் அவருடைய ஆத்மாநந்தத்தைக் கிளப்பிவிடும்; தெய்விக உணர்ச்சியாகிற சமுத்திரத்தை அவரிடத்திலே உற்பத்தி செய்துவிடும். சுவாமிகள் பாட ஆரம்பித்துவிட்டால், ஆகாரம், நித்திரை முதலியவற்றை மறந்துவிடுவார்; அவ்வளவு லயித்துவிடுவார். நேரம் போனது தெரியாமல் பாடிக்கொண்டே யிருப்பார்; களைப்பென்பதே அவருக்குத் தோன்றாது.

மேனாட்டிலே இடைவிடாமல் சில வருஷங்கள் சுவாமிகள் பிரசங்கம் செய்ததினாலே, பாடலுக்கு அநுகூலமாயிருந்த அவருடைய இனிமையான குரல் மங்கிவிட்டது; ஆயினும், அவர் பாடிவிட்டால், பிரமித்து லயிக்காதவர்கள் கிடையா. சுவாமிகளோ வாய்ப்பாட்டிலும் வல்லவர்; வீணை முதலிய வாத்தியங்கள் வாசிப்பதிலும் வல்லவர். சுவாமிகள் சிறு வயதிலே நரேந்திரநாத தத்தர் என்ற பெயருடனே யிருந்தபொழுது, ஒரு எளிய அச்சுக்கூடக்காரன் ஆயிரம் பாடல்களடங்கிய புஸ்தகம் ஒன்று எழுதி அதைப் பிரசுரிப்பதற்கு உதவி புரியும்படி சுவாமிகளை வேண்டிக்கொண்டான். சுவாமிகள சந்தோஷத்துடனே அந்த வேலையை ஏற்றுக்கொண்டு, அப் புத்தகத்துக்குச் சங்கீத சாஸ்திரத்தைப்பற்றிச் சுமார் 90 பக்கங்களில் விரிவாக ஒரு முகவுரை எழுதி, அப் புத்தகத்தைப் பிரசுரித்தார். அந்த முகவுரையிலே "சங்கீதமானது பிரகிருதியிலிருந்து உண்டானது" என்றும், "அது தெய்வீகமானது" என்றும், "அகண்ட ஞானத்தின் வெளிப்பாடே" என்றும் சுவாமிகள் தெளிவாக விளக்கினார்.

சுவாமிகள் ஒரு சமயத்திலே "பிரகிருதியிலேயுள்ள ஒற்றுமையை மனிதன் மெச்ச முடியாவிட்டால், ஒற்றுமை, வனப்பு, அழகு எல்லாவற்றினுடையவும் திரளாம் ஈச்வரனை எப்படி யொருவர் மெச்சக்கூடும்?" என்றார். ஈச்வரனை நோக்கி ஸ்தோத்ரமாகப் பாடுகின்ற பாட்டைச் சுவாமிகள் எவ்வளவு உருக்கத்துடனே பாடுவாரோ அதே உருக்கத்துடன் சுவாமிகள் காமப்பாட்டுக்களையும்

பாடுவார்; காமப்பாட்டுக்களை அவர் பாடும்பொழுது அவருடைய மனத்திலே சற்றும் அழுக்கு இராது; சாக்ஷாத் எம்பெருமானையே காதலனாகவோ அல்லது காதலியாகவோ நினைத்துக்கொண்டு பாடுவார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிருந்தாவனத்துக் கோபிகைகளைப்பற்றிப் பேசியபொழுது முதலில் சுவாமிகள் இவ் வார்த்தைகளைக் கேட்கப் பிரியப்படுவதில்லை; ஏனென்றால், அப்பொழுது சுவாமிகள் பிஞ்சாயிருந்தார்; ஆதலால், கோபிகைகளின் அன்பாம் அமிர்தத்தைப் பானம் பண்ணுவதற்கு அவர் யோசனை செய்தார்; தெரியாத்தனத்தினாலே அந்த அமிர்தத்தை அவர்கள் என்று நினைத்திருந்தார்; ஆனால், வரவர அவருக்கு ஞானக்கண் திறந்துகொண்டது; ஜயதேவருடைய "கீதகோவிந்தம்" முதலிய காதற் பாடல்களை சுவாமிகள் வெகு அற்புதமாக, மிகமிக உருக்கமாகப் பாட ஆரம்பித்துவிட்டார்.

சுவாமிகள் ஒரு சமயத்திலே "காதற் பாடலை மெச்சத் தெரியாதவனுக்கு ஒரு துரும்புகூட நான் கொடுக்கமாட்டேனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்றார். 'ஹிருதய உணர்ச்சியே மிருகப்பிராயத்திலிருந்து மனுஷ்யப்பிரக்ஞையைத் தெய்வீகத் தன்மைக்கு மாற்ற வல்லது' என்று சுவாமிகள் அறிந்திருந்தார். சுவாமிகள் ஒரு சமயத்திலே ஈச்வர சிந்தனையுடனிருந்தபொழுது, "எனது காதலியின் முகத்திலுள்ள ஒரு மச்சத்திற்காக, சாமர்க்கண்ட் தேசத்திலுள்ள ஐச்வர்யம் முழுமையும் நான் கொடுப்பேன்" என்றுள்ள பாரசீகப் பாடலைப் பாடி

ஞர். சுவாமிகள் அற்ப வஸ்துக்களிலும் பரிகாச விஷயங்களிலும்கூட ஈச்வரனைக் கண்டு அவருடைய பிரகாசத்திலே ஜ்வலித்தார். ஈச்வர நாமம் கேட்ட மாத்திரத்திலே சுவாமிகள் ஆநந்த நிர்த்தனம் செய்வார்.

'கலா உணர்ச்சியொன்றே யுள்ளது' என்று மனிதன் நினைப்பானானால், காவ்யம், கலை எனப்பட்டது, சங்கீதம், வாக்கு வன்மை இவையெல்லாம் அதன் பல லக்ஷணங்களேயா மென்பது தெளிவாய் விளங்கும். அந்தக் கலா உணர்ச்சி மிகமிக உத்கிருஷ்ட ஞானநுபூதி நிரம்பியுள்ளதாகையினால் அது ஈச்வரனிடத்திலே லயம் செய்யப்பெற்று, மாற்றுரு அடைந்துவிடுகிறது. அவருடைய சாதாரண சம்பாஷணையே காவ்யம்போன் றிருந்தது. சுவாமிகளுடைய மதவிஷயமானவும் தத்துவஞான விஷயமானவும் பிரசங்கங்களிலும் எழுத்துக்களிலும் சுவாமிகள் மிகமிகச் சிரேஷ்டமான, உயர்ந்த விஷயங்களையெல்லாம் மிகமிகச் சாதாரணமான, எளிய பாஷையிலே கூறும் ஒரு அற்புத குணம் சுவாமிகளிடம் உண்டு.

சுவாமிகளே அமெரிக்காவிலிருந்து இவ் விஷயத்தைப் பற்றி ஒரு சிஷ்யருக்குப் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"ஹிந்து எண்ணங்களை ஆங்கிலத்தினுள் வைப்பதும், பின்னர் வரண்ட தத்துவஞானத்திலிருந்தும் - குழப்பம் மிகுந்த புராணத்திலிருந்தும்-விநோதமான ஆச்சர்யமான மனோதத்துவ சாஸ்திரத்திலிருந்தும்-சுலபமாயும், எளிய

தாயும், பொது ஜனங்களுக்குப் பிரியமானதாயும், அதே சமயத்தில் மிகமிக உயர்ந்த மனத்தினர்களுடைய ஆவசியகங்களை நிறைவேற்றுவதாயுமுள்ள ஒரு மதத்தை யுண்டு பண்ணுதலும்—முயன்றவர்களே தெரிந்துகொள்ளக் கூடிய ஒரு வேலையாம். நுட்பமாயுள்ள அத்வைதமானது தினசரி வாழ்க்கையில் உயிருள்ளதாக வேண்டும், காவ்ய முள்ளதாகவேண்டும். நம்பிக்கையே யில்லையென்று சொல்லும் படி குழப்பம் மிகுந்த புராணத்திலிருந்து ஸ்தூலமான சன்மார்க்க வடிவங்கள் உண்டாகவேண்டும்; ஆச்சர்ய முண்டாக்குகின்ற யோகத்தன்மையிலிருந்து மிகமிக சாஸ்திரியமானதும் அநுபவ பூர்வமானதுமான மனோதத்துவ சாஸ்திரம் ஏற்படவேண்டும்—ஒரு குழந்தையும் அதை எளிதில் கிரகித்துக் கொள்ளும்படி இவை யாவும் ஒருவடிவத்திலே அமைக்கப்படவேண்டும். அதுதான் எனது ஜீவித வேலை.''

சுவாமிகள் இந்த விஷயத்தில் எவ்வளவு ஜய மடைந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். பிரசங்கம் செய்வதிலே வன்மை பெற்றுள்ள ஒருவர் சுவாமிகளைப்பற்றிப் பின் வருமாறு எழுதுகிறார்:—

''அவருடைய சமர்த்தின் இன்னொரு லக்ஷணம்... அவருடைய காவ்யதானமாம்......நான் அந்த அற்புதமான கற்பனை வாக்கியங்களை, அவருடைய பேச்சுக்களையும் எழுத்துக்களையும் அலங்கரிக்கின்ற அப் பெரிய காவ்ய எழுச்சிகளைக் குறிப்பிடுகின்றேன். அவருடையது

ஒரு கவியினுடைய ஆத்மா; சாதாரணமான மனிதன் ஒன்றையும் பாராத இடத்திலே அழகினுடையவும் ஐச்வர்யத்தினுடையவும் அறிகுறிகளை அது அறிந்துகொண்டு அழகும் அலங்காரமும் நிறைந்த பாஷையில் அவற்றை யுலகுக்கு அளித்தது.''

ஒரு சமயத்திலே சுவாமிகள் தமது சிஷ்யர் ஒருவருடனே தர்க்கித்துக்கொண்டிருக்கையில், தமது நிலைமையைப்பற்றி ''எல்லாவற்றுக்கும் மேலே நான் ஒரு கவி யென்பதை நீ பார்க்கவில்லையா?'' என்று கூறினார். சுவாமிகள் காவ்யத்திலும் கலையிலும் உள்ள ஆத்மீக லக்ஷணத்தை நன்றாக அறிந்துள்ளவர். ஒரு சமயத்திலே அவர் கூறியதாவது: ''கலையிலே அழகையும் பெருமையும் உணரும் தன்மை வாய்க்கப்பெறாத மனுஷன் உண்மையில் மதப்பற்றுள்ளவனா யிருக்க முடியாது.'' சில சமயங்களிலே சுவாமிகள் கலையிலுள்ள மத லக்ஷணத்தைப்பற்றி நிரூபித்த பின் ''கலை யென்பது ஐம்புலன்களுக்கே திருப்தியை யளிப்பது என்பது ஈச்வர நிந்தையாம். இந்திரியங்களை ஜயித்தவன், சரீர எண்ணத்தை ஜயித்தவன் அவன்தான் உண்மையான அழகை, அந்த அழகு ஆண்மையாயினும் சரியே, பெண்மையாயினும் சரியே, அல்லது வெறும் ஸ்தூலமானதாயினும் சரியே, மெச்சக் கூடும். நாம் ஆத்மீக நிலைமையிலிருந்து எல்லாவற்றையும் பார்க்கவேண்டும். பிரகிருதி ஈச்வரனுடைய விலக்ஷணமாகும். எவனொருவன் அவலக்ஷணத்தையும் அசுத்தத்

த்தையும் பார்க்கிறானோ அவனுடைய மனத்திலே அவலக்ஷணமும் அசுத்தமும் இருக்கின்றன. கலையைக் கண்டு மகிழாதவன் முழு மூடன்! உண்மையான கலை, உண்மையான காவ்யம், உண்மையான சங்கீதம் இவை எப்பொழுதும் ஆத்மீகமா யிருக்கவேண்டும்'' என்பார்.

சுவாமிகள் தமது ஜன்மதேசத்திலே மதத்துக்கும் கலைக்கும் உள்ள சம்பந்தத்தை நன்கு அறிந்தவராய், ''ஹிந்துக்கள் மதத்திலே வசிக்கிறார்கள், ஹிந்துக்கள் கலையிலே வசிக்கிறார்கள். மதப்பயிற்சி கலைப்பயிற்சிக்கும், கலைப்பயிற்சி மதப்பயிற்சிக்கும் இட்டுச் செல்லவேண்டும். இந்தியா தேசத்தின் உண்மைச் சரித்திரம் கண்டு பிடிக்கப்படும்பொழுது, மதப்பிரதேசத்திலே இந்தியாவானது முதற் குருவா யிருக்கிறதுபோல, கலையிலும் முதற் குருவாகவே யிருக்கிறது என்பது நிரூபிக்கப்படும்'' என்று சொல்வது வழக்கம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே கலைஞானம் அதிகமாக அபிவிருத்தியடைந்திருந்ததைச் சுவாமிகள் கண்டிருந்தார். கலைபழகு அவருடைய ஜீவிதத்திலேயே ஒரு பாகமாய் விட்டது. அவருடைய தினசரிச் செய்கைகளில் அவ்வழகு நிரம்பியிருந்தது. சுவாமிகள் சரித்திர ஆராய்ச்சியில் மகா நிபுணராகையினாலே, 'மத விஷயத்திலே மறுமலர்ச்சியுண்டானால் அதனுடனே கலைகளிலும் சாஸ்திரங்களிலும் பாஷையிலும் மறுமலர்ச்சி யுண்டாகத்தான் வேண்டும்' என்று சுவாமிகள் நன்றாக அறிந்திருந்தார்.

புத்தருடைய காலத்துக்குப் பின், சிற்ப சாஸ்திரமும் சித்திர சாஸ்திரமும் மறுபடியும் உயிர் பெற்றன. வங்காளத்திலே மிருதங்கத்துடன் கூடிய சங்கீர்த்தன பஜனை ஸ்ரீ சைதந்யராலே உண்டாக்கப்பட்டது. சுவாமிகள் தமது உலக யாத்திரையிலே ஒவ்வொரு ஜனசமூகத்தினுடையவும் கலையின் அபிவிருத்தியை நன்ருகக் கவனித்துவந்திருக்கிருர்; "எங்குமே கலையில் நூதனத்துவம் இல்லை" என்று சுவாமிகள் விசனப்பட்டிருக்கிருர். "இப்பொழுதுள்ள கலையெல்லாம் வெறும் போலிக் கலையே" என்று அவர் வருத்தப்பட்டிருக்கிருர்.

"இந்தியாவிலே கலை யபிவிருத்திக்கு வேண்டிய ஏராளமான இடம் இருக்கிறது" என்றும், "ஹிந்து தேவதைகளுடைய விக்கிரகங்களே ஏராளமான கற்பனைகளை யளிக்கின்றன" என்றும், "உபநிஷத்துக் கதைகளையும் புராணக் கதைகளையும் வெகு அழகாகச் சித்திரங்களில் வரைந்தால் நன்ருயிருக்கும்" என்றும் சுவாமிகள் அபிப்பிராயப்பட்டது மன்றியில், தமது அபிப்பிராயங்களைத் தமது சித்திரீக நண்பர்களுக்குத் தெரிவித்தார். "இவ் வழிகளில் முயற்சிகள் செய்யப்படவேயில்லை" என்றும், "செய்யப்பட்டிருந்தால் அவை போதுமானவையல்ல" என்றும் சுவாமிகள் கூறினர். சுவாமிகளுடைய ஆசை வீண் போகவில்லை; வங்காளத்திலே இப்பொழுது சித்திர மெழுத்து அபிவிருத்தி யடைந்துவருகிறது; கொஞ்சம் நூதனத்துவம் ஏற்பட்டிருக்கிறது; காக்ஷியிலே ஆழ்ந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

ஜீவிதத்தின் சாதாரணச் செயல்களில்கூடச் சுவாமிகள் தமது கலை யழகை அப்படி யப்படியே காட்டினார். சுவாமிகள் சமையலிலே மிகமிகத் தேர்ந்தவர்; பீமபாகம் நளபாகமெல்லாம் தோற்றுப் போகும்படி சுவாமிகள் அவ்வளவு ருசிகரமாகச் சமையல் செய்து, பதார்த்தங்களைப் பக்குவம் செய்வார். நமது தேசத்திலே சமையலில் கூடப் பக்தி சிரத்தை வேண்டும்; ஏனென்றால், நாம் சமையல் செய்த ஆகாரத்தை முதலில் ஈச்வரனுக்கு நைவேத்தியம் செய்துவிட்டுத்தான் பின்னர் நாம் உண்கின்றோம். சுவாமிகள் இந்த விஷயத்திலே பரிசுத்தமான ஆகாரம் தயார் பண்ணும் விதத்தைப்பற்றியும், அதன் ஆவசியகத்தைப்பற்றியும் தமது சிஷ்யர்களுக்கு வெகு கண்டிப்பான ஆக்ஞைகள் செய்துவந்தார்.

சிற்ப சாஸ்திரங்களிலும் சித்திர சாஸ்திரங்களிலும் சுவாமிகள் வல்லுநர்; வல்லுநர் என்றால் அநுபவத்திலன்று; ஆனால், அந்த சாஸ்திரங்களிலே அவருக்கு ருசி யதிகம்; அவருடைய புத்தியானது அந்தச் சாஸ்திரங்களை வெகு சுலபத்தில் கிரகித்துக்கொண்டது. 1900-ம் வருஷத்திலே பாரிஸ் மாநகரில் ஒரு கண் காக்ஷி நடந்தது. அங்கே சில சிலைகள் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டு வடிவங்கள் இருந்தன; ஒன்று, ஒரு புருஷனுடையது; இன்னொன்று ஒரு அழகிய ஸ்திரீயினுடையது. முந்தியது ஒரு சித்திர மெழுத்துக்காரனைக் குறிப்பிடுகிறது; இது இரண்டாவது சிலையாகிய அந்த ஸ்திரீயினுடைய மடியில், ஆயுதங்கள் பிடித்த தனது வலது

கையை வைத்துக்கொண்டிருப்பது போன்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவனுடைய இடது கை அவளுடைய முகத்தைத் திறப்பது போலக் காட்டப்பட்டிருந்தது; அவளுடைய முகத்திலே சித்திராநந்தம் பிரகாசித்தது. இவ் வடிவங்களுக் கடியில் "கலையும் பிரகிருதியும்" என்று எழுதப்பட்டிருந்தது. சுவாமிகள் அந்தக் கண் காக்ஷியைப் பற்றிப் படங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு பத்திரிகையிலே இவ் வடிவங்களின் படங்களையும் அவற்றினடியில் எழுதப்பட்டிருந்த தலை யெழுத்தையும் பார்த்து, "இங்கு எழுதப்பட்டிருப்பது தப்பு; 'கலை பிரகிருதியைத் திறக்கிறது' என்று இருக்கவேண்டும்!" என்றார். சுவாமிகள் பின்னர் கலைஞானத்தைப்பற்றிப் பொதுவாக ஒரு வியாக்கியானம் செய்து, பிறகு பொருள் உலகமாகிற தன்னுலகத்துக்கும் அநுபவமும் விரிவும் காக்ஷியுமாகிற முன் உலகத்துக்குமுள்ள சம்பந்தத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றித் தெளிவுபடக் கூறினர்.

அவர் அப்பொழுது கூறியதை அவருடைய சித்திரமெழுத்து சிஷ்யர்களுள் ஒருவர் பின் வருமாறு கூறுகிறார்:—

"கலைஞன், உபதேசமடையாதவர்களுடைய பார்வைக்குப் பிரகிருதியின் அழகைத் திறந்துவிடுகிறான். ஹிருதயத்தின் உள்ளுணர்ச்சிகளுக்குத் தக்கவாறு மனுஷ்ய முகமானது வெவ்வேறு வெளிப்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது போல ஒரே காக்ஷி வெவ்வேறு தோற்றங்களைத் தரித்துக்

கொண்டு, கலைஞனுக்கு மறைந்து கிடந்த வெவ்வேறு எண்ணங்களை வெளிப்படுத்துகின்றது. பிரகிருதி தனது அன்பார்ந்த உபாசகனான கலைஞனுக்குத் தனது அகண்ட அழகின் ஐச்வர்யங்களை யெல்லாம் அளிக்கின்றது. கலைஞன் கூச்சமுள்ள பிரகிருதியின் அநித்தியமான அழகுகளிற் சிலவற்றைப் பிடித்து அவற்றுக்கு நித்தியத்துவம் அளிக்கின்றான். இதுதான் கலைஞனுடைய ஆரம்ப வேலை. மேலே கூறப்பட்ட சிலையில் குறிப்பிடப்பட்ட மனிதனுடைய உபாசனா பார்வை, சாய்ந்த மாதிரி ஸ்தானம், நேர் நிற்கும் சிரசு, ஒவ்வொரு அங்கத்தினுடையவும் நிலை இவை கலைஞனுக்கும் அவனுடைய தேவிக்கும் உள்ள பரிசுத்த சம்பந்தத்தைப்பற்றிக் கூறுகின்றன. இவ்விதமாக எவனொருவன் உள்ளுலகத்துக்கும் வெளி யுலகத்துக்கு முள்ள சம்பந்தத்தைக் கண்டுபிடிக்கிறானோ அவனே அவற்றுக்குப் பரிபூர்ண வெளிப்பாட்டைக் கொடுக்க வல்லவன். இவ்விதமாக உள்ளுலகிலிருந்து வெளி யுலகுக்கு நித்திய அழகு பொங்கித் ததும்பி யோடுவதிலிருந்து கவி, சித்திர மெழுதுபவன், சிற்பி தனது கற்பனைகளை யுண்டுபண்ணி மனுஷ்யவர்க்கத்தின் நன்மையை உத்தேசித்து அவற்றை ஸ்தூலப்படுத்தி வெளியிடுகிறான். இதுதான் கலைஞனுடைய மிகமிகச் சிரேஷ்டமானதும் மிகமிகச் சிறந்ததுமான கார்யம்.”

சுவாமிகளுக்கு ஆங்கிலக் கலையினிடத்தே அதிகம் பிரியம் இல்லை; சுவாமிகளுக்கு அது பிடிக்கவில்லை. “ஆசி

யாக் கண்டத்தவனுக்குக் கலை யென்பது வாழ்க்கையின் ஒரு பாகமே'' என்றும், "ஆங்கிலேயனுக்குக் கலையினிடத்தே ஆசை யுண்டானால் அது அவன் ஆசியாக் கண்டத்தவனுடனே சம்பந்தப்பட்டதினாலேயே உண்டாயிற்று'' என்றும் சுவாமிகள் கருதினர். ஆங்கிலக் கலையானது அளவுக்கு மிஞ்சி மிருக வாழ்க்கையினிடத்தும், கண் காக்ஷியிடத்தும், வெறும் வடிவத்தினிடத்தும் செல்லுகிறது; ஆனால், இந்தியக் கலைஞர்களும் அநுபவ வாழ்க்கையை ஆதாரமாகக் கொள்ளாமல் வடிவங்களை வெறுத்துக் கற்பனை லக்ஷியங்களையே பெரிதெனக் கொண்டதினாலே கலையை அவலக்ஷணமுள்ளதாக்கி விடுகிறார்கள். உண்மையில் விரும்பத் தக்கது யாதென்றால், இவ்விருவிதமான கலைகளையும் ஒற்றுமைப் படுத்துதலேயாம்; அதாவது, பிரபஞ்சாதீதமான அபிப்பிராயங்களை வெளியிட்டாலும் பகிர்முகப் பிரபஞ்சத்துடனே ஒன்றுபட்டு நிற்பதாம். இந்த விஷயத்தைத் தெளிவுபடச் செய்வதற்குச் சுவாமிகள் ஒரு அழகிய திருஷ்டாந்தம் கூறுவார்:—அதாவது:—

"தாமரைச் செடியானது சேற்றுத் தண்ணீரிலேயே யிருக்க, புஷ்பமானது தண்ணீருக்கு மேலே கிளம்பி விளங்குவதுபோல, கலையும் முன்னிலை யுலகத்து அநுபவங்களிலிருந்தும் ஜட உண்மைகளிலிருந்துமே உண்டானாலும் ஐம்புலனுலாகிய உலகுக்கு மேலே கிளம்பி விடுகின்றது.'' ஒரு சமயத்திலே சுவாமிகள் ஹிருதயாநந்தராய் "ஆ! ஆ! உண்மையில் கலையே பிரஹ்ம வஸ்து'' என்றார்.

இந்தியக் கலைகளையும் சாஸ்திரங்களையும் சுவாமிகள் பெருமைப்படுத்திவந்தார். மதங்களின் சரித்திரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்குப் பாரிஸ்மாநகரில் கூடிய மகா சபையில் ஸ்வாமிகள் இது விஷயமாகப் பேசியிருப்பதைப் பார்த்தால், எல்லாம் நன்கு விளங்கும். சுவாமிகள் இங்கிலாந்திலே மகாமேதாவி மாக்முல்லருடனே சம்பாஷித்துக்கொண்டிருந்தபொழுது, "இந்திய சிற்ப சாஸ்திரம் கிரேக்கர்களால் பண்படுத்தப்பட்டதா?" என்ற ஒரு கேள்வி கிளம்பிற்று. பௌத்தர்களுடைய காலத்துச் சிலைகளுக்கும் கிரேக்களுடைய சிலைகளுக்கும் ஒற்றுமையே யில்லை. கிரேக்க சிற்பி ஸ்தூல சரீர அமைப்பிலே வெகு கவலையுள்ளவனுயிருந்தான். இந்திய சிற்பியோ மனத்தின் தன்மைகளை ஆய்ந்து எழுதுவதிலேயே அதிகக் கவலை செலுத்தினன். "காந்தாரச் சிலைகள் கலைகளின் தாழ்ந்த நிலைமையைக் குறிப்பிடுகின்றன" என்றார் சுவாமிகள். "கிரேக்க சிற்ப சாஸ்திரத்தைப் பார்க்கிலும் இந்திய சிற்ப சாஸ்திரம் எத்தனையோ மடங்கு உயர்ந்தது" என்று சுவாமிகள் அபிப்பிராயப்பட்டார். ஏனெனில், இந்திய சிற்பிகள் ஏதேனும் உயர்ந்த எண்ணங்களைத் தங்கள் சிலைகள் மூலமாக வெளிப்படுத்தினர்கள்; கிரேக்க சிற்பிகளுக்கோ எண்ணங்கள் என்பனவே கிடையா.

சுவாமிகள் இந்தியாவிலேயுள்ள ஒவ்வொரு சிலையினும், ஒவ்வொரு குடிசையினும்கூட உயர்ந்த எண்ணங்கள் ஏதேனும் அடங்கி யுள்ளன வென்பதைக் கண்டு கொண்டார்.

"ராஜஸ்தானத்திலே யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது, சுவாமிகள் ஆள்வார் நகரிலேயுள்ள ஒரு கோரியின் அழகையும் பரிபூர்ண ஸ்புரிப்பையும் கண்டு அத்தியாச்சர்ய மடைந்தார். ஆக்ரா நகரிலேயுள்ள டாஜ் மஹால் அரண்மனையைச் சுவாமிகள் பார்த்தபொழுது, "இந்தப் பளிங்குக் கற்களில் ஒரு துண்டை நீ பிழிந்தால், அது ராஜ அன்பினுடையவும் அதன் துக்கத்தினுடையவும் துளிகளைச் சொட்டும்" என்றார். "கல்கத்தாவானது அரண்மனைகள் நிறைந்த நகரமென்று ஜனங்கள் சொல்கிறார்கள்; ஆனால், வீடுகள் ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கப்பட்ட அத்தனை வீடுகள் போலத் தோன்றுகின்றன! அவை எவ்வித எண்ணத்தையும் அளிக்கிறதில்லை. ராஜஸ்தானத்திலே நீ இன்னும், பரிசுத்தமான ஹிந்து சிற்பசாஸ்திரத்தை அதிகமாகப் பார்க்கலாம். நீ ஒரு தர்ம சாலையைப் பார்த்தால் அது உன்னைத் தனது கைகளைத் திறந்துகொண்டு உள்ளே வந்து நிழலுக்குத் தங்கும்படிக்கும் தனது மட்டற்ற உபசாரத்தை நீ ஏற்றுக்கொள்ளும்படிக்கும் அழைக்கிறது போலத் தோன்றுகிறது. நீ ஒரு க்ஷேத்திரத்தைப் பார்த்தால், ஈச்வரத் தன்மை அதனுள்ளிலும் அதைச் சுற்றிலும் பொங்கி வழிவதை நீ நிச்சயமாகக் காண்பாய். நீ ஒரு கிராமக் குடிசையைப் போய்ப் பார்ப்பாயானால், அதன் வெவ்வேறு பாகங்களின் பிரத்தியேகப் பொருள்களைக் கண்டு அறிந்துகொள்வதற்கும், கட்டடம் முழுதும் அதன் சொந்தக்காரனுடைய முக்கியமான லக்ஷியத்துக்குச் சான்றாயிருக்கிறதென்று கண்

டறிந்து கொள்ளவும் உன்னால் முடியும். இம்மாதிரி எண்ணத்தை வெளிப்படுத்துகின்ற சிற்ப வித்தையை நான் வேறு இத்தாலி தேசத்தில் மாத்திரம்தான் பார்த்திருக்கிறேன்" என்று ஒரு சமயம் கூறினார் சுவாமிகள். அவர் இத்தாலியக்கலையை அதிகமாக மெச்சினார்.

"கிரேக்கர்கள் இயேசுவைக் காண்பித்திருக்கிற மாதிரியைப்பற்றிச் சுவாமிகள்: 'கிரேக்கர்கள் கிறிஸ்துவினுடைய அந்தர்முக அபிவிருத்தியை ஒருபொழுதும் மெச்சினதில்லை" என்று கூறினார்; "அவர்கள் மெச்சியிருந்தால், அவரைத் தோற்றத்தில் அவ்வளவு சதையுள்ளவராக எழுதியிருக்கமாட்டார்கள். இந்த விஷயத்திலே புத்த தேவருடைய சிலைகள் மிகவும் புகழத்தக்கன. ஒரு ஜன சமூகத்தின் ஆத்மீக அபிவிருத்தியை அதன் கலையை ஆராய்வதினாலே உடன் கண்டுகொள்ளலாம்......"

இம்மாதிரி சுவாமிகளைப்பற்றி யொருவர் எழுதியுள்ளார்.

சுவாமிகள் எப்பொழுதும் அந்தர் உலகங்களிலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்தார்; ஆதலால், அவருடைய மனமும் அந்தர்முக அநுபவமே எப்பொழுதும் நிறையப் பெற்றதாயிருந்தது. இதனாலேயே அவருடைய சங்கீதம், அவருடைய கலாவிபாக்கியானங்கள், அவருடைய காவ்யம், அவருடைய தத்துவஞானம் எல்லாம் ஞானத்தினால் மூடப்பட்டிருந்தன. அவருக்கு ஒவ்வொரு அணுவிலும் பிரபஞ்சம் முழுதினுடையவும் ஆத்மா இருந்தது. ஒவ்வொரு

வடிவமும் நித்திய அழகின் பிரகாசமே யென்று நினைத்தார்; ஒவ்வொன்றும் நித்திய சத்தியத்தின் உருவமே யென்று நினைத்தார்.

ஒருவர் ஸ்வாமிகளுடைய கவிகளைப்பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்:—

"......இவ்விஷயங்கள் உண்மையில் அவருடைய அநுபூதியின் பலன்களாம், கவியினுடையவைபோன்று கற்பனு சிகரங்கள் அல்ல. 1891-ம் வருஷத்தில் அவர் ஹிமோத் கிரியிலே தமது சகோதர சந்யாசிகளுள் ஒருவராகிய சுவாமி அகண்டாநந்தருடனே கால் நடையாக யாத்திரை செய்துகொண்டிருந்தார். ஒருநாள் எல்லாம் அமைதியாயிருந்தபொழுது அவர் தியானம் செய்து நிஷ்டையிலிருந்து பிரகிருதியுடனே கலந்து நிற்கக் கருதி கங்காதீரத்துக்குத் தனியே சென்றார். அவர் நெடுநேரம் கழித்துத் திரும்பி வந்து, தமது சகோதரரை நோக்கி, "பார்! இன்றிரவு நான் கங்காநதி கேதாரிராகம்பாடுவதைக்கேட்டேன்!" என்றார். அவர் அடிக்கடி ஒரு நீர் வீழ்ச்சியினருகே யுட்கார்ந்து கொண்டு அதிலிருந்து உண்டாகின்ற பிரத்தியேக கீதம் என்னவென்று கண்டுபிடிப்பார்; சில சமயங்களிலே அதனுடனே தமது குரலையும் சேர்த்துப் பாடுவார். சில வேளைகளில் அவர் ஒரு பக்ஷியினுடைய பாடலைக் கேட்டு, அது பாடின ராகம் இன்னதென்று கண்டுபிடிப்பார். அவருடைய கவிகளிலே இவை யெல்லாவற்றினுடையவும் மிகவும் சொற்ப ஸ்பர்சங்களே காணப்படுகின்றன............

ஜகத்தினுடைய ஜீவசலனத்தினுடைய நிச்சல சப்தமாகிய ஓங்காரத்துவனியைக் கேட்கமுடிந்தவருக்கு இது அருமையல்ல. சில சமயங்களிலே அவர் சப்தத்திலும் ரசத்திலும் வடிவத்திலும் இடைவிடா அழகு ஒன்றைக் கண்டு ஆநந்தித்துக்கொண்டிருப்பது வழக்கம். எந்த அழகு உதயமானால் கவியானவன் வாய் கட்டப்பட்டுப் பிரமிக்கிறானோ, சித்திரமெழுதுவோனுடைய எழுது கருவி கைகளிலிருந்து நழுவுகிறதோ, சிற்பியானவன் சித்திரப்பதுமை போல நின்றுவிடுகிறானோ அந்த அகண்ட அழகை அநுபவித்துக் கொண்டு சுவாமிகள் ஆநந்த பூரிதராய்:

"அவசரமான மாம்சத்தின் ஆசைகள் அமைதிப் பட்டன;

தற்புகழ்ச்சியுள்ள மனத்தின் கலக்கமும் அடங்கி விட்டது;

ஹிருதய பாசங்கள் அவிழ்த்துவிடப்பட்டன;
பந்திக்கின்ற பந்தங்களெல்லாம் தளர்த்தப்பட்டன;
விருப்பும் பிரமையும் இனிமேல் இல்லை!
ஆ! சலனமற்ற சப்தம் கோஷிக்கின்றது?
ஆ! ஆ! உனது சப்தம்தான்."

என்று பாடுவார்.

சுவாமிகள் காவ்ய கலையைப்பற்றி "காவ்ய ஆலோசனையே மிகமிகச் சிரேஷ்டமான கவி" என்றார். லக்ஷியத்தை வர்ணிக்கும்பொழுது விவரணைகள் கூடாது. கவியான

வன் லக்ஷியத்தை மிகமிகச் சிரேஷ்டமான லக்ஷணங்களிலே தரிசிக்கிறான்; ஆனால், சொற்பமே ஸ்பர்சிக்கிறான். கவியானது ஹிருதயத்திலும் மனத்திலும் ஈமொளி வீசி, ஆநந்த சமுத்திரத்தை அப்படியே ஊற்றுப்போலப் பெருக்கிவிட வேண்டும்.

சுவாமிகள் கலாவல்லவரா யிருந்தபொழுது திடீரென்று பெருங்கார்யங்களிலிருந்து விளையாடுவதற்குக்கூட இறங்கிவிடுவார். ஆனால், அவருடைய பெருங் கார்யங்களில் அவர் எப்படி அழகை வடித்துக் கொட்டினாரோ, அப்படியே சிறு கார்யங்களிலும் அழகை வடித்துக் கொட்டினார்; பெருங் கார்யங்களில் எப்படித் தமது புத்தித் திறமையைச் செலுத்தினாரோ அப்படியே சிறு கார்யங்களிலும் செலுத்தினார். பெருங் கார்யங்கள் என்பதும் சிறு கார்யங்கள் என்பதும் உலகச்சிறார்களாகிய நமக்கே பொழிப, அவருக்கல்ல. அவருக்கு எல்லாம் ஒன்றாகவே யிருந்தது; பெரிது, சிறிது என்ற வித்தியாசமே யில்லை.

---

6. ஸ்ரீ விவேகாநந்தர்—பக்தர்—கர்மயோகி

ஆ! ஆ! விவேகாநந்தமாகிய ரத்தினத்துக்குத்தான் எத்தனை விதமான ஒளி! எத்தனை விதமான ஜ்வாலை! ஆ! ஆ! என்ன அழகு! என்ன அழகு! ததும்பித் ததும்பிச் சொட்டுகின்றது! சுவாமிகளிடத்திலே இந்திய ஜாதியின் நாகரிகத்தினுடைய, முக்கியமாக ஹிந்து மதத்தினுடைய

விசேஷ லக்ஷணங்களெல்லாம் சேர்ந்து விளங்கிக் கிடந்தன போலும்! சுவாமிகள் தேசிய உணர்ச்சி உருவெடுத்து வந்ததுபோன்று வந்தார்.

சுவாமிகள் எப்படி ராஜயோகியாகவும் ஞானயோகியாகவும் இருந்தாரோ, அப்படியே கர்மயோகியாகவும் பக்தராகவு மிருந்தார். இந்திய ஞானநுபூதியாகிய சங்கீதத்தை வைத்துக்கொண்டு, அதன் வெவ்வேறு ராகங்களிலே சுவாமிகள் பலவிதப் பாட்டுக்கள் பாடினர். சுவாமிகளுடைய அறிவோ அகண்ட சமுத்திரம்; அன்போ அணுவும் அளவு மற்ற ஆழ்ந்த சாகரம். சுவாமிகள் இருந்த நிலையிலிருந்துகொண்டே எவ்வித லக்ஷணத்தையும் அடைந்துகொள்வார்; எப்பக்கமும் பார்ப்பார்; எந்தத் தன்மையும் எளிதாகிவிடும்.

சுவாமிகளுடைய ஹிருதயம் உருக்கமானது; அன்பு பொங்குவது; அவர் ஈச்வரனிடத்தும் மனிதனிடத்தும் கொண்ட அன்புக்கு ஒரு எல்லை யில்லை. அநேக தடவைகளில் அன்பு மிகுதியினல் அவர் கண்ணீர் சொரிந்து விம்மி விம்மி யழுதபொழுது அவருடைய ஹிருதயம் உடைந்து விடுமோவென்று ஐயுறும்படியி லிருந்தது. சுவாமிகள் எப்பொழுதும் நித்திய ஞானமாகிய ஆழமற்ற சமுத்திரத்தில் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தார்; இது மாத்திரமல்ல, நித்திய அன்பாகிற சமுத்திரத்தில் கரைந்து லயமாய்விட்டார். அவருடைய சரீரம் முழுதும் ஹிருதய சலனம் பொறுக்க முடியாது அநேக சமயங்களில் சேர்ந்து விழு

ந்துவிடும்; அவர் அழுது அழுது கண் கசங்கிவிடும், முகம் வீங்கி விடும்; அல்லது, அன்பு அவருடைய ஹிருதயத்திலே கரை கொள்ளாது ஆநந்தக் கண்ணீர் சொரிவார். சுவாமிகளுக்கு ஒரு எண்ணம் பலமாகிவிட்டால், சுவாமிகள் அந்த எண்ணத்தைத் தமது ஹிருதயத்துள்ளே சேர்த்துத் தமது ஹிருதயத்துடனே ஒன்றுபடுத்தி, அது புத்திமாத்திரமாயுள்ள எண்ணமாய் நில்லாமல், ஆத்மீக சத்தியமாகும்படி செய்துகொண்டுவிடுவார். அன்பாகிற அக்கினியும் அறிவாகிற புகையும் சுவாமிகளிடத்திலே அளவுக்கு மிஞ்சி யிருந்தன.

சுவாமிகளுக்கு சகுண உபாசனையிலும் நம்பிக்கையுண்டு; சுத்தப்பிரஹ்மத்தின்நிர்க்குணத்தன்மையிலும்நம்பிக்கையுண்டு. "சாக்ஷாத் ஞானசக்தி யொன்று உலகை நடத்துவது" என்றும், "அறிவி லுயர்ந்தும் அன்பி லாழ்ந்தும் சர்வ சக்தியுள்ளதாயும் உள்ள ஈச்வரன் ஒருவன் ஜகத்தைத் தன் கைப்பம்பரம்போல நடத்துகிறான்" என்றும் சுவாமிகள் மனப்பூர்வமாக நம்பினர். "மனுஷ்ய வடிவம் ஈச்வரனுடைய சாயையே" என்று சுவாமிகள் நம்பினர். "உலக அநுபவங்கட்கு அதீதமாக உள்ள அநுபவங்களே உண்மை" என்றும், "ஈச்வரனுடைய சாயையாகிய ஜீவன் பிரமை நீங்கப்பெற்றால் பிரஹ்மவஸ்துவேயாய் விடுகிறான்" என்று சுத்தாத்வைதியாகிய சுவாமிகள் நம்பாமலிருக்க முடியுமா? "சர்வ மங்கள கல்யாண குணபூஷிதராகிய சாக்ஷாத் பரமேச்வரனே சிரேஷ்டமான பொருள்" என்

றும், "மனுஷ்ய மனத்தினால் அகண்டத்தை யப்படித்தான் அறிய முடியும்" என்றும், "ஈச்வரன் அன்பே யுருவான வர்" என்றும், "அவர் மகத்துக்கு மகத்தாய் அணுவுக்கு அணுவா யிருக்கிறார்" என்றும், "கூப்பிடு தூரத்தி லிருக் கிறார்" என்றும் சுவாமிகள் நம்பினார்.

சில சமயங்களிலே ஈச்வரனைத் தம்முள்ளேயே தாமாக வே கண்டு கலந்து தனித்து விளங்குவார். அப்பொழுது அவருடைய முகத்திலே அன்பு சொட்டிச் சொட்டி வழி யும். அவருடைய ஹ்ருதயம் உருக ஆரம்பித்துவிட்டால், அது தன்னுள்ளே யுள்ளதை யெல்லாம் உருக்கிக் கொட்டி விடும். சுவாமிகள் பாவ சமாதியில் ஆழ்ந்துவிடுவார். ஆல யங்களிலே விக்கிரகங்களின் முன் இருகைகளையும் கூப்பிக் கொண்டு சுவாமிகள் ஏகமனத்துடனே நிற்கும்பொழுது, சுவாமிகளுடைய இரு கண்களிலிருந்தும் தண்ணீர் தாரை தாரையாகச் சொரியும்; அல்லது சமாதியிலே அமர்ந்திருக் கும்பொழுது, திடீரென்று அவருடைய கண்களில் கண் ணீர் பெருகும். ஆ! ஆ! அவருடைய அன்பே அன்பு! "ஈச்வரன் உள்ளும் புறமும் இருக்கிறார்" என்றும், "ஈச் வரத்துவம் சர்வ வியாபகமா யுள்ளது" என்றும் சுவாமிகள் அநுபவ பூர்வமாக அறிந்தார்.

சில சமயங்களிலே சுவாமிகள் ஏதேனும் ஒரு லக்ஷி யத்தைக் குறிப்பாகக் கொண்டு அந்த லக்ஷியத்துக் கேற்ற வடிவத்திலே ஈச்வரனைப் பூஜிப்பார். சில சமயங்களிலே சுவாமிகள் ரூபாதீதமாகச் சென்று, எல்லாவிடத்தும்

எப்பொருளிலும் உள்ள நிர்க்குணப் பிரஹ்ம வஸ்துவை உபாசிப்பார். சில சமயங்களிலே சுவாமிகள் ஸ்திரீயினிடத்திலாவது, புருஷனிடத்திலாவது ஈச்வரத் தன்மையைப் பார்ப்பார்; சில வேலைகளில் விக்கிரகத்தில் பார்ப்பார்; சில போழ்து பிரகிருதியில் பார்ப்பார்; சில வேளைகளில் ஆத்மீக நினைப்பாம் சக்தியில் பார்ப்பார்.

"அன்பு அந்தர்முகத்தி லுள்ளதா? அல்லது பகிர்முகத்தி லுள்ளதா?" என்று அவர் கவலைப்படவே யில்லை. அன்பு என்று ஒன்று உண்டு என்று அவருக்குத் தெரியும். ஆகையால், சுவாமிகள் அதை எல்லாச் சமயங்களிலும் எல்லா வடிவங்களிலும் பூஜித்துவந்தார். சில வேளைகளில் சுவாமிகள் தாம் பிரகிருதியினுடையவும் காலத்தினுடையவும் ஒரு பாகமே யென்று அறிந்து, எவ் வடிவத்துடன் தோற்றும் எல்லா வுயிரும் தாமும் ஒன்றே யென்று கண்டு அப்படியேயாகி இன்புற்றிருப்பார். பிபீலிகையும்-பிரஹ்ம வஸ்துவும், ஈச்வரனும்-ஒரு துரும்பும், ஆதித்தர்களுடைய வெகு வேகமாகச் சுழலுகின்ற சுழற்சியும்-நத்தைப் பூச்சியின் மெதுநடையும், பரிசுத்த புருஷனும்-பாபியும், வெகு காலத்துக்கு முந்தியும்-வெகு காலத்துக்குப் பின்னும், மகா கொடிய பேயும்-மிகமிகப்பரிசுத்தமான பிரஹ்ம ஞானியும் இவ்வெல்லாம் ஓரே சரட்டில் கோர்க்கப்பட்ட பிரஹ்ம மணிகளே யென்றும், இம் மணிகளை யெல்லாம் கோர்த்து வைத்திருக்கும் சரடு எதிர்க்க முடியாத ஆகருஷணமும் சொல்லொணாத அன்புமேயாம்.

அநேகத்தில் ஏகத்தைப் பார்ப்பதற்கு அநுஷ்டிக்க வேண்டிய மார்க்கம் ஞானயோகம்; இப்படியெல்லா மிருக்கிறதினலே, ஏகாநுபூதி யடைதற்குப் பக்தியே மார்க்கமென்பதைக் கண்டார். ஆகையால், சுவாமிகள் வித்துவானையும் - முழு மூடனையும், மிகமிகத் தாழ்ந்தவனையும்- மிகமிகச் சிரேஷ்டமானவனையும் ஈச்வரனுகவே கருதியுபாசனை புரிந்தார்; ஏனெனில், சுவாமிகள் இவர்களிலெல்லாம், பிரபஞ்சம் முழுதிலுமே ஈச்வரனைத் தரிசித்தார்.

“புத்தர் முன்னொரு ஜன்மத்திலே ஒரு பெண் புலியின் பசியைத் தணிவிப்பதற்குத் தமது சரீரத்தைத் தியாகம் செய்துகொண்டார்; அதுபோல, புலியினிடத்தும் மனிதன் அந்த அன்பைப் பார்க்கவேண்டும்” என்று சுவாமிகள் கூறினர். எதைத் தியாகம் செய்தாலும் அன்புக்கு ஈடாக்க முடியாது; அன்பு உள்ள இடத்திலே வியாபாரப் பேச்சில்லை. அன்பு அடங்கிக் கிடப்பதன்று; அது பொங்கி வழிவது; அது கைகளை விரித்து அணைத்துக் கட்டுவது. அன்பு கொடுப்பதே குணமாக வுடையது. சுவாமிகளுடைய அன்பு இத்தகையதாகவே யிருந்தது. உள்ள எல்லாவற்றினிடத்தும் சுவாமிகள் ஒரே மாதிரி அன்பு செலுத்தினர். இந்த விஷயத்திலே சுவாமிகள் சகுணோபாசகராகவும் நிர்க்குணோபாசகராகவும் இருந்தார். சூட்சுமமாயுள்ள சத்திய லக்ஷணத்தைக்கூடச் சுவாமிகள் அன்பு செலுத்துவதற்கு உருக்கொடுத்து ஒரு

விக்கிரகம் ஆக்கினுலும் ஆக்கிவிடுவார். அழகே உண்மை, உண்மையே அழகு; அழகும் உண்மையுமே சத்தியம்; ஆகையால், சுவாமிகள் எப்பொழுதும் சத்தியத்தினிடத்தே லயித்திருக்க விரும்புவார்.

அன்பும் அறிவும் ஆற்றலுமாகிற ஈச்வரன் மனுஷ்ய ஹ்ருதயத்துக்கு ஹ்ருதய நிவாசனு யிருக்கிருனென்றுள்ள உண்மையை மாத்திரம் மனிதன் அநுபவ பூர்வமாக அறிந்துகொண்டாணுயின், அப்பொழுது அவனிடமிருந்து தீமை யெல்லாம் விலகிவிடும்; பயமெல்லாம் போய்விடும்; துக்கமெல்லாம் நீங்கிவிடும்; பலஹீனமெல்லாம் ஒழிந்துவிடும்; பந்தமெல்லாம் நிவிர்த்தியாகிவிடும். ஆநந்தகரமான அக் காலங்களிலே சுவாமிகள் உல்லாசம் மிகுந்தவராய், "ஏ, பிரபோ! நீயே எங்கள் பிதா; நீயே எங்கள் மாதா; நீயே எங்களது அன்பார்ந்த நண்பன்; சமஸ்த பலத்துக்கும் உற்பத்தி ஸ்தானம் நீயே; எங்களுக்குப் பலம் அளிப்பாய்! பால்ய கர்வத்துடனே நடக்கின்ற வாலிபன் நீயே; தடி யூன்றித் தள்ளாடி நடக்கும் கிழவனும் நீயே. நீயே எல்லா வஸ்துக்களுமாயிருக்கிருய்; பாபமும் புண்ணியமும், நன்மையும் தீமையும், அழகும் அவலக்ஷணமும், ரம்யமானதும் பயங்கரமானதும் எல்லாம் உன்னிடத்தே யொன்றுபட்டு நிற்கின்றன; நீ சர்வஞ்ஞன்! நான் என்னை உன்னிலும், உன்னை என்னிலும், உன்னையும் என்னையும் ஒன்ருகவும் பார்க்கிறேன்!" என்று பொருள்படும் பாடலைப் பாடுவார். சுவாமிகளிடத்திலே பக்தியும்

ஞானமும் கலந்து, சுவாமிகள் இத்தகைய லக்ஷண முடையவரென்று பகுத்துக் கூற முடியாதபடி யிருந்தது.

எல்லா விஷயங்களிலும் அநுபவத்திலாகட்டும், தர்சனத்திலாகட்டும், சுவாமிகள் ஏகத்துவத்தைக் கண்டு பிடிக்க முயன்றார். ஒற்றுமை யொன்று உண்டு என்ற எண்ணம் அவருக்குப் பிறவியிலே யிருந்தது போலும்! ஆராய்ச்சி செய்துகொண்டே போகும்பொழுது இடையே கஷ்டங்கள் உண்டாய்விட்டால், ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான அபிப்பிராயங்கள் தோன்றிவிட்டால், இவ்விரண்டு அபிப்பிராயங்களுக்கும் ஆதாரமாயுள்ள மூன்றாவதாமொரு வகை சுவாமிகள் கண்டுபிடித்துவிடுவார்; இம்மூன்றாவதை வைத்துக்கொண்டு பார்த்தால், நேர் எதிரிடையாயிருந்த அவ் விரண்டு அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று அவசியம் என்று புலப்படும். இதுதான் ஏகத்துவ தர்சனம். ஆதி சங்கரரும் இப்படித்தான் செய்தார். ஆனால், சங்கரருடைய ஏகத்துவம் ஞானபூமி யொன்றிலேதான். ஆனால், இங்கே சுவாமிகள் எல்லா வஸ்துக்களிலும் விஷயங்களிலும், எல்லாக் காலங்களிலும், எவ்விடத்தும், ஏகத்துவம் காணலானார்; ஒவ்வொன்றிலும் அமரத் தன்மையையும் அமலத் தன்மையையும் காண முயற்சித்தார்.

சுவாமிகளுடைய உண்மைத் தன்மையை அறிய வேண்டுமென்றால், இந்த ஏகத்துவ தரிசன மடைந்தால்தான் முடியும். ஆத்மீக விஷயங்கள் எல்லாவற்றுக்கும்

அடிவேராயுள்ளது ஏகத்துவ தரிசனமேயாம்; இதுவே உயர் வாழ்க்கைக்கு ஆதாரமா யுள்ளது; இதுவே "இவ் வெல்லாம் ஒன்றே" என்று கோஷிக்கின்ற சிருஷ்டி நீதிக் அஸ்திவாரமாயுள்ளது. சுவாமிகள் ஏதேனும் ஒரு லக்ஷியத்தை எடுத்துக்கொள்வார், ஏதேனும் ஒரு சகுண மூர்த்தியை எடுத்துக்கொண்டு ஈச்வரப் பிரகாசத்தின் வெவ்வேறு ரூபங்களை யெல்லாம் அதில் தரிசிப்பார். சுவாமிகள் ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் பூஜிக் கின்ற கன்னிகை மேரியினிடத்து ஈச்வரனைக் கண்டு பூஜித்துவந்தார்; இயேசு கிறிஸ்துவினிடத்திலே பாராட் டிய பக்தி இவ்வளவு அவ்வளவு என்றில்லை. சுவாமிகள் தமது குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரை, அல்லது புத்தரை, அல்லது ஸ்ரீ கிருஷ்ணனை, அல்லது ஸ்ரீ ராமனை அல்லது நாநாவடிவங்களிலே தோன்றும் ஞானம்பிகை யாம் ஜகன் மாதாவை, அல்லது ஈச்வரப்பித்துப் பிடித்த மகாத்மாக்களை எப்படிப் பூஜித்துவந்தா ரென்பதைச் சுவாமிகளுடைய சிஷ்யர்கள் நன்கு அறிவர்.

ஆனால், சுவாமிகளுக்கு மனிதனிடத்தில் அன்பு இல்லை யென்று நினைக்கவேண்டாம். மனிதனிடத்து வைத்த அளவற்ற அன்பினாலேதான் சுவாமிகள் உல குக்குக் கர்மயோகத்தைப் போதித்தார். கர்ம விஷயமாகச் சுவாமிகளுடைய ஸ்வாநுபூதி அளவு கடந்ததாயிருந்தது. சுவாமிகள் தமது மனத்திலே கொண்ட நல்லெண்ணம் நிறைவேறும் பொருட்டு இராப்பகலாக எப்பொழுதும்

வேலை செய்தார். ஜயமடைந்து சந்தோஷமாக நின்ற பொழுதும் வேலை செய்தார், தோல்வி யுற்றபொழுதிலும் வேலை செய்தார். ஜயத்தினால் சந்தோஷமடைந்து மெய் மறந்து நின்றுவிடுததில்லை; தோல்வியினால் துயருற்றுத் தளர்ச்சி யடைந்து நின்றுவிடுவதில்லை. சுவாமிகளிடம் தமக்கென்று ஒரு சங்கற்பம் இல்லை; "ஈச்வரா! உனது சித்தப்படியே நடக்கும்! ஏ, பிரபோ! பிறர்மீது எனது சித்தத்தைச் செலுத்துவதற்கு நான் யார்?" என்று சுவாமிகள் கூறிக்கொண்டு வேலை செய்வார். "மகிமை யெல்லாம் உனக்கே! எங்களுக்கல்ல, எங்களுக்கல்ல" என்று கதறுவார்.

இந்தக் கர்மயோகத்தை உபதேசிப்பதற்காகச் சுவாமிகள் உலகு முழுதும் யாத்திரை செய்தார்; கர்ம யோகாநுஷ்டானத்தைத் தமது ஜீவிதத்திலே அநுபவபூர்வமாகக் காட்டினார்; புதிய தேசங்களில் உண்டாகக் கூடிய கஷ்டங்களை யெல்லாம் எதிர்த்து நின்றார்; புதிய புதிய ஜனங்களையெல்லாம் சந்தித்தார்; ஆனால், எப்பொழுதும் மிகமிக உத்கிருஷ்டமான உண்மையையே போதித்துவந்தார். உபதேசிப்பதும் போதிப்பதும் சுவாமிகளுக்கு மூச்சு விடுவது போன்று அவ்வளவு இன்றியமையாததாய்விட்டது; சுவாமிகளே இம்மாதிரி ஒரு சடிதத்தில் எழுதியிருக்கிறார். சுவாமிகள் இந்தியாவி லிருந்தபொழுதோ, மரணபரியந்தம் வேலை செய்தார்; 'இந்தியா தேசம் க்ஷேமமடையவேண்டும்' என்று இராப் பகலாகக் கண்ணீர்

விட்டார், பிரார்த்தித்தார், பாடு பட்டார்; இந்தியா தேசத்திலே நிவிர்த்திக்கப்பட வேண்டிய குறைகள் இன்னின்னவை யென்று ஆலோசனை செய்து தீர்மானித்தார்; இந்தியக் கொள்கைகளை ஸ்தாபிப்பதற்குப் பெரு முயற்சிகள் செய்தார்; இந்தியா முன்னேற்ற மடையும் பொருட்டுத் தமது ஜீவிதத்தையும் தியாகம் செய்யச் சுவாமிகள் தயாரா யிருந்தார். ஆனால், சுவாமி இதனலெல்லாம் கொஞ்சமாவது கர்வமடைந்திருப்பாரா? கொஞ்சமாவது அகங்காரம் அடைந்திருப்பாரா? கிடையாது; கிடையவே கிடையாது. பகவத் கீதையிலே பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறிய வார்த்தைகளின் பிரகாரம் சுவாமிகளுடைய ஜீவிதகாலம் அமைக்கப் பட்டிருந்தது. பகவான் "ஏ, அர்ஜுன! எல்லாம் செய்வது நானே; நீ கருவி மாத்திரமேயாவாய். செய்பவன் நானே" என்று கூறியுள்ளார். "வேலை செய்வதற்கு மாத்திரமே உனக்குப் பாத்தியதை யுண்டு; அதன் பலன்களுக்கில்லை." நல்ல காலத்திலும் கெட்ட காலத்திலும் சுவாமிகள் கீதோபதேசஸ்வரூபராகி, எல்லாக் காலங்களிலும் மனத்தின் சமநிலையை ஸ்தாபிக்க முயற்சித்தார்; சுவாமிகள் எப்பொழுதும் ஈச்வரனிடத்து பக்தி செலுத்தினர், ஜீவராசிகளிடத்து அன்பு செலுத்தினர்; எப்பொழுதும் ஞானயோக மார்க்கத்தையே பின்பற்றினர்; பிறர் பொருட்டே சிந்தித்தார்; பிறர் பொருட்டே பேசினர்; பிறர் பொருட்டே வேலை செய்தார்; பிறர் பொருட்டே உயிர் வாழ்ந்தார்.

அவருடைய நாவின் நுனியில் எப்பொழுதும் ஜகன் மாதாவினுடைய நாமமே திகழ்ந்துகொண்டிருந்தது; அவருடைய சற்குருவினுடைய சக்தி எப்பொழுதும் அவருடைய ஹிருதயத்தில் பதிந்து கிடந்தது. சுவாமிகள் உலகுக்கு ஒரு நற்செய்தி கோஷித்தார்; அபாரமான கார்யங்கள் செய்தார், கடுந்தவங்கள் பல புரிந்தார்; பழுத்த பக்தி செலுத்தினர்; இவை யெல்லாவற்றையும் கவளீகரித்துக்கொண்டு சுவாமிகளுடைய இன்னொரு லக்ஷணம் உயர்ந்து நிற்கிறது.

"அம்மே! அம்மே! நீயே கர்த்தா, நான் நினது அடிமையே! நீ என்னை மேலே தள்ளுகிறாய்; நீ எனக்கு வழி காட்டுகிறாய்; நீயே பெரியள்! இவ் வுலகிலே நீ நினது வேலையைச் செய்கிறாய். நீ உனது குழந்தைகளுடனே விளையாடுகிறாய். எனது விளையாட்டு முடிந்தவுடனே, உனது கைகளிலே என்னை யெடுத்துக்கொள்வாய். நீ நல்லதறிவாய்! அம்மே! ஏ, ஜகன்மாதா! மனிதர்களிடமிருந்து கௌரவத்தையாவது புகழையாவது நான் விரும்பவில்லை; எனக்கு ஐச்வர்யமும் வேண்டாம்; மாம்சச் சுகங்களும வேண்டாம்; கங்கையும் யமுனையும் ஒன்று சேர்வதுபோல, எனது ஆத்மா உன்னுள்ளே பிரவேசிப்பதாக! ஏ, மாதா! எனது மனமானது உனது பரிசுத்த பாதாரவிந்தங்களினுள்ளே எப்பொழுதும் வசிக்குமாறு கிருபை புரிவாய்" என்று சுவாமிகள் எப்பொழுதும் இறைஞ்சிக்கொண்டே யிருப்பார். இவர்தான் சுவாமி விவேகாநந்தர்.

---

7. ஸ்ரீ விவேகாநந்தர்—தேவதூதர்

ஸ்வாமிகள் தமது வாலிப பர்வம் முதற்கொண்டு தாம் பெருங் கார்யத்துக்குப் பிறந்தவர் என்ற திடமான தொரு நம்பிக்கை கொண்டிருந்தார்; கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபொழுதே சுவாமிகள் தமது நண்பர்க ளிடத்தே தாம் தமக்கென்று ஒரு புதியவழி யுண்டாக் கொள்ளப்போவதாகக் கூறியிருந்தார். ஆனால், சுவாமி கள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடத்திலே சிஷ்யராகிக் காசிபுரம் உத்தியான வனத்திலே முதல்முதலாவதாக நிர்விகற்ப சமாதி யநுபவித்த பின்னர்த்தான் சுவாமிக ளுக்கு அந்த எண்ணம் திடப்பட்டது. தாம் உலகுக்குக் கூற வேண்டிய செய்தி யொன்றிருக்கிறதென்றும், செய்ய வேண்டிய கார்யமொன்று உண்டென்றும் சுவாமிகள் இப் பொழுதுதான் நிச்சயமாக நம்பிக்கை கொள்ளலானார். அவருக்குப் புறம்பேயிருந்து எவரும் அவருக்கு எக் கார் யத்தையும் ஆக்ஞாபிக்கவில்லை. ஸ்வாநுபூதியுள்ள ஆத்மா வினாலேயே ஆக்ஞாபிக்கப்பட்ட கார்யம் அது; ஒரு சில மஹான்களுக்கே இவ் வாக்ஞை யுண்டாகும்; எல்லோருக் கும் உண்டாகாது; நூறு வருஷ காலத்தில் ஒருவரேனும் இந்த ஆக்ஞையை நிறைவேற்றத் தோன்றுவார்களோ வென்பது சந்தேகம். ஆனால், இந்தக் கார்யத்துக்குக் கங் கணம் கட்டிக்கொள்கிறவர்கள் அடிமைபோல் வேலை செய்யமாட்டார்கள்; எஜமானர் போல எல்லோரிடமும்

ஏவல் கொண்டு வேலை செய்வார்கள். அவர்கள் அதிகாரம் பெற்று வந்தவர்கள்போலப் பேசுவார்கள்; சாதாரண வைதீகர்கள் போலப் பேசமாட்டார்கள். அத்தகையோர் ஆத்மஞானத்தைப் பிறருக்கு உபதேசிப்பதல்ல, பிறருக்குள் செலுத்திப் புகுத்துகிறார்கள். அத்தகையோர் தங்களுடைய வைராக்கியமாகிற அக்கினியையும் பிறரிடம் பற்றவைத்து விடுகிறார்கள். இங்ஙனமே அவதார புருஷர்கள் அனைவரும் செய்திருக்கிறார்கள்; அத்தகையோரே சுவாமிகளும்.

சுவாமிகளைப்பற்றி அவருடைய குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அடிக்கடி கூறிவந்த தீர்க்க வசனங்கள் என்ன! சுவாமிகளுடைய கடுமையான சாதனாநுஷ்டானங்களென்ன! சுவாமிகளுடைய ஸ்வாநுபூதியென்ன! சுவாமிகளுக்கு மேனாட்டுத் தத்துவ சாஸ்திரங்களையும் சரித்திரங்களையும் பற்றியிருந்த ஞானம்தான் என்ன! இவையெல்லாம் ஸ்வாமிகளுடைய மனத்திலே ஒருவிதமான தன் நிச்சயத்தை யுண்டுபண்ணிவிட்டன. இன்னும் சுவாமிகள் தமது குருமூர்த்தியின் ஜீவிதத்தை இடைவிடாது ஆய்ந்து ஆய்ந்து பார்த்து ஜீவித ரகஸ்யத்தைக் கண்டறிந்துகொண்டார், சாஸ்திரப் பொருள்களை உண்மையென நிரூபித்துக்கொண்டார். சுவாமிகள் தமது தாய்த் திருநாடு முழுதும் யாத்திரை செய்து இந்தியா முன்னிருந்த நிலைமையையும் இப்பொழுதிருக்கும் நிலைமையும் அறிந்துகொண்டார்; இன்னும் ஸ்வாமிகள் தமது

யாத்திரையிலே ஜனங்களுடைய மனப்போக்கு, வாழ்க்கை, அவர்களுடைய ஆவசியகங்கள், சாத்தியமானவைகள் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டார்; அவர்களுடைய நடையுடை பாவனைகளிலுள்ள வேற்றுமைகளைக் கண்டுபிடித்துக்கொண்டார்.

ஸ்வாமிகள் தமது இந்திய யாத்திரையிலே குடியானவர்களுடனும் க்ஷோமக்களுடனும் கலந்து, மஹான்களுடனும் வித்துவான்களுடனும் கலந்து, இந்திய வாழ்க்கையின் அர்த்தம் இன்னதென்று தெரிந்துகொண்டார். ஸ்வாமிகள் சங்கீதத்திலே மஹா வித்துவான்; ஆனால், அவருக்கு மிகப் பிரியமான ராகங்கள் மூன்று உண்டு; இந்த மூன்று ராகங்களில்தான் அநேகமாக எப்பொழுதும் பாடுவார். இம் மூன்று ராகங்களாவன:— சாஸ்திரம், குரு, தாய் நாடு. "இவை மூன்றும்தான் அளிப்பதற்கு சுவாமிகள் வைத்திருந்த நிதியம்" என்கிறார் சகோதரி நிவேதிதா.

தமது எண்ணங்கள் பலிதமாவதற்கு மார்க்கம் இந்த வழியிலுள்ளது என்று சுவாமிகளுக்குத் தெளிவாகத் தெரிந்தவுடனே, சுவாமிகளுக்குள்ளே இதுவரை என்றும் காணாத ஒரு ராஜஸ சக்தி பொங்கிக் கிளம்பின; அவருள்ளே அபரிமிதமான சக்தியொன்று அடங்காது எல்லைகளை மீறி வெளிக்கிளம்பிற்று. சரீரம் எங்கே உடைந்து விடுமோ? என்று சுவாமிகள் உணர்ந்துகொண்டனராம்! இம்மாதிரியே சுவாமிகள் தமது சகோதர சந்யாசியொருவரிடம் கூறினார். இந்த சக்திதான் உலகிலே வெடிகுண்டு

போல வெடித்து, பல ஹீனமாயிருந்ததையும் தாழ்மை யெனப்பட்டிருந்ததையும் அடியோடு நிர்மூலம் செய்து, உலகுக்கு உயிரையும் ஊக்கத்தையும் ஊட்டியது. சுவாமிக ளுக்குப் பிரத்தியேகமான ஈச்வரகிருபையும் அருள் சக்தியும் இருந்தன வென்பதற்கு அவர் அடைந்த அசா தாரணமான வெற்றிகளே போதிய சான்றும். பிரபஞ் சத்தை யெல்லாம் ஆக்கியளித்து அழிக்கும் ஆத்மநாத னுடைய விசேஷ கடாக்ஷம் சுவாமிகளுக்கு இருந்தது என்பதில் சந்தேகமே யில்லை.

சுவாமிகள் அவதரித்த காலத்திலே மேனுட்டில் ஜட தத்துவம் அரசு செலுத்திக்கொண்டிருந்தது; பரிபக்குவ மான மனத் தன்மையுடையவர்களுக்கு அங்கிருந்த மதங் கள் திருப்தியை அளிக்கவில்லை. இந்தியாவிலோ ஆங்கிலம் கற்றவர்கள் வெகு ஆவலுடனே ஐரோப்பிய நாகரீக நடை யுடைபாவனை யெல்லாவற்றையும் அப்படி யப்படியே விழு ங்க ஆரம்பித்தார்கள்; புராதன காலம் தொட்டு இருந்து வந்த ஆர்ய தர்மம் மங்க ஆரம்பித்தது; அநாசாரங்கள் அதிகரித்தன. இச்சமயத்திலே சுவாமிகள் அவதாரம் செய்தார். ஹிந்துமதத்தினிடத்திலே காலத்துக் கேற்ற மாறுதல்களும் அமைப்புக்களும் ஏற்படுதல் அவசியமாயி ற்று; வெளியுலகத்துக்கு வேண்டியிருந்தது கொள்கைகளி லும் அநுஷ்டானத்திலும் பலவிதத் தன்மை யுள்ளவர்க ளுக்கும் பொருந்தும்படியான சர்வ சமரசமதமொன்று. சுவாமிகள் இவ்விரண்டு காரியத்தையும் நிறைவேற்றுவ

தற்காக அவதரித்தார். இவ் விஷயத்தைக் குறித்துப் பிர ஹ்மவாதி என்ற பத்திரிகையிலே ஒருவர் பின் வருமாறு எழுதியுள்ளார்:—

"விஷயங்கள் அம்மாதிரி நெடுநாட்கள் இருக்க முடியாதென்பது நிச்சயம்; விஷயங்களைச் சரி பண்ணித் தர்மத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்குத் தெய்விகப் பிரவேசத்தை அது கூப்பிட்டது. இது தீர்க்கதர்சிகளாலும் மஹாத்மாக்களாலும் செய்யப்படுகிறது உண்மைதான். சென்ற காலத்திலே வந்த தீர்க்கதர்சிகளும் மஹாத்மாக்களும் அப்பொழுதிய ஆவசியகங்களுக்குத் தக்கவாறு ஜனங்களின் ஒரு வகுப்பாருக்கோ அல்லது ஒரு ஜாதியாருக்கோ பிரத்தியேகமாக உழைத்தார்கள். ஆனால், இந்தத் தடவை வேறுப்விட்டது. மேனாட்டுக் கல்வி பரவியிருந்ததும் போக்கு வரவின் சுலபமான உபாயங்களும் உலகு முழுதையும் ஒன்று சேர்த்துள்ளதினாலே ஆகாயம் போன்று பரந்த அநுதாபங்களுடையவரும், முன் வந்தவர்களினும் பலம் மிக்கவரும், ஊக்கமுள்ளவருமான ஒரு புருஷரும் வேண்டியிருந்தது. இன்னும், அத்தகைய புருஷர் வந்ததுடனே ஒரு சந்தர்ப்பமும் வேண்டிவந்தது; நல்ல வேளையாய் 1893-ம் வருஷத்தில் சிகாகோவில் நடந்த பெயர் பெற்ற சர்வமத மஹாசபை மிகமிகச் சிறந்ததும் மிகமிகத் தகுந்ததுமான சந்தர்ப்பத்தை யளித்தது.

"ஒரு தேசத்தினுடைய அல்லது கண்டத்தினுடைய அல்ல, ஆனால் உலகு முழுதினுடையவும் பெரியோர்கள்

சேர்ந்த பிரசித்தி பெற்ற மஹா சபையாயிருந்தது அது. உலகசரித்திரத்திலே அத்தகைய மஹாசபை அபூர்வமான தினுலே, வெகு தூரத்திலுள்ள கீழ் நாட்டிலிருந்து ஒரு அபூர்வ புருஷனும் பிரசங்கமாயிருக்கும்படி விதிக்கப்பட்டிருந்தார். அங்குத்தான் சுவாமிகள் உபநிஷத்து மஹரிஷிகள்: 'உள்ளது ஒன்றே; பெரியோர்கள் அதைப்பலவிதமாய் அழைக்கிறார்கள்' என்று கூறிய உண்மையை உலகுக்கு எடுத்துரைத்துத் தமது அசாதாரண கார்யத்தை நிறைவேற்றும்படி அழைக்கப்பட்டார். சுவாமிகளினும் அதிக திரத்துடனே இவ் வுண்மையை வேறு எவரும் வெளியிடவில்லை; அது உண்டுபண்ணிய பலனே ஆச்சர்யகரமானது. இவ் வுபதேசம் மதப் பிடிவாதத்துக்கு ஒரு அடி கொடுத்து, உலகு துன்புவதற்குக்காரணமாயிருந்த மதங்களின் உராய்ப்பை மெதுவாக்கிற்று. இப்பொழுது நாம் ஒருவர் மற்றவர் மதவிஷயத்திலே பாராட்டுகின்ற சுககரமான, அன்பு உணர்ச்சி அதற்குக்கொஞ்சமல்ல காரணம்."

சுவாமிகள் சர்வமத மஹாசபையிலே செய்த முதற் பிரசங்கம் ஆச்சர்யகரமானது, அம்பிகையினருள் பெற்று விளங்குவது; இதுவரை எவரும் ஹிந்து மதத்தை இம் மாதிரி யெடுத்துக் கூறியது கிடையாது; ஹிந்துமதத்துக்கு ஒரு புதிய உயிர் சுவாமிகள் கொடுத்தார். ஹிந்துமதத்தைத் தற்காலத்திற் கேற்ற ஒரு அழகிய உடையால் அலங்கரித்தார். சுவாமிகள் அந்தச் சபையிலே தம்மீதும் தம் முன் நிற்கும் சபையினர்மீதும் அருள் பொழியும்படி

சரஸ்வதிதேவியை ஸ்தோத்ரம் செய்துகொண்டு பேசு வதற்கு எழுந்தார்; அமெரிக்காவிலே சிகாகோ என்னும் ஒரு ஊரிலே ஒரு சில ஆயிரம் ஜனங்களை நோக்கித் தாம் பேசுகிறு ரென்பதை அடியோடு மறந்துவிட்டார். மேனுடு முழுதும் தனது வித்துவான்களேயும் சாஸ்திரக்ஞர்களேயும் ஒன்று சேர்த்துத் தம்மை வாதுக்கழைத்திருப்பதுபோல அவருக்குத் தோன்றிற்று; இந்தியாவின் கௌரவம் தம் மிடம் ஒப்புவிக்கப்பட்டிருப்பது போல அவருக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று. தம் எதிரே மேனுடு நிற்பதைக் கண்டார்; தம் பின்னே தமக்குத் துணையாக மதங்களுக் கெல்லாம் தாயாம் சநாதன தர்மம் பிரகாசிக்கும் இந்தியர் நிற்கிறதென்று இருமாப்புக் கொண்டார்; இந்தியாவுக்குப் பலமாக ஆயிரக்கணக்கான ஆத்மீக அபிவிருத்தியும் நாக ரீகமும் இல்லையா? சிருஷ்டி தோன்றிய நாளிலேயே மக ரிஷிகள் வேதங்களை உலகுக்கு அளிக்கவில்லையா? இந்தியாவி னுடைய நாகரிகத்துடனும் மதத்துடனும் ஒப்பிட்டுப் பார்த் தால் மற்றெல்லாமதங்களும் நாகரிகங்களும் நேற்றுப் பிறந் தவைதானே! சுவாமிகளின் முன்னே யுள்ளதும் பின்னே யுள்ளதும் ஒன்று சேரும் சந்திமுகமாய் விளங்கினர் சுவாமிகள்.

சுவாமிகள் இத்தகைய காலத்திலே மேலே சொன்ன மாதிரியில் உலகுக்கு இந்தியாவின் மஹிமையை யெடுத் துரைத்தார். சர்வ சமரச மென்பது "வெவ்வேறு விதமான புருஷர்களும் ஸ்திரீகளும் நாநாவிதமான நிபந்தனைகளின் மூலமாகவும் சந்தர்ப்பங்களின் மூலமாகவும் ஒரே லக்ஷியத்

தை நோக்கி மேலேசெல்வதே, யாத்திரை செய்வதேயாம். இந்த மதமானது "மனிதன் ஈச்வரத்துவத்தை யநுபூதியி லடைந்து ஈச்வரனாக வேண்டியவன்" என்று கோஷிக்கிறது. உலகிலுள்ள சமஸ்த ஜீவகோடிகளுக்கும் இடம்கொடுக்கின்றது சுவாமிகள் போதித்த ஹிந்து மதம். "எதனுடனே யொப்பிட்டுப் பார்த்தால் சாஸ்திரமானது மிகமிகச் சமீபத்தில் கண்டுபிடித்தவைகள் எதிரொலிகளாகத் தோன்றுகின்றனவோ அந்த வேதாந்த தத்துவ சாஸ்திரத்தின் மிகமிக உயர்ந்த ஞான சிகரங்களிலிருந்து பலவிதமான கட்டுக்கதைகள், பௌத்தர்களுடைய சம்சயவாதம், சமணர்களுடைய நாஸ்திகவாதம் இவையும் விக்கிர காராதனையும் ஆகிய மிகமிகத் தாழ்ந்த எண்ணங்கள் வரையில் ஒவ்வொருவருக்கும் ஹிந்துவினுடைய மதத்திலே ஒரு இடம் உண்டு."

சுவாமிகள் மேனாட்டுக்கும் இந்தியாவுக்கும் அளித்த மதமானது சம்ஸ்கிருத கிரந்தங்களிலே யுள்ளதுதான். ஆனால், சுவாமிகள் தமது அநுபவத்தை யொட்டி அதைப் புதுப்பித்தார்; சுவாமிகளுடைய குருமூர்த்தி ஒவ்வொரு மதத்தையும் அந்த மதத்திலே சொன்ன பிரகாரம் அநுஷ்டித்துப் பார்த்து சர்வ மதங்களினுடையவும் உபதேசத்தையும் தமது அநுபவத்தையும் ஒட்டிச் சுவாமிகள் ஹிந்து மதத்தை எல்லோரும் ஆச்சர்யப்படும்படிப் பிரகாசிக்கச் செய்தார். சுவாமிகள் ஒரு நண்பருக்குப் பின் வருமாறு எழுதினார்:—

"என்னிடம் ஒரு நற்செய்தி யிருக்கிறது; எனது சொந்த மாதிரியின்படியே நான் அதை யளிப்பேன். நான் எனது நற்செய்தியை ஹிந்துவாக்கமாட்டேன், கிறிஸ்துவமாக்கமாட்டேன், உலகில் வேறெதுவும் ஆக்கமாட்டேன்; நான் என்னுடையதாகத்தான் ஆக்குவேன்; அவ்வளவுதான்"

சுவாமிகள் பிரஹ்மாநுபூதியைப் பரிபூர்ணமாக அநுபவித்துக்கொண்டிருந்தபொழுதாவது, அல்லது தாம் ஒரு பெருங்கார்யம் செய்யப் பிறந்த தீர்க்கதர்சி என்றதிட நிச்சயம் ஏற்பட்டபொழுதாவது அவர் கூறிய வார்த்தைகள் அனைவரையும் பயப்படச் செய்வதாயிருக்கும். இரண்டொரு திருஷ்டாந்தம் கூறுவோம்.

ஒரு சமயத்தில் ராமநாதபுரத்தில் ராஜாவும் சமஸ்தான பண்டிதர்கள் பலருமாக ஒரு சபை கூடியிருந்தார்கள். அப்பொழுது பண்டிதர்களுக்கும் சுவாமிகளுக்கும் வாது நடந்தது. "சுவாமிகளை ஸ்வாநுபவி யல்லர்" என்று பொருள்படும்படி அந்தப் பண்டிதர்கள் ஏதோ சொல்லிவிட்டார்கள்; சுவாமிகள் "நான் பிரக்ஞாதீத ஸ்திதியில் அகண்டத்துவத்தை யநுபவித்துள்ளேன். வேதங்களுக்கு நானே பிரமாணம்!" என்று கர்ஜித்தார். பண்டிதர்கள் நடுங்கிவிட்டார்கள். எவரும் பேசவில்லை.

இன்னுமொரு சமயத்திலே சென்னைமாநகரில் சிலர் சுவாமிகளுடனே தர்க்கம் செய்தார்கள். அவர்கள் கூறியதாவது:— த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம்

இம் மூன்றையும் ஒற்றுமைப்படுத்த முடியவே முடியாது. சங்கரர், ராமாநுஜர், மாத்வர் இவர்கள் மூல சுலோகங்களையெல்லாம் சித்திரவதை செய்து வேற்றுமையைத் தான் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

இவர்கள் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, சுவாமிகள்: "ஏனெனில், அந்த வேலை (ஒற்றுமைப் படுத்தல்) எனக்கு விடப்பட்டிருந்தது! ஏனெனில், உலகுக்கு இதை நிரூபிப்பதற்கு நான் பிறந்தேன்!" என்று இடியிடிப்பதுபோலக் கர்ஜித்தார். சபையினர் மௌனம் சாதித்தனர்; சுவாமிகளுடைய வார்த்தைகள் ஏதோ ஒரு பெருஞ் சக்தியைக் கூடக்கொண்டு வெளிவந்தனபோலத் தோன்றின. பின்னர், சுவாமிகள் இம் மூன்று மார்க்கங்களையும் எப்படி ஒற்றுமைப்படுத்த முடியும் என்பதை விளக்கிக் காட்டினார்.

சுவாமிகளோ ஆண்மையின் அவதாரமாய் வந்த புருஷர்; அவருடைய ஆண்மை எப்பொழுதும் அவர் முகத்திலே பிரகாசித்துக்கொண்டேயிருந்தது. ஒரு சமயத்திலே ஒரு ஆங்கிலேயன் சுவாமிகளை 'ஒரு சாதாரண சோம்பேறிச் சாது' என்று நினைத்து, வாயில் வந்தவாறு திட்டினான். சுவாமிகள் சட்டென்று அவனை நோக்கி. "நான் விவேகாநந்தன்; நீ யார்?" என்று கேட்டார். சுவாமிகள் இந்தக் கேள்வியைக் கேட்டபொழுது, அவருடைய முகத்திலே ராஜ கம்பீரம் விளங்கிற்று; ஆங்கிலேயன் மறுமொழி சொல்ல வாயில்லாதவனாய், தலையைக் குனிந்து

கொண்டு போய்விட்டான். சுவாமிகளின்—ஆத்மாவின்—ஆச்சர்ய சக்தியே அனைவரையும் அடங்கி நிற்கும்படி செய்துவந்தது.

“ஏதோ ஈச்வர கார்யமொன்று நிறைவேற வேண்டியிருக்கிறது” என்றும, “அதனுல் ஈச்வரனே தம் மூலமாக வேலை செய்து வருகிருர்” என்றும் சுவாமிகள் பரிபூர்ணமாக உணர்ந்திருந்தார். காச்மீர தேசத்திலே யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது அவர் ஜகன்மாதாவின் வடிவம் அவர்களின் நடுவே பிரத்தியக்ஷத்தில் இருப்பது போலத் தமக்குத் தோன்றுவதாகத் தம்முடன் கூட யாத்திரை செய்த சில ஸ்திரீ சிஷ்யர்களிடம் கூறினர். அந்திய காலத்திலே சில மாதங்களாக ஏதோ இரண்டு கைகள் தம்முடைய கைகளை எப்பொழுதும் பிடித்துக் கொண்டிருப்பதுபோலத் தாம் உணர்வதாகச் சுவாமிகள் ஸ்வரூபாநந்தரிடம் சொன்னர். ஒரு தரம் சுவாமிகள் அமெரிக்காவிலிருந்து தமது சகோதர சந்யாசிகளுக்கு “ஈச்வரன் என்மூலமாக வேலை செய்துகொண்டிருக்கிருர்” என்றும், “நான் இந்தச் சரீரத்திலுள்ள வரையில் என் மூலமாக வேலை செய்வார்” என்றும், “உங்களுக்கு நம்பிக்கையுள்ளவரையில் நீங்கள் எதற்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை, உங்களுக்கு ஒரு தீங்கும் நேரிடாது!” என்றும் எழுதினர்.

ஈச்வரன் தம்மூலமாக வேலை செய்கிருர் என்ற இந்த ஞாபகம் எப்பொழுது அவருள்ளே யிருந்துகொண்டே

யிருந்தது; அதனுல்தான் எவ்வித இடையூறுகளையும் லக்ஷியம் செய்யாமல், நிர்ப்பயத் தன்மை வகித்து ஜய மடைந்தார். தற்காலப் போக்குக்கு விரோதமாகப் போகிற வர்களுக்கும், புதிய எண்ணங்களை யுடையவர்களுக்கும் அடியும் உதையுமே ஏற்பட்டது என்பது சுவாமிகளுக்குத் தெரியாத தல்ல. ஆனுல், இந்த எதிர்ப்புக்களினுலும் இடையூறுகளினுலும் சுவாமிகள் பின் வாங்கிவிடவில்லை; அவருள் இருந்த ஆண்மை மேன்மேலும் பிரகாசிக்க ஆரம் பித்தது; இதனுல் சில சமயங்களில் தமது நண்பர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் அந்தரங்கமாக அநேக உண்மைகளை வெளிப்படுத்தவும் சுவாமிகளுக்கு முடிந்தது. ஒரு திருஷ் டாந்தம் கூறுவோம்.

அமெரிக்காவிலே பாதிரிகள் தங்கள் பத்திரிகைகள் மூலமாகச் சுவாமிகள்மீது அநியாயமான அவதூறு கூற வும் பலவாறு திட்டவும் செய்தார்கள். சுவாமிகள் இந்தியா வுக்குத் திரும்பி வந்த பின், தமது அமெரிக்க சிஷ்ய ரொருவருக்குப் பின் வருமாறு எழுதினுர்:—

"மனிதர்கள் எம்மாத்திரம்? அவர் காதற் பொருளா கிய என்னுடனே யிருக்கிறுர். நான் அமெரிக்காவிலிருந்த பொழுதும், இங்கிலாந்தி லிருந்தபொழுதும், எவரும் அறி யாமல் இந்தியாவிலே இடத்துக்கு இடம் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தபொழுதும் அவர் என்னுடனே யிருந்தார். அவர்கள் என்ன சொன்னுலும் எனக்கென்ன கவலை—குழந்தைகள், அவர்களுக்கு நல்லது தெரியாது.

என்ன! ஆத்மாவையும் பூவுலகின் மூடத்தனமெல்லாவற்றி னுடையவும் வீணத்தனத்தையும் அநுபவத்தில் அறிந்துள்ள நானு குழந்தைகளின் குளறுமொழிகளால் எனது பாதையினின்றும் விலகுவது?.........

"......எனது வேலை முடிந்துவிட்டதென்று உணர்கிறேன்—அதிகமாய்ப் போனால் மூன்று அல்லது நான்கு வருஷங்களே அதிகமாக ஜீவிதம் பாக்கி யுள்ளது. நான் மோக்ஷமடைய வேண்டுமென்ற விருப்பமெல்லாவற்றையும் இழந்துவிட்டேன். பூவுலகுச் சுகங்களை நான் ஒரு பொழுதும் விரும்பினதில்லை. நான் எனது இயந்திரத்தைப் பலமாக வேலை செய்கிற ஒழுங்கில் பார்க்க வேண்டும்; பின்னர், மனுஷ்யவர்க்கத்தின் நன்மைக்காகக் குறைந்தது இந்தியாவிலாவது எந்தச் சக்தியாலும் பின்னுக்குத் தூரத்தியடிக்க முடியாதபடி ஒரு சக்தியை உண்டு பண்ணி விட்டேன் என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு, அடுத்தது என்ன என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் நான் உறங்குவேன். உள்ள ஒரே கடவுளை, நான் நம்புகின்ற ஒரே கடவுளை, சமஸ்த ஜீவர்களின் சமஷ்டியை நான் பூஜிக்கும் பொருட்டு நான் மறுபடியும் மறுபடியும் பிறந்து ஆயிரக்கணக்கான துன்பங்களை யநுபவிப்பேனாக,—எல்லாவற்றுக்கும் மேலே, கொடியவனாகிய எனது கடவுள், எல்லா ஜாதிகளிலும் எல்லா வர்க்கங்களிலும் ஏழையாகிய எனது கடவுள் எனது உபாசனைக்கேற்ற பிரத்தியேக வஸ்துவாம்.

"உயர்ந்தவனும் தாழ்ந்தவனும் இருக்கிறவன், பரிசுத்த புருஷனும் பாபியாயும் இருக்கிறவன், கடவுளாயும் கீடமாயும் இருக்கிறவன், பிரத்தியக்ஷத்திலுள்ளவன், அறிவுக்கெட்டியவன், உண்மையானவன், சர்வ வியாபகன். அவனை யுபாசிப்பாய்! மற்ற விக்கிரகங்களெல்லாவற்றையும் உடைத்துவிடு!'

"எவனொருவனுக்கு முந்தி ஜன்மம் இல்லையோ, இனிமேல் பிறக்கப்போவதுமில்லையோ, மரணமில்லையோ, போவதுமில்லையோ, வருவதுமில்லையோ, எவனிடத்தில் நாம் எப்பொழுதும் இருந்து வருகிறோமோ - எப்பொழுதும் ஒன்றாயிருப்போமோ அவனை யுபாசியுங்கள்! மற்ற விக்கிரகங்களெல்லாவற்றையும் உடைத்து விடுங்கள்!'

"எனது காலம் கொஞ்சமே. நான் சொல்வது எவரையாவது குத்துகிறதா, அல்லது வேறு எவரையாவது கோபப்படுத்துகிறதா? என்பதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் நான் சொல்லவேண்டுவதையெல்லாம் திறந்து விடவேண்டியிருக்கிறது. ஆகையினால், எனது அரிய—எனது உதடுகளிலிருந்து எது விழுந்தாலும் நீ பபமடையாதே! ஏனெனில், என் பின்னேயுள்ள சக்தி விவேகாநந்தனல்ல, ஆனால், பிரபுவாகிய அவனும்; மிகமிக நல்லது அவருக்குத் தெரியும் ...."

மேனாட்டிலே சுவாமிகள் ஒரு ஆச்சர்யகரமான, புதிய மாதிரி புருஷனாயிருந்தார்; இந்தியாவிலேயொருபுது மாதிரி சந்யாசியாயிருந்தார். ஆகையினால், அமெரிக்காவி

லும் இந்தியாவிலும் இடையூறுகள் ஏற்பட்டது ஆச்சர்ய மல்ல. ஆனால், எத்தனையோ விரோதங்களும் இடையூறுகளும் ஏற்பட்டபோதிலும், நூற்றுக்கணக்காக, ஆயிரக் கணக்காக எத்தனையோ ஜனங்கள் சுவாமிகளுடைய அமிர்த மொழிகளைப் பானம் பண்ணி ஆநந்த மடைந்தார்கள். இவர்களெல்லாரும் சுவாமிகளை 'அவதார புருஷர்' என்றும், 'ரக்ஷகர்த்தா' என்றும், 'தீர்க்கதர்சி' என்றும் நம்பினார்கள். சுவாமிகளுடைய அமிர்த வசனங்கள் ஹிந்து மதத்துக்கு ஒரு கம்பீரமும் அலங்காரமும் அளித்தன; மத உலகத்திலே ஒரு பெருங் குழப்பத்தை யுண்டாக்கி விட்டுவிட்டன; இந்தியா தேசத்திலே தேசிய உணர்ச்சியை உண்டாக்கி ஒரு நவசக்தி ஊட்டிவிட்டன.

சுவாமிகளுக்குத் தவறுதலென்று இன்னதென்று தெரியாது; பலஹீனமென்பதைப்பற்றி அவர் கனவுகூடக் காண்பது இல்லை. "எப்பொழுதும் ஜயமடைந்து தீரவேண்டும்." என்று அவர் ஒருதரம் கூறினார்; ஆனால், அவர் நிச்சயமாக எடுத்த கார்யம் ஒவ்வொன்றிலும் ஜயமடைந்தாலும், மரணவேதனை யொப்பக் கஷ்டங்கள் அநுபவித்த பின்னர்த்தான் அவருக்கு ஜயம் கிடைத்திருக்கின்றது. 'ஆத்மாவுக்கு அகண்ட சக்தி யுண்டு' என்பதைச் சுவாமிகள் திடமாக அறிந்தவராதலால் அவர் உலகிலே ஸ்வதந்திரத்துடனும் பயமற்றும் உலகுக்கு ஒரு நற்செய்தி கொண்டுவந்த தேவதூதன் போல, அரசன்போல— உலாவினார். "சுவாமிகள் மாதிரி ஒருவரும் இப் பூமண்டலத்

தில் இதுவரையில் வந்ததில்லை'' என்று அவருடைய குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறினர். இது முக்காலும் உண்மை.

---

8. ஸ்ரீ விவேகாநந்தர்—அதி மதுரபாஷி

சுவாமிகளிடத்திலே ஒருவிசேஷ குணம் என்னவென்றால் அவர் எல்லாவற்றிலும் சமர்த்தர் என்பதே. அவருடைய பிரசங்கங்களெல்லாம் அவருடைய புத்திரியாகிற உலையிலே அன்பாகிற அக்கினியிலே பழுக்கக் காய்ச்சி யெடுக்கப்பட்டனபோன்று அவ்வளவு ஆத்திரமும், நேர்மையும், சக்தியும் நிரம்பியவையாயிருந்தன. ஒவ்வொரு வாக்கியமும் சபையிலே இடி விழுந்ததுபோல விழும். அவருடைய சமிக்ஞைகளிலேகூட வன்மையும் பொருளும் ஏராளமாக உண்டு. சுவாமிகள் பேசுகையில் எல்லோரும், சபையினர் அனைவரும் அவருக்கு அடிமைகள் போன்று உட்கார்ந்திருப்பார்கள்; சுவாமிகள் அப்பொழுது என்ன சொன்னாலும் அதைச் செய்யத் தயாராயிருப்பார்கள். அமெரிக்கப் பத்திரிகைகளிற் சில இவரை ''மின்னல் வாசாலகர்'' என்றும், ''ஹிந்து புயற்காற்று'' என்றும் பலவாறு புகழ்ந்து கூறின. ஆனால், இதே சுவாமிகள் நிஷ்டையி லமர்ந்துவிட்டால், ஜகத்தே ஒடுங்கிவிட்டா லெப்படியிருக்குமோ அப்படி மௌனம், மகா மௌனமா யிருப்பார். அவருள்ளேயிருந்த திறமையை, சமர்த்தையெல்லாம் வெளியே கொண்டு வந்தது அவருடைய சம்பாஷண சக்தி; ஆனாலும்,

அவர் சந்நிதி மாத்திரத்தினாலே பெரிய பெரிய அபிப்பிரா யங்களை யெல்லாம் தெளிவித்து விடுவார். சுவாமிகளுக்கிரு ந்த லௌகீக ஞானமோ அபரிமிதமானது; சுவாமிகளுக் குச் சூட்சுமதிருஷ்டியும், அதாவது ஞான திருஷ்டியும் ஏராளமாக உண்டு. "வழியிலே திரிந்துகொண்டிருப்பவ ரைப்போல அவர் ஒருபொழுதும் தோன்றியதில்லை. அவர் எது செய்தாலும் தமது லக்ஷியத்தை நோக்கித் தீர் மானமான அடியெடுத்து வைப்பார். அதனாலேதான் அவ ருடைய பிரசங்கங்கள் அவ்வளவு பயனுடையவையாயிருந் தன; அதனாலேதான் அவருடைய நூல் அவ்வளவு பிர காசமாயிருக்கின்றன; அதனாலேதான் அவருடைய போ தனைகள் அவ்வளவு அநுபவஞானம் நிறைந்தவையாயிருக் கின்றன" என்று ஒருவர் கூறினர்.

சுவாமிகள் பொதுக் கார்யங்களிலே, பொதுஜன சபை மத்தியிலே மஹா சமர்த்தரானல், தனியான கார்யங்களி லும் தனியா யிருக்கும்பொழுதும் மஹா சமர்த்தரே. "பிர சங்க மேடையிலே மாத்திரம் சுவாமிகளை அறிந்துள்ளவர் கள் எல்லோரும் அவருடைய உண்மையான சக்தியினு டையவும் பெருமையினுடையவும் ஒரு சிறிய அளவையே அறிந்திருந்தார்கள். பொறுக்கி யெடுத்த நண்பர்களுடனும் சிஷ்யர்களுடனும் சுவாமிகள் சர்வ சாதாரணமாகச் சம் பாஷிக்கும்பொழுதுதான் மிகமிகச் சிறந்த ஒளிவீச்சு உண் டாயிற்று, அவருடைய வாக்சாதுர்யத்தினுடைய மிகமிக உயர்ந்த சிகரங்கள் தோன்றின, மிகமிக ஏராளமான

அறிவு நிரம்பிய வாசகங்களெல்லாம் வெளிவந்தன." என்று ஒரு சிஷ்யர் எழுதியிருக்கிறார்.

விஷயத்துடனே பொருத்த மில்லாத ஏதோ ஒன்றைச் சொல்வதைப்போலச் சுவாமிகளுடைய சம்பாஷணை தோன்றும். ஆனல், "அறிவார், அறிவார், ஆரறிவார், அறிவுள்ளவர் அறிவார்." சுவாமிகளுடைய வார்த்தைகளைக் கண்டுபிடித்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர் நிற்கும் நிலைமையிலிருந்து பார்க்கவேண்டும், அவருடைய காட்சியை யடையவேண்டும். சுவாமிகள் பேச ஆரம்பித்து விட்டால் அங்கிருந்து எழுந்திருந்து போவதற்கு எவருக்கும் மனம் வராது; ஆகார, நித்திரை முதலியவற்றை மறந்துவிடுவார்கள்; களைப்பென்பதே தோன்றாது. அவருடைய சம்பாஷணைகள் எப்பொழுதும் மத சம்பந்தமானவையாயே யிருந்ததென்றே நினைக்கவேண்டாம். மிகமிக அற்ப விஷயங்களைப்பற்றியுங்கூடச் சுவாமிகள் சம்பாஷிப்பார்; ஆனல், சம்பாஷணை காதுக்கு ரம்யமாய் ஆநந்தத்தை யளித்துக்கொண்டே யிருக்கும். சுவாமிகளுடைய கடிதங்களைப் பாருங்கள்! உயர்ந்த விஷயங்களைப்பற்றி எழுதிக்கொண்டே வருகிறார்; திடீரென்று வேடிக்கைப் பேச்சுக்கு இறங்கிவிடுகிறார். சுவாமிகளுடைய இயற்கை லக்ஷணம் இத்தகையதென்பதை அவருடைய கடிதங்கள் காண்பிக்கின்றன. பெரிய விஷயத்தை யெடுத்துச் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருப்பார்; ஆனல், அது சாதாரணப் பேச்சு என்றும் அற்பப் பேச்சு என்றும் எவருக்

கும் படாது. சுவாமிகள் தமது அந்தரங்க அன்பர்களைக் கண்டிப்பதையும் கோபித்துக்கொள்வதையும் பார்த்தாலும், அந்த அன்பர்கள் வருத்த முறுவார்கள் என்று தோன்றும். ஆனால், சுவாமிகள் என்னதான் செய்தாலும் அவர்களுடைய மனமானது எப்பொழுதும் நிர்மலமாகவே யிருந்துகொண்டே யிருக்கும். தாம் கண்டித்தால் அல்லது கோபித்துக்கொண்டால் அது சிஷ்யர்களுடைய நன்மைக்கே யென்றும், அதனால் சிஷ்யர்கள் எவருக்கும் ஒரு பொழுதும் மனவருத்தம் உண்டாகாது என்றும் சுவாமிகளுக்கு நன்றாய்த் தெரியும்.

சுவாமிகள் தமது தேச ஜனங்களை என்ன திட்டு திட்டியிருக்கிறார்! வேறு ஒருவர் திட்டினால், ஜனங்கள் சும்மாயிருப்பார்களா? தமது தேச ஜனங்களுக்கு மதப்பற்றில்லை யென்றும், 'ஒற்றுமை யில்லை' என்றும், 'சோம்பர் மிகுந்திருக்கிறது' என்றும், 'வெறும் பேச்சுக்காரர்களாயும், வாசா ஞானிகளாயுமிருக்கிறார்கள்' என்றும் கூறிச் சுவாமிகள் பலவாறு பரிகாசம் செய்திருக்கிறார், இகழ்ந்திருக்கிறார், திட்டியிருக்கிறார்.

இந்தியா தேசம் உலகை மோக்ஷ மார்க்கத்தில் முந்தி யிட்டுச் சென்றதுபோல, இப்பொழுதும் இட்டுச் செல்லப் போகிறது" என்றும், "ஆதலால், இந்திய ஜனங்கள் விழித்துக் கொள்ளவேண்டும்" என்றும், "எழுந்திருக்க வேண்டும்" என்றும் சுவாமிகள் கர்ஜித்தார்; அதற்காகச் சில வழிகளையும் செப்பனிட்டுக் காட்டினார். லக்ஷக்கணக்

கான ஜனங்களுடைய ஹிருதய பாசங்களை எப்படித் தொடு வது, எங்குத் தொடுவது என்பது சுவாமிகளுக்குத் தெரியும். அவருடைய வசனங்கள் வீண்போகவில்லை. எப்படி வீண்போகும்? பாரத தேசத்திலே ஒரு நவீன சக்தியை யுண்டுபண்ணி விட்டுவிட்டது; இப்பொழுது அந்தச் சக்தியே இந்திய ஜனசமூகத்தைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கின்றது; இந்தியாவில் இப்பொழுது காணப்படும் இயக்கங்களுக்கெல்லாம் காரணம் அந்தச் சக்தியே.

சுவாமிகள் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினாலும் ஆவேசம் பூண்டவர்போலத்தான் பேசுவார். சுவாமிகள் ஒரே விஷயத்தைப்பற்றிப் பல தடவை பேசுவார்; ஆயினும், அவர் ஒவ்வொரு தடவையிலும் வெவ்வேறு நிலைமையிலிருந்து அந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து, புதிய பொருள் கொடுத்துக்கொண்டே போவார். கேட்பவர்கட்குப் புதிது புதிதாகவே யிருக்குமே யொழிய, 'நேற்று கேட்டதுதானே' என்று இராது. சுவாமிகளுடைய பாஷையிலே அவலக்ஷணம் என்பது ஒருநாளும் ஏற்படாது. லக்ஷணமெல்லாம் திரண்டு உருவெடுத்து வந்தது போன்று தோன்றிய புருஷன் வாயில் அவலக்ஷண பாஷை எப்படி வரும்? சுவாமிகளிடத்திலே எதுவும் ஒளிவு மறைவு என்பது கிடையாது; நேர்மையே அவருடைய முக்கிய லக்ஷணம், 'பிறர் குற்றம் கூறுவார்களோ' என்று பயந்து அவர் தமது மனச் சாக்ஷியை நசுக்கியதில்லை. ஹிந்துமத தர்மத்தைப் பாதுகாக்கும் விஷயத்தி

லாவது, அல்லது தமது தாய்த் திருநாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டிய விஷயத்திலாவது உண்மையை உரைக்கும்படி நேர்ந்து அதனல் தமது அரிய நண்பர்கட்கு மனஸ்தாபம் நேரிடுவதாயிருந்தாலும், ஸ்வாமிகள் அதற்குப் பின்வாங்கி உண்மையை உரைக்காமலிருக்க மாட்டார்.

தர்க்கத்திலே அவரை ஜயித்தல் மிகமிகக் கஷ்டம். ஸ்வாமிகள் சிலரைப்போல வெறுங் கூச்சலிட்டு, கூச்சலினல் எதிராளியை மிரட்டிவிட்டதில்லை; மிகுந்த பொறுமையுடன் எதிராளி சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டுப் பின்னர் ஆணித்தரமான நியாயங்கள் சில சொல்லி, எதிராளியை வாயடக்கிவிடுவார். மத விஷயங்களிலே ஸ்வாமிகள் பிறவியிலேயே ஆசார்ய லக்ஷணத்துடன் பிறந்தவர். சிஷ்யர்களுடைய சிந்தனையை ஸ்வாமிகள் ஒருபொழுதும் பந்தப்படுத்தியதில்லை; அவரவர்களே ஆலோசனை செய்து அபிவிருத்தியடைதற்கேற்ற பரிபூரண ஸ்வதந்திரம் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். மற்றவர்களுடைய புத்திசமர்த்து முழுதையும் தம்மிடத்திலே காட்டித் தம்மை எதிர்த்து வாதிக்கும்படிவிட்டு, ஸ்வாமிகள் சந்தோஷமாகவும் பொறுமையுடனும் பார்த்துக்கொண்டிருப்பார். நடுவிலே ஏதேனும் கேள்வி கேட்டால் ஸ்வாமிகள் அதனல் ஒருபொழுதும் கோபித்துக்கொள்ளவே மாட்டார். ஆனல், 'அக் கேள்வி தெரிந்துகொள்ளவேண்டுமென்ற உண்மையான எண்ணத்துடனே கேட்கப்படுகிறதா? என்று பார்த்துக்கொள்வார். மூடப்

பிடிவாதக்காரர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது; தற்புகழ்ச்சிக்காரர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. இத் தகையோருடனே வாது செய்யும்படி நேரிட்டுவிட்டால், எதிராளியின்மீது இடிபோல விழுந்து அவனை நடுநடுங்கச் செய்துவிடுவார்.

ஸ்வாமிகள் அமெரிக்காவிலே யிருந்தபொழுது சில கிறிஸ்தவப் பத்திரிகைகள் 'ஸ்வாமிகள் கூறிய நியாயங்களைக்கொண்டேயே ஸ்வாமிகளைத் தோற்கடித்துவிடலாம்' என்று நினைத்து, ஸ்வாமிகளைப் பலவாறு குற்றம் கூறி எழுதின. ஆ! ஆ! ஸ்வாமிகளை ஜயிக்கவா? அமெரிக்கப் பத்திரிகைகளுள் ஒன்று பின் வருமாறு எழுதிற்று:—

"ஆனால், அந்தச் சந்யாசியை அவருடைய சொந்த நியாயத்தைக் கொண்டே ஜெயித்துவிட முயற்சித்தவனுக்கு ஆபத்தே; முயன்றவர்களெல்லோரும் அங்குத்தான் முயன்று பார்த்தார்கள். அவருடைய மறுமொழிகள்மின்னல் வெட்டுக்கள்போல வந்தன; கேள்வி கேட்கத் துணிந்தவன் இந்தியருடைய பிரகாசிக்கின்ற புத்தியாகிற ஈட்டியிலே சொருகப்படுவது நிச்சயம். அவ்வளவு சூட்சுமமானதும், அவ்வளவு அழகியதும், அவ்வளவு நன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டதும், அவ்வளவு நன்றாகப் பயிற்சி செய்யப்பட்டதுமான அவருடைய மனத்தின் வேலைப்பாடுகள் அவருடைய சொற்களைக் கேட்டவர்களைப் பிரமிக்கச் செய்தன; ஆனால், அது எப்பொழுதும் மிகமிக ஆச்சர்யமானதொரு ஆராய்ச்சியாகவே யிருந்தது......"

எதிராளி கொஞ்சம் பேசுவதற்குள்ளாகவே, 'இன்னதுதான் சொல்லப்போகிறுன்; அவனுடைய நியாயம் இப்படித்தான் இருக்கும்' என்று தெரிந்துகொண்டு, ஸ்வாமிகள் சட்டென்று அவனைச் சந்தித்து, அவனுக்கு அடிப்படையாயுள்ள நியாயத்தையே மறுத்து, அவனைச் சின்னுபின்னப் படுத்திவிடுவார்; அல்லது அவனுடைய நியாயத்தைக்கொண்டேயே அவன் கூறுவதை யெல்லாம் தகர்த்தெறிந்து அவனைத் தோற்கடிப்பார். ஆனல், ஸ்வாமிகளுக்கு எவ்வளவு கோபம் வந்தாலும்கூட அவர் கௌரவமான பாஷையே பேசுவார்; எதிராளிகளிடம் மிகவும் பக்ஷமாகவும் தாராளமாகவும் நடந்துகொள்வார். அவரிடம் யார் எக்கேள்வி கேட்டாலும் மறுமொழி கூறுவதற்கு ஒரு நிமிஷம்கூட அவர் யோசனை செய்தது கிடையாது. ஸ்வாமிகள் எல்லா விஷயங்களிலும் சிந்தனையைச் செலுத்தி ஆராய்ந்து பார்த்தவராதலால், உடனுக்குடனே மறுமொழி கூறுவார். சத்தம் போட்டுப் பேசுவதும், முரட்டுத்தனமாகப் பேசுவதும் ஸ்வாமிகளிடம் கிடையா. 'தர்க்கம் செய்யவேண்டும்' என்று அவர் தர்க்கம் செய்ததில்லை. ஒரு சமயத்திலே அவரைச் சுற்றியிருந்தவர்கள் பெருஞ் சத்தமிட்டு வாதுசெய்து கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள்; ஸ்வாமிகள் கொஞ்சம்கூட லக்ஷியம் செய்யாதவர் போலவும், அந்தச் சப்தமே காதில் விழாதவர் போலவும் உட்கார்ந்திருந்தார்; ஆனல், அவருடைய கையிலிருந்த ஒரு டம்ளர் உடைந்து சுக்கு சுக்காய்ப்போய்விட்டது. அந்தக் கூச்சலினுல் ஸ்வாமிகளுக்குக் கோபம் உண்

டாயிற்று என்பதற்கு இதைத்தவிர வேறு ஒரு அடையாளமு மில்லை.

"அவர் பேசியபொழுது, வார்த்தைகள் உண்மையான தேசாபிமானத்திலிருந்து உண்டாகின்ற சக்தியுடனும் நிச்சயத்துடனும் ஒருகர்ம புருஷனுடைய சக்தியுடனும் வந்தன......

"ஸ்வாமி விவேகாநந்தர் சம்பாஷணையிலே தமது மிகமிகச் சிறந்த ஸவபாவத்தில் இருந்தார். அவருடைய மிகமிக ஆழ்ந்த அநுபவங்களும் நினைப்புக்களும் சம்பாஷணை சமயத்திலே வெளிப்படுத்தப்பட்டன. அவருடைய வித்தை, அவர் கூறும் சமர்த்து, அவர் சற்றும் தயங்காமல் உடனுக்குடனே மறுமொழி யளித்தல், சில ஜாதிகளிடம் அல்லது ஜனசமூகங்களிடம் என்று கட்டுப்பட்டிராத அவருடைய பெரிய அநுதாபங்கள், மனிதர்களையும் மாதிரிகளையும்பற்றி அவர் செய்திருந்த கூர்மையான ஆராய்ச்சி, அவருடைய பலத்த தேசாபிமானம் இவை அவருடைய பேச்சை அழகாகவும்-ஆழ்ந்த கருத்துடையதாகவும்-அருள் உடையதாகவும் செய்தன. சாதாரண சரித்திர விஷயங்களை அவற்றில் பொதிந்து கிடந்த ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும்படி அவர் எடுத்துக் கூறுவது இணையற்றதாம்."

நிவேதிதா சகோதரி பின் வருமாறு எழுதுகிறார்:— "(வேலூரிலுள்ள) எங்களுடைய குடிசைக்கு ஸ்வாமிகள் தினந்தோறும் காலையிலே தனித்தோ அல்லது தமது

சகோதரர்கள் சிலரால் பின் தொடரப்பட்டோ வருவார். இங்கு, விருக்ஷங்களி னடியிலே நாங்கள் அதி சீக்கிரம் செய்துகொள்ளும் காலைச் சாப்பாடு முடிந்து வெகுநேரம் வரையில், அந்த அக்ஷயமான வியாக்கியானப் போக்குக்குச் செவி சாய்த்துக்கொண்டே நாங்கள் உட்கார்ந்திருப்போம்; அபூர்வமாகக் கேள்விகளும் மறுமொழிகளும் உண்டாகும்; அப்பொழுது அவர் இந்திய உலகத்தின் ஆழ்ந்த ரகஸ்யங்களில் சிலவற்றை எங்கட்கு வெளிப்படுத்துவார். எனக்கு இந்த ஞாபகம் உண்டாகிற பொழுதெல்லாம் "இவ்வளவு நினைவும் அநுபவமும் எப்படிச் சேர்த்து வைக்கப்பட்டிருக்க முடியும்?" என்றும், "சேர்த்து வைக்கப்பட்டபொழுதிலும் இப்படி வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சக்தி எப்படி யுண்டாயிருக்கக்கூடும்?" என்றும் நான் புதிதாக ஆச்சர்ய மடைகிறேன். அழகிய சம்பாஷண புருஷர்களுக்குள்ளே ஸ்வாமிகள் ஒரு விஷயத்திலே விசேஷப்பட்டவராயிருந்தார். குறுக்கே எவரேனும் ஏதேனும் சொன்னால், கொஞ்சம்கூடப் பொறுமை யின்மையை அவர் காண்பித்ததாக ஒருபொழுதும் தெரிய வரவில்லை. தாம் பேசிக்கொண்டிருந்த மனங்களை அவர் அலக்ஷியம் செய்ததில்லை. அவருடைய ஆழ்ந்த வாக்கியங்கள் அவரைச் சுற்றியிருந்த கூட்டத்தாருக்குள ஒரு சூக்ஷ்ம அநுதாபத்தையும் மரியாதையையும் கொடுக்கும்படியான அத்தகைய மனிதர்களுக்கு முன்னிலையில்தான் கேட்கப்பட்டன. ஆனால், 'அவர் இதை யறிந்தார்,' என்று நான் நினைக்கவில்லை; பகிர்முகமான சந்தர்ப்பம் எதுவும் அவரைக் கலக்

குறச்செய்யும் சக்தி வாய்ந்ததாகத் தோன்றவில்லை யென்பது நிச்சயம். வேகத்தையும் பலத்தையும் அறிவிக்கும் படியான தன்மைகள் ஏராளமா யிருந்தன; ஆனால், அவை இனிமையினுடையவை போன்று மறைவான ஸ்தானங்களி லிருந்து கிளம்பின; அவை முழுதும் சாதாரணமாகவும் சந்தர்ப்பத்துக் கேற்றவாறு நிர்க்குணமாகவும் இருந்தன."

"ஸ்வாமிகள் பேசப்பேச, அவருடைய நினைப்பும் உயரப் பறந்தது........"

"அவர் தமது இடைவிடாத ஏகாக்கிரதையை ஸ்திரப் படுத்திக் கொண்டதற்கு உபாயம் இடைவிடாத பக்தியே யாம். அவர் எப்பொழுதும் அளித்துக்கொண்டிருந்த அந்த இடைவிடாத உபதேச வொளிகளின் ரகஸ்யம் ஏகாக்கிரதையே யாம். கோப்பையை ஆழ்ந்த கிணற்றிலே போட்டுவிட்டு அதிலிருந்து முத்துப்போன்றதும் குளிர்ச்சி யானதுமான தண்ணீரை யெடுத்துக்கொண்டு வந்தவன் போல அவர் சம்பாஷணைக்குள்ளே நுழைவார்......"

---

9. ஸ்வாமி விவேகாநந்தர்—தேசாபிமானி

ஸ்வாமிகள் தேசாபிமானி யென்பதை எவரும் மறுத்தல் முடியாது. அவர் குழந்தையாயிருந்தபொழுது தமது தேசத்துக்கும் தமது தேச ஜனங்களுக்கும் தாம் உதவி செய்வதற்காகவே பிறந்திருந்ததாக ஸ்வாமிகளுக்கு ஒரு நினைப்புண்டு, அவர் குழந்தையாயிருந்தபொழுதே, ஸ்வாமி

கள் எளியவர்களுடைய அழுக்குக் குடிசைகளுக்குச் சென்று 'அவர்களுக்கும், அறிவீனர்களுக்கும், பஞ்சமர்க ளுக்கும் உதவி புரியவேண்டும்' என்று அவாக் கொண் டிருந்தார்; அவருடைய குடும்பத்தார் அவரை எவ்வளவு பயமுறுத்தியும் அவர் சற்றும் தமது எண்ணத்தை விட வில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகா சமாதி யடைந்த பின்னர், ஸ்வாமிகள் இந்தியா முழுதும் யாத்திரை செய்தார். யாத் திரையிலே அவருடைய காக்ஷி அகன்றது, அறிவு உண் டாயிற்று; தாம் இதற்குமுன் ஸ்வப்பனம்கூடக் கண்ட தில்லையென்று சொல்லும்படி ஒரு பிரமாண்டமான வேலை ஸ்வாமிகள் முன்னே தோன்றிற்று. இப்பொழுது ஸ்வாமிகள் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் கூறியதை யெல்லாம் ஞாபகப் படுத்திக்கொண்டு பார்க்க, குருமூர்த்தியினுடைய வசனங் களுக்குப் புதிய புதிய பொருளெல்லாம் தோன்றின. ஆம், அவருடைய கார்யம் ஞானமானது, ஆத்மீகமான தே. ஆனல், எப்படி அதைப் பிரத்தியக்ஷ உலகில் அநு பவத்தில்கொண்டு வருவது? அவர் முன்னே இந்தியா தனது மகிமை யெல்லாம் இழந்து தலைவிரி கோலமாய்க் கிடந்தது; அதன் முப்பதுகோடி ஜனங்களும் வறுமையி லும் அறிவின்மையிலும் வியாதியிலும் அழுந்தியிருக்கிறார் கள். ஸ்வாமிகள் பார்த்தார். அவருடைய மனம் துடித் தது. பொது ஜனங்களுடைய நிலைமை பரிதாபகரமா யிருக்கிறது; வைதீகக் கொடுமை, ஜாதிமதக் கொடுமை எல்லாக் கொடுமையும் சேர்ந்து இந்தியா தேசத்தை இந்த ஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்டது. "இந்த ஜனங்களை

மறுபடியும் மனிதர்களாக்குவது எப்படி? ஸ்வதந்திரர்களாக்குவது எப்படி? அவர்களுடைய நரம்புகளிலே ஒரு புதிய உயிரையும் ஊக்கத்தையும் புகுத்துவது எப்படி?'' இவை ஸ்வாமிகளின் மனத்தைக் கலக்கின. இந்த எண்ணத்தினால் ஸ்வாமிகள் இளைத்துவிட்டார். இது ஸ்வாமிகளுடைய மன அமைதியைக் கலைத்துவிட்டது. அவர் உறங்கக்கூட முடியவில்லை. இந்திய ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவருதற்குள்ள உபாயங்களையே ஆலோசிக்கலாயினர்.

கடைசியாக, ஸ்வாமிகள் தமது இந்திய யாத்திரையை முடித்துக்கொண்டு, கன்னியாகுமரிக் கடைசிமுனைக் கல்லில் உட்கார்ந்து இந்தியா தேசத்தின் தற்கால நிலைமையை நினைத்துக்கொண்டு வெகுநேரம் வரையில் வருந்தியாலோசித்தார். 'இந்தியாவுக்கு நற்காலம் உண்டாகுமா?' என்று ஏங்கினர். கடைசியாக ஒருமார்க்கம் தென்பட்டது. அவர் மரணவேதனையை ஒத்த வேதனையடைந்து தம்மைத் தாமே யொரு கேள்விகேட்டுக்கொண்டார்:—லக்ஷக்கணக்காயிருக்கின்ற சந்நியாசிகளாகிய நாம் பொது ஜனங்களுக்கு என்ன செய்கிறோம்? அவர்களுக்குத் தத்துவஞான உபதேசம்! அதெல்லாம் பைத்தியம்! பட்டினி கிடப்பவனுக்கு மதோபதேசம் செய்வது பரிகாசமேயாம்! லக்ஷக்கணக்கான ஜனங்கள் பட்டினிகிடந்துகொண்டிருக்கையில் அவர்கள் எப்படிக் கிளம்புவார்கள்? அவர்கள் ஜன சமூகத்துக்கு நன்மையைச் செய்யும்படியான சக்தியாக எப்படி ஆகக்கூடும்?'' ஆகையினால், முதலாவது: செய்யவேண்டி

ய்து யாதெனில், அவர்கள் தங்கள் லௌகிக வாழ்க்கை யில் சுகமா யிருக்கும்படி செய்து, அவர்களுக்கு அதற் கேற்ற கல்வியை யளிப்பது. இரண்டாவது; நாம் தனித்த ஒரு ஜனசமூகம்; உலகிலே நாம் செய்யவேண்டிய கார்யங் களும் உண்டு என்பதையே மறந்துவிட்டோம்; இந்தியா விலே இப்பொழுள்ள கஷ்டங்கட் கெல்லாம் காரணம் அதுவே.

வைதிகக் கொடுமையாளர்களும் பிறரும் ஏழை ஜனங்களுடைய இரத்தத்தை யுறிஞ்சி அவர்களைக் காலின் கீழே போட்டுத் துவைத்து வருகிறார்கள். பொது ஜனங் கள் தாங்கள் மனிதர்கள் என்பதைக்கூட மறந்துவிட்டார் கள்; அதனால்தான் ஆயிரம் வருஷங்களாக நாம் அடிமை களா யிருக்கிறோம். இன்னும் அந்தப் பொது ஜனங்களை உயர்த்தவேண்டுமானால், அதற்கு உள்ளிருந்தே, வைதீக ஆசாரமுள்ள ஹிந்துக்களிட மிருந்தே யுண்டாக வேண் டும். எல்லாத் தேசங்களிலும் இப்படித்தான் இருக் கிறது. ஆகையினால், இந்தியப் பொது ஜனங்களின் தற்கால வீழ்ச்சிக்கு ஹிந்துமதம் காரணமாகாது. இந்தக் குறைகளை நிவிர்த்தி செய்வதற்கு ஸ்வாமிகள் விரும்பியது முதலில் உண்மைத் தேசாபிமானமுள்ள வாலிபர்கள், இரண்டா வது பணம். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணருடைய கிருபையி னாலே தம்முடன் ஒத்து வேலை செய்வதற்கு நூற்றுக் கணக்காக ஜனங்கள் வந்து சேர்வார்க ளென்றும், தாம் ஜயம் பெறுவது நிச்சய மென்றும் ஸ்வாமிகள் திடமாக நம்பியிருந்தார். ஆனால், பணம் எங்கிருந்து வரும்? ஸ்வாமி

கள் பணக்காரர்களிடத்தும் அரசர்களிடத்தும் தேசாபிமானிகள் என்று சொல்லிக்கொள்பவரிடத்தும் போய்த் தமது யோசனைகளை யெல்லாம் சொல்லிப் பார்த்தார்; ஆனல், எல்லோரும் வாக்கு மாத்திரத்தில் அநுதாபம் காட்டினார்களே யொழிய வேறொன்று மில்லை. ஸ்வாமிகளுக்கு இந்தியாவிலே சலிப்புண்டாய்விட்டது; 'இந்தியாவிலே எவருடைய உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது,' என்று ஸ்வாமிகள் தீர்மானித்துக்கொண்டார்; தமது தேசத்தின் ஏழை ஜனங்களின் பொருட்டு, தாழ்ந்த ஜனங்களின் பொருட்டுக் கடல் கடந்து அந்நிய நாடுகட்குச் செல்லுவதாக நிச்சயித்தார். ஸ்வாமிகள் அங்கே தமது மூளையை உபயோகித்துப் பணம் சம்பாதித்து அதற்குப் பதிலாக அங்குள்ள ஜனங்களுக்கு ஆத்மஞானத்தை யளிப்பதென்றும்,' பின்னர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து வேலை செய்வது,' என்றும் தீர்மானித்துக்கொண்டார்.

ஸ்வாமிகள் காச்மீரம்முதலில் கன்யாகுமரி வரையில் யாத்திரை செய்துவிட்டு, தமது தாய்த் திருநாட்டின் கடைசிக்கல்லில் உட்கார்ந்துகொண்டு மேலே சொன்னவாறு யோசனை செய்தார். உடனே ஈச்வராக்ஞையாய்விட்டது போலத் தோன்றிற்று; உலகுக்கே சநாதனதர்மம் உபதேசிக்கப் படல்வேண்டும். அது இந்தியாவிலே யுள்ள ஜனங்களுக்குள் ஒரு கிளர்ச்சியை யுண்டுபண்ணல் வேண்டும். பின்னர் ஜனசமூகத்துக்கு ஆணிவேர் போன்றுள்ள பொது ஜனங்களுக்கு க்ஷேமம் உண்டு பண்ணலாம். ஸ்வாமிக

ளின் முன்னே இப்பொழுது இந்தியா தேசமானது செழித்துக் கொழுத்துத் திகழ்வது போலும், இந்தியர்கள் ஆண்மக்களாக உலகிலே பிரகாசிப்பது போலவும், இந்திய ஜனசமூகம் முன்னணியில் நிற்பது போலவும் ஒரு தோற்றம் உண்டாயிற்று. ஆதலால், ஸ்வாமிகள் தமது சொந்த மோக்ஷத்தைக்கூடத் தியாகம் செய்துவிட்டார். அச் சமயத்திலே ஸ்வாமிகள் கருணாநிதியா யிருந்தார்; இந்தியாவின் பரிதாபகரமான ஸ்திதியைப்பற்றி வருந்தும் போது, தமது தேசத்தினருக்காகத் தமது ஜீவிதத்தையே தியாகம்செய்யத் தயாராயிருந்தார். ஸ்வாமிகளுக்கு ஏழைகளும் கஷ்டப்படுவோருமே பிரத்தியக்ஷ தெய்வங்கள்; ஸ்வாமிகள் இந்தத் தெய்வங்களைப் பூஜிப்பதற்குத் தமது ஜீவரத்தத்தையே தாரை வார்க்கத் தயாரானூர்.

ஸ்வாமிகள் தவராஜ சிங்கம்; அதுபோலவே தேசாபிமான சிங்கம். இந்தியாவில் இதற்குமுன் இம்மாதிரி யொருவர் ஜனித்ததில்லை. தேசாபிமானம் என்பது மகாத்மாவின் லக்ஷணங்களுள் ஒன்றுக்கப்பட்டுவிட்டது; சகோதர ராசிகளுக்கு ஸேவை செய்தலே உண்மையான பூஜையாய் விட்டது. "தேசாபிமானமென்ருல் ஜனங்களுடனே கலந்து விடுவது, ஜனங்களுடனே சேர்ந்து கிளம்புவது, அல்லது அமிழ்ந்துவது" என்ருர் ஸ்வாமிகள்.

தேசாபிமானம் என்ருல் இன்ன தென்பதைப்பற்றி ஸ்வாமிகள் சென்னைமா நகரத்தில் செய்த பிரசங்கங்களில் ஒன்றில் பின் வருமாறு சொல்கிருர்:—

"அவர்கள் தேசாபிமானத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். நான் தேசாபிமானத்திலே நம்புகிறேன்; எனக்கும் எனது சொந்தத் தேசாபிமான லக்ஷியம் உண்டு......முதலில் ஹிருதயத்திலிருந்து உணருங்கள்......ஹிருதயத்தின் மூலமாக அருள் உண்டாகின்றது. அன்பு மிகமிக அசாத்தியமான கதவுகளைத் திறந்துவிடுகிறது; பிரபஞ்சத்தின் ரகஸ்யங்களெல்லாவற்றுக்கும் அன்பே வாசலாம். எனது சீர்திருத்தக்காரர்களாகப் போகிறவர்களே! எனது தேசாபிமானிகளாகப் போகிறவர்களே! ஆகையால், உணருங்கள்! நீங்கள் உணர்கிறீர்களா? தேவர்களுடையவும் மகரிஷிகளுடையவும் சந்ததியாராகிய லக்ஷக்கணக்கான ஜனங்கள் மிருகங்களுக்கு அண்டை வீட்டுக்காரர்களாய் விட்டார்களென்று உணர்கிறீர்களா? லக்ஷக்கணக்கான ஜனங்கள் இன்று பட்டினி கிடக்கிறார்களென்றும், லக்ஷக்கணக்கான ஜனங்கள் எத்தனையோ யுகங்களாகப் பட்டினி கிடந்து வருகிறார்களென்றும் நீங்கள் உணர்கிறீர்களா? அறியாமையானது பூமியை இருண்ட மேகம்போலச் சூழ்ந்து கொண்ட தென்பதை யுணர்கிறீர்களா? அது உங்களை யமைதியற்றவர்களாக்குகிறதா? அது உங்களை நித்திரையற்றவர்களாக்குகிறதா? அது உங்களுடைய ரத்தத்தினுள்ளே சென்று உங்கள் நரம்புகளிலே ஓடுகின்றதா? உங்கள் ஹிருதயத் துடிப்புகளுடனே கலந்து துடிக்கின்றதா? அது உங்களை அநேகமாகப் பித்தர்களாக்கிவிட்டதா? அழிவாம் துன்பம் என்ற ஒரே எண்ணத்தினால் நீங்கள் பீடிக்கப்பட்டிருக்கிறீர்களா? உங்களுடைய பெயரைப்

பற்றி, உங்களுடைய கீர்த்தியைப்பற்றி, உங்களுடைய அருமையானவர்களைப்பற்றி, உங்களுடைய சொத்தைப் பற்றி, உங்களுடைய சொந்தச் சரீரங்களைப்பற்றிக்கூட நீங்கள் மறந்துவிட்டீர்களா? நீங்கள் அப்படிச் செய்து விட்டீர்களா? இதுதான் தேசாபிமானி யாவதற்கு முதற் படி, முதல்முதல் படி. சர்வமத மகாசபைக்காக நான் அமெரிக்காவுக்குச் செல்லவில்லை யென்பது உங்களில் அநேகருக்குத் தெரியும்; ஆனால், உணர்ச்சியாகிற இந்தப் பைசாசம் என்னில் எனது மனத்தினுள் இருந்தது. நான் எனது தேச ஜனங்களுக்கு ஊழியம் செய்வதற்கு வழி காணமல் இந்தியா முழுதும் பன்னிரண்டு வருஷங்கள் யாத்திரை செய்தேன்; அதனால்தான் நான் அமெரிக்காவுக் குச் சென்றேன். அப்பொழுது என்னை அறிந்த உங்களில் அநேகருக்கு அது தெரியும். இந்தச் சர்வமத மகாசபை யைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்? இங்கே எனது சொ ந்தச் சதையும் ரத்தமும் தினந்தோறும் அமிழ்ந்திக்கொண் டே போகிறார்கள்; அவர்களைப்பற்றி எவர் கவலைப்பட்டார் கள்? இதுதான் எனது முதல்படி."

ஸ்வாமிகள் அமெரிக்காவிலிருந்து தமது இந்தியச் சிஷ்யர்களுக்கு எழுதிய கடிதங்க ளெல்லாம் தேசாபிமா னம் பொங்கித் ததும்புகின்றது.

ஒரு கடிதத்திலே பின் வருமாறு ஸ்வாமிகள் எழுது கிறார்:—

"பரிசுத்தமாகிய ஆத்திரத்தினுல் தூண்டப்பட்டு ஈச்வரனிடத்திலே நித்தியநம்பிக்கை யுடையவர்களாய், எளியவர்கள் - வீழ்ந்து கிடப்பவர்கள் - மிதித்துத் துவைக்கப் படுபவர்கள் இவர்களிடத்துத் தங்களுக்குள்ள அநுதாபத்தினுல் ஏற்படும் சிம்ஹத்தினுடைய தைர்யம் வாய்ந்துள்ள ஒருலக்ஷம் புருஷர்களும் ஸ்திரீகளும் மோட்சோபதேசத்தை - உதவி யுபதேசத்தை - சமுதாயத்தை மேம்படுத்தலாகிற உபதேசத்தை—சமத்துவமாகிற உபதேசத்தை—போதித்துக்கொண்டு தேசம் முழுதும் செல்லல்வேண்டும்.

"எங்காதிர்கள்......எனது பையன்காள்! உங்களுடைய கச்சைகளை யிறுக்கிக் கட்டுங்கள். நான் இதற்காக ஈச்வரனுல் அழைக்கப்பட்டிருக்கிறேன். துன்பங்களும் சித்திரவதைகளும் நிறைந்த ஜீவிதம் முழுதினூடேயும் நான் இழுக்கப்பட்டிருக்கிறேன். மிகமிக நெருங்கியவர்களும் அருமையானவர்களும் அநேகமாகப் பட்டினி கிடந்து மரிக்கக் கண்டிருக்கிறேன். எவர்கள் கேலி பண்ணி நிந்திக்கிருர்களோ அதே மனிதர்களிடத்து நான் அநுதாபம் காட்டியதற்காகப் பரிகாசம் செய்யப்பட்டேன், அவநம்பிக்கைக்கு உட்படுத்தப்பட்டேன், துன்புற்றிருக்கிறேன்; நல்லது, எனது பையன்காள்! இது துன்பப் பள்ளிக்கூடம்; மகாத்மாக்களும் தீர்க்கதர்சிகளும் அநுதாபம், பொறுமை, எல்லாவற்றுக்கும் மேலாக நமது கால்களினடியிலே பிரபஞ்சம் துகள்துகளாகப் போனுலும் நடுங்காத, வஜ்ரம் போன்ற இரும்புச் சித்தம்

இவற்றை யுண்டுபண்ணிக்கொள்வதற்குப் பள்ளிக்கூடமும் இதுவே......

"பணக்காரர்களை நம்பாதீர்கள்; அவர்கள் உயிருடன் இருப்பதைவிட அதிகம் மரித்தவர்களாகவே யிருக்கிறார்கள். நம்பிக்கை உங்களிடம்—அடக்கமுள்ளவர்களிடத்தில், தாழ்ந்தவர்களிடத்தில் ஆனால் நம்பிக்கை யுள்ளவர்களிடத்தில் இருக்கிறது. ஈச்வரனிடத்தில் நம்பிக்கை வையுங்கள்; வெறும் கொள்கையல்ல, ஒன்றுமல்ல. துன்பப்படுவோர்கட்காக உணருங்கள்; உதவிக்கு மேலே பாருங்கள்—அது வரத்தான் வேண்டும். நான் எனது ஹிருதயத்திலே இந்தச் சுமையுடனும் எனது மண்டையிலே இந்த எண்ணத்துடனும் பன்னிரண்டு வருஷங்கள் யாத்திரை செய்தேன். தனவந்தர்களெனப்பட்டவர்களுடையவும் பெரியோரெனப்பட்டவர்களினுடையவும் வாசலுக்கு வாசல் நான் சென்றேன்; ஆனால், அவர்கள் எனக்கு செவி சாய்க்கவில்லை. இரத்தம் கசிகின்ற ஹிருதயத்துடனே நான் உதவியை நாடி இந்த அந்நிய பூமிக்கு அரையுலகு கடந்து வந்திருக்கிறேன். ஈச்வரன் பெரியவர். அவர் உதவி புரிவாரென்று எனக்குத் தெரியும். நான் இந்தப் பூமியிலே குளிரினாலாவது அல்லது பசியினாலாவது மரித்துவிடலாம்; ஆனால், வாலிபர்களாகிய உங்களுக்கு இந்த அநுதாபத்தை, எளியவர்களின் பொருட்டு, அறிவீனர்களின் பொருட்டு, துன்புறுத்தப்படுவோர்களின் பொருட்டு இந்தப் பெரு முயற்சியை அளிக்கிறேன். இப்பொழுது, இந்த

நிமிஷமே பார்த்தசாரதி க்ஷேத்திரத்துக்குச் செல்லுங்கள்; கோகுலத்து எளிய, தாழ்ந்த இடையர்களுக்கு நண்பரா யிருந்தவரும், தமது பௌத்தாவதாரத்திலே பிரபுக்களினுடைய வேண்டுகோளினும் வியபசாரியினுடைய வேண்டுகோளைப் பெரிதெனப் பாராட்டி அதற்கிணங்கி அவளை ரக்ஷித்தவருமான அவர் முன்னே, அவர் முன்னே நமஸ்கரியுங்கள்; ஒரு பெரிய தியாகத்தை, எவர்களுக்காக அவர் அடிக்கடி வருகின்றாரோ, அவர் எல்லாவற்றுக்கும் மேலே எவர்களை நேசிக்கிறாரோ அவர்களின் பொருட்டு, எளியவர்களின் பொருட்டு, தாழ்ந்தவர்களின் பொருட்டு, துன்புறுத்தப் படுவோர்களின் பொருட்டு, ஜீவிதம் முழுதினுடையவும் தியாகத்தைச் செய்யுங்கள். தினந்தோறும் கீழே கீழே சென்றுகொண்டிருக்கின்ற இந்த முப்பதுகோடி ஜனங்களையும் மேம்பாடடையச் செய்தற்பொருட்டு உங்கள் வாழ்நாட்கள் முழுதையும் செலவழிப்பதாகப் பிரதிக்ஞை செய்துகொள்ளுங்கள்.

"அது ஒரு நாள் வேலையல்ல; மார்க்கமானது பயங்கரமான முட்கள் நிறைந்துள்ளது. ஆனால், பார்த்தசாரதி நம்முடைய சாரதியா யிருக்கத் தயாராயிருக்கிறார்; நமக்கு அது தெரியும்; அவருடைய பெயராலும் அவரிடத்துள்ள நித்திய நம்பிக்கையாலும் எத்தனையோ யுகங்களாக இந்தியாவின்மீது குவிக்கப்பட்டுள்ள மலைக்குவியல் துன்பத்துக்கு நெருப்பு வைத்துவிடுங்கள்—அது எரிக்கப்பட்டு விடும். அப்படியானால், சகோதரர்களே! நேரே முகத்தில்,

பாருங்கள்! அது ஒரு பெரிய வேலை; நாம் அவ்வளவு தாழ்ந்தவர்களா யிருக்கிறோம். ஆனால், நாம் ஜோதியின் புத்திரர்கள், ஈச்வரனுடைய குழந்தைகள். ஈச்வரனுக்கு மகிமை யுண்டாவதாக! நாம் ஜய மடைவோம்.....நான் இங்கே ஜயமடையாமல் மரிக்கலாம், இன்னொருவர் அந்த வேலையை எடுத்துக்கொள்வார்...நம்பிக்கை—அநுதாபம், திடமான நம்பிக்கையும் திடமான அநுதாபமும்! ஜீவிதம் பெரிதல்ல, மரணம் பெரிதல்ல—பசி பெரிதல்ல, குளிர் பெரிதல்ல, ஈச்வரனுக்கு மகிமை யுண்டாவதாக—மேலே செல்லுங்கள்! ஈச்வரனே நமது சைந்யாதிபதி......''

ஸ்வாமிகள் இந்தக் கடிதம் எழுதியபொழுது அமெரிக்காவுக்குச் சென்றிருந்தாரே யொழிய, சர்வமத மகா சபை யின்னும் நடக்கவில்லை; ஸ்வாமிகள் இன்னும் பெயரும் புகழும் பெறவில்லை; ஸ்வாமிகள் அங்கே உதவியற்றுத் திண்டாடிக்கொண்டிருக்கிறார். இச் சந்தர்ப்பத்திலே இத்தகைய கடிதம் எழுதவேண்டு மென்றால், ஸ்வாமிகளுடைய திட நம்பிக்கையைப்பற்றி என்ன கூறுவது? இத்தகைய திடச் சித்தமும் தைர்யமும் மனுஷ்யவர்க்கத்தை மேம்படுத்துவதற்கு அவதரிக்கின்ற மகா புருஷர்களிடத்தில்தான் காணப்படும்.

ஸ்வாமிகள் இன்னொரு கடிதத்திலே பின் வருமாறு எழுதுகிறார்:—

''நமது சக்தியின் சாரம் முழுதுமாவது,—மதத்துக்கு ஹிம்சை செய்யாமல் பொது ஜனங்களை உயர்த்துவ

தே யென்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். ஜன சமூகமானது குடிசையில் வசிக்கிறதென்று ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். ஆனல். அந்தோ! எவரும் அவர்களுக்கு எப்பொழுதும் எதுவும் செய்ததில்லை. நமது தற்காலத்திய சீர்திருத்தக்காரர்கள் விதவா விவாகத்தைப் பற்றி மிகவும் சுறுசுறுப்பா யிருக்கிறார்கள். நான் ஒவ்வொரு சீர்திருத்தத்திலும் அநுதாபமுள்ளவ னென்பது உண்மையே; ஆனல், ஒரு ஜன சமூகத்தினுடைய கதி அதன் விதவைகள் அடைகின்ற புருஷர்களின் தொகையைச் சார்ந்திருக்கவில்லை; ஆனல், பொதுஜனங்களின் நிலைமையைச் சார்ந்திருக்கிறது. உங்களால் அவர்களை உயர்த்த முடியுமா? அவர்கள் தங்களுக்குள்ளுற உள்ள ஆத்மீக ஸ்வபாவத்தை யிழக்கச் செய்யாமல் அவர்களுக்கு அவர்கள் இழந்துபோன தனித்தன்மையைத் திரும்பவும் உங்களால் அளிக்க முடியுமா? சமத்துவமும் ஸ்வதந்திரமும் வேலையும் சக்தியும் ஆகிய உங்கள் உணர்ச்சியிலே நீங்கள் மேனட்டார்களைப்போ லாகியும் அதே சமயத்தில் மதப் பயிற்சிகளிலும் உள்ளுணர்ச்சிகளிலும் பழுத்த ஹிந்துவா யிருக்க முடியுமா? இது செய்யப்படவேண்டியிருக்கிறது; நாம் அதைச் செய்வோம். நீங்கள் எல்லோரும் அது செய்வதற்குப் பிறந்திருக்கிறீர்கள். உங்களிடத்திலேயே நீங்கள் நம்பிக்கை வைத்துக்கொள்ளுங்கள்; பெருத்த நிச்சயங்களே பெருத்த கார்யங்களுக்குத் தாய்மார்களாம். எப்பொழுதும் மேலேயே நோக்கிச் செல்லுங்கள்! எளியவர்களிடத்து, கீழே போட்டு மிதிக்கப்படுகிறவர்களிடத்து

மரணபர்யந்தம் கூட அநுதாபம்—இதுதான் நமது கொள்கை. தீர வாலிபர்களே! மேலே செல்லுங்கள்!''

"மத்தியக் கல்லூரி யொன்றினாலும், இந்தக் கல்லூரியில் பயிற்றுவிக்கப்படுகின்ற பாதிரிகளின் மூலமாக எளியவர்களுடைய வாசலுக்கு மதத்தையும் கல்வியையும் கொண்டு செல்வதாலும் பொது ஜனங்களை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தைப் போதியுங்கள்.''

ஸ்வாமிகள் இன்னொரு கடிதம் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"நீங்கள் உங்கள் சகோதர மனிதர்களை நேசிக்கிறீர்களா? நீ கடவுளை நாடி வேறெங்கே செல்லவேண்டும்? எளியவர்கள், துன்புறுபவர்கள், பலஹீனர்கள் (இவர்கள்) எல்லோரும் கடவுளர்க ளல்லரா? அவர்களை முதலில் ஏன் பூஜை செய்யக் கூடாது? கங்கா தீரத்தில் ஏன் கிணறு தோண்டப போகிறீர்கள்? உங்களிடம் அன்பு இருக்கின்றதா? நீங்கள் சர்வசக்தி யுள்ளவர்கள். நீங்கள் பரிபூர்ணமாய் ஸ்வயநல மற்று இருக்கிறீர்களா? நீங்கள் எதிர்க்க முடியாதவர்கள்......உங்களுடைய தேசத்துக்கு வீரர்கள் வேண்டியிருக்கிறது. வீரர்களா யிருங்கள் ...... எனது புத்திரா! நான் ஈச்வரனிடத்தில் நம்புகிறேன், நான் மனிதனிடத்திலும் நம்புகிறேன். துன்புறுபவர்களுக்கு உதவி செய்வதில் நம்புகிறேன். பிறருக்கு ஸேவை செய்யும்பொருட்டு நரகத்துக்குச் செல்லுவதில் எனக்கை நம்பிக்கை யுண்டு."

இன்னும் ஒரு கடிதத்திலிருந்து மாத்திரம் இங்கு எடுத்துக் கூறுவோம்:—

“இந்தியாவிலே வறுமையினாலும் வைதீகக் கொடுமையினாலும் கடுமையினாலும் பலமாகப் பீடிக்கப்பட்டுக் கீழே போட்டு மிதிக்கப்பட்டிருக்கிற லக்ஷக்கணக்கான ஜனங்களுக்காக இரவும் பகலும் நாம் ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்வோம். உயர்ந்தவர்களுக்கும் தனவந்தர்களுக்கும் மதத்தைப் போதிப்பதற்கு எனக்குப் பிரியம் இல்லை. நான் ஜடாதீத சாஸ்திரியல்லன், தத்துவஞானியல்லன், மகாத்மாவு மல்லன். ஆனால், நான் ஏழை; நான் எளியவர்களை நேசிக்கிறேன். அவர்கள் ஒளியினிடத்து, கல்வியினிடத்து வர முடியாது. அவர்களுக்கு ஒளி கொண்டுவருபவர் எவர்? அவர்களுக்குக் கல்வியை யெடுத்துக்கொண்டு வீட்டுக்கு வீடு யாத்திரை செய்பவர் எவர்? இவர்கள் உங்களுடைய ஈச்வரனா யிருக்கட்டும்.—அவர்களைப்பற்றி நினையுங்கள், அவர்களுக்காக வேலை செய்யுங்கள், இடைவிடாமல் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்.—ஈச்வரன் உங்களுக்கு வழி காண்பிப்பார். எவருடைய ஹிருதயம் எளியவர்களின் பொருட்டு இரத்தம் சிந்துகிறதோ அவரை நான் மகாத்மாவென்று அழைக்கிறேன்; இல்லையேல் அவன் துராத்மாவே. அவர்களின் நன்மையின் பொருட்டு நாம் நமது சித்தங்களை இடைவிடாப் பிரார்த்தனையில் ஒன்றுபடுத்துவோம். நாம் எதையும் செய்து முடிக்காமல், எவரும் அறியாமல், எவரும் இரங்காமல், எவரும் அழாமல் மரிக்கலாம்; ஆனால்,

ஒரு நினைப்புக்கூட வீண் போகாது, சீக்கிரத்திலாவது அல்லது தாமதித்தாவது அது பயன் பெறும். எனது உணர்ச்சியை நான் வெளியிட முடியாதபடி எனது ஹிருதயம் அவ்வளவு நிரம்பியிருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும்; நீங்கள் அதைச் சிந்தித்துப் பார்த்துக் கொள்ளக்கூடும். லக்ஷக் கணக்கானவர்கள் பசியிலும் அறியாமையிலும் வசிக்கிற வரையில், அவர்களுடைய செலவிலே கல்வி பெற்று அவர்களைச் சிறிதும் கவனியாம லிருக்கிற ஒவ்வொருவனையும் நான் துரோகி யென்று கருதுகிறேன். ஏழைகளை நசுக்கி யரைத்து அவர்களுடைய பணத்தை யெல்லாம் பெற்றுக்கொண்டு நேர்த்தியான உடைக ளணிந்து உலாவுகின்ற அந்த மனிதர்களை அவர்கள் பசித்துக் கிடக்கும் காட்டு மிராண்டிகளைவிட இப்பொழுது சிறிதும் மேம்பட்டிராத இருபது கோடி ஜனங்களுக்கு ஒன்றும் செய்யாதிருக்கும் வரையில் இழிந்தவர்களென்று நான் அழைக்கிறேன். எனது சகோதரர்களே! நாம் எளியவர்கள்; நாம் அநாமதேயப் பேர்வழிகள்; ஆனால், அத்தகையோரே எப்பொழுதும் எம்பெருமானுடைய கருவிகளா யிருந்திருக்கிறார்கள்.''

ஸ்வாமிகளுடைய தேசாபிமானம் மேனாட்டுத் தேசாபிமானம் போன்றதன்று; உலகு முழுதினுடையவும் நன்மைக்காக ஸ்வாமிகள் இந்தியா தேசத்தினிடத்து அன்பு பாராட்டினார். ஸ்வாமிகள் தேசத்தையே ஈச்வரனாகக் கருதிப் பூஜிக்கும்படி உபதேசித்துவந்திருக்கிறார்.

இந்தியாவிலே அவர் கங்கணம் கட்டிக்கொண்டதெல்லாம் தேச நிலைமையைச் சீர்படுத்தவேண்டு மென்பதே. ஸ்திரீகளை மேம்படுத்தவேண்டும்; பொது ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்; இதுவே ஸ்வாமிகளுடைய இராப்பகல் சிந்தனை.

எப்பொழுதும் அவருடைய ஹிருதயமானது வறுமை, அறிவின்மை, வியாதி முதலியவற்றால் பீடிக்கப்பட்டிருக்கின்ற பொது ஜனங்களிடமே சென்றுகொண் டிருந்தது. அவர்களின் பொருட்டு, அவர்கள் நன்மையடையும் பொருட்டு, ஸ்வாமிகள் அல்லும் பகலும் உழைத்தார். இந்தியாவில் பிறந்தவனுக்குப் பாரதமாதாவினும் தெய்வம் வேறொன்று உண்டோ? ஸ்வாமிகளைப் போலத் தேசாபிமானிகள் கிடைப்பதரிது. வேலூர் மடத்தைத் தமது ரத்தத்தைச் சிந்திக் கட்டியிருப்பதாக ஸ்வாமிகளே ஓரிடத்தில் கூறியிருக்கிறார்.

ஸ்வாமிகளுக்கு இந்தியாவிலுள்ள ஒவ்வொன்றும் பரிசுத்தமானதே. ஸ்வாமிகள் தேசாபிமான மிகுதியினாலும் தமது ஜனங்களுடைய நடையுடை பாவனைகளைப் பற்றியும் பேசும்பொழுது கண்களிலே நீர் ததும்பிவிடும். ஸ்வாமிகள் இரண்டாம் முறை கடல் யாத்திரை செய்தபொழுது அந்த கப்பலில் சில பாதிரிகள் வறுமையினால் பீடிக்கப்பட்ட தமிழ் ஸ்திரீகளிடமிருந்து சில விவாகக் குறி நகைகளை விலைக்கு வாங்கி எல்லோருக்கும் காட்டிக்கொண்டிருந்தார்கள்; ஸ்வாமிகளுடைய மேனாட்டுச் சிஷ்

யர் ஒருவர் இதை ஸ்வாமிகளிடம் போய்ச் சொல்லி, "மேனாட்டிலும் கீழ் நாட்டிலும் விவாகக் குறி நகையைப் பற்றிய மூட நம்பிக்கை பலமா யிருக்கிறது" என்றார். "நீ அதை மூட நம்பிக்கை யென்று கூறுகிறாய்? அதன் பின்னே மறைந்து கிடக்கும் பதிவிரதா தர்மக் கொள்கையை உன்னால் பார்க்க முடியவில்லை." என்று விசனமும் ஆச்சர்யமும் உடையவராய்ப் பதில் கூறினார்.

இதே மாதிரியாக ஸ்வாமிகள் விக்கிரகாராதனை, வீரர் உபாசனை முதலியவற்றைத் தாங்கிப் பேசுவார்; எப்பொழுதும் தோற்ற கக்ஷியிலே சேர்ந்து ஜயித்துக் கொடுப்பார்.

சகோதரி நிவேதிதா பின் வருமாறு எழுதுகிறார்:—

"அவர் தமது சொந்த ஜனங்களின் வழக்கங்களுக்கு ஒரு கவியினுடைய கண்ணையும் ஒரு தீர்க்கதரிசியினுடைய கற்பனையையும் அளித்தார்.....விதவையின் தெளிவான வெள்ளை வஸ்திரம் அவருக்குப் பரிசுத்தத்தையும் துக்கத்தையும் காண்பிக்கும் அறிகுறியா யிருந்தது. சந்யாசியினுடைய காஷாயக் கந்தைகள், படுக்கைக்குத் தரைமீது விரிக்கும் பாய், தாலத்துக்குப் பதிலாகப் பச்சையிலை, விரல்களினால் எடுத்து உண்ணுதல், சமுதாய உடை உபயோகித்தல் இவ் வெல்லா விஷயங்களையும் அவர் மகா பரிசுத்தமானவையாகக் கருதியது போலத் தோன்றிற்று. அவற்றுள் ஒவ்வொன்றும் ஆத்மீக சக்தியினுடைய அல்லது மனுஷ்ய தயையினுடைய ஏதோ ரகஸ்யத்தை அவருக்கு மெல்ல உரைத்தது."

ஸ்வாமிகள் "தற்கால இந்தியா" என்று ஒரு வியாசம் எழுதியிருக்கிறார்; அதிலே கடைசிப் பாகம் கவனிக்கத் தக்கது. அதாவது:— "ஓ, இந்தியாவே! உனது ஸ்திரீத் தன்மையின் லக்ஷியம் சீதை, சாவித்ரி, தமயந்தி யென்பதை மறந்துவிடாதே.

நீ பூஜிக்கின்ற கடவுள் யோகிகளுக்குள் மகா யோகி, சர்வசங்க பரித்தியாகம் செய்யும் சங்கரர், உமாபதி யென்பதை மறவாதே.

உனது விவாகம், உனது ஐச்வர்யம், உனது ஜீவிதம் (இவை) இந்திரிய போகத்துக் கல்லவென்பதை,—உனது சொந்தச் சுகத்தின் பொருட்டு அல்லவென்பதை மறவாதே.

மாதாவின் பலிபீடத்திலே பலியாவதற்கு நீ பிறந்திருக்கிறாய் என்பதை மறவாதே.

உனது ஜனசமூக அமைப்பு அகண்ட ஜகன் மாதுர்த் தன்மையின் பிரதிபலனமே யென்பதை மறவாதே.

தாழ்ந்த வகுப்புக்கள், அறிவீனர்கள், எளியவர்கள், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள், சக்கிலியன், தெருப் பெருக்குகிறவன், உன்னுடைய சதையும் மாம்சமுமென்பதை, உனது சகோதரர்களென்பதை மறவாதே.

ஏ, தீரா! தைர்யமாயிரு, மனம் தளராதே, நீ ஒரு இந்தியனென்று கர்வ மடைந்திரு.—'நான் ஒரு இந்தி

யன்—ஒவ்வொரு இந்தியனும் எனது சகோதரன்' என்று உரக்கக் கூறு.

'மூட இந்தியன், எளியவனும் அநாதையுமான இந்தியன், பிராஹ்மண இந்தியன், பறைய இந்தியன் என்னுடைய சகோதரன்' என்று சொல்லு. நினது இடுப்பைச் சுற்றி ஒரு கந்தையை அணிந்துகொண்டிருக்கும் நீயும்—'இந்தியன் எனது சகோதரன்—இந்தியன் எனது ஜீவன், இந்தியாவின் தேவர்களும் தேவிகளுமே எனது கடவுள், இந்தியாவின் ஜனசமூகமே எனது குழந்தைப் பருவத்தின் தொட்டில்-எனது வாலிப பர்வத்தின் உத்தியான வனம்-பரிசுத்த லோகம் - எனது விருத்தாப்பிய பர்வத்தின் வாரணாசி' என்று உனது குரலின் உச்சியில் கூறுவாய்.

சகோதர! 'இந்தியாவின் பூமியே எனது மிகமிகச் சிரேஷ்டமான மோக்ஷலோகம், இந்தியாவின் நன்மையே எனது நன்மை' என்று கூறு.

ஏ, கௌரீநாதா! ஏ, ஜகன்மாதா! எனக்கு ஆண்மையை யளிப்பாய்! ஏ, சக்திக்கு மாதா! எனது பலவீனத்தை யெடுத்துவிடு! எனது ஆண்மையற்ற தன்மையை எடுத்துவிடு—என்னை ஆண்மகனாக்குவாய்!' என்று இரவும் பகலும் திரும்பத் திரும்பப் பிரார்த்தனை செய்."

ஸ்வாமிகள் தேசாபிமானி யென்பது மாத்திரமன்று, மிகுந்த வைராக்கிய முள்ள மகாஞானி யென்பதும் அனைவரும் அறிவர். தேசாபிமானி யென்று ஒரு தேசத்தினிடத்திலே அன்பு செலுத்துபவர்க்கும், திரிலோகங்களை

யும் தனது தேசமாகப் பாவித்து சமஸ்த ஜீவராசிகளினிடத்தும் அன்பு செலுத்துபவர்க்கும் ஏராளமான வித்தியாச மில்லாமற் போகாது. ஆனால், ஸ்வாமிகள் இவ்விரண்டு லக்ஷணங்களையும் உடையவரா யிருந்தார். இந்த விஷயத்தைப்பற்றி நிவேதிதா சகோதரி பின் வருமாறு எழுதி யிருக்கிறார்:—

"மேனாட்டிலே ஸ்வாமிகள் எங்களுக்குத் தம்மை யொரு மதாசார்யராக மாத்திரம்தான் வெளிப்படுத்திக் கொண்டார்......ஓரிரண்டு சட்டென்ற சமயங்களில் ஒருவர் பெருத்த தேசாபிமானியைப் பார்த்தார்......ஹிந்து மதத்தின் பிரசார கர்த்தாவாக, இந்தியாவுக்கு ஊழியனுக வல்ல, நாங்கள் சுவாமிகளை மேனாட்டில் பார்த்தது......

"இந்தியாவிலே நான் வந்து இறங்கிய நிமிஷம்முதல், ஆயினும், இதெல்லாவற்றுக்கும் மேலே சற்றும் எதிர் பாராத ஒன்றை நான் கண்டேன். ஒரு வலையில் அகப்பட்டுப் பயனற்றுத் தவிப்பதுடன், விடுவித்துக்கொள்வதற்குப் பெருமுயற்சி செய்யும் ஒரு சிங்கத்தைப் போல, குருமூர்த்தி யிருந்தார்....ஆனால், முயற்சி எங்கே யிருந்தது? இடைவிடாமல் எதிர்க்கப்பட்டுத் தவறுதலுக்குக் காரணமான உணர்ச்சி எங்கிருந்து வந்தது? ஒரு பெருங்காரியம் இருக்கிறதென்று மேன்மேலும் அதிகரித்துக்கொண்டு போகின்ற தெளிந்த புத்தியுடனே போராடுவதற்குச் சரீரத்தில் பலமில்லையே என்று மேன்மேலும் உண்டாகின்ற அறிவினாலேயா? அவருடைய செல்வாக்கு உச்சஸ்தானம்

அடைந்திருந்த அந்த நிமிஷத்தில் அவர் சரீர சுகம் கெட்டதினாலே ஹிமோத்கிரிக்கு அனுப்பப்பட்டபொழுது ஒரு ஆங்கில நண்பருக்கு ஒரு கடிதம் எழுதினார்; அது ஒரு ஏக்கக் கூச்சலாயிருந்தது.

"இப் பெரும் கஷ்டத்துக்கு உண்மையில் காரணமென்ன? அவர் பிரக்ஞாதீதமென்று கூறியதைச் சாதாரண வாழ்க்கையிலே கொண்டுவருதற்குச் செய்த பயங்கரமான முயற்சியா? இந்த விஷயத்திலே மகாகஷ்டமான ஒருவேலையைச் செய்வதற்கு அவர் பிறந்திருந்தார் என்பதில் சந்தேக மில்லை. பழைய லக்ஷியங்களுடனே தோற்றத்தில் விரோதமாயுள்ளன போன்ற மார்க்கங்களாலே ஏதோ சில புதிய அனுபவத்தை அனுஷ்டானத்தில் கொண்டுவருதற் பொருட்டு, இதுவரை யொப்புக்கொள்ளப்பட்டிருந்த லக்ஷியங்களினிடத்து இட்டுச் செல்லும் பத்திரமான மார்க்கங்களை தள்ளிவிடுதல் போன்று அவ்வளவு பயங்கரமானது இவ்வுலகில் ஒன்றுமே யில்லை......நிச்சயமாக, வரும் வருஷங்களிலே, விசேஷமாக, அவருடைய சொந்த ஜனங்களுக்கு அவருடைய உயர்ந்த கொடையாயிருந்த கடைசி ஐந்தரை வருஷங்களில், அவர் பற்றற்ற கர்மத்தை அல்லது ஸ்வயநலமற்ற நோக்கத்துடன் செய்யும் கர்மத்தை, மத வாழ்க்கையின் மிகமிகச் சிரேஷ்டமான வெளிப்பாடுகளுள் ஒன்றாகக்கொண்டு நின்றார். புதியமாதிரி ஜனசமூக தர்மங்களை யுண்டு பண்ணுவதற்காகத் தீர்மானித்துக்கொண்டு ஒரு கூட்டம் சந்நியாசிகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்

டது இந்தியாதேச சரித்திரத்தில் இதுதான் முதற்றடவை. ஐரோப்பாவிலே, அத்தகைய கர்மம் எல்லோராலும் பக்தர்களின் லக்ஷணமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ, சந்யாச வகுப்பு முதலாவதாகச் செய்யவேண்டியது, அது மகாத்மாக்களை யுண்டு பண்ணுவதே......

"......இவ்விதமாக அவர் உபகாரமாகிற கர்மத்தைப் பரிசுத்தப்படுத்தினர்; மனுஷ்ய நாமத்தையும்கூடப் பரிசுத்தப்படுத்தினர். வியாதியஸ்தர்களைப் பராமரித்தலும் ஏழைகளுக்கு ஆகாரமளித்தலும் உண்மையில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய குழந்தைகளின் இயற்கைக் கருமங்களாயிருந்துவந்தன. ஆனால், ஸ்வாமிகள் மேனாட்டிலிருந்து திரும்பி வந்தபொழுது, இவ் விஷயங்கள் இன்னும் உயர்ந்த தன்மையை அடைந்தன. அவை ஜனசமூக நோக்கத்திலிருந்து யோசிக்கப்பட்டன. பஞ்சத்தினால் பீடிக்கப்பட்ட இடங்களில் நிவிருத்தி யளிக்க, அல்லது ஒரு பட்டணத்தின் சுகாதாரத்தைக் கவனிக்க, அல்லது ஒருயாத்திராஸ்தலத்தில் வியாதியஸ்தர்களையும் மரிக்கிறவர்களையும் பராமரிக்க, மனிதர்கள் மடத்திலிருந்து அனுப்பப்படுவார்கள்......'இவர்கள் மதசைந்யத்தின் முன்னணியிலுள்ளவர்களாவார்கள்' என்று ஸ்வாமிகள் கூறினர். ஆயினும், அவருடைய ஆலோசனைகள் இன்னும் அதிகதூரம் சென்றன. 'இந்திய ஸ்திரீகள் கல்வி பெறவேண்டும்' என்றும், 'தேசத்திலே சாஸ்திரீயக் கல்வியும் தொழிற் கல்வியும் பரவவேண்டும்' என்றும் ஸ்வாமிகள் அவா மிகக் கொண்

டிருந்தார். ஸ்வயநலமற்ற நோக்கம் சகிக்கும் சக்தியை எப்படிப் பெருக்குகிறது என்பதைப் பார்த்தவர்களே தீர்மானிக்கக்கூடும்......

"அவருடைய அபிப்பிராயம் ஊடுருவிப் பாய்வதாயும், எல்லாவற்றையும் கிரகிப்பதாயும் இருந்தது. ஏற்படவேண்டிய லக்ஷணங்களை அவர் பகுத்துப் பார்த்திருந்தார். இந்தியா தேசமானது கீழப்படிதலாம் ஒரு புதிய லக்ஷியத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால், மடமானது மத ஸ்வதந்திரத்தின் தற்கால லக்ஷியங்களெல்லாவற்றுக்கும் நேர் விரோதமாக வுள்ள அமைப்பாம் அஸ்திவாரத்தில் வைக்கப்பட்டது......இதுவரையில் சரீர வதையில் செலவழிக்கப்பட்டு வந்த சக்தியானது தற்கால நிலைமையில் சரீராப்பியாசத்திலே சரியாகச் செலுத்தப் படலாமென்பது அவருடைய அபிப்பிராயம்.

"........நெடுநாட்களுக்கு முன்னே, ராமகிருஷ்ண மடத்தின் கொள்கை கிழக்கினுடையவும் மேற்கினுடையவும் கொள்கைகளை யநுஷ்டானத்தில் கொண்டு வருதலும் மாற்றிக்கொள்ளுதலுமேயாமென்று அவர் விளக்கியிருந்தார். தமது போதனு சக்தியினால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தமது வித்யாசக்தியினாலும் அத்தகைய முயற்சியில் தலையிட்டுக் கொள்வதற்குத் தமக்கு சக்தியுண்டு என்பதை அவர் இங்கு நிச்சயமாக நிரூபித்தார். ஆனால், அவரே கலக்கத் துன்பத்தினூடே அடிக்கடி செல்லவேண்டி வந்தது நீக்க முடியாததாய்விட்டது........ அவருடனே அதிகமாக இருந்த ஒருவருக்கு அடிக்கடி,

தெரியாமல் வாயிலிருந்து தவறிவிட்ட ஒரு வார்த்தையும் உள்ளேயுள்ள போராட்டத்தை வெளிப்படுத்திவிடும்...... முந்திய வருஷங்களில் தமது அறிவைப் பரப்பிக்கொண்டும் தாம் போன இடமெல்லாம் பெயரை மாற்றிக்கொண்டும் சஞ்சரித்து வந்த சாது அதிக வேலையும் அநேக கவலைகளு மாகிற சுமையுடன் கூடிய வேலூர் மடாபதியைப் பார்க்கி லும் உயர்ந்தவரென்று அவர் அபிப்பிராயப்பட அதைக் கண்டித்துப் பேசிய ஒருவரிடத்திலே அவர் சாதாரண மாகச் சொன்னதாவது:— "நான் வலையில் பட்டிருக் கிறேன், நான் வலையில் பட்டுவிட்டேன்." தனது புருஷன் இந்த விநோதமான விருந்தாளியை நோக்கி அவர் மதத் தைப் பேசிக் கேட்பதற்குச் சந்தோஷமாகக் கொடுக்கப் படும் பணத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய வீட்டி லிருந்து சிக்காகோ நகருக்குச் செல்லவேண்டும் என்று விவரித்துக் கூறிய சமயத்திலே தனக்கு;அவருடைய முகம் இருந்தவாற்றை ஞாபகப்படுத்திக்கொள்ளச் சகிக்கவில்லை யென்று சொன்ன ஒரு அமெரிக்க ஸ்திரீயினுல் கூறப் பட்ட கதை எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. 'இனி மேல் ஒருபொழுதும் சரிப்படுத்த முடியாதபடி அவருள் ஏதோ ஒன்று உடைந்துவிட்டதுபோலத் தோன்றிற்று' என்று அவள் கூறினுள்............

... ...

"ஆயினும், எப்படிப் பொருத்திக்கொள்வது என்று ஒருபொழுதும் அவரே தெரிந்து கொள்ளாத விதமாய்,

குருமூர்த்தியினுடைய ஸ்வபாவத்திலே ஆழ்ந்த ஒரு விஷயம் இருந்தது. இது அவருக்குத் தேசத்தின் மீதுள்ள அன்பும் அதன் துன்பத்தைத் தாங்காது அவர் கொண்ட மனஸ்தாபமுமாம். நான் அவரை அநேகமாகத் தினந் தோறும் பார்த்த அந்த வருஷங்களி லெல்லாம் இந்தியா வைப்பற்றிய நினைப்பு அவருக்கு அவர் சுவாசித்த காற் றுப் போன்று இருந்தது. அவர் அஸ்திவாரங்களில் வேலை செய்பவர் என்பது உண்மைதான். அவர் 'ஜனசமூகத்துவம்' என்னும் பதத்தை உபயோகிக்கவுமில்லை, 'ஜனசமூக முண்டு பண்ணுதல்' என்னும் ஒரு யுகத்தைப் பகிரங்கப் படுத்தவு மில்லை. 'மனிதனுக்குவதே' தமது வேலையென்று அவர் சொன்னார். ஆனால், அவர் ஒரு அன்பனுகப் பிறந் தார்; அவர் அன்பு செலுத்திய ராணி அவருடைய தாய் நாடே. தன்மீது விழுகின்ற ஒவ்வொரு சப்தத்தினுலும் ஓசை கொடுக்கும்படி அவ்வளவு சாமர்த்தியமாக வைக் கப்பட்ட மணிபோல, அதைப்பற்றிய எல்லாவற்றினிடத் தும் அவருடைய ஹிருதயம் இருந்தது. அவரிடத்தில் ஏனென்று எதிரொலி காணுத அழுகைக்குரல் அதன் கரை களுக்குள்ளே கேட்கப் படவில்லை. அவர் அறியாத அல் லது தெரிந்துகொள்ளாத பயக்கூச்ச லில்லை, பலவீன பய மில்லை, வேதனையினின்றும் ஒதுங்குதல் இல்லை. அவர் அதன் பாபங்களைப்பற்றி மிகக் கடுமையா யிருந்தார்; அதற்கு லௌகிக ஞானம் இல்லாக் குறையைப்பற்றி நிர்த்தாக்ஷண்யமாயிருந்தார்; ஆனுல், இது எதனுலென் ருல், இக் குற்றங்கள் தமது சொந்தமே யென்று அவர் உணர்ந்ததினுலேதான். ஆனுல், அதன் பெருமையின்

தரிசனத்தை அவரைப்போல எவரும் அடைந்ததில்லை. அவருக்கு அது ஆங்கில நாகரிகத்தை யளிப்பது போலத் தோன்றிற்று. ஏனெனில், ஆக்பர் காலத்து இந்தியாவுடனே ஒப்பிட்டுப் பார்த்தால், எலிஸபெத் காலத்து இங்கிலாந்து எப்படியிருந்தது என்று அவர் கேட்பார். அதன் நாகரிக மெல்லாம் எங்கே யிருந்திருக்கும்? அதன் அநுபவம் எங்கே யிருந்திருக்கும்? அவருடைய தேசத்தின் மதம், சரித்திரம், பூமி சாஸ்திரம், ஜாதிசாஸ்திரம் இவை அவருடைய வாயிலிருந்து இடைவிடாத தாரைபோலச் சொரிந்தன............

"அவருடைய இந்தப் பேச்சுக்களிலே, ரஜபுத்திருடைய வீரத்தன்மை, சீக்கியருடைய திடவிச்வாசம், மகாராஷ்டிரருடைய தைர்யம், மகாத்மாக்களுடைய பக்தி, உத்தம ஸ்திரீகளின் பதிவிரதா தர்மமும் உறுதியும், எல்லாம் மறுபடியும் உயிர் வாழ்ந்தன. மகம்மதியரையும் அலக்ஷியம் பண்ணுவதற்கு அவர் அநுமதி கொடுக்கமாட்டார். ஹுமாயூன், ஷீயர்ஷா, ஆக்பர், ஷாஜஹான், ஆகிய இவர்களில் ஒவ்வொருவரும், இன்னும் நூறு பெயர்களும் ஒளிமிகுந்த பெயர்களாலாய அவருடைய மணிமாலையில் இடமும் நாளும் கண்டுகொண்டார்கள்......................

"ஹிருதய உணர்ச்சியின் ஒரு பெரிய வட்டம் போன்று, அதன் மிகமிகத் தாழ்ந்த வட்டங்கள் பூமியின்மீதுள்ள அன்பிலும், பிரகிருதியின்மீதுள்ள அன்பிலும் பலமாகப் பிடித்துக்கொண்டன; அதன் அடுத்த வட்ட

மானது ஜாதி, அனுபவம், சரித்திரம், நினைப்பு முதலிய சாத்தியமான எல்லாச் சம்பந்தத்தையும் தழுவிற்று; எல்லாம் ஸ்திரமான ஓரிடத்தில் போய் ஒன்று சேர்தலே, சுவாமிகள் தமது சொந்த பூமியை உபாசித்துவந்த மார்க்கம். ஒன்று சேர்க்கப்பட்ட இடமானது, இந்தியாவைப் பற்றிச் சிலர் நினைத்தபடி இந்தியாவானது கிழமும் பலவீனமு மானதல்ல வென்றும், ஆனல் வாலிபமாயும் - அடங்கிய சக்தி நிறைந்ததாயும் - இருபதாவது நூற்றுண்டின் ஆரம்பத்திலே அது முற்காலத்தில் அறிந்திருந்ததைப் பார்க்கிலும் அதிக அபிவிருத்திகளை யடையும் தருணத்தில் நிற்பதாயும் உள்ள திட நிச்சயமேயாம். ஆயினும், ஒரே யொருதரம்தான் அவர் இந்த நினைப்பை வெளியே சொன்னதாக ஞாபக மிருக்கிறது. "நான் அநேக நூற்றுண்டுகளுக்குப் பின் பிறந்த மனிதனென்று உணர்கிறேன். இந்தியா வாலிபமா யிருக்கிறதை நான் பார்க்கிறேன்" என்று சுவாமிகள் மிகுந்த அமைதியாயிருந்த ஒரு சமயத்திலே கூறினர். ஆனல், உண்மையில் அவர் பேசின ஒவ்வொரு வார்த்தையிலும் இந்தக் காக்ஷி குறிப்பிடப்பட்டது. அவர் கூறிய ஒவ்வொரு கதையிலும் அது துடித்தது. இந்தியாவைச் சேர்ந்த எதையும்பற்றி மனஸ்தாபப் படாமல் சந்தோஷமாக இருப்பதிலே, பொய்யான குற்றத்தை, அல்லது நிந்தனையுடனே கருதப்படவேண்டிய குற்றம் கூறுதலை ஆத்திரத்துடனே மறுத்துக் கண்டித்தலிலே, அல்லது தமது சொந்த மதத்தினுடைய ஒரு லேசான பிரதிபலனத்தைக் காட்டிலும் அதிகமாய் ஒருபொழுதும்

இருக்கமுடியாத ஒரு மதத்தினுடையவும் அன்பினுடைய வும் முக்கியாம்சங்களைப் பிறருக்கு ஆக்ஞாபித்தலிலே எத் தனை தடவை சந்நியாசியின் பழக்கம் அவரிடமிருந்து நழுவி விடுவதுபோலத் தோன்றிற்று? எத்தனை தடவை வீரனுடைய ஆயுத உடை வெளிப்பட்டது?

"ஆனால், இதனாலெல்லாம் உண்டாகக் கூடிய தூண்டுதலை அவர் அறியாதிருந்தார் என்று கருதல் கூடாது......கிருக குடும்பங்களை யெல்லாம் பரித்தியாகம் செய்துவிட்ட ஒருவன் கிருகத்தினுடையவும் குடும்பத்தி னுடையவும் நினைப்புக்கள் உண்டானால் எப்படி அவற் றுடனே போராடுவானோ, அப்படியே அவரும் அடிக்கடி தேசத்தினுடையவும் சரித்திரத்தினுடையவும் இந்த நினைப்புக்களை யடக்கிவிட்டு, எவருக்கு எல்லாத் தேசங்க ளும் எல்லா ஜாதிகளும் ஒரே மாதிரியா யிருக்கவேண்டு மோ அந்த எளிய, மத சஞ்சாரிமாத்திரமாய் விடும்படி முயற்சிப்பார்.......

"அவர் எப்பொழுதும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய கொடியினிடத்தில் விசுவாசமா யிருக்க முயன்றுகொண் டிருந்தார்; தமது சொந்தச் செய்தியைச் சொல்லுதல் அடிக்கடி அவருக்கு ஒரு தவறுதலாகத் தோன்றிற்று. தவிர, வெறும் ஹிருதய சலனத்திலே செலவழிக்கப்பட்ட சக்தி சிதறப்பட்டதென்றும், அடக்கி வைக்கப்பட்ட சக்தி யே வேலையில் வெளிப்படுதற்கு ஒன்று சேர்க்கப்பட்ட தென்றும் அவர் நம்பினார். இன்னும், தம்மிட மிருந்த

எல்லா உணர்ச்சியும் அவரைப் பீடிக்கும்; அவர் அதை யறிந்து கொள்வதற்கு முந்தி, அவர் மறுபடியும் தமது ஜாதியினிடத்தும் தமது தேசத்தினிடத்தும் உள்ள அன்பையும் நம்பிக்கையைப்பற்றிய அந்த நினைப்புக்களையும் அவர் பரவிக்கொண் டிருப்பார்; அது, அநேகமாக அவருக்குத் தெரியாமலே அநேக சந்தர்ப்பங்களில் அதற்கென்று தயார் செய்யப்பட்ட பூமியின்மேலே விதை போல விழுந்து, இந்தியாவின் பரந்த தூரமான பாகங்களிலே தாய் நாட்டினிடத்துள்ள பக்தியின் வாழ்நாட்களினுள்ளும் ஹிருதயங்களினுள்ளும் முன்னமேயே முளைத்துவிட்டன. ஸ்ரீராமகிருஷ்ணர் எந்தப் புஸ்தகங்களையும் அறியாமலே உண்மையில் வேதாந்தத்தின் உயிருள்ள வாழ்க்கையாகவே யிருந்ததுபோல, விவேகாநந்தரும் ஜன சமூகவாழ்க்கையினுடையதாக இருந்தார். ஆனால், இதைப் பற்றிய கொள்கையில், அவர் தெரியாதவரா யிருந்தார். அவருடைய குருமூர்த்தியைப்பற்றிக் கூறப்பட்ட அவருடைய சொந்த வார்த்தைகளில் 'அவர் அப் பெரிய வாழ்க்கையை வெறுமே வாழ்ந்து அந்த வாழ்க்கைக்கு நியாயம் கண்டுபிடித்தற்குப் பிறரை விட்டுவிடுவதிலே அவர் திருப்தி யடைந்திருந்தார்."

சுவாமிகள் ஒன்றுக்கொன்று விரோதமான கொள்கைகளையுடையவரா யிருந்தாரென்று ஒருபொழுதும் நினைத்தல்வேண்டாம். ஒன்றுக்கொன்று நேர் விரோதமான கொள்கைகள் போலத் தோன்றினும், அவற்றை

ஒற்றுமைப் படுத்துவதிலேயே கண்ணுயிருந்தார். சுவாமி கள் பல தன்மைகள் வாய்ந்தவராயிருந்தபடியால் அவ ருடைய உண்மையான லக்ஷணத்தை அறிய எவரும் வல்லவரா யில்லை. சில சமயங்களிலே சுவாமிகள் தாம் பொதுப் பிரசங்கங்களிலே கூறியதற்கு மாருகத் தனித்த இடங்களிலே தனித்த சம்பாஷணைகளிலே பேசிவிடுவார். சில சமயங்களிலே ஸ்ரீராமகிருஷ்ணருக்கு விரோதமாகப் பேசிவிடுவார், ஆனுல், இதனுல் சுவாமிகளுக்கு ஸ்ரீராம கிருஷ்ணரிடத்தில் அணுவளவாவது பக்தி குறைந்து விட்டதென்று எவரும் நினைத்தல் முடியாது. சுவாமிகளுக் குச் சர்வ பந்தங்களையும் உடைத்தெறிந்துவிட்டு மிகமிக உத்கிருஷ்டமான பதவியை அடைந்துவிட வேண்டுமென்று ஆசையுண்டானபொழுதெல்லாம், தாம் மதபோதகரென்ப தும் குருவென்பதும் வீணத்தன மென்றும், தமது உண்மையான லக்ஷணம் அன்றென்றென்றும் கூறுவார். ஆனுல், இதனுல் அவருடைய வேலைக்குப் பங்கம் நேரிட வில்லை. இதனுல் அவர், குகைக்குள் போய் உட்கார்ந்து கொண்டுவிட வில்லை.

உயர் நிலையிலிருந்து பார்த்தால், சகல கர்மங்களும் பிறருக்கு நன்மை செய்வதுகூடச் சந்தேகமின்றி மாயை யாம், சொந்த முக்தி யடைதற்கு இடையூறும். ஆனுல், ஸ்ரீராமகிருஷ்ணருடைய வார்த்தைகளின்படி ஆசார்ய கோடிகள் உலகில் அவதரிக்கும்பொழுது உலகின் முழுச் சுமையையும் அவர்கள் தாங்குகிருர்கள். இந்த ஆசார்ய

கோடிகள் தங்கள் சொந்த முக்தியைக் கவனிப்பதில்லை; பிரஹ்மாநந்த பதவியில் அவர்கள் எப்பொழுதும் இருக்க முடியுமாயினும் அவர்கள் அதையும் லக்ஷியம் செய்வதில்லை. இந்த ஆசார்ய கோடிகள் தங்கள் சொந்த சங்கற்ப மாத்திரத்தினலே தங்கள் சகோதர ஜீவராசிகள் கடைத்தேறும் பொருட்டுத் தாங்கள் எவ்வளவு கஷ்டங்கள் அநுபவிக்கும்படி நேரிட்டாலும் அவற்றையெல்லாம் பொறுமையுடனே பொறுத்துக்கொள்வதற்குத் தயாராகி அடிக்கடி ஜனிக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர்: விவேகாநந்தர் போன்ற பையன்களிடத்தே வைத்த அன்புக்குக் காரணம் அவர் இந்தப் பையன்களிடத்தே ஸ்ரீ நாராயணரைக் கண்டு தர்சித்துக்கொண்டிருந்தாரென்பதே. அதே மாதிரி சுவாமிகளும் ஏழைகளிடத்தும் — தாழ்ந்தவர்களிடத்தும் துன்புற்றவர்களிடத்தும் ஸ்ரீ நாராயணரைக் கண்டு தர்சித்துக்கொண் டிருந்தார்; ஆகையினுல், அவர் அவர்களிடத்து அபரிமிதமான அன்பு செலுத்திவந்தார்; தவிர, சுவாமிகள் தாம் ஈச்வரனுடைய கருவி மாத்திரமேயென்று திடமாய் நம்பிக்கொண்டிருந்தது மாத்திரமன்று; தமது தேசம் உயர்வடைவதற்காக ஈச்வரன் தம்மை யனுப்பி யிருக்கிறாரென்றும்; தமது சற்குருவினுடைய ஆக்ஞையும் அப்படியேதானென்றும் சுவாமிகள் மனப்பூர்வமாக நினைத்துக் கொண்டிருந்தார். சுவாமிகளின் அந்திய காலத்திலே சுவாமிகள் அதே மாதிரி தேசாபிமானத்தை நன்கு விளக்கியிருக்கிறார். “எனது வாழ்க்கையின் சமர்ப்பணம் இந்த என்னுடைய மாதுர்ப் பூமியினிடத்தே யாகும்;

எனக்கு ஆயிரம் ஜீவிதங்கள் இருந்தால் அத்தொடர்ச்சி முழுதினுடையவும் ஒவ்வொரு நிமிஷமும், "எனது தேச ஜனங்களே! எனது நண்பர்களே! உங்களுடைய ஊழியத்தின் பொருட்டு பரிசுத்தமாக விடப்படும்" என்று சுவாமிகள் கூறியிருக்கிறார்.

சுவாமிகளுடைய ஒரே கொள்கை "தியாகம் செய், ஊழியம் செய்" என்பதே. ஜனசமூகம் வாழும் வரையில் சொந்த நன்மையையும் சுகத்தையும் தியாகம் செய்தல் வேண்டும்; ஜீவிதத்தையும் தியாகம் செய்தல் வேண்டும், மோக்ஷத்தைக்கூடத் தியாகம் செய்தல் வேண்டும். செய்யப் படுவதெல்லாம் பொது ஜனங்களுக்காகச் செய்யப்பட வேண்டும். எண்ணற்ற இம்சைகளை யநுபவித்துக் கஷ்டப்படுகின்ற லக்ஷக் கணக்கான ஜனங்கள் உதவியை நாடிக் கதறுகிறார்கள். எவனொருவன் தனது பூமியின் பெருமையையும்—அதன் நாகரிகத்தையும்—அதன் அழகையும்—அதன் ஒற்றுமையையும் — அதனுள்ளே அடங்கியுள்ள சக்திகளையும்—அதன் உண்மைகளையும் அறிகிறானோ, எவனொருவன் அதன் கார்யத்திலே உபயோகமுள்ளவனாகச் செய்துகொண் டிருக்கிறானோ, லக்ஷக்கணக்கான ஜனங்களுடனே தன்னை ஒற்றுமையுள்ளவனென்று எவனொருவன் உணர்கிறானோ, எவனொருவன் அவர்களுடைய துன்பங்களையும்—சுகங்களையும்—ஆசைகளையும் தனக்குச் சொந்தமாகச் செய்துகொண்டிருக்கிறானோ, எவனொருவன் தன்னுடைய பிறப்பைப்பற்றிக் கர்வமடைந்திருக்கிறானோ,

முற்கால சரித்திரத்தை நன்ருகத் தெரிந்துகொண்டிருக்கிருனோ, அதன் தற்காலத்திலும் பிற்காலத்திலும் நம்பிக்கையுள்ளவனு யிருக்கிருனோ, நியாயமான காரியத்தில் தைரியமாயும் துணிந்தவனுயும் இருக்கிருனோ, முன்னேர்களுடைய பரம்பரை நியாயங்களிலே பிடிவாதமுள்ளவனு யிருக்கிருனோ, எவனுடைய ஈச்வரன் அவனுடைய தேசமா யிருக்கிறதோ, எவனுடைய தேசம் அவனுடைய ஈச்வரனு யிருக்கிறதோ, எவனுடைய ஹிருதயத்திலே 'இந்தியா, இந்தியா, இந்தியா' என்று துடித்துக்கொண்டிருக்கிறதோ, அவனே இந்தியன், உண்மையான இந்தியன்.''

ஆகையால், ஸ்வாமி விவேகாநந்தர் அருள்பெற்ற தேசாபிமான சிங்கமென்பதில் சந்தேகமில்லை; இந்தியாவிலே தேசீய உணர்ச்சிக்கு வித்து இட்டதே ஸ்வாமிகள். இந்திய ஆத்மாவின் லக்ஷணம் இத்தகையதென்று இந்திய புத்திரர்களுக்கும் உலகுக்கும் எடுத்துக் காட்டியவர்; புராதன இந்தியா இததகைய தென்று நவீன உலகங்களுக்கு எடுத்து உரைத்தவர். ஸ்வாமிகளுடைய தேசாபிமானத்திலே விரோத உணர்ச்சி யில்லை, பகை எண்ண மில்லை. இந்தியாவானது எழுச்சிபெற்று பழைய உயர்நிலைமையை அடைந்து உலகு முழுதுக்கும் உத்தமமான ஆத்மஞானத்தை உபதேசிக்கும் ஸ்தானத்தை யடையவேண்டுமென்று ஸ்வாமிகள் பிரார்த்தித்துக்கொண்டு, இதற்காகவே இரவும் பகலும் பாடுபட்டார்.

10. ஸ்ரீ விவேகாநந்தர் வாழ்க்கையின் தாத்பர்யம்.

ஒரு பெரியோர் ஸ்வாமிகளைப்பற்றிப் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

"சுவாமி விவேகாநந்தர்: காலத்தின் மிக மிகப் பொறுக்கி யெடுத்த உற்பத்தியாகும்; மகரிஷிகளின் பூமியின் ஆத்மீகப் பெருமையை ஸ்திரப்படுத்துவதற்கு அடிக்கடி தோன்றவேண்டிய இந்தியாவின் பிரக்கியாதி பெற்ற புத்திரர்களில் ஒருவர். அவர் இந்திய ஜனசமூக வாழ்க்கையை மறுபடி பொருத்தி யமைப்பதற்கும் மறு படியும் பலப்படுத்துவதற்கும் பிரகிருதி செய்யும் உபாய மாம்."

இன்னொரு பெரியவர்: "அவருடைய முயற்சியினாலே தற்காலத்தில் இந்து சமுதாயத்துக்கு லக்ஷணமா யிருக் கின்ற ஆத்மீக விஷயங்களில் புதிதாகப் பிறந்த அன்பி னிடத்திலே அவருக்கு மிகமிகச் சிறந்த ஞாபகச் சின்னம் இருக்கிறது. டேயிலி ந்யூஸ் என்ற பத்திரிகையின் நிருபர் ஒருவர் இந்தியாவின் நிலைமையை ஆராய்வதற்காகச் சில வருஷங்களுக்கு முன் வந்தார். அவரும் 'அட்லாண் டிக் மகா சமுத்திரத்தின் இருபக்கங்களிலும் தமது பிரசங்கங்களினால் பெயர் பெற்ற விவேகாநந்தரிடத்தில், புநர் உத்தாரண இந்திய லக்ஷியத்தின் விநோதகரமாய் சக்தி மிகுந்த வடிவத்தை நாம் கொள்கிறோம்" என்று எழுதினர்.

சுவாமிகள் அவதரித்த பொழுது, லக்ஷியங்கள் குழப்ப மடைந்திருந்தன; இந்தியமக்கள் தங்கள் மதத்தில் ஆசாரங்களில் நம்பிக்கை யிழந்தவர்க ளானார்கள்; மேனாட்டு நாகரிக அலையானது எல்லோரையும் இழுத்து அடித்துகொண்டு போய்க்கொண் டிருந்தது. மேனாட்டு ஜனசமூகங்கள்: பணக் கொழுப்பினாலும் ஸ்தூலபல கர்வத்தினாலும் இந்தியாவுக்கு நாகரிகமளிக்க வந்து சேர்ந்தன.

சுவாமிகள் ஹிந்துமதத்தை ஸ்தாபிப்பதற்கு வெளிப் படும் முன், "ஐரோப்பிய நாகரிகமே இந்தியாவுக்கு மோக்ஷம் அளிக்க வல்லது" என்று பலரும் அபிப்பிரா யப்பட்டார்கள். "இந்தியாவின் பாஷை, நாகரிகம், மதம் எல்லாம் பயனற்றன, வற்றி வரண்டு போய்விட்டன" என்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டார்கள். இந்தியா வின் நன்மையைக் கோரிய பலரும் மேனாட்டு ஆசிரியர் களையும் தத்துவ சாஸ்திரிகளையுமே ஆதரவுக்கு நாடினார் கள். சுவாமிகள்தான் ஹிந்து நாகரிக உணர்ச்சியை உல குக்கு ஊட்டினார்; ஹிந்துக்களுக்குத் தன்னம்பிக்கையை யும் தன் முயற்சியையும் உபதேசித்தார். இந்தியாவின் பூர்விக ஞானத்தை உலகுக்கெல்லாம் எடுத்துரைத்தவர் விவேகாநந்த சுவாமிகளே.

சுவாமிகள் தேசாபிமானியா யிருந்தாலும், மனுஷ்ய வர்க்கத்தினுடைய பொது விஷபத்தை மறக்கவில்லை. சுவாமிகள் முற்கால விஷயங்களிலும் ஆசாரங்களிலும்

பக்தி சிரத்தையுள்ளவரா யிருந்தாலும், "இக்காலத்தி லே மாறுத லடைந்துள்ள சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வாறு ஜனசமூகம் திருத்தி யமைக்கப்பட வேண்டும்" என்பதை மறந்தவரல்லர். சுவாமிகள் மகா வைராக்கிய முடையவர்; ஆயினும், இரக்க குணமும் தாராள சிந்தையும் மிக வுள்ளவர்; பிற்கால தர்சனம் கூட உள்ளவர்; "இந்தியா, உலகுக்குச் செய்யவேண்டிய பெருங்கார்ய மிருக்கிறது" என்று நன்ருகக் கண்டு கொண்ட மகாபுருஷர். சுவாமிகள் சகலவித தர்க்க சாஸ்திரங்களிலும் வல்லுநரா யிருந்தார்; பகவத்கீதையிலே உபதேசிக்கப்பட்டுள்ள ஸ்வயநலமற்ற தன்மை அவரிடத்தே களங்கமற்றுப் பிரகாசித்தது; இந்தியா தேசத்தினிடத்தே சுவாமிகளுக்கு அளவற்ற நம்பிக்கை யுண்டு. "இந்தியா தேசத்துக்கு ஸேவை செய்யவேண்டும்" என்று சுவாமிகள் தமது ஜீவிதத்தைச் சமர்ப்பணம் செய்துவிட்டார். இந்தியாவின் மகிமையையும் அதன் மகத்தான மதத்தையும் உலகுக்கு எடுத்துரைத்துக் கொண்டு சுவாமிகள் ஒரு வீர தேசாபிமானியாக விளங்குகிருர்.

சுவாமிகளுடைய முயற்சிகள் ஜனசமூகத்தை எவ்வாறு பாதித்தன வென்பதைப்பற்றி ஆராய்வோம். 1914-ம் வருஷம் பெப்ரவரி மார்ச் இம் மாதங்களில் வெளிவந்த பிரபுத்த பாரதா என்ற பத்திரிகையில் ஒருவர் பின் வருமாறு எழுதியிருந்தார்.

"இக் காலங்களிலே இந்தியாவுக்கு ஸ்வாமி விவேகாநந்தர் மூலமாக ஒரு திவ்ய தூதர் அளிக்கப்பட்டது

தகுதியேயாம். சுவாமிகள் தமது பையற் பருவத்தி லிருந்து தமது தேசத்தை நேசித்தார்; அந்த அன்பு அவருடையது போன்ற ஹிருதயத்தினுலே செலுத்தத் தக்கது; ஆழத்திலும் பரப்பிலும் ஒரு சமுத்திரம் போன் றது. அத்தகைய தேசாபிமானம் எவ்விதப் பயிற்சியினு லும் ஒருபொழுதும் உண்டாதல் முடியாது; அது உள்ளூறப் பிறந்தது. விவேகாநந்தர் பிறப்பிலே அவ ருடைய தேசத்தின் ஆத்மாவே உருவெடுத்து வந்ததாக நாம் அறிகிறபொழுதுதான், தேசத்துடனே அத்தகைய பரிபூர்ணமான ஆத்ம ஒற்றுமைக்குக் காரணம் கூற முடி யும். அத்தகைய வாழ்க்கையின் சரித்திரத்தில் ஒரு தேசம் முழுவதினுடையவும், கார்யமும் ஜயமும் வாக்குறுதியும் நம்பிக்கையும் பிரதிபலித்துச் சரித்திரமாகின்றன; சுவாமி விவேகாநந்தர் தமது பிறவியிலிருந்தே சமஷ்டி இந்தியப் பிரக்ஞையைத் தம்முள்ளேயே உருப்படுத்திக்கொண்டு சென்றாரென்று நன்கு கூறப்படலாம். உண்மையில், நரேந்திரர் தமது குருவின் பாதங்களினடியில் உட்கார்ந் திருந்தபொழுது நரேந்திரர் மூலமாக இந்தியா முழுதை யும், இந்தியா மூலமாக மனுஷ்யவர்க்கம் முழுதையும் பிடித்துக்கொண்டார்.

"மறுபடியும் அவருடைய குருவினிடத்திலே நரேந் திரர் அவருடைய ஹிருதயத்தின் இந்தியா தன்னைத் தானே பொருள்படுத்திக்கொள்வதைக் கண்டார். சரித்திர விஷயத்தில் அவருடைய கல்லூரிப் படிப்பெல்லாம், பொது ஜீவிதத்திலே அவர் செய்த வேலையெல்லாம்,

தமது குருமூர்த்தியின் மூலமாகப் பிரகாசித்ததுபோன்று அவ்வளவு உண்மையானதாயும்—அவ்வளவு பிரகாசமுள்ளதாயும்-அவ்வளவு மேன்மைபொருந்தியதாயுமுள்ள இந்தியாவைப்பற்றிய ஒரு காக்ஷி அவருடைய மனத்திலே ஒருபொழுதும் உண்டாக்கினதில்லை. ஆ, மதங்களுக்கெல்லாம் தாயாகிய இந்தியா தனது மகிமையெல்லாவற்றுடனும் உட்கார்ந்திருக்கிறாள். இங்கே அவருடைய குருமூர்த்தியின் வாழ்க்கையாகிற இந்த ஆச்சர்யமான நாடகத்தின் மூலமாக, நாம் சரித்திரமென்று கூறுகின்ற காலத்தின்மீது அடிக்கும் மேல் மட்ட அலைகளாலாய அநேக நூற்றாண்டுகளின் ஊடே உண்மையாய் வந்துள்ள தனது முன் அநுபவங்களையும் ஜயங்களையும் அது மறுபடியும் பொதுப்படுத்திக் கூறிற்று. இங்கே இந்தியாவானது முற்காலத்திலிருந்த தனது உண்மையான சரித்திரத்தையும் வருங் காலத்திலே அது அடையப் போகும் நிலைமையையும் உயிருள்ள, பிரத்தியக்ஷமான, அழியாத எழுத்தில் எழுதிவிட்டது. இந்தக் காக்ஷி நரேந்திரருடைய ஆத்மாவின்மீது தீர்க்க தர்சனமாகிற அக்கினியை வீசிற்று; இதன்மேல், இந்தியாவுக்கும் இந்தியாவின் பிரதிநிதியாக மனுஷ்ய வர்க்கத்துக்கும் கொண்டு செல்லத் தம்மிடம் ஒரு நற்செய்தி யிருந்ததாக அவருக்குள்ளே யே ஒரு அறிவு உண்டாயிற்று.

... ...

ஆகையால், இந்த பூர்த்தியான ஏற்பாடெல்லாம் ஆனபின்னர், 1897-ம் வருஷம் ஜனவரி 15-ம் தேதி

சுவாமி விவேகாநந்தர், சர்வமத மகாசபையின் வீரர், இந்தியாவிலிருந்து வெளி யுலகத்துக்குச் சென்ற மிக மிகச் சிரேஷ்டமான தற்காலத்திய தீர்க்கதர்சி, கொளும்பு மாநகரில் இறங்கித் தமது தேச ஜனங்களின் முன் நின்ற பொழுது, அவருடைய தேசத்துக்கு அவர் அளிக்க வேண்டிய நற்செய்தி வெளிவிடப் படுதற்குக் காலம் நிறைந்துவிட்டது. திவ்ய அருள் நிறைந்ததும் ஆழத்தி லும் உண்மை நினைப்பிலும் பேச்சிலும் இணையில்லாதது மான ஒவ்வொரு பிரசங்கத்திலும் 'தெய்விக பாத்தியதை யடைந்த' அந்த 'வாக்மி'யிட மிருந்து அவருடைய தேச ஜனங்களின் இருளடைந்த ஹ்ருதயங்களை நோக்கி நற்செய்தி சென்றது."

இக் காலத்திலே நமது தேசத்தில் நடைபெறும் இயக்கத்தின் காரணத்தை அறிந்துகொள்ளவேண்டு மென்றும், இன்றைய இந்தியாவின் ஹிருதயம் இம்மாதிரி துடிக்கிற தென்று தெரிந்துகொள்ள விரும்பினால், சுவாமிகள் மேனாட்டிலிருந்து திரும்பி வந்ததன் பின்னர், இந்தியாவிலே ஆங்காங்கு, அதிலும் முக்கியமாகச் சென்னையிலே செய்துள்ள பிரசங்களை ஆய்ந்து படித்தால் தெரியவரும். ஸ்வாமிகள் கொழும்புமாநகர முதல் ஹிமோத்கிரியிலேயுள்ள நகரமாகிய அல்மோரா என்னும் ஊர் வரையில் அரசர்களும் பார்த்து ஆச்சர்யமும் பொறுமையு மடையும்படி அவ்வளவு விமர்சையாகத் தேச ஜனங்களால் வரவேற்கப்பட்டார் என்று நாம் முன்னமேயே

கூறியிருக்கிறோம். இச் சமயத்திலே சுவாமிகள் சென்னை மாநகரிலே செய்த பிரசங்கங்களை இந்திய ஜன சமூகத்தைத் திடீரென்று எழுப்பிவிட்டன. பாரத ஜன சமூகமே ஒரு உருக்கொண்டு தனது சகல லக்ஷணங்களையும் வெளியே காண்பிப்பது போன்று, சுவாமிகள் சென்னைமாநகரத்திலே அமிருதமாரி பொழிந்து அனைவருக்கும் ஆநந்த மூட்டினர்.

அமெரிக்காவிலே சுவாமிகள் ஜயமடைதற்குச் சுவாமிகள் சிக்காகோமாநகரில் சர்வமத மகா சபையின் முன்னே செய்த பிரசங்கம் எப்படியோ, அப்படியேதான் இந்தியாவிலே சுவாமிகள் ஜய மடைந்ததற்கு அவர் சென்னையில் செய்த பிரசங்கங்களும் அநுகூலமா யிருந்தன. சர்வமத மகாசபையிலே சுவாமிகள் வெளியிட்ட அபிப்பிராயங்கள் மேல் நாடுகளைப் பிரமிக்கச் செய்துவிட்டன. சென்னையிலே அவர் வெளியிட்ட பிரசங்கங்கள் இந்தியா தேசத்தை எழுப்பிவிட்டன. மேனாடுகளிலே சுவாமிகள் மதாசார்யராக எல்லோராலும் மதிக்கப்பட்டார்; இந்தியா தேசத்திலே அவர் மதாசார்ய ராகவும் தேசாபிமான தவராஜ சிங்கமாகவும் மதிக்கப்பட்டார். ஆ! ஆ! அவர் சென்னையிலே செய்த பிரசங்களின் வன்மைதான் என்னே! பாரத மாதாவே சுவாமிகளிடத்து ஆவிர்ப்பவித்து ஆவேசமானதுபோல, சுவாமிகள் இந்திய ஜனங்களுடைய பெருமைகளையும் சிறுமைகளையும் சற்றும் தயை தாக்ஷண்ய மின்றி எடுத்

துக் கோஷித்தார்; ஹிந்துக்களுடையவும் மகம்மதியர்களுடையவும் புராதன நாகரிகங்களையும் நிலைமைகளையும் எடுத்து ஸ்தோத்திரம் செய்வார்; சீக்கிரத்திலே வரும் காலத்தில் அவர்கள் அடையப்போகின்ற மேன்மையை எடுத்து விரித்துரைப்பார்; அவர்களுடைய குற்றங் குறைகளை யெல்லாம் கண்டித்து வெறுப்பார்.

'இந்திய ஜன சமூகமானது உலகிலே மேன்மையடைந்து கீர்த்தி பெறவேண்டும்,' என்றும், 'அதற்கு இந்தியர்கள் தங்களிடத்துள்ள சோம்பலையும் உறக்கத்தையும் விட்டொழித்துச் சுறுசுறுப்பாக வேண்டும்,' என்றும் சுவாமிகள் விரும்பினர். இந்தியர்கள் தங்களுடைய முற்கால நிலைமையைப்பற்றிக் கர்வமடையும்படி செய்தார்; பிற்கால நிலைமையைப்பற்றித் திடமாக நம்பும்படி செய்தார். இந்தியர்களுடைய குற்றங் குறைகளையெடுத்துக் கூறிக் கண்டிப்பதில் சுவாமிகள் சற்றும் பின் வாங்கியதில்லை; அவர்களுடைய பலவீனத்தையும் பயங்காளித்தனத்தையும் எடுத்துக் கூறி அவர்கள் வெட்கமடையும்படி செய்தார். 'இந்தியாவிலே எக் கார்யம் நடைபெறவேண்டு மென்றாலும் அது மதத்தை அஸ்திவாரமாகக் கொண்டே நடைபெற வேண்டுமே யல்லாது, வேறு வழி யில்லை' என்று கண்டறிந்தவர் சுவாமிகள் தான்.

தற்கால இந்தியாவிலே இந்த ஒற்றுமை ஏற்படுவதற்கு சுவாமி விவேகாநந்தர் போன்று வேறு எவரும்

அவ்வளவு பாடு படவில்லை. சுவாமிகள் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும், இந்தியர்களுடைய ஞான சாஸ்திரங்களைத் தற்கால ஆவசியகங்களுக்கு ஏற்றவாறு பொருள்படுத்தி; "சர்வமதங்களினுடையவும லக்ஷியமே வேதாந்தத்தின் லக்ஷியம்" என்று எடுத்துக் காட்டி, இப் பரந்த பூமியினிடத்தே ஒற்றுமையை உண்டு பண்ணினர். பழங்காலத்துக் குருட்டு நம்பிக்கைகளை யெல்லாம் அவர் உடைத்துவிட்டார்; வேற்றுமைப்பட்டுச் சச்சரவு செய்துகொண்டிருந்த வேதாந்த வகுப்புக்களை யெல்லாம் தகர்த்தெறிந்து, ஒவ்வொன்றினுடையவும் உண்மைச் சொரூபத்தை யெடுத்துக்காட்டி, ஒற்றுமையையும் அந்யோந்யம் அன்பையும் பலப்படுத்தினர்.

"எத்தனையோ நூற்றுக் கணக்கான வருஷங்களாக இந்தியாவானது அந்நியர்களுக்கு அடங்கியே கிடந்து வருதலால், தன்னுடைய அபரிமிதமான பலத்தையும் பராக்கிரமத்தையும் மறந்து, பலவீனமுள்ளதாய்ப் போய் விட்டது" என்று சுவாமிகள்தான் எடுத்துக் காட்டினர். சுவாமிகள் "நாம் உயிருடன் உலகிலே ஒரு ஜனசமூகமாக வாழவேண்டுமானல், மறுபடியும் நாம் உபநிஷத்துக்களை யடையவேண்டும்; உயிரளிக்கின்ற, பல மளிக்கின்ற உபநிஷத்துக்களே மறுபடியும் நமக்கு மேன்மையை யளிக்கும்" என்று கோஷித்தார்.

எவனொருவன் தான் பலவீனனென்று நினைத்துக் கொள்கிறானே அவன் பலவீனனே; எவனொருவன் தான்

பலவானென்று நினைத்துக்கொள்கிறானோ அவன் எவரா லும் ஜயிக்கமுடியாதவனாய்விடுகிறான்.'' ''எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! லக்ஷியம் அடையப்படுகிறவரை யில் நிற்காதீர்கள்!'' உபநிஷத்துக்களில் உபதேசிக்கப்பட் டுள்ள பௌருஷமும் பலமும் ஜனசமூகத்தினிடத்திலே சேர்ந்துகொண்டுவிட்டால், இந்தியாவானது புதிய உயிர் பெற்றுக் கிளம்பிவிடும். தங்களுடைய நாகரிகம் பழமை யானதென்றும் உயர்ந்ததென்றும், தேவர்களும் மெச்சத் தகுந்ததென்றும், தங்களுடைய மதமே உலகிலே உண்மையை ஊட்டி மோக்ஷமளிக்கவல்லதென்றும் இந்தி யர்களுக்குத் தெரியும்படி செய்துவிட்டால், இந்தியா வானது மயக்கத்தினின்றும் தெளிவடைந்துவிடுமென்று சுவாமிகள் அபிப்பிராயப்பட்டார்.

சுவாமிகள் அடிக்கடி ''நமக்குள்ள பொது நிலம் நமது பரிசுத்த பரம்பரைகளே, நமது மதமே'' என்று சொல்லியிருக்கிறார். ஸ்வாமிகளுடைய மனத்திலே ஒற்று மைப்பட்ட இந்தியா என்ற லக்ஷியமேயிருந்துகொண்டிருந் தது. ''இந்தியாவிலே ஜனசமூக ஒற்றுமையானது அத னுடைய சிதறிப்போன ஆத்மீக சக்திகளையெல்லாம் ஒன்று சேர்த்தலாயிருக்கவேண்டும். இந்தியாவில் ஜன சமூகமானது எவருடைய ஹிருதயங்கள் ஒரே மாதிரி யான ஆத்மீக ராகத்தை நாடுகின்றனவோ அவர்களுடைய ஒற்றுமையாயிருக்கவேண்டும்'' என்று ஸ்வாமிகள் கூறி னார். ராஜீய விஷயங்களெல்லாம் இரண்டாந்தரமே. இந்தி யாவின் வாழ்க்கையே ஆத்மீகமாயுள்ளது. ஆதலால்,

இந்தியாவின் வாழ்க்கை மறுபடியும் உண்மையில் ஆத்மீக மாய்விட்டால், மற்றவை யெல்லாம் தாமே உண்டாகும்.

"ஜனசமூகத்துவ மென்பது ராஜீயப் பெருமை யல்ல" என்றும், "ஸ்வதந்திரங்களையும் பாத்தியதைகளையும் அடைதலல்ல" என்றும், "தேச அரசாட்சியிலே அதிகாரம் பெறுவதல்ல" என்றும், "ஆனால், அது ஒரு மகா பரிசுத்தமான லக்ஷியம்" என்றும், "அதன் அந்தரங்கமான முயற்சி ஆண்மை யென்றால் இன்னதென்று அது எவ்வாறு கருதியிருக்கின்றதோ அவ்வாற்றை வெளிப்படுத்துவதேயாம்" என்றும் சுவாமிகள் அபிப்பிராயப்பட்டார். "மனுஷ்ய னாக்குவதே எனது வேலை" என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவார். ஜனசமூகத்துவமென்று சுவாமிகள் ஒன்றையும் பிரசங்கம் பண்ணவில்லை; ஆனால், அவரே ஜனசமூகத்துவத்தின் உண்மையான இந்திய உணர்ச்சியின் உருவெடுத்து வந்தவர் போன்று இருந்தார்.

"உண்மையான ஆண்மைக்கும் பெண்மைக்கும் அஸ்திவாரமா யுள்ளது பலம், தைர்யம், நிர்ப்பயத்தன்மை, ஸேவை இவையே" என்றும், "கர்மங்களை யெல்லாம் ஈச்வரனிடத்தே சமர்ப்பித்துவிடவேண்டும்" என்றும் சுவாமிகள் போதித்துவந்தார். "ஆண்மையே பரிசுத்தம்" என்று சுவாமிகள் கோஷித்தார். "ஆண்மையே தர்மம்; எதெல்லாம் உண்மையோ, எதெல்லாம் உயர்ந்தனவோ அந்த உண்மையையும் உயர்ந்தனவற்றையும் பின்பற்றி அவற்றை எவ்வாற்றாலும் எந்தச் சந்தர்ப்பங்களிலும் பாது

காப்பதற்குப் பலமும் பயமற்ற தன்மையும் வேண்டும்'' என்று சுவாமிகள் கூறினர். தான் ஒன்றுக்கும் ஆகாதவனென்றும், பலவீனனென்றும் எவனும் நினைத்து அந்தகாரத்திலே அலக்கண் உறலாகாது; தான் பிரஹ்ம பதவியை யடைய யோக்கியதையுள்ளவன் என்று ஒவ்வொருவனும் தன்னம்பிக்கையுடனே கோஷித்துக்கொண்டு எழுந்திருத்தல் வேண்டும். சுவாமிகள் செய்த உபதேசம் வீண் போகவில்லை. ''மனிதனுகிச் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும்'' என்ற உணர்ச்சி நமது தேசத்திலே இப்பொழுது வெகு வேகமாகப் பரவி வருகிறது.

சுவாமிகள் 'இந்தியாவை முன்னேற்றத்துக்குக் கொண்டு வரவேண்டும்,' என்று செய்த முயற்சியிலே 'இந்தியாவின் முற்கால நடையுடை பாவனைகள் முதலியவற்றை மறுபடியும் கொண்டுவந்துவிடவேண்டும்' என்று கருதவில்லை. அப்படி நினைத்திருந்தால், ஸ்வாமிகள் மற்றவர்களினும் எப்படிப் பெரியவராவர்? காலமோ வேறுபட்டிருக்கிறது. முற்காலத்துக்கும் தற்காலத்துக்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவவ்வளவு அல்ல. முற்காலத்து இந்தியாவை அச்சுவார்த்தது போலவே தற்காலத்து இந்தியாவையும் ஆக்கிவிடுவதென்றால், அது நெடுநாட்களுக்கு நிற்காது. இந்தியாவுக்கு க்ஷீணதசையே வரக்கூடாதென்பது ஸ்வாமிகளுடைய விருப்பம்.

முற்காலத்து ஆத்மீக பலத்தையும் ஊக்கத்தையும் இந்திய ஜனசமூகம் கைக்கொள்ள வேண்டும்; அதனுட

னே காலத்துக் கேற்றவாறு புதிய மாதிரிகளையும் புதிய வழிகளையும் அனுசரிக்கவல்ல ராஜஸ சக்தி ஏராளமாக இந்தியாவிலே உண்டாகவேண்டும்; மூடப் பிடிவாதங்கள் தொலைந்துவிட வேண்டும்; இந்தியாவினுடைய லக்ஷியத் துக்கு இடையூறு யில்லாத எல்லாம் இருக்கவேண்டும்; இந்தியாவின் லக்ஷியத்தைக் கெடுக்கக்கூடிய எதையும் நாம் அநுசரிக்கக் கூடாது. பலவீனமானதும் கெட்டுப் போனதும் எதுவோ அது மரித்துவிடும்; இதன் மரணத் தைத் தடுப்பதற்கு எவராலும் முடியாது. சத்தியமா யுள்ளது எதுவோ, ஊக்கமும் உண்மையும் அளிக்கக் கூடியது எதுவோ அது ஒருபொழுதும் மரண மடை யாது; இதை யழிப்பதற்கு எவரால் முடியும்? ஒரு சம யத்திலே சுவாமிகளுடைய அந்தரங்க சிஷ்யர்களுள் ஒருவ ராகிய நிவேதிதா சகோதரியம்மையார் ஸ்வாமிகளை நோக்கி, "ஸ்வாமி! வேறு எத்தனையோ பெயர்கள் இவ் விந்தியா நாடு முன்னேற்ற மடைதற் பொருட்டுப் பாடுபடுகிறார்கள். தாங்களும் அதே கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். அவர் களுக்கும் தங்களுக்கும் வித்தியாச மென்ன?" என்று கேட்டார்.

அப்பொழுது ஸ்வாமிகள் சில தலைவர்களைப்பற்றி ஸ்தோத்ரமாகக் கூறிவிட்டு, பின்னர்ப் பின் வருமாறு கூறினார்:—

"எனது ஜனங்களுக்கு அவர்களுடைய மூட நம்பிக்கைகளை மறுபடியும் கொடுக்கின்ற எல்லாருடனும்

நான் வித்தியாசப்படுகிறேன். எகிப்து தேசத்திலே எகிப்து பரிசோதகனுடைய ஆசையைப்போல இந்தியாவிலே முழுதும் ஸ்வயநலமான ஒரு ஆசையை உணர்வது சுலபம். மனிதன் தன்னுடைய புத்தகங்களாலும் ஆராய்ச்சிகளாலும் கனவுகளாலும் ஆகிய இந்தியாவை மறுபடியும் பார்க்க மனிதன் இச்சிக்கலாம். அந்த இந்தியாவின் பலமான விஷயங்கள் இந்தக் காலத்துப் பலமான விஷயங்களால் பலப்படுத்தப்பட்டு, சாதாரணமாகவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதையே மறுபடியும் பார்ப்பது எனது நம்பிக்கை. புதிய விஷயங்கள் உள்ளிருந்து ஒரு வளர்ச்சியாயிருக்கவேண்டும்.

"ஆகையால், நான் உபநிஷத்துக்களை மாத்திரம் போதிக்கிறேன். நீங்கள் பார்ப்பீர்களாகில் உபநிஷத்துக்களைத் தவிர வேறொன்றையும் ஒருபொழுதும் நான் கூறினதில்லையென்று நீங்கள் காண்பீர்கள். உபநிஷத்துக்களிலும் அந்த ஒரு எண்ணமே, பலமேதான் முக்கியமாயிருந்திருக்கிறது. வேதங்களினுடையவும் வேதாந்தத்தினுடையவும் எல்லாவற்றினுடையவும் சாராம்சம் அந்த ஒரு வார்த்தையிலேதான் உள்ளது. புத்தருடைய உபதேசம் எதிர்க்காமலிருத்தல் அல்லது அஹிம்சையே. ஆனால், அந்த விஷயத்தைப் போதிப்பதற்கு இதுதான் இன்னும் சிறந்த வழியென்று நான் நினைக்கிறேன். ஏனெனில், அந்த அஹிம்சைக்குப் பின்னால் பயங்கரமான பலவீனம் உண்டு. எதிர்த்தல் என்னும் எண்ணத்தையே கற்பித்துக்கொள்வது பலவீனம். தண்டிக்கவாவது, அல்

லது கடல் நுரை ஒரு துளியிலிருந்து தப்பித்துக்கொள்ள வாவது நான் நினைக்கவில்லை. அது எனக்கு ஒன்றுமில்லை. ஆயினும், கொசுவுக்கு அது மிகவும் கடினமா யிருக்கும். இப்பொழுது நான் அதுபோன்று எல்லா இம்சையும் செய்வேன். பலமும் பயமின்மையும்! சிப்பாய்க் கலகத்திலே அவர்கள் கொன்றபொழுது, ஹிருதயத்திலே குத்தப் பட்டபொழுது "நீயும் அவனே" என்று சொல்லித் தமது மௌனத்தை உடைத்த மகாத்மாவாகிற அந்த ராக்ஷதரே எனது சொந்த லக்ஷியம்.

"ஆனால், நீங்கள் கேட்கலாம்—இந்த ஏற்பாட்டிலே ராமகிருஷ்ணருடைய இடம் என்ன?

"அவரே உபாயம்—அந்த ஆச்சர்யமான அறியாமல் நடக்கும் உபாயம்! அவர் தம்மைத் தாமே தெரிந்து கொள்ளவில்லை. ஆங்கிலேயர்கள் கடலுக் கப்புறமிருந்து வந்த விநோதமான ஜனங்கள் என்பதைத் தவிர, அவர் இங்கிலாந்தைப்பற்றியாவது அல்லது ஆங்கிலேயரைப் பற்றியாவது அவருக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அவர் அப் பெரிய வாழ்க்கை வாழ்ந்தார்,—நான் பொருளைப் பிடித்துக்கொண்டேன். எவரைப்பற்றியும் எப்பொழுதும் ஒரு வார்த்தைகூடக் கண்டனம் இல்லை!.....

"இதுவரையில் நமது இந்திய மதத்தின் பெருங் குற்றம் அது—தியாகம், முக்தி—என்ற இரண்டு வார்த்தைகளையே அறிந்துகொள்வதில் இருந்தது. இங்கே முக்தி மாத்திரம்தான்! கிருகஸ்தனுக்கு ஒன்றுமேயில்லை!

"ஆனால் இந்த ஜனங்களே நான் உதவி செய்ய விரும்புகிறவர்கள். ஏனெனில், எல்லா ஆத்மாக்களும் ஒரே குணமுடையவர்க ளல்லரா? எல்லாவற்றினுடைய வும் லக்ஷியம் ஒன்றே யல்லவா?

"ஆகையால், பலமானது ஜனசமூகத்துக்குக் கல்வி யின் மூலமாக வரவேண்டும்."

சுவாமிகளுடைய எண்ணம்: 'இந்துமதத்தை வேக முள்ள தாக்கவேண்டும்,' என்பதே. சநாதன தர்மமானது தைர்யமானதாயும் பலமுள்ளதாயும் இருக்கவேண்டும். அதற்கு ஒற்றுமையென்ற எண்ணம் உண்டாகவேண்டும், சுறுசுறுப்பா யிருக்கவேண்டும், பிறரை மதம் மாற்றிச் சேர்ப்பதா யிருக்கவேண்டும். வெளியுலகத்துக்கு அநேக ரை அனுப்பி இந்துமதத்தின் பெருமையை ஸ்தாபிப்பதா யிருக்கவேண்டும், புதிய லக்ஷணங்களைச் சேர்த்துக் கொள்வதாயிருக்கவேண்டும், இந்து மதத்திலிருந்து புறம் பே நழுவிப்போய்விட்டவர்களை மறுபடியும் இந்து மதத்தி னுள்ளே சேர்த்துக்கொள்ளல்வேண்டும். இந்து மதமா னது ஜனசமூக வாழ்க்கையில் ஒரு சக்தியா யிருக்கவே ண்டுமானல், கீழ்நாட்டினுடையவும் மேல் நாட்டினுடைய வும் மிகமிக உயர்ந்த லக்ஷியங்களை மாற்றிக்கொள்ளவும் இவற்றை யநுஷ்டானத்தில் கொண்டுவரவும் வேண்டும்.

சுவாமி விவேகாநந்தருடைய காரியம் இந்தியாவி னுடைய சரித்திரப் பிரக்ஞையைக் கிளப்பிவிட வேண்டும்.

மேனாட்டிலே ஞானதாகம் உண்டாகிறது, இந்தியாவி னுடைய ஞான ஊற்றிலே மேனாட்டுத்தாகம் தணிவதற்கு வேண்டிய அரிய, குளிர்ந்த தீர்த்தம் இருக்கிறது. இந்தத் தீர்த்தத்தை யெடுத்துக் கொடுப்பதற்கு இந்தியாவானது பலமுள்ளதாயும் சோம்பாற்றதாயும் இருக்கவேண்டும். இந்தியா முன்னேற்ற மடைந்து மேன்மை பெறவேண்டு மானால், இந்தியநாட்டுக் கொள்கைகளையும் நாகரிகத்தை யும் மேனாட்டிலே பரப்பவேண்டும்.

கீழ்நாடுகளும் மேல்நாடுகளும் தத்தம் கொள்கைகளை மாற்றிக்கொண்டு ஏற்படுத்திக் கொள்ளும் சம்பந்தத்தி லே, ஒன்றும் தன்னுடைய தனித்த தன்மையை இழந்து விடுதல் கூடாது. தனித்தன்மை போய்விடுமானால், அது கொள்கைகளினுடையவும் அபிப்பிராயங்களினுடையவும் மாற்றுதல் ஆகாது; ஒன்றையொன்று அழித்தல் ஆகும். சுவாமிகள் அவதரிப்பதற்கு முன்னே 'மேனாடு தன் னுடைய கொள்கைகளை இங்கே பரப்பி, இந் நாட்டுக் கொள்கைகளை யழித்துவிடுமோ' என்று ஒருபயம் இருந் தது; 'மேனாட்டு நாகரிகமானது இந்துமதத்தையே கெடுத்துவிடுமோ' என்றும் பய மிருந்தது. ஆனால், நல்ல காலத்திலே, தக்க சந்தர்ப்பத்திலே ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகாநந்தரும் அவதார மானார்கள்.

இந்தியா இதர உலகத்துக்குக் கற்றுக்கொடுப்பதற்கு அநேகம் இருக்கிறது; இதர உலகத்திலிருந்து கற்றுக்கொ ள்வதற்கும் அநேகம் இருக்கிறது. மேனாட்டினிடமிருந்து

அநுபவ சாஸ்திரங்களை யெல்லாம் அறிந்துகொள்ளலாம்; ஆனால், இந்தியா அறிந்துகொள்ளமாத்திரம் போவதில்லை; மேனாட்டிலிருந்து லௌகீக ஞானம் அடைந்தால், அதற்குப் பதிலாக அந்த மேனாட்டுக்குக் கொடுப்பதற்கு எண்ணற்ற, விலையற்ற ஞான திரவியங்கள் இந்தியாவிலே ஏராளமா யிருக்கின்றன. இந்தியா மேனாடுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை அநேக மிருந்தாலும், எதையாவது முட்டாள்தனமாகப் பின்பற்றினால், அதனால் இந்தியாவுக்குக் கெடுதலே தவிர, நன்மை ஏற்படாது. "பிறருடைய உதவியினாலன்று; ஆனால், இந்தியர்களுடைய சக்தியினாலேயே இந்தியா எழுந்திருக்கும்!" என்று சுவாமிகள் அடிக்கடி கூறுவார்.

இந்தியாவிலிருந்து ஞான உண்மைகளை எதிர்நோக்கி ஐரோப்பாவும் அமெரிக்காவும் வெகு ஆவலுடனே காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகலால், இந்தியர்கள் தங்களுடைய வேதாந்த சாஸ்திரத்தை நன்றாகக் கரைகண்டுவிட்டு, உலகுமுழுதும் யாத்திரை செய்து, மதபோதனை செய்துகொண்டு போகவேண்டும். இந்தியா தனது நினைப்பினாலும் ஞானத்தினாலும் உலகு முழுதையும் ஜயிக்க வேண்டும். இந்தியாவுக்கு உலகிலே ஒருமதிப்பும் இடமும் ஏற்படவேண்டும்; வெறும் மதிப்பும் இடமும் மாத்திரம் ஏற்படுவதாகச் சுவாமிகள் கருதவில்லை; உலகுமுழுதுக்கும் உத்தமகுருவாய் நின்று ஞானத்தை யுபதேசிக்கும் முதன்மை ஸ்தானம் இந்தியா பெறப்போவதாகச் சுவாமிகள் கருதினார். சுவாமிகள் "ஈச்வரனுடைய ஆக்ஞை

சென்றுவிட்டது.........ஞான வெள்ளமும் முன்னரேயே கிளம்பிவிட்டது. நான் அதை பூமியின்மேலே எதிர்ப்பற்று, எல்லைபற்று, எல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டு புரண்டு வருவதைப் பார்க்கிறேன்......" என்று கூறினர்.

"கீழ்நாடாகிய இந்தியாவும் மேனடுகளாகிய அமெரிக்காவும் ஐரோப்பாவும் அந்யோந்யம் தமது கொள்கைகளைப் போதித்துக்கொள்வதினல், ராஜீபப் பொருள் ஏதேனும் அதிலிருந்து உண்டாகுமா?" என்றால், சுவாமிகளே "நாம் நம்மை ஜயித்தவர்களை ஜயிப்போம்!" என்று கூறியிருக்கிறர். மேனடு ராஜஸகுணத்தை விருத்தி செய்து பிரபஞ்ச நிலைமையை மேம்படுத்திக்கொண்டிருக்கிறது. இந்தியாவோ சத்தியத்தைக் கடைப்பிடித்து, அநித்தியமாம் இவ்வுலக வாழ்க்கையைப்பற்றி அவ்வளவு கவனிக்கவில்லை. மேனடு உண்மையில் மேம்பாடு அடைய வேண்டுமானல், இந்தியாவினுடைய ஞானத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்; கீழ்நாடு உண்மையில் உயர்வடைய வேண்டுமானல் மேனட்டு லௌகிக ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுசல் வேண்டும். இரண்டுக்கும் அந்யோந்யம் ஒற்றுமை ஏற்படாமற் போனல், ஒருநாளும் இரண்டும் உண்மையான உயர்வை யடைப்போவதில்லை. "வேதாந்தமும் கலைகளுமே" சுவாமிகளுடைய லக்ஷியம். அதாவது, இந்தியாவானது மேனட்டுக்கு என்றைக்கும் மதவிஷயத்தில் குரு ஸ்தானத்தை வகிக்கவேண்டும், வகிக்கத்தான் வகிக்கும்; மேனடு இந்தியாவுக்குப் பிராபஞ்சிக சாஸ்திரங்களைப் போதிப்பதிலே உபாத்தியாயராயிருந்து கொள்ளட்

டும். அந்யோந்யம் மதிப்பும் மரியாதையும் அன்பும் அநு தாபமும் உண்டாகவேண்டும். இம்மாதிரி சமத்துவ நிலைமை யடைந்தாலே இந்தியாவுக்கு க்ஷேமம் உண்டாகும்; பத்திரிகைகளிலே எழுதுவதினாலும், பிரசங்க மேடைகளிலே பேசுவதினாலும், கெஞ்சி நின்று கேட்பதினாலும் ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை.

சுவாமிகளுடைய முயற்சியினாலேதானே அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அநேகர் வேதாந்த மதத்தைத் தழுவ ஆரம்பித்தார்கள். கொளும்புமாநகரிலிருந்து அல்மோரா ஊர்வரையிலே பாரதவர்ஷத்தினுடைய மகிமை கோஷிக்கப்பட்டது; இந்துக் கொள்கைகளின் மகிமை பறை யடிக்கப்பட்டது; இந்தியாவின் முற்கால ஸ்திதி ஸ்தோத்ரம் செய்யப்பட்டது; உலகு முழுதிலும் இந்தியாவின் நாகரிகமே உயர்ந்ததென்று உரத்த குரலில் கூறப்பட்டது. சுவாமிகளுடைய போதனையினாலே, இந்தியாவில் நூதன தர்மங்கள் சில—இவை நூதன தர்மங்களேயல்ல, இப்பொழுது மரந்துவிடப்பட்டிருந்த தர்மங்களேயாகும்—ஏற்பட்டன. பரோபகாரத் தொண்டு ஜனசமூகத்துவம், இந்து மதத்தின் புநர் உத்தாரணம் ஆகிய இவையேயாம். ஸ்வாமிகளுடைய அந்தர் திருஷ்டியின் மூலமாக இந்தியாவானது தன்னறிவு அடைந்துவிட்டது; ஒரு நவ சக்தி பூமியிலே உண்டாய்விட்டது; மகாசக்தி யொன்று வேலை செய்துவருகிறது; ஸ்ரீராமகிருஷ்ணர் "அது உலகத்தை யசைக்கும்" என்று சொன்ன சக்தி அதுதான்.

11. ஸ்ரீ விவேகாநந்தரின் ஜனசமூக வாழ்க்கை.

சுவாமிகளைப்பற்றி அவருடைய சிஷ்யர்களுள் ஒருவராகிய நிவேதிதா சகோதரியம்மையார், சுவாமிகள் மகா சமாதி யடைந்து சிறிது காலத்துக்குள்ளே, "இந்து" பத்திரிகைக்குப் பின் வரும் வியாசம் ஒன்று எழுதினர். அதை நாம் இங்கே நமது வாசகர்களின் நன்மைக்காக மொழிபெயர்க்கிறோம்:—

"விவேகாநந்தர் என உலகுக்கு அறியப்பட்டிருந்தவருடைய சரீர சாந்நித்தியத்திலே இன்று உள்ளதெல்லாம் ஒருபாண்டம் சாம்பரே. எங்களுடைய நதிதீரத்தில் சென்ற ஐந்து வருஷங்களாக ஓதுங்கிநின்று எரிந்துகொண்டிருந்த ஜோதி இப்பொழுது போய்விட்டது. ஜனசமூகங்களினூடே கர்ஜித்துக்கொண்டிருந்த பெரிய சப்தம் மரணத்திலே அடங்கிவிட்டது. ஜீவிதமானது இந்த மஹாத்மாவுக்குப் புயற்காற்றுப் போன்றும் வருத்தம் போன்றும் அடிக்கடி வந்துகொண்டிருந்தது. ஆனால், முடிவு சமாதானமாய்விட்டது. கலியின் ஓரிருண்ட இரவில், மாலைக்கீர்த்தனம் ஆனபின்னர் மரணத்தின் ஆசிவசனமானது மௌனமாக வந்தது. களைத்துப்போய் வாதனை யடைந்த சரீரம் மெல்ல கீழே வைக்கப்பட்டது; ஜயம் பெற்ற ஆத்மா நித்திய சமாதிக்குச் சென்றுவிட்டது.

"அவருடைய முதல் ஜயங்களின் வெற்றிமாலைகள் இன்னும் பச்சையாயிருந்தபொழுதே, அவர் சென்று விட்டார். அவர் தமது காதுகளில் புதியனவும் இன்னும் பெரிய கூப்பிடுதல்களும் ஒலித்துக்கொண்டிருக்கும்பொழுதே, சென்றுவிட்டார். அவர் வியாதியாய்க் கிடந்த அழகிய கிருகத்தில், மத்தியில் சில வருஷங்கள் இடையில் சில மாறுதல்களோடுகூடச் செடிகளின் மத்தியிலும் மிருகங்களின் மத்தியிலும் அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்ட சிஷ்யர்களைக் கர்வமில்லாமல் பயிற்றுவித்துக்கொண்டும், தமது பெயரின்மீது பிரகாசித்த பெருங் கீர்த்தியை மௌனமாக அலக்ஷியம் செய்துகொண்டும் அமைதியாகச் சென்றன. செய்யப்படத் தகுந்த வேலையின் அவருடைய சொந்த, கடுமையான, சுருக்கமான பொருள் மனுஷ்யனுக்குவதே. பிரதிதினமும் மிகப் பாடுபட்டு, சற்றும் பின் வாங்காமல் அவர் முறையே குருஸ்தானம் வகித்து, பிதா ஸ்தானம் வகித்து, பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் ஸ்தானம்கூட வகித்து, மனுஷ்யனுக்கும் வேலையில் முயற்சி செய்தார். அவர் எங்களைவிட்டுப் பிரிந்த அன்றைய பிற்பகலிலேயே, அவர் ஸம்ஸ்கிருத இலக்கணத்தைப்பற்றி ஒருபாடம் சொல்லிக்கொடுத்து மூன்று மணி நேரம் செலவழிக்கவில்லையா? அத்தகைய புருஷனுக்கு வெளிஜயமும் தலைமைத் தன்மையும் ஒன்றுமேயில்லை. மேனாட்டிலே அவர் இருந்த காலங்களிலே, தங்கள் மத்தியில் அவரைச் சந்தோஷமாக வைத்துக்கொள்ள எண்ணமுள்ள தனவந்தர்களும் சக்தியுள்ளவர்களுமான நண்பர்கள் அவருக்குக்

கிடைத்தார்கள். ஆனால், அவருக்கோ, மேனாடு அதன் ஆடம்பரங்களுட னெல்லாம் இருந்தும் ரம்யமா யில்லை. அவருக்குப் பிச்சைக்கார உடையும், கல்கத்தாவின் சந்துக ளும், தமது சொந்த ஜனங்களின் குறைகளும், அந்ய னுடைய பெருமை எல்லாவற்றைக்காட்டிலும் அதிக அருமையா யிருந்தன. (அவரைத்) தங்கச்செய்த ஜனங்கள் கீழ்நாட்டைநோக்கி மேன்மேலும் எப்பொழுதும் சென்று கொண்டிருந்தவரைப்பிடித்த பிடிப்பை நழுவவிட வேண்டி யிருந்தது.

"அத்தனை பெயர்கள் அவருடைய பெயரை உலகின் மகத்தான மதாசார்யர்களுள் ஒருவராக வைத்துப் புகழ்வ தற்குக் காரணமாய், மேனாடு அவரிடத்திலே கேட்ட விஷ யம் என்ன? அவர் சொந்த உரிமை யொன்றும் பாராட்ட வில்லை; அவர் சொந்தக் கதையொன்றும் சொல்லவில்லை. அவர் அறிந்து நெடுங்காலம் நம்பிக்கை வைத்திருந்த ஒரு வர் அவருடைய சகோதர சந்நியாசிகளுக்குள்ளே அவர் பிரத்தியேக நிலைமை எதையும் கொண்டதாக ஒருபொழு தும் கேள்விப்பட்டதில்லை. அவர் ஈச்வரனுடையதா கட்டும், குருவினுடையதாகட்டும், எந்த ரூபத்தையும் அல்லது கக்ஷியையும் அந்நியர்களுடனே பிரியப்படுத்துவ தற்கு முயற்சிக்கவில்லை. ஆனால், அவர்மூலமாக இந்து மதத்தின் பெருவெள்ளமானது ஹிமாலயப் பனிகளிலே யுள்ள ரகஸ்யமான உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து புறப் பட்டுப் புத்தியுலகங்களிலும் ஞான உலகங்களிலும் தனது

குளிர்ச்சியான தண்ணீரைக் கொட்டிற்று. இந்திய கிருகங் களினுடையவும் பரிசுத்த புருஷர்களினுடையவும் பெரிய மத நாகரிகத்துக்கு சாக்ஷியாக இல்லாமல் அவரால் ஒரு பொழுதும் இருக்க முடியவில்லை. ஆயினும், அவர் உப நிஷத்துக்களைத் தவிர வேறொன்றையும் மேற்கோளாகக் காட்டியதில்லை. அவர் வேதாந்தத்தை தவிர ஒன்றையும் உபதேசிக்கவில்லை. மனிதர்கள் நடுங்கினார்கள்; ஏனெனில், அவர்கள் சத்தியத்தைக் கண்டு அஞ்சாத மதாசார்ய ருடைய வார்த்தையை முதற்றடவை கேட்டார்கள்.

"சிவன் தெருவிலே போகிறபொழுது சிவனைப்பற்றிப் பாடுகின்ற பாடலை நாம் எல்லோரும் அறியோமா?— 'அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது,' என்று சிலர் சொல்லுகிறார்கள்; 'அவர் பைசாசம்,' என்று சிலர் சொல்லு கிறார்கள்;—'உங்களுக்குத் தெரியாதா?—அவர் ஈச்வரனே,' என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படியே இந்தியாவும் ஒவ்வொரு மகாத்மாவும் எதிர்பாடான கொள்கைகளின் சந்திக்கும் இடமும் ஒற்றுமையிடமும் என்ற நினைப்பைச் சாதாரணமாகக் கொண்டிருக்கிறது. விவேகாநந்தர் அவ ருடைய சிஷ்யர்களுக்குச் சந்யாசியின் பரிபூரணமாதிரி யாகவே எப்பொழுதும் இருப்பார். அவர் மூலமாக எங்க ளிடம் பேசிய அருள்மொழிகள் எல்லாவற்றிலும் முக் கியமானது தபிக்கின்ற தியாகமேயாம். அவர் ஒரு சமயத்திலே ஆத்திரம் மிகுந்தவராய், "பொன்னை, பெண்ணை, கீர்த்தியை லக்ஷியம் செய்யாமல் நானும் எனது

குருமூர்த்தியைப் போல ஒரு உண்மையான சந்நியாசியாகவே மரிப்பேனாக! இவற்றுள்ளே மிகமிகக் கெட்டது கீர்த்தியின்பேரிலுள்ள ஆசை!'' என்று கூறினார். ஆயினும், அத்தியந்த வைராக்கியமாகிற இந்தத் தாப தாகத்தினால் அவரை நிரப்பிய அதே விதிதான் ரக்ஷித்துக் காப்பாற்றவேண்டுமென்ற ஆசை நிரம்பியவரும், பொருள்களின் உபயோகத்தைச் சற்றுப் போதிக்க ஆவலுள்ளவரும், வாழ்க்கையின் மாற்றமைப்பையும் மாற்றொழுக்கத்தையும் உண்டாக்க வல்லவருமான மாதிரி கிருகஸ்தரைத் தம்முள்ளே உருப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தார்............

"அதுபோலவே, அவர் ஒரே சமயத்தில் பிரக்ஞாதீதமான ஒரு மதத்தின் வெளிப்பாடாயும் இதுவரை ஜனித்துள்ள மிகமிகப் பெரிய தேசாபிமானிகளுக்குள்ளே ஒருவராயு மிருந்தார். அவர், சமுதாயம் சிதறுகின்ற ஒரு சமயத்திலே வசித்தார்; அவர் புதியதைக் கண்டு பயமற்றவரா யிருந்தார். ஜனங்கள் தங்களுடைய பிதுரார்ஜித சொத்தை வெறுத்துக்கொண்டிருந்தபொழுது அவர் வசித்தார்; அவர் புராதனத்தின் தீவிரமான உபாசகரா யிருந்தார். அவரிலே—புதிய பிரக்ஞையாம் அலையொன்று எப்பொழுதும் மதத் தலைவர்களிடத்தே உண்டாகவேண்டும்—என்றுள்ள ஜனசமூக நியமனம் நிறைவேறிக்கொண்டது. அத்தகைய புருஷரிலே வருங்காலம் முழுதையும் நாம் அடைகிறோ மென்னலாம். ஆயினும்,

விவேகாநந்தருடைய மதக் குறிப்பை அறிந்துகொள்வதற்குக் காலம் வரவில்லையென்பது நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். மதமே உயிருள்ள விதை; அவர் விதைத்து ஆய்விட்டது. அவருடைய அறுப்புக் காலம் இன்னும் ஆகவில்லை. ஆனால், மரணமே உண்மையில் தனது தேசத்துக்குத் தேசாபிமானியை யளிக்கிறது. குருமூர்த்தி தமது சிஷ்யர்களின் மத்தியிலிருந்து சென்றுவிட்டபொழுது, குரல்களெல்லாம் அவரைக் குற்றங் கூறியவர்களுடைய ஸ்மசானத்திலே அடக்கப்பட்டுவிட்டபொழுது, அப்பொழுது, ஸ்வதந்திரத்தைப்பற்றிப் பேசிய அப் பெருங்குரல் எதிர்ப்பாரின்றி ஒலிக்கின்றது; ஜனசமூகங்களெல்லாம் ஒரே மனிதன் போல மறுமொழியளிக்கின்றன.

"அநேக தேசங்களின் ஜனங்களை அந்தரங்கமாகக் கவனித்தற்கு விசேஷ சந்தர்ப்பங்களை யுடைத்தாயிருந்த ஒரு மனம் இங்கே யிருந்தது. அவர் மேனாட்டையும் கீழ் நாட்டையும் பார்த்தார்; உயர்ந்தவர்களாலும் தாழ்ந்தவர்களாலும் வரவேற்கப்பட்டார். அவருடைய அழகிய புத்தி அது கண்டதை யறிவதற்கு ஒருபொழுதும் தவறியதில்லை. "அமெரிக்காவானது சூத்திரருடைய கேள்விக்கு விடை கொடுக்கும்; ஆனால், என்ன பயங்கரமான குழப்பத்தினூடே?" என்று அவர் அநேகதடவை சொல்லியிருக்கிறார். இரண்டாவது தடவை போயிருந்தபொழுது, ஆயினும், அவர், மேனாட்டிலே ஐச்வர்யத்தின் ஆசையை

யும் துன்பமாகிற அவாவையும் பார்த்துக்கொண்டும், அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே சீனதேசத்திலே ஒழுங்கு படுத்தப்பட்ட பழைய ஆசியாத் தீர்மானங்களின் சன்மார்க்க உறுதியுடனும் அமைதியான பெருமையுடனும் இவற்றை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டும், தமது மனத்தை மாற்றுவதற்குத் தூண்டப்பட்டார். அவருடைய பெரிய புத்தி அற்புதமான ஜீவகாருண்யத்துடனே சேர்க்கப்பட் டிருந்தது. ஆப்பிரிக்க ஜாதியாரை நிந்தித்துப் பேசிய ஒரு அமெரிக்கக் கனவான்மீது அவர் திரும்பிநின்று கண்டித்த மாதிரி நீகிரோவனுக்கு நம்பிக்கை யுண்டாகும்படியான அத்தகைய ஒரு உண்மையை நாங்கள் ஒருபொழுதும் கனவு கண்டதில்லை. (அமெரிக்காவில்) தென்னாடுகளில் அவர் அடிக்கடி கறுப்பு மனிதனாகவே கருதப்பட்டு, அப்படியே சில வீடுகளில் மறுக்கப்பட்டபொழுது அவர்கள் சொல்லியதை (சுவாமிகள் நீகிரோவர் என்றதை) அவர் ஒருபொழுதும் மறுத்ததாகத் தெரியவரவில்லை. அவ்ருடைய மௌனத்துக்குக் காரணம் கேட்கப்பட்டபொழுது அவர் "அது என்னுடைய சகோதரனை நான் மறுத்தது போன்று இராதா?" என்று மாத்திரம் சொன்னார். அவருக்கு ஒவ்வொரு ஜாதியாரிடத்தும் அதற்குச் சொந்தமான பெருமை யுண்டு, அந்த மத்தியகுண ஒளியிலே பிரகாசித்தது. துருக்க ரில்லாமல் ஐரோப்பாவில்லை; பூமியின் ஜனங்களுடைய அபிவிருத்தி யில்லாமல் எகிப்துதேசமில்லை. இங்கிலாந்தானது தன்மதிப்புடனே கீழ்ப்படிதலாகிய ரகஸ்யத்தைக் கிரகித்துக் கொண்டது. ஜப்பா

னுடைய தேசாபிமானத்துடன் அதே மூச்சில் எந்தத் தேசாபிமானத்தையும்பற்றிப் பேசுவது ஈச்வர நிந்தையாம்.

"அப்படியாயின் விவேகாநந்தர் தமது ஜனங்களுக்கு வைத்துவிட்டுப்போன தீர்க்கதர்சனந்தான் என்ன? அவர் சென்றபொழுது தமக்குப்பின்னே போட்டுவிட்டுப்போன அந்தக் காஷாய உடையை அவர் என்ன ஜாதீயப் பொருளுடனே தரித்திருந்தார்? ஒருவேளை நாம் நமது துவஜஸ்தம்பத்தின்மீது மஞ்சட் கந்தைகளைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, அவற்றை நமது கொடியாக முன்னே கொண்டு செல்லவேண்டுமா? நிச்சயமாய்ச் செய்யவேண்டும். ஏனெனில், தவறுதல் என்பதைப்பற்றி யொருபொழுதும் கனவுகூடக் காணாத ஒருபுருஷன் இதோ இருந்தார். பலத்தைத் தவிர வேறொன்றையும்பற்றிப் பேசாத ஒருபுருஷன் இதோ இருந்தார். மன உணர்ச்சியினின்றும் மிகமிக நன்றாக விடுபட்டவர், எல்லா அதிகாரத்தையும் மிகமிக நன்றாக எதிர்த்தவர்—பாதிரிகள் கூறிய அபவாதச் சொற்கள் இன்னும் நமது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கவில்லையா? அவர்களில் சிலர் புதிய கர்வ அநுபவத்துடனே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியில்லையா?— அவர் தாம் குருவைப்போன்று தவிர எந்த அந்நியனையும் சந்திக்க மறுத்துவிட்டார். அவரை நன்றாக அறிந்த ஒரு ஆங்கிலேயர்: 'சுவாமிகளுடைய பெரும் சமர்த்து அவருடைய கம்பீரத்தில் இருக்கிறது. அது ராஜீய கம்பீரத்திலே சற்றும் குறைந்த தல்ல!' என்று கூறினர். கிழக்கு முகஸ்துதி

செய்பவனைப்போலல்லாது, ஒரு வேலைக்காரனைப்போ லல்லாது, ஆனால் ஒரு குருவைப்போல, உபாத்தியாயரைப் போல வரவேண்டுமென்றுள்ள உண்மையை அவர் கிரகித்திருந்தார்; அவருடைய சொந்த உயர்வாம் கொடியை அவர் ஒருபொழுதும் தாழ்த்தியதில்லை. உற்சாகமே யில்லாத, ஆழ்ந்த நிந்தனையுடனே அவர் "ஐரோப்பியர்கள் நம்மை யிட்டுக்கொண்டு செல்லட்டும்" என்று சொல்வார். ஒருசமயத்திலே அவர் "நான் பழியைப்பற்றி யொருபொழுதும் பேசினதில்லை. நான் பலத்தைப்பற்றியே எப்பொழுதும் பேசிவந்திருக்கிறேன். கடல்நுரையாகிற இந்தத் துளியிலே நம்மை நாமே பழி வாங்கிக்கொள்ளக் கனவு கொள்ளுகிறோமோ? ஆனால், அது ஒரு கொசுவுக்கு ஒரு பெரிய விஷயம்!

"அவருக்கு இந்தியனுயுள்ள எதுவும் மன்னிப்பை வேண்டவில்லை. அந்நியனுடைய போலி நாகரிகத்துக்கு எதுவாவது காட்டு மிராண்டித்தனமாக அல்லது முரட்டுத்தனமாகத் தோன்றிற்று? மறுக்காமல், எதையும் சுருக்கிக்கொள்ளாமல், அவருடைய அபாரமான சக்தி அந்த விசேஷ விஷயத்தை நிரூபிப்பதிலே உடனே ஒருமுகப்படுத்தப்பட்டது; குறை கண்டுபிடிக்க வந்தவன் துரதிர்ஷ்டசாலியே; அவன் முன்னும் பின்னுமாக அவருடைய சொந்த நியாயத்திலேயே அலைக்கப்பட்டான். கப்பலிலிருந்த ஒரு ஆங்கிலேயன் அவரைப் புராணங்களைப்பற்றிப் பரிகாசமாக ஏதோ கேள்வி கேட்டபொழுது ஒரு

திருஷ்டாந்தம் நடந்தது. இந்துபுராணங்களைக் கிறிஸ்தவ வேதங்களுடனே அநுகூலமாக ஒப்பிட்டுப் பார்த்தது மன்றியில் வேதங்களையும் உபநிஷத்துக்களையும் எந்த எதிரியினுடையவும் கைக்கெட்டாதபடி உயரத்திலே கொண்டுபோய் நட்டபதிவினால் அவன் தூகள் தூகளாக்கப்பட்டானென்பதை அங்கேயிருந்த எவரும் ஒருபொழுதும் மறத்தல் முடியாது. ஜனசமூகத்தைப் பாதுகாக்கும் பெயரால் அந்த நிமிஷத்திலே இரக்கமில்லாமல் தியாகம் செய்யாத நண்பர் கிடையாது. ஒருவேளை அத்தகைய நோக்கம் எப்பொழுதும் நியாயமானதாயிராது. அது அடிக்கடி உண்மையில் நேர்மையாய் அசந்தோஷமானதே. எதிரிகளும் மெச்சவேண்டிய ஆண்மையிலே அது கம்பீரமாயிருந்தது. இன்னும், விவேகாநந்தருக்கு, இந்தியனாகிய ஒவ்வொன்றும் அப்படியப்படியே பரிசுத்தமானதாயிருந்தது—'ஈச்வரமுகமாக உள்ள வழியைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற எல்லா ஆத்மாக்களும் வரவேண்டிய இந்தப் பூமியினுடைய' என்று சுவாமிகள் அழகாகக் கூறினார். சிக்காக்கோ நகரத்திலே பெரிய உலகச் சந்தைக்கு வந்திருந்த எந்த இந்திய மனிதரும் தனவந்தராயிருந்தாலும் சரி-தரித்திரராயிருந்தாலும் சரி, உயர்ந்தவராயிருந்தாலும் சரி - தாழ்ந்தவராயிருந்தாலும் சரி, இந்துவாயிருந்தாலும் சரி-மகம்மதியராயிருந்தாலும் சரி, பார்ஸியாயிருந்தாலும் சரி - எப்படியிருந்தாலும் சரி உபசரணைக்கும் மரியாதைக்கும் அவருடைய நண்பர்களிடத்து எந்த நிமிஷத்திலும் கொண்டுவரப்படலாம்; இவர்களுள் எவருக்கும்

பிரியம் செலுத்தத் தவறினல் உடனே அவர் அங்கிருந்து போய்விடுவாரென்று அவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

"அவரே இந்துமதத்தை யெடுத்துரைக்கச் சென்றவர்; ஆனல், இன்னெரு இந்திய மதத்தினர் தமது விஷயத்தை எடுத்துச்சொல்வதற்குக் கஷ்டப்படுவதைக்கண்டு, அவர் கீழே யுட்கார்ந்து, அவருடைய நண்பர் மதத்துக்கு அதைச் சேர்ந்தவன் செய்வதைப்பார்க்கிலும் அதிக நல்லதாக அவருடைய பிரசங்கத்தை அவருக்கு எழுதிக் கொடுத்தார்!

ஐரோப்பிய "சிஷ்யர்கள் தங்கள் விரல்களினல் எடுத்து உண்ணும்படியாகச் சொல்லிக்கொடுப்பதற்கு அதிக கஷ்டம் எடுத்துக்கொண்டார்; இந்து வாழ்க்கையின் சாதாரண செய்கைகளைச் செய்யவும் கற்றுக்கொடுத்தார். 'ஞாபகம்! நீ இந்தியாவைச் சிறிதளவேனும் நேசித்தால், நீ அதை அது உள்ளபடி நேசிக்கவேண்டும்; நீ அது எப்படியாக வேண்டு மென்று விரும்புகிருயோ அப்படியல்ல" என்று அவர் கூறுவது வழக்கம். சாதாரண இந்திய ஜனங்களுடைய சாதாரண வாழ்க்கையாம் அந்தப் பூர்வீக காவ்யத்தின் அழகுக்கும் பலத்துக்கும் அவரை நேசித்த அந்த அந்யர்களுடைய கண்களை யொருவேளை திறப்பதற்கு வேறெந்த விஷயத்தையும்விட அதிகமாக வேலை செய்தது உண்மையில் உள்ளதுக்குப் புறைபோன்று நின்ற அவருடைய இப் பெரிய உறுதியேயாம். அவருடைய விஷயத்தில்...........ஒவ்

வொரு பூமியினுடையவும் மிகமிகச் சிறந்தது அவருக்கு அளிக்கப்பட்டது; ஆனல், மாறுதலுக்கு எவ்வித ஆவசியகத்தையும் காணமல் தமது சாதாரணத் தன்மையிலே கர்வமடைந்த பழையகாலத்து ஹிந்துமாதிரியிலே அவரை விட்டுவிட்டது. அவர் மரணமடைதற்கு இரண்டு நாட்களுக்குமுன் அவர் 'ராமகிருஷ்ணருக்குப் பின் நான் வித்யாசாகரரைப் பின்பற்றுகிறேன்' என்று கூறினர்; ராஜப் பிரதிநிதி சபையினுள்ளே பழையகாலத்துச் சட்டையையும் வேஷ்டியையும் தரித்துக்கொண்டு பாதக்குறடுகளைத் தரித்துக்கொண்டு போகும் கதை அடிக்கடி கூறப்பட்டது; ஆச்சர்யத்துடனே, "ஆனல், நீங்கள் என்னை விரும்பவில்லையானல், என்னை ஏன் வரும்படி கேட்டீர்கள்?' என்று கிழட்டுப் பண்டிதர் கூற, அவர்கள் மறுத்து நியாயம் பேசினர்கள்.

"ஆயினும், அத்தகைய விஷயங்கள் சொந்த லக்ஷணங்களாக மாத்திரம் நன்ருயிருக்கின்றன. அவர்களின் மூலமாகப் பேசிய நிச்சயத்தைப்பற்றிய கேள்வி இன்னும் ஆழ்ந்து பிரதானமானது. இது என்ன? அது எங்கு இட்டுச் சென்றது? அவருடைய ஜீவிதம் முழுதும் ஹிந்து மதத்தின் பொது அஸ்திவாரத்தை நாடுதலா யிருந்தது. இரண்டு பைசா தபால் முத்திரையும், சுலபமான யாத்திரையும், விஷயங்களுக்கு ஒரு பொது பாஷையும் இருந்தால் அதனல் ஜனசமூக ஒற்றுமையும் உண்டாகக் கூடுமென்று நினைப்பது குழந்தைத் தன்மையினதாம், மேல் மட்டத்திலேயுள்ள நினைப்பாம்......அத்தகைய ஒற்றுமை

முன்னமே யிருந்ததா? இல்லையா? எட்டு வருஷங்கள் போல, அவர் ஒவ்வொரு கிராமத்திலும் தமது பெயரை மாற்றிக்கொண்டு, தாம் சந்தித்த ஒவ்வொருவரையும் பற்றித் தெரிந்துகொண்டு, தாராளமாகவும் - பொதுவாக வும்-கூர்மையாகவும்-நுட்பமாகவும் ஆராய்ந்து பார்த்துக் கொண்டு பூமியிலே சுற்றினார். அவர் சர்வமத மகா சபையி லே மேனாட்டின் முன்னே நின்று ஹிந்துமதமானது மற்றெந்த மதத்தையும்போலப் புத்தி யாக்கிரகத்திலே நிரம்ப வல்லமையுள்ள தென்னும்படி அவ்வளவு பரி பூர்ணமான ஸ்வதந்திரமான ஒன்றினிடத்தே ஒன்றுபட்ட தென்பதை ருசுப்படுத்தியபொழுது இந்த நாட்டம்தான் அவரை நிச்சயமாகப் பின் தொடர்ந்து சென்றது. தமது ஜனங்கள் வேறெந்த ஜனசமூகத்து ஜனங்களுக்கும் எவ் விதத்திலும் குறைந்தவர்களென்று அவருக்கு ஒருபொழு தும் தோன்றவில்லை. மதமே அவர்களுடைய ஜனசமூக வெளிப்பாடென்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு, அந்த மண்டலத்திலே அவர்கள் காண்பிக்கலாமான பலமானது சீக்கிரத்திலே, கற்பிக்கக் கூடிய வேறு ஒவ்வொரு வித மான பலத்தினாலும் பின் தொடரப்படு மென்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார்.

"ஜாதியைப்பற்றி ஆழ்ந்த வித்துவான் போன்று, அவருடைய சம்பாஷணை எதிர்பாராத விசேஷங்களாலும் விரோதங்களாலும் நிறைந்திருந்தது. மகம்மதியர்கள் ஜனசமூகத்தினுடைய ஒரே ஜாதி யாவார், கிறிஸ்தவர்கள்

இன்னொரு ஜாதி, பார்ஸீயர்கள் இன்னொரு ஜாதி, இப்படியேதான். (கடைசியைத் தவிர) இவர்கள் எல்லாவற்றிலும் ஜாதியிலே நம்பிக்கையின்மையே ஒரு ஜாதி வித்தியாசமாம். ஆனால், பிரஹ்ம சமாஜத்தினுடையவும் ஹிந்து மதத்தினுடைய மற்ற வகுப்புக்களினுடையவும் ஸ்திதியும் அப்படியே உண்மைதான. எல்லாவற்றுக்கும் பின்னால் ஒரே மாதிரியாக ஒரு பூமியின் பெருத்த பொது விஷயங்கள் நின்றன; முன்னோர்களுடைய நாகரிகத்தின் ஓர் அழகிய பழங்காலத்துப் போக்கு நின்றது; கடைசியாகப் பொது அன்புக்கும் பொதுப் பகைகட்கும் இட்டுச் செல்ல வேண்டிய அபரிமிதமான ஆவசியகங்கள் இருந்தன.

"ஆனால், அவர் இந்திய ஜனங்களின் ஒவ்வொரு வகுப்பினுடையவும் கூட்டத்தினுடையவும் நம்பிக்கைகளையும லக்ஷியங்களையும் மாத்திரம் அல்ல, அவர்களுடைய ஞாபகங்களைக்கூடக் கற்றிருந்தார். கல்கத்தாவிலே இந்துக்கள் வசிக்கும் பாகத்திலே குழந்தையாய்ப் பிறந்து கங்காதீரத்திலேயே வசிப்பதற்கு மறுபடியும் வந்தும், அவருடைய உற்சாகத்திலிருந்து அவர் இப்பொழுது பஞ்சாபிலே பிறந்தவரென்றும், ஹிமோத்கிரியிலே ஜனித்தவரென்றும், அடுத்தாப்போல ராஜஸ்தானத்திலே பிறந்தவரோ யென்றும், அல்லது வேறெங்காவது பிறந்தவரோ யென்றும் கருதப்படவேண்டி யிருந்தது. குரு நானக்கினுடைய பாடல்கள் அவருடைய நாவிலே மீராபாயினுடையவும் தானஸேனருடையவும் பாடல்களோடு மாறி மாறி வெளிவந்தன. டில்லியைப்பற்றியும் பிரதிவிராஜ

னைப்பற்றியும் உள்ள கதைகள்: சித்தூரைப்பற்றியும், பிரதாபசிங்கைப்பற்றியும், சிவனைப்பற்றியும், உண்மையைப் பற்றியும், ராதையைப்பற்றியும், கிருஷ்ணனைப்பற்றியும், சீதாராமனைப்பற்றியும், புத்தனைப்பற்றியும் உள்ள கதைகளோடு கலந்து வெளிப்பட்டன. அவர் நடிகரா யிருந்த பொழுது ஒவ்வொரு பலமான நாடகமும் ஆச்சர்யகரமான உண்மையில் நடைபெற்றது. அவருடைய ஹிருதயமும் ஆத்மாவும் எல்லாம், தேசத்தினுடைய பெயர் சொன்ன மாத்திரத்திலேயே அதி ரகஸ்யமான ஒரு ஆவலினால் பெருக்க மடைந்து, கொதிக்கின்ற ஒரு புராணமா யிருந்தது.

"ஸ்ரீவிவேகாநந்தர் வேலூரில் தமது ஆச்ரமத்தில் உட்கார்ந்துகொண்டு நாலா பக்கங்களிலு மிருந்தும் வருவோர்களையும் கடிதங்களையும் வரவேற்றார். பாந்த மேல் மட்டம் மௌனமா யிருக்கலாம்; ஆனால், இந்தியாவின் ஆழ்ந்த இருதயத்திலே, ஸ்வாமிகள் ஒருபொழுதும் மறக்கப்பட வில்லை. எவரும் அவரை மறந்துவிட முடியாது; எவரும் அவரை மறந்துவிட விரும்பவில்லை. அவருடைய செவியிலே உரைக்கப்படாத நம்பிக்கை யில்லை—அவர் அறிந்து சுகப்படுத்த அல்லது இளைப்ப முயற்சியாத துன்ப மில்லை. இவ்விதமாக, எப்பொழுதும் மதாசார்யர் விஷயத்தில் வழக்கம்போல, அவர் பார்த்த இந்தியா வேறெந்தக் கண்ணுக்கும் பிரத்தியக்ஷமாயுள்ளது போன்றதல்லாத விநோதகரமான ஒரு காக்ஷியை அளித்தது. ஏனெனில், அவர் தமது கைகளில் மூலகாரணமான,

அமைப்பான, உயிர்நிலையான எல்லாவற்றினுடையவும் சரட்டைப் பிடித்து வைத்திருந்தார். அவர், ஜீவிதத்தின் ரகஸ்ய ஊற்றுக்களை யறிந்திருந்தார்; எந்த வார்த்தை கூறி லக்ஷக் கணக்கானவர்களுடைய இருதயத்தை ஸ்பர்சிப்பது என்பதை அறிந்திருந்தார். அவர் இந்த அறிவெல்லாவற்றி னிடமிருந்தும் ஒரு தெளிந்த, நிச்சயமான நம்பிக்கை யைச் சேர்த்து வைத்திருந்தார்.

"மற்றவர்கள் அவர்களுடைய இஷ்டப்படி தப்புச் செய்துகொள்ளட்டும். அவருக்குத் தேசம் வாலிபமா யிருந்தது; இந்திய பாஷைகள் இன்னும் ஒழுங்கடைய வில்லை; இஷ்டப்படி ஆக்கற்கு இடங்கொடுத்தன; ஜன சமூக சக்தியானது இன்னும் விரயம் செய்யப்படவில்லை. அவர் சொப்பனங் கண்டுகொண்டிருந்த இந்தியா வருங் காலத்தில் இருந்தது. துன்பத்தின் மூலமாகவும் கஷ்டத் தின் மூலமாகவும இன்றையதினம் ஆரம்பிக்கப்பட்ட புதிய மாதிரி அறிவு ஒரு நீண்ட வளர்ச்சியிலே முதற்படி யேயா யிருக்கவேண்டி யிருந்தது. அவருக்கு, அவருடைய தேசத்தின் நம்பிக்கை அதனிடத்திலேயே இருந்தது, ஒருபொழுதும் அந்யனிடத்தி லிருக்கவில்லை. அவருடைய பெரிய ஹிருதயமானது அந்நியனுடைய ஆவசியகத்தை யும் தழுவிக்கொண்டு, உலகுக்கு ஒரு சமரசமான உறுதி வாக்கைத் தொனித்தது என்பது உண்மைதான். ஆனல், அவர் ஒருபொழுதும் உதவியை நாடியதில்லை, உதவிக்கு இரந்தது மில்லை. அவர் ஒருபொழுதும் எவர்மீதும்

சார்ந்திருந்தது மில்லை. எது செய்யப்படலாமோ அதைச் செய்வது செய்பவனுடைய பாத்தியதையே; ஏற்றுக்கொள்வது பெற்றுக்கொள்பவனுடைய பாத்தியதை யல்ல. அவருக்கு வெளியிலிருந்து பயமு மில்லை, நம்பிக்கையு மில்லை. இந்தியாவினுடைய பிரதான ஆத்மாவா யுள்ளதை உறுதிப்படுத்தி, ஜனசமூக வாழ்க்கையின் போராட்டத்தைப் புதிய தன்னம்பிக்கையிலும் உறுதியிலும் பலமாக விட்டுவிடுவது, சமுத்திரத்துக்குத் தனது வழியைத் தானே கண்டுகொள்வது, இதுதான் அவருடைய சந்யாசத்தின் பொருள். ஏனெனில், அவருடைய சந்யாசமானது சிரேஷ்டமான மகா ஸேவையாகிற சந்யாசமா யிருந்தது. அவருக்கு இந்தியா: இந்துவினுடையதாயும், ஆர்யனுடைய தாயும், ஆசியாக் கண்டத்தினுடையதாயுமிருந்தது. அதன் வாலிபர்கள் தற்கால ஆடம்பரத்திலே தங்கள் சொந்த சோதனைகளைச் செய்துகொள்ளலாம். அவர்களுக்குப் பாத்தியதை யில்லையா? அவர்கள் திரும்பி வரமாட்டார்களா? ஆனால், அதன் வாழ்க்கையின் போழங்கள் சன்மார்க்கமாயும், கடுமையானவையாயும், ஆத்மீகமாயும் இருந்தன. கங்காதீரத்திலே மரணத்தைத் தழுவ வல்ல ஒரு ஜனங்கள் வெறும் யந்திர சக்தியின் பகட்டினாலே நெடுநாட்கள் மோசம் போகமாட்டார்கள்.

"புத்தர் தியாகத்தை உபதேசித்தார்; இரண்டு நூற்றாண்டுகளிலே இந்தியா ஒரு சக்ராதிபத்தியம் ஆய்விட்டது. அது இன்னுமொரு முறை அதன் நரம்புகளெல்லா

வற்றினூடும் பெரிய நாடியை உணர்ந்து மாத்திரம் பார்த்துக்கொள்ளட்டும்; உலகிலுள்ள எச் சக்தியும் புதிதாக எழுப்பப்பட்ட அதன் சக்தியின் முன்னே நிற்காது. அது தன்னுடைய சொந்த வாழ்க்கையிலேயே ஜீவிதத்தைக் கண்டுகொள்ளும், போலி வாழ்க்கையி லல்ல; அது தனது சொந்த, நியாயமான முற்காலத்திலிருந்தும் சுற்றத்திலிருந்துமே அருள் பெற்றுக்கொள்ளும், அந்நியனிடமிருந்தல்ல.

"ஏனெனில், எவனொருவன் தான் பலவீனனென்று நினைக்கிறானோ, அவன் பலவீனனாகவே யிருக்கிறான்; எவனொருவன் தான் பலமுள்ளவனென்று நம்புகிறானோ, அவன் ஜயிக்க முடியாதவனாகவே யிருக்கிறான். ஆகையினாலே, அவருடைய ஜனசமூகத்துக்கு, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் போலவே, விவேகாநந்தர் ஒரே வார்த்தை-இடைவிடாமல் திரும்பத் திரும்ப ஒரே செய்தியை—கூறினார்:—

"விழித்துக் கொள்ளுங்கள்! எழுந்திருங்கள்! மேலே முயலுங்கள்! லக்ஷியம் அடையப்படுகிறவரையில் நிற்காதீர்கள்!"

12. என்ன ஆச்சர்யமான புருஷன்!

ஸ்வாமிகள் என்ன ஆச்சர்யமான புருஷன்! சகல பக்கங்களிலிருந்தும் வழிந்து ஓடும் ஜலமானது சமுத்திரத்தில் வந்து ஒன்றாய்ச் சேர்வதுபோல, சகல அறிவும்

சகல லக்ஷணங்களும் ஸ்வாமிகளிடம் ஒன்று சேர்ந்திருந்தன. அவருடைய புத்திப் பிரகாசம், அவருடைய விஸ்தாரமான கல்வி, அவருடைய வசீகர சக்தி இவை ஜனங்களை அவருக்கு அப்படி யப்படியே அடிமையாக்கிக் கொடுத்தன. அவரிடத்திலே எவராலும் எதிர்க்க முடியாத ஒரு சக்தி இருந்தது. 'ஸ்வாமிகளை எதிர்த்துப் பேசி ஜயிக்கவேண்டும்,' என்று அநேகர் வந்தார்கள். ஆனால், அவர்கள் ஸ்வாமிகளைக் கண்ட மாத்திரத்திலே, அவர்களுடைய அந்த எண்ணமானது எங்கோ பறந்துவிட்டது. ஸ்வாமிகளுடைய நியாயத்துக்கு மிஞ்சி நியாயம் பேசுபவர் எவருமே யில்லை. நியாயம் பேசி ஸ்வாமிகளை ஜயித்தவர்கள் எவருமே யில்லை. ஸ்வாமிகளுடைய குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒருவரே ஸ்வாமிகளைச் சில சமயங்களில் வென்றிருக்கிறார். ஸ்வாமிகள் பலமான அபிப்பிராயங்களுடையவ ராதலினாலே, எதிராளிகளின் அபிப்பிராயங்களைக் கண்டிக்கும்பொழுது பலமாகவே பேசுவார்; இதனால் சிலருக்கு ஸ்வாமிகள் மீது கோப முண்டாயிற்று. ஆனால், இவர்களும் ஸ்வாமிகளின் முன் நின்று ஒன்றும் சொல்லமாட்டார்கள். ஸ்வாமிகளுக்குத் தன்னம்பிக்கை ஏராளமாக உண்டு; தம்மால் எது வேண்டுமோ செய்ய முடியும் என்று அவர் பரிபூர்ணமாய் நம்பியிருந்தார். ஒரு சமயத்தில் ஸ்வாமிகள் தமது சகோதர சந்யாசிகளுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தபொழுது, பலமான தர்க்கம் ஆரம்பித்துவிட்டது. அப்பொழுது, வரவர, ஸ்வாமிகளுக்கு ஆத்திரம் பொங்கி

விட்டது. ஸ்வாமிகள் அவர்களை நோக்கி, "நான் கறுப்பை வெள்ளை யென்று சொன்னாலும், வெள்ளையைக் கறுப்பு என்று சொன்னாலும், அப்படித்தான் என்று உங்களை நம்பும்படிச் செய்யமுடியும் என்று நீங்கள் அறிகிறீர்களா? நீங்கள் கசப்பை இனிமையென்று நினைக்கும்படிக்கும், இனிமையைக் கசப்பு என்று நினைக்கும்படிக்கும் என்றால், செய்யமுடியு மென்று நன்றாய் அறிந்துகொள்ளுங்கள்" என்றார். ஸ்வாமிகள் தம்முள்ளே யிருந்துகொண்டு ஒரு பெரும் சக்தி வேலை செய்கிறது என்று நம்பினார்.

ஸ்வாமிகள் படித்த புத்தகங்கள் கொஞ்சநஞ்சமல்ல; ஆனால், அவர் படித்தது சாதாரணமாகப் படிக்கவில்லை. மனத்தை நன்றாகத் திறந்து வைத்துக்கொண்டு, இது நன்று இது குற்றமுள்ளது என்று நன்றாக ஆராய்ந்து படித்தார். தமக்குச் சரியென்று தோன்றுவிட்டால், சொல்லியவர்களோ அல்லது எழுதியவர்களோ அவர்கள் மஹரிஷிகளா யிருந்தாலும் சரி, ஆசார்ய புருஷர்களா யிருந்தாலும் சரி, ஈச்வரனா யிருந்தாலும் சரி, ஒப்பமாட்டார். ஸ்வாமிகள் அதிக பிரியத்துடனும் ஆவலுடனும் ஆராய்ச்சி செய்த விஷயங்களுள் சரித்திரம் முதன்மை யானது. ஜனசமூகங்களும் நாகரிகங்களும் மேலோங்கிய தற்கும் கீழே விழுந்ததற்கும் மூல காரணங்கள் இன்னின்னவை யென்று ஸ்வாமிகள் நன்றாகத் தெரிந்துகொண்டார்.

ஸ்வாமிகள் இந்த விஷயத்தில்தான் வல்லுநர் என்று ஏதேனும் ஒரு விஷயத்தை மாத்திரம் குறிப்பிட முடியுமா?

ஸ்வாமிகள் சகலகலாவல்லவரா யிருந்தார். மதமாகட்டும், தத்துவஞானமாகட்டும், சரித்திரமாகட்டும், சாஸ்திர மாகட்டும், கலையாகட்டும், பாஷையாகட்டும், ஜனசமூக நியாயமாகட்டும், எல்லாவற்றிலும் ஒரே மாதிரி பாண்டித் தியம் பெற்றிருந்தார்; எதைப்பற்றிப் பேசினாலும் அதிகார தோரணையுடனே பேசுவார். அவர் பேசப்புகும் வார்த்தைகளெல்லாம் அவ்வளவு இனிமையாயும் அழகாயு மிருக்கும். விஷயம் மிகவும் வறண்டதா யிருந்தாலும் சரி, எத்தகைய கடின கசப்புள்ளதா யிருந்தாலும் சரி, அவர் பேசப் புகுந்துவிட்டால், அது இனிமையிலும் இனிமை யாய்விடும்; கேட்போருக்கு ருசியையும் கிளர்ச்சியையும் உண்டுபண்ணி விடும். 'இவ்வளவு அறிவையும், இவ்வளவு அநுபவத்தையும் ஸ்வாமிகள் எப்படி யடைந்தார்?' என் பது அனைவர்க்கும் ஆச்சர்யமா யிருக்கும். அமெரிக்காவிலே ஹார்வர்ட் என்னும் நகரிலேயுள்ள சர்வகலாசாலைப் பண்டி தர் ஒருவர், மிகவும் பிரக்யாதி பெற்றவர், ஸ்வாமிகளைப் பற்றி "அவருடைய கல்வியுடனே ஒப்பிட்டுப் பார்த்தால் நமது சர்வகலாசாலைப் புலவர்களெல்லோரும் வெறுங் குழந்தைகள் போன்றே யிருக்கின்றனர். அவர் நாம் எல் லோரும் ஒன்று சேர்ந்தாலும் நம் எல்லோரையும் காட்டி லும் அதிகமாகப் படித்துள்ளார்" என்று கூறினர்.

ஸ்வாமிகள் பிறவிலேயே வாசாலகர். வாலிபத்தி லேயே ஸ்நேகிதர்களுக்கு மத்தியில் பேச ஆரம்பித்து விட்டால், அவர்களெல்லோரும் அப்படியே பிரமித்துக்

கேட்டுக்கொண் டிருப்பார்கள். ஸ்வாமிகள் அமெரிக்காவி லே சர்வமத மகாசபையின் முன்னர் பேசியதற்கு முன் தென்னிந்தியாவில் ஹைதராபாத் நகரத்திலே ஓரே யொரு பிரசங்கம் செய்திருந்தார். வேறு எங்கும் பொதுச் சபை களிலே பேசினதில்லை. ஆயினும், அவர் முதன்முத லாவதாக அமெரிக்காவிலே சிகாகோவில் சர்வமத மகா சபையில் பிரசங்கம் செய்தபொழுது, அமெரிக்க ஜனங் கள் அப்படியே லயித்துவிட்டார்கள். அமெரிக்கப் பத்தி ரிகைகளெல்லாம் அவருடைய பிரசங்கத்தை "சர்வமத மகா சபையின் மிகமிக அழகிய பிரசங்கம்" என்று கூறிப் புகழ்ந்தன. மத வைராக்கியம் பிடித்த பாதிரிகள் கூட "அழகிய முகத்துடனும் ஆகருஷண சாந்நித்தியத் துடனும் கூடிய இந்த மனிதர் சர்வமத மகா சபையிலே மிகமிகப் பிரதானமா யிருந்தார்" என்று கூறவேண்டி வந்தது. அவ்வொரு பிரசங்கம் உலகு முழுவதிலும் அவருக்குப் பெயரைக் கொடுத்துவிட்டது; ஜகத் முழு தும் பிரக்யாதி யடைந்துவிட்டார். பின்னர் அமெரிக்கா வின் பிரதான நகரங்களிலெல்லாம் யாத்திரை செய்து பிரசங்கங்கள் புரிந்து, ஹிந்துமதக் கொள்கைகளைப் பரவச் செய்தார். அவர் சென்ற நகரங்களெல்லாம் அவருடைய பிரசங்கங்களைக் கேட்டுப் பேரானந்த மடைந்து குதுகலித் தன. நியூ யார்க் க்ரிட்டிக் என்ற பத்திரிகை: "அவர் ஈச்வர ஸ்வதந்திரம் பெற்ற வாசாலகர்" என்று எழுதிற்று. டெட்ராய்ட் என்ற ஒரு நகரத்துப் பத்திரிகை யொன்று "பெரிய ஹிந்து புயற்காற்று உலகத்தை அசைத்து

விட்டது" என்று எழுதிற்று. ஸ்வாமிகள் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினாலும் அந்த விஷயத்தைப்பற்றியே முன் கூட்டியே தயார் செய்துகொண்டு வந்து பேசும் வழக்கம் கிடையாது. ஸ்வாமிகள் திடீரென்று எழுந்து எந்த விஷயத்தையும்பற்றிப் பேசுவார். அவருடைய ஹிருதயம் உடைந்து உருகி, வாய்வழியாக வார்த்தைகள் பொங்கிப் புறப்பட்டன. சுவாமிகள் அருள் பெற்றவர் போல அதிகாரத்துடனே பேசுவார். சுவாமிகள் பிரசங்க மேடையில் ஏறிவிட்டால், அச் சமயத்தில் ஏதோ ஒரு சக்தி தம்முள்ளே வந்து நுழைவதுபோலவும், அந்த சக்தியின் பலத்தால் சபையினரைத் தம் வசப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டாவதாகவும், தமக்கு ஒரு தோற்றம் உண்டாவதாகவும் ஸ்வாமிகள் கூறினர்.

சில சமயங்களிலே சுவாமிகள் வேடிக்கையாகவும் பேசுவார்; பரிகாசமாகவும் பேசுவார். ஆனால், அவர் எவ்வளவு பரிகாசமாகப் பேசினாலும், அது எவருக்கும் துன்பம் உண்டாக்குவதா யிராது. நியூ யார்க் க்ரிட்டிக் என்ற பத்திரிகை "அவருடைய கத்தி சில சமயங்களில் ஆழ்ந்து வெட்டியபொழுதிலும், அது ரணவைத்தியனுடையது போன்றிருக்கிறது, அது அன்பினாலேயே வெட்டுகிறது" என்று எழுதிற்று.

சுவாமி விவேகாநந்தருடைய பாஷையோ மிகவும் எளியது, சுலபமானது, தெள்ளியது. ஸ்வாமிகள் போன்று புராதன கிரந்தங்களிலும் தற்கால கிரந்தங்களிலும்

இவ்வளவு நன்றாக ஆராய்ச்சி செய்துள்ளவர்கள் மேனாட்டு வித்துவான்களுக்குள் கூடக் காண்பது அருமை. சுவாமிகள் கஷ்டப்பட்டு எழுதியதே யில்லை; ஹிருதயம் நிறைந்திருந்தால், எழுதுவதற்காவது பேசுவதற்காவது ஏன் கஷ்டம்?

சுவாமிகள் இன்ன கொள்கையை அநுசரிப்பவர் என்று பிரித்துச் சொல்வது கஷ்டம். அவர் கொள்கைப் பைத்தியம் பிடித்தவ ரல்லர்; ஆனால், எந்தக் கொள்கையைப்பற்றிப் பேசும்பொழுதும் அந்தக் கொள்கையிலே பைத்தியம் பிடித்தவர் போல அந்தக் கொள்கையை அவ்வளவு ஆதரித்துத் தாங்கிப் பேசுவார். சுவாமிகள் ஒரு சமயத்திலே ந்யூ யார்க் நகரத்தில் இல்லற தர்மத்தின் பெருமையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது, "துறவே பெரிது" என்று கொண்டாடிக்கொண்டிருந்த ஒருவர் சுவாமிகளை நோக்கி, "சுவாமி! சந்நியாசத்தினும் இல்லறம் பெரிதென்று உண்மையில் தாங்கள் சொல்லவில்லை போலும்! உண்மையிலேயே சொல்லுகிறீர்களா?" என்று கேட்டார். சுவாமிகள் உடனே சுருக்கமாக "நான் சந்நியாசி யென்று உங்களுக்குத் தெரியாதா?" என்று பதி லளித்தார்.

சுவாமிகள் மகா வித்துவான், மகா கவி, மஹா ஞானி. ஆயினும், வேலூர் மடத்திலே புல் வெட்டுவதற்கு, பெருக்குவதற்கு, பல வேலைகள் செய்யச் சந்தோஷமாக இறங்கிவிடுவார். சுவாமிகள் அடிக்கடி "இந்தியாவிலே

தியானம் செய்வதற்குக் குகையைத் தவிர, வேறொன்றையும் நான் கவனிக்கவில்லை,'' என்று சொல்லிவந்தார்.

சுவாமிகளுக்கு உலகினிடத்துச் சற்றும் பற்றுதல் கிடையாது; ஆயினும், உலகோபகாரத்தின்பொருட்டு ஒரு நிமிஷமாவது அவர் வேலை செய்யாதிருந்ததில்லை. சுவாமிகள் சுத்த அத்வைதியானபோதிலும், துவைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால், அந்த அந்த மத ஆசார்யர்கள்கூட அம்மாதிரி பேசமாட்டார்கள். ஒரு சமயத்திலே சுவாமிகள் அமெரிக்காவில் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றிப் பேச, அப் பேச்சைக் கேட்டு, ஐச்வர்யம் மிகுந்த ஒரு அமெரிக்க மாது, கையிலே பகவத்கீதையை எடுத்துக்கொண்டு, கிருஷ்ண தியானம் செய்வதற்காக ஒரு ஏகாந்தமான தீவைநோக்கிச் சென்றுவிட்டார். அந்தப் பிரசங்கம் அவ்வளவு அருமையாகவும் அற்புதமாகவும் இருந்தது. சுவாமிகள் இந்து மதத்தினரென்று நாம் சொல்லிக்கொண்டாலும், எல்லா மதங்களுக்கும் பொதுவானவராயும் எல்லா மதங்களையும் சேர்ந்தவராயு மிருந்தார்.

ஒருசமயத்திலே சிலகிறிஸ்தவப்பாதிரிகள் வராநகரத்து மடத்துக்கு வந்து அங்கேயிருந்த சந்நியாசிகளைப் பார்த்துவிட்டு, ''இந்த ஜனங்கள் முன்னமேயே கிறிஸ்தவர்கள்!'' என்று கூறிச் சென்றார்கள். சுவாமிகள் ராஜீய விஷயங்களில் தலையிட்டவரல்லர்; ஆனால், சுவாமிகள் தமது சஞ்சார காலத்திலே அநேக அரசர்களுடனே சகவாசம் செய்யும்

படி நேரிட்டது. அவர்கள் தங்கள் ராஜ்யபார விஷயங்களில் சுவாமிகளை அடிக்கடி ஆலோசனை கேட்டார்கள். நமது ராஜீய நிபுணர்கள்கூட அநேகர் சுவாமிகளிடத்திலே மிகுந்த மதிப்புப் பாராட்டி, சிக்கலான விஷயங்களில் அவரிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டார்கள்; நமது நாட்டிலே சுவாமிகளைப் போற்றுதார் இல்லை.

சுவாமிகள் உலகுமுழுதிலும் பிரக்யாதி பெற்றுப் பெருங் கார்யங்கள் செய்து வந்தாராயினும், மிகமிகச் சிறிய காரியங்களிலும் தமது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி வந்தார். ஒரு உதாரணம் மாத்திரம் இங்கே சொல்லுவோம். சுவாமிகளுடைய சகோதர சந்நியாசிகளுள் ஒருவர் வேலூர் மடத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ணாலயத்துக்குச் செல்லும் மார்க்கத்தின்மேலே இரும்பினால் கூரையொன்று வேய உத்தேசித்திருப்பது கேட்டுச் சுவாமிகள் உடனே "அது கூடாது" என்று வெகு கண்டிப்பாகக் கடிதம் எழுதினார். சுவாமிகள் ஆண்மையில் நிகரற்றவர்; ஆயினும், மிகவும் மென்மையான ஹிருதய முடையவர். அவர், அறிவின் கடலாயிருந்தாரானால், அன்பின் சமுத்திரமாயிருந்தார். சுவாமிகளுக்குச் சிஷ்யர்களிடத்திலே அத்தியந்த வாத்சல்ய முண்டு; ஆயினும், அவர் அவர்களை ப்ளேக்முதலிய வியாதிகள் பீடித்துள்ள பிரதேசங்களுக்குச் சற்றும் தயை தாக்ஷிண்ய மில்லாமல் அவ் வியாதியஸ்தர்களைப் பராமரிக்குப்பொருட்டு அனுப்புவார்.

சுவாமிகளுக்கு ஒரு நிமிஷ நேரமேனும் ஒய்வு ஒழிவில்லாது அவர் பெருத்த காரியங்களிலும் ஆலோசனைகளி

னும் தலையிட்டுக்கொண்டிருந்தாலும், சுவாமிகளுக்கு அதெல்லாம் ஒரு சிரமமாகத் தோன்றவில்லை. சுவாமிகள் வெகு ஆழ்ந்த கவனத்துடனே ஏதேனும் எழுதிக்கொண் டிருப்பார், அல்லது படித்துக்கொண் டிருப்பார். அப் பொழுதுகூட எவரேனும் அவரைப் பார்க்க வந்தால், சுவாமிகள் சற்றும் முறுமுறுக்காமல், அவர்களுடனே அதிக சந்தோஷமாக—சில வேளைகளில் வெகு நேரம் வரையில் சம்பாஷித்துக்கொண்டிருப்பார்.

சுவாமிகள் தமது சிஷ்யர்களுக்குக் கண்டிப்பான விதிகளையெல்லாம் ஏற்படுத்தினாராயினும், சுவாமிகளே அவ் விதிகளுக்கு மாறாக அவர்களைக் கூப்பிட்டு உட்கார வைத்துக்கொண்டு, வேதாந்தபாடம் சொல்லுவார், அல் லது சங்கீதம் கற்றுக்கொடுப்பார்; அல்லது வீண் பேச்சுக் களும் பேசி ரமிப்பார். சுவாமிகள், தம்முடைய சிஷ்யர்கள் பந்த நியதிகளுக்குள்ளே கட்டுப்பட் டிருக்கவேண்டு மெ ன்று விரும்பவில்லை.

சுவாமிகள் வெறும் புத்தகப் பைத்யம் பிடித்தவரல்ல ராயினும், அவருக்குப் புத்தகங்கள் படிப்பதிலே பேரா சை யதிகம். அவர் எந்தப் புத்தகமாயினும், அது என்ன விஷயத்தைக் குறித்ததாயினும், படிக்காம லிருக்கமாட் டார். சுவாமிகள் கால்நடையாகச் சஞ்சாரம் செய்துகொ ண்டிருந்த காலத்திலே, அவருடைய சகோதர சந்நியாசி யான சுவாமி திரிகுணாதீதர் அவரை எங்கோ வழியிலே சந்திக்கும்படி நேரிட்டது. அப்பொழுது சுவாமிகள்

ப்ரேஞ்சுபாஷை முதற்பாட புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டு படித்துக்கொண்டிருக்கக் கண்டார் திரிகுணாதீதர். சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் சிஷ்யராயிருந்தபொழுதுகூடத் தமது கல்லூரிப்பாடப் புத்தகங்களைத் தக்ஷிணேச்வரத்துக்கும், பின்னர் காசிபுரத்துக்கும் கொண்டுவந்தார்.

சுவாமிகள் தாராளநோக்க முள்ளவராயினும், வைதீக ஆசாரங்களில் வெகு பற்றுடையவர். சுவாமிகளுக்கு வைதிகர்களிடத்திலே மிகுந்த மதிப்புண்டு. மூடப் பிடிவாத மில்லாமல், வைதிக ஆசாரங்களை அனுஷ்டிக்கிறவர்களுக்குச் சுவாமிகளிடத்தில் வெறுப்பு உண்டாவதற்குக் காரணமே யில்லை. காசியிலே சுவாமி விசுத்தாநந்தர் என்று ஒருவர் இருந்தார். இவர் மகா வைதீக ஆசாரப் பற்றுடையவர். "சூத்திரர்களைக் கணுல்கூடப் பார்க்கக் கூடாது" என்பது இவருடைய கொள்கை. ஆனல், காசி மா நகரத்திலே பெயர்போன மஹான்களுள் ஒருவராக இவர் மதிக்கப்பட் டிருந்தார். உண்மையிலேயே இவர் சகல சாஸ்திர சம்பந்நர். இத்தகைய பெரியோர். சுவாமிகளிடத்திலே மிகுந்த மரியாதை பாராட்டிவந்தார். காசிமா நகரத்திலே இன்னும் ஒரு மஹான், திகம்பரர் இருந்தார். அவர் பெயர் சுவாமி பாஸ்கராநந்தர். இவர் மிகுந்த பிரக்கியாதி பெற்றவர்; மழையிலும் வெயிலிலும் எப்பொழுதும் அவர் எவ்வித உடையும் உடுக்காது, கௌபீனம்கூட இல்லாது பிறந்த மேனியுடனே இருந்தவர். இவர் தம்முடன்

இருந்த இரண்டு சந்நியாசிகளைக்கொண்டு, "சுவாமிகளைப் பார்க்க வேண்டும்" என்று ஒரு கடிதம் எழுதி யனுப்பி வைத்தார். ஆனால், சுவாமிகளுக்கு அச்சமயத்திலே சரீரம் சௌக்கியமா யில்லாததினால், சுவாமிகள் வெகு விநய பூர்வமாக, தாம் வரமுடியாமலிருக்கும் காரணத்தைக்குறிப்பிட்டு, சம்ஸ்கிருத பாஷையிலே ஒருகடிதம் எழுதி யனுப்பி விட்டார். சுவாமிகளுக்கு ஹடயோகத்திலே நம்பிக்கையிருந்தாலும், சற்றும் பிரிய மில்லை; சரீரத்தைக் கண்டித்து வாதனை செய்யப் பிரிய மில்லை.

சுவாமிகளுக்குத் தியான ஸ்வபாவம் உண்டு. ஒரு சமயத்தில் சுவாமிகள் ஐரோப்பாவிலே யாத்திரை செய்து கொண்டிருந்தபொழுது, அவர் ஒரு ஊரிலே ஒரு ஆங்கிலச் சிஷ்யருடனே வெளியே கொஞ்சதூரம் உலாவப் போனார். அப்பொழுது வழியிலே ஒரு புத்தக வியாபாரியினுடைய கடைக்குள்ளே நுழைந்து "சகுந்தலா என்ற புத்தகம் இருக்கின்றதா?" என்று விசாரித்தார். அங்கே அப் புத்தகம் இருக்கக் கண்டு, அங்கேயே அப் புத்தகத்தை யெடுத்து வாசிக்க ஆரம்பித்தார்; அதிலே ஆழ்ந்த கவனம் செலுத்தினார். சிஷ்யர் காத்துக்கொண் டிருந்தார், காத்துக்கொண்டிருந்தார். சுவாமிகள் வாசிப்பை நிறுத்துவதாயில்லை. சிஷ்யர் "நேரமாய் விட்டது" என்றார். இது சுவாமிகள் காதிலேயே விழவில்லை. மறுபடியும் சொன்னார், மறுபடியும் சொன்னார். இவ்விதமாக நான்கு, ஐந்து தடவைகள் சொன்ன பின்னர்தான், சுவாமிகள் மெல்ல

சிஷ்யரைத் திரும்பிப் பார்த்தார். அப்பொழுதுதான் சுவாமிகளுக்குப் பிரபஞ்சப் பிரக்ஞை வந்தது; அதாவது, அதுவரையில் சுவாமிகளுக்கு அப் புத்தகத்தைத் தவிர வேறொன்றும் உலகிலிருப்பதாயில்லை. பின்னர், சுவாமிகள் அந்தப் புத்தகத்தை யப்படியே விலக்கு வாங்கி, அதிலே "ஹிமோத்கிரியிலுள்ள எனது மாதாவுக்கு" என்று எழுதி, அதை அந்த ஸ்திரீ சிஷ்யருக்குக் கொடுத்துவிட்டார். இன்னும் சுவாமிகள் சிறுவயதாயிருக்கும்பொழுதே தமது பையற் சிநேகிதர்களை நோக்கி "நான் ஏழாவது வயதில் சமாதியில் சென்றேன். நீங்கள் பிராஹ்மணர்களாயிருந்தும் ஐந்து நிமிஷம் உங்களால் நிஷ்டையிலிருக்க முடியாது; நானோ அநேகமணிநேரம் சேர்ந்தாப்போல உட்கார்ந்திருப்பேன். ஆகையால், நீங்கள் எக்ஞோபவீதம் தரிப்பதற்கு யோக்கியதை யுள்ளவர்களல்லர்," என்று ஒருசமயம் கூறினார்.

சுவாமிகள் ஜீவகாருண்ய ஸ்வரூபி. காரணம் விசாரிக்காமல், நியாயம் கேட்காமல் சமஸ்த ஜீவராசிகளிடத்தும் இரக்கம் செலுத்தும் குணமுடையவர். அதிகாரி பார்த்துத்தான் அன்பு பாலிக்கவேண்டுமென்னும் கொள்கை சுவாமிகளிடத்தில் உடைபட்டுப் போயிற்று. சுவாமிகளுடைய அன்புக்கும் கிருபைக்கும் ஒரு அளவேயில்லை. அவர் சந்நிதானத்தில் இருந்தாலே போதும்; தைர்யமும் சந்தோஷமும் தாமாகவே யுண்டாகும். அவருடைய ஹிருதயத்திலே அன்பு ஊற்றுப்போலச் சுரந்துகொண்டிருந்தது.

சுவாமிகள் இரண்டாம் முறை மேனுட்டுக்குச் செல்லக் கருதி, கல்கத்தாவிலிருந்து புறப்பட்டுச் சென்னைக்கு வந்தபொழுது, அவர் தமது சென்னை வாலிபநண்பர்களுள் ஒருவரைத் தம்முடன் கொழும்புவரை வரும்படி ஆக்ஞாபித்தார்; அப்படியே அவ் வாலிபரும் பின்சென்ருர். கொழும்பிலே "ப்ளேக் வியாதியினுல் பீடிக்கப்பட்டிருந்த பிரதேசங்களிலிருந்து வருகிறவர்கள் இறங்கக் கூடாது," என்னும் ஒரு உத்தரவு இருந்ததினுலும், சென்னை மாகாணத்திலே சில இடங்களில் அந்த வியாதி யிருந்ததினுலும், இக் கப்பலில் வந்தவர்கள் இறங்க முடியாது போய்விட்டது. ஆனுல், சுவாமிகளுடைய ஒரு ஐரோப்பிய நண்பர் கப்பல் தளகர்த்தரிடம் சென்று சுவாமிகளைமாத்திரம் அந்நகரில் இறங்கி அந்நகரைச் சுற்றி வருதற்கு உத்தரவு பெற்றுக் கொண்டுவந்தார். ஆனுல், சுவாமிகளோ தமது சென்னை வாலிபநண்பரும் கூட வந்தாலொழிய, தாம் அங்கு இறங்குவதில்லையென்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டார். "சுவாமி, தாங்கள் பிளேக் சட்டங்களை ஏமாற்ற விரும்புகிறீர்களா?" என்று அந்த ஆங்கில ஸ்திரீ சிஷ்யர் கேட்டார். சுவாமிகள் மிகுந்த அமைதியுடன் "ஆம்" என்று மறுமொழி யளித்தார். பின்னர், ஆயினும், கொழும்பிலிருந்த தமது பழைய நண்பர்கள் தம்மை மிகமிகக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டதினுலே மனமிரங்கி நகருக்குள் வந்து அனைவரையும் களிப்பித்தார்.

சுவாமிகள் தமக்காவது தம்முடைய சகோதர சந்யாசிகளுக்காவது எவரேனும் எப்பொழுதேனும் எவ்வித

உபகாரமேனும் செய்துவிட்டால், அவ் வுபகாரம் அணு வளவேயாயினும் கூட, ஒருபொழுதும் மறந்ததில்லை. சுவாமிகள் பிரக்கியாதி பெறுதற்குமுன் கால்நடையாகச் சஞ்சாரம் செய்துகொண் டிருந்தபொழுது ஆங்காங்கு உதவி செய்தவர்களையெல்லாம் சுவாமிகள் ஒருபொழுதும் மறந்ததில்லை. அவர்களுக்குப் பதின்மடங்கு, நூறுமடங்கு நன்றி செலுத்தி, வேண்டிய உதவி புரிந்தார். அவர்கள் சில சமயங்களிலே சுவாமிகளுடன் அளவுக்கு மிஞ்சிய நட்பு பாராட்டி, பிறர் எதிரே அலக்ஷியம் செய்தார்கள் என்று தோன்றும்படி நடந்துகொள்வார்கள். சுவாமிகளுடைய சகோதர சந்நியாசிகள் மிகுந்த கோபமுள்ளவர்களாவார்கள். ஆனால், சுவாமிகள் மிகுந்த பொறுமை வகித்துத்தமது சகோதர சந்நியாசிகளை நோக்கி, "நாம் சந்நியாசிகள்; அவர்கள் அப்படி நடந்துகொண்டால் நமக்கு என்ன குறைந்துவிடும்? நாம் இவ் வுலகிலே எவருக்கும் தெரியாமலிருந்தபொழுது நமக்கு உதவிபவர்களல்லரா இவர்கள்? இவர்களிடத்தில் நாம் கோபித்துக்கொள்ளலாமா?" என்று கூறி அவர்களுடைய கோபத்தையெல்லாம் ஆற்றுவார்.

தாம் சத்தியத்தையே சார்ந்திருந்ததினால், சுவாமிகள் பயமற்று விளங்கினார். தம்மைப் பின்பற்றுவோர் நூற்றுக்கணக்காக வேண்டுமென்று சுவாமிகள் விரும்பவில்லை; ஜனங்களுக்குப் பிரியமானதைச் சொல்லி, ஜனங்களிடமிருந்து வீண் புகழ் பெறவேண்டுமென்று விரும்பவு மில்லை. ஒன்று உண்மையென்று அவருக்குத் தோன்றிவிட்டால்,

அது எவ்வளவு அருசிகரமாயிருந்தாலும், அதனால் என்ன கஷ்டம் நேரிடுவதாயிருந்தாலும், சற்றும் பின் வாங்காமல், கூறிவிடுவார். உண்மையானவர்கள், தைர்யமானவர்கள், குருவினிடத்திலும் ஈச்வரனிடத்திலும் திடமான பக்தி நிலைத்தவர்கள், பரிசுத்தமானவர்கள், ஆறுபெயர்கள் கிடைப்பார்களானால் தம்மால் உலகிலே நன்மைக்கு ஒரு பெரிய மாறுதலை யுண்டாக்க முடியுமென்று சுவாமிகள் கருதினார்.

சுவாமிகளுடைய குருமூர்த்தியாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் எப்படி காமினி காஞ்சனத்தை ஜயித்தவரோ, அப்படியே சுவாமிகளும் ஜயித்தவர் என்று முன்னரேயே கூறியிருக்கிறோம். சுவாமிகள் மூவாசைகளையும் முற்றும் துறந்தவர்; இவ்விதமாகப் பணத்தினிடத்திலே ஆசையில்லாதவராக இருந்தும் அவர் ஒரு சமயத்தில் பணத்துக்காக ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கிப் பிரார்த்தனை செய்தார்; பலமுறுத்தக்கூடச் செய்தார். சுவாமிகள் மேனாட்டிலிருந்து திரும்பி வந்தபின்னர் வடநாட்டிலே யாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது, தமது தேசநன்மையின்பொருட்டு அநேக காரியங்கள் செய்ய யோசனை செய்தார்; ஆனால், பண மில்லாததினால் அக் காரியங்களை யாரம்பிக்க முடியவில்லை. சுவாமிகளுக்குப் பொறுக்க முடியவில்லை; ஆத்திரம் அதிகமாகிவிட்டது; சுவாமிகள் "பிரபு! உடனே எனக்கு இக் காரியங்களுக்குப் பணம் வராவிட்டால், நான் இந்த மார்க்கத்தை விட்டுவிட்டு, வியபசார

வாழ்க்கை வாழ ஆரம்பித்துவிடுவேன்'' என்று ஸ்ரீ ராம கிருஷ்ணரைக் குறித்துப் பிரார்த்தனைசெய்து கூறினர். பணம்: எங்கிருந்தோ எதிர்பாராத இடங்களி லிருந்தெல் லாம் சுவாமிகளிடம் வந்து குவிய ஆரம்பித்துவிட்டது. ஆனல், சுவாமிகள் இப்படிச்செய்தது இந்த ஒரேதடவை தான்; அதுவும் தேசநன்மையை உத்தேசித்து இப்படிச் செய்தார்.

சுவாமிகள் அமெரிக்காவி லிருந்தபொழுது, சுவாமி களுக்குக் கொஞ்சம் உடம்பு சௌக்கியமில்லாமற் போய் விட்டது. சுவாமிகள் சரீரத்தைப்பற்றி அதிகமாகக் கவ னம் செலுத்துவதில்லை. இதற்காகச் சுவாமிகளைக் குற்றம் கூறிய சிலர், சுவாமிகளை நோக்கி, "சுவாமி! நீங்கள் மஹா யோகியாயிற்றே! நீங்கள் ஏன் வியாதியினல் வருந்தவேண் டும்? ஏன் இந்த வியாதியை நீங்களே சொஸ்தம் பண்ணிக் கொள்ள லாகாது?'' என்று கேட்டார்கள்.

சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யரல்லரா? அவரை இம்மாதிரி கேள்வி கேட்டபொழுது அவர் கூறிய மறுமொழிபோலவே சுவாமிகளும்: மனத்தை யெல்லாம் ஏன் இந்த எலும்புக் கூண்டின்மீது செலுத்தவேண்டும்?'' என்றார்.

சுவாமிகளுக்கு வியாதியைப்பற்றியாவது மரணத் தைப்பற்றியாவது பயமே யில்லை. ஆனல், தாம் ஆரம் பித்துள்ள உலகோபகார வேலை எங்கே நின்றுவிடுமோ என்ற ஒருபயமே சுவாமிகளுக்கு இருந்தது. சுவாமிகள்,

மஹாசமாதி யடைதற்குச் சின்னாட்களுக்கு முன் "வேலை யே எப்பொழுதும் எனது பலஹீனமான விஷயமாயிருக் கிறது. அது நின்றுவிடலாமோ என்று நான் நினைக்கிற பொழுது, நான் அப்படியே வீணாய்விடுகிறேன்" என்று சொன்னார். இன்னொரு சமயத்திலே "மனுஷ்யவர்க்கத் தின் நன்மைக்கு உழைப்பதே வாழ்நாள் முழுதும் எனது கொள்கையா யிருந்திருக்கிறது. நான் மரித்துவிட்டபொ ழுதிலும்கூட, நான் இந்தியா மோக்ஷ மடையும்பொருட்டு, மனுஷ்யவர்க்கம் மோக்ஷ மடையும் பொருட்டு, நான் உழைப்பேன்," என்றார்.

சுவாமிகள் நேர்மை என்னும் குணமே உருவாக வந்த வர் என்று சொல்லலாம். ஒருசமயத்திலே சுவாமிகள் அமெரிக்காவில் உடம்பு சௌக்கிய மில்லாமலிருந்தபொ ழுது, நாட்டுப்புறத்துக்குச் சென்று சுமார் ஆறு வாரங் கள் வரையில் எவ்வேலையும் செய்யாமல் சிரமசாந்தி செய்துகொண் டிருந்தார். அப்பொழுது அவர் ஒருநாள் சில நண்பர்களை நோக்கி, "என்ன! ஆறுவாரங்களாக ஒரே முகங்களை இரவும் பகலுமாகப் பார்த்துக்கொண் டிருப்ப தா?" என்றார் அவருடைய முகத்திலே வெறுப்பு விளங் கிற்று. சுவாமிகளுடைய சஞ்சாரபுத்தி முன்னே தோன்றி விட்டது. ஓய்ந்து ஓரிடத்தில் உட்கார்ந்திருப்பதற்கு அவருக்கு இஷ்ட மில்லை.

சுவாமிகளுக்குச் சாதாரணப் பொது ஜனங்களுடன் கலந்து சம்பாஷிக்கவும், அவர்கள் கூறுங் கதைகளை ஆசை

யுடன் கேட்கவும் அதிகம் பிரியம் உண்டு. பஞ்சாப் தேசத்திலே ஒருசமயத்தில் சுவாமிகள் மாட்டுவண்டியிலே போகும்படி நேர்ந்தபொழுது, வண்டிக்காரனுடனே சம்பாஷணை செய்ய ஆரம்பித்தார். அந்தப் பிரதேசத்திலேயுள்ள ஜனங்கள் வங்காளிகளைப் 'பெரிய மந்திரவாதிகள்' என்றும், 'ஆகையால், அவர்களை நம்பலாகாது' என்றும் கருதியிருந்தார்கள். அந்த வண்டிக்காரனும் அந்தக் கருத்துடையவனே. அவன் சுவாமிகளைத் தனது நாட்டுச் சாது என்று நினைத்துக்கொண்டு, சுவாமிகளை நோக்கி, "சுவாமி! வங்காளத்துக்கு ஒருபொழுதும் போகாதீர்கள். அவர்கள் அபாயகரமானவர்கள்! அவர்கள் மந்திரவாதிகள்! அவர்கள் உங்களை ஏமாற்றி மோசம் பண்ணிவிடுவார்கள்," என்றான்.

சுவாமிகள் இதைக் கேட்டுச் சிரித்ததும் மன்றியில், தமது நண்பர்களிடத்தும் சகோதர சந்யாசிகளிடத்தும் இந்தக் கதையைச் சொல்லிச் சொல்லிக் காட்டினார்.

இத்தகைய மகாபுருஷர் மகாசமாதி யடைந்து பல வருஷங்க ளாய்விட்டன. ஆயினும், அவருடைய சக்தியும் பெருமையும் உலகு முழுதும் வியாபித்திருக்கின்றன.

ஓம் சாந்திஃ ஓம் சாந்திஃ ஓம் சாந்திஃ

அபிப்பிராயங்கள்.

I

அன்னிபெஸண்டு அம்மையார் பின் வருமாறு எழுதி யிருக்கிறார்:—

"சிகாகோ நகரத்துக் கனத்த ஆகாயத்தின் மத்தியில் இந்தியா தேசத்துச் சூர்யன் போன்று பிரகாசித்துக் கொண்டு, காஷாயம் உடுத்தியிருந்த ஒரு அற்புத வடிவம், சிம்ஹத்தினுடையது போன்ற சிரசு, ஊடுருவிப்பார்க்கும் கண்கள், அசையும் அதரங்கள், வேகமாயும் சட்டென்றும் உள்ள நடைகள்—இதுதான் நான் சர்வமத மகா சபைக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் உபயோகத்துக்காகத் தனியே வைக்கப்பட்டிருந்த அறைகளுள் ஒன்றில் சுவாமி விவேகாநந்தரைப் பார்த்தபொழுது அவரைப்பற்றி எனக்கு உண்டான முதல் அபிப்பிராயம். ஜனங்கள் அவரைச் சந்நியாசி யென்றார்கள்; காரண மில்லாமற் சொல்லவில்லை; ஆனால், அவர் வீர சந்நியாசியா யிருந்தார். ஏனெனில், அவர் பிரசங்க மேடையில் ஏறிவிட்டால், இப்பொழுதுள்ள மதங்களுள் மிகமிகப் பழமையான மதத்தினுடைய பிரதிநிதியாகிய அவருள்ளே தேசத்தைப்பற்றியுள்ள கர்வம், ஜாதியைப்பற்றியுள்ள கர்வம் பலமாக ஊறி யிருந்தது. அவர் பிரதிநிதியாக வந்துள்ள பழமையான மதமானது அங்கு வந்துள்ள மிகமிகச் சிறந்த மதங்களுக்கு எந்த விதத்திலோ கீழ்ப்பட்டதென்பது போல அநேகமாய் மிகமிக இளமையான மதங்களை வேடிக்கை

வாகப் பார்ப்பவர்களும் சற்று மிடங்கொடுக்க மனமில்லாத வர்களுமானவர்களால் சூழப்பெற்றிருந்தார். அவசர புத்தியும் அகங்காரமும் படைத்த மேனுட்டின் முன்னே தனது தூதரும் தனது புக்திரருமாகிய இவரால் இந்தியா வானது அவமான மடைவதற்கில்லை. அவர் அதனுடைய தூதைக் கொண்டுவந்தார்; அவர் அதன் பெயரால் பேசினூர்; அந்தத் தூதர் தாம் எங்கிருந்து வந்தாரோ அந்த ராஜ பூமியின் கம்பீரத்தை ஞாபகப்படுத்திக்கொண்டார். காரியத்தில் கண்ணுள்ளவராக, பலமுள்ளவராக, ஊக்க முள்ளவராக, அவர் புருஷர்களுக்குள் ஒரு புருஷன் போலத் தமது கொள்கையை ஸ்தாபிப்பதற்கு வல்லவராக நின்ருர்.

பிரசங்க மேடையிலே இன்னொரு தன்மை வெளி வந்தது. கம்பீரமும் மதிப்பும் சக்தியும் தமக்கு உண்டு என்றுள்ள பிறவி யுணர்ச்சியும் இன்னும் அங்கேயிருந் தன; ஆனுல், எல்லாம் அவர் கொண்டுவந்திருந்த ஆத் மீகச்செய்தியின் அதிரம்யமான அழகுக்கு-ஹிருதயமாய், இந்தியாவினுடைய ஜீவனுய், அற்புதமான ஆத்ம போதனை யாய் உள்ள கீழ்நாட்டு ஒப்புவமையற்ற அந்த வேதத்தி னுடைய அழகுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது. பெருங் கூட்டம் ரமித்துப் போய், அவருடைய வார்த்தைகளில் தொங்கின; ஒரு அசைகூட வீண்போகக் கூடாது! ஒரு குரல்கூட தவறிவிடக் கூடாது. ஒருவர் அப் பெரிய மண்டபத்தை விட்டு வெளியே வந்தபொழுது "அந்த

மனிதர் ஒரு மூடர்! நாம் அவருடைய ஜனங்களுக்குப் பாதிரிகளை யனுப்புகிறோம்! அவர்கள் நமக்குப் பாதிரிகளை யனுப்புவது அதிகம் தகுதி யுடையதா யிருக்கும்!'' என்றார்.

அந்த வார்த்தைகள் தீர்க்க தரிசனமாம்; ராமகிருஷ்ண மடத்துப் பாதிரிகள் அநேகர் அப் பெரிய போதகாசிரியரால் காண்பிக்கப்பட்ட மார்க்கத்திலே அதுமுதல் நடந்து வருகிறார்கள்; வேதாந்தத்துக்கு அமெரிக்காவிலே, மேற்கேயுள்ள சான்ப்ரான்ஸிஸ்கோ நகரில் போலவே, கிழக்கேயுள்ள ந்யூ யார்க் நகரிலும் ஆச்ரமங்கள் இருக்கின்றன.

பின்னர் பார்த்தது புகை நிறைந்த லண்டன் மாநகரில்; அங்கே சுவாமி விவேகாநந்தர் என்னைப் பார்த்து, அவருடைய தாய் நாட்டுக்கு நான் செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருந்த எளிய ஊழியங்களைப்பற்றிச் சில பிரிய வசனங்கள் கூறுவதற்கு வந்தார். தெளிந்த கூர்மையான கண்கள் அவருடைய அமைதியான புன்னகையுடன் மிருதுத் தன்மையைப் பெற்றன; இந்தியாவினுடைய இரண்டு நேசர்களும் நட்பிலே கைகோர்த்துக் கொண்டார்கள்.

கொஞ்சக் காலத்துக்குப் பின்னர், நாங்கள் மறுபடியும் வெகுதூரம் வடக்கே ஹிமோத்கிரியிலே சந்தித்தோம். சிறந்த பலம் குன்றிவிட்டது; கண்கள் களைப்படைந்து விட்டன; உதடுகள் சலித்து விழுவனபோலத் தோன்றின. ஆனால், ஆத்மாவின் பிரகாசமானது சரீரத்தினூடே

ஊடுருவித் தெளிவாக ஜ்வலித்தது; எங்கள் இருவாாலும் மிகவும் அதிகமாக நேசிக்கப்பட்ட பெரும் வேலையைப் பற்றி—இந்திய ஜனசமூகம் அமைப்பதற்கு ஆரம்பமாக இந்திய தத்துவஞானத்தைப் புனர் உத்தாரணம் செய்ய வேண்டுமென்பதுபற்றி நாங்கள் அமைதியாய்ப் பேசிக் கொண்டிருந்தோம். கடைசி முறையாக, நாங்கள் பிரிந்தோம்............

மஹானுகிய சுவாமிகளுடைய வேலை, இன்றைய இந்தியாவில் அவர் உருக்கலந்திருத்தல் அநேக இடங்களில் ராமகிருஷ்ண மடத்தினுல் செய்யப்படும் சிறந்த ஸேவையிலே காணப்படுகிறது; ஏனெனில், ஒரு கையினுல் ஜீவனுக்கு ஆகாரத்தையும் மற்ற கையினுல் சரீரத்துக்கு ஆகாரத்தையும் சங்கத்துக்குச் சுவாமி விவேகாநந்தர் தமது குருவினிடத்துள்ள அன்பினுல் குருவினுடைய பெயரைக் கொடுத்திருந்தபொழுதிலும், பணிவிடைகட்குப் பரிசுத்தம் பண்ணிவிடப்பட்டுள்ள இந்த வாலிபர்களிடத்திலே, அவருடைய திருஷ்டாந்தத்தினுல் அருள் பெற்றுத் தைர்யமாயும் பலமாயும் உண்மையாயும் உள்ள வாலிபர்களிடத்திலே வசித்து சலிப்பது ஸ்ரீராமகிருஷ்ணரினும் அதிகமாக விவேகாநந்தரே யென்று எனக்கு எப்பொழுதும் தோன்றிற்று. ஒரு சில வாலிபர்கள் காசி ஆச்ரமத்தை எப்படி ஸ்தாபித்தார்கள் என்பதும், வியாதியஸ்தர்களை, மாணத்சறுவாயி லிருந்தவர்களைத் தெருக்களிலிருந்து எடுத்து இவர்களைத் தங்களுடைய சொந்த அறைகளுக்குள்ளே கொண்டு போய், இனிய, உண்மையான

கவலையுடனே எப்படிக் கழுவி, ஆகாரம் கொடுத்து, போஷித்துப் பராமரித்தார்களென்பதும் எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது. இப்பொழுது, அது, காசி ஸேவாச்ரமமானது ஒரு பெரிய, அழகிய வீடா யிருக்கிறது; அப்பொழுது இருண்ட, வறுமை பிடித்த அறைகளாகவே யிருந்தன. ஆனால், அந்த வாலிபர்களுடைய குருவின் ஆத்மா அவர்களுக்கு அருள் அளித்தது என்பது நிச்சயம்; அவர்களுடைய வேலையே அவருடைய சிறந்த ஸ்தூபியாம்.

தைர்யமுள்ளவர்களும் பயமற்றவர்களும், நேர்மையுடையவர்களும் தாங்கள் நியாயமானதென்று கருதுகின்ற வழியிலே நடப்பதற்குப் பலமுள்ளவர்களும் பிறர் கைகோர்த்து வேலை செய்வதற்குப் பிரியப்படுகிறபொழுது அவர்களுடனே சேர்ந்து நிற்பதற்குத் தயாரா யிருந்த பொழுதிலும் தனித்து நிற்கவும் வல்லமையுள்ளவர்களுமான அநேக புருஷர்களை ஈச்வரன் இந்தியாவுக்கு அனுப்புவாராக. நான் தெரிந்துள்ளபடி — நான் தெரிந்துள்ளதெல்லாம் மிகவும் சொற்பமே—அத்தகையோர் ஸ்வாமி விவேகாநந்தர்;—நன்றியறிதலுடன் கூடிய ஞாபகமாகிய இந்தத் தளத்தை நான் அவருடைய சமாதியின்மீது விநயபூர்வமாக வைக்கிறேன்.

II

நமது இந்திய தேசத்தில் இப்பொழுது மஹா சாஸ்திரக்ஞரெனப் பெயர் பெற்று அந்நிய நாட்டினராலும்

கொண்டாடப்பட்டு விளங்கும் டாக்டர் ஜகதீசச் சந்திரபோஸ் என்பவர் லண்டன்மாநகரிலிருந்து பின் வருமாறு எழுதினார்:—

"இது என்ன பாழை யுண்டாக்குகிறது! இச் சில வருஷங்களுக்குள்ளே என்ன பெரிய காரியங்கள் நடைபெற்றன! இப்பொழுது எப்படி அவையெல்லாம் அடங்கிவிட்டன. ஆயினும், ஒருவர் களைத்துச் சோர்ந்துவிட்டால், அவர் ஓய்வு எடுத்துவிடுவது மிகமிக நலம்தான். நான் அவரை இரண்டு வருஷங்கட்கு முன்னே பாரிஸ்மாநகரில் பார்த்ததுபோல—பெரிய நம்பிக்கையுடன் கூடிய பலமுள்ள புருஷனாக, அவரைச் சுற்றிலும் உள்ள எல்லாம் பெரிதாக-நான் அவரை இப்பொழுதுதான் பார்ப்பது போலத் தோன்றுகிறது.

எத்தகைய ஒரு பெருந் துக்கம் வந்திருக்கிறது என்பதை நான் தங்களிடம் கூற முடியாது. நாம் அதைக் கடக்கப் பார்க்க முடியுமாறு விரும்புகிறேன். எங்களுடைய நினைப்புக்கள் இந்தியாவிலே துன்புறுபவர்களுடனே யிருக்கின்றன.

III

காலஞ் சென்ற ரமேசச் சந்திரதத்தர் பின் வருமாறு எழுதினார்:—

"......அதன் பின்னர், நான் 'ஸ்வாமி விவேகாநந்தர் மரித்துவிட்டார்' என்ற துக்ககரமான சமாச்சாரத்தைக் கேள்விப்பட்டேன். நான் ஸ்வாமிகளை யொருபொழுதும்

பார்த்ததில்லை, நான் அவருடைய போதனைகளை யொரு பொழுதும் நெருக்கமாகப் பின் பற்றியதில்லை; ஆனால், நான் அவருடைய உயர்ந்த தேசாபிமானத்தையும், அவருடைய தேசத்தின் பெருமையிலே அவருக்கிருந்த உண்மையான நம்பிக்கையையும், அவருடைய தேச ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே உண்மையா யிருப்பார்களானால் அவர்களுடைய பிற்காலம் நற்காலமே யென்று அவர் கொண்டிருந்த ஆண்மையுள்ள விச்வாசத்தையும் எவ்வளவு புகழ்ந்து மெச்சினேன் என்பது உங்களுக்குத் தெரியும். அந்தத் தன்னம்பிக்கை யுணர்ச்சி, நமது சொந்த மோக்ஷத்தை நாமே பாடுபட்டு அடையவேண்டும் என்ற அந்தத் தீர்மானம்,—நமது தேசத்திலும் நம்மிடத்திலும் அந்த நம்பிக்கை—நமது பிற்காலம் நமது கைகளிலேயே யுள்ளது என்ற அந்தத் திட நிச்சயம்—இவை நாம் எல்லோரும் இன்று எவருடைய பிரிவாற்றாமையினால் விசனிக்கின்றோமோ அவருடைய ஜீவிதத்திலிருந்து நாம் கற்றுக்கொள்கிற மிகமிகச் சிறந்த பாடங்களாம். தன்னம்பிக்கை மிக வைத்துக்கொண்டிருந்த ஒரு உண்மையான தொண்டர் அகால மரண மடைந்துவிட்டதினாலே, இந்தியா இன்று இன்னும் ஏழ்மை யடைந்திருக்கின்றது; வங்காளத்திலுள்ள எங்களுக்கு அந்த நஷ்டமானது அநேகமாகச் சொந்த நஷ்டம் போன்றதாம்; உங்களுக்கு ஜீவிதம் முழுதும் நிழலை விரிக்கக்கூடிய துக்கமாம். அவருடைய உண்மையையும் பெருமையையும் பற்றிய நினைப்பு ஒன்றே, அவருடைய வாழ்க்கை போதிக்கின்ற அழிவற்ற

பாடங்களே, அவரை யிழந்ததினால் ஒரு நண்பரை, வாழ்க்கையில் ஒரு துணைவரை, பேருண்மைகளைப் புகட்டிய ஒரு குருவை யிழந்தவர்களுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிக்கலாம்.

IV

லண்டன் லீடர் என்னும் பத்திரிகை பின் வருமாறு எழுதிற்று:—

"...............சர்வமத மகா சபையானது அதிலே நடந்த பிரசங்கங்களைக் கேட்பவர்களுக்குத் தெளிவான ஒரே ஞாபகத்தை விட்டுவிட்டு, உருகிவிட்டதென்று கருதப்படுகின்றது. அது ஹிந்துஸ்தானத்திலிருந்து வந்த ஒரு ஆசார்யரைப் பற்றியதாகும்—அவர் வாலிபர், அழகிய உடை யுடுத்து நேர்த்தியாய் விளங்குபவர், உருண்டையான முகமுடையவர், பெருமையுடைய ஆடை யுடுத்திக் கொள்பவர், பிறருடைய மனத்திலே அழுத்தமான பதிப்பைக் கொடுக்கக் கூடிய தலைப்பாகை, அவரால் வசீகரிக்கப்பட்ட சபையினர்கள் இந்தியாவின் களங்கமற்ற மதத்தினுடைய ஆறுதல், கம்பீரம், ஆத்திரம் முதலிய எல்லாவற்றையும் ஆச்சர்யத்தையும் ஆழத்தையும் எல்லாவற்றையும் கேட்பதற்குக் காரணமா யிருந்த ஒரு குரல், இவ்வளவு முடையவர்.

இந்தக் கண்ணைப் பறிக்கின்ற காக்ஷியின் பக்கத்திலே, மற்றெல்லா மதங்களினுடையவும் தூதர்கள் உற்சாகமற்ற சிறுமை யடைந்து மங்கிவிட்டார்கள். சிகாகோவில் கூடிய

சபையானது கீழ்நாட்டிலிருந்து வந்த தூதரால் ஜயிக்கப் பட்டது. அவர் எங்கெங்கும் அவா மிகுந்த சிஷ்யர்களால் பின் தொடரப்பட்டு, நாடுகளில் யாத்திரை செய் தார்...........”

V

கல்கத்தாவிலே ஸ்ரீயுத விபினசந்திர பாலர் நடத்திக் கொண்டிருந்த ந்யூ இந்தியா என்ற பத்திரிகை பின் வருமாறு எழுதிற்று:—

“...........ஸ்ரீ விவேகானந்தர் அசாதாரணமான அளவிலே பொது ஜனங்களுக்கு உற்சாகத்தை யூட்டும் சக்தியை உடைத்தாயிருந்தார் .... கேசவச் சந்திரஸேனருக்குப் பின்னே நமக்குள்ளே அவருக்கு மிஞ்சிய வாசாலகர் இல்லை—நாம் அவரை இந்தியாவில் மாத்திரம் அன்று, உலகு முழுதிலுமே சென்ற நூற்றாண்டில் மிகமிகப் பெரிய பிரசங்கி என்று நம்புகிறோம்.”

VI

இங்கிலீஷ்மான் என்ற ஆங்கிலேயப் பத்திரிகை பின் வருமாறு எழுதிற்று:—

“...........அவர் ஹிந்துக்களின் ஒரு பெருத்த வகுப்பாருடைய ஏற்ற பிரதிநிதியாக அமெரிக்கா சென்றார்; அவருடைய வாக் சாதுர்யமானது அவர் கூறியதை அவர்கள் கேட்கும்படி மாத்திரம் செய்யவில்லை; ஆனால், அவருக்கு மிகவும் உண்மையான சிஷ்யர்களுள் சிலரை

ஜயித்துக்கொண்டது. அவருடைய மத தத்துவக் கோட்பாடு அவருடைய மரணத்துடன் அழிந்துவிடாது என்பதற்குள்ள அறிகுறிகள் இருக்கின்றன. அவரை நிந்தித்தவர்களு மில்லாமலில்லை; ஆனால், சாதாரண வாழ்க்கையிலும் உயர்ந்த நினைப்பிலும் அவரினும் சிறந்த திருஷ்டாந்தம் எவரு மில்லை. அவர், கீழ்நாட்டுத் தத்துவ ஞானியிப்படி யிருப்பாரென்றுள்ள சாதாரண கற்பனையினின்றும் மிகவும் வித்தியாசப்பட்டு, தோற்றத்திலே பெருத்தும் தடித்தும் இருந்தார்; அவருடைய நடைகளும் செய்கைகளும் வைதீகர் என்பதைவிட வீரர் என்பதை ஞாபகப் படுத்தின.''

VII

ஸ்டேட்ஸ்மன் என்ற பத்திரிகை பின் வருமாறு எழுதிற்று:—

''...........ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய் மிகமிகப் பிரதான சிஷ்யராகிய அவருக்கு வங்காளத்திலும் சென்னையிலும் சிஷ்யர்கள் அதிகம் இருந்தார்கள்; அவர் மேனாட்டிலிருந்து திரும்பி வந்தபொழுது அவருக்கு அளிக்கப்பட்ட நல்வரவின் ஆத்திரத்தைக் கல்கத்தாவிலுள்ள அநேக ஜனங்கள் ஞாபகப்படுத்திக் கொள்வார்கள். உலகின் மறு பக்கத்திலேதான் சுவாமி விவேகாநந்தர் தமது வெற்றிகளை யடைந்தார். சிகாகோவில் நடைபெற்றதும் என்றும் மறக்கொணாததுமான சர்வமத மகா சபையில் அவருடைய அழகிய தோற்றமும் அவருடைய

வாக்கின் ரம்யமும் சபையை ஒரே யடியில் ஜயித்துக் தூக்கொண்டு விட்டன. இங்கிலாந்திலும் அவர் தங்கள் முன்னோர்களுடைய மதத்திலே பல காரணங்களாலும் திருப்திகாணத் தவறிவிட்ட ஆலோசனையுள்ள ஜனங்கள் அநேகரால் மெச்சப்பட்டார்..........அவருடைய ஆங் கில சிஷ்யர்களிலும் அமெரிக்க சிஷ்யர்களிலும் அநேகர் அவருடைய பரோபகார ஏற்பாடுகளுக்கு உதவினார்கள்; சிலர் ஏராளமான பணத்தை அவரிடம் ஒப்புவித்தார்கள். இன்று மேனாட்டு வாழ்க்கையிலே இந்தியாவினுடைய புராதனக் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் ருசி யதி கரித்து, அது மிகவும் கவனிக்கும்படியான ஒரு லக்ஷண மா யிருப்பதற்குச் சுவாமி விவேகாநந்தருடைய செல் வாக்கே பெரும்பான்மையும் காரண மென்பதைப்பற்றிக் கேள்வியே யிருக்க முடியாது; ஆனால், அவர் வியாக்கியா னம் செய்த முறைகள் புராதன இந்தியாவின் ரிஷிகளுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருந்தனவோ அவ்வளவு தற்கால ஐரோப்பாவின் சிந்தனை புருஷர்களுக்கும் கடமைப்பட் டிருந்தது என்று குறிப்பிடப்படலாம்.”

VIII

ஸ்ரீமாந். பாலகங்காதர திலகருடைய பத்திரிகையாகிய மராட்டா என்ற பத்திரிகை பின் வருமாறு எழுதிற்று:—

“.........ஏனெனில், ஜடவாழ்க்கைக்கு விரோதமான ஆத்மீக வாழ்க்கையாம் லக்ஷியத்தைச் சுவாமிகள் பொறுக்கி யெடுத்துக்கொண்டது, ராமகிருஷ்ணருடைய ஆடையைத்

தரிப்பதற்கும் அதற்குத் தகுதியுடையவராதற்கும் அவர் ஜயத்துடனே செய்த முயற்சி, அவருடைய மகா தியாகம் இவை அவருடைய சுருங்கியதும் இனிமையானதுமான வாழ்க்கையின் மூன்று பல்லவிகளாம். ஒரு எண்ணமானது, ஒருவேளை அவருடைய குருவினுடைய உபதேசங்களில் ஒன்றின் விஷயமாயிருந்ததாகத் தோன்றுவிட்டாலும், சுவாமி விவேகாநந்தரால் அநுஷ்டானத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது; அதாவது, ஒரு மகாத்மா தமது ஆத்மீக சக்தியையும் தபஸையும் உபயோகப்படுத்துவதற்கு ஒரு வழியாகத் தேசாபிமானத்தை உபயோகிக்க வேண்டும் என்பதாம். கடைசியாகச் சொல்லப்பட்ட இதுதான் ஒருவேளை அம் மகாத்மாவினுடையவும் அவருடைய சிறப்புற்ற சிஷ்யருடையவும் வாழ்க்கையின் அநுபவத்தன்மைகளில் வித்தியாசம் உண்டாக்கியது போலும்; ஏனெனில், ஸ்ரீராமகிருஷ்ணர் ஆத்மீகநிஷ்டையிலே பிரஹ்மாநந்தத்தைச் சொந்தமாக அநுபவித்திருக்க, சுவாமி விவேகாநந்தர் தமது தேச ஜனங்களைத் தேசாபிமானச் செய்கையிலே கிளப்பிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் வாக் சாதுர்யமாகப் பிரசங்கம்செய்து அந்தச் சாமர்த்தியத்தினால் அவர்களிடத்திலே வசீகரமாகிற நிஷ்டைபோன்ற ஒன்றை ஏற்படுத்தி அதிலே ஆநந்தம் அநுபவித்தார்.

............ஆயினும், நமது அந்நிய நாட்டுக்கொள்கை (அதாவது, அந்நிய நாடுகளுடன் நாம் நடந்துகொள்ளும் மாதிரி) தற்காலத்துக்கு ஆத்மீகமாகவே யிருக்கக்கூடும்,

ராஜ்யமா யிருக்க முடியாது. நமது கொள்கை வெளியே சென்று நமது சாஸ்திரங்களின் உண்மைகளை உலகின் ஜனசமூகங்களுக்குப் போதிப்பதாயிருக்க வேண்டும்....... இந்தியர்கள் ஜயிக்கப்பட்ட ஜனங்கள்; ஆயினும், அவர்களும் அடையவேண்டிய வெற்றிகளும் இருக்கின்றன..... இந்தியாவானது கீழ்மை யடைந்துவிட்டது பரிபூர்ணமாக என்று அவர் துக்கத்துடனே யுணர்ந்தார்; அதைச் சொஸ்தப் படுத்துவதற்கு அவர் நினைத்தது என்னவென்றால், ஆத்மஞானத்திலேயே அதன் பலம் உள்ளதென்றும், வேண்டியது அதனிடத்திலேயே அது நம்பிக்கை வைக்க வேண்டியது ஒன்றேயென்றும் அது தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டு மென்பதாம். "ஆங்கிலேயன் தன்னிடத்திலேயே தனக்கு நம்பிக்கை யுள்ளவன்" என்றும், "இந்தியனுக்கு அந்தத் தன்னம்பிக்கை யில்லை" என்றும் கூறி, அவர் ஆங்கிலேயனுக்கும் இந்தியனுக்கு முள்ள வித்தியாசத்தை யெடுத்துக் காட்டினார்........வியாதியை அவர் பகுத்துப்பார்த்தது சரியென்பதை அவர் தமது சொந்தச் செய்கையினாலும் உதாரணத்தினாலும் போதுமான அளவு நிரூபித்துக் காட்டினார்..........."

IX

அமெரிக்காவிலே காலிபோர்னியா என்னும் நகரில் சுவாமி விவேகாநந்தருடைய சிஷ்யர் ஒருவர் பின் வருமாறு எழுதினார்:—

"காலிபோர்னியா நகரத்து ஜனங்களுக்கு சுவாமி விவேகாநந்தர் பிரசங்கம் செய்து இப்பொழுது பத்து வரு

ஷங்கட்கு அதிகமாய்விட்டது. மற்ற இடங்களில் போலத் தான் இங்கும்; சபையினர்கள் முதலிலிருந்து அவருடைய வர்களே, கடைசிவரையில் அவருடையவர்களாகவே யிருந் தார்கள். அவர்கள் எதிர்க்க முடியாமல் அவருடைய நினைப் பின் போக்கு வழியாகவே கொண்டுபோகப் பட்டார்கள். எதிர்ப்பதற்கு விரும்பாதவர்கள் அநேகர் இருந்தார்கள்; ஒரு ஜோதிசொரூபம் அருகாமையி லிருந்ததினாலே அவர்க ளுடைய மனங்களின் அந்தரங்க அறைகளிலெல்லாம் ஒரு வெளிச்சம் வீசப்பெற்றதே அவர்களுக்கு ஆநந்தமும் ஆச்சர்யமுமா யிருந்தது. முடியுமானால், எதிர்த் திருப்ப வர்கள் சிலர் இருந்தார்கள்; ஆனால், எதிர்ப்பதற்கு அவர்க ளிடமிருந்த சக்தி மகா குருவினுடைய எதிர்க்க முடி யாத நியாயத்தினாலும் கூர்மையினாலும் குழந்தையினது போன்ற சாதாரணத் தன்மையினாலும் குறைக்கப்பட்டுவிட் டது. முறுமுறுப்பதற்குச் சிலர் உண்மையில் கிளம்பி னார்கள்; ஆனால், அவர்கள் பிரமித்துப்போய்ச் சாமர்த்திய மில்லாததினாலே அல்லது புந்நகையுடனே ஏற்றுக் கொண்டதினாலே மறுபடியும் உட்கார்ந்துவிட்டார்கள்.

... ...

ஒவ்வொரு பிரசங்கமும் முடிந்தவுடனே அவர் கேள்வி கள் கேட்கும்படி யுற்சாகப்படுத்தி, கேள்வி கேட்டவர் கள் நன்றாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போவார். ஒரு சமயத்திலே அநேகர் அவரை இடைவிடாது கேள்விகள் கேட்ட பின்

னர், சுவாமிகளைப் பிடிவாதமாகக் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு பண்ணுகிறார்களென்று ஒருவருக்குத் தோன் றிற்று; அவர் அதைப்பற்றிக் குறிப்பிட்டார். "உங்களுக்குப் பிரியமான கேள்விகளையெல்லாம் கேளுங்கள்! எவ்வளவுக் கெவ்வளவு அதிக கேள்விகள் கேட்கிறீர்களோ அவ்வள வுக் கவ்வளவு நல்லதுதான்" என்று சுவாமிகள் நன்றாக மறுமொழி கூறினர். "நான் அதற்காகத்தான் இங்கு இருக்கிறேன்; நீங்கள் தெரிந்துகொள்கிற வரையில் நான் உங்களை விடமாட்டேன்." மிகவும் நெடுநேரம் கரகோஷ மாயிருந்தது; அவர் மறுபடியும் ஆரம்பிப்பதற்கு அது நிற்கும் வரையில் காத்திருக்கவேண்டி வந்தது. சில சம யங்களில் சுவாமிகள் ஜனங்களைத் தமது மறுமொழிகளி னல் நம்பும்படிப் பயமுறுத்தி விட்டுவிடுவார். புநர் ஜன் மத்தைப்பற்றி ஒருபிரசங்கம் நடந்தபிறகு "சுவாமி, தங்க ளுடைய முன்ஜன்மம் தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்ட கேள்விக்கு அவர் வேகமாயும் உண்மையா யும் "ஆம், நான் சிறுபையனுயிருந்தபொழுதுகூட, தெளி வாக ஞாபகம் உண்டு" என்று மறுமொழி கூறினர்.

... ...

ஒரு சமயம் ஒரு பிரசங்கம் முடிந்தவுடனே அவர் தமது அடுத்த பிரசங்கத்தை இவ்விதமாகத் தெரியப்படுத் தினர்:— "நாளை இரவு நான் மனமும் அதன் சக்திகளும் சாத்தியங்களும் என்றும் விஷயத்தைப்பற்றிப் பிரசங்கிப் பேன். நான்கூறுவதைக் கேட்க வாருங்கள். நான் உங்

களுக்குச் சொல்ல சில வைத்துக்கொண் டிருக்கிறேன். நான் வெடிக்குண்டெறிதல் கொஞ்சம் செய்வேன்.'' இப்படிச் சொல்லிவிட்டு அவர் புன்னகைபுரிந்துகொண்டே சபையினரை யொரு பார்வை பார்த்தார்; பின்னர், அழைப்பது போலக் கையை ஆட்டிக்கொண்டே ''வாருங்கள்! அது உங்களுக்கு நன்மையைச் செய்யும்'' என்றார். மறுநாள் இரவு நிற்பதற்குக்கூட அங்கு இட மில்லை. அவர் தமது வார்த்தையை நிறைவேற்றினார். வெடிக்குண்டுகள் எறியப்பட்டன. பயன் உண்டாகத்தக்க விதமாக அவற்றை எப்படி எறிவது என்பது, எல்லா ஜனங்களுள்ளும் அவருக்கே தெரியும். இந்தப் பிரசங்கத்திலே அவர் மனத்தைப் பலப்படுத்தும் உபாயமாகப் பாதிவிருத்திய விஷயத்தைக் குறித்து நெடுநேரம் சொன்னார். பரிசுத்தத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு அநுஷ்டானமாக அவர் ஒவ்வொரு ஸ்திரீயையும் தனது தாயாராகக் கருதவேண்டுமென்ற கொள்கையை விஸ்தாரமாகப் பேசினார். அவர் அந்த அபிப்பிராயத்தைக் கூறிவிட்டு, அவர் சற்று நின்றார்; சபையிலிருந்து வெளிப்படையாகக் கேட்கப்படாத கேள்விகளுக்கு பதிலளிப்பது போன்று, ''ஆம், இது ஒரு கொள்கைதான். நான் இவ்வழகிய கொள்கையைப்பற்றி உங்களுக்குக் கூறுவதற்கு இங்கு நிற்கிறேன்; ஆனால், நான் எனது மாதாவைப்பற்றி நினைக்கிறபொழுது, எனக்கு அவள் மற்றெந்த ஸ்திரீயினும் வேறானவளே யென்பதை நான் அறிகிறேன். வித்தியாசம் உண்டு. நாம் அதை மறுக்கமுடியாது. ஆனால், 'நாம் ஏன் இந்த வித்தியாசத்தைப் பார்க்கிறோம் என்றால்,

நாம் நம்மைச் சரீரங்களாக நினைத்துக் கொள்கிறோம். இந்தக் கொள்கை நிஷ்டையிலே பரிபூர்ணமாக அறியப்பட வேண்டும். இவ் வுண்மைகள் முதலில் கேட்கப்பட வேண்டும், பின்னர் தியானிக்க படவேண்டும்'' என்று கூறினர்.

அவர் 'கிருகஸ்தன், சந்யாசி இருவருக்கும் பரிசுத்தம் பெரிது' என்று கருதி அந்தவிஷயத்திலே மிகவும் அழுத்த மாகப் பேசினர். அவர் கூறியதாவது, ''அன்றொருநாள் ஒரு ஹிந்து வாலிபர் என்னைப் பார்க்க வந்தார். அவர் இந் தத் தேசத்திலே ஏறக்குறைய இரண்டு வருஷங்களாக வசித்துக்கொண்டு வருகிறார், கொஞ்சக்காலமாக அசௌக் கியத்தினல் துன்புற்றுக்கொண்டிருக்கிறார். நாங்கள் பே சிக்கொண்டிருக்கையில் அவர் ''பரிசுத்தத்தைப்பற்றிய கொள்கையெல்லாம் தப்பிதமாயிருக்கவேண்டும்'' என் றும், ''ஏனெனில், இந்தத் தேசத்திலேயுள்ள வைத்தியர் கள் அதற்கு விரோதமாக அவருக்குப் போதித்துள்ளார் கள்'' என்றும் கூறினர். ''அது பிரகிருதி நியதிக்கு விரோதமானது'' என்று அவர்கள் அவரிடம் கூறினர்கள். அவருக்குச் சொந்தமான இந்தியாவுக்குத் திரும்பிப்போய் ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பரிசுத்தத் தன்மையை அநுஷ்டித்துக்கொண்டுவந்த அவருடைய முன்னோர்க ளுடைய உபதேசங்களைக் கேட்கும்படி நான் அவரிடம் கூறி னேன்.'' பின்னர், சொல்ல முடியாத வெறுப்பை வெளிப் படுத்தும் ஒரு முகத்தை வைத்துக்கொண்டு அவர் ''இந் தத் தேசத்திலே பரிசுத்தமென்பது பிரகிருதி நியதிக்கு

விரோதமென்று கருதுகின்ற நீங்கள், நீங்கள் பேசுகிற விஷயம் இன்னதென்று அறிகிறீர்களில்லை. பரிசுத்தம் என்ற பதத்தினுடைய பொருளை உங்களுக்குத் தெரியாது. நீங்கள் மிருகங்கள்! மிருகங்கள்! என்று நான் கூறுகிறேன்; அந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் சொல்லும் அதுவே சிறந்ததானால் நீங்கள் பூனையின் குணமுடையவர்கள்.'' என்று கர்ஜித்தார். இப்பொழுது அவர் தமது பார்வையினாலே எதிர்ப்புக்கு அழைப்பது போன்று பயமற்று ஒரு பார்வை பார்த்தார். பல வைத்தியர்கள் அங்கு வந்திருந்தபொழுதிலும் எவரும் பேசவில்லை.

... ...

இந்த விஷயமாக நடக்கும் சம்பாஷணைக்குப் பின் சாதாரணமாக உண்டாகின்ற கேள்விகளில் "ஆனால், சுவாமி! மனிதன் ஈச்வரனுடன் தனக்குள்ள ஒற்றுமை, யை அறிந்துகொண்டுவிட்டானானால், அவனுடைய தனித் தன்மை என்னவாகும்?'' என்ற கேள்வியும் கேட்கப்படுவது அநேகமாக நிச்சயம். அவர் இந்தக் கேள்வியைக் கேட்டு நகைத்து விளையாட்டாக அதைப் பரிகாசம் பண்ணுவார். "இந்தத் தேசத்திலேயுள்ள ஜனங்களாகிற நீங்கள் உங்களுடைய தனித் தன்மைகளை யிழந்துவிடுவதற்கு அவ்வளவு பயப்படுகிறீர்கள்'' என்று பரிகாசமாகச் சிரித்துக்கொண்டே அந்த வார்த்தையை எழுத்தெழுத்தாக இழுத்துக் கூறுவார். "ஏன், நீங்கள் இன்னும் தனித்தவர்களே யல்லர். உங்களுடைய முழு இயற்கையையும் நீங்கள்

அறிகிறபொழுது, நீங்கள் உங்களுடைய தனித்தன்மை களை யடைவீர்கள், அதற்கு முந்தி முடியாது. நீங்கள் கடவுளை யறிகிறபொழுது, நீங்கள் தனித்தவர்க ளாவீர் கள். கடவுளை யறிவதிலே, வைத்துக்கொள்ளுதற்குத் தகுதியான எதையும் நீங்கள் இழக்க முடியாது.......... நான் இந்தத் தேசத்திலே இடைவிடாமல் கேட்டுக்கொண் டிருக்கிற இன்னொரு விஷயம் உண்டு; அதாவது, நாம் பிரகிருதியுடனே ஒற்றுமையாக வாழவேண்டுமாம்! பிர கிருதியுடனே ஒற்றுமை! ஏன்! உலகிலே எப்போதேனும் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தியெல்லாம் பிரகிருதியுடனே போராடி, பிரகிருதியுடனே ஜயித்து நடைபெற்றுள்ள தென்பது உங்களுக்குத் தெரியாதா? ஒருபொழுதும் இந்த விதிக்கு விலக்கே யில்லை. விருக்ஷங்கள் பிரகிருதியுடனே ஒற்றுமையாய் வாழ்கின்றன. அங்கே பரிபூர்ண ஒற்று மை; அங்கே எதிர்ப்பே யில்லை—அபிவிருத்தியு மில்லை. நாம் ஏதேனும் அபிவிருத்தியை யடையவேண்டுமானல் நாம் பிரகிருதியை ஒவ்வொரு இடத்திலும் எதிர்க்க வேண்டி யிருக்கிறது. விளையாட்டாக ஒன்று நேரிடுகிறது; பிரகிருதி 'சிரி' என்று சொல்கிறது; நாம் சிரிக்கிறோம். நாம் நேசிக்கின்ற ஒருவர் இறந்துவிடுகிறார், பிரகிருதி 'அழு' என்று கூறுகிறது; நாம் அழுகிறோம்—"

சபையிலிருந்த ஒரு விருத்தாப்பிய ஸ்திரீ நடுவிலே பின் வருமாறு கூறினர்:—"ஆனல், நாம் நேசிக்கின்றவர் களுக்காக விசனியாமலிருப்பது மிகவும் கடினமாகும்;

நாம் விசனிக்காவிட்டால், மிகவும் கடின ஹிருதயமுடைய வர்களாவோ மென்று நான் நினைக்கிறேன்."

அவர், "ஆம், அம்மே! அது கடினம்தான்; சந்தேக மில்லை. ஆனால், அதனால், என்ன? பெருங் காரியங்கள் சித்தியடைவதெல்லாம் கடினம்தான். மதிப்புள்ளது ஒன்றும் சுலபமாக வருகிறதில்லை. ஆனால், அது அடை வதற்குக் கஷ்டமா யிருக்கிறதென்ற காரணத்தினாலே, லக்ஷியத்தைத் தாழ்த்திவிடாதே. ஸ்வதந்திரக் கொடியை உயரத் தூக்கிப் பிடி! அம்மே! நீ அழ விரும்புகிறதினாலே அழவில்லை; ஆனால், பிரகிருதி உன்னை (அழும்படி) பலாத் காரம் செய்கிறது. பிரகிருதியானது 'அழு' என்று சொல் கிறபொழுது 'மாட்டேன், நான் அழமாட்டேன்' என்று சொல்லு பலம்! பலம்! பலம்!—நீ இரவும் பகலும் அதை உனக்கே சொல்லிக்கொள். நீ பலமுள்ளவன்! பரிசுத்தன்! ஸ்வதந்திரன்! உன்னிடத்தில் பலவீனமே யில்லை; பாபமே யில்லை; துன்பமே யில்லை!" என்று மறுமொழி கூறினார்.

இன்னொரு சமயத்திலே, அவர் அத்வைதத்தை யெடுத்து உரைத்துக்கொண் டிருந்தபொழுது முன்னணி யில் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர் வேண்டுமென்றே எழுந் திருந்து "நான் இவ்விடத்திலிருந்து வேகமாக வெளியே போகட்டும்" என்ற தெளிந்த வார்த்தைகளால் கூறுகின் றது போன்ற பார்வையுடனே அங்கிருந்து புறப்பட்டு, ஒவ்வோரடி அடி வைக்கும்பொழுதும் தன்னுடைய பிரம்பி னால் பூமியைத் தட்டிக்கொண்டே அம் மண்டபத்தை

விட்டு வெளியே சென்றார். ஸ்வாமிகள் அந் நிலைமையைக் கண்டு ஆநந்தித்தார். ஏனெனில், அவர் அவனைக் கவனிக்க நின்றபொழுது அவருடைய லக்ஷணங்களிலே விளையாட்டு நிறைந்திருந்தது. சபையினருடைய கவனமானது புந்நகை புரிந்துகொண்டும் வேடிக்கையை விரும்பிக்கொண்டு மிருந்த ஸ்வாமிகளுக்கும் அவரிடத்திலிருந்து போதுமான அளவு அடைந்து வெறுப்புற்றுச் செல்லும் கிழவனுக்கும் மத்தியிலே பிரிக்கப்பட்டது.

............ஒரு சமயத்திலே ஸ்வாமிகள் சில சித்திர வேலைகளைப் பார்த்துக்கொண் டிருந்தபொழுது, சில கொழுத்த சந்யாசிகளுடைய ஒரு படத்தைப் பார்த்து "ஞானிகள் கொழுத்திருக்கிறார்கள். நான் எவ்வளவு கொழுத்திருக்கிறேன்! பார்" என்றார். பின்னர் மகாத்மாக்களுக்குப் பின் வரப்போவதை முன் கூட்டியே கூறும் சக்தி யுண்டென்னும் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தபொழுது அவர் "நான் தெருக்களிலே விளையாடிக் கொண்டு சிறு பையனா யிருந்தபொழுது, வழியே போய்க் கொண்டிருந்த ஒரு மஹாத்மா எனது சிரசின்மீது அவருடைய கையை வைத்து, 'பையா! நீ ஒரு காலத்தில் மகா புருஷனாவாய்' என்றார். இப்பொழுது நான் எங்கே யிருக்கிறேன், பாருங்கள்!" என்றார்.

இச் சிறிய தற்புகழ்ச்சியிலே அவருடைய முகமானது விளையாட்டினால் அழகு நிறைந்து பிரகாசித்தது. அத் தகைய மொழிகளிலே அகம்பாவமானது ஒன்றும் இல்லை.

அவருடைய கபடற்ற, விளையாட்டு விரும்பும் தன்மையானது அவருடைய வேடிக்கை யுணர்ச்சியிலே அவருடனே கேட்பவர்களையும் சேர்த்துக்கொண்டு சென்றது.

இன்னொரு சமயத்திலே அவர் கூறியதாவது:— நரகத்தைப்பற்றிக் கிறிஸ்தவர்கள் கருதியிருப்பது எனக்குச் சற்றும் பயங்கரமாயில்லை. தாந்தே என்பவர் நரகத்தைக் குறித்து எழுதியுள்ளதை நான் மூன்றுதடவை படித்திருக்கிறேன்; ஆனால், அதில் பயங்கரமாக ஒன்றும் நான் காணவில்லை யென்று சொல்லவேண்டும். ஹிந்து நரகங்களுக்கு அநேக விதங்கள் உண்டு. திருஷ்டாந்தமாக, ஒரு சாப்பாட்டுப் பிரியன் இறக்கிறபொழுது, அவனை மிகமிகச் சிறந்த ஆகார வர்க்கங்கள் ஏராளமாகச் சூழ்ந்து கொள்கின்றன. அவனுக்கு ஆயிரம் மைல் நீளமுள்ள ஒரு குடலும், குண்டூசித் தலைபோன்று சிறியதான ஒரு வாயும் உண்டு! அதை நினைத்துப் பாருங்கள்!" இந்தப் பிரசங்கத்தின்பொழுது அந்த அறையிலே தாராளமாகக் காற்றுப் போக்குவரவு இல்லாததினாலே மிகவும் உஷ்ணமடைந்தார். பிரசங்கம் முடிந்து அவ் வறையை விட்டு வெளியே போகும்பொழுது, அவர்மீது குளிர்ந்த வடகாற்றுக் கொஞ்சம் வீசிற்று. அவர் தமது சட்டையைத் தம்மைச் சுற்றி யிறுக்கமாகச் சேர்த்துக்கொண்டு, அவர் உரக்க "நல்லது, இது நரகமில்லாவிட்டால், எது நரகமோ எனக்குத் தெரியாது" என்றார்.

... ...

மத சந்யாசிகளுக்குள்ளே சாதாரணமாயுள்ள பிச்சை யெடுக்கும் வழக்கமானது துறவுக்கு விரோதமான தல்லவா என்பதை விவரித்துக் கூறும்படி நான் அவரைக் கேட்டேன், அவர் மறுமொழி கூறியதாவது, "அது மனத்தைப்பற்றிய கேள்வி. மனமானது முன்னரேயே கருதி, பலன்களால் பாதிக்கப்பட்டால், அது கெட்டது, சந்தேகமேயில்லை. பிச்சை கொடுப்பதும் ஏற்பதும் ஸ்வதந்திரத்துடனே நடைபெற வேண்டும்; இல்லையேல் அது தியாகமாகாது. எனக்காக அந்த மேஜையின்மீது சித்திர டாலர் நாணயங்களை வைத்துவிட்டு அப்பொழுது, சில உனக்கு வந்தனம் செலுத்தும்படி என்னை எதிர்பார்த்தால், நீ அதை மறுபடியும் எடுத்துக்கொண்டுவிட முடியும். நான் இங்கு வருவதற்கு முன்னரேயே, நான் பிறப்பதற்கு முன்னரேயே எனது ஜீவனம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஒரு மனிதனுக்கு எது சொந்தமோ அவன் அதை யடைவான். அவன் பிறப்பதற்கு முன்னரேயே அது அவனுக்குத் தயாராயிருந்தது."

"இயேசு பிதாவின்றிப் பிறந்த விஷயத்தைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்ட கேள்விக்கு அவர்: "அது ஒரு பழைய உரிமை. அவ் வுரிமையைப் பாராட்டியவர்கள் இந்தியாவில் அநேகர் இருந்திருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனால், என்னுடைய விஷயத்திலே, எனக்கு இயற்கையான பிதா

வும் மாதாவும் இருந்தார்களென்று நான் சந்தோஷிக் கிறேன்.'' என்று மறுமொழி கூறினார். "ஆனால், அத் தகைய கொள்கை பிரகிருதி நியதிக்கு விரோதமான தல்ல ?'' என்று நான் துணிந்து கேட்டேன். தரையிலே ரத்தின ...ம் விரித்திருக்கிற தென்பதைக்கூட அவர் கவனி... அவருடைய பூட்ஸின் குதியிலே தமது சுருட்டி ...யுள்ள சாம்பரைத் தட்டிக்கொண்டே "ஈச்வரனுக்குப் பிரகிருதி எம்மாத்திரம்? அதெல்லாம் அவருடைய லீலை'' என்று ... கூறினார். பின்னர் அதைச் சுத்தமாக்கும் ...சுருட்டு ... (சுருட்டின்) அடியினூடே ஊதிவிட்டு, "நாம் பிரகிருதிக்கு அடிமைகளாயிருக்கிறோம். ஈச்வர னே பிரகிருதிக்கு எஜமானன். அவர் தமக்கு வேண்டு மென்றால் ஒன்று அல்லது டஜன் சரீரங்கள் ஒரே சமயத் தில் எடுத்துக்கொள்ளக்கூடும்; அவர் விரும்புகின்ற எந்த வழியிலும் எடுத்துக்கொள்ளக்கூடும். நாம் அவரை எப் படிக் கட்டுப்படுத்த முடியும்?'' என்று சொன்னார்.

இராஜயோகத்தைப்பற்றிக் கேட்கப்பட்ட பல கேள்வி களுக்கு மிகவும் விவரமாக விடையிறுத்தபின்னர், அவர் ஒரு நண்பருடைய புன்னகையுடனே, "ஆனால், ஏன் ராஜ யோகத்தைப்பற்றித் தொந்தரவு செய்துகொள்கிறீர்கள்? வேறு மார்க்கங்களும் இருக்கின்றன'' என்று கூறி முடித்தார்.

இந்தச் சம்பாஷணை வீட்டின் முன்னறையிலே நடை பெற்ற ராஜயோக பாடத்துக்குக் குறிப்பிடப்பட்டிருந்த

நேரத்துக்கு மேலே பதினைந்து நிமிஷம் அதிகமாக நடந்தது. இதன் மத்தியிலே, சகல விஷயங்களையும் நன்கு கவனிக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருந்த ஸ்திரீ: அறைக்குள்ளே வெகு வேகமாக நுழைந்து, "ஏன் ஸ்வாமி! நீங்... து யோக பாடத்தைப்பற்றி எல்லாம் மறந்துவிட்... ரேயே இப்பொழுது குறிப்பிட்ட நேரத்துக்கு மேலே ப... கட்டது, நிமிஷமாய்விட்டது; அறையில் ஜனங்கள் வந்து நின்... ஸ்வ திருக்கிறார்கள் என்று கூவினாள். ஸ்வாமிகள் என்னைப் பார்த்து "ஆ! என்னை மன்னியுங்கள்! நாம் இப்பொழுது முன்னறைக்குச் செல்வோம்" என்று கூவிக்கொண்டே, வெகு வேகமாக எழுந்திருந்தார். நான் அந்த அறையின் மூலமாக முன்னறைக்குச் சென்றேன். அவர் நாங்கள் உட்கார்ந்துகொண்டிருந்த அறைக்கும் முன்னறைக்கும் மத்தியிலே யிருந்த தமது படுக்கையறையின் மூலமாகச் சென்றார். நான் போய் உட்கார்வதற்குமுன், அவர் தமது அறையிலிருந்து தமது (தலை) ரோமத்தை (அது அதிகமாகக் கலைந்து கிடந்ததென்று கூறியிருக்கிறேன்) நேர்த்தியாக வாரிக்கொண்டு, தமது சந்யாச உடையைத் தரித்துக்கொண்டு வெளியே வந்தார். கலைந்த ரோமத்துடனும் சிதறின உடையுடனும் அவர் தமது அறையிலிருந்து வெளியே புறப்பட்டு ஒரு நிமிஷத்துக் கதிகமாக ஆகவில்லை; அவர் முன்னறைக்குள்ளே பிரசங்கம் செய்வதற்குத் தயாராகச் சாவகாசமாக வந்தார். வேகமும் செய்கையில் சுறுசுறுப்பும் அவருடைய ஆக்ஞையின் கீழேயே எப்பொழுதும் இருந்தன, ஆயினும், சில சமயங்களில் அவர்

...ு நியமித்துக்கொண்ட வேகத்துக் கப்பால் அசையும்படி செய்வது கடினமாம். திருஷ்டாந்தமாக, ஒரு பிரசங்கத்துக்குத் தாமதமாய் விட்டபொழுது, தெருவிலே செல்லும் டிராம் வண்டிக்கு அவசரப்படுத்த அவரைத் தூண்டுவது அசாத்தியமாய்விடும். வேகமாக நடக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டால், அதற்குப் பதிலாக அவர் "ஏன் என்னை அவசரப்படுத்துகிறீர்கள்? அந்த வண்டி நமக்குக் கிடைக்காவிட்டால், அடுத்த வண்டியில் போவோம்" என்று வார்த்தைகளை இழுத்திழுத்துப் பேசுவார்.

ஓம் ப்ரஹ்மார்ப்பண மஸ்து

ஓம் சாந்திః ஓம் சாந்திః ஓம் சாந்திః

ஓம் தத் ஸத்

முற்றிற்று.

FIRST EDITION] 1928 [1000 COPIES